




கலைமகள்
ஜூன் 1978
1·20


அமைத்திடுவீர்
மற்றவர்களை விட மேம்பட்ட
பொலிவுடன் விளங்குவீர். அல
உடையழகை அணிந்திடுவீர்.
மூலமுதற் படைப்பான கம்பீரமு
ஸ்டைல்களை உருவாக்கித்
தருபவை டெக்ஸூரா, டெர்கோ
துணிகள்.
டெக்ஸூரா ஷர்டி
& உடுப்புத்துணி
டெர்கோஸா 100
'டெரீன்' சேலைகள்
Khatau

முத்துச் சிப்பி

அநுத்தமா



1. ஜொலிக்கும் முத்து

பின் நிலா நாட்கள். மாலை மணி ஏழு தான் ஆகியிருந்தது. ஆயினும் இந்திரா காலனி இருட்டாக இருந்தது. புதியதாகப் போட்டிருந்த தண்டு விளக்கு வெளிச்சம் அந்த வட்டாரத்துக்குப் போதவில்லை. ஆனாலும் அதை யாரும் அறிந்ததாகவே தெரியவில்லை.

குழாயடியில் பெண்கள் தண்ணீர் பிடிப்பதும், பாத்திரம் தேய்ப்பதுமாக இருந்தனர். குழந்தைகள் ஓடிப் பிடித்து விளையாடினர். கடை கண்ணிகளுக்குப் போய்விட்டு வந்த ஆடவரும் பெண்டிரும் நடமாடிக் கொண்டிருந்தனர்.

அந்த வட்டாரம் என்றும்போல் இன்றும் இருந்தது. பொங்கல் பண்டிகை சேரத் தோன்றும் புது மெருகு தவிர, வேறு மாற்றமே இல்லை.

அந்தச் சதுரத்தின் மத்தியில் தரையோடு தரையாக ஒரு மாரியம்மன் விக்கிரகம் இருந்தது. இரண்டே அடி உயரம் உள்ள அந்த அம்மன் சிலைக்குப் பக்கத்தில் விளக்கு ஏற்றி வைக்கச் சிறிய மாடம் ஒன்று இருந்தது. எந்தச் சிற்பி எவ்வளவு ஆசையோடு இந்தச் சிலையைச் செதுக்கினானோ தெரியாது. அவ்வளவு லட்சணமாக அமைந்திருந்தது அம்மனின் உருவம். ஆனால் அந்த அம்பிகைக்குக் கோவில் கட்ட யாரும் முன் வரவில்லை போலும். 'மாரியம்மன் கல்' என்ற பெயருடன் அங்கு அந்தச் சவுக்கத்துக்குக் காவல் புரிந்தாள் அந்த அம்பாள்.

கண்ணெச்சில் படுமோ என்று அஞ்சித் தான் பெற்ற செல்லக் குழந்தையை 'வேம்பு' என்றும் 'சப்பாணி' என்றும் அழைப்பதில்லையா? இவர்கள் தினந்தோறும் வழிபட்டுப் போற்றி வந்த தெய்வத்தைக் 'கல்' என்று அந்தச் சமூகம் அழைத்ததில் வியப்பொன்றும் இல்லை.

தெலுங்குப் பிராம்மணர் நரசையா 'கனக மகாலக்ஷ்மி' என்று குறிப்பிடுவார். மணவாளச் செட்டி மனைவி பங்காருவுக்கு அவளே குலதெய்வமான கன்னிகா பரமேசுவரி. நித்தமும் அம்மனை வழிபடாமல் ஒரு முடக்கு நீர் கூட அருந்தமாட்டாள் அந்த அம்மாள்.

அன்றும் அந்த நடுத்தெருவில் ஒரு பலகையைப் போட்டு அமர்ந்து, வெள்ளித் தாம்பாளங்களும் கிண்ணங்களுமாக வைத்துக்கொண்டு பூஜை செய்தாள், பங்காரு.

"வெள்ளியும் பொன்னும் தெருவில் கொண்டு வைத்துக்கொள்வது. பிறகு எவனாவது தட்டிவிட்டால் குய்யோ முறையோ என்று ஓலமிடுவது" என்று கூறியபடி யாரோ ஒருவர் நடந்தார்.

பங்காரு தன் பெரிய சரீரத்தை மெள்ளத் திருப்பினாள். கழுத்தில் இரட்டை

வரிசையாக அமைக்கப் பெற்ற வைர அட்டிகை மின்வெட்டுச் செலுத்தியது. சாண் அகல ஜரிகைப் புடைவையும், பத்துப் பைசா அளவுக்கு அகலக் குங்குமமுமாக அவள் திரும்பியபோது அவளுடைய இஷ்ட தெய்வமான கன்னிகா பரமேசுவரியே திரும்பிப் பேசுவதுபோல் தோன்றியது.

''யார் ஐயா அது? இந்த இந்திரா காலனியிலே நானும் இத்தனை காலம் வாழ்ந்துவிட்டேன். ஒரு களவாணிப் பயலும் இதுவரை பிறக்கல்லே. அப்படித் தான் எவன் எடுத்தாலும் அவனை எடுக்கிறன்? அம்மன்தான் அவனை எடுக்கச் சொல்லுவாள். அவள் அள்ளிக் கொடுக்கும்போது வாங்கும் கை, அவள் எடுக்கும்போது தடுக்குமா? சுத்தப் பைத்தியக்கார மனுஷனாக இருக்கிறயே?''

பேசிய மனிதன் அங்கே தங்கினால் அல்லவா பதில் சொல்ல? விடுவிடென்று எங்கே போய் மறைந்துகொண்டாரோ?

பங்காரு மீண்டும் பூஜையில் ஈடுபட்டாள். கல் இழைத்த ராக்கோடி வைத்துப் பின்னிப் பின்னிக் கனம் தாங்காமலோ என்னமோ அவள் உச்சந்தலையில் ஒரு சொட்டை இருந்தது. அவள் இப்பொழுது குலுங்கிச் சிரித்து ஒரு முறை திரும்பும்போது அந்த ரூபாய் அகலச் சொட்டை நிலவில் சிரித்தது.

கூஜாவிலிருந்து பாலை ஊற்றி அம்பாளுக்கு அபிஷேகம் செய்தாள் பங்காரு. அதன் பிறகு சுத்தத் தண்ணீர் விட்டுக் கழுவி, அரைத்து வந்திருந்த மஞ்சள் விழுதைப் பச்சென்று அந்த விக்கிரகத்துக்குப் பூசி, நெற்றியில் குங்குமமிட்டு, பட்டுப் பாவாடை உடுத்தி அழகு பார்த்தாள். விளக்குப் பொறி விட்டு எரிந்தது. மயிர் சிலிர்த்தது பங்காருவுக்கு. மெய்ம் மறந்து மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்துவிட்டு, தேங்காயை உடைத்து நிவேதனம் செய்து, கர்ப்பூரம் காட்டினாள். ஒரே முனைப்பாகக் கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்தாள் அவள்.

பக்கத்தில் இரண்டு குழந்தைகள் சாக்கடை ஓரத்தில் முட்டி மோதிக்கொண்டு எதற்கோ சண்டையிடுவது தெரிந்தது.

''யாரது?'' என்று வினவினாள் பங்காரு.

''யசோதா'' என்று பதில் வந்தது.

''என்ன வேணும் உனக்கு?''

''பாலு'' என்று கூறும்போதே அந்தச் சிறுமியின் கண்ணில் அப்படிப்பட்ட ஆவல் தெரிந்தது.

''பால்தானே? பூஜையாகட்டும், என் வீட்டுக்கு வா, தருகிறேன். சண்டை போடாதீங்கம்மா'' என்றாள் பங்காரு.

யசோதா என்கிற பெண்ணுக்கு வயது ஒன்பது இருக்கும். அவளுடைய சேறு படிந்த கால்களும், பரட்டை மயிரும், ஒழுகும் மூக்கும், ஏக்கமும் ஆவலுமாகப் பார்க்கும் பரிதாபக் கண்களும், கந்தல் ஆடையும் அவளைப்பற்றி எவ்வளவு சொல்ல வேண்டுமோ அத்தனையும் சொல்லிவிட்டன.

யசோதையின் தாய் இறந்து இரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தன. அவளுக்குக் கீழே இரண்டு குழந்தைகள். தகப்பனார் எங்கோ விறகுக் கடையில் வேலை செய்தார். வயதான பாட்டி வீடு என்று ஒன்றை நடத்தி வந்தாள். குழந்தைகள் அந்தக் காலனியில் குடியிருந்தவர்கள், அந்தத் தயவில் பிழைத்தன. எப்போதும் ஒரு பசி, எப்போதும் ஓர் ஆத்திரம். ஒரு பிஸ்கோத்துத் துண்டுக்காக அவர்கள் சாக்கடையில்கூடப் புரண்டுவிடுவார்கள் சில சமயம்.

''கன்னிகாபரமேசுவரி, உன் லீலை தான் எத்தனை விதம்!'' என்று வாய் விட்டுக் கூறினாள் பங்காரு. நீண்டதொரு பெருமூச்சு அவள் மார்பகத்திலிருந்து வெடித்துக்கொண்டு வந்தது.

பங்காரு பூஜையைச் செய்து முடிப்பதற்கும் அவள் கணவர் மணவாளச் செட்டி அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது. அவரும் தம் மனைவியுடன் சேர்ந்து அம்மனை வலம் வந்து வணங்கினார். அப்போதுதான் அங்கே நேர் எதிர்த் திண்ணையில் சாய்ந்து நின்று கொண்டிருந்த முத்து மாணிக்கத்தைக் கவனித்தார்கள். ''என்னடா, முத்து, பேசாமல் நிற்கிறே?'' என்று விசாரித்தார் செட்டியார்.

''நம்ம முத்துவா நிற்கிறது?'' என்று பங்காருவும் வினவினாள்.

''ஆமாம், பெரியம்மா, நான்தான்! நீங்கள் பூஜை செய்வதையே பார்த்துக் கொண்டு நின்றேன்.''

''முத்து, உனக்குப் பெயர் வைத்தவர்கள் மீதுதான் தப்பு. தங்கச்சி மட்டும் வேறே பெயர் வைத்திருந்தால்..''

''என்ன நடந்திருக்கும்?'' என்று வேடிக்கையாகக் கேட்டார் மணவாளச் செட்டி.

''முத்து என்று பெயர் வைக்கவுந் தானே பேசினால் முத்து உதிர்ந்து விடுமோ என்று பேசாமல் இருக்கிறே?'' என்று கூறிவிட்டுத் தன் பெரிய உடல் குலுங்கச் சிரித்தாள் பங்காரு.

முத்து மாணிக்கமும் லேசாக முறுவலித்தான்.

''வெளியிலே எல்லாரும் அவனை மாணிக்கம் என்றுதான் கூப்பிடுகிறார்கள்; நீயும் அப்படியே அழைத்துப் பார். பளபளவென்று ஜொலிப்பான்'' என்றார் செட்டியார்.

''எப்படி வேண்டுமென்றாலும் கூப்பிட்டுப் பாருங்களேன். அவன் மாறப் போவதில்லை. அவன் பிறந்தது முதல் நான் பார்த்துக்கொண்டுதானே இருக்

கிறேன்? இன்னமும் என் எதிரே பளிச் சென்று இரண்டு பேச்சுப் பேசினவன் அல்ல.''

''என்னடா, உன் பெரியம்மா உன்னை வாழ்த்துகிருளா, திட்டுகிருளா?''

அதற்கும் முறுவலித்து மௌனம் சாதித்தான் முத்துமாணிக்கம்.

''நான்தான் சொல்றேனே! அவன் சாமான்ய மனுஷன் அல்ல, பங்காரு. அவன் நம் தேசத்துக்கே பெரிய பெயர் வாங்கித் தரப் போகிற விஞ்ஞானி. நம்மைப் போலச் சளசள வென்று தெருத் திண்ணை வம்பு பேச முடியுமா அவன்? என்னடா நான் சொல்வது?''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை, பெரியப்பா. எனக்குப் பேச வரமாட்டேன் என்கிறது. அவ்வளவுதான்.''

''சரி, போ. பேசாவிட்டால் கிடக்கட்டும். இந்தப் பூஜைச் சாமான்களைக் கொண்டுவா என்னேடு'' என்று கூறி விட்டு, மெதுவாகக் கையை ஊன்றிக் கொண்டு எழுந்தாள் பங்காரு.

மாணிக்கம் அப்படியே பாத்திரங்களை வாங்கிக்கொண்டான். செட்டியாரும் களுக்கு விமோசனம் ஏது, சொல்லேன்?'' என்ருள்.

மாணிக்கம் தலை கவிழ்ந்து யோசனையில் ஆழ்ந்தான்.

''நீ படித்திருக்கிருய், முத்து. நீதான் இதற்குச் சமாதானம் சொல்லவேண்டும். இந்த வீட்டில் அபரிமிதமான செல்வம் இருக்கிறதே தவிர....''

''ஏன், பெரியம்மா, கன்னிகா பரமேசுவரி கருணையும் இருக்கிறது.''

''கருணையா? கருணை என்று சொன்னுய்? முத்து, நல்ல பேச்சுச் சொன்னுயப்பா! கருணை எங்கே இருக்கிறது? பணத்தைக் கொடுத்திட்டா, ஆனுல் அன்பு நோக்கு வைக்கவில்லையே?''

மாணிக்கம் என்ன பதில் சொல்லியிருப்பானே? அதற்குள், ''அடடா, நம்ப விஞ்ஞானி எங்கே வந்துவிட்டாரு?'' என்று ஒரு குரல் குறுக்கிட்டது.

மாணிக்கம் குரல் கொடுத்த மதன கோபாலனை நிமிர்ந்து நோக்கினுன்.

இடுப்பில் கால் அங்குல இலை பார்டருடன் பட்டு வேஷ்டி, மேலே காவி நிறத்தில் பட்டு ஜிப்பா, கழுத்தில் ஒரு பவுனில் தங்கச் சங்கிலி, வாயில்

புதிய தொடர்கதை

மனைவியும் முன்னே செல்ல, அவன் விநயமாகப் பின்னுல் சென்ருன்.

''பாலு?'' என்று கேட்டுக்கொண்டே யசோதா வந்தாள்.

எல்லாரும் மணவாளச் செட்டியாரின் வீட்டுக்குள்ளே சென்றனர்.

பங்காரு பாலைக் கொட்டித் தந்தவுடனே அந்தப் பெண்ணும் இரண்டு தம்பிமாரும் தம்ளரைக் கடித்துக்கொண்டு பாலிலே வைத்த கண் வாங்காமல், ஒரே மூச்சில் குடித்து முடித்துவிட்டனர்.

''போதுமா?'' என்று கேட்டாள் பங்காரு.

'போதும்' என்று சொல்லியே வழக்கம் இல்லாத அவர்கள், நுரை படிந்த உதடுகளும், ஆவல் மிகுந்த கண்களுமாகஎதிர் பார்த்து நின்றனர்.

''போதும், அம்மா. நாளைக்குச் சாப்பிடலாம்'' என்று சொல்லி, பங்காருவே அவர்களை அனுப்பிவிட்டாள். முத்து மாணிக்கத்தைப் பார்த்து, ''இந்தச் செம்புப் பாலையும் கொட்டிக் கொடுத்தாலும் குடித்து விடுவார்கள். நாளை ஜீரணம் ஆகாமல் தவிப்பார்கள். இவர் வெற்றிலை, நான்கு விரல்களிலும் ஆடம்பரமாக மோதிரங்கள், கண்களிலே உல்லாச எக்களிப்பு, கழுத்துப் பட்டையில் புரளும் சுருள் கேசம், வருவதற்கு முன்பே கட்டியம் கூறும் செண்டின் நெடி. சாதாரண உயரந்தான். கண்களிலே மை தீட்டியிருந்தான். அவன் வாயால் சீட்டியடித்தபடியே வேஷ்டியை மடித்துக் கட்டிக்கொண்டு தாழ்வாரத்தில் உலாவினுன்.

மாணிக்கம் அடக்கத்துடன் ஓரமாகத் தரையில் அமர்ந்தான்.

''நீ பொம்பளையாகப் பிறந்து இருக்கணும்டா'' என்று தாழ்ந்த குரலில் சீண்டினுன் மதனகோபாலன்.

''நீயா, நானு? கண்ணிலே மையும், கழுத்திலே தாலியும், கையிலே வளையலுமாக இருக்கிறது நீயா, நானு? காலிலே ஒரு ஜதை சலங்கைக் கொலுசு மாட்டிக் கொள்'' என்ருன் மாணிக்கம்.

''போடா, பிச்சைக்காரப் பயலே!'' சட்டென்று எடுத்தெறிந்து பேசிவிட்டான் மதனகோபாலன்.

''கோபாலு, இதென்ன நம்ம முத்துவை..''



பாராதவன்போலப் பேச்சுக் கொடுத்தான். ''என்னடா, கோபாலு, உங்கள் சினிமா எப்போதுடா வெளிவரும்?''

மதனகோபாலன் ஒரு கணம் தயங்கினான். நாடகத்தில் தன் வரிகளை மறந்துவிட்டு நிதானமாக நினைவு படுத்திக்கொள்ளும் நடிகனைப் போல வார்த்தை வார்த்தையாகப் பேசினான்: ''நாங்கள் சினிமா எடுப்பது தற்சமயம் நின்றிருக்கிறது. பணமுடை. ஒரு நாடகம் போட்டுப் பொருள் ஈட்டி, அதை முதலாக வைத்துப் படம் ஆரம்பிக்கவேண்டும்.''

''என்ன நாடகம்? யார் எழுதினது?''

''எங்களுக்கு யார் எழுதித் தர வேண்டும்? எந்த மடையனும் எழுதித்

''உன் முத்தம்மாவை நீயே கொஞ்சிக் கொள். பெயரைப் பாரு, பொம்பளைப் பேரு!'' அவன் வாயில் இருந்த வெற்றிலைச் சாற்றை அங்கேயே துப்பி விடுவான் போலிருந்தது.

மாணிக்கம் பங்காருவின் முகத்தில் வேதனையின் சாயலைக் கண்டு சட்டென்று தெளிவாகப் பேசினான்: ''பெரியம்மா, நாங்கள் பெரிய வயதை எட்டி விட்டோமே தவிர, பழையபடி தானே விளையாட்டுச் சண்டை போடத் தோன்றுகிறது?'' என்றான் அவன்; பிறகு மதனகோபாலனை நேரே கண்டு, அவனுடைய ஏளனப் பார்வையைப்

தரவேண்டிய அவசியம் இல்லே!'' என்ருன் மதனகோபாலன், அலட்சியமாக. தன் உதாசீனத்தை நிலே நாட்டுவதுபோல, அவன் மாணிக்கத்துக்கு முதுகு காட்டியபடி சுவரில் மாட்டியிருந்த கண்ணுடியில் முகம் பார்த்துத் தலேவாரி விட்டுக் கொண்டு, திரும்பிப் பாராமலே சீப்பை வீசி எறிந்துவிட்டுப் பின்புறம் சென்ருன்.

மாணிக்கம் எழுந்து, சீப்பை எடுத்து அதற்குரிய இடத்தில் வைத்துவிட்டு, ''பெரியம்மா, நான் வருகிறேன். அம்மா தேடுவாங்க'' என்ருன்.

''முத்து, இங்கே கிட்டே வா.''

''என்ன, பெரியம்மா?''

''நீ பெரிய படிப்புப் படிக்கிருயாம். உன் பெரியப்பா பெருமைப்படருரு. உனக்குப்



பணம் தேவைப்பட்டால் என்னேக் கேள். உன்னேப்போல் ஒரு மகனேப் பெறும் பாக்கியந் தான் எனக்கு இல்லே. உனக்கு உதவி செய்த திருப்தியாவது இருக்கட்டும், நயினு'' என்ருள் பங்காரு, தன் கண்ணில் வழியும் நீரைத் துடைத்துக்கொண்டு.

''ஆகட்டும், பெரியம்மா.'' அதற்குப் பிறகு அங்கு நிற்காமல் மடமடவென்று சென்றுவிட்டான் அவன்.

வீட்டு வாசல் திண்ணேயில் அவன் தந்தை கந்தசாமி செட்டியார் அமர்ந்திருந்தார். அவர் குள்ளமான மனிதர். இப்பொழுது அமர்ந்

திருந்த நிலையில் அவருடைய மளிகைக் கடை மூட்டைகளில் ஒன்று போலக் காட்சியளித்தார். பானைபோல் உருண்டு வந்த தொந்தியின்மீது தூக்கிக் கட்டியிருந்த வேஷ்டி. உடலில் சட்டை இல்லை. பூணூலில் கெட்டித் தங்கத் தாயத்து மின்னியது. கையில் கெட்டிக் காப்பும், காதில் சிவப்புக் கடுக்கனும் அவர் கருமையை அதிகப்படுத்தின.

''முத்து, எங்கேடா போனே?'' என்று அவர் கேட்கும்போதே அதட்டலாக இருந்தது.

''பங்காரு பெரியம்மா வீட்டுக்கு.''

''உம். பெரியப்பா இருக்கிறாரா?''

''உம்.''

''இந்தா, போய் ஒரு பொட்டலம் அம்பாள் பொடி வாங்கி வா'' என்று சட்டென்று நினைத்துக்கொண்டவர் போல இடுப்பிலிருந்த ஒரு பையிலிருந்து இருபத்தைந்து பைசாவை எடுத்து மகனிடம் கொடுத்தார்.

மாணிக்கம் அதைப் பெற்றுக்கொண்டு வெளியே கிளம்பினான். அவன் குழாயடியைத் தாண்டும்போது பெண்கள் கிசுகிசு வென்று பேசுவது தெரிந்து குனிந்த தலை நிமிராமலே வேகமாக நடந்தான்.

நகரத்தில் அநேகப் பெண்கள் பி.ஏ.யும், எம்.ஏ.யும் படித்து வந்தாலும் இந்த வட்டாரத்தில் மாணிக்கம் எம்.எஸ்ஸி. படித்துவிட்டு ஆராய்ச்சி செய்வது பெரிய அதிசயமாக இருந்தது. அங்கே இருப்பவர்கள் அநேகமாகச் சில்லறைக் கடைக்காரர்கள், பட்சணக் கடைகளில் வேலை பார்ப்பவர்கள், அலுவலகங்களில் வேலை பார்க்கும் குமாஸ்தாக்கள், சிலர் பள்ளி ஆசிரியர்கள். இப்போதுதான் ஒரு டாக்டர் அங்கே குடி வந்திருக்கிறார்.

அவன் தேடிச் சென்ற கடையிலும் பெண்கள் கூட்டம் கூடியிருந்தது. எல்லாரும், இந்திரா காலனிப் பெண்களே என்றாலும் அவர்களுடன் சகஜமாகப் பேசத் தெரியாததால் அவன் விலகியே இருந்து வழக்கமாகிவிட்டது.

''கடைக்காரரே, கடைக்காரச் செட்டியார் மகன் நிற்கிறாரே?'' என்றாள் ஒரு பெண்.

கடைக்காரர் அப்போதுதான் மாணிக்கத்தைப் பார்க்க நேர்ந்தது. ''என்னாங்க வேணும்?'' என்று கேட்டார் அவர்.

''அம்பாள் பொடி இருபத்தைந்து பைசாவுக்கு.''

''உங்களைக் கவனிக்கலேங்க, மன்னிச்சுக்குங்க'' என்று கடைக்காரர் சொன்னதும் மாணிக்கத்துக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஆயினும் அதை வெளிக்காட்டாமல், ''பரவாயில்லை'' என்று சொல்லிக் கொண்டே, பணத்தைக் கொடுத்து விட்டுப் பொட்டலத்தை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரையாம். என்னைப் போல் ஆராய்ச்சி செய்கிறவர்கள் ஆயிரம் பேர் இருக்க, இந்த வட்டாரத்தினர் என்னைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்களே!' என்று தனக்குள் சிரித்துக்கொண்டான் அவன்.

''என்னடா இவ்வளவு நேரம்?'' என்று அவன் தகப்பனார் குரல் அவன் சிந்தனையைத் துடைத்தது.

''கடையில் கூட்டம்'' என்றான் அவன், சுருக்கமாக.

''பெரிய குஜிலி பஜாராக்கும்! பொம்மனாட்டிக் கூட்டம் அங்கே. அதைவிட்டு வருவானா பையன்?'' என்று எங்கிருந்தோ தெருவிலிருந்து ஓர் அம்பை வீசிவிட்டு, மதனகோபால் அவர்கள் வீட்டைத் தாண்டிச் சென்றான். மாணிக்கத்தின் நெற்றி நரம்புகள் புடைத்தன. ஆனால் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு அவன் பேசாமல் இருந்து விட்டான்.

செட்டியார் ஒரு சிட்டிகைப் பொடியை எடுத்து மூக்கில் உறிஞ்சி, புறங்கையால் ஓர் இழுப்பு இழுத்து மூக்கைத் துடைத்துவிட்டு அருகிலிருந்த கந்தல் துண்டில் மூக்கை ஒற்றினார். சற்றைக்கெல்லாம் அபஸ்வரமான ஊதலைப் போல ஓசையுடன் அவர் மூக்கைச் சிந்துவது தெரிந்தது.

மாணிக்கம் சூன்யப் பார்வையுடன் எங்கோ பார்த்துக்கொண்டு நின்றான். பெருத்த வேதனை ஒன்றைச் சகிக்கும் கடினம் அவன் முகத்தில் தென்பட்டது.

குழாயடியிலிருந்து இடுப்பில் குடமும் கையில் பளபளவென்று தேய்த்த வாளியுமாக அவன் தங்கை அலமேலு வந்தாள். தன் அண்ணனின் முகத்தைப் பார்த்து, அவனைத் தாண்டும்போது, ''என்ன, அண்ணா?'' என்று தாழ்ந்த குரலில் ரகசியமாகக் கேட்டாள்.

மாணிக்கம் தன் தங்கைக்கு ஒன்றும் பதில் கூறவில்லை. வீட்டினுள் நுழைந்து தன் அறையில் போய் அமர்ந்தான். அலமேலு விடவில்லை. தூக்கிச் செருகியிருந்த தன் புடவையை இழுத்து விட்டுக் கொண்டே அவள் அவன் எதிரில் வந்து நின்றாள். கணுக்கால் வரை பச்சென்று மஞ்சள் பூச்சு. அதில் பளபளத்த கனமான வெள்ளிக் கொலுசு. அதற்கு மேல் தெரிந்த பாக்குக் கலர் முரட்டுக் கைத்தறிச் சேலை.

மாணிக்கம் தன் பார்வையை மெதுவாகத் தங்கையினுடைய முகம் வரை எழுப்பினான். அவள் முகத்திலும் அதே மஞ்சள் பூச்சு. நெற்றியில் ஜிகினாப் பொடி கலந்த வாடாமல்லி நிறக்



குங்குமம். அடர்ந்த புருவங்கள் மத்தியில் பூரண சந்திரன்போல மின்னியது.

''என்ன அண்ணு, அப்படிப் பார்க்கிறே?'' என்று கேட்டாள் தங்கை.

''சும்மாத்தான் பார்த்தேன். மாரியம்மனே எழுந்து எதிரே வந்து நின்ற மாதிரி இருக்கிருயே!''

''போ, அண்ணு. வெளியே நின்றுகொண்டிருந்தாயே, அப்போ ஏன் விசனமாகப் பார்த்தே?'' என்று கேட்டாள் அலமேலு.

''விசனமாகவா பார்த்தேன்?''

''ஆமாம். எதையோ பார்க்கப் பிடிக்காததைப் பார்த்து விட்டமாதிரி, மனசுக்கு ஏதோ ஒப்பாத மாதிரி, எங்கேயோ தூரத்திலே, கிடைக்காத ஒன்றைப் பார்க்கிற மாதிரி..''

''அட, அப்படியெல்லாமுமா என் முகத்திலே தெரிஞ்சுது?''

''ஆமாம், அண்ணு. நான் பொய்யா சொல்றேன்?''

''தங்கச்சி, இந்த மாதிரி இருப்பது நம் இரண்டு பேருக்குமே நல்லதில்லே.''

''எந்த மாதிரி, அண்ணு?''

''என் அகத்திலே இருப்பது முகத்திலே அப்பட்டமாகத் தெரிவதும், அதை நீ போகிற போக்கிலே படித்து வியாக்கியானம் செய்வதும்..''

''புத்தி கூர்மையாக இருந்தால் நல்லது தானே?'' என்று கேட்டுவிட்டுக் கலகலவென்று சிரித்தாள் அலமேலு.

மாணிக்கம் எங்கோ பார்த்தான்.

அலமேலு திடுக்கிட்டு, ''அண்ணு, அண்ணு!'' என்று கூவிக்கொண்டே அவனை உலுக்கினுள்.

2. செல்லப் பிள்ளை

''முத்து, இன்னிக்கு நீ சற்று நேரம் கழித்துப் போகமுடியுமா?'' என்று கேட்டுக்கொண்டே முன் பக்கம் வந்தாள், தனபாக்கியம், மகனைத் தேடியபடியே.

கூடத்தில் கோலம் போட்டுக்கொண்டிருந்த அலமேலு நிமிர்ந்து, ''அண்ணு அப்பவே போயிடுச்சே, அம்மா? இன்னைக்கு என்னவோ திரும்பற நேரத்திலே வேலே இருக்கிறதாமே?'' என்ருள்.

''அடி, நீ ஒரு பெண்ணு? இன்னிக்கு நம்ம வீட்டிலே பூஜை போடப் போகிரேம் என்று சொல்லி நிறுத்தமாட்

டாயோ?'' என்று கோபித்துக்கொண்டாள் தாய்.

''நான் எப்படியம்மா சொல்வது? அண்ணு வேலையே ஒரு மாதிரி இருக்குது. சொன்ன நேரத்துக்குப் போகவேண்டும், இல்லாவிட்டால் அன்றைய வேலையே கெட்டுவிடுமாம்.''

''அவன் வேலையே எனக்குப் புரியவில்லை. பாட்டுப் பாடுவானும், செடி வளருமாம்!''

''படிச்சவங்களுக்குத்தான் அம்மா, புரியும். நம்ம வீட்டிலே அப்பாவுக்கும் புரியாது, சின்ன அண்ணனுக்கும் புரியாது. ஒரு வேளை அவங்க வீட்டிலே கேட்டால்...'' என்று கூற ஆரம்பித்த அலமேலு சட்டென்று நாக்கைக் கடித்துக்கொண்டாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி கலந்த நாணம் ஒளிர்ந்தது.

தாய் மகளின் நிலையைக் கவனித்தாள். புன்னகை தவழும் முகத்துடன், ''அப்படித்தான் கேட்போமே? கோபாலுக்குத் தெரியும் என்கிருயா? அவன் மட்டும் எப்படித் தெரிந்துகொண்டிருப்பான்? நம்ப முத்து ஒவ்வொரு கிளாசிலும் முதல். கோபாலு பல்டி'' என்ருள்.

''ஒரு கிளாசிலே முதலாக வரவங்களுக்கு அதிகமாகச் சொல்லித் தராங்களா? பல்டி அடிச்சவங்களுக்குக் குறைவாகச் சொல்லித் தராங்களா?'' என்று சிணுங்கலுடன் பேசினுள் அலமேலு.

தனபாக்கியம் திடுக்கிட்டதுபோல் தன் மகளைப் பார்த்தாள். அலமேலு தலை நிமிராமல் தரைக்கோலத்தையே கவனித்தாள். தனபாக்கியம் தன் மகள் அருகில் போய், குரலைத் தாழ்த்திக்கொண்டு, ''குழந்தை, 'இம்' என்று மூச்சுக்கூட விடவில்லை. அதற்குள்ளே மனசை ஓட விடுகிருயே? நாமோ பெண் ஜன்மம். அதிலேயும் இந்த வீட்டில் சுதந்தரமாக மூச்சுக்கூட விடமுடியாது. மனசை அடக்கம்மா!'' என்று எச்சரித்தாள்.

''நான் என்னம்மா இப்போ சொல்லிவிட்டேன்?''

''நீ சொல்வதற்கு முன்பே நான் முந்திக்கொண்டு பேசுகிறேன். பங்காரு அக்கா வந்து என்னிடம் கேட்டபோது கூட நான் வாய்விட்டு ஒன்றும் சொல்லவில்லை. மணவாள அண்ணுவே வந்து உங்கள் அப்பாவிடம் பிரஸ்தாபித்தார். அப்போகூட உன் அப்பா 'எவ்வளவு நகை போடுவீங்க?'ன்னு ஆரம்பிச்சாரே?''

''இந்த அப்பா எப்பவும் இப்படித்தான்! காசிலேயே கருத்து'' என்று அலுத்துக்கொண்டாள் அலமேலு.

''பாத்தியா, பாத்தியா? நீ இப்பவே கோபாலுவின் பெண்சாதி மாதிரி பேச ஆரம்பிச்சூட்டியே? நானே உன்னிடம் நிதானமாக ஒரு விஷயம் பேச வேண்டுமென்று இருக்கிறேன்'' என்று ஆரம்பித்த தாயை அப்படியே அடக்கிவிட்டாள் அலமேலு.

''ஒன்றும் பேச வேண்டாம், அம்மா. எனக்கு எல்லாம் தெரியும். நம்ப மாரியம்மன் கல் இருக்கிறவரைக்கும் ஒரு கெடுதலும் வராது; எனக்குத் தெரியும்.''

''இருக்கட்டும், இருக்கட்டும். இன்றைக்குப் பூஜை போட்டுவிட்டுப் பூ வைத்துப் பார்ப்போம். நல்லா வந்துட்டா சரி, இல்லையோ அதுவும் சரி'' என்ருள் தனபாக்கியம்.

'''நல்லா' என்ருல் எது அம்மா?'' என்று குறும்பாகக் கேட்டாள் அலமேலு.

''அந்த ஆத்தாளுக்குத் தெரியுமே, எது நல்லது என்று.''

''அம்மா, நீ சொல்லு. உனக்கு எது நல்லதுன்னு படுகிறது?''

''பங்காரு அக்கா கிட்டே மனஸ்தாபம் இல்லாமல் இருந்தால் போதும்'' என்ருள் தனபாக்கியம்.

அலமேலு திருப்தியுற்றவள்போலச் சிரித்துக்கொண்டாள். ''அப்பவும் நீ 'அக்கா'ன்னு கூப்பிடுவியோ, அம்மா? 'அண்ணி'ன்னுதானே அழைப்பே?'' என்று கேட்டாள், குறும்பாக. அதன் பிறகு மிக மிகத் தெம்பாகக் கோலத்தைப் போட்டுவிட்டுப் பூஜைக்கு எடுத்து வைக்கலானுள்.

மதனகோபாலன் மன்மதன் அல்ல; ஆனல் அலமேலுவின் கண்களுக்கு அவனை விட அழகனே இல்லை என்ற எண்ணம். அவள் ஒரு முறை தன் மனக் கண்முன் அவன் உருவத்தை நிறுத்தி ரசித்தாள். உடனே தாயின் சொற்கள் நினைவுக்கு வந்தன.

மதனகோபாலனும் மாணிக்கமும் ஒன்ருகவேதான் படிக்க ஆரம்பித்தார்கள். நடுநடுவில் மதனகோபாலன் நின்றுவிடுவான். சலுகையினுல் செல்ல முடிந்த வரை சென்ருன். படிப்பினுலேயேதான் முன்னேற வேண்டும் என்று ஏற்பட்டதும் முட்டுக்கட்டை விழுந்தது. ஆயினும் கல்லூரியில் சேர்ந்ததன் பயனுகப் பல நண்பர்கள் உண்டானுர்கள். கல்லூரியில் கலைக் கழகச் செயலர் பதவியை வகித்தான். அதனுல் சில நடிகர்கள், நாட்டியக்காரர்கள், சங்கீத வித்துவான்கள் ஆகியவர்களின் பரிசயம் கிடைத்தது. நாடகம் நடத்துவதற்கு வேண்டிய அநுபவமும், சில பெரிய மனுஷர்களின் நட்பும், சில வேண்டாத பேர்வழிகளின் தொடர்பும் இப்படி நல்லதும் கெட்டதுமாகப் பல அவனை ஒட்டிக்கொண்டன. உழைத்துப் பிழைக்க வேண்டிய பொறுப்பு இல்லை. அவன் தகப்பனுர்

தம் கொடுக்கல் வாங்கல் வியாபாரத்தையும், பெயின்ட் கடையையும் தாமே பார்த்துக்கொண்டார். அவனுடைய அண்ணன் தனக்கு மணமான சில நாட்களிலேயே தனியாகப் பிரிந்து போய் விட்டான். அவன் பிரத்தியேகமாக இரும்புச் சாமான், பெயின்ட் முதலியவை விற்கும் கடை வைத்திருந்தான்.

இவனைத் தட்டிக் கேட்பாரே இல்லை என்கிறமாதிரி ஆகிவிட்டது. ஒரு பிள்ளையாவது வீட்டில் ஒட்டிக்கொண்டிருக்கட்டும் என்று அவன் பெற்றோர்கள் அவனுக்குச் சலுகை தந்தனர். ஆனந்தமாக ஊதாரியாக அவன் திரிந்தான். அலமேலுவுக்கு அவன் துர்க்குணங்கள், கெட்ட பழக்கங்கள் தெரியாமல் இல்லை. ஆனாலும் அவன் நல்லவன் என்றே நம்பினாள் அவள்.

"என்ன, அலமேலு, இன்னமுமா பூஜைக்கு எடுத்து வைக்கவில்லை?" என்று தனபாக்கியத்தின் குரல் கேட்டு மகள் தன் சிந்தனையிலிருந்து விடுபட்டு எழுந்தாள். பரபரப்பாகக் குத்து விளக்குகளுக்குத் திரி போட்டு, எண்ணெய் ஊற்றித் தயாராக்கினாள்.

"நரசையாகூட வந்து விட்டாரு பாரு" என்று கடிந்தாள் தாய்.

"இருக்கட்டும், அவசரம் என்ன?" என்றார் வந்தவர்.

"அவசரப்படுத்தாமல் என்ன செய்வது நரசையா? இவங்க அப்பாவும் சண்முகமும் கடை திறக்கப் போகணுமே?"

பூஜைச் சாமான்களை எடுத்துக்கொண்டு எல்லாரும் தெருவில் மாரியம்மன் கல் முன் கூடினார்கள். நரசையா செய்து வைக்கக் கந்தசாமி செட்டியார் பூஜை செய்தார்.

வழக்கம்போல் காலனியில் யாவரும் தம் தம் வீட்டிலிருந்து எட்டி எட்டிப் பார்த்தபடி இருந்தனர். அலமேலுவின் வாழ்க்கைப் பிரச்னையும் இந்தப் பூஜையில் கலந்திருக்கிறது என்று பலரும் தாட்சண்யத்தை ஒட்டித் தம் வீடுகளிலிருந்தே பார்த்துக்கொண்டிருந்தனர்.

பங்காருவுக்கும் தன் வீட்டுக்குள் இருப்புக் கொள்ளவில்லை. இல்லாத வேலைகளையெல்லாம் உண்டாக்கிக்கொண்டு வீட்டுக்குள்ளேயே முடங்கித் தவித்தாள்.

"இதோ பாரு, நீ அங்கே போகாதே. வீணாகத் தாபப்படுவே. ஏன் என்று கேட்கிறாயா? கல்யாணம் நடக்கட்டும் என்று உத்தரவு வந்தால் அலமேலுவுக்கு நஷ்டம்; உனக்கு லாபம். வேண்டாம் என்று கண்டாலோ அந்தப் பொண்ணுக்கு அதிருஷ்டம். இந்தக் கூத்தாடிப் பயலைக் கட்டிக்கொண்டு அது என்ன சுகம் அடையப் போகிறது?" என்றார் மணவாளச் செட்டியார்.

"அலமேலு நம்ப வீட்டுக்கு வந்தால் அதுக்கு என்ன கஷ்டம்? கல்யாணம் என்று ஆகிவிட்டால் அவனுக்கே பொறுப்பு வந்துவிடும். இரண்டு குழந்தைகள் பிறந்தால் எல்லாம் சரியாகிவிடும். இல்லையென்றாலும் அவர்களுக்கு நஷ்டம் இல்லை. வேறே நல்ல வரன் கிடைக்கும். நமக்கு அப்படியா? ஒரு நல்ல பெண் நம்ப வீட்டுக்கு வரலேன்னா நம் வீடே பாழாகிவிடுமே! நமக்காகவே அம்பிகை நல்ல பூ தரவேணும்."

"தன்னல உணர்ச்சி இல்லாவிட்டால் உலகமே இல்லையே? இல்லாவிட்டால் நானே போய் அந்தப் பெண்ணைக் கேட்டிருப்பேனா?" என்றார் மணவாளச் செட்டியார், விரக்தியாக.

இருப்பினும், அவருக்கும் தம் ஆவலை அடக்க முடியவில்லை. ஒரு பத்திரிகை எடுத்துக்கொண்டு தெருத் திண்ணையில் போய் அமர்ந்து, யாரும் தம்மைப் பார்க்க இயலாதவாறு தாளைப் பிரித்து வைத்துக்கொண்டு ஓரக்கண்ணால் பூஜையையே கவனித்தார்.

கந்தசாமி செட்டியார் பூஜையை முடித்துவிட்டு இரண்டு காகிதப் பொட்டலங்களை அம்மன் முன் வைத்தார். தனபாக்கியத்தின் முகம் கவலையினால் வெளிறிவிட்டது. அலமேலுவோ இப்போதே மண மேடையில் இருப்பவள்போல் தலை குனிந்து நின்றாள். அவள் மார்பகம் விம்மி விம்மி எழும்பி அடங்குவதிலிருந்து அவள் மனப் போராட்டம் தெரிந்தது.

அங்கே பள்ளிக்கூடம் போய்க்கொண்டிருந்த ஒரு சிறுமியை அழைத்து ஒரு பொட்டலத்தை எடுக்கச் சொன்னார்கள். அது எடுத்துத் தந்துவிட்டு ஓடிவிட்டது. தான் எவ்வளவு பெரிய காரியம் செய்து விட்டோம் என்பது தெரிய அவளுக்கு நியாயம் இல்லை.

கந்தசாமி செட்டியார் எழுந்து மெதுவாக மணவாளச் செட்டி வீட்டுப் பக்கம் வந்தார். தனபாக்கியமும் அலமேலுவும் பூஜைச் சாமான்களை எடுத்துக்கொண்டு தங்கள் இல்லத்துக்குள்ளே போய் விட்டார்கள். சண்முகமும் உள்ளே சென்று வேறு உடை உடுத்துக்கொண்டு திரும்பி ஓடிவந்து தகப்பனாரிடம் ஏதோ கேட்க, அவர் மெதுவாகத் தம் பூணூலிலிருந்து ஒரு சாவியை எடுத்துத் தந்தார்.

மணவாளச் செட்டியார் இருந்த இடத்தில் இருக்க முடியாமல் தவித்தார். ஒவ்வொரு கணமும் ஒரு பெரிய இடைஞ்சல்போல் தோன்றியது அவருக்கு. ஆத்திரத்துடன் வாசலுக்கே வந்து நின்றார். பங்காருவும் இடைகழியில் வந்து ஒதுங்கினாள்.

கந்தசாமி செட்டி வேண்டுமென்றே அன்னநடை போட்டு வருவதுபோல

இருந்தது அவர்களுக்கு. அவர் மெதுவாக வந்து இவர்கள் வீட்டிற்குள் நுழைந்து விஷயத்தைச் சொல்லுவதற்குள் ஒரு யுகமே கழிந்தமாதிரி இருந்தது.

"குட்டி, உங்கள் மருமகளாகத்தான் வருவாபோல! கடைக்குத் தினமும் நூறு இலைக்குக் குறையாமல் தைத்துக் கொடுப்பாள். ஹூம், இனிமேல் தைக்கலாமா? பெரிய இடத்து மருமகளாகப் போகிறுளே!" என்று தமக்கே உரிய பாணியில் வெளியிட்டார் அவர்.

மணவாளச் செட்டிக்குக் காற்றில் மிதப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. தோள்மீது அழுத்திக்கொண் டிருந்த பளு ஒன்றை யாரோ தட்டிவிட்டது போல் பிரமை தோன்றியது. அவர் கந்தசாமி செட்டியை அப்படியே அணைத்துக் கொண்டுவிட்டார். பங்காரு உள்ளே போய் ஒரு தட்டு நிறையக் கற்கண்டும் வாழைப் பழமும் வைத்துக் கந்தசாமி செட்டியார் முன் கொண்டு வைத்தாள்.

ஆண் பிள்ளைகள் இருவரும் அளவளாவின பிறகு கந்தசாமி கிளம்பிப் போய் விட்டார். தனபாக்கியம் வருவாளோ என்று ஆவலோடு காத்திருந்தாள் பங்காரு.

தனபாக்கியத்தின் மனத்தில் ஆயிரம் பிரச்னைகள் எழுந்தன. அவற்றிலிருந்து விடை காண முடியாமல் அவள் தவித்தாள். பங்காருவைக் காணவேண்டும் என்ற எண்ணமே உதிக்கவில்லை, அவள் மனத்தில்.

அம்மன் உத்தரவு கிடைத்தது சரிதான். அம்பாளின் ஆக்ஞைக்கு உட்பட்டு நடந்தே வழக்கமாகிவிட்ட வாழ்க்கை தனபாக்கியத்தினுடையது. இன்று அவள் நிம்மதியடைய வேண்டியதுதானே? அதற்கு மாருக மனம் பிரச்னைகளை எழுப்பியது. 'மதனகோபாலன் அலமேலுவை நல்லபடி வைத்துக் கொள்வானு? நம் ஒரே பெண்ணின் வாழ்க்கையை வேடிக்கையாகச் சீட்டுப் போட்டு விளையாடிவிட்டோமா?' அந்த எண்ணம் வந்ததும் அவள் அவசரமாகக் கன்னத்தில் போட்டுக்கொண்டாள். "அம்மா, என்னை மன்னித்துவிடு" என்று பிரார்த்தனை கிளம்பியது.

அலமேலுவின் வாழ்க்கை மட்டும் நன்ருக அமையுமானல் அதைவிடத் தனக்குப் பாக்கியம் ஒன்றும் இராது. நகைகளும், பட்டாடைகளும், கூப்பிட்ட குரலுக்கு ஆளும், பழமும், பாலும், நெய்யும், தயிருமாகச் சாப்பாடும் மதிப்புமாக இருப்பாளே!' பங்காருவும், மணவாளச் செட்டியும் தமக்குப் பெண் இல்லாத குறையை இவள் மூலம் தீர்த்துக்கொள்வார்கள். தானும் கண்ணுரக் காணலாமே?

தனபாக்கியம் சிறு வயதில் வசதியாக இருந்தவள். தன் பெண் கஷ்டப்படாமல் வாழவேண்டுமென்ற சபலம் அவளுக்கு இருந்தது.

கல்யாணம் என்றதும் ஓரளவேனும் தாராளமாகச் செலவு செய்வாரா தன் கணவர் என்ற ஒரு கவலையும் ஊடே ஊடே தலைதூக்கியது. மாணிக்கம் இன்னும் ஒன்றும் பெரிய சம்பளம் சம்பாதிக்கவில்லை. ஆராய்ச்சிக்காகக் கிடைக்கும் உபகாரச் சம்பளம், அவனுக்குத்தான் போதும். சின்னவன் தகப்பனர் கடையைப் பார்த்துக்கொண் டிருந்தான்.

பங்காரு, தனபாக்கியம் வருவாள், அவளிடம் எவ்வளவோ பேசவேண்டும் என்றும், தங்கள் பால்யச் சிநேகம் வலுப்பட்டதைக் குறித்துச் சந்தோஷப் படவேண்டும் என்றும் ஆவலோடு காத்திருந்தாள். தன் தோழி வராதது அவளுக்கு ஏமாற்றமாகவே இருந்தது. ஆனல் அவள் தானுகக் கிளம்பித் தனபாக்கியத்தின் வீட்டைத் தேடிச் செல்லவில்லை. ஊஞ்சலில் அமர்ந்து காத்துக்கொண்டே இருந்தாள்.

அலமேலு மட்டும் கலப்பற்ற ஆனந்தத்தில் ஆகாயக் கோட்டைகள் கட்டியபடி வேலையில் ஈடுபட்டாள்.

"அம்மா!" என்று யாரோ அழைப்பது கேட்டு அலமேலு எட்டிப் பார்த்தாள். புதிதாக அவர்கள் காலனிக்குக் குடி வந்திருக்கும் டாக்டரின் மனைவி நின்றிருப்பதைக் கண்டாள்.

"வாங்க, அம்மாவைக் கூப்பிடுகிறேன்" என்று அலமேலு அந்த மாதை உபசரித்தாள். புதுப் பாய் ஒன்றை விரித்து அதில் அமரச் செய்தாள்.

கொல்லைப்புறத்திலிருந்து ஒரு பெரிய அண்டாவைத் தூக்கிக்கொண்டு வந்த தனபாக்கியம், அந்தப் பெண்மணியைக் கண்டதும் கூச்சத்துடன் பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டுக் கை கூப்பினுள்.

டாக்டர் மனைவி மீனுட்சி எழுந்து நின்ருள். சிரித்த முகத்துடன் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டாள். "என் பெயர் மீனுட்சி. எல்லோரும் 'மீனு'ன்னு தான் கூப்பிடுவாங்க. டாக்டர் என் புருஷர். காலனியிலே உள்ளவங்களைத் தெரிந்துகொள்ளலாமென்று வந்தேன்" என்ருள்.

"வாங்க, அம்மா. எங்களுக்கும் நல்ல காலம். கிட்டே யாரும் பெரிய டாக்டர் கிடையாதுங்க. பெரிய ஆஸ்பத்திரிக்குத் தான் போகவேணும். நான் நேற்றுத் தான் பெயர்ப் பலகையைப் பார்த்தேன்; நம்ப காலனிக்கு நல்ல காலம்னு நினைச்சேன்" என்ருள் தனபாக்கியம்.

"நீங்களும் டாக்டரா, அக்கா?" என்று கேட்டாள் அலமேலு, மெதுவாக.

''இல்லையம்மா, அவர்தாம் டாக்டர். நான் சமூக நலச் சங்கம் ஒண்ணு நடத்த றேன். டாக்டரும் எனக்கு உதவி செய் வாரு. நாங்கள் நகரத்திலே ஒவ்வொரு பேட்டையாக் குடி போய் அங்கே சமூக சேவை செய்கிறோம். அதற்கு நீங்கள் எல்லாரும் உதவி செய்யவேணும்.''

''நீங்கள் இப்படி அடிக்கடி குடிசை தூக்கினால் டாக்டரின் பிழைப்புக் கஷ்டப்படாதா?'' என்று கேட்டாள் தனபாக்கியம்.

''என்னம்மா இது? 'குடிசை தூக்கு கிறது'ன்னு நம்பளைப் போலப் பேசறயே?'' என்று கிசுகிசுத்தாள் அலமேலு.

''நான் கிராமியமாகப் பேசறேனும். என் பொண்ணு கண்டிக்கறா பாருங்க.''

''நான் மட்டும் என்ன நாகரிகமாகப் பேசறேனா? நீங்கள் கேட்கிறது சரியான கேள்விதான். டாக்டர் வசதியுள்ள குடும் பத்தைச் சேர்ந்தவர். பணத்துக்காக வேலை பார்க்கவேண்டாம். அதனால் எங்களுடைய சமூக சேவை ஆசையை ஓரளவு தீர்த்துக்கொள்ள முடிகிறது.''

''ரெயிலடிக்கு அந்தாண்டை முருகன் பேட்டையில்கூட யாரோ இப்படிச் செய் கிறார்களாம். அந்தப் பேட்டையே சுத்த மாகிவிட்டதுங்க. பெண்கள் கைவேலை செய்யறாங்க. குழந்தைகள் பள்ளிக்கூடம் படிக்கிறாங்க.''

''ஆமாம். அங்கே நாங்கள் ரெண்டு பேருந்தான் ஆரம்பிச்சோம். இப்ப அங் குள்ளவங்களே நடத்திக்கிறாங்க. அவுங்க சொல்லித்தான் இங்கே குடி வந்தோம்.''

''அப்படிச் சொல்லுங்க.''

அலமேலு எழுந்து வெளியே சென்றாள். தெருவில் ஓடிக்கொண்டிருந்த யசோதாவை அழைத்து, பணத்தைக் கொடுத்து, ''ஏய், ஒரு ஃபாண்டா வாங்கி யாம்மா. உனக்கு அஞ்சு பைசாத் தரேன்'' என்று பணித்தாள்.

யசோதா சிட்டாய்ப் பறந்து சென்று, கையில் பானத்துடன் திரும்பி வந்து நின்றாள். மீதிச் சில்லரையையும் பாட்டிலையும் கொடுத்துவிட்டு, அலமேலு தந்த ஐந்து பைசாவை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டாள்.

உள்ளிருந்து ஒரு வெள்ளி டம்ளரை எடுத்து, அதில் பானத்தை ஊற்றி மீனாட்சியிடம் நீட்டினாள் அலமேலு.

''தாங்க்ஸ்'' என்று வாங்கிக்கொண் டாள் மீனாட்சி. நாசூக்காகச் சாப்பிட்டு விட்டு டம்ளரைக் கழுவி வைக்க எழுந் தாள்.

''வேண்டாங்க. இருக்கட்டும். நான் அலம்பிவைக்கிறேன்'' என்றாள் அலமேலு.

''அக்கா, சீசா கொடு'' என்று மூச்சு வாங்க ஓடிவந்தாள் யசோதா.

''இந்தா'' என்று காலியான சீசாவைச் சிறுமியிடம் கொடுத்தாள் தனபாக்கியம்.

''வேறு யார் வீட்டுக்காவது கூட்டிக் கிட்டுப் போறீங்களா?'' என்று கேட்டாள் மீனாட்சி.

''வாங்க, பங்காரு வீட்டுக்கு நானே போகணும். இன்னிக்கு ஒரு நல்ல விஷயம் எங்க வீட்டிலே. நீங்க அம்மன்மாதிரி வந்தீங்க. வாங்க போகலாம்'' என்று அவளை அழைத்துக்கொண்டு கிளம்பினாள் தனபாக்கியம்.

''நீயும் வரயா? உன் பேர் என்ன?'' என்று கேட்டாள் மீனாட்சி.

''என் பெயர் அலமேலு. நான் இன் னிக்கி வரலைங்க. நீங்க போய் வாங்க'' என்று சொல்லும்போது வெட்கமும் மகிழ்ச்சியும் போட்டியிட, பொலிவுடன் விளங்கியது அலமேலுவின் முகம்.

யசோதா ஃபாண்டா சீசாவில் விரலைப் போட்டு நக்கிக்கொண்டே மீனாட்சியை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

அலமேலு அவள் மணிக்கட்டில் விரலால் ஒரு தட்டுத் தட்டினாள். ''சே, அசிங்கம்! போ, சீசாவைக் கடையிலே கொடு. இல்லாட்டி இந்தப் புது டாக்டர் கிட்டே சொல்லி ஊசி போடச் சொல்வேன்'' என்றாள்.

ஒரு மூக்கில் சளி வழிய, ஒரு கையால் தலையைச் சொறிந்துகொண்டு, நின்ற இடத்தைவிட்டு நகரவில்லை யசோதா.

அவளைக் கண்டதும் மீனாட்சி பார்வையை எங்கோ செலுத்தினாள்.

ஒரு கணம் அந்தப் பார்வை! அந்தப் பார்வை?...தன் அண்ணன் மாணிக்கத் தின் முகத்திலும் அப்படித்தானே இருந்தது? உலுக்கி உலுக்கி அவனைத் தன் சூழலுக்கும் நினைவுக்கும் இழுக்க வேண்டியிருந்ததே!

அலமேலு வியந்துகொண்டே குங்குமச் சிமிழை எடுத்து வந்து மீனாட்சிக்குக் காட்டினாள். மீனாட்சி குங்குமத்தை எடுத்து வகிட்டில் நாசூக்காக இட்டுக் கொண்டாள்.

''வெற்றிலை பாக்குக் கொடம்மா'' என்றாள் தனபாக்கியம். தானே சென்று சமையலறையிலிருந்து ஒரு பித்தளைத் தாம்பாளத்தில் வெற்றிலை, பாக்கு, பழம், பூ எல்லாமே வைத்து மீனாட்சிக்குத் தாம் பூலம் தந்தாள். இன்னமும், நிறைய வெற்றிலை, பாக்கு, பழம், பூ வைத்து எடுத்துக்கொண்டு மீனாட்சியுடன் பங்காரு வீட்டுக்குக் கிளம்பினாள்.

அலமேலு தெருத் திண்ணைவரை போய் அவர்களை வழி அனுப்பிவிட்டு உள்ளே வந்தாள். யசோதா அப்போதும் நின்று கொண்டிருந்ததைப் பார்த்து அவளை விரட்டிவிட்டாள்.

மீனாட்சியின் முகத்தில் ஏன் அந்தப் பார்வை? அலமேலுவின் மண்டையைக் குடைந்தது.

[தொடரும்]

மறைமலை அடிகளார் (1876-1950), தமிழகப் புலமை வானில் ஒரு பெரும் ஞான ஞாயிறு எனச் சுடர்விட்டுத் திகழ்ந்து வைகியிருந்த ஒப்புயர்வற்ற பெருஞ்சான்றோர். தமிழ், ஆங்கிலம், வடமொழி என்னும் மும்மொழிகளிலும், ஆழ்ந்து நுணுகி முதிர்ந்த பெரும் புலமை மிக்கவர்.

தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனார், 'மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர்; தமிழ் நிலவு; சைவவான். தமிழே சிவமாகவும் சிவமே தமிழாகவும் அடிகளுக்குத் தோன்றுகின்றன என்று யான் கருதுகிறேன். இரண்டையும் ஒன்றாகக் கண்டவர் திருஞானசம்பந்தர். திருஞானசம்பந்தரிடமிருந்து மறைமலை அடிகள் கொண்ட காதற்கு ஓர் அளவில்லை. தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலை அடிகளுக்கு உண்டு' என்று வியந்து போற்றியுள்ளார்.

நெடிய சிவந்த திருவுருவம், திண்ணிய சிவந்த பொன்மேனி, அழகிய இனிய அறிவு ஒளிவீசும் முகம். சிவம் பழுத்துத் திருநீறு ஒளிறும் நெற்றி; அந்நெற்றியில் அழகிய சந்தன குங்குமத் திலகங்கள், குயிலினும் இனிய மெல்லிய குரல், பழமையும் புதுமையும் ஒருங்கு விரவிய பண்புநலம்-இவை அனைத்தும் ஒருங்கினிது அமைந்து திகழ்ந்தார் இவர்.

மறைமலை அடிகள்

ந. ரா. முருகவேள்

'திருக்கோயில்' ஆசிரியர் தம்முடைய ஆசிரியரைப்பற்றி எழுதுகிறார்.

தமிழில் இலக்கணம், இலக்கியம், தருக்கம், தத்துவம், கவிதை, உரைநடை, வரலாறு, கல்வெட்டு, உரைவரைதல், மறுப்பெழுதுதல், மொழிபெயர்ப்புச் செய்தல், புதினம் புனைதல், நாடகம் இயற்றல் முதலிய பல துறைகளிலும் அடிகளார் தம் அறிவு இலச்சினைகளைப் பொறித்தருளியுள்ளார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே அடிகளார் முல்லைப் பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, குறிஞ்சிப் பாட்டு ஆராய்ச்சி போன்ற ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டிருக்கிறார். அடிகளாரின் ஆராய்ச்சி நூல்களும் கருத்துக்களும், பழமை நலமும், புதுமை எழிலும் பொலிந்து பயில்வார்க்குப் பெருநலம் பயப்பனவாகும்.

மறைமலை அடிகளார் அஞ்சா நெஞ்சுடைய சிந்தனையாளர் (Fearless Thinker), மூலமுதல் முன்னோடியான ஆராய்ச்சி அறிஞர் (Original and Pioneer Researcher), முன்னைய பிழைக் கொள்கைகளைக் கடிந்து களைந்தொழித்தவர்.

அடிகளார், தமிழில் எத்துணைப் புலமை உடையவரோ அத்தனை அளவுக்கு ஒத்த புலமையை, வடமொழி, ஆங்கிலம் என்னும் இருபிற பெருமொழிகளிலுங்கூட உடையவராதலின், தமிழறிஞர் வரிசையில் மட்டும் அடிகளை வைத்துக் கருதுதல் பொருந்தாது.

வடமொழியில் உள்ள வேதம், ஆகமம், உபநிடதம், ஸ்மிருதி, பிராம்மணம், இதிகாசம், புராணம் என்னும் பலநூல்களையும் அடிகள் முறையாகக் கற்றுத் துறைபோயவர் என்பது, அவர்தம் நூல்கள் பலவற்றிலும் ஆங்காங்கு எடுத்துக் காட்டும் மேற்கோள்களாலும், 'தமிழாசிரியர் தழுவிய வடமொழி நூல்கள்' என்னும் ஆய்வுக் கட்டுரையாலும் பிறவற்றாலும் மொழிபெயர்ப்புப் பகுதிகளாலும் விளங்கும்.

வடமொழிப் பெருங் கவிஞராகிய காளிதாசர் எழுதிய சாகுந்தல நாடகத்தில் அடிகளார் கொண்டிருந்த நயப்பும் வியப்பும் எல்லையற்றனவாகும்.

துஷ்யந்தன் சகுந்தலையை முதல்முதலாகக் கண்டு வியந்து, காதல் கொண்டு நலம் புனைந்துரைத்ததாகக் காளிதாசர் இயற்றியுள்ள அழகிய சுலோகத்தை,

"மோவா மலரோ? நகங்களை யாத
முழுமுறியோ?
ஆவா கருவி துருவாது பெற்ற
அருமணியோ?

நாவாற் சுவையாப் புதுநற வோ?செய்த
நற்றவங்கள்
தாவாது ஒருங்கு திரண்டுவந் தால்அன்ன
தையலரே!''

என்றும்; சகுந்தலை துஷ்யந்தனிடம் காதல் கொண்டு, தனது உயிரினும் இனிய தோழியர்கள், அக்காதல் நிலையினைத் தாமரை இலை ஒன்றில், தன் கைந்நகத்தால் எழுதிக் காட்டியதாக உள்ள சுலோகத்தை,

"இரக்கமிலா அரசே! நான்
என்செய்வேன்? இரவுபகல்
எரிக்கின்றான் எழிற்காமன்
என்னுடலை; நின்மேலே
பெருக்கின்ற தென்காதல்;
பேதையேன் நின்னெஞ்சம்
இருக்குமாறு உணர்ந்திலேன்;
எனக்கதனை இயம்புதியே"

தில் இவர் வசித்த கச்சாலேசுவரர் கோயில் சந்நிதித் தெரு ஜே ஜே என்றிருக்கும். சங்கீத ஜாம்பவான்களின் உலாவையும், கானமழையையும் பார்த்துக் கேட்டு ரசிக்க வரும் கூட்டத்துக்கும் அளவு இருக்காது''

''சங்கீதத்திலேயே இத்தனை அக்கறையுடன் இருந்த இவர் குடும்பம்....''

'' 'இவர் குடும்பம்' என்பதே சிஷ்யர்களையும் உள்ளடக்கியதுதான். என் சகோதரர் திரு டி. சங்கரன், கடைசிவரையில் பிள்ளையுடன் இருந்து கவனித்த திரு முத்துச் செட்டியார் ஆகியோர் எல்லாம் என் குருவை நன்கு அறிந்தவர்கள். திரு முத்துச் செட்டியார் இவருடைய வலக்கரமாக இருந்தார் என்று கூடச் சொல்லலாம். 1934-ஆம் ஆண்டு, மே மாசம் இரண்டாந் தேதி தம் 44-ஆவது வயதில் என் குருநாதர் இறக்கும்வரையில் சிஷ்யக் கூட்டம் இவரைக் கைவிடவில்லை. 'உனக்கு எப்படி அப்பா டி. பி. வந்தது?' என்று சோதித்துப் பார்த்த டாக்டர் ரங்காசாரியே கேட்டுக் கண்ணீர் விட்டாராம். என் குருவின் ஒரே பெண் நீலாயதாட்சி. இவருடைய குமாரர் திரு ராஜரத்தினம் அவர்கள் தமிழிசைப் பள்ளியில் போதகராக இருக்கிறார். என் குரு நாயனப் பிள்ளை அவர்கள் விட்டுச் சென்ற செல்வம், சிஷ்யர்களும் அபூர்வக் கீர்த்தனைகளுந்தான். திருப்புகழுக்கே இவரால் புகழ். ஒவ்வொரு கச்சேரியிலும் திருப்புகழ் பாடாமல் இருக்கமாட்டார். ஒரு சமயம் மயிலாப்பூர் ஏ.கே. ரங்கநாதையர் வீட்டில் ஆறு மணி நேரத்துக்குமேல் நெருடான தாளங்களில் திருப்புகழ் மட்டுமே பாடினார். இவரால் தமிழ்க் கீர்த்தனைகள் எத்தனையோ புழக்கத்துக்கு வந்துள்ளன. பழனி ஆண்டவர் கீர்த்தனைகள், துரைசாமிக் கவிராயர் கீர்த்தனைகள், ராம நாடகக் கீர்த்தனைகள் முதலியன.''

கண்கள் பனிக்க ஸ்ரீமதி டி. பிருந்தா தம் குருநாதரை எண்ணியபடி, சற்றுப் பேசாமல் அமர்ந்திருந்தார். சங்கீத உலகில் சிம்மமாக உலவிய இந்த லயமேதை பாடிய ஓரிரு கீர்த்தனைகளையாவது ஸ்ரீமதி பிருந்தா அவர்கள் தம் கச்சேரிகளில் பாடாமல் இருப்பது கிடையாது. தோடியில் 'மொரபட்டிதே', சங்கராபரணத்தில் 'புத்திராது', வசந்தா ராக 'ஸ்ரீ காமாட்சி கடாட்சி' என்ற கீர்த்தனைகளைத் தம் குருவைப் போலவே காம்பீர்யத்துடன் ஸ்ரீமதி பிருந்தா பாடுவதை எத்தனையோ ரசிகர்கள் கேட்டிருப்பார்கள். இவரைப் போலவே, இவர் புதல்வி ஸ்ரீமதி வேகவாகினியும் அபாரமாகத் தயாராகிப் பாடி வருகிறார். தாயும் புதல்வியும் சிறந்த சங்கீத விருந்தைப் பக்குவமான ரசிகர்களுக்கு அளித்துப் பெருமை சேர்த்து வருகிறார்கள். கச்சேரிகளில் தம் குரு பாடிப் பிரபலப்படுத்திய கீர்த்தனைகளில் ஒன்றிரண்டையாவது ஸ்ரீமதி பிருந்தா, தம் புதல்வி ஸ்ரீமதி வேகவாகினியுடன் பாடுவதே குருவுக்கு அளிக்கும் அஞ்சலிபோலும்!

—எஸ். வி. ரமணி



3. அமைதியை நாடி

கூடத்தில் உரத்த குரல் கேட்டதும் தன் இடத்தை விட்டு எழுந்து வந்தான் மாணிக்கம். அவன் தகப்பனுர் ஏகமாக இரைந்துகொண்டிருந்தார். தைத்த இலைக் கட்டும் தைக்காத இலைகளும் கூடத்தில் கொட்டியிருந்தன. அவன் தாயாரும் உரத்த குரலில் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''நான்தானே பத்தாயிரம் இலை வாங்கினேன்? எத்தனை இலை வரவேண்டும் என்று எனக்குத் தெரியாதா?''

''பொத்தல் இலைகள் இரண்டு லட்சம் வாங்கிப் போடுங்களேன். அப்படியே கைக்குக் கை கிடைத்துவிடுமா? நீக்கினது போக ஏதோ கிடைக்கும்'' என்ருள் மாணிக்கத்தின் தாய் தனபாக்கியம்.

''பொத்தலானுல் நீக்கி விடுவதா? பெரிய ராஜா வீட்டு மகள் பாரு! ஒட்டுப் போட்டுத் தைப்பதற்கு என்ன?''

''ஒட்டுப் போட்டு ஒட்டுப் போட்டுக் கொடுத்தால் அவ்வளவுதான்! நம் கடையைத் தேடி யாரும் வரமாட்டார்கள்.''

''ஒட்டுப் போட்டு அந்த இலைகளை நடுவில் வைத்துத்தான் கட்டணும். அப்படித்தான் எந்தக் கடையிலும் செய்வது வழக்கம். நீ எனக்குக் காது குத்துகிருயா?'' என்று மிரட்டிக் கொண்டே நெருங்கினுர் செட்டியார்.

''நான் என்ன ஆசாரியா, உங்கள் காதைக் குத்துவதற்கு? விஷயம் புரியாமல் பேசுகிறது!'' என்று முணுமுணுத்தாள் தனபாக்கியம்.

''என்னடி விஷயம் புரியவில்லை?'' என்று இரைந்து விட்டு ஓங்கி அடிக்கப் போனுர் கணவர்.

''அடிக்கத்தான் தெரியும். வேறே என்ன தெரியும்?''

மாணிக்கம் தன் தாயைப் பார்த்துப் 'பேசாதே' என்று ஜாடை காட்டினுன். மகனைக் கண்டதும் ஒரு விநாடி தயங்கினுள் பாக்கியம். அவள் பார்வை சென்ற திக்கைக் கண்டதும் கந்தசாமி செட்டிக்கு ஆத்திரம் அதிகரித்தது. மனைவியைப் 'பளீர்' என்று இரண்டு அறை வைத்தார். திரும்பித் தன் மகனைப் பார்த்து, ''என்னடா முழிக்கிறே? நாங்கள் அரும்பாடுபட்டுச் சம்பாதிக்க வேண்டியது, நீ வண்ணுன் உடுப்பு உடுத்திக்கொண்டு பெரிய மனுஷ சகவாசம் செய்ய வேண்டியதா?'' என்று கர்ஜித்தார்.

மாணிக்கம் தலைகுனிந்தவன் நிமிரவேயில்லை. உதிர்ந்த இலைகளை அவனும் தாயுடன் அடுக்கினுன்.

பெற்றோர்களின் பேச்சு அத்துடன் நிற்கவில்லை. "காசு எங்கே? கொடு" என்றார் செட்டியார்.

"நான் எங்கே போவேன்?"

"நீ என்கிட்டே பொய்க் கணக்குக் காட்டி, இடுப்பிலே செருகி இருக்கியே; அந்தப் பணத்தைக் கேட்கிறேன்."

"என்கிட்டே ஒன்றும் கிடையாது."

மாணிக்கம் இலைகளை அடுக்குவதை நிறுத்திவிட்டுக் காத்திருந்தான். மறுபடியும் அப்பா தாயாரை அடிப்பாரோ?

ஆனால் அவர் குரலே மாறிவிட்டது. "பரவாயில்லை, சொல்லு. எங்கே மறைச்சு வச்சிருக்கே?" என்று குழைவாகக் கேட்டுக்கொண்டு அங்கு அடுக்கியிருந்த பானைகளிலும் புரைகளிலும் தேடினார். அப்போது அரிசி மூட்டைமீது ஒரு புது நாலுமுழம் வேட்டி கிடப்பது தெரிந்தது. "இது ஏது?"

"பங்காரு முத்துவுக்குத் தந்தாள். இன்னிக்குச் சஷ்டியாம்."

"அதில் எவ்வளவு பொய்யோ?"

"ஆமாம்! நீங்கள் தான் அரிசந்திர வம்சத்திலே பிறந்தவங்க. கொண்டாங்க, அதைப் பங்காரு வீட்டிலேயே வீசி எறிந்துவிட்டு வரேன்" என்றாள் தனபாக்கியம்.

"சே, சே, வேண்டாம். சும்மா சொன்னேன். ஒன்பது ரூபா இல்லாமல் வேட்டியே கிடையாது."

மாணிக்கம் குன்றினான்.

"சரி, எங்கே இருக்கிறது சொல்" என்று மீண்டும் ஆரம்பித்தார் கந்தசாமி.

"இதப் பாருங்க. என்கிட்டே இனிமேல் இப்படிப் பேசாதீங்க. நீங்க என்கிட்டே காசு கொடுக்கிறது தட்டுக்கெட்டுப் போச்சா? கோயிலுக்குப் போகக் காலணாக் காசு கிடையாது."

"காலணாக் காசு இப்ப உலகத்திலேயே கிடையாது. இந்தா, உனக்கு ஏன் குறை?" என்று கூறி இருபத்தைந்து பைசா நாணயத்தை மனைவியிடம் நீட்டினார் செட்டியார்.

"ஐயோ! இந்தக் காசிலே நான் என்ன தான் செய்துகொள்ளக் கூடாது? கல்யாணத்துக்கு நிற்கிற பெண்ணுக்கு நகை செய்து போடலாம். நானும் பட்டும் பீதாம்பரமும்.."

"சும்மா பேசிக்கொண்டே போகாதே. நீ கோவிலுக்குக் கர்ப்பூரம் வாங்கத் தானே ஆசைப்பட்டே? ஆறு மாசத்துக்குக் கொடுத்து விட்டேன் போ."

மாணிக்கம் வீட்டை விட்டு வெளியே வந்துவிட்டான். இன்று ஆசிரியர் வீட்டுக்குப் போகவேண்டிய வேலை அவனுக்கு இல்லை. தன் தாயின் நிலைமையை நினைத்து வருந்தினவனாக அவன் யோசித்துக் கொண்டே கடைப் பக்கம் போனான். தெருவில் கால் வைத்ததும் அவனுக்கு முன்னால் அலமேலு தன் கையில் ஒரு சிறு பையுடன் டாக்டர் வீட்டுக்குள் நுழைவது தெரிந்தது.

அவன் டாக்டர் வீட்டைத் தாண்டிச் செல்லும்போது உள்ளே எட்டிப் பார்த்தான். நிறையப் பெண்களின் பேச்சும் சிரிப்பும் வீதி வரை கேட்டன. நெற்றிச் சுருக்கலுடன் அவன் மேலே நடந்து சென்றான்.

செவ்வாய்க்கிழமை. சந்தை நாள். கடைத் தெருவில் கூட்டம் நெரித்தது. அந்த வட்டாரத்தில் அவனைத் தெரியாதவர் குறைவு. அவனை நிறுத்தி நிறுத்திப் பேச்சுக் கொடுப்பார்கள். அதனால், யாரையும் பார்க்காமல் தனக்குப் பிடித்த தாயுமானவர் பாடல் ஒன்றை முனகியபடியே அவன் நடந்தான். எங்கே செல்கிறோம், எதற்குப் போகிறோம் என்று புரியாத நிலை. இராவண்டி மாடு போலக் கூட்டத்துக்கு ஈடு கொடுத்துக் கொண்டு அவன் ஓர் இன்ப உலகில் சஞ்சரித்தான்.

பின்னால் கார் ஹார்ன் கேட்டது. உள்ளுணர்வினால் ஒதுங்கிச் சாக்கடை ஓரமாக நடந்தான் அவன். ஹார்ன் தொடர்ந்து கேட்டது. அதன் பிறகே திரும்பிப் பார்த்தான்.

"சார், என்னங்க, கூப்பிடக் கூப்பிட...."

"ரத்தினமா?" என்றான் மாணிக்கம், காரைப் பார்த்து. மறுகணமே அந்தப் பேச்சும் தடைப்பட்டுவிட்டது. காரணம், அந்தக் காருக்குள் பெண்மணிகள் இருந்ததுதான். ஒருத்தி, ஆசிரியரின் மனைவி, மற்றவள், அவள் பெண் நளினி.

"மிஸ்டர் மாணிக்கம்" என்று நளினி அழைத்து விட்டாள். இல்லையேல் அவன் பேசாமல் திரும்பிக்கூட இருப்பான்.

"என்ன?"

ஆசிரியரின் மனைவிதான் பேசினாள். "தம்பி, இங்கே எங்கேயோ சாயக் கடை இருக்குதாமே?" என்று கேட்டாள்.

சங்கோசத்தில் மூழ்கிக் கிடந்த மாணிக்கத்துக்கு அவர்கள் 'சாக்கடை'யைப் பற்றிப் பேசுவதாகத் தோன்றியது. "இந்த வட்டாரத்தில் சற்று அப்படித் தான்" என்று அவன் பதில் தந்தான்.

நளினி அவனைப் பார்த்த பார்வை அவனை விழிப்படையச் செய்தது. அவள் குறும்பாக முறுவல் பூத்தாள்.

புது நாவல்

"நளினிக்குச் சாயப் பொடி வேண்டுமாம். புடைவைக்குப் போடுகிற சாயம் எங்கே கிடைக்கும்?"

மேலே பேச விரும்பாதவன் போல மாணிக்கம், "வாங்கி வருகிறேன்" என்று ரத்தினச் சுருக்கமாகக் கூறிவிட்டுத் திரும்பினுன். நாலடி நடந்த பிறகு தன்னிடம் பணம் இல்லேயே என்று புரிந்ததும் வெட்கம் பிடுங்கித் தின்றது. அவர்களிடம் கேட்பதும் அநாகரிகமாகப் பட்டது. இன்ன நிறம் வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளவில்லே. தன் தகப்பனுரின் கடைக்குச் சென்று, "சண்முகம். சாயப் பவுடர் இருந்தால் ஒவ்வொரு நிறத்திலும் ஐம்பது பைசாவுக்குக் கொடு" என்று கேட்டான்.

அவன் தந்தை, "யாருக்குடா?" என்று கேட்டார்.

"எங்கள் ஆசிரியர் வீட்டிலேந்து வந்திருக்காங்க...."

"ஓசியிலே வாங்கணும்னு நினேப்பா? கடன் கொடுக்கிற பளக்கமில்லேன்னு சொல்லு, போ" என்ருர் கந்தசாமி.

அங்கே குழுமியிருந்தவர்களில் பாதிக்கு மேல் தெரிந்தவர்கள். அவர்கள் முன்னிலேயில் தன் தகப்பனுர் மேலும் என்ன பேசிவிடுவாரோ என்று அஞ்சினுன். அதனுல் பதிலே பேசாமல் வேகமாகத் திரும்பிவிட்டான்.

"முத்து!" என்று குரல் கேட்டுத் திரும்பினுன் மாணிக்கம். அவன் தம்பி சண்முகம் வந்தான். "இந்தா அஞ்சு ரூபாய். மூன்ருவது கடை இருக்கு. பார், ஹாஜிக் கடை அங்கே கிடைக்கும்" என்று கூறிவிட்டுப் போனுன்.

மாணிக்கம் அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு, தம்பி கூறிய கடைக்குச் சென்று சில நிறங்களே வாங்கிக்கொண்டு வந்து கார் அருகில் நின்ருன். "இந்தா, ரத்தினம். அம்மாவிடம் கொடு" என்ருன்.

நளினி காரில் இருக்கவில்லே. அவள் தாயார் பொட்டலங்களே வாங்கிப் பார்த்துவிட்டு, "தம்பி, சற்று இரேன். நளினி எங்கேயோ இறங்கிப் போயிருக்கு. அவள் வரட்டும், கேட்டுச் சொல்கிறேன்" என்ருள்.

மாணிக்கத்துக்குத் தர்ம சங்கடமாகிவிட்டது. இங்கே பலரும் தனக்குத் தெரிந்தவர்கள் இருக்க, நிற்கவேண்டியிருக்கிறதே என்று அவன் தவித்தான்.

"தம்பி, காருக்குள்ளே உட்காரேன்."

"வேண்டாம். பரவாயில்லே" என்று மொழிந்துவிட்டு அவன் சற்று விலகி நின்ருன். நளினி வந்து காரில் ஏறியதும் அவனேப் பார்த்து, "போதுங்க. தாங்க்ஸ்" என்ருள்.

மாணிக்கம் காருக்குக் கை கூப்பினுன். அது பாடிக்கொண்டே கிளம்பியது.

"காரில் வந்தவங்க யாரு, முத்து? அடேயப்பா, பெரிய காரு! நம் நாட்டுக் காரா அது?" என்று பலரும் கேட்டனர். மாணிக்கம் முடிந்தவரை பதில் சொல்லிவிட்டு, வேகமாக நடந்தான்.

உப நகரமாகிய ரங்கபாளேயத்தில் இருக்கும் ராமகிருஷ்ண மடத்தில் அவன் கால்கள் தாமாக நுழைந்தன. அந்தப் பெரிய தோட்டத்தில் வாதநாராயண மரத்தடியில் போய் அமர்ந்தான் அவன். அமைதியாகத் தனிமையில் இருந்து படிக்க அங்கேதான் அவன் வருவது வழக்கம்.

அவனுடைய நண்பன் சாரங்கன் அவனேப் பார்த்து, அவனருகில் வந்து,



"மாணிக்கம், இங்கு எங்கேடா வந்தாய்?" என்று விசாரித்தான்.

"சாரங்கனு? உன்னேயும் அதே கேள்வி நான் கேட்கலாம் அல்லவா?"

''நான் இங்கே சுவாமிஜியிடம் பாடம் கேட்கிறேன். நீ?''

''சும்மா வருகிறேன். என் மனசுக்கு இங்கே அமைதி கிடைக்கிறது.''

''வாடா, உன்னைச் சுவாமிஜிக்கு அறிமுகப்படுத்துகிறேன். அமைதியை நாடி ஒரு பையன் இங்கு வருகிறான் என்று கேட்டால் அவர் மிகவும் மகிழ்ச்சியடைவார்.''

மாணிக்கம் நண்பனுடன் கிளம்பினான். சுவாமிஜியின் சாந்த முகத்தைக் கண்டவுடனே அவன் அப்படியே லயித்து விட்டான். அவருடைய குரலும் பேச்சும் அவனை ஆட்கொண்டன.

''உன் நண்பனை எனக்குத் தெரியுமே, சாரங்கா! வாதநாராயண மரத்தடியில் சமாதி கிடப்பானே?'' என்று கூறிச் சிரித்தார் சுவாமிஜி.

''நான் இங்கு வந்து தங்குவதால் இடைஞ்சல் இல்லையே; அநுமதி கேட்டிருக்கணுமா?'' என்று தயங்கித் தயங்கிக் கேட்டான் மாணிக்கம்.

''ஆண்டவன் இடம் யாருக்கும் சொந்தம். பக்தனுக்கு உரிமைச் சொத்து'' என்றார் சுவாமிஜி. மாணிக்கத்தைத் தழுவிக்கொண்டார் அவர்.

அவனுக்கு உணர்ச்சி மேலீட்டினால் தொண்டை அடைத்தது. ''பெரியவர்கள்



என்மீது அன்பு வைத்திருப்பது என் பாக்கியம்'' என்றான் மாணிக்கம்.

''தண்ணீர் கண்ட இடத்திலும் பாய்ந்து விடாது, அப்பா. தனக்கு இதமான இடத்தில்தான் பாயும். அன்புக்கும் அதே நியதிதான்.''

மாணிக்கம் புளகாங்கிதம் அடைந்தான். ''இந்த அன்புக்கு நான் அருகனா?'' என்றான் நாக்குழற.

''அதைப் பற்றிக் கேட்க நாம் யார்?'' என்றார் சுவாமிஜி, மெதுவாக. ஊடுருவும் பார்வையுடன் அவன் கண்களை ஆராய்ந்தார்.

''நீ மடத்தின் நூல் நிலையத்தைப் பார்த்ததில்லையே? வா!'' என்று தன் நண்பன் அழைக்க, மாணிக்கம் பின் சென்றான். சுவாமிஜி மடத்துக்குள் சென்றுவிட்டார். சாரங்கன் அவனை நூல் நிலையத்துக்குள் விட்டு விட்டுப் பாடம் கேட்கச் சென்றுவிட்டான்.

மாணிக்கம் தில்லைக் கோவிலுக்குள் நுழையும் நந்தனைப் போல் பிரமிப்பும் நன்றியும் பாதிக்க, மெள்ள நடந்து சென்றான்.

'நமக்கு ஏதோ ஒரு புதுக் காலம் பிறக்கப் போகிறது. அது நல்லதா கெட்டதா என்று எப்படிச் சொல்ல முடியும்? நல்ல காலமாக இருக்கவேண்டும், கடவுளே!' என்று மனத்துக்குள் வேண்டியபடியே சென்றான் மாணிக்கம்.

எவ்வளவு நேரம் புத்தகங்களைப் புரட்டிக்கொண்டிருந்தானோ, அவனுக்கு மணி போனதே தெரியவில்லை.

திடீரென்று திரும்பி ஜன்னல் வழியாகப் பார்த்தபோது போது சாய்ந்து விட்டது தெரிந்தது. அவன் துரிதமாகக் கிளம்பி வெளியே வந்தான்.

ரங்கபாளையம் பெரிய தெருத் திருப்பத்தில்தான் நகர மாதர் சங்கம் இருந்தது. மாணிக்கம் அதைத் தாண்டும்போது அகஸ்மாத்தாக அவன் பார்வை உள்ளே சென்றது.

கேரம் ஒரு புறம், பாட்மின்டன் ஒரு புறம், ஒரு புறம் டென்னிஸ் என்று பெண்கள் விளையாடுவது தெரிந்தது. அதிலும் டென்னிஸ் ஆடும் பெண்கள் மத்தியில் நளினி தென்பட்டதும் அவன் சட்டென்று தன் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

மாதர் சங்கத்துக்கு வந்திருந்த கார்கள் வரிசையாக நின்றன. மாணிக்கம் அவற்றைத் தாண்டிச் செல்லும்போது அந்தக் கார்களை ஓட்டி வந்த டிரைவர்கள் கூட்டமாக நின்றார்கள்.

அவன் குனிந்த தலை நிமிராமல் அவர்களைத் தாண்டிச் சென்றான். ''என்ன, சார், எங்கே இவ்வளவு தூரம்?'' என்று ரத்தினத்தின் குரல் கேட்டது. அவன் நின்று, ''சும்மா ஒரு வேலையாக வந்தேன்'' என்று கூறி வேகமாக நடந்தான்.

அவன் சற்றுத் தொலைவுக்குச் சென்றவுடன் டிரைவர்கள் கூட்டத்திலிருந்து ஓர் 'அவுட்'டுச் சிரிப்புக் கேட்டது.

தன் சட்டையையும் பழுப்படைந்த வேட்டியையும் அவன் ஒரு நோட்டம் விட்டான். தன்னைப் பற்றித்தான் அவர்கள் சிரித்திருக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. அவர்கள் இஸ்திரி மடிப்புக் கலையாத டெரிகாட் சட்டை போட்டிருக்க, அவன் கைத்தறித் துணியில் சட்டை போட்டு நடமாடுவது கேலியாகத்தானே இருக்கும்?

அவனுக்கு வேறு எங்கே போகவும் மனம் லயிக்கவில்லை. நேரே தன் வீடு நோக்கி நடந்தான் அவன். குழாயடியைத் தாண்டும்போது அவன் உள்ளுணர்வு கூறிற்று, புது மனிதர்கள், ஆனால் தனக்குப் பழக்கப்பட்டவர்தாம் அங்கு இருக்கிறார்கள் என்று. தன் வீட்டுப் படி ஏறும் போதே அவன் கண்ணில் டாக்டரின் மனைவி மீனாக்ஷி பட்டாள். அலமேலு அவளுடன் பேச்சுக் கொடுத்தபடி பாத்திரங்களை விளக்கிக்கொண்டிருந்தாள்.

ஊர் முழுவதும் நல்ல வெளிச்சத்தில் நடமாடிவிட்டு வீட்டில் நுழைந்ததும் சற்று நிலை தடுமாறிற்று. திண்ணையில் சற்று நின்று சமாளித்துக் கொண்டான்.

''முத்து, வந்து விட்டாயா?'' என்ற பங்காருவின் குரல் கேட்டது. அவள் அப்போதுதான் தன் பூஜையை முடித்துக் கொண்டு எழுந்தாள்.

மாணிக்கம் காது கேளாததுபோல உள்ளே போய்விட்டான். தன் அறையில் போய்ப் பாய் விரித்துப் படுத்துச் சிந்தனையில் ஆழ்ந்தான்.

தன் வீட்டுச் சூழ்நிலையும் தன் ஆசிரியர் வீட்டுச் சூழ்நிலையும் மாறி மாறி அவன் கண்முன் வந்தன. இன்று நளினி எப்படி இருந்தாள்? வெள்ளைப் புடைவை, வெள்ளைச் சட்டை, தலையில் மல்லிகைப் பூ, பந்தாடும்போது வனதேவதை ஒன்று ஓடியாடுவது போலல்லவா இருந்தது? அலமேலுவும் இருக்கிறாள். பற்றுத் தேய்த்துத் துணி துவைத்து, வீடு மெழுகி, இலை தைத்துக் கை சொரசொரப்பாக! இடுப்பில் குடமும் கையில் வாளியுமாக வரும்போது நல்ல உழைப்பாளி என்பது புலப்படும். சுமை தூக்கும் மாடு போன்றவள் அவள். நளினியோ பஞ்சினால் செய்து பாலினால் ஒட்டப்பட்டவள்போல இருப்பாள்.

அலமேலுவுக்கும் நல்ல சங்கீத ஞானம் இருந்தது. குரலில் ஒரு திண்மை. ஆறு மாத காலம் இடைவிடாமல் காவடிச் சிந்தும், கிளிக்கண்ணியும், சம்பந்தி ஏசலும் பாடினாலும் குரல் கம்மாது.

நளினியோ அபூர்வ ராகங்களில் மெய்ம்மறந்து சஞ்சரிப்பாள்.

தன் வாழ்க்கையில் இரு கோணங்களின் பிரதிநிதிகளோ அவர்கள்? இந்த இரண்டு முனைகளின் நடுவில் தன் வாழ்க்கை எப்படி அமையுமோ என்று அவன் கவலைப்பட்டான்.

யாரோ பெண்கள் வீட்டுக்குள்ளே நுழைவது தெரிந்தது. அவர்கள் யார் என்று அவன் நரம்பு தந்தியடித்தது. அதனால் அவன் நகராமல் தன் அறையிலேயே இருந்தான்.

'பிரின்ஸிபால் பெண் பத்மினியும் மீனாக்ஷியுமா வருகிறார்கள்? அவர்களுக்கு இங்கே என்ன வேலை?' அவன் அவர்கள் உள்ளே போவதைக் கவனித்தான்.

''பத்மினி உங்களைப் பார்க்கணும்னு ஆசைப்பட்டது. அழைத்து வந்தேன்'' என்றாள் மீனாக்ஷி.

''வாங்க, அம்மா. நளினி வரலையா?'' என்று கேட்டாள் தனபாக்கியம்.

''அவ இன்னிக்குக் கிளப்புக்குப் போய் விட்டாள். டென்னிஸ் ஆடாவிட்டால் அவளுக்குத் தலை வெடித்துவிடும்'' என்றாள் பத்மினி.

தனபாக்கியம் அவர்கள் இருவருக்கும் இரண்டு வாழைப் பழங்களைக் கொடுத்து உபசரித்தாள். அவர்கள் உற்சாகமாகப் பேசிக்கொண்டே இருக்கையில், கந்தசாமி செட்டி, கடையிலிருந்து திரும்பிவிட்டார்.

மீனாக்ஷி அவரைப் பார்த்துச் சிரித்துக் கைகூப்பினாள். அவர் அதைப் பார்க்காததுபோல முகத்தைச் சுளித்துக்கொண்டு, ''பொண்ணு! எங்கே போனே நீ?'' என்று அடித்தொண்டையில் கர்ஜித்தார்.

''இதோ இருக்கேன், அப்பா'' என்று ஓடோடியும் வந்தாள் அலமேலு.

''நீ ஒண்ணும் டென்னிஸ் ஆடப் போகலையே? வீட்டிலேயே ஒழுங்கா இருப்பவதானே? சாமி விளக்கு எரியுதா?''

விளக்கேற்றி வைத்து விட்டு மகள் கூடத்துக்கு வந்தபோது மீனாக்ஷியும் பத்மினியும் போய்விட்டனர். அலமேலு வாசல் வரை ஓடிப் பார்த்தாள். மீனாக்ஷியின் புடைவைத் தலைப்பு மட்டும் தெரிந்தது. பத்மினியின் கார் அவர்கள் வீட்டு வாசலிலிருந்து கிளம்பிவிட்டது.

அலமேலு மீனாக்ஷி வீட்டுப் பக்கம் இரண்டடி எடுத்து வைத்தாள். பிறகு வருத்தத்துடன் திரும்பிவிட்டாள்.

4. தளர்ந்த தந்தி

யோசிக்க யோசிக்க மாணிக்கத்தின் மனம் குழம்பியதே தவிர, ஒன்றும் விவரமாகப் புரிபடவில்லை. தன் ஆசைக்கும் தன் குடும்ப நிலைக்கும் சம்பந்தமே இல்லை. ஒன்றை உத்தேசித்து மற்றதைத் துறக்கவும் அவன் மனம் துணியவில்லை.

'நடக்கிற மட்டும் நடக்கட்டும்' என்று நினைத்தபடியே அவன் சலவை செய்த உடுப்பை அணிந்துகொண்டு கிளம்பினான்.

''முத்து, அந்த டிரஸ்ஸை எனக்கு வை. நான் இன்று டிராமாவிலே நடிக்கணும்'' என்றான் தம்பி சண்முகம்.

''நான் இன்னிக்குச் சர்வகலாசாலையிலே ஆராய்ச்சிக்கூடத்துக்குப் போகணும். என்னாலே வச்சுட்டுப் போக முடியாது. என்னிடம் இருக்கிறதே இது ஒண்ணுதான்'' என்றான் மாணிக்கம்.

''ஆமாம், நீ தினமுந்தான் போறே. வேட்டி உடுத்திண்டு போ.''

''முடியாதுடா.''

''உன்னைக் கேட்டது என் தப்பு.''

''எதையும் செய்து வைக்காதேடா.''

''காலணா சம்பாத்தியம் இல்லை. நான் கடையிலே வேலை செய்யணும், நீ வெட்கமில்லாமல் ஊர் சுற்றணும்'' என்றான் சண்முகம்.

''நான் ஒன்றும் சம்பாதிக்காமல் இல்லை'' என்று கூறிவிட்டு வெளியே கிளம்பினான் தமையன். அவனைத் தள்ளி விடுவான்போல, சண்முகம் அவனைத் தாண்டிச் சென்று வீதியில் நடந்தான்.

மாணிக்கம் தன் சட்டையைத் துழாவினான். ''அலமேலு, என் பேனாவைப் பார்த்தாயா?'' என்று கேட்டான்.

''சின்ன அண்ணா கொண்டு போனானே!''

''அதைத் தட்டிக்கொண்டு போய் விட்டானா? சரி..'' என்று முணுமுணுத்தபடி கிளம்பினான் மாணிக்கம்.

போகும் வழியெல்லாம் அவனுக்கு யோசனையே பலமாக இருந்தது. யோசிக்க யோசிக்கத் தெளிவு குறைந்து குழப்பமே மிஞ்சியது. 'இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்த வேண்டுமா? இதிலிருந்து நீங்கிவிட்டால் என்ன? வேறு ஏதாவது வேலை சம்பாதித்துக்கொண்டு விடலாமே! என்ன வேலை கிடைக்கும்?'

அவன் தவித்தபடியே நடந்தான். தன் ஆசிரியரின் வீடு அடையும்போது அவன் மனம் ஒரு தீர்மானத்துக்கே வந்து விட்டது. ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டுமென்றால் அதற்கேற்ற வசதிகள் உள்ளவர்கள்தாம் அதில் முனையவேண்டும். உடுத்துக்கொள்ளச் சுத்தமான மாற்று உடை கூட இல்லாத தன்னைப் போன்ற ஏழைகள் அதில் பிரவேசிப்பதே தவறு என்று கருதினான் அவன். எப்படியாவது ஆசிரியரிடம் சொல்லி இதிலிருந்து கழற்றிக் கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தான்.

அவன் சிந்தனையின் வேகத்துடன் நடைபோட்டபடி வீட்டின் படிகளை ஏறியபோதே ஆசிரியர் எதிரே வந்து விட்டார். ''என்னப்பா, துரைக்கு நேரத்தில் வரக்கூடச் சௌகரியப்படவில்லை

போலும்!'' என்ற அவர் குரலைக் கேட்டதுமே திடுக்கிட்டு நிமிர்ந்தான் மாணிக்கம். தன் எஜமானர் வெளியே போகத் தயாராக நிற்பதைக் கண்டான். பதில் பேசாமல் சட்டென்று உள்ளே போய் அன்று அவருக்குத் தேவையான காகிதங்களைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு அவர் பின்னாலேயே ஓடிவந்து காத்திருந்த காரில் ஏறிக் கொண்டான்.

சர்வகலாசாலைப் பெரிய கூடத்தை அடைந்தபோது அங்கு யாருமே இருக்கவில்லை. ஆசிரியர் தம் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ''ஏண்டா, மணி ஒன்பதரை ஆகியும் யாரும் வரக் காணோமே? கூட்டம் இன்றுதானே?'' என்றார்.

''கூட்டம் இன்றைக்குத்தான். மணி எட்டே முக்கால்தா னாகிறது'' என்று பணிவோடு பதிலளித்தான் மாணிக்கம்.

''யார் சொன்னார்கள்?''

''மணிக் கூண்டுக் கடிகாரத்தில் அப்படித்தான் இருக்கிறது.''

''என் கடிகாரம் நின்று விட்டதா? சாவி கொடுக்க மறந்து விட்டேன் போல இருக்கிறது. ரத்தினம், வண்டியைப் பிரின்ஸிபால் வீட்டுக்கு ஓட்டு. பிறகு அவரோடு வருவோம்'' என்றார் ஆசிரியர்.

பிரின்ஸிபால் வீட்டில் சகஜமாக நுழைந்து மறைந்தார் அவர். மாணிக்கம் வெளித் தாழ்வாரத்தில் ஒதுக்குப்புறமாக நின்றான். ''மாணிக்கம்!'' என்று குரல் கேட்டுத் திரும்பினான்.

பத்மினி நின்றுகொண் டிருந்தாள். ''உள்ளே வந்து உட்காருங்களேன்'' என்று அழைத்தாள்.

''இல்லை, பரவாயில்லை.''

''எது பரவாயில்லை? உடுப்பை அணிந்து கொண்டு கால் கடுக்க வெயிலில் நிற்பதா? உள்ளே வாருங்கள்'' என்றாள் அவள்.

தட்டமுடியாமல் வந்து ஹாலில் சோபாவில் அமர்ந்தான்.

சோபாவின் விளிம்பில் பட்டும் படாமலும் இருந்து, இரு கை விரல்களையும் சேர்த்துக் கொண்டு தரையைப் பார்த்தபடி அவன் அமர்ந்திருப்பதைக் கண்டு பத்மினி பரிவுடன் பேசினாள். ''நீங்கள் படம் வரைவீர்களா?'' என்று கேட்டாள் அவள். அவனுடைய சங்கோஜத்தைப் போக்க ஏதாவது பொது விஷயங்களைப் பற்றிப் பேச்சு எடுப்பதே சரி என்று எண்ணினாள்.

ஆனால் அவள் கேள்வி மாணிக்கத்தை மிகவும் திண்டாடச் செய்தது. அந்த அறையைக் கண்ணோட்டம் விட்டான் மாணிக்கம். அவன் மனக்கண்ணில் தன் வீட்டுக் கூடம் நினைவுக்கு வந்தது. ஒரு மூலையில் பானையடுக்கு, மேல் விட்டத்திலிருந்து தொங்கிய இலைக்கட்டுகள், அழுக்கும் பழுப்பும் ஏறிய வேஷ்டியுடுத்திய தன் தகப்பனாருடன் பவனி வந்தன.

''சித்திரம் வரைந்தால்தான் கலைஞனா? உங்களிடம் மிக மிக மென்மையான கலையுள்ளம் இருக்கிறது. எனக்கு அது போதாது. கிறுக்குவேன் கொஞ்சம்'' என்றாள் பத்மினி.

அவளுடைய பணிவான பேச்சும், சகஜமாகப் பழகும் பண்பும் மாணிக்கத்தின் கூச்சத்தைச் சிறிது குறையச் செய்தன. ''உங்கள் கைத்திறன்தானா இவை எல்லாம்?'' என்று கேட்டான்.

அந்த அறையின் இளம் பச்சைச் சுவரில் மாட்டப் பெற்றிருந்த பல வரை படங்கள் தென்பட்டன. அன்றாடம் காணும் காட்சிகளைத் தத்ரூபமாகத் தீட்டியிருந்தாள் பத்மினி. ''மிகவும் அழகாக இருக்கின்றன'' என்றான் அவன்.

''சம்பிரதாயமான பாராட்டுக்கள்'' என்றாள் பத்மினி, சிரித்தபடி.

மாணிக்கம் அப்போதுதான் அவளைப் பார்த்தான். பத்மினியின் வட்ட வடிவமான முகம் களையுடன் இருந்தது. அமைதியான கம்பீரம் தெரிந்தது.

யாரோ கூப்பிடுவதுபோல இருந்தது. பத்மினி எழுந்து நடந்து சென்றாள். அப்போது அவள் முதுகு மாணிக்கத்தின் கண்களில் பட்டது. தலை மயிரை உயர வட்டமாக முடித்திருந்தாள். அந்த வட்டத்தின் கீழே அவளுடைய சுருள் கேசம் குஞ்சம் கட்டின மாதிரி பிடரியில் நின்றது. புடைவையின் நீளத் தலைப்பு ஒரு பக்கமாகச் கொசுவப் பெற்று இஸ்திரி மடிப்பு அங்கவஸ்திரம் மாதிரி ஒரு தோளிலிருந்து தரைவரை தொங்கியது. அவள் ரவிக்கையும் விசித்திரமாக இருந்தது. அதைக் கவனித்த மாத்திரத்தில் மாணிக்கம் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான்.

''மாணிக்கம், உங்களைக் கூப்பிடுறாங்க'' என்றாள் பத்மினி.

அவன் அவளைத் தாண்டிச் செல்லும் போது அவள் சுவரோரமாக நின்றாள். மௌனமாகக் குனிந்த தலை நிமிராமல் செல்வதைப் பார்த்து, ''பேனா ஏதாவது தேவைப்படுமா?'' என்று கேட்டாள்.

மாணிக்கத்துக்கு அப்போதுதான் நினைவுக்கு வந்தது, தன்னிடம் பேனா இல்லை என்று.

''இந்தாருங்கள். போகும்போது இதை அப்பாவிடம் தந்து விடுங்கள்.'' பத்மினி தன் பேனாவை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

அதைப் பெற்றுக்கொண்டு அவன் உள்ளே போனான்.

ஆசிரியர் அவனைப் பார்த்ததும், ''சீக்கிரம் இதெல்லாம் எழுதிவை. நாழிகையாகிறது. எங்கே போயிருந்தாய் இவ்வளவு நேரம்?'' என்று கேட்டார்.

மாணிக்கம் மௌனமாக வேலையைக் கவனித்தான். எழுதி முடித்துத் தன் ஆசிரியரிடம் கொடுத்தான். அவர் பிரின்ஸிபாலிடம் காட்டினர். அவர் அதை மேலெழுந்தவாரியாகப் பார்வையிட்டு விட்டு, ''மாணிக்கம் இதைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன?'' என்றார்.

மாணிக்கம் பேசுவதற்குச் சற்று நாழிகையாயிற்று.

''அவன் பதில் சொல்லக் காத்திருந்தால் ஒரு வருஷமாகும். கூட்டம் முடிந்துவிடும்'' என்றார் ஆசிரியர்.

பிரின்ஸிபால் அவனைப் பார்த்து முறுவலித்தார். ''நீங்கள் இரண்டு பேரும் போங்கள். நான் இன்னும் ஐந்து நிமிஷத்தில் வருகிறேன்'' என்று கூறினர்.

மாணிக்கத்தின் மனம் வழிநெடுகப் பத்மினியைப் பற்றியே எண்ணியது. இத்தனை நாள் வரை அவன் எந்தப் பெண்ணையும் நெருங்கிப் பார்த்ததில்லை. அவர்களுடைய நாகரிக உடைகளைப்பற்றி அவனுக்கு அதிகமாகத் தெரியாது. இன்று அதைக் கவனித்ததும் புதுமையை ஏற்காத ஒரு தவிப்பு. அதே சமயம் அன்பாகப் பழகும் குணமும், அவள் கலையுள்ளமும் அவனைக் கவர்ந்தன. இதைப் பற்றி எண்ணி முடிப்பதற்குள் கூட்டம் ஆரம்பித்து விட்டது. அவன் அதில் லயித்து விட்டான்.

அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகளில் அவன் ஆணித்தரமாகப் பதில் சொன்னதும், ஊடுருவிக் கேள்விகள் கேட்டதும் அவன் ஆசிரியருக்கும் பெருமையாக இருந்தனபோலும். வீட்டுக்குப் போகும் வழியில் அவர் அவனுடன் கலந்து அளவளாவிக் கொண்டு வந்தார். அவர் பார்த்த பார்வை அவன் இதயத்தைத் தொட்டது. 'தான் பெற்ற மகனிடம் அன்பு காட்டும் தந்தையின் பாசப்பார்வை இதுதானே? நம் அப்பாவுக்கு இப்படிப் பார்க்கத் தெரியாதோ? அல்லது அவருடைய கொடூரமான பேச்சின் ஊடே இதே போன்ற வாத்ஸல்யம் இருக்குமோ?' என்று ஆராயத் தொடங்கினன்.


''என்னப்பா, பலமாக யோசிக்கத் தொடங்கிவிட்டாய்?''

மௌனம் சாதித்தான் மாணிக்கம்.

''யோசிக்காதே! என்னுடனே சாப்பிடு. மறுபடியும் பிற்பகல் கூட்டத்துக்குப் போக நல்லது'' என்றார் ஆசிரியர்.

அவன் ஒரு கணம் தவித்தான். உடனே, ''இல்லை, இன்று எங்கள் வீட்டில் குலதெய்வத்துக்குப் பூஜை. பகல் உணவுக்கு வருவதாகச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்'' என்றான்.

அவரிடம் விடைபெற்றுக் கொண்டு அவன் வழியில் இறங்கிவிட்டான். அவர்



கார் கிளம்பும் வரை மரியாதைக்கு நின்று விட்டுத் தன் வீடு நோக்கி விரைந்தான். வீட்டுக்குப் போனபோது அங்கு யாருமே இருக்கவில்லை. பங்காரு வீட்டைத் தேடிச் சென்றான். அந்த அம்மாள் பகலுணவு முடிந்து ஊஞ்சலில் படுத்திருந்தாள். அவனைக் கண்டதும் எழுந்து அமர்ந்தாள். ''என்னடா, முத்து? உங்க வீட்டிலே யாருமில்லை. நீ பகல் சாப்பாட்டுக்கு வரமாட்டேன்னு நெனச்சு எல்லாரும் ராமசாமி வீட்டுச் சீமந்தத்துக்குப் போய்ட்டாங்க. வா, நான் போடறேன் சாப்பாடு'' என்றாள்.

''வேண்டாம், பெரியம்மா. நான் சாப்பிட்டாச்சு.'' காலையில் வீட்டில் தான் சொல்லிப் போனதை இப்போதுதான் உணர்ந்தான் மாணிக்கம்.

''சாப்பிட்ட மூஞ்சியைப் பார்! வா, வா. ஒரு கை மோர் சாதம் சாப்பிடு'' என்று அவனை வற்புறுத்திச் சாப்பிட வைத்தாள் பங்காரு.

மாணிக்கம் மனசோடு நன்றி செலுத்தினன். பங்காரு தந்த சிவப்புக் கட்டம் போட்ட ஈரிழைத் துண்டை வாங்கிக் கொண்டு பின்புறம் போய் முகம் கைகால் கழுவிக்கொண்டு முன் பக்கம் வந்தான்.

''நல்ல உடுப்புப் போட்டுக் கொண்டு தரையில் உட்கார்ந்து சாப்பிட்டாயே; எனக்குந்தான் நினைவில்லை. மடிப்புக் கலைந்துவிட்டதா?'' என்று பங்காரு அங்கலாய்த்தாள்.

''அதெல்லாம் பரவாயில்லை'' என்று வாயால் சொன்னானே தவிர, மாணிக்கம் தன் உடையைக் கவலையுடன் பார்த்துச் சரி செய்துகொண்டான்.

''கோபாலு ரூம் திறந்திருக்குது. போய்த் தலையைச் சீவிக்கொண்டு கிளம்பு'' என்று கூறினாள் பங்காரு.

மாணிக்கம் மதனகோபாலனின் அறைக்குள் நுழைந்தான். அங்கே அலங்காரம் செய்துகொள்ளும் மேஜையண்டை போனதும் அவனுக்குப் பிரமையாக இருந்தது. அத்தனை விதச் சீப்புகள், தைலங்கள், மாவுகள், வாசனைத் திரவங்கள் எல்லாம் இருந்தன. மாணிக்கம் தன் சட்டைப் பையிலிருந்து சீப்பை எடுத்துத் தலையை வாரிக்கொண்டு, மேஜை மீதிருந்த முகப் பவுடரை மட்டும் கொஞ்சமாக எடுத்துப் பூசிக்கொண்டு கிளம்பினான்.

அவன் ஆசிரியர் வீட்டை அடைந்த போது அவர், கூட்டத்துக்குக் கிளம்பத் தயாராக இல்லை என்று தெரிந்தது. தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த அலுவலக அறைக்குள் புகுந்தான். ஏற்கனவே யாரோ அங்கே இருப்பதும் அது நளினி தான் என்பதும் அவன் உள்ளுணர்வுக்குத் தெரிந்தது. வெளியே வந்துவிடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கையில், ''மாணிக்கம்'' என்று மெதுவான குரலில் நளினி அழைப்பது கேட்டது.

வேறு வழியின்றித் தயங்கிக்கொண்டு நின்றான் மாணிக்கம். நளினி எதிரே நின்றாள். நேரிடையாக அவனைப் பார்த்தாள். அவள் கண்கள் அவன் தோற்றத்தைக் கண்டு புதுமையைக் கண்ட வியப்புடன் விரிந்தன. 'பவுடர் அதிகமாகத் தெரிகிறதோ?' என்று அஞ்சியது மாணிக்கத்தின் மனம். அவன் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைக்கலானான். அதன் மறைவிலிருந்து நளினியைக் கவனித்தான். அவளும் பத்மினிபோலவே சட்டை அணிந்திருப்பது புரிந்தது. ஆழமாக வெட்டப்பட்ட கழுத்து. அவள் தோள் எலும்பு குத்திட்டு நிற்பது தெரிந்தது. 'இவள் இளைத்துவிட்டாளா? சுபாவமே இப்படித்தானா?' என்று தனக்குள் கேட்டுக்கொண்டான். நளினி எதற்காகவோ திரும்பினாள். அவள் முதுகுப்புறம் தெரிந்தது. உடம்பு தெரிந்த இடத்தில் முட்டு முட்டாக எலும்பு தெரிந்தது.

''மிஸ்டர் மாணிக்கம், இன்றைக்கு அப்பா என்னைக் காலையில் தோட்டத்துக்கு அனுப்பினார். துளசித் தோட்டத்தில் பாடினேன்.''

மாணிக்கம் பதில் சொல்லவில்லையே தவிர, அவள் சொல்வதைக் கேட்கும் பாவனையில் காத்து நின்றான்.

''தினமும் பாடுவேன். அபிவிருத்தி இருக்கிறதா என்று நீங்கள் கவனித்துச் சொன்னால்தான் எனக்குத் திருப்தி.''

''பார்க்கிறேன்'' என்றான் மாணிக்கம்.

''இப்போதே போய்ப் பார்க்கலாமா? என் பாத்தி எது என்று உங்களுக்குத் தெரியவேண்டாமா?'' என்றாள் அவள்.

''வேண்டாம். நானே போய்ப் பார்க்கிறேன்'' என்றான் அவன்.

நளினி மறுமொழி கூறவில்லை. சட்டென்று திரும்பிக் கதவைத் திறந்து கொண்டு வீட்டுக்குள் மறைந்துவிட்டாள். அவள் சென்ற திக்கையே பார்த்தான் அவன். தான் கூறியதில் ஏதோ தவறு இருந்துவிட்டது என்று மட்டும் அவனுக்குப் புரிந்ததே தவிர, எந்த விதத்தில் எங்கே தப்பு நடந்தது என்பது புரியவில்லை.

அவள் சகஜமாகத் தன்னை அழைத்தது போலவே அவளைத் தான் 'நளினி' என்று குரல் கொடுத்து அழைத்துச் சாந்தப்படுத்தலாம் என்று எண்ணம் தோன்றியதே தவிர, அவன் நா மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. குரல் வெளிவரவில்லை.

'ஆசிரியர் எதற்குத் தம் பெண்ணை இந்த வேலையில் ஈடுபடுத்துகிறார்? நமக்கோ பெண்களிடம் பேசவோ பழகவோ தெரியாது. அதுவும் நளினி போன்ற பெண்கள் கண்ணாடிப் பொம்மைகள்... நமக்கோ செடிகொடிகளுடன் பேசத் தெரியுமேயன்றி மனிதர்களுடன் பழகத் தெரியாது. பிலஹரி பாடவேண்டிய இடத்தில் தோடி பாடி வைப்போம்!' அதற்கு மேல் அவனுக்கு வேலையே ஓடவில்லை.

நளினி அவனுடன் பேசியது இதுதான் முதல் தடவை அல்ல. ஆசிரியரிடம் ஆராய்ச்சியில் சேர்ந்து இரண்டு வருஷங்கள் சென்றுவிட்டன. எப்போதாவது தன் தகப்பனாருடன் ஆராய்ச்சித் தோட்டத்துக்கு அவள் வருவாள். ஆராய்ச்சி அப்போது கல்லூரித் தோட்டத்திலேயே ஒதுக்குப் புறமான இடத்தில் நடந்தது. அவள் என்றாவது, ''அப்பா கூப்பிடுகிறார்'' என்பாள். மற்றப்படி அவளும் பேசியதில்லை; அவனும் அவளைக் கவனித்ததில்லை.

சில மாதங்களுக்கு முன்தான், ஒரு மேனாட்டு ஆராய்ச்சியாளர் விஜயம் செய்த பிறகும், இமாலயச் சாரலிலிருந்து வந்த ஒரு யோகி பேசிய பிறகும் அந்த ஆராய்ச்சி விரிவடைந்தது.

''நான் நினைத்திருப்பதை நடத்த இந்தக் குறுகிய இடம் போதாது. மேலும் முழுமனத்துடன் ஒத்துழைக்கக் கூடிய மாணவன் ஒருவன் வேண்டும். வசதி இருந்தால் எவ்வளவோ சாதிக்கலாம் என்ற உறுதி எனக்கு இருக்கிறது'' என்று பேராசிரியர் ஆத்மநாதன் கூறவும், சர்வகலாசாலை அதிபர்கள் மூன்று ஏக்கரா நிலத்தில் ஒரு சிறிய

பங்களா அமைத்து அவருக்கு வசதி செய்து கொடுத்தார்கள்.

மாணவரைத் தேர்ந்தெடுக்கச் சொன்னபோது மாணிக்கத்தைத் தேர்ந்தெடுத்தார் பேராசிரியர். மாணிக்கம் அதற்கு இசையவேயில்லை. இன்றும் அவனுக்கு அந்த நினைவு பசுமையாக இருந்தது.

தன் வீட்டு நிலைமை, தன் பிறப்பு, வளர்ப்பு, சூழ்நிலை இவற்றுக்கும் இந்த நுண்ணிய ஆராய்ச்சிக்கும் சரிப்படாது என்பது அவன் அபிப்பிராயம், அதனால் அவன் மறுத்தான். ஆனால் எல்லா விஷயத்திலும் இருக்கும் சங்கோஜம் இப்போது மறுப்பிலும் திடமின்றிப் பேச வைத்தது.

''உன் தகப்பனார் என்ன உத்தியோகத்தில் இருக்கிறார்?'' என்று ஆசிரியர் அன்று கேட்டது நினைவுக்கு வந்தது.

''வியாபாரம்'' என்றான் மாணிக்கம்.

''நீயும் வியாபாரம் செய்வாயோ?'' என்று அவர் கேட்டது மனத்தைக் குத்தியது.

வியாபாரம் செய்யத் தனக்குத் துணிவு இல்லை என்பதை அவர் அப்படிக் குறிப்பிடுகிறார் என்பது அவனுக்குப் புரியவில்லை.

''எங்காவது பள்ளிக்கூடத்து வாத்தியார் வேலை, மருந்துக் கடை...'' என்று ஆரம்பித்தான் மாணிக்கம்.

''இந்தக் காலத்துப் பிள்ளைகள் வாத்தியாரைச் சொக்கப்பானை செய்துவிடுவார்கள். உன்னை ஒரே நாளில் ஏப்பம் விட்டுவிடுவார்கள்.''

ஆசிரியர் பேச்சைக் கேட்க மாணிக்கத்தின் மனம் மிகவும் தவித்தது.

''நான் சொல்வதைக் கேள், மாணிக்கம். உன் உயர்ந்த சங்கீதஞானம் எல்லாருக்கும் எளிதாகக் கிடைக்கக் கூடியது அல்ல. நாதோபாசனை செய்வதற்குத் தனி அருள் வேண்டும். உனக்குத்தான் நாலு மனிதர்களைப் பார்த்தால் பேசக் கூச்சமாக இருக்கிறது. என்னோடு இருந்தால் செடி கொடிகளைத் தவிரத் தோழர்கள் இருக்கமாட்டார்கள். தனிமையில் ஆனந்தமாக இருக்கலாம். தன்னலத்தோடு கூறுகிறேனோ? உன் நுட்பமான மனம் எனக்கு மிகவும் தேவை.''

ஆத்மநாதனைப் போன்ற பேராசிரியர் மேற்பார்வையில் ஆராய்ச்சி செய்வதற்கு மாணவ உலகமே தவங்கிடக்கும். அவரே முன்வந்து கூப்பிடும்போது மறுப்பது அநாகரிகம். கடைசியில் ஒப்புக்கொண்டுவிட்டான். இனி வீட்டுக்குப் போய்ப் பெற்றோரிடம் இதைப்பற்றி விளக்கிப் பக்குவமாக இணங்க வைக்க வேண்டும்.

அவன் தாயாரிடம் சொன்னவுடனே அந்த அம்மாள் ஒப்புக்கொண்டது மட்டும் அல்ல, உற்சாகமும் கொடுத்தாள்.

"முத்து நீ அப்பாவிடம் ஒன்றும் சொல்லவேண்டாம். நானே சொல்லிக் கொள்கிறேன். உனக்குத் துணிமணி என்ன தேவையோ நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள் தனபாக்கியம்.

"நீ மட்டும் எங்கே இருந்து கொண்டு வருவாய், அம்மா? இலைக்கட்டுக்கு நீ படுகிற பாட்டைப் பார்க்கிறேனே!" என்று கவலையோடு கூறினான் மகன்.

"அதைப்பற்றி உனக்கென்ன? ஒன்று மட்டும் நினைவு வைத்துக்கொள். எனக்கு ஒரு மகனாவது பட்டம் பெற்றுப் பெரிய பதவிக்கு வரவேண்டுமென்று ஆசை. அம்மாவின் ஆசைக்காகப் பாடுபடுவதாக நினைத்துக்கொள்" என்றாள் தாய்.

மாணிக்கம் அந்த அன்புக் கட்டளையைச் சிரமேற்கொண்டான். எப்படியாவது உழைத்து உத்தியோகம் செய்து காசு சம்பாதித்து இந்த அன்புத் தாயை எவ்வளவோ உயர்வாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தான். அந்த எண்ணமே அவனுக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தது.

அவன் இரண்டு வருடங்கள் தள்ளிவிட்டான். மூன்று ஏக்கரா நிலத்தில் எவ்வளவோ ஆராய்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஒவ்வொரு ராகத்துக்கு ஒவ்வொரு குணம். காலை வேளைக்கு ஒரு ராகம், மாலைக்கு ஒன்று. அவன் மனந்தான் அதில் ஈடுபட்டு எவ்வளவு ஆனந்தம் அடைந்தது! அதுவே பெருஞ்செல்வமாக இருந்தது அவனுக்கு. இன்னமும் ஒரு வருஷம் போனால் ஒரு கட்டம் தாண்டிய மாதிரிதான். அதன் பிறகு ஆயுளுக்கும் ஆராயலாம்.

அவன் எவ்வளவோ குறிப்புகள் எழுதிவிட்டான். கட்டுரையை எழுதிக் கொடுத்துவிட்டால் பிறகு அவனுக்குக் கவலையில்லை. அதன் பிறகு ஊழியமும் அதை அடுத்து ஊதியமுந்தான்.

மாணிக்கம் பழைய கணக்கைப் பார்த்துப் பரிதாபப்பட்டான். இன்று நளினியிடம் முரட்டுத்தனமாக நடந்துகொண்டு விட்டோமோ என்று அஞ்சியது அவன் மனம். தோட்டத்தில் ஒரு புதுச் செடியின் வளர்ச்சியில் ஈடுபட்டபோது மறதியாக அவன் கை அசைந்தால் சில சமயம் வண்ணத்துப் பூச்சிகள் சிறகடித்துக் கொண்டு பறக்கும். எவ்வளவோ நேரமாக அசங்காமல் தேனைப் பருகிக்கொண்டு அழகாக வீற்றிருக்கும் பூச்சி கலவரத்துடன் சிறகுகள் துடிக்கத் துடிக்கப் பறந்து செல்லும்போது மாணிக்கத்தின் உள்ளமும் துடிக்கும். இப்போதும் அதே வேதனை அவனை ஆட்கொண்டது. அருமையாக வஸந்தா ராகம் ஆலாபனை செய்துகொண் டிருக்கும்போது பிடிலின் தந்தி தளர்ந்து அபஸ்வரம் பேசியது போல இருந்தன, அவன் பேச்சும் நளினியின் வெளியேற்றமும்.

மாணிக்கம் அதன் பிறகு தோட்டத்தில் சென்று பார்த்தான். நளினியின் பாத்தி எது என்று அவனால் கண்டு பிடிக்க முடிந்தது. ஆசிரியர் அவள் ஆராய்ச்சிக் கென்று துளசிச் செடிகளை ஒதுக்கியிருந்தார். ஒவ்வொரு செடியையும் நின்று ஆற அமரக் கவனித்தான் அவன். சில செடிகளில் அபிவிருத்தி அதிகமாகத் தெரிந்தது. சிலவற்றில் குறைவாக இருந்தது. பாத்தியின் எந்தப் பகுதியில் எப்படி வளர்ச்சி இருக்கிறது என்பதைக் குறித்து வைத்துக்கொண்டான்.

'அவள் அழைத்தபோது வந்திருந்தால் இவ்வளவு பிரயாசைகூட எடுக்க வேண்டாம். அவளும் திருப்தியடைந்திருப்பாள். அதை விட்டுவிட்டு..' என்று தன்னையே நொந்துகொண்டான் அவன்.

அவன் நன்கு பரிசோதித்துக் குறிப்புகளையும் நளினி செய்ய வேண்டியதற்கு வழி முறைகளையும் எழுதிக்கொண்டு, ஆசிரியர் வீட்டின் உட்பக்கம் சென்றான்.

நளினி சோபாவில் அமர்ந்து கைக்குட்டை தைத்துக்கொண் டிருந்தாள். அவன் வந்ததையே கவனித்ததாகத் தெரியவில்லை. தலை நிமிரவே யில்லை.

"மிஸ் நளினி, எனக்குக் கொஞ்சம் குடிக்க நீர் வேண்டும்."

நளினி சட்டென்று நிமிர்ந்தாள். அவள் கண்கள் லேசாகச் சிவந்திருந்தன. அவள் எழுந்து போய் ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டுவந்து தந்தாள்.

"உங்கள் பாத்தியைப் பார்வையிட்டேன். நல்ல அபிவிருத்தி இருக்கிறது. இதோ குறிப்புகள்" என்று தான் தயாரித்த தாளை அவளிடம் நீட்டினான்.

"தாங்க்ஸ்" என்றாள் அவள். நன்றியோடு அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். ஆனால் மாணிக்கம் அதைக் காண விரும்பாதவன்போலச் சடக்கென்று திரும்பி நேரே பார்த்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறிவிட்டான்.

நளினி அவன் செல்லும் திக்கையே நோக்கிக்கொண்டு நின்றாள். தான் தைத்த கைக்குட்டையை எடுத்துக் கசக்கி உருட்டி அந்த அறையின் ஒரு மூலையில் வீசி எறிந்தாள். பல்லால் உதட்டைக் கடித்துக்கொண்டாள்.

"என்னம்மா, கிரிக்கட் ஆடப் போகிறாயா? போலிங் பயிற்சியா?" என்று வேடிக்கையாகக் கேட்டுக்கொண்டே வந்தார் ஆத்மநாதன்.

நளினி பதில் சொல்லாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விட்டாள்.

(தொடரும்)

5. அண்ணனும் தங்கையும்

அலமேலு அழகாக உடுத்து, தலையைப் பின்னிப் பூ வைத்து, கையில் ஒரு துணிப்பையுடன் கிளம்புவதைக் கவனித்தான் மாணிக்கம். ''அலமேலு!'' என்று அழைக்கும்போது அவன் குரல் கடுமையாகவே இருந்தது.

''என்ன அண்ணு!'' என்று அவள் வியப்புடன் கேட்டாள்.

''தினமும் நீ எங்கே போகிறுய்?''

''இதென்ன, அண்ணு, கேள்வி? மீனுக்கா வீட்டுக்குத்தான். இந்தக் காலனியிலே இருக்கிற பெண்ணுங்க யாருமே இந்த நேரத்திலே அங்கே தான் போவாங்க.''

''எதற்காக?''

''இன்னிக்குத் தையல் வகுப்பு. அதோடு டிராமா ஒத்திகை வேறே.''

''அங்கே உனக்கு என்ன வேலை?''

''என்ன அண்ணு, தையல்......''

''நீ இலை தைச்சாப் போதும். துணி தைக்கத் தெரிய வேண்டாம். உள்ளே போ!'' என்ருன் மாணிக்கம் கடுமையாக.


''அண்ணு, நளினி அக்காமாதிரி ஆளுங்களைப் பார்த்துப் பழகின நீ கூடவா இப்படிப் பேசறே?'' என்று கேட்டாள் அலமேலு.

மாணிக்கம் தன் தங்கையைப் பார்த்தான். அவள் பரிதாப முகத்தைப் பார்த்ததும் அவன் மனம் இளகியது. ஆனுல் அவன் யாரை நினைக்கவேண்டாம் என்று நினைத்தானே அந்த நளினியையே குறிப்பிட்டது அவனுக்குப் பிடிக்கவில்லை. ''புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக்கொள்ள வேண்டாம். உள்ளே போ'' என்ருன்.

அலமேலு வேண்டா வெறுப்பாகக் கைப்பையுடன் வீட்டுக்குள் நுழைந்து விட்டாள். ''இந்திரா காலனி ஆளுங்க ஆயிரமாயிரம் காலமானுலும் இங்கேயே மட்கிப் போக வேண்டியது தான். இது பழைய 'செட்டிப் பள்ளந்' தானே? அதுக்குப் புதுசா 'இந்திரா காலனின்னு பேர் வச்சூட்டா ஆச்சா?'' என்று முணு முணுத்துக்கொண்டே போனுள்.

மாணிக்கம் ஏதோ புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு குறிப்பு எடுக்கத் தொடங்கினுன். வேலையில் லயித்தவன் தன்னை அறியாமல் சாருகேசி ராகத்தை விஸ்தாரமாக ஆலாபனை செய்தான்.

சாருகேசி ராகத்தை நாகசுவர இசையில் பரப்பி ஆராய்ச்சி நடத்தியிருக்கிருர்கள் என்ற எண்ணமே அவனுக்கு அந்த ராகத்தை நினைவுபடுத்தியது போலும்! சட்டென்று அவன் உடலில் ஒரு குறுகுறுப்பு அவனை விழிப்புறச் செய்தது.



'நளினி வந்திருக்கிருளா என்ன? மீனுட்சியும் பத்மினியும் கூட இருக்கிருர்களோ?'

அவன் நிமிர்ந்து பார்ப்பதற்கும் அவர்கள் ''பேஷ்'' என்று பாராட்டுவதற்கும் சரியாக இருந்தது. மாணிக்கம் காகிதங்களை அப்பால் எடுத்துவைத்து விட்டு எழுந்து நின்ருன். ஏதோ தவறு செய்துவிட்டவன் போல அவன் விழிப்பதைப் பார்த்து அவர்கள் கலகலவென்று சிரித்தார்கள்.

''மிஸ்டர் மாணிக்கம், அருமையாகப் பாடுகிறீர்களே!'' என்று அடக்கமாகப் பாராட்டினுள் மீனுட்சி.

''நீதானே முதல் முதலில் அவர் பாடுவார் என்பதை எங்களுக்குச் சொன்னவள்? காலேஜில் படிக்கும்போது கேட்டிருக்கிருயே! நீ சொன்னதன் பேரில் தானே நளியின் அப்பா அவரை அழைத்துப் பேசினுர்?'' என்ருள் பத்மினி.

"அப்போதைக்கு இப்போது எவ்வளவு மெருகு ஏறியிருக்கிறது! உள்ளத்தைத் தொடுகிறது!"

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்றான் மாணிக்கம். "அலமேலு, அவங்களை உள்ளே அழைத்து உட்காரச் சொல்லவில்லையா?" என்றான் தன் தங்கையைப் பார்த்து.

"இத்தனை நேரம் உள்ளே தான் இருந்தோம். அலமேலுவைத் தையல் வகுப்புக்கு அழைத்துப் போக வந்தோம். காதுக்கு நல்ல விருந்து கிடைத்தது" என்றாள் பத்மினி.

மாணிக்கம் எங்கோ பார்த்தான். அவர்கள் திக்கில் கூடப் பார்வையைச் செலுத்தாமல், "உள்ளே போய் உட்காரலாமே! அலமேலு, அவர்களுக்குச் சாப்பிட ஏதாவது..." என்று விசாரித்தான்.

"பானகம் தந்தேன், அண்ணா. பயற்றம்பருப்பு கோசுமல்லியும் தந்தேன்" என்றாள் அலமேலு, திருப்தியாக.

முள் குத்தினாற்போல முகத்தைச் சுளித்தான் மாணிக்கம். அந்த மூன்று பெண்களும் ஒய்யாரமாகக் கண்ணாடிக் கிண்ணங்களில் ஐஸ் கிரீமை வைத்துக் கொண்டு முட்டைக் கரண்டியினால் எடுத்து நுனி நாக்கில் வைத்துச் சுவைப்பவர்கள். வாழை இலைச் சருகு தொன்னையில் கோசுமல்லியும், அலுமினிய டம்ளரில் வெல்லப் பானகமும் தந்தால் எப்படி இருக்கும்! அவன் மனம் குன்றியது.

"உங்கள் அம்மா கையில் என்ன மாயமோ தெரியாது; கோசுமல்லியும் பானகமும் அமிர்தமாக இருந்தன" என்றாள் பத்மினி.

"எங்கள் வீட்டில் பாசிப் பருப்புக் கோசுமல்லி கடைசி வரை இலையைக் காக்கும். இவ்வளவு ருசியாக இருக்கும் என்று இன்றைக்குத்தான் தெரியும்" என்றாள் நளினி.

"பானகம் எப்படிச் செய்தீர்கள்? அலமேலு, உனக்குத் தெரியுமா? சுக்கும், மிளகும், ஏலக்காயும் மணக்க மணக்க எப்படித்தான் இருந்தது! நம் சனிக்கிழமை பஜனைக்குச் செய்யலாமே!" என்றாள் மீனாட்சி.

மாணிக்கம் உணர்ச்சியற்ற முகத்துடன் நின்றான். மேலுதட்டுப் பகட்டா, உள்ளன்போடு உரைத்த சொற்களா என்று கூட அவன் ஆராயவில்லை. அவர்கள் போனால் போதும் என்று இருந்தது அவனுக்கு.

அலமேலு தன் அண்ணனின் முகத்தைப் பார்த்தாள். அவளுக்கு விவரம் புரிந்தது. பரிதாபமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது. "வாருங்கள், அக்கா, உள்ளே போவோம். அண்ணாவும் வந்து நம்முடன் பேசுவார்" என்றாள் அவள் குறும்பாக.

"நாம் ஒரே தெருக்காரர்களாகி விட்டோமே, நன்றாகப் பரிசயமாக வேண்டாமா?" என்றாள் மீனாட்சி.

"புதிதாகப் பரிசயமாக வேண்டுமா? நாம் சக மாணவர்கள் என்பதை மறந்து விட்டீர்களா? டாக்டரைத் தெரிந்து கொள்ள வேண்டும். வருகிறேன் ஒரு நாள்" என்றான் மாணிக்கம்.

மூன்று பெண்களும் அலமேலுவுடன் உள்ளே போனார்கள். மாணிக்கத்தின் தாயாருடன் அவர்கள் உற்சாகமாகப் பேசுவது கேட்டது.

அவன் காகிதங்களை ஒழுங்குபடுத்தி எடுத்து வைத்துவிட்டு வீட்டை விட்டு வெளியே போய்விட்டான்.

நளினி முதலியவர்கள் பேசி முடித்து முன்பக்க அறைக்கு வந்தபோது மாணிக்கம் அங்கு இல்லை.

"மாணிக்கத்தைக் காணோமே! அவரிடமிருந்து குறிப்பு ஒன்று வாங்கி வரச் சொன்னார் அப்பா" என்றாள் நளினி.

"நான் வாங்கி வைக்கிறேன், அக்கா" என்றாள் அலமேலு.

"சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போவார் என்று தெரியாது எனக்கு" என்றாள் நளினி.

"அதுதான் மாணிக்கம்!" என்று கூறிச் சிரித்தாள் பத்மினி.

மீனாட்சியும் நளினியும் சேர்ந்தாற்போல் சிரிக்கவும் அலமேலுவுக்குச் சங்கடமாக இருந்தது. "இங்கே இந்தக் காலனியில் ஆண்கள் பெண்களோடு சமமாகப் பேசிக்கொண்டு நிற்க மாட்டாங்க. நின்றாலும் மத்தவங்க பழிப்பாங்க" என்றாள் அவள், காரமாக.

"அப்பாடீ, இப்படியல்லவா ஒரு தங்கை இருக்கவேண்டும்? உங்கள் அண்ணனை என்ன சொல்லி விட்டோம்?" என்று கேட்டாள் மீனாட்சி; "பத்மினி, வந்து விடு. அப்புறம் அலமேலு அடித்தாலும் அடித்து விடுவாள்."

மூன்று பெண்களும் சிரித்தபடியே மீனாட்சியின் வீட்டுப் பக்கம் சென்று விட்டார்கள்.

"இந்த வீட்டில்தான் யாரும் அண்ணனின் மனசு தெரியாமல் நடந்துக்கிறாங்க. அங்கேயும் அப்படித்தானா?" என்று முணுமுணுத்தாள் அலமேலு.

அப்பொழுது அவள் அண்ணன் மெதுவாக உள்ளே எட்டிப் பார்த்தான். வந்திருந்தவர்கள் யாரும் அங்கு இல்லை என்று தெரிந்ததும் அவன் நேரே சமையலறையில் போய் ஒரு மிடறு தண்ணீர் குடித்து விட்டு, கூடத்தில் அரிசியில் கல் பொறுக்கும் தனபாக்கியத்தின் அருகே போய் அமர்ந்தான்.

"முத்து, அவங்க அலமேலுவை வகுப்புக்கு வரச் சொல்லித் தொந்தரவு

செய்யருங்க. நீ சொன்னல் தான் இவள் போவாளாம்.''

''அங்கே போய் என்ன அம்மா, இவ கத்துக்கிடணும்? உன்கிட்டே இருந்து தெரிஞ்சுக்கிட்டாப் போதாதா?''

''அவங்க நாடகம் போடப் போருங்க ளாம். அது வேறே அமர்க்களப்படுது. அலமேலு குரல் நல்லாயிருக்குன்னு கூப் பிடருங்க. போனல், என்ன, முத்து? நாகரிகமாகப் பேசவும் உடுத்தவும் கத்துக்குவா இல்லே?''

''நாடகமா? அது எதுக்கு?'' என்று கேட்டான் முத்து.

''மீனம்மா மகளிர் மன்றம் நடத்த ருங்க இல்லே? அங்கத்தினராக இருக்கிற வங்க பிள்ளேங்களே வச்சு நாடகம் போட்டு இந்திரா காலனி ஆளுங்க கிட்டே நல்ல பேர் நிலே நாட்டிக்கப் போருங்களாம்.''

''சரிதான். செஞ்சிட்டுப் போருங்க'' என்ருன் மாணிக்கம். அலமேலுவைப் பார்த்து, ''அதுக்காக நீ நாடகம் ஆடப் போகணுமா?'' என்ருன்.

''நாடகம் யார் ஆடப் போருங்க?'' என்ருள் அலமேலு, குத்தலாக.

''பின்னே என்ன செய்யப் போற யாம்? நாம் பேசறதும் பழகறதும் நமக்குப் போதும்.''

''நீ ஏன் அம்மா, சும்மா கிடவேன்! நான் இப்படியே உழவு மாடு மாதிரி இருந்துவிட்டுப் போகிறேன்'' என்ருள் அலமேலு.

தங்கையினுடைய ஏமாற்றத்தைக் காணும்போது மாணிக்கத்துக்குக் கஷ்ட மாக இருந்தது. ஆயினும் அவள் மூல மாக நளினி முதலியவர்களிடம் பிணைப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்ற பயத்தினல் அவன் பிடிவாதமாகப் பேசாமல் இருந்தான்.

''கல்யாணம் ஆயிடுச்சின்ன நம் கையிலே இருக்கப் போகிருயா? பங்காரு அக்காவும் மீனம்மாகிட்டே அன்பா இருக்கிறதனலேதான் ..'' என்று மீண்டும் ஆரம்பித்தாள் தாய்.

''சரி, உங்கள் இஷ்டம். நமக்கு எது தேவையோ, அதோடு நிறுத்திக்கொள் உன் படிப்பை'' என்ருன் மாணிக்கம்.

''எதற்கு அண்ணு, உனக்குப் பிடிக் காத இடத்துக்கு நான் போகணும்?''

''இப்ப நான் உன்னேப் போகும்படி கெஞ்ச வேண்டுமா? நீ அங்கே போகாமல் இரு. அவங்க என்னேயே வந்து கேட் பாங்க. அவங்க் அவங்க வீட்டிலே வம் பளப்பாங்க...''

''ஐயோ, அண்ணுவே! உன்னே நல் லாத்தான் கணக்குப் போட்டிருக்காங்க.''

''யாரு என்ன சொன்னுங்க? என்னேப் பற்றி வம்பு பேசினுங்களா?''

''அவங்க ஒண்ணும் வம்பு பேசவில்லே. சரி, நான் வகுப்புக்குப் போய்வரேன். நளினியக்கா பாட்டு வகுப்பு நடந்துக் கிட்டு இருக்கும் இப்போ.''

''அலமேலு, நளினி நன்ருகப் பாடு கிருள், இல்லேயா?''

''ஆமாம் அண்ணு, தேவகானம் மாதிரி இருக்குது. நீ தினமும் அவங்க வீட் டிலே கேட்பாயாக்கும்?'' என்று ஆவ லோடு கேட்டாள் அலமேலு.

மாணிக்கம் ஒரு கணம் மனசோடு நளினியின் பாட்டை ரசித்தான். உடனே ஓரக்கண்ணுல் தன் தங்கையைப் பார்த் தான்.

''அண்ணு, நளினியக்காவுக்கு ஏதோ குறிப்புப் புத்தகம் வேண்டுமாம். உன் னேக் கேட்க மறந்துவிட்டதாம்'' என் ருள் அலமேலு.

''இந்தா, இந்தா, நீயே கொண்டு கொடு. மறுபடியும் அதைக் கேட்டுக் கொண்டு அவங்க இங்கே வரப் போருங்க; வீண் வம்பு!'' என்று வேக மாகப் பேசிக்கொண்டே அவன் தன் அறைக்குச் சென்று குறிப்புப் புத்த கத்தை எடுத்து வந்து அவளிடம் கொடுத்தான். அவள் அதை வாங்கிக் கொண்டு தன் தோழியின் வீட்டை நோக்கி ஓடினுள்.

அலமேலு மீனுட்சியின் வீட்டுக் குள் நுழைந்தபோது அங்கே வேலேகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. வேஷம் போட்டுப் பார்ப்போரும், பாட்டு நாட்டிய ஒத்திகை பார்ப்போரு மாக இருந்தனர்.

அலமேலு சற்று நிதானித்து விட்டு நளினியின் அருகில் போய் அமர்ந்தாள். தம்பூராவை மீட்டிக்கொண்டு அவள் பாட்டுச்சொல்லிக்கொடுத்தாள். அவளேத் தொட்டு, தன் அண்ணன் கொடுத்த குறிப்புப் புத்தகத்தைத் தந்தாள் அல மேலு. நளினி அதை வாங்கிக் கொண்டு கண்ணுலேயே நன்றி தெரிவித்தபடி பாட்டைத் தொடர்ந்தாள்.

அப்போது யாரோ 'டக் டக்' கென்று நாசூக்காகக் கதவில் தட்டுவது கேட்டது.

மீனுட்சி, ''யார்?'' என்று கேட்ட படியே முன் பக்கம் சென்ருள். அங்கே மதனகோபாலன் நின்ருன். தன்னே அறி யாமல் அலமேலு எழுந்து சுவரில் மாட்டி யிருந்த படங்களேப் பார்வை யிடுவது போல நின்று பேச்சைக் கவனித்தாள்.

''கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல நீங்கள் வந்து சேர்ந்தீர் கள்'' என்று சொல்லிக்கொண்டே மீனுட்சி அவனே வரவேற்ருள்.

''நான் உங்களோடு பேசத்தான் வந் தேன். நீங்கள் குதம்ப நிகழ்ச்சி ஒன்று போடப் போகிறீர்களாமே? நாங்கள்

எங்கள் நாடகக் குழுவில் ஒரு சமூக நாடகம் தயாரித்து வைத்திருக்கிறோம். உங்களோடு சேர்ந்து கொள்ளலாமா என்று கேட்க வந்தேன். வசூலில் பாதிப் பாதி எடுத்துக் கொள்ளலாமே!''

மீனாட்சி யோசனையில் ஆழ்ந்தாள்.

''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்று கேட்டான் மதனகோபாலன்.

''என்னிடம் வரும் பெண்களில் சற்றுப் பெரியவர்களாக இருப்பவர்கள் மேடை ஏறமாட்டேன் என்கிறார்கள். அந்த நிலையில் நாங்கள் ஆண் பிள்ளைகளோடு சேர்ந்து நிகழ்ச்சி நடத்த முடியுமா என்றுதான் யோசிக்கிறேன்.''

''நீங்கள் கூட இப்படிப் பேசினால்...?''

''காலேஜில் எங்கள் சக மாணவர்களுடன் சேர்ந்து நாடகம் போட்டிருக்கிறோம். இந்தக் காலனியில் இருப்பவர்களுக்குப் பிடிக்க வேண்டுமே! டாக்டரும் நானும் ஏதோ சேவை செய்ய வேண்டுமென்று கனவு காண்கிறோமே; அதற்கு இடையூறு வரக் கூடாது பாருங்கள்'' என்றாள் மீனாட்சி.

''இந்தக் காலனி மனிதர்கள் மனிதர்களோடு சேர்த்தியா? ஆட்டு மந்தைக் கூட்டம்!'' என்றான் மதனகோபால்.

''நான் விரும்பி ஓர் ஆடாக இங்கே குடிவந்திருக்கிறேனே; அதை மறந்து விட்டீர்களே!''

மதனகோபாலனின் முகத்தில் ஒரு மாறுதலும் இல்லை. அலமேலு மெதுவாகத் திரும்பி அவனைப் பார்த்தாள். அதே சமயம் அவன் கண்களும் அவளைச் சந்தித்தன. அவன் சட்டென்று திரும்பிவிட்டான். அலமேலுவின் முகம் வெளிறியது. ஆயின், உடனே சமாளித்துக் கொண்டாள். 'நாம் இன்னும் இந்த இந்திரா காலனியில்தான் வாழ்கிறோம். நளினியக்காவுடன் சேர்ந்து ரங்கபாளையம் கிளப்பிலே குடி போய்விடவில்லை. இத்தனை பேர் நடுவில் அவர் நம்மைப் பார்த்துச் சிரிப்பாரா?' என்று தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டாள்.

இவள் தன் யோசனைகளில் ஈடுபட்டிருக்க, மற்றவர்கள் எல்லாரும் போய் விட்டிருந்தனர். மீனாட்சியும் நளினியும் பத்மினியும் ஏதோ இடிந்து போய் அமர்ந்து தீவிர ஆலோசனையில் ஈடுபட்டிருப்பதைக் கவனித்தாள் அலமேலு.

''பேசிக்கொண்டிருக்கும்போதே மட்டு மரியாதை இல்லாமல் போய் விட்டானே அந்த மனிதன்!'' என்று பொருமினாள் பத்மினி.

அலமேலு சுடச் சுடப் பதில் சொல்ல வாயெடுத்தாள்; ஆனால் அடக்கிக் கொண்டு விட்டாள். ''என்ன விஷயம் அக்கா, ஏன் இப்படி இடிந்து போய்ட்டீங்க?'' என்று கேட்டாள்.

''யார் யாரோ எங்களைப் பற்றித் தப்பாகப் பேசிக்கிறாங்களாம். வீட்டோடு இருந்த பெண்களைத் தெருவில் இழுத்துக் கூத்தாடியாக்குகிறோம் என்று சொன்னார்களாம்'' என்றாள் மீனாட்சி.

''நாலு பேர் நாலு விதமாகப் பேசுவாங்கதான்'' என்றாள் அலமேலு.

''அது இல்லை, அலமேலு. டாக்டரையும் மீனாவையும் இங்கே இருக்க விடாமல் அடிக்கப் போவதாகச் சில பேர் பேசிக்கிறாங்க. என் காதில் விழுந்தது.''

''இதுக்கெல்லாம் பயப்படமாட்டோம், நளினி. இப்படித்தான் நாங்கள் போனவுடன் பேசுவாங்க. அவங்க நலனுக்குத்தான் பாடுபடறோம்னு தெரிஞ்சா ஆதரிப்பாங்க.''

''அதை எப்படி நிலை நாட்டுவீங்களாம்?''

''நீங்க ஒண்ணு! யாருடைய உதவி உங்களைத் தேடி வந்திருக்கிறது? இந்த வட்டாரத்துக்கே ராஜா மாதிரி; ஒரு பார்வை பார்த்தால் நூறு பேர் ஓடியாடி வேலை செய்வாங்க'' என்றாள் அலமேலு.

''யாரைச் சொல்றே நீ?'' என்று புரியாமல் கேட்டாள் நளினி.

''யாரைச் சொல்றேன்னு தெரியலையா? பங்காரு அத்தை குடும்பம் எதில் கை வைத்தாலும் இந்தக் காலனியிலே யாரும் எதிர்த்துப் பேசமாட்டாங்க. நீங்க ஏன் பயப்படறீங்க?''

''மதனகோபாலன் அவ்வளவு சக்தியுள்ளவரா? பார்த்தால் என்னவோ போல இருக்கிறாரே?'' என்றாள் நளினி,

''எப்படி இருக்கிறாரு? நல்லா டிரஸ் செய்துகொண்டு பார்க்கப் பளிச்சின்னுதான் இருக்கார்'' என்றாள் அலமேலு.

''ஓகோ!'' என்றாள் நளினி, அர்த்த புஷ்டியுடன்.

உடனே இருவரும் சிரித்து விட்டனர்.

அலமேலு விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பினாள். தன் அண்ணனின் புத்திமதி அவளை விரட்டியது. போதாக் குறைக்குக் குழாயடியிலிருந்து தண்ணீர் எடுக்கவேண்டும். தன் தாய்க்கு உதவி செய்ய விரைந்தாள் அலமேலு.

அண்டா, வாளி, குடம் யாவும் எடுத்துக் கொண்டு அவள் குழாயடிக்குச் சென்றாள். பாத்திரங்களை வைத்துத் தண்ணீர் பிடிக்கலானாள். வழக்கம் போல் அவளை மற்றப் பெண்கள் கேலி செய்ய ஆரம்பித்தனர். அவளுக்கும் மதனகோபாலனுக்கும் கல்யாணம் என்று மாரியம்மன் கல்லில் பூ வைத்துக் கேட்டதிலிருந்து அவளைப் பலவாறும் பரிகசிப்பார்கள். அவளும் அதைச் சிரித்த முகத்துடன் ஏற்பாள். ஆனால்

முன் கதை

இந்திரா காலனியில் செல்வாக்கு உள்ளவையும் பரஸ்பரம் நெருங்கிய நட்புறவு கொண்டவையுமான இரண்டு குடும்பங்கள் மணவாளச் செட்டியுடையதும் கந்தசாமி செட்டியுடையதும். முதல்வர் நல்ல பணக்காரர், இரண்டாமவர் மளிகைக் கடைக்காரர். அவ்வளவு பணம் படைத்தவர் அல்லர்.

மணவாளச் செட்டியின் மூத்த மகன் மணமானவுடன் பிரிந்துபோய் விட்டமையால், இளைய மகன் மதன கோபாலனின் திருமணத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். மணவாளச் செட்டியும் அவர் மனைவி பங்காருவும், கந்தசாமி செட்டியின் கடைக்குட்டியும் ஒரே பெண்ணுமான அலமேலுவை மதனகோபாலனுக்கு நிச்சயம் செய்கிறார்கள்.

கந்தசாமி செட்டியின் மூத்த மகன் மாணிக்கம் தாவர இயல் ஆராய்ச்சி செய்கிறான். படிப்பில் ருசியும், அனிச்ச மலர் போன்ற நுட்பமான சுபாவமும், சங்கீதத்தில் நல்ல ஞானமும் உள்ளவன். கல்லூரிச் சூழலில் ஏற்படும் நாகரிக, நாசூக்கான வாழ்க்கையில் அவன் சுவை காண்கிறான். தான் பிறந்து வளர்ந்த இந்திரா காலனியின் முரட்டுத்தனமும், அழுக்கும், அநாகரிகமும் அவன் வெறுப்புக்கு இலக்காகின்றன. ஆனால் திடச்சித்தம் இல்லாமல் அவன் தவிக்கிறான். அவனுடன் கல்லூரியில் படித்த மீனாட்சி, டாக்டரான தன் கணவருடன் இந்திரா காலனியில் சமூக சேவை செய்வதற்காக வந்து குடியேறுகிறார்கள்.

மாணிக்கத்தின் ஆசிரியர் ஆத்மநாதன். அவர் மகள் நளினியும் மாணிக்கத்துடன் ஆராய்ச்சியில் ஈடுபடுகிறாள். ஆராய்ச்சி சம்பந்தமாக அவள் அவனை அடிக்கடி நெருங்கினாலும் மாணிக்கம் குழப்பம் மிகுந்து விலகிப் போகிறான். மீனாட்சியின் தோழிகளான நளினியும் பத்மினியும் அடிக்கடி இந்திரா காலனி வர நேருகிறது. பெண்களைக் கண்டாலே கூசும் சுபாவமுள்ள மாணிக்கத்துக்குத் தவிப்பு அதிகரிக்கிறது.

சில சமயம் அதே வழியாக மதனகோபாலன் போகும் போதும் வரும்போதும் அவர்கள் அவள் இடுப்பில் குத்திக் கன்னத்தில் இடித்து வேடிக்கை செய்வது அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆனால், இன்றோ? மதனகோபாலன் குழாயடியைத் தாண்டிச் செல்லும்போது சமயம் பார்த்து அவர்கள் அலமேலுவைப் பிடித்து அவன் வரும் வழியில் தள்ளிவிட்டார்கள். இந்தச் சம்பவம் எதிர்பாராமல் நடந்தபடியால் அலமேலு நிலை தடுமாறி இரு கைகளையும் நீட்டிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி அவன் மீது முட்டிக் கொள்ள இருக்க, மயிரிழையில் தப்பிச் சமாளித்துக் கொண்டாள்.

அப்போது பீதியுடன் நிமிர்ந்து பார்க்கவும் மதன கோபாலன் வெறுப்புக் கலந்த ஒரு பார்வையை அவள் மீது காட்டி விட்டு அகன்றான். அந்தப் பார்வையும், தான் அவன் முன் விழ நேர்ந்ததும் அவளுக்குத் தாங்க முடியாத துக்கத்தைக் கொடுத்தன. இத்தனையும் போதாது என்று அந்தப் பெண்கள், "உன்னிடம் என்ன சொன்னார் அவர்? அந்த அவசரத்தில் கூட என்னவோ ரகசியமாகச் சொன்னாரே?" என்றார்கள்.

மதனகோபாலன் கூறிய வார்த்தையை நினைத்தால் அலமேலுவின் நெஞ்சம் விண்டது. 'துடைப்பக்கட்டை' என்று கடித்த பற்களிடையே அவன் கூறினான் என்று யாரிடம் சொல்வது? ஒரு பெண் தன் காதலனிடமிருந்து எதிர்பார்க்கும் சொல்லா இது? அலமேலு தன் கண்களில் ஊற்றெடுக்கும் நீரைக் கட்டுப்படுத்த முடியாமல் வேகமாக இடுப்பில் அண்டாவும் கையில் தோண்டியுமாகத் தன் வீட்டுக்குள் நுழைந்து கூடத்தில் 'ணங்' கென்று வைத்தாள். "இனிமேல் என்னைக் குழாயடிக்குப் போகச் சொல்லாதே, அம்மா. கிணற்றிலிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் சேந்தித் தருகிறேன்" என்றாள்.

"அதென்னடி புதுசு புதுசாக் கிளம்புகிறது? முதல்லே பாத்திரங்களைக் குழாயடியில் தேய்க்க மாட்டேன்னே; இப்பத் தண்ணி எடுக்கவே வந்ததா மோசம்? வரவர நல்லாத்தான் இருக்குது!"

"உனக்கென்னம்மா தெரியும் என் கஷ்டம்? குழாயடிப் பொம்பளைங்க என்னை மொச்சு மொச்சுன்னு பேசறதும் ஏசறதும் போதாக்குறைக்கு அவரு வேறே அந்த வழியில் வரும்போது.." அலமேலுவின் கண்களில் நீர் வழிந்தது.

"போச்சுடா! பெரிய இடத்துப் பெண்களோடு பழகிப் பழகி நீயும் அப்படியாயிட்டியா? மாணிக்கம் சொன்னப்பல இதெல்லாம்தான் கத்துக்கிட்டு வந்தாயாக்கும்? நமக்கு இது ஒவ்வாது" என்றாள் தனபாக்கியம்.

அலமேலு தன் கண்களைத் துடைத்துக் கொண்டு பின்னால் திரும்பிக் கிணற்றுச் சுவர் மீது தலையைச் சாய்த்துக்கொண்டு ஆசை தீர விக்கி விக்கி அழுதாள்.

தினத்துக்கு மாறாக மகள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருப்பதைப் பார்த்துத் தனபாக்கியம் அவளைத் தேடிக்கொண்டு பின்புறம் வந்தாள். அங்கே அவள் கண்ட காட்சி தாயுள்ளத்தில் கவலையை உண்டாக்கியது.

"என்ன நடந்தது? யார் என்ன சொல்லிவிட்டார்கள்? ஏன் இப்படி? பைத்தியக்காரப் பொண்ணு! வேடிக்கைக்கு ஏதேனும் சொன்னால் அதற்குப் பிழியப் பிழிய அழுவார்களா?" என்று தனபாக்கியம் மகளைத் தேற்ற

முயன்றாள். ''விளையாட்டா இப்படித் தான் கேலி செய்வாங்க. இதுக் கெல்லாம் அழுவாங்களா? அழவும் சிரிக்கவும் நமக்குப் போது எங்கே இருக்குது? நம்ப கடையிலே இலை தீர்ந்து போச்சாம். நீயும் நானுமாக இருநூறுவது தைச்சு அனுப்பணும், எழுந்திரு'' என்று அலமேலுவை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

சிவந்த கண்ணும் வலிக்கும் தலையு மாக இலைகள் தைக்க ஆரம்பித்தாள் அலமேலு.

''நானும் கவலைப் படக்கூடாதுன்னே நினைக்கிறேன். ஆனால் மாரியம்மன் கூடக் கல்லாக இருக்கிறாளே! மனசைப் போட்டுக் குழப்புகிறாளே!''

''மனுஷங்க செய்கிற குழப்பத்துக்கு ஏன் அம்மா, அம்மனை வையறே?''

''மனுஷங்க ரூபமாகத்தான் தெய்வம் ஆட்டும்.''

அலமேலு பெருமூச்செறிந்தாள்.

''பங்காரு அக்கா கூட முன்னேபோல வருகிறதில்லை, பார்த்தியா?'' என்று கேட்டாள் தனபாக்கியம்.

''அம்மனுக்கு நிதம் பூஜை கூடச் செய்வதைக் காணோம். முந்தாநாள் கல்லுக்குப் பால் ஊற்ற வந்தபோது நான் தண்ணி கொண்டு வந்தேனா? 'அம்மனைக் கழுவச் சுத்தமான தண்ணி வேணுமா, பெரியம்மா?' ன்னு கேட்டேன். காது கேட்காத மாதிரி போய்ட்டாங்க'' என்றாள் அலமேலு.

''நீ எதுக்குடீ போய்க் கூப்பிட்டே? அப்படி வெட்கங் கெட்டுப்போய்க் கேட்க லாமா நாம்? அவள் பணக்காரியாக இருந்தால் அவளோடு. சம்பந்தி மரி யாதை யெல்லாம் எதிர்பார்க்கிறாளோ? பழைய சிநேகிதம் கூட மறந்து போச்சு; மதிப்புப் பார்க்கிறா அவ!''' என்று பொரிந்து கொட்டினாள் தன பாக்கியம். மாரியம்மன் கல் கிட்டே




வந்தாலே ஏதோ ஒரு சங்கதி சொல்லிக் கொண்டு, "தனம், தனம்" என்று கூப்பிடுவாள். இப்பொழுது ஒரு வாரமாக அழைப்பதையே விட்டு விட்டாள். பூஜையை முடித்துக் கொண்டு திரும்பிப் பாராமல் தன் வீடு போகிறாள். அலமேலு சொல்வதைப் பார்த்தால் தினம் தினம் செய்கிற பூஜைகூடக் குறைந்து விட்டது போலும்!

"அம்மா, அத்தைக்கு உடம்பு சரியில்லையோ என்னவோ? நீதான் ஒரு நடை போய்ப் பாரேன்" என்றாள் அலமேலு.

"அது யாரடி அவ? அத்தையாமே அத்தை! இதோ மூணு முடிச்சு விழும் முன்னாலே ஒண்ணும் உறவு கொண்டாட வேண்டாம். ஆமாம். சொல்லிட்டேன்!" என்றாள் தாய்.

அலமேலு பேசாமல் அன்னையின் முகத்தைப் பார்த்தாள். பிறகு, "அம்மா,



உனக்குக் கோவங்கூட வருமா?" என்று கொஞ்சலாகக் கேட்டாள்.

"கோவம் வரவழைக்கிறீங்க. உன் பெரிய அண்ணன் வீட்டுக்கு வரவே நேரமாகுது. சின்னவன் நாடகம், கூத்துன்னு அலையறான். போதுமே, என் சவரணை!"

"சின்னண்ணாதான் கதாநாயகனாமே?"

"அது ஒண்ணுதான் குறைச்சல்!"

"பெரிய அண்ணன் பின்பாட்டுப் பாடப் போவுதாம்."

"உன்னையும் பாடக் கூப்பிட்டாங்களா?"

"கூப்பிட்டாங்க. நான் போகமாட்டேன். கன்னிகாபரமேசுவரி சத்திரத்தில் தினமும் ஒத்திகை நடந்துக்கிட்டிருக்கு. நான் வேடிக்கை பார்க்கக் கூடப் போவதில்லை. அப்புறம் மணவாள மாமாவோ, பங்காரு அத்தையோ பார்த்து விட்டுத் தப்பாக நினைச்சுக்கிட்டா?... நமக்கேன் வம்பு?"

"இந்தா! அத்தை கித்தைன்னு .."

"முன்னைப் போலவே பெரியம்மான்னு கூப்பிட்டா முறையே நல்லா இல்லை" என்று சிணுங்கினாள் அலமேலு.

"என்ன முறையோ? ஏன் இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக் கிட்டோம்னு இருக்குது. உங்க அப்பா மட்டும் கொஞ்சம் இங்கிதமா என் வழிக்கு இசைஞ்சு, பணத்தை இறுக்கிப் பிடிக்காமல் இருந்தால் இந்தக் கோபாலுவுக்குக் கொடுக்க எனக்கு மனம் வருமா? நம்ம புருஷன் தான் ஒரு தினுசாச்சே, நாளைக்கு உனக்கு ஒரு நல்லது செய்யக் கூட முடியாதே! நூற்றைம்பது இலை தைத்தால் நூறு இலைன்னு புளுகிப் பங்காரு கிட்டே ரகசியமாகச் சீட்டுக்கட்டிட்டுத் திண்டாடுகிறேன் நான். நீயாவது பஞ்சமே தெரியாமல் பட்டும் பணமுமாக இருப்பாயேன்னு ஆசை. ஆனால் இப்பச் சொத்தும் வேண்டாம், சொகுசும் வேண்டாம்னு தோணிப் போச்சு. நிமிஷ நேரத்திலே மனுஷங்க மாறிப் போயிட்டாங்களே!"

அலமேலுவுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை.

அவர்கள் மோனத்தைக் கலைக்கப் பூக்காரன் வந்தான். ஒரு கூடைப் பூவைக் கீழே இறக்கிவிட்டு இரண்டு ஜடைகள் தயார் செய்து தரும்படி கேட்டான்.

"எங்கள் வேலையே தலைக்கு மேலே கிடக்குது. போங்க, அப்பா. வேறே யாராவது டாருங்க" என்றாள் தனபாக்கியம்.

"போன வாரம் தைத்துக் கொடுத்தீங்களே, அன்னப் பட்சியும் சந்தனப் பேலாவும்-அதுவே வேணுங்க. உங்கள் கை ராசியாக இருக்கிறதாம். ராத்திரி

ஒரு நிச்சயதார்த்தங்க. அதுக்குக் கேட்டாங்க. முதலாளி வாக்குக் கொடுத்து விட்டாராம்.''

''ஆமாம்! உங்கள் முதலாளியை யார் வாக்குக் கொடுக்கச் சொன்னுங்க? எங்களை இரும்பால் அடித்துப் போட்டிருக்கிறதா? எங்கள் வீட்டுச் செட்டியார் கூடத்தான் இலை தைக்கச் சொல்ருரு. முடியலையே!'' தனபாக்கியம் தன் வழக்கமான சுபாவத்திற்கு மாருகச் சிடு சிடுத்தாள்.

அலமேலு எழுந்து பூக்கூடையை எடுத்து உள்ளே வைத்தாள். ''ஏழு மணிக்கு வா. தைத்து வைக்கிறேம்'' என்ருள்.

தனபாக்கியம் அவளுக்கு உதவி செய்ய முன் வரவில்லை. அலமேலு தரையில் தனக்கு வசதியாக வண்ண வண்ணமாகப் பூக்களை அடுக்கி வைத்துக் கொண்டு தைக்க ஆரம்பித்தாள். பத்துப் பதினைந்து வரிகள் முடிந்ததும் பச்சையும் சிவப்பும் பின்னணியாக நிற்க அன்னப் பறவை வெள்ளை வெளேரென்று உருவாயிற்று. தனபாக்கியம் மௌனமாக மகளின் அருகில் அமர்ந்து பூக்களைக் கோத்துக் கொடுத்தாள்.

சற்றுப் பொறுத்து என்ன தோன்றிற்றே? ''அலமேலு, பங்காருவைப் பார்த்துவிட்டு வரேன்'' என்று கூறிக் கிளம்பினுள் தாய்.

அலமேலுவுக்குச் சிரிப்பு. ஆயினும் காட்டிக் கொள்ளாமல் இருந்தாள்.

தனபாக்கியம் போன வேகத்தில் திரும்பிவிட்டாள். அவள் முகம் வெளிறிப் போயிருந்தது.

''என்ன அம்மா?'' என்று திகிலுடன் கேட்டாள் அலமேலு.

தனபாக்கியம் சிலையாகச் சமைந்து விட்டாள்.

6. ஏட்டுச் சுரைக்காய்

பங்காரு பூஜையறையின் வாசற்படி மீது ஒரு தேங்காய்ப் பூத் துவாலையை மடித்துப் போட்டு அதன்மீது தலை வைத்துப் படுத்திருந்தாள். அடிக்கடி தன் நெற்றியைத் தடவியபடி இருந்தாள்.

''என்னங்க நீங்க? இப்படித் தரையிலே படுக்கலாமா? எழுந்து ஊஞ்சலிலே படுங்க'' என்று சமையல்கார அம்மாள் பங்காருவைக் கெஞ்சினுள்.

''படுக்கிறேன் பர்வதம், ஆகட்டும்'' என்ருளே தவிர, பங்காரு எழுந்திருக்கவில்லை.

''நல்ல கோபாலு! பெத்தவங்க மனசு புரியாம ஒரு பையன்...'' என்று அந்த அம்மாள் முணுமுணுத்தாள்.

''அவனை ஏன் சொல்லணும்? நம்ம புத்தியல்ல மங்கிப் போயிடுச்சு?''

என்று சொல்லிக்கொண்டே பெருமூச்சு விட்டபடி படுத்திருந்தாள் பங்காரு.

பத்து நாட்களுக்கு முன் ஒரு நாள் நளினி, பத்மினி, மீனுட்சி மூவரும் வந்திருந்தனர். நடக்க விருக்கும் நாடகத்தை ஒட்டி அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது பாட்டுக்களைப் பற்றிப் பேச்சு வந்ததும் மாணிக்கத்தின் பெயர் அடிபட்டது.

''என் நாடகங்களுக்குப் பின்பாட்டுப் பாடுவான் மாணிக்கம்'' என்று மதனகோபாலன் கூறினுன்.

''அலமேலு கூட நன்ருகக் கணீர் என்று பாடுகிருள். தாளக் கட்டும் இருக்கிறது. கொஞ்சமும் பிசிர் இல்லாத சாரீரம் அவளுடையது'' என்ருள் நளினி.

''நாட்டியத்துக்குப் பாடச் சொன்னுல் பாடமாட்டேன் என்கிருளே!'' என்ருள் பத்மினி.

''மிஸ்டர் கோபால் சொன்னுல் கேட்பாள், இல்லையா?'' என்ருள் மீனுட்சி.

அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த பங்காரு கடைசி வாக்கியத்தை மட்டும் புரிந்துகொண்டு, ''நம்ப கோபால் அவள் கிட்டே பேசமாட்டான். போதாக் குறைக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்கோம்'' என்ருள்.

''அவர் பேசவேண்டாம். நான் வேண்டுமானுல் தூது போகிறேன்'' என்ருள் பத்மினி.

மதனகோபாலன் சிரிக்கவில்லை. முகத்தைக் கல்போல் உணர்ச்சியின்றி வைத்திருந்தான். அவர்கள் மூன்று பேரும் கிளம்பிப் போன பிறகு தன் தாயின் மீது பாய்ந்தான். ''என்னைக் கேட்டாக் கல்யாணம் நிச்சயம் பண்ணினீங்க?'' என்று கேட்டான்.

''சின்னது முதல் சொல்லிக் கொண்டிருந்தது தானே? உன்னை எதுக்குக் கேட்கணும்? கன்னிகா பரமேசுவரி உத்தரவு கொடுத்ததே நமக்கு!''

''உன்னைப் போல் ராக்கோடி சொட்டைத் தலைகள் இந்த இந்திரா காலனி நிறைய எத்தனை எத்தனையோ?''

''ஆமாம். அந்த நாளிலே நாங்கள் சின்ன வயசுலேருந்து வச்சு வச்சுத் தலை சொட்டை விழுந்துவிட்டது. ராக்கோடி இல்லையேல் நாகர். இப்போது யார் அதெல்லாம் வைக்கிருங்க? கல்லிழைத்த திருகு பில்லை கூட யாரும் வைப்பதில்லை'' என்ருள் பங்காரு.

''ஐயோ! திருகுபில்லை வைக்காவிட்டால் என்ன? ராக்கோடி கவிழ்த்துக் கொள்ளாவிட்டால் என்ன? மனசு அதே இரா வண்டி தானே? தேய்ந்த பாதையில் தேய்ந்துகொண்டு உன் பாட்டி, உன் அம்மா, நீ, நாளைக்கு உன் பெண்..''

''அதுதான் கடவுள் கொடுக்கலையே!'' என்ருள் பங்காரு, லேசாகச் சிரித்து.

"கொடுக்காவிட்டால் என்ன? அதே மாதிரி பெண்ணைத் தேடிவிட்டாயே! அவங்க எதிரே வந்து அந்த அந்த..."

"அலமேலுவுக்கு என்ன குறைச்சல்? அவள் தலையிலே ஒரு சொட்டையு மில்லை" என்றாள் பங்காரு.

"அந்தச் சொட்டை, தலையில் இல்லா விட்டால் என்ன, மனசிலே இருக்கும். அந்தப் பொண்ணையும் என்னையும் ஜோடி சேர்த்துப் பேசினே, பார்த்துக்கோ, நான் உன் மகன் இல்லே. நீங்க கண்ட படியும் பேச்சை நடமாட விடுகிறது, அந்தப் பொண்ணு என்னை ஒரக் கண் ணுலே பார்க்கறதும், ஊரிலே இருக்கற வங்க நான் நடப்பதையும், நிற்பதையும் அவளோடு முடிச்சுப் போடுகிறதும்... சீ, சீ சீ-அநாகரிக, சனியன் பிடித்த உலகம்!" என்று இரைந்தான் மதன கோபாலன்.

"இப்பத்தான் செட்டிப் பள்ளம், இந்திரா காலனியாயிடுச்சே?" என்றாள் பங்காரு, விடாப்பிடியாக.

"வேடிக்கையாகப் பேசாதே! அல மேலு பேச்சை எடுத்தால் நான் இந்த வீட்டில் கால் எடுத்து வைக்கமாட்டேன். அப்புறம் உன் இஷ்டம். என் முகத்தைப் பார்க்க வேண்டுமானால் ஜாக்கிரதையாக இரு" என்று கூறிவிட்டு, கதவைப் படீர் என்று சாத்திக்கொண்டு மதனகோபாலன் வெளியே போய்விட்டான்.

பங்காரு மௌனமாக அமர்ந்து விட்டாள்.

அன்று முதல் உடலிலிருந்து உயிர் கொஞ்சங் கொஞ்சமாகப் பிரிவது போல இருந்தது அவளுக்கு. தூங்கு பவரைத் தானாகப் போய்த் தட்டி எழுப்பி விட்டுச் சோறு இல்லை என்பதுபோல் காரியம் செய்துவிட்டோமே என்று அவள் கவலை கொண்டாள். அலமேலுவின் நல்ல குணத்தை எண்ணி, தனபாக்கியத்தின் நட்பைக் கருதி, இந்தக் கல்யாணத்தை ஏற்பாடு செய்தாள். முதல் மருமகள் தான் தன் கைக்கீழ் இல்லை. இவளுக்கா வது வைர நகைகளைப் பூட்டி அழகு பார்ப்போம் என்று தானாக ஏற்பாடு செய்து விட்டாள். மதனகோபாலனை ஒரு பேச்சுக் கேட்க வேண்டுமென்று தோன்றவில்லை. 'பூஜை போடப் போவது அவனுக்குத் தெரிந்ததுதான். அப்போது ஏன் அவன் ஒன்றும் சொல்ல வில்லை? இதில் அவன் தப்பே ஒன்றும் கிடையாதா? நளினி, பத்மினி, மீனாட்சி யைப் பார்த்துப் பார்த்து, அவர்களோடு ஒப்பிட்டு இவனுக்கு இப்படிப் புத்தி தோன்றி விட்டதா? அதற்கென்ன பிர மாதம்? நாகரிகமாக உடுத்தச் சொன் னால் உடுத்து விட்டுப் போகிறாள். பவுடர் அப்பி, உதட்டுச் சாயம் பூசச் சொன் னால் செய்கிறாள். உடையை மாற்றுவது என்ன கஷ்டம்? அந்தப் பெண்ணின் உள்ளம் வேறு யாருக்கு உண்டு?'

பங்காரு தனக்குள்ளேயே வாதித்து, குழம்பித் தீர்வு காணாமல் தவித்தாள். இந்திரா காலனி கட்டுக்கோப்பான குடி யிருப்பு. தன்னால் கந்தசாமி செட்டி வீட் டுக்கு அவமானம் வந்துவிட்டதே என்று அவள் நடுங்கினாள். பாவாடை கட்டி, பாண்டி விளையாடின நாட்கள் முதல் அவளும் தனபாக்கியமும் நெருங்கிய தோழிகள். இன்று அந்தத் தோழமைக் குப் பங்கம் வந்துவிடுமோ?

நாடகத்தின் ஒத்திகை நடந்து வந்த மையால் மதனகோபாலன் வீட்டுக்கு வருவதும் போவதுமாக இருந்தான். 'வெட்டாத கிணற்றுக்குப் பூத பய மில்லை' என்று பங்காரு அவனிடம் பேச் சுக் கொடுக்காமலே இருந்தாள். அவன் நகர மத்தியில் ஒரு தனி அறை அமைத் துக் கொண்டிருக்கிறான் என்பது அவளுக் குத் தெரியும். பல நாட்கள் அவன் அங்கேயே தங்கிவிடுவான். அதற்கு வாடகை என்றும் ஹோட்டலில் சாப் பாட்டுச் செலவு என்றும் அவளிடம் பணம் கேட்பான்.

அவன் எப்படியாவது மனம் திருந்தி அலமேலுவை மணக்க ஒத்துக் கொள்ள மாட்டானா என்று பங்காருவின் மனம் சபலங் கொண்டது. அதனால் உடனே தனபாக்கியத்தினிடம் அவள் ஒன்றும் கோடி காட்டவில்லை. தன் ஆசைக்கு நீர் ஊற்றிக்கொண்டு வீட்டிலேயே தவங் கிடந்தாள்.

மாரியம்மன் கல் பூஜைக்குப் போனால் கூடத் தன் வழக்கப்படி தனத்தின் வீட்டை எட்டிப் பார்ப்பதில்லை. தெரு விலே தப்பித் தவறிக் கூடத் தலை காட் டுவதில்லை. எந்த விதமாகவாவது அவர் களுக்கு விவரம் தெரிந்துவிடுமோ என்று அவள் நடுங்கினாள். ஊதாரியான தன் மகனுக்கு நல்ல பெண் கிடைக்கும் வாய்ப் பையும் இழக்க நேரிடுமோ என்று அஞ்சி னாள். அதனால் தன் ஊஞ்சல் உண்டு, தான் உண்டு என்று வீட்டிலேயே அடைந்து கிடந்தாள்.

தனபாக்கியத்துக்கு இந்த விவரம் ஏதும் தெரிய நியாயமில்லை. திடீ ரென்று பங்காரு சம்பந்தியாகப் பிகு செய்வதாக அவள் நினைத்தாள். பணக் காரி என்ற மதப்பு என்று எண்ணினாள்.

அலமேலு அழுதுகொண்டு வந்ததும் தனபாக்கியம் சிந்தனையில் ஆழ்ந்தாள். ஊரறிய நாடறியக் கல்யாணத்தை நிச்ச யம் செய்துவிட்டு, அதற்கு மேல் நிச்சயதார்த்தம் என்றோ, முகூர்த் தம் குறிப்பிடுவதோ ஏதுமின்றி மண வாள செட்டி வாளா இருப்பது அவ ளுக்கு வேதனையாக இருந்தது. எதற்கும் பங்காருவைப் பார்த்துக் கேட்டுவிட

லாம் என்று எண்ணினாள். அவள் கிளம்பியும் போனாள்.

நேருக்கு நேர் பார்த்தபோது பங்காருவால் ஒன்றையும் ஒளிக்கமுடியவில்லை. கண்களில் நீர் மல்க, தன் பிள்ளையின் கூற்றை அறச் சொன்னாள்.

தனபாக்கியம் அதிர்ச்சி தாங்காமல் அப்படியே அமர்ந்து விட்டாள். தன் பெண்ணை எப்படிப் பார்ப்பது, எப்படித் தன் கணவரைச் சமாதானம் செய்வது, எந்த விதமாகத் தெருவில் நடமாடுவது என்று அவளுக்கு ஒரே திகைப்பாகி விட்டது. உலகமே விசித்திரமானது. பழுதை ஓரிடத்தில் கற்பித்து விட்டால் உலகம் உடனே அதைப் பன்மடங்காக்கிச் சித்திரிக்கும். இதுவரை தங்கள் வீட்டுத் திருமணம்போலக் களித்து வந்த இந்திரா காலனி இப்போது திசை மாறிப் பேச ஆரம்பிக்கும். அலமேலுவிடம் ஆயிரம் மாசுகளைக் கற்பித்து வம்பு பேசும்.

''கல்யாணம் என்கிறது நாம் விளையாடிய மரப்பாச்சி விளையாட்டு இல்லே, அக்கா. என்ன காரியம் செஞ்சிட்டீங்க? குழந்தை மனசை அம்மானை ஆடிட்டீங்களே!'' என்று வருத்தத்தோடு கூறிவிட்டுத் தனபாக்கியம் விடுவிடென்று வெளியேறிவிட்டாள்.

''தனம், அவசரப்படாதே. இப்பவும் கன்னிகா பரமேசுவரி அவன் மனசை மாற்றலாம்'' என்று உடைந்த குரலில் பங்காரு கெஞ்சினாள்.

தனபாக்கியம் தன் வீடு திரும்பியதும் அலமேலுவின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அமர்ந்திருந்தாள். ''ஏன் அம்மா, என்ன ஆச்சு?'' என்று மகள் மீண்டும் வற்புறுத்தவும் மெதுவாகப் பேசினாள். எப்படிச் சொல்லுவது என்று தன் மனசுக்குள்ளேயே ஒரு முறை ஒத்திகை செய்துவிட்டுப் பிறகு மெள்ளக் கூறினாள். ''பங்காருவுக்கு உடம்பே நல்லாயில்லே. பெரிய படுக்கையாகப் போட்டுவிடுமோன்னு பயமாக இருக்குது'' என்று சொல்லி மழுப்பிவிட்டாள்.

''அதுதான் அம்மா, பாவம். நாம் தப்பாக நினைச்சுக்கிட்டோம்'' என்றாள் அலமேலு.

''ஆமாம்'' என்று சுருக்கமாகப் பதிலளித்துவிட்டு வேலைமீது எழுந்து போய்விட்டாள் தாய்.

அலமேலு ஜடைகளைத் தைத்து முடித்துவிட்டுச் சுவரில் ஆணியில் மாட்டி அழகு பார்த்தாள். தன் திருமண நிச்சய தாம்பூலம் நின்று விட்டதை அறியாமல் யாருக்கோ தைத்து வைத்து இன்புற்றாள். அவள் தன் கைவேலையை அழகு பார்த்துக் கொண்டிருக்கும்போதே மீனா அங்கு வந்தாள்.

''அலமேலு, நீயும் சத்திரத்துக்கு வந்தால்தான் தேவலை. நளினியால் மட்டும் பாட்டு வகுப்பு நடத்த முடியவில்லை. நாடகப் பாட்டுக்கள், நாட்டியப் பாட்டுக்கள், கும்மி இதையெல்லாம் நீ பார்த்துக்கொள்ளக் கூடாதா? நளினி நாடகத்திலே நடிக்கிறாள். அது வேறே'' என்றாள் மீனாட்சி.

அலமேலு சந்தேகத்துடன் தன் தாயின் முகத்தைப் பார்த்தாள்.

''போய் விட்டு வா, அலமேலு! மீனாக்காகூடவே போய்க் கூடவே வந்துவிடு'' என்றாள் தனபாக்கியம்.

அலமேலுவால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

மறுநாள் எழுந்ததுமே அவள் வெகு சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்தாள். நாடக ஒத்திகையைப் பார்க்கவேண்டுமென்று அவளுக்கு மிகவும் ஆசை. ஆனால் போகப் பயந்து கொண்டு இருந்தாள். யாரோ ஒரு பெண் அதற்கென்று படித்து விட்டு வித விதமான கொண்டைகள் போடுகிறாளாம். பத்மினியுடன் படித்தவளாம். அதைப் பார்க்க வேண்டுமென்று ஆவல்.

தன் வேலைகளை முடித்துக்கொண்டு அவள் மீனாட்சி வீட்டிற்கு ஓடிவிட்டாள். பிறகு அவளுடன் சத்திரத்துக்குப் போனாள்.

ஒத்திகை ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. வெவ்வேறு அறையில் அவரவர்கள் வேஷம் போடுவதும் அரிதாரம் பூசுவதுமாக இருந்தனர்.

முன் கூடத்தில் ஒரு பெரிய ராமர் படம் இருந்தது. அங்கு மாணிக்கம் ஓர் ஓரமாக அமர்ந்து தம்பூராவை மீட்டினான். சாரணியும் அநுசாரணியும் கலந்து தொனித்தன. அவன் கண்களை மூடிக்கொண்டான். அவன மனம் சாவேரியை நாடியது. மறு நிமிஷம் அவன் உடல் லேசாக ஆடியது. நெற்றி நிர்மலமாயிற்று. 'கரிகலபமுகம்'' என்று எடுத்தான். சுருதியோடும் பாவத்தோடும் ஒன்றினான். அங்கு ஓர் இயந்திரம் மட்டும் இருக்குமாயின் வெண்ணெயில் குங்குமத்தைக் குழைத்து ஆகாயத் தட்டிலே விநாயக உருவத்தைத் தீட்டியிருக்கும். அங்கே சந்தனம் கமழ்ந்திருக்கும்; வைரம் ஜொலித்திருக்கும்; பிரணவம் ஒலித்திருக்கும்; மலர்கள் மணத்தை வீசியிருக்கும்; பாலும், பாகும், பருப்பும், பட்சணங்களும் குவிந்திருக்கும்; ஒளி படர்ந்திருக்கும், தென்றல் வீசியிருக்கும்.—அப்படி ஒரு சக்தி வாய்ந்த லயச் சித்திரத்தை அவன் தீட்டினான். அதில் ஆகாயம், பூமி, நீர், நெருப்பு, காற்று யாவும் ஒன்றி மணம் பெருக்கின.

மாணிக்கம் சத்திரத்துக்குள் வந்ததை யாரும் கவனிக்கவில்லை. ஆயின், அவனுடைய சங்கீதம் அகிற்புகை போலக் கம்பீரமாகக் கிளம்பி எல்லோர் உள்ளத்தையும் கரைத்தது, எல்லோர் இதயத்திலும் கரைந்தது.

''இந்தப் படுபாவிக்கு இப்படி ஒரு சக்தி! செடி கொடிதான் வளரும்? ஆளைப் பொசுக்கி விடுவான்'' என்றான் மதனகோபாலன். அவன் குரலில் பெருமை தொனித்தது.

''கச்சேரி செய்யமாட்டாரா?'' என்று அவன் குழுவைச் சார்ந்த ஒருவர் கேட்டார்.

''சரிதான் போங்கள். அவனுக்குத் துணிச்சல் போதாது. இப்பக்கூட அவன் தலை வெளியே தெரியாது என்று சொன்ன பிறகுதான் பாட ஒத்துக்கொண்டான்.''

''இந்தக் கணபதி பாட்டையே இறை வணக்கமாக வச்சுக்கலாமே?''

''அவன் இதைத்தான் பாடுவான் என் பதில்லை. நாடோடிப் பாட்டைக் கூட நெஞ்சு அள்ளப் பாடுவான்.''

மாணிக்கம் கண்ணைத் திறக்கவேயில்லை. தன்னைச் சுற்றி ஓர் உலகம் இருப்பதாகவே அவன் உணரவில்லை போலும்! 'வேலவரே உமைத் தேடி' என்று ஆரம்பித்தான்.

அங்கிருந்தவர் யாவருக்கும் வேலவர் மீது சினம் பொங்கியது. விடியும் வரை ஒரு பெண்ணைக் கவலையோடு, ஆசையோடு, ஏக்கத்தோடு காக்க வைக்கிறாரே! அவள் பூ உடல் எதற்காகும்? கந்தவேள் மீது கோபம் அலை அலையாக வந்தது. மாணிக்கத்தின் ஜீவன் நிரம்பிய சாரீரம் உருண்டு புரண்டு பாகாகக் கரைந்தது.

யாருக்கும் வேலையே ஓடவில்லை. ''அந்தச் சனியன் பிடித்தவனை நிறுத்துங்களடா! யாருக்கும் வேலை ஓட மாட்டேன் என்கிறது. அரிதாரம் காய்ந்தால் தொண்டை கட்டிவிடும்'' என்று மதனகோபாலன் இரைந்தான். ரசிக உள்ளம் இதத்தைச் சுவைத்தாலும், நிர்வாகப் பொறுப்பு அவனை விரட்டியது. ஆயினும், அவன் சொல்லி முடிப்பதற்குள் பாட்டுப் பட்டென்று நின்று விட்டது.

பாட்டு முடிவுக்கு வருவதற்குள்ளாகவே மாணிக்கத்தின் உள்ளுணர்வு சற்று அருகில் நளினி இருப்பதைக் காட்டிவிட்டது. தன் உணர்வையும் நம்பாமல் அவன் தன் பார்வையை இங்கும் அங்கும் செலுத்தினான். சற்றுத் தொலைவில் ஒரு தூண் மறைவில் அவள் நிற்பது தெரிந்தது. அவள் கண்கள் குளமாகத் தேங்கின. வெண்மையான அவள் கண்டத்தில் இதயம் தாளம் போடுவது தௌளெனத் தெரிந்தது.

மாணிக்கம் தம்பூரைச் சட்டென்று கீழே வைத்துவிட்டான்.

நளினி தன் இடத்திலிருந்து வெளியே வந்தாள். ''மிஸ்டர் மாணிக்கம்!'' என்று அவள் குரல் கொடுத்ததும் அவன் எழுந்து நின்றான். நளினியின் முகத்தைப் பாராமலே குனிந்த தலையுடன் ஏதோ தவிப்புடன் நின்றான்.

''மிஸ்டர் மாணிக்கம், பாட்டை ஏன் நிறுத்தி விட்டீர்கள்? ஏன் எழுந்து விட்டீர்கள்? ஒத்திகை இன்னும் ஐந்து நிமிஷத்தில் துவங்கப் போகிறதே!''

''இல்லை..ஏதோ ஒரு வேலை திடீரென்று நினைவுக்கு வந்தது.''

''நான் வேண்டுமானால் நாடகத்தில் சேரவில்லை. நீங்கள் பாடினால் போதும்'' என்றாள் நளினி. அவள் கண்கள் தைரியமாக அவனை நோக்கின. அவள் அதரங்கள் லேசாக நடுங்கிய அவளது உணர்ச்சி வயப்பாட்டை உணர்த்தின.

''ஏன் அப்படி?'' பேசத் தெரியாமல் குழறினான் மாணிக்கம்.

''நம் ஆராய்ச்சியில் நுண்ணறிவும் சூட்சுமமான உணர்வும் தேவை. உங்கள் குணம் எனக்குப் புரியாமல் இல்லை. நான் என்ன தவறு செய்தேன்? நல்ல கானத்தை ரசித்தது ஒரு குற்றமா? அதற்காக நீங்கள் பாதிப் பாட்டில் எழுந்து என்னைத் தண்டிக்க வேண்டுமா? அது தான் சொல்லிவிட்டேன். நான் விலகிக் கொள்கிறேன்'' என்று கூறிய நளினி, சட்டென்று முதுகைத் திருப்பிக் கொண்டு உட்புறம் சென்றாள்.

''மிஸ் நளினி, நான் பாடுகிறேன், இருங்கள்'' என்று கூறிக்கொண்டே மாணிக்கம் அவள் பின்னால் நடந்தான்.

ஒரு கணம் நின்று சாவதானமாக அவன் முகத்தை ஆராய்ந்தாள் நளினி.

மாணிக்கம் சிரித்துவிட்டான். ''நீங்கள் கோபித்துக் கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியாது'' என்றான், அசடு வழிய.

நளினி நாக்கைத் தன் கன்னத்தின் உட்புறம் முட்டுக் கொடுத்து ஒரு தினுசாகச் சிரித்தாள்.

மீனாட்சியும் பத்மினியும் எதிரே வந்து சேர்ந்தனர்.

''மாணிக்கம், இந்த ராமர் படத்தைப் பார்த்தாயா? என்ன அழகு!'' என்று பாராட்டி ஆர்ப்பரித்தாள் பத்மினி.

''அதன் எதிரேதான் பாடிக்கொண்டிருந்தேன்.''

''ராம நாடகக் கீர்த்தனை ஒன்றையும் பாடேன்'' என்றாள் பத்மினி.

உடனே பாடவும் அவன் சங்கோஜம் தடுத்தது. பாடாமல் இருக்கவும் அவனுக்கு யோசனையாக இருந்தது. அவன் உடனே நளினியைக் கவனித்தான். அவள் படத்தையே உற்று நோக்கினாள்.

"அந்த ராம சவுந்தரியம்" என்று ஆரம்பித்து அவன் பாடி முடித்தான். பிறகு பத்மினியைப் பார்த்து, "இதென்ன நாடகம்? எதற்கு? என்னை ஒரு கருவிக்கும் கேடாக வைத்திருக்கிறுர்கள். எனக்கு ஒன்றும் தெரியாது. பாடடா என்றால் பாடுகிறேன்; போடா என்றால் போகிறேன்" என்றான்.

"உனக்குத் தெரியாதாக்கும்? இது வேறே! நீ பிகு பண்ணுகிறாய். அதனால் தான் யாரும் காரணம் சொல்வதில்லை, கட்டளையிடுகிறார்கள்" என்றாள் பத்மினி.

"தெரியும் ஒரு தினுசாக. இருந்தாலும் என்னை எவ்வளவு அவலமான நிலையில் வைத்திருக்கிறார்கள் என்பதற்குச் சொன்னேன். பிகு எங்கே பண்ணுவது? பாடவும் பயமாக இருக்கிறது; பாட்டை நிறுத்தவும் நடுக்கமாக இருக்கிறது" என்றான் அவன், பூடகமாக. வாய் நிறையச் சிரித்துக் கொண்டே நளினியை நோக்கினான்.

மீனாட்சி மாணிக்கத்தின் அருகில் நின்றதும் அவன் நகர்ந்து கொண்டான்.

"நாங்கள் ஒரு சின்ன ஆஸ்பத்திரி கட்ட நினைத்திருக்கிறோம். அதற்கு நிதி வசூலிக்கவும் இந்த வட்டாரத்து மகளிர்களின் நன்மதிப்பைப் பெறவுந்தான் இந்த நிகழ்ச்சி" என்று விளக்கினாள் மீனாட்சி.

"மதனகோபாலனுக்கு இதில் என்ன சம்பந்தம்?"

"அவர் ஒரு நாடகம் தயாரித்து வைத்திருக்கிறார். அது மிகவும் சின்னது. எங்கள் ஓரங்க நாடகம் ஒன்று, குழந்தைகளின் நாட்டியம், கும்மி எல்லாம் சேர்ந்து ஒரு கதம்ப நிகழ்ச்சி, வரும் பணத்தில் பாதி பாதி."

"மதனகோபாலின் சங்கத்தோடு நீங்கள் சேரவேண்டுமா?" என்று கேட்டான் மாணிக்கம்.

"ஒப்பனை, ஒலிபெருக்கி, பந்தல், விளம்பரம் எல்லாம் தேவைப்படுகிறதே! அது கிடக்கட்டும், உன் தங்கை வந்திருக்கிறாளே, கவனிக்கவில்லையா?" என்று பத்மினி கேட்டாள், அலமேலுவைக் கையைப் பிடித்து இழுத்த வண்ணம்.

"இரும்புப் பட்டறையிலே ஈவிக்கு என்ன வேலை?" என்றான் மாணிக்கம் நிதானமாக. சலனமற்ற பார்வையுடன் தங்கையைப் பார்த்தான்.

அலமேலுவுக்குப் பயமாகி விட்டது. மீனாட்சியின் பின்னால் மறைந்து கொண்டாள்.

"அவள் அருமையாகப் பாடுகிறாள். நீ அனுமதி தந்தால் மேடைமீதேறி எங்கள் நிகழ்ச்சியில் பங்கு கொள்ளலாம்" என்றாள் பத்மினி.

"போதும், போதும். நீங்கள் பங்கு கொண்டிருப்பதே போதும்" என்றான் மாணிக்கம்.

ஒத்திகைக்கு மணி அடிக்கவும் அவர்கள் யாவரும் அங்கு விரைந்தனர். நளினி எப்படி நடிக்கிறாள் என்று பார்க்க வேண்டுமென்று அவனுக்கு ஆசைதான். ஆனால் தலை நிமிராமல் இருந்து விட்டான் மாணிக்கம்.

ஒத்திகை முடிந்து எல்லாரும் வீடு திரும்பினார்கள். பெண்கள் நால்வரும் தன் வீட்டுப் பக்கமாகச் செல்வதைப் பார்த்து மாணிக்கம் கடைத்தெருப் பக்கமாக நடந்து சென்றான்.

அவன் சென்ற பிறகு மீனாட்சி பத்மினியைப் பார்த்து, "மாணிக்கத்தின் அடக்கத்தைப் பாரேன். மதன கோபாலனின் துடுக்கையும் பார். இரண்டு பேரும் ஒரே இடத்தில் பிறந்து வளர்ந்தவர்கள்தாம்" என்றாள்.

"மதனகோபாலனின் சகஜபாவம் சில சமயம் பயமாகக் கூட இருக்கிறது. நம் தோளிலே அவன் கை விழுமோ, எங்கே தான் விழுமோ என்று.."

பத்மினி மேலே பேசி முடிப்பதற்குள் நளினி அவளை நறுக்கென்று கிள்ளி விட்டாள். அவர்கள் பேச்சு அத்தனையும் செவிசாய்த்துக் கொண்டே அலமேலுவும் வருகிறாள் என்பது அப்போதுதான் அவள் நினைவுக்கு வந்தது.

"அலமேலு, நீ ஒன்றும் தப்பாக நினைக்காதே. வேடிக்கைக்குச் சொன்னோம்" என்றாள் மீனாட்சி.

"அண்ணன் சங்கோஜம் உலகமறிந்த ரகசியம்" என்று அலமேலு அந்த வியவகாரத்தை ஓங்க விடாமல் முற்றுப் புள்ளி வைத்து விட்டாள்.

மூன்று பெண்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மதனகோபாலன் பேச்சே எடுக்காமல் அவள் பேசி முடித்த சமத்காரம் அவர்களை வியக்க வைத்தது. தான் மணக்கப் போகிறவனின் துர்க்குணம் தெரிந்திருந்தும் அதனால் அவள் அவன் மீது வைத்திருக்கும் மதிப்பைக் குறைக்கவில்லை போலும்!

"அக்கா, நீங்க என் கூட வரீங்களா? அத்தையைப் பார்த்துவிட்டு வருவோம்" என்று அலமேலு மெதுவாக மீனாட்சியைக் கேட்டாள்.

"ஓ, வருகிறோமே!" என்று மூவரும் ஒரே மூச்சில் பதில் அளித்தார்கள். சற்றுமுன் அசட்டுத்தனமாகப் பேசியதற்குப் பிராயச்சித்தம் செய்ய விரும்பினார்கள் போலும்!

அவர்கள் சென்றபோது பங்காரு தோத்திரப் பாடல் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தாள். "வாங்க,

அம்மா!'' என்று அவர்களை வரவேற்ருள்.

மீனுட்சிதான் முதலில் பேச ஆரம்பித்தாள். ''நாங்கள் நாடகம் போடப் போகிருேமே, தெரியுமில்லே?'' என்று கேட்டாள்.

''அதே தான் இங்கே பேச்சு, குழாயடியிலே, கோவிலிலே, கடைத் தெருவிலே.''

''ஆணும் பெண்ணும் சேர்ந்துக்கிட்டு நடிக்கிருங்கன்னு பழிக்கிருங்களா?'' என்று கேட்டாள் பத்மினி.

''இந்தப் பக்கத்துக்கு அது புதுசு. அதனுலே சில பேர் ..''

''அதுக்குத்தான் உங்கள் உதவியை நாடி வந்திருக்கிருேம். ஆண்கள் நாடகம் வேறே, எங்கள் நாடகம் வேறே. ஒரே இடத்தில் நடக்கிறது, அவ்வளவு தான். ஆனுல் அவர்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமே இல்லே. உங்களைப் போல உள்ளவங்க வந்து துணை இருந்தால் யாரும் வம்பு பேச மாட்டாங்க'' என்ருள் மீனுட்சி.

பங்காரு சற்று யோசித்தாள். பிறகு தெளிந்த முகத்துடன், ''அதற்கென்ன, வம்புக்காரிங்க ரெண்டு பேரை அழைச்சுக் கிட்டு நானே வரேன்'' என்ருள்.

''உடம்பு எப்படி இருக்குது?'' என்று மெதுவாக இடையில் விசாரித்தாள் அலமேலு.

''தினமும் கோளாறுதான்'' என்ருள் பங்காரு, விரக்தியாக.

''நம்ப டாக்டரிடமாவது காட்டலாமே?'' என்ருள் அலமேலு.

பங்காரு ஏதும் பதில் சொல்வதற்குள் மதனகோபாலன் அங்கு வந்தான். பத்மினி முதலியவர்கள் இருக்குமிடத்தில் போய் நின்று கொண்டான்.

பங்காரு எழுந்து ஜாடையாக அலமேலுவைத் தட்டி அழைத்துப் பூஜையறைக்குள் கொண்டு நிறுத்தினுள். ''அலமேலு, பூஜைப் பாத்திரங்களைத் துடைத்து வை, அம்மா!'' என்று அவளை அங்கேயே அமர்த்திவிட்டு வெளியே வந்தாள்.

ஏற்கனவே தேய்த்துத் துடைத்துப் பளபளவென்று மின்னிய பூஜைச் சாமான்களை இன்னமும் என்ன துடைப்பது என்று தெரியாமல் அலமேலு விழித்தாள். அவள் மெள்ள வெளியே எட்டிப் பார்த்தபோது மதனகோபாலனின் முகத்தைப் பங்காரு பீதியுடன் பார்ப்பதும், மகன் தாயைக் கோபத்துடன் நோக்குவதும் தெரிந்தன. 'ஓகோ! அத்தைக்கு மாமியார் வியாதி நன்ருகப் பிடித்துவிட்டதா? கணவனுக வரவிருக்கும் மனிதர்முன் நிற்கக்கூடாது என்று நம்மை மறைவில் தள்ளி விட்டாள் போலும்! அவரோ இப்படிக் கட்டுப் பெட்டியாக இருக்கிருளே என்று கோபிக்கிருர்'' என்று தனக்குள் தெளிந்து கொண்டாள். ஆனுலும் பங்காரு அழைத்தபின் தான் வெளியே வந்தாள்.

மீனுட்சி முதலியவர்கள் அலமேலுவைக் கேலி செய்தனர். ''அவரைப் பார்ப்பதற்காக மறைவாகப் போய் ஒளிந்துகொண்டாயா?''

''கழுத்திலே தாலி ஏறும் முன்னே ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்?'' என்ருள் பங்காரு.

''அப்புறம் என்ன இருக்கிறது வேடிக்கை? இப்பத்தான் மறைஞ்சு இருந்து பார்ப்பாங்கு'' என்ருள் பத்மினி.

''கன்னிகா பரமேசுவரீ!'' என்ருள் பங்காரு.

நான்கு பெண்களும் தம் தம் வீடுகளுக்குக் கிளம்பி விட்டார்கள்.

அலமேலு தன் வீட்டுக்குள் நுழைவதற்கும் கை வண்டியில் மூட்டைகள் வருவதற்கும் சரியாக இருந்தது. ஆட்கள் இரண்டு மூட்டை துவரம்பருப்புடன் உள்ளே வந்தனர். அலமேலு வேகமாகச் சென்று கூடத்தைப் பெருக்கி இடத்தை அவர்களுக்குச் சுட்டினுள். கந்தசாமி செட்டியும் வந்து சேர்ந்தார்.

அலமேலுவும் தனபாக்கியமும் படியும் முறமும் கொண்டு வந்து தயாராக நின்றனர். அப்போதுதான் மாணிக்கம் வெளியிலிருந்து வந்தான். துவரம் பருப்பைத் தரையில் கொட்டி அளந்தனர். மாணிக்கம் சாக்குப் பையைப் பிடிக்கப் போனுன்.

''போடா, துப்புக் கெட்டவனே! சாக்கைப் பிடிக்கத் தெரியுமா உனக்கு? ஊரெல்லாம் சுத்திப்பிட்டுக் கூத்தடிச்சிட்டு வந்தால், இது என்ன விடுதியா? ஆறு மணிக்குள்ளே வந்தால் உனக்கும் உன் தம்பிக்கும் இங்கே சோறு. இல்லையோ போங்க. சீமெண்ணெய் சும்மாவா கிடைக்குது, விளக்கை ஏற்றி வச்சுக்கிட்டுக் காத்துக் கிடக்க?'' என்று இரைந்தார் செட்டியார்.

அவர் பேசி முடிக்கும் வரை இருந்துவிட்டு மாணிக்கம் தன் அறைக்குள் புகுந்து விட்டான்.

''எவ்வளவு அலட்சியம் பாரு! பேசாமல் போருன்'' என்ருர் தந்தை.

மூட்டைக்காரர் முன் பேச விரும்பாமல் தனபாக்கியம் வாளா இருந்தாள். வந்தவர்கள் கூலியைப் பெற்றுக் கொண்டு போன பிறகு அவள் தன் கணவனைக் கடிந்தாள். ''பேசினுல் 'பேசருன் கழுதை'ங்கிறீங்க. பேசாட்டிப் பேசலேங்கிறீங்க. பிள்ளைங்க என்ன செய்வாங்க?'' என்ருள்.

Statement about ownership and other particulars about newspaper
KALAIMAGAL
Form IV

Place of Publication	—	Madras
Printer's Name	—	M.L.J. Press Private Ltd.
Nationality	—	—
Address	—	55/56, Mundakakkanni Amman Koil Street, Mylapore, Madras-4
Publisher's Name	—	R. Narayanaswamy
Nationality	—	Indian
Address	—	4, Warren Road, Mylapore, Madras-4
Editor's Name	—	R. Narayanaswamy
Nationality	—	Indian
Address	—	4, Warren Road, Mylapore, Madras-4
Names and addresses of individuals who own the newspaper and partners or share-holders holding more than one percent of the total capital	—	R. Narayanaswamy, Malathi Ramaratnam 4, Warren Road, Madras

I, R. Narayanaswamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

R. NARAYANASWAMY
Dated 1-3-77 Signature of Publisher

"ஓகோ, அவ்வளவுக்கு வந்துட்டியா நீ?" என்றார் செட்டியார்.

தாயை அடித்து விடுவாரோ என்ற பயத்தில் எழுந்து உள்ளே கூடத்துக்கு வந்தான் மாணிக்கம். ரேழியில் அவன் காலடியில் சிறு மூட்டை ஒன்று இடறியது. அதைக் கொண்டு கொடுக்கும் பாவனையில் கூடத்துக்குச் சென்றான்.

"அப்போ, நீங்க சண்டை போட்டுப் போட்டுக் கணக்கைத் தவற விட்டு விடுவீங்க" என்றாள் அலமேலு.

"நானா மறப்பேன்? விரலை மடக்கி வச்சிருக்கேன் பாரு. இருபத்தஞ்சு ஆச்சு. அள, அள."

"எலெக்ட்ரிக் விளக்கு போட்டுடுங்க, அப்பா! நினைச்சாப் போட்டுக்கலாம், நினைச்சா அவிச்சிக்கலாம்" என்றாள் அலமேலு, சிரித்துக் கொண்டே.

"ஆமாம்! அப்புறம் உங்க அம்மா கரண்டுலேயே இலை தைக்கிறேன் என்பா" என்றார் கந்தசாமி செட்டி.

அந்த ஹாஸ்யத்தை ரசித்துப் பெற்றோரும் மகளும் சிரித்தனர்.

அப்போது தன் கையிலுள்ள மூட்டையைக் காட்டி, "அலமேலு, இந்தா. ஒரு சின்னப் பருப்பு மூட்டை விட்டுப் போச்சே!" என்று கூறி அவளிடம் அதை நீட்டினான் மாணிக்கம்.

"பருப்பு மூட்டை—ஹக்!" என்று தாழ்ந்த குரலில் ஏளனமாகச் சிரித்தார் தந்தை.

மாணிக்கம் தன் கையிலிருந்த மூட்டையைத் திறந்து பார்த்தான். அது நிறையத் துவரை நிறத்தில் சரள் கற்கள் இருந்தன. அவன் நெற்றி சுருங்கியது.

அலமேலு அவன் முகத்தைப் பார்த்து விட்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

"பொண்ணு! சின்ன மூட்டைப் பருப்பை இரண்டு படி போடு" என்றார் செட்டியார், பரிகாசமாக.

அலமேலு இரண்டு படி கற்களை அளந்து பருப்புடன் போட்டுக் கலந்து விட்டாள்.

மாணிக்கம் தன் தாயின் அருகில் போய் நின்றான். "என்ன, அம்மா, இது?" என்று தாழ்வான குரலில் கேட்டான்.

யாரும் அவனுக்குப் பதில் சொல்லவில்லை. ஏற்பாடாகக் கல்லை அளப்பதும் பருப்பில் கலப்பதுமாக இருந்தனர்.

மாணிக்கம் தன் அறைக்கே மீண்டான். கந்தசாமி செட்டி சாப்பாடு முடித்துக் கொண்டு கடைக்குச் சென்றார்.

தனபாக்கியம் மகனைத் தேடிக் கொண்டு வந்தாள். தூங்குவது போல் பாசாங்கு செய்தான் அவன். "முத்து, எழுந்துவா. சாப்பிடலையே நீ?" என்றாள் தாய்.

"எனக்குச் சாப்பாடு வேண்டாம்."

"ஏன்?"

"எத்தனை நாளாக இப்படிப் பருப்புக் கலப்படம் நடக்கிறது?"

தனபாக்கியத்தின் முகம் மலர்ந்தது. "இதுக்காகவா சாப்பிடாமல் இருக்கிறே, முத்து? அது என்ன கலப்படம், ராஜா? கல்லுதானே? நேம்பி எடுத்தால் போய் விடுகிறது. விஷமா கலந்தோம், தம்பி?" என்றாள்.

"நீயா அம்மா இப்படிப் பேசறே? அரிச்சந்திரன் கதையைக் கதறக் கதறச் சொல்லி என்னைச் சத்தியமாக இருக்கணும்னு சொல்லிக் கொடுத்த நீயாம்மா இப்படிப் பேசறே? அதுதான் உன்னை நம்பாமல் இலைக்கணக்குக் கேட்கிறாரு." மாணிக்கத்தின் முகம் அதிருப்தியில் விகாரமாகத் தென்பட்டது.

"கட்டுப்படி ஆகாது கண்ணு. அப்படியே பவுன் போலக் கொடுத்தால் ஒருத்தர் கண்போல இருக்காது. கறந்த பாலை அப்படியே கொடுக்கிறாங்களா யாராவது? தண்ணி கலக்கலேன்னா காம்பு வெடிக்கும் மாட்டுக்கு" என்று விவரமாக விளக்கினாள் தாய்.

மாணிக்கம் வயிற்றைப் பிசைந்தான். குமட்டிக்கொண்டு வந்தது அவனுக்கு.

(தொடரும்)

7. திருப்தியும் அதிருப்தியும்

டேப் ரிகார்டரில் நாகசுர இசையில் மாயாமாளவ கௌள ராகம் மிதந்து வந்தது. அதைக் கேட்டுக் கொண்டு நின்ருன் மாணிக்கம். தன் கைப்பையிலிருந்து புல்லாங்குழல் ஒன்றை எடுத்து, அதில் அதே ராகத்தை வாசித்துப் பார்த்தான். மறுபடியும் டேப்ரிகார்டர் சங்கீதத்தைக் கவனித்தான். டேப் முழுவதும் சரியாக வேலை செய்கிறதா என்று பார்த்து விட்டு, செருப்பைக் கழற்றி அறையிலேயே வைத்து விட்டு, ஆராய்ச்சித் தோட்டத்துக்குள் நுழைந்தான். விடியற்காலை இசையை ஒலி பெருக்கியபோது ஏதோ சந்தேகம் அவனுக்கு. ஒரு பக்கம் ஒலி பெருக்கி கேட்கவில்லையா, அல்லது டேப்பில் ஏதேனும் கோளாரு என்று நினைத்தான் அவன். கண்ணுடி மாளிகையில் இருந்த தொட்டிகளைப் பார்த்தான். காசித் தும்பையில் நல்ல அபிவிருத்தி தெரிந்தது. ஒரே ஒரு பூவைப் பறித்து எடுத்துக் கொண்டு சென்று அவன் தன் அலுவலக அறையில் அமர்ந்து குறிப்பு எடுத்தான். நளினி அந்த அறையில் நுழைவது தெரிந்து திரும்பி நோக்கினுன். ''வீணைப் பாத்தியைக் கவனிக்காமல் விட்டு விட்டீர்களா?'' என்று கேட்டான்.

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் வீணையையே பயிர் செய்வதுபோல இருக்கிறது'' என்று கூறின நளினி கலுக்கென்று சிரித்தாள்.

மாணிக்கம் அதை ரசித்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. ''நேற்றுக் காலை அந்தப் பாத்திக்கு வீணை வாசித்தீர்களா?'' என்று கேட்டான்.

''ஓ!''

''இன்று காலை ஏன் வரவில்லை?''

''ஒலி பெருக்கி பழுதாகி விட்டது. சரி செய்ய வேண்டும்.''

''என்னிடம் சொல்ல வேண்டாமா?''

நளினி பேசாமல் சிரித்தாள். தான் செய்த பிழையை அவன் கண்டிக்கிருன் என்று அவள் புரிந்து கொள்ளவில்லை போலும்! இந்த மட்டும் அதிகார பூர்வமாகத் தன்னுடன் பேசுகிருனே, ஒரே காரியத்தில் இரண்டு பேரும் ஈடுபட்டிருப்பதை ஒத்துக் கொண்டிருக்கிருனே என்று மகிழ்ந்தாள் அவள்.

''தப்புத்தான். அப்பாவிடம் சொல்ல வேண்டாம். நாமே சரி செய்வோம்.''

''அரை மணி, முக்கால் மணி சங்கீதத்தைப் புகட்டுகிருேம். அதற்கு வேண்டிய பாதுகாப்பு நம்மால் செய்து கொள்ள முடியாது. உங்கள்மீது தப்பில்லை, நான் கவனித்திருக்க வேண்டும்'' என்ருன் மாணிக்கம்.



''என்ன 'நீங்கள், நாங்கள்?' பத்மினியைக் கூப்பிடுவதுபோல என்னையும் 'நீ' என்று கூப்பிடக் கூடாதா?'' என்று கேட்டாள் நளினி.

''கூடாது; கூடவே கூடாது!'' என்று கூறினுன் மாணிக்கம்.

வேடிக்கை செய்கிருன் என்று நளினியும் தமாஷாகப் பேச நினைத்து அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். ஆனுல் அவன் கடுமையான முகத்துடன் காசித் தும்பை மலரைப் பார்த்துப் பார்த்து எழுத ஆரம்பித்து விட்டான்.

நளினி பெருமூச்சுடன் கிளம்பி வீட்டுக்குள் போய்ப் புகுந்தாள்.

அவள் சென்ற பிறகு அவன் மீண்டும் தோட்டத்துக்குள் சென்று மறைந்தான். சுற்றுப் புறத்தில் பறவையினங்களின் தவிர்க்கமுடியாத ஒலிகளைத் தவிர, வேறு ஓசைகளே வரமுடியாத தொலைவில் இருந்தது, அவர்கள் தோட்டம். வெகு

ஜாக்கிரத்தையுடன் அந்த அந்தப் பயிர்களையும் காப்பாற்றி அங்கு ஒலியைப் பாய்ச்சினுர்கள்.

மாணிக்கம் வரப்புமீது நடந்து அங்கு வெகு கோடியில் உள்ள நெற்பயிரைக் கவனிக்கச் சென்ருன். கண்ணுக்கு அபிவிருத்தி தெரிந்தது. ஆனல் அறுவடை செய்யும்போதுதான் குணங்குறைகள் புரியும். அவன் மூலே முடுக்குகளெல்லாம் சுற்றிவிட்டு, ஆங்காங்குள்ள ஒலி பெருக்கிகள் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டுத் திரும்பும்போது வெயில் ஏறிவிட்டது.

மீண்டும் தன் அலுவலக அறையில் காகிதங்களை எடுத்துக் கட்டங்கள் போட்டுக் குறிப்பு அட்டைகள் தயாரிப்பதில் முனேந்தான் அவன்.

அவனுடைய பேராசிரியர் அவனே அழைத்தார்; ''இன்றைக்கு ஒரு வகுப்பு நீ எடுக்கிருயா?'' என்ருர்.

மாணிக்கம் தவித்தான். அவனுக்குத் தொண்டை வறண்டது. அவன் பரிதாபமாகத் தன் ஆசிரியரைப் பார்த்தான்.

அவர் அவன் முகம் வெளிறுவதைப் பார்த்து லேசாகச் சிரித்தார். ''அங்கே இருக்கிறவனுக்கெல்லாம் ஒன்றுமே தெரியாது. அவர்கள்முன் பேச என்ன கஷ்டம்?'' என்ருர்.

மாணிக்கம் தன் மோவாய்க் கட்டையைத் தடவிக்கொண்டு எங்கேயோ பார்த்தான்.

''சரி, சரி, என்னவோ செய். எப்படியும் நான் இன்றைக்கு வேறு வகுப்பு எடுக்கவேண்டும்.''

அந்த அறையை விட்டு வெளியே வந்ததும் அவர் தம் தலையில் அடித்துக் கொண்டார்.

நளினி தன் தகப்பனரின் செய்கையைக் காண நேர்ந்தது. அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனல் மாணிக்கத்தின்மீது அநுதாபம் சுரந்தது.

மாணிக்கம் உடனே அமர்ந்து, அன்று தான் நடத்தவேண்டிய பாடத்துக்கு வேண்டியதை எழுத ஆரம்பித்தான். வெகுநேரம் கழித்து அவன் கல்லூரியை நோக்கி நடந்து செல்வதை நளினி கவனித்தாள். பத்மினி வீட்டுக்குப் போகும் சாக்கில் தானும் அவன் கூடவே நடந்தாள். மாணிக்கம் அதைப் பாராதவன் போல வேகமாக நடந்தான்.

''கங்கிராசுலேஷன்ஸ்!'' என்று குரல் கொடுத்தாள் நளினி.

வேறு வழியின்றி நின்ருன் மாணிக்கம்.

நளினி அவன் பக்கத்தில் சற்று எட்டி நடந்தபடியே சிரித்துப் பாராட்டினுள்.

''எதற்காக?''

''வகுப்பு எடுக்கப் போறீங்களாமே? இது முதல் தடவை அல்லவா? அதற்குத் தான் வாழ்த்த வந்தேன்'' என்ருள் நளினி.

மாணிக்கத்தின் தொண்டையில் ஓர் உருளை புரண்டு புரண்டு அடைத்தது.

''முதல் நாள் நாடகத்தில் நடிக்கப் போனபோது எப்படி இருந்தது தெரியுமா?'' மேலும் பேசலானுள் நளினி: ''எதிரே இருக்கும் கூட்டம் மும்மடங்காகத் தெரிந்தது. கால் இரண்டும் பஞ்சாகத் துவண்டன. நா மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டு சகாராப் பாலைவனம் மாதிரி வறண்டு. . . .''

''இப்போதுதான் நடிகை திலகமாக மாறிவிட்டீர்கள் போலிருக்கிறதே?''

''எதற்குச் சொல்ல வந்தேன் என்ருல் உங்களுக்கும் அப்படித்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். நீங்க யார் முகத்தையும் பார்க்காதீங்க. நிமிர்ந்து, எல்லாத் தலைக்கும் ஓர் அங்குலம் மேலே பார்வையைப் பரவ விடுங்க. நீங்க மாணிக்கம் என்கிறதையே மறந்து விடுங்க. ஒரு பேராசிரியராக நடிப்பதாக நினைத்துப் பேசுங்க . . .''

''நன்றி. ஆனல் நான் பேசப்போவதே இல்லை. கட்டுரை எழுதி வைத்திருக்கிறேன். அதைப் படித்துவிடுவேன்.''

''வேண்டாம். வேண்டுமென்றே ஒவ்வொருத்தராகச் சந்தேகம் கேட்பார்கள். புதிய ஆசிரியர் என்ருல் பல்லைப் பிடித்துப் பார்ப்பார்கள். நீங்களே எழுதிய கட்டுரைதானே? நான்கு தடவை நன்ருகப் படித்துக்கொண்டு மடமடவென்று ஒப்பித்துவிட்டு வந்து விடுங்கள்'' என்ருள் நளினி.

மாணிக்கம் அவளுக்குப் பதில் சொல்லவில்லை. 'இவள் எதற்கு இதிலெல்லாம் தலையிடவேண்டும்? ஆசிரியர் பெண் என்ருல் இவளுக்கு எல்லா உரிமையும் உண்டோ? இன்னமும், இவள்தான் புத்திமதி கூறினதாகப் பத்மினியிடம் வேறு பெருமையடித்துக் கொள்வாள். அவள் வேறு கேலி செய்வாள். இப்படியெல்லாம் நம் தலைவிதி வந்துவிட்டதே? எதற்காகக் கல்லூரிப் படிப்புப் படித்தோம்? நம் காலனியோடு கிடக்காமல் போனுமே!' என்று அவன் மனம் சங்கடப்பட்டது.

நளினி பத்மினி வீட்டுப் பக்கமாக நடந்து போய்விட்டாள்.

மாணிக்கம் கல்லூரிக்குச் சென்ருன். கல்லூரிப் படிக்கட்டு ஏறியபோது அவன் உருவம் எதிரே இருந்த நூல் நிலையத்துக் கண்ணுடியில் தெரிந்தது. அவன் தன் முகத்தைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டான். ஒரு தம்ளர் குளிர்ந்த நீரைக் குடித்தான். 'பேராசிரியர் இப்படியெல்லாம் மாட்டிவிடுவார் என்பது எப்படித் தெரியும்? ஒரு 'டை'யாவது கட்டிக் கொண்டு

வந்திருக்கலாம். கழுத்தை அணைத்த மாதிரி ஆதரவாக இருந்திருக்கும்' என்று நினைத்துக்கொண்டான்.

அவன் எடுக்க வேண்டிய வகுப்பு அறை முதலிலேயே இருந்தது. 'இன்னும் கொஞ்ச தூரம் நடந்து போயிருந்தால் கொஞ்சம் சிந்தனையைச் சீர் செய்து கொள்ளலாம். அதற்குள் வாசற்படி வந்துவிட்டதே!' மாணிக்கம் உள்ளே நுழைந்தான்.

மாணவர்கள் எழுந்து நின்றனர். அவன் அவர்களைப் பார்த்து முறுவல் பூத்துவிட்டுத் தன் மேஜையருகில் போய் நின்றான். மாணவர்களை அமரச் செய்தான். வகுப்பே ஒரு முறை எழும்பி அந்தரத்தில் ஆடிவிட்டு இறங்கின மாதிரி இருந்தது.

''இன்றைப் பாடம்....'' என்று அவன் ஆரம்பித்தான். கையிலுள்ள காகிதத்தை எடுத்துப் பார்த்துப் படிக்க நினைத்தான். ஆனால் கை நடுங்கியது. பேசாமல் அன்றைப் பாடத்தைப் பற்றி ஓர் அறிமுகம் தந்துவிடலாம், சற்றுச் சமாளித்துக்கொண்டு படிக்கலாம் என்று நினைத்தான். பேச ஆரம்பித்தான். நளினி சொல்லிக் கொடுத்த அறிவுரை நினைவுக்கு வந்தது. பொதுவாக மாணவர்கள்மீது பார்வையைப் பரவவிட்டுப் பேச ஆரம்பித்தான். அவர்களையே பார்த்துக்கொண்டிருப்பது கஷ்டமாக இருந்தபோது, கரும்பலகையில் விளக்கப் படங்கள் வரைந்து காட்டினான். முதுகில் குறுகுறுத்ததால் நேரே பார்த்துப் பேசினான்.

ஒரு மணி நேரமும் பேசினான். வகுப்பு மணி ஒலித்ததும் அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. வகுப்புக் கலைந்தது.

அவன் கிளம்பி விடுவிடென்று வெளியேறிவிட்டான். ஒரு மாணவன் அவன் பின்னாடியே ஓடிவந்தான். ''மிகவும் அருமையான லெக்சர், சார். தாவர இயல் படிப்பதுபோலவே இல்லை. நாவல் படிப்பதுபோலச் சுவையாக இருந்தது. இந்த இயலில் இவ்வளவு சுவை இருக்கிறது என்றே எனக்கு இதுவரை தெரியவில்லை'' என்றான்.

''எதைப் படிக்கிறோமோ அதில் நாட்டம் இருந்தால் சுவை தானாக உண்டாகும்'' என்று பதில் தந்துவிட்டு மாணிக்கம் நடந்தான்.

அவன் கல்லூரியை விட்டுத் தோட்டத்தில் வேகமாக நடை போட்டு வெளியேறும்போது பத்மினியின் குரல் அவனை நிறுத்தியது. ''மாணிக்கம், அப்படி என்ன தலை போகிற அவசரம்?'' என்று கேட்டுக்கொண்டே மூச்சு இரைக்க ஓடிவந்தாள். நளினி சற்றுத் தொலைவில் கல்லூரிக் கட்டடத்தைப் பார்த்தபடி நின்றாள்.

''என்ன, மாணிக்கம்? நீ இங்கேயிருந்தும் சீக்கிரம் கிளம்பிவிடுகிறாயாம், ஒத்திகைக்கும் போவதில்லையாம். நாளைக்கு நாடக நாள். இன்று கடைசி ஒத்திகைக்குக்கூடப் போகவேண்டாமா?'' என்று கடிந்தாள் பத்மினி.

''யார் சொன்னார்கள் அப்படி?''

''ஒரு சிட்டுக்குருவி என் செவியின் அருகில் அமர்ந்து பாடிப் பாடிக் கூவியது, போயேன்.''

''சிட்டுக் குருவிகளுக்கு இடங் கொடுக்கக் கூடாது, பத்மினி. நம் வீட்டு நடுக்கூடத்தில் கூடு கட்டிவிடும்'' என்றான் மாணிக்கம். நளினி திரும்பாமல் கல்லூரிக் கட்டடத்தையே வெறித்தாள்.

''பேச்சை மாற்றாதே, மாணிக்கம். சிட்டுக் குருவிகளை அடக்க எனக்குத் தெரியும். தலை மறைத்துக்கொள்கிற இந்த வியவகாரம் என்னவென்று கேட்கிறேன் நான்.''

''பத்மினி, நீ ஒரு பேராசிரியர் மனைவியாகப் போவதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் நீயே பிரம்பைப் பிடிப்பாய் என்று தெரியாது.''

''யார் சொன்னார்கள் அந்தத் திருமணச் செய்தியை?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் பத்மினி.

''ஒரு சிட்டுக் குருவி....''

''காப்பி அடித்தால் என்ன கிடைக்கும் தெரியுமோ இல்லையோ?''

''வாத்தியாரம்மா என்னை வீட்டுக்கு அனுப்பிவிடுவாய். நானும் ஆனந்தமாக ஓடிவிடுவேன்.''

''உன்னை யார் விட்டார்கள்? சரி, சேதி சொன்னது யார்?''

''ஒரு சிட்டுக்குருவி.''

''சரி, நீ சொல்ல வேண்டாம். வா, காரில் ஏறு. ஒத்திகைக்குப் போவோம்.''

''பத்மினி, சில பேர் கட்டட இன்ஜினியர்களாக ஆகிவிடுவார்கள்போல இருக்கிறதே! அப்புறம் என் ஆராய்ச்சிக்குத் துணை?'' என்றான் மாணிக்கம், உரக்க நளினி செவியில் விழும்படி.

நளினி சிரித்துக்கொண்டே அவர்களை நோக்கி வந்தாள். ''என்ன ராகம் பாடினால் கட்டடம் தானாக எழும்பும் என்று யோசித்துக்கொண்டிருந்தேன்'' என்றாள், கலகலப்பாக.

''நம் ஆராய்ச்சி தாவரத்தோடு நிற்கட்டுமே!'' என்றான் மாணிக்கம்.

நளினியும் அவனும் நேருக்கு நேர் பார்த்துக்கொண்டனர். பிறகு இரு ஜோடிக் கண்களும் பிரியா விடை பெற்றுப் பிரிந்தன.

''மாணிக்கம், நீ ஏன் எப்போதும் இப்படிக் கலகலப்பாகப் பேசமாட்டேன் என்கிறாய்? உங்கள் காலனிக்குள் நுழைந்தால் ஆட்டுக்குட்டி மாதிரி எட்டாத் தூரத்திலே ஏறி நிற்கிறாய்'' என்றாள் பத்மினி.

"ஆட்டுக்குட்டிக்கு எவ்வளவு மூளையோ அதன்படிதானே அது நடக்கும்? மிஸ் நளினி, ஆட்டுக்குட்டிக்கு எவ்வளவு மூளை?" என்று கேட்டான் மாணிக்கம்.

"என் ஆராய்ச்சியைத் தாவரத்தோடு நிறுத்திக்கொள்ளச் சொன்னீர்கள்" என்றாள் நளினி. மூவரும் சிரித்துவிட்டனர்.

மூவரும் காரில் ஏறி அமர்ந்ததும் பத்மினி காரைப் பிரின்சிபால் வீட்டுக்குச் செலுத்தினாள்.

"ஒத்திகை இல்லையா?" என்று கேட்டான் மாணிக்கம்.

"காபி, டிபன் சாப்பிட்டுப் போவோம்" என்றாள் பத்மினி. வண்டியை நிறுத்திவிட்டு அவள் முன்னால் படியேறி வீட்டுக்குப் போனாள். "அப்பா, மாணிக்கமும் நளினியும் வந்திருக்கிறார்கள்" என்று குரல் கொடுத்துக் கொண்டே உள்ளே விரைந்தாள்.

நளினியும் மாணிக்கமும் படியேறி வந்தனர்.

"வகுப்புப் பிரமாதமாமே?" என்று தாழ்ந்த குரலில் கேட்டாள் நளினி.

"திருப்தியாகத்தான் இருந்தது" என்றான் மாணிக்கம்.

"தெரிந்து கொள்வதற்காகவே கல்லூரியில் வந்து காத்திருந்தேன்" என்றாள் நளினி.

"வெற்றிக்குக் காரணம் நீங்கள்தாம். நேரே பேசினேன்."

நன்றிப் பெருக்கோடு அவள் மையிட்ட கண் அவன் முகத்தை நாடியது. அவன் தலை குனிந்தான். இவ்வளவு தோழமையுடன் வந்த அவளுடைய கையை நன்றியுடன் குலுக்க வேண்டும்போல் இருந்தது அவனுக்கு. ஆனால் தைரியம் வரவில்லை.

"உள்ளே வாருங்கள்" என்று பத்மினி சாப்பாட்டு அறையிலிருந்து குரல் கொடுத்தாள். பத்மினியின் தந்தையார் அவர்கள் இருவரையும் சாப்பாட்டு அறைக்கு அழைத்துச் சென்றார்.

நடுவில் சாப்பாட்டு மேஜை இருந்தது. ஆனால் சுவர் ஓரமாகப் போட்டிருந்த சோபா அருகில் சிறிய அலங்கார மேஜையில் பலகாரங்கள் இருந்தன. மாணிக்கத்தையும் நளினியையும் ஜன்னல் ஓரமாக அமர்த்திவிட்டுப் பத்மினி தன் தகப்பனார் அருகில் அமர்ந்தாள்.

நால்வரும் பல விஷயங்களைப் பேசிக் கொண்டே சிற்றுண்டியை அருந்தினார்கள். பத்மினியின் தாய் அவர்களை உபசரித்தவண்ணம் இருந்தாள். வெள்ளிக் கெட்டிலிலிருந்து காபியை ஊற்றித் தருவதைக் கவனித்தான் மாணிக்கம். 'நமக்கும் இந்த இடத்துக்கும் என்ன பொருத்தம் இருக்கிறது? இவர்களுடன் இனி அதிகம் பழகக்கூடாது' என்று அவன் மூளை எச்சரித்தது.

"இவர்கள் இரண்டு பேரும் நாடகத்துக்குப் பின்னணி பாடுகிறார்கள்" என்றாள் பத்மினி.

"பாடுங்கள், கேட்போம்" என்று கட்டளையிட்டார் முதல்வர். பத்மினி தன் பெரிய டம்பப் பைக்குள் ஏதோ துழாவினாள்.

"இத்தனை நாளாக என்னுடன் சொல்லாமல் எங்கே நடந்தாய் நீ சிங்கி?" என்று மாணிக்கம் அவளைப் பார்த்து முறுவலித்துவிட்டு, "என்னிடம் சொல்லாமல் எங்கே நடந்தாய் நீ சிங்கி..?" என்று மீண்டும் ஆரம்பித்தான்.

"கொத்தார் குழலார்க்கு வித்தாரமாகக் குறி சொல்லப் போனேனடா, சிங்கா" என்று நளினி மெதுவாகப் பாடினாள்.

"பார்க்கில் அதிசயந்தோணுது, சொல்லப் பயமா இருக்குதடி, சிங்கி" என்று மாணிக்கம் கணீரென்று எடுத்தான்.

"ஆர்க்கும் பயமில்லை, தோணின காரியம் அஞ்சாமற் சொல்லடா, சிங்கா" என்று நளினியும் முழு மனத்துடன் பாடினாள்.

பத்மினி மீண்டும் பையில் துழாவிவிட்டு எழுந்தாள். "ஒத்திகைக்கு நாழிகையாகிறது. இனியும் போகாவிட்டால் நன்றாக இராது" என்றாள் கைக் கடியாரத்தைப் பார்த்தபடி.

"இவர்கள் இவ்வளவு நன்றாகப் பாடுவார்கள் என்று தெரிந்தும் நீ ஏன் கல்லூரித் தினத்தன்று ஒரு நிகழ்ச்சி ஏற்படுத்தவில்லை?" என்று தம் மகளைக் கேட்டார் பிரின்சிபால்.

"நளினி மேடையேறிப் பாடுவாள். நம் முத்துமாணிக்கப் பெரியார் அவ்வளவு சீக்கிரம் . . . ."

"எல்லாம் சேர்ந்து பாடுவார்கள்."

அவர்கள் விடை பெற்றுக்கொண்டார்கள். கார் கிளம்பியது. கொஞ்ச தூரம் சென்ற பிறகு மாணிக்கம் திரும்பிப் பத்மினியைப் பார்த்து, "இதற்குத்தான் நான் பாடமாட்டேன் என்பது. என்னை மாட்டிவிட்டாய்" என்றான்.

"உன் ஆராய்ச்சி தெரியாதா? நீ பாடுவாய் என்பது தெரியாதா, என் அப்பாவுக்கு? உங்கள் இரண்டு பேர் குரல்களில் உள்ள ஒற்றுமையைத்தான் சொன்னார் அவர்."

நளினியும் மாணிக்கமும் ஒருவரை ஒருவர் பார்க்க எத்தனிக்கக்கூட இல்லை. காரோட்டி ஓட்டியபடியால் மாணிக்கம் முன் பக்கம் அமர்ந்திருந்தான்.

அவன் முன் பக்கம் பாதையையே நோக்கிக்கொண்டிருந்தான். கொஞ்ச தூரம் போனபிறகு வழியில் மதன

கோபாலன் நின்று காரை நிற்கும்படி சைகை காட்டுவது தெரிந்தது.

வண்டி நின்றது. மாணிக்கம் முன் இருக்கையில் நகர்ந்து மதனகோபால னுக்கு இடம் தந்தான். அவன் ஒருமுறை பெண்கள் இருக்குமிடத்தைப் பார்வை யிட்டு விட்டுப் பிறகுதான் முன்பக்கம் ஏறினன். அவர்களைப் பார்த்துப் பார்த் துப் பேசினன். மாணிக்கம் ஒருவன் இருப்பதாகவே அவன் காட்டிக் கொள்ள வில்லை. மாணிக்கமும் அதைக் கவனித்த தாகவே காட்டிக் கொள்ளவில்லை.

கன்னிகா பரமேசுவரி சத்திரம் அடைந் ததும் காரிலிருந்து இறங்கியவுடனே பத்மினியும் மதனகோபாலனும் வேஷம் தரிக்கச் சென்றனர். மாணிக்கம் தம் புராவை மீட்டிக்கொண்டு ஒரு பக்க மாக அமர்ந்தான். மறுகோடியில் மற் ருெரு தம்புராவை மீட்டிக் கொண்டு நளினி அமர்ந்தாள். முன்னேற்பாடாகப் பங்காருவும் பட்டம்மாள் என்ற பெண் ணுடன் அமர்ந்திருந்தான்.

நாடகம் ஒருவிதத் தடங்கலுமின்றி நடந்தது. மாணிக்கத்தின் மனம் மட்டும் மிகவும் சஞ்சலப்பட்டது. மதனகோபால் கதம்ப நிகழ்ச்சியின்போது நிர்வாகி என்ற முறையில் அடிக்கடி நளினியின் அருகில் போய் என்னவோ கட்டளைகள் இடுவதைப் பார்த்தபோது மாணிக்கத் தின் ரத்தம் கொதித்தது. நளினி கூசிக் குறுகி நகருவதைக் காணும் போதெல் லாம் மதனகோபாலனின் மென்னியைத் திருகமாட்டோமா என்று அவன் கைகள் துடித்தன. மேலும் அலமேலுவைக் காணும் போதெல்லாம் மதனகோபால் அருவருப்புடன் நோக்குவதை அவன் கவனித்தான்.

'எதற்காக இந்தப் பெண்கள் கோபாலு போன்ற காலிப் பயல்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும்?' என்று மனம் வெதும்பினன் அவன். மீனுட்சியின் சமூகத் தொண்டையும் அவள் இவர்கள் வட்டாரத்துக்குக் குடிவந்த தினத்தையும் நினைத்து அவன் கொதித்தான். அலமேலு போன்ற பெண்களை வெளியே இழுத்து வந்த அவளை நொந்தான்.

ஆயினும் வெளியே ஒன்றையும் காட் டிக்கொள்ளவில்லை. இருப்பினும் மறு நாள் நாடகம் முடியும் வரை தனக்கு இதே பொறுமை இருக்குமா என்று அவனல் நம்ப முடியவில்லை. நேரத்தைப் பிடித்துத் தள்ளினன் அவன்.

ஒத்திகை முடிந்து எல்லாரும் வீட் டுக்குக் கிளம்பினர்கள். நளினியும் பத் மினியும் காரில் ஏறிக் கொண்டதும் எங்கிருந்தோ மதனகோபால் வந்தான். காரின் மிதிபடியில் ஒரு காலை வைத்துக் கொண்டு, இரு கைகளையும் கதவின் மீது ஊன்றிக் கொண்டான். "நாளைக்கு, நளினி, நீங்கள் இன்னும் உரக்கப் பாட வேண்டும். மற்றதெல் லாம் சரியாக இருக்கிறது. பத்மினி, நீங்கள் வேஷத்தில் கவனம் செலுத்த வேண்டும்" என்று உரக்கப் பேசலானன், தனக்குச் சம்பந்தம் இல்லாத பெண்களின் நாடக நிர்வாகத்தில் தலையிட்டுக் கொண்டு.

தெருவில் போவோர் வருவோருக்கு முன் தன் முக்கியத்துவத்தைக் காட்டுவ தற்காக, மதனகோபால், பெண்கள் ஆடை அலங்காரம் யாவற்றையும் பற்றிப் பலக்கப் பேசப் பேச, வீதியில் சென்றவர்கள் நின்று கவனிக்க ஆரம் பித்தனர்.

"பத்மினி, நேரம் ஆகவில்லை?" என்று மாணிக்கம் கவனப்படுத்தினன்.

"ஆமாம், மிஸ்டர் கோபால், எங்க ளுக்கு நேரமாகிவிட்டது. டிரைவர், ஓட்டு, அப்பா" என்றுள் பத்மினி.

மதனகோபால் கையை எடுக்கா மலே நின்றுன், வண்டி கிளம்ப வழியில் லாமல்.

"கையை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றுள் பத்மினி.

கார் கிளம்பியது.

"அப்புறம், மிஸ்டர் கோபால்...." என்று ஆரம்பித்தாள் பத்மினி.

"என்ன?" என்று ஆவலோடு முன் வந்தான் மதனகோபாலன்.

"ஒன்றும் இல்லை, நாளைக்குச் சொல் கிறேன்" என்று கூறிவிட்டாள் அவள்.

வண்டி சென்றது.

மாணிக்கம் தன் வீடு நாடிச் சென்றுன். மதனகோபாலன் அவன் கூடவே நடந்து வந்தான். "என்னடா, முத்து, உடம் பிலே எத்தனை எலும்பு என்று தெரிய வேண்டுமா?" என்று தன் முகத்தை மாணிக்கத்தின் முகத்தருகே வைத்துக் கேட்டான்.

"எனக்குத் தெரிய வேண்டாம். தெரியாவிட்டால் பாதகம் இல்லை. கண்ணியமாக உழைத்துச் சாப்பிடு கிறேன். பொறுக்குகிற வேலை உன்னேடு இருக்கட்டும்."

"பாட்டோடு வைத்துக் கொள். உனக்குப் பேசத் தெரியாது. அப்புறம் வருத்தப்படுவே."

"நான் பாடவே இல்லை. பின்னணிப் பாட்டுக்கு நீ வேறு ஆள் பார்த்துக் கொள்" என்றுன் மாணிக்கம்.

"நளினியையும் தடுப்பாயா?"

"நான் பாடாவிட்டால் அவர்களும் பாட மாட்டார்கள்."

"நீ யாருடா காவல் காக்க?"

"நான் யாருக்கும் காவல் காக்க வில்லை."

"நாழிகையாயிற்று என்று நினைவு படுத்தியிராவிட்டால் அவர்கள் தைரிய மாக என்னைக் கை எடு என்று சொல்லியிருக்கமாட்டார்கள். மரியாதை இல்லாமல் காரைச் செலுத்தியிருக்க மாட்டார்கள்."

"போடா! உனக்கு ஆசையாக இருந் தால் அவர்களுடன் காரில் ஏறிப் போவது தானே?"

மதனகோபாலனுக்கு அப்போது தன் முட்டாள்தனம் புரிந்தது. அவர்களுடன் போயிருக்கலாமே!

மேலே ஒன்றும் பேசாமல் அவன் ஓட் டலுக்குப் போய்ச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு மேடை அமைப் பதில் முனைந்தான்.

இரவு வெகுநேரம் வரை வேலை நடந் தது. மறுநாள் பிற்பகலுக்குள் தெருவை அடைத்துப் பந்தல் போட்டாகி விட்டது. தெருவோர் அனைவரும் அதில் பங்கு கொண்டனர். இருபக்கத்திலும் இருந்த சாக்கடைகளின்மீது தம்தம் வீட்டிலிருந்து பலகைகளைக் கொண்டு வந்து மூடினார் கள்.



மாலை மணி ஆறுக்கு நாடகம் என்றால் மூன்று மணிக்கே இருபக்கத் திண்ணைகளிலும் கூட்டம் குழுமி விட்டது. ஆண்டுதோறும் ஆண்கள் நாடகம் போட்டு ருசி பார்த்த சபை அது. படித்த பெண்கள் வேறு விருந்தளிக்கப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டதும் கூட்டத்துக் கேட்பானேன்?

மாரியம்மன் கல் மீது யார் காலும் படாமலிருக்க ஒரு கள்ளிப் பெட்டியைக் கவிழ்த்து மூடியிருந்தனர்.

சோற்று மூட்டையுடன் சிலர் வந்திருந்தனர். அவர்கள் சாப்பிட்டுவிட்டு, பலகைகளை நீக்கி இலைகளைச் சாக்கடையில் போட்டுவிட்டுத் தயாராகக் காத்திருந்தனர்.

பலூன் விற்பவர், பிளாஸ்டிக் சீப்பு, கண்ணாடிக்காரர், பொம்மை விற்பவர்—இப்படி ஒரு கூட்டமும் அங்கு வந்து சங்கமித்தது.

நளினியின் காரும் பத்மினியின் காரும் மேடைக்குப் பின்னால் நின்றன. இரண்டு



போலீஸ்காரர்களும் இரண்டு காரோட்டிகளும் அப்பக்கம் காவல் புரிந்தனர்.

ஆறுமணி நெருங்க நெருங்கக் கூட்டத்தில் அமைதி குறைந்தது.

''நாடகம், நாடகம்!'' என்று சிலர் கத்தினார்கள். இரு சிறகு வீடுகளின் கூரைமீதும் அமர்ந்திருந்த சிறுவர்கள் வாயில் விரலை வைத்து விசிலடிக்க ஆரம்பித்தனர்.

மணவாளச் செட்டி எழுந்து வந்து, திரையை விலக்கி, ''யாரையாவது பாடச் சொல்லுங்கள்'' என்றார்.

உடனடியாக நளினி திரைமறைவிலிருந்து தாயுமானவர் பாடலைப் பாடத் தொடங்கினாள்.

தன்னை மறந்து உருக்கமாகப் பாடினாள் அவள். கேட்போர் கருத்திலும் அது வியாபித்து அமைதியை நிலைநாட்டியது.

மணி ஆறு. கணகணவென்று மணி அடித்தது. ஊதுவத்திப் புகை வெளியே வந்து எல்லாரையும் தழுவி மணத்தைப் பரப்பியது. திரை விலகியது. ஒரு குழந்தை கிருஷ்ணனைப் புல்லாங்குழலுடன் நிற்க, ஆறு பெண்கள் கண்ணனுக்கு நடனத்துடன் பூஜை செய்தார்கள்.

அவையில் ஒரே ஆனந்த அரவம். நேற்று வரை புழுதியில் புரண்டு, பரட்டைத் தலையும், வாயோரத்தில் மாங்காய்ப் புண்ணும், புளிச்சைக் கண்ணும், சளி மூக்குமாகத் திரிந்த குழந்தைகள்தாம் இன்று பளிச்சென்று நீராடி, பொட்டும் பூவும் பட்டாடையுமாகக் காட்சியளித்துப் பார்ப்போர் உள்ளத்தைக் கவர்ந்தன. மீனாட்சியின் தொண்டைப் பற்றி அபிப்பிராயம் உயர்ந்தது.

குழந்தைகள் கும்மிக்கு அலமேலுவும் நளினியும் சேர்ந்து பின்பாட்டுப் பாடினார்கள்.

''அலமேலுவும் எப்படித்தான் படிச்சிக்கிட்டா!'' என்று வியந்தனர் அந்த வட்டாரத்தினர்.

அடுத்தபடி பெண்கள் நாடகம் நடந்தது. சமூகநலச் சங்கத்தின் கொள்கைகளை விஸ்தரிக்கும் நாடகம் அது. பத்மினி ஒரு சங்கத்தின் தலைவியாகவும் நளினி பிச்சைக்காரியாகவும் வந்தனர். அவர்களை அடையாளம் கண்டுகொண்டவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். சங்கத்தின் பல காரியங்களையும் மேடையில் சித்திரித்துக் காட்டியதும், பார்ப்போருக்கு மீனாட்சிமீதும் அவள் சங்கத்தின் மீதும் நம்பிக்கை பிறந்தது.

பிறகு மதனகோபாலனின் நாடகம் நடந்தது. பலமுறை நடித்து மெருகேறிய நிகழ்ச்சி. எல்லாரும் மிகவும் பாராட்டிக் கரகோஷம் செய்தனர்.

இடைவெளி வந்தது. முன் திட்டப்படி பாடுவதற்காகச் சுருதி கூட்டினான் மாணிக்கம். அதற்குள் மதனகோபாலன் நளினியின் தோளைத் தொட்டுச் சுவாதீனமாக அவளைப் பாடும்படி கூறினான். அவள் தலையை அசைத்துவிட்டாள். மாணிக்கம் பக்கம் ஜாடை காட்டினாள். மாணிக்கம் இதைக் கண்டவுடன் தன் தம்புராவைக் கீழே வைத்துவிட்டான். அவளைப் பார்த்து நளினியும் தம்புராவைப் படுக்க வைத்துவிட்டுக் கையைக் கட்டிக் கொண்டு அமர்ந்துவிட்டாள்.

மதனகோபால் மாணிக்கத்தின் அருகில் வந்து, ''பாடடா, முத்து'' என்றான். அது ஒலிபெருக்கியின் மூலம் வெளியே எட்டி விட்டது. எல்லாரும் 'கொல்'லென்று சிரித்துவிட்டனர்.

மாணிக்கமும் நளினியும் அப்படியே தம் தம் இடத்தில் சிலைபோல அமர்ந்திருந்தனர். மதனகோபாலன் கையைப் பிசைந்தான். வெளியே சத்தம் பேரலையாகக் கிளம்பியது. மதனகோபாலன் எழுந்து சென்று பத்மினியை அழைத்து வந்து, அவள் கேட்டுக் கொண்ட பிறகே மாணிக்கம் இடைவெளி முடியும் வரை சில பாட்டுக்கள் பாடினான்.

நாடகம் தொடர்ந்து முடிவு பெற்றது. திரைக்கு வெளியே அவரவர்கள் வீடு கிளம்பும் அமளி பேரிரைச்சலாக எழும்பியது. ஆனால் மாணிக்கத்துக்கு ஒன்றும் தெரியவில்லை. அவன் தம்புராவை மூடி வைத்துவிட்டு அமர்ந்திருந்தான்.

மதனகோபாலனைப் பற்றி நினைவு எழும்போதே அவன் உடலெல்லாம் பற்றி எரிந்தது. நாட்கள் செல்லச் செல்ல அவனது குணத்தைக் கண்டு மாணிக்கம் குமைந்தான்.

பங்காருவிடமும் மணவாளச் செட்டியிடமும் மிக்க மரியாதை வைத்திருந்தான் மாணிக்கம். அவர்கள் கண்களில் இரத்தத்தை வரவழைத்தான் மதனகோபாலன். பத்மினி, நளினி, மீனாட்சி ஆகியோருடன் மாணிக்கம் கண்ணியமாக நடந்துவந்தான். மதனகோபாலன் அத்துமீறி நடந்தான். சண்முகத்தைக் கைக்குள் போட்டுக்கொண்டு அந்த அறிவிலியைப் பலவாறும் ஆட்டி வைத்தான். போதாக் குறைக்கு அலமேலுவை மணந்துகொண்டு அவன் அவளை எவ்வாறு நடத்துவானோ? மாணிக்கம் நடுங்கினான்.

மாணிக்கத்தின் மனம் உரசி உரசிச் சோர்ந்துவிட்டது. வாக்குக் கொடுத்த தோஷத்துக்காகவும், அலமேலு, நளினி முதலிய நான்கு பெண்களும் சம்பந்தப் பட்டிருந்ததாலும் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தான் அவன். (தொடரும்)

8. திரைக்குப் பின்னால்



பெண்கள் உடை மாற்றும் இடத்தின் பக்கம் ஏதோ கலவரம் தோன்றவும் மாணிக்கம் எழுந்து நின்று நோக்கினான்.

மதனகோபாலன் தன் கன்னத்தைத் துடைத்துக்கொண்டு நின்றான். பத்மினி அவனைச் சுட்டெரித்து விடுபவள்போல் நின்றாள். நளினியும் மீனாட்சியும் கனல் கக்க நோக்கினர். மாணிக்கம் அவர்களை நோக்கி நடந்தான்.

மாணிக்கம் தம்புராவைத் தூக்கிக் கொண்டு அவர்கள் நின்ற இடத்துக்குச் சென்றான். ''என்ன பத்மினி?'' என்று கேட்டான்.

''ஒன்றும் இல்லை, மாணிக்கம். நீ போ'' என்றாள் பத்மினி.

அவள் தொனியைக் கேட்டு அவன் பேசாமல் திரும்பினான். மதனகோபாலும் வேறு பக்கம் திரும்புவதைக் கண்டு, தம்புராவை அவனிடம் நீட்டி, ''பேஷான தம்புரா. இத்துடன் நான் கழித்த நாட்கள் என் வாழ்நாளில் மறக்க முடியாதவை'' என்று மனப்பூர்வமாகப் பாராட்டினான்.

மதனகோபாலன் தம்புராவை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு வேறு பக்கம் சென்றுவிட்டான். மாணிக்கம் ஒன்றும் புரியாமல் எல்லாரையும் சுற்றிப் பார்த்தான். அலமேலு எட்ட நின்று பத்மினியைப் பார்த்துக் கோபமாக முறைத்த வண்ணம் இருந்தாள்.

''அலமேலு, என்ன கலாட்டா இங்கே?'' என்று தாழ்வான குரலில் கேட்டான் மாணிக்கம்.

''பத்மினி மகா துடுக்குக்காரி. அவங்களை அடிச்சிட்டாங்க'' என்றாள் அலமேலு.

மாணிக்கம், பத்மினியைத் தேடிக் கொண்டு போனான்.

மீனாட்சி மதனகோபாலனிடம் சொன்னாள். ''மிஸ்டர் கோபால், இதோ உங்களுக்குச் சேரவேண்டிய பாதிப் பணம். உங்கள் அப்பா ஆயிரம் ரூபாய் நன்கொடை தருவதாகச் சொன்னவுடனே ஐந்நூறும் நூறுமாகச் சிலர் கொடுத்து விட்டனர். 'சங்கத்தின் வாயிலில் உண்டி வைக்கிறேன், அதில் போடுங்கள். இன்று இதோடு போதும்' என்று சொல்லி நிறுத்திவிட்டேன். இந்த வெற்றிக்கு நீங்கள்தாம் காரணம். உங்களுக்கு நன்றி'' என்றாள்.

மதனகோபாலன் கடுமையாக முகத்தை வைத்துக்கொண்டு பணத்துக்குக் கை நீட்டினான். அதற்குள் அவன் குழுவைச் சேர்ந்த பலரும், ''வேண்டாம், கோபாலு. நமக்கென்ன, நகரத்திலே வேறு இடத்திலே நாடகம் போட்டால் நிதி வந்துவிடும். நாம் இந்தப் பணம் வாங்க வேண்டாம். அவர்கள் சங்கத்துக்காக நாம் செய்த தொண்டாக இருக்கட்டும்'' என்றார்கள்.

மதனகோபாலனுக்கு அவர்கள் பேச்சு ருசிக்கவில்லை. ஆயினும் மரியாதைக்காக அவன் பேசாமல் இருந்தான். முதலில் அவனுடைய நண்பர்கள் பெண்கள் சங்கத்துடன் சேர்ந்து நடிக்கவே இணங்கவில்லை. அவன்தான் சேவையைப் பற்றிப் பிரமாதமாகப் பிரசங்கம் செய்து அவர்களைப் படிய வைத்தான். இப்பொழுது அவன் மருந்து அவனுக்கே திரும்பி வந்தது.

''மீனம்மா, நீங்கள் எங்களுக்குப் பணம் தரவேண்டாம். மீண்டும் எங்காவது

நாங்கள் நாடகம் போட்டால் உங்கள் குழந்தைகள் கதம்ப நிகழ்ச்சி தயார் செய்து எங்களுக்கு உதவவேண்டும்'' என்றான் மதனகோபால், மேல் பூச்சுப் பணிவுடன்.

மீனாட்சி மேலும் ஏதேதோ பேசிக் கொண்டே அவனுடன் வேறு பக்கம் சென்றுவிட்டாள்.

மாணிக்கம் பத்மினியைப் பார்த்து, ''அவர்கள் இனிக் கொஞ்சநேரம் வர மாட்டார்கள். என்ன நடந்தது? சீக்கிரம் சொல்'' என்றான்.

''அவர்களுடைய நாடகத்துக்குச் சில புடைவைகள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முன்பே ஒரு முறை அவன் எங்கள் உடை மாற்றும் அறை அருகில் வந்து நின்றான். நான் ஒரு சுமைப் புடைவைகள் தந்தேன். அவற்றைத் திருப்பிக் கொடுக்க இப்போது வந்தான்; அவன் ஒரு புறம் கொடுக்க, நான் வாங்கக் கை நீட்டியபோது, புடைவைகள் மறைவில் என் கையைப் பிடிக்க முயன்றான்; நான் உடனே அவன் கன்னத்தில் அறைந்துவிட்டேன். போதாக்குறைக்கு 'மிஸ்டர் கோபால் நேற்றே நீங்கள் நடுத்தெருவில் நின்றுகொண்டு ஒரு 'மிஸ்' கூடச் சேர்க்காமல் 'நளினி', 'பத்மினி' என்று ஏகவசனத்தில் பேசினீர்கள். கார் கிளம்பும்போது அதைத்தான் சொல்ல வாயெடுத்தேன். பிறகு உங்கள் சுபாவத்தையும் எங்கள் சுயகாரியத்தையும் கருதி ஆட்சேபத்தைத் தெரிவிக்காமல் இருந்தேன். முறை தவறி நடந்தீர்களோ கன்னம் பழுத்துவிடும், நினைவிருக்கட்டும்' என்று வேறு சொல்லிவிட்டேன்; என்னவோ அவசரப் புத்தி எனக்கு;



இப்பொழுது பயமாக இருக்கிறது மாணிக்கம். எல்லார் முன்னிலையிலும் அவனைக் கேவலப்படுத்திவிட்டேன். அந்த நச்சுப் பாம்பு மறக்காது. என்னால் மீனாவுக்கும், நளினிக்கும், உனக்கும் ஒன்றும் கஷ்டம் வராமல் இருக்கவேண்டுமே! அவன் ரௌடி. அவனிடம் பகைத்துக்கொண்டு விட்டேன் நான்'' என்று அங்கலாய்த்தாள் பத்மினி.

''அது கிடக்கிறது, நாய். நீ கவலைப் படாதே. அவன் அப்போதே மீனாட்சியிடம் சாதாரணமாகத்தானே பேசினான்?'' என்று மாணிக்கம் சமாதானம் செய்தான்.

நளினி அங்கு வந்தாள். ''பத்மினி, மீனா கூப்பிடுகிறாள். எல்லாம் ஒழுங்கு படுத்தவேண்டாமா?'' என்றாள்.

பத்மினி மீனாட்சியைத் தேடிக்கொண்டு உள்ளே சென்றாள்.

மாணிக்கம் நளினியைப் பார்த்து, ''நீங்கள் இன்று பாடியது..'' என்று ஆரம்பித்தான்.

''உங்கள் அளவு நன்றாக இல்லை; அது தானே?'' என்று கூறிவிட்டுக் கலகல வென்று சிரித்துக்கொண்டே அவள் வேலையைக் கவனிக்க உள்ளே ஓடி விட்டாள்.

மாணிக்கம் ஆசையாக அவளைச் சில விநாடி பார்த்தான். உடனே தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டான்.

அவன் தன் வீடு போகும் எண்ணத்தில் முன்பக்கத்து ஹாலில் காலை வைத்ததும் மீனாட்சியின் கணவர் டாக்டர் அவனை அழைப்பது கேட்டது. ''மாணிக்கம், சற்று இங்கேதான் இருங்களேன். என்



ளோடு பேச யாருமே இல்லை. நான் வீட்டுக்குப் போக முடியாது. என் மனைவி என்னைக் குண்டு போட்டுச் சுட்டு விடுவாள்!'' என்றார் அவர்.

மாணிக்கம் அவர் அருகில் ஒரு ஜமுக்காளக் குவியல்மீது அமர்ந்தான்.

வேஷம் தரித்து ஆடின குழந்தைகள் ஆளுக்கு ஒரு பட்சணப் பொட்டலத்துடன் தம் தம் வீட்டுக்கு ஓடிக்கொண்டிருந்தனர். நளினி, பத்மினி, மீனாட்சி, அலமேலு, மற்றும் சில பெண்கள் துணிமணிகளை மடித்துவைத்து, நகைகளைப் பூட்டி, தட்டு முட்டுச் சாமான்களை ஒழுங்குபடுத்திக் கட்டி வைத்துவிட்டு, வீடுகளுக்குத் திரும்பத் தயாரானார்கள்.

''மணி பன்னிரண்டாகிவிட்டது. இதற்குமேல் நளினியும் பத்மினியும் வீட்டுக்குப் போக வேண்டாம். நம் வீட்டில் தங்கிவிட்டு விடியற்காலம் போகலாம்'' என்றார் டாக்டர்.

''ஆமாம். இன்று நான் செய்த வேலை வீண் வம்புதான். ஒரு காரை அனுப்பி வீட்டுக்குச் சேதி சொல்லி விடுவோம்'' என்றாள் பத்மினி.

''எப்படியும் நாங்கள் இரண்டு பேரும் விடியற்காலை ஐந்தரை மணிக்குள் போயாக வேண்டும்'' என்றான் மாணிக்கம்.

''ஆமாம்'' என்றாள் நளினி; ''இல்லாவிட்டால் என் அப்பா நிரந்தரமாக எங்களைச் சினிமாவில் சேர்ந்துவிடச் சொல்லுவார்!'' என்று கூறிச் சிரித்தாள்.

மூன்று தோழிகள், மாணிக்கம், டாக்டர் தவிர எல்லாரும் போய்விட்டனர். அலமேலு வெகு நேரத்துக்கு முன்பே பங்காருவுடன் கிளம்பிவிட்டாள்.

கொஞ்ச நேரம் இருந்துவிட்டு மாணிக்கம் தன் வீடு கிளம்பினான்.

மதனகோபாலன் கோஷ்டிக்கு விடிய விடிய வேலை இருந்தது போலும்! அவர்கள் மேடைமீதே படுத்துவிட்டனர்.

மாணிக்கம் தன் இல்லம் சென்றான். அங்கே வாசற்கதவு தாழிடப்பட்டிருந்தது. தட்டுவதற்கு மனம் இல்லாமல் அவன் வீட்டு வாசல் திண்ணையிலேயே படுத்துவிட்டான். விடியற்காலை தெருவில் தண்ணீர் தெளிக்க வந்தபோது தான் அவன் தாய் அவனைப் பார்த்தாள்.

''என்னடா முத்து, கதவைத் தட்டக் கூடாதா? சண்முகம் வந்து கதவைத் தட்டி உள்ளே வந்து சாப்பிட்டுவிட்டுப் படுக்கவில்லையா? நீ மட்டும் இப்படி, தலைக்கு உயரம், கீழுக்குப் பாய் ஒன்றுமே இல்லாமல் படுக்க வேண்டுமா?'' என்று கேட்டாள் அன்னை.

''பரவாயில்லை, அம்மா. இப்போது என்ன?''

''உங்கள் அப்பா கத்தப் போகிறாரே என்று பயமாக்கும்? ஐயோ, பிள்ளையே! கத்தினால் என்ன ஆகிவிடும்?'' தனபாக்கியம் முணுமுணுத்தபடி, சாணத்தைக் கரைத்துத் தெளிப்பதிலும், கூட்டிப் பெருக்கிக் கோலம் போடுவதிலும் முனைந்தாள்.

மாணிக்கம் எழுந்து உள்ளே போய்ப் பல் துலக்கிவிட்டு வந்தான்.

''கொஞ்சம் போய்ப் பால் வாங்கி வா, முத்து. உனக்குக் காபி வச்சுத் தரேன்'' என்று குரல் கொடுத்தாள் தாய்.

பாத்திரமும் சில்லறையும் எடுத்துச் சென்ற மாணிக்கம், திரும்பி வந்து தாயைக் கேட்டு வேறு ஒரு பாத்திரமும் வாங்கிக்கொண்டு கிளம்பினான். திரும்பி வரும்போது ஒரு பாத்திரம் பாலை டாக்டர் வீட்டில் கொண்டு கொடுத்தான். ''உங்களுக்கு விருந்தாளிகள் இருக்கிறார்களே, தேவைப்படுமோ என்று வாங்கி வந்தேன்'' என்றான்.

''என்ன பொறுப்பு!'' என்று மீனாட்சி வியந்து, அவனுக்கு நன்றி செலுத்தி விட்டுப் பாலைப் பெற்றுக்கொண்டாள்.

''விருந்தாளி நளினி என்பதனால் வந்த பொறுப்புணர்ச்சியா?'' என்று கேட்டாள் பத்மினி, குறும்பாக.

''ஆமாம்! எனக்காக யார் வாங்கி வருவார்கள்? எல்லாம் அருமைத் தங்கை பத்மினிக்குத்தான்'' என்றாள் நளினி.

''என்ன, மிஸ்டர் மாணிக்கம்? என்ன பதில்?'' என்று கேட்டார் டாக்டர்.

''பேசிக்கொண்டிருக்க நேரம் இல்லை; இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் நான் பாத்திகளுக்குச் சங்கீதம் பாய்ச்சிக் கொண்டிருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு மாணிக்கம் தன் வீடு கிளம்பிவிட்டான், மற்றொரு பால் பாத்திரத்துடன்.

அவன் தாய் கொடுத்த காபியைவிட அந்தத் தாயின் தரிசனம் அவனுக்கு மிகவும் இதமாக இருந்தது.

அவன் குளித்து, உடுத்து வேகமாகக் கிளம்பிவிட்டான். நளினியும் பத்மினியும் காரில் வந்து தேடியபோது அவன் அங்கு இல்லை.

முன்னாள் போட்ட மேடையையும் அநேகமாகப் பிரித்துவிட்டார்கள். அந்த வட்டாரமே மணம் முடிந்து காலியான மண்டபம்போல இருந்தது.

நின்று பார்க்க நேரம் இல்லை. நளினியும் பத்மினியும் காரில் ஏறிக்கொண்டு கிளம்பிவிட்டார்கள். அலமேலு அவர்களை வழியனுப்பிவிட்டுத் தெருத் திண்ணையிலேயே அமர்ந்துவிட்டாள். குழாயடியில் கூட்டம் இருந்தது. குடங்களை அருகில்

வைத்துக்கொண்டு அவள் அமர்ந்து தெருவை நோட்டம் விட்டாள்.

மேடை போட்டவர்கள், பந்தல் வேய்ந்தவர்கள் எல்லாரும் கிளம்பிக் கொண்டிருந்தனர். லாரியில் சாமான்களை ஏற்றினர்கள். மதனகோபாலன் சில சமயம் அங்கு வந்து நின்றான். அதற்கப்புறம் அவன் சைக்கிளில் ஏறி எங்கோ சென்றான். அவன் தங்கள் வீட்டைத் தாண்டும்போது அலமேலு எழுந்து உள் பக்கமாகச் சென்று நின்றுவிட்டுப் பிறகு வந்து மீண்டும் திண்ணையில் அமர்ந்தாள்.

என்னவோ குருட்டு யோசனைகள் செய்துகொண் டிருந்துவிட்டாள் அவள். தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று கூடக் கவனிக்கவில்லை. ஏதோ ஒருவிதப் பரபரப்பு ஏற்படுவதை உணர்ந்து அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

மீனாட்சியும் டாக்டரும் இரண்டு தென்னந்துடைப்பங்களை எடுத்துத் தெருவைக் கூட்டிக்கொண் டிருந்தனர். யசோதாவும் அவள் தம்பிகளும் கூடைகளில் காகிதக் குப்பை, பழந்தோல்கள் முதலியவற்றை எடுத்துப் போட்ட வண்ணம் இருந்தனர். எல்லார் வீட்டு வாசலிலும் மனிதர்கள் நின்று வேடிக்கை பார்த்தனர். தெருவில் நடப்பவர் சிலர், துடைப்பமும் துடைப்பத்தினல் விலகும் குப்பையும் தம்மீது படாமல் நாசூக்காக விலகி நடந்து சென்றனர்.

அலமேலு உள்ளே சென்று புதிய தென்னந்துடைப்பம் ஒன்றை எடுத்து வந்தாள். புடவையை இழுத்துச் செருகிக்கொண்டு பெருக்க ஆரம்பித்தாள். மீனாட்சியிடம் சென்று, "இந்தாங்க அக்கா, நீங்க எதுக்கு?" என்றாள்.

முன்னாள் குப்பை தெருவை அடைத்தது. பழைய வாடை ஒன்று சாக்கடையின் சாதாரண துர்நாற்றத்துடன் கலந்துகொண்டு மூக்கைத் துளைத்தது. நாடகத்துக்காக மூன்று மணி நேரம் காத்திருந்தவர்களின் குழந்தைகள் வேறு சாக்கடை ஓரத்தில் அசுத்தப்படுத்தியிருந்தனர்.

மீனாட்சி சிறிதும் அருவருப்பின்றித் தகர முறங்கொண்டு அப்புறப்படுத்தி, வாளியில் தண்ணீர் எடுத்து வந்து, வேறு கட்டை விளக்குமாற்றினல் கழுவிவிட்டாள். சாக்கடைகள் நிரம்பி எதிர்த்தன. டாக்டர் நீண்ட குச்சியில் பொருத்தப் பெற்ற முறம் போன்ற இரும்புக் கருவியால் இழுத்துவிட்டு அடி அழுக்கை நகர்த்தி, தெருக்கோடிவரை கொண்டுவிட்டார்.

அலமேலு குழாயடியிலிருந்து ஆரம்பித்துச் சீராகக் கூட்டிவந்தாள்.

அலைகள்

தமிழ் இளைஞன் மதியரசும் சீனத்து யுவதி லேய் குவாவும் மனமொத்து மணந்துகொள்கின்றனர். இருதிறத்துச் சுற்றத்தாரும் மனம் வெதும்பி உறவை முறித்துக்கொள்கின்றனர். ஆனால் லேய்குவா கருவுற்றுத் தன் மாமனுருக்கு ஓர் அழகான பேரனைப் பெற்றுத் தரும் போதும், மதியரசின் தங்கை லேய்குவாவின் தாயை ஒரு விபத்தில் ரத்தம் கொடுத்துக் காப்பாற்றும்போதும் அதே சுற்றத்தார்களின் நெஞ்சில் ஆசாபாசங்கள் அலைமோதுகின்றன. முடிவில் லேய்குவா, 'தாமரை' என்று பெயர் சூடி அன்பிலும் பண்பிலும் தமிழ்ப் பெண்களையும்விடத் தலைசிறந்து நிற்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. சிங்கை மா. இளங்கண்ணனின் 'அலைகள்' என்ற இந்த நாவலின் நிலைக்களனும் நிகழ்ச்சிகளும் சற்று வித்தியாசமாய் அமைந்து, வாசகர்களுக்குப் புத்துணர்வு தரக்கூடும். மறைமலைப் பதிப்பகம், ஆன்ஸன் ரோடு, சிங்கப்பூர்-2 இதை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நாவல் ஏழு ரூபாய் விலையில், பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-600001 என்ற விலாசத்திலும் கிடைக்கும்.

—எல்ஏகே

"இது என்ன தலைவேதனை? நகரசபைச் சுத்தப்படுத்துவோரைக் கூப்பிட்டு வீட்டுக்குப் பத்துப் பைசா வீசினல் செய்துவிட்டுப் போருங்க" என்றாள் பட்டம்மாள் என்ற பெண்.

"இவங்க என்னவோ பெரிய இடத்துப் பெண்கள் அசுத்தத்தைக் கண்டாலே காத வழி ஓடிவிடுவாங்க என்று பேசிக்கொள்கிறார்களே! நாம் பார்ப்பதற்குக் கூட அஞ்சுகிற இடத்தையெல்லாம் தொட்டுச் செய்கிறார்கள். சை, அசிங்கம் பிடிச்சவங்க!" என்றாள் வேறு ஒரு பெண்.

"பன்றி ஜன்மமாக இருக்கும்" என்றான் ஓர் ஆடவன், ஏளனமாக, மீனாட்சி காது பட.

மீனாட்சியும் டாக்டரும் செவிடாகி விட்டனரோ என்னவோ? மீனாட்சி உடுத்திருந்தது ஒரு டெரீன் புடைவை, டாக்டர் முண்டாசு, பாம்பே டையிங் துண்டு. இல்லையேல் அவர்கள் நகரச் சுத்திகரிப்புச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போலவே இருந்தனர்.

அலமேலு செல்வதைப் பார்த்து அவளுடன் ஒத்த தோழிகள் இரண்டு பேர் சேர்ந்து கொண்டார்கள். இரண்டு மணி நேரம் நிமிராமல் வேலைசெய்தனர். தெருவும் மேல் பார்வைக்கு எவ்வளவோ சுத்தமாகிவிட்டது.

தன் வீட்டினுள் போன அலமேலு நேராகக் கிணற்றடிக்குச் சென்று குளித்து விட்டு மாற்று உடை அணிந்து, தண்ணீர் எடுக்கக் குழாயடிக்கு வந்தாள். அவள் ஒரு குடம் நிரப்பிக்கொண்டு தன் வீட்டுக்குக் கிளம்பும்போது பார்த்தால் மீனாட்சியும் யசோதாவும் அவளைப் போலவே குளித்துவிட்டு மாற்று உடை அணிந்து அவர்கள் வீட்டின்முன் நிற்பது தெரிந்தது.

யசோதாவைப்பற்றி அலமேலுவின் மனம் சிந்தித்தது. ஆறு மாத காலத்தில் இந்திரா காலனியில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. யசோதாவே ஒரு சான்று. முன்பு பரட்டைத் தலையும், நாற்றக் கந்தல் பாவாடையுமாக இருப்பாள். சாக்கடை அருகிலேயே கிடப்பாள். சாக்கடை என்றும் நல்ல இடம் என்றும் வித்தியாசம் இல்லாமல் இருந்தவள் அவள். ஒரு வாழைப் பழத்துக்காகக் கண்ணை நெட்டிக்கொண்டு மனிதர்கள் பின்னாடியே ஓடுவார்கள், யசோதாவும் அவள் தம்பிகளும். அந்த வட்டாரத்திலேயே பங்காருவும் தனபாக்கியமுமே அவர்களிடம் சிறிது பரிவு காட்டி ஏதாவது துணிமணி, தின்பண்டம் தருவார்கள். மற்றவர்கள் அவர்களை விரட்டுவார்கள். ஆனால் அந்த வசவையும் பொருட்படுத்தாமல் வீடு வீடாக நுழைந்து புறப்படுவார்கள் அக் குழந்தைகள். எப்போதும் பசி, எப்போதும் தாகம்.

''எங்கள் அம்மா செத்துவிட்டாள். ஆனால் கனவிலே வருவாள், என்னுடன் பேசுவாள்'' என்று வயது முதிர்ந்தவள் போலச் சொல்வாள் குழந்தை.

அப்படிப்பட்ட யசோதா இன்று எண்ணெய் தடவி, தலை சீவி, இரட்டைப் பின்னல் பின்னி, சுத்தமான ஆடை அணிந்து அழகாகக் காணப்பட்டாள். பழைய ஏக்கப் பார்வை போய்விட்டது. சாக்கடையருகில் போகும்போது பாவாடையை நாசூக்காகத் தூக்கி அழுக்கில் படாமல் நடந்தாள்.

ஆனால் மீனாட்சி அதற்காகப் பட்ட பாடு! யசோதாவையும் அவளைப் போன்ற வேறு சில பெண்களையும் தங்கள் வீட்டிலேயே வசதி தந்து வைத்துக் கொண்டு தெருப் பெண்கள் சிலர் உதவியுடன் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி, அவள் எவ்வளவோ சிரமப்பட்டிருக்கிறாள். குளிக்க வரமாட்டாள் யசோதா! அலறுவாள். தன் வீட்டுக்குள் போய்ப் புகுந்து கொள்வாள். மீனாட்சி வீடு வீடாக ஓடிப் போய்த் தேடிப் பிடித்து வந்து, அழ அழச் சோப்புத் தேய்த்துக் குடம் குடமாகத் தண்ணீரை ஊற்றுவாள்.

''இந்த அக்கிரமம் உண்டா? என் குழந்தைகளை நான் கண்மணிகளாகப் பார்த்து வந்தேனே! தாயில்லாக் குழந்தைகளைக் கொடுமைப்படுத்துகிறார்களே!'' என்று யசோதாவின் பாட்டி வேறு அரற்றுவாள்.

ஒரு நாள் அப்படித்தான், பாட்டி கத்திக்கொண்டு மீனாட்சியின் வீட்டுக்கே சண்டைக்கு வந்து விட்டாள். டாக்டர் தான் அப்போது அந்த அம்மாளை அடக்கினார். ''இதோ பாருங்க, அம்மா. உங்கள் பேரக் குழந்தைகளை நீங்கள் இப்போதே அழைத்துப் போங்கள். ஆனால் நாங்கள் தந்த உடை, ரிப்பன் எல்லாம் இங்கேயே வைத்துவிட்டுப் போகவேண்டும். காலை வேளைகளில் இலவசப் பால் கொடுக்கும்போது வரக் கூடாது'' என்றார், கண்டிப்பாக.

மீனாட்சி யசோதாவையும் அவளைப் போன்ற மற்றக் குழந்தைகளையும் பார்த்து, ''ஆமாம், எல்லாரும் போவதானால் போங்கள்'' என்றாள்.

''நாங்க போக மாட்டோம். அக்கா இங்கே இருந்தால்தானே நாடகம் சொல்லித் தறீங்க, நகையெல்லாம் போட்டு விடறீங்க, பட்சணம் தறீங்க?'' என்று ஒரு பெண் விவரித்தாள்.

யசோதாவின் பாட்டி முணு முணுத்துக் கொண்டே தன் வீடு திரும்பிவிட்டாள். அவளுடன் சேர்ந்து கொண்டு இரண்டொருத்தர் மீனாட்சியை மறைவாக நிந்தித்தனர். ஆனால் மீனாட்சியே வெற்றி பெற்றாள்.

யசோதாவிற்குச் சாக்கடையைக் கண்டு விலகவும் கற்றுக் கொடுத்து விட்டாள்; அதைத் தொட்டுச் சுத்தப்படுத்தவும் பக்குவப்படுத்தி விட்டாள் மீனாட்சி.

''மீனா, இந்தக் காலனிக் குழந்தை உலகத்தைப் பிடித்துவிட்டாய். உனக்கு இனி வெற்றி தவிர வேறில்லை'' என்று டாக்டர் சொன்னது நினைவுக்கு வந்தது.

அலமேலு தன் சிந்தனைகளைக் கலைத்துக் கொண்டு மீண்டும் குடத்துடன் குழாயடிக்குச் சென்றாள்.

''உன் தவலை நிரம்பி வழிகிறது. இவ்வளவு நேரம் நான் இரண்டு குடம் பிடித்திருப்பேன்'' என்றாள் மாடி வீட்டுப் பட்டம்மாள்.

''இதோ, இதோ எடுத்துவிடுகிறேன். கொஞ்சம் அசந்து மறந்து போச்சு'' என்று சிரித்துக்கொண்டே பவ்யமாகப் பதில் தந்து விட்டு அலமேலு தன் தவலையைத் தூக்கி இடுப்பில் வைத்த சமயம், மாணிக்கம் வருவது தெரிந்தது. அவள் வேகமாக அவனைத் தேடிச் சென்றாள். ''என்ன அண்ணா, திடீரென்று வந்து நிற்கிறே?'' என்று கேட்டாள்.

"வேலை இருக்கிறது" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டுத் தமையன் தன் அறையில் நுழைந்து தாழிட்டுக் கொண்டான். அவன் கையில் ஏதோ அட்டைப் பெட்டி இருப்பது தெரிந்தது.

அலமேலு அந்த அடைத்த கதவின் முன் சற்றுநேரம் நின்றுவிட்டு மீண்டும் தண்ணீர் எடுக்கப் போய்விட்டாள். இனியும் ஒரு நடை வரும்போது உள்ளே பாட்டுக் கேட்டது.

அவள் தண்ணீரை உள்ளே இறக்கி விட்டு, தெருவைப் பார்த்தபடி அண்ணனின் அறை வாசற்படியிலேயே அமர்ந்து விட்டாள்.

மாயா மாளவ கௌள ராகத்தை ஆலாபனை செய்தான் மாணிக்கம். அலமேலு காதைக் கொடுத்து உன்னிப்பாகக் கேட்டாள். எவ்வளவு விஸ்தாரமாகப் பாடினான் அவன்! என்ன பாட்டு ஆரம்பிக்கப் போகிறானோ என்று காத்திருந்தாள் அவள். ஆனால் அவன் முக்கால் மணி நேரமும் அதே ராகத்தைப் பாடிவிட்டு நிறுத்தினான். சற்றுப் பொறுத்து மீண்டும் அவன் அதே ராகத்தை அதே போலப் பாடுவது கேட்டது.

கதவைத் தட்டினாள் அலமேலு. மாணிக்கம் திறந்து கொண்டு வெளியே வந்தான். அவன் முகம் சிடுசிடுத்தது. "சை! என்ன தொல்லை! என்ன வேண்டும் இப்போது?" என்று சீறி விழுந்தான்.

அலமேலு திடுக்கிட்டாள். பீதியுற்ற கண்களுடன் அவள் பார்த்த பார்வை அவன் மனசை நெகிழவைத்தது. "நான் ஏதாவது தப்புச் செய்து விட்டேனா, அண்ணா?" என்று அவள் மெதுவாகக் கேட்டாள்.

"பரவாயில்லை. காரியத்தைக் கெடுக்கவில்லை."

"கதவைச் சாத்திக்கொண்டு பாடுவானேன்? ஒரு தரம் ராகம் பாடிவிட்டு மறுபடியும் அதே போல் பாட ஆரம்பிக்கவும் எனக்கு வேடிக்கையாக இருந்தது. கதவைத் தட்டினேன். நீ கோவிச்சுக்கிறே."

"உள்ளே வா, சொல்கிறேன்."

அலமேலு ஆவலோடு உள்ளே போனாள். மாணிக்கம் தன் கையிலுள்ள காஸெட் டேப் ரிகார்டரை இயக்கிக் காட்டினான். "பார்த்தாயா? முதலிலே நான் பாடினேன். அப்புறம் பாடினது இதுதான். நீ லொட்டுனு கதவைத் தட்டினியே; நான் பதிவு செய்யும்போது கேட்டிருந்தால் என் வேலையே கெட்டிருக்குமே!"

"எனக்கு எப்படி அண்ணா தெரியும்? முன்னாடியே சொல்வதுதானே? எல்லாம் மர்மம்."

"ஆசிரியர் வீட்டிலே இடம் நிறைய இருக்கிறது. அங்கேயே செய்யலாம். அங்கேயும் இதே தொல்லைதான். ஆகா, ஊகூன்னு பாராட்ட வந்துடுவாங்க."

அலமேலு புன்முறுவல் பூத்தாள்; "ஊக்கும்! உன்னையேதான் கவனிச்சுக்கிட்டு இருக்கப் போறாங்களாக்கும்!" என்றாள் அவள்.

மாணிக்கத்தின் முகம் ஜிவ்வென்று சிவந்தது. நளினி வந்து விடுவாளோ, தன் பாட்டைக் கேட்டு விடுவாளோ, தன் பெற்றோரை அழைத்து வந்து விடுவாளோ என்ற பயந்தான் அவனை வீட்டுக்குத் துரத்தியது. அலமேலு வேடிக்கையாகப் பேசினதும் அவனுக்கே வெட்கமாக இருந்தது. நளினிக்கு வேறு வேலையே கிடையாதா என்ன? அவள் எங்கோ கிடப்பாள், கிளப்பில் டென்னிஸ் ஆடப்போவாள். எத்தனையோ அலுவல் அவளுக்கு. எப்பொழுது பார்த்தாலும் தான் அவளைப் பற்றி நினைப்பது தவறு. மாணிக்கம் சமாளித்துக் கொண்டான்.

"நான் என்ன சொல்லி விட்டேன், அண்ணா? என்னவோ யோசனையிலே..."

"நான் இப்பப் புல்லாங்குழல் வாசிக்கப் போறேன், கேட்கிறாயா?" என்றான் மாணிக்கம்.

"உனக்குப் புல்லாங்குழல் வாசிக்கத் தெரியுமா, அண்ணா?" என்று மிக்க ஆச்சரியத்துடன் கேட்டாள் அலமேலு.

"தெரியும், ஆனால் எனக்குத் தெரியும்னு கோபாலுவுக்குக் கூடத் தெரியாது. நீ எங்கேயும் உளறி வைக்காதே."

"சரி, வாசி, பார்ப்போம்."

மாணிக்கம் தன் பெட்டியிலிருந்து புல்லாங்குழல் ஒன்றை எடுத்து மகுடி வாசித்தான். அலமேலு, வாயைப் பிளந்து ஆச்சரியத்துடன் கேட்டாள். மாணிக்கத்துக்கு உற்சாகம் பிறந்தது. அடுத்து, "நாத பிந்து கலாதீ நமோ நமோ" என்று ஆரம்பித்தான்.

"இதை அப்படியே பதிவு செய்து விடு, அண்ணா" என்றாள் அலமேலு ஆவலாக.

காஸெட்டைத் திருப்பிப் போட்டு மாணிக்கம் பதிவு செய்யலானான்.

அப்பொழுது சண்முகம் வெளியிலிருந்து வந்தான். அண்ணனும் தங்கையும் மெய்ம்மறந்து பாட்டில் லயித்திருப்பதைக் கண்டான். "ஏ அலமேலு, என் பச்சைக் கரைத் துண்டு எங்கே?" என்று உரக்கக் கேட்டான். மாணிக்கம் சட்டென்று புல்லாங்குழலை எடுத்து விட்டான். அலமேலு உதட்டின் மீது விரலை வைத்து அவனை அடக்கினாள்.

"ரிகார்டிங்கா? என் பாட்டைக்கூட டேப் பண்ணு. ஜாம் பஜார் ஜக்கு..."

என்று ஜர்ண கடோரமாகப் பாட ஆரம்பித்தான் சண்முகம்.

மாணிக்கம் பதிவு யந்திரத்தை எடுத்து அட்டைப் பெட்டியில் வைத்தான்.

சண்முகம் தமையனருகில் வந்து அமர்ந்தான். "முத்து, என் பாட்டை ரிக்கார்ட் செய்ய மாட்டாயா?" என்று கேட்டான்.

"இந்த இயந்திரம் என்னுடையதில்லே. அவசிய காரியத்தைச் செய்யவே சாமான் இல்லே; நேரம் போதவில்லே" என்றான் மாணிக்கம்.

"பண்ண மாட்டே; அவ்வளவுதானே? சரி, பார்ப்போம். கோபாலு கிட்டே ஒரு பேச்சுச் சொன்னல்.."

"சரிடா, சனியன் பிடிச்சவனே, வா, பதிவு செய்கிறேன்."

சண்முகத்தின் முகம் மலர்ந்தது. 'மச்சானைப் பாத்தீங்களா!' என்று பாடினான். மாணிக்கம் அதைப் பதிவு செய்துவிட்டு மீண்டும் போட்டுக் காட்டினான். தன் குரலைக் கேட்ட சண்முகத்துக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அவனுடைய அபஸ்வரமான பாட்டைக் கேட்டு மாணிக்கம் தவித்துக் கொண்டிருந்தான்.

"என் கிட்டே அந்தக் காஸெட்டைக் கொடு. நான் கோபாலுவுக்குப் போட்டுக் காட்டிவிட்டு வருகிறேன்" என்றான் சண்முகம்.

"இதை நான் யாரிடமும் தர முடியாது" என்றான் மாணிக்கம்.

சண்முகம் வாய்திறந்து பேசுவதற்குள் கந்தசாமி செட்டியார் வந்தார். "இந்தா, கடையை விட்டு வீட்டிலே என்ன வேலை உனக்கு?" என்று சண்முகத்தைக் கடிந்தார்.

"நீங்க ஏன் அப்பா வந்துவிட்டீங்க? நீங்க இருக்கிறீங்கன்னு நினைச்சுத்தானே வந்தேன்?" என்று தைரியமாகத் திருப்பிக் கேட்டான் சண்முகம்.

"திரும்பிப் பேசறியா? வாய் மேலே போடுவேன்" என்றவர், மாணிக்கம் அங்கிருப்பதைப் பார்த்து மிகவும் பெரிசாகக் கத்த ஆரம்பித்தார். "நீதான் போக்கிடமில்லே, ஒழுங்காக வேலை இல்லே, ஊதியமில்லே. இவனை ஏன் கெடுக்கிறே?" என்றார்.

"என்ன அப்பா, நீங்க? அண்ணு என்ன செஞ்சுது இப்போ?" என்று இடைமறித்தாள் அலமேலு.

"அவன் மூஞ்சியைப் பார்! நாலு ரூபாய்க்குப் புளி வாங்கத் தெரியாது. உப்பு விற்கக்கூடத் துப்புக் கிடையாது. பாட்டும், கூத்தும்—வீட்டு மகனுட்டமா? என் கண்முன்னே நிற்க வேண்டாம்னு சொல்லு."

மாணிக்கம் குன்றிவிட்டான். அட்டைப் பெட்டியும் கையுமாக எழுந்து வெளியே கிளம்பிவிட்டான்.

"போ, போ. விருப்பா இப்பப் போனலும் சோத்துக்கு இங்கேதானே வரணும்?" என்று பெரிய குரலில் கத்தினர் கந்தசாமி செட்டியார்.

"அண்ணு, வந்தது வந்தே; பலகாரம் சாப்பிட்டுவிட்டுப் போயேன்" என்று கெஞ்சினள் அலமேலு.

"வேண்டாம். பேச்சே என் வயிறு நிரம்பிவிட்டது. நான் ராத்திரி திரும்பி வர நேரமாகும். இரவுச் சாப்பாட்டுக்கு வரமாட்டேன்" என்றான் மாணிக்கம், தாழ்ந்த குரலில்.

"அப்பா சும்மா கத்துவார். அதெல்லாம் ஒரு கவுரவம் என்று எண்ணம். நீ அதுக்காகப் பட்டினி கிடக்கவேண்டாம்" என்றாள் அலமேலு, சாதாரணமாக.

விளக்கெண்ணெய் குடித்தது போன்ற முகத்துடன் மாணிக்கம் வெளியே கிளம்பி விட்டான்.

அலமேலு அவனை வழியனுப்ப வந்து நின்றாள். தனபாக்கியம் கடைத் தெருப் பக்கம் சென்றுவிட்டுத் திரும்பினவள், மாணிக்கத்தைக் கண்டு, "என்னடா, முத்து, எதுனச்சும் சாப்பிட்டியா?" என்று கேட்டாள்.

"போவட்டும், போவட்டும். இனிமேல் ரெண்டு டிபன், ஒரு சாப்பாடு அங்கே நடக்கட்டும். நமக்கும் ஒரு தலை குறையும். அவங்க கை நிறையப் பணந்தான் தரவில்லே, சோறு போடட்டும். கிடக்குதே, போடட்டும்" என்றார் கந்தசாமி செட்டியார்.

மாணிக்கம் பதில் பேசாமல் நடந்தான். சண்முகம் பின்னாடியே வந்தான். "முத்து, என் கிட்டே தரமாட்டியா? இரு, இரு, அப்புறம் என்ன நடக்கும்னு எனக்குத் தெரியாது. எச்சரிக்கலேன்னு சொல்லாதே. ஆமாம்!" என்றான்.


மாணிக்கம் தர்ம சங்கடப்பட்டுக் கொண்டு திரும்பி வீட்டுப் பக்கம் காலடி வைத்தான்.

"என்னதான் நடக்கும்னு கேளேன், அண்ணு" என்றாள் அலமேலு.

சாதாரணமாகச் சொன்ன தங்கையின் அந்தப் பேச்சைக் கேட்டு ஏனே சாட்டையடி பட்டவன் போலத் தவித்தான் மாணிக்கம்.

(தொடரும்)

முத்துச்சிற்பி



அநுத்தமா

9. நரசிம்மன்

பத்மினி வாசல் தாழ்வாரத்து நாற்காலியில் அமர்ந்து சித்திரம் வரைந்தாள். அவள் எதிரே ஒருபுறம் அவள் தந்தையும், சற்றுத் தள்ளி அவள் மணக்க இருக்கும் நரசிம்மனும் அமர்ந்திருந்தனர். நரசிம்மனைப் பார்ப்பதும் ஒரு கோடு இழுப்பதுமாக இருந்தாள் நளினி.

நரசிம்மனின் குடும்பம் முன்பு இதே ஊரில் இருந்தது. பத்மினி புகுமுக வகுப்பில் படித்தபோது நரசிம்மன் எம்.ஏ. இலக்கியம் படித்தான். அவன் ஆணழகனாக இருந்தான். இரு குடும்பங்களுக்குமிடையில் நல்ல நட்புறவு நிலவியது. பிறகு நரசிம்மனின் குடும்பம் ஊர் மாறி வெகு தூரம் போய்விட்டாலும் தொடர்பு விடவில்லை. நரசிம்மன் தேர்ச்சி பெற்று ஒரு கல்லூரியில் ஆசிரியனாக இருந்தான். இப்போது அவன் பிரின்சிபாலின்முன் அமர்ந்திருக்கும் பாணியே வெகு தோரணையாக இருந்தது. காலை நீட்டிக் கொண்டு உல்லாசமாக அமர்ந்து செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்தான். மகனில்லாத ஒரு குடும்பத்துக்கு மருமகனாக வருபவனாயிற்றே!

''இதோ பாருங்கள்'' என்று பத்மினி தன் வரைபடத்தைத் தன் தகப்பனாரிடம் நீட்டினாள். அதில் நரசிம்மன் நாற்காலியில் சாய்ந்து ஒரு புறமாகக் காலை நீட்டிக்கொண்டு அமர்ந்திருந்தான். அவன் மடியில் செய்தித்தாள் விரிந்து கிடந்தது. அவன் தன் ஆள்காட்டி விரலை நீட்டி எதைப் பற்றியோ ஆணித்தரமாகப் பேசுவது போல அமைந்திருந்தது ஓவியம்.

''தத்ரூபமாக இருக்கிறதே!'' என்று பாராட்டிவிட்டு, நரசிம்மனிடம் காட்டினார் பிரின்சிபால்.

''எப்படியிருக்கிறது?'' என்று ஆவலோடு நரசிம்மனைக் கேட்டாள் பத்மினி.

''பரவாயில்லை. நான் இப்படியா உட்கார்ந்திருக்கிறேன்?'' என்றான் நரசிம்மன், சிரித்தபடியே.

பத்மினி வாயால் பதில் சொல்லவில்லை. கண்ணாலும் கையாலும் கீழே விழுந்து கிடந்த செய்தித் தாள்களைச் சுட்டினாள். அவனும் சிரித்தபடி அவற்றைச் சுமாராக மடித்து எதிரே ஒரு மேஜைமீது போட்டான். பலகை, பென்சில் யாவற்றையும் தூக்கிக்கொண்டு பத்மினியும் உள்ளே போய்விட்டாள்.

''பத்மினி, இங்கே வா!'' என்று அழைத்தாள் அவள் தாய்.

''என்ன, அம்மா?'' என்று கேட்கும் போதே குதூகலம் தாண்டவமாடியது மகளின் குரலில்.

''நரசிம்மன் வந்திருக்கிறான். இன்னும் ஒரு மாதத்தில் மாப்பிள்ளையாக, நம் வீட்டு மனிதனாக ஆகிவிடுவான்.''

''யார் இல்லை என்றார்கள்?''

''முகூர்த்தம் வைத்தாயிற்று; இன்னும் ஒரு மாதம் இருக்கிறது. அதற்குள் இவன் இங்கே வருவானேன்?''

''போ, அம்மா, நீயும் உன் திரேதாயுகத்துப் பேச்சும்! மூன்று வருஷங்களாகக் காத்திருந்தவர்கள் முப்பது நாட்களில் மாறிவிடுவார்களாக்கும்?''

''திரேதாயுகமோ துவர்பரயுகமோ? சீதா பிராட்டியை ராமர் பார்த்தார். உடனே முகூர்த்தம் வைத்துவிட்டுப் பிறகுதான், தசரதருக்குச் சொல்லியனுப்பினாராம். இங்கே முகூர்த்தம் முடிந்து மாமனார் வீட்டுக்கு வரவேண்டிய மாப்பிள்ளை இப்போதே முகாம் போடுகிறான். இப்படிப் பழகிப் பழகிப் பழசாகி ஒரு கல்யாணமா?''

"போ, அம்மா, நீ!"

"மூன்று முடிச்சு விழுந்தப்புறம் அவனைப் பார்த்துப் படம் வரையலாம், அதுவும் உத்தரவு கேட்டுக்கொண்டு."

"உனக்கு ரசனையே இல்லை, அம்மா. எப்படிப் பார்க்கிறோமோ, எப்போது பார்க்கிறோமோ அதை அப்படியே சித்திரிப்பதுதானே கலை?"

"கலை இருக்கட்டும். கூடக் கவலையும் இருக்கட்டும்."

பத்மினி தன் தாயுடன் மேலும் வாதாடவில்லை. 'அம்மாவின் காலம் வேறு, இந்தக் காலம் வேறு. அந்த நாட்களில் கணவன் முகத்தைப் பார்த்துப் பார்த்து நடந்து பழக்கம். எதிரே உட்காரக்கூட மாட்டார்கள். இப்போதெல்லாம் அந்த அளவு எந்த ஆணும் எதிர்பார்ப்பதில்லை.'

ஆனால் பத்மினிக்கு அதற்குமேல் படம் வரையத் தோன்றவில்லை. அவள் தன் அறைக்குப் போய் விட்டாள்.

"பத்மினி, மாணிக்கம் நளினி வந்திருக்கிறார்கள்" என்று அவள் தகப்பனார் குரல் கொடுத்த பிறகே அவள் வெளியே வந்தாள்.

நளினிக்கு ஏற்கனவே நரசிம்மனைத் தெரியுமாதலால் அவள் புன்சிரிப்புடன் அவனை விசாரித்துவிட்டுத் தன் தோழியிடம் விரைந்தாள். "பத்மினி, நம் நாடகத்தைப்பற்றி விமரிசனம் வந்திருக்கிறதே!" என்று சொல்லி உற்சாகமாகச் செய்தித் தாளைக் காட்டினாள்.

பத்மினி, "பாருங்க அப்பா. இதைக் கேளுங்க எல்லாரும்" என்று பீடிகை போட்டுவிட்டுப் படிக்க ஆரம்பித்தாள். "பத்மினி தேவியின் நடிப்புப் பிரமாதம். பின்னணிப் பாட்டுப் பிரமாதம். சரஸ்வதி தேவியும் நாரத முனிவருமே வந்து பாடியதுபோல இருந்தது. இந்தக் குழு எங்கே நாடகம் போட்டாலும் பணம் தானாகக் குவியும்... பாருங்க அப்பா" என்று குழந்தை போல் ஆர்ப்பரித்துப் பெருமைப்பட்டுக் கொண்டாள்.

மாணிக்கம் அமைதியாக ஓர் ஓரத்தில் அமர்ந்து அவளைப் பார்த்துப் பரிவுடன் முறுவலித்தான்.

"ஓகோ, மறந்தே விட்டேனே! நீங்கள் மாணிக்கத்தைப் பார்த்ததில்லை அல்லவா? நளினியுடன் ஆராய்ச்சி செய்கிறான். வருங்கால விஞ்ஞானமணிகளில் ஒருவன் இவன். உங்களுக்கு ஒரு மைத்துனன் இல்லையே என்று கவலையில்லை. இவன் இருக்கிறான்" என்றாள் பத்மினி.

மாணிக்கம் எழுந்து வந்து தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு கை குலுக்கினான். நரசிம்மனும் பதிலுக்கு மரியாதை செலுத்தினான்.

"உங்களை நான் பார்த்திருக்கிறேன். நான் முதல் வருஷம் படித்தபோது நீங்கள் கடைசி வருஷம் படித்துக்கொண்டிருந்தீர்கள்" என்றான் மாணிக்கம்.

"ஆமாம், நான் இங்கே படித்தவன் தான். உங்கள் ஜாகை....?"

"செவ்வாய்ச் சந்தைப் பக்கத்தில்" என்று மாணிக்கம் சொல்லி முடிப்பதற்குள் நரசிம்மன் குறுக்கிட்டு, "அந்த இடமெல்லாம் எனக்குத் தெரியாது: எங்கள் அப்பாவுக்கு உயரமேட்டில் பங்களா" என்றான்.

அதோடு அவர்கள் பேச்சு நின்று விட்டது. பிரின்சிபால் எழுந்து போனார். பத்மினியும் நளினியும் தோட்டத்தில் இறங்கி உலாவியபடி பேசினர்.

மாணிக்கம் அவர்களை ரசித்தவண்ணம் அமர்ந்திருந்தான். பத்மினி நல்ல சிவப்பு; நளினி மாநிறம். பத்மினி சதைப் பற்றுடன் கொழுகொழுவென்றிருந்தாள். நளினி அழுத்தமாக ஒல்லியாக இருந்தாள். பத்மினி பளிச்சென்று ஆடை அணிந்திருந்தாள். புடைவையும் ரவிக்கையும் பொருத்தமாக இருந்தன நளினிக்கு. பத்மினியின் அலங்காரம் நரம்புகளைத் தட்டி எழுப்பும் கவர்ச்சியுடையது. நளினியுடையது தண்ணிலாப் போல அமைதி தருவது.

"இன்னும் எத்தனை வருஷம் இருக்கிறது உங்கள் ஆராய்ச்சி?" என்று நரசிம்மன் கேட்டதும், மாணிக்கம் திடுக்கிட்டான். 'எந்த ஆராய்ச்சி? இந்த மனிதனுக்கு எண்ணங்களைப் படிக்கக் கூடிய சக்தியுண்டோ?'

"ஆராய்ச்சி இன்னும் எத்தனை நாட்கள் இருக்கும்?" என்று மீண்டும் நரசிம்மன் கேட்ட பிறகே அவன் புரிந்து கொண்டு பதில் சொன்னான்.

"மேலும் ஓர் ஆண்டு ஆகலாம்."

"வெளிநாட்டுக்குப் போகிற உத்தேசம் உண்டோ?"

மாணிக்கம் சங்கடத்தில் ஆழ்ந்தான். வெளியூருக்குப் போகவேண்டுமென்றால் அவ்வளவு எளிதா? 'அப்பா எவ்வளவு இரைவாரோ? அம்மா சிபாரிசுக்கு வர வேண்டுமோ? தங்கை தனக்கு வளையல் வாங்க வைத்திருக்கும் பணத்தைத் தர வேண்டும்; தம்பி முட்டுக்கட்டை போடாமல் இருக்கவேண்டும். வெளி நாடு எங்கே போவது?'

நரசிம்மனுக்குத் தான் பதில் சொல்லவில்லையே என்று நினைப்பு வந்தது மாணிக்கத்துக்கு. "வெளிநாட்டுக்குப் போகும் எண்ணமே இல்லை. பேராசிரியர் ஆத்மநாதனுக்காகவே இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளேன். ஏதாவது வேலை பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்."

"எந்த மாதிரி வேலை?"

மீண்டும் மாணிக்கம் பதில் சொல்லத் தவித்தான். முன்பு ஒருநாள் ஆசிரியர் கூறியது நினைவுக்கு வந்தது. 'நீ ஆசிரிய

ளுகப் போனல் மாணவர்கள் உன்னைச் சொக்கப்பனை கொளுத்தி விடுவார்கள். கச்சேரி செய்தால் வாத்தியக்காரன் ஏமாற்றுவான்.' அதை நினைக்கையில் அவனுக்கே சிரிப்பு வந்தது. "என்ன வேலையா? கிடைப்பதுதான்" என்றான்.

நரசிம்மன் ஒரு தினுசாக அவனைப் பார்த்துவிட்டு மீண்டும் பத்திரிகையில் முகத்தை மறைத்துக்கொண்டான். மாணிக்கம் நாற்காலிக் கைமீது தாளம் போட்டபடி அமர்ந்திருந்தான்.

பத்மினியும் நளினியும் வந்துவிட்டார்கள். "மாணிக்கம், இன்னிக்கு மாலை நம் வீட்டிலே ஒரு சின்னத் தேநீர் விருந்து. இவருக்குத் தெரிந்த சில நண்பர்கள், என் நண்பர்கள் சிலர். அவ்வளவுதான். நீயும் வரவேண்டும்" என்றாள் பத்மினி.

"நான் எதற்கு, பத்மினி? உன்னைத் தவிர நான் யாருடனும் பேசமாட்டேன். நீயோ வேலையாக இருப்பாய்."

"நாளுச்சு, நளினி, 'இவர்', அப்பா— இன்னும் எத்தனை பேர் வேண்டும்? எல்லாம் வரலாம், வா."

மாணிக்கம் நளினியைப் பார்த்தான். அவள் தோட்டத்திலிருந்து கொய்து வந்த ஒரு பூவைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண் டிருந்தாள். தலை நிமிரவேயில்லை. மாணிக்கம் நரசிம்மனை நோக்கினான். அவனோ வைத்த கண் வாங்காமல் நளினியைப் பார்த்துக் கொண்டே இருந்தான். மாணிக்கம் பக்கம் திரும்பவேயில்லை.

மாணிக்கம் எழுந்து விட்டான். "எனக்கு வேலை இருக்கிறது, பத்மினி" என்றான்.

நளினியும் அவன் கூடவே புறப்பட்டாள். "நீங்கள் இரண்டு பேரும் இருந்து எனக்கு ஒத்தாசை செய்யக் கூடாதா?" என்று கேட்டாள் பத்மினி.

"நான் இருக்க முடியாது. மிஸ் நளினி வேண்டுமானால் பின் தங்கட்டும்" என்று கூறி, மாணிக்கம் புறப்பட்டான்.

"பத்மினி, கேட்டைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு வருவோம். ஆடு வந்து மேய்ந்து விடும்" என்றாள் நளினி.

இருவரும் மாணிக்கத்தின் பின்னேடு இறங்கித் தோட்டத்தில் நடந்தனர். நளினி பத்மினியின் காதில் என்னவோ சொன்னாள்.

"மாணிக்கம், உன்னிடம் ஏதாவது சாவிக் கொத்து இருக்கிறதா?" என்று கேட்டாள் பத்மினி.

தன் சட்டைப் பையிலிருந்து ஓர் ஒற்றைச் சாவியை எடுத்துக் கொடுத்து, "இது ஒன்றுதான், பத்திரம்! அது என் பெட்டிச் சாவி" என்று கூறிக் கொடுத்து விட்டு மாணிக்கம் வேகமாக நடந்தான்.

அவர்கள் திரும்பியபோது நரசிம்மன் படிக்கட்டில் அவர்களை எதிர்பார்த்து நின்றிருந்தான். "மிஸ் நளினியிடம் தாவர வர்க்கத்தைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொள்ளலாம் என்று நினைத்தேன்" என்றான்.

பத்மினி ஆச்சரியத்துடன் அவனை நோக்கினாள். "ஏது, இன்னிக்குத் தாவரத்தில் ருசி?" என்று கேட்டாள்.

"மிஸ் நளினியின் ஆராய்ச்சி மிகவும் ரசமாக இருக்கும்போல் இருக்கிறதே! கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று தோன்றிற்று" என்றான் நரசிம்மன்.

"நளினி, ஆசிரியர் மாணவனாக மாறி விட்டார். பாடம் சொல்லு" என்று உற்சாகமாகக் கூறினாள் பத்மினி.

"அதற்குத் தகுந்த ஆள் மாணிக்கந்தான். எனக்கு அவ்வளவு போதாது" என்றாள் நளினி.

"சரி, வாருங்களேன், மூவரும் தோட்டத்தில் நடப்போம்" என்று அழைத்தான் நரசிம்மன்.

நளினி அவர்களுடன் நடந்தாள். கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னாளே தவிர, அவளுக்கு உற்சாகமே இல்லை.

"நளினி, ஏன் திடீரென்று மௌனமாகி விட்டாய்?" என்றாள் பத்மினி.

"எனக்கே புரியவில்லை. உனக்கு எப்படிப் புரியவைப்பது?" என்று நிதானமாகப் பதிலளித்தாள் நளினி.

தோட்டத்தை ஒரு சுற்றுச் சுற்றியதும் மூவரும் வீட்டுப் படி ஏறினார்கள். நளினி வலுக்கட்டாயமாக ஒரு புன்சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "பத்மினி, நீ அவரோடு பேசிக்கொண்டிரு. நான் உன் அம்மாவைப் பார்த்து விட்டு வருகிறேன்" என்று கூறி வீட்டினுள் சிட்டாகப் பறந்தாள்.

"ஏன் அப்படி ஓடிவிட்டாள் உன் தோழி?"

"அது ஒரு பைத்தியம். நம்மிடையே இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்று நினைத்திருப்பாள்" என்றாள் பத்மினி.

நரசிம்மன் தன் கல்லூரியைப்பற்றியும் தான் பாடம் எடுக்கும் முறையைப் பற்றியும் பேசினான். பத்மினி கவனமாகக் கேட்டாள். ஆனால் உள்ளூற நளினியைத் தேடிச் செல்லத் துடித்தாள்.

அவள் தகப்பனார் வந்து, "நரசிம்மா, நான் கல்லூரி நூல் நிலையத்துக்குப் போகிறேன். அங்கே சில புதிய புதிய அகராதிகள் வாங்கியிருக்கிறோம், பார்க்கிறாயா? ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவும் சிறந்த நூல் நிலையமாக இதை அமைக்க வேண்டுமென்பது என் அவா. நீயும் பார்த்து அபிப்பிராயம் சொல்லேன். பணம் இருக்கிறது. வாங்கிப் போடுகிறேன்" என்று அழைத்தார்.

"நீயும் வருகிறாயா, பத்மினி?" என்று கேட்டான் நரசிம்மன்.

"இல்லே. அம்மாவுக்குக் கொஞ்சம் உதவியாக இருக்கிறேன்" என்று கூறித் தன்னே விடுவித்துக்கொண்டாள் பத்மினி.

ஆடவர் இருவரும் கிளம்பின பிறகு அவள் தன் தோழியைத் தேடி உள்ளே வந்தாள். நளினி அடுப்படியில் எதையோ கிளறிக்கொண் டிருந்தாள்.

"என்ன நளினி, நீ ஏன் அடுப்படிக்குப் போய்விட்டாய்?" என்று கேட்டாள் பத்மினி, ஆச்சரியத்துடன்.

"நான் சொன்னல் கேட்கவில்லை; குலாப்ஜாமூனே அவளே செய்து பார்க்க வேண்டுமாம். கோவா காய்ச்சுகிருள்" என்ருள் பத்மினியின் தாய்.

"ஏன் நளினி, நீ உள்ளே வந்து விட்டாய்?"

"நீதானே சொன்னுய், இன்று விருந்துக்கு உதவி புரிய வேண்டுமென்று" என்ருள் வேடிக்கையாக.


"ஆமாம், சொன்னேன். சமையற்காரியாக மாறச் சொன்னேனு?"

"அது சரி. சாவியைக் கொடுத்தனுப்பினுயா?" என்று கேட்டாள் நளினி.

"மறந்துவிட்டேனே! எங்கள் டிரைவரை அனுப்புகிறேன் ஒரு சீட்டுடன்."

டிரைவரை அழைத்துச் சீட்டு எழுதி அனுப்பினுள் பத்மினி. அவன் மாணிக்கத்தின் வீட்டை அடைந்தபோது அலமேலு குழாயடியில் இருந்தாள். தெருக்காரப் பெண் ஒருத்தி, "அலமேலு, உங்கள் வீட்டு டிரைவர் நிற்கிருர்" என்று தமாஷ் பண்ணினுள்.

அலமேலு தன் வீட்டு முன்னிலேயில் பத்மினி வீட்டு டிரைவர் நிற்பதைக் கண்டு விரைந்தாள்.




அவன் சாவியுடன் சீட்டைத் தந்தான்.

'இன்று எங்கள் வீட்டில் ஒரு விருந்து. அதற்கு மாணிக்கம் வருகிறன். அவன் பெட்டிச் சாவி இத்துடன் இருக்கிறது. வண்ணன் உடுப்பு ஒன்று எடுத்து அனுப்பவேண்டும் - பத்மினி' என்று சீட்டில் எழுதியிருந்தது. அண்ணன் பெட்டியைத் திறந்து பான்ட்டும் சட்டையும் எடுத்து டிரைவரிடம் கொடுத்தனுப்பினாள்.

அவள் மீண்டும் குழாயடிக்குப் போனபோது அவர்கள் அவளைப் பிடித்துக்கொண்டனர். ''உனக்கு என்ன, பெரிய மனிதர்கள் சிநேகம் கிடைத்துவிட்டது. எங்களை மதிப்பாயா? பஸ் வரும், ஏறிக்கொண்டு போவாய். எங்களைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டாய்.''

''எங்கள் அண்ணனுக்கு உடுப்பு வேண்டுமாம். எழுதி அனுப்பினரு. எனக்கு எந்தக் காரும் வராது'' என்றாள் அலமேலு. 'காரைப் 'பஸ்' என்றும் பஸ்ஸைக் 'கார்' என்றும் கூறுவார்கள். நாமும் ஒருசமயம் இப்படித்தான் பேசிக்கொண்டிருந்தோம்; இப்ப அவர்களோடு சேர்ந்து பழையது மறந்து போச்சு' என்று தன்னையே கடிந்து கொண்டாள்.



"அலமேலு, நீயும் இங்கிலீசு படிச்சிக்கிறதுதானே?" என்றாள் ஒருத்தி.

"மீனாக்கா வீட்டுக்குப் போனால் எல்லாம் படிச்சுக்கலாம். நமக்குத்தான் போக முடியலே" என்றாள் அலமேலு.

"எங்கள் வீட்டிலேகூட அதேதான் சொன்னாங்க. போனவாரம் பிஸ்கோத்து செய்யறது சொல்லித் தந்தாங்க, இல்லே? அதேமாதிரி நேத்துச் செய்து எங்கள் பொண்ணு வீட்டுக்குக் கொடுத்து அனுப்பினேன். நல்லா இருந்ததாம். இப்படியே செய்து கொடுத்தால் நம்ம கடையிலேயே விற்கலாமேன்னு 'இவரு' சொன்னாரு" என்றாள் ஒரு மாது.

பேச்சு, தையல் வகுப்பைப்பற்றி மாறியது. அலமேலு தண்ணீரைப் பிடித்துக்கொண்டு வீடு திரும்பினாள். மீனாட்சி வந்தபிறகு தெருவில் வம்பு கூடக் குறைந்துவிட்ட மாதிரி தோன்றியது. இல்லாவிட்டால் இந்நேரம் அவள் கல்யாணத்தைப்பற்றிப் பேசிப் பேசிப் பெரிய கலவரத்தையே உண்டு பண்ணியிருப்பார்கள். தன் திருமணத்தை நினைக்கும்போதுதான் அவளுக்கு நெஞ்சை அடைத்தது.

பங்காருவுக்குத் திடீரென்று மயக்கம் போட்டுவிட்டது என்று ஒரு நாள் ஆள் வந்து தனபாக்கியமும் அலமேலுவும் அங்கு ஓடினார்கள். கொஞ்ச நாட்களாகவே பங்காருவுக்கு உடல் நிலை சரியில்லை. இன்று ஊஞ்சலிலிருந்து மயங்கி விழுந்து விடவும் தனபாக்கியத்துக்கும் கவலையாகிவிட்டது. டாக்டரை அழைத்துவந்தாள் அலமேலு. அவர் சோதித்துவிட்டு, "நரம்புத் தளர்ச்சியுடன் ரத்தக் கொதிப்பும் இருக்கிறது, மனசுக்கும் உடம்புக்கும் ஓய்வு தேவை" என்றார்.

பங்காருவுக்கு நினைவு வந்ததும் அலமேலுவையும் தனபாக்கியத்தையும் பார்த்து, குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்துவிட்டாள்.

"இப்ப என்ன நடந்து விட்டதுன்னு அழறே, அக்கா? மனிதர்களுக்கு உடம்புக்கு வராதா?" என்று கேட்டாள் தனபாக்கியம்.

"உடம்புக்கு வந்ததை வைத்தியன் குணப்படுத்துவான். மனசுக்கு வந்த வியாதிக்கு ஆண்டவன்தான் மருந்து கொடுக்கணும், தனம். நான் ஏன் உயிரோடு இருக்கணும்? கீழே விழுந்தவ அப்படியே போகக் கூடாதா?" என்று பங்காரு புலம்பினாள்.

"மனசுக்கு என்ன கஷ்டம் வந்துவிட்டது? பெரிய பிள்ளையைக் கூட்டிக்கிட்டு வந்தால் போவுது. மருமகள் நடமாடினால் சரியாகப் போவும். பேசாமல் தூங்கு" என்றாள் தனபாக்கியம்.

"பெரியவள் வந்தால் நடமாடுவா; எனக்குச் சுசுருஷை செய்வாளோ?"

"எல்லாம் சமயம் வந்தால் செய்ய மாட்டார்களா? கோபாலு வந்து உன்னைப் பார்த்துக் கொள்வான்."

மகனின் பெயரைக் கேட்டதும் மேலும் அழுதாள் பங்காரு. தன பாக்கியம் தன் தோழியை அணைத்துக் கொண்டு ஆசுவாசப்படுத்தினாள்.

"கோபாலுவுக்கு, தனக்கு ஓர் அப்பனும் அம்மாளும் இருப்பதாகவே நினைப்பு இல்லை. அன்னிக்கு இந்தத் தெருவிலே நாடகம் போட்டுட்டுப் போனாங்களே அதுக்கப்புறம் அவன் இங்கே வரவில்லை. பணம் வேணும்னு சீட்டு எழுதி அனுப்பினான். பெத்த மனம் கேட்கலே. கொடுத்து அனுப்பினேன். எங்கேயோ டவுனிலே நாடகம் போடறாங்களாம்."

"ஆமாம். நம்ம வீட்டுச் சின்னக் காளை கூடப் போவுது."

"கோபாலுவை ஒரு தடவை வரச் சொல்லு, தனம்."

"சண்முகத்துக் கிட்டே சொல்லி அனுப்பறேன்."

"நீ என் பக்கத்திலேயே இருக்கறயா?" என்று தனபாக்கியத்தின் கையைப் பிடித்துக் கெஞ்சினாள் பங்காரு.

"இருக்கிறேன், இருக்கிறேன். அலமேலுவை இங்கேயே இருக்கச் சொல்றேன்" என்றாள் தனபாக்கியம்.

"தனம், நீ என்றைக்கும் என்கிட்டே இப்படியே அன்பாக இருப்பாயா?"

"போ, அக்கா. இது என்ன கேள்வி? அன்பாக இருப்பேனா நான்? இப்பத்தான் எங்கிருந்தோ சீமையிலேந்து வந்து உங்க வீட்டிலே சிநேகம் பிடிச்சிருக்கேன். முன்னே பின்னே தெரியாதவங்க எப்படி அன்பாக இருக்க முடியுமாம்?" என்று கூறிச் சிரித்தாள் தனபாக்கியம்.

"எனக்குக் கை போட்டுக் கொடு."

"ஆமாம், பத்திரம் எழுதித் தராங்க! அப்புறம் தனத்துப் பேச்சுக்கு என்ன மதிப்பு?"

"இல்லை தனம். நாம் ரெண்டு பேரும் சின்னப்ப இருந்த மாதிரியா இன்னிக்கு இருக்கிறோம்? அன்னிக்கு நான் சாதாரணமாக இருந்தேன். உடைக்கும் உண்டிக்கும் பஞ்சமில்லாமல் இருந்தேன். இன்னிக்குப் பித்தளைச் சங்கிலி போட்ட ஊஞ்சலிலே ஆடறேன். உனக்குத் தின்கிறதுக்குன்னு தஞ்சாவூர்லேந்து முந்திரிப்பருப்பு வருமே, தனம்! நான்கு விரல் ஜரிகை இல்லாமல் பட்டுப் பாவாடை உடுத்தமாட்டயே? இப்பப் பார், இலை தைத்து, பற்றுத் தேய்த்து, உன் கை முரடாகிவிட்டது."

"பிறந்த மாதிரியே இருப்பாங்களாக்கும்! அதுவும் பெண்கள்! அவங்க

அவங்க காலிலே லட்சுமி அவங்க அவங்களை ஆட்டறு.''

''என்ன லட்சுமியோ, என்ன பரமேசுவரியோ? என் வரையிலே யாருமில்லை, தனம். நீயாவது என் உறவை உதறித் தள்ளாமல் இருப்பாயா, தனம்?''

''அம்மன் கல்லுக்குப் பால் ஊற்றினால் மனசு சரியாயிடும். பேசாமல் படுத்துக்கோ. அலமேலு உன் துணைக்கு இருக்கட்டும்'' என்று கூறிவிட்டுத் தனபாக்கியம் வீடு திரும்பினாள்.

சண்முகம் சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

''கோபாலுவை உடனே வரச்சொல்லுடா. அவனுடைய அம்மாவுக்கு ரொம்ப உடம்பு சரியில்லை. எப்படியாவது இன்னிக்கு ராத்திரி அவனை அழைத்து வா'' என்றாள் தனபாக்கியம்.

சண்முகம் மதனகோபாலனை அன்று மாலையே அழைத்து வந்துவிட்டான். அலமேலு டாக்டர் வீட்டில் தையல் வகுப்பு முடிந்து திரும்ப வரும்போது டாக்டர் அவளை அழைத்துப் பங்காருவுக்கு மருந்து கொடுத்தனுப்பினார். அலமேலு மருந்து சீசாவை எடுத்துக் கொண்டு பங்காரு வீட்டில் நுழைந்த போது மதனகோபாலன் தன் தாயின் அருகில் அமர்ந்திருப்பதைக் கண்டாள். அவளைக் கண்டதும் அவன் முகம் குரோதமாகக் கறுத்தது. அலமேலு தன் கைச் சீசாவைச் சுவரோரமாக இருந்த ஒட்டுத் திண்ணையில் வைத்துவிட்டுத் தன் வழியே திரும்பினாள்.

ஆனால் அந்தச் சீசா முற்றத்தில் விழுந்து துகள் துகளாகச் சிதறியது. போய் அதை அள்ளுவதா என்று அவள் ஒரு விநாடி தயங்கினாள். அப்போது வெளியிலிருந்து வந்த பார்வதம் அவளிடம் வந்து ரகசியமான குரலில், ''குழந்தை, நீ போ. நான் அள்ளுகிறேன். அவனுக்குத் தான் உன்னைக் கண்டால் பிடிக்கலையே! நீ போய் அப்புறம் வா'' என்றாள் பரிவுடன்.

அலமேலுவின் தலையில் கட்டப்பாரையால் அடிப்பதுபோல இருந்தன அந்தச் சொற்கள். இதுவரை பலமுறை மதனகோபாலன் பார்த்த பார்வைகளுக்கு உண்மை விளக்கம் புரிந்தது. தான் ஏதோ மனப்பால் குடித்த மடத்தனமும் விளங்கியது. அவள் துக்கம் பெருக வீட்டுக்குப் போனாள். போகுமுன் மாரியம்மன் கல்முன் கை கூப்பி நின்றாள்.

'இதுதான் உன் கருணையா? நல்ல உத்தரவு கொடுத்துவிட்டு என் மனசை நீ இப்படிப் பிழியலாமா? நான் என்ன தவறு செய்தேன்? உன்னையே நம்பியிருக்கும் எனக்கு இதுதான் நீ தரும் பதிலா? இந்தத் தெருவில் நான் எப்படித் தலைதூக்குவேன்?' என்று மனசோடு கேட்டாள். அவளால் துக்கம் தாள முடியவில்லை. சட்டென்று உள்ளே போய்க் கிணற்றடியில் ஆசை தீர அழுதுவிட்டு முகத்தைத் தண்ணீர் விட்டுக் கழுவிக்கொண்டாள். முன்றானையால் துடைத்துக் கொண்டாள். அப்படியே பைத்தியம் பிடித்தவள்போல் குடம் குடமாகத் தண்ணீர் இறைத்துச் செடிகள்மீது ஊற்றினாள். உடல் தளர்ந்தது. கைவலித்தது. ஆனால் மனவலி குன்றவில்லை.

10. உளையும் உள்ளங்கள்

முருகன் கோயில் சந்நிதியில் நல்ல கூட்டம். அலமேலுவும் கையில் அர்ச்சனைத் தட்டுடன் அங்கே வந்தாள். யாரோ அபிஷேகம் செய்தார்கள் போலும். கைப்பிடிக்குள் அடங்காத மல்லிகை மாலைகளும் ரோஜா மாலைகளுமாகச் சாத்தியிருந்தன. தலைக்கு மேலே அர்ச்சனைத் தட்டுகளைத் தூக்கிக் கொண்டு எல்லாரும் முண்டியடிப்பதைப் பார்த்தாள் அலமேலு.

லட்சுமி நரசையா கர்ப்பக்கிருகத்தை விட்டு வெளியே வந்தார். அவர் உடலெல்லாம் வேர்வையால் நனைந்திருந்தது. அலுப்பும் சலிப்புமாக முகத்தைச் சிடுசிடுத்துக்கொண்டு அவர், ''சை, நம்ப இந்திரா காலனி ஆளுங்களைப் போலக் காட்டுமிராண்டிகளை நான் பார்த்ததில்லை. ஆட்டு மந்தை கூட ஒழுங்காக இருக்கும். மனுஷங்களா இவங்க!'' என்று கத்த ஆரம்பித்துவிட்டார்.

அலமேலு அவர் பக்கத்தில் போனாள். ''மாமா, என்னுங்க, கோவமா இருக்கீங்க?'' என்று கேட்டாள்.

''அட போம்மா! டவுன்லேந்து ஒரு பணக்காரக் குடும்பம் வந்தாங்க. பதினைந்து வருஷமாப் பிள்ளைங்க இல்லையாம் இப்போ குழந்தை பிறந்ததாம். நம்ப முருகனுக்கு நேர்த்திக் கடன் தீர்க்க வந்தாங்க. அருமையான அபிஷேகம் செய்தாங்க. அவங்க போன அப்புறந்தான் அர்ச்சனைன்னு சொன்னேன். அவங்க வெளியேகூட வரலை. அதுக்குள்ளே இப்படி ஒரு நெரிசலா?''

''இருங்க நரசையா மாமா. நான் ஒழுங்குபடுத்திவிடறேன்.''

''அட, நீ ஒண்ணு! உன்னாலே என்ன முடியும்?''

''நீங்க வாங்க'' என்றாள் அலமேலு. தனக்குத் தெரிந்தவர்கள்தாம் எல்லாரும். அவள் கையை நீட்டினாள். பல கைகள் தட்டை நீட்டின. ''முதலிலே வந்தவங்க முதல்லே கொடுங்க. வரிசையா வச்சிடுவாரு மாமா. அப்ப கலவரம் இல்லாமல் நடக்கும்'' என்றாள்.

நரசையாவும் அவளும் கூடைகளையும் தட்டுகளையும் வாங்கிக் கர்ப்பக்கிருகத்தில் இரண்டு வரிசையாக வைத்தார்

கள். "நாங்கள் வைக்கிறதிலே கொஞ்சம் முன்னே பின்னே இருக்கலாம்; மன்னிச்சுக்குங்க. ஆனால் சீக்கிரம் முடிஞ்சிடும்" என்றாள் அலமேலு.

"மீனாட்சியம்மா சங்கத்திலே சேர்ந்து நல்லாத் துணிஞ்சுட்டா அலமேலு" என்றாள் ஒரு பெண்.

"என்ன தைரியம் பாரேன்! ஆண் பிள்ளைங்க கிட்டேகூடத் தைரியமாப் பேசுவாப்போல" என்றாள் மற்றொருத்தி.

எல்லாம் அலமேலுவின் செவியில் விழாமல் இல்லை. ஆயினும் புன்சிரிப்பு வாடாமல் அவள் சந்நிதியையே பார்த்துக் கொண்டு நின்றாள். ஆண்கள் கொண்டு வரும் தட்டுகளை நரசையாவும் பெண்கள் கொண்டுவரும் கூடைகளை அலமேலுவும் வாங்கி வரிசைப்படுத்தினார்கள். உள்ளே இரண்டு குருக்கள் வெகு சீக்கிரம் அர்ச்சனைகளைச் செய்து பிரசாதத்தைக் கொண்டுவந்து தந்தார்கள்.

"அலமேலு, நீ சீக்கிரமே டீச்சரம்மாவா ஆயிடப்போறே" என்று தோழிகள் அவளைக் கேலி செய்தனர்.

"இருக்கட்டுமே? இல்லேன்னா, காத்தவங்க காத்துக்கிட்டே கிடக்கலாமா? அது நல்லாவா இருக்குது?" என்று அலமேலு கேட்டாள்.

"உங்க மீனாட்சியம்மா உன்னை நல்லாத்தான் உருவாக்கிட்டாங்க. நீயும் ஒரு டாக்டரை மணந்திட்டா எத்தினி நல்லாயிருக்கும்! அவங்களைப் போலவே கிளம்பிடலாம்" என்றாள் ஒருத்தி.

"அவங்களைப் போலப் படிச்சுப் புத்தியும் படைச்சிருந்தால்தானே?" என்று சிரித்து, அந்தப் பேச்சை மேலே ஓங்க விடாமல் தடுத்துவிட்டாள் அலமேலு.

மதனகோபாலனுடன் தன் கல்யாணத்தைப்பற்றி விசாரிக்க அவர்கள் முயல்கிறார்கள் என்று அவள் புரிந்து கொண்டாள். பங்காரு வீடு தவிர வேறு யார் வீட்டு விவகாரமாக இருந்திருந்தாலும் அதைக் காலனிப் பெண்கள், விரலில் சுண்ணம்பை எடுத்துக்கொண்டு சுருள் வெற்றிலையுடன் அந்த வீட்டில் நுழைந்து, பாக்குக் கடிக்கிற நேரத்துக்குள் பல விஷயங்களைக் கிரகித்துக் கொண்டு வந்துவிடுவார்கள். பங்காருவுக்கு அவளுடைய பணக்காரத்தனம் கவசமாக நின்றது. சகஜமாக வம்பு நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு அவள் வீட்டுக்குள் நுழைய யாருக்கும் தைரியம் இல்லை. ஆகவே அவர்கள் அலமேலுவை ஜாடைமாடையாகக் கேள்விகள் கேட்டு வந்தனர். அவர்கள் மத்தியிலேயே பிறந்து வளர்ந்த அலமேலுவுக்கு அவர்களைச் சமாளிக்கத் தெரியாதா? மாட்டிக்கொள்ளாமல், அவள் சாதுர்யமாகப் பேசினாள்.

அவள் மனம் மட்டும் சாம்பியது: தன் வாழ்நாள் எப்படி அமையப் போகிறது என்று புரியாமல் தவித்தாள். பிறமனிதர்களைப் பேச்சினால் வெல்லலாம், உளையும் தன் உள்ளத்தை எப்படிச் சமாளிப்பது? மனசை வேறுதிசையில் திருப்பவும் தெரியாமல் தவித்தாள்.

அவள் வீடு திரும்புகையில் அவளுடன் பல பெண்கள் நலச் சங்கத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே வந்தார்கள்.

"நம்ப தெருவிலே குப்பையே இல்லாமல் செஞ்சிட்டாங்களே, அதிசயமாக இருக்குது" என்றாள் ஒருத்தி.

"நம்ப தெருக்காரங்களைக் கண்டால் மீனாக்காவுக்கு ரொம்பப் பிடிக்கும். எல்லாரும் உழைப்பாளிங்கன்னு பாராட்டுவாங்க" என்றாள் அலமேலு.

அவர்கள் பேசிக்கொண்டே காலனியில் பிரவேசித்தார்கள். அலமேலு, கோவில் பிரசாதத்தைத் தருவதற்காக மீனாட்சியின் வீட்டுக்குள் நுழைந்தாள்.

அங்கே மீனாட்சி உப்புமா கிண்டியபடி கையில் ஒரு காகிதத்தில் உள்ள கணக்கை ஒப்பு நோக்கினாள்.

"இந்தாங்க, அக்கா, நீங்கள் கணக்கைக் கவனியுங்கள். நான் உப்புமா கிண்டி எடுக்கிறேன். நல்லாயிருக்குது—ஒரு கையிலே பேனா, ஒரு கையிலே கரண்டி!" என்றாள் அலமேலு.

"வேண்டாம், இந்தக் கணக்கை நீ சரிபார்த்துக் கொடு. விரல் விட்டு எண்ணாதே. மனசாலே போடு" என்று பணித்துவிட்டு மீனாட்சி பலகாரம் செய்வதில் கவனம் செலுத்தினாள். பிறகு அவள் உப்புமாவைத் தட்டில் எடுத்துக் கொண்டு டாக்டரைத் தேடிச் சென்றாள்.

அலமேலு கணக்கை ஒரு முறைக்கு இருமுறை சரிபார்த்தாள். பிறகு பேனாவை அதற்குரிய இடத்தில் வைத்தபோது அங்கே மாட்டியிருந்த கண்ணாடியில் அவள் உருவம் தெரிந்தது.

அலமேலு முன்பு புடைவையைத் தோய்த்துத் தோய்த்து வெயிலில் கட்டி விடுவாள். சருகுபோலக் காய்ந்திருக்கும். இரண்டு பக்கமும் கொசுவி ஒரு பக்கத்தைக் காலில் மிதித்துக்கொண்டு 'விண்ணெ'ன்று முறுக்கி ஆணியில் மாட்டிவிடுவாள். மறுநாள் அதை உடுத்திக்கொண்டு கிளம்புவாள். இப்போது மீனாட்சியிடமிருந்து புடைவையைத் தவிடுபோல ஈரமின்றிப் பிழியக் கற்றுக்கொண்டு விட்டாள். நிழலில் உலர்த்தி, அதை நன்றாகத் தேய்த்து மடித்து, பெட்டியடியில் வைத்து மறுநாள் சுருக்கமின்றி உடுத்தினாள். கச்சிதமாக ரவிக்கை கத்தரிக்கவும் தைக்கவும் அறிந்து கொண்டாள். மொத்தத்தில் அவள் நடை உடை பாவனை யாவற்றிலும் மாறுதல் ஏற்பட்டது. அவள் ருசி மாறி

விட்டது. தன் வீட்டின் அமைப்பை மாற்றிக்கொண்டே வந்தாள்.

இன்னும் எத்தனையோ கற்க வேண்டியது பாக்கி இருந்தது.

நாகரிகமான பெண்களைப் பார்க்கும்போது மதனகோபாலன் முகம் மலர்ச்சி அடைவதையும், அவர்களுடன் உரையாடும்போது அவன் பேச்சு கவர்ச்சி பெறுவதும், அவர்களுடன் பழகுகையில் அவன் தன்மையே குழைவடைவதையும் அவள் பல முறை கண்டிக்கிருள். நளினி, பத்மினி போன்ற பெண்கள்தாம் அவனைக் கவரமுடியும் என்பதை அவள் கண்டிருந்தாள். மதனகோபாலன் மனத்துக்கிசைந்த பெண்ணாகத் தன்னை மாற்றிக்கொள்ளும் பணியில் ஈடுபட்டாள் அவள். அந்த ஒரு வேலைதான் அவள் வாழ்க்கைக்கே ஜீவாதாரமாக அமைந்தது. அதை அவள் நன்கு அறிந்தாள். அதற்காக வெட்கப்படவில்லை. பெருமிதத்தோடு ஒரே முனைப்பாகச் செயல்பட்டாள். 'அத்தனையும் இன்று வீண் பிரயாசை தானே?'

''அலமேலு, உன் கல்யாணம் எப்போ? திருமணத்தை நிச்சயம் செய்துவிட்டு ஏன் வாளா இருக்கிறார்கள்?''

மீனாட்சி திரும்பி வந்துவிட்டதை அப்போதுதான் கவனித்தாள் அலமேலு. ''எனக்கு எப்படி அக்கா தெரியும்? பெரியவர்கள் என்ன ஏற்பாட்டில் இருக்கிறார்களோ? இன்னும் வேறு ஏதாவது பெண் ....'' அநுமானத்தை வாயைவிட்டுக் கூறத் தெம்பு இல்லை அவளுக்கு. மனத்தளவில் கூட ஒப்புக்கொள்ளப் பிடிக்காத ஒன்றை எப்படிக் கூறுவாள்?

''மதனகோபாலனையா சொல்கிறாய்?''

''ஆமாம்.''

''உன்னைக் கட்டிக்க அவன் கொடுத்து வைக்க வேண்டுமே?''

''அப்படி ஒரு தலைப் பக்கமாகப் பேச முடியுமா, அக்கா?''

மீனாட்சி அலமேலுவின் முகபாவத்தைப் பார்த்தாள். அவள் நெற்றி சிந்தனையில் சுருங்கியது

''அலமேலு, மதனகோபாலனைக் கல்யாணம் செய்துகொள்ள உனக்கு இஷ்டந்தானா? உன்னைக் கேட்டார்களா?'' என்று மிக்க அக்கறையோடு கேட்டாள் மீனாட்சி.

''மாரியம்மன் கல் தந்த உத்தரவு வீண் போகுமா?'' என்று அலமேலு நிதானத்துடன் கேட்டாள். அது மீனாட்சியைக் கேட்ட கேள்வியா, அல்லது தனக்கே அளித்துக்கொண்ட ஆறுதலா?

''அன்னிக்குப் பத்மினிக்கு என்ன நடந்தது தெரியுமா?'' என்று கேட்ட மீனாட்சி அலமேலுவை உற்று நோக்கினாள்.

''பத்மினி தவறு செய்திருக்கக் கூடாதா?''

''பத்மினியை எனக்கு வெகு நாட்களாகத் தெரியும். அவள் தப்புக் கணக்குப் போடுபவளும் இல்லை. தவருகச் செயலில் ஈடுபடுகிறவளும் இல்லை. மதனகோபாலனைப் பற்றி யாருமே நன்ருகப் பேசவில்லை. நீ .....'' மீனாட்சியின் குரலில் கண்டிப்பு தொனித்தது.

''என்னை மன்னிச்சிடுங்க, அக்கா! உங்களுக்குப் பத்மினியைத் தெரிந்ததுபோல இந்த வட்டாரத்திலே பிறந்து வளர்ந்தவங்களை எனக்குத் தெரியாதா?'' என்று கேட்டாள் அலமேலு.

''பத்மினி .....'' மீனாட்சியின் முகம் கோபத்தில் கருத்தது.

''அக்கா, என்னைத் தவருக நினைக்காதீங்க. பத்மினி தப்பு செஞ்சான்னு நான் சொல்லவில்லை. தவருக நினைச்சிருக்கலாமே? அந்த அவசரத்திலே தற்செயலாக்கை பட்டதை அவள் விபரீதமாய்ப் புரிஞ்சுக்கிட்டு......'' அலமேலு வேகமாகப் பேசினாள்.

''பத்மினி அப்படிப்பட்டவளே அல்ல. எந்த நெருக்கடியிலும் யாரையும் அவசரப் பட்டுக் குற்றம் சொல்லமாட்டாள்'' என்ருள் மீனாட்சி ஆணித்தரமாக.

''இருக்கலாம், அக்கா. தவறு செய்வதும் மனித இயல்புதானே? யார் வேண்டுமானாலும் தவறு செய்திருக்கலாம்.''

''சரி, அப்படித்தான் இருக்கட்டும், போ'' என்று மீனாட்சி சிரித்துக் கூறி, பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

அலமேலுவுக்கே தான் பேசிய பேச்சுக்குப் பொருள் புரியவில்லை. ஏன் பேசினேம் என்றும் அவளால் கண்டுகொள்ள முடியவில்லை தான் வந்த காரியத்தையே மறந்து அவள் தன் வீடு திரும்பிவிட்டாள். அவள் வீட்டுக்குள் நுழையும்போது தனபாக்கியம் கூடம் நிறைய இலைகளைக் கொட்டி ஆய்ந்து எடுத்து அடுக்கிக்கொண்டிருந்தாள். ''அலமேலு எங்கே போயிட்டே நீ? வா, வா! இலைகளை அடுக்கிட்டு மீதிக் குப்பையைக் கூடையிலே அள்ளி வை'' என்ருள்.

''மீனக்கா வீட்டுக்குத்தான் போயிருந்தேன். என்னவோ பேசினங்க. கடைசியிலே நானும் ஏதோ பேசிட்டுத் தையலைப் பற்றிக் கேட்கப் போனதையே மறந்திட்டேன்.''

''நல்ல பொண்ணு!'' என்று பரிவுடன் கூறிவிட்டுத் தாய் இலைகளை அடுக்குவதில் முனைந்தாள். தொடர்ந்து பேசிக்கொண்டே, ''பங்காருவுக்கு இப்படி உடம்புக்கு வந்திடுச்சே? கவலையா இருக்குது. டாக்டரைக் கேட்டுப் பார்க்கலாமான்னு தோணுது. முத்து வந்தான்ன ஏதாவது கேட்டாத் தெரியும். அவன் என்னடான்ன ஆசிரியர் வீட்டிலேயே கிடக்கிருன்'' என்ருள்.

''டாக்டரைக் கேட்டாப் போச்சு. அத்தை, பெரியம்மாவுக்கு ரத்த அழுத்

தம்னு சொன்னாரே, இனி என்ன சொல்லணும்?''

''மயங்கி மயங்கி இரண்டு தடவை விழுந்தால் தான் என்ன? படுக்கையாகவே கிடக்கிறாளே? நான் போனேன்னு என்ன என்னவோ பேசறா, அழுவுறா. எனக்கு என்னவோ பயமாக இருக்கு.''

''என்னவோ மனசைப் போட்டு அலட்டிக்கிறாங்க போல'' என்றாள் அலமேலு மெதுவாக, ஓரக்கண்ணால் தாயைக் கவனித்துக்கொண்டே. தனபாக்கியம் அதைக் கவனித்தாள். ஆயினும் வெளியே காட்டிக்கொள்ளாமல் இலையை அடுக்குவதில் தீவிரமாக முனைந்தாள்.

''பிள்ளைக்கு இஷ்டமில்லேன்னு பளிச்சினு சொல்லிவிட வேண்டியதுதானே? அதுக்கு மனசை உளைச்சிப்பானேன்?'' என்றாள் அலமேலு, தாயைப் பார்த்து.

''உனக்குத் தெரிஞ்சுதா? யார் சொன்னாங்க அப்படின்னு?'' என்று மெள்ள நாடி பிடித்துப் பார்த்தாள் பெற்றவள்.

''நமக்கென்ன, மூளையில்லையா? எனக்குத் தெரியாமல் இல்லை.''

''தெரிஞ்சுதான் நான் சொன்னாலும் கேட்காமல் 'அத்தை, அத்தை'ன்னு உசிரை விடறயாக்கும்?''

''மாரியம்மன் வாக்குப் பொய்க்குமா, அம்மா? நீ தானே அது ஒருநாளும் முடியாதுன்னு சொல்லுவே?''

தனபாக்கியத்துக்கு 'ஓ' வென்று அழலாம் போல இருந்தது. தன் பெண் எவ்வளவு ஆசைக் கோட்டைகள் கட்டியிருந்தால் இவ்வளவு நம்பிக்கையுடன் மாரியம்மன் அருளை நம்பியிருப்பாள்? பிடிக்காதவன் காலில் ஒரு பெண்ணைக் கட்டித்தான் என்ன பயன்? மெள்ள அலமேலுவின் தகப்பனாருக்கு விவரத்தை எட்டவிடவேண்டும். என்ன கத்துவாரோ? ஒருவிதமாக அதைச் சமாளிக்கலாம். மகளுக்கு எப்படிச்சொல்வது என்பதுதான் பெரும் பிரச்னையாக இருந்தது தாய்க்கு. ''பங்காரு தினமும் செய்யும் பூஜையைக்கூட விட்டுட்டா. அம்மன் கல்லுக்குப் பால் ஊத்தாமல் இருந்துட்டா, அவள் மட்டும் நம் வயிற்றிலே பாலைச் சுரப்பாளா? புளியைத்தான் கரைப்பாள். தெய்வக் குற்றந்தான் பங்காருவைத் தள்ளிவிட்டது. மரம் வெட்டிச் சாத்தினாற்போல விழறாளே? தெய்வக் குற்றம் தான்'' என்றாள் தனபாக்கியம்.

அவர்கள் வட்டாரத்தில் எல்லோரும் உழைப்பார்கள், உண்பார்கள். மயக்கம் என்பது மனசில் கூடத் தோன்றாது. ஒரே நிதானத்தில் முன்னோர் சென்ற பாதையில் பின்னவர் சென்று வாழ்க்கை நடத்துபவர். பங்காருவின் உடல் நலக் குறைக்குக் காரணம் அவள் பூஜையை நிறுத்தியதுதான் என்று தீர்மானமாக நம்பினாள் தனபாக்கியம்.

அவள் எழுந்தாள். கிழிந்த இலைக் குப்பைகளைக் கூடையில் வாரி வைத்துவிட்டுக் கூடத்தைக் கூட்ட ஆரம்பித்தாள்.

''நான் டாக்டரைப் பார்த்துவிட்டு வரேன். முன்னே யெல்லாம் அம்மன் கல்லை நம்பிக்கிட்டு இருந்தவங்க யாருக்கும் ஒரு உடம்பும் வரவில்லை. வைத்தியர் கிடைச்சப்புறம் வியாதிதான் மருந்துதான், மாத்திரைதான், ஊசிதான்..'' என்று தனக்குள் பேசிக்கொண்டே தனபாக்கியம் மீனாட்சி வீட்டுக்குச் சென்றாள்.

கூடத்திலே கால் வைத்தபடியே, ''மீனம்மா!'' என்று அவள் குரல் கொடுத்தாள். அவள் கண்கள் மீனாட்சியைத் தேடின. அப்பொழுது அவள் கண்ட காட்சி அவளுக்கு மிகவும் சங்கோஜமாகிவிட்டது. முற்றத்துக் கோடியிலுள்ள ஆட்டுக் கல்லில் டாக்டர் மாவு ஆட்டிக்கொண் டிருந்தார். மீனாட்சி அருகில் அமர்ந்திருந்தாள். தனபாக்கியம் சட்டென்று முன் பக்க ரேழியில் நின்றாள். அதற்குள் டாக்டர் தம்பதிகள் அவளைக் கண்டுவிட்டனர். ''வாங்க, அம்மா, உள்ளே வாங்க'' என்று டாக்டர் குரல் கொடுத்தார்.

''நீங்க எழுந்து போங்க. நான் அரைத்துக் கொள்கிறேன்'' என்றாள் மீனாட்சி.

''பாருங்க, அம்மா. மீனா இருக்கும் நிலையில் அரைக்கக் கூடாது என்று நான் சொன்னால் கேட்டுக்க வேண்டியதுதானே?'' என்று முறையிட்டார் டாக்டர்.

''எனக்கு என்ன வந்துவிட்டது இப்போ?'' என்று கூறும்போது மீனாட்சியில் முகம் குங்குமமாகச் சிவப்பதைக் கண்டாள் தனபாக்கியம்.

''அப்படியா, மீனா? நகருங்க இரண்டு பேரும், நான் அரைக்கிறேன்'' என்று கூறி, தனபாக்கியம் கையைக் கழுவிக் கொண்டு அரைப்பதற்குத் தயாராக ஆட்டுக் கல்லை அண்டினாள்.

டாக்டர் எழுந்து, தம் மாவுக் கையை அலம்பித் துடைத்துவிட்டு முன்பக்கம் நடை பயின்றுகொண்டே, ''தனபாக்கியத்தம்மா, நீங்க என்னைத் தேடி வந்தீங்களா?'' என்று கேட்டார்.

அவள் அப்போதுதான் நினைவு வந்தவளாக, பங்காருவின் உடல்நிலையைப் பற்றிக் கவலையுடன் விசாரித்தாள்.

''இன்றைக்கும் விழுந்து விட்டாரகளா? நான் போய்ப் பார்க்கிறேன். பிறகு சொல்கிறேன் உங்களுக்கு'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டு டாக்டர் தம் பெட்டியுடன் மணவாளச் செட்டி வீட்டுக்குக் கிளம்பி விட்டார்.

தனபாக்கியம் அரைக்க ஆரம்பித்தாள்.

''இந்தாங்க, நீங்க அரைக்கக்கூடாது; வீட்டிலே கொள்ளை வேலை செய்து விட்டு..இங்கே..'' என்று கையைப் பிடித்தாள் மீனாட்சி.

''சும்மா இரு, மீனா! டாக்டர் தெரியாமலா சொல்லுவாரு? சில பேருக்குக் கொஞ்சம் மோசமாக இருக்கும்போது ஜாக்கிரதையாக இருக்கணும்.''

''டாக்டருக்கு என்ன வேலை? என் வேலையிலே எல்லாம் தலையிடுவார். அவர் வேலைக்கும் என்னை இழுத்துப் போட்டு இம்சை கொடுப்பார்.''

''அந்தமாதிரி கணவன் மனைவி ஒத்து எல்லா இடங்களிலும் பங்கு கொள்வது எவ்வளவு நல்லது! அது எல்லாருக்கும் கிடைக்குமா? மீனா, நீ என் அலமேலு மாதிரி. உனக்கு என்ன வேண்டுமானாலும் கேளு. வாய்க்கு வேண்டியதைச் செய்து தரேன். அரைக்கணுமா, கரைக்கணுமா, டாக்டரைக் கூப்பிடவேண்டாம். உன் அலமேலுவே செய்து கொடுப்பாளே?'' என்று மொழிந்துவிட்டு, தனபாக்கியம் மாவுக் கையோடு மீனாட்சியின் மோவாயைத் தொட்டாள்.

மீனாட்சி சிரித்துக்கொண்டே மாவைத் துடைத்து விட்டுக்கொண்டாள். ''உங்கள் அலமேலுவுக்கு எப்பக் கல்யாணம்? பேசாமல் இருக்கிறீர்களே?'' என்று கேட்டாள்.

தனபாக்கியம் உரலையே பார்த்தாள்.

''என்னாங்க? கேட்கிறேன், பதிலே காணுமே?''

''நான் என்ன சொல்கிறது, மீனா? கடவுள் மனசு வச்சா அஞ்சு நிமிஷம்; அதுதான் எப்போன்னு தெரியலை.'' ஒரு பெருமூச்சு வெளிவந்தது.

''என்ன தயக்கம்? பெண்ணைப் புதுசா பார்க்கணுமா? மாப்பிள்ளை வெளியூரா? லீவு கிடைக்கவில்லையா? என்னதான் இந்தத் தொய்வுக்குக் காரணம்?'' என்று குடைந்து குடைந்து கேட்டாள் மீனாட்சி.

''பங்காருவும் மணவாள அண்ணனும் ஆசைப்பட்டு அலமேலுவைக் கேட்டார்கள். கோபாலுவை நினைச்சா யார் பெண்ணைக் கொடுப்பாங்க? பெரியவங்களை உத்தேசம் பண்ணிச் சரின்னோம். மாரியம்மனும் உத்தரவு தந்தாள். அப்புறம் பங்காருவுக்கு உடம்புக்கு வந்துவிட்டது. அவள் முன்போல் பேசாததைப் பார்த்து நான்கூட அவளைத் தவறாக நினைச்சுட்டேன்; புதுசா சம்பந்தி மரியாதை கொண்டாடறாளோன்னு தப்பா நினைச்சேன்.''

மீனாட்சி கலகலவென்று சிரித்தாள். ''நீங்க ஒண்ணு, அம்மா'' என்றாள்.

''ஆமாம், மீனா. நானும் பங்காருவும் குழந்தைமுதல் ஒண்ணா விளையாடினவங்க. அவள் நடத்தை புதுசா இருந்தது. கோபாலு வீடு வந்து ரொம்ப நாளாச்சாம்; அவ ஏங்கினாள். நாம என்ன செய்ய முடியும்? சண்முகத்தை அனுப்பி அவனைக் கூட்டிவரச் சொன்னேன்; அதுதான் நம்மாலே முடியும்.''

''வாய்விட்டுப் பேசணும் அம்மா. முகூர்த்தம் எப்போன்னு கேட்கவேண்டியதுதானே!''

''எப்படி மீனா கேட்க முடியும்? அம்மன் இஷ்டப்படி நடக்கட்டும்; உத்தரவு தந்தவ அவதானே? அவளே நடத்திக் கொடுக்கட்டும். பங்காருவுக்கு உடம்பு கெட்டதுகூட அலமேலுவோட ராசின்னு சொல்லாமல் இருந்தால் சரிதான்.''

அதன்பிறகு பேச்சே இல்லை; கடகட குடுகுடு என்று அரைக்கும் சத்தமே கேட்டது.

மீனாட்சி இதர வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள். தனபாக்கியம் அரைத்த மாவை எவர்ஸில்வர் அடுக்கில் வழித்து எடுத்து வைத்துவிட்டு வீட்டுக்குக் கிளம்ப ஆயத்தமானாள்.

''நீங்க சொல்லுங்க. நான் வேண்டுமானால் பங்காரு அம்மாவையோ மணவாளச் செட்டியையோ கேட்கட்டுமா? நீங்கள் கேட்பது உசிதமாக இராமல் இருக்கலாம். கல்யாணத்தை நிச்சயம் பண்ணிவிட்டுச் சும்மாக் காலம் கடத்தக் கூடாதுங்க. வயது வந்தவங்க ஆணும் பெண்ணும். பிரித்து வைப்பது சரியில்லைங்க'' என்றாள் மீனாட்சி.

தனபாக்கியம் சிந்தனையோடு எங்கோ பார்த்தாள். அவள் பதில் சொல்லாமலே கிளம்பிவிடுவாளோ என்று மீனாட்சிக்குத் தோன்றவும் அவள் தனபாக்கியத்தினிடம் பேச்சுக் கொடுத்து நிறுத்தினாள்; ''இந்தப் பிஸ்கோத்து அடுப்பைப் பார்த்தீங்களா? இதிலே கேக்கு வகைகள் எல்லாம் செய்யலாம்'' என்று திடீரென்று பேச்சை மாற்றினாள்.

தனபாக்கியம் வேதனைப் புன்சிரிப்பு ஒன்று பூத்துக்கொண்டே மீனாட்சியின் கன்னத்தைத் தட்டிக் கொடுத்தாள். ''குழந்தைக்குப் போக்குக் காட்டுவது போல எனக்கும் காட்டுகிறாய். ஹூம்! உன் கிட்டே சொன்னால் என்ன, மீனா? அலமேலு கல்யாண விஷயம் அவ்வளவு சுலபமாக நடப்பதாக இல்லை. பிள்ளைக்குக் கல்யாணம் நிச்சயம் பண்றவங்க அவனைக் கேட்டுத் தெரிஞ்சிண்டு காரியத்தில் இறங்கணும். ஆனால் என் ரத்த நாளங்களிலே ஓடற நம்பிக்கை ஒண்ணு இருக்குதே? அம்மன் வாக்குப் பொய்யாகுமான்னு யோசிக்கிறேன். நம்மை வச்சு ஆட்டிப் படைக்கிறவளை மீறி ஒண்ணு நடக்குமான்னு யோசிக்கிறேன். ஒரு சமயம் பார்த்தா இந்தக் காலத்துப் பசங்க பேசற மாதிரி தோணுது. நாம் செய்கிற முட்டாள்தனத்துக்குத் தெய்

வத்தைக் குறை கூறலாமான்னு நானே கேட்டுக்கிறேன்'' என்றாள்.

மீனாட்சிக்கு ஒரு தினுசாகச் சிக்கல் புரிந்துவிட்டது. அலமேலு மதன கோபாலன்மீது வைத்திருக்கும் அன்பும் பகிங்கரமாகத் தெரிந்தது. 'ஒரு தாய்க்கு இது பெரிய பிரச்னைதான்' என்று தனக்குள் கூறிக்கொண்டாள் அவள். வெளிப்படையாக, ''கவலைப்படாதீங்க. எல்லாம் சரியாகிவிடும். அலமேலுவைப் போன்ற பொண்ணு அவங்களுக்குக் கிடைப்பாளா?'' என்றாள்.

''பணம் படைச்சவங்களுக்கு எது தான் கிடைக்காது, மீனா? அதைப்பற்றி நமக்கென்ன? இப்ப பங்காரு பொளைச்சு எழுந்தாப் போதும். எனக்கு அதைப் பற்றி டாக்டர் என்ன சொல்றார்னு கேட்டுச் சொல்லு. இந்தப் பொண்ணைக் கேட்டு நிச்சயம் செய்ததிலிருந்து அவள் படுத்திட்டா. ஊரிலே வதந்தி கிளம்பினால் ரொம்பக் கஷ்டம். அப்புறம் அவளைக் கட்டிக் கொடுக்க முடியாது. இப்பவே என் மண்டையிலே ஆயிரம் வண்டு குடையுது, மீனா எங்க வீட்டுச் செட்டியார் ஒரு மாதிரி. பணத்தைப் பற்றி அப்பட்டமாப் பேசுவாரு. பணம் இருந்தால் எதையும் சாதிக்கலாம், எதையும் செய்துக்கலாம் என்கிற எண்ணம் அவருக்கு. தாட்சண்யத்திலே வளர்ந்த நமக்கு, அது கொலைக்குற்றம் மாதிரி தோணுது.''

''மாணிக்கம் நல்லாப் படிச்சவர், பண்புள்ளவர். தாட்சண்யம் மிகுந்தவர். அவரை விட்டுப் பேசிப் பார்க்கச் சொல்லுங்க'' என்றாள் மீனாட்சி.

தனபாக்கியம் ஏதோ பேச நினைத்தாள். ஆனால் சட்டென்று அடக்கிக் கொண்டு விட்டாள். ''ஆகட்டும், அவனிடம் சொல்லிப் பார்க்கிறேன். நான் வரேன் மீனா. ஏதாவது ஒத்தாசை வேணுன்னா கூப்பிடு, என்ன? பெத்த தாயைப் போல நினைச்சுக்க. அலமேலு உன்னைத்தான் 'அக்கா, அக்கா'னு நினைச்சிருக்கு'' என்றாள்.

''நானும் என் சொந்தத் தங்கைன்னுதான் நினைச்சிருக்கேன். அதனால் தான் உங்களைக் கேட்டேன்.''

''நாம் பேசினது நம்மோடு இருக்கட்டும், ஆத்தா'' என்றாள் தனபாக்கியம்.

''டாக்டர் கிட்டே கூடச் சொல்ல மாட்டேன். பயப்படாதீங்க. உங்கள் சின்னப்பிள்ளை கோபாலுகிட்டே பழகுகிறாரே..?''

''அதுவா? அது கடுகு, மிளகாய் அளந்து கொடுக்கத்தான் லாயக்கு. கோபாலுகூடச் சேர்ந்து கூத்தடிக்கிறான், குழாயை மாட்டிக்கிட்டு. துப்பு இல்லே. மாணிக்கம் செய்யலாம். தைரியமில்லாத பிள்ளையாக இருக்கிறானே?'' பெருமூச் செறிந்தாள் தனபாக்கியம்.

மீனாட்சி ஏதும் பேசுவதற்குள் யசோதா குடல் தெறிக்க ஓடிவந்தாள். டாக்டர் அவர்கள் இரண்டு பேரையும் அவசரமாகக் கூப்பிடுவதாகச் சொன்னாள். (தொடரும்)

அமரர் சிதம்பர சுப்ரமணியன்

சிறந்த தமிழ் எழுத்தாளராகிய திரு என். சிதம்பர சுப்ரமண்யன் 26-4-77 அன்று இறைவன் திருவடியை அடைந்தார். வாஹினி ஸ்டுடியோவில் மானேஜராக இருந்து ஓய்வு பெற்ற அவர் சில காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார்.

மழவராயனேந்தல் சுப்பராம பாரதியார் என்னும் இசைப் பெரும்புலவர் வழிவந்தவர், சிதம்பர சுப்ரமண்யன். அந்த வித்துவான் பெரியபுராணக் கீர்த்தனைகளைப் பாடியவர். அந்தக் குடும்பத்தில் சிலர் தமிழ்ப் பெரும்புலவர்களாகவும் விளங்கினார்கள். அத்தகைய வழியில் வந்த சிதம்பர சுப்பிரமணியனும் சங்கீதப் பயிற்சியும் இலக்கிய அறிவும் உடையவராக இருந்தார். வீணை வாசிக்கப் பழகினார். இலக்கியங்களைச் சுவைத்துப் படித்தார். பல சிறுகதைகளையும் நாவல்களையும் கட்டுரைகளையும் எழுதினார். அவர் எழுதிய சக்ரவாகம் முதலிய சிறுகதைகள் அக்காலத்தில் பலராலும் பாராட்டப் பெற்றன. சங்கீத உணர்வுடையவராதலின் ஒரு ராகத்தின் பெயரையே சிறுகதைத் தொகுப்புக்கு வைத்தார். ஒரு சங்கீத வித்துவானை நாயகராக வைத்து, ''இதயநாதம்'' என்ற நாவலை எழுதினார்.

அவருடைய சிறுகதைகள் கச்சிதமான வடிவம் உடையவை; மனித உணர்ச்சியை உருவாக்குபவை; புறவருணனைகளைவிட அகவருணனை மிக்கவை.

சிதம்பர சுப்ரமண்யன் காரைக்குடியைச் சேர்ந்தவர். பழகுவதற்கு இனியவர். அவர் கடும் சொல் சொல்வது மிகமிகக் குறைவு.

கலைமகளுக்கும் அவருக்கும் நெடுங்காலத் தொடர்பு உண்டு. கலைமகளில் தம் சிறுகதை வெளியாவதைப் பெருமையாக நினைத்தார். அதைப்பற்றி அவரே எழுதியிருக்கிறார்.

தெய்வ பக்தியும் நித்தியமான பண்புகளில் விருப்பமும் யாரிடமும் சுமுகமாகப் பழகும் இயல்பும் உடைய அவரை இழந்ததனால் வாடும் அன்பர்கள் பலர். அவரை இழந்து வாடும் சுற்றத்தாருக்கும் பிறருக்கும் எம் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



11. சுந்தரம்

நளினி மீனாட்சி வீட்டை அடைந்தபோது மீனாட்சி வெளியே சென்றிருந்தாள். அதனால் அவள் உடனே மாணிக்கத்தின் வீட்டைத் தேடி வந்தாள். அலமேலு அவளைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் வரவேற்றாள். அலமேலு இருப்பதைக் கண்டதும் நளினி, காரைத் திருப்பி அனுப்பிவிட்டாள். "ரத்தினம், கார் மாலை ஆறு மணிக்கு வந்தால் போதும்" என்று பணித்துவிட்டாள்.

"என்ன, அலமேலு, அப்படிப் பார்க்கிறே? நாள் முழுவதும் நான் இங்கே இருக்கக்கூடாதா?" என்று நளினி கேட்ட பிறகே அலமேலுவுக்குத் தான் அவளை ஆச்சரியத்துடன் பார்ப்பது தெரிந்தது. "நான் அப்படிச் சொன்னேனா, அக்கா?" என்று கேட்டாள்.

"என்னை 'அக்கா' என்று கூப்பிட வேண்டாம். 'நளினி' என்று கூப்பிடு."

"அதெப்படி முடியும்? உங்க வயசு, படிப்பு, அந்தஸ்து . . . ."

"வயசு கூட இருக்கலாம். என்ன பெரிய படிப்பு எனக்கு? பள்ளிப் படிப்புத் தானே? உனக்கு உலக ஞானம் இருக்கிறதே? அப்பாவுக்கு என்ன சம்பளம் என்பதுதான் அந்தஸ்தா?"

"உங்கள் அப்பாவின் பதவி...?"

"உங்கள் அப்பாதான் கையிலே பொன், இடுப்பிலே பொன், காதிலே பொன், கழுத்திலே பொன் எல்லாம் போட்டிருக்கிறார்."

அலமேலு நளினியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். ஒருகால் தன் தகப்பனாரை நளினி கேலி செய்கிறாளோ என்று எண்ணினாள். நளினி கபடமற்றுச் சிரித்தாள். அலமேலுவை அழைத்துக் கொண்டு கூடத்துக்குப் போனாள்.

"இன்னிக்கு அப்பாவும் மாணிக்கமும் வெளியூர் போயிருக்காங்க. செய்ய வேண்டிய வேலையைச் சீக்கிரம் முடித்துக் கொண்டு இங்கே வந்துவிட்டேன். கூடை நிறையப் பூ கொண்டு வந்திருக்கிறேன். ஜடை தைக்கக் கற்றுக்கப் போகிறேன்."

தனபாக்கியம் ஆச்சரியத்துடன் இரு கைகளையும் தட்டிவிட்டுக் கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.

"நான் சும்மா சொல்லவில்லை" என்று கூறிக்கொண்டே நளினி, சுவரில் சாய்த்து வைத்திருந்த பலகையைக் கீழே போட்டு, மல்லிகை, அரளி, மருவு, கனகாம்பரம் யாவற்றையும் எடுத்து வைத்தாள். "நீ சொல்லித் தரணும்" என்றாள், அலமேலுவின் கையைப் பிடித்து.

"உங்கள் தலையிலே வேண்டுமானாலும் தைத்து விடுகிறேன்" என்றாள் அலமேலு.

"யார் தலையில் வைப்பது என்பதைப் பிறகு பார்க்கலாம்" என்று கூறித் தைக்க ஆரம்பித்தாள் நளினி.

அவள் கொண்டு வந்திருந்த வாழை மட்டையையும் ஈர்க்கையும் வகையாக அமைத்துக் கொடுத்தாள் அலமேலு. அவளது மேற்பார்வையில் ஜடை தைத்து முடிக்க இரண்டு மணி நேரம் பிடித்தது. அதுவரை நளினி வளவளவென்று பேசிக்கொண்டிருந்தாள். கல்லூரியில் நடக்கும் வேடிக்கைகளைப்பற்றி விவரித்தாள். அலமேலு மெய்ம்மறந்து கேட்டாள்.

"நளினி அக்கா, நீங்கள் ஒரு நாள் இருக்கிறமாதிரி ஒரு நாள் இருப்பதில்லை. ஒரு நாள் வளவளவென்று பேசுகிறீர்கள். ஒரு நாள் பேசவேமாட்டேன் என்கிறீர்கள்."

"ஒன்றுமில்லை. நான் எப்போதும் ஒரேமாதிரிதான். நீங்கள் தாம்.."

"என்ன, நானு?"

"ஆமாம். நீயும் உன் அண்ணனும். மாணிக்கம் ஒரு நாள் கலகலப்பாகப் பேசுவார். ஒரு நாளைக்கு இடி இடித்தால் கூட நகரமாட்டார் மனிதர்."

"என்ன, அண்ணன் அங்கேகூட அப்படித்தானு? நான் பார்த்தவரையில் உங்கள் கிட்டேயெல்லாம் மனம் விட்டுப் பழகுகிறுரே?"

"நீ பார்த்தாய்!"

"என்ன, அக்கா, இன்னிக்கு முழு சாகச் சண்டையிலே இறங்கிட்டீங்க?"

"ஆமாம். நீ ஏன் 'அக்கா, அக்கா'ன்னு கூப்பிடறே?"

"நல்ல கதையாக இருக்கிறதே!"

"ஒரு கதை சொல்லட்டுமா?"

"சொல்லுங்க."

"அன்னிக்குப் பத்மினி வீட்டிலே பார்ட்டி..."

"ஆமாம். பத்மினிக்கா சீட்டு எழுதி அனுப்பிச்சுது. நான் அண்ணனுக்கு உடுப்பு அனுப்பினேனே?"

"பத்மினி மாணிக்கத்தைக் கூப்பிட்டாள். மாணிக்கமும் பெருமாள் மாடு மாதிரி தலையை ஆட்டிவிட்டார்."

"என்னுங்க எங்க அண்ணனை என்ன என்னவோ சொல்றீங்க?"

"அப்படித்தாங்க சொல்லுவோம். எங்களுக்குத் தெரியும் சரியான சமயத்திலே ஐயா கம்பி நீட்டிடுவாருன்னு."

"அப்படி ஒண்ணுமில்லே. அண்ணன், நீங்களெல்லாம் கூப்பிட்டால் தட்டவே மாட்டாரு."

"ரொம்பத்தான் அண்ணனுக்குப் பரிந்து பேசாதே. அவர் டீ-பார்ட்டிக்கு வரணும்னு பத்மினியும் அவருந்தான் இருக்கணும். போனுல் போகிறதென்று நான் இருக்கலாம். என்னேடு பேசவும் மாட்டாரு."

"உன்னேடு பேசாமல் என்ன? என் கிட்டே எத்தனை தடவை சொல்லியிருக்காரு-நளினிக்கு இது பிடிக்கும், நளினி இப்படிச் சொல்லிச்சு, நளினிக்கு ரோஜாப்பூன்னு உசிரு...அப்படி இப்படின்னு."

"நிஜமாகவா? அதிசயமாக இருக்கிறதே?"

சரி, டீபார்ட்டி கதையைச் சொல்லுங்க."

"அதற்காகத்தான் நாங்கள் தந்திரமாக அவர் பெட்டிச் சாவியை வாங்கி உடுப்பை வரவழைத்தோம். சாயங்காலம் நான் பத்மினி வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். உங்கள் அண்ணன் ரத்தினத்திடம் சொல்லிவிட்டுக் கிளம்பிணுரு. நான் பிடித்து விட்டேன்."

"நீங்கள் தயாராக உடுப்பு வாங்கி வைத்திருக்கிறது அவருக்குத் தெரியுமா? வீட்டுக்கு வந்து வேறு உடைமாற்றிக் கொள்ளலாம் என்று நினைத்திருப்பாரு."

"என்ன வக்கால்த்து அண்ணனுக்கு! ரத்தினத்துக்கிட்டே என்ன சொன்னுர் தெரியுமா? 'டீபார்ட்டியிலே யாராவது தேடப்போருங்க. நான் அவசர ஜோலியா ஓரிடம் போகணும்' என்று. எங்கள் பேச்சுக்கு மதிப்புக் கொடுத்து வரணும்னு நினைக்கிற ஒரு மனிதன் இப்படித்தான் சொல்வாரோ?"

"உடனே பத்மினி அக்கா கிட்டே சொல்லி விட்டீர்களாக்கும்?"

"ஆமாம். அவள் ஆத்திரம் தீரத் திட்டினுள். கேட்டுக்கொண்டு பல்லை இளித்தார் உன் அருமை அண்ணன்."

"பத்மினிக்குக் கொஞ்சம் வாய்த்துடுக்கு ஜாஸ்திதான்."

நளினி திடுக்கிட்டவளாக அலமேலுவை நோக்கினுள். "பத்மினி தைரியமாகப் பேசுவாள். ஆனுல் பண்பு மிகுந்தவள். அநாவசியமாக ஒருவர் உள்ளத்தைப் புண்படுத்தமாட்டார்."

நளினி கூறியது அலமேலுவின் மனசுக்குப் பிடிக்கவில்லை போலும். ஆயினும் பண்பு கருதி அவள் பேசாமல் இருந்தாள். அதனுல் பேச்சைத் திசைமாற்றினுள். "உனக்குச் செடி பிடிக்குமா?" என்று கேட்டாள்.

"ஆமாம். அதுதானே எங்களுடைய நித்தியத் தோழன்!"

"அண்ணுவுக்குக் கொள்ளை ஆசை. ஒரு செடியைக் கொண்டு வைப்பார். எங்கள் சின்ன அண்ணன் அதைப் பிய்த்துப் போட்டுவிடுவார்."

"உங்கள் சின்ன அண்ணன் ஏன் அப்படிச் செய்யவேண்டும்?" என்று நளினி கேட்கும்போது அவள் முகம் கருகருவென்று ஆகிவிட்டதைக் கவனித்தாள் அலமேலு. "சின்ன அண்ணன் விளையாட்டு அது" என்ருள் சிரித்துக்கொண்டே.

"நல்ல விளையாட்டு. ஒரு மனிதன் ஆசையோடு கஷ்டப்பட்டு ஒரு செடியைக் கொண்டு வைப்பதும், அதை மற்றவர் பிய்ப்பதும் ஒரு விளையாட்டா? சண்முகம், மாணிக்கத்தைப் போல் நல்ல குணமாக இருக்க மாட்டார்போல் இருக்கிறதே?"

அலமேலு கலகலவென்று சிரித்தாள்.

நளினி மிகவும் ஈடுபாட்டுடன் பேசினுள். "அவரை எங்கள் வீட்டோடு இருக்கச் சொல்கிறுர் எங்கள் அப்பா. அவர்தாம் மாட்டேன் என்கிறுர். இருந்தால்...? அவர் விருப்பப்படி செடி போடலாம், எழுதலாம், படிக்கலாம்."

நளினியின் குரலில் தெரிந்த ஏக்கம் அலமேலுவுக்கு விந்தையாக இருந்தது. "அவருக்கு அம்மாகிட்டே மிகவும் பிடிப்பு. அம்மாவைப் பார்க்காமல் இருக்கவே மாட்டார்."

"உன்கிட்டே ஆசையாக இருப்பாரா?"

"ஊம்...ஆசையாக இருப்பாருதான். ஆனால் நான் இலை தைத்துக்கொண்டும் வீட்டை மெழுகிக்கொண்டும், பற்றுத் தேய்த்துக் கொண்டும் இருக்க வேண்டுமாம். பூவேலை செய்து, துணி மணி தைத்து..அதெல்லாம் கூடாதாம்."

"ஏனும்?"

"அது ஏனோ? அண்ணனே ஒரு தினுசு. ஒன்றும் புரியவே புரியாது. எதையும் வாய்விட்டுச் சொல்லமாட்டார்." அலமேலு அடுத்த கணமே தன் நாக்கைக் கடித்துக்கொண்டாள். ஆசிரியரின் பெண்ணின்முன் தன் அண்ணனை இழிவாகக் கூறிவிட்டோமே என்று நினைக்கையில் அவளுக்கு வேதனையாக இருந்தது. "அக்கா, நீ தைச்ச ஜடையை மீனுக்காவுக்கும் பங்காரு அத்தைக்கும் காட்டலாமா?" என்று கேட்டாள் அவள்.

நளினி ஜடையை எடுத்துக்கொண்டு நின்றாள். அலமேலுவும் கிளம்பினாள்.

மீனாட்சி ஜடையைப் பார்த்தவுடன் மிகவும் ஆனந்தப்பட்டாள். "நளினி, நாம் ஒரு கண்காட்சி வைப்போம். அலமேலு ஒருத்தியே இல்லாமல் நீயும் தைத்து வைக்கலாம். நல்ல விற்பனையாகும்" என்றாள்.

"போ, எதற்கெடுத்தாலும் சங்கந்தான் உன் நினைப்பு. நான் உனக்குத்தான் வைத்து அழகு பார்க்கப் போகிறேன்" என்றாள் நளினி.

"ஆமாம். உங்கள் பிறந்த வீட்டில் செய்தால் எங்களுக்குத் தெரியப் போகிறதா? நாங்களே செய்து சந்தோஷப்படுவோம்" என்றாள் அலமேலு.

"பங்காரும்மா வீட்டுக்குப்போவோம். பாவம், படுக்கையோடு இருக்கிறார்கள்" என்றாள் நளினி.

அலமேலுவுக்குக் கொஞ்சம் தயக்கமாக இருந்தது. மதனகோபாலன் இருப்பானோ என்று யோசனை வந்தது.

"நான் என்னடி, சர்க்கஸ் பஃபூனா, என்னை நீங்கள் ஆட்டிவைத்து வேடிக்கை செய்ய?" என்றாள் மீனாட்சி கேலியாக.

அவர்கள் பங்காருவின் வீட்டுக்குள் நுழைந்ததுமே அந்த அம்மாள் முகம் மலர வரவேற்றாள். "வாங்க, அம்மா, பத்மினி வரலையா?" என்றாள்.

"அத்தை, பெரியம்மா, நாங்கள் மீனுக்காவுக்குப் பூ முடிப்பு நடத்தப் போகிறோம், பாருங்கள்" என்றாள் அலமேலு.

"மூன்றும் மாசம் நடத்தவேண்டியது தானே?"

"பாருங்க, அம்மா, இவங்க இரண்டு பேரும் கூத்தடிக்கிறதை!" என்றாள் மீனாட்சி.

"யார் தைத்தது ஜடை? நீயா, மீனாவா?" என்று கேட்டாள் பங்காரு ஜடையைப் பரிசீலித்தபடியே.

"இல்லை அலமேலு?" என்றாள் நளினி.

"அலமேலு தைக்கவில்லை. அதைப் பார்த்தாலே தெரியாதா?" என்றாள் பங்காரு.

நளினி அலமேலுவை இடுப்பில் குத்தி, பங்காரு பக்கம் கண்ணைச் சுழற்றி உதட்டைப் பிதுக்கினாள்.

"மருமகள் கைத்திறமை அந்த அம்மாளுக்குத் தெரியாதா, நளினி?" என்றாள் மீனாட்சி.

"ஆண்டவனே, முருகா!" என்றாள் பங்காரு.

"நீங்கள் எழுந்திருக்கக் கூடாது" என்றாள் மீனாட்சி.

பங்காரு பெருமூச்சை வெளிப்படுத்திவிட்டு மீண்டும் படுத்துக்கொண்டாள்.

அவளுடைய வேதனை தோய்ந்த முகத்தைப் பார்த்தாள் அலமேலு. அவள் இதயத்திலும் வேதனை நறுக்கென்று கொட்டியது. கஷ்டப்பட்டு அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டாள். "பெரியம்மா, மீனுக்காவுக்கு இந்த ஜடை நல்லா இருக்குதா?" என்று கேட்டாள்.

"ஜடைதான் நல்லாவே இல்லேன்னு சொல்லிட்டாங்களே?" என்றாள் நளினி.

"நான் அப்படிச் சொல்லவில்லை. ஒரு ஜடை தைத்த கைக்கும் நூறு ஜடை தைத்த கைக்கும் வித்தியாசம் இராதா? அதைத்தான் சொன்னேன். இந்த வட்டாரத்திலேயே அலமேலுவைப் போலத் தைப்பவர்களே கிடையாது."

"மருமகளை எவ்வளவு மெச்சினாலும் போதவில்லை" என்றாள் மீனாட்சி.

"ஆண்டவனே! ஆண்டவனே!"

"அலமேலு சீக்கிரம் தைக்க ஆரம்பி. நாழிகையாகிவிட்டது" என்றாள் நளினி.

"ஆமாம், வாங்க மீனுக்கா" என்று மீனாட்சியின் கையைப் பிடித்து அமர்த்தினாள் அலமேலு.

பங்காரு மெல்ல எழுந்து தன் இடுப்பிலிருந்து சாவிக்கொத்தை எடுத்து அலமேலுவிடம் தந்தாள். "பூஜையறையிலுள்ள என் கைப் பெட்டியிலிருந்து ராக்கொடியைக் கொண்டுவா" என்றாள்.

அலமேலு கைப்பெட்டியை எடுத்து வந்து எதிரே வைத்தாள். பங்காரு அதனின்று வைர ராக்கொடி, வைர அட்டிகை எல்லாம் எடுத்துக் கொடுக்கவும், அலமேலு மீனாட்சியின் தலையை அவிழ்த்துப் பின்னி ஜடையையும் தைத்து விட்டாள்.

நளினி சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியை எடுத்துக் காட்டினாள். மீனாட்சி நாணத்துடன் பார்ப்பதும் மகிழ்வதுமாக இருந்தாள்.

பங்காரு எழுந்து சென்று ஆரத்தி கரைத்து எடுத்து வந்து திருஷ்டி சுற்றிப் போட்டாள்.

அலமேலு ராமாயணக் கும்மி பாடினுள், நளினி ஒரு கீர்த்தனம் பாடினுள். அவள் பாடிக்கொண்டேயிருக்கும்போது மதனகோபாலன் அங்கே வந்துவிட்டான். அலமேலு வேகமாக வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டாள்.

''என்னுங்க, மிஸ்டர் கோபால், நீங்க வீட்டுக்குச் சரியாக வருவதேயில்லே யாமே? அம்மா கஷ்டப்படருங்க'' என்ருள் மீனுட்சி.

'''இளமையின் இன்பம்' என்ற நாடகம் போடரும். வேலே சரியாக இருக்கிறது.''

''நீங்கள் இளமையின் இன்பத்திலே திளேயுங்கள், அம்மா முதுமையின் முதிர்ச்சியிலே திண்டாடட்டும்.''

மதனகோபாலன் சிரித்தான்.

நளினி விடைபெற்று அலமேலுவைத் தேடி வெளியே சென்றுவிட்டாள்.

மீனுட்சியின் பேச்சினுல் தன் மகன் கோபங்கொள்வானே என்ற பீதி பங்காருவுக்கு. அதனுல் அவள் சட்டென்று, ''மீனுட்சி எவ்வளவு நல்லா யிருக்குது பார்த்தாயா, கோபாலு? ஜடை தைச்சிருக்காங்க. டாக்டரைக் கூப்பிடு, பார்க்கட்டும்'' என்ருள்.

''வேண்டாம். இந்த இரண்டு பெண்ணுங்களும் அடித்த கூத்தே போதும்'' என்ருள் மீனுட்சி. பிறகு மதனகோபாலனிடம் சிறிது நேரம் அவள் நாடகத்தைப் பற்றிப் பேசிவிட்டு, நகைகளேக் கழற்றிப் பங்காருவிடம் தந்து, ஜடையை அவிழ்த்துக் கையில் எடுத்துக்கொண்டு வீடு திரும்பினுள்.

அவள் வெளியே வரும்வரை நளினியும் அலமேலுவும் மாணிக்கம் வீட்டுத் தெருத் திண்ணேயில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களேப் பார்த்துச் சிரித்துக்கொண்டே மீனுட்சி தன் வீட்டுக்குச் சென்ருள்.

''நீ ஏண்டி வந்துட்டே, அலமேலு? இன்னும் கொஞ்ச நேரம் கண்ணுரக் கண்டுவிட்டு வருவதுதானே?'' என்று பரிகாசம் செய்தாள் நளினி.

அலமேலு ஒரு விநாடி பேசாமல் நின்ருள். மீனுட்சியைப் பார்த்து மதன கோபாலன் வாய் நிறையச் சிரித்தானே; அப்பொழுது எவ்வளவு கவர்ச்சியாக இருந்தது! யார்தான் அந்தச் சிரிப்புக்கு அடிமையாக மாட்டார்கள்? அவள் நெஞ்சு விம்மி அடங்கியது. தன்னேக் கட்டுப்படுத்திக்கொள்வதற்காக அவள் உடனே பேசினுள். ''பத்மினி அக்காவுக்கு எப்போ கல்யாணம்? மாப்பிள்ளே இப்போதே வந்துவிட்டாராமே? அவர்கள் பேசிக் கொள்வார்களா?'' என்று கேட்டாள்.

''பேசிக் கொள்வார்கள், பார்த்துக் கொள்வார்கள், சிரித்துக் கொள்வார்கள். ஏன், அலமேலு, நீ செய்வதெல்லாம் அவள் செய்யமாட்டாளா என்ன?'' என்று கூறிவிட்டு அலமேலுவின் கன்னத்தைக் கிள்ளினுள் நளினி.

''நான் பேசுகிறேனு?''

''நீ கண்ணுல் பேசுவாய்; பத்மினி வாயாடி, வாயால் பேசுகிருள்.''

அலமேலு தன் கண்ணில் வரும் நீரை மறைக்க எங்கோ பார்த்தாள்.

நளினி வீட்டுக் கார் வந்துவிட்டது. நளினி திண்ணேயிலிருந்து இறங்கி, ''ரத்தினம், நீ சாயங்காலம் ஆறு மணிக்கு வந்தால் போதுமென்று சொன்னேனே?'' என்ருள்.

''ஆமாம். சுந்தரம் ஐயா வருவதாகக் கடிதாசு வந்திருக்கிறதாம். உங்களே அம்மா கூட்டிவரச் சொன்னுங்க'' என்ருன் காரோட்டி.

''சரி, வருகிறேன்!'' என்று அவனுக்குப் பதிலளித்துவிட்டு நளினி அலமேலுவுடன் அவள் வீட்டுக்குள் நுழைந்தாள்.

''அக்கா, நீங்கள் ஒன்றுமே சாப்பிடாமல் போகக்கூடாது. எலுமிச்சம் பழமாவது பிழிந்து சர்பத் செய்கிறேன்'' என்ருள் அலமேலு.

''கொடு, கொடு சாப்பிட்டுவிட்டே போகிறேன்.''

நளினி கூடத்தில் அமர்ந்து ராக ஆலாபனே செய்துகொண்டு சர்பத்துக்குக் காத்திருந்தாள். தனபாக்கியம் எங்கோ வேலேயாக இருந்தாள்.

அலமேலு அவளுக்கு ஒரு கண்ணுடி டம்ளரில் சர்பத்தைக் கொண்டுவந்து அதில் ஓர் உறிஞ்சும் குழாயும் போட்டுத் தந்தாள்.

''ஓகோ! இதெல்லாங்கூட நீ வச்சிருக்கயா?'' என்ருள் நளினி.

''அண்ணனேத் தேடி உங்களேப்போல உள்ளவங்க வந்தால் இருக்கட்டும்னு வாங்கினேன். நல்லா இருக்கா டம்ளர்?''

''அபாரம், போ!''

''அக்கா, ஊரிலிருந்து யாரோ வராங்களாமே, யார்?''

''என் அத்தான். அவர் விடுமுறைக்கு இங்கேதான் வருவார்.''

அலமேலு நளினியின் கன்னத்தைக் குத்தினுள். ''ஆகா! அத்தானு? முறைப் பிள்ளேயா? எப்ப அக்கா முகூர்த்தம்?'' என்று கேட்டாள்.

''பொறு, பொறு. அத்தையாக இருக்கறவங்கெல்லாம் மாமியாரா?''

''தெரியும், அக்கா. நீங்க ஒண்ணேயும் மறைக்காதீங்க.''

''சரி, என்னே விடு. நான் போகிறேன். ரெயிலுக்கே போய் அழைத்து வர

வேண்டும்.'' நளினி காரில் ஏறிக் கொண்டு போய்விட்டாள்.

அவள் வீடு போய்ச் சேர்ந்தபோது அங்கே அவள் தாயார் காத்திருந்தாள். ''அப்பா இன்னும் வரவில்லை. நீ ரெயிலுக்குப் போய் அவனை அழைத்து வருகிறாயா?'' என்று கேட்டாள்.

''உம். போகிறேன். ரத்தினத்துக்குச் சுந்தரத்தைத் தெரியுமே; அவனை அனுப்பலாமே?'' என்று சிணுங்கினாள் நளினி.

''இது நன்றாக இருக்கிறதடி! நீயும் உன் அப்பாவும் போகிற வழக்கமாயிற்றே! அவன் ஆசையோடு எதிர்பார்ப்பானே!'' என்றாள் தாய்.

நளினி தன் அறைக்குப் போய் முகம் கழுவிப் பொட்டிட்டுக்கொண்டு வெளியே வந்தாள்.

''நீயே கார் ஓட்டிக்கொண்டு போகிறாயா?''

''ரத்தினமே ஓட்டட்டும், அம்மா'' என்றாள் நளினி, சுருக்கமாக.

ரெயிலடிக்குச் சென்று காத்திருந்த போது அவள் மனம் பலவிதமாக மாறி மாறி விந்தை செய்தது. அவளுடைய அத்தை மகன் சுந்தரம் வருவது அவர்கள் வீட்டில் ஒரு பண்டிகை போல. எல்லாருடனும் கலகலப்பாகப் பேசிப் பழகுவான் அவன்.

சுந்தரம் வந்தால் ஒவ்வொரு நாளும் கொண்டாட்டந்தான். எத்தனை நாடகங்கள், கச்சேரிகள், சினிமாக்கள் பார்ப்பார்கள்! இன்று ஏனோ பொறுமையின்றி அவள் காத்திருந்தாள்.

ரெயில் வந்தது. வண்டி நிற்கும் முன்பே, ''ஹாய், நளினி!'' என்ற குரல் கேட்டது. நளினி அங்கே ஓடினாள்.

சுந்தரம் இறங்கினான். அவனது வட்ட வடிவ முகம் சந்தோஷத்தில் மலர்ந்தது. சாமான்களை இறக்கிக் கூலி தலையில் வைத்துவிட்டு அவன் அவளுடன் நடந்தான். ''என்ன அடக்க ஒடுக்கம், புடைவை கிடைவை கட்டிக்கொண்டு பெரிய மாமி மாதிரி!'' என்றான்.

''ஆமாம், வயதாகவில்லையா?''

''மாமா ஊரில் இல்லையா?''

''இல்லை. அவரும் மாணிக்கமும் வெளியூர் போயிருக்கிறார்கள். மாணிக்கம் தெரியும் இல்லையா?''

''மாணிக்கமா? அது யார் மரகதம்?'' என்று கேலி செய்தான் சுந்தரம்.

நளினியின் முகம் கடுமையாகியது. ''மாணிக்கம் ஆராய்ச்சி மாணவர். இப்போது என்னையும் சேர்த்துக்கொண்டிருக்கிறார் அப்பா. இரண்டு பேரும் வேலை விஷயமாகப் போயிருக்கிறார்கள். நாளை மாலை வந்து விடுவார்கள்.''

சுந்தரம் ஆராய்ச்சி விஷயமாகப் பேச்சைத் திருப்பினான்; நளினி உற்சாகமாகப் பேசினாள்.

வீடு வந்ததும் அவள் முன்னே இறங்கிச் சென்றாள். சுந்தரம் சாமான்களை இறக்கி எடுத்துக்கொண்டு பின்னாடியே வந்தான்.

அவன் மாமி ஓடோடியும் வந்து உபசரித்தாள். அவன் அமரக்கூட இல்லை. அவனைச் சாப்பிட அழைத்தாள். அவனுக்குப் பிடித்தமான இட்டிலியும் வெங்காய கொத்ஸும் செய்திருந்தாள்.

''மாமி, மாமி, கொஞ்சம் நிறுத்துங்கள். இப்படி நான் இந்த நிமிஷத்தில் இருந்தே திணிக்க ஆரம்பித்தால் நான் திரும்பிப் போகும்போது இரண்டு டிக்கெட் வாங்க வேண்டி வரும்.''

''அப்படித்தான் ஆக வேண்டும். இந்தா, ஒரே ஒரு இட்டிலி'' என்று அவன் தட்டில் பூப்போன்ற இட்டிலிகளைக் குவித்தாள் நளினியின் தாயார்.

சுந்தரம் இட்டிலியைப் பார்க்கவில்லை. நளினியைப் பார்த்துச் சிரித்தான். ''இரண்டு டிக்கட்டு வாங்கலாமா, நளினி?'' என்று இருபொருள் படக் கேட்டான்.

நளினி முகத்தைச் சுளித்தாள். ''அம்மாவுக்கு இங்கிதமே தெரியாது. வயிற்றிலே அடைக்கத்தான் தெரியும். என்னையும் இப்படித்தான் துன்புறுத்துவாள்'' என்று பதில் தந்தாள்.

''நீயும் கொஞ்சம் சதை போட ஆரம்பித்து விட்டாய் என்று நினைக்கிறேன்'' என்று கிண்டலாகப் பேசினான் சுந்தரம்.

''நிஜமாகவா?'' என்றாள் நளினி.

''அவள் இப்பெல்லாம் டென்னிஸ் ஆடப் போவதில்லை. அதனால் இருக்கலாம். ஆனால் பருக்க மாட்டாள். உடல் வாகு'' என்று நளினியின் தாய் வெகுளித்தனமாகப் பேசினாள்.

''ஏன், நளினி?'' என்று கேட்டான் சுந்தரம்.

''மனிதர்களுக்கு ஒரே ருசியாக இருக்குமா, அத்தான்? ருதுக்கள் மாறுவது போல ருசிகளும் மாறுவது சகஜந்தானே?''

''எல்லாவற்றுக்குமே அதே நியதிதானா?'' என்று வேடிக்கையாகக் கேட்டான் சுந்தரம்.

''அநேகமாக.''

சுந்தரம் பலகாரத் தட்டைக் கீழே வைத்துவிட்டுக் கை கழுவி எழுந்து விட்டான்.

அவன் எழுந்து சென்றபோது நளினி அவனை உற்றுக் கவனித்தாள். ''அத்தான், நீங்க கூடக் கொஞ்சம் பெருத்து வருகிறீர்கள்'' என்றாள்.

''பழிக்குப் பழியா? ஒரு மில்லி கிராம் கூட எடை கூடவில்லை தெரியுமா?''

''நீங்கள் சொல்வதுதானே? வெளி நாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம் சைவ உணவு சாப்பிடுகிறேன் என்று

சொல்லிக்கொண்டு, பாலும், வெண்ணெயும், ஆடைக் கட்டியும் சாப்பிட்டு விட்டு..''

''உதை வாங்குவாய், அப்புறம்'' என்ருன் சுந்தரம் விளையாட்டாக.

நளினி கலகலவென்று சிரித்தாள். அவள் தாய் அவர்கள் இருவரையும் தன் அன்பு நோக்கினுல் இணைத்தாள்.

சுந்தரம் பெயருக்கேற்ற அழகன். நல்ல பசும்பால் போன்ற மஞ்சள் வெளுப்பு. அகல நெற்றி. வட்ட வடிவமான முகம். எடுப்பான நாசி. குவிந்த அதரங்கள். தலை மயிர் மட்டும் அடர்த்தி கிடையாது. மீசையோ கிருதாவோ இல்லாத தோற்றம்.

''என்ன, என்னை அப்படி அளக்கிறே நீ?'' என்று விளையாட்டாக நளினியின் முகத்தின் முன் சுட்டு விரலை ஆட்டிக் கேட்டான் சுந்தரம்.

''நீங்கள் மிகவும் பாவமான காரியம் செய்துவிட்டீர்கள்.''

''என்ன, என்ன சொல்? பிராயச்சித்தம் செய்து விடுகிறேன்'' என்ருன் சுந்தரம் வேடிக்கையாகவே.

''ஒரு பெண்ணைப் பார்த்து 'நீ குண்டாகி வருகிருய்' என்று யாராவது சொல்வார்களா? ஒரு பெண்ணின் வயசையும் கேட்கக்கூடாது, பருத்து விட்டாய் என்றும் சொல்லக் கூடாது. என்ன உலகம் சுற்றினுல் என்ன? இது தெரியவில்லை!'' என்ருள் நளினி.

''மன்னித்து விடு அம்மா தேவி. நீ பொற்கொடி போல இருக்கிருய். டென்னிஸ் விளையாடாதே. ஒருவித உடற் பயிற்சியும் செய்யாதே. எங்கள் மாமி போடும் சாப்பாட்டை ஓர் இழுப்பு இழு, போதும்!''

''அவள் கிடக்கிருள் சுந்தரம். உன் வயலினைக் கொண்டு வந்திருக்கிருயா? கேட்டு நாளாச்சு'' என்ருள் நளினியின் தாயார்.

''கொண்டு வந்திருக்கிறேன், மாமி. மேனுட்டுச் சங்கீதம் கூடத் தெரியும். கேட்கிறீர்களா?''

''எனக்கு அதெல்லாம் புரியாது, சுந்தரம். நம்ப கல்யாணி, பைரவி வாசித்தால் கேட்பேன்.''

''வாசிக்கிறேன். ஏய் நளீ, ஓடிப்போய் என் வயலினை எடுத்து வா. கொஞ்சம் உடம்பு இளைக்கட்டும்.., ஓ! தப்பு. தப்பு! நீதான் கொடியாயிற்றே!''

''கொண்டு வருகிறேன். ஆனுல் முதலில் தோடிதான் வாசிக்க வேண்டும்'' என்று பணித்தாள் நளினி.

''அப்படியே!''

நளினி அதற்கு முன்னதாகத் தானே தோடி ராகத்தைப் பாடிக் கொண்டே மாடிப்படி ஏறினுள்.

''பாட்டு மெருகு ஏறி யிருக்கிறது'' என்ருன் சுந்தரம்.

''அடிக்கடி பாடரு இப்ப.''

ராக ஆலாபனை கொஞ்ச நேரம் விலகி மீண்டும் நெருங்கி உரக்கக் கேட்டது. அவள் ராகம் முடித்து விட்டு, 'எல்லா அருமைகளும் எல்லாப் பெருமைகளும்..' என்று பதம் பாட ஆரம்பித்தாள். வயலினை மாடிப்படியில் எடுத்து வரும்போது, ''என் கணவருக்கிணையுண்டோ ராஜாதிராஜர் எதிர்கொண்டு வந்து நின்று கப்பமும் கட்டி..'' என்று பாடிக்கொண்டே இறங்கி வந்தாள்.

''ஆகா! யார் அந்த இணையில்லாதவர்?'' என்று அவள் வாயைக் கிண்டினுன் சுந்தரம்.

நளினி உடனே பதில் சொல்லவில்லை. எங்கோ தூரத்தில் பார்த்தாள். ஒரு கணந்தான். அதற்குள் ஒரு யுகம் கடந்த மாதிரி இருந்தது சுந்தரத்துக்கு.

''என்ன சொன்னீர்கள் அத்தான்?'' என்று கேட்டாள் நளினி, சொப்பனம் கண்டவள் போல.

''இணையில்லாத கணவன் யாரோ?'' என்று மீண்டும் கேட்டான் சுந்தரம்.

''அமரசிம்மேந்திரன்'' என்ருள் நளினி.

சுந்தரத்துக்குச் சப்பிட்டு விட்டது. அவன் வயலினை எடுத்து வைத்துக் கொண்டு தோடி ராகத்தை வாசித்தான். நளினி மெய்ம்மறந்து கேட்டாள். அவள் நெஞ்சு விம்மியது. அவள் முக பாவத்தைக் கவனித்துவிட்டுச் சுந்தரம் ஓர் இழுப்பு இழுத்து மெதுவாக நிறுத்தினுன்.

சொல்லிவைத்தாற்போல் நளினி அதிலிருந்து தொடர்ந்து பாடினுள். அவள் நிறுத்தியதும் சுந்தரம் மீண்டும் வாசித்தான்.

நளினியின் தாய் இன்பக் கனவுகளைக் கண்டாள். 'இப்படியே இவர்கள் இதயங்களும் ஒன்றி இன்ப ராகத்தில் மிதக்க வேண்டும்' என்று அவள் மனமார வேண்டிக்கொண்டாள்.

அவர்கள் தொடர்ந்து பாட முடியாமல் வெளியில் அரவம் கேட்டது. சுந்தரம் மெதுவாக ஒரு நிமிஷம் வாசித்து விட்டு நிறுத்தினுன். நளினி எழுந்து சென்று வெளியே எட்டிப் பார்த்தாள். ஓர் ஆள் சீட்டு ஒன்று கொண்டு வந்திருந்தான். நளினி அதைப் படித்துப் பார்த்துவிட்டுக் குதூகலமாக, ''அம்மா, அப்பாவும் மாணிக்கமும் இன்றைக்கே திரும்பி வருகிருர்களாம். இரவு ஏழு மணிக்கு ஸ்டேஷனுக்குக் காரைக் கொண்டுவரச் சொல்லி டெலிபோன் செய்திருக்கிருராம்'' என்ருள்.

''அப்பா ஊருக்குப் போய் ஒரு வருஷமாயிற்று? அவர் திரும்பி வருகிரு

என்றதும் இத்தனை குதிப்பு!'' என்று வியந்தான் சுந்தரம்.

''நானே காரை ஓட்டிக்கொண்டு போகிறேன், அம்மா'' என்றாள் நளினி.

சுந்தரம் அவளையே விந்தையாகப் பார்த்துக்கொண்டு நின்றான். நளினி அவன் பார்வையைச் சந்தித்தாள். தன் அத்தான் கேட்ட கேள்வி இப்போதுதான் அவளுக்கு உதயமாயிற்று. ஆமாம், அப்பா சீக்கிரம் திரும்பி வருவதில் என்ன அப்படி ஆனந்தம்? சுந்தரத்தின் முகத்தைப் பார்க்காமல் அவள் தன் பார்வையை அகற்றிக் கொண்டாள்.

''உங்களுக்காகத்தான். நாளை வரை மாமாவைப் பார்க்காமல் நீங்கள் இருக்க வேண்டாமே!'' என்றாள் அவள், சாமர்த்தியமாக.

12 சந்திப்பு

நளினி காரை வீட்டின் முகப்பில் கொண்டு நிறுத்தினாள். சுந்தரம் அவசரமாக வந்து அவள் அருகில் அமர்ந்தான். நளினியின் தாயார் அவர்கள் செல்வதைப் பார்த்துவிட்டு மகிழ்வோடு உள்ளே போனாள்.



நளினி பாதையைப் பார்த்தபடி வெளிநாட்டுச் சங்கீதக் கச்சேரிகளைப் பற்றியும் அங்குள்ள அரங்கங்களின் அமைப்பைப் பற்றியும் உற்சாகமாகப் பேசியவண்ணம் காரைச் செலுத்தினாள்.

''அக்கௌஸ்டிக்ஸ் மிகவும் ரசமான தத்துவம், அத்தான். அதைக் கவனித்துக் கட்டடங்களைக் கட்டினால் சங்கீதம்

கேட்க எவ்வளவு சுகமாக இருக்கும்! பாதிநேரம் சரியானபடி சபைக் கட்டடம் அமையாததால்தான் பாட்டே கெட்டு விடுகிறது'' என்றாள் நளினி.

ஒலியைப் பற்றிச் சுந்தரம் நிறையப் படித்திருக்கிறான். அவள் சொன்னதுபோல அவன் ஜெர்மனி, வியன்னா முதலிய இடங்களுக்குச் சென்றபோது கட்டடங்களைக் கவனித்துக் கற்று வந்திருக்கிறான். அதனால் ரெயிலடியை அடையும் வரை அவன் விரிவாக அதைப்பற்றியே பேசினான். தன் ஆராய்ச்சி சம்பந்தமாக நளினியும் ஒலியின் இயல்புகளை ஓரளவு அறிந்திருந்தபடியால் அவளாலும் பேச முடிந்தது, புத்திசாலித்தனமாகக் கிரகிக்கவும் முடிந்தது.

ரெயிலடி வந்ததும் கார்க் கதவுகளைப் பூட்டிவிட்டு இரு



வரும் ரெயில் நிலையத்துக்குள்ளே சென்றனர். வண்டியும் உடனே வந்துவிட்டது. ஆத்மநாதனைத் தொடர்ந்து மாணிக்கம் சாமான்களை எடுத்துக்கொண்டு பின்னால் இறங்கினான். ஆத்மநாதன் சுந்தரத்தைக் கண்டதும் சந்தோஷமாக அவனை நெருங்கி, ''எப்படா வந்தே? நீ எங்கேயோ தென் அமெரிக்காவிலே இருக்கேன்னு நினைச்சேன். உங்க அம்மா எழுதியிருந்தாளே!''

''மெக்ஸிகோ போயிருந்தேன். இரண்டு வார வேலைதான். திரும்பி வந்து இரண்டு நாளாச்சு. இரு வார லீவில் வந்திருக்கிறேன். அம்மாவும் என்னுடன் வரேன்னுதான் சொன்னாள். பிறகு கிளம்ப முடியவில்லை.''

''அப்புறம்?'' ஆத்மநாதன் தன் மருமகனையே பார்த்து மகிழ்ந்திருந்தார்.

மாணிக்கம் இரண்டடி தள்ளிக் கையில் பெட்டியும் தோல்பையும் சுமந்துகொண்டு நின்றான். நளினி அவனைப் பார்த்துக் கையை நீட்டினாள். ''பையை என்னிடம் கொடுங்கள்'' என்று கேட்டாள்.

''இருக்கட்டும். கார் திறந்திருந்தால் அதில் கொண்டுபோய் வைத்து விடுகிறேன்'' என்றான் மாணிக்கம்.

இவர்கள் பேச்சுக் குரல் கேட்டுச் சுந்தரம் அங்கே திரும்பினான். அகமும் முகமும் மலர நளினி மாணிக்கத்தைக் காட்டி, ''இவர்தாம் மாணிக்கம். இவர் என் அத்தான் சுந்தரம்'' என்று ஒருவருக்கு மற்றவரை அறிமுகப்படுத்தினாள்.

சுந்தரத்தின் ஒல்லியான உடலும், உயரமும், பெண்மை கலந்த அழகும், கள்ளங் கபடமற்ற பார்வையும் மாணிக்கத்தின் மனத்தைக் கவர்ந்தன. நளினி சுந்தரத்தின் அருகில் அழகுப் பிம்பமாக நின்றாள்.

'சரியான ஜோடி!' என்று மாணிக்கத்தின் மனம் முத்திரை குத்தியது.

மாணிக்கத்தின் கண்ணியமான பார்வையையும், அவனுடைய எளிமையான தோற்றத்தையும் கண்டான் சுந்தரம். மாணிக்கத்தின் கண்களில் கனவு காணும் தன்மையை உணர்ந்தான். 'ஞானஸ்தன், ரசிகன். இவன் நளினியின் சக மாணவன் மட்டும் அல்ல' என்று குறிப்பெடுத்தது சுந்தரத்தின் மனம்.

கோதாவில் இறங்கிய வீரர்களைப் போல இருவரும் ஒருவரை மற்றவர் நோட்டம் விட்டனர். அதை மறைக்க மரியாதையாகப் பேசினார்கள்.

''உங்களைத் தெரிந்து கொள்வதில் எனக்குச் சந்தோஷம்'' என்று, கையைக் குலுக்குவதற்கு நீட்டினான் சுந்தரம்.

மாணிக்கம் இரு கைகளிலும் சாமான்கள் வைத்திருந்தபடியால், கை கொடுக்க இயலாமல் சங்கோஜத்துடன் தலையை ஆட்டிச் சிரித்து அந்த நட்புச் செய்கையை ஏற்றான்.

நளினி அதைப் பார்த்துச் சிரித்து விட்டு, அவன் கைப் பையைத் தன் கையில் வாங்கிக் கொண்டாள். மாணிக்கம் தன் வலக்கையைச் சுந்தரத்தின் பக்கமாக நீட்டினான்.

''வாருங்கள், நேரமாகிறது'' என்று ஆத்மநாதன் சுந்தரத்தைத் தன் கையால் உந்தியபடியே கிளம்பவும், மாணிக்கத்தின் நீட்டிய கை பிடிப்பின்றி அந்தரத்தில் நின்று விட்டுக் கீழே தாழ்ந்தது. நளினி அதைப் பார்த்து விட்டாள். மாணிக்கத்தின் முகம் கருகருவென்று ஆகிவிட்டது. அவன் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்டு வேகமாக நடந்தான். நளினி காரைத் திறக்க விரையும் சாக்கில் அவனைத் தாண்டி வண்டியிடம் நின்றாள். ''மிஸ்டர் மாணிக்கம், அப்பா உங்கள் கையைக் கவனிக்கவில்லை'' என்றாள், தாழ்வான குரலில்.

மாணிக்கத்தின் முகம் இளகவில்லை. 'நெஞ்சில் ஆழக்காயம் பட்டுவிட்டது போலும்' என்று நளினி ஊகித்தாள். 'இவருக்கு எதற்காக இப்படி ஒரு தாழ்வு உணர்ச்சி? அதனால்தான் சகஜமாக உள்ளதெல்லாம் விபரீதமாகப் படுகிறது!' என்று எண்ணினாள் அவள்.

மாணிக்கம் சாமான்களை வைக்கப் பின் பக்கத்துப் பெட்டியின் முன் நின்றான். நளினி குறிப்பறிந்து அதைத் திறந்து விட்டாள். அவள் ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்ததும், மாணிக்கம் பெட்டியை மூடிவிட்டு, ஆசிரியரும் சுந்தரமும் ஏறும் வரையில் வெளியே பணிவாகக் காத்திருந்தான்.

ஆத்மநாதன் முன்பக்க இருக்கையில் தன் மகளின் மருங்கில் அமர்ந்துகொண்டார். ''ஏறேன்டா'' என்றார், மாணிக்கத்தைப் பார்த்து.

''இல்லை, சார். நான் நேரே வீட்டுக்குப் போகிறேன்.''

''உன் வீட்டிலே உன்னை எதிர்பார்க்க மாட்டார்கள். ஏறு வண்டியிலே. இன்னிக்கு எங்கள்கூடச் சாப்பிட்டுவிட்டுப் போ'' என்றார் பேராசிரியர்.

தட்டமுடியாமல் மாணிக்கம் 'உம்' மென்று முகத்தை வைத்துக்கொண்டு ஏறி, சுந்தரத்தின் அருகில் அமர்ந்தான். ஆத்மநாதன், தாம் போயிருந்த இடத்தைப்பற்றியும், வேலையைப்பற்றியும் பேசிக்கொண்டே வந்தார். மாணிக்கம் ஓரிடத்தில் கூடப் பேச்சில் கலந்துகொள்ளவில்லை. வெளியே எங்கோ பார்த்துக்கொண்டிருந்தான்.

''எதற்கும் ஒன்று தட்டினால் மூன்று முறை என்பார்கள்'' என்று சிரித்துப் பேசிக்கொண்டே தன் வலக்கையை நீட்டி மாணிக்கத்தின் கையை எட்டிப் பிடித்துக் குலுக்கினான் சுந்தரம்.

மாணிக்கத்தின் மனப் புழுக்கம் கரைந்துவிட்டது போலும்! அழகாகச் சிரித்துத் தன் இரு கைகளால் சுந்தரத்தின் கையைப் பற்றினான் அவன்.

''என்ன சொன்னே, சுந்தரம்?'' என்று கேட்டுக்கொண்டு திரும்பினார் ஆத்மநாதன்.

''ஒன்றுமில்லை. இங்கே ஏதோ'' என்றான் சுந்தரம்.

''மாணிக்கம் தூங்கிப்போய் விட்டானா?'' என்று ஏளனமாகக் கேட்டார் ஆத்மநாதன்.

''இல்லை, சார்'' என்று பதில் தந்தான் மாணிக்கம்.

''நீங்க தான் பேசறீங்க, அப்பா. எல்லாரும் 'ஊம்' கொட்டணுமா?'' என்று கேட்டாள் நளினி. அவள் வழக்கம்போல் சிரிக்கவில்லை. கடுமையாக முகத்தை வைத்துக்கொண்டு ஓட்டுவதிலேயே முனைப்பாக இருந்தாள்.

சுந்தரம் மாணிக்கத்தினிடம் பேச்சுக் கொடுத்தான். "நீங்கள் நன்றாகப் பாடுவீர்களா?" என்று விசாரித்தான்.

"கேள்வி ஞானந்தான். யாரிடமும் முறையாகச் சிட்சை இல்லை" என்றான் மாணிக்கம், சுருக்கமாக.

"எல்லாம் நன்னாப் பாடுவான்" என்றார் ஆசிரியர்.

"அதனால்தானே நீங்கள் அவரை ஆராய்ச்சிக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்?" என்றான் சுந்தரம்.

"என் ஆராய்ச்சிக்கு நாலு களைச் சவுக்கத்தில் பாடத் தெரியவேண்டு மென்பதில்லை. மேளகர்த்தா புரிய வேண்டும் என்பதுமில்லை. சில சமயம் சுருதிப் பெட்டியில் பஞ்சமத்தையே வாசித்துப் பாய்ச்சுகிறோம். சுருதிப் பெட்டிக்கு இருக்கிற ஞானத்தைவிட எனக்குக் கொஞ்சம் கூடுதல்" என்றான் மாணிக்கம்.

"அது என்ன?"

"ஆமாம், சுந்தரம். அப்படியும் செய்கிறோம்" என்றார் ஆத்மநாதன். "அநேகமாக 'ரிகார்டட் ம்யூஸிக்'தான். நாகஸ்வர இசை பாய்ச்சுகிறோம். இப்போ இவன் ஏதோ புல்லாங்குழல் இசையைப் பாய்ச்சிப் பார்க்கிறான்."

"புல்லாங்குழலா? யாருடைய இசை? டேப் இருக்கிறதா?"

"யாருடையதோ தெரியாது. கேட்கச் சுகமாக இருக்கிறது. கல்யாணி ராகம் பயன்படுத்துகிறான்."

"யாருடையது?" என்று சுந்தரம் மாணிக்கத்தைக் கேட்டான்.

"ஏதோ கிடைத்தது."

அவர்கள் வீடு வந்து விடவும் நளினி காரை நிறுத்தினாள். மாணிக்கம் இறங்கி வேகமாக முன்பக்கம் போய் ஆசிரியருக்குக் கதவைத் திறந்தான்.

நளினி காரைவிட்டு இறங்கி வீட்டுக்குள் ஓடித் தன் அறைக்குள் புகுந்தாள்.

"நளினி ஏதாவது ரேஸுக்குப் பழகுகிறாளா?" என்று சுந்தரம் நையாண்டி செய்தான்.

"அப்படித்தான் தோன்றுகிறது" என்றான் மாணிக்கம், தாழ்வான குரலில்.

ஆத்மநாதன் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார். பத்மினி வருவதைப் பார்த்து அவர் அவளை வரவேற்க எழுந்துவிட்டார்; "வா, வா. அதென்ன சீதனம்?" என்று கேட்டார். அவள் பின்னாடி ஓர் ஆள் தலையில் ஒரு பெரிய பெட்டி வந்தது.

"டேப் ரிகார்டர், மாமா. கொஞ்ச நேரம் தமாஷாக இருக்கலாமே என்று தூக்கிக்கொண்டு வந்தேன்" என்றாள்.

அதை ஒரு மேஜை மீது வைத்தார்கள். நரசிம்மன் பின்னாடியே அரச நடை பயின்று வந்து சேர்ந்தான்.

"வாங்கோ, நரசிம்மன்" என்று ஆத்மநாதன் அவனை வரவேற்று சுந்தரத்துக்கு அறிமுகப்படுத்தினார்.

"கொல்லன் பட்டறையிலே ஊசி விற்க வந்தாயா?" என்று மாணிக்கம் பத்மினியைக் கேட்டான்.

"இங்கே டேப் ரிகார்டர் இருக்கிறதென்று தெரியும். ஆனால் நீங்க அதை எந்தப் பாத்திக்கு இணைச்சு வச்சிருக்கீங்கன்னு எனக்கு எப்படித் தெரியும்? அதனால்தான் கொண்டு வந்தேன்" என்றாள் பத்மினி.

ஆத்மநாதனும் நரசிம்மனும் வியப்புடன் அவர்களைப் பார்க்க, சுந்தரம் ரசித்துச் சிரித்தான்.

"நளினி எங்கே, மாணிக்கம்?" என்று பத்மினி சர்வசகஜமாகக் கேட்டாள்.

மாணிக்கம் செவிடாக இருந்து விட்டான். சுந்தரந்தான் அவளைக் கூப்பிடக் கிளம்பினான். அவன் திரும்பி வந்தபோது அவள் அவன் பின்னால் வந்தாள். பார்க்க மிகவும் களைப்பாகத் தென்பட்டாள். ஆனால் சிரித்த முகத்துடன் நரசிம்மனை வரவேற்றுவிட்டுப் பத்மினியின் அருகில் போய் நின்று கொண்டாள்.

"என் குரல் இந்த வட்டாரம் முழுவதும் கேட்குமே; நீ எப்படி இவ்வளவு நேரம் உள்ளேயே கிடந்தாய்?" என்று கேட்டாள் பத்மினி.

"ஸ்டேஷனிலேந்து காரை ஓட்டிக் கொண்டு வந்து விட்டாளாம். ஒலிம்பிக் தீவட்டியைத் தூக்கி வந்ததுபோல எண்ணம் வந்துவிட்டது. 'உஸ்' என்று மூச்சு விட்டுக்கொண்டு படுத்துவிட்டாள். விண்வெளிக்கே போய்ச் சஞ்சாரம் செய்துவிட்டு வந்த காலம் இது என்று நீங்கள் சொல்லுங்கள்" என்றான் சுந்தரம், பத்மினியைப் பார்த்து. நளினி நாக்கை நீட்டி அழகு காட்டினாள்.

"இங்கேயே சாப்பிடலாம்" என்று கூறிக்கொண்டே நளினியின் தாய் அங்கு வந்தாள்.

"அப்படித்தான் உத்தேசம். அம்மாகிட்டே சொல்லிவிட்டுத்தான் வந்தேன். ஆனால் விமரிசையாக விருந்து தயாரிக்க வேண்டாம். வற்றல் குழம்பு சாதம் போதும்" என்றாள் பத்மினி.

"அப்படியே!" என்று கூறிச் சிரித்துவிட்டு அந்த அம்மாள் அடுப்படிக்குப் போய்விட்டாள் மறுபடியும்.

எல்லாரும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

"அத்தான் வயலின் வாசிப்பார் தெரியுமா?" என்றாள் நளினி.

"தெரியுமே, நான் கேட்டிருக்கிறேன். நரசிம்மன் கேட்டிருக்கமாட்டார். மிஸ்டர் சுந்தரம், வாசிக்கிறீர்களா?" என்று கேட்டாள் பத்மினி.

கவனமாய்ப் பார்த்துக் கொள்ள அம்மா நீங்கள் இருப்பதனால்...





சும்மா இருக்கமாட்டான் அவன்... அதையும் இதையும் இழுத்துத் தள்ளுகிறான்!

அதனால் கவலை வேண்டாம். அவன் தன்னைக் காயப்படுத்திக் கொள்ளாமல் மட்டும் கவனித்துக் கொள்ளுங்கள். சோதித்து அறியும் அவனது முயற்சியைத் தடுக்காதீர்கள். அவனுக்கு ஆர்வம் அதிகம். தன்னைச் சுற்றி உணர்ந்து அறியும் துடிப்பு அது. தனது வலிமையையும், திறமையையும் பற்றிக் கற்றுணரும் முயற்சி அது.

மேலும் ஒரு பாடத்தைக் கற்க அவனுக்கு உதவுங்கள் இப்போது. திடமான உணவினைக் கடித்துத் தின்னும் வகையிலான பாடமே அது!

தின்பதற்குக் கொடுங்கள் ஒன்று—முழு நலமானதும், சுவைமிக்கதும், ஊட்டமளிப்பதும் ஆன ஒன்று...

உங்கள் கவனத்தை ஒத்த அன்பான கவனத்தோடு செய்தது ஒன்று.

அவனுக்குக் கொடுங்கள் ஒரு பார்லே க்ளூகோ பிஸ்கட்.

எங்கள் ஆலைக்கு வாருங்கள், பாருங்கள், பார்லே க்ளூகோ பிறப்பதை! 'முழு நலமானது' என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளுங்கள். எங்கள் ஆலை நவீனமானதொரு மருத்துவமனை போன்றது; அங்கு, எல்லாம் தாமே இயங்குவன; மிகவும் சுத்தமானவை; கைபடா தூய்மையோடு பிஸ்கட்டுகள் உங்களுக்குக் கிடைக்கின்றன.

பால், சர்க்கரை, க்ளூகோஸ் மற்றும் சன்னமாக அரைத்த கோதுமை முதலிய குழந்தைக்கு உகந்த ஊட்டங்கள் செறிந்த பார்லே க்ளூகோ பிஸ்கட் உங்கள் குழந்தைக்கு ஆதர்சமானது.

தவிரவும், சுவைமிக்கது இது; கரகரப்பானது; செரிப்பதற்கு எளியது—மென்று தின்று ரசித்து மகிழ்வான் உங்கள் குழந்தை.

உங்களின் அன்புக் கவனம் உங்கள் குழந்தையிடம்— எங்களுக்கும் அதே கவனம் பார்லே க்ளூகோ தயாரிப்பதில்.



பார்லே க்ளூகோ பிஸ்கட்டுகள்.

உலகத் தேர்வில் 5 முறை வெற்றி. உங்கள் வியாபாரியிடம் வண்ணமய 'பாப்பா' படமுள்ள உறையைப் பார்த்து வாங்குங்கள்.

everest/860/PP/tml

"எங்கள் நளினி நன்றாகப் பாடுவாள், தெரியுமா?" என்றான் சுந்தரம்.

"அவர்களுக்குக் கேட்டுக் கேட்டுக் காது புளித்துவிட்டது. பெரிய அதிசயம் ஒன்றுமில்லை" என்றாள் நளினி.

"உண்மையாகத்தான் சொல்கிறேன். இன்று காலை தோடி ராகம் பாடினாள். முன்னைவிட நல்ல மெருகு ஏறியிருக்கிறது" என்றான் சுந்தரம்.

"பாடு, நளினி."

"அத்தான் வாசிக்கட்டும்."

"எனக்குப் பாட்டே ரசிக்கத் தெரியாது" என்றான் நரசிம்மன்.

"நல்ல பாட்டுக் கேட்டால் ரசிக்கலாம்" என்றாள் பத்மினி.

"முதலில் சாப்பாடு ஆகட்டும்" என்று நளினியின் தாய் அழைத்தாள்.

"மாமி, முந்திரிப் பருப்பும் ஏலக்காயும் மணக்கிறதே?" என்று கேட்டுக்கொண்டே பத்மினி எழுந்தாள்.

அனைவரும் பேசிக்கொண்டே சாப்பிட்டார்கள். நளினியின் தாய் விருந்து தயாரித்திருந்தாள். இலை முன் அமர்ந்து, தலை தூக்காமல் பேசாமல் சாப்பிட்டவன் மாணிக்கம் ஒருவன்தான்.

சாப்பாடு முடிந்ததும் வெற்றிலை, பாக்கு, மலைவாழைப்பழத் தட்டுடன் எல்லாரும் முன்பக்க ஹாலுக்கு வந்தனர்.

சுந்தரம் தன் வயலினை எடுத்து, சினிமாப் பாட்டுகள் சிலவற்றை வாசித்தான். நரம்பைத் தளர்த்திவிடும் 'பாப்' சங்கீதம் வாசித்தான். நரசிம்மன் தன் காலால் தாளம் போட்டான்.

"ஐயா ரசிக்கிறார், பாரு" என்றாள் பத்மினி.

"நான் சாஸ்திரீய சங்கீதம் தெரியாது என்றேன்" என்று விளக்கினான் நரசிம்மன்.

"சரி, நளினி, நீ பாடு" என்றான் சுந்தரம்.

"மாணிக்கம் பாடட்டும்" என்றாள் நளினி, தாழ்ந்த குரலில்.

"நீங்கள் யாருமே பாடவேண்டாம்" என்றாள் பத்மினி. அவள் டேப் ரிகார்டரை இயக்கிவிட்டாள். முன்பு பிரின்ஸிபாலின் வீட்டில் பாடிய சிங்கன்-சிங்கி பாட்டு வெளிக் கிளம்பியது.

நளினி எழுந்து வந்து பத்மினியின் முதுகில் 'படார்' என்று ஓர் அறை வைத்தாள். "அடி, திருடி. இதற்காகத்தானா இன்றைக்கு இதைத் தூக்கிக்கொண்டு வந்தே?"

"ஆமாம். நீங்கள் அன்றைக்கு வந்தபோது என் டம்பப் பையில் வைத்திருந்தேன் காஸ்ஸெட் ரிகார்டர். அதிலிருந்து பிறகு பெரிய டேப்பில் மாற்றிவிட்டேன். பார்ட்டி அன்றே வைத்து உங்களைத் திணற அடிக்க வேண்டுமென்று நினைத்தேன். நேரம் கிட்டவில்லை."

நளினி மீண்டும் ஓர் அறை வைத்தாள்.

"கூட எனக்காக ஓர் அடி" என்றான் மாணிக்கம், ரகசியக் குரலில். ஆனால் உடனே அதற்காக வருந்தினான் அவன். நரசிம்மன் வெட்டி விடுவான் போலத் தன்னைப் பார்ப்பதை அவன் கவனித்துவிட்டான். அவனுக்கு மிகவும் சங்கடமாகிவிட்டது. நரசிம்மனின் முறைப்பு அவனுடைய சிந்தனைகளைக் கிளப்பிவிட்டது.

பத்மினி ஒருத்தியிடந்தான் அவன் மிகச் சலுகையுடன் பழகியிருக்கிறான். அவளை நரசிம்மன் கல்யாணம் செய்துகொண்டு போய்விடப் போகிறான். இன்றே அந்த மனிதன் சொந்தம் கொண்டாடுகிறானே!

மற்றவர்கள் டேப்பில் பாட்டுக் கேட்டார்கள். அவரவர் பேசுவதையெல்லாம் பதிவு செய்து திருப்பிப் போட்டுப் பார்த்துச் சிரித்தார்கள்.

மாணிக்கம் மௌனமாக அமர்ந்திருந்தான். அவன் உடல்தான் அங்கிருந்தது. உள்ளம் எங்கே பறந்து சென்றதோ?

"நளீ, உன் சகமாணவர் பேசவேமாட்டேன் என்கிறாரே?" என்று சுந்தரம் கேட்ட பிறகுதான் மாணிக்கம் அசட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்தான்.

"அவர் மாணிக்கமாயிற்றே! பேசிவிட்டால் சாதாரணமாகி விடுவாரே!" என்றாள் பத்மினி கேலியாக.

மாணிக்கம் அப்போதும் வெறுமனே சிரித்து வைத்தான்.

"போதும், நான் காகிதம் பென்சில் ஒன்றும் கொண்டுவரவில்லை, உன் மலர் முகத்தை எழுதிக் காட்ட. கொஞ்சம் பேசித்தான் பாரேன்!" என்றாள் பத்மினி சலுகையோடு.

அதைக் கேட்டு அனைவரும் உரக்கச் சிரித்தனர். மாணிக்கம் தன் நாற்காலியை இழுத்துச் சுந்தரத்தின் அருகே போட்டுக்கொண்டான். எப்படியோ இருவருக்குமிடையே பேச்சுத் துவங்கியது.

நரசிம்மன் எழுந்துவிட்டான். கூடவே பத்மினியும் கிளம்பினாள்.

அவர்கள் சென்ற பிறகு நளினி தன் அறையிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து வந்து அங்கு ஒரு சோபாவில் அமர்ந்தாள். சுந்தரமும் மாணிக்கமும் வெகு நேரம் இலக்கியத்தையும் அரசியலையும் அலசினார்கள். ஆத்மநாதன் தூங்க மாடிக்குப் போய்விட்டார்.

மாணிக்கம் வெகு நேரம் கழித்து விடை பெற்றுக்கொண்டு கிளம்பினான். அவன் போனபிறகு நளினியைப் பார்த்து, சுந்தரம், "மாணிக்கம் நல்ல பையன், நளினி" என்றான்.

"ஆமாம் மாணிக்கமாயிற்றே!" என்றாள் நளினி சிரித்துக்கொண்டே.

வீடு திரும்புகையில் மாணிக்கத்தின் மனம் சிந்தித்தபடியே இருந்தது. யோசிக்க யோசிக்க அவன் உள்ளம் ஏமாற்றமும் சோகமுமே அடைந்தது.

தொடர்ந்து ஆராய்ச்சி செய்யலாம். அதற்குப் பணம் தேவைப்படும். தானுகச் சம்பாதிக்க வேண்டும். எப்படிச் சம்பாதிப்பது? ஆசிரியரிடமோ பிரின்ஸிபாலிடமோ சிபாரிசுக்குப் போகவேண்டும். அவர்கள் தங்களுடனேயே இருக்கும்படி வற்புறுத்துவார்கள். யாரிடமும் ஒட்டிக்கொள்ள அவன் விரும்பவில்லை. இந்திரா காலனியைவிட்டு வெகு தூரம் போய்விட்டாலும் தாயும் தங்கை அலமேலுவும் மிகவும் சிரமப்படுவார்கள்.

அலமேலு மதனகோபாலனை மணப்பது சரியல்ல. அவள் மகிழ்வு காணமுடியாது. ஏன் கல்யாண ஏற்பாடுகள் துரிதமாக நடக்கவில்லை? யாரைக் கேட்பது? கேட்ட பிறகு ஏதேனும் பிரச்னை வந்தால் யார் தீர்ப்பது? இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாது? யார் இதற்கு முன்னே நிற்க முடியும்? தகப்பனுர் நிறுத்தமாட்டார். அவர் மணவாளச் செட்டியின் சொத்து மீது நல்ல கண் வைத்துவிட்டார். தாயார் துணிந்து செய்யலாம். ஆனல், தெருவில் பலகாலமாக வாழ்ந்து வந்த தாட்சண்யம், தெருக்காரர்கள் முன் பங்காரு பெரியம்மாவுடன் ஓருயிர் ஈருடலாகப் பழகிய பழக்கம். இன்று, நிச்சயம் செய்த கல்யாணத்தை நிறுத்தத் துணியமாட்டாள். சொன்ன சொல்லைக் காப்பாற்றுமல் பின் வாங்குவது மட்டுமல்ல, அம்மன் வாக்கைத் தன் வாயால் பொய்ப்பிக்க மாட்டாள். பாவபுண்ணியத்தில் நம்பிக்கை யுள்ளவள்.

மாணிக்கம் ஒருவன்தான் செயல்படலாம். அலமேலுவிடம் எடுத்துச் சொல்லி, மணவாளச் செட்டியிடம் மனம் விட்டுப் பேசி நீக்கி விடலாம். அதை நினைக்கும்போதே அவனுக்கு எங்கெங்கோ யோசனை தோன்றியது. மணவாளச் செட்டி கோபித்துத் திட்டுவது போலப் பிரமை தட்டியது. பங்காரு அவன் கையைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விடுவதுபோல ஒரு சித்திரம் வந்தது. 'டேய் முட்டாள்! என்ன வேலை செய்தாய்? உன்னை என்ன செய்கிறேன், பார்' என்று மதனகோபாலன் அவனை மிரட்டினன் கற்பனையில்.

'அப்பப்பா, இந்த வேலை நம்மால் முடியாது. மணவாளச் செட்டியுடன் எதிர்த்துப் பேசிப் பழக்கமில்லை, பெண்கள் கண்ணீரைச் சமாளித்தது கிடையாது. கோபாலுவின் மிரட்டல்....?' மாணிக்கத்தின் சிந்தனை அறுபட்டு நின்றது.

''என்னதான் நடக்கும்னு கேளேன், அண்ணு'' என்று அன்று ஒரு நாள் அலமேலு சொன்னளே; ஆமாம், என்ன தான் செய்து விடுவார்கள்? ஒரு நாள் கூட நின்று கேட்டது கிடையாது. அவனுக்கு விலகி இருந்தே பழகிவிட்டது.

''உனக்கு ஏன் தைரியமில்லை?'' என்று அலமேலு கேட்டமாதிரிதானே? கோழை என்று சொன்னல் சொல்லிவிட்டுப் போகட்டும். வம்பில் மாட்டிக்கொண்டால் மீண்டுவர வழி தெரியவேண்டாமா? அம்மாவிடம் சொன்னல் போதும்.

குழப்பமும் கலவரமுமாக மாணிக்கம் தன் வீடு போக நினைக்கவில்லை. அமைதியை நாடி ரங்கபாளையம் ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் தோட்டத்துக்குச் சென்றுன். வாதநாராயண மரத்தடியில் மல்லாந்து படுத்தான். தன் இரு கைகளையும் தலைக்குப் பின்னல் சேர்த்துக் கொண்டு உடலைத் தளர விட்டான்,

'குவீ, குவீ' என்று சிட்டுக்குருவி தம்பதிகள் அவன் தலைக்குமேலே குடும்ப விவகாரங்கள் விவாதித்தன. மாணிக்கத்தின் நினைவு நளினிமீது திரும்பியது.

நளினியின் முறை மாப்பிள்ளை ஊரிலிருந்து வந்து விட்டான். நாளைக்கே திருமணப் பத்திரிகை அச்சாகி விடும். பத்மினியும் இனி ஒரு மாதத்தில் தொலை தூரம் போய்விடுவாள். நரசிம்மனின் முகத்தையே பார்த்துக் கொண்டு.. அந்த நட்பு வட்டாரமே சூனியமாகி விடும். பத்மினி போல ஒரு சிநேகிதி கிடைப்பது அரிது. அவள் எவ்வளவு சொந்தமாக 'மைத்துனன்' என்று அறிமுகப்படுத்தினள்! ஆனல் நரசிம்மன் எந்த மைத்துனனையும் விரும்பமாட்டான். அலமேலுவும் திருமணமாகிப் பங்காரு வீட்டுக்குள் ஐக்கியமாகிவிடுவாள்.

மாணிக்கத்தின் மனம் சண்டிக் குதிரை போல முன்னுக்குப் போவதும் பின்னுக்கு அடிப்பதுமாக உயிரை எடுத்தது.

சிறிது நேரம் குப்புறப் படுத்துக் கொண்டு உறங்கப் பார்த்தான் அவன். மயக்கமாக இருந்ததேயன்றித் தூக்கம் வரவில்லை.

கொஞ்ச நேரம் கழித்து எழுந்து அவன் மடத்துக்குள் போய், நூல் நிலையத்தில் தான் முன்பு எடுத்து வைத்திருந்த ஒரு புத்தகத்தைப் பார்த்து எடுத்துப் படிக்க ஆரம்பித்தான். அவனுக்கு நேரம் போனதே தெரியவில்லை. பெரிய கடிகாரம் 'டாண், டாண்' என்று ஐந்து அடித்ததும் அவன் எழுந்து வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

அவன் நடந்து சென்றபோது மாதர் சங்கத்தின் முன் பத்மினி கார் நிற்பது தெரிந்தது. அவன் நடந்துகொண்டே உள்ளே பார்வையைப் படரவிட்டான். பத்மினியும் நளினியும் வெள்ளை நிஜாரும் பூப்போட்ட சட்டையுமாக டென்னிஸ் ஆடிக் கொண்டிருந்தனர். வெகு நாட்க

ளுக்குப் பிறகு அவர்கள் ஆடுகிறார்கள் என்று அறிவான் அவன். நளினி இப்போதெல்லாம் புடைவை தவிர உடுத்து அவன் பார்க்கவில்லை. முன்பெல்லாம் பைஜாமா, குர்த்தா அல்லது பெல்பாட்டம், ஜீன்ஸ் என்று பலவிதமாக ஆடை அணிவாள். தலையையும் குதிரைவால் என்றும், உச்சந்தலையில் முடி என்றும் முடிந்துகொள்வாள். இப்பொழுது தளரப் பின்னி விட்டுக் கொள்வதோடு சரி.

மாணிக்கத்துக்குத் தன்னைப் பற்றியே ஆச்சரியமாக இருந்தது. பெண்களின் உடையைப் பற்றித் தனக்கு இவ்வளவு தூரம் எப்படித் தெரிந்தது என்று நினைத்தான் அவன்.

அவன் வீட்டுக்குச் சென்றபோது தனபாக்கியம் பூஜையைத் தேய்த்துத் துடைத்துக்கொண் டிருந்தாள்.

''என்ன அம்மா நாளைக்கு?'' என்று கேட்டுக்கொண்டே வந்தான் மகன்.

''நாளைக்கு ஸ்ரீராமநவமி. சாமிக்கு ஒரு பூப்போட்டு வணங்கலாம்னுதான். அவரும் நம் மனசைக் குழப்பமில்லாமல் வைக்கட்டும்'' என்றாள் தாய்.

''மனசை எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ள வேண்டியது நம் கையில்தான் இருக்கிறது, அம்மா!'' என்று ஆரம்பித்தான் மாணிக்கம்.

''எனக்கென்ன தெரிகிறது ராஜா?'' என்றாள் தனபாக்கியம் பெருமூச்சு விட்டுக்கொண்டு.

''அலமேலுவைக் கோபாலுக்குக் கொடுக்கக் கூடாது, அம்மா. வேறு யாராவது நம்மைப் போல் ஏழைங்களைப் பார்த்துக் கொடு.''

''என்னவோ நான்தான் தவறுதலாகச் சொல்லிவிட்டேன்: தப்பாகக் காரியம் செய்திட்டேன். நீ மூத்த பையன் தானே? இங்கிதமாக, வலுவாகச் சொல்லி இந்தக் கல்யாணத்தை நிறுத்தி விடேன். அதெல்லாம் முத்து, அவ்வளவு சுலபமில்லை. எங்கேயோ கண்ணுக்கு எட்டின தூரத்துக்கு ஒரு பங்காளான்னு கட்டிக்கிட்டு வாழறவங்களுக்கு அதெல்லாம் சாத்தியம். இங்கே நம்ப காலனியிலே ஒரு வீட்டிலே கடுகு வெடிச்சா ஒன்பது வீட்டிலே எதிரொலிக்கும். நாம் ஊரை விட்டு மாத்திக்கினு போகமுடியுமா? அம்மன் விட்ட வழி நடக்கட்டும்'' என்றாள் தாய் விரக்தியாக.

''ஊராருக்காக நாம் ஒரு பெண்ணின் வாழ்வைப் பலியிட முடியுமா, அம்மா?''

''நீ வேறே நல்ல வரனைப் பார்த்துக் கொண்டுவா. இவங்க முகூர்த்த நாள் குறிப்பிடாமல் நேரமாக்குகிறாங்கன்னு சொல்லிப் புது இடத்திலே நிச்சயம் பண்ணுவோம்.''

மாணிக்கம் எழுந்து போய்விட்டான்; தன்னைச் சரியாக மடக்கிவிட்டாள் தன் தாய் என்று நினைத்தான். அப்படி ஒரு வரனைப் பார்த்து வரத் தன்னால் முடியுமா?

எங்காவது மறைவாக ஓடிவிடலாம் என்று தோன்றியது அவனுக்கு. விடை காணமுடியாத இந்த வாழ்க்கை அவனுக்குப் பிடிக்கவில்லை. எங்கே போவது?

அன்று காலை ஆசிரியர் வீட்டில் நடந்த ஒரு சம்பவம் அவனை வாட்டியது. அவன் தன் அலுவலக அறையில் எழுதிக்கொண்டிருந்தான். தண்ணீர் தாகமெடுத்தது என்று உள்ளே போனான். அப்போது நளினி ஒரு ஜோடி வளையலை வைத்துக் கொண்டு, வெயிலில் பிடிப்பதும் நிழலில் காட்டுவதுமாகத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண் டிருந்தாள். சுந்தரம் அவளையே ஆவலுடன் நோக்கிக் கொண்டிருந்தான்.

''என்ன வளையல் அது, சுந்தரம்?'' என்று மாணிக்கம் அவர்கள் அருகில் சென்று கேட்டான். தான் கேட்கவேண்டியது மிகவும் அநாவசியம் என்று அவன் உள்ளம் உச்சரித்தபடி யிருந்தது.

''ஹைதராபாத்திலிருந்து வாங்கி வந்தேன். ஜோடி முப்பது ரூபாய்'' என்று விளக்கினான் சுந்தரம்.

அகலமாக அரக்கு வளையல்மீது நிற நிறமான கற்கள் பதித்து மிகவும் அழகாக இருந்தன வளையல்கள். நளினி இன்னும் இரண்டுமுறை இப்படியும் அப்படியும் பார்த்துவிட்டுத் தன் கைகளில் அணிந்துகொண்டாள். பிறகு இரு கைகளையும் கொக்குப் போல் வைத்து ஆட்டி ஆர்ப்பரித்தாள்.

''வெகு அழகாக இருக்கிறது'' என்றான் சுந்தரம்.

''எது? வளையல்களா, கைகளா?'' என்றான் மாணிக்கம். உடனே நாக்கைக் கடித்துக்கொண்டான். இப்படியெல்லாம் ஏன் தன் வாய் அளவுக்கு மீறிப் பேச ஆரம்பிக்கிறது?

''இரண்டுந்தான். ஒன்றுக்கு ஒன்று அழகு செய்கிறது'' என்றான் சுந்தரம்.

நளினி தன் அகலக் கண்களை இன்னும் அகல விரித்துப் பார்த்தாள். உணர்ச்சியற்ற முகத்துடன் தரையை நோக்கினான் மாணிக்கம்.

நளினி வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்டு கை வளையல்களைக் கழற்ற முயன்றாள்.

''நளினி!'' என்றான் சுந்தரம், கடுமையாக.

(தொடரும்)

13. தளை தறிக்கும் மனங்கள்



ஸ்ரீராம பட்டாபிஷேகப் படம் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டது. படத்துக்கே பட்டாடைகளும் பூமாலைகளும் சாத்தி, மிகவும் அழகாக அலங்காரம் செய்திருந்தனர். வேத பாராயண கோஷ்டி, பின்னுடி கைகோத்துக் கொண்டு வந்தது. மணவாளச் செட்டி வீட்டின் முன் படம் கொஞ்ச நேரம் நின்றது. வந்தவர்களுக்கெல்லாம் நீர் மோர், பானகம், பாசிப் பருப்புக் கோசுமல்லி யாவும் விநியோகித்தார்கள். வேத பாராயணக்காரர்களுக்கு விசிறி தானம் செய்தார்கள். நாகசுர வித்துவானும் "கனுகொண்டினி ஸ்ரீராமுனி நேடு" என்ற கீர்த்தனையை விஸ்தாரமாக வாசித்தார்.

அதன் பிறகு பவனி கிளம்பினுன் ஸ்ரீராமன்.

மாணிக்கம் தன் வீட்டு வாசலில், தேங்காய் பழத் தட்டுடன் நின்றுன். அவனுடைய தாயாரும் தந்தையும் பவ்யமாகக் கைதூக்கித் தொழுதவண்ணம் தெருவில் இறங்கி நின்றனர். அலமேலு உள் வாசற்படியண்டை நின்றுள்.

இவர்கள் வீட்டுக்கு முன் சாமி வந்து நின்றதும், மாணிக்கம் தன் நிவேதனத் தட்டை நீட்டினுன். தேங்காய் உடைத்துக் கர்ப்பூரம் காட்டினபிறகு, தட்டைப் பெற்றுக்கொண்டு, மற்றவர்களுக்குக் கர்ப்பூரத்தைக் காட்டினுன். எல்லாரும் கண்களில் ஒற்றிக்கொண்டார்கள். அவன் கை, சூடு தாங்காமல் தவித்தது. அவன் தாம்பாளத்தைத் திண்ணைமீது வைத்தான். அதன் பக்கத்தில் ஒரு வெள்ளித் தாம்பாளம் வந்து விழுந்தது. மாணிக்கம் நிமிர்ந்து பார்த்தான். "ஸாரி, கை சுட்டது" என்று சொல்லிக்கொண்டே மதன கோபாலன் தன் கை விரல்களைத் தடவி விட்டுக்கொண்டிருந்தான். பிறகு, மேல் துண்டினுல் பிடித்துத் தன் வெள்ளித் தட்டை எடுத்துக்கொண்டு போய்விட்டான். மாணிக்கத்தைப் பார்க்க விரும்பாதவன்போல, அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டு தன் வீட்டை நோக்கிச் சென்றுன்.

கையில் எடுத்த தட்டை மதன கோபாலன் தலைமீது கவிழ்க்கவேண்டும் போல ஆத்திரம் மூண்டது மாணிக்கத்துக்கு. 'புனிதமான நிவேதனத் தட்டை இந்த நீசன் தலைமீதா போடுவது?' என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். தன் முகபாவத்தை அலமேலு பார்த்துவிட்டாளோ என்று எண்ணி அவள் பக்கம் நோக்கினுன். அவள், மதனகோபாலனைக் காணப் பிடிக்காதவள்போல விருட்டென்று உள்ளே போவது தெரிந்தது.

மாணிக்கத்தின் மனத்தில் தெம்பு பிறந்தது. 'அலமேலு மனம் மாறி விட்டாள், இனிக் கவலை இல்லை' என்று அவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

படஊர்வலம் சென்றபிறகு, தெரு காலியாகிவிட்டது. மாணிக்கம் திண்ணையில் அமர்ந்து வேடிக்கை பார்த்தான். இன்று ஆசிரியர் வீடு போகவேண்டிய வேலையில்லை அவனுக்கு. அநேகமாக ஆராய்ச்சியும் முடிந்துவிட்டது. டாக்டர் பட்டத்துக்குரிய கட்டுரையை அவன் நகல் எடுத்துக்கொண்டிருந்தான். கட்டுரையின் சுருக்கத்துக்கு நல்ல மதிப்புரைகள் கிடைத்தன. ஆசிரியர் வீட்டுக்கு வந்த நண்பர்கூட அதைப் பார்த்துப் பாராட்டினுர். மாணிக்கத்துக்கு ஓரளவு தன்னம்பிக்கை தோன்றியது. ஆயினும் அடிக்கடி, 'நம்மைவிட வசதி வாய்ந்தவர்கள் பல வெளியூர்களுக்குச் சென்று, பல நாடு

ளுக்குச் சென்று, ஜூலியன் ஹக்ஸ்லி போன்ற பெரியவர்களிடம் தொடர்பு கொண்டு ஆராய்ச்சி செய்திருப்பார்கள். அவர்கள் கட்டுரை சமர்ப்பிக்குமிடத்தில் நான் அனுப்பினால் எப்படியிருக்கும்? ஏன் தான் இதில் மாட்டிக்கொண்டோமோ?" என்று தனக்குள் பேசிக்கொண்டே அமர்ந்திருந்தான்.

'இனி ஏதாவது வேலைக்கு மனுப் போட வேண்டியதுதான்.'

யசோதா கையில் செய்தித் தாளுடன் வேகமாக டாக்டர் வீடு நோக்கிச் செல்வது தெரிந்தது. "யசோதா!" என்று குரல் கொடுத்தான் மாணிக்கம்.

திரும்பிப் பார்த்துவிட்டு, பாராது போல அவள் போய்விட்டாள். 'பங்காரு பெரியம்மா பூஜை செய்து முடித்தவுடன் பாலுக்காக ஏக்கமிட்ட கண்களுடன், நாய்க்குட்டி மாதிரி நாக்கைத் தொங்க விட்டுக்கொண்டு திரிந்த யசோதாவுக்கு இன்றைக்கு இவ்வளவு அசட்டையா?' அவன் மனம் கலங்கியது. 'சுந்தரமோ, டாக்டரோ என் இடத்தில் இருந்தால், அவள் இப்படி அலட்சியமாக இருந் திருப்பாளா? மதனகோபாலன்கூட அவ ளிடம் இன்னும் மதிப்புப் பெற்றிருப் பான். இந்திரா காலனிப் புழுதியிலே புரண்ட பெண்ணுக்குக்கூட நம்மிடம் மதிப்பில்லையென்றால்..? நம் முகராசி அப்படி. நம் ஆசிரியர் என்னவோ கோட்டைகள் கட்டுகிறார்!' என்று ஓடியது அவன் மனம்.

கொஞ்ச நேரம் அப்படியே இருந்து விட்டு அவன் எழுந்தான். அந்தத் திண்ணையிலே அமர்ந்தால், எப்போதும் அந்தச் சாக்கடையின் வாடை லேசாக வந்துகொண்டே இருக்கும். அவனால் அதைப் பொறுக்க முடியவில்லை. எழுந்து அவன் டாக்டர் வீட்டுக்குச் சென்றான்.

"வாங்க, மாணிக்கம். உங்களைப் பார்த்து வெகு நாட்களாகிவிட்டனவே?" என்று முகமன் கூறினார் டாக்டர்.

"ஆமாம்."

"என்ன செய்துகொண் டிருக்கிறீர் கள்? கண்ணிலே படவேயில்லையே!"

"உங்களைப் போல உருப்படியான வேலை செய்வதானால் எங்கும் நடமாட்டம் இருக்கும், யார் கண்ணிலும் படலாம். ஒன்றும் வேலை செய்யாமல் குட்டை போல் வீட்டிலேயே தேங்கிக் கிடக் கிறேன்" என்றான் மாணிக்கம்.

"நன்றாகப் பேசுகிறீர்கள். மேலே என்ன செய்வதாக உத்தேசம்?"

"உங்களிடம் செய்தித்தாள் கடன் வாங்கி, எந்த வேலைக்கு மனுப் போட லாம் என்று பார்ப்பதுதான் உடனடி யான உத்தேசம்."

அதன்பிறகு, பத்திரிகை பார்ப்பதும், அரசியல் பேசுவதுமாகக் கொஞ்ச நேரம் கழித்தான் மாணிக்கம்.

மீனாட்சி வெளியிலே இருந்து வந்த போது, நளினியும் பத்மினியும் கூடவே வந்தனர். மாணிக்கம் செய்தித்தாளைக் கையில் எடுத்துக்கொண்டு எழுந்தான்.

"பார்த்தாயா, மீனு? உன் நண்பர் உங்கள் குரல் கேட்டதுமே கம்பி நீட்டப் பார்க்கிறார்" என்று கூறிவிட்டு டாக்டர் சிரித்தார்.

"என்ன, மிஸ்டர் மாணிக்கம், உங்க ளுடன் படித்த சகமாணவிகளை இப்படிக் கை விடலாமா?" என்று மீனாட்சி பவிச் சென்று கேட்டாள்.

"கொஞ்சம் வேலை இருக்கிறது" என்றான் மாணிக்கம், சங்கடத்துடன்.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை, மீனு. மாணிக்கம் பட்டம் பெறுவதற்குக் கட்டுரைகூடக் கொடுத்தாயிற்று, தெரி யுமா? ஒரு வேலையும் கிடையாது" என்றாள் பத்மினி.

"வேலை இருக்கிற இடத்தை மறந்து விட்டார். இல்லாத இடத்தைச் சொல் கிறார், பார்" என்றாள் நளினி.

மாணிக்கம் அவள் பக்கம் ஒரு விநாடி பார்த்துவிட்டு, முகத்தையே வேறு பக்க மாகத் திருப்பிக்கொண்டு நின்றான்.

நளினியின் முகம் வாடி விட்டது.

"என்ன, மாணிக்கம் அது?"

"இப்ப நான் முடிச்சுட்டேன், இல்லையா? நளினி தொடர்ந்து செய் கிறாள். இன்னும் புது மாணவர் ஒருத்தர் சேர்ந்திருக்கிறார். ஆசிரியர் நிறையத் திட்டங்கள் போட்டிருக்கிறார். பரத நாட்டியம் ஆடவைத்துப் பார்க்கவேண்டு மாம். தவிர....." என்று தொடர்ந்து பேச ஆரம்பித்த மாணிக்கம், தந்தி அறுந்தமாதிரி பேசாமல் இருந்துவிட் டான், சிரித்துக்கொண்டே.

"தவிர என்ன?" என்று டாக்டர் தூண்டினார்.

"மோட்டார் ஒன்றை இயக்கி, அந்த அதிர்ச்சியினால் ஏதேனும் விளைவு இருக் கிறதா என்று பார்க்கப் போகிறாராம். அது என்னவோ எனக்குப் புதுமையாக இருக்கிறது" என்றான் மாணிக்கம்.

"புதுமை என்ன? சம்மதம் இல்லை என்று சொல்ல வேண்டியதுதானே?" என்றாள் நளினி, வெடுக்கென்று.

"ஒரு பெரியவர் ஆராய்ந்து செய் வதைச் சம்மதம் இல்லை என்றோ, சம்மதம் என்றோ சொல்லலாமா?" என்றான் மாணிக்கம்.

"சண்டை போடாதீங்க" என்றாள் பத்மினி, சிரித்தபடி.

மாணிக்கமும் சிரித்துவிட்டு எங்கோ பார்த்தான்.

நளினி மட்டும் மற்றவர்கள் இருப்பதையே கவனிக்காதவள் போல, சுட்டெரிக்கும் விழிகளுடன் மாணிக்கத்தைப் பார்த்தாள். "அப்பா இவரைத் தினமும் வரச் சொல்கிறார். தமக்கும் புது மாணவர்களுக்கும் உதவி புரியச் சொல்கிறார். வரக்கூடாதா? மூன்று வருடங்கள் ஆகப்போகின்றன. அந்தப் பழக்கத்துக்காக, அப்பா வைத்திருக்கும் நம்பிக்கைக்காக வரக்கூடாதா?" என்று பொரிந்து தள்ளினாள்.

"அடேயப்பா, நளினி! உனக்குக்கூட இப்படிக் கோபம் வருமா?" என்று கேட்டு மீனாட்சி மூக்கின்மீது விரல் வைத்தாள்.

"நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். பெண்ணுக்கு இப்படிக் கோபம் வந்தால் அப்பாவுக்கு எத்தனை மடங்கு வரும்? நான் ஓர் அப்பாவி. தெய்வமேன்னு ." என்று சொல்லிக்கொண்டே மாணிக்கம் நளினியின் முகத்தைக் குறும்பாகப் பார்த்தான்.

நளினி கொஞ்சங்கூட இளகவில்லை.

மாணிக்கம் விடாமல், "பார், பத்மினி, நீயும் கல்யாணம் செய்துகொண்டு போய்விட்டால், அப்புறம் யார் என்னைக் காப்பாற்றுவார்கள்? சுறுசுறுவென்று கோபம் விநாடிக்கு எண்பது கிலோ மீட்டர் வேகத்தில் ஏறுகிறது" என்று நளினியின் வாயைக் கிண்டினான்.

"மீனு, நான் பாட்டு வகுப்பு ஆரம்பிக்கவேண்டும். போய்த் தயார் பண்ணுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே நளினி, மீனாட்சியின் வீட்டு உட்புறக் கூடத்துக்குச் சென்றுவிட்டாள்.

மற்றவர்கள் கலகலவென்று சிரித்துவிட்டார்கள். தம்பூரா மீட்டுவது கேட்டது. மாணிக்கம் விடைபெற்றுக் கொண்டான்.

"இருங்களேன், மாணிக்கம். நாங்கள் செய்யும் வேலைகளைத்தான் பாருங்களேன். விடுமுறை நாட்கள்தாமே?" என்றாள் மீனாட்சி.

"சரி" என்றான் மாணிக்கம்.

பலிபீடத்துக்குப் போகும் ஆடு போல, அவன் அவர்கள் பின்னால் சென்றான். மகளிர் சங்கத்தினர் செய்த கைவேலைப் பொருள்களை எல்லாம் காட்டினாள் மீனாட்சி. நோட்டுப் புத்தகங்களையெல்லாம் புரட்டிக் காட்டினாள். "உங்கள் அலமேலு மிகவும் கெட்டிக்காரி. கைவேலைகளைத் திருத்தமாகச் செய்கிறாள். அவள் கையிலே கலைத்தேவி நிருத்தியமாடுகிறாள்" என்று மீனாட்சி வெகுவாகப் புகழ்ந்தாள்.

மாணிக்கத்துக்குப் பெருமையாக இருந்தது. 'மீனாட்சி இல்லத்தையும் பார்த்துக்கொண்டு, சமூக நலனுக்காகவும் பாடுபட்டுப் பல அலமேலுகளைத் தயார் செய்கிறாள். நமக்குத்தான் எதுவும் கையாலாகவில்லை' என்று தன்னையே அவன் நொந்துகொண்டான்.

மீனாட்சி மேலும் பேசிக்கொண்டே போனது அவன் செவியில் விழவில்லை. நளினி வேறு, பேசாமல் தம்பூராவை மீட்டிக்கொண்டு, பதுமைபோல அமர்ந்திருந்தது அவனுக்கு வேதனை தந்தது.

மீனாட்சி மிகவும் ஆவலாக என்ன என்னவோ சொல்லிக்கொண்டே போனாள். மாணிக்கத்தின் மனம் எந்த உலகத்திலேயோ சஞ்சரித்துக்கொண்டிருந்தது போலும்!

"கொஞ்சம் பணம் திரட்டலாம் என்று பார்த்தேன்" என்று மீனாட்சி சொல்லிக்கொண்டிருந்தாள்.

"அப்பப்பா! எப்போது பார்த்தாலும் உனக்குப் பணப் பைத்தியந்தான், மீனு" என்று பத்மினி கூறினாள்.

அப்போதுதான் மாணிக்கம் விழிப்படைந்து, "என்ன பணம்? யாருக்குப் பணப் பைத்தியம் என்கிறாய்?" என்று பத்மினியைப் பார்த்துக் கேட்டான்.

"மீனுதான், வேறே யாரு? எப்போது பார்த்தாலும் சங்கத்துக்காகப் பிச்சை எடுத்தபடி இருப்பாள்."

"நீங்களே சொல்லுங்கள், மிஸ்டர் மாணிக்கம். இந்த வட்டாரத்தில் உள்ள பெண்கள் எல்லாரும் தினமும் ஒரு மணிநேரம் எனக்காக உழைக்கக் கூடாதா? எவ்வளவு சாதிக்கலாம், பாருங்கள்! நம் காலனி இப்போது எவ்வளவு சுத்தமாக இருக்கிறது, பார்த்தீர்களா? கொஞ்சம் வழிகாட்டி விட்டால், அவர்களே செய்து முடிப்பார்கள். கைவேலை பழக வரச்சொன்னால் மட்டும் வரவே மாட்டேன் என்கிறார்கள்."

"கைத்திறன் பொருட்காட்சி ஒன்று வைக்கவேண்டும். அந்த விற்பனையில் நிதி சேர்க்க வேணுமாம். இவர்கள் தைக்கும் துணிகளை வாங்கிக்கொண்டு யாரால் கஷ்டப்படமுடியும்? பயப்படுகிறது பொது ஜனம்!" என்று நையாண்டி செய்தார் டாக்டர்.

"நல்ல பொழுதாகக் கழிக்கலாம் என்று காட்டத்தான் இதெல்லாம். என்று அவர்களுக்குப் புரிய வைப்பது சிரமமாக இருக்கிறது" என்று மீனாட்சி குறைப்பட்டுக் கொண்டாள்.

"இந்த அழகில் இவள் டிராமா போடவேண்டுமாம்!" என்ற டாக்டர் தம் மனைவியை நோக்கி, "நீ இதைப் பற்றி மாணிக்கத்துக்குச் சொல்லவேயில்லையே, மீனு?" என்றார்.

"மறுபடியும் நாடகமா?" என்று கேட்டான் மாணிக்கம்.

"ஆமாம். முன்பே மதனகோபாலனுக்கு வாக்குக் கொடுத்தேனே; அவர்கள் 'மீரா' ஹாலில் போடப்போகிறார்களாம். மதனகோபாலன் என்னிடம் ஜாடையாக

நினைவுபடுத்தினார். எப்படி நடத்திக் கொடுப்பது என்றுதான் புரியவில்லை.''

''ஏன்?'' என்று மாணிக்கம் கேட்டான், விவரம் புரியாமல்.

''ஏனா? பத்மினி கல்யாணம் பண்ணிக் கொண்டு போய்விடுவாள். நீங்கள் பாட வருவது சந்தேகம். கோபாலு முறை தவறி நடந்துவிட்டானே! நளினியை அவள் அப்பா அனுப்புவாரோ என்னவோ?'' என்றார் டாக்டர்.

''நான் பாடாவிட்டால், நாடகமே நின்றுவிடுமா என்ன? பத்மினிக்குத் தான் நளினி தோழியா? உங்களுக்கு இல்லையா? ஆசிரியர் அனுப்பமாட்டாரா?''

''என்ன இருந்தாலும், பழைய வலு இராது. மேலும் உங்கள் இரு குடும்பங்களும் இப்போது இருக்கும் உறவு நிலையில்....'' என்று இழுத்தாள் மீனாட்சி.

''அதுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? இந்திரா காலனி முழுவதும் நாடகம் பார்க்க வரும். கவலைப்படாதீர்கள்'' என்றான் மாணிக்கம்.

''எதுக்கும் எதுக்கும் என்ன சம்பந்தம்? என்ன உறவு நிலை? எங்களுக்கும் புரியும்படித்தான் பேசேன், மீனா'' என்றாள் பத்மினி.

''அலமேலு கல்யாணம் நின்றுவிட்டதே! இந்தச் சமயத்தில் அலமேலு பழையபடி வரவும், பாடவும் தனபாக்கியத்தம்மா சம்மதிப்பார்களா? அலமேலு இல்லாமல் என்னால் ஒன்றுமே செய்ய முடியாது'' என்றாள் மீனாட்சி.

நளினி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். தம்பூராவை மீட்டுவதை நிறுத்திவிட்டு, ''என்ன மீனா சொல்றே?'' என்று திடுக்கிட்ட குரலில் கேட்டாள்.

''நிஜமாகவா மீனா? கல்யாணம் நின்று விட்டதா? ஏன்?'' என்று பத்மினியும் அதே சமயத்தில் பேசினாள்.

''மதனகோபாலனுக்குப் பிடிக்கவில்லையாம்'' என்றான் மாணிக்கம், சுருக்கமாக.

''அலமேலுவை மணப்பதற்குக் கொடுத்து வைக்கவேண்டுமே!'' என்றாள் பத்மினி.

''அக்கிரமமாக இருக்கிறதே'' என்றாள் நளினி.

மாணிக்கம் பேச்சில் கலந்துகொள்ளப் பிரியப்படாதவன்போல இங்கும் அங்கும் பார்த்தபடி நின்றான். அங்கே ஒரு புல்லாங்குழல் கிடப்பதைப் பார்த்து அதைக் கையில் எடுத்தான். ''இதென்ன, பொம்மையா?'' என்று, ஒன்றும் தெரியாதவன்போலக் குறும்பாகக் கேட்டான்.

''பொம்மையா? நல்ல புல்லாங்குழல். ஒரு வித்துவானிடமிருந்து வாங்கி வந்தேன்'' என்றாள் மீனாட்சி.

''நீங்கள் வாசிப்பீர்களா?'' என்று கேட்டான் மாணிக்கம்.



"கற்றுக் கொள்ள வேண்டும் என்று வாங்கினேன். பிறகு வணங்கவில்லை" என்றாள் மீனாட்சி.

நளினி சிலைபோல அமர்ந்துவிட்டாள். மீண்டும் தம்பூராவை வருட ஆரம்பித்தாள்.

பத்மினி, "ஏன் மீனா, அலமேலு கல்யாணத்தை நடத்தி வைக்க நீ பாடுபடவில்லையா? அதுவும் சமூக சேவை தானே?" என்று கேட்டாள்.

"அலமேலு இடிஞ்சு போய்விடுவாள், பாவம்! மதனகோபாலுக்கு எத்தனை திமிர்?" என்று நளினி ஆக்கிரோஷமாகப் பேசினாள்.

"நின்றது தான் எனக்குச் சந்தோஷம். கோபாலுக்குக் கொடுப்பதில் எனக்கு இஷ்டமே இல்லை. யாரையும் கேட்காமல் பெரியவர்கள் நிச்சயம் செய்துவிட்டார்கள்" என்றான் மாணிக்கம்.

"மாணிக்கம் சொல்வதுதான் சரி. மதனகோபாலன் இல்லாவிட்டால் என்ன? அலமேலு போன்ற புத்திசாலிப் பெண்ணுக்கு வேறு நல்ல வரன் கிடைக்கும்" என்றாள் பத்மினி.

நளினி அவர்களை ஒரு தினுசாகப் பார்த்தாள். "அலமேலு மனசைப்பற்றி யாராவது நினைத்தீர்களா? மதனகோபாலனுக்குப் பதிலா ஒரு மகாராஜாவே வந்தாலும் அவளுக்குப் பிடிக்குமோ?" என்றாள்.

"முட்டாள்தனமாகப் பேசாதே, நளினி. அந்த உதவாக்கரை கிடைக்காமல் போய்விட்டதே என்று கதறிக் கதறி அழுவாளாக்கும்!" என்றாள் பத்மினி.

"ஆண் பிள்ளை மாதிரி பேசறே நீ. கொஞ்சங்கூட மனசிலே கசிவில்லாமல்" என்றாள் நளினி.

"என்ன நளினி, நான்கூட அப்படித்தானே?" என்று கேட்டார் டாக்டர்.



நளினி ஒரு விநாடி சங்கடப்பட்டாள். பிறகு சிரித்துக்கொண்டே, "டாக்டர், எப்படியும் ஆண் பிள்ளைக்குப் பெண் மனம் புரியாது என்பதே என் அபிப்பிராயம்" என்றாள், ஆணித்தரமாக.

"பெண்களுக்கு மட்டும் ஆண் மனம் புரிந்துவிடுகிறதோ?" என்று வினவினார் டாக்டர்.

மாணிக்கத்துக்கு இந்த ஆண் மனப் பெண்மனச் சர்ச்சையே பிடிக்கவில்லை. மதனகோபாலன் சம்பந்தம் விட்டதே என்று அவன் மகிழ்ந்துகொண்டிருக்கையில், இந்த நளினி என்னவோ வேண்டாத வாதங்களையெல்லாம் கிளப்புவதுபோல இருந்தது அவனுக்கு. அதனால் அவன், தன் கையில் இருந்த புல்லாங்குழலை வாயில் வைத்து இரண்டு சுரங்களை வாசித்தான். பேச்சுத் தடைப்பட்டது. எல்லாரும் அவனையே

பார்த்தனர். அவன் மாயாமாளவ கௌள ராகம் வாசித்தான். நளினி நெற்றிச் சுருக்கத்துடன் அவனையே கவனித்தாள்.

"வாசி, மாணிக்கம்" என்றாள் பத்மினி, மீனாட்சி தரையில் அமர்ந்தாள்.

மாணிக்கம் அந்த ராகத்தை விஸ்தாரமாக வாசித்தான். பிறகு புல்லாங்குழலைக் கீழே வைக்கப் போனான். நளினி தம்பூராவைத் தூரத் தூக்கி வைத்துவிட்டாள்.

"ஏன் வைத்து விட்டாய்? நீ கல்யாணி ராகம் பாடேன், நளினி?" என்றாள் பத்மினி.

"அவர் வாசிக்கட்டும். சுருதி மாறும். பிறகு பாடுகிறேன்" என்றாள் நளினி.

மாணிக்கம் கீழே அமர்ந்துவிட்டான். அவனே புல்லாங்குழலில் கல்யாணி ராகத்தை விஸ்தரித்துவிட்டு, 'சிவே பாஹிமாம்' என்ற கீர்த்தனத்தை ஆரம்பித்து வாசித்தான்.

பாட்டு முடிந்ததும் மாணிக்கம் எழுந்துவிட்டான். "நல்ல குழல்! நாதம் நன்றாக இருக்கிறது" என்றான்.

நளினி தம்பூராவை எடுத்து வைத்துக் கொண்டாள். ஆனால் மீட்ட ஆரம்பிப்பதற்கு முன், மாணிக்கத்தைப் பார்த்து, "நம் தோட்டத்திலே பாய்ச்சினோமே, அந்தப் புல்லாங்குழல் இசை...."

அவள் தன் பேச்சை மேலே தொடங்குவதற்குள், "ஆமாம், அது புல்லாங்குழல் இசைதான்" என்றான் மாணிக்கம் குறும்பாக.

"அது தெரியாதா எனக்கு? அந்த டேப்பில் உள்ள இசை நீங்கள் வாசித்ததுதான், இல்லையா?"

"ஆமாம். யார் இல்லை என்றார்கள்?"

"எங்கள் அப்பா கேட்டபோது, நண்பன் தந்தது என்றீர்களே நீங்கள்!"

"உங்கள் அப்பா என்னை அந்த இசை யார் வாசித்தது என்றா கேட்டார்?"

"பின்னே?"

"புல்லாங்குழல் ஏதடா?' என்றார். நண்பன் கொடுத்தான்னு சொன்னேன். அதில் என்ன தப்பு? நீங்கள்தான் சொல்லுங்கள் டாக்டர்" என்றான் மாணிக்கம் மந்தஹாசத்துடன்.

"கேட்ட கேள்விக்கு அது சரியான பதில்தான்" என்று ஆமோதித்தார் டாக்டர்.

மாணிக்கம் சிரித்துக் கொண்டே விடைபெற்றுக் கொண்டு செய்தித் தாளும் கையுமாகத் தன் வீட்டை நோக்கிச் சென்றான்.

நளினியைப் பாடச் சொன்னதையே எல்லாரும் மறந்து விட்டனர் போலும்! அவளும் தம்பூராவை மூடி வைத்துவிட்டாள்.

மீனாட்சி தன் தோழிகளுடன் அமர்ந்து பேச ஆரம்பித்தாள். "அலமேலு நல்ல பெண். அவளை இங்கே வரும்படி கூப்பிடவேண்டும். அவள் ஒரேயடியாக உள்ளோடு உள்ளே மட்கிப் போகக் கூடாது" என்றாள்.

"நாம் இப்போதே போய் அவளைச் சமாதானப்படுத்தி, இங்கே அழைத்து வருவோம்" என்று அழைத்தாள் நளினி.

மூன்று தோழிகளும் அங்கே கிளம்பிச் சென்றார்கள். அலமேலு குழாயடியில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தாள். மாணிக்கம் தன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்தபடி, செய்தித் தாளைக் கூர்ந்து படித்துக்கொண்டிருந்தான். அவன் நிமிர்ந்து பார்த்தபோது அலமேலு அவன் கண்ணில் பட்டாள்.

மீனாட்சியின் நட்புக் கிடைத்தபிறகு, அலமேலுவிடம் நிறைய மாறுதல் ஏற்பட்டது. நடையில், உடையில் பேச்சில் எல்லாவற்றிலும் மெருகு ஏறியிருந்தது. ஆனால், முன்புபோல, பக்கம் பார்த்து மருண்டு சிரிக்கவும், அஞ்சி நடுங்கவும் இல்லை. 'ஓ' வென்று வாய்விட்டு நகைக்கவும் இல்லை. மென்மையாக, நாசுக்காகச் சிரித்தாள். இன்று மாணிக்கம் தன் தங்கையைப் பார்த்தபோது, அவளிடம் அந்த வேடிக்கை காணும் இயல்பும் உல்லாசப் பார்வையும் இல்லை; சிரிப்பும் இல்லை. கம்பீரமாக, இனம் காண முடியாத அழுத்தப் பார்வையுடன் அவள் தென்பட்டாள். அவன் வியந்து கொண்டே இருந்தான்.

நளினி, பத்மினி, மீனாட்சி மூவரும் அவனைத் தாண்டி உள்ளே சென்றனர். அவன் அதைக் கவனிக்கவேயில்லை. உள்ளே சென்ற அவர்கள், அங்கே அலமேலுவைக் காணாமற் போகவும், மீண்டும் வெளியே வந்தனர்.

அந்தச் சமயத்தில் குழாயில் சச்சரவு ஏற்பட்டது. மாணிக்கம் நிமிர்ந்து நோக்கினான். நளினி முதலியோர் நிற்பதைக் கவனித்தான். அவர்கள் முன் குழாயடிச் சண்டை நடக்கிறதே என்று சஞ்சலப்பட்டபோது, அவனுக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அலமேலுவே வரிந்து கட்டிக்கொண்டு சண்டையில் ஈடுபட்டிருந்தாள்.

"யாராவது என் பானை மீது கை வையுங்கள், பார்க்கிறேன்!" என்று அவள் இரைந்தாள்.

மாணிக்கம் உடல் குன்றிவிட்டது.

அலமேலு கோபத்துடன் தன் குடத்தை இடுப்பில் 'ணங்' கென்று வைத்துக்கொண்டு, ஆவேசமாகத் தன் வீட்டுப் பக்கம் வரும்போது, வீட்டுத் திண்ணைக் கருகில் தன் தோழிகள் மூவரும், அண்ணனும் இருப்பதைப் பார்த்தாள். அவள் முகம் வெளிறிவிட்டது. நாணம் மேலிட, குனிந்த தலை நிமிராமல், "வாங்க, அக்கா. உள்ளே வாங்க" என்று தனி

வான குரலில் அழைத்துக்கொண்டே, வீட்டுக்குள் நுழைந்தாள்.

மீனாட்சி முதலியோர் அவளைத் தொடர்ந்து உள்ளே சென்றனர். அலமேலு தன் தாயின் செவியருகில் எதையோ சொல்லிவிட்டுத் தூண் ஓரமாக அரை மறைவில் நின்றாள். அவளுக்கு மேல்மூச்சு வாங்கியது. அவள் பேசவும் கூச்சப்பட்டாள்.

மாணிக்கம் எழுந்து உள்ளே வரவேயில்லை. தனபாக்கியம் அவனைத் தாண்டிக் குழாயடிக்குச் சென்று, அங்கு நிரம்பி வழிந்த ஒரு பெரிய தவலையைச் சுமந்து கொண்டுவந்தாள். மாணிக்கம் அப்போது தான், "நீங்களும் உங்கள் குழாய்ச் சண்டையும்!" என்றான், கடித்த பற்களிடையே.

"என்ன செய்யமுடியும், தம்பி? சண்டைக்காரிகளாக இருக்கிறாங்க" என்றாள் தனபாக்கியம், போகிற போக்கில்.

"தலைவிதி!" என்றான் மாணிக்கம். அவன் எழுந்து வெளியே போய் விட்டான். 'இதுவும் ஒரு நன்மைதான். இனிமேல் இந்தப் பெண்கள் இங்கு வர மாட்டார்கள் அல்லவா? எனக்குத் தொல்லைவிட்டது' என்று அவன் நினைத்துக்கொண்டான். கடைத் தெருவெல்லாம் சுற்றிவிட்டு, அவன் திரும்பி வந்த போதும் நளினி முதலியவர்கள் அவன் வீட்டில் பேசிக்கொண் டிருப்பதைக் கண்டான். 'நல்ல பெண்கள், அட்டைப் பூச்சிகள்!'

"மாணிக்கம், உனக்காகத்தான் காத்திருக்கிறோம். நளினியின் அப்பா உன்னை நாளைக்கு வீட்டுக்கு வரச்சொன்னாராம். அவள் சொல்ல மறந்துவிட்டாள்" என்றாள் பத்மினி.

"முடிந்தால் போகிறேன்."

"ஏன் ஐயா? நாங்கள் வந்தோம். 'வா' வென்றுகூட அழைக்கவில்லை. அது போகட்டும்; சொல்லாமல் கொள்ளாமல் வெளியே போய்விட்டாயே! இதுதான் மரியாதையா?" என்றாள் பத்மினி.

"எங்கள் இந்திரா காலனி மரியாதை இதுதான். மீனாட்சியம்மாவைக் கேட்டுப் பாரேன். என் தங்கை எவ்வளவு ஜோராகச் சண்டை போட்டாள் பார்த்தீர்களா? நீங்க ஏற்றின பாலிஷ் எவ்வளவு சீக்கிரம் தேஞ்சு போச்சு, பாருங்க" என்றான் மாணிக்கம் சிரித்துக்கொண்டு.

"ஆமாம். இதெல்லாம் பெரிய விஷயமாக்கும்! என்னை விட்டிருந்தால் அதற்கு மேல் ஒரு மூச்சுச் சண்டை போட்டிருப்பேன்" என்றாள் மீனாட்சி.

"கறுப்பு நாயை வெள்ளை நாயாக ஆக்கமுடியாது" என்றான் மாணிக்கம், குறிப்பாக நளினி பக்கம் பார்த்து.

அலமேலுவின் கண்களில் நீர் குளமாகியது. அவள் குன்றித் தலைகுனிந்து கொண்டாள்.

நளினி, கவனிக்காததுபோல முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டாள்.

"பத்மினி, நீயும் நரசிம்மனுடன் எட்டவூருக்குப் போய்விடுவாய். மீனாட்சியம்மாவும் இந்த வேலையை விட்டுவிடலாம். மற்றவர்களும் இங்கே வராமல் இருக்கலாம்" என்றான் மாணிக்கம்.

பத்மினி, நளினியைத் தட்டி அழைத்து, "ஏய், வாங்க எல்லாரும் போகலாம். இவனோடு பேசிக் காலம் கழிக்க நமக்குப் போதில்லை" என்று கூறிக்கொண்டே எழுந்துவிட்டாள்.

மூவரும் பத்மினியின் காரை நோக்கி நடந்தனர். மாணிக்கம் அவர்கள் பின்னாலேயே சென்றான்.

"எதற்கு எங்கள் பின்னால் வருகிறாய்?" என்று போலிக் கோபத்துடன் கேட்டாள் பத்மினி.

"உங்களை விட்டுப் பிரிய முடியாமல் தான்" என்றான் மாணிக்கம்.

நளினி ஒருகணம் அவனைப் பார்த்து விட்டு, முகத்தை வெடுக்கென்று திருப்பிக்கொண்டு, காரில் ஏறி அமர்ந்தாள்.

மாணிக்கம் சட்டென்று காரைப் பிடிக்கப் போகவும், அவள் அறைந்து கதவைச் சாத்தவும் சரியாக இருந்தது. வலி தாங்காமல் மாணிக்கம், "ஓ!" என்று கத்தி விட்டான்.

நளினியும் பத்மினியும் கதவைத் திறந்து நோக்க, மாணிக்கத்தின் சுட்டுவிரல் நன்றாக நசுங்கி, ரத்தம் சொட்டக் காட்சியளித்தது. இரண்டு பெண்களும் வண்டியிலிருந்து இறங்கினார்கள். மாணிக்கம் டாக்டரிடம் ஓடினான். அதற்குள்ளாகவே மீனாட்சி தயார் செய்து வைத்துவிட்டாள். டாக்டர், காயத்தைப் பரிசோதித்து, "நல்ல காலம்! எலும்பு முறியவில்லை. கணுவோடு வெட்டிவிடும் சில சமயம்" என்று கூறிக் கட்டுப் போட்டார்.

"எங்கே கொண்டு கையை வச்சுட்டே, போ! வலிக்கிறதா?" என்று அநுதாபத்தோடு கேட்டாள் பத்மினி.

நளினி வெளிறிய முகத்துடனும் கலங்கிய கண்களுடனும், அருகில் நின்று தவித்தாள்; "ஸாரி, மாணிக்கம்!" என்று தடுமாறினாள்.

"பத்மினி, பழைய காலத்தில் குரு கட்டை விரலை வாங்கிக்கொண்டார்; இந்தக் காலத்தில், குரு மகள் சுட்டு விரலை .." என்று மாணிக்கம் வேடிக்கையாகப் பேசி முடிப்பதற்குள், நளினி வாய் விட்டு அழுதுவிட்டாள்; "புல்லாங்குழல் வாசிக்கும் விரலை .." என்று கேவினாள்.

"உஷ்! நளீ!" என்று அதட்டினான் மாணிக்கம்.





அந்த அழுகையிலும், ஓர் ஆனந்தத்துடனும் எதிர்ப் பார்வையுடனும் அவனைப் பார்த்தாள் பேதைப் பெண்.

14. ஊசலாடும் உள்ளம்

மாணிக்கம் தெருத் திண்ணையில் படுத்தவாறே சிந்தனையில் ஆழ்ந்தான். இரவு முழுவதும் அவனுக்குச் சரியாக உறக்கமே வரவில்லை. திரும்பத் திரும்ப, "முடிந்தால் வருகிறேன்' என்று தான் சொன்னதும், ஏமாற்றத்துடன் ஒரு பார்வை பார்த்துவிட்டு நளினி முகத்தைத் திருப்பிக் கொண்டதும், அவளைச் சமாதானம் செய்வதற்காக, 'விட்டுப் பிரிய மனமில்லை' என்று கேலிப் பேச்சுடன் தான் தொடர்ந்து போனதும், ஒரே விநாடியில் கையை நசுக்கிக் கொண்டதும் சினிமாப் படம் போல அவனுடைய மனக்கண் முன் விரிவதும் மடிவதுமாக உயிரை எடுத்தன. தெருவில் குழாயடியில் ஓசை அடங்கியதும், குழந்தைகளின் கும்மாளம் ஓய்ந்ததும், கடைகளை மூடிக்கொண்டு வந்தவர்களின் அரவம் அடங்கியதும், சினிமாவிலிருந்து திரும்பியவரின் கும்மாளம் நின்றதும் அவன் செவியில் விழுந்தன. எதையும் காண விரும்பாதவன்போல், தன் மேல்துண்டைப் பட்டையாக மடித்து, கண்கள்மீது போட்டுக் கொண்டு அவன் படுத்திருந்தான்.

''மாணிக்கமா தூங்குகிறது?'' என்று யார் யாரோ பேசிக்கொண்டபோதும் கூட அவன் அசையாமல் படுத்திருந்தான்.

'சுத்த முட்டாள் பயல்! உனக்கு என்னடா 'நளி'யும் 'புளி'யும்? நீ யார் என்பதே மறந்துவிடுமளவுக்கு உனக்கு என்ன அந்தஸ்து வந்துவிட்டது? என்னவோ குருட்டுப் போக்கில் ஆராய்ச்சி செய்தாய். எதையோ கிறுக்கிக் கட்டுரை ஒன்று தந்துவிட்டாய். அதனாலேயே நீ உன் ஆசிரியர் மகளை 'நளீ!' என்று செல்லமாக அழைக்கத் தகுதி வந்து விட்டதா? இதெல்லாம் எவ்வளவு விபரீதத்தில் கொண்டு சேர்க்கும் என்பது உன் மண்டைக்கு எட்டவில்லையா? 'நளி' யாமே! சுந்தரந்தான் அப்படி அவளை அழைப்பான். அவனுக்கு எல்லா விதத் தகுதியும் உண்டு; உறவு முறையும் உண்டு. உனக்கு என்ன இருக்கிறது? கட்டுக் கடங்காத நாக்கா? நளினியின் கண்ணீரைக் கண்டதும், 'உஷ், நளி' யாமே! அடேயப்பா, என்ன துணிச்சல்! அதுவும், பத்மினி, மீனாட்சி, டாக்டர்—மூவரும் எதிரே இருக்கும்போது, அந்தரங்கமாக அழைத்து அதட்டுகிறாயே! உன் மூளை மழுங்கி விட்டதா?' என்று தனக்குத் தானே பேசுவதும் ஏசுவதுமாகக் காலம் தள்ளினான் மாணிக்கம்.

அவன் சுட்டுவிரல் வேறு வலித்தது. இடக் கையினால் அந்தக் கட்டைத் தடவிக் கொடுத்தபோது அவனுக்குள்ளே ஓர் இன்பக் கிளர்ச்சி தலைதூக்கியது. விரல் துண்டானால்தான் என்ன? உலகத்துக்கே பெரிய இழப்பா என்ன! இந்த மாணிக்கமே அழிந்துவிட்டால் கூட ஒன்றும் பெரிய நஷ்டம் இல்லை. ஆனால், நளினி எப்படித் துடித்து விட்டாள்! நெஞ்சு விண்டுவிடுமோ என்று அஞ்சும்படி அப்படி ஒரு துக்கமா?

'நளீ, இது நமக்கு நல்லதே இல்லை. நீ ஏன் இந்த உதவாக்கரையிடம் அன்பு வைக்கிறாய்? உனக்குத் தகுந்தபடி ஒரு செருப்பு வாங்கித் தரமுடியுமா என்னால்? சுந்தரம் உனக்கு மரகதப் பாய் விரிப்பான்; உன்னை வைடூர்ய மாளிகையில் வைப்பான்!...அசடுபோல்..என் விரல் நசுங்கினால் என்ன பெரிய மோசமாகிவிட்டது? ஏதோ வேடிக்கைக்குச் சொன்னேன், குருமகள் விரலைக் கேட்டாள் என்று. எனக்கு அது ஒரு முக்கியமான விரல் என்று கூடத் தோன்றவில்லை. 'கட்டை விரல், சுட்டு விரல்" என்று கூடத் தோன்றவில்லை. 'கட்டை விரல், சுட்டு விரல்' என்று வேடிக்கையாகச் சொல்லப் போக நீ அழுது விட்டாயே!'

மாணிக்கம் மனத்துக்குள் நளினியிடம் பேசினான். வெளிப்படையாகச் செய்கையில் இறங்கத் துணியாதவன், தன் கற்பனைக் காட்சியில் அவள் தலையை வருடினான். முகத்தை நிமிர்த்தினான்; முதுகைத் தடவினான். 'த்ஸோ, த்ஸோ-அசடு, அழக்கூடாது! இப்படி நீ எனக்காக உருகுவாய் என்று தெரிந்திருந்தால் பத்து விரல்களையும் சந்தோஷமாக வெட்டிக்கொள்வேனே!'

மாணிக்கம் தான் காணும் கனவைத் துடைத்தெறிவதற்காக, ஆராய்ச்சியில் மனத்தைச் செலுத்தினான். அங்கும் ஊடே ஊடே நளினியின் முகமும் குரலும் வந்து தொல்லை கொடுத்தன. அவனது புத்தி கடிவாளத்தை இழுத்தது! எச்சரித்தது. ஆனாலும், மனம் தாவித் தாவி, வேண்டாத திக்கில் ஓடி ஓடி நளினியை வலம் வந்தது.

'நளியாமே, புளி! மனசில் கூட அழைத்துப் பார்க்காத ஒரு விளி, வாய் சோர வெளிவருமோ? அப்படி என்ன கட்டுக்கு அடங்காத தன்மை? நல்ல காலம், ''முடிந்தால் வரேன்'' என்று சொன்னாய் நீ இனி அவர்கள் வீட்டுத் திக்கில் தலைவைத்தும் படுக்க வேண்டாம். ஆசிரியர் கோபப்படுவார். 'நன்றி கெட்டவன்' என்று நினைப்பார். இருக்

கட்டுமே? சம்பந்தம் விட்டால் சரிதான்' என்று அவன் தனக்குத்தானே பேசிக் கொண்டான்.

காய்ச்சல் வந்ததுபோலே, அவன் உடலில் சூடு ஏறியது; தலை கனத்தது, அசதி விஞ்சியது. விடியற்காலையில் தெருவில் பெண்கள் எழுந்து சாணம் தெளிக்கும் நேரத்தில்தான் அவன் சற்றுக் கண் அயர்ந்தான். அவன் தாய் அவனை எழுப்பிவிட்டாள்.

''முத்து, எழுந்திரு. திண்ணையைக் கழுவவேண்டாம்? உள்ளே படுக்கிறதுக்கு என்ன? உடம்பு சரியில்லையா? பிதற்றினயே! புளி, புளின்னே. உங்கப்பா கடைக்குப் புளி வாங்கியாரச் சொன்னரா?'' என்று கேள்விகள் கேட்டபடி, தனபாக்கியம் அவனை எழுப்பினாள்.

தாயின் சொல்லைக் கேட்டதும், அவனுக்குத் திடுக்கிட்டது. 'புளி' எதற்கு எதுகையாக அமைந்தது? 'நளி'க்கல்லவா? அம்மா ஒன்றைக் கூறினர்களே, மற்றது அவர்களுக்கு எட்டவில்லையா? அல்லது வேண்டுமென்றே சொல்லாமல் விட்டு விட்டார்களா?

அசடு வழியும் முகத்துடன் அவன் எழுந்தான். தன் தடுமாற்றத்தை மறைக்க ஏதோ பேசினன். ''இங்கே ஒரே கொசுத் தொல்லை. ராத்திரியே எழுப்பி உள்ளே அழைத்துப் போயிருக்கக் கூடாதா?'' என்று தன் தாயையே தாக்கினன்.

''எழுப்பியிருக்கலாம். என்னவோ தோணலை. சரி, இப்ப எழுந்திரு'' என்று தாய், சகஜமாக அந்த விஷயத்தை ஒதுக்கி விட்டுத் தன் வேலையில் முனைந்தாள்.

மாணிக்கம் தன் படுக்கையைச் சுருட்டி உள்ளே போட்டுவிட்டு பல் துலக்கப் பின்புறம் போனன். அவன் தகப்பனர் தலையில் முண்டாசுடன் கிணற்றடியில் குளிப்பதற்காகத் தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்தார். அலமேலு கொல்லைப்புறம் முழுவதும் தண்ணீர் தெளித்துப் பெருக்கினாள். அண்ணனைப் பார்த்து லேசாகச் சிரித்து விட்டு. ''என்ன அண்ணு, கை ரொம்ப வலிக்கிறதா?'' என்று கேட்டாள். ''இல்லை, இப்போது ஒன்றுமில்லை'' என்றான் மாணிக்கம். கோலப் பெட்டியுடன் தங்கை தெருப் பக்கம் போய் விட்டாள்

'இவர்களுக்கு விரல் மடக்க நேரம் இல்லை. அப்படி நியமமாக வேலை இருந்துகொண்டே இருக்கிற நமக்குத்தான் மிகவும் சோம்பேறி வாழ்க்கையாகி விட்டது. ஆராய்ச்சி வேலை இருக்கும்வரை பொழுது சரியாகச் சென்றது. இனி அங்கும் போகாமல் இருந்தால், இங்காவது ஏதேனும் வேலை தேடிக்கொள்ள வேண்டும். ஆசிரியர் முன்பு சொன்னரே அப்படி நான் எந்த வேலைக்கு லாயக்கு? தேங்காய் மூடிக் கச்சேரிக்குக்கூடத் தைரியம் இல்லை. தட்டெழுத்தர் வேலை கிடைக்கலாம் இல்லையோ, தோட்டக்காரன் வேலை செய்யலாம்' என்று மாணிக்கத்தின் எண்ணங்கள் ஓடின.

அவன் பல் துலக்கிவிட்டு, உள் கூடத்துக்கு வந்து, அங்குள்ள படங்களின் முன் வணங்கி விட்டு எழுந்தான். கூடத்தில் அங்கும் இங்கும் ஒட்டடை தொங்கியது தெரிந்தது. அவன் ஓர் ஈச்சம் விளக்குமாற்றை எடுத்து அதை நீக்கினன்.

''காலையில் எழுந்ததும் இதென்ன வேலை? இந்தா, காபியைக் குடி'' என்று அவன் தாயார், பெரிய வெண்கல லோட்டா நிறையக் காபி தந்தாள்.

''இந்தாம்மா, என்னலே இவ்வளவு சாப்பிட முடியாது. பாதி கொடு, போதும். ஃபில்டர் இல்லையா? துணியில் வடிகட்டினீங்களா?'' என்று மூக்கைச் சுளித்துக்கொண்டே, அவன் லோட்டாவைத் தாயிடம் திருப்பித் தந்தான்.

''இதென்னடா இது? நான் என்னிக்கு ஃபில்டர் காபி போட்டிருக்கிறேன்? ரெட்டுத் துணிதான். அலமேலு தினமும் வெந்நீரிலே ஊறவச்சு, சவுக்காரம் போட்டுத் தோய்க்கிருளே!''

''நான் போற இடத்திலெல்லாம் ஃபில்டர் காபி, நல்ல பால் வழக்கமாகிப் போச்சு. தப்புத்தான்'' என்று முணுமுணுத்தான் மாணிக்கம்.

''தப்பு என்ன கிடக்கிறது? உன் படிப்புக்கும் நீ பழகுகிற மட்டத்துக்கும் அது சரிதான். பங்காரு அக்காவைக் கேளு, நான் சின்ன வயசிலே எப்படி இருப்பேன் என்று. கறந்த பால் சாப்பிடுவேன், சிவக்கக் காய்ச்சி. கட்டை விரல் பருமனுக்கு ஆடை படியணும்; அது அப்ப சரி. இப்ப, சைக்கிள் பால், கலப்படப் பால்—இது இப்ப சரி. தப்பு எது, சரி எது? எல்லாம் காலத்தையும் நேரத்தையும் பொறுத்ததுதானே?'' என்று சகஜமாக விளக்கினள் தாய்.

மாணிக்கம் தன் அன்னையின் முகத்தை நோக்கினன். தெளிவான வதனத்துடன், சாதாரணமாக இருந்தது தோற்றம்; அவனுக்கே வெட்கமாகிவிட்டது. மேம்பட்ட நிலையில் உள்ளவர்களின் சிநேகமே அவனை இப்படிப் பாதிக்குமானல், அவன் தாய் அந்த நிலையில் பிறந்து வளர்ந்தவள்; அவளுக்கு எப்படி இருந்திருக்கும்?

''அம்மா, அந்த நிலையிலிருந்து, இந்தச் 'செட்டிப்பள்ள' நிலைக்கு எப்படி இறங்கினே? உனக்கு ஏக்கமே தோன்றலையா? ஏமாற்றமாக இல்லையா?'' என்று அந்தரங்கமாகக் கேட்டான் மாணிக்கம்.

"ஏக்கமாவது, மாற்றமாவது? அதெல்லாம் நாங்கள் சின்னவங்களா இருந்தபோது செலாவணியில் இல்லாத சொல்லுங்க. எங்க அப்பா நல்லா வாழ்ந்தாரு. தொழுவத்திலே ரெண்டு மாடு, கொட்டகையிலே கோச்சு வண்டி எல்லாம் இருந்தன. வியாபாரத்திலே தொடர்ந்து நஷ்டம் வந்தது. எல்லாம் போச்சு. உயர்மேட்டிலிருந்து செட்டிப் பள்ளத்துக்கு நான் வந்தேன். விதியிலே நம்பிக்கை இருக்கிறவங்களுக்கு, கடவுள் நியதியிலே பிடிப்பு இருக்கிறவங்களுக்கு மேடு பள்ளமும் ஒரே மாதிரிதான் தெரியும். நான் வரேன். வேலை காத்துக் கிடக்கு" என்று சாவதானமாகச் சொல்லிவிட்டு விரைந்தோடி விட்டாள் தாய்.

அன்னை தந்த காபி இப்போது ருசியாக இருந்த மாதிரி இருந்தது, மாணிக்கத்துக்கு. லோட்டாவைக் கழுவி எடுத்துக்கொண்டு, அவன் சமையலறைக்குள் போனான். சுவரில் மாட்டியிருந்த ஆப்பைக் கூட்டின் கொக்கிகளில், பீங்கான் கோப்பைகளும் தட்டுகளும் மாட்டப்பட்டும், அருகில் கண்ணாடி டம்ளர்கள் கவிழ்க்கப்பட்டும் இருப்பதைப் பார்த்தான். புகை படிந்த அந்தச் சமையலறையில் இந்தக் கண்ணாடி, பீங்கான் பாத்திரங்கள் ஒன்றுமல் பளிச் சென்று தனித்து நின்றன.

"இதெல்லாம் ஏது?" என்று கேட்டான் மாணிக்கம்.

"உன் தங்கைதான் இந்திரா காலனியிலேந்து உயரப் பார்க்கிறா. நளினி, பத்மினி போன்றவங்க வந்தால் கொடுக்கிறதுக்காம். உறிஞ்சிக் குடிக்கிற குழாயைப் பார்த்தியா? அந்த மாட்டுகிற இரும்புக் கூட்டுக்கே விலை எட்டு ரூபாய்" என்றாள் தனபாக்கியம்.

மாணிக்கம் அந்த இரும்புக் கூட்டையும், பொருள்களையும் பார்த்தான். மகிழ்ச்சியுறுவதற்கு மாறாக, அவன் மனத்தில் வேதனை மிகுந்தது. அவன் மௌனமாகத் தன் அறைக்குச் சென்றுவிட்டான். தன் பெட்டியிலிருந்த ஆராய்ச்சிக் குறிப்புகளை எடுத்துப் புரட்டிக்கொண்டிருந்தான்.

"அண்ணா, டாக்டர் கூப்பிடறாரு. கையிலே கட்டுப் போடணுமாமே?" என்று கூப்பிட்டாள் அலமேலு.

மாணிக்கம் எழுந்து வந்தான்.

"ஏன், அண்ணா குளிக்கலையா? நளினா அப்பா வரச் சொன்னாராமே! போக வேண்டாம்? விடிஞ்சு இவ்வளவு நேரங் கழிச்சுப் போனால் சங்கீதம் பாய்ச்ச முடியுமோ?" என்று கேட்டாள் அலமேலு.

"எனக்கு இப்ப அந்த வேலையெல்லாம் இல்லை. அலுவலகத்திலே குறிப்புகளை ஆராயற வேலைதான். நான் போகப் போகிறதில்லை. இருக்கிறாங்களே புது மாணவங்க; பாத்துக்கிடட்டுமே!"

"நல்லா இருக்காது; போ, அண்ணா."

"இதோ பார், அலமேலு என் விஷயத்திலே நீ தலையிடாதே. உன் கல்யாணம் நின்னு போச்சே; நான் ஏதாவது உன்னைத் துருவிக் கேட்டேனா? புத்திமதி சொல்ல வந்தேனா?"

அலமேலு நிதானமாகத் அண்ணன் முகத்தை ஆராய்ந்தாள். பிறகு, கனமான குரலில், ஆணித்தரமாகக் கேள்வி கேட்டாள். "இவ்வளவுதானா அண்ணா, நமக்குள்ளே சொந்தம்? நீ என்னைக் கேட்காதது மிகவும் சரியோ? இல்லை, நான் சொன்னதுதான் தப்போ? யோசித்துப் பாரு" என்று சொல்லிப் போய்விட்டாள்.

மாணிக்கம் டாக்டர் வீட்டைத் தேடிச் சென்றான். 'அடேயப்பா! நம் தங்கை என்ன பேச்சுப் பேசறா!' என்று அவன் மனம் பல்லவி பாடியது.

டாக்டர் அவன் கை விரலுக்குச் சிகிச்சை செய்தார். நன்றாக வெட்டி விட்டிருந்தது. "இஸ்ஸ்" என்றான் மாணிக்கம், வலி பொறுக்காமல்.

"எப்படிப் பார்க்காமல் சாத்தி விட்டாள் அவள்? இந்தக் காலத்துப் பெண்களுக்கே அவசரம் அதிகம்" என்றார் டாக்டர்.

"இல்லை. நான் கைவைக்கப் போகிறேன் என்று நளினிக்கு எப்படித் தெரியும்? விதிவசமாக அப்படி நேர்ந்து விட்டது."

மாணிக்கம் கைக்கட்டுடன் கிளம்பின போது, அன்றையச் செய்தித்தாளை எடுத்துக் கொண்டு தன் வீட்டுக்குப் போனான்.

முன்னாள் போலவே நளினியும் பத்மினியும் அங்கே வந்து சேர்ந்தார்கள். மாணிக்கத்தின் உள்ளுணர்வு நளினியின் அண்மையைப் புலப்படுத்தியது. அதிருப்தியுடன் அவன் நிமிர்ந்து அவர்களை நோக்கினான். "வாங்க" என்று மரியாதைக்கு அழைத்து, அவர்களை உள்ளே கூட்டிச் சென்றான். "அலமேலு!" என்று அவன் குரல் கொடுத்ததும், அலமேலு கொல்லையிலிருந்து ஓடி வந்தாள். "வாங்க, அக்கா, உட்காருங்க. காரிலா வந்தீங்க?" என்று உபசரித்தாள்.

"இல்லை, பஸ்ஸிலே வந்தோம். மாணிக்கத்துக்குக் கையிலே அடிபட்டுவிட்டதே! வீட்டிலே இருப்புக் கொள்ளவில்லை. நேற்றுத்தான் எங்களுக்குப் புல்லாங்குழல் வாசிச்சுக் காட்டினார். அதற்குள்ளே திருஷ்டிபட்டது போலக் கை நசுங்கி விட்டது" என்று கரிசனத்தோடும் கவலையோடும் கூறி முடித்தாள் பத்மினி.

"தான் புல்லாங்குழல் வாசிப்பது யாருக்கும் தெரியக்கூடாதுன்னு மறைச்சு வச்சால் அப்படித்தான்" என்றாள் அலமேலு, தமையனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே.

"என்ன, அலமேலு, அப்படிப் பேசறே? அவருக்குச் சங்கோஜம்னு நீதானே சொல்லுவே? குழல் வாசிக்கிற விரலை உடைச்சுட்டேன். என்னாலே அதைப் பொறுக்கவே முடியலை" என்று கூறும் போதே நளினியின் கண்கள் நீருடன் தளும்பி நின்றன.

மாணிக்கம் தன்னை எச்சரித்துக்கொண்டான். மீண்டும் வாய்தவறி ஏதாவது வார்த்தை வந்துவிடுமோ என்று அஞ்சினவனாக, அவன் எழுந்து சென்று, தன் அறைக்குள் புகுந்துகொண்டான்.

"நளினி, பார், பார்! நீ ஏதாவது சொல்லணும்னு இப்பவே சொல்லிவிடு. அவன் தெருவிலே இறங்கி, விடுவிடென்று மறைந்துவிடுவான். அதைச் சொல்ல வேணும், இதைச் சொல்ல வேணும்னு பிறகு என் உயிரை எடுக்காதே" என்றாள் பத்மினி.

நளினியும், "ஆமாம். அப்பா சொன்னதைச் சொல்லி விடுகிறேன்" என்று கூறிக்கொண்டே, மாணிக்கத்தின் அறையின் வாசற்படியில் நின்று, "மாணிக்கம், அப்பா உங்களை வரச்சொன்னார். ஒலிப்பதன அறையைப் பயன்படுத்தக் கற்றுக் கொடுக்கவேண்டுமாம். தினமுமே காலையில் மூன்று மணி நேரம் வரும்படி கூறினார்" என்றாள்.

"எல்லாந்தான் உங்களுக்கே தெரியுமே! மற்றவர்களுக்குச் சொல்லித் தருகிறது" என்றான் மாணிக்கம், சுவரைப் பார்த்தபடி.

" 'உங்கள்' யார்? அப்பாவும் நானுமா?" என்று கேட்டாள் நளினி.

"மிஸ் நளினி, நேற்றுச் வாய் தவறிச் சட்டென்று ஏதோ கூப்பிட்டுவிட்டேன். மன்னித்துவிடுங்கள். நீங்களே உங்கள் அப்பாவிடம் சொல்லி விடுங்கள். நான் இனி அங்கே வரமாட்டேன்."

"ஏனாம்?" என்று சற்றுக் காரமாகவே கேட்டாள் நளினி.

"என் நிலைமைக்கும் வசதிக்கும் ஒவ்வாத ஓரிடத்தில் காலை எடுத்து வைத்து விட்டேன். சரி, ஆராய்ச்சி முடிந்து விட்டது, அதோடு நான் விலகிக் கொள்ள விரும்புகிறேன்."

"எளிதில் சொல்லிவிட்டீர்கள். முன் வைத்த காலைப் பின்வைப்பது முறையும் அல்ல, எளிதும் அல்ல" என்று சொல்லி விட்டு நளினி திரும்பினாள். பிறகு ஒரு முறை திரும்பிப் பார்த்து, "மிஸ்டர் போடாமல் 'மாணிக்கம்' என்று சலுகையாக அழைத்துவிட்டேன், மன்னிச்சுக்குங்க" என்றாள்.

மாணிக்கம் சுவர் பக்கம் திரும்பினான். இரு கைகளையும் முஷ்டிகளாக உருட்டிக்கொண்டு படாத பாடுபட்டான்.

நளினி கூடத்துக்குப் போய்விட்டாள். அலமேலுவும் பத்மினியும் அங்கு எதைப் பற்றியோ பேசிக்கொண்டிருந்தனர். நளினி சென்றதும் அவளும் அதில் கலந்து கொண்டாள். 'குழாய்' என்றும் 'குடம்' என்றும் என்னவோ சொற்கள் மாணிக்கத்தின் செவியில் விழுந்தன. அவன் மெதுவாக ரேழிப் பக்கம் வந்து நின்றான். அலமேலு முன்னாள் குழாய்ச் சண்டையை விவரித்துக் கொண்டிருந்தாள். மாணிக்கத்துக்கு மானம் போயிற்று. ஆயினும், பேச்சில் குறுக்கிட அஞ்சி, அவன் அப்படியே நின்றான்.

"நெதமும் அவர்களுடன் வம்புக்குப் போகமாட்டேன். நின்னு போன என் கல்யாணத்தைப் பத்திக் கேவலமா யாரோ பேசினாங்க. அந்தக் கோபத்திலே குடத்துமேலே பாய்ஞ்சுட்டேன். அண்ணாவுக்கு ரொம்ப அவமானமாயிடிச்சு. உங்கள் முன்னாடியெல்லாம் அவரைத் தலைகுனியச் செஞ்சுட்டேன்" என்றாள் அலமேலு.

"தலை குனிவு என்ன கிடக்கிறது? அந்த மாதிரி சந்தர்ப்பத்திலே நாங்களும் அப்படித்தான் சண்டை போடுவோம். உன் அண்ணன் கிடக்கட்டும்" என்றாள் பத்மினி.

"பொண்ணு!" என்று கந்தசாமி செட்டி, கிணற்றடியிலிருந்து குரல் கொடுத்தார். இவர்கள் பேச்சுச் சுவாரசியத்தில் ஒருவருக்கும் காது கேட்கவில்லை. அவர்கள் பேசிக்கொண்டே போனார்கள்.

நளினி அலமேலுவைப் பார்த்து, "சில சமயம் இப்படித்தான் தப்பு நடந்து விடுகிறது, அலமேலு. நானும் பார், எங்கோ நினைவாகக் கதவைச் சாத்த, உன் அண்ணன் விரல் துண்டித்து விட்டது" என்றாள்.

"உன் மனசுதான் துண்டாகி விட்டது. அவன் கை நன்றாகத்தான் இருக்கிறது" என்றாள் பத்மினி.

இப்போது கந்தசாமி செட்டி, இவர்கள் இருந்த கூடத்துக்கே வந்து விட்டார். அவர் தலைக்குடுமி ஈரத்துடன் அவிழ்ந்து கிடந்தது. பருத்து வழிந்த தொந்திமீது இறுகச் சுற்றியிருந்த வேஷ்டி, முழங்காலுக்கு மேல் நின்றது. பழுப்பேறிய ஒரு மேல்துண்டை அக்குளில் அடக்கிக் கொண்டு, கோபமே உருவாக அவர் எதிரே வந்து நின்றார்.

"ஏ, பொண்ணு? வரவர உனக்குத் திமிர் ஏறிப் போச்சா? பெரிய இடத்துச் சிநேகம் பிடிச்சிட்டே இல்லே?" என்று உறுமினார் அவர்.

மாணிக்கம் மறைவிலிருந்து எதிரே வந்தான். பத்மினியின் அருகில் வந்து, அவள் செவியில் படும்படி மெதுவாக, "வாங்க, நாம் வெளியே போவோம்" என்றான்.

பத்மினி செவி சாய்க்காமல் கந்தசாமி செட்டியாரையே கவனித்தாள். நளினி சுவர் ஓரமாக ஒட்டிக்கொண்டு நின்றாள்.

"ஏன், அம்மா, உங்களுக்குத்தான் வேலை இல்லை. உங்கள் அப்பா சம்பாதித்த பணத்தையெல்லாம் கொட்டிப் படித்து விட்டு, காரிலே ஏறி, வீடு வீடா நுழைஞ்சு புறப்படறீங்க. என் பெண் அப்படியா? ஏன், அம்மா, வந்து.."

பத்மினி எழுந்து நின்று, ஏதோ பதில் சொல்ல முயன்றாள். அதற்குள் மாணிக்கம் குறுக்கிட்டு, "நீங்க ரெண்டு பேரும் வாங்க, வெளியே போகலாம்" என்று அழைத்தான்.

"கூப்பிடுடா, கூப்பிடு. நீதான் அவங்களோடு சேர்ந்து உருப்படி இல்லாமல் போய்ட்டே. அலமேலுவையும் குட்டிச் சுவராக்க.."

"அப்பா! கவனிச்சுப் பேசுங்க!" என்றான் மாணிக்கம் அதட்டலாக.

ஒரு கணம் கந்தசாமி செட்டி வாயடைத்து நின்றார். 'எவ்வளவு தான் கடுமையாகத் திட்டினாலும் கேட்டுக் கொண்டு நிற்கும் மாணிக்கம் இன்று அதட்டுகிறானே!'

அலமேலு தன் தகப்பனின் கையைப் பிடித்துக் கெஞ்சினாள். "உங்கள் மனசு சரியாயில்லே என்றால், அவர்களை எதற்கப்பா கோபிக்கணும்? அன்போடு வீடு தேடி வந்தாங்க" என்றாள்.

"நம் முகத்திலே கரி பூசியாச்சு!" என்று தனபாக்கியம் நொந்து கொண்டாள்.

"பேசாமப் போங்கடி! இந்த இவங்களுடைய நாகரிக டிரஸ்ஸும் பேச்சும் பார்த்து மயங்கித் தானே, கோபாலுக்கு நம்ம அலமேலுவைப் பிடிக்காமல் போயிடிச்சு? ஒரு லட்சத்துக்குமேல் சொத்துப்போயிடுச்சே! இவங்க சிநேகம் அதைக் கொடுக்குமா?"

அவர் மேலே பேசுவதற்குள், தனபாக்கியம் அவரைத் தள்ளிக்கொண்டே கொல்லைப் புறம் போனாள்.

அலமேலு பத்மினி கையைப் பிடித்து, "அக்கா, மன்னிச்சுக்குங்க. கவலையினால் என்ன பேசுவது என்று தெரியாமல் பேசுகிறார் அப்பா. உங்களைச் சொல்லவில்லை" என்று கெஞ்சிக் கண்ணீர் உகுத்தாள்.

"போதும்! ஒப்பாரி வைத்துக் கொண்டு தெருவரை வரவேண்டாம். போ, உள்ளே!" என்று தன் தங்கையைப் பார்த்துக் கர்ஜித்து விட்டு, "வாங்களேன், அம்மா" என்று எரிச்சலுடன் அழைத்தான் மாணிக்கம்.

நளினியும் பத்மினியும் அவன் பின்னால் தொடர்ந்து வெளியே வந்தார்கள். அவர்களை பஸ் வரை அழைத்துச் சென்று, ஊர்தியில் ஏற்றிவிட்டு நின்றான் மாணிக்கம்.

"மாணிக்கம், நீ பேசுவது நன்றாகவே இல்லை. என்ன பிரமாதமாக நடந்து விட்டது? நாங்கள் அந்நியர்களா, பைத்தியம்போல?" என்றாள் பத்மினி.

"நான் பைத்தியம் அல்ல, பத்மினி. இந்த இந்திரா காலனியைச் சுவர்க்கமாக மீனாட்சி தீட்டுவதை நம்பி, நீங்களும் ஒரு நாளைக்கு மூன்று தடவை ஓடி வருகிறீர்களே! நீங்கள் தாம் பைத்தியம். இது நாகரிகமற்ற ஒரு தேக்கம். இனி மேலாவது வராதீர்கள்."

"ஏனோ?"

"வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்."

"நாம் வந்தால் இவருக்கென்ன, பத்மினி? இவரைத் தேடி வருவதானால் இரண்டு வருஷம் முன்பே ஆரம்பித்திருப்போமே! மீனாட்சிக்காக வருகிறோம், இனியும் வருவோம். அதை இவர் யார் தடுக்க?" என்றாள் நளினி.

மாணிக்கம் சிரிக்கவே இல்லை. பஸ் கிளம்பினதும் திரும்பிக் கூட்டத்தில் மறைந்தான்.

"நளினி, அவர்கள் வீடு ஒரே உணர்ச்சிக் களஞ்சியமாக இருந்தது பார்த்தாயா? அலமேலுவின் கல்யாண வியவகாரம் அப்படி ஆட்டிப் படைக்கிறது அவர்களை" என்றாள் பத்மினி, பஸ் கிளம்பியவுடன்.

"பணம் போய்விட்டதே என்று தகப்பனார் துடிக்கிறார். மானம் போய் விட்டதே என்று தமையனார் தவிக்கிறார். ஆசை மோசமாகிவிட்டதே என்று பெண் புழுங்குகிறாள். தங்கள் மனக் கஷ்டத்தைத் தாங்கமாட்டாமல் பிறர்மீது பாய்கிறார்கள்" என்றாள் நளினி.

"தனபாக்கியத்தம்மாதான் மிகவும் நிதானமான மனுஷி. அந்த அம்மாளிடம் சொல்லிக் கொள்ளாமலே வந்து விட்டோமே!" என்றாள் பத்மினி.

"அதைச் சாக்கு வைத்துக்கொண்டு நாளைக்கு வருவோமா?" என்று கேட்டு விட்டுச் சிரித்தாள் நளினி.

"இனிமேல் அங்கே போனால், மாணிக்கம் தற்கொலையே செய்து

கொண்டு விடுவான்'' என்று பதில் கூறிவிட்டு நகைத்தாள் பத்மினி. அவள் தொடர்ந்து பேசினாள்; ''ஆனாலும் தொட்டாற் சிணுங்கியாக இருக்கிறான் அவன். நமக்கு மட்டும் ஒன்றும் தெரியாதா? நாமும் நாலு இடங்களுக்குப் போகவில்லையா? அவர்கள் உணர்ச்சி வசப்பட்டிருக்கும்போது பேசுவதை நாம் தவறாகத்தான் நினைப்போமா? இவன் என்னமோ தவிக்கிறானே!'' என்றாள் பத்மினி.

''எனக்குந்தான் சில சமயம் எரிச்சலாக இருக்கிறது. என்னவோ தாழ்வு மனப்பான்மை அவருக்கு. என் அப்பா அவரை இந்திரன், சந்திரன் என்று புகழ்கிறார். அவரைக் கொண்டு ஒரு புத்தகம் எழுதவேண்டுமென்கிறார். இந்த மாணிக்கமோ, நத்தையைப் போல், போய்ப் புகுந்து கொள்கிறார்'' என்றாள் நளினி.

''நாம் என்ன செய்யமுடியும்? இன்றைக்கு அப்பாவை அடக்கினானே; கம்பீரமாகத்தான் தொண்டை வந்தது. அப்படியே இருக்கலாமே! மூஞ்சூறு மாதிரி கதவு பின்னால் ஒளிந்துகொண்டால்; நாம் என்ன செய்ய முடியும்?''

''அவரை முன்னுக்கு இழுத்துவிட வேண்டும், பத்மினி. பணம் இல்லாததாலேயே தகுதி போய்விடும் என்று அவர் நினைக்கிறார். அன்று ஒரு நாள் லெக்சர் செய்யப் போகும்போது, சண்டி மாடு மாதிரிப் படுத்தாரே; நானாகப் போய், ஏதோ பேசி, வழி அனுப்பி வைத்தேன். எவ்வளவு பிரமாதமாக அன்று வகுப்பு எடுத்தாராம், தெரியுமா? பையன்கள் அப்பாவிடம் வந்து புகழ்ந்தார்கள். இவருக்கு உடனே நம் கல்லூரியில் வேலை கிடைக்கும். அப்பாதான் இவரை எங்கோ ஆகாசத்தில் ஜொலிக்கச் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறார்.''

''நளினி, உன் பேச்சு எனக்குப் பயமாக இருக்கிறது. இந்திரா காலனி மாணிக்கத்தை, சர்வகலாசாலைக்கு அழைத்துச் செல்லும் பாலமாக நீ இருக்கப் பார்க்காதே. மிதி பட்டுச் சிரமப்படுவாய். சுந்தரத்தை மணந்து கொண்டு நிம்மதியாக இருக்கப் பிரயத்தனப்படு. மாணிக்கங்கள் தாங்களாகப் பிரகாசிக்க வேண்டுமே தவிர, அவற்றை விளக்குவைத்துப் பொலியவைக்க முடியாது. நமக்கு நல்ல நண்பன்; அதோடு நிற்கட்டும்.''

''குப்பையிலே மாணிக்கம்னு பேச்சுக்குச் சொல்லுவாங்க. இது அப்படியே இருக்குது. எடுத்துத் தங்கக் கட்டுப் போட்டு, வெல்வெட் பெட்டியிலே வைக்கவேண்டாமா? தானாகப் பெட்டி ஏறுது, பத்மினி'' என்றாள் நளினி.

''சரி, சரி. நான் எச்சரித்துவிட்டேன். இனி உன் பாடு'' என்றாள் பத்மினி.

அதன் பிறகு இருவரும் பேசவேயில்லை. மௌனமாகவே பஸ்ஸிலிருந்து இறங்கி, தம் தம் வீடு போய்ச் சேர்ந்தனர்.

இவர்களைப் பஸ்ஸில் ஏற்றிவிட்டு, மாணிக்கம் நேரே வீட்டுக்கு வந்தான். விலக்கி விலக்கித் தள்ளினாலும் மூடிக் கொள்ளும் பாசியைப் போல, நளினி ஏன் தன்னிடம் நெருங்க வேண்டும் என்ற கேள்வி அவன் மண்டையைக் குடைந்தது.

அவன் வீட்டுக்குள் நுழையும்போதும், அங்கே கந்தசாமி செட்டியின் இரைச்சல் நடந்துகொண்டே இருந்தது.

''அவன் மீது கேஸ் போடாமல் விடுவேனா? மான நஷ்டஈடு கேட்காவிட்டால், நான் கந்தசாமி செட்டி இல்லை. என் பெயர் இந்திரா காலனியில் கெட்டு விட்டது. இந்த அற்பப் பயலாலே!''

''உங்கள் பெயரை அவர்கள் கெடுத்தது சந்தேகம். நீங்கள் இப்படித் தெரு அதிரும்படி கத்திக் கெடுத்துக் கொள்வது நிச்சயமாகத் தெரிகிறது'' என்றாள் தனபாக்கியம்.

''போங்க, அப்பா. நல்ல மனுஷர்களை விரட்டி விட்டீங்க. நாளைக்கு அண்ணனுக்கு ஏதேனும் நல்லது நடக்கக்கூடிய வழியை அழிச்சிப்பிட்டீங்க. நானும் என் மனசைத் தெளிவாக வைத்துக்கொண்டு, மீனாக்கா வீட்டுக்குப் போய்வந்துகொண்டிருந்தேன். இனிமேல் எப்படி அவுங்க மூஞ்சியிலே விழிப்பேன்? இனிமேல் நான் எப்படி அப்பா, இருக்கப் போகிறேன்?'' என்று அழுதாள் அலமேலு.

''நீ சும்மா இரு, பொண்ணு. அந்த மணவாளன் கிட்டேயிருந்து பணத்தைக் கறந்து, இந்த இந்திரா காலனியையே வளைச்சுப் பந்தல் போட்டு, உன்னை வேறே நல்ல பிள்ளைக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன். இந்தக் கந்தசாமியை யாருக்கும் தெரியாது. இந்திரா காலனியைக் கலக்கிவிடுகிறேன், பாரு. அப்புறம் தெரியும் சேதி!'' என்று தகப்பனார் துள்ளித் துள்ளிப் பேசினார்.

மாணிக்கம் தன் அறைக்குள் சென்றான். தன் பெட்டியைத் திறந்து ஒழுங்குபடுத்தி வைத்தான். பூட்டிச் சாவியை மறைவாக ஓரிடத்தில் வைத்தான். சிறு பையில் முக்கியமாகச் சில துணிமணிகள், குறிப்புப் புத்தகம், பேனா, கையிலிருந்த பணம் யாவற்றையும் எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டான். இனி இந்த வீட்டுக்கும் தனக்கும் சரிப்படாது என்று தோன்றிவிட்டது அவனுக்கு.

(தொடரும்)

முத்துச் சிப்பி

— அநுத்தமா

15. குழப்பச் சூழல்

"வீட்டில் சண்டை போட்டுக் கொண்டு விட்டாயா என்ன?'' என்று நிதானமாகக் கேட்டார் சுவாமிகள்.

மாணிக்கம் சாமியாரைத் திரும்பி நோக்கினான். ஆனால், அவர் அவனைப் பார்க்கவில்லை. பெரிய புத்தகம் ஒன்றைத் திறந்து வைத்துக்கொண்டிருந்தார். மாணிக்கம் அவர் அருகில் மண்டியிட்டு அமர்ந்து, அந்தப் புத்தகத்தைப் பார்க்கலானான். இரண்டடிக்கு ஒன்றரை அடி அளவுப் புத்தகம் அது. தடித்த காகிதத்தில் என்னவோ விசித்திர விசித்திரமான படங்களுடன் புரியாத ஒரு பாஷையில் எழுதியிருந்தது அதில்.

''பார்த்தாயா, மகனே? நீ படிக்க வேண்டிய விஷயங்கள் இதில் இருக்கின்றன'' என்றார் பெரியவர்.

''என்ன புத்தகம் இது?'' என்று கேட்டான் மாணிக்கம்.

''திபேத்திய இலக்கியம். அவர்களுடைய மதக்கொள்கைகள் யாவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் நீ பார்த்தாயானால், ஒலியைப் பற்றிய வாதங்கள் கிடைக்கும். சில இடங்களில் பார்த்தால் சாக்த மதத்தின் கொள்கைகள் காணப்படுகின்றன'' என்றார் சாமியார்.

மாணிக்கம் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறாய், மாணிக்கம்? திபேத்தியர்களின் பண்பாடு..''

''அவர்கள் பண்பாட்டைப்பற்றிப் பேச எனக்கு என்ன உரிமை இருக்கிறது? குழந்தையின் கையில் பகவத்கீதையைத் தந்தால், அதற்கு என்ன புரியும்? பொம்மை பார்த்துவிட்டு வைத்துவிட வேண்டியதுதானே?'' என்று கேட்டுவிட்டு, மாணிக்கம் மீண்டும் சிரித்தான்.

''அவசரப்பட்டு விட்டாயே! இதோ பார், இந்தப் புத்தகத்துக்கு மொழிபெயர்ப்பு ஆங்கிலத்தில் இருக்கிறது. நீ படித்துப் பார். எவ்வளவோ விவரங்கள் புலனாகும். உன் ஆராய்ச்சிக்கும் உதவும்.''

''நான் உங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?''

''நீ நல்லபடி பிழைத்தால், அதுதான் கைம்மாறு. அதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும்?''

''என்னால் முடிந்தவரையில் நல்ல பெயருடன் வாழத்தான் பாடுபடுவேன்.''

''அது தெரியும்.''

''எனக்கு என்றும் இந்தத் திடமிருக்க வேண்டும் எனத் தாங்கள் ஆசீர்வதிக்க வேண்டும்.''

''இருக்கவேண்டும்; கட்டாயம் இருக்க வேண்டும்.''

மாணிக்கம், தூக்கமாட்டாத அந்தப் புத்தகத்தை மேஜைமீது விரித்து வைத்து, அதைப் பார்க்க ஆரம்பித்தான்.

''மாணிக்கம்!'' என்று அழைத்தார் சுவாமிகள். அவர் குரல் அவனைச் சுண்டி இழுத்தது. புத்தகத்தை வைத்துவிட்டு அவன் அவரைப் பார்த்து நின்றான். ''நான் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்வாயா?'' என்று அவர் கேட்டார்.

''பதில் சொல்லாமல் இருந்ததே இல்லையே!'' என்று கலவரத்துடன் சொன்னான்.

''இப்பொழுது கேட்கப்போகும் கேள்விக்கு உண்மையான பதிலைச் சொல்ல வேண்டும்.''

''கேளுங்கள்.''

''நீ வீட்டில் சண்டை போட்டுக் கொண்டு வந்துவிட்டாயா?'' என்று, முன்பு கேட்ட கேள்வியையே அவர் மீண்டும் கேட்டார்.

''இல்லை.''

''பின் இங்கே வந்து ரகசியமாக இருக்க விரும்பும் காரணம் என்ன?''

மாணிக்கம் தலைகுனிந்து சிறிது நேரம் மவுனமாக இருந்தான். பிறகு நிமிர்ந்து சுவாமிகளைப் பார்த்து, ''நான் யாரிடமும் சண்டை போடவில்லை. நான் பழகும் உலகத்தில் என் மனம் ஒன்றவில்லை. இங்கேயே இருந்து, தங்கள் திருவருளால் துறவறத்தை மேற்கொள்ள விரும்புகிறேன்'' என்றான்.

''மேற்கொண்டு?'' என்று கேட்டார் பெரியவர்.

"மேற்கொண்டு. என் வாழ்நாளைத் தெய்வ வழிபாட்டிலும், இலக்கியச் சேவையிலும் செலவிட விரும்புகிறேன். மனசுக்குச் சாந்தி தேட விரும்புகிறேன்."

"தெய்வ வழிபாட்டுக்கும், இலக்கியச் சேவைக்கும் துறவறம் தேவையா?"

"என் மனம் உலகத்தில் ஒன்றவில்லை."

"உலகம் உன்னைப் பிடித்துக்கொண்டது என்றாவது உனக்குத் தெரியுமா? பிறகல்லவா, அதில் நீ ஒன்றுகிறாயா இல்லையா என்ற பிரச்னை எழக் காரணம் உண்டு!"

"நான் நிம்மதியாகப் படிக்க விரும்புகிறேன். அமைதியை நாடுகிறேன். உலகம் குறுக்கே குறுக்கே வந்து என்னைச் சங்கடப்படுத்துகிறது."

சுவாமிகள் லேசாகச் சிரித்தார். அவர் எண்ணத்தைக் கிரகித்து விடுபவன்போல, அவரை மாணிக்கம் ஊடுருவிப் பார்த்தான்.

"ஹூம்! அப்படியானால், துறவியாகத் தீர்மானித்துவிட்டாயா?"

"ஆமாம். இந்த மடத்துத் தோட்டத்தில் கால் வைக்கும்போதே என்னை அமைதி கவ்விக் கொள்கிறது. பிரார்த்தனைக் கூடத்தில் இருக்கும்போது பேரானந்தமாக இருக்கிறது."

"அது சரி. துறவறம் பூண உனக்குப் பக்குவம் இருக்கிறதா?"

"எனக்கு வேறு சிந்தனையே இல்லையே!"

"அது போதுமா? துறவறத்துக்கு இந்த மடமும் அமைதியும் தேவை என்கிறாயா? உலகத்துக் கூச்சலில் முடியாது என்கிறாய், அப்படித்தானே?"

"ஆமாம். விடாமுயற்சியும், சிறந்த வழிகாட்டியும், போதிய பயிற்சியும் இருந்தால், பக்குவம் தானாக அமையாதா?" என்று ஆவலோடு கேட்டான் மாணிக்கம்.

"மனம் என்பது ஒரு குழந்தை மாதிரி, மகனே. புதுப்புது விளையாட்டுகளைத் தேடும். வேண்டாத விளையாட்டை அது விரும்பினால், குழந்தையின் போக்கிலேயே விட்டுவைத்து மனத்தை மாற்ற வேண்டுமேயன்றி, ஜன்னல் இல்லாத இருட்டறையில் அடைத்துப் போட்டால் அது மறக்காது."

"இருட்டில் அமைதி காணாதா? விளையாட்டை மறந்துவிடாதா?"

"மறக்காது. அது மட்டுமல்ல; இருட்டைக் கண்டு அலறும் அந்த மனம், பீதி கொள்ளும். விபரீதமாகிவிடும்" என்றார் சுவாமிகள்.

"அப்படியென்றால்..?" என்று தயங்கிக் கேட்டுவிட்டுப் பதிலுக்குக் காத்திருந்தான் மாணிக்கம்.

"துறவறம் என்பது காஷாயத்தில் ஆரம்பித்து, உள்ளத்துப் பக்குவத்தில் முடிவதில்லை. உள்ளம் தெளியவேண்டும், முதிரவேண்டும், பக்குவம் பெற்றுத் தானாக விலகவேண்டும். அன்றுதான் காஷாயம், மடம், அநுபூதி எல்லாம். நீ தலைகீழாகப் படிக்கப் பார்க்கிறாய்."

"உலகத்திலே சென்று உழல என் மனம் இடங்கொடுக்க வில்லையே!"

"இடம் கொடாமல் இல்லை. உன் உருவத்தைக் கண்ணாடியில் பார். அதற்கு அஞ்சுகிறாய் நீ. அங்கே இருக்கும் மனிதனைப் பார்க்கப் பயப்படுவானேன்? நிமிர்ந்து பார். வெளித்தோற்றத்தைக் காணவே கூசுகிறாய். உள்ளே இருக்கும் மனிதனைக் காண எப்போது துணிவாய்?"

சுவாமிகள் எழுந்து போய்விட்டார். அன்னை தின்பதற்குத் தரப்போகிறாள் என்று ஆசையோடு காத்துக்கொண்டிருந்த குழந்தை, அது கிட்டாமற் போனதும் எப்படி ஏமாற்றத்தில் மூழ்கிவிடுமோ, அதுபோல மாணிக்கம் இடிந்துவிட்டான்.

மடத்தின் ஆதரவில் மறைந்துவிட்டால், பிறகு தனக்கு உலக பந்தமே அறுந்துவிடும் என்று அவன் நம்பினான். பெரியவர் சொன்ன பேச்சிலிருந்து தன் தவற்றை ஓரளவு உணர்ந்தான். ஆசை, நளினி பக்கம் இழுக்க, பாசம் அன்னை பக்கம் தள்ள, அவன் படும் வேதனைக்கு மடத்தின் சுவர்கள் காப்பாக மாட்டா என்றல்லவா பெரியவர் கூறிவிட்டார்?

முன்பிருந்த தெம்பும் அவனுக்கு அற்றுவிட்டது. காவி வஸ்திரம், பிரச்னைகளைத் தீர்க்கும் மாயச் சட்டையல்ல என்று புரிந்ததும், மேற்கொண்டு செய்ய வேண்டியது என்னவென்று தெரியாமல் அவன் தவித்தான். அப்பொழுது 'டாண், டாண்' என்று மணி எங்கோ அடித்தது. உசுப்பிவிட்டதுபோல அவன் எழுந்தான். மடத்திற்குள் வந்ததுமுதல், அவனுக்கென்று சில வேலைகள் இருந்தன. அவற்றைச் செய்ய அவன் முற்பட்டான்.

செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிற போதும், களை பிடுங்கும்போதும் அவனுக்குத் தன் ஆராய்ச்சித் தோட்டம் நினைவிற்கு வரும். தான் செய்த வேலையின்மீது நாட்டம் போகும். உடனே, ஆசிரியரிடம் போய், தனக்குத் தோன்றிய பிற ஆராய்ச்சி விஷயங்களைப்பற்றிப் பேசுவோமா என்று அவன் மனம் துடிக்கும். ஆனால், கூடவே, ஆசிரியர், அவர் குடும்பம், நளினி, சுந்தரம் என்று அவனது மனவரங்கில் தோன்றியவுடன், அவன் உற்சாகமெல்லாம் சிட்டெனப் பறந்துவிடும். மீண்டும் குழப்பந்தான்.

சுவாமிகள் சென்ற பிறகு, அவன் தோட்ட வேலையையெல்லாம் கவனித்துவிட்டுத் தன் வழக்கப்படி வாதநாராயண மரத்தடியில் போய் அமர்ந்தான். அவன்

தலைக்கு நேரே, உயரக் கிளைகளில் குருவித் தம்பதிகள் வம்பளந்தன.

மாணிக்கம் கவிழ்ந்து படுத்து விட்டான். 'நளீ, உன் நினைவு இப்படியா என்னை வதைக்கும்? நீ ஏன் என்னை வாட்டுகிறுய்? சுந்தரத்தை மணந்து கொண்டு விடேன். நான் நிம்மதியாக இருப்பேனே!' என்று அவன் தரையிடம் முறையிட்டான்.

அவன் தோளில் கை பட்டதும், அவன் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான். சுவாமிகள் அன்பொழுகும் முகத்துடன் அவனைப் பார்த்தார்: "மகனே, இன்று காலை முதல் நீ உணவு அருந்தவில்லையாமே? அவ்வளவு மனக்குழப்பமா?" என்று விசாரித்தார்.

மாணிக்கம் வாளாவிருந்தான்.

"இந்தா, இதைச் சாப்பிடு; இரவு சாப்பாடு சாப்பிடுவதற்குச் சரியாக இருக்கும்" என்று கூறி, சுடச்சுட ஒரு தம்ளர் பாலும், இரண்டு வாழைப் பழங்களும் தந்தார் சுவாமிகள்.

மாணிக்கம் அவற்றை வாங்கிச் சாப்பிட்டு முடிக்கும் வரை பெரியவர் காத்திருந்தார். பிறகுதான் பேசினுர். "என்ன முடிவு செய்தாய்? மனசை ஆராய்ந்து பார்த்தாயா?" என்று நிதானமாகக் கேட்டார்.

"பார்த்தேன், ஸ்வாமி. நான் கண்டதைச் சொல்லத்தான் வெட்கமாக இருக்கிறது" என்றுன் மாணிக்கம், உயிரற்ற குரலில்.

"என்ன கண்டாய் நீ?"

"என் மனசில் சபலங்கள் இருக்கின்றன."

"என்ன சபலம்? என்னிடம் சொல்லேன்."

"தவத்தில் மிகுந்த ஒரு பெரியவரிடம் சொல்லக் கூடியதல்ல. கேவலம் உலகத்தையும் பொருளையும் ஒட்டியவை...." என்று கூறும்போது அவன் வெட்கித் தலை குனிந்தான்.

"இதில் அவமானப்படவேண்டியது ஒன்றும் இல்லை, மகனே. ஒவ்வொருவரும் ஒரு காரியத்துக்காகப் படைக்கப்பட்டிருக்கிறுர்கள். உன் வெற்றி இல்லறத்தின் மூலம் கிடைக்கலாம். முதலில் வாழ்ந்து பார். பிறகு செயலில் இறங்கலாம்."

"எனக்கு ஓர் அநுமதி வேண்டும்" என்று தயக்கத்துடன் கேட்டான் மாணிக்கம்.

"என்ன?"

"என் மனம் சிந்தித்துத் தெளியும் வரை நான் இங்கே இருக்க அநுமதி வேண்டும். யார் கண்ணிலும் படாமல், அமைதியாகத் தனித்திருந்தால், சிந்தனை தெளியும் என்று தோன்றுகிறது."

"இரு, இரு" என்று கூறிவிட்டு எழுந்து போய்விட்டார் பெரியவர்.

மாணிக்கம் நன்றி நிறைந்த கண்களுடன் அவரைப் பார்த்தான். தான் இருப்பதற்கு மனசுக்கு இசைந்த இடம் கிடைத்துவிட்டது என்று நினைக்கையில் அவன் சாந்தியைக் கண்டான்.

அதன் பிறகு அவன், நூல் நிலையத்தைச் சுத்தம் செய்யப் போய்விட்டான்.

ஒரு மாத காலம் எவ்வாறு சென்றது என்று அறியாமல் கழிந்தது. தோட்டப் பராமரிப்பு, நூல் நிலைய நிர்வாகம் போன்ற சில கடமைகளைச் செய்து வந்தான் அவன்.

"மாணிக்கம் வீட்டை விட்டுப் போய் ஒரு மாதமாகிவிட்டதே! எங்கே போயிருப்பான்? சொல்லாமல் கொள்ளாமல் போகும்படி என்ன நடந்து விட்டது?" என்று தனபாக்கியம் அங்கலாய்த்தாள்.

மீனுட்சி அந்த அம்மாளுக்குத் தேற்றரவு சொல்லிக்கொண்டு அமர்ந்திருந்தாள்.

"அண்ணன் ஏதாவது விபத்துக்கு ஆளாகியிருப்பாரோ என்று பயமாக இருக்கிறது, அக்கா. அப்படியும், எங்க சின்ன அண்ணன் ஊரெல்லாம் சுற்றிப் பார்த்து, போலீஸ் ஸ்டேஷனெல்லாம் விசாரித்துப் பார்த்து விட்டது. ஒரு புலனும் கிடைக்கவில்லையே!" என்று அலமேலு கண்ணீர் உகுத்தாள்.

"அம்மா, நான் ஒன்று சொல்கிறேன், கேளுங்கள். நீங்கள் தவருக நினைக்கக் கூடாது."

"நான் ஏன் உன்னைத் தவருக நினைக்கிறேன், மீனுட்சி? எங்கள் குலதெய்வம் எழுந்து வந்து, உன் மூலமாகத்தான் உதவி புரிகிறுரென்று நான் நம்பிக்கிட்டிருக்கிறேனே!"

"உங்கள் மாணிக்கத்துக்கு மனத்திலே வலுவே இல்லை. என்னவோ கனவு காண்கிறுர். அதை நனவாக்க முடியலை. எந்தக் கனவும் ஓரளவுதான் நனவாகும் என்பது அவருக்குப் புரியவில்லை. கண் மறைவாகப் போய்விட்டார்."

"தற்கொலை செய்துகொண்டுவிட்டால் என்று நினைக்கையிலே......"

"என்னை நம்புங்க, அம்மா; ஒருகாலும் அதற்குத் துணியமாட்டார்."

"இல்லையே! அவனிடம் பணம் கூட இருக்காது. ஒருவரிடம் கேட்கவும் மாட்டான். உயிருடன் இருக்கக் காசு வேண்டுமே, மீனுட்சி?"

"நம்ப மாரியம்மனுக்குப் பால் ஊற்றினுல் சரியாகிவிடும் என்று நீங்களே சொல்லுவீங்களே!" என்று மீனுட்சி ஆறுதல் கூறினுள்.

"அம்மனைத் தான் திடமாக நான் நம்பிக் கொண்டிருக்கிறேன், ஆனுல், அவளென்னவோ என்னைத்தான் சோதனைக்கு ஆளாக்குகிறுள்" என்றுள் தனபாக்கியம், துக்கத்துடன்.

''நீங்கள் மனசை அலட்டி அலட்டி, பங்காரும்மா மாதிரி படுக்கையிலே விழுந்துவிடக் கூடாது. அவங்களுக்குப் பணவசதி இருக்கு, ஆளைப் போட்டு நடத்துவாங்க. நீங்க படுத்தால் இந்த வீடு என்ன கதியாகும்?'' என்றாள் மீனாட்சி.

''அதெல்லாம் விழ மாட்டேன், மீனாட்சி. அந்த மாரியம்மா எனக்குக் கல்நெஞ்சத்தைக் கொடுத்திருக்கிறாளே! இதோ இருக்கிறாளே, உன் சிஷ்யைப் பொண்ணு, அவளும் என்னையே உரிச்சு வைச்சிருக்கிறா, பாரு. அஞ்சாமல் தெருவிலே நடமாடறா. இந்தத் தைரியம் அந்த ஆண்பிள்ளைப் பையனுக்குக் கொடுக்காமல் வேடிக்கை பார்க்கிறதே தெய்வம்?'' என்றாள் தனபாக்கியம்.

''மாணிக்கம் வருவார், பாருங்க. எங்கே போயிடப் போறாரு?'' என்று ஆசுவாசப் படுத்தினாள் மீனாட்சி.

''அதனால்தான் கவலையா யிருக்குது, மீனாட்சி. சின்னவனுக்கு ஆயிரம் சிநேகம். பசி எடுத்தால், அவன் மதிப்புப் பார்க்க மாட்டான். யார்கிட்டேயாவது கடன் வாங்கியாவது வயிற்றை நிரப்பிக்குவான். பெரியவனுக்குச் சிநேகிதன்னு ஒருத்தன் இந்த வாசற்படி ஏறினதில்லை. யாரைக் கேட்பான்? எங்கே போவான்? ஒண்ணும் புரியலையே?''

மீனாட்சிக்கே கவலை தோன்றிவிட்டது. மாணிக்கத்தின் குணத்திற்கு அவன் எங்கோ போய், எவ்வளவு நாட்கள், யார் ஆதரவில் இருக்கமுடியும்? அவள், தன் வீடு சென்றதும், டாக்டரிடம் பேசி வழி தேடலானாள்.

''நளினி, பத்மினி வரட்டும். அவர்களுக்குத் தெரியுமே; யாராவது உற்ற நண்பன் உண்டா என்று அறிந்தால், அவனைப் பிடித்துத் துப்புக் கண்டுபிடிக்கலாம்'' என்று டாக்டர் அபிப்பிராயம் கூறினார்.

அன்று மாலை நளினி பாட்டு வகுப்பு எடுக்க வந்த போது அவளிடம் விவரத்தைச் சொன்னார்கள். நளினி பத்மினியை நோக்கினாள். பத்மினி மண்டையைக் குடைந்து கொண்டாள். ''எனக்கு யாரும் தெரியவில்லையே!'' என்றாள்.

''அவருக் கென்று நண்பர்கள் இல்லாமல் இல்லை. புல்லாங்குழல் கொடுத்த நண்பன், புத்தகம் கொடுத்த நண்பன் என்று, ஊர், பேர், இனம் தெரியாத நண்பர்கள் இருக்கிறார்கள். யார் அவருடன் நெருங்கிப் பழகி, அவரது உள்ளத்து ஆசைகளைப் பற்றியோ, ருசியைக் குறித்தோ கேட்டிருக்கிறார்கள்? வீட்டுக்கு வந்தால் அப்பாவின் இரைச்சல். பெற்ற தகப்பனார் என்றாலும், கந்தசாமி செட்டிக்குப் பெரிய பிள்ளையைக் கண்டாலே ஆவதில்லை. அங்கே எங்கள் அப்பாவிடம் வந்தால், குரு பக்தி என்ற போர்வைக்குள் புகுந்துவிடுகிறார்'' என்று படபடப்பாகப் பேசினாள் நளினி.

''அது சரி; அதைப்பற்றி இப்ப என்ன? அவன் எங்கே போகிற வழக்கம் என்று மதன கோபாலனைக் கேட்போமா?'' என்று காரியத்தைக் கவனித்தாள் பத்மினி.

''திரும்பத் திரும்ப, ரங்கபாளையம் ராமகிருஷ்ண மடத்துக்கும் போவார்,



பார்த்திருக்கிறேன். வேறே ஓர் இடமும் தெரியவில்லே. அதை விட்டால், நம் சர்வகலாசாலே நூல் நிலேயத்தில் மணிக் கணக்கில் காலம் தள்ளுவார்'' என்றுள் நளினி.


''சரி, வா, நளினி. நாம் அங்கே போய் நூல் நிலேயத்தைப் பார்ப்பது போலப் பார்ப்போம். யாராவது கிடைத்தால் விசாரிப்போம்'' என்றுள் பத்மினி.

அன்று வேலே முடிந்ததும் அவர்கள் இருவரும் லேடீஸ் கிளப்புக்குப் போவதாகச் சொல்லிவிட்டு, ராமகிருஷ்ண மடத்திற்குச் சென்றனர். அந்த விஸ்தார மான கூடத்திற்குள் நுழையும் போதே நளினிக்கும் பத்மினிக் கும் அமைதி தழுவியது. மாலே தொழுகைக்காக ஓர் இளஞ் சாமியார் தயார் செய்து கொண்டிருந்தார். அவர்கள் நூல் நிலேயத்திற்கு வழி கேட்டுக் கொண்டு அங்கே சென்றனர்.

அந்தச் சமயம் மாணிக்கம் மேலே எட்டாத உயரத்தில் இருந்த புத்தகங்களேத் தட்டித் துடைத்து வைத்துக்கொண் டிருந்தான். அவனது உள் ளுணர்வு நளினி அருகில் இருப் பதை அவன் உடலில் தந்தி அடித்துக் காட்டியது. தான் இருக்கும் நிலேயிலிருந்து கீழே விழுந்து விடாமலிருக்க, அவன் ஏணியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்.

நளினியும் பத்மினியுமே அவன் இருக்கும் அறைக்கு அடுத்த கூடத்தில் பேசிக்கொண் டிருந்தனர். அவர்கள் புத்தகம் ஒன்றை வாங்கிக்கொண்டு, தங்களுக் குள் பேசிக் கொண்டனர். அவர்கள் தோட்டத்திற்குப் போய்ப் பேசும்போது, அங்கிருந்த ஜன்னல் வழியாக அவர்கள் பேச்சுத் தெளிவாக அவன் செவியில் விழுந்தது.

''எங்கேதான் போயிருப்பார் என்று தெரியவில்லேயே! அப்பாவும் எப்படி எப்படியோ தேடிப் பார்க்கிருர். பத்திரிகையில் நாலு வரி போடலாமே என்று கூடச் சொன்னுர்'' என்றுள் நளினி.



''இங்கே பார்த்தாலும் ஒன்றும் தெரியவில்லே. யாரைக் கேட்பது?'' என்றுள் பத்மினி.

''பத்திரிகையிலே விளம்பரம் போடுவது எனக்குப் பிடிக்கவேயில்லே. அது தவிர வழியே இல்லேயோ இப்போ?''

''நான் வேண்டுமானுல் அவன் திரு முகத்தைப் படம் வரைஞ்சு தரேன்.''

''விளேயாடாதே, பத்மினி. என் அப்பா என்ன சொன்னுர் தெரியுமா? 'அவன் ஏழைப் பையனுச்சே, கைதூக்கி விடலாம்னு பார்த்தேன். நன்றி கெட்டு விட்டான்' என்றுர். என் மனசு என்ன கஷ்டப் பட்டது தெரியுமா?''

''உன் மனசு கஷ்டப்படுவானேன்? அவன் நன்றி கெடலாம், ஒருவர் சுட்டிச் சொல்லக் கூடாதோ?''

''நீயா இப்படிப் பேசறே? உன்கிட்டே எவ்வளவு பாசமா இருப்பார்? மறந்துட்டயாக்கும்?''

''எனக்கு அவன் மேலே இரக்கமே தோன்றலே, நளினி, என் கையில் அவன் சிக்கினுல், அவன் காதைப் பிடித்து இழுத்துவந்து, நூறு தோப்புக் கரணம் போடச் சொல்லு

அதனால் கவலை வேண்டாம். பெரும்பாலான குழந்தைகளுக்கும், 6 முதல் 15 மாதங்களுள் நிகழ்வதுதான் இது. (உங்கள் டாக்டரிடம் கேட்டுப் பாருங்கள்) அவனைத் தடுக்காதீர்கள். கூரான பொருளால் தன்னைக் காயப்படுத்திக் கொள்ளாமலும், ஏதாவது பொம்மைத் துணுக்கு தொண்டையில் சிக்கிக் கொள்ளாமலும் மட்டும் கவனித்துக் கொள்ளுங்கள்.

தின்பதற்குக் கொடுங்கள் ஒன்று—முழு நலம் ஆனதும், சுவைமிக்கதும், ஊட்டமளிப்பதும் ஆன ஒன்று...

உங்கள் கவனத்தை ஒத்த அன்பான கவனத்தோடு செய்தது ஒன்று.

அவனுக்குக் கொடுங்கள் ஒரு பார்லே க்ளுகோ பிஸ்கட்.

எங்கள் ஆலைக்கு வாருங்கள், பாருங்கள், பார்லே க்ளுகோ பிறப்பதை!

'முழுநலமானது' என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளுங்கள். எங்கள் ஆலை நவீனமானதொரு மருத்துவமனை போன்றது. அங்கு, எல்லாம் தாமே இயங்குவன; மிகவும் சுத்தமானவை; கைபடா தூய்மையோடு பிஸ்கட்டுகள் உங்களுக்குக் கிடைக்கின்றன.

பால், சர்க்கரை, க்ளுகோஸ் மற்றும் சன்னமாக அரைத்த கோதுமை முதலிய குழந்தைக்கு உகந்த ஊட்டங்கள் செறிந்த பார்லே க்ளுகோ பிஸ்கட் உங்கள் குழந்தைக்கு ஆதர்சமானது.

தவிரவும், சுவைமிக்கது இது; கரகரப்பானது; செரிப்பதற்கு எளியது. மென்று தின்று ரசித்து மகிழ்வான் உங்கள் குழந்தை.

உங்களின் அன்புக் கவனம் உங்கள் குழந்தையிடம்— எங்களுக்கும் அதே கவனம் பார்லே க்ளுகோ தயாரிப்பதில்.



பார்லே க்ளுகோ பிஸ்கட்டுகள்.

உலகத் தேர்வில் 5 முறை வெற்றி உங்கள் வியாபாரியிடம் வண்ணமய 'பாப்பா' படமுள்ள உறையைப் பார்த்து வாங்குங்கள்.

everest/858/PP/tm.

வேன்'' என்றாள் பத்மினி, ஆக்கிரோஷத்துடன்.

''போடச் சொல்வாய்!''

''பின்னே என்னவாம்? தனபாக்கியத்தம்மா துரும்பாக இளைத்துவிட்டார்கள். அலமேலுவோ, தன் அண்ணன் ஓடிப்போனதற்குத் தான் தான் காரணம் என்று மனம் புழுங்குகிறாள். நாமோ, சிநேகத்துக்காக உயிரையே விடுகிறோம். தன்னலமே கண்ணாக ஓடிவிட்டானே!''

''பாவம்! அந்தம்மா கண்ணீரா சிந்துகிறார்கள், ரத்தமே சிந்துகிறார்கள்!''

''என் கல்யாணத்தில் ஓர் அண்ணனாக நடமாடுவான் என்று நினைத்தேன். அதுவுமில்லை. அப்படி என்ன தன்னலம்?'' எரிச்சலுடன் பேசினாள் பத்மினி.

''பாவம், எங்கே இருக்கிறாரோ? கல்யாணத்துக்கு இன்னும் நான்கு நாட்கள்தாம் இருக்கின்றன என்பது அவருக்குத் தெரியாதோ?'' என்றாள் நளினி.

''எங்கேயாவது இருக்கட்டும். எனக்கென்ன வந்தது?''

பெண்கள் பேசிக்கொண்டே மடத்துத் தோட்டத்தைக் கடந்து வெளியே சென்றனர்.

மாணிக்கம் மெதுவாக இறங்கினான். சுவர் ஓரமாக மறைந்து கொண்டுவந்து வெளியே எட்டிப் பார்த்தான். அவர்கள் தலை மறைந்து கொண்டிருந்தது. திரும்பித் தன்னைப் பார்த்து விடப் போகிறார்களே என்று அவன் மீண்டும் நூல்நிலையத்திற்குள்ளேயே புகுந்து கொண்டான்.

'பத்மினியின் கல்யாணத்திற்கு இன்னும் நான்கே நாட்கள்தாம் இருக்கின்றனவாமே! அவளை மாலையும் கழுத்துமாகப் பார்க்கவேண்டியதுதான். ஆனால், எந்த இந்திரா காலனியை உதறித் தள்ள நினைத்தோமோ, அது மீண்டும் உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு விடுமோ? ஒரு முறை வெளியேறிப் போனபிறகு, என்ன சொல்லிக்கொண்டு மறுபடியும் மடத்திற்குள் வருவது? சலுகை இருக்கும் வரை இங்கு இருந்துவிட்டுப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்.' ஆயிரம் எண்ணங்களுடன் மாணிக்கம் சும்மா இருந்துவிட்டான்.

மடத்தின் அமைதியான சூழ்நிலையில், அவன் மனம் அவனுக்கு நன்றாகப் புலப்பட்டது. பத்மினியும் நளினியும் பேசினதைக் கேட்ட மாத்திரத்தில் தன் உள்ளம் ஊசலாடுவதை அவன் அறிந்தான். 'நம் அம்மா இளைத்துவிட்டார்களாமே! அலமேலு குற்றமுள்ள நெஞ்சுடன் தவிக்கிறாளாமே! நளினியும் எவ்வளவு தவிப்புடன் பேசினாள்! பத்மினியின் நட்புக்கு மதிப்புத் தரவேண்டாமா?'

வேலை செய்யும்போதும், படுக்கும்போதும் அவன் சிந்தனை ஒரே பாதையில் ஓடியது. தன் மனசில் இப்படிப் பாசபந்தங்கள் வலித்து இழுக்கும்போது, எப்படிக் காஷாயம் வாங்கிக்கொண்டு விடமுடியும்? சுவாமிகள் மிகவும் நகைத்திருப்பார் என்பதை அவன் உணர்ந்தான். ஆயினும், அவர் பொறுமையாக அவன் பேச்சைக் கேட்டு, ஆறுதல் தந்ததை நினைத்து ஆச்சரியப்பட்டான்.

அவன் நேரே பிரார்த்தனைக் கூடத்திற்குச் சென்றான். பரமஹம்ஸரும் சாரதாமணி தேவியும் அவன் மீது அருட்பார்வை செலுத்தினார்கள். நிலவு காய்ந்தது போல அவன் அமைதியைக் கண்டான் மனத்தில். விவேகாநந்தர் படத்தின் முன் வணங்கினான். 'அப்பனே, உங்கள் மனோ தைரியமும், திடச்சித்தமும் எனக்கு ஒரு திவலையேனும் அருள வேண்டும்' என்று இறைஞ்சினான்.

சுவாமிகளிடம் விடை பெற்றுக்கொண்டு, தன் வீட்டிற்குத் திரும்புவது என்று அவன் தீர்மானித்துவிட்டான்.

''போய் வருகிறேன். எனக்கு உறுதி குலையாமல் இருக்க அநுக்கிரகம் பண்ண வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டே நெடுஞ்சாண்கிடையாக அவரை வணங்கினான் மாணிக்கம்.

''எழுந்திரு, மகனே. உறுதி என்பது நீயாகப் பயிலவேண்டியது. ஆசியும், அநுக்கிரகமும் மட்டும் இருந்தால் போதுமா? வண்டிச் சக்கரத்தைத் தள்ளப் பார்த்தவனுக்குத்தானே கடவுள் உதவி புரிந்தார்? நம் முயற்சியே இல்லாமல் எதுவும் நடவாது. போ. உலகத்தில் நல்ல மனிதனாக வாழக் கற்றுக்கொள்.''

''என்றைக்காவது மீண்டும் இங்கு வந்து தங்கவேண்டுமென்றால்...''

''வா, வா. ஆனால், எத்தனை நாட்கள் கண்ணாமூச்சி ஆட முடியும்?'' என்றார் பெரியவர், மந்தகாசத்துடன்.

திரும்பிப் போகத் தயாராக எல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு விட்டானே தவிர, கிளம்பவும் துணிவில்லாமல், அவன் மடத்தைச் சுற்றிச் சுற்றி வந்தான். நூல் நிலையத்தில் புத்தகங்களைத் தடவித் தடவிப் பார்த்துச் சுற்றிக்கொண்டிருக்கையிலே, அவன் நண்பன் சாரங்கன் வந்து விட்டான். அவன் கண்ணில் படவேண்டாம் என்று, மாணிக்

கம் விரைவாக வெளியேறப் பார்த்தான். ஆனல், சாரங்கன் விடவில்லை.

"முத்து, எங்கே ஓடறே? உன்னைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும், நில்!" என்ருன் நண்பன்.

வேறு வழியின்றி மாணிக்கம் அவனருகில் போய் நின்ருன். சாரங்கனுக்கு எப்படி, என்ன தெரியும் என்று புரியாமல், பேச்சை ஆரம்பிக்காமல் வாளா விருந்தான்.

"மாணிக்கம், உனக்காக உன் வீட்டில் வலைபோட்டுத் தேடுகிருர்களாமே? நீ இங்கேயேவா இருந்தாய்? நானும் தினமும் வருகிறேன், ஒரு நாள் கூட நீ என் கண்ணில் படவேயில்லையே?" என்று நண்பன், சரமாரியாகக் கேள்விகளைத் தொடுத்தான்.

"இங்கேதான் இருந்தேன். யார் கண்ணிலும் படவேண்டாமென்றுதான் மறைவாக இருந்தேன். என்ன பிரயோஜனம்? உன் கண்ணில் பட்டுவிட்டேனே! இனி ஏது நிம்மதி?"

"ஏனடா, நண்பன் என்று என்னடா பேரு? என்னிடம் சொல்லக்கூடாதா? கண் மறைவாக இருக்கும்படி என்ன வந்து விட்டது?"

"எனக்கே தெரியவில்லை. உனக்கு எங்கே விளக்கப் போகிறேன்?"

சாரங்கன் புத்தகங்களைப் பற்றிப் பேச்சை எடுத்தான். மாணிக்கம் உற்சாகமாகப் பேசினன். அதன் பிறகு சாரங்கன் திரும்பிப் போகும்போது, "டேய், முட்டாள்தனம் பண்ணுதே. வீட்டுக்குப் போ" என்று கூறினன்.

"நானும் அப்படித்தான் தீர்மானம் செய்திருக்கிறேன். ஆனல், நீ யாரிடமும் நான் இருக்குமிடத்தைச் சொல்லி விடாதே. நாளை மறுநாள் நான் இங்கே வரவே முடியாது. வந்து வந்து தொல்லை கொடுப்பார்கள்."

"சரி, நான் சொல்லவில்லை. ஆனல், இனிமேல் இப்படி ஓடி விளையாடுவதானல் என் வீட்டில் வந்து ஒளிந்துகொள். நாம் இரண்டு பேருமாக இரண்டு சினிமாவாவது பார்க்கலாம்; என்ன?" என்று உல்லாசமாகப் பேசிவிட்டுச் சாரங்கன் கிளம்பினன்.

"சாரங்கா!" என்று அழைத்தான் மாணிக்கம்.

"என்ன?" என்று கேட்டுக்கொண்டே திரும்பினன் நண்பன்.

"நான் இன்னும் இரண்டு நாட்களில் வருவேன் என்று பத்மினியிடம் மட்டும் சொல்."

"ஆகட்டும்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான் சாரங்கன்.

அன்று கட்டாயம் கிளம்புவதாக இருந்த மாணிக்கம், மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான். 'இந்தப் புகலிடத்திலும் ஒருவன் நுழைந்துவிட்டானே! இனி இங்கே வரவே முடியாமல் போய் விடுமோ? இருக்கும்வரை இருப்போம். இந்திரா காலனியில் போய் மாட்டிக் கொள்வது இருக்கவே இருக்கிறது' என்று தனக்குள் கூறிக்கொண்டு, அவன் தான் கட்டின மூட்டையை மீண்டும், தனக்கென்று ஒதுக்கிவிட்டிருந்த மூலையில் கொண்டு சேர்த்துவிட்டான்.

சாரங்கன் நேரே பத்மினியைத் தேடிச் சென்ருன். ஒரு வாரத்திற்கு முன் சர்வ கலாசாலை நூல்நிலையத்தில் அவன் பத்மினியைச் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது மாணிக்கத்தைப் பற்றிப் பேச்சு வந்தது. சாரங்கன் மனத்தில் அது உறுத்திக்கொண்டேயிருந்தது. மாணிக்கத்தின் நண்பர் குழாம், அவனுடைய சுபாவம் எல்லாம் சாரங்கனுக்கு நன்கு தெரிந்திருந்தபடியால் மாணிக்கம் ராமகிருஷ்ண மடத்தில் இருக்கலாமோ என்று அவனுக்குத் தோன்றியது. அவனும் மடத்தில் புகுந்து நடமாடிப் பழக்கமானவனுக இருந்ததால், பக்குவமாகக் கேள்விகள் கேட்டு, மாணிக்கம் அங்கு இருப்பதைப் புரிந்துகொண்டான். தருணம் பார்த்து அவனைச் சந்தித்துப் பேசினன்.

"அவன் இருப்பிடம் எனக்குத் தெரியும். உங்களுக்குத் தெரியவேண்டாம். அவனே இரண்டு நாட்களில் வருவான்" என்ருன் சாரங்கன்.

பத்மினிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. வீட்டில் அவள் கல்யாணத்திற்காகக் குழுமிய உறவினர்களும், அவர்களை உபசரிக்கும் வேலையுமாக அவளுக்கு அவகாசம் கிட்டவில்லை. பிற்பகல் சற்று ஓய்வு கிடைத்ததும், அவள் அலமேலுவைத் தேடி ஓடினள்.

கன்னிகா பரமேசுவரி சத்திரத்தில்தான் இப்பொழுதெல்லாம் மீனுட்சியின் மகளிர் மன்றம் இயங்கி வந்தது. அங்கே, நைலான் கம்பியால் கூடை பின்னுவதற்குச் சொல்லிக் கொடுத்துக்கொண் டிருந்தாள் அலமேலு.

பத்மினி எட்ட நின்று தன் தோழியைக் கவனித்தாள். கரையில்லாத வெள்ளைப் புடைவையும், இளமஞ்சளில் பூப்போட்ட

ரவிக்கையும் அணிந்து, அலமேலு கச்சிதமாகத் தோற்றமளித்தாள். 'மீனாட்சியின் கைத்திறன் பிரமாதம்; அலமேலுவை எப்படித் தயாராக்கிவிட்டாள்!' என்று தனக்குள் பாராட்டிவிட்டு, அவள் அலமேலுவை அணுகினாள்.

"வாங்க, அக்கா. நளினி பாட்டு வகுப்பு எடுக்கிறாள் என்று நினைக்கிறேன். மீனாட்சிக்கா கணக்குப் பார்த்துக் கொண்டு கூடத்தில் இருந்தாங்க" என்று வரவேற்றாள் அலமேலு.

"நான் உன்னிடந்தான் வந்தேன்" என்றாள் பத்மினி, மர்மமாக.

அலமேலு ஒரு விநாடி கேள்விக் குறியாக முகத்தை வைத்துக்கொண்டாளே யன்றி, ஏதும் வற்புறுத்திக் கேட்கவில்லை. அங்கே கூடியிருந்த பெண்களுக்கெல்லாம் ஆவன செய்துவிட்டு, அவள் பத்மினியுடன் கிளம்பித் தனி இடத்திற்குச் சென்றாள்.

"என்ன அக்கா?"

"மாணிக்கம் இன்னும் இரண்டு நாட்களுக்குள் வீடு வருவான். அவனை யாரும் கோபித்துக் கொள்ளாமல் நீ தான் பார்த்துக்கொள்ள வேண்டும். நீயோ, உன் அம்மாவோ அழக்கூடாது; அவன் அன்று வருவான் என்று எதிர்பார்த்தமாதிரியே இருந்துவிட வேண்டும். என்ன, எனக்கு வாக்குக் கொடுப்பாயா?" என்றாள் பத்மினி.

"எங்கே இருக்கிறார்? எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?" என்று குடைந்தாள் அலமேலு.

பத்மினி சுருக்கமாகச் சொன்னாள். அலமேலுவுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அவள், உடனே நளினியிடம் கூறிவிடவேண்டுமென்று விரைந்தாள்.

பத்மினி அவளைப் பிடித்து நிறுத்தி, "நளினியிடம் ஒன்றும் சொல்லாதே" என்று எச்சரித்தாள்.

"ஏன்?"

"காரணமாகத்தான்..நளினியிடம் நீ ரொம்ப நெருக்கமாகப் பழகிவிட்டே; இல்லையா?"

"ஆமாம். அதனால்தான்..."

"மாணிக்கத்தின் மனசிலே பெரிய போராட்டம். அதனால்தான் சொல்லாமல் ஓடிவிட்டான். அது தெளியட்டும், பிறகு எல்லோரிடமும் சொல்லலாம்" என்றாள் பத்மினி.

அலமேலு தன் வகுப்பிற்கு மீண்டாள். நளினிக்கு ஏன் சொல்லக்கூடாது என்று அவளுக்குப் புரியவேயில்லை. அண்ணனுக்கு என்ன போராட்டம்? எப்படியோ, அண்ணன் திரும்பி வந்தால் போதுமென்று அவள் பொறுமையாக இருந்தாள்.

அவள் வீட்டிற்குத் திரும்பியபோது, அவள் தாய் கூடத்தில் அமர்ந்து அரிசி நேம்பிக்கொண் டிருந்தாள். அலமேலு அவளருகில் போய் அமர்ந்தாள். ஆனால், சொல்லவேண்டாம் என்று தோன்றிவிடவும், அவள் எழுந்துவிட்டாள். மாணிக்கத்தின் அறைக்குச் சென்று, சுத்தப்படுத்தினாள். அவன் படுக்கையைத் தட்டிச் சுற்றி வைத்தாள்.

"என்னடி உனக்கு? கள்வார்த்த மாதிரி சுறுசுறுப்பு?" என்று தாய் கவனித்துக் கேட்கவும், அவள் மறைக்க முடியாமல் சொல்லிவிட்டாள்.

தனபாக்கியம் அப்படியே, கண்களில் நீர் சோர, அமர்ந்துவிட்டாள்.

"இந்தாம்மா, இதுதான் கூடாது" என்றாள் மகள்.

இரண்டு நாட்களும் ஓடிவிட்டன. பத்மினியின் கல்யாண நாளும் வந்தது. நளினி வந்து, அலமேலுவைத் தன்னுடன் இருக்கும்படி அழைத்தாள்.

"இவங்க அப்பா அனுப்ப இஷ்டப்பட மாட்டாரு, நளினி" என்றாள் தனபாக்கியம்.

"காலையிலே கூட்டிக்கிட்டுப் போகிறேன். சாயங்காலம் திரும்ப நானே கொண்டு விடுகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டு அழைத்துச் சென்றாள் நளினி.

அண்ணன் வீட்டிற்கு வரும் சமயம் அங்கு இல்லாமல் போகிறோமே என்று அலமேலுவுக்கு உள்ளூறக் கவலை. அதை நளினியிடம் சொல்வதற்கில்லை. அவள் பேசாமல் உடன் சென்றாள்.

பத்மினிக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது. சர்வகலாசாலை, கல்லூரி மகளிர் மன்றம், லேடீஸ் கிளப் என்று பலதரப்பட்ட நண்பர்கள் கூடியிருந்தாலும், மாணிக்கம் வராதது பெரிய ஏமாற்றமாக இருந்தது.

தாலி கட்டியானதும், நரசிம்மனும் அவளும் பெரியவர்களுக்கு வணங்கிவிட்டு வரும்போது, நளினி வந்து, "பத்மினி, அதோ பார்" என்றாள். பத்மினி திரும்பினாள்.

ஒன்றுமே நடவாததுபோல, தன்னுடைய சங்கோஜச் சிரிப்புடனும், தயக்க நடையுடனும், ஒரு பொட்டலமும் கையுமாக, அவர்களை நோக்கி நடந்து வந்துகொண் டிருந்தான் மாணிக்கம்.

[தொடரும்]

முத்துச் சிப்பி

— அநுத்தமா

16. பிரிந்தவர் கூடினால்......

"முகூர்த்தத்துக்கு ஆயிரம் பேர் வந்தார்கள். ஆனால், நீ வரவில்லையே என்று எனக்குக் குறையாக இருந்தது" என்றாள் பத்மினி.

"உன்னை மாலையும் கழுத்துமாகப் பார்க்கவேண்டுமென்ற ஆசை எனக்கில்லையா?" என்று சாவதானமாகப் பதில் தந்தான் மாணிக்கம்.

பத்மினியின் அருகிலேயே இருந்தாள் அலமேலு. ஆனால், தன் அண்ணனுடன் என்ன பேசுவது, எப்படி ஆரம்பிப்பது என்று புரியாமல், அண்ணன்மீது வைத்த கண் வாங்காமல், உணர்ச்சி மேலீட்டினால் மூச்சுவாங்க, அவள் நின்றுகொண்டிருந்தாள். மாணிக்கம் அவள் அருகில் வந்து, "என்ன, தங்கச்சி?" என்று அவள் கன்னத்தில் லேசாகத் தட்டினான். அவன் கண்கள் அந்தக் கூட்டத்தில் குழுமியிருக்கும் கும்பலை ஆராய்ந்தவாறு துழாவியது.

கல்லூரி மாணவிகள் கூட்டம் ஒன்றை நளினி உபசரித்துக் கொண்டிருந்தாள். மாணிக்கம் ஒரு விநாடி தயங்கினான். பிறகு, ஏதோ பெரிய தீர்மானம் ஒன்று செய்துவிட்டவன்போல, நளினி அருகில் போய் நின்றான். "நளினி, பத்மினி கூப்பிடுகிறாள்" என்றான், மெதுவாக.

நளினியின் உடலெல்லாம் புல்லரித்தது. அவள் சற்று நிதானித்துக்கொண்டு அவன் கூட நடந்து வந்தாள். மாணிக்கம் அவளைக் கூடத்தின் வேறு ஒரு மூலைப் பக்கமாக அழைத்துச் சென்றான். 'இத்தனை நாட்களாக எங்கேயோ போய் விட்டு, ரொம்ப யோக்கியர் போலத் திரும்பி வந்திருக்கிறார்! காரண காரியம் ஒன்றுமே சொல்லத் தேவையில்லையோ?' என்று தன் உள் மனசோடு பொருமிக் கொண்டே நளினி அவனைப் பின் தொடர்ந்தாள். ஷர்பத் கலந்து அளந்து ஊற்றிக்கொண்டிருந்த இடத்தில் போய் நின்றான் அவன். "பத்மினி கூப்பிட்டாள் என்றீர்களே?" என்று கேட்டாள் நளினி.

"ஆமாம், தோழிக்குக் கல்யாணம் என்றால், வந்தவர்களைக் கவனித்து, ஒரு தம்ளர் பழரசம் கூடக் கொடுப்பதில்லையா?" என்று வேடிக்கையாகக் கேட்டான் மாணிக்கம், அவளை நேராகப் பார்த்து. அவள் தலையலங்காரம், அவள் நகை, அவள் புடைவை ஒவ்வொன்றையும் நின்று ரசித்துக் கவனித்தான்.

"ஆண்களைப் பார்ப்பது என் வேலை அல்ல" என்றாள் நளினி, வெடுக்கென்று.

"சரி, போகட்டும்; என்னை யாரும் கவனிக்கவில்லையே! பழகின தோஷத்துக்காக நீயாவது கவனிப்பாய் என்று கேட்டேன். சரி, வேண்டாம். நான் தாகத்தோடேயே இருந்துவிட்டுப் போகிறேன்" என்றான் மாணிக்கம்.

'இந்தத் தாகம் என்ன கொடுமை? என் இதய தாகத்தை அறியாத மூடமான உங்களை ஏன் உபசரிக்கவேண்டும்?' என்று கேட்டுவிடத் துடித்தது நளினியின் மனம். ஆனால், நாகரிகம் குறுக்கே நின்றது. "இந்தாருங்கள்" என்று ஒரு தம்ளர் பழரசத்தை நீட்டினாள் நளினி.

"நன்றி. இப்படி வெட்கங் கெட்டுக் கேட்டு வாங்கிக் குடிக்கிறேன்" என்று கூறியபடி சிரித்துக்கொண்டே, கை நீட்டி அவன் வாங்கிக் கொண்டான்.

நளினி உதட்டைப் பிதுக்கினாள். எவ்வளவோ கேள்விகள் கேட்கவேண்டுமென்று தோன்றியது அவளுக்கு. ஆனால், பேசவிடாமல் ஒரு நிஷ்டுரம் குறுக்கிட்டது. "சரி, நான் வருகிறேன். எல்லாரையும் கவனிக்கவேண்டும்; சாப்பிடச் சொல்லவேண்டும்; தாம்பூலம் தரவேண்டும்" என்று கூறிவிட்டு அவள் கிளம்பினாள். அடங்கிய உணர்ச்சியினால் அவள் கண்கள் லேசாகக் கலங்கிவிட்டன; மூக்குச் சிவந்தது; உதடு துடித்தது.

"சரி, நானும் விடைபெறுகிறேன். அப்புறம் கூட்டத்தில் சொல்லிக்கொள்ள முடியுமோ, முடியாதோ?" என்றான் மாணிக்கம்.

'இத்தனை நாட்கள் எங்கே போனீர்கள்? அப்பா உங்களைத் திட்டுகிறார், உங்கள் அம்மா தவித்தார்கள். நான் கஷ்டப்பட்டேன்' என்று அவள் ஏதாவது சொல்லுவாள் என்று மாணிக்கம் எதிர்பார்த்தான். அத்தனைக்கும் வேடிக்கையாகப் பதில்கள் தயாரித்து வைத்திருந்தான். ஆனால் அவள் அப்படி ஒன்றும்

பேசாமல், ''போய் வாருங்களேன். ரொம்பத்தான் சொல்லிக்கொண்டு போவது தட்டுக் கெட்டுப் போகிறது! என்னிடம் சொல்லிக்கொண்டு தான் போகிறீர்களா? சொல்லிவிட்டுத்தான் வருகிறீர்களா?'' என்றாள் நளினி, கோபமாக.

முகமெல்லாம்மடிப்பு மடிப்பாகச் சிரித்தான் மாணிக்கம். ''சொல்லிக் கொண்டு போகவில்லை; ஒத்துக் கொள்கிறேன். சொல்லி அனுப்பிவிட்டு வரவில்லையா?'' என்றான்.

நளினி அரை உடம்பைத் திருப்பிக் கொண்டு, அங்கிருந்து போவதிலேயே முனைப்பான நிலையில் நின்றாள். அவளைப் போகாமல் இழுத்து நிறுத்த மாணிக்கம் படாத பாடுபட்டான்.

''எப்போது சொல்லி யனுப்பினீர்களாம்?''

''பத்மினிக்குத் தெரியுமே! அவள் சொல்லவில்லையா?'' என்று மாணிக்கம் ஆச்சரியத்துடன் கேட்டான்.

''என்ன, பத்மினிக்குத் தெரியுமா?'' என்று கேட்கும்போது, நளினியின் முகத்தில் வியப்பும் ஏக்கமும் பிரதிபலித்தன.

'முத்து, டேய் முத்து! உஷார்!' என்று அவன் புத்தி அரற்றியது.

''என்னிடம் சொல்லவேயில்லை, பாருங்கள்!'' என்றாள் நளினி, நிஷ்டுரமாக.

''கல்யாணச் சந்தோஷத்தில் இந்தச் சின்ன விஷயத்தை மறந்திருக்கலாம் அல்லவா?'' என்று வக்காலத்துப் பேசினான் மாணிக்கம்.

''சின்ன விஷயமா? சிலருக்கு விளையாட்டாக இருக்கும் விஷயங்கள் சம்பந்தப்பட்ட பலருக்குப் பெரும் வேதனையாக இருக்கலாம் அல்லவா?''

''அதாவது...?''

''அதாவது, உங்கள் தாயார் மனசை நினைத்துப் பார்த்தீர்களா? எங்கள் அப்பாவைப் பற்றிச் சிறிதேனும் யோசனை இருந்ததா?'' என்று படபடவெனப் பேசினாள் நளினி. ஈட்டி முனையாக அவள் கண் பார்வை அவனைத் துளைத்தது.

''அவ்வளவுதானா?''

''அவ்வளவுதான்'' என்று கூறிவிட்டு, நளினி வேகமாக நடந்து பெண்கள் கூட்டத்துள் மறைந்து விட்டாள்.

மாணிக்கம் சிறிது நேரம் அங்கேயே நின்றான். அவன் கையிலிருந்த பழரசம் பருகப் படாமலே இருந்தது. அந்தத் தம்ளரை மேஜைமீது வைத்துவிட்டு, அவன் விருந்தினர் கூட்டத்தை நாடினான். நளினி எங்கே சென்றாளோ தெரியவில்லை. அவன் கண்கள் அவளைத் தேடிய வண்ணம் இருந்தன.

பத்மினி அவன் இருக்குமிடம் வந்தாள். ''என்ன மாணிக்கம், எப்படி இருக்கிறாய்?'' என்று அவள் கேட்டாள், சிரித்த முகத்துடன்

''கண்ணாமூச்சி ஆடுபவர்கள், தாங்கள் ஒளிந்த இடத்தைச் சொல்வதில்லை. ஆட்டத்தின் சுவாரஸ்யம் கெட்டுவிடும்.''

''நேற்று, முந்தாநாள் நீ திரும்பி வந்திருந்தால், உன் அம்மா என் கல்யாணத்துக்கு வந்திருப்பார்கள்'' என்று பத்மினி சொன்னபோதுதான், சற்றுக் குற்றம் சாட்டுவதுபோல இருந்தது.

''வரமுடியவில்லை. அது சரி, நான் சாரங்கனிடம் சொல்லி அனுப்பினேனே! அவன் சொல்லவில்லையா?''

''சொன்னாரே!''

''நீ ஏன் நளினியிடம் சொல்லவில்லையாம்?''

''அதுக்குக் காரணம் வேறே. நான் புட்டுப் புட்டுச் சொல்லணுமாக்கும்?'' என்று கூறிவிட்டுப் பத்மினி திரும்பினாள்.

''பத்மினி, சரி, அங்கே பார். உன் கணவர் மூன்றாவது கண்ணால் என்னைப் பார்க்கிறார்'' என்றான் மாணிக்கம் மெதுவாக.

''அது நரசிம்மாவதாரம். அப்படித்தான் குரூரப் பார்வையோடு தென்படும்'' என்று கூறிக் கலகலவென்று சிரித்துக்கொண்டே, அவள் கணவனைத் தேடிச் சென்றாள்.

மாணிக்கம் பத்மினி சென்ற திக்கையே நோக்கிக்கொண்டு நின்றான். 'பிட்டுப் பிட்டுச் சொல்லவேணுமா என்று ரத்தினச் சுருக்கமாகச் சொல்லிவிட்டுத் தன் போக்கில் போய்விட்டாளே! நளினி விஷயத்தில் என் மனம் எந்த வகையில் ஈடுபடுகிறது என்று இவள் தெரிந்துகொண்டாளா? அல்லது, நளினியே தன் உள்ளத்து ஆசையைத் தன் தோழியிடம் கூறிக்கொண் டிருப்பாளோ?' என்று சிந்தித்து மண்டையை உடைத்துக் கொண்டான் மாணிக்கம். மடத்தை விட்டு வந்ததே தவறோ என்ற சந்தேகம் வலுத்தது. வராமல் எத்தனை நாட்கள் இருக்க முடியும் என்பதற்கும் விடை காண முடியவில்லை. யோசனைகள் தொடரத் தொடர, அவனுக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. மெள்ள நழுவி விடலாமா என்ற ஆலோசனை உதித்தது.

பிரின்ஸிபாலையும் ஆத்மநாதனையும் தூரத்திலிருந்தே பார்த்துக் கைகூப்பி விட்டு, ஒரு பக்கவாட்டு வாயில் வழியாக அவன் மெல்ல இறங்கிப் போகும்போது அவன் தோளில் பலமான ஒரு கை விழுந்தது. ''அகப்பட்டுக்கொண்டாரையா தும்மட்டிக்காய் பட்டர்!'' என்று உரக்கச் சிரிப்புக் கேட்டது.

''சுந்தரம்!'' என்று கூவி, அவன் இரு கைகளையும் பிடித்துக்கொண்டான் மாணிக்கம்.

''என்ன, ஐயா, சாப்பிடாமல் நழுவுகிறாப் போலேயா?'' என்று சுந்தரம்

கேட்டான், கையை விடுவித்துக்கொள்ளா மலேயே.

மாணிக்கம் பதில் சொல்ல முடியாமல் தவித்தான்.

''எங்கோ அஞ்ஞாதவாசம் இருந்த மாதிரி கேள்விப்படுகிறேமே!'' என்று மேலும் விசாரித்தான் சுந்தரம்.

''நான் மறைந்துவிட்டால் உலகமே சுழலாது என்று நினைத்தேன். அப்படி யில்லே. நான் இல்லாவிட்டால் கூட உலகம் நடக்கிறது'' என்முன் மாணிக்கம்.

''தன்னலத்தைப் பார்! சரி, வா. நானும் உனக்காகச் சாப்பிடாமல் காத்துக் கொண்டிருக்கிறேன். வா, அடுத்த பந்தியில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, மாமா வீட்டுக்குப் போகலாம். இரண்டு மூன்று நாட்களில் ஊருக்குக் கிளம்புகிறேன். அதுவரை நீ என்னுடன் இருப்பாயாம்.''

''நான் என் அம்மாவைப் பார்க்க வேணுமே! ரொம்பவும் கவலைப்படுகிறூர் களாம்.''

''சரி, போய்விட்டு இரவு வந்து விடுகிருயா? மாமாவைப் பார்த்து இன்று பேசினுயோ?''

''பார்த்தேன். கிட்டே போய்ப் பேசப் பயமாக இருக்கிறது. இந்தக் கல்யாணத் துக்கு நீ வருவாய் என்று நான் எதிர் பார்க்கவில்லே, சுந்தரம்.''

''அது சரி. நீயே வராத கல்யாணத் துக்கு நான் எதற்கு என்கிருயா? பத்மினி மிகவும் அழைத்தாள். பிரின்ஸி பால் வேறு தனியாகக் கடிதம் எழுதினுர். சரிதான் என்று வந்தேன். அழைத்ததால் வந்தேன்.''

''நான் அழைக்காமாலேயே வந்து விட்டேன்?''

''உன் விஷயமே தனி'' என்று சொல்லி விட்டு அவனேத் தோளுடன் தழுவிய வாறு, சாப்பாட்டுப் பந்திப் பக்கம் தள்ளிச் சென்முன் சுந்தரம்.

அலமேலுவும் நளினியும் இந்தக் காட்சியைத் தூரத்திலிருந்து பார்த்தார் கள். ''உன் அண்ணன் வந்து எத்தனே நேரமாச்சு? இன்னும் உன்கிட்டே ஒரு பேச்சுப் பேசலேயே?'' என்று கேட்டாள் நளினி.

''ஆமாம். இந்த இடத்திலே எல்லாம் தெரிஞ்சவங்க. ஒவ்வொருத்தராப் பேசி விட்டு வருவாரு'' என்முள் அலமேலு.

''ஏன் ஓடினுராம், ஏன் திரும்பினு ராம்? ஏதாவது தெரியுமா?''

''ஊகும்!'' என்று உதட்டைப் பிதுக் கினுள் அலமேலு.

''கேளு, நமக்கும் தெரியட்டுமே'' என்முள் நளினி.

''உங்ககிட்டேயானுலும் சொல்லு வாரு; என் கிட்டே மனம்விட்டுப் பேச வும் மாட்டாரு, நானும் கேட்க மாட்டேன்'' என்முள் அலமேலு, கண்டிப் பாக.

''அவ்வளவு சிரத்தை உனக்கு உன் அண்ணன் கிட்டே!'' என்று நளினி நிஷ்டுரமாகப் பேசினதும், அலமேலு திகைப்புடன் நோக்கினுள்.

''நான் என்ன செய்வேன், அக்கா? அன்னிக்கு நான் குழாயண்டை சண்டை பிடிச்சேன். எங்க அப்பா இரைஞ்சாரு, நீங்கள் எல்லாம் பார்த்தீங்க. அன்னிக்கே அண்ணன் ஓடிட்டாரு. அவர் எதை வெறுத்து ஓடினுரோ, அதையே நினே வூட்டி நான் ஒண்ணும் குளறுபடி செய்து விடக் கூடாதே! திரும்பி வந்துவிட்டாரு. இனி அவர் இஷ்டப்படி இருந்து நிறுத்தி வச்சிக்கணும். அதுதானே முக்கியம்?'' என்முள் அலமேலு.

நளினி அதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது. மாணிக்கம் இருக்கும் இடம் தேடிச் சென்று, அவனிடம் மீண் டும் பேசவேண்டுமென்று அவள் மனம் துடித்தது. அடிபட்ட அவன் கை விரலில் இன்னும் சுவடு இருக்கிறதா என்று கவலேப்பட்டாள். ஆயின், எப்படி அவனே நெருங்குவது?

சாப்பாட்டுப் பந்தியைக் கவனிப்பது போல, அவள் ஒரு முறை நீள நெடுக மேஜை வரிசைகளூடே நடந்து சென்முள். மாணிக்கமும் சுந்தரமும் சாப்பிட்டுக்கொண்டிருந்த இடத்தில் அவள் சற்றுத் தயங்கினுள். ''எல்லாம் வருகிறதா, அத்தான்?'' என்று கேட் டாள்.

''எல்லாம் ஒழுங்காகத்தான் வந்து கொண்டிருந்தது. நீ வரும் வரையிலே, நீ குறுக்கே குறுக்கே புகுந்தால், பரிமாறு பவர்கள் எப்படி வேலே செய்யமுடியும்? தயவு செய்து குறுக்கே நிற்காதே போ. நாங்கள் வயிருரச் சாப்பிட்டுவிட்டு வருகிரும்'' என்முன் சுந்தரம்.

''சரி, போங்க. அப்புறம் எனக்குக் கட்லெட் வரலே, வறுவல் வரலேன்னு சொன்னீங்க...?'' என்று ஆள்காட்டி விரலே அழகாக ஆட்டிவிட்டு, நளினி அப்பால் நகர்ந்தாள். போகிற போக்கில் தன் அத்தானின் பக்கத்திலிருந்த மாணிக் கத்தின் விரலேக் கவனித்தாள். அது நன்முகத்தான் இருந்தது. மாணிக்கம் அவளேப் பார்த்துச் சிரித்தான். அவளும் பதிலுக்கு ஒரு புன்னகையை வீசிவிட்டு அப்பால் சென்முள்.

அந்தப் பந்தி முடிந்ததும், ஒரு கூட்டம் முன் கூடத்தில் வந்து சேர்ந்தது. வந்தவர் களுக்குப் போட்டுக்கொள்ள வெற்றிலே, பாக்கு, சுண்ணும்பு, புகையிலே ஆகி யவை கிடைத்தனவா என்று மேற் பார்வை பார்த்துவிட்டு, நளினி அலமேலு வைத் தேடினுள்.

"என்ன அக்கா, என்னை விட்டுட்டுப் போய்ட்டீங்க? நான் தனியா நின்னு கிடந்தேன்" என்றாள் அலமேலு சிணுங்கலுடன்.

"பந்தியில் இலை காலி இருக்கிறதா என்று பார்க்கப் போனேன். நீ அங்கே வரவே வெட்கப்படுவாயே! அடுத்த பந்தியில் சாப்பிட்டுவிட்டு, எங்கள் வீட்டுக்குப் போய் ஓய்வு எடுத்துக்கொண்டு வருவோம்; என்ன?" என்று நளினி ஆசுவாசப் படுத்தினாளே தவிர, அலமேலுவின் நினைவே இல்லாமல் அவளைத் தனியே விட்டு விட்டு, தான் அவள் அண்ணனைத் தேடிச் சென்றது அவள் மனத்தில் உறுத்திற்று. அதனால், அது முதல் அவள் அலமேலுவைச் சற்று அதிகமாகவே கவனிக்கலானாள்.

மாணிக்கம் இவர்களைத் தேடி வந்தான். "அலமேலு, சாப்பிட்டாச்சில்லே? வீட்டுக்குப் போவோமா?" என்று விசாரித்தான்.

"அலமேலுவைக் கூட்டிக்கிட்டு வந்தது நான்; கொண்டு விடுவதும் நான்தான். அவ இப்பல்லாம் வரமாட்டா. ராத்திரி சாப்பிட்ட பிறகு எனக்கே அவளை வீட்டில் கொண்டு சேர்க்கத் தெரியும்" என்றாள் நளினி, வெடுக்கென்று.

"சண்டையைத் தவிர வேறு ஒன்றும் தோணவே இல்லை; இல்லையா?" என்று சலுகையாகக் கேட்டான் மாணிக்கம். அவன் கண்களிலிருந்து பொழிந்த அன்புப் பெருக்கு அலமேலுவை விழிப்படையச் செய்தது.

"அப்படித்தான்" என்றாள் நளினி. அவளும் மெதுவாக மாணிக்கத்தின் முகத்தைத் தன் பார்வையால் தடவிக் கொடுத்தாள்.

அலமேலுவுக்கோ அண்ணனுடன் வீட்டுக்குப் போகவேண்டுமென்று ஆவலாக இருந்தது. மாணிக்கம் வீட்டில் நுழையும் நேரத்தில், சின்ன அண்ணன் தாறுமாறாக ஏதேனும் பேசிவிடுவானோ, தகப்பனார் கட்டு மீறிக் கத்தி விடுவாரோ, தாயார் இவள் எச்சரிக்கையை மறந்து கதறிவிட்டாலோ? "அக்கா, நான் அண்ணனுடன் வீட்டுக்குப் போய்விட்டு, மாலை வரவேற்புக்கு வருகிறேனே!" என்று அவள் கெஞ்சினாள்.

"பொறுப்பில்லாதவர்களுடன் அனுப்பமாட்டேன். உன் அம்மாவிடம் சொல்லி அழைத்து வந்தேன். நானே உன் அம்மாவிடம் கொண்டு ஒப்படைப்பேன். வழியில் திடீரென்று இவருக்குப் புத்தி மாறிவிடும். எங்காவது ஒரு மடத்துக்குள்ளே புகுந்திடுவார்! வேண்டாமம்மா" என்றாள் நளினி.

மாணிக்கத்தின் நெற்றி சுருங்கிற்று. "எந்த மடம்?" என்று அவன் கேட்டுவிட்டான்.

"எனக்கென்ன தெரியும்? சும்மா பேச்சுக்குச் சொன்னேன்" என்றாள் நளினி.

"அப்பாடா!" என்று மாணிக்கம் ஓர் அமைதிப் பெருமூச்சுவிட்டான். அதன் பிறகு அவன் கிளம்பிவிட்டான்.

"முகூர்த்தத் தாம்பூலம் வாங்கிப் போங்க" என்றாள் நளினி, அவன் முதுகைப் பார்த்து.

ஒரு முறை திரும்பிப் பார்த்து, "அப்படியே" என்று கூறிவிட்டு, அவன் போய் விட்டான்.

அலமேலுவுக்குக் கல்யாண வீட்டில் சுவை குன்றிவிட்டது. தன் அண்ணன் ஒருவன் இல்லாதது, எங்கோ பாலைவனத்தில் தனித்து நிற்பதுபோல் தோன்றியது. அவள் நளினி போகுமிடமெல்லாம் கூடவே சுற்றிச் சுற்றி வந்தாள், நிழல்போல.

"பத்மினி கூப்பிடுகிறாள், உங்கள் இரண்டு பேரையும்" என்று யாரோ அழைக்கவும், இருவரும் அவளிடம் விரைந்தனர்.

"சாப்பிடவில்லையாமே?" என்று எடுத்த எடுப்பில் கேட்டாள் பத்மினி. அவள், முகூர்த்தச் சேலை, அலங்காரங்கள் எல்லாம் அகற்றிவிட்டு, ஒரு சாதாரணப் பட்டுப் புடைவை உடுத்தி, எளிமையாகக் காட்சியளித்தாள்.

"நீ சாப்பிட்டாயிற்றா?" என்று கேட்டாள் நளினி.

"அக்காவுக்கு இன்னிக்குச் சாப்பாடே வேண்டாம். ஒண்ணு, பக்கத்திலே கணவரைப் பார்த்துக்கிட்டே இருந்தால் பசி, தாகம் மறந்திடும்; ரெண்டாவது, அண்ணன் வேறு சமயத்துக்கு வந்திட்டாரு" என்றாள் அலமேலு.

"ஆமாம். நல்லாத் திட்டவேணுமென்று திட்டம் போட்டிருந்தேன். அவனைப் பார்த்ததும் எல்லாம் மறந்திடுச்சு" என்று கூறிச் சிரித்தாள் பத்மினி.

"திட்டம் போடாதவங்க நிறையச் சண்டை போட்டாப்போல" என்று சொன்ன அலமேலு, நளினி பக்கம் கண் ஜாடை காட்டினாள்.

"ஏன், நளினி, மாணிக்கத்தோடு நீ சண்டை போட்டாயா?" என்று கேட்டாள் பத்மினி.

"நான் ஒண்ணும் சண்டை போடலை. நான் யார்கூடச் சண்டை போடமுடியும்? மாணிக்கம் வரப்போகிறார்னு தெரிஞ்சும் நீ என்னிடம் சொல்லவேயில்லையே! உன்னோடு நான் மல்லுக்கு நின்னேனா?" என்று குத்தலாகக் கேட்டாள் நளினி.

"எனக்குத் தெரியுந்தான். ஆனால் அவனை நம்பி எனக்கு ஒண்ணும் வெளியிட முடியலை. வராமல் இருந்துவிட்டால்?" என்றாள் பத்மினி.

"உனக்கு ஏமாத்தமா இருக்காதோ?"

"இருக்கும். ஆனாலும்..சரி, விடு. எனக்குச் சொல்ல நினைவு இல்லேன்னு வச்சுக்கோ" என்று பேச்சை நறுக்கென்று கத்தரித்துவிட்டாள் பத்மினி.

'பத்மினிதானே நம்மிடம் சொல்லாதே என்றாள்? மறந்துவிட்டேன் என்று புளுகுகிறாளே!' என்று அலமேலு தனக்குள் கேட்டுக்கொண்டாள்.

பத்மினி தன் தோழிகள் இருவரையும் கையைப் பிடித்து அழைத்துச் சென்றாள். மணமக்கள் இருவரும் இவர்களும் அருகருகில் அமர்ந்தனர். பல உறவினர்களும் நண்பர்களும் அந்தப் பந்தியில் அமர்ந்து உணவு அருந்தினர். வேடிக்கையும் கேளிக்கையுமாகச் சாப்பாடு முடிந்தது.

"மீனுக்கா எங்கே, அக்கா?" என்று கேட்டாள் அலமேலு.

"மீனுவும் டாக்டரும் முதல் பந்தியிலேயே சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டார்களே!" என்றாள் நளினி.

தன் வீடு செல்ல உற்ற துணையை விட்டுவிட்டோமே என்று அலமேலுவின் மனம் கலங்கியது. அவள் உற்சாகமின்றிக் காலத்தைத் தள்ளினாள். அண்ணன் மாணிக்கம் வீட்டுக்குப் போனானோ இல்லையோ என்பதும் அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை.


"ஏன் உற்சாகம் இல்லாமல் இருக்கிறாய் நீ? மாணிக்கம் ஏதாவது சொன்னானா?" என்று பத்மினி ரகசியமாகக் கேட்டாள்.

"இல்லே. கவலேயா இருக்குது" என்று அவள் வாய்விட்டுச் சொல்வதற்குள், நளினி எட்டிப் பார்த்துக் கவனிக்க ஆரம்பித்தாள். "எனக்குத் தெரியாமல் என்ன ரகசியம் பேசுகிறீர்கள்?" என்று அதட்டினாள்.

"அலமேலுவுக்கு அசதியாக இருந்ததாம். அவளை எங்காவது ஒய்வு எடுத்துக் கொள்ளச் சொன்னேன். தன் வீட்டுக்கே போகிறேன் என்கிறாள். அனுப்பி வைக்கிறாயா?" என்று பத்மினி சமர்த்தாகச் சமாளித்தாள்.

"வேண்டாம். என்னோடு எங்கள் வீட்டுக்கு அழைத்துப் போகிறேன்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள் நளினி.

அலமேலு வேறு வழியின்றிப் பேசாமல் இருந்தாள். அவள் மனம், மாணிக்கமும் அவன் தாயும் சந்திக்கும் தருணத்தைப் பயங்கரமாகத் தீட்டிக்கொண்டிருந்தது.



ஆனால், உண்மையில் அங்கு நடந்ததே வேறு விதமாக இருந்தது.

மாணிக்கம் தன் வீட்டு வாயிலை நெருங்கியபோது, அவனுடைய தாயார் கூடத்தில் அமர்ந்து, துவரம்பருப்பு நோம்பிக் கொண்டிருந்தாள். மாணிக்கம் நேராகப் போய், தன் தாயின் அருகில் அமர்ந்தான். "முத்து!" என்று கூவிய அந்தத் தாய், முறத்தை அப்படியே போட்டுவிட்டு, மகனைத் தழுவிக்கொண்டாள். அவள் கண்கள் பனித்தன. பேச்சே எழவில்லை.

மாணிக்கத்தின் தொண்டை அடைத்தது. இத்தகைய அன்பின்முன் தான் செய்த காரியம் அநீதியிலும் அநீதியாகப் பட்டது, அவனுக்கு.

அவனைக் கண்டதும் அன்னை அலறி, திட்டிக் கேள்விகள் கேட்டிருந்தாலும் அவன் சமாளித்திருப்பான். மன்றாடிக் கண்ணீர் விட்டு அழுதிருந்தாலும் பொறுத்திருப்பான். அவன் திரும்பி வந்ததில், தன் சந்தோஷத்தை மட்டும் காட்டிய தாயின் செய்கை அவன் இதயத்தைக் கரைத்தது. "அம்மா, இப்படி இளைச்சுட்டியே!" என்றான் அவன், நாத் தழுதழுக்க.

"வயசாகலையாடா, முத்து?" என்றாளே தவிர, தனபாக்கியம் வேறு ஒன்றும் சொல்லவில்லை. "கல்யாணம் நல்லா நடந்துதா? அலமேலுவைக் கூட்டிக்கிட்டு வரதுதானே?" என்று கேட்டாள்.

"நளினி விடமாட்டேன்னு சொல்லிட்டா."

"நளினியும் அலமேலுவும் ரொம்பப் பழகிட்டாங்க. பெரிய எடத்துப் பொண்ணானாலும், சகஜமா வந்து பழகுகிறது; அவளுக்கு இலை தைக்கச் சொல்லித் தரணுமாம்" என்று கூறி, தனபாக்கியம் சிரித்தாள்.

"வேறே வேலை என்ன? எல்லாம் அவங்களுக்குப் புதுமை, எல்லாம் தமாஷு. நமக்கு எது பொழைப்போ, அவங்களுக்கு அது பொழுதுபோக்கு."

"ஆமாண்டா, முத்து. மீனா நடத்தற வகுப்புலே கவுன், ரவிக்கை தைக்கிறாங்க, நம்ப தெருப் பொண்ணுங்க. அதன் மேலே பூப் போடறா நளினி."

"நல்லாச் சொன்னே, அம்மா, நீ. நளினி இலை தைக்கறதுக்கும் அலமேலு இலை தைக்கறதுக்கும் எவ்வளவு வித்தியாசம்! இது இந்தப் பொண்ணுங்க யாருக்கும் புரியலை. அலமேலு அங்கே போய் அவுங்களைப்போல மாறுகிறதும், நளினி இங்கே வந்து கலந்துக்கிறதும் சரிப்பட்டு வராது. அம்மா, நீ ஏன் என்னைப் படிக்க வச்சு, அந்தச் சமூகத்திலே நுழையவிட்டே? அதுதான் பெரிய தவறாயிடுச்சு" என்றான் மாணிக்கம், துவரம்பருப்பைக் கையால் அளைந்தபடியே.

"மீனா இங்கே வந்ததும் நமக்கும் அவங்களுக்கும் தொடர்பு பிறந்திடுச்சு. நீ படிச்சதுக்கும் அதுக்கும் என்னடா தம்பி சம்பந்தம்?" என்று கேட்டுவிட்டுத் தனபாக்கியம் எழுந்துவிட்டாள்; துவரம்பருப்பைக் கூட்டி அள்ளிக் கூடைகளில் நிரப்பினாள். மாணிக்கம் தன் தாய்க்கு உதவியாக வேலை செய்தான்.

பருப்பைப் பீப்பாயில் அவள் கொட்டியபோது, கந்தசாமி வந்தார்; மகனைப் பார்த்தார். அவன் தயக்கத்துடன் அவரைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"எப்படா வந்தே?" என்று கேட்டார் தந்தை. அவரும் மூப்படைந்துவிட்ட மாதிரி அவனுக்குப் பட்டது.

"காலையில்" என்றான் மகன்.

"சாப்பிட்டியா?"

"கல்யாண வீட்டிலே சாப்பிட்டேன்."

"எங்களைக் கூட வந்து அழைச்சாங்க" என்றார் தந்தை.

மாணிக்கம் அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவன் தகப்பனாரும் பதிலை எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. அவர் கை கால் கழுவப் பின்புறம் போய்விட்டார். மாணிக்கம் சிறிது நேரம் நின்றுவிட்டுத் தன் அறைக்குப் போனான். அந்த அறை துப்புரவாகத் துடைக்கப்பட்டிருந்தது. தான் வைத்த இடத்தில் சாவி இருந்தது. அவன் அதை எடுத்துப் பெட்டியைத் திறந்தான். தான் விட்டுச் சென்ற வாழ்க்கையை மீண்டும் தொடருவதுபோலிருந்தது அவனுக்கு. அவன் ஆராய்ச்சிக் குறிப்புப் புத்தகத்தைத் திறந்து பார்த்தான். ஆத்மநாதன் நினைவு வந்தது அவனுக்கு. கல்யாண வீட்டில் அவரைப் பார்த்து, பேசாமல் வந்துவிட்டதை நினைக்கும்போது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. அவன் இப்போது அதை நினைத்துத் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

'கொஞ்ச நேரம் கழித்து மடத்துக்குப் போய், நம்முடைய துணிமணிகளை எடுத்துக்கொண்டு, சாமியாரிடம் விடையும் ஆசியும் பெற்றுக்கொண்டு வரவேண்டும். மாலை கல்யாண வீட்டுக்குப் போகுமுன், ஆசிரியரைத் தனிமையில் காணவேண்டும். அவர் திட்டினாலும் கேட்டுக் கொள்ளலாம். ஆனால், அவர் பேசாமலிருந்து விட்டாலோ? மடத்தை விட்டால் வீட்டுக்குத்தான் வரவேண்டுமென்று இருந்ததா? வேறு எங்கேயாவது போயிருக்கலாமே! போய்...? இங்கேயோ, மடத்திலோ வாய் திறந்து கேளாமல்

உண்ண உணவும், உறங்க நிழலும் கிடைத்தன. வெளி யுலகத்துக்குப் போனால்? கூலி வேலை செய்தாவது பிழைக்கலாமோ? எந்த இடர் வந்தாலும் எதிர்காலம் என்கிற மனவுறுதி நமக்கு உண்டா?"

மாணிக்கம் தன் நிலையை அலசி அலசிப் பார்த்தான். தன் எதிரே நிற்கும் நளினி யின் பிரச்னையையே தன்னால் சரிக்கட்ட முடியவில்லையே என்று நினைக்கையில், அவனுக்கே வருத்தமாக இருந்தது. 'எனக்கு நளினியிடம் இருக்கும் அன்பு அத்தகையது. அவள் மெய் வருந்தக் கூடாது, உள்ளம் நலுங்கக் கூடாது என்று தானே பாடுபடுகிறேன்?' என்று அவன் மனம் ஆறுதல் கூறியது. புத்தி சப்புக் கொட்டியது. 'யாருக்கு நீ மை தடவுகிறாய்? தார தம்மியத்தோடு எத்தனை பேர் கல்யாணம் செய்துகொள்ளவில்லையாம்? அவர்களெல்லாம் வெற்றிகரமாகக் குடும்பம் நடத்தவில்லையா?' என்று இடித்துக் காட்டியது.

மாணிக்கத்துக்குக் குழப்பம் மிஞ்சியது. செய்வகை யறியாமல் அவன் அமர்ந்திருந்தான். டாக்டரையாவது போய்ப் பார்த்து விட்டு வருவோம் என்று கிளம்பினான். அவன் அங்கே சென்றபோது, மீனாட்சி உள்ளே வேலையாக இருந்தாள். டாக்டர் சில நோயாளிகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். மாணிக்கம், டாக்டரின் அறையில் ஓரமாக இருந்த பெட்டி ஒன்றின்மீது அமர்ந்தான்.

கடைசி நோயாளி போகும்வரை காத்திருந்துவிட்டுப் பிறகுதான் டாக்டர் பேசினார். "என்ன, மாணிக்கம், ஒரு மாசத்துக்கு மேலே ஹாலிடே எடுத்துக் கொண்டு விட்டீர்கள்? கொடுத்து வச்ச மனுஷன் ஐயா நீர்!" என்றார்.

மாணிக்கம் வாயே திறக்கவில்லை. டாக்டரின் வார்த்தைகளுக்கு அவனுக்கு ஆயிரம் பொருள்கள் புலப்பட்டன. 'விஷயங்களைச் சமாளிக்க முடியவில்லை என்றால், சுகமாக மறைந்துவிட்டாய்' என்று பொருள்படப் பேசினாரோ?

"மாணிக்கம், காலையிலே கல்யாண வீட்டிலே தேடினோம். ஏன் வரவில்லை?"

"அங்கேயே தானே இருந்தேன்? நான் இரண்டாவது பந்தியில் சாப்பிட்டேன். நீங்கள் முதல் பந்தியில் சாப்பிட்டுவிட்டுத் திரும்பி விட்டீர்களாமே?"

"ஆமாம். மீனாவுக்கு மாசமாகிவிட்டது வெகு நேரம் நிற்கமுடியவில்லை. அவளுடைய இரண்டு கைகளான நளினியும் அலமேலுவும் அங்கே முக்கிய அங்கம் வகிக்கிறார்கள். இங்கேயோ, மணவாளச் செட்டி ஜுரமாகப் படுத்திருக்கிறார். பத்து நாட்களுக்கு மேலாகிவிட்டன. ரத்தப் பரீட்சை செய்து பார்த்தேன். அதில் ஒன்றும் தெரியவில்லை. அவர் சம்சாரந்தான் ஏற்கனவே படுக்கையோடு கிடக்கிறாள். அதனால் சீக்கிரமே வந்துவிட்டோம்" என்றார் டாக்டர்.

"மணவாளச் செட்டியாருக்கு உடம்பு சரியில்லையா?" என்று கேட்டான் மாணிக்கம், இத்தனையும் கேட்டபின்.

"ஜுரம் அதிகமாக இருக்கிறது. பிடிபடவில்லை. இன்று ஒரு ஸ்பெஷலிஸ்ட்டை அழைத்துக் காட்டப் போகிறேன்."

"அம்மா சொல்லவே இல்லையே!"

"சொல்ல மறந்திருப்பார்கள், அந்த வீட்டைப் பார்த்தால் மிகவும் கண்ணராவியாக இருக்கிறது. ஆணும் பெண்ணும் படுக்கையில்......பெரிய பிள்ளையையும் மருமகளையும் வரச் சொல்லி விட்டேன்."

"உயிருக்கே ஆபத்தா, டாக்டர்?"

"இப்போது ஒன்றும் தெரியவில்லை. ஆனால் எந்த மருந்துக்கும் பிடிபடாமல் காய்ச்சல் வீசினால், உடல் உறுப்புகள் தாங்கவேண்டாமா? வேறு ஏதாவது ஒரு கோளாற்றைக் கிளப்பிவிடக் கூடாதல்லவா?"

மாணிக்கம் அங்கிருந்து கிளம்பி, பங்காருவின் வீட்டுக்குச் சென்றான். அங்கே உறவினர் சிலர் நடமாடிக்கொண் டிருந்தனர். அவன் மணவாளச் செட்டியின் அருகில் போய் நின்றான். அவர் மயக்க நிலையில் கண்மூடிக் கிடந்தார். அவன் தொட்டுப் பார்த்தான். அவர் உடலில் அனல் பறந்தது. அவன் பங்காருவிடம் வந்தான். சதை பருத்த அவளது தேகம் இப்போது மெலிந்தவுடன், சரியாகக் கட்டப்படாத சாக்குப் பை போல ஆங்காங்குச் சதை தொங்க, களையிழந்து காணப்பட்டாள், அந்த அம்மாள்.

அவள் ஊஞ்சலில் அமர்ந்து எதையோ குடிக்க முயன்றுகொண் டிருந்தாள். அவளுடைய பெரிய மருமகள் அருகில் நின்று பார்த்துக்கொண் டிருந்தாள்.

மாணிக்கம் அவளருகில் போய், "பெரியம்மா!" என்று மெதுவாக அழைத்தான்.

"முத்தூ! முத்தூ!" என்று அவள் பரிவோடு கூப்பிடுவதற்குள், அவள் கண்களில் நீர் மல்க அவனைப் பார்ப்பதற்குள், அவள் கை நடுங்கியது. தம்ளர் கஞ்சியும் கீழே கொட்டியது.

"வெட்கங் கெட்ட மனுஷங்க! சம்பந்தம் வேண்டாமுன்னு ஒதுக்கினப் பிறவும் வருதுகளே!" என்றாள் பங்காருவின் மூத்த மருமகள்.

மாணிக்கம் குன்றிவிட்டான். மறு பேச்சுப் பேசாமல் அவன் வெளியேறி, கடைவீதிப் பக்கமாக நடக்கலானான்.

(தொடரும்)

முத்துச்சிப்பி

அநுத்தமா

17. புரியாத பாஷை

மாணிக்கம் பணிவாக எதிரே நின்றான். ஆத்மநாதன் சோபாவில் அமர்ந்து, அவன் பக்கமாகக் காலை நீட்டிக்கொண்டிருந்தார். பின்னாடி நளினி வேறு ஒரு சோபாவில், அதன் சுவர் மீது கை வைத்துக்கொண்டு நின்றாள்.

'இப்ப வந்திருக்கிற பசங்க ஒண்ணும் சுகமில்லை. ஆனால், ஒருத்தன் இயந்திரங்களுடைய விவரம் தெரிஞ்சவன். தண்ணீர் இழுக்கிற மோட்டாரை இயக்கிப் பாரேன்னு சொன்னேன். ஒரு பொண்ணு நல்லா பரத நாட்டியம் ஆடுவா. குறிப் பெடுத்து அலுவலகத்தை ஒழுங்கா வச்சு நடத்தப் போதாது. சோம்பேறிங்க'' என்று ஆசிரியர் சொல்லிக் கொண்டிருந்தார்.

மாணிக்கம் பதில் ஏதும் சொல்லாமல் நின்றுகொண்டே இருந்தான். நளினி காலை மாற்றிக் காலை விட்டுக்கொண்டு நின்றாள்.

ஆத்மநாதன் தொடர்ந்தார். ''இப்போதைக்கு ஒன்றும் வேலை இல்லையே! தினமும் காலையில் கிளம்பி வந்து விடு. அலுவலகத்தை ஒழுங்கா வச்சிட்டு அந்தப் பசங்களுக்கு வேண்டியதைச் சொல்லித்தா. நான் இப்போ மாதுளம் பழத்தைப் பத்திப் புத்தகம் ஒன்று எழுதுகிறேன், தெரியுமோ இல்லையோ?''

''உம்.''

''நீ அதுக்கும் கொஞ்சம் உதவி செய்யலாமே! எனக்குன்னு ஓர் உதவியாளர் கொடுக்கிறார்களாம். தட்டெழுத்து, சுருக்கெழுத்துத் தெரிந்த ஆள் தேவை என்று கேட்டேன். முந்நூறு ரூபாய் சம்பளம். உனக்கே இரண்டும் தெரியும். தற்சமயம் உன்னைப் போடுகிறேன். அப்புறம் பார்க்கலாம். நேர்முகத் தேர்வு வைத்து வேறு ஆள் போட்டுக் கொள்ளலாம். என் கை விட்டு நான் நூறு ரூபாய் தருகிறேன். தவிர ....''

''என்னால் முடிந்ததை நான் எப்பவும் செய்யத் தயாராக இருக்கிறேன் ஸார். பணம் எதற்கு?'' என்று மெதுவாகச் சொன்னான் மாணிக்கம்.

''ஏன்? என்னிடம் கை நீட்டிப் பணம் வாங்கினால், உன்னை அடிமையாக நடத்தி விடுவேன் என்று பயமோ?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''அப்படி இல்லை. உங்களுக்கு உழைக்கக் கடமைப்பட்டவன் நான். அதற்காக ஊதியம் பெற விரும்பவில்லை.''

''கடமைப்பட்டவனைப் பார்க்கவில்லை. அதனால்தான் சொல்லாமல் கொள்ளாமல் ஓடினாயோ?''

மாணிக்கம் பதில் சொல்லத் தெரியாமல் சிறிது தவித்தான். பிறகு, ''நான் நன்றி மறக்கவில்லை. என்னுடைய சொந்த விஷயமாக அப்படிப் போகும்படி நேர்ந்தது'' என்றான், தோட்டத்தைப் பார்த்தபடியே.

''சரி, சரி. நன்றி மறந்தாய் என்று யார் சொன்னார்கள்? நளினி, நீ ஏதாவது சொன்னாயா என்ன?'' என்று கேட்டார் தந்தை.

''யாரும் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், பார்ப்பதற்கு அப்படித் தோன்றலாம் அல்லவா?''

''நீ அடிக்கடி ஓடி விட்டு வா. முன்னை விட வாய்விட்டுத் தெளிவாகப் பேசறே. சரி, நாளையிலேருந்து வரயா?'' என்று கேட்டார் ஆத்மநாதன், பொறுமையிழந்து.

''ஆகட்டும்.''

இதுவரை பேசாமல் மாணிக்கத்தையும் தந்தையையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்த நளினி, இப்பொழுது பேச்சில் குறுக்கிட்டாள். ''இது என்ன வேலை அப்பா? சாதாரணக் குமாஸ்தா வேலை செய்பவரிடம் மற்றப் பேர்களுக்கு என்ன மதிப்பிருக்கும்? உங்களுக்குச் செயலர் வேண்டுமானால் வேறு யாரையாவது போட்டுக் கொள்ளுங்கள். இவர் சும்மா வந்து உதவி விட்டுப் போகட்டும். உங்கள் சர்வ கலாசாலையில் முந்நூறு ரூபாய்க்குக் கையெழுத்துப் போட்ட பிறகு, எல்லோரும் எடுபிடி

வேலைக்குக் கூடக் கூப்பிட மாட்டார்கள் என்று என்ன நிச்சயம்?'' என்று வாதாடினாள்.

''என்னடா சொல்றே? மதிப்புப் போய் விடுமாமே!''

''பரவாயில்லே. நான் நாளைக் காலை முதல் வருகிறேன்'' என்றான் மாணிக்கம் ஆணித்தரமாக.

நளினி தோளைக் குலுக்கிவிட்டு, ''படித்துப் பட்டம் பெற்ற மதிப்பே இராது. ஆசிரியராக இருந்து விரட்ட வேண்டிய மாணவர்களை, எஜமானர்களாகக் கருதிப் பதில் சொல்ல வேண்டி வரும். நம் கல்லூரி எழுத்தர், தபால் தலை வாங்கித் தருகிறார்'' என்றாள்.

''நானும் வாங்கித் தருகிறேன்'' என்று சிரித்துப் பதில் சொல்லிவிட்டு மாணிக்கம் ஆசிரியர் முகத்தைப் பார்த்தான்.

அவர் தம் பெண்ணைப் பார்த்து வெற்றிப் புன்னகை பூத்தார்.

''நான் வரேன், ஸார்'' என்று விடைபெற்றுக்கொண்டு மாணிக்கம் கிளம்பினான்.

நளினி சோபாவில் அமர்ந்து அருகில் கிடந்த அலங்காரக் குட்டி மேஜைமீது இருந்த கடிதங்களைப் புரட்டினாள். ''அப்பா, இதென்ன அழைப்பு? ஒரு கட்டு அப்படியே கிடக்கிறதே!'' என்று கேட்டாள்.

''ஓ, அதுவா? மாணிக்கம் போய்விட்டானா பார். பார் சீக்கிரம்'' என்றார் ஆசிரியர்.

''ஏன், அப்பா?''

''அவனைக் கூப்பிடு. பிரின்ஸிபால் முக்கியமாகச் சொன்னார். நான் மறந்து விட்டேன்.''

நளினி துரிதமாக ஓடிச் சென்றாள். மாணிக்கம் வெகுதூரம் போய்விட்டிருந்தான். நளினி ஓடிப்போய், ''மாணிக்கம்!'' என்று குரல் கொடுத்தாள். மாணிக்கம் சுண்டி இழுத்தாற்போல நின்று திரும்பி நோக்கினான்.

''மாணிக்கம், அப்பா கூப்பிடுகிறார்'' என்றாள் நளினி, மூச்சு இரைக்க.

''நான் போகிறேன். சற்று நிதானித்து வா. இப்படியா ஓடி வருவார்கள்? த்ஸூ த்ஸூ'' என்று அவன் அங்கலாய்த்தான்.

நளினி 'சரி' என்று தலையை ஆட்டினாள். ''எவ்வளவு வேகமாக நடக்கிறீர்கள்? ஓடி வரவேண்டியிருந்தது'' என்றாள்.

''நளினி துரத்திக் கொண்டு வருகிறாள் என்று தெரிந்திருந்தால், இந்தக் கால்கள் அவளைத் தேடி ஓடியிருக்குமே! அவை ஜடங்கள்தாமே? தெரியவில்லை. காலிலே கண் வைக்காததனாலேதான் பிரம்மாவுக்குக் கோவில் இல்லையாமே, அப்படியா?''

அவன் பேச்சு அவள் உடலெல்லாம் இன்பத்தைப் பாய்ச்சியது. 'சற்று முன்னே அப்பா முன்னாடி நிற்கிறபோது பூனை மாதிரி இருந்தார். அடிமை மாதிரி மருண்ட பார்வையும், கட்டிய கையுமாக நின்றார். பேசக் கூடத் தெரியுமோ என்று யோசிக்க வேண்டியிருந்தது. இப்பப் பார். கவிஞனைப் போலப் பேசுகிறாரே!' என்று அவள் சிந்தனை ஓடியது.

அவள் தன்னைச் சமாளித்துப் பேசுவதற்குள் மாணிக்கம் வேகமாகத் திரும்பி ஆசிரியரின் முன்னிலையை அடைந்துவிட்டான். நளினி மெதுவாக நடந்து வந்து படிக்கட்டு ஏறும்போது, கையில் அழைப்புச் சீட்டுக் கட்டுடன் அவன் எதிர்ப்பட்டான்.

''என்னவாம் அது?'' என்று கேட்டாள் நளினி.

''பத்மினி வீட்டிலே நாளைக்கு ஒரு பார்ட்டியாம். மாறுவேஷம் போட்டுக் கொண்டு போக வேண்டுமாம். குறிப்பிட்ட சிலரை மட்டும் அழைக்கிறார்களாம். அதை விநியோகிக்கச் சொன்னார்'' என்று விளக்கினான் மாணிக்கம்.

''நம் கல்லூரியிலே ஒரு தடவை வைத்திருந்தோமே! அப்பொழுதே பிரின்ஸிபாலுக்கு ரொம்பப் பிடிச்சுது. இப்பப் பெண் கல்யாண வைபவத்திலே வைத்து விட்டாராக்கும்?''

''நீ ரிஷி கன்னிகையாக வந்தாயே!''

''நினைவிருக்கா?'' என்று ஆவலுடன் கேட்டாள் நளினி.

''யாருக்குத்தான் நினைவிருக்காது?'' என்று கேட்டுவிட்டு அவன், ''ரைட்டோ, நான் வரேன்'' என்று கூறி நடந்து சென்று விட்டான்.

நளினி படிகளில் துள்ளிக் கொண்டு ஏறி, வரவேற்பறையை அடைந்தாள்.

அவள் தந்தை இப்பொழுதும் காலை நீட்டிக்கொண்டு, திருப்புகழ் ஒன்றைப் பாடியவாறு, அழைப்பைப் படித்துக்கொண்டிருந்தார். மகளைப் பார்த்ததும், ''இப்பல்லாம் இது வழக்கில் இல்லை. விக்டோரியா ராணி காலத்திலே மேனாட்டிலே செய்வார்களாம். பிரின்ஸிபாலுக்கு இதிலே ஓர் ஆசை!'' என்றார் ஏளனமாக.

''அதனால் என்ன, அப்பா? அவர் இஷ்டப்பட்டதைச் செய்ய வேண்டியதுதானே?'' என்றாள் நளினி. தந்தை எதிரே சோபாவில் அமர்ந்தாள்.

''நளினி, எனக்குக் கொஞ்சம் டைப் அடித்துத் தருகிறாயா? மாணிக்கம் இருக்கும் போது கேட்க மறந்து விட்டேன்'' என்றார் ஆத்மநாதன், திடீரென்று நினைவு வந்தவராக.

''கொடுங்கள், அப்பா!''

''ஒரே ஒரு கடிதாசு. நாளைமுதல் அவன் வருவானே! செம்மைப்படுத்தி

வைத்திருந்தால், மடமடவென்று அடித்துத் தள்ளி விடுவான். நிறைய வேலே இருக்கு.''

''அப்பா, நாளே முதல் மாணிக்கம்னு ஓர் ஆள் குளோஸ்.''

''என்ன பேத்தறே?''

''பின்னே என்ன அப்பா? நீங்க செய்வது நல்லாவா இருக்கு? பி. எச். டி வாங்கின ஒரு நபர், வெளி நாட்டிலிருந்தோ, அல்லது வெளிச் சர்வ கலாசாலேயிலிருந்தோ உங்களேப் பார்க்க வந்தால் இப்படித்தான் மூலேயிலே கை கட்டி நிக்க வச்சு, எதிரே காலே நீட்டிண்டு பேசுவீங்களோ?'' என்று சாவதானமாகக் கேட்டாள் நளினி.

''மாணிக்கத்தை நிக்க வைச்சுப் பேசினது தப்பா? அவன் கிடக்கான். அவன் தகுதி அவனுக்கே தெரியாது. நீ ஏன் கிடந்து அலேயறே?''

''என்ன இருந்தாலும், மனசுக்குள்ளே கஷ்டம் இராதா? நரசிம்மன் கூடப் பிரின்ஸிபால் மாமாவின் மாணவர்தாம். ஆனல், இன்றைக்கு அவர் ஆசிரியராகி விட்டாராம். சரி சமானமாகக் கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்து பேசுகிற தோரணேயைப் பார்த்தீங்கல்ல?''

''மாப்பிள்ளே.''

''அது மட்டுமல்ல. மாப்பிள்ளேயாக ஆகாட்டாக் கூட அவர் அப்படித்தான் நடந்துப்பாரு. இரண்டு பேரும் சமான அந்தஸ்துள்ள ஆசிரியர்தாமே என்கிற எண்ணம்.''

''அதுவும் உண்மைதானே?''

''மாணிக்கம் மட்டும் என்ன தகுதி குறைஞ்சு போயிட்டாரு? அந்த நரசிம்மனேவிட ஒரு படி மேலே பட்டம் பெற்றவரில்லேயா? நீங்க அதைக் கொஞ்சம் நினேவு படுத்திக் கொள்ள வேணும். மதிப்புத்தரணும். அன்னிக்கு, சுந்தர அத்தான் வந்த அன்னிக்கு, இவரைக் கேவலம் ஒரு கூலி ஆள் மாதிரி நடத்தினீங்க. அப்புறம், அத்தான்தான் சமாளிச்சு நடந்தாரு.''



"நீ என்ன இன்னிக்கு? மாணிக்கம் இந்திரா காலனியிலே பிறந்தவன்தானே? அவனுக்கு நீ சொல்ற நுணுக்கமெல்லாம் புரியக் கூடப் புரியாது" என்று அசட்டையாகப் பதில் சொல்லிவிட்டு அவர் எழுந்து விட்டார்.

"இந்திரா காலனியிலே பிறந்தா என்ன, இந்திரப் பிரஸ்தத்திலே பிறந்தா நமக்கென்ன? மதிப்பு அறிஞ்சு மரியாதை செய்யத் தெரியணும், அப்பா."

"மதிப்புத் தானாகவே ஏற்படணும்."

"நீங்க அவரை மூட்டைப் பூச்சியாத் தேய்க்கிறீங்க. அந்த மனுஷனும் தன் மானத்தை இழந்து...." ஆத்திரமும் துக்கமும் கலந்து வந்து, அவள் தொண்டையை அடைத்தன.

"அவனுக்கு இந்த டைபிஸ்ட்டு வேலைக்கு மேலே ஆசையே கிடையாது. அவன் அதுக்குத்தான் மனுப் போடுவான். நான் கூப்பிடுகிறதனாலே, அவன் தன் படிப்புக்குத் தொடர்பு இருக்கிற இடத்திலே இருக்கிறான். அவன் எங்கேயோ உப்புப் பேக்கட்டு விற்கிற கிடங்கிலே கணக்கெழுதுவதை விட, இது மேல் இல்லையா?" என்று மீண்டும் அலட்சியமாகப் பேசிவிட்டு, ஆத்மநாதன் தம் அறைக்குப் போய் விட்டார்.

நளினி எழுந்து வேகமாகத் தோட்டத்தில் நடை பயின்றாள். அவள் ரத்தம் கொதித்தது. 'அப்பா சொல்வதுபோல் தான் இந்த மாணிக்கமும்! தன்னைத் தானே மதித்தால் தானே பிறரும் மதிப்பார்கள்? தலையெழுத்து!' என்று தனக்குள் பேசிக்கொண்டும், நறநறவென்று பல்லைக் கடித்துக் கொண்டும் அவள் நடந்தாள். 'தலையெழுத்து!' என்று, உடன் ஓங்கி நெற்றியில் இருமுறை அடித்துக்கொண்டாள்.

அந்தச் சமயத்திற்குச் சரியாகச் சுந்தரம் அங்கே வந்தான். அவள் வேதனையையும் ஆக்கிரோஷத்தையும் பார்த்து வியப்படைந்தவனாய், "ஏய், நளீ! யார் மேலே கோபம்?" என்று கேட்டான்.

நளினிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவள் திகைத்து நிற்கையில் அவளுடைய அத்தான் சிரித்துக்கொண்டே எதிரே நின்றான். "ஏதாவது டிராமா ஒத்திகையா? நளினி, தலையில் அடித்துக்கொள்ளும்படி என்ன நேர்ந்தது?" என்று கேட்டான்.

"எது நாடகம், எது வாழ்க்கைன்னு தெரியலேன்னு வச்சுக்கோ."

"ஏய், கதை பண்ணாதே! மாணிக்கம் வந்துட்டுப் போனானா? ஏதாவது உளறிக் கொட்டினானா?" என்று சகஜமாகக் கேட்டான் சுந்தரம்.

"அவர் ஒண்ணும் உளறிக் கொட்டலே. அப்பாதான் இன்னும் கொஞ்சம் மரியாதையாக நடத்தணும்" என்று ஆரம்பித்து, அவளுக்கும் அவள் தகப்பனாருக்குமிடையே நடந்த பேச்சை விவரித்தாள்.

"அவன் கிடக்கட்டும். நாளைக்கு மாறுவேஷப் பார்ட்டியாமே?" என்று சுந்தரம் கேட்டான்.

"நீங்க எங்கே போய்ட்டு வந்தீங்க?" என்று கேட்டாள் நளினி.

"நாளைக்கு மறுநாள் காலை ரெயிலுக்கு டிக்கட்டு வாங்கப் போனேன். மாணிக்கத்தைத் தேடினேன், காணோம்" என்றான் சுந்தரம்.

"நீங்களும் மாணிக்கமும் ரொம்ப நெருங்கிட்டீங்க."

"ஆமாம். அவன் நல்ல பையன். நாங்கள் தனியாக இருந்தால், அவன் என்ன பேச்சுப் பேசறான், தெரியுமா, நளீ! நம்பவே முடியாது!" என்றான் சுந்தரம், நளினியைக் கடைக் கண்ணால் ஆராய்ந்தவாறே.

நளினியின் முகம் சிவந்தது. மாணிக்கத்தின் பேச்சின் சுவை, மீண்டும் அவள் நினைவில் இனித்தது போலும்! புன்னகை தவழ அவள் பேசும்போது, குரல் மென்மையாக இருந்தது. "ஆமாம், அத்தான். அப்படியெல்லாம் நகைச் சுவையோடு பேசக் கூடியவர், சில சமயம் மரமாக நிற்கும்போது நமக்குக் கோபம் மிஞ்சுகிறதா, அநுதாபம் கூடுகிறதா என்று அறிய முடியவில்லை!"

"அந்த முத்து நல் முத்தாக ஆவதற்கு ரொம்ப காலமாகும், நளீ!"

"வேதனை மணல் அரித்தால் தானாக முத்து வளரும். ஆனால், அதுவரையில் பேழையாக ஒரு சிறந்த சிப்பி வேண்டுமே! அது கிடைக்க வேண்டும்" என்றாள் நளினி.

சுந்தரத்தின் முகம் கம்பீரமாகியது. அவன் நிதானமாக நளினியைப்பார்த்து, "எந்த மாதிரிச் சிப்பியைச் சொல்றே நீ?" என்று கேட்டான்.

"மனிதர்களுடைய அரவணைப்பைத் தான் சொல்கிறேன். அவர் வளரும் சூழ்நிலை, அவருடைய அடக்கமான சுபாவம் இரண்டும் சேர்ந்து, ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கி விட்டனவே! உற்ற மனிதர்கள் அவருக்கு மதிப்புத் தந்து, ஊக்குவித்து அரவணைத்தால்தானே அவர் பிரகாசிக்க முடியும்? அதைத்தான் சொன்னேன்."

"அப்பாடா!" என்று ஒரு பெருமூச்சு விட்டான் சுந்தரம்.

"ஏன்? எதற்கு அப்படி ஒரு நீண்ட மூச்சு?"

"நான், நீ ஏதோ சொல்லப்போகிறாய் என்று நினைச்சேன்."

"என்னவென்று நினைச்சீங்க?"

"இல்லே, இந்த முத்து கொள்கிற அளவு பெரிய வெள்ளிச் சிப்பி செய்து,

அதற்குச் சக்கரம் வைத்து, போகுமிடமெல்லாம் இழுத்துப் போக வேண்டுமென்று சொல்வாய் என்று பயந்துவிட்டேன்!'' என்று பேச்சை லேசாக், வேடிக்கையாக, திசை மாற்றி விட்டான் சுந்தரம்.

''நான் பேசுவது உங்களுக்குக் கேலியாக இருக்கிறது, அப்பாவுக்கு அசட்டையாக இருக்கிறது'' என்று குறைப்பட்டுக் கொண்டாள் நளினி.

''அதெல்லாம் ஒன்றும் இல்லே, நளினி. நான் சொல்கிறேனே என்று நினைக்காதே! சிலபேர் வாழ்க்கை சிலமாதிரிதான் அமையும். அதற்கு நீ கவலைப்பட்டு முடியாது.''

''இருந்தாலும், நல்ல புத்தியுள்ள மனிதன், சாதனைகளைச் சாதிக்கக் கூடிய ஒருவன், சந்தர்ப்பக் கோளாறினுல் ஒளிராமல் போகவிடலாமா?''

''இவன் ஆராய்ச்சியினுல் உலகம் என்ன நன்மை யடையும் என்கிருய்? ஆனுய நாயனுருக்கு அடுத்தபடி மாணிக்க நாயனுர், வரலாற்று ஏடுகளில் ஏறப் போகிருரோ?''

''முப்போகம் விளையும் பூமியை ஐந்து போகம் விளைய வைக்கலாமே! முத்து ஏன் சரித்திர ஏடு ஏறக்கூடாது?''

''யாரு? முத்துவா?'' என்று சுந்தரம் குறும்பாகச் சிரித்துப் பேசினுன்.

''நீங்க முத்துன்னு பேசினதனுலே வாய் தவறி வந்துட்டுது. மாணிக்கத்தை அவங்க வீட்டிலே முத்துன்னு தானே கூப்பிடுருங்க?''

''நீயும் கூப்பிட ஆரம்பிச்சிட்டயோன்னு பார்த்தேன்.''

அதற்குப் பதிலாக அவள் ஏதும் சொல்ல யோசிப்பதற்குள், ''சுந்தரம், எங்கே போய்ட்டே நீ? மாடி யெல்லாம் தேடிட்டு வந்தேனே!'' என்று அவனுடைய மாமா எதிர் கொண்டார்.

நளினி அவர்களை விட்டு விட்டு உள்ளே சென்றுள். அவள் வாய் 'முத்து, முத்து' என்று முணுமுணுத்தபடி இருந்தது.

மாணிக்கமோ அழைப்புச் சீட்டுக்களை விநியோகித்துவிட்டுத் தன் வீடு சேர்ந்தான். அலமேலு கோவிலுக்குப் போய்விட்டு வந்தாள் போலும். கையில் திருநீற்றுப் பிரசாதத்தை அவன் முன் நீட்டினுள்.

''அலமேலு, நீ ஏன் வெள்ளைப் புடைவை தவிர வேறு உடுத்துகிறதில்லே?'' என்று கேட்டான் மாணிக்கம்.

''சமூக சேவைக்குத் தியாகமும் சுத்தமுந்தானே முக்கியம்? தியாகத்துக்கு நிறம் காவி. அதை உடுத்த அம்மா இடங்கொடுக்க மாட்டாங்க. சுத்தத்துக்கு நிறம் வெள்ளை. அதை உடுத்துகிறேன். ஏன், அண்ணு?''

''சும்மாத்தான் கேட்டேன், அலமேலு'' என்றுன் அண்ணன்.

'சின்னப் பெண். எவ்வளவு நிர்ணயமாக வெள்ளையே உடுத்துகிறுள்! அவள் சொல்லும் காரணம் இருக்கட்டும். உண்மையில் கல்யாணம் நின்றுவிட்டதே என்ற குறைதானு? மதனகோபாலன் தொடர்பு விட்டது என்று எந்தப் பெண்ணுவது கவலைப் படுவாளா?' மாணிக்கம் சிந்தனையில் ஆழ்ந்தான்.

அலமேலுவுக்கு வேலை சரியாக இருந்தது. மகளிர் மன்ற வேலைகள், வீட்டு வேலை. போதாக் குறைக்குக் கடைக்கு ஜடை தைப்பதும், இலை தைப்பதும். விரல் மடக்கக் கூட நேரமில்லாமல் அவள் சுழன்றுள்.

மாணிக்கம் ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு கூடத்தில் அமர்ந்து தங்கையின் சுறுசுறுப்பைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவளுக்கு இன்று ஜடை தைக்கும் வேலை இருந்தது போலும். அவள் பூக்கூடையை எடுத்துக் கீழே பெரிய காகிதத்தில் பூக்களைக் கொட்டி ஆய்ந்தெடுக்க ஆரம்பித்தாள். மாணிக்கம் புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, பலகைமீது வண்ண வாரியாக அவளுடன் பூக்களை அடுக்க ஆரம்பித்தான். அலமேலு, துளசிதாசர் பஜனை ஒன்றைப் பாடியபடியே வேலை செய்தாள்.

''ஜோர், ஜோர்! நல்லாப் படிச்சிட்டியே: ராகங்கூடப் பாடுவியா?'' என்று மெச்சினுன் அண்ணன்.

''நளினி என்னமாச் சொல்லித் தரது தெரியுமா? தானுகப் பாடுது, பாரு. அப்பப் புதுசு புதுசா ராக விஸ்தாரம். பிரமாதமாப் பாடும்.''

''நளினிகிட்டே நீ ரொம்பவும் பழகிட்டாயா?''

''ஆமாம். நீ இல்லாத போது கூட எத்தினி தடவை இங்கே வரும், தெரியுமா? ஏதாவது தகவல் கிடைச்சுதான்னு அக்கறையா விசாரிக்கும். ஒரு நாள், இந்தத் தெரு பட்டம்மா இல்லே?''

''வம்புக்காரி அவ'' என்றுன் மாணிக்கம்.

''ஆமாம். அவளும் இன்னும் சில பேரும் வந்துட்டாங்க. உன்னை எத்தினி நாளாக் காணுமே! கண் மறைவா ஓடிட்டியா? அப்படின்னு, என்ன காரணமா யிருக்கும்? இப்படி அவங்களுக்கு மண்டையிலே குளவி கொட்டியது போல. வந்துட்டாங்க விசாரிக்க. ஒண்ணுக்குப் பத்தாப் புரளி கிளப்ப. நளினி அப்ப இருந்திச்சு. அம்மாவும் நானும் என்ன பதில் சொல்லுவம்னு திருதிருன்னு விழிக்கிறேம். நளினி என்னவோ ரொம்பச் சாதாரணமாக நம்ப அம்மாவைப் பார்த்து, 'அது ஒண்ணும் கஷ்டமில்லேங்க. அப்பாவைக்


புத்துணர்வுபெற
உற்சாகமான ஊக்கமூட்டும்
நெஸ்கஃபே®
NESTLÉ
NESCAFÉ
instant coffee
நூற்றுக்கு நூறு நயமான
தூயகாப்பியிலிருந்து தயாராகும
இன்ஸ்டண்ட் காப்பி இது ஒன்றே!
உலகிலேயே
மிக அதிகமாய
விற்பனையாகும்
இன்ஸ்டண்ட
காப்பி !
NS-CAS-3/77 TAM

கடிதாசு போடும்போது எழுதச் சொல்றேன். வேலை முடிஞ்சு வர ஒரு மாசம் கூட ஆகலாம்னு அப்பா' என்றுளே பார்க்கணும்!''

''ஹூம்!'' என்று மாணிக்கம் தூண்டினான்.

''அம்மா சட்டுனு முழிச்சிக்கிட்டு, 'ஆமாம், நளினி, அப்பாவையே எழுதச் சொல்லு. மாணிக்கம் வரும்போது வாங்கியாந்தாப் போதும்'னு ஒரு போடுபோட்டாங்க! வந்த பிடாரிங்க எழுந்து போயிடுச்சிங்க. அப்புறம், அம்மா நளினி கையைப் பிடிச்சு, 'கண்ணு, நீ உதவிக்கு வரலேன்னு? இதுக்குத்தான் படிப்பு வேணுங்கறது. நானும் அலமேலுவும் உளறிக் கொட்டியிருப்போம்' என்று கண்ணீர் விட்டாங்க. அண்ணு, நீ பாட்டுக்குக் கண் மறைவா ஓய்வு எடுத்துக்கிட்டே. பொய் சொல்லிண்டு நாங்க பட்ட பாடு!'' என்றுள் அலமேலு. ஆனால் உடனே நாக்கைக் கடித்துக்கொண்டு அண்ணன் முகத்தை உற்று நோக்கினாள்.

மாணிக்கம், யோசனையுடன் தலை குனிந்தவன், நிமிராமல் பூக்களை அடுக்கினான். தான் செய்யும் எந்தக் காரியமும் தன்னோடு நின்று விடுவதில்லை. என்று அவனுக்கு இப்போதுதான் உதயமாயிற்று. ''என்ன புளுகினீங்க?'' என்று மெதுவாகக் கேட்டான்.

''நளினிதான் சொல்லிக்கொடுத்திச்சே; கல்கத்தாவுக்கு ஆராய்ச்சி விஷயமாப் போயிருக்காருன்னு ஒரு சரடு கிளப்பிவிட்டோம்.''

அலமேலு ஜடை தைப்பதற்குப் பட்டை தயாரித்தாள். ஊசி, நூலை எடுத்துக்கொண்டு தைக்க ஆரம்பித்தாள். ''நளினி கூட நல்லாத் தைக்கக் கத்துக்கிட்டுது. என் கூட ஜடை தைக்கும், அம்மா கூடக் கீரை ஆயும்.''

''அவளுக்கு வேறே வேலையே இல்லையா?'' என்று மாணிக்கம் கேட்டான். அவன் குரலில் தொனித்த எரிச்சலை அவள் கண்டாள்.

''உனக்கு ஏன் அண்ணு, நளினியைப் பிடிக்கலே? அது மிகவும் நல்ல பொண்ணு.''

''எனக்குப் பிடிக்கிறதைப் பத்தி என்ன?''

''அம்மாவுக்கும் ரொம்பப் பிடிச்சுப் போச்சு. அப்பாவைக் கூட 'மாமா மாமா'ன்னு பேசும்''

''பெரிய பாக்கியந்தான் போ!''

''உனக்குப் பத்மினி மட்டும் ஒசத்தி. நளினியைக் கண்டால் பிடிக்காது.''

''பிடிக்காதுன்னு நீ கண்டு பிடிச்சிட்டியா?''

''பின்னே என்னவாம்? பத்மினி வந்தால் குழைஞ்சு, 'பத்மினி, பத்மினி'ன்னு பத்து வாட்டி கூப்பிடறே. நளினியைப் பார்த்தா விறைச்சிக்கிட்டு, முகத்தைக் கடுமையா வச்சுக்கிட்டுச் சுவரைப் பார்த்துப் பேசறே. என் கண்ணில் படாமல் இல்லை, தெரியுமா? நானும் கேட்கணும்னுதான் இருந்தேன், கேட்டுட்டேன்.''

''பெரிய கெட்டிக்காரி, போயேன்!'' என்று வார்த்தையை மழுப்பினுன் அண்ணன்.

''அண்ணு, நளினி வந்து....''

நளினி வந்து என்ன என்று அலமேலு சொல்லி முடிப்பதற்குள், நளினியே உள்ளே நுழைந்தாள். அண்ணனுக்கும் தங்கைக்கும் ஆச்சரியம் தாங்கவில்லை.

''உனக்கு நூறு ஆயுசு! எங்க அம்மா அப்படித்தான் சொல்லுவாங்க'' என்றுன் மாணிக்கம், தங்கையை ஓரக் கண்ணுல் பார்த்துக்கொண்டே.

''ஆமாம்; நான் செய்யற பெரிய கைங்கர்யத்துக்கு நூறு வயசு இருக்கணுமாக்கும்!'' என்றுள் நளினி.

''ஏன் அக்கா, அப்படிப் பேசறே?''

''சும்மாதான். உங்க அண்ணன் என்னவோ பெரிய ரிஷி மாதிரி.''

மாணிக்கம் சிரித்தான். பிறகு, ''ரிஷின்னு நினைவு வரது. மாறு வேஷப் போட்டியாச்சே; எல்லாருமா வேஷம் போடணும்?'' என்று கேட்டான்.

''ஆமாம். அலமேலு ஒருத்திக்குத்தான் அநுமதி. அவள் சும்மா வந்து வேடிக்கை பார்த்தால் போதும். மற்றவங்க வேஷம் போட்டுத்தான் ஆகணும். பிரின்ஸிபால் சொல்லிவிட்டார்.''

''வராமலே இருந்து விட்டால்?''

''அதுக்குன்னு பயிற்சி பெத்தவங்க வராமல் இருப்பாங்க, கண் மறைவாக இருந்துப்பாங்க. எங்களைப் போல் தாட்சண்யப் பட்டவங்க அப்படித் தலை தப்ப முடியாதே! ஏன் அலமேலு?'' என்று நளினி சலுகையோடு தோழியைக் கேட்டாள்.

'ஏற்கனவே நளினியைக் கண்டால் அண்ணனுக்குப் பிடிக்கவில்லையே! இவள் ஏன் அந்த வியவகாரத்தை நினைவு படுத்தணும்?' என்று யோசித்தவாறு, அலமேலு பீதியுடன் தன் அண்ணனைப் பார்த்தாள்.

ஆனால், மாணிக்கம் கலங்கவில்லை; கோபிக்கவும் இல்லை. கனகாபிஷேகம் செய்து கொண்டமாதிரி, சந்தோஷமாக அவன் நளினியைப் பார்த்தான். ''தங்கச்சி, தாட்சண்யத்தினுல் தான், பழகின மனுஷங்க மனசு புண்படக்கூடாதுன்னு கூட, சிலர் கண்மறைவாகப் போகலாம், இல்லையா?''

''விசுவாமித்திரர் படைப்புப் போலவா உங்க அண்ணன்? ஏன், அலமேலு?''

''பேசத் தெரியும் சில பேருக்கு. சில பேருக்குப் பேசத் தெரியாது. மத்தவங்க புரிஞ்சிக்கலாமல்ல?''

அலமேலு விழித்தாள். ''நீங்க ரெண்டு பேரும் என்ன பாஷை பேசறீங்கன்னு கூட எனக்குப் புரியலே. டென்னிஸ் ஆட்டத்திலேயே நடுவிலே கட்டு வாங்களே, வலே? அது இல்லாட்டி ஆட்டமில்லே. ஆனல், ஆடுகிறவங்க என்னவோ அதைத் தொடுகிறதில்லே. அப்படி ஒரு வலேயாக நான் மாறிட்டேனேன்னு சந்தேகமா இருக்குது'' என்ருள் அவள்.

நளினியும் மாணிக்கமும் ஒருவரை ஒருவர் அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டனர். நளினி வெற்றியாக ஒரு புன்னகை வீசினள். மாணிக்கம் வேதனேயுடன் முகத்தைச் சுளித்தான். ''தங்கச்சி, இவங்களோடு சேர்ந்து நீயும் கெட்டுட்டே. இல்லாத இடத்திலே யெல்லாம் பொருளேக் கற்பனே செய்துண்டு.''

அலமேலுவின் கை ஜடையில் வேலே செய்தபடி இருந்தது. நளினியும் பேசிக்சொண்டே, பூக்களேக் கோத்துக் கொடுத்தாள். மாணிக்கம் நளினியின் கை நேர்த்தியைக் கவனித்தவண்ணம் இருந்தான்.

''இந்த வேலே யெல்லாம் செய்தால் விரல் முரடாகி விடும். தம்பூரா மீட்டும் போது கஷ்டப்படும். வேண்டாம்னு சொல்லு, அலமேலு'' என்ருன் மாணிக்கம்.

''முடியாதாம்னு சொல்லு, அலமேலு'' என்ருள் நளினி.

''சரி! ஆரம்பிச்சீங்களா?'' என்று அலமேலு கலகலவென்று சிரித்தாள்.

''அலமேலு, நான் வந்த காரியத்தையே மறந்தேனே!''

''என்ன?''

''எங்க அத்தான் சுந்தரம் இருக்காரில்ல? மாணிக்கத்தைக் கையோடு கூட்டிக்கிட்டு வரச் சொன்னரு. தாம் ஊருக்குப் போகும் வரையிலே தம்முடன்தான் இருக்கணுமாம். துணிமணி எடுத்துக்கிட்டுக் கிளம்பச் சொல்லு, அலமேலு.''

''நாளேயிலேருந்து நான் அங்கே வேலேக்கு வரப் போகிறேனே! அப்புறம் பார்த்துக்குவம். இன்னிக்கு எங்க அம்மா விடமாட்டாங்க'' என்ருன் மாணிக்கம்.

நளினிக்கு முகம் சுண்டி விட்டது. ஆனல், அவள் சிரித்துச் சமாளித்து, ''அலமேலு, இந்த அட்டைப் பெட்டியிலே உனக்கு ஒரு பட்டுப் புடைவையும் ரவிக்கையும் வச்சிருக்கேன். நீ தயாரா யிரு. நான் வந்து பார்ட்டிக்குக் கூட்டிக்கிட்டுப் போறேன். அம்மாகிட்டச் சொல்லிடு. நான் வரேன்'' என்று கூறிக் கொண்டே, அட்டைப் பெட்டியை அலமேலு பக்கத்தில் வைத்து விட்டு, எழுந்து ஓடி விட்டாள்.

மாணிக்கம் அவள் சென்ற பிறகு தெருப்பக்கம் போனன். மீனட்சி வீட்டு வாசலிலிருந்து கார் கிளம்பிவிட்டது. அது மறைந்த பிறகு அவன் உள்ளே வந்தான். ''அலமேலு, மணவாள மாமாவும், பங்காரு பெரியம்மாவும் உடம்பு சரியில்லாமல் படுத்திருக்காங்களே?'' என்று கேட்டான்.

''ஆமாம்?''

''நீங்கள் போய்ப் பார்க்கலேயா?''

''எப்படிப் போவது, அண்ண? யோசனேயே இல்லாமக் கேட்கிறயே! தெருவிலே நம்மைப் பார்த்துச் சிரிக்க மாட்டாங்க?''

''நான் போனேன் நேற்று.''

''அப்படியா? எப்படி இருக்காங்க?'' என்று ஆவலோடு கேட்டாள் அலமேலு.

''பெரியவரு கண்ணே திறக்கலே. பெரியம்மா மட்டும் ஊஞ்சலிலே உட்கார்ந்து கஞ்சி குடிக்கும்போது போனேன். என்னேப் பார்த்துக் கண்ணீர் விட்டாங்க. அதுக்குள்ளே அவங்க மருமகள் என்னே ஏசிட்டா. நான் விடு விடென்று வெளியே வந்திட்டேன்.''

''சொல்லவே இல்லேயே, அண்ண?''

''என்ன சொல்றது? அவ அப்படிப் பேசினதும, எனக்குக் கூச்சமாகிவிட்டது. நேரே விசையாக் கடைத் தெருப் பக்கமா நடந்தேன். எவ்வளவு தூரம் நடந்தேன்னு எனக்கே தெரியாது. அப்புறந்தான் ஒரு நிதானத்துக்கு வந்தது. வீடு திரும்பினேன்.''

''அந்த அம்மா அப்படித்தான் பேசும். ஆனல், பங்காரு அத்தையை நல்லாப் பாத்துக்கிட்டாச் சரிதான்'' என்ருள் அலமேலு.

''நாம் இத்தினி நாளு அவங்களோடு நெருங்கிப் பழகிட்டோம். கஷ்டத்திலேயும் சுகத்திலேயும் உதவி செஞ்சிட்டோம். இப்ப நாம் தூர நிற்கிறும். அவங்களே எட்டிக் கூடப் பார்க்காதவங்க கிட்டே இருக்காங்க''

''நாம் கவலேப் பட்டு என்ன செய்யறது அண்ண?''

''உனக்கு வேதனேயாக இல்லே?''

''அதெல்லாம் அப்பப்ப வர்றதை அப்பப்ப ஏத்துக்கிட வேண்டியதுதான். எதுதான் இழுத்துப் பறிச்சா ஒட்டப் போவுதா? ஓடிப் போன விடப் போவுதா? நீயே சொல்லு'' என்ருள் அலமேலு.

மாணிக்கம் தன் தங்கையின் பதிலேக் கேட்டு ஸ்தம்பித்து விட்டான்.

[தொடரும்]

முத்துச் சிப்பி

அநுத்தமா

18. மாறுவேடப் போட்டி

கார் வந்து அவர்கள் வீட்டு எதிரே நின்றது. மாணிக்கமும் நளினியும் இறங்கி உள்ளே வந்தனர்.

''அலமேலு, நீ தயாரா?'' என்று கேட்டாள் நளினி.

''ஆமாம் அக்கா. ஆனால், என் கொண்டை நல்லாயிருக்கான்னு பாருங்க. அதுதான் என்னவோ திருப்தியாக வர மாட்டேன்னுது'' என்றாள் அலமேலு.

மாணிக்கம் தன் தங்கையைப் பார்த்தான். வெள்ளை மைசூர் ஸில்க் புடைவையும் வெள்ளைப் பட்டு ரவிக்கையுமாக அவள் மிக அழகாக இருந்தாள். அவளது பெரிய சரீரத்தில், ஐந்து அங்குலச் சரிகைக் கரை மடிப்பு மடிப்பாகத் துவண்டு விழுந்தது. மல்லிகைப் பூவை நெருக்கமாகக் கட்டித் தலையில் வைத்திருந்தாள். மூன்று வரிசையாகப் பூ வர, இடையில் ரொட்டிபோல உப்பித் தலைமயிர் காட்சியளித்தது. 'பெரிய ராஜாவீட்டுப் பெண் மாதிரி இருக்கிறாள்' என்று அண்ணன் மெச்சும்படி இருந்தது.

''கொண்டை நல்லா இருக்குதே!'' என்றாள் நளினி.

''இவளுக்கு ரவிக்கை எப்படிச் சமாளித்தீர்கள்?'' என்று மாணிக்கம் கேட்டான்.

''இப்படியெல்லாம் ஓர் ஆண்பிள்ளை கவனித்துக் கேட்கக் கூடாது, தெரியுமா?'' என்றாள் நளினி.

''சரி!'' என்றான் மாணிக்கம்.

''பத்மினி அக்காவுடையது'' என்றாள் அலமேலு.

''எப்பப் பார்த்தாலும் வெள்ளை தானா, நளினி? உங்க மீனாட்சி வெள்ளைச் சீருடை வச்சிருக்கிறாளோ?'' என்று மாணிக்கம் கேட்டான்.

''பாவம்! மீனாட்சி என்ன செய்வா? இந்த அம்மாதான் வேறே உடுத்துகிறதே இல்லையே! உங்க அம்மா கேட்டுண்டாங்கன்னு கலர் ரவிக்கை போடறா'' என்று விவரித்தாள் நளினி.

''அப்படியா, அலமேலு?''

''ஆமாம். அதுக்கென்ன இப்போ?''

''ஒண்ணுமே யில்லை. ரெண்டுபேரும் என்னைச் சண்டைக்கு இழுக்காதீங்க. கிளம்புவோம். நளினிக்கு என்ன வேஷம், அலமேலு?''

''அண்ணன் என்ன வேஷம், கேட்டியா?'' என்று பதிலுக்கு நளினி கேட்டாள்.

''சீக்கிரம் கிளம்பினால்தானே வேஷம் போடலாம்? சாப்பாடு எட்டு மணிக்காம். அதுக்குள்ளே போக வேண்டாமா?'' என்று மாணிக்கம் துரிதப்படுத்தினான்.

தனபாக்கியம் வழியனுப்ப, மூன்று பேரும் காரில் ஏறிக்கொண்டு சென்றனர்.

மாணிக்கம் ஒரு பெரிய அட்டைப் பெட்டியை எடுத்துக் கொண்டு வந்திருந்தான். நளினி அலமேலுவைத் தட்டி, ''அதில் என்ன இருக்குது?'' என்று ஜாடை காட்டினாள். மாணிக்கம் பார்த்துவிட்டான். ''அதெல்லாம் சொல்ல முடியாது. அலமேலு கையிலே ஜடை இருக்குதே, அது எதுக்கு?'' என்று கேட்டான்.

''அதுவும் நான் சொல்ல முடியாது'' என்றாள் நளினி.

கார் ஆத்மநாதன் வீட்டை அடைந்ததும், மூவரும் இறங்கினார்கள். மாணிக்கம் கைப் பெட்டியுடன் தன் அலுவலகத்துக்குள் நுழைந்து, கதவைச் சாத்திக் கொண்டான். நளினியும் அலமேலுவும் நளினியின் அறைக்குள் புகுந்தனர்.

கொஞ்ச நேரமாயிற்று. ஆத்மநாதன் மாணிக்கத்தின் அறைக் கதவைத் தட்டினார். ''என்னடா, நேரமாகிறதே?'' என்றார்.

''இதோ வருகிறேன் மாமா; நளினியைக் கிளப்புங்கள்'' என்று குரல் கொடுத்தான் சுந்தரம்.

எல்லாரும் கூடத்தில் குழுமினர். சுந்தரம் தபால்காரனாகவும், மாணிக்கம் வளையல் செட்டியாகவும் வெளியே வந்தனர். அலமேலுவுடன் நளினி வந்து நின்றதும், சுந்தரமும் மாணிக்கமும் சிலையாக நின்று விட்டனர். தங்கத் தகடிப் புடைவையும், பச்சைப் பட்டு ரவிக்கையும், தலைச் சாமான்களும், பூச்சடை

யும், காதில் மாட்டல், ஜிமிக்கி, மூக்குத்தி, நத்து, புல்லாக்கு, இடுப்பில் ஒட்டியாணம் எல்லாம் போட்டுக் கொண்டு, அவள் தெய்வலோகத்துப் பெண் மாதிரி நின்றாள். செக்கச் செவே லென்று உதட்டுப் பூச்சின் நடுவில் பற்கள் தெரிந்து, பவழப் பேழையில் முத்து உதிர்ந்தாற் போல இருந்தது. கையிலே பூமாலையுடன் அவள் நின்ற கோலம் நெஞ்சை அள்ளியது.

சுந்தரம், மாணிக்கம் எல்லாரும் ஒரு பேச்சுப் பேசவில்லை. மௌனமாகவே திரும்பிக் காருக்கு வழிக் காட்டினர். ஆத்மநாதன் கூட ரிஷியாக வேஷம் போட்டிருந்தார். கையில் தண்டமும் கமண்டலுவும் ஏந்தி, கம்பீர நடை போட்டு, அவர் அவர்களைத் தொடர்ந்தார்.

கார் பத்மினி வீட்டை அடைந்ததும், வாசற்படியிலேயே நரசிம்மன் ராஜாவாகவும், பத்மினி குறத்தியாகவும் நின்று வரவேற்றனர், பல பேர் வந்துவிட்டனர். ரிஷிகன்னிகைகள், போலீஸ்காரர், குடுகுடுப்பாண்டி என்று பற்பல வேஷத்தில் நடமாடினார்கள். இந்தப் புதுமை ஒரு குதூகலத்தைப் பரப்பியது.

ஆத்மநாதன் குழுவினர் உள்ளே நுழைந்ததும், பிரின்சிபால் ஒரு மேஜை மீது ஏறி நின்று, ''இன்னும் அரை மணிக்குள் சாப்பிட ஆரம்பிக்கலாம். அதற்கு முன், அவரவர்களும் தம் தம் வேஷத்துக்கு ஏற்ப, சில வார்த்தைகள் பேசவேண்டும்'' என்று அறிவித்தார்.

அவரவர்களும் அதற்கெனப் போட்டிருந்த மேடை மீது தோன்றி, சில வார்த்தைகள் பேசியோ ஒரு சைகை காட்டிவிட்டோ இறங்கினர்கள்.

ஆத்மநாதன் எல்லோரையும் ஆசீர்வதிப்பது போல் சைகை காட்டினர். குறத்தி குறி சொல்ல அழைத்தாள், ராஜா கம்பீர நடை போட்டுச் சென்றார். நளினி அலமேலுவைத் தோழிப் பெண்ணாக அழைத்துக் கொண்டு, கையில் மாலையைப் பிடித்துக் கொண்டு, ''எப்போ வருவாளோ என்றன் கலிதீர?'' என்று ஒரு வரி பாடினாள். ஒரே ஆரவாரம். மாணிக்கம் உடனே தாவித் தன் கம்பளியை விரித்து, ''அழகான வளையலுங்க. கல்யாணப் பொண்ணுக்கு ஏத்ததுங்க'' என்றான். நளினி நின்று அவன் வளையல் கொத்தை நோக்கினாள். மாணிக்



கம் தன் இடுப்பிலிருந்து ஒரு ஜோடி சங்கு வளையலை எடுத்து அவளிடம் நீட்டினான். அவள் அதை வாங்கிக் கையில் அணிந்து கொண்டாள். தபால்காரன் அவளிடம் கடிதம் கொடுக்கவும், வரிசை முடிந்தது. எல்லாரும் அப்படியே சாப்பாட்டு அறைக்குச் சென்றனர்.

''சங்கு வளையல் ஏது?'' என்று கேட்டான் சுந்தரம், தணிவான குரலில்.

''அது சங்கு அல்ல, பிளாஸ்டிக். ஒரு கடையில் பார்த்தேன். வாங்கினேன்'' என்றான் மாணிக்கம், பெருமையாக.

''நளினி, வேஷம் ரொம்பப் பொருத்தம்'' என்றான் சுந்தரம்.

''சுயம்வரம் தீர்மானமாகி விட்டதா?'' என்று ஒரு குரல் வந்தது.

நளினி பதிலே சொல்லவில்லை. அவள் இலையைக் கவனிப்பதிலேயே முனைந்து விட்டாள். சுந்தரம் மாணிக்கத்தை இடித்துச் சைகை காட்டினான். மாணிக்கம் சுந்தரத்தைப் பார்த்து, ''என் பாராட்டுகள் உனக்கு'' என்றான்.

இது நளினியின் செவியில் விழுந்து விட்டது போலும்! அவள் ஒரு விநாடி கண்களை அகல விரித்து, மாணிக்கத்தைப் பார்த்து விட்டுக் குனிந்து கொண்டாள்.



விருந்து முடிந்து அவரவர்களும் வீடு கிளம்பினார்கள்.

''நளினியக்கா, நீங்கள் எல்லாரும் வேஷம் கலைக்கிறதுக்கு முன்னாடி என் அம்மாவுக்கு அப்படியே காட்ட முடியுமா?'' என்று கேட்டாள் அலமேலு.

''நான் இறங்கிக் கொள்கிறேன். நீங்கள் அப்படியே போய்விட்டு வாருங்கள்'' என்றார் ஆத்மநாதன்.

மாணிக்கம் கோபமாகத் தன் தங்கையைப் பார்த்தான். ''எங்கள் தெருவிலே எல்லாரும் வெளியிலேயே வேடிக்கை பார்த்துக்கிட்டு நிப்பாங்க, வேண்டாம்'' என்றான்.

''மணி பத்தாயிடுத்து. எல்லோரும் தூங்கி விட்டிருப்பாங்க. போவோம், வாங்க'' என்று ஆசிரியர் மீண்டும் வற்புறுத்தவும், ஆசிரியரை இறக்கி விட்டுக் கார் இந்திரா காலனியை நோக்கிப் பறந்தது.

மாணிக்கம் பயந்தபடி யாரும்

வேடிக்கை பார்க்கவில்லை. அவர்கள் சட்டென்று வீட்டுக்குள் நுழைந்து விட்டனர். தனபாக்கியம் அவர்களைத் தன் ஹரிக்கேன் விளக்கு ஒளியில் கண்டாள்.

''அப்பா எங்கே?'' என்று மாணிக்கம் கேட்டான்.

''நல்லாத் தூங்கரூரு'' என்ருள் தனபாக்கியம். உடனே நளினியைப் பார்த்து, ''இரு, நளினி, திருஷ்டி சுத்திப் போடறேன்'' என்ருள்.

''முதலிலே உங்கள் பொண்ணுக்கும் பிள்ளைக்கும் போடுங்கள்'' என்ருள் நளினி.

''மாணிக்கத்தின் நெத்தி நாமத்துக்கே திருஷ்டி வரும்'' என்ருன் சுந்தரம்.

மாணிக்கம் மடமடவென்று வேஷத்தைக் களைந்துவிட்டான். சுந்தரத்தைப் பார்த்து, ''இன்னிக்கு நளினி மாலையோடு நின்றபோது, எத்தனை உயிர் கழுத்தை நீட்டத் துடிச்சிருக்கும், இல்லையா, சுந்தரம்?'' என்ருன்.

''நளீ, முத்து சொல்றதைக் கேட்டியா?'' என்ருன் சுந்தரம்.

''வளையல் செட்டியைப் பார்த்த பல பெண்கள், வளையை அடுக்கிக் கொள்ளத் துடிச்சிருப்பாங்க'' என்ருள் நளினி, பதிலுக்கு.

அலமேலு அவர்கள் பேச்சில் கலந்து கொள்ளாமல் உள்ளே சென்று தன் உடையை மாற்றிக் கொண்டு, அவிழ்த்த புடைவையை மடித்து எடுத்துக் கொண்டு வந்தாள்.

''இப்பக் கொடுக்காதே, கிளீனிங் செய்து கொடுப்போம்'' என்ருன் மாணிக்கம்.

''ஒண்ணும் வேண்டாம். அப்படியே குடு, அலமேலு'' என்ருள் நளினி.

''ஏன் அக்கா?''

''இவ ஒருத்தி,'அக்கா, அக்கா'ன்னு'' என்ருள் நளினி.

''பின்னே எப்படிக் கூப்பிடறதாம்? அத்தை, மாமி, பாட்டி—இப்படி ஏதாவது ..?'' என்று கேட்டான் சுந்தரம்.

''நளினின்னு கூப்பிடறது'' என்ருள் நளினி.

மாணிக்கம் கடுமையாக முகத்தை வைத்துக் கொண்டு, ''இந்திரா காலனியிலே எல்லாரும் மத்தப் பொண்களை அப்படித்தான் அழைப்பாங்க. நாகரிகம் தெரியாது'' என்ருன், ஏதோ பெரிய தத்துவத்தை உணர்த்துவது போல.

''இந்திரா காலனி எனக்கும் தெரியும்'' என்ருள் நளினி.

''அம்மா, தாயே! ராத்திரியாகிவிட்டது. இன்னம் சண்டை போட்டுண்டு நிக்காதீங்க. மாமா காத்திருப்பார். ரத்தினம் வேறு தன் வீடு போக வேண்டும்'' என்று குறுக்கிட்டான் சுந்தரம்.

கிளம்ப மனசில்லை போல் நளினி, அந்த வீட்டைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். அந்த இருட்டில் எதைத் தேடிஞளோ? தனபாக்கியந்தான் அவளைப் பார்த்து, ''நளினி, தலை ஜடையை அவிழ்த்து, தலை நகைகளைக் கழட்டட்டுமா?'' என்று கேட்டாள்.

''வேண்டாம், அம்மா, அவள் போகட்டும். அவங்க அம்மா அவுப்பாங்க'' என்ருன் மாணிக்கம், தீர்மானமாக.

நளினியின் முகம் வாடி விட்டது. ஆயின், அலமேலுவின் முன் ஒன்றும் பேசாமல் நின்ருள். அலமேலு நளினியின் ஜடையை மட்டும் கழற்றி எடுத்தாள். நளினி கிளம்பி விட்டாள். சுந்தரம் தனபாக்கியத்திடம் கை குவித்து விடை பெற்ருன்.

''நீங்களும் நம்ம வீட்டுக்கு வரணும். முத்துவோடு ஒரு நாள் இந்தக் குடிசையிலும் தங்குங்க'' என்று அந்த அம்மாள் உபசரித்தாள்.

''ஆகட்டுங்க. அடுத்த முறை வரேன்.''

மாலை தரையில் விழுந்து கிடக்க, நளினி மவுனமாகக் காரில் ஏறிச் சென்ருள். அவள் யாரிடமும் விடை பெறக்கூட இல்லை.

கார் சென்ற பிறகு, மாணிக்கம் தன் அறைக்குப் போய் வளையல் கொத்து முதலியவற்றை எடுத்து வைத்து விட்டுப் பின்புறம் சென்று முகத்தை அலம்பிக் கொண்டு வந்தான்.

வழியில் கூடத்தில் அலமேலு தன் படுக்கையில் படுத்துக் கொண்டு, அருகே இருந்த தாயாரிடம் விருந்தைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தாள். ''பூலோகமா, இந்திர லோகமா என்று புரியவில்லை அம்மா'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

''போதும், போதும், இந்திரா காலனியை நீ மறந்திடாதே. நம்ப ஆணிவேர் இங்கே தான் இருக்குது'' என்ருன் மாணிக்கம், சிடுசிடுவென்று.

''சொல்லட்டுமே, முத்து, நான் எங்கே அதெல்லாம் பார்க்கப் போகிறேன்? உனக்கோ கல்லூரியிலே இதெல்லாம் சாதாரணமாக இருக்கும்; எங்களுக்குப் புதுமைதானே?''

''அம்மா, அண்ணவை அங்கே நீ அடையாளம் கண்டுக்க முடியாது, அவங்க சவாலுக்குப் பதில் சவால் கொடுத்துக்கிட்டு....'' என்ருள் அலமேலு, சிரித்துக் கொண்டே.

"படு. அப்பா தூங்கறுங்க. ராத்திரி எவ்வளவு நேரமாச்சு தெரியுமா?" என்று கண்டித்தான் மாணிக்கம்.

"அம்மா, நளினி என்ன சொல்லிச்சுத் தெரியுமா, அண்ணனைப் பத்தி?" என்று நிறுத்தினுள் அலமேலு.

மாணிக்கம் தடை மந்திரம் போட்ட மாதிரி நின்றான், கேட்பதற்காக.

"எது சொன்னலும் நல்லாத்தான் சொல்லும்" என்று பாராட்டினுள் தனபாக்கியம்.

"மாணிக்கம் நாமம் நல்லாப் போடருரு, பழகிறவங்க ஜாக்கிரதையா இருக்கணம்னுச்சு.. நான் சொன்னேன்."

"நீ என்ன உளறினே?" என்று இடைமறித்தான் மாணிக்கம்.

"அண்ணன் தனக்குத் தானே தான் நாமம் போட்டுக்குவாரு, மத்தவங்களுக்குப் போடமாட்டாரு, போடத் தெரியாது அப்படீன்னேன்."

தனபாக்கியம் சிரித்தாள். "நீயுந்தான் அவங்களைப் போலப் பேசக் கத்துக்கிட்டே" என்று மகளைப் பாராட்டினுள்.

மாணிக்கம் அதன் பிறகு சென்று, தன் படுக்கையில் படுத்துக் கொண்டான். 'அலமேலுவின் ஒவ்வொரு பேச்சும் பல பொருள் பொருந்தியதாக இருக்கிறதோ? அலமேலுவின் இன்றைய அலங்காரம் கண்ணைக் கவரும் வகையில் தான் இருந்தது. மதனகோபாலன் பார்த்திருந்தால் கட்டாயம் விரும்பியிருப்பான். முழங்கால் வரை மஞ்சள் பூச்சும், முரட்டுச் சேலையும், சீட்டி ரவிக்கையுந்தானே அவனை விரட்டிவிட்டன? ஆனல், அதுவும் ஒரு நன்மைக்கே. மதனகோபாலனை மணந்து அலமேலு சுகம் காண முடியுமா? அலமேலுவைவிடச் சாமர்த்தியசாலியான பெண் அவனுக்குக் கிடைத்து விடுவாளோ? எவ்வளவு அழகாகச் சொல்லி விட்டாள்! 'என் அண்ணனுக்குத் தனக்குத் தானே நாமம் போட்டுக் கொள்ளத் தெரியும்; பிறருக்குப் போடமாட்டான்' என்ருளாமே!

'நான் என் வாழ்க்கைக்கு நாமம் போட்டுக் கொள்கிறேனு? நளினியிடம் தொடர்பு கொள்ளக் கூடாது என்று விலகுவதானல், என் ஆராய்ச்சி வாழ்க்கைக்கே முழுக்குப் போடுகிறேனு? அல்லது நளினியின் மீதுள்ள அன்பை நீக்குவதனல், எனக்குத் தூய அன்பு வாழ்க்கையே இல்லாமல் நாமமா?'

மாணிக்கம் சிந்தனைகளைப் புரட்டியவாறே உறங்கிவிட்டான். காலையில் விழித்துக் கொண்டதும் சுந்தரம் அன்று ஊருக்குக் கிளம்புவானே என்று அவனுக்கு நினைவு வந்தது. உடனே அவன், உடையை மாற்றிக் கொண்டு ரெயிலடிக்குச் சென்ருன்.

நளினிதான் காரைச் செலுத்தி வந்திருந்தாள். ஆலைக்கால் நிஜாரும் கட்டம் போட்ட சட்டையும் அணிந்து, தலை மயிரைக் குதிரை வாலாகக் கட்டியிருந்தாள். மாணிக்கம் அவளை ஒரு நோட்டம் விட்டு விட்டு, சுந்தரத்தைப் பார்த்துப் பேசினுன்.

ரெயில் கிளம்பலாயிற்று. சுந்தரம் மாணிக்கத்தைப் பார்த்து, "நான் சொன்னதை மறக்காதே. நம் வாழ்க்கையை நாமேதான் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். அதில் திட்டம் வேணும். நாம் செய்யும் திட்டம் வெற்றியாக அமையாவிட்டால் பரவாயில்லை. மீண்டும் முயலலாம்" என்ருன்.

நளினி ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

"அப்படியே, ஸார்" என்ருன் மாணிக்கம்.

ரெயில் போன பிறகு, இருவரும் காரை அணுகினுர்கள். நளினியின் அருகில் முன் பக்கத்தில் அமர்ந்தான் மாணிக்கம். நளினி காரைச் செலுத்தினுள். இந்திரா காலனி போகும் பஸ் நிற்கும் இடத்துக்கு வந்ததும், அவள் காரை நிறுத்தி, "இறங்கிக் கொள்கிறீங்களா?" என்ருள்.

"ஏன்? காரில் என்னை அழைத்துப் போக மாட்டாயா?"

"எங்க வீட்டுக்கு வருவதானு வாருங்க வீட்டுக்குப் போவதானு இங்கே இறங்கிப் பஸ்ஸில் போங்க."

"ஏன்? என் வீட்டில் என்னைக் காரில் கொண்டு விடக்கூடாதா?"

"இந்த உடையில் அங்கே வரமாட்டேன்."

"ஏனும்?"

"அந்தச் சூழ்நிலையில் இது பொருந்தாது."

"எப்படியும் அது உன் சூழல் அல்லவா? பொருத்தத்தைப் பத்தி என்ன கவலை?" என்று கேட்டான் மாணிக்கம்.

"இருக்கட்டுங்க. நான் இந்த உடையோடு உங்க அப்பா, அம்மா முன்னடி வரமாட்டேன்."

"ஏனும்?"

"ஏனே? நீங்க மட்டும் எங்க அம்மாவுக்குப் பிடிக்காத ஒன்னைச் செய்து கொண்டு, எங்க வீட்டுக்கு வருவீங்களோ?"

"மாட்டேன். ஆனல், அது விஷயமே வேறு."

"எல்லாம் ஒண்ணுதான்" என்று கூறிக் கொண்டே, காத்து நின்ருள் நளினி.

மாணிக்கம் இறங்கி விட்டான். ''ரொம்ப தாங்க்ஸ்'' என்றான்.

''பரவாயில்லை'' என்று கூறிவிட்டு, நளினி காரை ஓட்டிக் கொண்டு போய்விட்டாள்.

மாணிக்கம் கொஞ்ச நேரம் பொருமிக் கொண்டே நின்றான். 'தாட்சண் யமே இல்லை. பார்த்தாயா? இவள் எந்த உடை உடுக்கிறாளோ, அது அவளுக்குச் சகஜம். என் வீட்டுக் கென்று இவள் மாறவேண்டிய நியதி என்ன கிடக்கிறது?' என்று முணுமுணுத் துக்கொண்டே நின்றான்.

பஸ் வந்து விட்டது. ஏறி அவன் தன் வீடு சென்றான். நளினி தன்னைச் சரியாக நடத்தவில்லை போல ஓர் எண்ணம் அவன் மனத்தில் குறு குறுத்த வண்ணம் இருந்தது. அவள் இடத்தில் தான் இருந்திருந்தால்? 'திடீரென்று எப்படி இறக்குவது? எப் படிப் போகச் சொல்வது?' என்று யோசித்திருப்பானே!

''நான் மட்டும் எதற்கு அவளிடம் தயை, தாட்சண்யம் என்று தவிக்க வேண்டும்? ஆசிரியர் மகள், அவ்வளவு தானே? பத்மினியும் புக்ககம் போய் விட்டால், தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டிய நிலையே எழாது. இந்தச் சுந்தரம் ஒருத்தன்! அடிக்கடி கூப்பிட்டுக் கூடக் கூடப் பழகியதனால், நளினி மிகவும் சுவா தீனமாகப் பேசத் தொடங்கிவிட் டாள். வளர விடக்கூடாது'' என்று மாணிக்கம் தனக்குள் அறிவுரை கூறிக் கொண்டான்.

அவன் வீட்டுக்குப் போனதும், அலமேலு அவனுக்குக் குளிக்கத் தண்ணீர் இரைத்து வைத்தும் வண் ணான் உடுப்பு எடுத்து வைத்தும் தயாராக இருந்ததைக் கவனித்தான். ''நீ எதுக்கு இதெல்லாம் செய்ய வேணும், தங்கச்சி'' என்று கேட்டான்.

''செஞ்சால் என்ன, அண்ணே? நீ உடனே வேலைக்குப் போகணுமே? காலையிலே குளிக்காமக் கிளம்பிட்டே, பார்த்தேன். சரி, வந்து விடுவேன்னு தான் நினைச்சேன். அம்மா இன்னிக்கு இடியாப்பம் செய்திருக்காங்க. கட்டித் தரட்டுமா?''

''தா, தா'' என்றான் மாணிக்கம் அவசரமாக. ஆசிரியர் வீட்டில் சாப் பிடாமல் இருக்கலாமே என்று அவ னுக்குத் தோன்றியது

அவன் வேலைக்குக் கிளம்பிவிட்டான். போகும் முன், அம்மன் கல்லை வலம் வந்து விட்டுச் செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பினான்.

நேரே தன் அலுவலகத்தில் நுழைந்து, காகிதங்களை ஒழுங்கு படுத்த முயன்றான் மாணிக்கம். ''ஸார்!'' என்று ஓர் இளைஞன் அழைப்பதைக் கேட்டு அவன் திரும்பி நோக்கினான்.

''நான் இப்போ இங்கே ஆராய்ச்சி யில் சேர்ந்திருக்கிறேன்'' என்றான் வந்தவன்.

''என்ன வேணும்?''

''ஒலிப் பதன அறையைப் பயன் படுத்த வேணும். நீங்கள் காட்டித் தருவீங்கன்னு ஆசிரியர் சொன்னார்.''

''மிஸ் நளினி இல்லையா?''

''இருக்காங்க. ஆனால் உங்க கை யாலே தொடங்கணம்னு எங்களுக்கு ஆசை. முன்னே உங்க லெக்ச்சரைக் கேட்டவங்க நாங்க.''

மாணிக்கம் பதில் சொல்லாமல், மேஜைமீது காகிதங்களைப் பறக்க விடாமல் வைத்து விட்டு, மாணவனைப் பின் தொடர்ந்தான்.

ஒலி வெளியே கேட்காமலிருக்க, சுவர்கள் பஞ்சட்டைகளால் பதனப் படுத்தி வைத்திருந்தன. நடுவில் மேஜை மீது நான்கைந்து தொட்டிகளில் நெற் பயிர் வைத்திருந்தார்கள். அடுத்த அறையில் டேப் ரிக்கார்டரை இயக் கிக் கொள்ளவும், மேற்பார்வை செய்ய வும் செளகரியமாக இருந்தது.

மாணிக்கம் காருக்குறிச்சி அருணா சலத்தின் நாகசுர இசையை முடுக்கி விட்டான். ஒலி பெருக்கிகள் சரியாக வேலை செய்கின்றனவா என்று பார்த்து விட்டு, எவ்வாறு செய்ய வேண்டுமென்று புது மாணவர்களுக்கு வழி காட்டினான். அரை மணி நேரம் அப்படியே இருந்து இசையைப் பாய்ச்சி விட்டு, அவன் எழுந்து வந்தான். அத்தனை நேரமும் நளினி ஒரு மூலை யில் நின்றிருந்தாள். மாணவர்களைக் குறிப்பெழுதச் சொல்லி அவள் முனைந் தாள். மாணிக்கம் தன் மேஜைக்கு மீண்டான்.

ஆசிரியர் சொன்னதுபோல அங்கே நிறைய வேலை இருந்தது. காகிதங் களை வகைப்படுத்த அதனதன் மீது பளு வைத்துக்கொண் டிருந்தான், மாணிக்கம். பதில் எழுதவேண்டிய கடிதங்களை அடுக்கி, குண்டூசி குத்து வதற்கு ஊசிகுத்தியைத் தேடினான்.

நளினி அதை அவன் எதிரே வைத்தாள். மாணிக்கம் நிமிராமலேயே, ''நன்றி'' என்றான். ஓர் ஊசியை எடுத்துக் கடிதத்தில் குத்தினான்.

''முத்து!'' என்று அழைத்தாள் நளினி, மிகமிக மெலிந்த குரலில்.

அடிபட்டவன் போல் தலையைச் சிலிர்த்துக் கொண்டான் மாணிக்கம்.

''காலையிலே வழியிலே இறக்கி விட்டேனே? நீங்க தவறாக...''

''காலையிலேயே விவரம் சொல்லியாச்சே?'' என்றான் மாணிக்கம், முதுகைத் திருப்பிக் கொண்டு.

நளினி சற்று நேரம் நின்றாள். பிறகு, ''அப்பாவைப் பார்த்தீங்களா?'' என்று விசாரித்தாள்.

''இன்னும் இல்லை. ஓரளவு ஒழுங்கு படுத்திட்டுப் போகலாம் என்று இருக்கிறேன். ரொம்பவும் கலைஞ்சு கெடக்கிறது.''

''அப்பா, பலகாரம் சாப்பிட வருவீங்கன்னு காத்திருந்தார்.''

''அப்படியா? நான் பகல் உணவு கூடக் கையில் கொண்டு வந்துட்டேனே?''

''எதற்கும் உள்ளே போய் ஒருதரம் அப்பாவைப் பார்த்துட்டு வரலாமே?''

மாணிக்கம் எழுந்து, அவளுக்கு முன்னடியே வேகமாக நடந்து, வீட்டுக்குள் புகுந்தான்.

''வா, தம்பி, இப்பத்தான் ஸார் உடுப்பு மாத்திக் கொள்ள மாடிக்குப் போனார்'' என்றாள் நளினியின் தாயார்.

''உட்காருங்களேன்'' என்றாள் நளினி.

''இருக்கட்டும்'' என்று கூறி, மாணிக்கம் நின்று கொண்டே இருந்தான்.

நளினியும் எதிரே நின்றாள்.

''மாணவர்களைக் கவனிக்கப் போகலாமே?'' என்றான மாணிக்கம்.

நளினி ஒரு விநாடி தயங்கினாள். பிறகு, ஆத்திரத்துடன் வேகமாக நடந்து ஆராய்ச்சிக் கூடத்தின் பக்கம் விரைந்தாள். அவள் வேகமாகத் தள்ளி விட்டுப் போன அரைக் கதவு ஆடியது சற்று நேரம்.

''ஓ, மாணிக்கம், வந்துட்டியா? காபி சாப்பிட்டயா? டிபனுக்கு வருவேன்னு காத்திருந்தேன். அப்புறம் கல்லூரிக்கு நாழியாறதேன்னு நான் மட்டும் சாப்பிட்டேன்'' என்று உபசரித்தார் ஆசிரியர், மாடிப்படியிலிருந்து இறங்கிக் கொண்டே.

மாணிக்கத்துக்கே அவர் பேச்சும் உபசரிப்பும் அதிசயமாக இருந்தன. ''நான் மதிய உணவு கூடக் கொண்டு வந்துட்டேன். மாலை அஞ்சு மணிக்குப் போனால் போதும். கடுதாசு சொன்னீர்களானால்..''

''மதிய உணவு கொண்டு வந்தாயா? ஏன்? இனிமேல் இங்கேயே சாப்பிடு, என்ன?''

மாணிக்கம் தன் சங்கடத்தை மறைக்க அரும்பாடு பட்டான்.

ஆசிரியர் அவனுடன் அலுவலகத்துக்கு வந்து வேலைகளைச் சொல்லி விட்டுப் போனார்.

''நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான் மாணிக்கம். அவர் சென்ற பிறகு, தட்டெழுத்து இயந்திரத்தின் முன் அமர்ந்து மும்முரமாக வேலை செய்தான்.

பகல் உணவுக்காக எல்லாரும் கிளம்பினார்கள். அலுவலக அறை வழியாக அவரவர்களும் போவது தெரிந்தது. மாணிக்கம் ஒரு முறை, இரு முறை நிமிர்ந்து பார்த்து விட்டுத் தன் வேலையிலேயே மிகவும் கவனமாக இருந்தான்.

அருகில் நளினி நிற்பது தெரிந்து அவன் திரும்பிப் பார்த்தான். ஒரு கையில் ஒரு மண் கூஜாவில் குடிநீரும், அடுத்த கையில் தட்டில் சிறிது காய்கறியுமாக அவள் நின்றாள்.

''எதுக்கு இதெல்லாம்?'' என்று கேட்டான் மாணிக்கம்.

''குடி நீர் வேணுமே! அம்மா தான் கேட்கவில்லை. தருகிறாங்க. உங்களை உள்ளே வந்து சாப்பிடச் சொல்றாங்க.''

''வேண்டாம். நான் இங்கேயே சாப்பிடேறன்'' என்று மாணிக்கம் வேலையைத் தொடர்ந்தான்.

நளினி அவன் முகத்தைப் பார்த்து விட்டுப் பிறகு அவன் கைப்பையில் சுவாதீனமாகக் கைவிட்டு, உணவுப் பொட்டலத்தை எடுத்துப் பிரித்தாள். ''ஹை! உங்கம்மா செய்த இடியாப்பமா? எனக்கு மிகவும் பிடிக்கும், மாணிக்கம். நீங்க உள்ளே வாங்க. எங்க வீட்டுச் சாப்பாட்டைச் சாப்பிடுங்க. நான் இதைச் சாப்பிடறேன்'' என்றாள், குழந்தை போல ஆவலுடன்.

''எங்க அம்மா எனக்காகச் செஞ்சது அது'' என்றான் மாணிக்கம்.

''இருக்கட்டுமே? எங்க அம்மா எனக்காக ஆசையாக வெஜிடபிள் சோமாசி செஞ்சிருக்காங்க. ரெண்டையும் வச்சிண்டு சாப்பிடுவோம். இடியாப்பத்துக்குத் தொட்டுக்கத் தேங்காய்ப் பால் தயார் பண்றேன்'' என்று அவள் பேச்சை முடிப்பதற்குள் இடியாப்பப் பொட்டலத்தையும், தான் கொண்டு வந்த தட்டையும் தூக்கிக் கொண்டு ஓடி விட்டாள்.

மாணிக்கம் வேறு வழியின்றி அவளைப் பின் தொடர்ந்து சென்றான். சாப்பாட்டு அறை மேஜைமேல் இரண்டு இலைகள் போட்டு, அதில் காய், கறி, கூட்டு, சோமாசி எல்லாம் வைத்தாகிவிட்டது.

''வா. தம்பி, உட்கார். நளினி தேங்காய்ப் பால் கொண்டு தருவா.

சேர்ந்து சாப்பிடுங்க'' என்றாள் நளினியின் தாயார்.

''ஆசிரியர்?'' என்று கேட்டான் மாணிக்கம்.

''அவங்களுக்குக் காரியர் அனுப்பி விட்டேன். நீங்க ரெண்டு பேருந் தான்.''

மாணிக்கம் சாப்பிட அமர்ந்தான். அதற்குள் நளினி பீங்கான் கிண்ணியில் தேங்காய்ப் பாலுடன் ஓடி வந்தாள். இடியாப்பத்தைத் தன் இலையிலும் மாணிக்கத்தின் இலையிலும் பங்கிட்டு விட்டு, மிகுந்ததைத் தன் தாயாரிடம் கொடுத்தாள்.

அந்த அம்மாள் அவர்களுக்குப் பரிந்து பரிந்து போட, இருவரும் சாப்பிட்டார்கள்.

மாணிக்கம் கை கழுவியவுடனே அலுவலறைக்குக் கிளம்பினான்.

''கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளலாமே? சோபாவில் வேணு மானால்..''

''வேண்டாம். நளினி, நான் போறேன். நிறைய வேலை இருக்குது.''

நளினி உதட்டைப் பிதுக்கி விட்டு, மாடிக்குப் போய் விட்டாள்.

மாணிக்கம் அலுவலக அறைக்குள் சென்று கதவைச் சாத்திவிட்டு, ஒரு நாற்காலியில் அமர்ந்து, வேறு ஒரு நாற்காலியில் காலை நீட்டி, ஐந்து நிமிஷம் ஓய்வெடுத்தான். ஆனால், அவன் மனமோ உடலோ நிம்மதி பெறவில்லை.

உடனே அவன் வேலை செய்ய ஆரம்பித்தான். வெளியே சென்ற மாணவர்கள் மீண்டும் உள்ளே போய்த் தங்கள் ஆராய்ச்சி வேலையைத் தொடங்கினார்கள்.

மாணிக்கம் காகிதங்களைச் சரி பார்த்து, ஆசிரியர் கையெழுத்துக்கு வரிசைப்படுத்தி வைத்துவிட்டு, மற்றவற்றைக் கவனிக்கலானான்.

மணி ஐந்தடித்ததும் அவன் எழுந்து உள்ளே போய்ச் சொல்லி விட்டுக் கிளம்பி விட்டான்.

அவன் அவர்கள் தெருவில் நுழையும்போது, மனவாளச் செட்டி வீட்டு வாசலில் கூட்டம் கூடியிருந்தது. டாக்டர் அவசரமாக உள்ளே நுழைவது தெரிந்தது. மாணிக்கம் விரைந்தான். (தொடரும்)

முத்துச்சிப்பி

— அநுத்தமா

19. உயிரும் உயிலும்

மீனாட்சி அவசர அவசரமாக மாணிக்கத்தின் வீட்டுக் கூடத்துக்குள் வந்தாள். அலமேலு இலை தைத்துக் கொண்டே, கபீர்தாஸ் பஜன் ஒன்றைப் பாடிக்கொண்டிருந்தாள். மீனாட்சி வருவதையே அவள் கவனிக்கவில்லை.

''அலமேலு!'' என்று மீனாட்சி அழைத்ததும், திடுக்கிட்டாற்போல் திரும்பினாள் அலமேலு. ''என்ன அக்கா, உங்களுக்கு உடம்பு ஏதேனும் சரியாக இல்லையோ? அம்மா எங்க தாய் மாமன் வீட்டுக்குப் போயிருக்காங்க. கூப்பிட்டு வரட்டுமா?'' என்று கேட்டாள். மீனாட்சியின் முகம் வெளிறி, பலவீனமாகக் காணப்பட்டதே அலமேலுவை அவ்வாறு கேட்கத் தூண்டியது.

''எனக்கு ஒன்றும் இல்லை, அலமேலு. மணவாளச் செட்டியாருக்கு ஜுரம் அதிகமாகிவிட்டது. அவர்கள் வீட்டில் நிறைய மனிதர்கள் கூடிவிட்டார்கள். ஆனால், உற்றவர்களாக, இதமாக அவர்களுக்குப் பணிவிடை செய்து, வீட்டைப் பாதுகாக்கக்கூடியவர் ஒருவர்கூட இல்லை.''

அலமேலு ஒன்றும் பதில் சொல்லவில்லை; அவள் மீனாட்சியின் முகத்தை உற்று நோக்கினாள்.

''பங்காரும்மாதான் என்னை அனுப்பினாங்க'' என்றாள் மீனாட்சி; ''உங்க அம்மாவைச் சற்றுத் தன் கிட்டே வரச் சொன்னாங்க.''

''அது எப்படி அக்கா முடியும்? அவங்க வீட்டுக்குப் போவதை விட்டு எத்தனை நாளாகிறது? அப்படி நாங்கள் போனாலும் ஊர் சிரிக்குமே! எங்க அண்ணன் போனபோதுகூட, அந்த மருமக கேவலமாகப் பேசினாளாமே?'' என்றாள் அலமேலு, படபடப்பாக.

''பழையதை மறந்துவிடும்படி சொல்லச் சொன்னாங்க.''

''ஆமாம், அவங்ககிட்டே நிறையப் பணம் இருக்குதல்ல? எதையும் எளிசா மறந்திடுவாங்க. மத்தவங்களை மறக்கச் சொல்வதும் சுளுவா இருக்குது'' என்று அலுப்பாகப் பேசினாள் அலமேலு.

''அலமேலு, நீயா இப்படிப் பேசறே?''

''பின்னே என்ன, அக்கா? நான்தானே அப்படிப் பேசக்கூடியவள்?''

''நீ என்னுடன் இத்தனை நாள் பழகியும், இதையெல்லாம் பாராட்டலாமா? அவர்கள்தாம் தவறு செய்து விட்டார்கள். நீங்கள் மன்னித்து உதவி புரியக்கூடாதா?''

அலமேலு மௌனம் சாதித்தாள்.

''நான் அங்கேயே இருந்து, என்னால் முடிந்ததைச் செய்வேன். ஆனால், டாக்டர்தான் கூடாது என்கிறார்'' என்று மீண்டும் கூறினாள் மீனாட்சி.

அலமேலு மீனாட்சியை நோக்கினாள். நிறை மாதக் கர்ப்பிணி நடப்பதற்குக் கூடச் சிரமப்பட்டாள். இப்போது வேர்வைத் துளிகள் அவள் நெற்றி நிறையப் பளபளத்தன.

அலமேலு சிரித்து விட்டாள். ''ஆமாம், ஆமாம்! நீங்களே இருங்கள் அங்கே. மாமா ஒரு பக்கம் ஜுர வேகத்தில் பிதற்றட்டும். அத்தை மயங்கி மயங்கி விழட்டும். நீங்களும் ஒரு குழந்தையை அந்த இடத்திலேயே பெற்றுவிடுங்கள். டாக்டரும் சௌகரியமாக மூன்று பேரையும் ஒரே இடத்தில் பார்த்துக் கொள்வார்'' என்றாள்.

''நீதானே அந்த நிலைக்குக் கொண்டு விடுகிறே?''

''நான் என்ன, அக்கா, செய்யட்டும்? இந்திரா காலனி உங்களுக்குத் தெரியாததா? மறுக்கப்பட்ட வீட்டிலே ஒரு பெண் நுழைய முடியுமா?''

''சரி, உன் அம்மா வந்தால் எங்கிட்டே வந்து சொல்லு. ஒருதரம் வந்து சொல்லிப் பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டு மீனாட்சி திரும்பிச் சென்றாள்.

'மீனாக்கா நம் காலனிக்குச் சம்பந்தமே இல்லாத ஆள்தானே? ஆனால், பிறர் நலமே வாழ்க்கையின் பொருளாக எப்படி வாழ்கிறார்கள்?' என்று வியந்தவாறே, அலமேலு மீனாட்சியைத் தெருவரை வழியனுப்பிவிட்டுத் திண்ணையில் சற்றுத் தங்கினாள்.

மணவாளச் செட்டி வீட்டின்முன் சில ஆடவர்கள் கூடிப் பேசுவது தெரிந்தது.

அவள் வயிற்றைப் பிசைந்தது. தெருப் பெண்களும் சர்வ சகஜமாகப் பங்காருவின் வீட்டுக்குள் புகுவதும் வெளி வருவதுமாக இருந்தனர்.

''இன்னிக்குத் தள்ளுமா?''

''அறிகுறி யெல்லாம் நல்லாவே இல்லையே!''

''டாக்டர் கைராசிக்காரர். பார்ப்போம்.''

''தலைவிதிக்கு டாக்டர் என்ன செய்வாரு? பங்காரு யாருக்குக் கொடுப்பாளோ நகைகளை?''

இப்படி யெல்லாம் போவோர் வருவோர் பேசுவது அலமேலுவின் செவியில் விழுந்தது. சின்ன வயது முதல் 'பெரியப்பா, பெரியம்மா' என்று அழைத்துக் கொண்டு, அவர்கள் வீட்டில் நுழைந்து புறப்பட்ட குழந்தை அவள். சாக்லேட்டும் பட்சணமும் கேட்டு வாங்கிச் சாப்பிட்டவள். இன்று ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கும்படி இருந்தது, அவள் மனத்தை மிகவும் அரித்தது.

தனபாக்கியம் வெளியிலிருந்து வந்தாள். ''என்னடீ, இந்தத் தெருக்காரங்க மாதிரி நீயும் திண்ணையில் நின்னு வேடிக்கை பார்க்கிறுய்? உள்ளே போ'' என்ருள்.

''மீனுக்கா வந்திட்டுப் போனுங்க. அதுதான் பாத்துக்கிட்டு நின்றேன்.''

''அதுக்கு அவங்களே வருவாங்களா? பங்காரு அத்தைக்கு உடம்பு நல்லா இல்லையாம். மாமாவுக்கு ஜுரம் ரொம்ப அதிகமாயிடுச்சாம். அத்தை சொல்லி அனுப்பினுங்களாம். நாம் ரெண்டு பேரும் போய் அங்கே ஒத்தாசை செய்யணுமாம்'' என்ருள் அலுமேலு.

தனபாக்கியம் திண்ணையில் சற்று அமர்ந்தாள். மறுபடியும் ஒரு முறை சொல்லும்படி பெண்ணைக் கேட்டுக் கொண்டாள். அலமேலு சொன்ன பிறகு சட்டென்று எழுந்து விட்டாள்.

''நீ வீட்டைப் பாத்துக்க. நான் போய்ப் பார்த்திட்டு வரேன். ஐயோ! பங்காரு என்ன தவிக்கிருளோ? அங்கே உண்ணப் படை சேரும்; உதவ ஒன்று கூட இராதே?'' என்று வாய்விட்டு அரற்றிக்கொண்டே தனபாக்கியம், அலமேலுவின் பதிலுக்குக் காத்திராமல் கிளம்பி விட்டாள்.

''அப்பா வந்தால் என்ன சொல்வது, அம்மா?'' என்று பீதியுடன் கேட்டாள் மகள்.

''எதையோ சொல்லுடீ'' என்று கூறி விட்டுத் தாய் தெருவில் இறங்கி, பங்காரு வீட்டை நோக்கி விரைந்தாள்.

அலமேலுவுக்கும் தன் தாயுடன் போகவேண்டுமென்று ஆவல் இருந்தது. ஆயினும் தந்தையின் கோபத்துக்குப் பயந்து அவள் அடங்கி வீட்டுக் குள்ளேயே இருந்தாள்.

'நியாயமா எல்லாம் நினைச்சபடி நடந்திருந்தால், நான்தானே அங்கே இருந்து அத்தைக்குப் பணிவிடை செய்ய வேண்டியவள்? என்னை விட்டு விட்டு எல்லோரும் போவாங்க போல' என்று தனக்குள் முணுமுணுத்தாள் அலமேலு.

அவர்கள் வீடு இப்போது கொஞ்ச நாட்களாக அமைதியாக இருந்தது. மாணிக்கம் இப்போது சர்வகலாசாலை நூல் நிலையத்திலும் இரண்டு மணி நேரம் வேலை புரிந்தான். காலையில் எழுந்தால் வேலைக்குப் போவது, மாலை வீட்டுக்கு வருவது என்ற ஒரு நியதியில் மாணிக்கத்தின் வாழ்க்கை நடந்தது. அவன் மாதம் பிறந்து சம்பளம் வாங்கித் தாயாரிடம் கொடுத்தான். இப்போது, அவன் குணமே மாறிவிட்டமாதிரி இருந்தது. பேசும்போது தயங்கித் தயங்கித் தவிக்கவில்லை. மனிதர்களைக் கண்டதும் வெட்கித் தலைகுனிந்து திண்டாடுவதில்லை. சண்முகமும் அண்ணனிடம் மரியாதையாக நடந்தான். தாயின் முகத்தில் திருப்தி நிலவியது.

இந்தச் சமயத்தில் மணவாளச் செட்டி வீட்டு நிலை இப்படி வருவானேன்?

அலமேலு முன்பு வைத்துவிட்டுப் போன இலைக்கட்டைச் சீர்செய்து, எண்ணிக் கட்டி வைப்பதில் முனைந்தாள்.

''பொண்ணு, உங்க அம்மா எங்கே?'' என்று கேட்டுக்கொண்டே கந்தசாமி செட்டி வந்தார்.

அலமேலுவுக்கு உடம்பு பதறியது. தன் தகப்பனுரை நேராகப் பார்க்கவில்லை.

''இத பாரு, பொண்ணு, நான் மணவாளன் வீடுவரை போய் வரேன். கடைக்கு ஆள் அனுப்பினுங்க. அம்மா வந்தா அங்கே வரச் சொல்லு'' என்று கூறிவிட்டு அவர் கிளம்பினுர்.

அலமேலு தன் காதுகளையே நம்பாதவள் போலத் தந்தையைப் பார்த்தாள். அவர் போய்விட்டார். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. தன் தாயின் சுபாவம் தனி. நேற்று ஒருவன் அவளைக் கொலை செய்ய வந்தாலும், இன்று அவனுக்கு ஆபத்து என்ருல், உதவ ஓடிச்செல்வாள். முந்தைய நாளின் நினைவே அவள் மனத்தில் இருக்காது. தன் தந்தை அப்படிப்பட்டவர் அல்ல. பத்துப் பைசா கடனுக்காகச் சாவுக்குக்கூடப் போகாமல் இருந்து விடுவார். இன்று அவர் தாமாக அங்கே செல்வது அலமேலுவுக்கு நம்பிக்கையாக இல்லை.

மாணிக்கம் வேலை முடிந்து வந்ததும் விவரம் அறிந்து, அவனும் கிளம்பினுன். ''நீ ஏன், அண்ணு போறே? அவங்கன்னு ஒரு பேச்சுக் கேட்டுக்குவாங்க. உன் மனசு தாளாது. யாரோ எவளோ என்னவோ

சொன்னுன்னு நீ..'' என்று ஆரம்பித்தாள் அலமேலு.

''கடைத்தெருப் பக்கமா நடந்திடாதேன்னியா? சரி, திரும்பி, இங்கேயே வரேன், போதுமா?'' என்று கேட்டுவிட்டு மாணிக்கம் கைகால் கழுவி, உடை மாற்றிக்கொண்டு கிளம்பிவிட்டான்.

அலமேலுவிற்குத் தனியாக வீட்டில் அடைந்து கிடக்கவும் முடியவில்லை. திண்ணையில் வந்து நிற்கவும் அச்சமாக இருந்தது.

போனவர்கள் யாரும் திரும்பவேயில்லை. அலமேலு சமையல் செய்து மூடி வைத்து, தேய்க்க வேண்டியதைத் தேய்த்து, ஒவ்வொன்ருக முடித்தாள். தன் கைவேலை வகுப்புக்கு வேண்டிய சாமான்களையும் சரிபார்த்து வைத்தாள். அப்படியும் காலம் மெதுவாக ஊர்ந்தது.

மணி எட்டடித்தது. கடையை மூடிக்கொண்டு சண்முகம் வந்து சேர்ந்தான். ''அலமேலு, கேட்டியா சேதி? வக்கீல் வந்திருக்காராம். பெரியப்பா உயில் எழுதுகிருராம். இந்த ஊருக்கே மூக்கிலே வேர்த்திடுச்சு. தேர்த்திருவிழாக் கூட்டம் கூடிட்டாங்க'' என்ருன்.

''எல்லாம் கழுகு, காக்காய்க் கூட்டங்க. வா, அண்ணு, நீயாவது சோறு தின்ன வா'' என்ருள் அலமேலு.

''சோறு கிடக்கட்டும், அலமேலு. இந்தச் சமயத்திலே நம்ப அப்பா கணிசமாக் கறந்திடமாட்டாரு, ஹெங்?'' என்று ரசனையோடு கேள்வி கேட்டான் தமயன். தங்கை பேசாமல் இருப்பதைப் பார்த்துச் சண்முகம் அவளைப் பேச்சிற்கு இழுத்தான். ''நம்ப அப்பாவைக்கூடக் கழுகுக் கூட்டத்திலே சேர்த்திட்டாயா?'' என்று கேட்டுச் சுவைத்துச் சிரித்தான்.

''நம்ப அப்பாவுக்கும் அவுங்க வீட்டுப் பணத்துக்கும் என்ன சம்பந்தம்? என் வாயைக் கிளறி, எதையாவது கேட்டு, நீ தீவைத்துவிடாதே, அண்ணு. உனக்குப் புண்ணியமாப் போவுது.''

''ஏன் சொந்தம் இல்லே? சும்மா விட்டு விடலாமா அவங்களை? ஊருக்கு முன்னே நம்ப தலை தாழ்ந்து போச்சில்ல? மான நஷ்ட ஈடு கேட்டுக் கறக்கவேண்டியது தான்.''

''போதும், அண்ணு. மனிதர் சாகக் கிடக்கிருரு. தெருவுக்கே பெரிய மனிதரை, ஏன் நம்ப சமூகத்துக்கே பிரமுகர் ஒருவரை, இழக்கப் போகிருேம். நம்மோடு பழகின ஒரு ஜீவன் யமனேடு போராடுது. இந்தச் சமயத்திலே ஈவு இரக்கம் இல்லாமல் பேச மனம் வருது உனக்கு! சாப்பிடு, பிறகு பேசுவாயாம்'' என்ருள் அலமேலு, ஆத்திரத்துடன்.

''பெரிய தயாள குணவதியே! வாயைப் பொத்திக்கிட்டுக் கிட. பேச வந்திட்டாப் பாரு, பேச! பணத் திமிர்தானே அவங்களை வாக்கை மறக்கச் சொல்லிச்சு?''

''உன்னுடைய அருமைத் தோழரிடம் சொல்லி, வாக்கை நிறைவேற்றுவது தானே?'' என்று கேட்டாள் அலமேலு, சுடச்சுட.

''அது வேறு விஷயம்.''

''எதுக்குப் பதில் சொல்ல முடியாதோ? அது வேறு விஷயமோ?''

''சும்மா கிட!'' என்று கத்திவிட்டுச் சண்முகம் வெளியே போய்விட்டான்.

அலமேலுவினுல் தனியாக உள்ளே இருக்க முடியவில்லை. அந்த வீட்டுக்குப் போனவர்கள் யாரும் இன்னமும் திரும்பி வரவில்லை. அவள் வாசல்வரை வந்து எட்டிப் பார்த்தாள். கூட்டமாகத்தான் இருந்தது. அண்டை அயலில் உள்ள பெண்களும் குழந்தைகளும் ஜன்னல் வழியாகவும், கதவு இடுக்கு வழியாகவும் வேடிக்கை பார்த்தனர். குழந்தைகள் அந்த வீட்டைத் தாண்டித் தாண்டி ஓடி, அந்தப் பெண்களுக்கு என்னவோ அஞ்சல் செய்தனர். தெருவில் மாட்டியிருந்த மண் எண்ணெய் விளக்கை எடுத்து உள்ளே வைத்துவிட்டு வந்த அலமேலு, பாதி இருட்டில் தெருத் திண்ணையில் அமர்ந்தாள்.

''ஏன், அம்மா, இப்படித் தனியா உட்கார்ந்திருக்கே?'' என்று கேட்டுக் கொண்டு வந்தார் லக்ஷ்மி நரசையா.

''உள்ளே போகப் பயமாக இருக்குது, மாமா. எந்த நிமிஷம் அழுகுரல் வந்து விடுமோன்னு உடல் பதறுது'' என்ருள் அலமேலு.

''அப்படியெல்லாம் பயந்தா முடியுமா, குழந்தை? இதோ பாரு, நம்ப தெருக்காரங்களை; சாமி வந்தால் வெளியே வந்து பார்க்கிறதில்லை. கர்ப்பூரம் காட்ட மாட்டாங்க. இப்ப எவனுவது வீட்டுக்குள்ளே போருனு பார்!''

''கஷ்டமா இருக்குது, மாமா.''

''அதுதான் உலகம். எப்பவும் வேடிக்கை பார்க்கும். மணவாளச் செட்டிக்குக் காய்ச்சல் கொஞ்சம் அதிகம். நாளைக்கே குறைஞ்சு போகும். ஆனுல்..''

''ஆனுல், என்ன, மாமா?''

''அவன் பிழைச்சுக்கிட்டா அவன் குடும்பம் சந்தோஷப்படும். ஆனுல் மத்தவங்க ஏமாந்திடுவாங்களே, வேடிக்கை பார்க்கத் தொடர்ந்து ஒண்ணுமில்லேன்னு?''

''நீங்கள் பேசறதைப் பார்த்தா, பயமாக இருக்குது.''

''நான் முருகனிடம் பூ வச்சுக் கேட்டேன். ஒண்ணும் இராது'' என்ருர் தெலுங்குப் பிராம்மணர்.

அலமேலு அவநம்பிக்கையுடன் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். அவள் விஷயத்தில் மாரியம்மன் எவ்வளவோ

தான் நன்றாக உத்தரவு தந்தாள். நடந்தது வேறு விதமாயிற்றே! ஏதோ அகஸ்மாத்தாக நடப்பதையெல்லாம் வைத்து வாழ்க்கையையே நிர்ணயிக்கப் பார்க்கிறது பாமரத்தனம் அல்லவா? இந்த எண்ணம் வந்தவுடனே அவள் மாரியம்மனைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக்கொண்டாள்.

''அலமேலு, அடுப்பிலே பால் வச்சியா? வாசனை வருது.''

அலமேலு அலறிப் புடைத்துக் கொண்டு ஓடினாள். பாலை இறக்கி விட்டு மீண்டும் வெளியே வந்தாள்.

''நல்ல பொண்ணு நீ! இப்படி ஒரு பயமா?'' என்று கேட்டுச் சிரித்தார் பெரியவர்.

ஆனால் அவளால் நிலைகொள்ள முடிய வில்லை. கடவுளை வேண்டியபடி, பீதியுடன் அவள் மணவாளச் செட்டி வீட்டைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

மணவாளச் செட்டி வீட்டு வாசலி லிருந்து வக்கீல் கார் கிளம்பிப் போய் விட்டது. அதன் பிறகு ஓரளவு கூட்டம் கலைந்தது. மனிதர்களுக்குப் பசி வந்தது போலும்! அவரவர்களும் தம்தம் வீட்டுக் குள் நுழைந்தனர். அலமேலுவுக்கும் சற்று அமைதி உண்டாயிற்று. விவரம் புரியாத நிலையில் கூட்டம் கூடுவதும், தாழ்ந்த குரலில் பேசுவதும் அவளை மிகவும் வாட்டின. இனந்தெரியாத கலவரத் துடன் இருந்தாள் அவள்.

நளினியின் கார் வந்து மீனாட்சியின் வீட்டின் முன் நின்றது. அலமேலுவுக்கு அதிசயமாக இருந்தது. இருட்டிப் போய் இவ்வளவு நேரத்தில் நளினி எங்கே வந்தாளாம்? எழுந்து போகவும் அவளுக் குக் கால் வரவில்லை. அவள் தவித்துக் கொண்டு நின்றாள்.

நளினியே அவளைத் தேடி வந்தாள். ''அலமேலு, நானும் அம்மாவும் இங்கே இருக்கிற 'சித்ரா' டாக்கீஸுக்கு வந்தோம். அம்மா மீனாவைப் பார்க் கணும்னாங்க. வந்தோம். வந்தது நல்லதாப் போச்சு'' என்றாள்.

''ஏன், அக்கா?'' என்று கேட்டாள் அலமேலு. எதுவானாலும் அவளுக்குப் பங்காரு வீட்டில் ஆபத்து என்றுதான் எண்ணம் ஓடியது.

''ஒண்ணும் இல்லை. மீனாட்சிக்குச் சமய மாகிவிட்டது போல. நோவு எடுத்து விட்டதாம். இரவு நேரம். எதுக்கும் ஆஸ்பத்திரியிலே கொண்டுவிடலா மென்று டாக்டர் டாக்ஸிக்காகக் கிளம் பறத்துக்கும் நாங்கள் வரதுக்கும் சரியா இருந்தது. எங்கள் காரிலேயே கூட்டிக்கிட்டுப் போய் ஆஸ்பத்திரியிலே சேர்த்திட்டு நாங்கள் வீட்டுக்குப் போறோம்'' என்றாள் நளினி.

அலமேலு பதில் சொல்லத் தெரியா மல் நின்றாள்.

''உன்னைத்தான் மீனா கூப்பிடறா, வா.''

''நான் எப்படி வீட்டைத் திறந்து போட்டுவிட்டு வரமுடியும்?''

''இரு, வரேன்'' என்று சொல்லிக் கொண்டே, நளினி தைரியமாக மணவா ளச்செட்டி வீட்டுக்குள்ளே நுழைந்து, மாணிக்கத்தை அழைத்து வந்துவிட் டாள்.

''அண்ணா, வீட்டைப் பார்த்துக் கிறயா? நான் மீனாக்கா வீட்டுக்குப் போய் வரேன்'' என்று கேட்டாள் அலமேலு.

''சரி'' என்று கூறிவிட்டு, மாணிக்கம் தெருத் திண்ணையிலேயே அமர்ந்து விட் டான்.

நளினியும் அலமேலுவும் டாக்டர் வீட் டுக்குப் போனபோது, மீனாட்சியும் நளினி யின் தாயும் கிளம்புவதற்கு ஆயத்த மாக இருந்தனர்.

''மணவாளச் செட்டியாருக்கு ஜுரமாமே?'' என்று கேட்டாள் நளினி.

''ஆமாம், ரொம்ப மோசமாகத்தான் இருக்கிறது. ஆனால், அவர்களிடம் நான் ஒன்றும் சொல்லவில்லை. இங்கே மீனாவுக்கு ——'' என்று கவலைப்பட்டார் டாக்டர்.

''அலமேலு, டாக்டருக்கு வீட்டு விவ காரமே தெரியாது. நீ கொஞ்சம் எல் லாம் சரி பார்த்துப் பூட்டிவிடு. நாளைக்கு எல்லா வகுப்புக்கும் லீவு கொடுத்துவிடு; பால் விநியோகம் மட்டும் விடாமல் செய்; நளினியையாவது கூட வைத்துக்கொள்'' என்றாள் மீனாட்சி, அந்த நிலைமையிலும்.

''கவலைப்படாமல் போங்க, அக்கா. நளினியும் நானும் பார்த்துக்கிறோம்'' என்றாள் அலமேலு.

''நளினி...?'' என்று கேள்விக்குறியாக முகத்தை வைத்துக்கொண்டாள் அவள் தாய்.

''இல்லை, அம்மா. இப்ப நளினியக்கா இங்கே இருக்கவேண்டாம். நான் பார்த் துக்குவேன். நாளைக் காலையில் வந்தால் போதும்'' என்றாள் அலமேலு.

அதன் பிறகு அவர்கள் யாவரும் நளினியின் காரில் கிளம்பிப் போய்விட் டார்கள். அலமேலு, தெரியாதபடி மீனாட்சியின் வீட்டை ஒதுக்கி ஒழுங்காக வைத்துவிட்டு, பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்தபோது மாணிக்கம் வந் தான். ''என்ன அலமேலு, எவ்வளவு நேரம் இங்கே இருப்பே நீ?'' என்று அதட்டலாகக் கேட்டான்.

''இந்த ரெண்டு பாத்திரம் தேய்த் தால் போதும், அண்ணா.''

''காலையிலே வேலைக்காரி வந்து தேய்க் கட்டும். நீ கிளம்பு. இந்திரா காலனியில் தான் இருக்கிறோம் என்பதே மறந்து விட்டதோ?''

"டாக்டர்தான் இங்கே இல்லையே? நான் இருந்தால் யார் என்ன சொல்லுவார்கள்?" என்று கேட்டாள் அலமேலு.

"இந்தத் தெருப் பெண்கள் யோசித்துப் பார்த்துத்தான் பேசுகிறார்களாக்கும்! அங்கே பங்காரு பெரியம்மா வீட்டிலே அவங்க பேசிக்கிறதைக் கேட்டா.."

"ஆமாம், அண்ணா. நீ இரு. இதோ நான் வந்து விடுகிறேன்" என்று கூறி, அவள் சீக்கிரம் வேலையை முடித்துக் கொண்டு தன் அண்ணனுடன் கிளம்பினாள்.

அவர்கள் திரும்பிய சிறிது நேரத்துக்கெல்லாம் கந்தசாமி செட்டியாரும் சண்முகமும் வரவும், ஆடவர் மூன்று பேருக்கும் உணவளித்தாள் அலமேலு. "அம்மா வரலையே?" என்று தகப்பனைக் கேட்டாள்.

சாப்பிட்டுவிட்டு எழுந்த கந்தசாமி செட்டி, "பொண்ணு, நீ சாப்பிட்டு வேலை பார்த்துட்டுப் படுத்துக்க. உங்க அம்மா இன்னிக்கு ராத்திரி பூரா அங்கே தான் இருப்பா" என்றார். அவரும் மீண்டும் மணவாளச் செட்டி வீட்டுக்கே போய்விட்டார்.

"நான் சினிமாவுக்குப் போறேன். வந்து தெருத்திண்ணையிலேயே படுத்துக்கறேன். தலைகாணியும் போர்வையும் போட்டு வையுங்க" என்று குரல் கொடுத்துவிட்டுச் சண்முகம் வெளியேறிவிட்டான்.

"மாமாவுக்கு எப்படி இருக்குதோ? இங்கே இருப்பே கொள்ளவில்லை" என்றாள் அலமேலு.

"அலமேலு, நான் புரியாமல்தான் கேட்கிறேன்; என்ன 'மாமா' உறவும், 'அத்தை' உறவும் வேண்டிக்கிடக்குது? எப்பவும் போலப் 'பெரியம்மா'ன்னு கூப்பிட்டுவிட்டுப் போறியா?" என்று அதட்டலாகக் கேட்டான் மாணிக்கம்.

"மாரியம்மனை நம்பினா ஒரு நாளும் வீண்போகாதுன்னு நம்ப அம்மா அடிச்சு அடிச்சுச் சொல்லி, சோத்தோடு ஊட்டி விட்டாங்க; அதை நெனைச்சுக்கிட்டுத்தான் நான் அப்படி அழைக்கிறேன்" என்றாள் அலமேலு, சிரித்த முகத்துடன்.

அதைக் காணவே மாணிக்கத்துக்குச் சங்கடமாக இருந்தது. எப்படியும் ஆரம்பித்தாயிற்று, விஷயத்தை உடைத்துப் பேசி, அவள் மனசை அறிந்து விடுவது என்று எண்ணினான் அண்ணன். "இல்லேன்னு ஆயிடுச்சின்னா விட்டுட வேண்டியதுதான். கோபாலுவை விட்டால் உனக்கு வேறே நல்ல வரன் கிடைக்காதா? அந்தத் தத்தாரி, ஊர் சுற்றியை மறந்திடு" என்றான் அவன்.

"'மறந்திடு, மறந்திடு' ரொம்பச் சுளுவா இருக்குது உங்களுக்கு! புதுசா ஒட்ட வச்சதை உதறிவிடலாம், அண்ணா. உடலிலே ஊறிப்போனதை என்ன செய்ய முடியும்? நான் என்ன, உங்களைப் பந்தல் கேட்டேனா, பாண்டு கேட்டேனா? சும்மா ஏதோ முறை வைச்சுக் கூப்பிட்டுக்கிட்டுப் போறேன். அதுவும் நமக்குள்ளே தானே? அவங்க வீட்டிலே உலை ஏத்தவா போறேன்?" என்றாள் அலமேலு.

"கானல் நீர் தாகத்துக்கு உதவாது, தங்கச்சி."

"என் நிலைக்கும் நீ சொல்றதுக்கும் ஒரு விதப் பொருத்தத்தையும் காணோம்" என்றாள் அலமேலு, சட்டென்று சிரித்து.

"யாருக்குப் பொருத்தம்னு நீ சொல்றே?" என்று கேட்டான் மாணிக்கம்.

"அதைச் சொன்ன உனக்குத்தான் தெரியணும். எனக்கா தெரியும்? நானா சொன்னேன்?"

அவர்கள் மேலும் பேசும்போது, சண்முகம் பறக்கப் பறக்க ஓடிவந்தான். "அலமேலு, உன்னை அம்மா அங்கே வரச் சொன்னாங்க" என்று கூறிவிட்டு மீண்டும் ஓடிவிட்டான்.

"சினிமா அவசரமாக்கும்?" என்று முணுமுணுத்தாள் அலமேலு. "அண்ணா, கூப்பிடறாங்களாமே? நீயும்கூட வறியா? தனியாகப் போகப் பயமாயிருக்குது" என்றாள்.

"வா, போவோம்" என்று கிளம்பினான் மாணிக்கம்.

அலமேலுவின் இதயம் மகிழ்ச்சியில் விரிந்தது. பழகின தோஷத்தினால் அவர்களைப் பார்க்க விழைந்தது மனம். உடனே ஒருவித அச்சத்தினால் அவள் குன்றினாள். மணவாளச் செட்டியின் வீட்டினுள் நுழையும்போது அவள் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது.

முன் கூடத்திலேயே மணவாளச் செட்டி கட்டிலில் கிடந்தார். சுற்றி ஆடவர் பலர் நின்றனர். அவர் தலைமாட்டில் கந்தசாமி செட்டி இருந்தார். வலப்புறம் பெரிய பிள்ளை. ஒரே கண்வீச்சில் இத்தனையும் கிரகித்துக் கொண்டாள் அலமேலு. அவள் திரும்பிப் பாராமல் நேரே நடந்தாள்.

"கண்ணு, இங்கே வா. பெரியப்பாவைப் பார்க்கலே?" என்று அழைத்தார் அவள் தந்தை.

அலமேலு தயங்கித் தயங்கிப் பெரியவரின் படுக்கையருகில் சென்றாள். அவள் தொண்டையை யாரோ இரும்புக் கைகளால் நெரிப்பதுபோல இருந்தது. வாழ்வு என்பதையே முழுவதும் புரிந்து கொள்ளவேண்டிய வயதில் சாவை நெருங்கிக்கொண்டிருக்கும் ஒருவரை அணுக அவள் பயந்தாள்.

"அலமேலு வந்திருக்குது, பாரு" என்று கந்தசாமி செட்டி குனிந்து கூறவும், மணவாளச் செட்டி மெல்லக் கண்ணைத் திறந்தார். அவர் கண்கள் இரண்டும் சிவந்து எங்கோ செருகிக்

கிடந்தன. அலமேலுவின் உடல் நடுக்க முற்றது. அவளை நோக்கி ஒரு கையை நீட்டினார் மணவாளச் செட்டி. அலமேலு அப்படியே சிலைபோல நின்றாள். யாரோ அவளை, "குனி, குனி. அவர் ஏதோ சொல்கிறார்" என்றார்கள். அலமேலு கட்டிலின் அருகில் குனிந்தாள். மணவாளச் செட்டி, குனிந்த அவள் தலையைத் தடவிக் கொடுத்தார். இரு கண்ணீர் முத்துக்கள் அவரது விழிக் கடையில் மின்னின. அவர் கையை எடுத்துக்கொண்டு விட்டார். அலமேலுவும் அங்கிருந்து நகர்ந்து உள்ளே போனாள்.

'மணவாளச் செட்டி கட்டைபோல் கிடப்பார், நாம் அருகில் போகும் போது உயிர் நீங்கி விடுமோ, உடல் என்ன கோரமான வடிவு எடுக்குமோ?' என்று கற்பனை செய்து நடுங்கிக் கொண்டே வந்த அலமேலுவுக்கு, அவரைப் பார்த்ததும் சற்றுத் தெம்பு வந்தது.

கண்ணீர் தாரை தாரையாகக் கன்னத்தில் வழிய, அவள் பங்காரு அருகில் போய் அமர்ந்தாள். பங்காரு அவள் கையைத் தன் கைக்குள் இருத்திக் கொண்டாள். நீர் மல்கும் தன் கண்களைத் தலையணையில் மறைத்து, விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

பங்காருவின் மருமகள் தோளில் முகத்தை இடித்துக் கொண்டாள்.

"சூ!" என்று குரல் கேட்டு அலமேலு திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அப்போதுதான் மதனகோபாலன் அங்கு இருப்பதை அவள் உணர்ந்தாள். ஒரு விநாடி இருவர் பார்வையும் சந்தித்துப் பிரிந்தன. அலமேலு எழுந்துவிட யத்தனித்தாள். ஆனால், அவள் கையைப் பங்காருவின் பிடி இறுக்கியது. அவள் தடுமாறுவதற்குள் மதனகோபாலன் அங்கிருந்து அப்பால் போய்விட்டான்.

கூடத்துக் கடியாரத்தில் மணி பத்தடித்தது. தெருப் பெண்கள் எழுந்து விட்டனர். பங்காருவிடம் வந்து, "நாங்கள் வீட்டுக்குப் போய்விட்டு வருகிறோம். எப்பொழுது வேண்டுமானாலும் கூப்பிடுங்கள், வருகிறோம்" என்றார்கள்.

'கூப்பிட்டு அனுப்பும்படி ஒரு நிலை வரவும் வேண்டாம், நீங்கள் வரவும்




வேண்டாம்" என்று நினைத்துக்கொண்டாள் அலமேலு.

பங்காருவின் உறவுப் பெண்கள் அவரவர்கள் மறைவான இடங்களில் போய்ப் படுத்துக்கொண்டனர்.

"அலமேலு, தெருக் கதவு போட்டிருக்கிறதா பார்" என்றாள் பங்காரு.

"நீயும் வா, அம்மா" என்று தாயாரை அழைத்தாள் அலமேலு.



தனபாக்கியமும் அலமேலுவும் சென்று, தெருக் கதவைப் போட்டுக் கொண்டு வந்தனர். மாணிக்கம் அதற்கு முன்பே தன் வீடு போய் விட்டிருந்தான் போலும். கந்தசாமி செட்டி, மதனகோபாலன், அவன் அண்ணன், இன்னும் இரண்டு ஆடவர் மணவாளச் செட்டியின் கட்டிலைச் சுற்றிப் படுத்திருந்தனர்.

அலமேலுவும் தனபாக்கியமும் பங்காருவின் அருகில் அமர்ந்தார்கள். பங்காருவின் மருமகள் புழைக்கடைப் பக்கமாகப் போனாள். அவள் அந்தப் பக்கம் ரேழியில் படுத்துவிட்டாள் போலும்; திரும்பி வரவில்லை.

பங்காரு திடீரென்று தன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து, தன் கழுத்திலிருந்த வைர அட்டிகையைக் கழற்றி அலமேலு கழுத்தில் போட்டு, "உம், சீக்கிரம். ரவிக்கைக்குள்ளே போட்டிடு" என்றாள்.

"எதுக்கு, அக்கா, இது? பிறகு வீண் வம்பு வளரப் போவுது" என்று தனபாக்கியம் பயந்த குரலில் சொன்னாள்.

"காரணமாகத்தான் போட்டிருக்கேன். அலமேலு, நகைப் பெட்டியைப் பூஜையறையிலே வச்சுப் பூட்டி, சாவியை என்கிட்டே கொடு" என்றாள் பங்காரு.

சொன்னபடியே செய்தாள் அலமேலு. ஆனாலும், தான் அந்நியளாக இருந்துகொண்டு, அவர்கள் வீட்டு அந்தரங்கத்தில் கை வைக்க அஞ்சினாள். அதைக் கவனித்த பங்காரு, "உன்னையும், உன் அம்மாவையும் தவிர, எனக்கு யார் மனிதர்கள்? என் பணத்துக்கு ஆயிரம் பேர் உறவுக்காரங்க இருக்காங்க. மற்றப்படி நான் அநாதை" என்றாள்.

அலமேலு சற்று நிம்மதி பெற்றாள். தாயும் மகளும் ஒரு பாயை விரித்துப் படுத்துக் கொண்டனர். பங்காருவும் படுத்தாள். அவர்கள் கண் அயரும் நேரம், "அம்மா, இந்தா, மாத்திரை சாப்பிடு" என்று கூறிக்கொண்டு மதனகோபாலன் அங்கு வந்தான்.

அலமேலு சட்டென்று எழுந்து, பின்புற ரேழியில் போய் நின்றுகொண்டாள். பங்காருவின் மருமகள் விழிப்படைந்து எழுந்தாள். அலமேலு நிற்பதைச் சந்தேகக் கண்களுடன் பார்த்தாள். அப்போது எப்படியோ அவள் கண்களில் அலமேலுவின் கழுத்திலிருந்த வைர அட்டிகை பட்டுவிட்டது. அவள் சட்டென்று அலமேலு கழுத்தில் கையைப் போட்டு

அதை வெளியே எடுக்க முயன்றாள். பங்காருவின் இரட்டை நாடி சரீரத்துக்குச் செய்யப்பட்ட அட்டிகை. அலமேலுவின் இளங்கழுத்தில் பதிந்து நிற்காமல் அது உள்ளே தொங்கியது. அலமேலு உடனே புடைவைத் தலைப்போடு அட்டிகையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிட்டாள்.

''ஏனடி, இது எப்படி உன் கழுத்துக்கு வந்தது?'' என்று அலமேலுவின் முகத்தில் இடித்துச் சீறினாள் மருமகள்.

''பங்காரு அத்தையைக் கேளுங்க!'' என்றாள் அலமேலு அமைதியாக.

''அத்தையாமே அத்தை! பெரிய முறைக்காரி, பாரு!'' என்று அவள் மீண்டும் இடித்தாள்.

அலமேலுவின் உள்ளம் குன்றியது. ஆயினும் அவள் வெளிக்குப் பதற்றமில்லாமல் இருந்தாள்.

''முதலிலே கழற்றி என்கிட்டே கொடுடீ!'' என்று கட்டளை பிறந்தது.

''அத்தைதான் என் கழுத்திலே போட்டாங்க. அவங்க கையாலேதான் கழற்றணும். வேறு யாரும் கை வைக்க நான் இடம் கொடுக்க மாட்டேன்'' என்ற அலமேலு ஒரே பாய்ச்சலில் பங்காருவின் அருகில் ஓடிவந்து அட்டிகையைக் கழற்றி, அம் மூதாட்டியின் கையில் வைத்தாள்.

''ஏன், என்ன?'' என்றாள் தனபாக்கியம், என்ன நடந்தது என்று புரியாமல்.

''சொத்துக்கு உரிமைக்காரர்கூட இப்படி 'ஏன், ஏன்'னு கேட்கமாட்டாங்க'' என்றாள் பங்காருவின் மருமகள்.

''ஏன், அலமேலு? என்ன நடந்தது? ஏன் கழட்டிட்டே?'' என்று நிதானமாகக் கேட்டாள் பங்காரு.

''கண்டபடி பேசறாங்க. கழட்டி அவங்க கையிலே கொடுக்கணுமாம். இது எங்க சொத்தா கொடுக்க?''

''முறை தெரிஞ்ச பெரிய மனுஷியைப் பார்க்கலை! ரவிக்கைக்குள்யே இடுக்கிக்கத் தெரியலை?''

''பேசாம இருங்க!'' என்றாள் அலமேலு, கோவமாக.

''நான் ஏனடி பேசாமல் இருக்கேன்? என் வீட்டுச் சொத்து கொள்ளை போறதைப் பார்த்துக்கிட்டுப் பேசாம இருப்பேனா?''

இந்தக் குரலைக் கேட்டு, அவள் கணவன் எழுந்து வந்துவிட்டான். யாரோ பளிச் சென்று விளக்கைப் போட்டார்கள்.

பங்காருவின் மருமகள் விவரத்தைக் கணவனிடம் சொன்னாள்.

''அம்மா, என்ன இது, நீ செய்வது நல்லா இல்லை. நகைப் பொட்டியைக் கொடு இங்கே'' என்று கேட்டு, மகன் கையை நீட்டினான்.

''என் உடலிலே மூச்சு இருக்கும் வரை நான் எது வேண்டுமானாலும் செய்வேன். நீங்க யாரும் பேச வேண்டியதில்லை. போய்ப் படுங்க'' என்றாள் பங்காரு, நிதானமாக.

''நீ சொத்தை வீதியில் வீசுவது. அதை நான் பார்த்துக்கிட்டு நிற்பதா? உன்னைக் கேட்க எனக்கு உரிமை இல்லேன்னா, யாருக்கு இருக்குது?'' என்று மூத்த மகன் உரக்கக் கேட்கவும், எல்லாரும் விழித்துக்கொண்டு, அங்கே குழுமி வேடிக்கை பார்க்கலாயினர்.

''போடா, பெரிய உரிமை! நீதான் அன்னிக்கே பிடுங்கிண்டு போய்ட்டியே! இங்கே இருக்கிறதுக்கு மேலே விரலை வை; தெரியும்'' என்று மதனகோபாலனும் கோதாவில் இறங்கினான்.

''சரிடா. முட்டாள்! அப்படியானாலும் நீ வாங்கி வச்சுக்க. தெருப் பொண்ணு ஒருத்தி கழுத்திலே இருபத்தஞ்சாயிரம் ஏறுவதா? நாம் பார்த்துக்கிட்டே கிடக்கணுமா?''

அலமேலு பிடியாகக் குன்றிவிட்டாள். இருந்த இடத்திலேயே முகத்தை முழந்தாள்கள் மீது புதைத்து விம்ம ஆரம்பித்தாள். தனபாக்கியம் தலைகுனிந்து வேதனை தோய்ந்த முகத்துடன் நின்றாள்.

''நான்தாண்டா போட்டேன், அவள் கழுத்திலே. அது என் இஷ்டம்'' என்றாள் பங்காரு, கம்பீரமாக.

''உனக்கு அதெல்லாம் உரிமை கிடையாதும்மா'' என்று மூத்த மகன் பேசி முடிப்பதற்குள், ''ஏன் கிடையாது?'' என்று குரல் கேட்டது. எல்லாரும் திரும்பினார்கள்.

கந்தசாமி செட்டி வெகு நிதானமாக மனசுக்குள் எதையோ சுவைத்தபடி, ஒரு புன்னகையுடன் எதிரே நின்றார். அவர்தாம் பேசினார். ''இன்னிக்குத்தானே மணவாளண்ணு உயில் எழுதி முடிச்சாரு? உங்களுக்கெல்லாம் விவரம் தெரியாது போல. ஒரு பங்கு தனக்கு. தனக்குப் பிறகு கோபாலுவுக்கு. ஒரு பங்கு பங்காருவுக்கு. அவளுக்கு பிறகு அவள் இஷ்டம் போல. ஒரு பங்கு...'' என்று சொல்லிச் சற்று நிறுத்தி, ஒரு நோட்டம் விட்டார்.

''ஒரு பங்கு?'' என்று பங்காருவின் மூத்த மகனும் மருமகளும் ஒரே சமயத்தில் கேட்டார்கள்.

''நம்ப அலமேலுவுக்குத்தான். அவளுக்குப் பிறகு தர்மத்துக்கு. பங்காரு நகை அவள் இஷ்டப்படி..''

பேரிடி ஒன்று விழுந்தது போல அங்கே ஒரே நிச்சப்தம் நிலவியது. அதைப் பயன்படுத்திக் கொண்டு கந்தசாமி செட்டி மீண்டும் பேசலானார். ''பார்த்தீர்களா? நகையைக் கொடுக்கப் பங்காருவுக்கு முழு உரிமை இருக்குது. அலமேலுவுக்கும் முறை இருக்குது. என்ன?'' என்றார்.


வெறும்
பாசத்தினால்
பயனில்லை...

தீப்பற்றி எரியும் கண்களுடன் பலர் அவரைப் பார்த்தார்கள். ஆனால், அவர் ஒன்றும் காட்டிக்கொள்ளாமலே, புன் சிரிப்பு வாடாமல் மீண்டும் மணவாளச் செட்டி யருகில் போய் நிம்மதியாகப் படுத்துக் கொண்டார்.

''அக்கா, அலமேலுவும் நானும் எங்க வீட்டுக்குப் போகிறோம். ஏதோ ஆபத் துக்கு உதவலாம்னு வந்த இடத்திலே இப்படியெல்லாம் நேர்ந்திடுச்சு'' என்றாள் தனபாக்கியம்.

''தனம், இந்தக் கழுகுக் கூட்டத்திலே என்னைத் தனியா விட்டுட்டுப் போயிடு வியா?'' என்று தன் தோழியின் கையைப் பிடித்துக்கொண்டு கதறி விட்டாள் பங்காரு.

தனபாக்கியம் ஒன்றும் பதில் சொல்லத் தெரியாமல் சங்கடப்பட்டாள். அலமேலு வைப் பார்த்தாள். அலமேலு கற்சிலை போல் வெளிறிய முகத்துடன் அமர்ந் திருந்தாள். அவளை அழைத்துப் பங்காரு வின் அருகில் படுக்கவைத்துவிட்டு, தான் தன் தோழிக்கு மறுபக்கத்தில் படுத்தாள் தனபாக்கியம்.

பங்காருவின் மூத்த மகனும் மருமகளும் பின்புற நடையில் என்னவோ தாழ்ந்த குரலில் பேசுவது கேட்டது. பிறகு அதுவும் அடங்கிவிட்டது.

அருகில் படுத்திருந்த ஒன்றிரண்டு பேர் கூடத் தெருத் திண்ணைக்குப் போய்விட்டனர்.

அலமேலுவின் உடலெல்லாம் பதறி யது. கண்களை இறுக மூடிக்கொண்டு உறங்குவதற்கு அவள் அரும்பாடு பட்டாள். வெகு நேரம் கழித்து அவள் கண் அயர்ந்தாள். அதில் என்ன என் னவோ கனவுகள்!

திக்குத் தெரியாத முள்ளுக்காட்டில் மாட்டிக் கொண்டு விட்ட மாதிரி ஒன்று. நதியின் வேகத்தோடு வெகுதூரம் சென்றுவிட்டது போலவும், திரும்பத் தெரியாமல் தவிப்பது போலவும் ஒன்று.

அவள் சட்டென்று விழிப்படைந்து விட்டாள். அந்த இருட்டில் ஓர் உருவம் பூஜை அறையிலிருந்து நகைப் பெட்டி யைத் தூக்கிக்கொண்டு ஓடுவது தெரிந்தது.

''திருடன்! திருடன்!'' என்று அவள் ஒரு குரல் கொடுத்தாள். அது வெளியே வரவிடாமல் ஒரு முரட்டுக்கை அவள் வாயைப் பொத்தியது. அவள் தலையில் ஓங்கி ஓர் அடியும் விழுந்தது.

ஒரே கணந்தான். அவள் திருடனை நன்றாகப் பார்த்துவிட்டாள். அப்படியே நிலைகுத்தி நின்றுவிட்டாள். மறுகணம் மயக்கம் மேலிட்டது. குழறிக்கொண்டே அவள் கீழே விழுந்தாள்.

விளக்குகள் போடுவதும், அவள் தாய், ''அலமேலு, அம்மாடி, தாயே!'' என்று விளிப்பதும், எல்லாம் எங்கோ எப்போதோ நடந்த ஒன்றை யாரோ சொல்லக் கேட்பது போலத் தூரத்தில் தெரிந்தன. பிறகு இருள் சூழ்ந்து கொண்டது.

திருடனைத் தேடினவர் சிலர். வீடு முழுவதும் விளக்கைப் போட்டுக்கொண்டு பிரமித்து நின்றவர் பலர்.

யாரோ டாக்டருக்கு டெலிபோன் செய்தார்கள். மீனாட்சிக்காக ஆஸ்பத்திரி சென்றவர் ஒரு வாடகை மோட்டார் வைத்துக்கொண்டு விரைந்தோடி வந் தார். பங்காருவையும் அலமேலுவையும் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று விட்டார்.

மாணிக்கமும் உடன் சென்றதனால் அலமேலுவை மட்டும் கட்டுக்கட்டித் தன்னோடு திரும்ப அழைத்து வந்து விட்டான். பங்காரு மட்டும் தன் நினைவேயில்லாமல் ஆஸ்பத்திரிக் கட்டி லில் கிடந்தாள்.

20. வந்த பரிசு

முதல் நாள் இரவு பங்காரு வீட்டில் நடந்த திருட்டைப் பற்றியே பேச்சு நிலவியது. குழாயடிப் பெண்கள் ஏதோ ஒரு காரணத்தை ஒட்டி, அவர்கள் வீட்டிற்குள் புகுந்து, அலமேலுவைக் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டனர். அவள் படுத்தபடியே பொறுமையாகப் பதில் சொல்லிக்கொண் டிருந்தாள். அவள் தலையில் பட்ட அடி பெரிதாக இல்லாவிட்டாலும் கட்டுப் போட வேண்டியிருந்தது. மேலும், அடிபட்ட அதிர்ச்சி வேறு கண்களைத் திறக்க விடாமல் தொல்லை கொடுத்தது.

''சுமார் மூணு மணியிருக்கும். ஒரு நாய் ஊளையிட்டது. நல்லபடியாக இருக்கவேண்டுமே என்று நினைத்தேன். அப்போதான் திருடன் வந்தானுமே? ஏன், அலுமேலு, அப்படியா?''

''தெரியாதுங்க. நான் கண் முழிச் சப்போ திருடனைப் பார்த்தேன், கத்தி னேன். அவ்வளவுதான் தெரியும்.''

''பாவிப் பய! அதுக்குள்ளே மண்டை மேலே போட்டுட்டானே!''

''ஆமாம்.''

''பங்காருவுக்குக்கூட நல்ல அடி யாமே?''

''ஆமாம்?''

அலமேலு அதைப்பற்றிப் பேச விரும்பவில்லை. ஆனால் மற்றவர்கள் அவளை விடாமல் கேள்வி கேட்டுத் துளைத்தனர்.

தனபாக்கியம் வீட்டு வேலையைத் தனி யாகச் செய்ததால், அவளுக்கு நேரமே இல்லை. மாணிக்கம் குழாயடிக்குப் போனான். ''ஏன், தம்பி, நீ வரே? நான்

கொண்டு தரேனே?'' என்று கூறிச் சில பெண்கள், அந்தச் சாக்கில் இவர்கள் வீட்டுக்குள் புகுந்தனர்.

அலமேலு கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தாள். அப்படியாவது வந்தவர்கள் போகட்டுமே என்று நினைத்தாள் அவள். தனபாக்கியமும் நின்று பதில் சொல்ல முடியாததால் அவர்கள் சென்றுவிட்டனர்.

நளினி வந்து அலமேலுவைத் தொட்டு எழுப்பினபோதுகூட வேறு யாரோ என்று அலமேலு கண்ணையே திறக்கவில்லை.

''தூக்க மருந்து கொடுத்திருக்கிறதா?'' என்று நளினி கேட்டபோதுதான் அலமேலு கண்ணைத் திறந்தாள்.

''மீனுவுக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்திருக்கிறது, தெரியுமா?'' என்று கேட்டாள் நளினி.

''அப்படியா? சுகப் பிரசவந்தானே?'' என்று பலவீனக் குரலில் கேட்டாள் அலமேலு.

''இல்லை, ஸிஸேரியன். ஆனால், இப்ப சௌக்கியமாகத்தான் இருக்காங்க'' என்றாள் நளினி; ''உன்னாலே வரமுடியுமா? நான் ஆஸ்பத்திரிக்குப் போகப் போறேன். அப்படியே பங்காரு அம்மாவையும் பார்த்துவிட்டு வரலாம்.''

''எதுக்கும்மா, நளினி? தலையிலே கட்டோடு வெளியிலே போகணுமா?'' என்று தனபாக்கியம் கேட்டாள்.

''ஆஸ்பத்திரிக்குத் தானே? காரில்தானே போகப்போகிறோம்? நான் போய் வருகிறேனே'' என்று கெஞ்சினாள் பெண். பிறகு நளினியுடன் கிளம்பிவிட்டாள்.

காரில் செல்லும்போது, முன் இரவு பங்காரு வீட்டில் நடந்த விவரம் எல்லாம் ஒன்றுவிடாமல் கூறினாள் அலமேலு.

''அத்தனை பேச்சும் கேட்டுக்கொண்டு அங்கேயே உட்கார்ந்து கிடந்தாயா?'' என்று நளினி கேட்டாள்.

''என்ன செய்வது? பங்காரு அத்தை கையைப் பிடிச்சுக்கிட்டுக் கதறு கதறுன்னு கதறிட்டாங்களே?'' என்றாள் அலமேலு.

''கஷ்ட காலந்தான். அவர்களோடு சேர்ந்ததால் உனக்கும் கஷ்டம் வந்ததா?''

''மணவாள மாமாவுக்கும் அத்தைக்கும் அவங்க பணத்தினால் சுகமே இல்லை. அதில் ஒரு பங்கு எனக்குக் கிடைத்ததும், அந்தப் பலனும் எனக்குத் தொத்திக்கொண்டது.''

''உனக்கு அவங்க பணம் எழுதி வச்சது எனக்கு ரொம்பச் சந்தோஷம்.''

''ஊரார் பணத்துக்கு ஆசையா?''

''ஒரு விதத்தில் நீ சொல்வது சரிதான். ஆனால், வேற நோக்கில் பார்த்தால், நீ வாங்கிக் கொள்கிறதிலே ஒரு தவறும் இல்லை. மணவாளச் செட்டியே சம்பாதித்த பணம். அவர் இஷ்டப்படி யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாமே? உன்னைக் கோபாலுவுக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்னு வாக்குக் கொடுத்துவிட்டுத் தவறிட்டாரே? வேறு யாராவது வந்து மணக்கிறதும் கஷ்டந்தானே? பணம் இருந்தால் அதுக்குன்னு...''

''பணம் மானத்தை வாங்கிக் கொடுக்குமா, அக்கா? எங்க அம்மா, தன் அண்ணன் மகன் வந்து என்னைக் கட்டிக்கிட்டுப் போய்டுவான்னு நினைச்சாங்க. எங்க மாமா என்ன சொன்னாரு, தெரியுமா? என்னதான் சொந்தம் இருந்தாலும் ஒருத்தன் மறுத்த பொண்ணைக் கட்டிக்கிட்டால் அவங்க மதிப்புக்குக் குறைவுன்னுட்டாரு. அதுவும் நியாயந்தானே?''

''பார்த்தியா. பார்த்தியா? சொந்த மாமனே அப்படிச் சொல்றுங்க!''

''ஆமாம், நளினி அவங்க சொல்வதிலே என்ன தவறு? முறையா அவங்க இடத்திலே முதலிலே போயிருக்கணும். பணக்கார இடத்திலே நாட்டம் போனதும் அவங்களை மறந்திட்டோம்னு நினைப்பாங்க. பணக்கார இடம் இல்லேன்னு ஆனதும் அவங்களிடம் போறோம்.''

''யாராவது நல்ல வரன் கிடைக்கும், அலமேலு. நீ நல்லா வாழ்வே.''

''புதுப் பணத்தினாலா? நான் அந்தப் பணத்தை விரலாலேகூடத் தொடமாட்டேன்.''

''தானாக வந்த ஸ்ரீதேவியை உதாசீனம் செய்யக்கூடாதும்பாங்க.''

''பாட்டியம்மா மாதிரி பேசுங்க.''

''உனக்கு வேண்டாம்னாலும் உதவக்கூடியவங்களுக்கு அதைக் கொடுக்கலாமே?'' என்றாள் நளினி, குறிப்பாக அலமேலுவைப் பார்த்து.

''அதாவது ...?''

''அதாவது, உன் அண்ணனுக்குத்தான் சொல்கிறேன். தன்னிடம் பணமில்லை, மற்றவங்களைவிட மட்டம் என்ற நினைப்பு. தாழ்வு மனப்பான்மை அவரைப் பின்னுக்கு இழுக்கிறது.''

அலமேலு நளினியைப் பார்த்தாள். நளினி உண்மை ஆவலுடன்தான் பேசுகிறாள் என்று அறிந்து மகிழ்ந்தாள். ''எல்லாம் சரிதான், நளினி. அவங்களே அண்ணனுக்கு உதவலாம். அண்ணன் அதைப் பெற்றுக்கொண்டாலும் தவறில்லை. தர்மமாக உபகாரச் சம்பளம் பெற்றுப் படித்தவர்தாமே எங்கள் அண்ணா? ஆனால், நான் அவர்கள் பணத்தைத் தொடக்கூடாது. நான் கல்யாணமே செய்துகொள்ள வேண்டாம் என்று நினைக்கிறேன்.''

''உக்கும்! நம்ப சமூகத்திலே அது முடியுமாக்கும்?'' என்றாள் நளினி, ஏளனமாக.

"நடத்திக் காட்டுகிறது. மாரியம்மன், ஒருவருக்கு நிச்சயம் பண்ணிவிட்டு வேறு ஒருவருக்குக் கட்டிக் கொடுப்பாளோ? எந்தத் தெய்வ நம்பிக்கை எங்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கிறதோ, அதையே வேர் அறுக்கிற மாதிரி இல்லையா? நான் வேறு ஒருத்தரை மனசாலும் நினைக்க முடியுமா? எனக்கு என்ன எட்டு வயசா? உணர்ச்சிகளோ எண்ணங்களோ உருவாகாத பருவமா? நீங்களே யோசித்துப் பாருங்க, அக்கா" என்றாள் அலமேலு.

"யோசித்துப் பார்க்கிறேன். மறுபடியும் ஆரம்பிச்சுட்டியே, நீங்க, நாங்க, அக்கா, சிக்கான்னு!"

"அதுவுந்தான் ரத்தத்திலே ஊறிப் போன ஒரு பழக்கம். வேறு ஓர் ஆளைக் கைப்பிடிக்கிறேன்னு வச்சுக்குங்க. அந்த மனுஷனை என் புதுப் பணத்தினாலே விலைக்கு வாங்கின மாதிரி ஆகாது? சொல், நளினி. நாங்கள்தான் முரட்டுத் தனமாக, எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமல் அன்றாடம் வேலைகளைக் கவனிச்சுக்கிட்டுக் காலத்தைத் தள்ளுகிறோம். நீங்க மனவிளிம்பிலேயே நடக்கிறவங்க. சொல்லு, நான் வாங்கலாமா அந்தப் பணத்தை?"

அலமேலு அடித்துப் பேசுவதும், அவள் குரலில் தொனித்த கண்டிப்பும் நளினியை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. அவளுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. 'மனவிளிம்பில் நடக்கிறவங்க என்று அழகாகச் சொல்லிவிட்டாளே? அப்படியெல்லாம் நுண்ணிய உணர்ச்சிகளுடன் உழலும் நம் மனத்தில் இப்படி ஆழமாக, ஆணித்தரமாக யோசித்து முடிவு எடுக்கும் வலு உண்டா?' என்று அவள் திணறிவிட்டாள். அலமேலுவிடம் பேசிய அந்தத் தருணத்தில்தானே ஒரு பிடி வளர்ந்து விட்ட மாதிரி இருந்தது அவளுக்கு.

"தலைக்கட்டுடன் வெளியே வருவதற்கு அசிங்கமாகத்தான் இருக்குது. ஆனால் இந்தத் தெருவை விட்டு வேறு எங்காவது ஒரு நிமிஷமாவது போகமாட்டோமா என்றுதான் இருக்கிறது. விடியற்காலை முதல் போலீஸ்காரர்கள் கூட்டமும் கேள்விகளும்! எத்தனை விதமாகக் கேட்கிறாங்க!" பெருமூச்சு விட்டாள் அலமேலு.

"நேற்று இரவு ஒரு பிரளய காலம் போல. மணவாளச் செட்டி உடல்நிலை என்ன, உனக்கு நேர்ந்த சச்சரவு என்ன, போதாக்குறைக்குத் திருடு வேறு. நினைத்தாலே தலை சுத்துது" என்றாள் நளினி.

"நல்ல காலம், மணவாள மாமா பிழைச்சாரே, அதைச் சொல்லுங்க. வேறே மாதிரி நடந்திருந்திச்சின்னா எப்படி இருக்கும், சொல்லு?"

"டாக்டர் ரொம்பத் தவிச்சிட்டாரு. மீனாவைக் கவனிக்கும்படி ஆயிடுச்சு. மணவாளச் செட்டியை விட்டுவிட்டுப் போகவும் மனமில்லை."

ஆஸ்பத்திரி வந்துவிடவும், கார் நின்றது. இருவரும் இறங்கி நேரே மீனாட்சி இருக்குமிடத்துக்குச் சென்றார்கள். குழந்தை அழகாகத் தாயின் அருகில் உறங்கியது.

"என்னடா, ஸீஸர்?" என்று அந்தக் குழந்தையைக் கூப்பிட்டாள் நளினி.

வாழைப்பூவின் உள் பூப்போன்ற குட்டி விரல்களைப் பிரித்துப் பிரித்துக் கொஞ்சினாள் அலமேலு.

"இருபதாயிரத்துக்கு மேலே போயிடுச்சாமே?" என்று விசாரித்தாள் மீனாட்சி.

"ஆமாம், அக்கா. வைர அட்டிகை அத்தை கையிலே சிக்கிடுச்சு. அந்தப் பெட்டியிலே இருந்தது போயிடுச்சு. இன்னும் சில நகைகளை அத்தை உள்ளே வச்சிட்டாங்களாம். இல்லேன்னா அதுவும் போயிருக்கும்" என்றாள் அலமேலு.

"ஆமாம். தினமும் நிறைய நகை கைப்பெட்டியிலேயே இருக்குமாம். நேற்றுத்தான் கொஞ்ச வைர நகைகளை வேறே பீரோவிலே எடுத்து வச்சாங்களாம்" என்று சேதி சொன்னாள் மீனாட்சி.

"இங்கே படுத்துக்கிட்டு, இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும், அக்கா?" என்று கேட்டாள் அலமேலு.

"யசோதா இங்கேதானே இருக்குது. அது போதாதா?" என்றாள் மீனாட்சி, சிரித்தபடி.

"போதும், போதும். சமாசார அலுவலகமே உங்க கையிலே இருக்கிற மாதிரி."

"வா, அலமேலு. பங்காரு அம்மாவைப் பார்த்திட்டு வருவோம்" என்று அவசரப் படுத்தினாள் நளினி.

அலமேலுவுக்கு மீனாட்சியை விட்டுப் போக மனமே இல்லை. திரும்பத் திரும்ப மீனாட்சியின் கையை நீவி விடுவதும், குழந்தையின் பட்டுக் கன்னத்திலே விரல் வைப்பதுமாக அவள் இருந்தாள்.

"பெரிய பணக்காரியாயிட்டயாமே? சங்கத்தை மறந்திடாதே" என்றாள் மீனாட்சி.

"ஆமாம்! உனக்கென்ன வேலை?" என்றாள் நளினி.

"மாமாவைக் கேட்டு நீங்களே வாங்கிக்கிங்க" என்றாள் அலமேலு.

"வா, வா, அலமேலு" என்று நளினி துரிதப்படுத்தினாள்.

அலமேலுவும் நளினியும் போனபோது, பங்காரு எழுந்து அமர்ந்திருந்தாள். "வந்தீங்களா? என்னை வீட்டுக்குப் போகலாம்னு சொல்லிட்டாங்களாமே? நம்ப டாக்டர் இப்பத்தான் சொல்லிட்டுப் போனார். என்னைக் கூட்டிக்

கிட்டுப் போறீங்களா? மனசெல்லாம் வீட்டிலேயே அடிச்சிக்குது'' என்றாள்.

''கவலைப்படாதீங்க, அத்தை. எங்க அப்பா, மாமா பக்கத்திலேயே இருக்காங்க. பர்வதம்மா சமையல் வேலையைக் கவனிச்சுக்கிருங்க. அம்மா எல்லாம் பார்த்துப்பாங்க. எங்க அண்ணனும் இருக்கார்'' என்றாள் அலமேலு.

''யாரு, முத்துவா? அது, பாவம், யாரைப் போய்க் கேட்கப் போவுது? தினமும் நான் இல்லாத வீட்டிலே காலை வைக்காது. இந்தப் போலீஸ்காரங்க வேறே இங்கேயும் வந்திட்டாங்க.''

''விசாரிக்கணுமில்லே?'' என்றாள் நளினி.

''எப்படி இருக்குது பார், தலைவிதி? வீட்டுக்குப் பேறேன்னுங்க, இவங்க தடுத்து நிறுத்தினேன். நானே கோடரி எடுத்து அவங்க தலையிலே போட்ட மாதிரி ஆயிடுச்சு'' என்று வருத்தப் பட்டாள் பங்காரு.

''நீங்க கவலைப்படாதீங்க. கவலைப் பட்டா எழுந்திருக்கவே முடியாது. உங்களை வீட்டுக்கும் அனுப்பமாட்டாங்க'' என்றாள் நளினி.

''போலீஸ்காரங்க அங்கேயும் தொல்லை கொடுத்தாங்களா?'' என்று கேட்டாள் பங்காரு.

''ஆமாம்'' என்று பதிலளித்தாள் அலமேலு.

''என்ன சொன்னுங்க?''

''அவங்க என்னத்தைச் சொல்வாங்க? கேள்வி கேட்டு, எழுதிக்கிட்டுப் போனுங்க.''

''அலமேலு, எனக்கு இந்த ஆஸ்பத்திரி டாக்டரைத் தெரியும். நம்மோடு வீட்டுக்கு அனுப்பருங்களான்னு கேட்டுக் கிட்டு வர்றேன்'' என்று சொல்லிவிட்டு நளினி வெளியே போனாள்.

அலமேலு பங்காருவின் அருகில் அமர்ந் தாள். பெரியவள் கை நடுங்கிற்று. அதைத் தன் கையில் எடுத்துக்கொண் டாள் அலமேலு. ''நீங்க ஏன் இப்படி நடுங்கறீங்க?'' என்று கேட்டாள்.

''ஒன்றுமில்லை....''

''அத்தை, என்னலே ஒரு கெடுதலும் வராது, நம்புங்கள். ஆனால், உங்க மூத்த மருமகளுந்தான் ....''

''என்ன? என்ன?'' என்று பதறினாள் பங்காரு.

''தங்களுக்குச் சொத்தில் பங்கு இல் லையே என்கிற ஆத்திரத்தில் ஒரு தினுசாகப் பேசருங்க. திருடன் யாருன்னு தெரியுங்கருப்போலப் போலீஸுக்குச் சொல்விட்டாங்களாம்.''

''அப்படியா?'' என்று மேலும் பதறினாள் பங்காரு.

''நீங்க யாருன்னு பார்த்தீங்களா?'' என்று தாழ்ந்த குரலில் கேட்டுவிட்டுப் பங்காருவின் முகத்தை ஆராய்ந்தாள் அலமேலு.

''அலமேலு, நீ பார்த்தாயா?'' என்று பீதியுடன் கேட்டாள் பங்காரு.

''நன்ருகப் பார்த்தேன்.''

''ஆண்டவனே!''

''பார்த்ததுனலே என்ன, அத்தை? காலையிலேயே போய்க் கிணற்றங்கரையிலே மண்ணிலே இருந்த காலடியை அழிச்சிட்டேன். நான்தான் சொன்னேனே— என்னல் உங்க வீட்டுக்கு ஒரு தீங்கும் வராதுன்னு. பாலைக் குடிச்ச வீட்டுக்குப் பூனைகூட வால் ஆட்டுமாம்.''

''அலமேலு, நீ யாரோ அந்நியம் போலப் பேசாதே. எனக்கு மகள் நீ தான். என் மக்கள் எனக்கு அநுகூலம் இல்லை. உன் பெரியப்பாவுக்கும் எனக்கும் உன்மீது அளவு கடந்த பிரியம். அதைக் காட்டிக்கொள்ள வாய்ப்பில்லாமல் கடவுள் சோதித்துவிட்டார்.''

அலமேலுவின் நெஞ்சம் இளகி விட்டது. அவள் பங்காருவைத் தழுவிக் கொண்டு, ''நீங்கள் பயப்படாதீங்க, அத்தை'' என்றாள்.

''நானும் அவனைப் பார்த்துவிட்டேன். நான் வாய் திறப்பதற்குள், பெற்ற தாய்னுகூடப் பார்க்காமல் போட்டு விட்டானே, பாவி!'' என்று புலம்பினாள் பங்காரு.

''உங்களுக்குக் கொடுப்பனையே இல்லை, அத்தை'' என்றாள் அலமேலு.

''போன ஜன்மத்தில் என்ன பாவம் செய்தேனே?''

''பாவம் செய்யவில்லை, பூஜைதான் செய்தீர்கள். உங்கள் பூஜை வீண் போக வில்லை, அத்தை. மாமா பிழைத்து விட்டாரே, அதைப் பாருங்கள்.''

''அம்மா, 'அந்த நகைப் பெட்டியை என்கிட்டே கொடு'ன்னு அவன் கேட் டிருந்தால், நான் கொடுத்திருக்க மாட் டேனு? அதற்காகச் சொந்த வீட்டிலேயே திருடணுமா? கொலைகூடச் செய்து விட்டிருப்பான்! நீயும் படவேண்டி யிருந்துது, பார்!'' என்று சொல்லிச் சொல்லி அழுதாள் பங்காரு.

''அதுக்கு என்ன செய்வது, அத்தை?''

''அம்மா, நீ ஏன் 'அத்தை, அத்தை'ன்னு கூப்பிடறே? அதுக்குத் தான் நான் அருகதை இல்லையே?''

''எப்படிக் கூப்பிட்டா என்ன?''

அதற்குள் நளினி வந்துவிடவே, அவர் கள் பேச்சு தடைப்பட்டது

''பங்காரும்மாவை நாளைக் காலை கூட்டிக்கிட்டுப் போகலாமாம். நம்ப டாக்டரே கூட்டிக்கிட்டு வரேன்ருரு. நாம் போவோம் வா, அலமேலு'' என்று அழைத்தாள் நளினி.

அலமேலு நளினியுடன் கிளம்பினாள்; அவள் மனத்துள் என்ன என்னவோ

யோசனைகள் அலைமோதின. நளினியும் அவளை நெருங்கி ஒன்றும் பேசவில்லை. இந்திரா காலனி வந்ததும், நளினி நேரே அலமேலு வீட்டுக்கே காரைச் செலுத்தினாள்.

''நீங்க எப்பவும் மீனாக்கா வீட்டு வாசலிலே தானே நிறுத்திடுவீங்க?'' என்றாள் அலமேலு.

''உங்கள் வீடு மாரியம்மன் கல்லுக்கு ரொம்பக் கிட்டே இருக்கிறது. அதனாலே தான் மீனா வீட்டு வாசலில் நிறுத்திப் பிடுவேன். இன்னிக்கு அங்கே யாருமில்லையே''

''டாக்டர் இருப்பாரே?''

''அவரும் இல்லை. அது சரி, மீனா இல்லைன்னா நமக்கு யாருமில்லை போல் தான். பங்காரும்மா இல்லைன்னா அவங்க வீட்டுக்கும் போகத் தோணலை.''

''ஆமாம், அக்கா.''

''ஆரம்பிச்சயா 'அக்கா'ன்னு..''

அலமேலு சிரித்துக்கொண்டே இறங்கினாள். நளினியும் இறங்கி வந்தாள்.

மாணிக்கம் தன் அறையிலிருந்து எட்டிப் பார்த்தான். ஆசிரியர் வீட்டுக்குப் போவதற்கு உடையணிந்து அவன் தயாராக நின்றான். அதைக் கண்டு நளினி ''நீங்க என்னோடு வறீங்களா?'' என்று கேட்டாள்.

''வேண்டாம். நான் ராமகிருஷ்ண மடத்துக்குப் போய்விட்டு வருகிறேன்'' என்றான் மாணிக்கம்.

நளினி தன் கைக்கடியாரத்தைப் பார்த்துவிட்டு, ''ரொம்ப நாழிகையாகி விடும்'' என்றாள், சுருக்கமாக.

''ஆகட்டுமே? நீ முன்னாடி போய்க் கொஞ்சம் என் வேலையைப் பாரேன்.''

''ஏனோ? அவரவர் வேலையை அவரவர் தான் செய்யணும்.''

''அப்ப, அவங்க அவங்க செஞ்சிக் கட்டும்னு மத்தவங்க பேசாமல் இருக்கணும்.''

''சரி, நடந்தே போங்க.''

''சரிங்க'' என்றான் மாணிக்கம். உடனே அவன், செருப்பை மாட்டிக் கொண்டு தெருவில் இறங்கிவிட்டான்.

நளினியும் மாணிக்கமும் பேசினதை அலமேலு கவனிக்கவேயில்லை. அவள் நேரே தன் தாயைத் தேடிக்கொண்டு உள்ளே சென்றுவிட்டாள். இப்போது நளினி அவளைத் தேடிக்கொண்டே சமையல் அடுப்பு வரை போனாள்.

''கம்பு வடை தட்டியிருக்கேன் சாப்பிடறயா?'' என்று கேட்டுவிட்டு முன் பக்கம் யாரும் இல்லையா என்று எட்டிப் பார்த்தாள் தனபாக்கியம்.

''கொடுங்க. யாரைப் பார்க்கிறீங்க?'' என்று விசாரித்தாள் நளினி.

''முத்து இருக்கானான்னு பார்த்தேன். அவன் கோவிச்சுக்குவான், 'உன் சோள அடையும், கேழ்வரகு களியும் அவர்கள் முன் கொண்டு வராதே'ன்னு. முன்னே கூட ஒரு நாள் சொன்னான்.''

''அவர் சொல்லட்டும். எனக்குப் பிடிச்சதை நான் சாப்பிடுகிறேன். கொடுங்க. இரண்டு கட்டிக் கொடுங்க. எங்க அப்பாவுக்கும் பிடிக்கும்'' என்றாள் நளினி.

''முத்துவுக்குத் தெரிஞ்சா..'' என்று தயங்கினாள் தனபாக்கியம்.

''பரவாயில்லை, கொடுங்க.''

தனபாக்கியம் மந்தார இலைச் சருகில் பத்து வடைகளை வைத்துக் கட்டி நளினியிடம் கொடுத்தாள்.

அதை வாங்கிக்கொண்டு, கையிலிருந்த ஒன்றைக் கடித்துத் தின்று கொண்டே நளினி காரை ஓட்டிச் சென்றாள்.

அலமேலு, தன் தோழியை வழியனுப்பி விட்டு உள்ளே வந்தாள். ''அம்மா, டாக்டர் வீட்டுக்குப் போய்க் கணக்குப் புத்தகத்தை எடுத்து வந்திடு. அப்புறம் பால் விநியோகம் செய்யணும். நளினியைப் போகச் சொல்லிவிட்டேனே?'' என்று யோசித்தாள்.

''நான் டாக்டர் கிட்டே சொல்லிட்டு வரேன். பாலை நம் வீட்டிலேந்தே கொடுப்போம். யார் வந்தாலும் இங்கே அனுப்புவார் டாக்டர். அவருக்கு என்ன வேணும்னு கேட்டுட்டு வரேன்'' என்று கூறி, தனபாக்கியம் டாக்டர் வீட்டுக்குச் சென்றாள்.

அலமேலு அடுப்பைக் கவனிக்க அங்கேயே அமர்ந்தாள்.

நளினியிடமிருந்து கற்றுக்கொண்ட புதுப்பாட்டு அவள் வாயில் ஒலித்த வண்ணம் இருந்தது. முதலில் தனக்குள் பாடியவள், பிறகு உரக்கவே பாட ஆரம்பித்தாள். 'அலைபாயுதே, கண்ணா' என்று அவள் உருக்கமாகப் பாடினாள்.

அவள் அடுப்படி வேலையை முடித்துக் கொண்டு எழுந்துவிட்டாள். புதியதாக அவர்கள் வாங்கியிருந்த பித்தளை ஸ்டவ்வைப் பளபளவென்று தேய்த்து வைத்தாள். பாட்டிலே புதிய புதிய சங்கதிகள் தோன்றின. அவள் அநுபவித்துப் பாடிக் கொண்டேயிருக்க, தெருவில் ''போஸ்ட்'' என்று குரல் கேட்டுப் பாட்டை நிறுத்தி விட்டு, முன் பக்கம் சென்றாள். 'நம்ப வீட்டுக்கு யார் தபால் எழுதப் போறாங்க? அண்ணனுக்குத்தான் இருக்கும்' என்று எண்ணியபடி போனாள்.

இரண்டு கடிதங்கள் மாணிக்கத்தின் பெயருக்கு வந்திருந்தன. அவள் அவற்றை வாங்கிப் பத்திரமாக வைத்துவிட்டு வேலைகளைக் கவனிக்கலானாள்.

தனபாக்கியம் பால் விநியோகச் சாமான்களைத் தூக்கிக்கொண்டு வந்து உள்

கூடத்தில் வைத்தாள். யசோதா உதவியுடன், பால் விநியோக வேலை நடந்தது.

அதன் பிறகு சில பெண்கள் வந்தார்கள். மீனாட்சி கூட்டுறவுக் கடை ஒன்று தொடங்கியிருந்தாள். அதன் நிர்வாகத்துக்காகச் சில பெண்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அலமேலு அவர்களுக்கு விவரம் சொல்லி, கடைச் சாவியைக் கொடுத்துவிட்டு, "நான் பிற்பகலில் வந்து பார்த்துக்கிறேன். மத்தபடி இன்னிக்கு எல்லா வகுப்புகளும் கிடையாதுன்னு சொல்லிடுங்க' என்று சொல்லி, அவர்களுக்குக் கற்கண்டு விநியோகம் செய்தாள். "மீனாக்காவுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறதே!" என்று சொல்லி உபசரித்தாள்.

"வகுப்பு நம்மைச் சேர்ந்தது. நாமும் நம்பக் குழந்தைகளும் படிப்பது. கடைக்கு வருவது பொதுஜனங்க. அதை மூடினால் எத்தனை பேர் ஏமாற்ற மடைவாங்க?" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள் அலமேலு.

"நாங்க போய்ப் பார்க்கணுமே, கடையையும் இன்னிக்கு மூடிட்டா, என்ன?" என்று அவர்கள் கேட்டார்கள்.

"மீனாக்காவைவிட இவ கண்டிப்பு! நேற்று, முந்தாநாள் சாக்குப்பை மாதிரி தாவணி போட்டுக்கிட்டுத் திரிஞ்ச அலமேலுவா இவ!" என்று கன்னத்தில் கை வைத்துவிட்டு, அவர்கள் வேறு வழியின்றி வேலைக்குக் கிளம்பினார்கள்.

அலமேலு ஒரு முறை சமையலறையைக் கவனித்துவிட்டு வந்தாள். பால் விநியோகம் முடிந்ததும், யசோதாவும் அவளும் அந்தப் பாத்திரங்களைக் கழுவிக் கவிழ்த்து வைத்தார்கள்.

அவள் காய்கறி நறுக்கப் போனபோது தனபாக்கியம் உள்ளே போய்விட்டாள். என்னதான் கவனிக்க வேண்டாமென்று வேலைமீது கவனம் செலுத்தினாலும், கட்டுப் போட்ட அவள் தலை விண் விண் என்று வலிக்க ஆரம்பித்தது. அவள் சற்று நேரம் படுத்தாள். செருப்பொலி கேட்டு எழுந்தாள்.

"தங்கச்சி, எதனாச்சும் லெட்டர் வந்திருக்கா?" என்று கேட்டான் மாணிக்கம்.

"ஆமாம், அண்ணா. உன் ரூமிலே வச்சிருக்கேன்."

"ஏன், தலையை வலிக்குதா?" என்று பரிவோடு கேட்டான் அண்ணன்.

"ஆமாம். சற்று நேரம் படுக்கலாம்னு பார்த்தேன்."

''சரி, நீ படுத்துக்க'' என்ற அவன், தன் அறைக்குள் போய்க் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான்.

விவசாய இயந்திரங்கள் செய்யும் 'ஜனகர் தொழிற்சாலை' என்ற நிறுவனத்தினர், சிறந்த விவசாய ஆராய்ச்சிக் கட்டுரைக்குப் பரிசு தருவதாக விளம்பரம் செய்திருந்தார்கள். ஆசிரியர் மாணிக்கத்தை வற்புறுத்தி அதற்கு எழுத வைத்தார். அந்தக் கட்டுரைக்கு முதற் பரிசு அவனுக்குக் கிட்டிவிட்டது. அதைக் கண்டதும் அவனுக்கு அளவற்ற ஆச்சரியம்.

ஆசிரியருக்கு டெலிபோன் மூலம் தகவல் கிடைத்துவிட்டிருந்தது. கம்பெனிக்காரர்கள் தங்கள் பரிசு விழாவைச் சர்வகலாசாலையிலேயே வைத்துக்கொள்வதாகக் கூறியிருந்தனர். அதைத் தெரிவித்த ஆத்மநாதன், மாணிக்கத்தை வீட்டுக்குச் சென்று கடிதத்தைக் கொண்டுவரச் சொன்னார். இப்போதும் அவன், தன் வெற்றியைத் தானே நம்பாமல் வியந்துகொண்டு நின்றான்.

பிறகு அவன், அலமேலுவின் அருகில் சென்று மெதுவாக அமர்ந்தான். ''என்ன, அண்ணா, கடிதம்?'' என்று கேட்டாள் அவள்.

''நான் முன்னே ஒரு போட்டிக்குக் கட்டுரை எழுதினேன், இல்லை?''

''ஆமாம்.''

''அதற்கு முதல் பரிசு ஆயிரம் ரூபாய் கிடைச்சிருக்குது..''

தலைவலியையும் பார்க்காமல் அலமேலு துள்ளி எழுந்தாள். ''அண்ணா, உனக்காக நான் நெதமும் மாரியம்மன் கல்லுக்கு மஞ்சள் பூசிக் கர்ப்பூரம் கொளுத்தினேன். பலன் கிடைச்சுட்டது'' என்று ஆர்ப்பரித்தாள்.

''அது, சரி. அம்மா எங்கே?''

''அத்தை இல்லாதபோது வீட்டைக் கவனிக்கலாம்னு போனாங்க. எனக்குத்தான் போகப் பிடிக்கலை. அவங்க எனக்குப் பணம் வைக்காமல் இருந்தால், அங்கேயே கிடப்பேன். இப்ப எனக்குப் பிடிக்கலை.''

''ஆமாம், தங்கச்சி. நமக்கு எதுக்கு ஊரார் வீட்டுப் பணம்?''

''சில சமயம் யோசிக்கும்போது, வாங்கிக் கொள்ளலாம்னு தோணுது'' என்று கூறிவிட்டு, அண்ணன் முகத்தை ஆராய்ந்தாள் தங்கை.

''எதுக்கு?''

''உனக்காகத்தான், அண்ணா. உனக்குத் திறமை இருக்குது. புகழ் வருது. பணமுடையினாலே நீ முன்னேறாமல் இருக்கக்கூடாது, பார். கையிலே வெண்ணெய்யை வச்சுக்கிட்டு..''

''வேண்டாம். எனக்கு அதிலிருந்து ஒரு செல்லாக் காசு வேண்டாம்.''

''இதேபோல நிறையப் பரிசு வரட்டும்'' என்றாள் அலமேலு.

''ஆமாம், வரும்! பார்த்துக்கிட்டு இரு. உன்னைவிட மோசமானவங்க இருக்காங்கபோல. இல்லேன்னா, எனக்கு யார் கொடுப்பாங்க?''

''நளினி சொல்றதைக் கேட்கணுமே!''

மாணிக்கம் ஆவலுடன் தங்கையைப் பார்த்தான். ''நளினி என்ன சொல்லிச்சு?'' என்று கேட்டுக் கடுமையாக முகத்தை மாற்றிக்கொண்டான்.

அலமேலு சிரித்தாள். ''நளினி உன்னைப் பற்றிப் பேசவே கூடாதா? அது ஏன் இப்படி முகத்தைக் கடுகடுன்னு வச்சிக்கிறே?'' என்று கேட்டாள்.

''நீங்கள் இரண்டு பேரும் உங்க சங்கம், தையல், பூ, வளையன்னு பேசுங்க, பரவாயில்லை. என்னைப் பற்றி அந்தப் பொண்ணு எதுக்குப் பேசணும்?''

''நான் இங்கே உன்னோடு பழகுகிறேன். அது அங்கே பழகுகிறது. நாங்க இரண்டு பேரும் பேசினா உனக்கென்ன? அதுக்கு உன்மேலே எவ்வளவு கரிசனம் தெரியுமா? உன்னைப் பற்றி அவங்க அப்பா அப்படிப் புகழ்கிறாராமே?''

''இங்கே நம்மை நம்ப அப்பா பேசற மாதிரிதான் அவரும் பேசுவாரு. அவங்க திட்டறதை வாங்கிக்கிறதுக்கு தான் ஒரு பாத்திரம். ஐயோ, இங்கேயே உட்கார்ந்திட்டேனே? ஆசிரியர் காத்துக்கிட்டு இருப்பாரு. இந்தா, தங்கச்சி, நீயே அப்பா, அம்மாகிட்டே சொல்லிடு, என்ன?'' என்று கூறிவிட்டு மாணிக்கம் எழுந்துவிட்டான்.

''போகும்போது கடையிலே நின்னு, அப்பாகிட்டே சொல்லேன்'' என்று யோசனை கூறினாள் தங்கை.

''விளையாடறியா? அவரு கடைத் தெருவே அதிரும்படி என்னை ஏசுவாரு'' என்று கூறிவிட்டு அவன் கிளம்பினான்.

அலமேலு அங்கேயே படுத்து, மாணிக்கத்தைப் பற்றிச் சிந்தித்தாள். 'பாவம், அண்ணாவுடைய சுபாவத்துக்கு, ஒருத்தர் உற்சாகப்படுத்திக்கொண்டே இருக்கணும். இந்த அப்பாவோ எப்பப் பார்த்தாலும் குத்திக் காட்டிச் சத்தம் போடறாரு. இந்தப் பரிசு கிடைச்சதும் நல்லதுதான். அண்ணனுக்கும் தன்னம்பிக்கை ஏற்படும். அப்பாவுக்கும் மகனைப் பற்றிக் கொஞ்சம் மதிப்பு உயரும்' என்று ஓரளவு திருப்தி பெற்றாள்.

(தொடரும்)



21. பாராட்டு விழா

உடையை அணிந்தபின் மாணிக்கம் தன் உருவத்தைக் கண்ணுடியில் பார்த்துக்கொண்டான். காட்சி அவனுக்கே திருப்தியாக இருந்தது. முறுவல் அவன் முகத்தில் பிரதிபலித்தது. அவன் பின்னல் வாசற்படியருகில் நளினி வந்து நின்றுள். இருவரின் உருவங்களும் ஒருங்கே கண்ணுடியில் தெரிந்தன. மாணிக்கம் விலகிக்கொண்டான்.

"என்ன, நீங்கள் தயார்தாஞ?" என்று கேட்டாள் நளினி.

"'நீ தயாரா?' என்று கேட்டால் போதும்போல இருக்கிறதே?" என்ருன் மாணிக்கம்.

"என்ஞல் முடியாது."

"அப்படியாஞல் என்ஞலும் முடியாது."

"நீங்கள் பத்மினியிடம் மட்டும்....."

"நீங்கள் சுந்தரத்தினிடம் மட்டும் ஒருமையில் பேசவில்லையா? பார்க்கப் போஞல் அவனிடந்தான் மரியாதை வைத்துப் பேசவேண்டும்."

"ஏனே?"

"நான் சக மாணவன். நீ என்று அழைக்கலாம். அவன் அத்தை மகன்."

"சரிதான். இனிமேல் முறை தெரிந்து நடந்துகொள்கிறேன். உங்களை அப்பா வரச்சொன்ஞர்" என்ருள் நளினி.

"வருகிறேன் என்று சொல்லுங்கள்."

நளினி அவனை ஒரு பார்வை பார்த்தாள். மாணிக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

சற்றுப் பொறுத்து அவர்கள் காரில் போனபோது அவன் முகம் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தது.

"என்னடா பரிசு பெறப் போகிறவனைப்போல இல்லையே உன் முகம்? பலிபீடத்துக்குப் போகிற ஆடுமாதிரி..." என்று கேட்டார் ஆத்மநாதன்.

"லேசாகத் தலை வலிக்கிறது" என்ருன் மாணிக்கம்.

"தலை வலிப்பானேன்? பரிசு கிடைத்திருக்கிறது. உன் முயற்சி வெற்றி பெற்றிருக்கிறது. நம் சர்வகலாசாலையிலேயே வந்து அவர்கள் பரிசளிப்பு விழா நடத்துவதே நம்மைப் பெருமைப் படுத்துவதாகும். தைரியமாக நிமிர்ந்து நிற்கவேண்டாமா? சாதனைகள் செய்தால் மட்டும் போதாது; பதவிகள் ஏற்ருல் மட்டும் பற்ருது; அந்த அந்த இடத்தை வகிக்கத் தெரியவேண்டும்."

மாணிக்கம் சிரித்தான். மீண்டும் அவன் பார்வை பின் இருக்கையில் தகப்பஞர் பக்கத்தில் அமர்ந்திருந்த நளினியின் மீது சென்றது.

நளினி அழகே உருவாக அங்கு வீற்றிருந்தாள். இளம் ரோஜா நிறத்தில் ஆரம்பித்துக் கருஞ் சிவப்பு வரை கூடிய ஜார்ஜட்டுப் புடைவை உடுத்திருந்தாள். அரை அங்குலம் ஜரிகைக் கரை போட்டிருந்தது. இள ரோஸ் நிறத்தில் ரவிக்கையும் அணிந்திருந்தாள். காதிலும் கழுத்திலும் சிவப்புக்கல் நகைகள் டால் அடித்தன. நெற்றியில் ஆழ்ந்த சிவப்பில் பூசனி விதைபோல் திலகம் இட்டுக்கொண்டிருந்தாள்.

ஒரு கண் வீச்சில் மாணிக்கம் அப்படியே அவள் தோற்றத்தைத் தன் இதயத்துக்குள் பதித்துக் கொண்டான். 'பத்மினி மட்டும் இங்கு இருந்தால் அப்படியே வரைந்து தந்து விடுவாள்' என்று கூறிக்கொண்டான், ஏக்கத்துடன்.

அவனுடைய ஆராயும் பர்வையை உணர்ந்த நளினி, சட்டென்று தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, கல்லூரித் தோட்டப் பக்கமாகப் பார்த்தாள்.

தகவல் வந்த கடிதத்தை எடுத்துக் கொண்டு அன்று அவன் ஆசிரியரிடம் போனபோது, நளினி தந்தையின் அருகில் இருந்தாள். சொந்தமாக நெருக்கமாக, பெருமையோடு அவள் அவனைப் பார்த்த பார்வை, அவள் கண்களில் பளபளத்த ஆனந்தக் கண்ணீர் யாவும் அவனை மிகவும் ஆட்டி வைத்தன. அவள் கண்ணீர் முத்துக்கள் அவன் கண்களுக்குக் குடி வந்தன. அவளது நீள மூச்சுக்கு எதிர் பெருமூச்சு விட்டது அவன் நெஞ்சம். அவன் கையைப் பிடித்துக் குலுக்கத் துடித்த அவள், கட்டுப்பாடுடன் தன் இரு கைகளையும் பிசைந்து கொண்டு தவித்தாள். அவன் தன் கைகளை மார்பின்மீது கட்டிக்கொண்டான்.

அவன் அறிவு, 'டேய் முத்து ஜாக்கிரதை! பத்திரம்! திரும்பி ஓடு, நிற்காதே' என்று அவனை வெருட்டியது.

அதிலிருந்து நளினியிடம் அவன் அதி ஜாக்கிரதையுடன் பழக ஆரம்பித்தான். 'நீ' என்று அழைத்தால் தானே நளீ என்று மேலும் மேலும் பேச்சு வளருகிறது. அவளும் வரவர, முத்து என்று கூப்பிட ஆரம்பித்து விட்டாளே!'

அவன் இரண்டு நாட்கள் சாப்பாட்டுச் சமயம் ஆராய்ச்சித் தோட்டத்தின் எந்த மூலையிலோ போய்ப் புகுந்து கொண்டான். நளினி எது கேட்டாலும், அவள் முகத்தை நேராகப் பார்க்காமல் பேசினான்.

இப்போது சிந்தனைகளை அப்புறப் படுத்திவிட்டு அவன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

''மாணிக்கம், சற்றுச் சிரித்த முகத்துடன் இரு. நான்தான் பக்கத்திலேயே இருக்கிறேனே! ஏதாவது நாலு பேச்சுப் பேசணம்னு வந்தால் பேசுவியா?'' என்று கேட்டார் ஆசிரியர் பரிவுடன்.

''பேசத் தயாராக வரலையே?'' என்று சற்றுத் தவித்தான் மாணிக்கம்.

''இந்தா, நாலு விவரம் குறித்துக் கொண்டு வந்தேன். பொதுவாகப் பேசும்போதும் அந்தக் கம்பெனிக்கு நன்றி சொல்லணும். உங்க அம்மா அப்பா, அலமேலு யாரையாவது அழைத்து வரதுதானே? நீ பரிசு வாங்குவதைப் பாப்பாங்களே!'' என்றார் ஆத்மநாதன்.

அவருடைய அன்பும் பரிவும் அவனுக்குப் பெருமையாகவும் இருந்தன; சங்கடமாகவும் இருந்தன. தன் பெற்றோர்களை இந்தச் சூழலுக்கு அழைத்து வரலாம் என்பதே அவன் சிந்தனைக்கு வரவில்லை. அவன் நளினியைப் பார்த்தான். அவள் பிடிவாதமாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். ஆசிரியருக்குப் பதில் சொல்லும் சாக்கில் அவன் பின்புறமாகத் திரும்பி அவளைக் கண்ணுற்றான். ''நளினி, அவங்க அம்மா கூட வரலையே?'' என்றான்.

''ஆமாமடா. நளினி, உனக்குக்கூடத் தோன்றலையே? உன் அம்மா வந்திருப்பாளே! பெருமைப்பட்டுக்கொண்டிருப்பாளே!'' என்றார் ஆசிரியர்.

நளினி பதிலே சொல்லவில்லை.

மாணிக்கமும் திரும்பிக் கொண்டான. நளினிக்கு வருத்தம் என்பது அவனுக்குப் புரியாமல் இல்லை. 'அதற்காக? எப்போதாவது ஒரு திட்டம் நடக்கவேண்டாமா?'

கார் கல்லூரித் தோட்டத்துப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தது. மாணிக்கம் ரத்தினத்தின் பக்கமாகச் சாய்ந்து தாழ்ந்த குரலில், ''ரத்தினம், கொஞ்சம் நிறுத்து. நான் இறங்கிக் கொள்கிறேன்'' என்றான்.

வண்டி தாமதித்தது. மாணிக்கம் இறங்கிக் கொண்டான்.

''எங்கேடா நழுவுறே? எங்கேயும் போயிடாதே. இன்று ஒருத்தர் வரப் போகிறார். செல்வாக்குடையவர். அவருக்கு உன்னை அறிமுகப்படுத்தணும்.''

''சரி, ஸார், சீக்கிரம் வந்து விடுகிறேன்.''

''உன் சிநேகிதப் பசங்களுடன் எங்கேயாவது நின்னுடாதே. நான் தேட முடியாது. என் கூடவே இரு'' என்று பணித்தார் பெரியவர்.

''சரி, ஸார்!'' என்று கூறிவிட்டு, கார் கிளம்பும்வரை மரியாதையாக நின்றான், மாணிக்கம். கார் அப்பால் சென்றதும், அவன் தோட்டத்துக்குள் புகுந்து, வரப்புகளில் நடந்து பாத்திகளைத் தாண்டித் தோட்டக்காரனை நெருங்கினான்.

''ஐயா, ஐயா, மெள்ள வாங்க. ஒரு நிமிஷம் தப்பினால், உடுப்பெல்லாம் சேறாகி விட்டிருக்குமே!'' என்றான் தோட்டக்காரன்.

''பார்த்துத்தான் வரேன். எனக்கு அவசரமா ஒண்ணு வேணுமே!''

''என்ன சொல்லுங்க. உங்களுக்கு இல்லாததா? நான் தண்ணி பாய்ச்சிச் செடியை வளர்க்கிறேன், நீங்க பாட்டைப் பாடியே வளர்த்துடுவீங்களே!''

''அது கிடக்குது. இரண்டு சிவப்பு ரோஜாவும் ஒரு வாழை நாரும் வேணுமே'' என்று கேட்டான் மாணிக்கம், அவசரக் குரலில்.

''புரொபஸர் வீட்டுச் சின்னம்மாளுக்கா?'' என்று கேட்டான் தோட்டக்காரன், விஷயமறிந்த சிறுநகையுடன்.

'இவனுக்கு எப்படித் தெரியும்?' என்று நினைத்துக் கொண்டான் மாணிக்கம்.

''என்னுங்க நீங்க கூச்சப்படறீங்க? மத்தவங்களெல்லாம் இப்படித்தான்

என்னைக் கேட்டுப் பூ வாங்கிப் போய் அம்மாமார்களுக்குத் தராங்க.''

மாணிக்கம் மூன்று சிவப்பு ரோஜாக்களைப் பெற்று, மீண்டும் பாத்திகளைத் தாண்டி, தோட்டத்தின் ஒரு மூலையில் போய், அந்தப் பூக்களை அழகாக ஒன்றாக இணைத்துக் கட்டி எடுத்துக்கொண்டு, கல்லூரிப் பக்கமாகச் சென்று கைக்குட்டையினால் தன் காலணிகளைத் துடைத்துவிட்டுக் கல்லூரிச் சபைக் கூடத்துக்குச் சென்றான். போகும்முன், தாழ்வாரத்துக் கோடியில் உள்ள ஒரு குரோட்டன்ஸ் செடிக்குள் ரோஜாச் செண்டை மறைத்து வைத்தான்.

நளினியும் சில பெண்களும் ஒரு பக்கமாக நாற்காலிகளில் அமர்ந்து சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர். மாணிக்கத்துக்கு அங்கு நெருங்கவும் லஜ்ஜை; ஆசையும் விடவில்லை. மென்று விழுங்கிக்கொண்டு நெருங்கி அவன், "மன்னிக்கணும், நளினி. உங்க அம்மா என்னவோ சேதி சொல்ல விரும்பறாங்கபோல. ரத்தினம் கூப்பிடறான்'' என்றான்.

நளினி உடனே எழுந்து தன் கார்ப் பக்கம் நடந்தாள். மாணிக்கம் அவள் செல்லும்வரை பார்த்துவிட்டு, வேறு ஒரு வாசற்படி வழியாக வெளியேறினான். தாழ்வாரத்தைச் சுற்றி அவன் வரும்போது, நளினி தோட்டத்தில் இறங்கி, கார் நிற்குமிடத்தை நாடிச் செல்வது தெரிந்தது. அவன் ஒரே எட்டில் அவளை நோக்கிச் சென்று, ''நளினி!'' என்று குரல் கொடுத்தான். நளினி அவனைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

''நளினி, ரத்தினம் கூப்பிடவில்லை. இப்படி வாயேன்'' என்று அவன் தாழ்வாரத்து ஓரத்துக்கு அழைத்தான்.

நளினி ஒன்றும் விளங்காமல் அவனைத் தொடர்ந்தாள். மாணிக்கம் செடிக்குள் கையை விட்டுப் பூச்செண்டை எடுத்து அவளிடம் நீட்டினான்.

''இது ஏது?''

''ஏதானால் என்ன?''

''அம்மா அனுப்பினாங்களா? என்ன சொல்லி அனுப்பியிருக்காங்க?''

''உன்னைப் பெற்ற அம்மா இல்லை; கலைத்தேவி என்று ஓர் அன்னை இல்லையா? அவள்தான் என்னைக் கூப்பிட்டு, 'டேய், மாணிக்கம் சிவப்பு ரோஜா வைத்துக்கொண்டால்தான் நளினியின் அலங்காரம் பூர்த்தியாகும்' என்றாள். உடனே ஓடினேன்.''

''ரத்தினம் கூப்பிட்டான்னு பொய் சொல்வானேன்?'' என்று போலிக் கோபத்துடன் சிணுங்கினாள் நளினி.

''நான் பொய்யே சொல்லமாட்டேன். மாணிக்கமும் ரத்தினந்தானே?'' என்று கேட்டான் அவன், குறும்பாக.

பூச்செண்டைத் திருப்பித் திருப்பி அழகு பார்த்தாள் நளினி. ''எவ்வளவு அழகாக இருக்கிறது! நீங்களா கட்டினீர்கள்?'' என்று அவள் கேட்டபோது, அவள் குரல் கம்மிவிட்டது.

''பூக் கட்டுகிற குடும்பத்தைச் சேர்ந்தவன்தானே?''

''மிக்க நன்றி.''

''நன்றிக்காக நான் செய்யவில்லை.''

''பின்னே?''

''என் கண்ணின் திருப்திக்காகச் செய்தேன்.''

அவள் அவனைப் பார்த்தாள். அவன் அவள் கண்களில் குழைவைப் பார்த்தான். உடனே தன் நாக்கைக் கடித்துக்கொண்டான். ஒரு விநாடி மனத்தை நெகிழவிட்டால் போதும். நாக்குத் தன் போக்கில் கொட்டிவிடுகிறதே!

''முத்து!'' என்றாள் நளினி.

''என்ன, சிப்பி?'' என்று கேட்டுவிட்டு மாணிக்கம் தன் அவஸ்தையை மறைக்கத் திரும்பி ஓடியேவிட்டான்.

நளினி சிறிது நேரம் நின்றாள். அவன் பேச்சை, அவன் செய்கையை, அவன் பார்வையை நினைத்துச் சுவைத்தாள். பூச்செண்டைக் காதோரமாக அழகாகப் பொருத்திக்கொண்டாள். பிறகு, தோழிகள் தேடுவார்களே என்று அங்கே திரும்பினாள். மாணிக்கம், சற்றுத் தள்ளி ஒரு நாற்காலியில் அமர்ந்து, ஒரு விரிவுரையாளருடன் பேசிக்கொண்டிருந்தான்.

''அட, நம் காலேஜில் பூக்கிற பூப்போல இருக்கிறதே?'' என்று ஒரு பெண் ஆர்ப்பரித்தாள்.

''மாணிக்கம் கொடுத்தாரோ?'' என்று ஒருத்தி, நாடக ரகசியம்போல அவன் காதுபடக் கேட்டாள். மாணிக்கம் தன் இருப்பிடத்தில் விறைத்துக்கொண்டான்.

''என் மாமா வந்திருக்கிறாரம்; பெங்களூரிலிருந்து வந்த ரோஜா; எனக்குப் பிடிக்குமென்று அம்மா அனுப்பியிருக்காங்க. நிறைய அனுப்பக் கூடாதா? உங்களுக்கும் தந்திருப்பேனே!'' என்றாள் நளினி சாவதானமாக.

மாணிக்கம் அமைதியடைந்தான்; என்ன சொல்லி விடுவாளோ என்று தவித்தவனுக்கு நிம்மதி ஏற்பட்டது.

பரிசளிப்பு விழாத் தொடங்கி நன்றாக நடந்தது. தொழிலக நிர்வாகி நல்ல அறிவாளி. விவரம் அறிந்து கச்சிதமாகப் பேசினார். மாணிக்கமும் பதில் சொல்லும்போது அழகாகப் பேசினான்; முதலில் எழுந்தவுடனே ஒருமுறை கூட்டத்தைத் துழாவினான். பின்னால் தோழிகள் மத்தியில் இருந்த நளினிமீது அவன் பார்வை நின்றது. அவள் கண்கள்

அவனுக்கு உற்சாகமூட்டின. முன்பு ஒரு நாள் அவள் கூறிய அறிவுரை நினைவு வந்தவனாகத் தன் அவைக் கோழைத் தனத்தை மறந்து, கம்பீரமாகப் பேசி முடித்தான்.

விழா முடிந்ததும் நளினியின் சிநேகிதிகளும், மற்றும் சில மாணவர்களும் மாணிக்கத்தைச் சூழ்ந்துகொண்டு பாராட்டினார்கள். நளினியின் முகந்தான் மாணிக்கத்துக்கு அமுதம்போல இருந்தது.

அதன் பிறகு ஒரு விருந்து இருந்தது. அப்போது நளினி மட்டும் வீடு திரும்பி விட்டாள். ஆத்மநாதன் மாணிக்கத்தைத் தம் அருகிலேயே வைத்துக்கொண்டு, சில பிரமுகர்களுக்கு அறிமுகப் படுத்தினார்.

அவர் வீட்டை அடைந்ததும் அவனை நிறுத்திவிட்டார். ''அப்புறம் வீட்டுக்குப் போகலாம். உட்கார். உன்னோடு பேச வேண்டும்'' என்று அவனை எதிரே ஒரு நாற்காலியில் அமர்த்தினார்.

அவன் விசைப் பொம்மையைப்போலச் 'கிவிக்'கென்று எழுந்து நின்றான்.

'உட்காருடா. நீ பெரிய ஆள்னு தானே இன்னிக்குப் பாராட்டு? அதுக்குள்ளே....''

''இருக்கட்டும், சொல்லுங்க, ஸார்.''

''உட்காரு முதல்லே.''

சோபாவின் விளிம்பில் உட்கார்ந்தான் மாணிக்கம். நளினியும் வந்து எதிரே ஒரு நாற்காலியில் அமர்ந்தாள்.

''கல்கத்தாவிலே தாவர இயல் ஆராய்ச்சிக் கூடத்தில் உனக்கு வேலை கிடைக்கலாம்; போகிறாயா?'' என்று கேட்டார் ஆத்மநாதன்.

''அவ்வளவு தூரம் போவதற்கு..''

''தூரம் என்ன? நீ பெண்பிள்ளையா? பெண்பிள்ளைங்கள் எல்லாம் ஸ்விட்ஸர்லாந்து, ஆஸ்திரேலியான்னு போய்ப் படிச்சுப் பட்டம் பெத்துக்கொண்டு வராங்க. இங்கே இருக்கிற கல்கத்தாவுக்குப் போகப் பயமா? அதுக்கு ரக்ஷை கட்டிக்கணுமா?''

''முதலில் போகப் பணம் தேவைப் படுமே?''

''பணந்தானா உனக்கு இல்லை? நான் எவ்வளவு வேண்டுமானாலும் தரேன். நீ சம்பாதித்துப் பின்னாடி எனக்குத் திருப்பிக் கொடு. நல்ல சூட் இரண்டு தச்சுக்கோ. துணிமணியெல்லாம் தயார் பண்ணிக்கோ. ஆயிரம் ரூபாய் தரேன். இந்த வேலை கிடைச்சால் அதிருஷ்டந்தான். எடுத்தவுடன் எண்ணூறு ரூபாய் கொடுப்பார்கள். பிறகு மேலே போகலாம். இன்று வந்தாரே, சதானந்தம்? அவர் என் நண்பர். இன்னும் இந்த வேலையைப்பற்றிப் பத்திரிகையிலே விளம்பரம் கொடுக்கவில்லையாம். ரகசியத்தில் இருக்கிறது. உனக்கு விருப்பமானால் சிபாரிசு செய்கிறேன்.''

மாணிக்கம் மௌனம் சாதித்தான். வேதனை தோய்ந்த முகத்துடன் அவரைப் பார்த்தான். நளினியைப் பார்த்தான். அவள் தரையைப் பார்த்தாள். ஆனால், அவள் தன் கைக்குட்டையை முறுக்கி எடுப்பதைப் பார்த்ததும் அவனுக்கு அவள் மனநிலை விளங்கியது. தன் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறாள் என்றும் புரிந்தது. அவன் வேதனை அதிகமாயிற்று.

''என்னடா, எப்பப் பார்த்தாலும் எதுக்கும் தயக்கம், எதுக்கும் ஒரு யோசனையா?'' என்றார் ஆத்மநாதன்.

சொல்லி வையுங்கள். எப்போ கிளம்ப வேண்டியிருக்கும்?''

மூன்று, நான்கு மாதமாவது ஆகும், விவரம் தெரிய. இப்பத்தானே நீ திருவாய் மலர்ந்திருக்கே? இனித்தான் அவர்களிடம் சொல்லி வைக்கவேணும். அதன் பிறகு முறைகள், சடங்குகள் எல்லாம் இருக்குமே?''

ஆத்மநாதன் முன்வந்து தனக்கு உதவுகிறேன் என்று கூறினது அவனுக்கு எவ்வளவோ மகிழ்ச்சியாக இருந்தது. ஆயினும் எடுத்த எடுப்பில் ஆயிரம் இரண்டாயிரம் என்று கடனை வாங்கிக்கொண்டு போனால், அதைத் திருப்பித் தர எத்தனை நாட்களாகுமோ? வாழ்க்கையை ஆரம்பிக்கும்போதே கடனோடு தொடங்கவேண்டுமா? அன்புக் கடன், நன்றிக் கடன் என்ற இவை இரண்டுமே அவனுக்குப் பிணைப்புகளாகத் தோன்றின. இன்னும் பணக் கடனும் பட வேண்டுமா?

'என்ன தவிப்பு உனக்கு? வாய் விட்டுத்தான் சொல்லேன்.''

''ஒன்றும் இல்லை, ஸார்.''

நளினியின் தாயார் அங்கு வந்து அவர்களுடன் அமர்ந்தாள். ''என்ன, தம்பி? என்ன பரிசு? எப்படி நடந்தது?'' என்று கேட்டாள்.

''ஆயிரம் ரூபாய் பரிசுங்க. நான் உங்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன்'' என்று சொல்லி எழுந்து, நெடுஞ்சாண்கிடையாக வணங்கினான் மாணிக்கம்.

''நீ தீர்க்காயுசாக, பெரும் புகழுமாக, நல்ல மனைவி கிடைத்து, நல் வாழ்வு வாழணும்'' என்று மனமார வாழ்த்தினாள் அந்த அன்னை.

''மாணிக்கம், உங்கள் அப்பா, அம்மாவை நான் பார்த்ததே இல்லையே! ஒரு நாள் உங்கள் வீட்டுக்கு வரோம்'' என்றார் ஆசிரியர்.

மாணிக்கம் தலைகுனிந்தான்.

''நீங்க வரேன்னா. நானே கூட்டிக்கிட்டுப் போயிருப்பேனே! ஏன், அப்பா, முன்னே டிராமா போட்டாங்களே? அப்ப நீங்க இவங்க அப்பாவையும் மன

வாளச் செட்டியையும் பார்க்கலே?'' என்று கேட்டாள் நளினி.

''பார்த்தேன், பார்த்தேன். நல்லாப் பழகலேயேன்னு அப்படிச் சொன்னேன்.''

''உங்க அம்மா செய்யற பலகாரத்தை யெல்லாம் நளினி தூக்கிட்டு வந்திடுறுளே! நல்ல கை மணம் அவங்களுக்கு'' என்று பாராட்டினுள் ஸ்ரீமதி ஆத்மநாதன்.

''நீங்க வருவது தெரிஞ்சால் நான் அப்பாவை வீட்டிலேயே இருக்கச் சொல்றேன்'' என்றுன் மாணிக்கம்.

''நாளைக்கு மாலே நாலு மணிக்குப் போவோமா?''

''சரிங்க'' என்று கூறி விடை பெற்றுன் மாணிக்கம்.

அவன் கால்கள் நேராக ரங்கபாளையம் பக்கம் அவனை அழைத்துச் சென்றன; ராமகிருஷ்ண மடத்தில் பூஜைக் கூடத்தில் போய், சந்நிதி முன் அவன் அமர்ந்தான். கண்களை இறுக மூடிக்கொண்டு சிந்தனையில் லயித்தான்.

அன்று நடந்த நிகழ்ச்சிகள் யாவும் விரிபடமாக அவன் மனக்கண் முன்



விரிந்தன. 'எவ்வளவோ கட்டுப்படுத்திக் கொண்டு, நளினியிடம் மனஸ்தாபத்தை உண்டு பண்ணிக்கொண்டு தூர விலகப் பார்த்ததென்ன? சர்வ கலா சாலைக் கூட்டத்துக்குப் போனதும் மெய்ம் மறந்து அவளுக்கு அலங்காரம் பண்ண முற்படுவதென்ன? இப்படியெல்லாம் நடந்து கொண்டபிறகு, அவள் முத்து என்று அழைக்காமல் என்ன செய்வாள்?'

அவன் தன் முட்டாள்தனத்தை நொந்துகொண்டான். இவ்வாறு நிர்ணய மில்லாத குணத்தினால் என்னவெல்லாம் பிற்காலத்தில் நேரும் என்பதும் அவனுக்கு இந்தச் சூழலில் புரிந்தது. முட்செடி ஒன்றிற்குள் சிக்கிவிட்டவன்போல அவன் துடித்தான்.

ஓர் ஆதரவான கை அவன் தலையைத் தொட்டது. அவன் கண்ணைத் திறந்து பார்த்தான். சுவாமிஜி நின்றுகொண்டிருந்தார்.

"என்ன, மகனே, இன்னமுமா ஒரு தெளிவு வரவில்லை? சாந்தமாக இருக்க இன்னமுமா கற்றுக்கொள்ளவில்லை? இங்கே வருவதையும் விட்டுவிட்டாய்."

மாணிக்கத்தின் தொண்டை கரகரத்தது. அவன் எழுந்தான். "எழுந்திருக்காதே, இரு" என்று கையினால் அவனை அமர்த்தினார் சுவாமிஜி. தாமும் மருங்கில் அமர்ந்தார்.

மாணிக்கம் தன் கண்ணில் கசியும் நீரைத் துடைத்துக் கொண்டான்.

சாமியார் மெல்ல நகைத்தார். அவன் முதுகை நீவிவிட்டார்.

"எனக்கு இங்கே தஞ்சம் அளிக்கமாட்டேன் என்கிறீர்களே! என்னால் வெளியே வாழ முடியவில்லையே! எனக்குப் பயங்கரமாக இருக்கிறது. தினமும் எழும் பிரச்னைகளை எதிர்க்கக்கூடிய தைரியம் இல்லை."

"கோழைகளுக்குத் துறவறத்தில் இடமே கிடையாது, அப்பனே. மேலும், மனிதன் உலகத்துக்கு எந்த விதமாவது பயன்படவேண்டாமா? பிறவி எடுத்ததற்கு அதுதானே பயன்? அதுதான் உனக்குக் குறிக்கோளாக இருக்க வேண்டும். சின்னஞ்சிறு இடையூறுகளைக் கண்டு தேம்பி அழுவது ஆண்மையா? பெரிய பெரிய இன்னல்கள்கூடக் கடவுள் அளிக்கும் சோதனைகளே; தலை நிமிர்ந்து, போராடி, வெற்றி பெறுவது பெருமையா? உளம் குழைந்து விம்மி அழுவது பெருமையா? எழுந்திரு. இனிமேல் இப்படித் தலைகுனிந்து, வாலைக் குழைத்துக்கொண்டு என் முன் வராதே! விநயத்தினால் தலை குனியலாமே தவிர, கோழைத்தனத்தினால் அல்ல."

மாணிக்கம் எழுந்து, சாமியாரின் காலைத் தொட்டு வணங்கி, கண்ணில் ஒற்றிக்கொண்டான்.

"சரி, இப்ப உன்னை அழுத்தும் கவலை தான் என்ன, சொல்லு? ஒளிக்காது மனம் திறந்து பேசு. பிறகு அங்கே ஐயன் பாதத்தில் மனம் திறந்து பிரார்த்தனை செய்" என்று கூறி, சுவாமிஜி பரமஹம்ஸரின் சந்நிதியைக் காட்டினார்.

மாணிக்கம், ஆத்மநாதன் கூறிய விஷயங்களை ஒன்று விடாமல் கூறினான். தான் கடன் வாங்க அஞ்சுவதைச் சொன்னான்.

சுவாமிகள் பொறுமையாகக் கேட்டு விட்டு, "நீ கடன் வாங்க மறுப்பதை நான் மெச்சுகிறேன். ஆனால், உன் விஷயத்தில் இந்த முறை கடன் பெறுவதனால் குற்றம் இல்லை என்று தோன்றுகிறது. கடனைத் திருப்பித் தரவேண்டுமே என்ற கவலை உன்னை வேலையில் நிலைத்து நிற்க உதவும். இல்லையேல், அங்கு ஒரு பூச்சாண்டியைக் கற்பித்துக்கொண்டு ஓடிவந்து விடுவாய். மேலும், குறிப்பிட்ட ஒரு தொகைக்குள் வாழ வேண்டும் என்ற நிர்ப்பந்தம் விழிப்பை ஊக்குவிக்கும். உனக்கு வாழ்க்கை மிகவும் சாதகமாக அமைந்துவிட்டது. உண்மையான கஷ்டம் வந்தால்தான் நீ உருப்படுவாய்" என்றார். இதைக் கூறிவிட்டு, அவர் தம் வேலைகளைக் கவனிக்க மடத்தின் உட்புறம் சென்று விட்டார்.

மாணிக்கம் சிந்தித்தவண்ணம் வெளியே வந்தான். பரிசுப் பத்திரத்தைச் சுவாமிக்குக் காட்டவில்லையே என்று நினைவு வந்தது. அவன் அதற்காகத் திரும்பவும், யாரோ ஒருவர் அவனைச் சுவாமிஜி கூப்பிடுவதாக அழைக்கவே, அவன் உள்ளே விரைந்தான்.

"பரிசுப் பத்திரத்தைக் காட்ட மறந்து விட்டேன். டிராப்ட் இதோ."

"பார்த்தாயா? நீ நினைப்பதெல்லாம் வெறும் கற்பனைத் தொல்லைகள். பார், பணமுந்தான் வந்துவிட்டது. இது போல இனியும் வராது என்று என்ன நிச்சயம்? நீ என்னிடம் முழு உண்மையையும் கூறியிருந்தால்...." என்று நிறுத்தினார் சுவாமிகள்.

மாணிக்கம் பதில் சொல்லவில்லை.

"சரி, நான் அதைக் கேட்பதற்குக் கூப்பிடவில்லை. இங்கே ஒரு பெரியவர் வந்திருக்கிறார். அவர் சப்த சக்தியைப் பற்றிப் பேசுகிறார், உனக்கு விருப்பம் இருந்தால் நாளைக்குக் காலையில் எட்டு மணிக்கு வரலாம்."

மாணிக்கத்தின் செவிகளில் தேனைப் பாய்ச்சியமாதிரி இருந்தது. பிறகு அவன் எப்படி நடந்தான், எப்படி வீட்டுக்கு வந்தான் என்பதே அவனுக்குப் புரியவில்லை. பஞ்சு மேகத்தில் மிதந்து

வந்ததுபோல மனம் வானம்பாடியாகப் பறக்க, அவன் வீடு வந்தடைந்தான்.

அவனுடைய தந்தை இரவு போஜனம் முடிந்து கையலம்பிக் கொண்டிருந்தார். மாணிக்கம் பரிசுப் பத்திரத்தையும் பணத்தையும் கையில் வைத்துக்கொண்டு காத்திருந்தான். தந்தை முன்பக்கம் வந்ததும், இரண்டையும் அவர் கையில் கொடுத்துக் கீழே விழுந்து வணங்கினான்.

"என்னடா இதெல்லாம்?" என்று, விரும்பாதவர்போலக் கேட்டார் தகப்பனார்.

கலகலவென்று சிரித்துக்கொண்டே வந்தாள் அலமேலு. "அண்ணன் பரிசு வாங்கப் போனதைச் சொன்னேனே, அப்பா? அதுதான் இது" என்று விளக்கினாள்.

"பணத்தை என்னடா செய்யப் போறே?" என்று கேட்டார் கந்தசாமி செட்டி.

'துணிமணி வாங்கத் தேவைப்படும், வெளியூர் போவதானால் உபயோகமாக இருக்கும்' என்று சொல்ல நினைத்தானே தவிர, அவன் நா எழவில்லை. அவன் மென்று விழுங்கிப் பேச்சைக் கிளப்புவதற்குள் கந்தசாமி செட்டி முந்திக் கொண்டார். "சரி, நானே கடைக்கு எடுத்துக்கிடறேன். ஒரு வட்டி தரேன். மாசம் பத்துரூபா போதாதா உனக்கு?" என்று கூறிவிட்டுப் பரிசுப் பத்திரத்தை மட்டும் அவனிடம் கொடுத்துவிட்டு, டிராஃப்ட்டை எடுத்துக்கொண்டு போய் விட்டார்.

மாணிக்கம் பரிதாபமாக விழித்துக் கொண்டு நின்றான். அவன் தாய் வந்தாள். "ஏண்டா அவர்கிட்டே பணத்தைக் கொடுத்தே?" என்று கண்டித்தாள்.

"பணத்தை மறைச்சிட்டுப் பத்திரத்தை மட்டும் காட்ட முடியுமா, அம்மா?"

"மாசம் பத்துரூவா அவராகக் கொடுத்தால்தானே? கேட்டு வாங்க வாவது தெரியுமா உனக்கு?"

"போ, அம்மா. நான் படிச்சதையும் பட்டம் பெற்றதையும் அவர் எப்படி அநுபவிப்பார்? என் முதல் பரிசு அவருக்கே இருக்கட்டுமே. அதிருஷ்டம் இருந்தால், வேறே சம்பாத்தியம் கிடைக்காதா?"

"அண்ணன் சொல்றது சரிதான், அம்மா. முதல் முதல் பரிசு வாங்கினதை அப்பாவுக்குக் கொடுக்கட்டுமே! நீ ஒண்ணும் சொல்லாதே, அம்மா" என்றாள் அலமேலு.

"பணத்திலேயே குறி, மனுஷன். வாங்கிப்பாரே தவிர, கொடுக்கும்போது மனம் வராது. இவனுக்கோ அங்கே மதிப்பான இடங்களுக்குப் போகவேண்டியிருக்குது. அதற்கு ஏற்ற பொருளை

புனைவு பெயர்க் காரணம்

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றிய ஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், நேரம் வாய்த்தபோதெல்லாம், பல தலைப்புகளிலே யாத்த பாக்களை, அந்தக் காலத்திலே புகழ் பரப்பிய இலக்கியத் தமிழ்த் திங்களேடான 'ஞானபோதினி'யில் வெளியிட்டு வந்தார். அந்தப் பாசுரங்கள் தனித் தனிப் பதினாலடி நீர்மையவாய், நேரிசை யாசிரியப் பாக்களால் வேவ்வேறு பொருளில் அமைந்தன. அவை 'கடவுள்' தொடங்கித் 'தொழில்' ஈறாக நாற்பது பாசுரங்களாகத் தனித்தியங்கின. அவற்றையெல்லாம் ஒருசேரத் தொகுத்துத் 'தனிப் பாசுரத் தொகை' என்னும் நூலாக வெளியிட்டார். இத் தொகை நூலின் முதற்பகுதி 1899-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத் தொடக்கத்தில் வெளியிடப் பெற்றது. சென்னைத் தாம்ஸன் கம்பெனியாரால், முதற்பதிப்பாக ஆயிரம் பிரதிகள் வெளியிடப்பெற்றன. முப்பத்தெட்டுப் பக்கங்கள் கொண்ட அக் குறுஞ் சுவடி நான்கணா விலைக்கு விற்கப்பட்டது. அந்த நூல் வெளியிட்டபோதுதான் தமது பெயரைப் 'பரிதிமாற் கலைஞன்' என்று மாற்றிக்கொண்டார் சாஸ்திரியார். இவ்வாறு தாம் 6-12-1899 அன்று நூலுக்கு எழுதிய முகவுரையிலே பெயர் புனையக் காரணத்தையும் அவரே வெளியிடுகிறார்:

"இந்நூலை வெளிப்படுத்தும் வழி எனதுண்மைப் பெயரை மறைத்துப் **பரிதிமாற் கலைஞன்** எனப் புனைவு பெயர் நிறுத்தி வெளியிடுகிறேன், நன்னூலொன்று செய்தானது புகழின்மையானிகழப்பட் டொழிதலும், புன்னூலொன்று செய்தானுயர்ச்சியாற் சாலவும் புகழப்பட் டிலங்கலும் நாடொறுங் காண்டலினென்க. இவ்வாறு உண்மை மதிப்பு விளங்குதலொன்றையே யுன்னி யானென் மெய்ப்பெயர் குறியாமையைப் பொருட்படுத்தாது நூலுட் காணப்படுங் குற்றங்களை யெனக் கெடுத்துக் காட்டலேயன்றி மிகையெனத் தாம் கொள்வனவற்றிற்கு என்மீது பொறைபாராட்டலும் வேண்டுமென்று செந்தமிழுலகிற் செழுமை சான்ற பெரியோரை நோக்கிக் கேட்டுக்கொள்கிறேன்:

சங்கநூ லென்னும் பொங்குதே மலரிற்
கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பீ!
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ?"

—வி. ஜி. சீனிவாசன், மதுரை-1

கவனமாய்ப் பார்த்துக் கொள்ள அம்மா நீங்கள் இருப்பதனால்...





சும்மா இருக்கமாட்டான் அவன்... அதையும் இதையும் இழுத்துத் தள்ளுகிறான்!



PARLE
Gluco
PARLE
Gluco
BISCUITS

வாங்கிக்க வேண்டாமா? இவன் இப்படி வாய்செத்த பூச்சியா இருக்கான். அந்தச் சின்னக்காளையோ, நெதம் ஒரு சூட், ஒரு டை, புதுப் பூட்ஸ் கடன் வாங்கியாவது போட்டுக்கொண்டு திரியறுன். மளிகைக்கடையிலே சாமான் அளந்து கொடுக்கிறவனுக்கு நாலுமுழ வேட்டியும் ஒரு பனியனும் பத்தாதா?'' என்று தனபாக்கியம் அங்கலாய்த்தாள்.

''இருக்கட்டும், அம்மா. எப்பப் பார்த்தாலும் அப்பா அண்ணனைத் திட்டிக் கொண்டே இருக்காரு. இது மாதிரி எதையாவது கொடுத்தால் கொஞ்சம் மதிப்பாரு.''

''அவருக்கு மட்டும் பிள்ளைமேலே பாசம் இல்லையா? அவனைப் பத்திப் பெருமை இல்லையா? அவன் எதிரே அன்பாப் பேசினு அவனுக்குக் கர்வம் வந்திடும்னு என்னவோ குருட்டு எண்ணம். மறைவிலே மத்தவங்க கிட்டே நல்லாத்தான் ஜம்பம் அடிச்சிக் கிருரு.''

''அம்மா அப்பாவை விட்டுக்கொடுக்காமல் பேசறுங்க பார், அண்ணு'' என்ருள் அலமேலு.

மாணிக்கம் சிரித்துக்கொண்டே உள்ளே போய்விட்டான். தன் படுக்கையில் போய்ப் படுத்ததும் அவனுக்கு அன்றைய நிகழ்ச்சிகள் யாவும் அவனது உள்ளத்திரையின்முன் பவனி வந்தன.

அன்று காலை அவன் வேலைக்குப் போனதும், ஆத்மநாதன் அவனைக் கை குலுக்கி வாழ்த்தினர். அந்தக் கட்டுரையை எழுதும்படி தூண்டியதையும் அவன் அதை அழகாக எழுதி முடித்ததையும் கூறி அவனை மெச்சினர். அவர் வாய்விட்டுப் புகழும்போது அவரை நிமிர்ந்து பார்க்க முடியாமல் அவன் தவித்தான். நளினியைப் பாராமல் அலுவலகத்துக்குள் அவன் புகுந்து விட்டான்.

''மாணிக்கம், சுந்தரம் வந்தால் தங்குவதற்காக மாடியில் ஓர் அறை இருக்கிறதல்லவா? அதில் உங்கள் உடுப்பை வைக்கச் சொன்னர் அப்பா. அங்கே போய், நீங்கள் டிரஸ் பண்ணிக்கலாமாம்'' என்ருள், அவனைத் தேடிவந்த நளினி.

மாடியில் அந்த அறையில் பெரிய கண்ணுடியின்முன் தான் உடுப்பு மாற்றினதும், நளினி வந்ததும் தான் மனம் நெகிழ்ந்து ரோஜாப்பூ அலங்காரம் செய்ததும் எவ்வளவு முட்டாள்தனம் என்று இப்போது அவன் மூளை அவனை இடித்துக்காட்டியது.

22. குற்றமுள்ள நெஞ்சு

மதனகோபாலன் கோவில் மதில் சுவர் பக்கமாக அமர்ந்து, யோசனையில் ஆழ்ந்து கிடந்தான். வழக்கமாகப் பளபளவென்று மின்னும் வதனம் இல்லை, மிடுக்குப் பார்வையும் இல்லை. கலைந்த தலையும், கசங்கிய ஆடையுமாக, புதிதாகக் கட்டிவந்த மண்டபத்தில், கீழே விழுந்து கிடந்த ஒரு கல்தூண் மீது அவன் குத்திட்டு அமர்ந்திருந்தான். முருகன் தரிசனத்துக்காக வரும் பக்தர்கள் கூட்டத்தைக்கூடக் காண விரும்பாதவன் போல, முதுகைத் திருப்பிக்கொண்டு, மதில் பக்கமாகப் பார்த்துக்கொண்டிருந்தான் அவன்.

''இன்றைக்கு அலங்காரம் எவ்வளவு அழகாக இருக்கிறது! இந்தக் குருக்கள் அலங்காரம் செய்வதில் நிபுணர்'' என்று ஒரு பெண் குரல் கேட்டதும், அவன் திரும்பினுன். இரண்டு மூன்று பெண்களுடன் பேசிக்கொண்டே அலமேலு பிராகாரத்தை வலம் வருவது தெரிந்தது.

அகலக் கறுப்புக் கரை போட்ட வெள்ளைப் புடைவை, கறுப்பு வாயில் ரவிக்கை, தலையில் சிறிய துண்டுக் கதம்பம், தெளிந்த நோக்கு, நிதான நடை. அவள் செல்வதையே அவன் நோக்கினுன். அவள் நேரே பார்த்துக்கொண்டு நடந்து மறைந்தாள். மதனகோபாலன் இருப்பதைக் கவனித்ததாகவே தெரியவில்லை.

தனக்கும் அவளுக்கும் விவாகம் இல்லை என்று ஆன பிறகு, அவள் வெள்ளைப் புடைவைதான் உடுத்துகிருள் என்று யாரோ சொன்ன நினைவும் இருந்தது; அவனும் பார்த்திருக்கிருன். ஒரு முறை கூட அவள் அவன் பக்கம் பார்த்ததே இல்லை.

இன்று அவன் இருந்த நிலையில், அவள் ஒருமுறை தன்னைப் பார்க்கமாட்டாளா என்று ஏங்கினுன் மதனகோபாலன். அதனுல், அலமேலுவை முன்னுல் போய்ப் பார்க்கலாமா என்று ஓர் ஆவல் அவனைத் தூண்டியது. அவன் தயங்கி, தீர்மானிப்பதற்குள் அவள் ஒரு சுற்று முடிந்து, மீண்டும் வந்துவிட்டாள். அவன் எழுந்து, ஒரு தூணின் மறைவில் நின்று அவள் வரவை எதிர்பார்த்தான். முன்பெல்லாம், அலமேலு பேசி அவன் கேட்டதில்லை. இப்போது அவள் குரல் கணீரென்று கேட்டது. அவள் பேச்சும் தெளிவாக இருந்தது.

''முருகன் திருவருள் கிடைக்க வேண்டுமென்று இன்னவர்கள்தாம் கேட்கலாம் என்று கிடையாது. அருணகிரிநாதர் எவ்வளவு கேவலமாக வாழ்ந்துவிட்டு, ஆண்டவனின் கருணைக்கு இலக்காகவில்லை?'' என்று சொல்லிக்கொண்டே வந்தாள் அலமேலு.

''நீ கந்தரநுபூதிப் பாடல் பாடினியே; மிகவும் உருக்கமாக இருந்தது'' என்ருள் ஒரு பெண்.

"நான் பாடினதால் அல்ல. அந்தப் பாடல் அத்தகையது" என்றாள் அலமேலு, சிரித்துக்கொண்டே.

அப்போதுதான் மதனகோபாலன் அலமேலுவை அண்மையில் பார்க்க நேர்ந்தது. அவள் முகத்திலேயே ஒரு விதக் கம்பீரம் குடிகொண்டிருந்தது. பேச்சிலே ஒரு திண்ணம் ஒலித்தது. கண்களில் அமைதி நிரம்பிய ஒளிவீச, நெற்றியில் குங்குமமும் திருநீற்றுக்கீற்றுமாகச் சோபை அளிக்க, ஒரு தெய்விகப் பிறவியைக் காண்பதுபோல இருந்தது.

தன் கதையையே மனக்கண்முன் வரவழைத்து அசை போட்டான் மதனகோபாலன்.

அலமேலுவுக்கும் அவனுக்கும் கல்யாணமென்று நிச்சயமாக இருந்த சமயம், அவன் பார்த்த போதெல்லாம் அவளும் பார்ப்பாள். ஆனால், ஒரு முறையாவது அவள் சிரித்தது உண்டா? வெறுப்புடன் திரும்பினதும், காறி உமிழ்ந்ததும், தாயிடம் இரைந்ததும் இப்போது அவன் நினைவுக்கு வந்தன. நளினி, பத்மினி முதலியவர்களின் உடைகளும், நாகரிக நடத்தையும் இவளுடைய முரட்டுச் சேலையும், அநாகரிக நட்பும் பக்கத்தில் வைத்துப் பார்த்தபோது, முதல் இடத்தில் மோகமும், அடுத்த இடத்தில் வெறுப்பும் தோன்றின.

'அன்றே இவள் இப்படி இருந்திருந்தால் நான் மறுக்காமல் மணந்திருப்பேனே!' என்று யாருக்கோ சொல்வது போலத் தனக்குத் தானே சமாதானம் கூறிக்கொண்டான் அவன்.

இன்று மீண்டும் விவாகப் பேச்சைத் துவக்க ஆள்தான் யாரும் இல்லை. ஏன், எதற்குமே தனக்கு ஆதரவாகக் கூற ஆள் இல்லை போல அவனுக்குத் தோன்றியது.

அவனுடைய தகப்பனார் அதிகக் காய்ச்சலுடன் படுத்துவிட்டார். தாயாருந்தான் கொஞ்ச நாட்களாகவே படுக்கையில் கிடந்தாள். தகப்பனார் படுக்கையும், அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளும் அவனுக்கு எத்தனையோ நீதிகளைக் கற்றுக் கொடுத்தன.

மணவாளச் செட்டியின் உடல்நிலை கவலைக்கிடமாகிவிட்டது என்று ஆள் அழைத்துத்தானே அவன் வீட்டுக்கு வந்தான்? அப்போதே வீட்டில் கூட்டம் கூடியிருந்தது. செட்டியார் உயில் எழுதிவிட்டாரா? யாருக்கு, எவ்வளவு எழுதப் போகிறார் என்று ஆசை கொண்டு எத்தனையோ உறவினர்கள் படையெடுத்தனர். சொந்தப் பிள்ளைக்குக் கேட்க வேண்டுமா? மூத்த மகனும் மருமகளும் முகாம் போட்டு வீட்டையே நடத்தினார்கள். இத்தனை நாட்களாகத் திரும்பிக்கூடப் பாராத குடும்பத்தின் பொறுப்பை ஏற்று, அவர்கள் அதிகாரம் செலுத்தினார்கள். அதற்கும் அவனே, தான் மூலகாரணமோ?

வக்கீல் வந்தார். மணவாளச் செட்டி தெளிவுடன்தான் இருந்தார். இதயம் பலவீனமாக இருப்பதாகவும், அன்று இரவு தள்ளுமோ என்று சம்சயத்துடன் டாக்டர்கள் கூறிவிட்டுச் சென்றார்கள். உயில் எழுதும்போது அவர் யாரையும் அருகே விடவில்லை. வக்கீலும் இன்னும் இரண்டு நண்பர்களுமே அறையில் இருந்து எழுதி முடித்தார்கள்.

மதனகோபாலன் தன் தாய்க்கு அருகே அமர்ந்திருந்தான். பங்காரு, 'தனபாக்கியத்தைக் கூப்பிடு'' என்று சொல்லிக் கொண்டே இருந்தாள், யாரும் நகருவதாக இல்லை. நிறை கர்ப்பிணியான மீனாட்சி இவர்களைப் பார்க்க வந்தபோது, பங்காருவின் வேண்டுகோளைக் கேட்டு, அவள்தான் தனபாக்கியத்தை அழைத்துவரச் சென்றாள்.

தனபாக்கியமும், பின்னர் அலமேலுவும் வரும்போது அங்கே இருக்கப் பிடிக்காமல் மதனகோபாலன் தெருத் திண்ணைக்குப் போய்விட்டான். மீனாட்சி மாணிக்கத்தின் வீட்டுக்குப் போய்த் திரும்பியபோது, டாக்டர் அவளை எதிர்கொண்டார்; விவரம் விசாரித்தார்.

"அந்தப் பொண்ணு கண்டிப்பா வர மாட்டேன்னுட்டா. கந்தசாமி செட்டி இன்னும் கடையிலிருந்து வரவில்லை. தனபாக்கியத்தம்மாவும் எங்கேயோ வெளியே போயிருக்கிறாங்க போல. பங்காரும்மாவுக்கு இதமான மனிதர்கள் யாரும் இல்லை. நாம் என்ன செய்ய முடியும்?'' என்று மீனாட்சி அவள் கணவனிடம் சொன்னது தெளிவாக மதனகோபாலனின் செவியில் விழுந்தது.

"உனக்குப் பேறுகாலம் வந்துவிட்டதே? இல்லையென்றால் நாம் ரெண்டு பேருமே இருக்கலாம்'' என்றார் டாக்டர்.

மதனகோபாலனுக்கு ஆத்திரம் மூண்டது. 'நான் இருக்கும்போது இதமான மனிதர்களே இல்லையென்று இவர்கள் யார் தீர்மானிக்க?' என்று அவன் குமைந்தான்.

மீனாட்சியும் டாக்டரும் தங்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள். மதனகோபாலன் திண்ணையின் ஒரு கோடியில் அசையாமல் இருந்தான்.

கொஞ்ச நேரம் கழித்து, கந்தசாமி செட்டி அவர்கள் வீட்டில் நுழைந்து மணவாளச் செட்டியின் அருகில் போய் அமர்ந்து கொண்டார். அரை மணிக்கெல்லாம் தனபாக்கியமும் வந்து சேர்ந்தாள்.

மதனகோபாலன், இடத்தை விட்டு எழுந்து உள்ளே போய், தந்தை

யையும் தாயையும் ஒருமுறை பார்த்து விட்டு வந்தான். பங்காரு, தனபாக்கியத்திடம் என்னவோ தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டேயிருந்தாள். ஒரு சொல் கூட விவரமாக அவனுக்குப் புரியவில்லை.

அவன் மீண்டும் திண்ணைக் கோடிக்கே வந்து சேர்ந்தான். நளினி காரில் வந்து மீனாட்சி வீட்டில் நுழைவதும், அவசரமாக அலமேலுவின் வீட்டுக்குச் சென்று, பிறகு தன் வீட்டுக்கு வந்து மாணிக்கத்தை அழைத்துக்கொண்டு அவர்கள் வீட்டுக்குப் போய், அதன் பிறகு அலமேலுவை அழைத்துக்கொண்டு டாக்டர் வீடு சென்றதையும் பார்த்தான். காரில் மீனாட்சி ஆஸ்பத்திரிக்குப் போனாள் என்று ஊகிக்க முடிந்தது. மாணிக்கம் டாக்டர் வீட்டுக்குப் போய், தன் தங்கைக்குத் துணை இருந்தான் போலும்! சிறிது நேரம் கழித்து அண்ணனும் தங்கையும் இவர்கள் வீடு தாண்டித் தம் வீடு சென்றனர்.

தெருப்பக்கம் யாரும் விளக்குப் போடவில்லை. வீட்டுக்குள் ஜகஜ்ஜோதியாக வெளிச்சம் பரவியது. யார் யாரோ நடமாடினார்கள். அந்தச் சொத்துக்கு வாரிசான மதனகோபாலன் இருட்டிலே மனக்குமைச்சலுடன் அமர்ந்து கிடந்தான். யாரோ வந்து அவனைச் சாப்பிட அழைத்தார்கள். நோயுற்றுக் கிடந்த இருவரையும் ஒரு வாய்த் தண்ணீர் வேண்டுமா என்று யாரேனும் விசாரித்தார்களோ இல்லையோ, கூடம் நிறைய இலைபோட்டு, எல்லாரும் வயிறார உண்டு விட்டுப் பல இலைகளைத் தெருச் சாக்கடையில் மிதக்க விட்டனர்.

மதனகோபாலன் தன் எரிச்சலை அடக்கிக்கொண்டு, ஒருவாறுகச் சாப்பிட்டுவிட்டு எழுந்தான். அவன் முன் பக்கம் போனபோது அலமேலுவும் வந்திருப்பது கண்ணில் பட்டது. மேலும், அவள் அவன் தாயின் நகைப் பெட்டியைக் கொண்டு வந்து அவள் தலைமாட்டில் வைப்பதும் தெரிந்தது.

'அம்மாவுக்கு ஏன்தான் மூளை இல்லையோ? நகைப் பெட்டியை எடுக்க யார் யாரோ வரவேண்டுமா? தலைமாட்டில் எதற்கு வைத்துக்கொள்ள வேண்டும்?' அவன் பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டே, மீண்டும் தெருப் பக்கம் திண்ணையில் போய்ப் படுத்தான்.

பெண்கள் சாப்பாடு முடிந்தது. சமையலறை வேலை முடிந்தது. உறவினர்கள் யாவரும் அடுத்தபடியாகப் படுக்கைக்கும் பாய்க்கும் அலைவார்கள். 'கழுகுக் கூட்டம், காக்காய்க் கூட்டம்!'

மதனகோபாலன் சற்றே கண்ணயர்ந்து விட்டான். உள்ளே என்னவோ சச்சரவு மூண்டுவிட்டது போலும்! கூப்பாடு கேட்டு, அவன் உள்ளே போய்ப் பார்த்தான். அலமேலுவின் கழுத்தில் அட்டிகை மின்னியதையும், அவன் அண்ணி அலமேலுவை மிரட்டுவதையும் கண்டான். அலமேலு தைரியமாக எதிர்த்ததைப் பார்த்தான்.

மதனகோபாலனுக்கு வேடிக்கையாகவும் இருந்தது; ஆத்திரத்தையும் கிளப்பியது. தன் அண்ணன் வந்து உரிமையைப்பற்றிப் பேசவும், அவன் சினம் தலைக்கேறியது. எல்லாம் மடமடவென்று நடந்துவிட்டன. கந்தசாமி செட்டி வேறு, எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றியதுபோல உயில் விவரத்தை அவிழ்த்துவிட்டார்.

மதனகோபாலனுக்குக் கோபம் தலைக்கேறியது. அவன் வெடிக்கும் முன் எரிமலைபோல், கண்களால் அனலைக் கக்கிக்கொண்டு நின்றான். தனபாக்கியம் பங்காருவிடம் விடை பெறுவதைக் கேட்டான்.

"இந்தக் கழுகுக் கூட்டத்திலே என்னைத் தனியே விட்டுவிட்டுப் போகாதே, தனம்!" என்று பங்காரு அரற்றியது கேட்டது.

'நான் இருக்கும்போது அம்மாவுக்கு இந்தத் தனபாக்கியமும் அவள் பெண்ணுந்தான் உற்ற மனிதர்களாகி விட்டார்களா? சரி, சாகட்டும். நான் கிட்டேயே வரவில்லை, அலறினால்கூட வரப்போவதில்லை' என்று சபித்துக் கொண்டே அவன் தன் படுக்கைக்குப் போய்விட்டான். கலவரம் அடங்கி எல்லாரும் உறங்க ஆரம்பித்தனர்.

மதனகோபாலனுக்கு மட்டும் உறக்கம் வரவில்லை. அவன் மனம் சதா கொந்தளித்தது. எல்லாருமாகச் சேர்ந்து தனக்குத் துரோகம் செய்துவிட்டதாக அவன் நினைத்தான்.

சினிமா எடுக்க, தான் நிறையப் பணம் தருவதாக அவன் சொல்லியிருந்தான். கேட்டு வாங்க நினைத்துக்கொண்டிருந்தபோது திடீரென்று தகப்பனார் படுத்துவிட்டார். தருணம் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே உயில் எழுதி முடித்தாகிவிட்டது. அப்போதும் அவன் கவலைப்படவில்லை; முன்பே அவன் அண்ணன் தன் பங்கைப் பெற்றுக் கொண்டு போய்விட்டான். இனியிருக்கும் சொத்தில் ஓரளவு தர்மத்துக்குத் தந்தாலும், மற்றதெல்லாம் தனக்குத்தான் என்று அவன் தீர்மானமாக இருந்தான். தான் சுவாதீனமாக எடுத்துச் செலவு செய்ய முடியாமல் வைத்திருப்பது அவனைத் துன்புறுத்தியது. அவன் புரண்டு புரண்டு படுத்தான். தாய், தகப்பன், அண்ணன், ஏன் இந்திரா காலனி ஆட்கள் யாவருமே அவனை வஞ்சித்து விட்டதாக அவனுக்குத் தோன்றியது.

'ஏமாற்றி விட்டார்கள், ஏமாற்றி விட்டார்கள். "கோபாலு, என்னை விட்டுப் போகாதேடா!" என்று கெஞ்சும் அம்மா கூட இன்று ஏமாற்றிவிட்டாளே! என்ற ஓலம் அலை அலையாக அவன் செவியைத் தாக்கியது. அவன் உடல் பதறியது. பரசுராமரைப் போல் அவனிடம் ஒரு வெறி மூண்டது. எல்லாரையுமே கொன்று, அந்த ரத்த வெள்ளத்தில் திளைக்க வேண்டும்போல ஓர் ஆவேசம் அவனை ஆட்டியது.

எங்கோ மணி மூன்று அடித்தது. அவன் தன் படுக்கையை விட்டு எழுந்தான். தலையணைகளை வரிசையாக வைத்துப் போர்த்தினான். வாயிற் கதவைத் திறந்துகொண்டு வெளியே போனான். யாரும் விழித்துக் கொள்ள வில்லை.

அவன் தெருக்கோடி வரையில் போய் ஒருமுறை திரும்பிப் பார்த்தான். யாரும் அவனைக் கவனித்ததாகத் தெரியவில்லை. அடுத்த தெரு வழியாகப் போய், தன் வீட்டுக் கொல்லைப்புறமாக உள்ளே புகுந்தான். அடிமேல் அடி வைத்துப் பூனை போல் நடந்து சென்றான். கிணற்றுப் பக்கத்தில் காலை வைத்ததும் சற்று ஈரமாக இருந்தது. மெள்ளச் சுற்றி வந்து புறக்கடைக் கதவைத் திறந்தான். சினிமாவுக்குப் போய் வந்து, கம்பி போட்டு எத்தனையோ தடவை திறந்து பழக்கம் இருந்தது. திறந்துவிட்டு நின்றான். யாரும் விழித்துக் கொள்ள வில்லை. குட்டையான தடியைக் கையில் எடுத்துக்கொண்டான்.

தாயின் தலைமாட்டில் சாவிக்கொத்து அவனை 'வா, வா' என்று அழைத்தது. ஓசைப்படாமல் அதை எடுத்துக்கொண்டு அவன் பூஜையறையில் நுழைந்தான். பூனைபோல நடந்து நகைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு கிளம்பினான். துளிச் சத்தத்தில் அலமேலு தேள் கொட்டினாற் போல் விசுக்கென்று எழுந்துவிட்டாள். அவனை நேரே பார்த்துவிட்டாள். அவள் குரல் கொடுக்கும்முன் திசை தெரியாமல் அவன் தடியால் ஓங்கி இரண்டடி அடித்துவிட்டான். ஒன்று அலமேலு மீதும், மற்றது பங்காருவின் மீதும் விழுந்தது போலும். அவன் நிற்க வில்லை. குடல் தெறிக்க, தலை தெறிக்க ஓடிவிட்டான். யாரோ 'திருடன், திருடன்!' என்று கத்தினமாதிரி இருந்தது. அவன் திரும்பிப் பார்க்கவில்லை. ஓட்டத்தையும் நிறுத்தவில்லை. இரண்டு, மூன்று தெருக்கள் தாண்டி, தனக்குத் தெரிந்த ஓரிடத்தில் பெட்டியைப் பதுக்கிவிட்டு அவன் வந்தான். மீண்டும் தன் படுக்கையிலேயே படுத்துவிட்டான். அவன் இதயம் சம்மட்டி அடி அடித்தது. உடல் தெப்பமாக நனைந்தது. தன்னைச் சமாளித்துக்கொள்வதற்காக, அவன் படுக்கையை விட்டு எழுந்திருக்காமல் இருந்தான்.

காலையும் விடிந்தது. வெளிச்சம் வந்தும் அவன் படுத்திருப்பதைப் பார்த்து, "கோபாலு, எழுந்திரு. திருடன் வந்தாப்போல" என்று யாரோ குரல் கொடுக்கவும், அவனும் எழுந்து, அவர்களுடன் மெய்போலத் திருடனைத் தேடுவதில் முனைந்தான். கொல்லைப் புறத்தில் தன் கால் சுவடு தெரியுமோ என்று பயந்தான். கிணற்றடியில் சேற்றுக் காடாக இருந்தது. ஒன்றும் புரியவில்லை;

அவன் அங்குள்ளவர்களுடன் சிறிது பேச்சுக் கொடுத்துவிட்டு, வீட்டை விட்டு வெளியேறினான். அலமேலுவுக்கு அதிக அடி இல்லையாம். பங்காருவுக்குத் தான் பலத்த அடி. அவர்களைப் பார்க்கவும் அவனுக்கு அச்சமாக இருந்தது. நினைத்தபடி வருவதும் போவதும் அவன் சுபாவப்படி சகஜமாக இருந்தபடியால், யாரும் அதைப் பொருட்படுத்தவில்லை. பிற்பகல்தான் அவன் திரும்பி வந்தான். பங்காருவும் அலமேலுவும் ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டிருந்தனர். வீட்டில் போலீஸ்காரர்கள் சோதனை நடத்திக்கொண்டிருந்தார்கள். அவனையும் குடைந்து குடைந்து கேட்டனர். அவன் பதில் சொல்லிச் சமாளித்தான். அவர்கள் குடும்பம் அந்த வட்டாரத்தில் செல்வாக்கு உடையதாக இருப்பதனாலே போலீஸ் கெடுபிடியும் அவ்வளவு மும்முரமாக இல்லை என்று அவனுக்குத் தோன்றியது. அப்படியும் இப்படியுமாக அமைதியின்றி அலைந்துவிட்டு, அவன் தன் லாட்ஜின் அறைக்குச் சென்றுவிட்டான்.

ஆஸ்பத்திரிக்குப் போய்த் தன் தாயைப் பார்க்கவேண்டுமென்று அவன் நினைத்தான். ஆனால், தைரியம் இல்லை. உண்மையை ஒப்புக்கொள்ளவும் மனம் இல்லை. அவன் நண்பர்களை நாடினான். தன் கைக்குப் பணம் வரத் தாமதம் ஏற்படும் என்று சினிமா நண்பர்களிடம் மெல்ல விவரத்தைச் சொன்னான் அப்போது அவனுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அவனை ஒரு ராஜாபோல் நடத்திவந்த நண்பர்கள் ஒவ்வொருவராகச் சாக்குப் போக்குச் சொல்லி விலகிவிட்டனர். வாழ்க்கை என்பது ஒரு ஹாஸ்ய நாடகமென்று நினைத்துக் கண்மூடி வளைய வந்த அவனுக்கு, அது ஒரு மாபெரும் சமுத்திரமாக மாறி, தன் பேரலைகளால் அடித்து, ஆட்டி, புரட்டிக் கரைசேர்த்த மாதிரி ஆட்டங் காட்டி விட்டது.

தந்தை இறந்துவிட்டால் தன் கதி என்ன ஆகும் என்ற கேள்வி அவன்

மனத்தில் தோன்றியது. தாயின்மீது தனக்கிருக்கும் ஆசை இப்போதுதான் புரிந்தது அவனுக்கு. திகைப்பும் விழிப்பும் களைப்பும் அவனை ஆட்கொண்டன. இதுவரை, கை நிறைய வாரி வழங்கிப் பழக்கமேயன்றி, யாரிடமும் அவன் கை நீட்டியே பழக்கம் இல்லை. இப்போது ஏதோ ஓர் ஆவேசத்தில் தன் வீட்டிலேயே நுழைந்து நகைப் பெட்டியை எடுத்துவிட்டானே தவிர, அது அவனுக்குப் பெருத்த அவமானமாக இருந்தது. நிமிஷத்துக்கு நிமிஷம் போலீஸ் பயமும், வெட்கமும் அவனைக் குழப்பின. போலீஸ் விசாரணை நடக்க ஆரம்பித்ததுமே, பல நண்பர்கள் அவனை விட்டு விலகிவிட்டனர். அவனுக்கு இது மிகவும் மானக்கேடாக இருந்தது.

விசாரணையின்போது அவன் உடன் பிறந்த அண்ணனும் அண்ணியும் அவன் மீதே சந்தேகம் விழும்படி சாட்சியம் கூறினார்கள். அலமேலுவின் முறை வந்த போது, அவன் மனம் தரைமட்டத்தில் உட்கார்ந்துவிட்டது. 'அவளைப் பலவித மாக நோகச் செய்துவிட்டோம். அவளையே அடித்தும் விட்டோம். அவள் கட்டாயம் நம்மைக் காட்டிக் கொடுத்துப் பழி வாங்குவாள்' என்று அவன் தீர்மானித்துவிட்டான்.

ஆனால், அவள் வாக்குமூலம் அவனை மிக்க ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. "எனக்கு நல்ல தூக்கக் கலக்கம். விழிக்கும்போது கறுப்பாக, உயரமாக, தாடியுள்ள ஒரு மனிதனைக் கண்டேன். அதற்குள் தலையில் அடி பட்டுவிட்டது. பிறகு ஒன்றும் தெரியாது'' என்று அவள் உறுதியாகக் கூறினாள்.

பொருள் கிடைத்தால் தெரிவிப்பதாகக் கூறி, நகைகளின் விவரத்தை எழுதிக்கொண்டு, போலீஸ் அதிகாரிகள் போய்விட்டனர்.

இரண்டு நாட்கள் கழித்து, கைப் பெட்டி மட்டும் ஒரு குப்பைத் தொட்டியில் கிடைத்தது. நகைகள் ஒன்றும் காணப்படவில்லை. ஒரு வாரம் கழிந்ததும் சலசலப்பே அடங்கிவிட்டது.

கைக்காசு செலவழிந்த பிறகு மதன கோபாலன் வேறு வழியின்றி வீடு வந்து சேர்ந்தான். அவனுடைய அண்ணனும் அண்ணியும் மற்றவர்களும் தம்தம் வீட்டுக்குத் திரும்பிவிட்டனர். அலமேலு இவர்கள் வீட்டுக்கு வருவதே இல்லை. அவன் பெற்றோர் குணமடைந்து, வீட்டோடு நடமாடி, வீட்டைக் கவனிக்க ஆரம்பித்தனர். மதனகோபாலனுக்கு வாழ்க்கையே கசப்பாக இருந்தது. தன் நிலைக்கும் பிறப்புக்கும் ஒவ்வாத காரி

யத்தைச் செய்துவிட்ட உணர்வு அவனை எரித்தது.

அலமேலு தன்னைக் காப்பாற்றியது ஏன்? இவர்கள் வீட்டுப் பணம் நமக்கு வந்திருக்கிறதே என்று நன்றிக் கடன் செலுத்தினாளா?

அவன் வெளியே செல்வதையே குறைத்துக்கொண்டு விட்டான். அவனுடைய பழைய நண்பர்கள் சிலர் மட்டும் அவனுடன் ஒட்டிப் பழகினார்கள். அவன் சில சமயம் நாடக ஒத்திகைகளுக்குப் போவான். ஆனால், எதிலும் அவனுக்குப் பிடிப்பு இல்லை. தன்னைத் தேற்றிக் கொள்ள எது வழி என்று தெரியாமல் அவன் தவித்தான்.

தன் சகாக்களுடன் பலமுறை வேண்டாத கலாட்டாக்களில் அவன் பங்கு கொண்டிருக்கிறான். ஆனால், திருட இணங்கியதில்லை. இன்று அதிலும் இறங்கிவிட்டோமே என்று அவன் வெட்கினான்.

நாடகத்தில் முதலில் இறைவணக்கம் பாடவைப்பான். இறுதியில் மங்களம் பாடச்செய்வான். மற்றப்படி அவன் தெய்வத்தை நினைத்த நாளே இல்லை. இப்பொழுது தன்னை ஆற்றிக்கொள்ள வழி தெரியவில்லை. ஆனால், எத்தனையோ யுகங்களாகப் பாலோடு உள்ளே சென்று ரத்தத்தோடு கலந்துவிட்ட மரபு அவனைக் கோவில் பக்கமாக ஈர்த்தது. அவன் அடிக்கடி முருகன் கோவிலுக்குப் போய் அங்கேயே கிடந்தான். தங்கள் காலனியில் இருக்கும் மாரியம்மன் கல்முன் போய் நின்று தொழ அவனுக்குத் தைரியம் இல்லை. தெரு மக்கள் வேடிக்கை பார்ப்பார்களோ என்று கூச்சமாக இருந்தது.

முருகன் கோவிலுக்கு வருவது, யாரும் இல்லாத நேரத்தில் அந்தச் சந்நிதியில் மனம்விட்டு இறைஞ்சுவது, இப்படி ஒரு வழக்கத்தை அவன் ஏற்படுத்திக் கொண்டான். அதில் அவனுக்கு ஓரளவு அமைதி கிடைத்தது.

அலமேலு டாக்டர் வீட்டுக்குச் செல்வதும், கன்னிகாபரமேசுவரி சத்திரத்தில் சங்கத்தை நடத்துவதுமாக, அவர்கள் தெருவில் பலமுறை குறுக்கேயும் நெடுக்கேயும் நடந்தாள். ஒருமுறை கூட அவன் இவர்கள் வீட்டுப் பக்கம் திரும்பவேயில்லை.

'அலமேலுவின் தலையில் அடி பலமாகப் பட்டிருந்தால்? அவள் இறந்துபோயிருக்கலாமே! அவள் எத்தகைய பெண் என்று அறியக்கூட வாய்ப்பிருந்திருக்காதே!'

மதனகோபாலன் கோவிலில் சுற்றுவதும், மண்டபங்களில் இருந்து யோசிப்பதுமாகக் காலம் கழித்தான். அலமேலு எப்போதாவதுதான் கோவிலுக்கு வந்தாள். அப்பொழுது அவன் எட்ட இருந்து அவளைக் கவனிப்பான். தனக்குப் பழக்கமே இல்லாத புதிய மனுஷியைப் பார்ப்பதுபோல் பிரமை தட்டும்.

இன்றுதான் அவன் அவளை இவ்வளவு நெருக்கமாகப் பார்க்க நேர்ந்தது.

அவன் தன் பழைய சிந்தனைகளைத் துடைத்தெறிந்துவிட்டு எழுந்தான். நன்றாக இருட்டிவிட்டிருந்தது. அலமேலுவும் தோழிகளும் வீட்டுக்குப் போய் விட்டனர். தெலுங்குப் பிராம்மணர் லக்ஷ்மி நரசையாவைத் தவிர, அங்கே அவனுக்குத் தெரிந்தவர் யாரும் இல்லை.

அலமேலு கூறியதுபோல் முருகனின் தரிசனம் நெஞ்சை அள்ளுவதாகத்தான் இருந்தது. விபூதி அபிஷேகம் நடந்திருந்தது. வெள்ளை வெளேரென்று திருநீற்றுப் பூச்சுடன், கண்களும் உதடும் மட்டும் தெரியப் புன்னகை பூத்த ஆண்டவனைக் கண்டு மெய்சிலிர்த்தான் மதனகோபாலன். தன் இரு கன்னங்களிலும் 'படீர், படீர்' என்று போட்டுக்கொண்டான்.

யாரோ திருப்புகழ் பாடினார்கள். பக்தி மேலீட்டால் பாடினார்களேயன்றி, ஸ்வர சுத்தமாக இல்லை. 'இந்தப் பாட்டை மாணிக்கம் பாடினால் எப்படி இருக்கும்! மெய் சிலிர்க்குமே! அரளிமாலை தவழும் மார்பும், குங்குமச் சிவப்பு அதரங்களும், கருணைபுரியும் அருள்நோக்குமாக வடிவேலன் எதிரே வந்து நர்த்தனமாட மாட்டானோ?' என்று அவன் தனக்குள் கூறிக்கொண்டான். அலமேலுவை வேண்டாம் என்று ஒதுக்கினதால் நல் வாழ்வையே தள்ளிவிட்டோமோ என்று அவன் இப்போது ஐயுற்றான்.

அவன் புதுமையானதோர் உணர்ச்சியுடன் வெளியே நடந்தான். அவனுக்கு முன்னால் லக்ஷ்மிநரசையா நடந்து சென்றார்.

''நரசையா!'' என்று அழைத்தான் மதனகோபாலன். தான் கண்ட அற்புதக் காட்சியை யாரிடமேனும் சொல்லிப் பகிர்ந்துகொள்ள வேண்டும் எனத் தோன்றியது அவனுக்கு.

நரசையா நின்றார். ''என்ன, கோபாலு?'' என்று கேட்டாரே தவிர, அவருக்குச் சுபாவமாக இருக்கும் அன்புக் குரல் இல்லை. தெருக்காரனாயிற்றே என்று வேண்டா வெறுப்புடன் பார்த்தாரோ?

அதைக் கண்டதும் மதனகோபாலனின் உற்சாகம் மாய்ந்துவிட்டது.

''ஒன்றுமில்லை. நான் இதுவரை நிதானமாக இருந்து தரிசனம் செய்ததில்லை. அலங்காரம் மிகவும் அற்புதமாக இருந்தது'' என்றான் அவன்.

முருகனைப் பற்றிப் பேச்சு எழுந்ததும்; லக்ஷ்மிநரசையாவின் மனம் உருகி விட்டது. அவர் முகம் மலரப் பேசினார். ''சில கோவில்களில்தான் இப்படித்

தெய்வ சாந்நித்தியம் அமைகிறது. உன்னைப்போல இருப்பவர்கள் கவனம் வைத்தால் எப்படியோ முன்னேறலாம். எங்கே உங்களுக்கெல்லாம்..?'' என்று முடிக்காமலேயே விடுவிடென்று நடக்கலானார்.

மதனகோபாலன் அவரைத் தொடர்ந்தான். ''என்ன செய்யவேண்டுமென்று சொல்லுங்கள். எங்கள் அப்பாவைக் கேட்டால் நன்கொடை தருவாரே!'' என்றான்.

''பணந்தானா எல்லாவற்றுக்கும் தேவை? அதைத் தர நூறு பேர் இருக்கிறார்கள். வந்து தினமும் நிற்கவேண்டும். பூஜை சரியாக நடக்கிறதா என்று கவனிக்கவேண்டும். பூஜைக்கு வேண்டிய பூ, மற்றும் சாமக்கிரியைகள் கிடைக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். கோவிலைச் சுத்தமாக வைக்க மேற்பார்வை தேவை. இதையெல்லாம் யார் செய்கிறார்கள்? கமிட்டியிலே பேரைப் போட்டுக்கிறது; ஒரு நாள் கூடிப் பேசி, புளியோதரை, சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியம் போட்டுச் சாப்பிட்டு விட்டுத் தொன்னையிலே வீட்டுக்கும் கொண்டு போகிறது. உற்சவ காலத்திலே மட்டும் பிரமாதமாக வந்து நிற்கிறது. உண்மையாகச் சேவிக்க வந்தவனுக்குச் சாமி தெரியாம மறைச்சுண்டு நின்னு....உங்களைப் போலச் சின்னப் பசங்க வந்து நின்று இதையெல்லாம் ஒழுங்காப் பார்க்கக் கூடாதா?'' என்றார் அவர், பாரமார்த்திகமாக.

''இப்படியெல்லாம் ஒருத்தர் வந்து பார்க்கணும் என்கிறதே எனக்குத் தெரியாதே? கோவில்னா, அது தானாகவே நடக்கும்னுதான் நினைப்பு'' என்றான் மதனகோபாலன்.

''என்னவோ, நான் வயசானவன் சொன்னேன். உனக்கு விருப்பம் இருந்தால் செய். நீ தப்பாக நினைக்காவிட்டால் இனி ஒன்று சொல்வேன். உனக்குப் பிடித்தமான ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள். உன் அப்பாவும், அம்மாவும் உன்னதமான மனிதர்கள். அவர்களைச் சந்தோஷமாக வைத்துக்கொள்ளவேண்டாமா?''

மதனகோபாலன் தலைகுனிந்தான். அலமேலுவின் உருவம் அவன் கண்முன் தோன்றியது. கையில் திரி டப்பாவும்; எண்ணெய்க் கிண்ணமுமாக அவள் வலம் வந்த காட்சி அவனிடம், 'உன் வாழ்வில் விளக்கேற்றி வைப்பாள்' என்று கூறுவது போல இருந்தது.

'அலமேலுவுக்கும் கைக்குப் பணம் கிடைத்துவிட்டால் ஆள் மாறிவிடுவாளோ? அண்ணியைப்போல ஆட்டம் ஆடுவாளோ?' அவன் தானே யோசித்து, தானே சமாதானம் கூறிக்கொண்டான். 'அவள் இப்போது இருக்கும் கம்பீரத் தோற்றத்தைப் பார்த்தால், அவள் அப்படி ஆடுபவள் அல்ல' என்று தீர்மானித்துக்கொண்டான்.

அவன் தங்கள் தெருவுக்குத் திரும்பி வந்தபோது, மாணிக்கம் சற்று முன்னால் செல்வது தெரிந்தது. அவன் வேகமாகப் போனான். ''முத்து!'' என்று அழைத்தான். மாணிக்கம் திரும்பிப் பார்த்தானே தவிர, பேசாமல் தன் வீட்டுக்குள் நுழைந்துவிட்டான். மதனகோபாலன் விசனத்துடன் தன் வீட்டுக்குள் புகுந்தான்.

சாதாரண நான்கு முழ வேஷ்டியும், கோடு போட்ட சட்டையுமாக இருக்கும் மாணிக்கம், இன்று புதிய சூட்டும், டையுமாகக் காட்சியளித்தான். 'முத்து பெரிய மனிதனாகிவிட்டான், நம்மிடம் பேச விரும்பவில்லை' என்று மதனகோபாலன் தனக்குள் கூறிக்கொண்டான்.

மாணிக்கம் திரும்பிப் பார்த்தான். மதனகோபாலனிடம் பேசுவதற்குமுன் உடையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று எண்ணித் தன் வீட்டுக்கு ஏகினான். அவன் அன்று ஆசிரியர் வீட்டுக்குப் போனபோது, நளினி பெரிய அட்டைப் பெட்டி ஒன்றை அவனிடம் நீட்டினாள். ''என்ன இது?'' என்று அவன் கேட்டான்.

''ஒரு சூட் போட்டுப் பார்த்து அளவு சரியில்லையென்றால் தையல் கடைக்குப் போகவேண்டும்'' என்றாள் அவள்.

மாடி அறைக்குச் சென்று, நிலைக் கண்ணாடி முன் நின்று, அவன் அதை அணிந்து பார்த்தான். நளினி தனக்குப் பின்னால் நிற்பது தெரிந்தது. ''என் அளவு எப்படிக் கிடைத்தது?'' என்று அவன் கேட்டான்.

''முன்னே ஒருதடவை உங்கள் உடையை இங்கேயே விட்டுவிட்டுப் போகவில்லையா? அப்பா அதைக் கொண்டு கொடுத்துத் தைக்கச் சொன்னார்.''

''எவ்வளவு ஆயிற்று?''

''எனக்கு என்ன தெரியும்? துணி தேர்ந்தெடுத்தேன். அவ்வளவுதான்.''

''நீயா தேர்ந்தெடுத்தாய்?''

''ஆமாம். கூடாதா?''


''கூடாதுதான். ஆனால் நன்றாக இருக்கிறது. நன்றி.''

அவள் முகம் வாட்டமுற்றது.

மாணிக்கம் அந்த உடையுடனே தன் வீடு கிளம்பிவிட்டான். அதே யோசனையில் இருந்தபடியால்தான் அவன் மதனகோபாலனைக் கவனிக்கவில்லை.

இந்த விவரம் ஏதும் அறியாத மதனகோபாலனுக்கு, மாணிக்கத்தின் உதாசீனம் மிகவும் தைத்தது. கூடவே, நானும் முன்பு எத்தனையோ முறை மாணிக்கத்தைத் தூக்கி எறிந்ததும் நினைவுக்கு வந்து அல்லல் கொடுத்தது.

(தொடரும்)



23. கோபமும் தாபமும்

மாணிக்கம் கண்ணைத் திறந்தான். தலை வலி அநேகமாகக் குறைந்துவிட்டது. படுக்கையில் எழுந்து அமர்ந்தான். மீண்டும் படுக்கையில் மல்லாந்து படுத்து விட்டதை ஆராய்ந்தான். அன்று அவன் மாணவர்களுடன் வயலில் வெகு நேரம் அலைந்து பாடம் கற்றுக் கொடுத்தான். ஆத்மநாதனுக்குக் கல்லூரியில் வேலை இருந்தது.

மாணிக்கம் வகுப்பு எடுத்துவிட்டுத் தன் இடத்துக்கு வரும்போது தலை லேசாக வலித்தது. கொஞ்ச வேலை பார்த்து முடிப்பதற்குள், தலை பிளக்க ஆரம்பித்து விட்டது. சாதாரணமாக அவனுக்குத் தலைவலி வந்ததில்லை. அவன் காகிதங்களை ஒழுங்காக எடுத்து வைத்து விட்டு, தோட்டத்தில் நிழலான ஒரு மரத்தடியில் போய் அமர்ந்தான். குளு குளு வென்ற அந்தக் காற்றில் வலி குறையும் என்ற எண்ணம். ஆனால் அப்படியும் குறையவில்லை. அவன் மீண்டும் தன் மேஜையருகே போய் அமர்ந்து, மேஜை மீது தலை வைத்துக் கண்களை மூடிக் கொண்டான்.

"என்னடா, மாணவர்களுக்குப் பாடம் எடுக்கச் சொன்னேனே தவிர, வேலை நேரத்தில் எப்படித் தூங்குவது என்று கற்றுத் தரச் சொன்னேனா?" என்று ஆத்மநாதன் குரல் கேட்டது.

மாணிக்கம் நிமிர்ந்து பார்த்தான். பதில் பேசாமல் எழுந்து நின்றான். அவனுடைய சிவந்த கண்ணையும், வாடிய முகத்தையும் பார்த்து அவர் கவலையுடன் விசாரித்தார். "என்னடா உடம்புக்கு?"

"தலை வலிக்கிறது" என்றான் அவன், குனிந்த தலையுடன். "போ, சுந்தரம் அறையிலே போய்ப் படுத்துக்கொள். இங்கே இருந்தால் வருவோரும் போவோருமாகக் கஷ்டப்படுவாய்."

மாணிக்கம் தயங்கினான். ஆனால், ஆசிரியர் அவன் தோளைப் பிடித்து உந்தித் தள்ளினார். அவன் வேறு வழியின்றி மாடிப்படி ஏறினான். எதிரே நளினி, பாட்டுப் பாடிக் கொண்டே இறங்கினாள். மாணிக்கம் ஒதுங்கினான். அவன் முகத்தைப் பார்த்த அவள் பதறிவிட்டாள். "ஏன், என்ன?" என்று கேட்டாள்.

"தலைவலி."

"நான் மாத்திரையும் காபியும் கொண்டு வருகிறேன். சுந்தரம் ரூமிலே போய்ப் படுத்துக்கொள்ளுங்கள்" என்று கட்டளையிட்டாள்.

"அப்பாவைப் போலவே பெண்; நான் ஏன் சுந்தரம் ரூமில் படுக்கவேண்டும்? கீழேயே அலுவலகத்தில் படுத்திருப்பேன்" என்றான் மாணிக்கம், அதிருப்தியுடன்.

"சுந்தரம் ரூமில் படுத்தால் என்னவாம்?"

"அவன் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டேன் என்று அவன் என்னைத் திட்டமாட்டானா?" என்று மாணிக்கம் வேடிக்கையாகப் பேசினான்.

"இன்றைக்குத்தானா? என்றைக்கோ முற்றுகையிட்டாயிற்றே!" என்றாள் நளினி.

மாணிக்கத்தின் மண்டையுடன் இதயமும் சேர்ந்து டமாரம் அடித்தது. "என்ன சொல்கிறாய் நீ?" என்று அவன் கடுமையாகக் கேட்டான்.

நளினியின் கண்கள் அவனையே விழுங்கி விடுவன போலப் பார்த்தன. உடனே ஒரு திரை விழுந்தது. கலகலவென்று சிரித்துக்கொண்டு, அவள், "இது முதல் தடவை அல்லவே, அத்தான் அறையை உபயோகப்படுத்துவது?" என்று வெகுளித்தனமாகக் கேட்டுவிட்டுச் சிட்டெனப் பறந்தாள்.

மாணிக்கம் மெதுவாக ஏறி, சுந்தரத்தின் அறையில் சென்று கட்டிலில் படுத்தான். 'என்ன சொல்லிவிட்டாள் நளினி? என்ன தான் சொல்லிவிட்டாள்?' என்று அவன் மூளையில் தந்தி அடித்த வண்ணம் இருந்தது. அவன் அந்த அறையைச் சுற்றிப் பார்த்தான். அங்கே இருந்த அலமாரியைத் திறந்தான். சுந்தரத்தின் வேட்டி, சட்டை, பனியன் எல்லாம் ஒவ்வொன்று, சலவைக் கடையிலிருந்து வந்த காகித உறைகளுடன் இருந்தன. அதன் பக்கத்தில் தன் சூட்டும் இருப்பதைக் கண்டான். 'இது எப்படி இங்கே வந்தது?' அவன் சூட் இருந்த இடத்தில் அவனுடைய நாலு முழ வேட்டியும் ஒரு துண்டும் இருந்தன. அந்தத் துண்டை எடுத்துத் தலையை அழுத்திக் கட்டிக் கொண்டான். மண்டையில் கட்டு விரிந்து ஆடும் எண்ணங்களையே நாகபந்தம் போட்டுவிட்டதாக அவன் எண்ணினான் போலும்! கண்களை மூடிக் கொண்டு படுத்தான்.

மெல்லிய காலடி ஓசை கேட்டதும், நளினியின் தாயும் நளினியும் நிற்பதைப் பார்த்து அவன் எழுந்து நின்றான்.

"இந்தா, தம்பி, மாத்திரையும் காபியும். வெயிலிலே நடக்கும்போது ஒரு துணியாவது போட்டுக்கொள்ள வேண்டும். பழைய காலத்திலே முண்டாசு கட்டிக்குவாங்க. உங்களுக்கு நாகரிகம்.. "

"எனக்கு என்ன, அம்மா, நாகரிகம் தெரியும்? நான் இந்திரா காலனிக்காரன்தானே?" என்று கூறிவிட்டு மாணிக்கம் நளினியை ஓரக்கண்ணால் பார்த்தான். அவள் உதட்டை முறுக்கிக் கொண்டு, சுவர்ப் பக்கமாகப் பார்வையைப் பரவ விட்டாள்.

"நாகரிகமாத் தொப்பியாவது போடணும்" என்று தன் பேச்சைத் தொடர்ந்து பேசி விட்டு, ஆசிரியரின் மனைவி அவன் காபி சாப்பிடும்வரை இருந்து, காபி டம்ளர், டபராவை வாங்கிக் கொண்டு கிளம்பினாள்.

அவர்கள் போகும் வரை நின்று விட்டு அவன் படுத்தான். சுவர்ப் பக்கமாகத் திரும்பிக் கொண்டான். 'நம் துணிமணிகள் இங்கே எப்போது வந்தன?' என்று சிந்தித்தவாறே அவன் கண்ணுறங்கிவிட்டான். மீண்டும் விழித்துக் கொண்டு பார்த்தான். மாலை நேரமாகி விட்டிருந்தது. பறவைகளின் அரவம் சுருதி கூட்டியது.

அவன் சோம்பல் முறித்துவிட்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். ஆராய்ச்சித் தோட்டம் எட்டத் தெரிந்தது. வீட்டின் பின்புறம் ஆசிரியரின் மனைவி காய்கறித் தோட்டம் போட்டிருந்தாள். அவன் அந்தச் சீரான பாத்திகளைப் பார்த்தான். மீண்டும் ஒரு கொட்டாவி வந்தது. படுக்கையில் மல்லாந்து படுத்துவிட்டான்.

பஞ்சணை மெத்தை உடம்புக்கு இதமாக இருந்தது. மேலே மின் விசிறி சுழன்றது. அதன் காற்று, ஆசிரியரின் குடும்பத்தினரின் அரவணைப்பைப்போல அன்பாகத் தழுவியது. அவன் சிறிது புரண்டான். பிறகு மாலை நேரமாகிவிட்டதே என்று எழுந்தான். அறையின் ஒரு மூலையில் இருந்த முகம் கழுவும் பீங்கான் தொட்டிக் குழாயில் அவன் தண்ணீரால் முகத்தைக் கழுவிக் கொண்டான். சலவையிலிருந்து வந்த புதுத் தேங்காய்ப்பூத் துண்டும், புதிய சிறிய மாதிரி சோப்பும் தயாராக இருந்தன. அவன் முகத்தைச் சோப்புப் போட்டு நன்றாகக் கழுவித் துடைத்துக் கொண்டான். கண்ணாடியில் பார்த்துத் தலையைச் சீவிக்கொண்டான்.

இப்பொழுது தலைவலி இல்லை. பச்சைத் தண்ணீர் விட்டு அலம்பிக் கொண்டதும் கொஞ்சம் தெம்பாக இருந்தது. ஆனால் அவன் உடனே இறங்கிச் சென்றுவிடாமல் அந்த அறையைச் சுற்றிச் சுற்றி வந்தான்.

'இந்த மாதிரி அறை, சலவைத் துணிகள், இந்த மெத்தை-இப்படிப்பட்ட வாழ்வுதான் மனசுக்குப் பிடிக்கிறது. இந்திரா காலனியிலே என் குறுகிய அறையும், துத்தநாகப் பெட்டியும், பழுப்பேறிய துண்டும் வெறுப்பாக இருக்கின்றன. ஆனால், அங்கேதானே அம்மா இருக்கிறாள்? அம்மாவும் இப்படி மேல் மட்டத்தில் வாழ்ந்தவள்தானே? இப்போது அவள், காலனியில் பாந்தமாகக் கூட்டி, பெருக்கி, மெழுகிக் கொண்டு வாழவில்லையா?'

"அப்பா! தூக்கம் கலைந்ததா?" என்று கேட்டுக்கொண்டே வந்தாள் நளினி.

மாணிக்கம் ஜன்னல் பக்கத்திலிருந்து திரும்பிப் பார்த்தான். கழுத்தில் மிக மெல்லிய வெள்ளிச் சங்கிலியில் ஒற்றைத் தாமரைப்பூப் பதக்கம் தொங்கியது. இளநீல வர்ண நைலக்ஸ் புடைவையும், அதே நிறத்தில் ரவிக்கையும் அணிந்திருந்தாள். நளினி கை நிறைய மயிரிழையாக மெலிந்த வெள்ளி வளையல்கள் குலுங்கின. "வெண்ணிலவு இரவு மாதிரி இருக்கிறாய் நீ" என்றான் மாணிக்கம்.

"இதென்ன ஆராய்ச்சி?" என்று கேட்டாள் நளினி, ஏளனமாக.

"நீலவானம், வெள்ளித் தாரகைகள், நடுவிலே சந்திர பிம்பம்...."

"ஓகோ! எத்தனை நாட்களாகக் கவி பாட ஆரம்பித்தீர்கள்?"

"கவிதைக்குக் கரு கிடைத்தவுடன்" என்றதும் மாணிக்கம் நாக்கைக் கடித்துக் கொண்டான். ஆனால் சொற்கள்

கட்டில் அடங்கவில்லை. "பத்மினி மட்டும் இங்கு இருந்தால் அப்படியே படம் வரைந்து தந்துவிடுவாள்" என்றான் அவன், தொடர்ந்து.

"பத்மினியிடமிருந்து கடிதம் வந்தது."

"என்னவாம்? நரசிம்மாவதாரம் எப்படி இருக்கிறதாம்?"

"சவுக்கியமாக இருப்பதாகத்தான் எழுதுகிறாள். எந்தப் பெண்ணும் தன் அந்தரங்கத்தை யாரிடமும் சொல்லிவிட மாட்டாள்."

"என்னிடம் சொல்லுவாள்!"

"என்ன இறுமாப்பு ஆண்களுக்கு?"

"ஆமாம். நான் பழகுபவரிடம் நெருங்கிப் பழகிவிடுகிறேன். மற்றவர்களிடம் ஒட்டவே தெரியவில்லை."

"அதாவது யாரைச் சொல்கிறீர்கள்?"

"பத்மினி, சுந்தரம்...."

"அப்புறம்?" என்று நளினி கேட்ட போது, அவள் கண்கள் ஆயிரம் கேள்விகளைக் கேட்டுவிட்டுப் பதிலுக்கு ஆவலாக நின்றன.

"அவ்வளவுதான்" என்றான் மாணிக்கம்.

"அவ்வளவுதானே? சரி" என்று கூறிவிட்டு நளினி, சூறாவளிபோல் மடமட வென்று இறங்கி ஓடி மறைந்தாள்.

மாணிக்கம் மெதுவாக அவள் பின்னாடி இறங்கிக் கீழே வந்தான்.

ஆத்மநாதன் தம்பதிகள் இரண்டு நாற்காலிகளில் அமர்ந்து என்னவோ பேசிக் கொண் டிருந்தனர். மாணிக்கம் வந்ததைப் பார்த்தது, "நளினி எங்கே?" என்று கேட்டார்கள்.

"தெரியாதே! அவள் அப்போதே இறங்கிவிட்டாளே!"

ஆனால், அவர்கள் கேட்ட கேள்வியும், தான் சொன்ன பதிலும் அவனுக்கே திருப்தி யளிக்கவில்லை. நளினி தன்னிடம் வந்து பேசிக்கொண் டிருப்பாள் என்று அவர்கள் எதிர்பார்ப்பதும், ஓர் ஆடவனுடன் மாடியறையில் தம் பெண் தனிமையில் பேசுவதை ஆமோதிப்பதும், அவர்கள் நம்பிக்கையோடு அவனிடம் சர்வ சாதாரணமாகக் கேள்வி கேட்பதும், அதற்கு என்னவோ சுயபாதுகாப்பை நிலைநாட்டுவது போலத் தான், 'அப்போதே இறங்கிவிட்டாளே?' என்பதும் அவனுக்குச் சற்றும் பிடிக்கவில்லை.

"தலைவலி விட்டதா?" என்று கேட்டார் ஆசிரியர்.

"சரியாகிவிட்டது. நான் வீட்டுக்குப் போய்விட்டு வருகிறேன்."

"நீ போ; வேண்டாம் என்று சொல்லவில்லை. அங்கே உங்கள் தெருவில் ஆரோக்கியமான காற்றுக்கூட இல்லை. இன்று இரவு இங்கிருந்துவிட்டு நாளைக்குப் போயேன்."

"இல்லை, ஸார். வீட்டில் காத்துக் கொண்டிருப்பார்கள்" என்று பதில் தந்துவிட்டு அவன் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினான்.

அவன் தோட்டத்தைத் தாண்டி நடக்கும்போது நளினி எதிர்ப்பட்டாள். உலாவிவிட்டு வந்தாள் போலும். "உன்னைத் தேடுகிறார்களே? சொல்லி விட்டுப் போகக்கூடாது?"

"நான் எங்கே போய்விடுகிறேனாம்? திரும்பத் திரும்ப இந்த வளைவுக்குள்தான் நடப்பேன்."

"நான் இறங்கி வந்ததும் கேட்டார்கள். என்னவோபோல இருந்தது."

"ஏனோ?"

"சரி, நான் வருகிறேன்."

"நாளைக்கு உங்கள் வீட்டுக்கு அப்பாவும் அம்மாவும் வரப்போகிறார்களாம். சொன்னார்கள்" என்று கூறிவிட்டு அவனையே உற்று நோக்கினாள் நளினி.

"எதற்காக?"

"இதோ போய்க் கேட்டுக்கொண்டு வருகிறேன்" என்று கிளம்பினாள் நளினி.

அவள் போகும் வழியைத் தடுத்து விடுவான்போல அவன் ஒரு கையைக் குறுக்கே நீட்டினான். "இதா! என்ன இது? எதுக்கு எடுத்தாலும் என்னோடு சண்டைதானா?" என்றான்.

"நானா சண்டை போடுகிறேன்? நீங்கள்தாம்." நளினியின் தொண்டை அடைத்தது. கண்களில் நீர் குபுகுபு வென்று நிரம்பிவிட்டது. கண்களின் ஓரத்தில் குவிந்த நீரைச் சுண்டிவிட்டு, அவள் நாசூக்காகக் கைகுட்டையால் ஒற்றினாள்.

மாணிக்கம் வேதனையுடன் ஒரு விநாடி நோக்கினான். பிறகு குறும்பாகச் சிரித்து, "அழ நினைப்பவர்கள் கண்களில் மை யிட்டுக் கொள்ளக்கூடாது" என்றான்.

"இதுவரை என்னை யாரும் அழவைத்த தில்லை. எப்படித் தெரியும் எனக்கு முன் யோசனையாக?"

"உஷ்! நளீ! என்னைப் பார். சிரி. உங்கள் அப்பா, அம்மா வருவதற்கு ஏதேனும் காரணம் உண்டா என்று கேட்டேன். அதற்கு இப்படி ஒரு கோபம், ஒரு தாபம், ஒரு கண்ணீர்!"

"நீங்கள் இந்த வீட்டில் ஒன்றிப் பழகிவிட்டீர்கள். அவர்களுக்கு உங்கள் குடும்பத்துடன் பழக வேண்டும் என்று இயற்கையாகத் தோன்றாதா?"

"நட்புக் கொள்ளத் தாரதம்மியம் பார்க்கவேண்டாமா? எங்கள் சாக்கடை முன் கார் நின்றால், ரத்தினங்கூடக் காத்து நிற்பதற்கு அஞ்சுவான். உன் அப்பா வந்து, எங்கள் கூடத்திலே, மூலையிலே அடுக்குப் பானையும், விட்டத்திலே இலைச்சருகுக் கட்டுகளும், பக்கத்திலே பருப்பு மூட்டையுமாகச் சூழ, நடுவில்

அமர்ந்து பேசுவதை யோசித்துப் பார். உன் அம்மா, எங்கள் கரி பிடிச்ச சமையலறையில் எங்கள் அம்மாவின் .....''

''போதும்! அவர்களை வரவேண்டாம் என்று சொல்லிவிடுகிறேன்.''

''அதுதான் தேவலை, நளினி.''

''நீங்களே சொல்லுங்கள்.''

''நீ பதற்றப்படாமல் யோசித்துப் பார். எங்கள் அப்பா உன் அப்பாவிடம் பேசவே பயப்படுவார். உனக்குத் தெரியாதா?''

''ஐயோ, அநாவசியமாக உங்கள் மனசைப் பிரும்ம முடியாகப் போட்டுக் கொண்டு, அவிழ்க்க முடியாமல் தவிக்கிறீர்களே!''


''இருக்கலாம்.''

''தெளிவு படுத்திக்கொள்ளத்தான் முயன்று பாருங்களேன்.''

''ஆகட்டும்'' என்றானே தவிர, அவன் முகம் கறுத்துவிட்டது. நெற்றி நரம்புகள் புடைத்தன. அவன் எங்கோ வெறித்துப் பார்த்தான். ''உன் அப்பா, அம்மா வரும்போது நீயும் வருவாயல்லவா?'' என்று ஒரு மரத்தைப் பார்த்துக்கொண்டு கேட்டான்.

''நான் எதற்கு?''

''அவர்களை உபசரிக்க நீயும் உதவுவாய் என்று நினைத்தேன். சரி, வரவேண்டாம். உன்னை அழைக்க எனக்கு என்ன உரிமை?''



"ரொம்பத்தான் உரிமை தெரியும், உங்களுக்கு!"

"நான் வருகிறேன்."

"நானும் வருகிறேன், உங்கள் வீட்டுக்கு" என்று கூறிவிட்டு நளினி ஓடி மறைந்தாள்.

மாணிக்கத்துக்குச் சிரிப்பு வந்தது. அவன் தலையை ஆட்டியபடியே வேகமாக நடந்து தன் வீடு சென்றான்.



அன்று செவ்வாய்க்கிழமை. கடைவீதியில் கூட்டம் நிறைய இருந்தது. அதற்கு ஈடு கொடுத்துக்கொண்டு அவன் நடந்து சென்றான். வருகிற வண்டிகளுக்காக ஒதுங்கி நின்றபோது அவன் ஒரு வளையல் கடை முன் தான் நிற்பதை உணர்ந்தான். அன்று நளினி கைநிறைய வெள்ளி வளையல் அணிந்திருந்த காட்சி நினைவுக்கு வந்தது. அவன் கடையை நெருங்கினான். வண்ணக் களஞ்சியமாக அவன் எதிரில் வளையற் குவியல்கள் அவனைப் பிரமிக்கச் செய்தன.

"வளையல் வேணுமே!" என்றான் மாணிக்கம், பரிதாபமாக.

"என்ன அளவு? அளவு வளையல் கொண்டு வந்தீங்களா? பெரியவங்களுக்கா? குழந்தை ஸைஸா?" என்று கடைக்காரர் கேள்விமேல் கேள்வி அடுக்கிக்கொண்டே போனார். மாணிக்கம் விழித்தான்.

"சுமார் பதினெட்டு வயதுப் பெண்ணுக்கு."

"அலமேலுவுக்கா? இரண்டேகால். இது தான் சிவப்பு, வாங்கிக்க, தம்பி. செதுக்கு வளை எப்படி இருக்குது, பாரு!" என்று அவன் தெருப் பெண் ஒருத்தி உதவிக்கு வந்தாள்.

மாணிக்கம் தங்க நிறத்தில் செதுக்கின மாதிரி இருந்த வளையல்கள், இரண்டு டஜன் வாங்கிக்கொண்டு வீடு வந்தான். அலமேலுவிடம் அவற்றைத் தந்தான்.

"எவ்வளவு அழகாக இருக்கிறது! எங்கே வாங்கினே, அண்ணா?" என்று கேட்டாள் அலமேலு.

"கடையிலே கண்ணிலே பட்டுது. வாங்கினேன்."

"இத்தனையும் எனக்கா?"

அவள் முகம் ஆர்வமும் மகிழ்ச்சியுமாக மலருவது பார்த்து அவன் அகமகிழ்ந்தான். "வேறே யாரு இருக்காங்க, தங்கச்சி?"

"நளினிக்குப் பாதி கொடுக்கிறேனே!"

"அது உன் இஷ்டம். ஆனால் நான் வாங்கினேன் என்று சொல்லாதே!"

"ஏனாம்?"

"அவள் சிரிப்பாள்."

"உனக்கு வளையல் வாங்க நல்லாத் தான் தெரியுது. முன்னேகூட வளையல்கார வேஷத்திலே வாங்கினியே?"

"அது பிளாஸ்டிக்."

"எல்லாரும் சங்கு வளையல்னு நினைச்சிட்டாங்க. கொடுத்தது தப்புன்னுகூடச் சொன்னாங்களாம்."

"யாரு சொன்னாங்க?"

"நளினிதான் என்கிட்டே சொல்லிச்சு."

"பெங்காலிக்காரங்கதான் கல்யாணப் பொண்ணுக்குச் சங்குவளை போடுவாங்களாம்."

"ஆமாம். அதனுல்தான் அவள் கல்யாணப் பொண்ணு வேஷம் பார்த்ததும் பொறுக்கி எடுத்துக் கொடுத்தேன்."

"கல்யாணப் பிள்ளைதான் சங்குவளே கொடுக்கணுமாம்."

"அது பிளாஸ்டிக். நளினிகிட்டே சொல்லு" என்றுன் மாணிக்கம். ஆனுல் அவன் இதயம் படபடக்க ஆரம்பித்தது.

"அலமேலு, நாளைக்கு நளினியின் அம்மாவும், அப்பாவும் வராங்களாம்."

"வரட்டுமே; ஏதாவது காரியமா?"

"இங்கே என்ன வேலை அவங்களுக்கு?" என்றுன் மாணிக்கம், கோபமாக.

அண்ணனின் போக்கு அவளுக்குப் புரியவில்லை. மேற்கொண்டு ஏதும் கேட்கவும் பயந்து கொண்டு, அவள் பேசாமல் இருந்தாள்.

மாணிக்கம் தன் அறைக்குள் புகுந்து கொண்டுவிட்டான். இரவு சாப்பாட்டுக்கு எழுந்து வந்தவன், மீண்டும் உள்ளேயே போய்ப் படுத்துவிட்டான்.

மறுநாள் காலை அவன் குளித்து, வண்ணுன் உடுப்பு உடுத்து, வேலைக்குக் கிளம்புவதாக இருந்தான். அப்போது நளினி வீட்டுக் கார் அவர்கள் வீட்டின் முன் வந்து நின்றது. ஆத்மநாதன் தம்பதிகள் இறங்கினுர்கள். நளினி பின்னுடி இறங்கினுலும், அவர்களை முந்திக் கொண்டு முன்னுடி வீட்டில் நுழைந்தாள்.

கந்தசாமி செட்டி பூஜையில் இருந்தார். தனபாக்கியம் துணி உலர்த்திக் கொண்டிருந்தாள். அவர்கள் திடீர் வரவு எல்லாரையும் திக்குமுக்காடச் செய்தது. அலமேலு அவசரமாகப் புதுப் பாய் ஒன்றை எடுத்து விரித்தாள். இலைக் கட்டு வைத்திருந்த ஒரு மர ஸ்டூலை எடுத்துத் தட்டித் துடைத்துப் போட்டாள்.

"நானும் பாயிலே உட்கார்ந்துக்கிறேன். இப்படியே பூஜையைப் பார்க்க முடியும்" என்று சொல்லிக்கொண்டே, ஆத்மநாதன் பாயில் அமர்ந்தார்.

தனபாக்கியம் சிரித்த முகத்துடன், கையைப் புடைவையில் துடைத்தபடியே, "வாங்க, வாங்கம்மா" என்று அழைத்தாள். அலமேலு உள்ளே போய்த் தட்டில் பிஸ்கோத்துகளை அடுக்கி எடுத்து வந்தாள்.

"பகலுக்குமேலே வரலாம்னுதான் நினைச்சோம். அப்புறம், இப்பவே வந்திட்டு, மாணிக்கத்தையும் கூட்டிக்கிட்டுப் போகலாம்னு.." என்று ஆத்மநாதன் தம் வருகைக்காகச் சமாதானம் கூறினுர்.

கந்தசாமி செட்டி பூஜையை முடித்துவிட்டு எழுந்து வந்தார். "வாங்க" என்று கை கூப்பி அழைத்து விட்டு, அவர் ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டார். மாணிக்கம் கல்லால் செதுக்கிய சிலைபோல அசைவற்று, உணர்ச்சியற்று நின்றுன்.

"என்ன, மாணிக்கம், ஏன் இரண்டு பேரும் நிக்கறீங்க?" என்று ஆசிரியர் கேட்டு மேலே ஒன்றும் பேசாமல் நின்றுர்.

நளினியின் தாய் எழுந்து சமையற் கட்டுக்குப் போய்விட்டாள்.

"இப்படி வாங்க. பாயிலே உட்காருங்க. உங்களைப் பார்க்கத்தானே நான் வந்தேன்?" என்று ஆத்மநாதன் கந்தசாமி செட்டியை உபசரித்தார்.

கந்தசாமி செட்டி உடம்பை ஒடுக்கிக் கொண்டு, பேராசிரியர் அருகில் அமர்ந்தார். விலைவாசி, வரி முதலியவற்றைப் பற்றிப் பேச்சு ஆரம்பித்ததும், கந்தசாமி செட்டி ஓரளவு பேசினுர். மாணிக்கத்துக்கோ ஒரே பயம். துவரம்பருப்பில் எவ்வளவு கல் கலக்கவேண்டும், மிளகாய்ப் பொடியில் செங்கல்பொடி சேர்க்கலாமா என்று பேச ஆரம்பித்து விடுவாரோ தன் தந்தை என்று அவன் நடுங்கினுன். ஆனுல் கந்தசாமி செட்டிக்கு அவ்வளவு துணிச்சல் வரவில்லை. மாணிக்கமும் தகப்பன்முன் சரளமாகப் பேசமுடியாமல் நடுநடுவே ஓரிரண்டு பேச்சுக்கள் பேசி விட்டு மற்றபடி வாளாவிருந்தான்.

பெண்கள் வெகு சகஜமாகச் சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர். அலமேலு அடுப்படியில் காபி போட ஆரம்பித்தபோது, நளினி சர்வ சாதாரணமாக அவர்கள் வீட்டுக் கோப்பைகளை எடுப்பதும் துடைப்பதும் அவள் தாய்க்கு அதிசயமாக இருந்தன. "நளினி, நீ என்ன, எதையெல்லாமோ எடுத்து.." என்று அவள் தாய் ஆட்சேபிக்க, தனபாக்கியம், "அதுக்கு எல்லாம் தெரியுங்க" என்று சமாதானம் சொன்னுள்.

அலமேலுவும் நளினியும் காபியும் முறுக்கும் எடுத்துப் போய் ஆடவர்முன் வைத்தார்கள்.

"அலமேலு, நீ ரொம்பக் கெட்டிக்காரியாமே?" என்று கேட்டார் ஆசிரியர்.

அலமேலு தலைகுனிந்து நாணத்துடன் சிரித்துக்கொண்டே நின்றுள். பிறகு நளினியைத் தள்ளிக்கொண்டே முன்பக்க அறைக்குச் சென்றுள்.

சற்றைக்கெல்லாம் இருவரும் கை நிறைய வளையல் குலுங்க வெளியே வந்தனர். அலமேலு கைக்கு ஆறு ஆறு வளையல்கள் அணிந்திருந்தாள். நளினி ஒரு கையில் பன்னிரண்டையும் அடுக்கிக் கொண்டு, அதையே அழகு பார்த்தபடி இருந்தாள். மாணிக்கம் ஓரக்கண்ணுல் அவளை அழகு பார்த்து ரசித்தான்.

"எவ்வளவு அழகான வளையல்கள் பாருங்க, அப்பா!" என்று நளினி தன் தகப்பனுரிடம் கையை நீட்டிக் காட்டினுள்.

''செநெகிதி கொடுத்தாளா?'' என்றூர் ஆத்மநாதன்.

''எங்கள் கடைத் தெருவிலே கிடைக்குது. டஜன் ஒரு ரூபா'' என்று ஒப்பித்தார் கந்தசாமி செட்டி.

''வளேச் செட்டி! இந்த விலே சரி தானு?'' என்று மாணிக்கத்தைப் பார்த்துக் கேட்டுச் சிரித்தார் ஆத்மநாதன்.

அலமேலுவும் நளினியும் சிரித்து விட்டார்கள். கந்தசாமி செட்டி விவரம் புரியாமல் விழிப்பதைப் பார்த்து ஆத்மநாதன் மாறுவேஷத்தைப்பற்றி விளக்கினர். கந்தசாமி செட்டியும் சிரிப்பில் கலந்து கொண்டார்.

ஆத்மநாதன் தம்பதிகள் விடைபெற்றுக் கிளம்பினர்கள். நளினி மட்டும் நின்று விட்டாள், பால் விநியோக ஒத்தாசைக்காக. மாணிக்கம் காரிலே ஏறிக் கொண்டு போய்விட்டான்.

நளினியைத் தன் வீட்டில் விட்டு, தான் அவள் வீட்டுக்குச் செல்வது அவனுக்கு விந்தையாக இருந்தது. அங்கே போனதும் அவன் தன் அலுவலகத்துக்குள் புகுந்து கொண்டான். அவனுக்கு வேலே சரியாக இருந்தது. மதிய உணவுக்கு ஆசிரியர் அழைப்பதற்குள் ஏதேனும் காரணம் கூறவேண்டும் என்று அவன் யோசித்துக்கொண்டிருக்கையிலேயே நளினி இந்திரா காலனியிலிருந்து திரும்பி வந்துவிட்டாள். வரும்போது ஒரு சீசா நிறையத் தினேப் பாயசத்தைச் சுமந்து கொண்டு வந்தாள். நேரே அவனேத் தேடி வந்துவிட்டாள் போலும்.

அவன் தனிமையில் இருப்பதைக் கண்டு, அவள் சலுகையுடன், ''முத்து, இன்னிக்கு நீங்களெல்லாம் வந்த பிறகு, உங்க அம்மா முருகன் கோவிலுக்குத் தினேப்பாயசம் படைச்சாங்க. இங்கே எடுத்துக்கிட்டு வந்தேன். எத்தினி தரம் குத்திப் பக்குவப்படுத்தித் தினேயை வேக விட்டாங்க தெரியுமா?'' என்று உற்சாகமாகச் சேதி சொன்னுள்.

மாணிக்கம் அவளேயே பார்த்தான். ''இந்திரா காலனி பழக்கங்க உங்களுக்குப் புதுமையாகத்தான் இருக்கும்'' என்றுன்.

''எவ்வளவு ருசியா இருக்குது தெரியுமா? நான் கேட்டு வாங்கிக் கிட்டேன். 'பஸ்ஸிலே போறயே, அம்மா, எப்படி எடுத்துக்கிட்டுப் போவே'ன்னு உங்க அம்மா கவலேப் பட்டதைப் பார்க்கணுமே!'' நளினியின் கண்கள் வண்ணத்துப் பூச்சிகளேப்போலப் படபடத்தன. அதரங்கள் லேசாகத் துடித்தன. அழகே வடிவாக, அமிர்த கலசம் ஏந்தி வந்த தேவகன்னிகையைப் போல, அவள் அவன் எதிரே நின்றுள், அன்பைப் பொழிந்துகொண்டு.

''நீ எதுக்காக வாங்கி வந்தே?''

''கோவிலிலே பூஜை போட்டால் அந்தப் பிரசாததத்தை நீங்கள் சாப்பிட வேண்டாமா? அதுக்காகத்தான்.''

''நளினி உனக்கு விவரமே தெரியவில்லே. சாயங்காலம் வீட்டுக்குப் போனு, சாப்பிட்டுக்கறேன். நீ வாங்கி வரணுமா?'' என்று கேட்டான், மாணிக்கம் அதிருப்தியுடன்.

''அப்பாவுக்குப் பிடிக்கும்'' என்றுள் நளினி, சிரித்துக்கொண்டு.

''நீங்க எங்க வீட்டிலே சமையலறை வரை போய் வேலே செய்வது, இப்படிப் பொய்யும் புளுகும் சொல்லிப் பலகாரங்களே வாங்கி வருவது....''

''அத்தை கை மணம் எங்களுக்குப் பிடிக்கிறது.''

''அது யாரு, அத்தை?''

''ஏன், தனபாக்கியத்தம்மாவை நான் அப்படித்தான் கூப்பிடறேன்.'' நாக்கை உருண்டையாக்கி, கன்னத்தில் அடக்கி, கண்களால் சிரித்தாள் நளினி.

''எங்க காலனிக்கும் உங்க சமூகத்துக்கும் எந்த உறவும் இருக்க முடியாது. இதை நினேவு வச்சுக்கோ, நளினி. இப்படியெல்லாம் முறைவச்சு அழைக்கக் கூடாது, தெரியுமா?'' தன் குரல் ஓங்கி விட்டதை உணர்ந்து, அவன் அதைத் தாழ்த்திக்கொண்டான்.

''நான் பின்னே என்னவென்று அழைக்கிறதாம்? ரொம்ப நெருங்கி விட்டாங்க அவங்க.''

''சித்தின்னு, பெரியம்மான்னு ஏதாவது கூப்பிட்டுக்கோ'' என்றுன் அவன், ஜன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டு. அவன் பார்வையின் கடுமை, அவன் குரலின் கொடுமை இரண்டையும் தாங்கமாட்டாதது போல் ஒரு குருவி 'கீச், கீச்' என்று அலறிக்கொண்டு பறந்து சென்றது.

'பாருங்க, பாவம், அந்தச் சிட்டுக் குருவியை விரட்டிட்டீங்க.''

''விரட்டுகிற வரையிலும் சிட்டுக் குருவிங்க உட்கார்ந்திருப்பதைப் பாக்கலே. இப்பத்தான் பார்த்தேன்.''

''என்னேக் கூட நீங்க சிட்டுக்குருவி மாதிரின்னு குறிப்பிட்டீங்கன்னு பத்மினி சொல்லியிருக்கா'' என்று வம்புக்கு இழுத்தாள் நளினி.

''பத்மினி உளறுவாள்.'' மாணிக்கம் அவளுக்கு முதுகையே திருப்பிக் கொண்டு விட்டான். அவள் நின்ற ஒய்யாரம், அவள் கண்களில் நிழலாடிய குறும்பு, அவள் இதயத்தின் சாளரம் திறந்து காட்டிய அன்பு உள்ளம் யாவும் அவனே நிலே தடுமாற வைத்தன. அவன் தன் கைகளால் மேஜை விளிம்பைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்.

''அலே பாயுதே, கண்ணு!'' என்று லேசாகப் பாடிக்கொண்டே அங்கே

இருந்த கண்ணாடி டம்ளரில் பாயசத்தை ஊற்றினாள் நளினி.

"ஏன் அந்தப் பாட்டைப் பாடறே நீ?" என்று சற்று உரக்கவே கேட்டான் மாணிக்கம்.

"அதுதான் நான் இப்ப சொல்லிக் கொடுக்கிற பாட்டு. அதனால் எப்பப் பார்த்தாலும் வாயிலே வரது. ஏன்?" என்று கபடமற்றுக் கேட்டாள் நளினி.

"நளீ, தயவு செய்து இங்கேயிருந்து போயிடு!" என்றான் மாணிக்கம், கர கரத்த குரலில். அவள் கண்கள் சஞ் சலத்துடன் அவனைக் கெஞ்சின.

"என்னன்னு கூப்பிட்டீங்க?" என்று கேட்டாள் அவள், கிசுகிசுத்த குரலில். உணர்ச்சியால் அவள் குரல் கனத்தது.

"ஆமாம், கூப்பிட்டேன் புளீன்னு.." என்று சிரித்துப் பேசி, அந்தப் புழுக் கத்தைக் கலைத்துவிட்டான் மாணிக்கம்.

"இந்தாங்க, கூப்பிட்ட வாய்க்குப் பாயசம்."

மாணிக்கம் நளினியைத் தன் கண் களால் தழுவினான். அவன் கைகள் துடித்தன. "உள்ளே போ, நளினி, ப்ளீஸ்!" என்றான்.

நளினி, "போ, போன்னு விரட்டுறீங்க. நான் இனிமேல் இங்கே வரவே மாட்டேன்" என்று ஆக்ரோஷத்துடன் கூறிவிட்டு, கண்களில் நீர் பள பளக்க, வேகமாக உள்ளே ஓடிவிட்டாள், பாயசச் சீசாவுடன்.

மாணிக்கம் மேஜைமீது தலை வைத்துக் கொண்டு படுத்தான். ஒரு மணி நேரம் கழித்து அவன் நிமிர்ந்து வேலைக்கு எழுந்தான். கண்ணாடி டம்ளரில் தினைப் பாயசம் கேட்பாரற்றுக் கிடந்தது. அவன் அதை எடுத்துப் பருகினான். 'கூப் பிட்ட வாய்க்கு' என்று நளினி குறிப் பிட்டதை நினைத்தான், புரையேறி விட்டது. அதைச் சமாளிப்பதற்குள் போதும் என்றாகிவிட்டது. அவன் இருமி இருமித் தவித்தான். பிறகு, மெதுவாகச் சமாளித்துக்கொண்டு தம் ளரைக் கழுவி வைத்துவிட்டு, வேலை மீது கவனத்தைச் செலுத்தினான். மனம் கட்டுப்படமறுத்தது. பாயசத் தம்ளரைச் சுலபமாக அலம்பிவிட்டானே தவிர, மனம் இனிப்பை நாடியது. அதைக் கழுவ முடியாமல் தவித்தான் மாணிக்கம்.

24. பணமும் பயணமும்.

மீனாட்சி தன் குழந்தையை மடியிலிட்டுக் கொஞ்சிக்கொண்டிருந்தாள். டாக்டர் அந்தக் காட்சியை ரசித்துக் கொண்டு எதிரே அமர்ந்திருந்தார். அலமேலு உள்ளே வந்து, டாக்டர் இருப் பதைப் பார்த்துச் சற்று ஒதுங்கி நின்று, "அக்கா!" என்று மெதுவாக அழைத் தாள்.

"வா, அலமேலு. ஸீஸர் சித்தியைத் தேடிக்கொண்டே இருக்கிறான்" என்று மீனாட்சி அவளை வரவேற்றாள்.

அலமேலு குழந்தையைத் தன் கையில் வாங்கிக்கொண்டு, அத்துடன் குலாவ ஆரம்பித்தாள்.

மீனாட்சி அவள் கொண்டு வந்த கணக்குப் புத்தகங்களைப் பார்வை யிட்டாள். "பணமே பத்தவில்லையே, அலமேலு? இன்னும் ஆஸ்பத்திரி கட்டும் வேலை நிற்கிறது. அமர்க்களமாகச் செய்தியை வெளியில் பரப்பி விட்டோமே" என்றாள், கவலையுடன்.

அலமேலு குழந்தையுடன் கொஞ்சு வதை விடாமல், "சரி, டிராமா போடுவது, கண்காட்சி நடத்துவது— ஏதோ ஒரு விதமாகக் கௌரவப் பிச்சை எடுக்கிறது" என்றாள்.

"சுலபமாகச் சொல்லி விட்டாய். முன்பிருந்த கட்டுக்கோப்பு இப்போது இருக்கிறதா? பத்மினி இருந்தால், அவள் தாட்சண்யத்துக்காக மாணிக்கமும் நளினியும் ஒத்து வருவார்கள். மதன கோபாலன் உதவி கிடைக்காது. அப் படிக்கிடைத்தாலும், நீயும் உன் அண்ண னும் விலகிக் கொண்டு விடுவீர்கள்."

"எல்லா இடைஞ்சலையும் ஒரே முட் டாகக் கற்பனை செய்து விடாதீர்கள். கோதாவில் இறங்கியாச்சு. போராடிப் பார்ப்போமே."

"இளங்கன்று பயமறியாது என்று பேசுகிறாய் நீ."

"எல்லாம் பரவாயில்லை, அக்கா. இந்தத் தடவை நம்ப ஸீஸர் இருக் கானே?"

டாக்டர் சிரித்தார். "சரி, நான் கிளம்புகிறேன். யசோதாவின் பாட்டி சறுக்கி விழுந்து விட்டாளாம். இன்னும் இரண்டு ஜுர கேஸ்." அவர் சென்று விட்டார்.

மீனாட்சியும் அலவேலுவும் வெகு நேரம் சங்க நடவடிக்கைகளைப் பற்றிப் பேசினார்கள்.

"அக்கா, நீங்கள் என் கைவேலை வகுப்பைப் பார்க்கவே இல்லையே! காகி தத்திலும் அட்டையிலும் எத்தனை பொருள்கள் அழகாகச் செய்து வைத் திருக்கிறார்கள், தெரியுமா? காகிதப் பூக்கள், துணிப் பூக்கள், பொம்மைகள்— எல்லாவற்றையும் எப்போது எல்லாருக் கும் காட்டுவோம் என்றிருக்கிறது."

"முதலில் எனக்குக் கூட உற்சாகம் அப்படித்தான் இருக்கும், அலமேலு: ஆனால், எல்லாரையும் ஒன்று சேர்த்து, அவரவர் மனசையும் பிடித்துப் பேசி நடத்துவதற்குள் குடல் தெறித்துப் போய்விடுகிறது. பேசாமல் சங்கத் துக்கு ஒரு முழுக்குப் போட்டுவிடலாமா என்று பார்க்கிறேன்."

"நீங்களே சங்கத்துக்கு முழுக்குப் போட்டால், என்னைப் போன்றவர்கள் என்ன ஆவது? இந்தச் சங்க அலுவல்களினுல்தான் நான் உயிர் வாழ்ந்து வருகிறேன், அக்கா."

மீனுட்சி அலமேலுவை உற்றுப் பார்த்தாள். "நீ சொல்வது சரிதான். எனக்கு மனச் சோர்வு இப்படித்தான் வந்துவிடும். உன்னைப் போன்ற தூண்டுகோல்தான் தேவை. சரி, பார்ப்போம், ஒரு மூச்சு. டிராமா போடுவது கடினம். பொருட்காட்சி, வேடிக்கை விழா, ஏதாவது வைப்போம்" என்றுள் மீனுட்சி.

அலமேலு மீனுட்சியை அணைத்துக் கொண்டாள். "அக்கா, நீங்கள் தங்கந்தான். என்னைப் போன்ற ஓர் ஏழைப் பெண்ணின் பேச்சைத் தட்டாமல் செய்கிறேன் என்கிறீர்களே! நான் எவ்வளவு பாக்கியசாலி!" என்றுள், உணர்ச்சிமிக.

"அலமேலு, நீயா ஏழை? நீதான் பாக்கியசாலி. யார் இல்லை என்றுர்கள்?"

"நீங்கள் எந்தப் பாக்கியத்தைச் சொல்கிறீர்கள், அக்கா? என் அதிருஷ்டத்தை நீங்களே மெச்ச வேண்டும்."

"உனக்கு என்ன குறைச்சல்? உன்னைக் கட்டிக் கொள்கிறவன் புண்ணியசாலி. இனி நல்ல வரன் உன்னைத் தேடி வரும், பார்."

"மணவாளச் செட்டியின் பணத்தைத் தேடி வருவார்கள். நான் அதிலிருந்து ஒரு பைசாத் தொடுவேனு?" என்றுள் அலமேலு.

அப்பொழுது யாரோ விரலால் வாசற் கதவைத் தட்டினுர்கள்.

"கதவு திறந்துதான் இருக்கிறது" என்று முணுமுணுத்துக்கொண்டே, அலமேலு கையில் குழந்தையுடன் தெருப் பக்கம் போனுள். மதனகோபாலன் அங்கு நின்றுகொண்டிருந்தான். அலமேலு விருட்டென்று ஒரே எட்டில் உள்ளே வந்துவிட்டாள். "அக்கா, யார் என்று போய்ப் பாருங்கள்" என்றுள்.

"யார் என்று நீதான் கேளேன், அலமேலு."

"நீங்களே கேளுங்கள்" என்று கூறிவிட்டுக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு, அலமேலு வீட்டின் பின்புறம் போய்விட்டாள்.

அவள் பதிலைக் கேட்டு வியந்த மீனுட்சி, எழுந்து முன்பக்கம் போனுள். மதனகோபாலன் கையைக் கூப்பினுன். ஒரு விநாடி மீனுட்சிக்குப் பதில் வணக்கம் தெரிவிக்கக்கூடத் தோன்றவில்லை. மைனர் சங்கிலி, மைத்தீட்டு, பரிமளம் இவையில்லாமல், கட்டம் போட்ட சட்டையும், சாதா டெரிகாட்டன் நிஜாருமாக எதிரே நிற்பவன் பழைய மதனகோபாலன்தானு என்று சந்தேகம் வரும்படி இருந்தது. அவள், தானும் கை கூப்பிவிட்டு, "வாருங்கள், உள்ளே" என்று அழைத்து, இருப்பதற்கு நாற்காலியின் பக்கம் கை காட்டினுள். மதனகோபாலன் அதில் அமர்ந்தான். அவன் பார்வை அவர்கள் வீடு முழுதும் துழாவியது.

"என்ன, மிஸ்டர் கோபால்? என்னைப் பார்க்க வந்தீர்களா? அல்லது டாக்டர் கிட்டே ஜோலியா? உங்க அம்மா, அப்பா சௌக்கியமாக இருக்காங்களா?" என்று கேட்டாள் மீனுட்சி.

"சும்மாத்தான் வந்தேன். எங்க வீட்டு அமர்க்களமெல்லாம் உங்களுக்குத் தெரிந்ததுதானே? உங்கள் குழந்தையைக் கூட நான் வந்து பார்க்கவேயில்லை." அவன் பேச்சிலும் பார்வையிலும் ஒரு நிதானம் தெரிந்தது.

"அதனுல் என்ன? நமக்குள்ளே சம்பிரதாயமா! பாருங்க" என்று திரும்பிய மீனுட்சிக்கு, அலமேலு குழந்தையைப் பின்புறம் கொண்டு போனது நினைவு வந்தது. அவள் போய்க் குழந்தையை எடுத்துவந்து அவனிடம் நீட்டினுள்.

அவன் குழந்தையை வாங்கிக் கொஞ்சினுன். பிறகு சட்டைப்பையிலிருந்து தங்கத்தில் சிறு மோதிரம் ஒன்று எடுத்துக் குழந்தையின் கையில் மாட்டினுன்.

"எதுக்குங்க இவ்வளவு விலை உயர்ந்த பரிசு? அவனுக்கு அதன் அருமை தெரியப் போவுதா? எதையோ சிகப்பு, பச்சை, மஞ்சள்னு அட்டைப் பெட்டி ரெண்டு கொடுத்தால் போதாதா? எங்கள் அலமேலுதான் சரி. தினமும் வண்ணமும் ஓசையுமா ஏதாவது செய்துகொண்டு வந்துவிடுவா" என்றுள் மீனுட்சி.

மதனகோபாலன் உன்னிப்பாக அவள் பேச்சைக் கேட்டான்.

திடீரென்று மீனுட்சிக்கு நினைவு வந்தது, தான் அலமேலுவைப்பற்றி மதனகோபாலனுடன் பேசுகிறும் என்பது. சமயோசித புத்தியுடன் பேசுவதில் கெட்டிக்காரி என்று பெயர் வாங்கிய தனக்கு, இன்று எங்கே போய் விட்டது அந்தப் புத்தி!

"கைவேலை வகுப்புகள் நடக்கின்றனவாமே?" என்று நிதானமாகக் கேட்டான் மதனகோபாலன்.

"ஆமாம். நீங்கள் வருவதற்கு முன் அலமேலுவும் நானும் அதைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம். ஆஸ்பத்திரிக் கட்டடம் எழும்பிவிட்டது. பார்த்தீர்களா? பணம் பற்றுதுபோல இருக்கிறது. மீண்டும் டிராமா போடவும் முடியாது. ஒரு பொருட்காட்சி வைத்து, அதை ஒட்டி ஒரு மலரும் கொணரலாம் என்று பார்க்கிறேன். அதற்கு உங்கள் துணை தேவை."

"உங்களுக்கு விளம்பரம் வேண்டுமானுலும் சேகரித்துத் தருகிறேன்."

"மலருக்கு விளம்பரம் சேகரிக்க வேண்டும். நன்கொடை வாங்க வேண்டும்."

"எப்போது வேண்டுமானாலும் கூப்பிடுங்கள். நான் வந்து உதவுகிறேன்" என்று சுருக்கமாகக் கூறிவிட்டு, மதனகோபாலன் விடைபெற்று எழுந்துவிட்டான்.

"இருங்க. ஏதாவது சாப்பிட வேண்டாமா?" என்று உபசரித்தாள் மீனாட்சி. அவள் சமையலறையில் நுழைந்தபோது, அலமேலு ஒரு டம்ளர் நிறைய ஓவல்டின் கரைத்துத் தயாராக வைத்திருந்தாள். அதைக் கொண்டு கொடுத்துவிட்டுப் பேசிக்கொண்டிருந்தாள் மீனாட்சி.

போகுமுன், "ஓவல்டின் முதல் தரம்" என்றான் மதனகோபாலன், சற்றுத் தேவையைவிட உரக்க.

"அப்படியா? நன்றிங்க" என்றாள் மீனாட்சி. அவன் போன பிறகு அவள் உள்ளே போனாள்.

அலமேலு சமையலறை மூலையில் அமர்ந்து, பொறுமையின்றித் தவித்துக் கொண்டிருந்தாள்.

"கேட்டியா சங்கதி? ஓவல்டின் முதல் தரமாம். உன் கைக்குத் தோடாதான்" என்று சொல்லிக்கொண்டே வந்தாள் மீனாட்சி.

"அது ஓவல்டின் கம்பெனிக்கு நற்சான்றுப் பத்திரம்" என்றாள் அலமேலு.

"பொல்லாதவ நீ!" என்று அலமேலுவின் கன்னத்தைக் கிள்ளினாள் மீனாட்சி. "பார், அலமேலு. அவன் நல்ல பையன்தான். என்கிட்டே எப்பவும் மரியாதையாகத்தான் நடந்துக்கிறான். ஏதோ ஊரிலே நல்ல பெயர் வாங்கலே."

அலமேலு அந்தப் பேச்சுக்களைக் கவனித்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. "பத்திரமா மோதிரத்தைக் கழற்றி உள்ளே போடுங்க. அவங்க வீட்டுச் சொத்து, தொட்டவங்களுக்குக் கஷ்டம் வரும்" என்றாள். உடனே வீட்டுக்குக் கிளம்பிவிட்டாள்.

பங்காருவின் வீட்டின்முன் வாசலில் மதனகோபாலன் நின்றிருந்தான். அலமேலு நிமிர்ந்த நடையும் நேர்ப்பார்வையுமாகச் சென்று தன் வீட்டுக்குள் புகுந்தாள்.

அவர்கள் வீட்டுக் கூடத்தில் தனபாக்கியம் உள்ளிப்பூண்டு உரித்துக் கொண்டிருந்தாள். கந்தசாமி செட்டி, கடைக்கணக்குப் புத்தகத்தில் ஏதோ எழுதுவதும், மனைவியுடன் பேச்சுக் கொடுப்பதுமாக இருந்தார். சண்முகம், தூணில் சாய்ந்து கொண்டு, குறுக்கே குறுக்கே பேசினான்.

அலமேலு உள்ளே சென்றதும், "பொண்ணு, உன் எண்ணம் என்ன?" என்று கேட்டார் கந்தசாமி செட்டி.

"எதற்கு, அப்பா?"

"பணம் நம் கைக்கு வந்துவிட்ட மாதிரிதான். பத்திரம், சித்திரம் எல்லாம் தயாராகிவிட்டது. இன்னும் ஒரு வாரத்தில் நம் கைக்குக் கிடைத்துவிடும். அதற்குத்தான் பிளான் போடுகிறோம்" என்றார் தந்தை.

"எல்லாம் நேரும் கூறுமாகக் கைக்கு வரட்டுமே! யாராவது கேட்டால்கூட என்ன நினைப்பார்கள்? எண்ணெயில் விழுந்த அப்பம் மாதிரி குதிக்கிறீர்களே!" என்றாள் தனபாக்கியம்.

"என்னங்க, அப்பா, நீங்க ஏன் அலமேலுவைக் கேட்கிறீங்க? அதுக்கு என்ன தெரியும்? சும்மா நம் இஷ்டத்துக்குச் செய்யவேண்டியது தானே?" என்றான் சண்முகம்.

"அப்படிக் கூடாது. அது விவரம் தெரிஞ்ச பொண்ணாயிடுச்சே? கேட்காமல் செய்யக்கூடாது. என்ன, பொண்ணு, வீடு கட்டலாமா? ஒரு கடை வைக்கலாமா?"

"போங்க, அப்பா. எனக்கு உங்கள் பேச்சு ஒண்ணும் பிடிக்கலே" என்றாள் அலமேலு.

"ஏன், ஏன்? நான் கேட்டதுக்குப் பதில் சொல்."

"அவங்க பணம் நமக்கு எதுக்கு? அவங்க பணத்திலே அவங்களுக்கும் சுகமில்லே. எனக்கும் அதைக் கொடுத்த அன்னிக்கே தலைமேலே அடி. உயிர் தப்பியது நீங்க செய்த புண்ணியம்."

"அதெல்லாம் ஒன்றுமில்லே. அவ்வளவு பணம் இடம் பெயரும்போது கொஞ்சம் கலாட்டா இருக்காதா?"

"கொடுக்கல் வாங்கல் பணந்தானே, அப்பா? எத்தனை பேர் மனசு கஷ்டப்பட்டதோ?"

"அப்படியெல்லாம் பேசாதே. வாணிபம் செய்வதும், கொடுக்கல் வாங்கல் வியாபாரமும் நம் குல தர்மம். அதற்கு ஒரு பாவமும் வராது" என்றாள் தனபாக்கியம்.

"அதைப் பத்தியெல்லாம் பெரிய பேச்சுப் பேச உனக்கு என்ன தெரியும்?" என்றார் தகப்பனார்.

"பெரிய இடத்துச் சிநேகமெல்லாம் கிடைச்சுட்டுதே! அப்புறம் நம்மைக்கூட அவள் புளித்த பணம் புளிக்கும்னு பேசுவா" என்றான் சண்முகம்.

"நீ ஏன் என்னோடு சண்டைக்கு வரே? உழைச்ச பணத்துக்கும், பிச்சைப் பணத்துக்கும் வித்தியாசம் தெரியலேன்னா, நீயே போய்க் கேட்டு, அந்தப் பணத்தை உன்மேலே எழுதி வாங்கிக்க. நான் கையொப்பம் இட்டு வாங்க மாட்டேன்" என்றாள் அலமேலு தீர்மானமாக.

"அது கிடக்கிறது, பொண்ணு. பாவம், புண்ணியம் எனக்குத் தெரியாதா? நாய் வித்த காசு குலைக்குமா?

இது நமக்குச் சேரவேண்டிய பணம். சொல்லு இப்போ. வீடே வாங்கிடுவோமா? நாலு குடி வைத்துக் கொள்கிற மாதிரி..''

''எனக்குச் சமாதி வாங்குங்க'' என்றாள் அலமேலு, சலிப்பாக.

''சமாதியா கட்டணும்? கட்டுகிறேன் பார். அவ்வளவுக்கு வாய் வளர்ந்து விட்டதா? உன்னைப் பலி போட்டு விட்டுத்தானே கல்லறை கட்டணும்?'' என்று சிறிக்கொண்டு எழுந்து வந்து, கந்தசாமி செட்டி தன் மகளை ஓங்கி இரண்டு அடி வைத்து விட்டார்.

தனபாக்கியம் முறத்தைக் கீழே போட்டுவிட்டுப் பாய்ந்து வந்து, அலமேலுவைச் சமையற்கட்டிற்குள் தள்ளினாள். கணவரைப் பிடித்து அப்பால் தள்ளி விலக்கினாள்.

''கட்டட்டும், கட்டட்டும். இப்ப நான் விரும்புவதே அதுதான். என் உடனடித் தேவை அதுதான்'' என்று முணுமுணுத்தாள் அலமேலு.

''நீயாவது பேசாமல் சும்மா இரேன்!'' என்று மன்றாடினாள் தனபாக்கியம்.

''எதற்கு, அம்மா, சும்மா இருக்க வேண்டும்? நாயைச் செம்மையாக அடித்து விட்டுப் பிறகு ரொட்டியும், பாலும் கொடுத்து அழைத்தால் அது வரும், வாலைக் குழைத்துக்கொண்டு. நான் வரமாட்டேன்.''

''பங்காரு என்ன செய்வாள், அலமேலு? உன்னை மருமகளாகக் கொள்வதில் அவளுக்கு ஆசை இருந்துதானே கேட்டாள்? மகன் சம்மதிக்காவிட்டால் அவள் என்ன செய்வாள்?''

''மகனைக் கேட்காமலே வாக்குக் கொடுப்பானேன், அம்மா?''

''சின்ன வயசிலிருந்து வேடிக்கையாக அடிபட்ட விஷயந்தானே என்று இருந்து விட்டார்கள். இப்பொழுது அவங்க காரியத்துக்கு மனம் புழுங்கி, பண உதவி செய்கிறார்கள். அவங்களால் முடிந்தது அது.''

''பணத்தினால் மனத்தை வாங்க முடியுமா? மானத்தைத்தான் வாங்க முடியுமா? அன்றைக்கு ஒரு வீட்டாரை அழைத்து வந்தீங்களே, எப்படிப் பேசினாங்க? பார்த்தாயா, வாழைப் பழத்திலே ஊசி ஏத்தற மாதிரி? நான் ஒருத்தன் பெண்டாட்டியா இருந்துட்டு, இனி ஒருத்தனை விரும்புகிற மாதிரி..''

''ஒரு வீட்டிலே ஒரு விவகாரம்னா, தெருவிலே உள்ளவங்களுக்குக் கொண்டாட்டம். யாராவது வம்பு பேசியிருப்பாங்க. அதைக் கேட்டுக்கொண்டு வந்து இவங்க..என்ன செய்வது சொல்லு? காலனி சின்ன சமூகம். எங்கேயும் வம்பில்லாமல் இருக்காது. நம்ப வேலைக் கோளாறு.''

''வேலையாவது கோளாறுவது? அதெல்லாம் நாமாகச் செய்து கொள்றதுதான்'' என்றாள் அலமேலு, ஆத்திரத்துடன்.

''இனிமேல் உன் கல்யாணத்தைப் பத்தித் தொந்தரவு செய்யலே. முருகனுக்கு வேண்டிக் கொள்கிறேன். மாரியம்மன் கல்லுக்குப் பால் ஊத்தறேன்.''

''வர வர, மாரியம்மனுக்குக் கூடப் பணக்காரர் கிட்டேதான் கருணை காட்டத் தோணுது.''

''ஆமாம்! பணக்காரியா இருந்து, பங்காரு என்ன சுகத்தைக் கண்டாள்?''

''அந்தப் பணத்துக்குத்தானே நீ கையேந்தி நிற்கிறே?''

''நான்தான் கை நீட்டி நின்னேனா? மான நஷ்டஈடு என்று உங்கள் அப்பா கோர்ட்டு, கச்சேரின்னு ஆரம்பிக்கப் போகிறாரேன்னு நான் நடுங்கிட்டு இருந்தேன், அலமேலு. வழக்கு ஜயிக்குமான்னு எனக்குத் தெரியாது, ஆனால், நாம்ப வெளியே தலையே காட்ட முடியாதே! அதுக்குள்ளே இப்படியெல்லாம் நேர்ந்தது. அம்மனைத் தீர்த்து வச்சான்னு நினைச்சேன். பணம் யாருக்குத்தான் வாணும்?''

''அந்தப் பணத்தை நினைச்சாலே என் மனம் கூசுகிறது'' என்றாள் அலமேலு.

''சரி, உன் அப்பாகிட்டே சொல்லி அதைத் திருப்பிடுவோம்'' என்றாள் தனபாக்கியம், நம்பிக்கை இல்லாத குரலில்.

''உண்மையாகவா, அம்மா?'' என்று அலமேலு தன் தாயைச் சேர்த்துக் கட்டிக் கொண்டாள்.

கந்தசாமி செட்டி உள்ளே வந்தார். இந்தக் காட்சியைக் கண்டதும் வெகுண்டார். ''இந்தக் கழுதைக்கு நீ இடம் கொடுத்துத்தான் கொழுப்பு ஏறுகிறது. இனிமேல் அவளை எங்கேயும் வெளியே அனுப்பாதே. கட்டைக்கு ரொம்ப உரம் ஏறிப் போச்சு!'' என்று இரைந்தார். தம் வேஷ்டியை இன்னமும் முழங்காலுக்கு மேலே தூக்கிக் கட்டிக் கொண்டு, சினத்தினால் கறுத்த முகத்துடன், கடுமையான தோற்றத்துடன் வாசற்பக்கம் போனார்.

அப்பொழுது நளினியின் கார் வந்து நின்றது. அதிலிருந்து நளினியும் மாணிக்கமும் இறங்கினார்கள்.

கந்தசாமி செட்டி, அவர்கள் படியேறி வருவதைப் பார்த்து, ''எதற்கடா இந்த வேண்டாத சிநேகமெல்லாம்? அலமேலு இன்னிக்கு யாரோடும் பேசமாட்டாள்'' என்று சத்தமிட்டார்.

மாணிக்கம் சட்டென்று தெருவைப் பார்த்தான். போய்க்கொண்டிருந்த இரண்டொருவர் நின்று, இந்த வீட்டுப் புது விவகாரத்தைக் கவனிக்க ஆரம்பிப்பது தெரிந்தது. ''நளினி, திரும்பு. இங்கே நின்றால் இவர் இன்னமும் இங்கித

மில்லாமல் கத்துவார்'' என்றான் அவன், தாழ்ந்த குரலில்.

நளினி அவன் முகத்தைப் பார்த்தாள்; உள்ளே வீட்டுக்குள் பார்வையைச் செலுத்தினாள்: சற்றுத் தயங்கினாள்.

''நளினி, தயவுசெய்து கிளம்பு. நானும் வேண்டுமானால் வருகிறேன். இங்கே இருந்தால்....''

''இங்கேயிருந்தால் என்னடா ஆகிவிடும்? பெரிய ஆபீஸர்னு உனக்கு எண்ணமோ?''

தகப்பன் மேலே பேசுவதற்குள் மாணிக்கம் அவர் அருகில் போய், ''ஏன் அப்பா, அந்த டிரைவர் புரொபஸரிடம் உங்களைப் பற்றி மட்டமாகச் சொல்ல வேண்டுமா?'' என்று கேட்டான்.

ஆத்மநாதன் பெயர் வந்ததும், சுந்தசாமி செட்டி 'கம்' மென்று அடங்கிவிட்டார்.

நளினி முன்னே செல்ல, மாணிக்கம் கூடவே சென்று, காரில் ஏறிக்கொண்டான். கார் திரும்பிச் சென்றது.

''ரத்தினம், ரங்கபாளையம் ஓட்டு'' என்றான் மாணிக்கம்.

''நான் ஒன்றும் லேடீஸ் கிளப் போகப் போவதில்லை'' என்று சிணுங்கினாள் நளினி.

மாணிக்கம், ''நான் மடத்துக்குப் போகப் போகிறேன்'' என்றதும், ''எதற்கு?'' என்று பீதியுடன் கேட்டாள் நளினி.

''ராமகிருஷ்ண மடம் சிறைச்சாலையல்ல. அங்கே ஒரு பெரியவர் சப்த சக்தியைப் பற்றிப் பாடம் சொல்கிறார்.''

''நானும் வரட்டுமா?''

மாணிக்கம் சங்கடத்தில் ஆழ்ந்தான். நளினி அதைப் புரிந்துகொண்டு, ''சரி. நான் கிளப்புக்குப் போகிறேன். டேபிள் டென்னிஸ் ஆடுகிறேன். நீங்கள் உங்கள் வகுப்பு முடிந்ததும், ரத்தினத்தை அனுப்புங்கள், நான் வருகிறேன்'' என்று கூறினாள். கார் ரங்கபாளையம் சென்றதும் நளினி இறங்கி மகளிர் மன்றத்துக்குள் ஓடிவிட்டாள்.

மாணிக்கமும் இறங்கி, நடந்து சென்று ராமகிருஷ்ண மடத்துக்குள் நுழைந்தான்.

பெரியவர் விரிவாகப் பேசிக்கொண்டேயிருந்தார். அவனும் தன் பெரிய நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொண்டான். நேரமாகி விட்டது என்ற நினைவு வந்ததும், ஒரு நிமிஷம் உத்தரவு பெற்றுக்கொண்டு வெளியே வந்தான். மகளிர் மன்றத்தின் முன் காருடன் நிற்கும் ரத்தினத்திடம் போய், ''எனக்கு நேரமாகும். நளினி காத்திருக்கவேண்டாம்'' என்று கூறிவிட்டுத் திரும்பினான்.

''சரிங்க'' என்று சிரித்தபடி கூறினான் ரத்தினம்.

மாணிக்கம் தன் வகுப்புக்கு மீண்டும் வந்தான். ஆனால் அவன் உள்ளத்தினுள் சந்தேக மணல் உறுத்தியது. 'ரத்தினம் ஏன்சிரித்தான்'? என்னவென்றுநினைத்துச் சிரித்தான்? நளினிக்கும் எனக்குமிடையே என்ன உறவு என்று கணக்குப் போட்டிருக்கிறான்? என்னவோபோல் சிரித்தானே! ஏன் சிரித்தான்?'

பெரியவர் தொடர்ந்து விரிவாகப் பேசினார். மாணிக்கம் இரண்டொரு கேள்விகள் கேட்டான். ஏதோ எழுதிக் கொண்டான். அதன் பிறகு அவன் மூளை மீண்டும் அலைய ஆரம்பித்துவிட்டது. 'ரத்தினம் எதற்குச் சிரித்திருப்பான்? மனசை எல்லாம் அளந்துவிட்டவன் போல என்ன சிரிப்பு?'

''என்ன, மாணிக்கம். இப்போ நான் என்ன சொன்னேன், சொல்'' என்றார் பெரியவர்.

மாணிக்கம் திருதிருவென்று விழித்தான். சாமியார் அவனைக் கடுமையாக நோக்கினார். மாணிக்கம் வெட்கித் தலை குனிந்தான். ''நான் கவனித்துக்கொண்டுதான் இருந்தேன்'' என்றார், மெதுவாக.

பெரியவர் மீண்டும் சிரித்தார்.

சுவாமிஜி அடக்கிய சினத்துடன் பேசினார். ''ஆண்டவன் அளித்த புத்தியை இவன் தன் நன்மைக்குப் பயன்படுத்த மாட்டான். மனசைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, அதன் பின்னரே ஓடுவான்'' என்றார்.

மாணிக்கம் குன்றிப் போனான். தன் கோழைத்தனம் அவ்வளவு வெளிப்படையாகத் தெரிகிறதா?

''என்ன யோசிக்கிறாய் நீ?'' என்று கேட்டார் பெரியவர்.

''பழனி மலைச்சாரலில் மூலிகைகள் இருக்கின்றன என்கிறீர்களே: நான் அங்கே போய் என் ஆராய்ச்சியை நடத்த முடியுமா என்றுதான் யோசித்தேன்'' என்றான் மாணிக்கம் சமாளித்துக்கொண்டு.

''உனக்கு வர விருப்பமுண்டா?''

''அழைத்துச் சென்றால் பெரும் பாக்கியமாகக் கருதுவேன்.''

அதன் பிறகே மாணிக்கத்துக்கு நிம்மதி தோன்றியது. பெரியவர் இருந்த அடுத்த இரண்டு நாட்களும் அவர் கூடவே இருந்தான். பிறகு, தன் தாயாரிடம் சென்று, அவளைத் தனிமையாகக் கோவிலுக்கு அழைத்துச் சென்றான்.

''என்ன, முத்து, எதுக்கு இன்னிக்குப் புதுசா என்னை இங்கே அழைச்சிண்டு வந்தே?'' என்று கேட்டாள் தனபாக்கியம்.

''எத்தனை நாள் நீ என் கையைப் பிடிச்சு இங்கே கூட்டிக்கிட்டு வந்திருக்கே?'' என்றான் மகன், சிரித்துக் கொண்டே.

"என்ன சொல்லு. ஏதோ இருக்கிறது."

''உன்னை ஏமாற்ற முடியுமா, அம்மா? உன்னோடு பேசணும்னுதான் இங்கே

அழைச்சிண்டு வந்தேன்'' என்று ஆரம்பித்து மாணிக்கம், பழனி போகும் யோசனையைப் பற்றிக் கூறினான்.

தனபாக்கியம் தன் மகனை நோக்கினாள். அவளால் ஒன்றும் சொல்லிக்கொள்ள முடியவில்லை. ''அலமேலு கதைதான் ஒன்றாயிற்று என்றால், நீ வேறு'' என்றாள், துக்கம் நெஞ்சை அடைக்க.

''அம்மா, நான் சொல்வதையே நீ புரிந்து கொள்ளமாட்டேன் என்கிறாயே! நீயே புரிந்து கொள்ளாவிட்டால், வேறு யாருக்கு விளங்கும்? சொல்லு. இந்தப் பழனிப் பிரயாணம் என் பிற்கால வாழ்க்கைக்கே மிகவும் முக்கியமானது. நான் செய்து வந்த ஆராய்ச்சிக்கெல்லாம் சிகரம் வைத்தது போல அமையக் கூடிய தருணம் இது. எல்லாருக்குமே இப்படி ஒரு வாய்ப்புக் கிட்டாது'' என்று மாணிக்கம் உற்சாகமாகப் பேசினான்.

''பெரிய பதவிக்கு வந்து யாரைக் காப்பாற்ற வேண்டும்? ஏதாவது ஓர் அரசினர் அலுவலகத்திலே நிரந்தரமான ஒரு வேலையில் சேர்ந்தால் வயிறு கழுவப் போதாதா?'' என்று கேட்டாள் தாய்.

''போதுந்தான். ஆனால், அதற்கு இவ்வளவு படித்திருக்க வேண்டாமே?''

''என்ன படிப்போ, என்ன முன்னேற்றமோ? உன்னைப் படிக்கவைத்துப் பார்க்கணம்னு ஆசைப்பட்டேன். நீ காவி உடுத்திக்கொண்டு சாமியார்களோடு திரிகிறேன் என்கிறாய். அலமேலுவைச் சற்று நாகரிகமாகப் படிக்கட்டும் என்று விட்டேன். முரண்டு பிடிக்கிறாள். என் நிம்மதியே குலைந்து விடுகிறது, ஆண்டவனே!''

''அம்மா, நீ வேண்டாம் என்று சொல்லிவிட்டால், நான் போகவில்லை. ஆனால், எனக்கு மன நிம்மதி இருக்காது. ஆசிரியர் வீட்டுக்குப் போனாலோ, அவர் என்னைக் 'கல்கத்தாவுக்கு அனுப்புகிறேன்' என்று ஆரம்பிக்கிறார். அப்படிப் போவதானால், நிறையப் பணம் பிடிக்கும். அப்பாவால் கொடுக்க முடியுமோ முடியாதோ எனக்குத் தெரியாது. அவரை நான் கேட்கவும் மாட்டேன். ஆசிரியரிடம் கடன் வாங்கவும் எனக்கு இஷ்டமில்லை. மேலும், பழனிக்குப் போனால், நான் சுயமாகக் கொஞ்சம் வேலை செய்யலாம். இங்கே ஆசிரியர் விடமாட்டார். அவர் வீட்டிலேயே தங்கவைப்பார்....''

''என்னை என்ன செய்யச் சொல்கிறாய், முத்து?'' என்று கேட்டாள் தனபாக்கியம், எரிச்சலுடன்.

''பழனிக்குப் போக அநுமதி கொடு. முழுமனத்தோடு அனுப்பிவை. உனக்கு மட்டும் கடிதாசு போடுவேன். என் இருப்பிடத்தை யார் கேட்டாலும் சொல்லாதே.''

''இன்னும் எத்தனை நிபந்தனை உண்டோ, அத்தனையும் சொல்லி முடித்துவிடு.''

''அம்மா, இந்த ஒரு தடவைமட்டும்..''

''சரி, அப்பா, சரி. போன தடவை போலச் சொல்லாமல் ஓடிவிடாமல், சொல்லிவிட்டுப் போகிறாயே, அது போதும். எதையோ சொல்லிச் சமாளிப்பேன். உனக்குப் பணம் வேண்டுமானால் நான்.....''

''வேண்டாம், அம்மா, என்னிடம் இருக்கிறது.''

தாயாரிடம் விடைபெற்ற பிறகு, அவன் உள்ளம் தெளிந்து விட்டது. பழனி செல்லும் வரையிலுந்தான் அவனிடம் பணம் இருந்தது. தாய் இலைதைத்த பணத்தையும், தங்கம் வளையல் வாங்கும் பணத்தையும் பெற்றுச் செல்ல அவன் மனம் உதைத்தது. எப்படியும் சமாளித்துக்கொள்ளலாம் என்று இருந்து விட்டான். மனம் லேசாக இருந்தது.

தனபாக்கியமும் மகனும் கோவிலைச் சுற்றிவந்து, சந்நிதியில் நின்று மனமுருக வேண்டினார்கள்.

''அப்பனே, அங்கேயும் நீதான் இருக்கிறாய். என் மகனைக் காப்பாற்றி நல்வாழ்வு தர வேண்டும்'' என்று கண்ணீர் மல்க வேண்டினாள் பெற்றவள்.

மாணிக்கமும் தன் மனசைத் திறந்து ஆண்டவன் முன் வைத்தான். ''இனியாவது எனக்கு மன அமைதி கொடு, ஆண்டவனே. இந்தப் பெரியவருடன் என் வாழ்நாள் முழுவதும் செலவிட அருள்புரி'' என்று வேண்டினான்.

இருவரும் வீடு திரும்பினார்கள்.

மறுநாள் ஊருக்குப் போகுமுன் டாக்டர் வீட்டினரையும் பங்காரு வீட்டினரையும் பார்த்துவிட்டு வரலாம் என்று ஓர் எண்ணம் உதித்து, மாணிக்கம் உடனே கிளம்பினான்.

''ஏதேது, நம் ஸயன்டிஸ்ட் இன்று நம்மைத் தேடிக்கொண்டு வந்துவிட்டார்!'' என்று அவனை வரவேற்றார் டாக்டர்.

மாணிக்கம் சிரித்துக்கொண்டே போய் அமர்ந்தான்.

''இன்னிக்கு உனக்கு நல்ல நாளென்று நினைக்கிறேன், மீனா. மாணிக்கமே வந்திருக்காரு, பாரு.''

''ஆமாம். மிஸ்டர் மாணிக்கம், எங்கள் சங்கத்துக்குப் பணம் பற்றவில்லை. உங்கள் தயவைத்தான் நாடி நிற்கிறேன்.''

''என்ன - சொல்லுங்கள்.''

''உங்கள் சங்கீதந்தான். டிராமா போட முடியாது. அதனால், நீங்களும் நளினியும் சேர்ந்து இரண்டு மணி நேரம் கச்சேரி செய்யவேண்டும். அந்தக் கச்சேரியைப் பதிவு செய்துகொள்ள அநுமதி தந்தால், நமக்கு 'மீராஹால்' வாடகையின்றிக் கிடைக்கிறதாம். தவிர,

நன்கொடை ஐயாயிரம் தருகிறார்களாம்'' என்று மூச்சு விடாமல் பேசினாள் மீனாட்சி.

''ஐயாயிரத்தை முன்னாடியே கேட்டு வாங்கிவிடுங்கள். பாட்டு கேட்ட பிறகு தரமறுத்துவிடப்போகிறார்கள்!'' என்றான் மாணிக்கம், சிரித்து விட்டு.

''உண்மையிலே உங்கள் இரண்டு பேர் பாட்டும் எப்படி ஒத்துப்போகிறது என்பது உங்களுக்குத் தெரியாது'' என்றார் டாக்டர்.

''நான் என்ன பாடகனா? பெரிய வித்துவான்களிடம் பாடம் கேட்டவனா? ஏதோ காதிலே கேட்டதை வைத்துக் கொண்டு, பொழுதுபோக்குக்குப் பாடுகிறவனைப் பிடித்து வேடிக்கை செய்கிறீர்களே?''

''பாட்டின் தகுதியைப்பற்றி நாங்கள் அல்லவா சொல்லவேண்டும்? நீங்கள் சரி என்று சொன்னால் போதும்'' என்றாள் மீனாட்சி.

''ஆசிரியர் எனக்காகப் பல வேலைகளுக்கு முயன்று கொண்டிருக்கிறார். திடீரென்று நான் எங்காவது கிளம்பி விட்டால், உங்கள் வேலை கெட்டு விடுமே?''

''எங்கே போவீர்கள்?''

''தூரமாகத்தான் இருக்கும்.''

''ஊரில் இருந்தால் பாடுவீர்கள் அல்லவா?'' என்று மடக்கினாள் மீனாட்சி.

''அதற்கு என்ன ஆட்சேபம்?'' என்றான் மாணிக்கம்.

''பெரிய பளு நீங்கிற்று'' என்று மீனாட்சி சொன்னபோது அவன் மனச்சாட்சி குத்தியது. எப்படியும் பழனிக்குப் போய்விட்டால், திரும்பிவரப் போவதேயில்லை. 'சரி' என்று சொன்னால் என்ன ஆகிவிடப் போகிறது என்று நினைத்தான் அவன்.

அடுத்தபடியாக அவன் பங்காரு வீட்டுக்குச் சென்றான். பங்காரு தரையில் அமர்ந்து வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருந்தாள். அவள் எதிரே ஊஞ்சலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார் செட்டியார்.

''முத்துவா? வாடா, இப்படி உட்கார்'' என்று தன் பக்கத்தில் இடம் காட்டினார் அவர். மாணிக்கமும் போய்ச் சுவாதீனமாக அவர் அருகில் அமர்ந்து கொண்டான்.

''எங்களுடைய கொடுப்பனையைப் பார்த்தியா, முத்து? எங்களாலே அலமேலுவுக்கு எவ்வளவு கஷ்டம்? நாங்க கொடுத்த பணத்தை வாங்க மறுத்திடுச்சாம். உங்க அப்பா அவளைப் போட்டு அடிச்சிட்டாராமே?''

''அப்படியா? அலமேலுவும் பிடிவாதமா ஏதாவது எதிர்த்துப் பேசியிருக்கும். அப்பாவை எதிர்த்துப் பேசக் கூடிய ஆள் அவள் ஒருத்திதான் எங்கள் வீட்டிலே....''

''தைரியமான பொண்ணு. மேலும், சங்கத்திலே பொறுப்பேற்ற பிறகு, தீர்மானமான எண்ணங்கள், பேச்சுக்கள் வருவது சகஜந்தானே? கண்டிப்பாக ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கிறாளாம், எல்லாரும் சொல்றாங்க'' என்றார் மணவாளச் செட்டி.

மாணிக்கம் பதில் ஏதும் சொல்லவில்லை. அலமேலு விஷயத்தில் இவர்கள் அநியாயமாகத்தான் நடந்து கொண்டு விட்டார்கள் என்பது அவன் அபிப்பிராயம். அதனால் வாளா இருந்து விட்டான்.

''பெண் குழந்தையை வளர்க்கத் துப்பில்லை என்று தானே கன்னிகாபரமேசுவரி ஒரு பெண்ணை எனக்குக் கொடுக்கலை? அலமேலு மீது அளவு கடந்த ஆசையை வச்சு, அவளுக்கு நல்லது செய்யப் போக, எல்லாம் தீங்காகவே முடிகிறது. பெண் கேட்க வந்த யாரோ அவளைத் தப்பாகப் பேசினாங்களாமே?'' என்றாள் பங்காரு.

''தெரியாது.''

''ஆமாம். எங்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.''

''இப்ப வாங்கலைன்னா என்ன, பெரியம்மா? பின்னாடி தேவைப்பட்டபோது கொடுங்க'' என்று பட்டும் படாமலும் கூறிவிட்டு, மாணிக்கம் எழுந்து தன் வீடு சென்றான்.

அலமேலு மாணிக்கத்தின் அறையில் என்னவோ சாமான்களைச் சீர்செய்து வைத்துக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் சிவந்திருந்தன. கன்னத்தில் அடிபட்ட சுவடு இன்னும் பச்சை ரணமாக இருந்தது.

''ஏன், தங்கச்சி, அடிபட்டுச் சாவுறே? அந்தப் பணத்தை வாங்கிக்கிட்டாத்தான் என்ன? பெரியப்பா மனம் உடைஞ்சு போனாரு.''

''மத்தவங்க மனசும் அப்படித்தான் ஒடிஞ்சிருக்கும், நினைச்சுப் பார்.''

''எப்படி அடிச்சுட்டாரு அப்பா உன்னை! த்ஸோ, த்ஸோ!'' தடவிப் பார்த்தான் அண்ணன்.

''பணத்தை வாங்கிக் கிட்டு, என் மனமும் மானமும் அடிபட்டுச் சாவதைவிட, அதை வாங்காமல் என் உடல் நசிஞ்சு போகட்டும். நான் ஒருகாலும் வளையமாட்டேன், அண்ணா.''

''சரி, நல்லபடியா இரு. நான் நாளை விடியற்காலை ஊருக்குப் போகிறேன்.''

''ஊருக்கா?'' என்று அலமேலு கேட்டாள், திகிலுடன். மாணிக்கம் அவளுக்குப் பதில் சொல்லாமல், கடிதங்கள் எழுத அமர்ந்துவிட்டான்.

(தொடரும்)



25. தவிப்பு

ஆத்மநாதன் இரைந்துகொண்டிருந்தார். நளினி ஜன்னலுக்கு வெளியே நோக்கிக் கொண்டிருந்தாள். சுந்தரம், தன் மடியில் விரித்துக் கிடந்த பத்திரிகையைப் பார்த்தபடி இருந்தான். நளினியின் தாய் சாத்துக்குடி பழம் உரித்துக் கொண்டிருந்தாள். அதை விட்டு விட்டுக் கணவனையே கவலையுடன் நோக்கினாள்.

''எங்கோ குப்பை மேட்டில் கிடந்த ஒருவனைத் தூக்கி நான் சிம்மாசனத்தில் வைத்தால் அவன் அங்கு நிலைப்பானா? உருண்டு உருண்டு கீழே போகிறான். மீண்டும் மீண்டும் தூக்கி வைப்பதில் என் கைதான் மாசு படுகிறது. இனி மாணிக்கம் என் எதிரே வரட்டும்! அவனுக்கும் எனக்கும் சொந்தம் விட்டது. என்ன தைரியம்! பார்த்தால் பசுப்போல வேஷம் போடுவது, செய்வது குள்ளநரித்தனம்!'' என்று அவர் எக்கச்சக்கமாக வைது கொண்டிருந்தார்.

''அவன் எதனால் போனானோ? அவர்கள் வீட்டில் என்ன கலைத்து விட்டார்களோ? ராஜீநாமாக் கொடுத்து விட்டுப் போய் விட்டானே!'' என்றாள் அவர் மனைவி.

''கலைக்கிறார்கள் சற்று! வயது குட்டிச் சுவருக்கு ஆவதுபோல ஆகிறது. அன்றைக்குப் போனோமே; அவனுடைய பெற்றோர் அவனுக்குக் குறுக்கே நிற்பவர்களாக இல்லையே! அத்துடன், கர்வம் தலை மட்டம் ஏறியிருக்கிறது. 'நம்மை யார் கட்டுப்படுத்துவது?' என்று ஓர் இறுமாப்பு இருக்கிறது.''

''என்னவோ. பையனைப் பார்த்தால் அப்படியெல்லாம் தலை தெறித்துப் போகிறவனாகத் தெரியவில்லை.''

சுந்தரம் பத்திரிகையின் மறைவிலிருந்து நளினியைப் பார்த்தபடி இருந்தான். நளினி, ஜன்னல் கம்பிகளில் முகத்தைப் புதைத்தவள், திரும்பவே இல்லை.

''கல்கத்தா வேலை கிடைக்கும்போல இருக்கிறதா?'' என்று மெதுவாகக் கேட்டாள் நளினியின் தாய்.

''யார் கண்டார்கள்? எந்தச் சமயம் என்ன சமாசாரம் வருமோ? இவன் பக்கத்தில் இருந்தால் ஏதாவது செய்திருப்பேன். கண் மறைவாக ஒழிந்து விட்டால் நான் என்ன செய்வது? இவ்வளவு தூரம் முன்னுக்குக் கொண்டு வந்தவனுக்கு என்ன மதிப்பு வைத்திருக்கிறான்? சனி, தொலையட்டும்! எள்ளும் தண்ணீரும் தெளிச்சு விட்டேன்.''

''ஏன் அப்படியெல்லாம் பேசவேண்டும்?'' என்றாள் மனைவி.

''உனக்கு என்ன தெரியும்? அரும்பாடு பட்டு நான் சேகரித்த அறிவையெல்லாம் அவனுக்குப் புகட்டினேன். பார்த்தவர்களிடமெல்லாம் என் வாரிசு என்று பெருமையாகக் கூறினேன். நாளைக் கல்கத்தா வேலைக்குப் போனாலும் நான் செய்ய முடியாததை அவன் மூலமாகச் செய்து பார்க்கலாம் என்று ஆசைப்பட்டேன். நான் சிரமப்பட்டதன் பலனை அவன் மூலமாக வெற்றியாக்கிக் கொள்ளலாம் என்று எண்ணினேன். கிடைத்த எதையாவது யோசித்துப் பார்த்தானா? திருடனைப் போல் கிடைத்த அறிவுடன் ஓடிவிட்டானே?'' என்று கொதித்துக் கொதித்து எழுந்தார் ஆத்மநாதன்.

நளினி மெள்ள அங்கிருந்து நழுவினாள். ஆராய்ச்சித் தோட்டத்துக்குள் சென்று ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்டாள்.

சுந்தரம் எழுந்து ஜன்னல் புறமாகப் போய் நோக்கினான். நளினி ஒரு மரத்

தைத் தழுவியபடி, முகத்தைத் திருப்பிக் கொண்டு அமர்ந்திருப்பதைக் கண்டான். அவள் கண்ணீர் வடிக்கிறாள் என்பதை அறிந்தான். ஆயினும், அவன் இருந்த இடத்திலிருந்து அசையவில்லை. தன் மாமா வேலை நிமித்தமாக முன் பக்கம் சென்ற பிறகு, அவன் தன் மாமி யின் அருகில் வந்து அமர்ந்தான்.

"இந்தா, இந்தப் பழத்தை நீயாவது சாப்பிடு. இப்போது உன் மாமா இருக்கிற கொதிப்பிலே இதைக் கொடுத்தால் இதுகூட வெந்துவிடும்'' என்றாள் மாமி.

"மாமி, மாணிக்கம் போய் எத்தனை நாளாகிறது?''

"இரண்டு மாத காலமாகிவிட்டது. யாருக்கும் தெரியவில்லை, அவன் இருப்பிடம். ஏன்தான் போனானோ, ஒன்றும் புரியவில்லை.''

''புரியாமல் என்ன? அவன் ஒரு கோழை, மாமி.''

"இவர் அவனைக் கல்கத்தாவுக்குப் போ, சீமைக்குப் போ என்கிறார். அதற் கெல்லாம் அவனுக்குத் தைரியம் இல்லை. இந்தத் தொல்லையே வேண்டாமென்று தலை மறைந்துவிட்டான். ஊர்ப் பிள்ளை களுக்கெல்லாம் இவர் ஏன் இப்படிப் பாடுபடவேண்டும்? அவனுக்கு இவரே பணம் கொடுத்து உதவ வேண்டும் என்றார். நமக்கென்ன, அப்படியா கொட்டிக் கிடக்கிறது?''

''அவருக்குத் தம் வேலையில் உள்ள ஆர்வம், மாமி.''

''என்ன ஆர்வமோ? ஒரு குழந்தை இருக்கிறாள். காலகாலத்தில் கட்டிக் கொடுத்துக் கண்ணாரப் பார்க்கவேண்டும் என்று தோன்றக் காணோம். யாரோ தெருவில் போகிற பிள்ளைக்கு உதவி, புகழைத் தேடிக் கொள்ளப் பார்க் கிறாராம்!''

சுந்தரம் பேசாமல் இருந்தான். மாமி உரித்து வைத்திருந்த சாத்துக்குடிச் சுளை ஒன்றை வாயில் போட்டுக்கொண்டான். சிந்தனையில் ஆழ்ந்துவிட்ட அவனுக்குச் சட்டென்று தொண்டையில் சிக்கியது.

அவன் முகம் போகும் விதத்தைப் பார்த்து அவனுடைய மாமி, ''புளிக் கிறதா?'' என்று விசாரித்தாள்.

''இல்லையே!'' என்றான் அவன், சமாளித்துக்கொண்டு.

"சுந்தரம், எப்பொழுது முகூர்த்தம் வைக்கலாம்? உன் மாமாதான் கண்ணை மூடிக்கொண்டு கிடக்கிறார். உன் அம்மாவாவது தன் அண்ணனை ஏதாவது கேட்கக் கூடாதா? உனக்கு இஷ்டந் தானே? இல்லாவிட்டாலும் மறைக் காமல் சொல்லிவிடு'' என்றாள் நளினி யின் தாயார்.

''என்னைக் கேட்கிறீர்களே, மாமி? நளினியைக் கேளுங்கள்.''

''அவளை என்ன கேள்வி? உனக்காகவே பிறந்து வளர்கிறாள் அவள். 'அத்தான், அத்தான்' என்று உயிரை விடுகிறாளே!''

''எதற்கும் நளினியைக் கேட்டுப் பாருங்கள்'' என்று பதில் தந்துவிட்டுச் சுந்தரம் தோட்டத்துக்குச் சென்றான். நளினி அதே மரத்தடியில் அமர்ந்து, ஆகாயத்தை வெறித்துப் பார்த்தபடி இருந்த கோலம் அவன் இதயத்தைச் சுட்டதுபோலும்! வேதனை மிகுந்த கண் களுடன் அவன் அவளை நோக்கினான். ''நளினி!'' என்று மெதுவாக அழைத் தான்.

நிதானமாகத் திரும்பினாள் நளினி.

''என்ன அபார யோசனை? ஆகாயத்தில் எத்தனை குருவிகள் இன்று பறந்தன என்ற ஆராய்ச்சியில் இறங்கிவிட் டாயோ?'' என்று கேட்டான் சுந்தரம்.

கத்தியைக் கொண்டு கீறியிருந்தால் கூட நளினி அவ்வளவு கஷ்டபபட்டிருக்க மாட்டாளோ என்னவோ? சுந்தரம், 'குருவி' என்றும் 'ஆராய்ச்சி' என்றும் கூறியதும், அடிபட்டவள்போல் குன்றி னாள் அவள்.

''என்ன, நளினி? ஏன்? உனக்கு உடம் புக்கு என்ன?'' என்று பதறிவிட்டான் சுந்தரம்.

''தலையை மிகவும் வலிக்கிறது. காற் றில் வந்து உட்கார்ந்தால் சுகமாகி விடுமோ என்று பார்த்தேன். ஆனால் அது குறையவே இல்லை.''

''நளினி, வாயேன். நாம் காரில் எங் காவது போகலாம். தலைவலி குறையும்.''

''எங்கே போவது?''

''ஏரிகரைக்குப் போகலாமே! ஏன் இப்படி வீட்டிலேயே அடைந்து கிடக்க வேண்டும்?''

''தலைவலி அதிகமாக இருக்கிறது.''

''மாத்திரை கொண்டு தரட்டுமா? தைலம் ஏதாவது தடவிக்கொள்கிறாயா?''

''எனக்குத் தலைவலியே வந்து வழக்கம் இல்லை.''

''எழுந்திரு. இங்கேயே உட்கார்ந் திருந்தால் சரியாகாது.''

நளினி எழுந்தாள். சுந்தரங்கூட நடந்து சென்றாள். வீட்டு ஜன்னலி லிருந்து ஆத்மநாதன் தம்பதிகள் இவர் களைப் பார்ப்பது தெரிந்தது.

'மகளையும் மருமகனையும் கல்யாணக் கோலத்தில் பார்த்துக் களிக்கிறார்களோ!' என்று எண்ணிக்கொண்டான் சுந்தரம். அன்பும் பரிவும் நிறைந்த பார்வை யுடன் அவன் நளினியைப் பார்த்தான். அவன் மனத்தில் ஆனந்தம் குமிழிட்டது. அவளை அப்படியே தன் இதய பீடத்தில் அமர்த்தி, அவள்மீது அன்புத் தென்றல் வீசி, கனிவுப் பனிபெய்து, எப்படியோ ஒருவித வேதனையும் தாக்காமல் காத்து விடவேண்டும் என்று தோன்றியது

அவனுக்கு. தலைவலியுடன் வேதனைப் படும் அவள் முகத்தை அவனால் காணச் சகிக்கவில்லை. அவன் ஆசையோடு அவளைப் பார்த்தான்.

நளினி தலை நிமிரவேயில்லை.

'இவள் மட்டும் என்னைப் பார்த்து ஒரு புன்னகை பூத்தால் நான் சொர்க் கத்தையே தொட்டுவிட்டு வருவேனே! அந்த நன்றிகெட்ட மாணிக்கந்தானே கொடுத்து வைத்திருக்கிறான்?' என்று சுந்தரம் தனக்குள் எண்ணிக்கொண் டான்.

நளினியோ பராமுகமாக, ஓர் அக ழிக்கு அப்பால் தொலைதூரத்தில் நடப் பதுபோல நடந்து சென்றாள்.

"நளினி, நீ ஏன் மாலை வேளைகளில் போய் டென்னிஸ் ஆடுவதில்லை? உட லுக்கும் மனசுக்கும் தெம்பாக இருக் குமே! தோழிகள் யாரையும் காணோம். சதா இரண்டு பெரியவர்களுடன் அடைந்து கிடப்பது தலைவலியைத்தான் தரும்" என்று கடிந்தான் சுந்தரம்.

"யாரைப் பார்த்தாலும் ஒரே அபிப்பிராயந்தானா?" என்று மிக அலுப் பாகப் பேசினாள் நளினி.

"இன்னும் யார் இப்படிப் பேசி விட்டார்கள்?" என்று பரிகசிப்பது போல் கேட்டான் சுந்தரம்.

"யார் என்ன? எல்லாருந்தான்."

நளினி யாரைக் குறித்தாள் என்பது சுந்தரத்துக்குத் தெரியாமல் இல்லை. அவள் வாயால் 'மாணிக்கம்' என்ற சொல் வரட்டும். உடனே பிடித்துக் கொண்டு, அவனுடைய குறைகளை எடுத்துக் காட்டி, அவனுடைய நன்றி கெட்ட தனத்தை நன்றாகத் தீட்டி, அவள் மனசிலிருந்து அந்த 'மாணிக்க' வியாதியை அகற்றவேண்டும் என்று துடித்தான் அவன். ஆனால், அவள் எதிலும் சிக்காமல் பேசினாள். வீடு வந்ததும் விடுவிடென்று நடந்து, தன் அறைக்குள் புகுந்துவிட்டாள். சுந்தரம் முன்பக்கத்துக் கூடத்தில் போய்த் தொப் பென்று சோபாவில் விழுந்தான்.

"என்ன சுந்தரம்? ஏன், அப்பா, ஒரு மாதிரியாக இருக்கிறாய்?" என்று அவனை விசாரித்தாள் நளினியின் தாய்.

"நளினிக்குத் தலைவலி பிளக்கிறதாம். எனக்கும் அது தொற்றிக் கொண்டு விட்டதோ என்று நினைக்கிறேன்" என்று கூறிவிட்டுச் சிரிக்க முயன்றான் சுந்தரம்.

"உனக்கு நல்ல காபி போட்டுக் கொண்டு வருகிறேன். அவள் எங்கே? சுக்காவது தேய்த்துப் பற்றுப் போடட் டுமா?" என்று கேட்டுக்கொண்டே அங்கலாய்ப்புடன் விரைந்தாள் மாமி.

சுந்தரம் ஒன்றும் வாய்விட்டுப் பேச வில்லை. மாமி உடனே காபி போடச் சமையலறைக்குள் மறைந்தாள். காபிக் கொட்டை அரைக்கும் இயந்திரத்தின் ஓசை அவன் செவிகளை எட்டியது. அது தான் நளினியின் தலைவலியின் ஒலியோ என்று எண்ணினான் அவன். உண்மை யாகவே அவன் தலையும் வலிக்க ஆரம் பித்துவிட்டதோ?

அவன் மாணிக்கத்தைப்பற்றி யோசித் துக்கொண்டே இருந்தான். ஆலோ சித்துப் பார்க்கப் பார்க்க, நண்பன்மீது தாங்கமாட்டாத சினம் பொங்கியது. மாணிக்கம் இந்த வீட்டில் கால் வைத்த நாளை அவன் சபித்தான். நளினியின் மனம் பூரணமாக மாணிக்கத்தினிடமே லயித்து நிற்கிறது என்பது அவன் இன்று அறிந்து கொண்ட விஷயம் அல்ல. முன்பே அவன் பலமுறை கண்டு கொள்ளும்படி நேர்ந்தது. மேலும், நளினி விஷயத்தில் மாணிக்கமும் அவ னும் ஒரே விதமாக, ஒரே மனசாக, விருப்பங்கொண் டிருந்தனர். இருவர் உள்ளங்களும் ஒரே சுருதியில் ஒன்றி யிருந்தன. ஆயின், நளினியின் இதயத் தில் அந்தச் சுருதி எதிரொலித்து மாணிக் கத்துடன் ஒன்றி மீட்டியபோது சுந்தரத் தின் உள்ளம் அதிர்ச்சி கொண்டதில் வியப்பொன்றும் இல்லை.

மாணிக்கத்தின் நற்குணத்தை அறிந்த சுந்தரம், அவனிடம் அன்பு பூண்டிருந் தான். தனக்கு அது ஓர் இழப்பாக இருந்தாலும், நளினியின் மகிழ்ச்சியை எண்ணி, அவளை மாணிக்கமே மணந்து கொள்ளட்டும் என்ற மட்டும் அவன் அன்பு இடம் கொடுத்தது. அவனுடைய மாமி கூறியதுபோல, அவன் நளினிக் காகவே வளர்ந்து வந்தான். அவள்மீது கரை காணாத அன்பு கொண்டிருந்தான்.

அவள் நினைவு அவன் உள்ளத்துப் பீடத் தில் புனிதமாக வீற்றிருந்து ஆட்சி புரிந் தது. நளினியின் சிறு முறுவலில் அவன் பைத்தியமானான். அவளது முக வாட்டத் தில் உள்ளம் விண்டான். அருகே இருந் தாலும் தூர இருந்தாலும் அவனுடைய இதய வீணை அவளுக்காகத் தயாராகக் காத்திருந்தது. அவளது ஒரு பார்வை, ஒரு சிறு சொல், ஒரு குறுநகை, ஒரு சொந்தமான செய்கை இன்பநாதப் பெருக்கை வெளியிட்டிருக்கும். ஆனால், அந்த மீட்டல்தான் கிடைக்காமல் வீண் காத்திருந்தது அவன் மனம்.

'மடையன், முட்டாள்! தானும் அநுபவிக்க மாட்டேன் என்கிறான், பிறருக்கும் இல்லாமல் ஆக்கிரமித்துக் கொள்கிறானே, பாவி!' என்று முணு முணுத்தான் சுந்தரம்.

மாணிக்கம் மட்டும் இவன் கையில் கிடைத்தால், அவன் மென்னியைத் திருகி, அவன் இரத்தத்தைக் கண்டு களிப்படைந்திருப்பான் சுந்தரம்.

அவ்வளவு சினம் அவனுக்கு. அடக்கி வைத்த ஆத்திரம் அவனை அசுரனாக மாற்றியது. நளினியை வாட வைத்து, அவள் உள்ளத்தைக் கசக்கி, அவள் பூ உடலை வாட்டக் கூடியவன் ஒருவன் உயிருடன் இருப்பதா என்று அவன் வெகுண்டான். அவனுடைய ராட்சசக் கோபம் அவனுக்கே வியப்பையும் பயத்தையும் அளித்தது.

'அவன் எங்கோ கிடக்கிறான். இவளைக் கைப்பிடித்து இன்பமாக வைத்துக் கொள்ளக் கையாலாகாமல் ஓடிவிட்டான். அவன் மீண்டும் இந்தப் பக்கம் தலைகாட்டமாட்டான், ஒழிகிறான். செத்த பாம்பை அடிப்பதில் நமக்குத்தான் என்ன பெருமை? நளினியை நாம் மணந்து கொண்டு விடவேண்டியதுதான். அவள் மெய் வருந்தாமல், மனம் நோகாமல் காப்பாற்ற வேண்டியதுதான். சின்னப் பெண்தானே? இதய பூர்வமாக ஒருவன் தன்னைக் காதலிப்பதைக் கண்டு கொண்டு விட்டால், எந்தப் பெண்தான் மனம் மாறமாட்டாள்? மாணிக்கத்துடன் அவள் வாழ்க்கை சந்தோஷமாக இருக்குமா என்பது அனுமானத்துக்குரிய விஷயம். நம்முடனோ ஆனந்தத்துக்குக் குறைவே யில்லை. அவள் புத்திசாலிப் பெண். அவளுக்குத் தெரியாதா வித்தியாசம்?' என்று தன்னையே ஆசுவாசப் படுத்திக்கொண்டான் சுந்தரம்.

மாமி காபி கொண்டு வந்து கொடுத்தாள். மணக்கும் சூடான காபியை அருந்திய பிறகே அவனுக்குக் கொஞ்சம் வேகம் தணிந்தது. அவன் மாமியைப் பார்த்து, "நளினிக்கு என்ன கொடுத்தீர்கள்? எழுந்தாளா அவள்?" என்று கவலையோடு கேட்டான்.

"அவளுக்கும் காபி கொடுத்தேன். சுக்குப் பற்று வேண்டாம் என்று சொல்லி விட்டாள்" என்றாள் அந்த அம்மாள். 'சுந்தரம் இப்போதே இவ்வளவு கரிசனத்துடன் இருக்கிறானே! இவனுக்கே அவளை மணம் முடித்துக் கொடுத்தால் கேட்கவே வேண்டாம். அவள் வாழ்க்கை மிக்க உன்னதமாக இருக்கப் போகிறது' என்று அவள் எண்ணிப் புளகாங்கிதம் அடைந்தாள். நளினியை எழுப்பி அழைத்து வர வேண்டும் என்று அவளைத் தேடி விரைந்தாள்.

சுந்தரம் எழுந்து சென்று தன் பிடிலை எடுத்து வந்து வைத்துக்கொண்டு வாசிக்க ஆரம்பித்தான். கேட்போர் உள்ளத்தை உருக்கி, வயிற்றில் வேதனையை உண்டாக்கியது அவன் சங்கீதம். மனவேதனையில் எத்தனை விதம் உண்டோ அத்தனையும் அந்த ஒலியில் கலந்து, கண்ணீரைச் சோர வைத்தது. விரகதாபம், புத்திர சோகம், வீட்டை இழந்த, நாட்டை இழந்த துக்கம், இப்படி என்ன என்னவோ சித்திரங்களைக் கற்பித்துக் கருத்தில் புகுந்து குடைந்தது.

சுந்தரம் தன் கண்களை இறுக மூடிக் கொண்டு வாசித்தான். நளினி எதிரே வந்து அமர்ந்தாள். அவளை அவன் காணவில்லை. தன் வாத்தியத்துடன் ஒன்றி, அதன் மூலமாகத் தன் மனவேதனையை வெளிப்படுத்தினான் அவன்.

நளினி கண்களைத் துடைத்துக்கொண்டாள். கைகளால் செவிகளைப் பொத்திக் கொண்டாள். மார்பை அழுத்திக் கொண்டே கையைப் பிசைந்தாள். அப்படியும் அவளால் பொறுக்க முடியவில்லை. "அத்தான்!" என்று அரற்றி விட்டாள் அவள்.

சுந்தரம் திடுக்கிட்டு விழித்துக்கொண்டான். நளினியின் நிலையைக் கண்டான். பிடிலைக் கீழே வைத்தான். தன் ஆர்வம் அனைத்தையும் தன் கண்கள் வழியாகக் காட்டிக்கொண்டு நின்றான்.

"அத்தான், எவ்வளவு அற்புதமாக வாசிக்கிறீர்கள்! மேனாட்டுச் சங்கீதத்தை நான் கவனித்துக் கேட்டதில்லை. உள்ளத்தைக் கூழாகக் கலக்கி



விட்டீர்களே! என்னால் தாங்கவே முடியவில்லை'' என்று கூறும்போது நளினியின் தொண்டையில் சிறு விள்ளல் அழுகை தப்பி வெளிப்பட்டது.

சுந்தரம் அவளையே பார்த்தான். நளினியும் அவனை நேராக நோக்கினாள். ஒரே கணந்தான். ஆனால் பளிங்குபோல உண்மை பளிச்சிடக் கண்டாள். ஆனால் அவனது கூரிய பார்வையில் சிக்காமல், தன் பார்வையை அகற்றிக்கொண்டாள்.

சுந்தரத்தின் உள்ளம் கூம்பியது.

''ஏதாவது சந்தோஷமாக வாசியுங்கள், அத்தான்'' என்றாள் நளினி, அவனுக்கு மட்டும் கேட்கக் கூடிய குரலில்.

சுந்தரம் தன் இருக்கைக்குச் சென்று, புதுக் கீதம் ஒன்று ஆரம்பித்தான். மேல்நாட்டார் நாட்டியத்திற்கு உதவும் வால்ட்ஸ் ஒன்று எழும்பியது. மீண்டும் அவன் கண்களை மூடிக்கொண்டு லயித்து வாசித்தான். ஒருமுறை அவன் கண் திறந்து பார்த்தபோது, நளினியின் தோற்றம் அவனைக் களிப்பில் ஆழ்த்தியது. அவள் ஒரு முழங்கையை நாற்காலியின் கைமீது வைத்து, விரல்களால் நெற்றியை லேசாகத் தொட்டுக்கொண்டு, கண் இமைகளை மூடிக்



கொண்டு, பாட்டை ஆனந்தமாக அநுபவித்தாள். எங்கும் பிடிப்பு இல்லை, சுளுக்கு இல்லை. பால் வடியும் அவள் முகத்தில் இருந்த பரவசம் அவனை மெய்ம்மறக்கச் செய்தது. சுந்தரம் வாசிப்பதை நிறுத்திவிட்டு அவளை நோக்கினான்.

இமை மயிர்கள் மயில் தோகைபோல் விரிய, அவள் கண்களை அகல விரித்து, அவனை நோக்கினாள். "ஏன் நிறுத்திவிட்டீர்கள்?" என்று கேட்டாள்.

சுந்தரம் மீண்டும் பிடிலை எடுத்து, மிகவும் பிரபலமாக இருக்கும் பாப் ம்யூஸிக் பாட்டு வாசித்தான்.

அவள் கால் விரல்களாலும் கை விரல்களாலும் தாளம் போட்டபடி சிரித்தாள்.

சுந்தரம் மீண்டும் பிடிலைத் தன் மடியில் கிடத்திவிட்டு, அவளைப் பார்த்து முறுவலித்தான். "அழுத பிள்ளை சிரித்ததாம், கழுதைப் பாலைக் குடித்ததாம்!" என்றான்.

"நீங்கள்தாம் சற்றுமுன் உங்கள் பிடில் மூலமாக அழுதீர்கள். மீண்டும் இப்போது சிரிக்கிறீர்கள்."

"அப்படித்தான் இருக்கட்டும். நானா தலைவலி என்று பொய் சொல்லிவிட்டு, மரத்தடியிலும் படுக்கையிலும் கண்ணீர் வடித்தேன்? அழுதவர்களுக்காகிறது சிரிக்கிறதும்."

"இன்னும் கொஞ்சம் வாசியுங்கள். வாய்ப்பாட்டு இல்லாவிட்டாலும் கேட்கும்போது பரவசம் உண்டாகிறது."

"இரு, நான் பாட்டுப் புத்தகத்தைக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, பாட்டுப் புத்தகத்தை எடுத்து எதிரே பிரித்து வைத்துக்கொண்டு பிடில் வாசிக்க ஆரம்பித்தான் சுந்தரம். நளினி சோபாவின் விளிம்பில் அமர்ந்துகொண்டு கேட்க ஆரம்பித்தாள்.

"மோடி வாசிக்கப் போகிறேன்."

"நான் என்ன, பாம்பா?"

"கொடிக்கும் செடிக்கும் பாட்டுப் பாடுவது உன் மரபில் உள்ளதுதானே?"

"என்னை ஒரு நிமிஷம் பூச்சி என்கிறீர்கள், உடனே மரம் என்கிறீர்கள்."

"நீ பூங்கொடிக்கு வாசிக்கிறாய், நான் பொற்கொடிக்கு வாசிக்கிறேன்."

"சரிதான். பைத்தியந்தான் பிடித்துவிட்டது உங்களுக்கு" என்று கூறிச் சிரித்தாள் நளினி.

'ஆமாம், நளினி. உன் மீதுள்ள காதல் என்னைப் பைத்தியமாகத்தான் ஆட்டிவைக்கிறது' என்று சொல்ல வேண்டும்போல இருந்தது அவனுக்கு. அவளை ஓர் உலுக்கு உலுக்கி, மாணிக்கம் என்ற நினைவையே வெளியேற்றி விடவேண்டும் என்று அவன் மனம் துடித்தது.

"என்ன, நின்றுவிட்டீர்கள்?"

சுந்தரம் ஏதும் பதில் சொல்வதற்குள் நளினியின் தாய் சிறு கரண்டி ஒன்றில் சுக்குத் தேய்த்து எடுத்து வந்தாள். "நளினி, நான் சொல்வதைக் கேள். சுக்குப் பற்று போட்டுக்கொள். தலைவலி மாயமாகப் பறக்கும்" என்றாள்.

"எனக்கு இப்போது தலைவலியே இல்லை, அம்மா.. அத்தான் சங்கீதம் என்னைப் புது மனுஷியாக்கிவிட்டது" என்றாள் நளினி, முறுவலுடன்.

அவளுடைய குரலின் கசிவும், அவளது பேச்சின் கருத்தும் தேனாக இனித்தன சுந்தரத்துக்கு. "பரவாயில்லை, போடுங்கள், மாமி" என்றான் அவன்.

"ஏனோ? என் நெற்றி எரிவதில் உங்களுக்கு என்ன திருப்தி?" என்று கேட்டாள் நளினி.

'மாணிக்கத்தின் நினைவு அப்படியே பொசுங்கிப் போகட்டும்' என்று அவன் பதில் சொல்லியிருப்பான். ஆனால் அவன் ஒன்றும் பேசாமல் சிரித்தான்.

ஆத்மநாதன் அங்கு வந்தார். அவர் கையில் ஒரு விஞ்ஞானப் பத்திரிகை இருந்தது. "முன்னே மாணிக்கத்தை அனுப்பச் சொன்னேனே, அந்தக் கட்டுரை வந்திருக்கிறது" என்று கூறிவிட்டு, அசட்டையாக அதை மேஜை மீது வீசிவிட்டு நகர்ந்தார்.

சுந்தரம் நளினியின் முகத்தை ஆராய்ந்தான். அவளும் அவனை நேராக நோக்கினாள்.

"நளினி, மாணிக்கம் எழுதியதை நீ படிக்கவில்லையா?" என்று அவன் கேட்டான்.

"மாணிக்கமா?" என்றாள் நளினி. ஏளனமான, கசப்பான ஒரு சிரிப்பு அவளிடமிருந்து வெடித்தது.

அதைக் கண்டதும் சுந்தரத்தின் உள்ளம் துள்ளி விளையாடியது. அவனுடைய வாழ்க்கைப் பூங்காவிலே திடீரென்று சூரிய வெளிச்சம் படர்ந்தது போல இருந்தது. அவன் நளினியை ஆசையோடு நோக்கினான்.

நளினி தலையைக் குனிந்து கொண்டாள். சுந்தரத்தின் மனம் திறந்து, அவள் முன் உடைந்த தேங்காய் நிவேதனமாக, இனிமையும் தூய்மையுமாக விரிந்து நின்றது. அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் அவளிடம் இல்லை. எதையோ மறுப்பவள்போல அவள் தலையை வேகமாக அசைத்தாள்.

சுந்தரத்தின் மனம் படுத்துவிட்டது. 'வாயைவிட்டுத்தான் பேசுவோமே' என்று துணிந்தவனாக அவன் அவளை நேரே பார்த்தான்.

நளினி கண்களை மூடிக்கொண்டாள். இரண்டு கண்ணீர் முத்துக்கள் அவளது இளமைச் சிப்பியிலிருந்து வெளிவந்தன.

அதைக் கண்டதும் சுந்தரத்துக்கு நா எழவில்லை, "வா, நளீ! காரிலே காற்றாடப் போய் வருவோம்" என்று அவன் வற்புறுத்தினான்.

"அப்பாவும் அம்மாவும் வருகிறார்களா, கேளுங்கள்" என்று ஈனமான குரலில் கூறிவிட்டு, நளினி அவர்கள் அலுவலக அறையில் புகுந்து கொண்டாள்.

சற்றுப் பொறுத்து. "நளீ!" என்று குரல் கொடுத்தான் சுந்தரம்.

நளினி, வாடிய முகமும், கலைந்த கேசமுமாக வெளியே வந்து எட்டிப் பார்த்தாள்.

"மாமா சினிமாவுக்குக் கூப்பிடுகிறார்; போகலாமா?"

"சரி" என்றாள் நளினி. அவள் கையில் மாணிக்கத்தின் கட்டுரை வந்த பத்திரிகை இருந்தது. அதைப் பார்க்காதது போலப் பேசினான் சுந்தரம்.

அவள் உடை மாற்றிக் கொள்ள மாடி ஏறப்போனாள். "நளீ, நான் சொல்கிற புடைவை உடுத்து வா!" என்று கூறினான் சுந்தரம்.

"சொல்லுங்கள்."

"ரோஸிலே ஆரம்பித்து, சிவப்புவரை கிரமமாகக் கலர் மாறிவிடுமே, மைசூர் ஸில்க், அதைக் கட்டிக்கொள்."

நளினியின் நெஞ்சத்தில் ஊசி குத்தியது. மாணிக்கம் ரோஜா மலர் கொண்டு தந்தது நினைவு வந்தது. "வேண்டாம், அத்தான். இரவு வேளை. வேறு ஏதாவது லேசாக உடுத்துகிறேன். அதை, வேறு ஒரு சமயம் உடுத்துக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டு அவள் படியேறிப் போய்விட்டாள்.

அவள் ஒரு வாயில் புடைவையும், அதே போல ரவிக்கையும் போட்டுக்கொண்டு, இரண்டு வரி முத்துமாலையைக் கழுத்தைச் சுற்றி அணிந்திருந்தாள்.

சுந்தரம், அரை அங்குலம் சரிகை போட்ட வேஷ்டியும், பட்டு ஜிப்பாவுமாக எதிரே நின்றான். நளினி சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "என்ன அத்தான், மாப்பிள்ளைமாதிரி அலங்காரம்?" என்று கேலி செய்தாள்.

"மாப்பிள்ளையாவதற்கு என்ன வேணும், சொல் ஒரு பெண்தானே? தயாராக இருக்கிறேன்" என்றான் அவனும், வேடிக்கையாக.

நளினி சிரித்துவிட்டு, மேலும் பேச விரும்பாதவள் போல அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டாள்.

ஆத்மநாதன் வந்தார். கார்ச் சாவியை மகள் கையில் தந்து. "நீதான் ஓட்டணும், நளினி" என்றார்.

அவள் சாவி வளையத்தை விரலில் மாட்டிச் சுழற்றிக்கொண்டு, காரை எடுக்கப் போய்விட்டாள்.

கார்க் கொட்டகையைத் திறக்க உதவுவதாகச் சொல்லிக்கொண்டு, சுந்தரம் அவளைத் தொடர்ந்தான். கதவைத் திறந்து, கார் வெளியே வந்ததும் மீண்டும் கதவைச் சாத்திவிட்டு, அவள் அருகில் முன் இருக்கையில் அமர்ந்தான் அவன். "கழுத்தைச் சுற்றி உட்சுருக்குக் கயிறு மாதிரி என்ன நகை இது?" என்று அவளைக் கேலி செய்தான்.

"அதுக்குப் பெயர்கூட, 'சோக்கர்' தான்" என்று கூறிச் சிரித்தாள் நளினி.

"எதுக்காக இப்படித் தற்கொலை யோசனை?"

"எனக்கு முத்து பிடிக்கும். பலவிதமான முத்து நகை வச்சிருக்கேன்."

'எந்த முத்து?' என்று கேட்டுவிட நினைத்தான் சுந்தரம். "எல்லா முத்துமே நல்முத்து இல்லை, நளினி" என்றான்.

நளினி பதில் சொல்லவில்லை. ஒரு கையால் கழுத்து மாலையைத் தடவிக் கொண்டாள்.

'பாவிப் பயல்! என்னதான் கொடுத்து வச்சிருக்கான்!' என்று தன்னுள் வியந்தான் சுந்தரம்.

நளினி கார் ஓட்டுவதிலேயே கவனமாக இருந்தாள். அவளுடைய பெற்றோர் பின் இருக்கையிலிருந்து என்னவோ பேச்சுக் கொடுத்தனர். சுந்தரம் பதில் சொன்னான். எதையோ ரசித்து மூவரும் சிரித்தனர்.

"நளினி, சுந்தரம் சொன்னதைக் கேட்டியா?" என்று கேட்டுவிட்டு, 'ஓ' வென்று பெரிதாகச் சிரித்தார் ஆத்மநாதன்.

"என்ன?" என்று மெதுவாக விசாரித்தாள் மகள்.

"சரியாகப் போச்சு, போ! ஜோக் என்றால் உடனே சிரிக்கவேணுமே தவிர, பிட்டுப் பிட்டுச் சொல்வார்களா?" என்றார் தந்தை.

"நீங்களாவது வண்டியை ஓட்டக் கூடாதா? அவள் தூங்கி வழியறாப்போல இருக்குது. உடம்பு நல்லாயில்லை. இளைச்சுப் போய்ட்டா. சோறு தின்கிற தில்லை. சொன்ன பேச்சும் கேட்க மாட்டா" என்றாள் தாய்.

"தூங்கட்டும், தூங்கட்டும். தூங்கி எழுந்தால்தான் எது கனவு எது உண்மை, என்று புரியும்" என்றான் சுந்தரம்.

"அதற்காக? கார் ஓட்டும்போதுதான் தூங்குவார்களாக்கும்!" என்றாள் நளினியின் தாயார்.

"தூங்க மாட்டாள். ஏன் பயப்படுகிறாய்? ஏதோ யோசனையிலே இருந்திருப்பாள்" என்றார் தந்தை.

நளினி எதற்கும் அசைந்து கொடுக்க வில்லை. ''நீங்க எல்லாம் வெளிப் படையா, சாதாரணமாப் பேசினுப் புரியும். புதிர் மாதிரி பேசருரே அத்தான்'' என்ருள் அவள், பாதைமீது வைத்த கண் வாங்காமல்.

''புதிர் யார் போட்டா?'' என்று கேட்டாள் தாய்.

சுந்தரம் அர்த்தபுஷ்டியுடன் சிரித் தான்.

சினிமாத் தியேட்டர் வந்ததும் அவர் கள் இறங்கினுர்கள். சுந்தரம் விரைந் தோடி டிக்கெட்டு வாங்கி வந்தான்.

ஹாஸ்யப் படம். எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தனர். கொட்டகை அதிர்ந்தது. நளினியும் படத்தை ரசித் தாள். அவள் தலைவலி, மனவலி எல்லாம் பறந்துவிட்டன. திரும்பி வந்த போது அவளும் உற்சாகமாகப் பேசிக் கொண்டே வந்தாள்.

வீடு வந்து, எல்லாரும் ஆகாரம் உட்கொண்டனர். நளினியைப் பார்த்துப் பார்த்து ரசித்தான் சுந்தரம். அவள் விரல்களின் அழகும், அவள் சாப்பிடும் நளினமும் அவனைக் கவர்ந்தன.

நளினியும் அதைக் கவனித்தாள். சுந்தரம் தன்னை விரும்புவது அவளுக்குப் பளிங்குபோலத் தெரிந்தது. அவனுடைய பெருந்தன்மையான குணம் அவளை ஈர்த்தது. மாணிக்கமோ போன இடம் தெரியவில்லையாயினும், அவன் போன காரணம் அவளுக்குப் புரியாமல் இல்லை. ''நீ போய்விடு நளினி, ப்ளீஸ்!'' என்று அவன் அரற்றியதிலிருந்தே புரிய வில்லையா? யோசனை வந்ததும் அவள் மவுனமாகிவிட்டாள்.

சாப்பிட்டு எழுந்த பிறகு அவர்கள் முன்பக்கத்துக் கூடத்தில் சிறிது நேரம் அமர்ந்தனர். பெரியவர்கள் வெற்றிலை பாக்குத் தரித்தனர். சுந்தரம் திராட் சைப் பழங்களை எடுத்து ஒவ்வொன்ருகச் சுவைத்துக் கொண்டிருந்தான். நளினி பதுமைபோல அமர்ந்திருந்தாள்.

''மாணிக்கம் எங்கே போனுனென்று தெரிஞ்சுதா?'' என்று கேட்டான் சுந்தரம்.

''நமக்கு என்ன கவலை? எங்கோ தொலையட்டுமே!'' என்ருர் ஆத்மநாதன்.

''நல்ல பையன். ஆனுல் மிகவும் கோழை. அவன் பிறப்பு அப்படி'' என்று அங்கலாய்த்தாள் தாய்.

''என்ன, அம்மா கோழை? படிப்பிலே மட்டமா? இதோ இன்னிக்கு வந்திருக் கிற கட்டுரையைப் படிச்சுப் பாருங்க. ஆணித்தரமா எழுதலையா? சங்கோசம், விநயம், தாட்சண்யம்-இதைக் கோழைத் தனம்னு முத்திரை போடறீங்க!'' என்ருள் நளினி, படபடப்பாக.

''அடேயப்பா! இப்படி ஒரு வக்கீலா மாணிக்கத்துக்கு?'' என்ருன் சுந்தரம்.

''அதை ஏன் கேட்கிறே, போ! அவனை நான் மரியாதையாக நடத்தலையாம். இவ பேச்சைக் கேட்டுக்கொண்டு நான் பயந்து நடுங்கிண்டு, ஒவ்வொரு தரமும் எனக்குச் சமமாக இருக்கவைத்து.... அவன் குப்பையிலே இருக்க வேண்டிய வன், சிம்மாசனத்திலே நிற்பானு?'' என்ருர் ஆத்மநாதன்.

நளினி உதட்டைக் கடித்துக்கொண் டாள்.

சுந்தரம் மாமாவின் பேச்சுக்கு முக்கி யத்துவம் கொடுக்கவில்லை. நளினியைப் பார்த்து, ''அவங்க அம்மாவைக் கேட்டியா?'' என்று விசாரித்தான்.

''க்ஷேத்திராடனம் போயிருப்பதாகச் சொன்னுங்க. கோவில் பார்க்கப் போற வங்கதான் பணத்தை வாங்க அதிகாரப் பத்திரம் எழுதித் தந்து, ராஜீநாமாக் கொடுத்துவிட்டுப் 'போவாங்களா?'' என்ருள் நளினி விசனத்தோடு.

'முட்டாள்! தானும் அநுபவிக்காமல், மற்றவர்களுக்கும் இடமில்லாமல் ஆக் கிரமித்துவிட்டானே!' என்று ஓடியது சுந்தரத்தின் மனம். ''அவனை மறந்திட வேண்டியதுதான்'' என்ருன் அவன்.

''அப்படித்தான் தோணுது'' என்ருள் நளினி.

சுந்தரம் கற்கண்டைச் சுவைத்தான் போலும்!

26. நேருக்கு நேர்

'மாதர் நலச் சங்கம் கலைத்திறன் பொருட்காட்சி' என்ற பலகை பெரி தாகத் தொங்கியது. கன்னிகா பரமேசு வரி சத்திரத்தில் பெரிய பெரிய அட்டை கள் பொருட்காட்சியை விளம்பரப்படுத் திக் கொண்டு தொடங்கின. கடைத்தெரு விலும் நகரத்தின் பல இடங்களிலும் சுவரொட்டிகள் அறைகூவின.

காலை எட்டு மணிக்கு ஆரம்பித்தது கண்காட்சி. கூட்டம் நிதானமாக வந்து கொண்டிருந்தது.

இந்திரா காலனி மக்கள் இத்தகைய விழாக்களைக் கண்டு களித்தவர்கள்தாம். ஒவ்வொரு வருஷமும் நகர மைதானத் தில் நடக்கும் பொருட்காட்சிக்குக் கட்டுச் சாதமும் கையுமாகச் சென்று கண்டு களித்து வந்த கூட்டந்தான் அது. ஆனுல், முற்றும் பெண்கள் செய்த பொருள்களையே வைத்து, பெண்களே நடத்தும் ஒரு பொருட்காட்சி புதுமை யாக இருந்தது. காலனியைச் சேர்ந்த வர்களும், அவர்கள் சுற்றத்தாரும் வந்து குழுமினர்.

குழந்தைகளைக் கவரக் கூடிய கிலு கிலுப்பைகள், பொம்மைகள், மற்றும்

விளையாட்டுச் சாமான்களுக்காக ஒரு மூலை. அது அலமேலு மேற்பார்வையில் இருந்தது. அங்கே நல்ல விற்பனை யாயிற்று.

பெண்கள் விரும்பக் கூடிய தையல் வேலைகள், கோலப்புத்தகங்கள், அழகுப் பைகள், வீட்டுக்கு உதவக் கூடிய பொருள்கள் - இப்படி ஒரு பக்கம் எப் போதும் கூட்டத்தைத் தருவித்தது.

தைத்த ஆடைகள் விற்கப்படும் இடத் தில்தான் ஆண்கள் இருந்தார்கள். அவர் கள் விரும்பக்கூடிய டைகள், கைக் குட்டைகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள், சட்டைகள் எல்லாம் இருந் தன.

இதுவும் தவிர, எல்லாரையும் ஈர்க்கக் கூடிய தின்பண்டச் சாலை ஒன்றும் இருந் தது. அங்கு எப்போதும் கூட்டம் நிரம்பி யிருந்தது.

மீனாட்சி, அலமேலு, நளினி மற்றும் சங்கத்தைச் சேர்ந்த பல பெண்களுக்கும் நிமிர நேரமில்லாமல் வேலை இருந்தது; பணமும் நிறையக் குவிந்தது. இந் தப் பொருட்காட்சி இவ்வளவு வெற்றி யுடன் நடக்கும் என்று மீனாட்சி எதிர் பார்க்கவே யில்லை. மனிதர்கள் வரவர, செய்த பொருள்கள் விலை போகப் போக, அவள் உற்சாகமும் ஏறிக்கொண்டே வந்தது. பல விளையாட்டுக்கள் வேறு மக்களை ஈர்த்தன.

கல்லூரி மாணவர்கள் வந்தனர். நளினி அவர்களை அழைத்துச் சுற்றிக் காட்டி னாள். வேடிக்கையும் பேச்சுமாக அவர் கள் விளையாட்டுகளில் சேர்ந்துகொண் டனர். நிறைய ரூபாய்களைத் தோற்று விட்டனர். ''மிஸ் நளினி, நீங்கள் என்ன பொருட்காட்சியா வைத்திருக்கிறீர்கள்? பகற்கொள்ளையல்லவா இது?'' என்றார் கள் சில சக மாணவர்கள்.

''வெளியே பலகையை மாற்றிவிட் டால் போகிறது!'' என்றாள் நளினி.

''காலேஜ் செலவுக்குப் பணம் மிஞ் சாது போல இருக்கிறதே!'' என்றான் ஒருவன்.

''பிரம்மசாரிகளான நாங்கள் யாருக் காக இந்தப் பொருள்களை வாங்குவது? மிஸ் நளினியை ஒரு பாட்டுப் பாடச் சொல்லுங்கள். நாங்கள் தலைக்கு ஒரு ரூபாய் போடுகிறோம்'' என்றார் ஒருவர்.

மீனாட்சி அவனைப் பார்த்தாள். அவன் மதனகோபாலனின் நாடக கோஷ்டியைச் சேர்ந்தவன் என்று அடையாளம் கண்டு கொண்டாள். கடுமையான முகத்துடன் அவள் அந்த ஆளைப் பார்த்து, ''நாங் கள் தலைப்பு விரித்துப் பாடுவதாக இல்லை. அவர்கள் பாட்டை நீங்கள் ஏலம் போடு கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''மன்னிக்கவேணும், ஸிஸ்டர். நளினி யம்மா பாட்டிலுள்ள ஆர்வத்திலே அப்படிப் பேசிவிட்டேன்'' என்றான் அவன்.

நளினி அவர்களை நோக்கி, ''நீங்கள் ஆசைப்பட்டுக் கேட்பதால் நானே பாடு கிறேன். நீங்கள் பைசா கொடுக்க வேண் டாம்'' என்று கூறிவிட்டுக் காம்போதி ராகத்தைப் பாடி, 'ஸ்ரீ சுப்ரம்மண்யாய நமஸ்தே' என்ற கீர்த்தனையைப் பாடி முடித்தாள்.

பலத்த கரகோஷம் அவளுக்கு மரி யாதை செய்தது. நளினி அவர்களுக்குக் கைகூப்பி வணக்கம் தெரிவித்து விட்டு அப்பால் போய்விட்டாள்.

தன் பெற்றோர், பத்மினியின் பெற் றோர், மணவாளச் செட்டி, கந்தசாமி செட்டி யாவரும் வருவதைப் பார்த்து, நளினி அவர்களை வரவேற்றுச் சுற்றிக் காட்டிக்கொண்டிருந்தாள். அப்பொழுது ஒரு மாணவன் வந்து அவளிடம் ஒரு தையற் கூடையை நீட்டி, ''சிரமத்தைப் பாராமல் இந்தக் கூட்டத்தில் பாடின தற்காக எங்கள் அன்பளிப்பு'' என்று கூறினான். நளினி தயங்கிக் கொண்டே அதைப் பெற்றுக் கொண்டாள்.

அவள் நடந்து செல்லச் செல்ல, கைக் குட்டைகள், பைகள், கொண்டையில் வைத்துக்கொள்ளப் பட்டுப் பூக்கள்-இப் படிப் பலரும் கொண்டு தந்தவண்ணம் இருந்தனர். சமயம் கிடைத்தபோது அவள் தன் தோழி மீனாட்சியிடம் முறை யிட்டாள்; ''இதென்ன தொல்லையாகி விட்டது, மீனா?'' என்றாள்.

''மறுபடியும் விற்பனைக்கே வை, மறு படியும் பணம் வரும்'' என்றாள் மீனாட்சி, இரகசியமாக.

''நல்ல பெண் நீ!'' என்ற நளினி அவள் சொன்னபடியே செய்து விட்டுப் பார்வையிடச் சென்றாள்.

அலமேலு இருந்த இடத்துக்குச் சற்றுத் தள்ளி மதனகோபாலன் வந்து நின்றான். அவன் நண்பர்கள் கும்மாளமிட்டுச் சாமான்களை வாங்கினார்கள். அவன் மட்டும் மறைவில் நின்றபடி அலமேலு வையே நோக்கிக் கொண்டிருந்தான்.

சிகப்பில் மஞ்சள் பூசிய ரவிக்கை யும், வெள்ளை வாயில் புடைவையும் உடுத்தியிருந்தாள் அவள். மயிரை உச்சி யில் தூக்கிக் கொண்டை போட் டிருந்தாள்.

அவள் அழகாகப் பேசி வியாபாரம் செய்வதைக் கூர்ந்து கவனித்தான் மதன கோபாலன். பூச்சடைகளும் வித வித மான பூக்களும் விற்பனையாயின.

மதனகோபாலன் முகத்திலிருந்து ஒன்றும் அறியமுடியவில்லை. அலமேலு வும் நிர்மலமான வதனத்துடன் தென் பட்டாள். மதனகோபாலன் அண்மை யில் நிற்பது அவளுக்குத் தெரியாது.

அவன் கால் கடுக்கத் தவம் இருந்தான்.

"என்ன கோபாலு, எங்களை இங்கே அழைச்சுண்டு வந்துட்டு நீ ஒன்றுமே வாங்கவில்லையே?" என்று கேட்டுக்கொண்டு யாரோ அவன் இருப்பிடத்துக்கு வந்ததும் அவன் வேகமாக அவ்விடத்தை விட்டு அகன்றான்.

போகிற போக்கில் அவன் ஓரக் கண்ணால் அலமேலுவைக் கவனித்தான். அவள் செவியில் ஏதேனும் விழுந்ததா என்றே கண்டுபிடிக்க முடியவில்லை. விற்பனைப் பொருள்களைச் சீராக அடுக்குவதில் அவள் முனைந்திருந்தாள்.

அன்று பகல் எல்லாரும் சாப்பிடப் போய்விட்டனர். பொருட்காட்சி இரண்டு மணி நேரம் மூடப் பெற்றிருந்தது. அப்பொழுது சத்திரத்தில் மீனாட்சியும் டாக்டரும் அலமேலுவும் மட்டுமே இருந்தனர்.

"அலமேலு, நீ முதலில் சாப்பிட்டுவிட்டு, குழந்தையைத் தூங்கப் பண்ணு. நானும் டாக்டரும் சாப்பிட்டுவிட்டு வருகிறோம்" என்றாள் மீனாட்சி.

அலமேலு சீக்கிரமாகச் சாப்பிட்டுவிட்டுத் தன் அருமை ஸீஸரைத் தூக்கிக்கொண்டு, முன்பக்கக் கூடத்தில் போய் அமர்ந்து, குழந்தையை மடியில் கிடத்தி ஆட்டியபடியே மெல்லிய குரலில், 'மாணிக்கங்கட்டி' என்ற பாசுரத்தைப் பாடிக்கொண்டிருந்தாள். முதலில் 'மாணிக்கம்' என்ற சொல் வந்ததுமே அவளுக்கு நெஞ்சில் வலித்தது. தழுதழுத்த குரலை மீண்டும் சரிப்படுத்திக்கொண்டு, அவள் 'மாணிக்கம்கட்டி வயிரமிடைக்கட்டி' என்று பாடலானாள்.

எதிரே தெருக்கதவு மெல்லத் திறப்பது தெரிந்தது. மதனகோபாலன் உள்ளே நுழைந்தான். அலமேலுவைக் கண்டதும் புன்னகை பூத்தான். அலமேலு எழுந்திருக்க முயன்றாள். குழந்தை சிணுங்க ஆரம்பித்ததும் அவள் அசையாமல் மீண்டும் பாயில் அமர்ந்தாள். தலை நிமிராமலே, "மீனாட்சியும் டாக்டரும் பின்பக்க அறையிலே சாப்பிடறாங்க. வேண்டுமானால் அங்கே போகலாம்" என்றாள்.

"நான் அவர்களைப் பார்க்க வரவில்லை. உன்னைத்தான் ஒன்று கேட்க வந்தேன்" என்று கூறிய மதனகோபாலன், அவள் இருந்த இடத்திற்குச் சற்றுத் தள்ளி மண்டியிட்டு அமர்ந்தான்.

அலமேலு நிமிரவில்லை, குழந்தையின் முதுகைத் தடவிக் கொடுத்தாள். "அந்நிய ஆடவர்களுடன் பேசுவதாக இல்லை" என்றாள்.

"நான் அந்நியனா, அலமேலு? என் மீது உனக்கு அவ்வளவு கோபமா? சற்றுமுன் நீ பூ விற்றாயே, உன்னுடன் பேசினவர்கள் எல்லாரும் உன் குடும்பத்து ஆண்பிள்ளைகளா?"

"அது பொதுஜன சேவை. சொந்த விஷயம் அல்ல. என்னை இப்படியெல்லாம் கேள்வி கேட்க யாருக்கும் உரிமை கிடையாது" என்றாள் அலமேலு, கண்டிப்பாக.

"என்னை நீ கல்யாணம் செய்துகொள்வாயா? அதைக் கேட்கத்தான் வந்தேன்" என்றான் மதனகோபாலன், அவசர அவசரமாக.

அவள் பதிலே சொல்லவில்லை; குழந்தையைத் தட்டினாள்.

"மாரியம்மன் உத்தரவை நாம் மீறக்கூடாது" என்றான் அவன்.

"மாரியம்மன்மீது திடீர் பக்தி! நான் கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லை."

மதனகோபாலன் சாட்டையால் அடிபட்டவனைப்போல் குன்றினான். பிறகு வெகுண்டு எழுந்தான். "என்னை எதற்காக அன்றைக்குக் காப்பாற்றினாய்? அது நடக்காவிட்டால் நான் இன்று இங்கே வந்தேயிருக்க மாட்டேன்" என்றான், பதற்றமாக.

"பங்காரு அத்தையிடம் எனக்குப் பிரியமுண்டு. வேறு யாருக்காகவும் இல்லை" என்றாள் அலமேலு.

"பெரியம்மா என்று அழைத்தவளை அத்தை என்று உறவு கொண்டாடுவானேன்?"

"அது என் இஷ்டம்."

"ஒரே முடிவுதானா? யோசித்துச் சொல்லமாட்டாயா? பங்காரு அத்தைக்காகக்கூட..."

"இப்படி ஏதாவது பிணைப்புச் சங்கடம் வரும் என்றுதான் நான் அத்தையின் பணத்தை மனசால்கூடத் தொட ஒப்பவில்லை."

மதனகோபாலனின் உடல் உணர்ச்சியால் நடுங்கியது. வேர்வைத் துளிகள் அவன் நெற்றியில் முத்து முத்தாக மின்னின. அவன் கண்கள் சிவந்து தக்காளிப் பழங்களாக ஜொலித்தன. அவன் சட்டென்று எழுந்தான்.

அப்போது மீனாட்சி அங்கு வந்தாள். மதனகோபாலனும் அலமேலுவும் இருக்கும் நிலையைக் கண்டு அவள் அதிசயப்பட்டாள். அவள் வதனத்தில் ஆனந்தம் பிரகாசித்தது.

மதனகோபாலன் மீனாட்சியைப் பார்த்தும் பாராததுபோல ஓடிவிட்டான்.

மீனாட்சி அலமேலுவின் அருகில் வந்து அமர்ந்துகொண்டாள். அலமேலுவின் குனிந்த தலையை நிமிர்த்தினாள்.

அலமேலுவின் கண்கள் கலங்கி, கண்ணீர் முத்து அவள் கன்னத்தில் உருண்டது.

''என்ன, அலமேலு? கோபால் உன்னிடம் என்ன சொன்னான்? அக்காவிடம் சொல்லு'' என்று படபடப்போடு கேட்டாள் மீனாட்சி.

''என்னவோ சொன்னார்!''

''சொல்லேன்.''

அலமேலு கொஞ்சநேரம் பேசாமல் இருந்தாள். பிறகு மெதுவாக, ''கல்யாணம் கட்டிக் கொள்ளணுமாம்'' என்றாள், மிக்க சிரமத்துடன்.

''அப்படியா? நீ என்ன சொன்னாய்? 'சரி' என்றாயல்லவா?'' என்று ஆவலுடன் கேட்டாள் மீனாட்சி.

''முடியாது என்றேன்.''

''ஏன், ஏன், அலமேலு?''

''ஏன் என்று கேட்கிறீர்கள், அக்கா? எல்லாம் தெரிந்துகொண்டே கேட்கிறீர்களே! நான் மட்டும் மனுஷியில்லையா, அக்கா? எனக்கு மட்டும் மானம் கிடையாதா?''

''இருந்தாலும்...''

''என்ன, அக்கா, நான் வெறுக்கிற ஒரு மனிதனை விருப்பத்தோடு மணக்க முடியுமா?'' என்று ஆத்திரமாக வினவினாள் அலமேலு.

''நீ அவனை வெறுக்கிறாயா? அப்ப இந்தக் கன்னி வேஷம் எதற்கு?'' என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள் மீனாட்சி.

''எனக்குத் திருமணமே வெறுப்பாக இருக்கிறது. உங்களைப்போல எல்லாருக்குமே சௌகரியமான இல்லறம் வாய்க்கிறதா, அக்கா?''

''கண்ணை இறுக மூடிக்கொண்டு 'இருட்டு, இருட்டு' என்று அலறும் குழந்தைமாதிரி இருக்கிறது உன் போக்கு. பிடிவாதத்துக்காக இயற்கைக்கு மாறாக நடப்பாயா?''

''எது, அக்கா, இயற்கை?''

அலமேலு அப்போது இருக்கும் நிலையில் இனித் தான் பேசிப் பயனில்லை என்று கருதி, மீனாட்சி குழந்தையைத் தூக்கிக்கொண்டு போய் உட்புறமாக ஓரிடத்தில் விட்டுத் தட்டினாள்.

அலமேலு தன் கடைக்குச் சென்று விட்டாள். காலையில் நடந்த விற்பனைக் கணக்கைச் சரிபார்க்க ஆரம்பித்தாள்.

வாயில் கதவைத் திறந்தார்கள். காலனிப் பெண்கள் ஒவ்வொருவராக வந்து தத்தமக்குரிய இடங்களுக்குப் போய்ச் சேர்ந்து பொறுப்பை ஏற்றனர்.

பொது ஜனங்கள் வர ஆரம்பித்ததும் யாருக்கும் நிற்க நேரம் இல்லை. இரவு எட்டு மணிக்குக் காட்சியை மூடும் வரையில் நல்ல கூட்டம் இருந்தது.

அலமேலுவின் மனம் மட்டும் நிம்மதியாக இருக்கவில்லை. மதனகோபாலன் இப்படி வந்து நேரிடையாகப் பேச முனைவான் என்றோ, அடிப்படைக் கேள்வியைக் கேட்பான் என்றோ அவள் எதிர்பார்க்கவில்லை. மாரியம்மனிடம் எதற்காக வேண்டி நின்றாளோ அதுவே நடந்துவிட்டது. அப்படி இருக்கையில், இப்போது தான் பேசியது அவளுக்கே வியப்பாக இருந்தது. அவளுடைய தன்மானத்துக்குப் பலத்த அடி விழுந்து விட்டது என்பதையும், அதனால்தான் அவள் அப்படிப் பேசி அனுப்பிவிட்டாள் என்பதையும் இப்போதுதான் அவளே புரிந்துகொண்டாள். அவளுக்குத் தன் பேச்சைப்பற்றி வருத்தமில்லை. தனக்கு இவ்வளவு மனசு திடமிருக்கிறதா என்று அவள் தன்னைத் தானே வியந்துகொண்டாள்.

அவள் இருந்த நிலையில் அவளே சிந்தித்து ஒரு முடிவிற்கு வருவதுதான் உத்தமம் என்று மீனாட்சி அலமேலுவின் பக்கமே வரவில்லை. நளினியும் எங்கோ இருந்துவிட்டாள்.

வெளியார் கூட்டம் கலைந்து சென்ற பிறகு, சங்கத்துப் பெண்கள் மட்டும் சாமான்களைச் சரி பார்த்து ஒழுங்கு படுத்திவிட்டுக் கிளம்பினார்கள். மீனாட்சி ஒரு சீமைச் சாக்குக் கட்டியை எடுத்துவந்து, பலகையில் 'கண்காட்சி மீண்டும் ஒரு நாள் நீடிக்கப்பட்டது' என்று எழுதினாள்.

''ஏன், அக்கா, இன்னமும், ஒரு நாளா?'' என்று கேட்டாள் அலமேலு.

''ஆமாம். நிறையப் பேர் வந்து கேட்டுக்கொண்டார்கள். நடந்தால் நடக்கட்டுமே!'' என்றாள் மீனாட்சி.

''நடக்கட்டும். ஆனால், சாமான்கள் முக்கால்வாசியும் விற்றுப் போய்விட்டன. நாளைக்குக் கண்காட்சியைப் பார்த்து விட்டுப் போக வேண்டியதுதான்.''

மீனாட்சி அலமேலுவைப் பார்த்தாள். மதனகோபாலனுடன் பேச்சு நடந்தவுடன் அவள் எட்டப் போய்விடுவாளோ என்ற ஒரு பயம் இருந்தது. முன்பு மணவாளச் செட்டியின் பணத்தை மறுத்ததும், கந்தசாமி செட்டி அவளை அடித்ததும், அவள் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தாள். தண்ணீர் எடுக்கக் குழாயடிக்குக்கூட வரவில்லை. மீனாட்சிதான் மெதுவாகச் சொல்லி அவளை வெளியே வரச் செய்தாள்.

நத்தை மீண்டும் கூட்டுக்குள் புகுந்து விட்டதோ என்று அவள் பயந்து விட்டாள். ஆனால், அலமேலு தன் சொந்த வாழ்க்கையையும் தான் எடுத்துக்கொண்ட கடமையையும் கலக்கிக் குழப்பம் அடையவில்லை என்று தெரிந்து நிம்மதி அடைந்தாள்.

சத்திரத்தைப் பூட்டிக்கொண்டு கிளம்பும்போதுதான் நளினி அங்கு இல்லாததைக் கவனித்தாள் அலமேலு. ''நளினி எங்கே?'' என்று கேட்டாள்.

''அவளுக்கு என்னவோ அடிக்கடி தலைவலி வருகிறதுபோலத் தெரிகிறது. கண்ணையும் பரிசோதித்துக் கொள்ள மாட்டேன் என்கிறாள். தலையை நீவி விட்டுக்கொண்டு கண்ணில் நீர் மல்க நின்றுகொண்டிருந்தாள். நான்தான் அவளை வீட்டுக்கு அனுப்பிவிட்டேன்', என்றாள் மீனாட்சி.

''மிகவும் இளைத்துப் போய்விட்டாள். நம் டாக்டரையே கேட்கலாமே!'' என்றாள் அலமேலு.

''மாட்டேன் என்கிறாளே!''

சத்திரத்துக்குக் காவல் ஏற்பாடு செய்துவிட்டு, மீனாட்சியும், அலமேலுவும், இன்னும் சில பெண்களும் வீட்டுக்குக் கிளம்பினார்கள். குழந்தையை எடுத்துக்கொண்டு டாக்டர் முன்பே வீட்டுக்குப் போயிருந்தார்.

அவர்கள் இந்திரா காலனி நுழையும் சமயம் ஒரு கார் அவர்கள் மீது மோதுவதுபோல வந்து நின்றது. இருவரும் விலகிக்கொண்டு ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

நளினி குதித்துக்கொண்டு இறங்கினாள். ''மீனா, யார் வந்திருக்கிறார்கள், பார்!'' என்று ஆர்ப்பரித்தாள். பத்மினி கூடவே இறங்கி வந்தாள்.

''எப்படி வந்தாய்? ஏன் இந்தத் திடீர் விஜயம்? உன் வீட்டுக்காரரும் வந்திருக்கிறாரா? அவர் எங்கே? இரவு இந்நேரத்தில் எப்படி வந்தீர்கள்?'' என்று சரமாரியாகக் கேட்டாள் மீனாட்சி.

''மூச்சு விட்டுவிட்டு ஒவ்வொரு கேள்வியாகக் கேளேன்!'' என்றாள் பத்மினி.

''பத்மினி அக்காவும் வந்தாச்சு, நளினி அக்கா முகத்திலே சிரிப்பும் உதயமாச்சு'' என்றாள் அலமேலு.

'ஆமாம்! இதற்கு முன்னே உன்னைப் பார்த்து நான் சிரிக்கவில்லையாக்கும்!'' என்றாள் நளினி.

''இருந்தாலும்....''

''சரி, ஏறுங்கள் காரில்'' என்றாள் நளினி.

''இன்னும் நான்கு அடி இல்லை. காரில் ஏறுகிறார்கள் சற்று!'' என்றாள் மீனாட்சி.

கார் அவர்களைத் தாண்டிச் சென்றது. அவர்கள் நால்வரும் நடந்து மீனாட்சியின் வீட்டை அடைந்தனர்.

''அக்கா, என்னை எங்கள் வீட்டில் கொண்டுவிட்டு விடுங்கள்'' என்றாள் அலமேலு.

பரவாயில்லை, இரு. நாங்களும் கிளம்ப வேண்டியவர்கள்தாம்'' என்றாள் நளினி.

டாக்டர் தம் வீட்டு வாசலில் கையில் வைத்தியப் பெட்டியுடன் நின்றார்.

''மீனா, பங்காரும்மா சாப்பாடு அனுப்பியிருக்காங்க. நான் சாப்பிட்டாயிற்று. குழந்தைக்குப் பால் கொடுத்தாயிற்று. தூங்குகிறான். ஒரு பிரசவக் கேஸாம். நான் போய்விட்டு வருகிறேன்'' என்றார். பத்மினியைக் குசலம் விசாரித்துவிட்டு அவர் கிளம்பிவிட்டார்.

வீட்டுக்குள் சென்ற தோழிகள் பேசிப் பேசி ஒரு விஷயத்தைப்பற்றியும் முடியப் பேசாமல் விட்டு விட்டார்கள்.

''மணி பத்தடிக்கப்போகிறது'' என்று ரத்தினம் குரல் கொடுத்ததுந்தான் நளினியும் பத்மினியும் கிளம்பினார்கள்.

''நீங்கள் போங்கள். நான் அலமேலுவை அவர்கள் வீட்டில் கொண்டு சேர்க்கிறேன்'' என்று கூறி அவர்களை வழியனுப்பினாள் மீனாட்சி.

காரில் தன் தோழியின் கையைத் தன் கைக்குள் வைத்துக்கொண்டு, ''பத்மினி, எப்படி இருக்கிறது புக்ககத்து வாழ்க்கை?'' என்று கேட்டாள் நளினி.

''எப்படி இருக்கும்? எல்லாம் நல்லாத்தான் இருக்குது.''

''பேச்சிலே குஷியே காணோமே?''

''இரண்டு புது மனிதர்கள் சேர்ந்து பழகும்போது கொஞ்சம் உரசல், கொஞ்சம் தேய்மானம் இராதா?'' என்றாள் பத்மினி.

''பார்க்கப் பார்க்கக் கல்யாணம் என்றாலே பயமாக இருக்கிறது; இல்லை?'' என்றாள் நளினி.

''லாட்டரிச் சீட்டு விழுந்தால் சரி; விழாவிட்டாலும் போயிற்று.''

''அலமேலுவைப் பார்....''

''உனக்கென்ன இப்போது? சுதந்தரமாகச் சந்தோஷமாக இருக்கிறாய்.''

நளினி சட்டென்று தன் கையை விலக்கிக் கொண்டாள்.

''மாணிக்கம் எங்கே?'' என்று திடீரென்று கேட்டாள் பத்மினி.

''எனக்கென்ன தெரியும், பத்மினி? சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்டார், மறுபடியும் உன் அருமை அண்ணன்.''

''போகட்டும். அவன் ஆயுசுக்கும் அப்படித்தான் ஓடுவான். தன் நிழலையே கண்டு பயந்து ஓடுபவனை யாரால்தான் காப்பாற்ற முடியும்?''

''நல்ல புத்திசாலி என்று அங்கலாய்க்கிறார் அப்பா.''

''காட்டிலே காயும் நிலா அது. யாருக்கு என்ன பயன்? அவனைப்பற்றிப் பேசாதே. உன் அத்தான் சுந்தரம் எப்படி இருக்கிறார்?''

''நன்றாகத்தான் இருக்கிறார். மேல் நாட்டுச் சங்கீதம் வாசிக்கிறார். பார், பத்மினி, கானாமிருதம்னு சொன்னால் போதாது.''

''நல்ல படிப்பாளி. நிதானஸ்தர்; அவரை மணந்து கொள்ளும் பெண்

பாக்கியசாலி'' என்றாள் பத்மினி, நளினியைப் பார்த்தவாறே.

''அதிருஷ்டக்காரிதான் அவள். ஆனால் அவள் யாரோ?''

''அது ஏன் நீயாக இருக்கக்கூடாது? சுந்தரத்தை நான் பல தடவை கவனித்திருக்கிறேன். அவர் உன்மீது உயிரையே வைத்திருக்கிறார். உன் அம்மாவும் அப்பாவும் இந்தத் திருமணத்தை விரும்புகிறார்கள்.''

''அம்மா உங்களிடம் இந்த வேலையை ஒப்படைத்தாளா? வக்காலத்து வாங்கிப் பேசுகிறாய்.''

''உனக்கு என்ன ஆட்சேபணை, சொல்லேன். அவருக்கு அழகு இல்லையா, பதவி இல்லையா, பண்பு இல்லையா?''

''எல்லாந்தான் இருக்குது... ''

''அவரை மணந்து கொண்டால் நீ கவலையின்றி இருக்கலாம். இதுவரை வாழ்ந்த வாழ்க்கைக்கு மாறுபடாது. பணக் கஷ்டம், மனக்கஷ்டம் ஒன்றும் இராது. அவர் பிடில் வாசிக்கலாம், நீ வானம்பாடியாகப் பாட்டுப் பாடிக்கொண்டே இருக்கலாம்.''

நளினி பதிலே சொல்லவில்லை. பத்மினி அவள் முகத்தைத் தன் பக்கம் திருப்பினாள். நளினி தன் கண்களை மூடிக் கொண்டாள்.

''யோசித்துப் பார், நளினி. கானல் நீரைப் பார்த்து ஏமாறாதே.''

''யோசிக்கிறேன்'' என்றாள் நளினி,

கார் நளினியின் வீட்டில் நின்றது. ''நாங்கள் பழனிக்குப் போகப் போகிறோம். உன் அப்பா அம்மாவுடன் நீயும் வாயேன்'' என்றாள் பத்மினி.

மாணிக்கத்தின் கட்டுரையில் மூலிகைகளைப் பற்றிக் கூறும்போது பழனிமலைச் சாரலைக் குறிப்பிட்டிருந்தது நளினியின் நினைவுக்கு வந்தது. அதனால், உடனே அவள், ''நீ அப்பாவிடம் சொல்லிக் கூட்டிக்கொண்டு போ'' என்றாள், மிக்க ஆசையுடன்.

அன்று பத்மினியும் நளினியின் வீட்டிலேயே தங்கிவிட்டாள்.

மறுநாள் காலை எழுந்ததுமே பத்மினி மீண்டும் ஆரம்பித்தாள். ''இதோ பார், நளினி, சுந்தரத்தை மணந்தால்தான் நீ சந்தோஷமாக இருக்க முடியும். பழக்க வழக்கங்கள், ருசிகள் இவற்றில் வித்தியாசம் இராது. முன்பின் பழகினாலும், என் கணவரைப்பற்றி எனக்கு என்ன தெரிந்தது? நெருங்கிப் பழகும் போது பல விஷயங்கள் புதுமையாக இருக்கின்றன. மனசைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது'' என்றாள்.

நளினி கலகலவென்று சிரித்தாள். ''வழக்கறிஞரே, நீங்க எதிர்க்கட்சிக்கு வாதாடுறீங்க!'' என்றாள்.

''எனக்கு வரவர மூளை மங்கி விட்டதா?''

''சுந்தரத்தை எனக்கு நன்றாகத் தெரிந்ததுபோல இருந்தாலும், நெருங்கிப் பழகும்போது உரசல் இருக்கும் என்று தானே சொன்னாய்?''

''உன் தலை! நரசிம்மனுடன் நான் பழகினதும், நீ மாணிக்கத்துடன் பழகியதும் ஒரு மாதிரி. மனுஷனுடைய ஒரு பார்வைதான் தெரியும். சுந்தரம் என்றால், வீட்டிலேயே பழகி, அவருடைய எல்லாப் பழக்கங்களும், என்ன என்ன நிலைமையில் அவர் எப்படி எப்படி இருப்பார் என்பதும் நன்றாகத் தெரியும். போதாக்குறைக்கு, இரண்டு பக்கம் பெற்றோர்களும் ஆசிகூறி ஆதரவளிப்பார்கள். மாணிக்கத்தின் அப்பாவை நினைத்துப் பார். அந்தச் சத்தத்தைத் தினமும் நீ பொறுத்துக் கொள்வாயா? துருத்தி மாதிரி ஓசைப் பட்டுக்கொண்டு அவர் மூக்கைச் சிந்தினால் நீ செத்து விடுவாய். மாணிக்கமே தவிக்கிறான். சாயங்காலம் நீ காற்றோட்டமாக ஏரிகரைக்குக் கார் ஓட்டிப் போவாய். அங்கே தெருத் திண்ணையின் விளிம்பில்கூட உட்கார முடியாது. சாக்கடை நாற்றம் உன்னை வாட்டும். நீ ஒரு நாள்கூட அந்தச் சூழ்நிலையில் நிற்கமாட்டாய்'' என்றாள் பத்மினி.

''தனபாக்கியத்தம்மாகூட என்னைப் போல, ஏன் எனக்கும் மேம்பட்ட நிலையில் வளர்ந்தவங்க. இப்ப இல்லையா அங்கே? வருத்தப்படறாங்களா? முத்துவை வளர்க்கலையா?''

''அது யார், முத்து?''

''ஏன், உனக்கு மாணிக்கம் பெயர்கூட மறந்திடுச்சாக்கும்! அவரானால் 'பத்மினி, பத்மினி'ன்னு உசிரை விடுவாரு'' என்றாள் நளினி, நிஷ்டுரமாக.

''தனபாக்கியத்தம்மா தலைமுறையே வேறு; உன் தலைமுறையே வேறே. பேசாதே நீ!''

''இந்திரா காலனியிலே இப்ப சாக்கடை நாற்றமே கிடையாது. மீனு வந்த பிறகு ஒரு குழந்தைகூடச் சாக்கடை ஓரத்தில் இருக்கிறதில்லை.''

''நீ செல்லமா வளர்ந்தவ. உன் சந்தோஷத்தின் மேலேதான் தங்கள் வாழ்க்கைக் கோட்டையை உன் அப்பாவும் அம்மாவும் எழுப்பறாங்க. நன்றாக யோசித்துப் பார்!''

''யோசனைகூடப் பளுவாக இருக்கிறது, பத்மினி. எத்தனை தடவை இப்படிச் சீர்தூக்கிப் பார்த்தாலும் மனசு மறுபடியும் எட்டாக்கனியான மாணிக்கத்தைத்தான் கேட்கிறது. இதுக்கு என்ன சொல்றே நீ?''

''அந்த முத்துக்கு நீ சிப்பியாக மாறி அடைகாக்க நினைக்கிறே!''

''ஆமாம், பத்மினி: இல்லாவிட்டால், ஒரு சிறந்த விஞ்ஞானி இருக்கிற இடம் தெரியாமல் மறைந்து விடுவார்.''

''நீயாக ஒரு கற்பனையைத் தீட்டிக் கொண்டு அதை வைத்து வாதாடுகிறாய். அப்படி என்ன அவன் ஆராய்ச்சியிலே சாதித்துவிட்டானாம்? உங்க அப்பா கிழே, அவர் சொன்னதைச் செய்து கொண்டு கிடந்தான்.''

''கண்ணுக்கு எதிரே இருக்கும் வரை உறவு, மறைந்தால் உறவு அறுந்து விடுகிறது உனக்கு!''

''இல்லை, உண்மையாகத்தான் சொல்கிறேன். எந்த விதத்தில் அவன் தனித் தன்மை வாய்ந்தவனாக இருக்கிறான்?''

''அப்பாவுக்குத் தெரியாதா? அவர் வானளாவப் புகழ்கிறார். நட்சத்திரமாக ஆக்க ஆசைப்படுகிறார்.''

''வைக்கத் தெரியாமல் தீக்குச்சியை வைக்கோலில் வைச்சானாம்! நீயும் உன் அப்பாவும் தகுதியில்லாத பாத்திரத்திலே உங்க அன்பை ஊத்திக் கஷ்டப்படறீங்க. அவர் உன்னைத்தான் சூரியனாக ஜொலிக்கச் செய்யட்டுமே! நீ ஆராய்ச்சி செய்தால், சுந்தரம் தடை செய்யப் போவதில்லை.''

''நான் ஆராய்ச்சியிலிருந்து விலகி விட்டேனே, உனக்குத் தெரியாதா?''

''ஏன்?, ஏன்? அது முறையா?''

''நான் பணம் கட்டிப் பதிவு செய்யலையே! அப்பாவின் ஆசைக்காக மாணிக்கத்தோடு ஆராய்ச்சியிலே ஈடுபட்டேன். அதுவும் ஒரு வருஷமா. இப்போ எனக்குப் பிடிக்கலே; விட்டுட்டேன்.''

''ஆமாம், பிடிக்காது. கொஞ்சங்கூட உனக்கு ஒவ்வாத ஒன்றைப் பிடித்துக் கொண்டு அலைகிறாய். இதனால் உனக்கு ஒரு சுகமும் கிடையாது. மற்றவர்களுக்கும் நிம்மதி குலைகிறது. ஆயிரம் பேர்களோடு படிக்கிறோம்; நட்புறவு கொள்கிறோம். அத்தனை பேருடனும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமா, அதுதான் நடக்குமா?''

''நரசிம்மனுடன் கல்லூரியில் படித்தாய். நீ சம்பந்தம் செய்து கொள்ள வில்லையா?''

''ஒரே வகுப்பில் படித்தோமா? இரண்டு குடும்பங்களும் சிநேகமாயின. அதிலிருந்து ஏற்பட்ட உறவு அது. என்னைப்போல்..''

''சரி, விடு. உனக்குப் புரியவே போகிறதில்லே. மாணிக்கம் மாதிரிதான் நீயும். மனக் கதவுகளை இறுக மூடிப் பூட்டிக்கொண்டு...''

''பூட்டின கதவு என்று தெரிந்தும் யாராவது போய் முட்டிக் கொள்வார்களா?''

''சரி, பத்மினி. எனக்கு ஒரே ஒரு நைப்பாசை. உன்னிடம் மறைக்கவில்லை. மாணிக்கத்தின் கட்டுரை வந்ததல்லவா? அதில் மூலிகைகளைப் பற்றி எழுதி யிருக்கிறார். பழனி மலைச் சாரலைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். நீயும் அங்கே போகப் போகிறாய். உன்னுடன் வந்தால் ஒருகால் மாணிக்கத்தை அங்கே பார்க்கலாமோ என்னவோ?''

பத்மினி நளினியின் முகத்தைப் பார்த்தாள். அங்கே இருக்கும் வேதனை, ஆசை, தீவிரம் எல்லாம் அவளுக்குத் தெள்ளெனத் தெரிந்தன. நளினியின் நிலை அவளுக்கு மிகவும் பரிதாபமாகத் தோன்றியது. ''சரி, நளினி, பார்ப்போம்'' என்று அவள் கூறிச் சமாதானப் படுத்தினாள்.

பத்மினியே பொறுப்பேற்று ஆத்மநாதன் தம்பதிகளைத் தன்னுடன் பழனிக்குச் செல்ல இணங்க வைத்தாள்.

அதன் பிறகே நளினி உற்சாகமாகத் தென்பட்டாள். நளினியின் தாய் பத்மினியின் கையைப் பிடித்து, ''பத்மினி, நீ வந்த அப்புறந்தான் நளினி கொஞ்சம் தெம்பாக இருக்கிறாள். இப்பல்லாம் அவள் டென்னிஸ் ஆடப் போவதில்லை. ஆராய்ச்சித் தோட்டத்துக்குக்கூடப் போகக் காணோம். அப்பாவுக்கு டைப் அடிக்கிறாள். மீனுவுடைய சங்கத்துக்குப் பாடுபடறா. மத்தப்படி வீட்டிலேகூட ஒருவித உதவியும் செய்யறதில்லை'' என்றாள்.

''அது எதனாலே அப்படி இருக்குதுன்னு புரியலையா உங்களுக்கு?''

''தெரியலையே, அம்மா. நீ இல்லை; அதனாலே அந்த அலமேலுவைச் சுத்திச் சுத்தி வரா. அந்தப் பொண்ணு நல்ல பொண்ணுதான். ஆனால் உன்னைப் போல ஆவாளா? படிப்புக் குறைவு தானே?''

''கல்யாணம் செய்து வைக்கப் பாருங்கோ.''

''சுந்தரம் தயாராக இருக்கான். மாமாதான் ஒண்ணும் சொல்லாமல் இருக்கிறாரே? முகூர்த்தம் வைக்கச் சொல்லி நீயாவது சொல்லேன்.''

''சுந்தரத்தைக் கட்டிக்கிறாளான்னு நளினியைக் கேட்டீங்களா?''

''சுந்தரமும் இப்படித்தான் பேசறான். நளினியை எதுக்காகக் கேட்கிறது? அவனுக்காகவே பிறந்து வளர்ந்தவ தானே அவ?''

''அலமேலு கதையை நினைச்சுப் பாருங்க.''

''என்ன!'' என்று திடுக்கிட்டமாதிரி கேட்டாள் நளினியின் தாய்.

(தொடரும்)

Edited and Published by R. Narayanaswamy, for and on behalf of the Kalaimagal Office and Printed at M.L.J. Press Private Ltd., 55/56, Mundakanni Amman Koil Street, Madras-600 004. Managing Editor: K. V. Jagannathan.



27. பழனி மலைச் சாரலிலே

பழனிமலைச் சாரலில் கோவிலுக்குச் சற்றுத் தொலைவில் ஒரு பக்கமாகக் குடிசை ஒன்றை அமைத்துக்கொண்டு பெரியவர் குடியிருந்தார். அவருடைய தேவைகளே மிக மிகக் குறைவாக இருந்தன. அவர் தம் வேலைகளைத் தாமே கவனித்துவிட்டு, மிகுதி நேரங்களில் மூலிகைகளைக் கொண்டு சில அற்புதமான மருந்துகளைத் தயாரிப்பதும், புது மூலிகைகளைக் கண்டு பிடிப்பதும், ஆராய்ச்சிகள் செய்வதுமாக இருந்தார். பழமையான ஏட்டுச் சுவடிகளிலிருந்து விவரங்களைச் சேகரித்து, புதிய முறையில் ஆராய்ந்து எழுதி வந்தார். ஊரில் யாரையும் அவருக்குத் தெரியாது.

மாணிக்கம் வந்தபிறகு அவனும் எங்கும் போக விரும்பவில்லை. அது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. படித்த பிள்ளையானதால் அவன் சினிமாவுக்கோ கடைத் தெருவுக்கோ போவான் என்று எதிர்பார்த்தார். அவனோ சட்டை அணிவதையே விட்டுவிட்டான். கீழ்ப்பாய்ச்சிக் கட்டிய வேஷ்டியுனுடம் தலையில் முண்டாசுடனும் அவன் சதா தோட்டத்தில் உழைத்தான். உருக்கமாகப் பாடி, தான் இதுவரை நடத்திய ஆராய்ச்சியை மூலிகைகளிடம் நடத்திப் பார்த்தான். குறிப்புக்கள் எடுத்தான். மிகுதி நேரத்தில் பெரியவரிடம் பாடம் கேட்டான். அவன் வரவு அவருக்குப் பெரிய உதவியாக இருந்தது.

''மாணிக்கம்!'' என்று கூப்பிட்டார் பெரியவர்.

''என்னை மன்னிக்க வேண்டும். 'முத்தையன்' என்றே அழையுங்கள். எனக்கு அதுதான் மிகவும் பிடித்திருக்கிறது'' என்றான் மாணிக்கம்.

''சரி, முத்து, உனக்கு இதுவரையிலும் ஒரு தபாலும் வரவில்லை. நீயும் யாருக்கும் எழுதினதாகத் தெரியவில்லை. உங்கள் வீட்டில் சொல்லிக் கொள்ளாமல் ஓடி வந்து விட்டாயோ?'' என்று விசாரித்தார் பெரியவர்.

''என் தாயாரிடம் சொல்லிக்கொண்டு தான் வந்தேன். கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டால் வேலை செய்ய முடியாது என்றுதான் எழுதுவதில்லை.''

''அது சரிதான். நீ அவர்களுக்கு உன் முகவரியையும் கொடுக்கவில்லை யல்லவா? என்னதான் உறுதியுள்ள மனம் படைத்தவராக இருந்தாலும் உன் தாயாருக்கு உன் நலனைப் பற்றித் தெரிய ஆவல் இருக்குமே; தவிப்பாரே உன் அன்னை!''

''ஆமாம்.''

''அது எனக்கு விருப்பம் இல்லை முத்து. உன் தாயாருக்கு ஒரு வரி எழுது. அதனால் ஓர் இடைஞ்சலும் வந்துவிடாது.''

மாணிக்கம் பதில் சொல்லாமல் தவித்தான். பெரியவர் அவனையே கூர்ந்து கவனித்தார். அவனது மனப் போராட்டத்தை அவன் முகத்தில் அவர் எளிதில் கண்டுகொண்டு விட்டார். ''உண்மையை ஒளிக்காமல் சொல்லேன். ஆண்டவன் சந்நிதியில் இருக்கிறாய்; இங்கே எதற்கு ஒளிவும் மறைவும்?'' என்றார்.

''ஒளிக்க ஒன்றுமே இல்லை. நான் உங்களிடம் பயிற்சி பெற மிக ஆவலாக இருக்கிறேன். அதற்கு இடையூறு வேண்டாமென்று பார்க்கிறேன். அவ்வளவுதான்.''

''இடைஞ்சல் அநேகமாக வெளியிலிருந்து வருவதில்லை. நமக்குள்ளேதான் கதவுகள் நிறைய இருக்கின்றன. திறந்து வைத்து, அழுத்தமாகக் கொண்டியை மாட்டிவிட்டால் எந்தக் காற்றும் அதை மூட முடியாது.'' மாணிக்கத்தின் முகத்தில் சஞ்சலம் புகுவதைப் பெரியவர் கண்டுகொண்டார். ''பழனியாண்டவன் இதோ இருக்கிறான். அவனிடம் மனத்

தைத் திறந்து பேசக் கற்றுக்கொள்; நிர்ணயம் தோன்றும்.''

மாணிக்கம் மௌனம் சாதித்தான். 'எந்தத் துறவியைத் தேடிக்கொண்டு வந்தால் என்ன? அங்கும் வீடும் வாசலும், பாசமும், பிணைப்புந்தான் வந்துவிடுகின்றன' என்று எரிச்சலுடன் நினைத்துக்கொண்டான்.

''என் மீது எரிச்சல் படுகிறாய், அப்பனே!'' என்று ஆரம்பித்தார் பெரியவர்.

மாணிக்கம் வெட்கத்துடன் அவரைப் பார்த்தான். பெரியவர் குலுங்கக் குலுங்கச் சிரித்தார். ''நீ துறவறம் வேண்டுமென்று கேட்டாயாமே?'' என்று விசாரித்தார்.

''ஆமாம். இந்த உலகத்தில் என் மனம் ஒன்றவில்லை. இதில் வாழ எனக்குத் தெரியவில்லை.''

''அப்பனே, துறவறம் துவராடையில் ஆரம்பித்து உள்ளத்துக்கு எட்டுவதில்லை. உள்ளத்திலே பக்குவம் ஏற்பட்டபோது துறவு மனப்பான்மை வரும். தியாகம் என்பது விளையாட்டுப் பொருள் அல்ல.''

''பெரியவர்களுடன் விளையாடமாட்டேன் நான்.''

''நான் முறையாக ஒருவரிடம் உபதேசம் பெற்றுக் காஷாயம் வாங்கவில்லை. எந்த மடத்திலும் சேர்ந்து பயிற்சி பெறவில்லை.''

மாணிக்கம் அவரையே கவனித்தான்.

''மனம் நன்கு முறுக்கேறிப் பற்றைக் களையவேண்டும். ஆசையும் பாசமும் இருக்கும் வரையில்தான் பலவீனங்கள் மிகும். அவை நீங்கிவிட்டால் உள்ளமும் வஜ்ரம், உடலும் வஜ்ரம். தியானம் செய்ய வேண்டும். இந்த உடலை நம்முடையது என்று இழுத்து இழுத்து வைத்துக் கொள்ளக் கூடாது. அப்பொழுது அது குரங்கு கட்டிய குச்சியாக ஆகிவிடும். மனத்தைத் திற. ஆண்டவனிடம் மனத்தைத் திறந்து காட்டு.''

மாணிக்கம் எழுந்துவிட்டான். ''நான் கோவிலுக்குப் போய் வருகிறேன்'' என்றான்.

''அப்பொழுது உன் மனத்தை அழுத்தும் விஷயங்கள் இருக்கின்றன என்று ஒத்துக் கொள்கிறாய்?''

சிரித்து மழுப்பிவிட்டு மாணிக்கம் கிளம்பினான். கோவில் வெளிப் பிராகாரத்தைச் சுற்றிவிட்டு நிதானமாக உள்ளே சென்றான். சந்நிதிக்கு அருகே நெருங்கும்போதே இதுவரை உள்ளுக்குள்ளே உறங்கிக் கொண்டிருந்த அவன் உள்ளுணர்வு தலைதூக்கி எழுந்து எச்சரித்தது. அவன் உடலில் தோன்றிய நூதனக் கிளர்ச்சியிலிருந்து நளினி வெகு அருகில் இருப்பதை அவன் கண்டுகொண்டான்.

'பழனி வேலா, இதற்காகவா என்னை அழைத்தாய்?' என்று கடவுளை நோக்கி மனசால் பேசிவிட்டு, சுவாமி தரிசனம் செய்யாமலே அவன் வந்த வழியே திரும்பிப் போய்விட்டான். மீண்டும் குடிசையில் வந்து ஓரிடத்தில் அமர்ந்துவிட்டான். மூச்சு மேலும் மேலும் துரத்தித் துரத்தி வாங்கியது.

''என்ன அப்பனே, என்ன நடந்தது?'' என்று கேட்டார் பெரியவர், கருணையோடு.

''ஒன்றுமே இல்லை. சற்று வேகமாக நடந்து வந்தேன்.''

''எந்தப் பூச்சாண்டி துரத்திற்று?''

மாணிக்கம் அவரை வியப்புடன் பார்த்தான். 'என் கதை இவருக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்பதுபோல இருந்தது அவன் பார்வை. ''நான் என் தாயாரைப் பார்த்துவிட்டு வருகிறேன். இரண்டு நாட்கள்.''

''இரண்டு நாட்கள் என்ன? இரண்டு வாரம், இரண்டு மாதம் போய் இருந்துவிட்டு வா. நீ நிறையக் கற்றுக்கொண்டுவிட்டாய். உலகத்துக்குப் பயன்படும்படி அதை உபயோகித்துக்கொள். அவ்வளவுதான். நின்று நிமிர்ந்து பார். எந்தப் பிசாசும் நம்மை விரட்ட முடியாது.''

''நான் திரும்பி இங்கே வர அநுமதி தரவேண்டும்.''

''எப்போது வேண்டுமானாலும் வா. ஆனால் இந்த வாழ்வு உன்னைப் போன்றவர்களுக்கு இல்லை. நீ வாழவேண்டியதை வாழ்ந்து விட்டு இங்கு வா. தாயாரின் மனம் உடையாமல் நடந்துகொள். அவர் வருந்தினால் உன் முயற்சி எதிலும் நீ பலனைக் காணமாட்டாய்'' என்று மொழிந்து விட்டுப் பெருமூச்செறிந்தார் பெரியவர்.

மாணிக்கம் கவலையோடு அவர் முகத்தைப் பார்த்தான்.

''ஆமாம், முத்து. எனக்கும் ஒரு தாய் இருந்திருப்பாள் இல்லையா? அவளைக் கதறக் கதற விட்டுவிட்டு இமயமலைச் சாரலுக்கு ஓடினேன். அவள் பழனிமலையானிடம் முறையிட்டபடியே இறுதி மூச்சை விட்டுவிட்டாள். அதன் பிறகுதான் இந்த மலைச் சாரல் என் கண்ணுக்குத் தெரிந்தது. நான் செய்த அந்தப் பிழையை நீ செய்யாதே. உன் ஆயுள் உள்ளவரை அதற்காக அழ நேரிடும். தனிமையோ, சந்நியாச வேஷமோ அதற்கு மாற்றுத் தருவதில்லை.'' சாந்தமாக, ஆனால் திண்மையாக, இருந்தது அவர் பேச்சு.

மாணிக்கத்தின் உடல் குளிர் கண்டது போல வெடவெடத்தது. 'உடனே புறப்பட்டுப் போகவேண்டும்' என்ற அவன் எண்ணம் உறுதியாயிற்று. இத்தனை நாட்களும் எடுக்காமல் வைத்திருந்த சட்டைகளை எடுத்து மாட்டிக்கொண்டு அவன் கிளம்பினான்.

"உனக்கு ரெயிலுக்குப் பணம் வைத்திருக்கிறயா?"

"கட்டுரைக்குச் சம்மானம் வந்ததே!"

"அது மட்டும் எப்படி முகவரி தெரிந்து அனுப்பினர்கள்? இங்கே வரவில்லையே!"

"கோவில் தர்மகர்த்தாவின் முகவரி தந்தேன்."

"சரி, சென்று வா."

மாணிக்கம் அந்த இருட்டில் ஒற்றைப் பாதையில் இறங்கி நடந்து சென்றான். விடியும்வரை தாமதித்தால் ஆத்மநாதன் குடும்பம் கண்ணில் படுமோ என்று பயந்து, இரவே அவ்விடத்தை விட்டுக் கிளம்பிவிட்டான். தாயைப் பார்க்க வேண்டும் என்ற ஒரே எண்ணந்தான் இப்போது அவன் உள்ளத்தில் இருந்தது.

நல்ல இருட்டு. காற்றுக் குளிர்ந்து வீசியது. அவன் திடமாகக் காலை வைத்து நடந்துகொண்டே, கம்பீரமாக ஒரு காவடிச் சிந்து பாடிக் கொண்டே சென்றான்.

மலையடிவாரத்தில் ஒரு வீட்டின் மாடியில் நளினியும் பத்மினியும் படுத்திருந்தனர். கணீரென்று ஆனந்தமாகப் பாடி வந்த அந்தக் குரலைக் கேட்டு நளினி, தூக்கத்திலிருந்து விழித்து எழுந்து அமர்ந்தாள். "வேறு யாரும் இப்படிப் பாட முடியாது" என்றாள். அவள் உடலெல்லாம் புல்லரித்தது.

"ஆமாம், அவன் குரல் போல்தான் இருக்கிறது. இரு, கவனிப்போம்" என்றாள் பத்மினி.

இருவரும் ஜன்னலருகில் சென்று உற்றுக் கேட்டார்கள்.

அதற்குள் பெரியவர் விழித்துக் கொண்டு, "என்ன, என்ன?" என்று கேட்டார்.

இதற்குள் குரல் வெகு தூரம் சென்று பிசுபிசுத்துவிட்டது. "ஒன்றும் இல்லை. மலையில் விளக்கு எரிவதைப் பார்த்தோம்" என்று கூறிவிட்டு இரு தோழிகளும் படுத்து விட்டனர்.

இந்தத் தடவை மாணிக்கம் சிக்கினால் பத்மினியின் உதவியுடன் எப்படியும் பிடித்துப் போட்டுவிட வேண்டும் என்று நளினி திட்டமிட்டாள். தன் தகப்பனரை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்று யோசித்தாள். அவளுக்குத் தூக்கமே வரவில்லை. 'நிசாசரன் மாதிரி எதற்காக மாணிக்கம் தெருவில் பாடிக்கொண்டு சென்றார்? அந்த வேளையிலே கோவிலுக்குப் போகிறாரா?' அவள் மனத்தில் ஆசைக் கோட்டைகள் எழும்பின. கவலைக் குண்டுகள் அவற்றைத் தகர்த்தன.

விடியற்காலை நான்கு மணிக்கே எல்லோரும் விழித்துக் கொண்டனர். சரவணப் பொய்கையில் குளித்துவிட்டு மலை ஏற ஆரம்பித்தனர். பத்மினி தன் கணவனுடன் சேர்ந்து, முதல் படியில் நமஸ்காரம் செய்துவிட்டு ஏற ஆரம்பித்தாள். அவள் மாமியார், மற்றும் பெரியவர்கள் யாவரும் பேசிக்கொண்டே ஏறலாயினர்.

நளினி தனியாகத் தன் சிந்தனைகளையே துணையாகக் கொண்டு நடக்கத் துவங்கினள். 'மாணிக்கம் எங்கு இருப்பார்? எப்படிக் கண்டுபிடிப்பது? முருகா, எனக்கு வழிகாட்டு, முருகா, எனக்கு வழிகாட்டு' என்று ஒரே பல்லவியைப் பாடிக் கொண்டே சென்றாள் அவள்.

அவர்கள் மேலே சேருவதற்கும் திருப்பள்ளி எழுச்சிக்கும் சரியாக இருந்தது. விசுவருப தரிசனத்தின்போது அவர்களைச் சந்நிதிக்கு அருகே அமர்த்தினர்கள். அலங்காரம் அதிகம் இல்லாமல் வெறும் கோவணாண்டியாக நின்ற பெருமானைக் கண்டதும் நளினிக்கு உள்ளத்திலிருந்து சங்கீதம் பொங்கியது. ஆனலும் அவள் பாட அஞ்சினள். அவர்கள் தரிசனம் முடிந்து பிரசாதம் பெற்ற பிறகு, கோவிலை வலம் வந்து விட்டு, மீண்டும் சந்நிதிக்கு எதிரே அமர்ந்தனர். அப்போது நளினி கடவுளைப் பார்த்து அமர்ந்து, மனசு திருப்தியுறும்வரை பாடினள். முருகனைப் பற்றித் தனக்குத் தெரிந்ததை எல்லாம் பாடினள்.

அவளது இன்னிசையைக் கேட்கப் பலர் கூடிவிட்டனர். வெகு நேரத்துக்குப் பிறகு நளினி பாட்டை நிறுத்திக்கொண்டாள். எங்கோ புதுமையான தோர் உலகத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பியதுபோல இருந்தது அவளுக்கு.

"நளினி, மாமா தர்மகர்த்தாவோடு என்னவோ பேசிக்கொண்டிருக்கிறார், கவனி. மாணிக்கத்தைப் பற்றித்தானே?" என்றாள் பத்மினி.

"அவன் படித்த பையன், ஸார். ஆனல் தலையிலே ஒரு முண்டாசு, இடுப்பிலே வரிந்து கட்டின வேட்டி. சரியான கிராமத்து ஆள் போல இருப்பான், தோட்டவேலை செய்வான். இங்கே தீபாராதனை வேளையிலே பாடுவான், சில சமயம். எப்படி இருக்கும் என்கிறீர்கள்! உங்கள் குழந்தை பாடுவதைக் கேட்டால் அவள் பாட்டு நினைவுக்கு வருகிறது" என்று சொல்லிக்கொண்டிருந்தார் தர்மகர்த்தா.

"எங்கே தங்கியிருக்கிறன் அவன்?" என்று கேட்டார் ஆத்மநாதன்.

"கோவிலுக்குப் பின்னலே அந்தப் பள்ளத்திலே கொஞ்சம் தூரத்திலே குடிசையிலே ஒரு பெரியவர் இருக்கிறர். அவரிடம் தோட்ட வேலை செய்கிறன். கதை கிதை எழுதுவான்போலத் தெரிகிறது. ஏதோ மணியார்டர் கூட வந்தது."

நளினி எழுந்து தன் தகப்பனாரின் அருகில் வந்தாள். ''அப்பா, அந்தப் பெரியவரை நாம் பார்த்து விட்டு வரலாமா?'' என்று கேட்டாள், மேலும் மனத்தை அடக்க முடியாமல்.

''அங்கே யெல்லாம் எதற்கு அம்மா? இந்த மாதிரி இடங்களில் நிறையப் பெரியவர்கள் இருக்கத்தான் இருப்பார்கள். ஒவ்வொருவரையும் நாம் போய்ப் பார்க்க முடியுமா?''

''பழனிமலைச் சாரலிலிருந்து ஒரு பெரியவர் வந்து ராமகிருஷ்ண மடத்தில் பேசினார், அப்பா.''

''அவர்தாம் இவர். நன்றாகப் பிரசங்கம் செய்வார். மூலிகைகளைப்பற்றி மேடை மேலே பேச அவரை அடிக்கடி கூப்பிடுகிறார்கள். அவர் போவதில்லை'' என்று விளக்கினார் தர்மகர்த்தா.

பிரின்ஸிபாலும் வற்புறுத்தவே, நளினியை மட்டும் அழைத்துக் கொண்டு அவர்கள் பெரியவரிடம் சென்றனர்.

பெரியவர் அவர்களை அன்புடன் வரவேற்றார். உபசரித்து, வந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார்.

பெரியவர் தம் ஆராய்ச்சியைப்பற்றிக் கூறினதும் ஆத்மநாதன் ஆவலுடன் கேட்டுக் கொண்டார்.

''என்னிடம் நேற்று வரை ஒரு வாலிபன் இருந்தான், சங்கீதத்திலே நல்ல ஞானம் அவனுக்கு. ஒரு சமயம் உங்கள் ஊர் ராமகிருஷ்ண மடத்தில் நான் பிரசங்கம் செய்ய வந்தபோது அவனைக் கண்டேன். மிகவும் புத்திசாலி. என்னுடனேயே வந்து விட்டான்.



இங்கேயே கிடப்பான். அறிவுசேகரிப்பது ஒன்றுதான் அவனது குறிக்கோள். தினமும் தோட்டத்தில் பாடிக்கொண்டே இருப்பான்.

''ஆமாம். இந்த இடத்தைவிட்டால் கோவில்தான். வயசுப் பையன். ஆச்சரியமாக இல்லையா? இதோ அவன் எழுதிய கட்டுரை இந்தப் புத்தகத்தில் வந்திருக்கிறது'' என்று விவரித்துக் கொண்டே ஒரு புத்தகத்தை அவர்களிடம் நீட்டினார் பெரியவர்.

ஆத்மநாதன் கட்டுரையைப் பார்த்து அடையாளம் கண்டு, ''மாணிக்கந்தான் பாருங்கள்'' என்றார். பிரின்ஸிபாலும் அந்தக் கட்டுரையைப் படித்திருந்தார்.

நளினியின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

''உங்களுக்குத் தெரியுமா அவனை?'' என்று கேட்டார் பெரியவர்.

''என்னிடம் பயின்றவன் தான். அவன் குறிப்பிட்டிருக்கும் ஆத்மநாதன் நான்தான்.''

''அவனுக்குத் தாயார் இருக்கிறார்



போலத் தெரிகிறது: அவன் ஏன் ஓடி வந்து விட்டான் தெரியுமா?" என்று வினவினார் பெரியவர்.

"காரணமே தெரியாது" என்று ஆரம்பித்து, அவனுடைய குடும்பம், இது வரையில் அவன் தம்மிடம் பழகியது, கடைசியாகக் கல்கத்தா வேலை—ஒன்று விடாமல் விவரமாகக் கூறினார் ஆத்மநாதன்.

பெரியவர் கவனமாகக் கேட்டுக் கொண்டார். தலையை அசைத்தார். "அந்தப் பையனுக்கு உள்ளுக்குள்ளே என்னவோ கவலை அரிக்கிறது. எதைக் கண்டோ மருண்டு போய் ஓடி வந்திருக்கிறான். அவன் அடிக்கடி மிகவும் விசனமான தோற்றத்துடன் இருப்பதை நான் கண்டிருக்கிறேன்" என்றார்.

"நான் அறிந்த மட்டும் ஒன்றும் தெரியவில்லை" என்றார் ஆசிரியர்.

பெரியவர் நளினியைப் பார்த்தார். அவளது உணர்ச்சி மேலீடும் அவருடைய கூரிய கண்களுக்குத் தப்பவில்லை. "நேற்று மாலை நீங்கள் கோவிலுக்கு வந்திருந்தீர்களோ?" என்று கேட்டார் அவர்.

"ஆமாம்."

"ஒன்றும் இல்லை. வந்திருந்த மாதிரி இருந்தது" என்று இழுத்தார் பெரியவர். பிறகு திடீரென்று பேச்சைத் திசை மாற்றினார். "அது சரி. இப்போது உங்கள் ஆராய்ச்சிக்கு வேண்டிய சங்கீதம்...?"

"இசைத் தட்டுகளைப் பயன்படுத்துவோம். டேப்பில் பதிவு செய்து வைப்போம். முன்பு சில சமயம் மாணிக்கம் நேரிடையாகக்கூடப் பாடுவான். என் மகள் வீணை வாசிப்பாள்; பாடுவாள். இந்த ஆராய்ச்சியிலே அவளுக்கும் ஈடுபாடு உண்டு."

"அப்படியானால் குழந்தையை முருகன் மீது ஒரு பாட்டுப் பாடச் சொல்லுங்கள்."

தந்தையின் அநுமதி கிட்டியதும் நளினி ஒரு திருப்புகழ் பாடினாள். இரண்டாவதாக 'வேலவரே' என்ற பதத்தை ஆரம்பித்தாள்; விஸ்தாரமாகப் பாடி முடித்தாள்.

அதைக் கேட்ட பெரியவர், "இந்தப் பாட்டை மாணிக்கம் பாடவேண்டும். கண்ணெதிரே வேலனே வந்து நிற்பான்" என்றார்.

"ஆமாம், நன்றாகத்தான் பாடுவான். ஆனால் புத்தி ஸ்திரமாக இல்லையே!" என்றார் நளினியின் தகப்பனார்.

"அவனை மடக்கி ஒரு பொறுப்பான பிணைப்பில் மாட்டிவிடுங்கள். தானாகச் சரியாகி விடுவான்."

"என் கைக்குச் சிக்கினால் தானே? என்னை அண்டி வந்த பையனாயிற்றே, அவனைக் கைதூக்கி விடுவோம் என்று பார்த்தேன். அவன் சிறிதும் நன்றியின்றி, சொல்லாமல் ஓடி ஓடிப் போகிறான். எனக்கு என்ன சுவாமி, கர்மசிரத்தை? கிடக்கிறான்!" என்றார் ஆசிரியர், வெறுப்பாக.

பெரியவர் சிரித்தார். பிறகு ஆத்மநாதனைப் பார்த்து, "கொஞ்சம் இருங்களேன்; பேசிக்கொண்டிருப்போம்" என்றார்.

பிரின்ஸிபால் எழுந்து விட்டார். "என் மருமகன் வந்திருக்கிறார். அவரைக் கவனிக்க வேண்டும்" என்று கூறிவிட்டார்.

பெரியவர் தம்மை உற்று நோக்குவதைக் கவனித்த ஆத்மநாதன் தம் நண்பரைப் பார்த்து, "நீங்களும் நளினியும் போங்கள். நான் அரை மணி நேரம் இருந்து விட்டு வருகிறேன்" என்றார். நளினியும் பிரின்ஸிபாலும் போன பிறகு அவர் பெரியவரைப் பார்த்துச் சிரித்தபடி காத்திருந்தார்.

"அந்தப் பையன் உங்கள் பெண்ணை விரும்புகிறானா?" என்று உடனே பேச்சைத் துவக்கினார் பெரியவர்.

"அப்படி ஒன்றுமே இல்லையே! அவன் உலகமே வேறு, எங்கள் உலகமே வேறு. அவ்வளவு தூரம் துணியமாட்டான் அவன். திறமை இருக்கிற துறையிலேயே முன்னேற முதுகெலும்பு இல்லாத பயல்!" என்றார் ஆத்மநாதன்.

"நீங்கள் சொல்கிற தாரதம்யமே அவன் முன்னேற்றத்துக்குக் குறுக்கிடுகிறதோ?"

"அவன் ஓர் உதவாக்கரை! அவன் பேச்சை விட்டுத்தள்ளுங்கள். என்னவோ ஆராய்ச்சியிலே கொஞ்சம் புத்தி இருக்கிறதே என்று பார்த்தேன். அதில்கூட ஆர்வம் இல்லை. கிடக்கிறான், உபயோகமற்றவன்!"

பெரியவர் சிரித்தார். பிறகு மூலிகைகளைப் பற்றிச் சற்றுப் பேசினார். ஆத்மநாதன் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

"எதற்கும் நான் சொன்னதையும் மனசிலே வச்சுக்கோங்க. பிணைச்சுப் போட்டால் அதனாலே நன்மை ஏற்படலாம். உங்களுக்கு மகன் இல்லைன்னு சொல்றீங்க" என்று கூறிவிட்டு, மீண்டும் ஒரு சிரிப்புச் சிரித்துப் பெரியவர் ஆத்மநாதனை வழியனுப்பிவைத்தார்.

ஆத்மநாதன் பதிலே சொல்லவில்லை. அவர் கை கூப்பிவிட்டுத் தம் வழியே நடந்து சென்றார். தம் குடும்பத்துடன் சேர்ந்த பிறகுகூடப் பெரியவர் சொன்னதை அவர் யாரிடமும் கூறவில்லை. அது நினைத்துப் பார்க்க வேண்டிய விஷயமே அன்று என்று ஒதுக்கிவிட்டார்.

நளினிக்கு இவ்விஷயம் ஒன்றுமே தெரியாது. ஆயினும், பத்மினியைச்

கண்டதும், பெரியவர் மாணிக்கத்தின் பாட்டைப்பற்றிப் பேசியதைச் சொல்லி மகிழ்ச்சியோடு ஆர்ப்பரித்தாள்: 'அவனை ஒரு பிணைப்பில் கட்டிப் போடுங்கள், சரியாகிவிடுவான்' என்று அவர் சொன்னதையும், தன் தந்தை எடுத்து எறிந்து அதை ஒதுக்கிவிட்டதையும் சொல்லிச் சொல்லிப் புலம்பினாள்.

"நளினி, மாணிக்கம் என் கையில் சிக்கினால் அவனைச் செம்மையாகப் புடைக்கவேண்டுமென்று தோன்றுகிறது. அவனுக்கு உன்மீது அளவற்ற காதல் இருக்கிறது. அதைக் கண்டு பயந்து ஓடுவானா ஒரு பைத்தியக்காரன்?" என்றாள் பத்மினி.

"நீதான் சொல்கிறாய், என்மீது அவருக்குப் பிரியம் என்று. நான் எத்தனை தடவை ஜாடையாகப் பேசிப் பார்த்திருக்கிறேன்? ஒரு கத்தியையும் கேடயத்தையும் முன்னே பிடித்த மாதிரி வெகு ஜாக்கிரதையாகப் பேசுவார். அப்பொழுது என் இதயம் துகள் துகளாகிவிடும்."

"அவனுக்கு உன் மீது அன்பு இல்லாவிட்டால், கத்தி எதற்கு, கேடயம் எதற்கு, நளினி?"

"சில சமயம், பத்மினி, எனக்கு என் மீதே கோபம் வருகிறது."

"எனக்குந்தான். அருமையான சுந்தரம் உனக்காகக் காத்திருக்க, இந்த மாணிக்கம் என்ன உசத்தி?"

"மாணிக்கமாச்சே?"

"மண்ணாங்கட்டி! இந்திரா காலனியிலே குழாயடியிலே சண்டை பிடிச்சுத் தண்ணி எடுப்பாயோ நீ?"

"நீ புக்ககத்திலே குடி புகவில்லையா, பத்மினி?"

"பழக்க வழக்கங்கள், உணவு, உடை எதிலும் மாறவேண்டிய தேவை இல்லை, எனக்கு. உனக்கு அப்படியில்லையே? துணியிலே வடிகட்டின காபியும், கேழ்வரகு அடையும்...."

"எனக்குக் கேழ்வரகு அடை ரொம்பப் பிடிக்கும். தனபாக்கியத்தம்மா நல்லாச் செய்வாங்க" என்று கூறிச் சிரித்தாள் நளினி.

"விளையாடாதே, நளினி. வாழ்க்கை வேடிக்கையல்ல. பிறகு கஷ்டப்படுவதில் என்ன லாபம்? அதனால்தான் அவன் பயப்படுகிறான். நீயோ ஒரு ரத்தினம் போல். அவர்களோ பாறாங்கல்போல. இந்த இரண்டு கல்லும் ஒத்து வருமா?"

"பாறாங்கல் துணி துவைக்க உபயோகப்படும். வீடுகட்ட உதவும். அம்மிக் குழவி, இயந்திரம், ஆட்டுக்கல், ஏன், தெய்விக உருவங்கள்கூடச் செதுக்கலாமே! பாறாங்கல் மதிப்பு என்றும் மாறாது: வைரத்தைப் போற்றிப் போற்றிக் காப்பாற்றி வைத்தாலும், இன்றைக்கு இருக்கும் மதிப்பு நாளைக்கு இருக்காது."

"அலங்காரமாகப் பேசினால் போதுமா, நளினி? எனக்கு அந்தமாதிரி விஷயங்கள் ஒன்றும் இல்லை. அப்படியிருந்தும், அந்த மனிதருடைய மனம் புரிந்து, அவரிடம் மதிப்புப் பெறுவதற்குள் என் உயிரே போய்விட்டது. உன் பெற்றோருக்கு நீ ஒரே பெண். நானும் அப்படியே. நம் வாழ்வு சீர்குலைந்தால் நம் பெற்றோர் உயிருக்கே ஆபத்தாகிவிடும்."

"என்ன, பத்மினி, நீ சொல்கிறாய்! நமக்காக ஒரு தரம், பெற்றோருக்காக ஒருதரம் நாம் மணக்கமுடியுமா? நமக்குப் பிடித்தவர்களைக் கைப்பிடிக்க வேண்டியதுதான். நாம் யாரோடாவது சந்தோஷமாக இருப்பதுதானே அவர்களுக்குத் தேவை?"

"சந்தோஷமாக இருப்பது என்பது அவ்வளவு எளிதா?"

"என்னைப் பயமுறுத்தாதே, பத்மினி."

"உன்னைப் பயமுறுத்தியே ஆக வேண்டும். உனக்கு விவரமே புரியவில்லை. சுந்தரம் கிடைத்தற்கரிய பொக்கிஷம். அவனை ஏற்றுக்கொள்."

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன், பத்மினி. ஆனால் 'மாணிக்கம் என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் சுந்தரம் வெகு தொலைவில் போய் விடுகிறாரே!"

"என்ன மனமோ, என்ன தொல்லையோ?"

"அலமேலுவுக்குத்தானா அதிக வசதி? அவள் கன்னியாகவே இருக்கத் துணிவு கொண்டு விட்டாளே! சமயம் வந்தால் நான் மட்டும் அப்படி இருக்க மாட்டேனா?"

"அலமேலு!" என்றாள் பத்மினி, ஏளனமாக.

"அவளுக்கென்னவாம்? கொள்கைக்காகச் சொத்தையே நிராகரித்து விட்டாள் பார். அவளுடைய நிர்ணயம் மெச்சத் தகுந்ததல்லவா?"

"அவள் மாணிக்கத்தின் தங்கைதானே? புத்தி எங்கே இருக்கும்?"

"அவள் புத்திக்கு என்னவாம்? மீனாவின் சங்கத்தை அவளே நடத்துகிறாள்."

"நடத்தட்டும். அதற்குள் இந்தப் பெண்ணையும் பிள்ளையையும் பெற்றதற்காகத் தனபாக்கியத்தம்மா உயிர் விட்டுவிடட்டும்!"

"ஆமாம், பாவம்! அவர்கள் எப்படி உருகி விட்டார்கள் தெரியுமா?"

"நளினி, நான் சொல்வதைக் கேள். இந்திரா காலனியிலே உனக்குச் சரிப்படாது. அதை விட்டுத் தொலை; மறந்து விடு. உனக்கு அது சரியேபடாது."

"ஒரே ஒரு நிபந்தனை, பத்மினி. நாம் போய் அங்கு ஒருமுறை பார்ப்பது; பழனியிலிருந்து தாயாரைப் பார்க்கத்

தானே வந்ததாகத் தெரிகிறது? ஒரு முறை பார்ப்போம். உன்னிடம் இருக்கும் சகோதர வாஞ்சையினால் பிடிபட்டு விடுவார். அப்பொழுது தீர்மானம் செய்துவிடுவோம். அதன் பிறகு நீ சொல்வதுபோல நான் சுந்தரத்தை மணந்து கொள்கிறேன்."

"சரி, அவனைக் கண்டு வரலாம். ஆனால் அவனை மணப்பது சரியல்ல. உன் அப்பாவுக்கு அவனிடம் மதிப்புப் போய் விட்டது. மருமகளை ஏற்றுக்கொள்ள அவருக்கு மனம் ஒப்பாது."

"பழனியாண்டவர் அதை நடத்தி வைப்பார்" என்றாள் நளினி.

பத்மினி அசிரத்தையாகத் தன் தோள்களைக் குலுக்கினாள். நளினியின் பிடிவாதம் அவளுக்கு எரிச்சலை மூட்டியது.

ஊருக்குத் திரும்பியவுடனே நேரே இரு தோழிகளும் இந்திரா காலனிக்குச் சென்றார்கள். மீனாட்சி வீட்டில் முதலில் நுழைந்தால், தாங்கள் வந்தது தெரிந்து மாணிக்கம் வீட்டை விட்டு ஓடிவிடப் போகிறானே என்றஞ்சி அவர்கள் நேராக மாணிக்கத்தின் வீட்டுக்கே சென்றனர்.

அலமேலு நடையில் இருந்தாள். இவர்களைப் பார்த்து முறுவலித்தாள்.

"மாணிக்கம் வந்திருக்கிறானாமே?" என்று கேட்டாள் பத்மினி.

"வந்திருந்தார். மறுபடியும் போய் விட்டார்" என்றாள் அலமேலு.

பத்மினி நளினியைப் பார்க்கவில்லை. நளினி குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்தாள். மாணிக்கத்தின் குடும்பத்தின் முன்னே அவள் கண்ணீர் உகுப்பாளோ என்று நினைத்துப் பத்மினி திகிலடைந்தாள். ஆனால் நளினி சமாளித்துக்கொண்டு விட்டாள். அலமேலு பாதி தைத்து வைத்திருந்த ஒரு குழந்தைச் சட்டையை எடுத்து அவள் பார்வை யிட்டாள்.

அலமேலு அவளை விந்தையாகப் பார்த்தாள். நளினியின் கழுத்தில் படபடவென்று நெஞ்சு அடித்துக் கொள்வது தெரிந்தது.

"அண்ணன் தன் முகவரியைக்கூடக் கொடுக்கவில்லை. எங்கே போகிறேன்னு சொல்லவும் இல்லை."

"அவர் இப்போ பழனியில் இல்லையா?" என்று தொண்டை அடைக்கக் கேட்டாள் நளினி.

"பழனியிலே இருக்கார்னு யார் சொன்னாங்க?" என்று கேட்டாள் அலமேலு.

பத்மினியும் நளினியும் தாங்கள் பழனிக்குப் போனதையும் அங்கு அவள் அண்ணன் இருப்பதைக் கண்டுகொண்டதையும் சொல்லி முடித்தார்கள்.

"என்ன அண்ணனோ? மனசிலே என்ன இருக்குதுன்னு வெளிப்படையாச் சொல்றதுமில்லை. சின்னக் குழந்தை மாதிரி ஓடி ஓடிப் போனால் என்ன அர்த்தமாம்? ராமகிருஷ்ண மடத்திலே சேர்ந்திடலாம்னு பார்த்தாராமே? சாமியார் சேர்த்துக்கலையாம். மனசிலே நிர்ணயம் ஏற்பட மடத்துக்குப் போகணுமா?"

நளினி விசனமான முகத்துடன் அலமேலுவைப் பார்த்தாள். அலமேலு சொன்ன விவரம் அவளுக்குப் புதிதாக இருந்தது. "துறவறத்துக்குத் துணிந்து விட்டாரா?" என்று கேட்டாள் அவள்.

"அப்படித்தான்போல. இப்போ எங்கே கோவில் கோவிலாக அலைகிறாரோ தெரியாது" என்றாள் அலமேலு.

பத்மினி கிளம்பிவிட்டாள். நளினியும் உடன் எழுந்தாள். "மீனாவைப் பார்த்து விட்டுப் போகலாமா?" என்று கேட்டாள் பத்மினி.

"வேண்டாம், நேரே வீட்டுக்குப் போகலாம்" என்றாள் நளினி, துக்கமான குரலில்.

பத்மினி தன் தோழியின் கையைப் பிடித்துத் தடவியபடி இருந்தாள். நளினி கையை இழுத்துக் கொள்ளவில்லை. ஆனால் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டு வெறுமையுடன் எங்கோ பார்த்தபடி இருந்தாள்.


நளினியின் வீட்டின் முன் கார் நின்றது. அங்கு ஓர் ஆட்டோ ரிக்ஷா யாரையோ இறக்கிவிட்டுக் கிளம்பும் தறுவாயில் இருந்தது. வந்தவர் யார் என்றுகூட நளினி பார்க்க யத்தனிக்கவில்லை. பத்மினி தன்னைத் தொடர்ந்ததையும் பொருட்படுத்தாமல் அவள் குனிந்த தலை நிமிராமல் மேலே தன் அறைக்கு ஓடினாள்.

"ஹாய், நளீ!" என்று குரல் கேட்டதும், பத்மினிதான் திரும்பினாள். நளினி நிற்கவேயில்லை. அவள் மாடிப் படியில் மறைந்ததுதான் தெரிந்தது.

"இந்திரா காலனி போய் வருகிறீர்களோ?" என்று கேட்டான் சுந்தரம்.

"ஆமாம். நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? இப்போதுதான் வருகிறீர்களா?" என்று பத்மினி கேள்வி மீது கேள்வி கேட்டாள்.

சுந்தரம் பதில் சொல்வதற்குள் அவனுடைய மாமி வந்துவிட்டாள். "சுந்தரம், நீ வரப்போவதாகக் கடுதாசு கூடப் போடலையே! நல்ல காலம், இன்னைக்கு வந்தியே! நேற்று வந்திருந்தால் நாங்கள் யாருமே இருந்திருக்க மாட்டோம். பழனிக்குப் போயிருந்தோம். என்ன திவ்விய தரிசனம் போ! நீயும் வந்திருந்தால் மிகவும் ரசித்திருப்பே" என்றாள்.




வலிதரும் சொத்தை, பாழான பற்கள். இவை நேராது தவிர்க்க, பற்சிதைவைத் தடுத்திட வேண்டும்—நீங்கள் உங்கள் பற்களுக்குப் பினகா ஃப்ளோரைட்* பாதுகாப்பு அளிப்பதன் மூலம்.

உலகெங்கும் நடத்திய சோதனைகளின் மூலம், பற்பசையில் அடங்கிய பொருட்களில் ஃப்ளோரைட் மட்டுமே, பல் எனாமலோடு உண்மையிலேயே கலந்து, அதற்குப் பற்சிதைவை எதிர்க்கும் வலிமையை ஊட்டுகிறது என்று நிருபணமாகி உள்ளது. பினகா ஃப்ளோரைடின் நீடித்துநிற்கும் ஆற்றல், பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது.

பல்லுக்கு உறுதி,
பற்சிதைவுக்கு எதிரி—

பினகா ஃப்ளோரைட்

*தீவிர ஃப்ளோரைட் கலவையான ஸோடியம் மோனோஃப்ளோரோபாஸ்பேட் அடங்கியது.



இந்தியாவின் முதன்முதல் சக்திவாய்ந்த ஃப்ளோரைட் பற்பசை

U-BF 8/7 tam

சுந்தரம் பத்மினியின் முகத்தை உற்று நோக்கினான். அவள் எதையோ சொல்ல நினைத்தாள். அவளை வாய் எடுக்க விடவில்லை நளினியின் தாயார், அவள் தன் மருமகனைப் பார்த்த களிப்பில் தன் போக்கில் பேசியபடி இருந்தாள். பத்மினி விசனமாகச் சிரித்தபடி தோழியைத் தேடிக்கொண்டு மாடிக்குப் போனாள்.

தான் கொண்டுவந்த பெட்டியைத் தூக்கிக்கொண்டு சுந்தரமும் தன் அறையை நாடி மாடிப்படியில் கால் வைத்தான்.

"இரு சுந்தரம். பெட்டியை நீ தூக்கிக் கொண்டு போகவேண்டாம். இங்கேயே கையைக் கழுவிக் கொள். இன்னிக்கு உனக்குப் பிடித்தபடி ரவா தோசை ஒரு நிமிஷத்தில் வார்த்து வருகிறேன். உட்கார்" என்று அவனை அடி எடுத்து வைக்கவிடாமல் தடுத்து நிறுத்தி விட்டாள் மாமி. சுந்தரமும் பேசாமல் சாப்பாட்டு மேஜையண்டை போய் அமர்ந்தான். பத்மினி பாதி மாடிப் படியில் நின்று வேடிக்கை பார்த்துவிட்டு நளினியைத் தேடிச் சென்றாள்.

நளினி படுக்கையில் படுத்து விட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நளினி, என்ன அசட்டுத்தனம் இது?" என்று கடிந்தாள் பத்மினி.

"ஒன்றுமில்லையே! நான் என்ன தப்பாக நடந்துவிட்டேன்?"

"உன் அத்தான் வந்திருக்கிறார். உன் அப்பா எங்கோ வெளியே போயிருக்கிறார் போலும். வந்தவரை 'வாங்கோ' என்று மரியாதைக்குக்கூட அழைக்க வேண்டாமா?"

"அவர் தாம் வீட்டுக்குள்ளேயே வந்து விட்டாரே!"

"உன்னை ஆசையுடன் கூப்பிட்டார். பதில் சொல்லாமல் ஓடி வந்தாயே!"

"சொந்த மனிதர்கள் ஒன்றும் தவறாக நினைக்கமாட்டார்கள்."

"சரி, கீழே வா. உன் அம்மா அவரை விடவேயில்லை. உடை மாற்றக்கூட அவகாசம் தரவில்லை. தோசை சாப்பிட உட்கார்ந்து விட்டார்."

நளினி ஆயாசத்துடன் எழுந்தாள். முகத்தைக் கழுவிப் பவுடர் போட்டு, பொட்டிட்டுக் கொண்டாள். ஒரு புன் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, பத்மினியை அழைத்தாள். "வா, கீழே போவோம்" என்றாள்.

பத்மினியும் அவளும் கீழே வந்த போது, சாப்பாட்டு மேஜையண்டை அமர்ந்து, தன் மாமியின் உபசரணையைத் தாங்காமல் தவித்துக்கொண்டிருந்தான் சுந்தரம்.

"என்ன, அத்தான், எத்தனை தோசை காலி?" என்று கேட்டாள் நளினி.

ஒரே ஒரு விநாடி. அந்த விநாடியில் சுந்தரத்தின் முகத்தில் படர்ந்த உணர்ச்சியை இன்னது என்று இனங் காண முடியாமல் தவித்தாள் பத்மினி. அதன் பிறகு சுந்தரம் தெளிந்த முகத்துடனும் வற்றாத புன்னகையுடனும் வேடிக்கையாகச் சகஜமாகப் பேசினான்.

"தோசையை மாமிதானே வார்க்கிறார்கள்? கணக்கிலே வரக் காரணம் இல்லை. நளினியம்மா கைவண்ணமாக இருந்தால், இந்நேரம் பல் வைத்தியரைத் தேடிக் கொண்டு ஓடியிருப்பேனே!" என்றான் சுந்தரம்.

"நளினி நன்றாகச் சமைப்பாள்" என்றாள் பத்மினி.

"தோழியிடம் உங்களுக்கு இருக்கிற அன்பு அவ்வளவு குருட்டுத்தனமானதா? கடவுளே!" என்று சுந்தரம் வேடிக்கையாகக் கூறினான்.

"ஆயுள் முழுவதுமே நளினியம்மா சமையலைச் சாப்பிட நேர்ந்தால்?" என்று கேலியாகக் கேட்டாள் நளினி. ஆனால் அவள் குரல் கம்மியது.

"முருகன் அவர்களைக் காப்பாற்றட்டும்!" என்றான் சுந்தரம், கண்களை உயர்த்தி.

"பத்மினி, உன்னிடம் முன்பு சொன்னேனே; அம்மாவிடம் சொல்லிவிடு" என்று கூறிவிட்டு நளினி மேஜையை விட்டு எழுந்தாள்.

பத்மினி அவளைத் தொடர்ந்தாள். "என்ன சொல்றே நீ?"

"மாணிக்கத்தைத் தேடி அலைந்தேன். கையில் பிடிபடாத பொருளாக நழுவிக் கொண்டே போகிறார். எதிர்பாராத விதமாகச் சுந்தரம் வந்திருக்கிறார். இது தான் முருகன் சூசகம் போலும்! அம்மாவிடம் சொல்லிவிடு. முகூர்த்தம் வைக்கட்டும்."

சுந்தரம் பின்னாடியே வந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

"இந்த யுகத்துக்கே புத்திசாலித்தனமான பேச்சு இது என்று சொல்லுங்கள்" என்றான் சுந்தரம்.

நளினியும் அவனும் நேருக்கு நேர் பார்த்துக் கொண்டனர்.

பத்மினி நளினியின் தாயைத் தேடிச் சென்றாள்.

28. மூன்று தோழிகள்

கொஞ்ச நாட்களாக இந்திரா காலனியில் எந்த விதப் புதுமையும் நடைபெறவில்லை. அமைதியாக அவரவர்களும் தத்தம் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். குழாயில் நிறைய நீர் வந்தபடியால் அங்கும் பரபரப்பு இல்லை.

மாரியம்மனும் பாலே வழிய விட்டுக் கொண்டு இனம் புரியாத புன்னகை ஒன்று பூத்த வண்ணம் காவல் புரிந்தாள்.

போலீஸ் ஜீப் மீண்டும் ஒரு முறை மணவாளச் செட்டியின் வீட்டின் முன் வந்து நின்றதும் காலனிக்காரர்களுக்கு ஆச்சரியமும் ஆவலும் தாங்க முடிய வில்லை போலும்! எட்டி எட்டிப் பார்த்த வர்களும், தைரியமாகத் தெருவில் நின்றவர்களுமாகக் கூட்டம் கூடி விட்டது.

"நகை கிடைத்து விட்டதாம்!" என்று ஒரு புரளி கிளம்பியது. அதை ஒட்டி மக்கள் கும்பல் கும்பலாகக் கூடிப் பேசினர்.

மணவாளச் செட்டியும் பங்காருவும் தாம் இருக்குமிடம் வெளியே தெரி யாமல் எங்கோ உள்ளே மறைந்து விட் டனர்.

முன்பு வந்த விதம் வேறு, இப் போது போலீஸ் விஜயம் வேறு வித மாக அல்லவா அமைந்துவிட்டது? மதனகோபாலனைக் கைது செய்ய வந் திருக்கின்றனர் என்று அறிந்த மாத்தி ரத்தில் அவன் பெற்றோர் குன்றி விட் டனர்.

சினிமாக் கொட்டகையிலிருந்து வெளியே வந்த சில பெண்களிடம் சில வாலிபர்கள் அசம்பாவிதமாகச் சேஷ்டை கள் செய்திருக்கின்றனர். ஒருவன் ஒரு பெண்ணின் தலைப் பின்னலை இழுத்திருக் கிறான். அந்தப் பெண் ஒரு போலீஸ் அதிகாரியின் மகளாக இருந்தபடியால் இவர்களுக்கும் பிரதிகூலமாகிவிட்டது. போலீஸ்காரர் குறுக்கிட்டனர். கல்லெறி ஆரம்பித்தது. கூட்டத்தில் அமளி ஓங் கியது. நான்கைந்து பேர்களைக் கையும் பிடியுமாகப் பிடித்து விட்டனர். அவர் களை நெருக்கி விசாரித்தபோது மதன கோபாலன்தான் தங்களுக்குத் தலைவன் என்று கூறிவிட்டனர். அவனிடம் நிறையப் பணம் இருக்கிறது, தம்மைக் காப்பாற்றுவான் என்பது அவர்கள் திட்டம்.

சப்-இன்ஸ்பெக்டர் விவரித்தபோது தலை வணங்கி மௌனமாகக் கேட்டுக் கொண்டான் மதனகோபாலன்.

"இன்று மாத்திரம் இல்லை. இந்த வேலுவும் ராஜனும் இதற்கு முன்பேகூடக் கடையில் கலாட்டா செய்து திருடி யிருக்கிறார்கள். இந்தப் பசங்கள் சங்கத் தில் பெரிய இடத்துப் பிள்ளையாகிய நீங்கள் ஏன் அகப்பட்டுக் கொள்ள வேண் டும்?" என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

மதனகோபாலன் வாயே திறக்க வில்லை. அவன் பெற்றோரும் வாயடைத்து நின்றனர்.

"கந்தசாமி செட்டியாரின் மகன் சண்முகம் இந்தக் கூட்டத்தில் இருந் தானும். தப்பி ஓடிவிட்டிருக்கிறான். 'சரி' என்று நானும் பாராதது போல இருந்து விட்டேன்" என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

"அது சரிங்க. கோபாலு ரெண்டு நாட்களாக எங்கேயும் வெளியே போகவே இல்லையே!" என்று முறை யிட்டாள் பங்காரு.

"நீ சும்மா இரு, அம்மா. நான் ஜெயிலுக்குப் போவதனால் ஒண்ணும் ஆகிவிடாது. ரெண்டு மாசம் போடு வாங்க. போட்டுவிட்டுப் போகட்டும்" என்றான் மகன்.

சப்-இன்ஸ்பெக்டர் எழுந்து நின்றார், தன்னுடன் அவனும் கிளம்ப வேண்டும் என்கிற பாவனையில்.

"ஒரு நிமிஷம். என் தாயாரிடம் ஒரு பேச்சுச் சொல்லிவிட்டு வருகிறேன்" என்றான் மதனகோபாலன்.

சப்-இன்ஸ்பெக்டர் முன்பே தெரிந்தவ ராகையால் மறுக்கவில்லை. "சீக்கிரம்" என்று கூறிவிட்டுக் காத்திருந்தார்.

"அம்மா, அப்பா, ஒரு நிமிஷம் உள்ளே வாங்க" என்று அழைத்துக் கொண்டே தன் அறைப்பக்கம் போனான் மதனகோபாலன். பங்காருவும் மணவா ளச் செட்டியும் தம் மகனைப் பின் தொடர்ந்தனர். மதனகோபாலன் தன் பீரோவைத் திறந்து அதிலிருந்து ஒரு மூட்டையை எடுத்து அவர்கள்முன் பிரித் தான். களவு போய்விட்டதாக நினைத்த நகைகள் யாவும் அதில் இருந்தன. பெற் றோர் இருவரும் வாயடைத்துப் போனார்கள்.

"அந்தப் பாவத்துக்குத்தான் இப் பொழுது தண்டனை வந்திருக்கிறது. அன்றே நேரவேண்டியது, இன்று வேறு விதமாக வந்திருக்கிறது" என்று அமைதி யாகச் சொல்லிவிட்டு, மூட்டையைக் கீழேயே விட்டுவிட்டு, அவன் வேகமாக வெளியே வந்து, சப்-இன்ஸ்பெக்டர் அரு கில் நின்றான். அவருடன் போலீஸ் ஜீப் பில் ஏறிக்கொண்டான். இந்திரா காலனியே எட்டிப் பார்த்தது. ஆனால் அது அவனைப் பாதிக்கவில்லை. அவன் வரையில் எதுவும் பொருட்டாகப் படவில்லை போலும்! பிறர்முன் படாடோபமாக, வசீகரமாக இருக்க வேண்டுமென்று நினைத்து அட்டகாசம் புரிந்த அவனுக்கு இன்று, தான் போகும் நிலை குறித்து வருத்தங்கூடத் தோன்றவில்லை. ஆனால், கன்னிகா பரமேசுவரி சத்திரத்தைத் தாண்டிச் செல்லும்போது அலமேலு இருப்பது தெரிந்ததும் அவன் இதயம் சுருக்கென்றது.

பத்தடி சென்றதும் நளினியும் பத்மினி யும் காரில் எதிரே வந்தனர். அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

நளினி பத்மினியைப் பார்த்தாள். "பத்மினி, நேற்றெல்லாம் அலமேலுவை

நிந்திச்சயே; இந்தமாதிரி மனிதனைக் கட்டிக்கொண்டு அவள் என்ன செய்வாள்?'' என்றாள்.

''அவன் மட்டும் அலமேலுவை மணந்திருந்தால் அவன் இன்றைக்கு இப்படிப் போக நேரிடாது'' என்றாள் பத்மினி.

''நீ சுலபமாக எல்லார் வாழ்க்கையையும் திட்டமிடுகிறாய், பத்மினி.''

''நளினி இரண்டு மனிதர்கள் சேர்ந்து வாழ வேண்டுமென்றால் ஓரளவு உரசல் இருக்கும். அன்பு என்று ஒரு பசை இருந்தால் அந்த உரசல் அவ்வளவாகத் தெரியாது.''

''பெரிய தத்துவஞானி நீ!''

''நான் அநுபவ பூர்வமாகத்தான் சொல்கிறேன். என் கணவருக்கு என்னிடம் அன்பு இருக்கிறது. ஆனால், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை குறைவாக இருக்கிறது. இருந்தாலும் அவர் போக்கிலேயே போய் அவரை என் வசம் ஆக்கிக்கொள்ளக் கற்றுக்கொண்டு விட்டேன் நான்.''

''அலமேலு முன்பு மதனகோபாலனைப் பூஜித்தே வந்தாள். ஆனால், அவளை அவன் மிகவும் நோகவைத்து விட்டானே! இப்போது அவளுக்கு மட்டும் எப்படி மனசுக்குப் பிடிக்கும் சொல்லு. நடந்துபோன கதையைத் திருப்பி நடத்த முடியாது'' என்று கோபமாகப் பேசினாள் நளினி.

''நீ மட்டும் இதுவரை அப்படி இருக்கவில்லையா? சுந்தரம் ஆசையுடன் உனக்காகக் காத்திருக்க, கிடைக்காத மாணிக்கத்தை நினைத்துக்கொண்டு நீ....''

நளினி வேதனையுடன் மௌனம் சாதித்தாள்.

''என்ன வந்துவிட்டது, இப்போ?'' என்று பரிவுடன் விசாரித்தாள் பத்மினி.

''ஒருதலைக் காதல் மிகவும் பயங்கரம், பத்மினி.''

''எதைப்பற்றிப் பேசறே, நீ? அலமேலுவுக்குக் கோபாலுமீது ஒருதலைக் காதலா? மாணிக்கத்துக்கும் உனக்குமா? அவனுக்கு உன்மீது கொள்ளை ஆசை தான். வெளிக்காட்டிக் கொள்ளத் தெரியாது. மேலும், தன் ஆசைக்காக உன்னை மணந்துகொண்டால், பிறகு நீ வசதி குறைந்து கஷ்டப்படுவாயே என்ற பயம் வேறு. உன் பாக்கியத்தைப் பார். சுந்தரமும் உன்மேலே உயிரையே வச்சிருக்கிறார். நீதான் சரியாக நடந்துகொள்ள வேண்டும். இனி அவர் வாழ்வுதான் உன் வாழ்வு. இதை மறக்காதே.''

''அவரைப்பற்றித்தான் நான் குறிப்பிட்டேன், அந்த அன்புப் பிரவாகத்தை ஏற்க நான் தகுந்த பாத்திரந்தானா? ஆனால்....''

''ஆனால் என்ன, நளினி?''

''மாணிக்கத்தை மறப்பது என்று தீர்மானித்துவிட்டேன். சுந்தரத்துக்குக் குறை தோன்றாமல் நடப்பேன், பத்மினி; எனக்கு மனஉறுதி தரவேண்டும் என்று நீ பிரார்த்தனை செய்'' என்றாள் நளினி. அவள் குரல் தழுதழுத்தது.

கார் இந்திரா காலனிக்குள் நுழைந்து டாக்டர் வீட்டின்முன் நின்றது.

''நளினி. நீ இப்ப மாணிக்கத்தின் சூழலில் இருக்கிறாய். உன்னை உறுதிப்படுத்திக் கொள்ள இதுவே பயிற்சியாக இருக்கட்டும்'' என்றாள் பத்மினி, தாழ்ந்த குரலில்;

ஆங்காங்குக் கிசுகிசுத்துக்கொண்டிருந்த மனிதக் கும்பல்களைக் கவனித்தாள் நளினி. ''இன்றைக்குக் கோபாலுவின் கதை கிடைத்து விட்டதாக்கும்!'' என்றாள் அவள், சலிப்புடன்.

''என்ன காரணமோ தெரியவில்லையே! இப்போதெல்லாம் சீலமாக வாழ்கிறான் என்றுதானே சொல்லிக் கொள்கிறார்கள்? போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகவேண்டிய தேவை என்ன?'' என்று வியந்தாள் பத்மினி.

''நாம் நேரே பங்காரும்மா வீட்டுக்கே போவோம்'' என்றாள் நளினி.

''வேடிக்கை பார்க்க வந்ததாக நினைப்பார்களோ?'' என்று ஐயுற்றாள் பத்மினி;

''மாட்டார்கள். அவர்களுக்கு ஆறுதலாக இருக்கும்.''

இவர்கள் போனபோது பங்காருவும் மணவாளச் செட்டியும் உள் முற்றத்தில் அமர்ந்து, தணிவான குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

உடம்பும் உள்ளமும் நலிவுற்றதில் பங்காருவின் இரட்டைநாடிச் சரீரம் சுருங்கிக் கிழடு தட்டிவிட்டது. மணவாளச் செட்டியும் குன்றிக் குறுகி விட்டார் போலும்!

''கோபாலு ஏன் போலீஸுடன் போகிறார்?'' என்று நேரிடையாகக் கேட்டுவிட்டாள் பத்மினி.

பங்காரு, கண்களில் தாரை தாரையாக நீர் வழிய, தன் மகன்மீது அபாண்டமான குற்றம் சுமத்தப்பட்டதைக் கூறி முடித்தாள்.

மணவாளச் செட்டி பேசாமல் இருந்தார்; அவரது மௌனமே அவர் துக்கத்தை அதிகமாக வெளிக்காட்டியது.

''நீங்கள் வீணே கவலைப்படாதீர்கள்; எல்லாம் சரியாகிவிடும். கடவுள் வேடிக்கை பார்த்துக்கொண்டே இருப்பாரா?'' என்றாள் நளினி.

''தப்பே இல்லாமல் தண்டிப்பார்களா, என்ன? பழைய வேண்டாத சகவாச தோஷத்துக்காகப் பலர் முன்னிலையில் தலைக்குனிவுடன் தெருவோடு போலீசாருடன் போகும்படியாகிவிட்டது. அத்தோடு விட்டுவிடும்'' என்றாள் பத்மினி.

''சுமங்கலிப் பெண் நீ சொல்கிறாய். கன்னிகா பரமேசுவரியே நேரே வந்து

சொல்கிறமாதிரி இருக்கிறது, என் காதுக்கு. வெறும் மிரட்டலோடு திரும்பினால் சரிதான்'' என்றார் மணவாளச் செட்டி.

''அவர்கள் சொல்கிற நேரத்தில் முருகன் கோவிலில் எங்கள் வீட்டு அபிஷேகம் நடந்துகொண் டிருந்தது. அவன் தான் கர்ப்பக் கிருகத்தில் முதலில் நின்றுகொண் டிருந்தான். ஆண்டவர் சாட்சி சொல்லமாட்டாரா?'' என்றாள் பங்காரு.

''அவர் சொல்வார், நிச்சயமாக. உனக்குச் சந்தேகம் வரலாமா?'' என்று கடிந்தார் மணவாளச் செட்டி.

''பெண்புத்தி!'' தாடையில் போட்டுக் கொண்டாள் மனைவி.

மணவாளச் செட்டி பேச்சை மாற்றினார். அவர்களுடைய மருத்துவமனைத் திறப்பு விழாவைப்பற்றிப் பேச்சுத் திரும்பியது.

''கட்டடத்துக்குப் பூச்சு வேலை ஆகலை. தரை போடவேண்டும். தண்ணீர்க் குழாயும் மின்விளக்கும் வந்தால் போதுமா? திறப்பு விழா நடத்தப் போகிறாளாம். எங்க மீனு யோசனையே யோசனை!'' என்றாள் பத்மினி.

''உள்ளே பூச்சு வேலை ஆகிவிட்டது. முன்பக்கம் மட்டும் பார்வையாகப் பூசி விட்டார்கள். மற்ற இடங்களில் சாரங்கள் கூட அவிழ்க்கவில்லை'' என்று கூறிச் சிரித்தாள் நளினி.

''மீனும்மா விவகாரம் தெரிந்தவர்கள். மந்திரி யாரையோ அழைத்துத் திறக்கச் சொல்கிறார்களாம். அரசினரிடமிருந்து ஏதாவது நிதி கிடைக்கும். அன்று இங்கு வரும் பிரமுகர்கள் இங்குள்ள தேவைகளைப் புரிந்துகொண்டால் மேலும் பணவசதி கிட்டுமே! அதற்காகத் திட்டம்போட்டு இப்போதே திறப்பு விழா வைத்துக் கொள்கிறார்கள்'' என்றார் மணவாளச் செட்டி.

''இருக்கும், இருக்கும்! பெரிய கெட்டிக்காரி அவள்! நாடகமே மறுபடியும் போடவேணும்னு சொன்னா.'' பத்மினி பேச்சை நிறுத்திவிட்டு நளினியைக் கடைக்கண்ணால் நோக்கினாள். நளினி தரையில் பார்வையைச் செலுத்தி, புடைவைத் தலைப்பை முறுக்கிக்கொண் டிருந்தாள்.

''நாடகம் போட்டிருக்கலாம். ஆனால் பாருங்க, கோபாலு இப்படிப் போயிடுவான்னு தெரிஞ்சுதான் முருகன் தடுத்து விட்டான் போலும்!'' என்றார் மணவாளச் செட்டி.

''உங்கள் கோபாலு மட்டும் இல்லை. மாணிக்கமும் இல்லையே! அவனும் நளினியும் பாடினால்தான் களை கட்டும்; பணம் வரும்'' என்றாள் பத்மினி.

''இப்ப என்ன செய்யப் போறாங்க?'' என்று கேட்டார் மணவாளச் செட்டி.

''வெறும் திறப்பு விழாதான். மீனு வரவேற்பா. மந்திரி பேசுவாரு. நான் நன்றி சொல்லுவேன். அப்புறம் நளினி கச்சேரி; ஒரு மணி நேரம் பாடப் போகிறாள்.''

''சரி, அப்ப நம்ப காதுக்கு நல்ல விருந்து இருக்குதுன்னு சொல்லு'' என்றார் மணவாளச் செட்டி.

''என் பாட்டுக்கு என்னங்க? இங்கே உங்க எதிரிலே எப்பக் கேட்டாலும் ஒரு மணி என்ன, ரெண்டு மணி நேரம் பாடத் தயாராக இருக்கிறேன். மீனு தான் என்னவோ பொதுமேடையிலே என்னை ஏத்தறாள். எனக்குப் பிடிக்கவே யில்லை'' என்றாள் நளினி.

''ஆமாம்! கச்சேரிக்கு ஒரு பிரபல பாடகரை அழைச்சால் அதுக்குப் பணம் தரவேண்டாமாக்கும்?'' என்றாள் பத்மினி.

''அது சரி. அப்படிப் பார்த்தால் நான் முணுமுணுக்கக் கூடாதுதான்'' என்றாள் நளினி.

இரண்டு பேரும் அங்கிருந்து விடை பெற்று, மாணிக்கம் வீட்டுக்குச் சென்றனர்.

அலமேலு உழுந்து களைந்துகொண்டு கிணற்றடியில் அமர்ந்திருந்தாள்.

''அலமேலு, வீடு முழுவதும் திறந்து கிடக்கிறது. யாருமே காணோம். நீ கொல்லைப்புறத்தில் உட்கார்ந்து என்ன செய்கிறாயாம்?'' என்று கேட்டார்கள் நளினியும் பத்மினியும்.

அலமேலு நிமிர்ந்து பார்த்தபோது, அவள் கண்கள் இரண்டும் கோவைப் பழமாகச் சிவந்து கிடப்பதையும், மூக்குச் செவசெவ வென்று காணப்படுவதையும் அவர்கள் கவனித்தார்கள்.

''என்ன, அலமேலு, ஏன் கண் அப்படிச் சிவந்து கிடக்கிறது?'' என்று அங்கலாய்த்தாள் நளினி.

''கண்வலி வரப்போகிறது என்று நினைக்கிறேன்'' என்றாள் அலமேலு, அசுவாரசியமாக.

''கண் வலிக்கு மூக்குச் சிவக்காது'' என்றாள் பத்மினி.

''உழுந்து களைந்து கறுப்புத் தோலை நீக்குவதற்குள் மூக்குத்தானா சிவக்கும்? உடம்பே தக்காளியாகத் தெரியும்'' என்றாள் அலமேலு.

''சரி, நாங்க வர்றோம். நீ வேலையை விட்டுவிட்டு வரவேண்டாம்'' என்றாள் நளினி.

''எங்கே வந்தீங்க, எங்கே போறீங்க?'' என்று சிரித்துக் கேட்டுக்கொண்டு, உழுந்துப் பாத்திரத்தின்மீது ஒரு மரப் பலகையை மூடிவிட்டு அலமேலு அவர்களுடன் கிளம்பினாள்.

''சும்மாத்தான் இப்படி வந்தோம், எதிரே ஜீப்பிலே மதனகோபாலனைப் போலீஸ் கூட்டிக்கிட்டுப் போறதைப் பார்த்தோம். அதனால் உடனே பங்காரும்மா வீட்டுக்குப் போனோம். பேசிட்டு இங்கே வந்தோம். இப்படியே மீனாவைப் பார்த்திட்டுப் போகவேண்டியதுதான்'' என்றாள் நளினி.

''நளினி இனிமேல் அடிக்கடி வர முடியாது இல்லையா?'' என்றாள் பத்மினி.

''ஏன்? நளினி வரும்போதெல்லாம் நான் உழுந்து களைஞ்சிக்கிட்டு இருப்பேனா? பேசமுடியாதா? என்ன கதை இது?'' என்றாள் அலமேலு, சுவாதீனமாக.

''கண்வலி குறைஞ்சிண்டு வரதே?'' என்றாள் நளினி, அவளை உற்றுப் பார்த்து.

''அது கிடக்கு. வாங்க முன்பக்கம் போகலாம்.''

''நீ பூசி மறைக்காதே. எதுக்காக அழுதாய், சொல்லு'' என்று அலமேலுவின் தோளை உலுக்கினாள் நளினி.

அதற்குள் கந்தசாமி செட்டி அங்கு வந்தார். ''பொண்ணு, உங்க அம்மா எங்கே?'' என்று கேட்டார்.

''மாமா வீட்டிலே ஒரு சேதி சொல்லப் போனாங்க, அப்பா. நான் சாப்பாடு போடறேன், வாங்க.''

''இல்லே. மாரியம்மன் கல்லுக்குப் பால் ஊற்றச் சொல்லிச்சு. எடுத்து வச்சிருக்காளா பாரு.''

அவரைக் கண்டதும் நளினியும் பத்மினியும் ஒதுங்கி நின்றனர். அவர் சற்று நகர்ந்ததும் வெளியே போக யத்தனித்தனர்.

''ஏன் அம்மா, போறீங்க? இருங்க. அம்மனுக்குப் பால் ஊத்தறதைப் பாத்திட்டுப் போங்களேன்'' என்றார் செட்டியார்.

''சரிங்க, மாமா'' என்றாள் நளினி.

மூன்று பெண்களும் பின்தொடர, கந்தசாமி செட்டி மாரியம்மன் கல் பக்கம் சென்றார். அலமேலு எடுத்துத் தரவும், அம்மனை முதலில் நல்ல தண்ணீரில் குளிக்கவைத்து, பிறகு பாலை ஊற்றிக் கற்பூரம் காட்டிவிட்டு, மீண்டும் நல்ல நீரினால் கழுவிவிட்டார். அலமேலு, அரைத்த மஞ்சளைச் சிலை முழுவதும் பூசி, நெற்றியில் குங்குமம் இட்டாள். மீண்டும் கற்பூரம் காட்டி விட்டுத் திரும்பினார்கள்.

அந்தப் பூஜையைக் காணக் காண நளினியின் முகம் போகும் விதத்தைக் கண்டாள் பத்மினி. அவள் நெற்றி சுருங்கியது. உள்ளே வந்ததும், ''நளினி, சீக்கிரம் கிளம்பு. சுந்தரம் உன்னுடன் கடைக்குப் போகவேண்டும் என்று சொன்னாரே, நினைவில்லையா?'' என்றாள்.

நளினி மெல்ல விழிப்புற்றவள்போல, ''சரி, போவோம் வா'' என்றாள் தாழ்வான குரலில்.

''ஏன் நளினி, ஏன் திடீரென்று என்னவோபோல ஆகிவிட்டீங்க?'' என்று பதறினாள் அலமேலு.

பத்மினிதான் பதில் தந்தாள். ''ஒன்றும் இல்லே, அலமேலு. மாரியம்மன் கல்லுக்குப் பூஜை போட்டுத்தானே உனக்குக் கல்யாணம் நிச்சயம் செஞ்சாங்க? அது நினைவு வந்திருக்கும்; வருத்தப்படறா'' என்றாள்.

''அதுக்காக நானே கவலைப்படலே: நீங்க ஏன் அக்கா, மனசைப் போட்டு உளைச்சிக்கணும்? இன்னிக்குப் பாருங்களேன். பழி ஓரிடம் பாவம் ஓரிடமாப் போலீசு வந்ததே! மாரியம்மன் பார்த்துக் கிட்டுத்தான் இருந்தா.''

''கலாட்டாவிலே மதனகோபாலன் பங்கு எடுக்கலேன்னு என்ன நிச்சயம்? குற்றமில்லேன்னா அவன் பேசாமல் போயிருப்பானா?'' என்றாள் பத்மினி.

''முருகன் கோவிலிலே அபிஷேகம். அவருதான் முன்னாடி நின்னாரு. நூறு பேர் பார்த்திருப்பாங்க. கலாட்டா செஞ்ச பீடைங்க ஓடிடிச்சு. குற்றம் இல்லாதவங்களைத் தண்டிக்கிறது போலீசு!'' என்றாள் அலமேலு, கசப்பாக.

அப்பொழுதுதான் உள்ளே நுழைந்த சண்முகம், தன் தங்கையின் சொல்லைக் கேட்டு, சாட்டையடி பட்டவன்போலத் திரும்பிப் போய்விட்டான்.

''வா, நளினி, மீனா வீட்டுக்குக்கூட அப்புறம் போகலாம். உங்கள் அத்தான் காத்துக்கிட்டிருப்பாரு. மோதிரம் வாங்கப்போறாரு இல்லே?'' என்றாள் பத்மினி, ஓரக்கண்ணால் அலமேலுவைப் பார்த்தபடியே.

''ஆமாம், பத்மினி, மறந்தே போய் விட்டேன்'' என்றாள் நளினி.

''அலமேலுவுக்குச் சொன்னியா?''

''என்ன நளினி, என்ன விஷயம்? ஏதோ ஒரு காரியம் இருந்துதான் என்னைத் தேடி வந்திருக்கீங்க'' என்று ஆவலோடு கேட்டுக்கொண்டே நளினியின் மோவாயைப் பிடித்தாள் அலமேலு.

நளினி மௌனமாகத் தரையைப் பார்த்தாள்.

''நளினி தன் அத்தானைக் கட்டிக்கப் போவுது. நேற்றுத்தான் முடிவு செஞ்சாங்க: இன்னிக்கு அவரு ஒரு மோதிரம் வாங்கி நளினிக்குத் தரப் போறாராம்'' என்றாள் பத்மினி.

''என்னவோ குற்றம் செஞ்சமாதிரி தலையைக் குனியறதைப் பாரு. எல்லாம் வேஷம். என் கிட்டே சொன்னால் நான்

சந்தோஷப் படுவேன்னு தெரியாதா? நான் முன்னமே சொல்லியிருக்கிறேன், அத்தான்தான் மாப்பிள்ளையாக வருவார்னு. ஆளுதான் ரொம்ப நல்லா இருக்காரே? ஹை, நளினி! பத்மினிக்கா ஊருக்குப் போயாச்சு. இப்ப நீங்களும்'' என்றாள் அலமேலு.

''அலமேலு, அதுக்குத்தான் அது சொல்லவே பயப்படுது. நிச்சயமான உன் கல்யாணம் தடைப்பட்டு நீ நிற்கையிலே தன் திருமணத்தைப் பற்றிப் பேசக் கூசுது'' என்றாள் பத்மினி.

''என்னைப் பற்றி அவ்வளவுதானா உங்கள் அபிப்பிராயம்? இப்ப என் கல்யாணம் தடைப்பட்டு நிற்கறதுக்கு நானேதான் காரணம்னு உங்களுக்குத் தெரியாதோ? இதிலே என்ன இருக்குது கூச்சமும் கீச்சமும்?''

''ஏன் உன்னாலே தடைப்பட்டு நிற்குது?'' என்று கேட்டாள் நளினி.

''மீனாக்கா உங்களிடம் சொல்லலையா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் அலமேலு.

''மீனா அவ்வளவு சீக்கிரம் ஒருத்தர் ரகசியத்தை மற்றவர்களுக்குச் சொல்ல மாட்டாளே! சொல்லத் தகுந்ததாக இருந்தால் நீயே சொல்வாய்னு பேசாமல் இருந்துடுவா அவ.''

அலமேலு சுற்றுமுற்றும் பார்த்தாள். பிறகு பத்மினியையும் நளினியையும் கைப்பிடித்து உள்ளே அழைத்துப் போய்க் கூடத்தில் நிறுத்தினாள். ''அவரே வந்து என்னைக் கேட்டாரு. நான் தான் மறுத்திட்டேன்'' என்றாள், நிதானமாக.

''ஏன்? தவங்கிடந்தயே; இப்ப என்ன வந்திடுச்சாம்?''

''எனக்குன்னு ஒரு மனசு இல்லையா? நான் கன்னியாகவே வாழ, என்னிடம் திடம் இருக்குது.''

நளினி ஆச்சரியத்துடன் அலமேலுவைப் பார்த்தாள்.

பத்மினி இரண்டு பேரையும் கேலியாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''நல்ல தோழிங்க, ரெண்டு பேரும்! உங்களை நான் என்ன சொல்ல முடியும்? பெரியவங்க இஷ்டப்படி கல்யாணம் செய்துகிட்டா அவங்க சந்தோஷப்படுவாங்க. குடும்பத்திலே அமைதி இருக்கும். சமூகத்துக்கே நலம் செய்யறவங்க நீங்க. தன்னலமற்ற தியாகிகள்னு நினைப்பு உங்களுக்கு! இன்னிக்குக் கோபாலு போலீஸ் ஜீப்பிலே போகிறத்துக்குக் காரணமே ஒரு விதத்தில் நீதான், அலமேலு. நான் நளினி கிட்டே சொல்லிக்கிட்டு இருந்தேன்.''

''ஆமாம்! நான்தான் அவருமேலே குற்றம் சாட்டி, கையிலே விலங்கு மாட்டினேனாக்கும்!''

''அதில்லை. குறிப்பிட்டபடி கல்யாணம் நடந்திருந்தால் இப்படி நேர்ந்திருக்காது'' என்றாள் பத்மினி.

''அதெல்லாம் இல்லை, அக்கா. தகாத சிநேகம் வச்சால் அப்படித்தான் வியாதி மாதிரி. குணமாயிட்டுதுன்னு நினைச்சாக்கூட எப்பவாவது வலி காட்டும்'' என்றாள் அலமேலு.

''சரி, அநுபவிக்கட்டும். தண்டனை எப்ப வந்தால் என்ன?'' என்றாள் நளினி.

''அதுதான் கஷ்டமாக இருந்தது. தப்புச் செய்தபோது ராஜாவாட்டம் கொட்டம் போட்டாரு. திருந்தினப்புறம் தண்டனை வருது'' என்று சொல்லும்போது அலமேலு கண்ணில் குபுகுபுவென்று நீர் கிளம்பியது.

''நளினி, அலமேலு பேச்சுக்கும் நடத்தைக்கும் சம்பந்தம் இருக்குதா, பார்த்தாயா? உழுந்து களைஞ்சால் கண் வலி வருதாம். உன்னைப் பார்த்ததும் கண்ணு தெளிஞ்சுட்டுது. பேச்சு வீருப்பா வருது, தலைப்புக் கண்ணைத் துடைக்குது. நீங்க ரெண்டு பேரும், நீங்களும் வாழமாட்டீங்க, மத்தவங்களையும் வாழவிடமாட்டீங்க. சுயநலக்காரிங்க!'' என்று படபடத்தாள் பத்மினி.

''நீ திட்டும்படியா நாங்க யாரைத் துன்புறுத்திட்டோம்?'' என்று கேட்டுவிட்டுக் கலகலவென்று சிரித்தாள் நளினி.

''உங்க மனசுக்கே தெரியலேன்னா, மத்தவங்க சொல்லித் தெரியப் போவதில்லை. சரி, வா, போவோம்'' என்றாள் பத்மினி.

''மீனாவுக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள் அலமேலு.

''எது?'' என்று புரியாமல் கேட்டாள் நளினி.

''என்ன புதுசாக் கேட்கிறீங்க? நளினி-சுந்தரம் கல்யாணத்தைப் பற்றித்தான்.''

''தெரியாது. உனக்கு மட்டுந்தான் இந்தச் செய்தி. மீனாவுக்கெல்லாம் இப்போது முதற்கொண்டு தெரிய வேண்டாம். பிறகு சொல்லிப்போம்'' என்றாள் பத்மினி, கண்டிப்பாக.

''இது என்ன பெரிய ரகசியம், அக்கா?'' என்றாள் அலமேலு.

''சுந்தரம் தன் அப்பா அம்மாவுக்கு எழுதிக் கேட்கவேண்டாமா? ஆகட்டுமே, பின்னாடி தானாகத் தெரியுது. மாணிக்கத்துக்குக் காயிதம் எழுதினால் நீ தெரிவிப்பேன்னு உன்கிட்டே சொன்னேன். ஊர்ஜிதம் ஆகட்டும். உனக்குத்தான் சேதி.''

நளினி தலையைக் குனிந்து கொண்டு கால் கட்டை விரலால் தரையைக் கீறினாள். தொண்டையில் அவள் எதையோ விழுங்குவதுபோல ஓர் அசைவு தெரிந்தது.

"நீங்கள் எப்படியும் மீனாக்கா வீட்டிலே கொஞ்ச நேரம் இருப்பீங்க இல்லையா?" என்று கேட்டாள் நளினி.

"நீயும் வரயா? உழுந்தை அப்படியே விட்டுட்டியே!" என்று கேட்டாள் பத்மினி.

"உளுந்து கிடக்கட்டும். நான் வரேன். அம்மா இன்னும் வரலையே! ஓ, ஓ, அப்பா இருக்கிறாரே, மறந்திட்டேனே! சொல்லிவிட்டு வரேன்" என்று பேசிக்கொண்டே வீட்டுக்குள் ஓடினாள் அலமேலு. மறுபடியும் ஓடி வந்து நளினியை இறுகத் தழுவிக் கொண்டாள். "உலகத்துக்கே பறை சாத்தணும்போல இருக்குது. வாய்ப் பூட்டுப் போட்டுட்டீங்க" என்றாள் நிஷ்டுரமாக.

நளினி உணர்ச்சியற்ற முகத்துடன் மரப்பாச்சியாக நின்றாள். அலமேலு திரும்பத் தன் வீட்டிற்குள் போனதும், பத்மினி நளினியை ஒரு தட்டுத் தட்டினாள். "நீ என்ன, சரியாக நடந்து கொள்ளப் போகிறாயா, இல்லையா? இப்ப என்ன குடிமுழுகிப் போய்விட்டது? உன் மூஞ்சியைப் பார்!" என்றாள் பத்மினி, கடுமையாக.

"இந்திரா காலனிச் சூழ்நிலையில் நீ சொல்லுகிற மாதிரி இருப்பது கடினம் இல்லையா, பத்மினி?" என்று பரிதாபமாகக் கேட்டாள் நளினி.

"அப்போ, நீ தீர்மானமாச் சுந்தரத்தை மறந்திடு. அந்தக் கண்ணியமான மனிதனுடைய வாழ்க்கையைச் சீர்குலைக்க உனக்கு உரிமை கிடையாது."

நளினி பெருமூச்சு விட்டாள். ஒரு முறை மாணிக்கத்தின் வீட்டைப் பார்த்து விட்டு, அதைப் பார்க்க விரும்பாதவள்போல முதுகை விருட்டென்று திருப்பிக்கொண்டு, பத்மினியுடன் தோழி மீனாட்சியின் வீட்டுக்குக் கிளம்பினாள். "நீ சொல்வது சரிதான், பத்மினி. ஏதோ ஒரு தீர்மானம் வேண்டுந்தான். முத்தாவது மாணிக்கமாவது! எனக்கு அலுத்தேவிட்டது. அவரை மறந்திட வேண்டியதுதான்" என்றாள்.

"இது உறுதிதானா?"

"உறுதி."

நளினியைக் கண்டதும் டிரைவர் ரத்தினம் அவளை நோக்கி விரைந்தான். "உங்களை அம்மா உடனே வரச் சொன்னாங்களாம். ஆள் வந்திருக்குது" என்றான்.

மீனாட்சியின் வீட்டில் நிற்காமல் இருவரும் உடனே காரில் கிளம்பி விட்டார்கள். அலமேலு வந்தபோது அங்கு அவர்கள் இல்லை. (தொடரும்)

Edited and Published by R. Narayanaswamy, for and on behalf of the Kalaimagal Office and Printed at M.L.J. Press Private Ltd., 55/56, Mundakanni Amman Koil Street, Madras-600 004, Managing Editor : K. V. Jagannathan



29. கடிதங்கள்

"நளினி, என்னை என் வீட்டில் இறக்கி விடு, என்ன? நரசிம்மன் கடிதம் போட்டிருப்பார். நான் சாயங்காலம் வருகிறேன். உன்னைப் பார்க்க" என்று கேட்டுக் கொண்டாள் பத்மினி.

அவளை விட்டு விட்டுத் தன் வீடு சென்று, வண்டியிலிருந்து அவசர அவசரமாக இறங்கிப் படியேறி, "அம்மா, எதற்கு என்னை அவசரமாகக் கூப்பிட்டு அனுப்பினாயாம்?" என்று குரல் கொடுத்தாள் நளினி.

"நளினி, என்ன அம்மா இது? எப்பப் பார்த்தாலும் அந்தக் காலனியிலே அப்படி என்ன இருக்கிறது? சந்துத் தெருவும் பொந்து வீடும்!" என்று கடிந்தாள் தாய்.

"எல்லோருமே உன்னைப் போல் சர்வ கலாசாலைப் பங்களாவிலே இருக்க முடியுமா, அம்மா? சின்னத் தெருவும் குட்டி வீட்டிலுந்தான் பெரும்பாலோர் இருப்பது."

"சரி சரி. ஒன்று சொன்னா ஒன்பது சொல்றே நீ! ஆண் பிள்ளை மாதிரி உடை உடுத்தி ஆண்பிள்ளை மாதிரி உன் அப்பா நடத்தினாரே, அதனாலே வந்த வினை இது! சரி, இனிமேல் அந்தக் காலனிக்குப் போகிறதையே நிறுத்திக்க வேண்டியதுதான். ஆமாம்."

"இதற்காகவா கூப்பிட்டு அனுப்பினே? எனக்கோ அங்கேயே குடியிருக்கணும் போலத் தோணுது; உனக்கு நான் போய் வருவதே பிடிக்கலை. இது எப்படிம்மா தீரப் போவுது?"

"பேச்சு ரொம்ப அதிகமாயிடுச்சு. நான் எதுக்கு ஆள் அனுப்பினேன் தெரியுமா? தபால்காரன் வந்தான். உனக்கு ரிஜிஸ்டர் தபால் வந்திருக்கிறதாம். நான் கையெழுத்துப் போட்டால் தரமாட்டானாம். இப்ப வருவான், மறுபடியும். நீதானே கையெழுத்துப் போடணும்?" நளினியின் தாய் தன் வேலைகளைக் கவனிக்க உள்ளே போய் விட்டாள்.

நளினிக்கு ஒன்றும் புரியவில்லை. தனக்கு யார் பதிவுத் தபால் கடிதம் அனுப்பப் போகிறார்கள்? சுந்தரம் வெளியூரில் இருந்தாலும் ஏதேனும் எதிர்பார்க்கலாம். 'அப்பாதான் எதையாவது என் பெயருக்கு அனுப்பும்படி எழுதியிருப்பார்' என்று அவள் அசட்டையாக இருந்தாள். ஒரு கதைப் புத்தகத்தைப் பிரித்துக் கொண்டு முன் ஹாலிலேயே அமர்ந்தாள்.

வீடே நிச்சப்தமாக இருந்தது. நளினியின் தாய் மீண்டும் முன்பக்க அறையில் வந்து எதையோ தைக்க ஆரம்பித்தாள்.

"அம்மா, அத்தான் எங்கே?" என்று கேட்டாள் நளினி, அப்போதுதான் நினைவுவந்தவளாக.

"அதை ஏன் கேட்கிறே, போ! கொஞ்சம் முன்னாடி கையிலே பையுடன் இறங்கி வந்தான். 'மாமி, அவசரமாக ஒரு வேலை, வெளியூர் போய்விட்டு வர வேணும். ரெண்டு நாளிலே வந்து விடுவேன். மாமாகிட்டே சொல்லுங்க' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான். காரை வரவழைக்கிறேன்னேன். அவன் காதிலே ஒண்ணுமே விழலை. மடமடன்னு இறங்கி வெளியே போயிட்டான்."

"ஏதாவது முக்கியமான வேலையாக இருக்கும்."

"ஆமாம். அப்படியெல்லாம் சொல்லாமல் போகிறவனே இல்லை அவன். என்ன அவசரம் இருக்கும் அவனுக்கு?" என்று அங்கலாய்த்தாள் நளினியின் தாய்.

மாணிக்கத்தை நினைத்துத்தான் அன்னை இப்படிப் பேசுகிறாளோ என்று நளினிக்கு ஒரு கணம் சந்தேகம் தோன்றியது.

ஆனால் தன் தாய் உண்மையாகவே கவலையுடன் சுந்தரத்தைப் பற்றியேதான் நினைக்கிறாள் என்று தெரிந்தது. ''அத்தானுக்கு இதிலெல்லாம் ஒரே ஜோர். திடீர்னு வந்து நிற்கிறது, திடீர்னு போகிறது.''

''திடுதிப்புனு வந்து நிப்பான். ஆனால் ஊருக்குப் போகும்போது போகவே மனசாகாது. பத்துத் தடவை சொல்லிட்டுத்தான் போவான்.''

''சரி அம்மா, போனபடி வரட்டும், போ.''

''நீ சுலபமா ஒதுக்கித் தள்ளிட்டே. எனக்கு மனசு அடிச்சுக்கிறது. உன் அத்தைக்குக் கடுதாசு போடட்டுமான்னேன். அதுவும் வேண்டாம், பின்னாடி பார்த்துக்கலாம்னுட்டான். என்ன அவசரம் இருக்குமோ?''

''வரட்டும் அம்மா. வந்தால் தெரியறது'' என்று சிடுசிடுத்தாள் நளினி.

''உனக்கு வர்ர கோவத்தைப் பாரு! எதுக்கெடுத்தாலும் சிடுசிடுப்புத்தான் வரவர. ஒழுங்காச் சாப்பிட்டு, பால் குடித்து, டென்னிஸ் ஆடி எல்லாம் செய்தால்தானே உடம்பு சரியாக இருக்கும்?''

நளினி மேலே கேட்டுக்கொள்ள இஷ்டப்படவில்லை போலும்! அவள் எழுந்து சோபாக்களைத் தட்டிச் சரிப்படுத்தினாள். மேஜைகளைத் துடைத்தாள்.

''பத்மினி எங்கே?'' என்று கேட்டாள் தாய்.

சூள் கொட்டினாள் நளினி. ''அவள் அவர்கள் வீட்டிலேயே இறங்கி விட்டாள், நரசிம்மன் கிட்டேயிருந்து கடுதாசு வருமாம்.''

''அடடா, அவள் வருவாள்னு நினைச்சேனே?''

''ஏன், எதற்காக அவள் இப்போ?''

''சுந்தரம் தான் போகிற அவசரத்திலும் திரும்பிவந்து ஐந்நூறு ரூபாய் கொடுத்திட்டுப் போனான். உன் இஷ்டப்படி மோதிரம் வாங்கிக்கச் சொன்னான். பத்மினி துணையிருந்தால் நீ போய் வாங்கி வரலாமே!''

''அப்படி என்ன அவசரம்? அத்தானே வந்து வாங்கட்டும். யாருக்கு வேணும் மோதிரமும் கீதிரமும்?''

''அவனே வந்து வாங்குவதுதான் சரி. நானும் ஒத்துக்கிறேன். ஆனால், நீ இப்படி அலட்சியமாகப் பேசக்கூடாது.''

''யார் என்ன அலட்சியம் செய்தாங்களாம்? அத்தான் உன்கிட்டே விவரம் சொல்லாமல் போனது உனக்குக் கோபம் வரது. அதை என்மேலே காட்டறே நீ?'' நளினி படபடவென்று பேசிவிட்டுப் 'பொத்'தென்று ஒரு சோபாவில் அமர்ந்து, தன் முகத்தைத் தன் கைத் தாங்கலில் வைத்துக் கொண்டாள்.

''உனக்கு என்ன வந்துவிட்டது? 'கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்திலே கை வைக்கக்கூடாது' என்பாங்க!''

''போ, அம்மா!''

''எழுந்து வா. பூ கட்டி வச்சிருக்கேன். தலையைப் பின்னிப் பூவைச் சூட்டிக்கோ. ஆராய்ச்சித் தோட்டத்திலே என்ன வேலை ஆச்சுன்னு போய்ப் பாரேன்'' என்று தாய் மிருதுவாகப் பேசினாள்.

''எனக்கு என்ன வேலை ஆராய்ச்சித் தோட்டத்திலே?''

''ஆராய்ச்சியையும் விட்டுட்டே சரி, பாட்டுப் பாடு. உன் பாட்டிலே அப்படி மெருகு ஏறி யிருக்கிறதுன்னு சுந்தரம் சொல்லிண்டே இருக்கான். உட்கார். அந்தக் காலனியிலே நீ கச்சேரி கூடச் செய்யப் போறியாமே? அதுக்கும் சாதகம் பண்ணின மாதிரி இருக்கும்'' என்று கெஞ்சினாள் தாய்.

''ஆகட்டும். அதுக்கு 'மூடு' வேணும். நான்..'' நளினி வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்திக்கொண்டாள். தபால்காரன் வருவது தெரிந்து எதிர்கொண்டு சென்றாள். கடிதத்தை நளினி கையெழுத்துப் போட்டு வாங்கினாள். ஒரு கடிதந்தான். அதை அப்படியே பிரிக்காமல் தகப்பனாரின் அலுவலக மேஜைமீது வைக்கப் போனாள். அகஸ்மாத்தாகக் கையெழுத்தைக் கவனித்தாள். ''மிஸ் நளினி'' என்று எழுதியிருந்த அந்தக் கையெழுத்து மாணிக்கத்தினுடையது. ''முத்து, உங்கள் பெயரினால் கையெழுத்து முத்துப்போல் ஆயிற்றா, கையெழுத்தினால் உங்கள் பெயர் முத்தாயிற்றா?'' என்று ஒரு நாள் தான் கேலி செய்தது அவள் நினைவுக்கு வந்தது. ''எங்க அம்மாவுக்கு என் கையெழுத்தைப் பற்றியோ என் தலையெழுத்தைப் பற்றியோ நான் பிறக்கும்போதே தெரிய நியாயமில்லையே?'' என்று கூறி, அவன் அழகாகச் சிரித்ததும் அவள் கண்ணெதிரே பளிச்சிட்டது.

''எனக்குக் கடிதம் எழுதியதே கிடையாதே! பக்கத்திலேயே இருந்தபோது சேர்ந்தாற்போல நாலு பேச்சுப் பேசியது கிடையாது. நானே இழுத்து வச்சுப் பேசணும். இப்ப என்ன கடுதாசு? அதுவும் நேரே என் பேருக்கே? ஹூம்! வேற்றிடத்தில் கல்யாணம் நிச்சயமாகணும்னு காத்துக் கிடந்த மாதிரி இருக்குது'' என்று முணுமுணுத்தபடியே அவள் கடிதத்தைப் பிரித்து நீவிவிட்டுப் படிக்க ஆரம்பித்தாள்.

''அன்பு மிக்க நளீ!

''இப்படி விளிக்க எனக்கு யாரும் உரிமை அளிக்கவில்லை. ஆயினும், 'நளினி' என்று அழைத்தால் எட்டப் போய்விட்ட மாதிரி ஒரு நினைப்பு.''

நளினியின் கண்களில் நீர் சுரந்தது. தன் புடைவைத் தலைப்பால் கண்களை ஒற்றிக்கொண்டு அவள் மேலே படிக்கலானாள்.

"இங்கே ஒரு பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டேன். அதற்காக என்னைச் சித்திரவதை செய்தாலும் பாவம் இல்லை.


"இரண்டு நாட்களுக்குமுன் என் குருநாதர் பெரிய ஆராய்ச்சி ஒன்று செய்ய விருந்தார். அதற்கான மூலிகைகளை ஆய்ந்து எடுத்து, கலவைகளை அரைத்துக் கொடுத்து உதவினேன். அவர் எந்தப் புது ஆராய்ச்சி செய்வதற்கு முன்பும் நிஷ்டையில் இருந்து தியானம் செய்துவிட்டுத்தான் ஆரம்பிப்பார்.

"அவர் தியானத்தில் அமர்வதற்கு முன் என்னிடம் விரிவாகக் கூறியிருந்தார். இரண்டு சட்டிகளில் கஷாயங்கள் காய்ந்தன. எதை மூடி அப்பால் வைக்கவேண்டும், எதை அவர் எதிரே திறந்து வைக்கவேண்டும் என்று சொல்லியிருந்தார். மிகக் கவனமாகத்தான் கேட்டுக் கொண்டேன். ஆனால், செயல்படும்போது தவறு நேர்ந்து விட்டது. என்ன கனவு கண்டேனோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

"பழனி மலைக்கு வந்தால் என்ன, குருதேவர் காலடியில் பழி கிடந்தால் தான் என்ன, முருகன் சந்நிதியில் தவம் இருந்தால் என்ன? என் மனச் சஞ்சலத்தை என்னால் வெல்ல முடியவில்லை. உங்களையெல்லாம் விட்டு ஓடிவிட முடிந்தது. ஆனால், என்னையே விட்டு நான் எங்கே ஓடமுடியும்?

"என்னவோ குருட்டு யோசனையில் குழம்பிக் கிடந்த நான் கஷாயச் சட்டிகளை மாற்றி வைத்துவிட்டேன். நான் கோவிலிலிருந்து திரும்பி வந்தபோது தூரத்திலிருந்து பார்த்தேன். குருநாதர் குடிசைக்குள் நுழைவது தெரிந்தது. நான் இறங்கிவந்து குடிசைக்குள் புகுந்தபோது நான் கண்ட காட்சி! என் குருதேவர் வலிப்பு வந்து கோரமாகக் கையும் காலும் இழுக்கக் கிடந்தார். அவர் கண் விழிகள் பிதுங்கின. என்னைக் கண்டதும், 'முத்து, கஷாயம் கஷாயம்' என்றார். அதற்குள் கட்டையாக நீட்டிவிட்டார். அவர் உதடு கருமை பாய்ந்தது. வெந்நீர் பட்ட கொப்புளம்போல ஒரு கொப்புளம் அவர் மூக்கின் மேல் உருவாகிவிட்டது. என் கைகால்கள் சில்லிட்டுவிட்டன. உடலெல்லாம் வெடவெடவென்று நடுங்கியது. கஷாயச் சட்டிகளைக் கவனித்தேன். நான் மாற்றி வைத்துவிட்டதை அப்போதுதான் உணர்ந்தேன்.

"கஷாயத்தைத் தாமே குடித்துப் பரிசோதிப்பார் என்று எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் இன்னும் கவனமாக இருந்திருப்பேனோ என்னவோ? என்ன செய்கிறோம் என்றே புரியவில்லை. தடதடவென்று மலைச்சாரலில் இறங்கித் தலைதெறிக்க ஓட ஆரம்பித்தேன். அடிவாரத்தை அடையும் சமயம் கோவில் கோபுரம் கண்ணில் பட்டது. "முருகா, முருகா!" என்று அலறிக்கொண்டே விரைந்தேன். குடிசைக் கதவைக்கூடச் சாத்தாமல் ஓடிவந்தது நினைவுக்கு வந்தது. நாயோ, பூனையோ உள்ளே போய் அவர் உடலை ஏதேனும்? என் மண்டை வெடித்தது. அப்போது யாரோ காவடி எடுப்பவர் தம் மகனைத் திட்டினார். அது என்னைத் தடுத்து நிறுத்தியது. 'ஏலே, திசை தெரியாமல் இப்படி ஓடிக்கிட்டே இருந்தா, என்னைக்கும் யாருடா உன் பின்னாடி வந்து வந்து பிடிக்க முடியும்? முட்டாப் பயலே!' என்று அவர் கடிந்தது என்னை மெய்சிலிர்க்க வைத்தது.



அமரர் ராமரத்தினம் நினைவுக் குறுநாவல் போட்டியில் முதல் பரிசு பெற்ற 'ஒன்றின் நிறம் இரண்டு' என்ற குறுநாவலை எழுதிய இளைஞர் **திரு இந்திரா சௌந்தரராஜன்.** துடிப்பும் பேச்சு வன்மையும் நிறைந்தவர். இதுவே இவர் எழுதிய முதல் குறுநாவல் என்று தெரிகிறது. கொங்கு நாட்டுப் பேச்சும் பழக்க வழக்கங்களும் இந்தக் குறுநாவலின் சிறப்பை உயர்த்தியிருக்கின்றன. இவர் இன்னும் பல சிறுகதைகளும் நாவல்களும் படைத்து எழுத்துத் துறையில் முன்னேற வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

"முருகனே அவர் வாய்மூலமாக என்னைத் தடுப்பதுபோல என்னைச் சுண்டி இழுத்தது. நான் என் நடத்தைக்கு வெட்கித் திரும்பி ஓடலானேன். குடிசைக்குப் போய்ச் செய்யக்கூடியது என்ன, செய்ய வேண்டியது என்ன? ஒன்றும் புரியவில்லை. போலீஸுக்குப் போய் என்னை ஒப்படைத்து விடலாமா என்று ஓர் எண்ணம் உதித்தது. ஒரு கொலைகாரன் மனம் எப்படித்தான் பாடுபடும் என்று நினைக்கிறாய்? நான் மீண்டும் மலை ஏறினேன். குடிசையைப் பார்த்துச் செவ்வனே சாத்திவிட்டு, முருகன் சந்நிதியில் மனமாறக் கதறிவிட்டு, போலீஸ் ஸ்டேஷன் போவதுதான் முறை என்று என் அந்தராத்மா கூறியது. குடிசைக் கதவை மூடிவிட்டுக் கிளம்பினேன்.

"என் குரு அப்படியே கிடப்பது என் நெஞ்சைக் கௌவியது. முருகன் சந்நிதியில் தர்மகர்த்தா உருவில் ஆண்டவன் காத்திருந்தான் என்பது எனக்கு எப்படித் தெரியும்? நான் எதையும் ஒளிக்காமல் அவரிடம் கூறிவிட்டுக் கதறினேன். எந்தத் தண்டனையையும் ஏற்கச் சித்தமாக இருப்பதையும் குறிப்பிட்டேன். அவர் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, என் முதுகைத் தடவி ஆசுவாசப்படுத்தினார். இருவரும் குடிசைக்குச் சென்றோம். அவர் சொல்லி வைத்தாற்போல ஒரு நீலச் சீசாவிலிருந்து ஒரு மருந்தை எடுத்துச் சில பொட்டுகளைக் குருநாதர் வாயில் மெதுவாகச் செலுத்தினார், ஒரு மூடி போட்ட மண் ஜாடியிலிருந்து ஒரு களிம்பை எடுத்து அவர் உடல் முழுவதும் தடவிவிட்டு, பச்சைத் தண்ணீரினால் துடைத்துவிட்டுக் கொண்டே அருகில் அமர்ந்திருந்தார். நாடியைப் பார்த்துக்கொண்டே இருந்தார். அரைமணி நேரத்துக்குப் பிறகு மெதுவாகக் கண்ணைத் திறந்தார் பெரியவர்.

"என் வாழ்க்கை முழுதும் என் மனக் கண்முன் விரிந்தது. ராமகிருஷ்ண மடத்து ஸ்வாமிகள் ஒருமுறை என்னிடம் சொன்னது ஞாபகம் வந்தது. 'டேய், மாணிக்கம், உனக்கு வாழ்க்கை சௌக்கியமாக அமைந்துவிட்டது. அதனால் தான் சிறியதையெல்லாம் பெரிதாக்கிக் கொண்டு நீ குழம்பித் தவிக்கிறாய். கொஞ்சம் கஷ்டம் அநுபவிக்கவேண்டும். அப்போதுதான் முதிர்ச்சி வரும்' என்றார். அந்த வாக்கியம் என் கண்முன் திரும்பத் திரும்ப வந்து நாடா நாடாவாக என்னைப் பிணைப்பதுபோல இருந்தது. குருவைக் கொன்ற கஷ்டத்தைவிட ஒருவனுக்குத் துயரம் வருமா? என் ஆத்மா கேவிக்கொண்டே இருந்தது. என் உடல் மட்டும் கற்சிலையாக நின்றது.

"இரண்டு மணி நேரம் அந்தக் குடிசையில் சாவுக்கும் வாழ்வுக்குமிடையே போராட்டம் நடந்தது. நானும் என் வாழ்க்கையைத் திருப்பிப் போட்டுப் பார்க்க முடிந்தது. எங்கே தவறு நடந்தது, ஏன் கோழையாக உருவாகிவிட்டேன் என்று எனக்குப் புரிந்தது. என் நுண்ணிய சுபாவம் என் தாயாருடையது. நான் பிறந்து வளர்ந்த சூழலில் நான் ஒன்றாமல் தவிக்கிறேன். என் தாயோ? முற்றும் புதுமையான சுற்றுப்புறத்தில் தன்னை மாற்றி இயக்கிக்கொண்டு சுகமாக வாழ்கிறாள். அவள் மனத்தில் ஒரு குறையுமில்லை; அவள் பேச்சில் ஏக்கம் இல்லை. என்ன காரணம்? ஆண்டவன் நியதியில் ஒரு நம்பிக்கை. முயற்சிதான் மனிதனுக்குச் சொந்தம், முடிவு கடவுளுடையது என்று தொன்றுதொட்டு ஊறிவிட்ட ஒரு சரணாகதி மனப்பான்மை. எனக்கு அந்த மனவுறுதியோ, அதற்குச் சகாயமான திட நம்பிக்கையோ இல்லை. எதிர்நீச்சல் போடத் திடமின்றி, முடிவை ஏற்கத் துணிவின்றி, நான் கண்ட உண்மைகளைப் பார்க்க அஞ்சி ஓடி ஓடி...

"அந்த நேரத்தில், நளீ, அந்தக் குடிசையில் ஓர் அற்புதம் நடந்தது. என் குருநாதர் உயிர் மீண்டார். புதுப்பிறவி பெற்றார் என்பது ஓர் அதிசயம் என்று சொல்ல முடியாது. அதற்கான சிகிச்சை தயாராக இருந்தது. ஆனால், மலைச்சாரலில் இறங்கி ஓடிய மாணிக்கம் அன்று அங்கு மடிந்தான். புது மாணிக்கம் உருவாகிவிட்டான். என்னைச் சுற்றி ஒரு குறுகிய கவசம் அழுத்தி வந்தது போலவும், அது கரைந்து மறைந்தது போலவும் ஒரு புத்துணர்ச்சி என்னை ஆட்கொண்டது. பஞ்சாகத் துவண்ட நான் இரும்புக் கம்பியாக விறைத்து நின்றேன்.

"பெரியவர் சகஜமாக எழுந்து அமர்ந்தார். ஒன்றுமே நடவாதது போலக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். நான் நெடுஞ்சாண்கிடையாக அவர் முன்னும் தர்மகர்த்தா முன்னும் விழுந்து வணங்கிவிட்டு, ஒதுக்குப்புறமாகக் கைகட்டி நின்றேன். 'டேய், முத்து, என்னடா செய்துட்டே?' என்று பெரியவர் கேட்டதும் என்னால் தாங்க முடியவில்லை. குனிந்த தலை நிமிராமல் மௌனமாகக் கதறினேன். 'வாடா, வாடா, உன் விஷயம் எனக்குத் தெரியாதா? என்றைக்காவது ஒரு நாள் தவறு செய்வாயோ என்று எதிர்பார்த்தேன். அப்படி ஒரு குழப்பம் உன்னிடம் இருக்கிறதே! தர்மகர்த்தா அவர்களிடம் சொல்லிவைத்தது நல்லதாகப் போய்விட்டது. என் இறப்பைப் பற்றி நான் பேசவில்லை. நீ அதோடு அழிந்து விட்டிருப்பாயே! அதுதான் என் கவலை' என்றார். என்ன பதில் நான் சொல்வேன்?

"தர்மகர்த்தா என்னுடனே இருந்தார். அர்த்தஜாமத்துக்குத்தான் கோவிலுக்குப் போனார். குருநாதர் வர இயலவில்லை. நான் மட்டும் மேலே போய் முருகனிடம் முறையிட்டுவிட்டு வந்து படுத்தேன். காலையில் எழுந்ததுமே உனக்கு எழுத உட்கார்ந்தேன்.

"என் மனச்சுமையை யாரிடம் இறக்கலாம் என்று தவித்தேன். சுந்தரத்தையும் உன்னையும் தவிர, என்னைப் புரிந்து கொள்ளக்கூடியவர் யாருமே இல்லை என்று தெரிந்தது. சுந்தரம் எங்கே இருக்கிறானோ? கொஞ்ச நாட்களாக அவனிடமிருந்து தகவலே இல்லை. அதனால் உனக்கு எழுதுகிறேன். உனக்குச் சௌகரியப்பட்டால் ஒரு கடிதம் பதிலுக்குப் போடு. மனசுக்கு ஆறுதலாக இருக்கும்.

உன் முத்து."

நளினி கடிதத்தைப் படித்துப் பார்த்தாள். அவள் நெஞ்சு விண்டுவிடும் போல இருந்தது. இப்படி ஒரு கடிதம் மாணிக்கத்திடமிருந்து வரும் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. அவனுக்கு நேர்ந்த சம்பவத்தைப் பற்றிப் படிக்கப் படிக்க அவள் உள்ளம் உளைந்தது. கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்தாள். காலந் தாழ்ந்து இப்படி ஒரு தொடர்பு தேவையா? அவள் மண்டை வெடித்து விடும்போல அடித்துக்கொண்டது. அலுவலக மேஜைமீது தலை வைத்துக் கண்களை இறுக மூடி உள்ளத்தைச் சமனப்படுத்த முயன்றாள் நளினி.

அவள் தயார் அங்கு வந்தாள். கவலையுடன், "என்ன நளினி, யார்கிட்டேயிருந்து கடுதாசு? நானும் அப்போ பிடிச்சுப் பார்க்கிறேன். ராமாயணமா இருக்கிறதே! நீ வேதனைப் படும்படி என்ன இருக்கிறது அதிலே? உங்க அப்பா வேலையிலே ஏதாவது தொல்லையா?" என்று அடுக்கு அடுக்காகக் கேள்விகள் கேட்டாள்.

"இல்லை அம்மா. இது அப்பாவுக்குச் சம்பந்தமேயில்லை. என் சிநேகிதர் எழுதிய காகிதம்" என்று கூறி மடமட வென்று மடித்து உறையில் போட்டுவிட்டாள் மகள்.

"அப்படி என்னடீ கஷ்டம்?"

"அவரவர்களுக்கும் பிரச்னைகள். இது பிரச்னை யுகம், தெரியுமா?" என்று தாய்க்குப் பாதி வேடிக்கையாகப் பதிலளித்துவிட்டு நளினி மாடியேறிப் போய்விட்டாள்.

அவள் வெகு நேரம் யோசித்துக் கொண்டே படுக்கையில் படுத்திருந்தாள். 'சுந்தரந்தான் மாணிக்கத்துக்குத் தக்கபடி அறிவுரை கூற முடியும், அவரை ஆசுவாசப்படுத்த முடியும். ஆனால், சுந்தரம் போன இடம் தெரியவில்லையே! இவர் ஒரு நல்ல மனிதர்! என்னிடமாவது சொல்ல வேண்டாமா? மோதிரம் வாங்கக் கடைக்குப் போக வேண்டுமென்று கூறியிருந்தார், அதற்குள் எதை நினைத்துக் கொண்டு எங்கே போனார்?'

நளினி எழுந்து, அறையிலேயே குறுக்கேயும் நெடுக்கேயும் நடை பயின்றாள். சுந்தரத்தின் அறைக்குள் சென்று நோக்கினாள். அங்கே தனக்கு ஏதாவது சீட்டு எழுதி வைத்திருப்பாரோ என்று பீரோவைத் திறந்தாள். சுந்தரத்தின் துணிமணிகள் ஒரு தட்டில் இருந்தன. மேல் தட்டில் அட்டைப் பெட்டியில் மாணிக்கத்தின் உடுப்பு ஒன்றும் ஒரு வேஷ்டியும் இருந்தன.

நளினியின் மனம் குழம்பியது. "இணை கோடுகள் மாதிரி, இரண்டு பேர் நினைவும் நெருங்கி, இணையாமல் இணைந்து வந்து தொல்லை கொடுக்க வேண்டுமா?" என்று பரிதாபமாக அவள் வாய்விட்டு அரற்றினாள்.

எவ்வளவு தேடியும் ஒன்றும் கிடைக்கவில்லை. அவள் மறுபடியும், தன் அறைக்கே வந்து மாணிக்கத்துக்குக் கடிதம் எழுதலானாள்.

தந்தையிடம் யோசனைக்குப் போகலாமா என்று அவள் ஒரு கணம் நினைத்தாள். அவருக்கு வகுப்பு வேலைகளே சரியாக இருந்தன. தவிர, மற்றச் சமயத்தில் ஆராய்ச்சிக் கூடத்திலும் பொழுது சரியாக இருந்தது. ஆகவே, அவரிடம் எதையும் சொல்ல அவள் இஷ்டப்படவில்லை. தானே கடிதம் எழுதலானாள்.

"முத்து,

"நான் இப்படி உங்களை அழைக்க நட்புரிமை இருக்கிறது என்று நினைக்கிறேன். உங்களுக்கு நானே எழுத வேண்டிய காலமும் வந்திருக்கிறது. சுந்தரத்தை நான் மணப்பது என்று பெரியோர்களால் நிச்சயிக்கப் பேற்றிருக்கிறது என்ற செய்தி உங்களுக்குத் தெரிய நியாயமில்லை. உங்கள் தாயார் கூட உங்களுக்குக் கடிதம் எழுத நீங்கள் வசதி செய்யவில்லை என்பதை நான் அறிவேன். கல்யாண விஷயமாக நான் ஒன்றும் விவரிக்கப் போவதில்லை. உங்களுக்குத் தெரியாததோ, புரியாத புதிரோ ஏதுமில்லை. அதனால் நான் விளக்கத் தேவையில்லை. ஆனால், நீங்கள் உங்கள் மனசோடு மகிழ்ச்சி யடைவீர்கள் என்பதை நன்கு அறிவேன்.

"சுந்தரம் இங்கேதான் இருந்தார். திடீரென்று எங்கோ வெளியூர் போனாராம். பத்மினியும் நானும் இந்திரா காலனிக்குப் போய்விட்டு வருவதற்குள் அவருக்கு என்ன அவசர ஜோலியோ தெரியவில்லை. நான் வீட்டில் இருந்திருந்தால் சொல்லியிருப்பார். அவரே

திரும்பி வந்த பிறகுதான் விவரம் தெரியும். ஏதாவது வேடிக்கை, ஸர்ப்ரைஸ் என்று ஓடியிருப்பார். அவர் வரும்போது வரட்டும்.

''உங்கள் கடிதத்தைப் படித்தேன். அதலபாதாளத்தின் விளிம்பில் நின்று பார்த்துவிட்டு வந்தமாதிரி இருக்கிறது. பள்ளத்தில் விழுந்து நொறுங்காமல் எங்கள் முத்து முழுமையாகத் தப்பிவிட்டதை நினைத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன் நான் தங்களுக்கு ஆறுதல் கூறவோ, தைரியம் ஊட்டவோ இடமில்லை. முருகப் பெருமானே உங்களை உளி கொண்டு செதுக்கி நல்ல விக்கிரகமாக ஆக்கிவிட்டான் போலும்!

''இப்படி ஒரு நெருக்கடி வந்ததும் நீங்கள் என்னை நினைவுகூர்ந்து, என்னிடம் மனம் விட்டுக் கூறிப் பகிர்ந்து கொண்டதை நினைக்க நினைக்க எனக்குப் பெருமையாக இருக்கிறது.

''உங்களுக்குத்தான் எத்தகைய பாக்கியம்! இப்படிப்பட்ட குருநாதர் கிடைத்தது அந்தப் பழனியாண்டவன் கருணையே. எல்லாவற்றுக்கும் மேலாகத் தர்மகர்த்தாவின் நட்பைச் சொல்லுங்கள். அன்று நீங்கள் செய்துவிட்ட தவற்றுக்கு வேறு யாராவது இருந்தால் என்ன என்னவோ ஆகி விட்டிருக்கலாமே! நினைத்துப் பார்க்கையில் குடல் நடுங்குகிறது. எப்படியோ தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்று.

''சுந்தரம் திரும்பி வந்ததும் உங்களுக்குக் கடிதம் எழுதச் சொல்கிறேன். நீங்களும் இரண்டு நாட்கள் கழித்து மறுபடியும் எழுதுங்கள். இல்லையேல் எனக்குக் கவலையாக இருக்கும். காய்ச்சலைவிட அதற்குப் பிறகு தோன்றும் பலவீனந்தான் அதிகப் பயங்கரம். இந்தக் கோர சம்பவத்தை நினைத்து நீங்கள் என்ன தவிக்கிறீர்களோ?

''பத்மினி இங்கேதான் இருக்கிருள். உங்களிடமிருந்து மறுபடியும் கடிதம் வரும்வரை அவளிடம்கூடச் சொல்லப் போவதில்லை.

உங்கள்,
நளீ.''

'நளீ' என்பதை 'நளினி' என்று திருத்திவிடலாமா என்று அவள் ஒரு கணம் யோசித்தாள். பிறகு 'அப்படியே இருக்கட்டும்' என்று விட்டுவிட்டாள். 'உங்கள்' என்று எழுதலாமா? வேறு எப்படி எழுதுவது? 'அதுவும் இருக்கட்டும்' என்று விட்டுவிட்டாள்.

கடிதத்தை மடித்து உறையிலிட்டு, அவள் முகவரி எழுதி முடித்தாள். இந்தக் கடிதத்தை மட்டும் யாரிடமும் தரக்கூடாது, தானே தபாலில் சேர்க்க வேண்டும் என்று தீர்மானித்தாள்.

நினைக்க நினைக்க அவளுக்கு மிகவும் விந்தையாக இருந்தது. இந்தமாதிரி ஒரு நெருக்கடி இந்திரா காலனி மாணிக்கத்துக்கு வரும் என்பதும், அவர் முதல் முதலில் தன்னைத்தான் நாடி ஆறுதல் கேட்பார் என்பதும் அவளுக்குப் புதுமையிலும் புதுமையாக இருந்தன.

மாணிக்கம் அநுபவித்த வேதனை அனைத்தையும் அவளும் அநுபவித்தாள் போலும்! சோபாவில் அமர்ந்து அவள் கூரையைப் பார்த்தாள். ஆனால் அவள் முகம் போன போக்கைக் கூர்ந்து கவனித்த அவள் தாய், ''என்னடி அந்தக் கடுதாசுலே? யார் அவள் உன் சிநேகிதி? அப்படி என்ன குடிமுழுகிப் போச்சாம்? அந்த மகாபாரதக் கடுதாசு வந்தாலும் வந்தது, உன்னை ஆளையே மாத்திட்டுதே? அப்படி என்ன பிரச்னை? ஏதோ இருக்கட்டுமே! ஊரார் பிரச்னைகளையும் கவலைகளையும் நம் தோளிலே ஏற்றிக் கொண்டு திரிய முடியுமா, என்ன?'' என்றாள்.

''சரி, அம்மா, இப்ப நான் என்ன செஞ்சேன்னு நீ தொணதொணக்கிறே?''

''இந்த மாதிரி சிடுசிடுப்பும், கடுகடுப்பும் உனக்கு ஆகாது, நளினி. அவ்வளவுதான் சொல்வேன்.''

நளினி பதில் ஏதும் சொல்லாமல் தான் எழுதிய கடிதத்தைத் தபாலில் சேர்க்கக் கிளம்பினாள்.

''எங்கே மறுபடியும் கிளம்பறே?'' என்று வினவினாள் தாய்.

''தபாலைப் பெட்டியிலே போட்டுட்டு வரேன்'' என்றாள் நளினி.

''இவ்வளவு பெரிய வீடே தேவையில்லை; உங்கப்பா தோட்டத்திலும் கல்லூரியிலும் கிடக்கிறார். நீயோ வீட்டிலேயே தங்கறதில்லை. எனக்கும் அந்த இந்திரா காலனியிலே ஒரு பொந்து பார்த்திடு'' என்றாள் தாய், கோபமாக.

''அப்படி இருந்தூட்டா, பிரச்னையே இல்லை, அம்மா!'' என்றாள் நளினி, விரக்தியாக.

''என்ன பிரச்னையோ? எதுக்கு எடுத்தாலும் இது ஒரு பேச்சு. அதுக்கு அர்த்தம்கூடத் தெரியுமோ உனக்கு?''

நளினி விரைவாக ஓடிச் சென்றுவிட்டாள். தாய் சூள்கொட்டி விட்டு உள்ளே போனாள்.

நளினிக்கு அந்த வேகமான நடை மிகவும் தேவையாக இருந்தது. இனம் புரியாத ஒரு வேதனை அவள் மார்புக் கூட்டை நிறைத்துக்கொண்டு உப்பி உப்பி வெடிக்கப் பார்த்தது.

வேர்வையில் நனைந்து, மேல்மூச்சு வாங்க அவள் திரும்பிக் கொண்டிருந்த போது, ''வணக்கம், மிஸ் நளினி'' என்ற குரல் கேட்டு அவள் நின்றாள்.

சாரங்கன் என்பவர் எதிரே நிற்பது தெரிந்தது. பதில் வணக்கம் தெரிவித்து விட்டு அவள் தயங்கினாள்.

"நான் சாரங்கன்."

"நினைவிருக்கிறது. நீங்கள் மாணிக்கத்தினுடைய நண்பர். முன்பு ராமகிருஷ்ண மடத்தில் அவர் இருந்ததை.."

"வெளிப்படுத்தினவன். அப்படித் தானே?" அவன் கலகலவென்று சிரித்தான். "மாணிக்கம் எனக்கு மிகவும் பிடித்த நண்பன். என்ன படிப்பு, என்ன உழைப்பு, அடேயப்பா! பையன் வாயைத் திறந்து நாலு பேச்சுப் பேச மாட்டானே தவிர.."

"ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு குணம்" என்றாள் நளினி.

"அது சரி. அவன் எங்கே இருக்கிறான்னு தெரியுமா? உங்கள் தோழி பத்மினியைக் கூடப் பார்த்துக் கேட்டேன்."

"பழனியிலே மூலிகை ஆராய்ச்சி செய்யறார்."

"அடேடே, தெரியாமல் போச்சே! நான் போன வாரம் அந்தப் பக்கம் போய்விட்டு வந்தேன். பழனிக் கல்லூரியிலே இப்படி ஓர் ஆராய்ச்சி நடக்கிறதா?"

"கல்லூரியிலே இல்லை. சொந்தமாகச் செய்யறாரு."

"எங்கே?"

தான் சொன்ன விவரமே அதிகம் என்று அவளுக்குத் தோன்றிவிட்டது. அதனால் அவள் பேச்சை வேறு திக்கில்



திருப்பிவிட்டாள். ''ராமகிருஷ்ண மடத்துக்குப் போய் வருகிறீர்களா? ஏதாவது பாடம் கேட்கிறீர்களோ?'' என்று கேட்டாள்.

''மடத்துக்குப் போகாமலும் சுவாமிஜியைப் பார்க்காமலும் என்னால் இருக்கவே முடியாது. முன்னெல்லாம் மாணிக்கமும் வருவான். இப்பக் கொஞ்ச நாளாக அவன் என் கண்ணிலே படவேயில்லை. கொஞ்சம் முன்னாடி தான் மதனகோபாலன்னு ஒருத்தனைப் பார்த்தேன். டிராமா போடுவானே!'' என்றான் சாரங்கன்.

''ஆமாம். அவரை எங்கே பார்த்தீங்களாம்?'' என்று ஆவலுடன் கேட்டாள் நளினி.

''இப்பத்தான், அஞ்சு நிமிஷம் முன்னாடி, போலீஸ் ஸ்டேஷன் பக்கமா நடந்து போனேன். அவனும் அங்கே அந்தப் பக்கம் வந்தான் போலும்.''

''ஊம்!''

''அவனுக்கு நிறையச் சகாக்கள். எல்லாம் பொறுக்கிப் பசங்க. என்னவோ தகராறிலே மாட்டி விட்டுட்டாங்களாம். இவன்மேலே தப்பில்லைன்னு விசாரணையிலே தெரிஞ்சு, விடுவிச்சாங்களாம். அவன் ரொம்ப நல்ல பையன். இப்பெல்லாம் ஒரு தகராறுக்கும் போகிறதில்லை.''

''தப்பில்லைன்னு சொல்லி விட்டுட்டாங்களா?'' என்று ஆவலுடன் கேட்டாள் நளினி.

சாரங்கன் ஒரு விநாடி அவளை உற்றுப் பார்த்தான். 'உங்களுக்கு அவனை எப்படித் தெரியும்?'' என்று கேட்டான்.

''மாணிக்கத்துக்குச் சொந்தக்காரர் தான் அந்த மனுஷர். நாங்கள் ஒரு சமயம் நாடகம் போட்டிருக்கோம். அவருடைய குழுவும் அப்போது போட்டாங்க.''

''ஆமாம். நான் மறந்திட்டேனே! நீங்களும் மாணிக்கமும் கூடச் சிங்கன்-சிங்கி பாட்டுப் பாடினீர்களே!''

''நல்லா ஞாபகம் வச்சிருக்கீங்க.''

''உங்கள் ரெண்டு பேர் பாட்டும் கேட்ட பிறகு அதை மறக்கவே முடியாது. உண்மையிலே உங்களைப் பாட்டு விஷயமாக் கேட்கணும்னுதான் நான் இப்போ உங்களைத் தேடி வந்தேன்'' என்றான் சாரங்கன்.

''என்ன?''

''மடத்திலே குரு பூர்ணிமாவுக்கு நீங்கள் வந்து பஜனை கீதம் பாட முடியுமான்னு கேட்கச் சொன்னார் சுவாமிஜி. நாங்க ஒரு சின்ன கிளப் நடத்தறோம். அதிலேயும் ஒருநாள் நீங்க பாட முடியுமான்னு..''

''எனக்குப் பொதுமேடைகளில் பாடிப் பழக்கமே யில்லை. அதிலே உற்சாகமும் இல்லை'' என்றாள் நளினி.

''சரி, எங்கள் சங்கத்தைப் பற்றிப் பிறகு பார்த்துக்குவம். மடத்திலே பக்தி கீதம் பாட,..''

''ஆகட்டும்.''

நடந்து கொண்டே அவர்கள் நளினி வீட்டு வாசல்வரை வந்து விட்டனர். ''உள்ளே வாருங்களேன். காபி சாப்பிட்டு விட்டுப் போகலாம்'' என்றாள் நளினி.

''சரி, காபி வேண்டாம் என்று யார் சொல்லுவார்கள்?''

சாரங்கனை முன் ஹாலில் இருக்கச் செய்துவிட்டு உள்ளே சென்றாள் நளினி. இரண்டு கோப்பைகளில் ஆவி பறக்கும் காபியை ஏந்தி வந்து சாரங்கனிடம் ஒன்றைத் தந்துவிட்டு, மற்றதைத் தான் வைத்துக் கொண்டு எதிரே அமர்ந்தாள்.

''ஏ ஒன் காபி?'' என்றான் சாரங்கன், ரசனையுடன்.

''எங்கள் அம்மாவுக்குத்தான் சேரும் அந்தப் பாராட்டு. எனக்கு அப்படி வராது.''

''உங்களுக்குக் காபி ராகம் நன்றாக வரும். அது மற்றவர்களுக்கு வராதே?''

நளினி சிரித்தாள். அப்பொழுது அங்கு வந்த நளினியின் தாயார் மகளுடைய சிரித்த முகத்தைப் பார்த்து மனம் தெளிந்தாள்.

''அம்மா, இவர்தாம் சாரங்கன். எங்களுக்கெல்லாம் சிநேகிதர்'' என்று அறிமுகப்படுத்தினாள் நளினி.

''இன்னிக்கு உனக்குக் கடுதாசு எழுதின பொண்ணுக்குக் கூட இவரைத் தெரியுமோ?'' என்று கேட்டாள் தாய்.

''இவர் என்னோடு படிக்கலை. தெரியும், அவ்வளவுதான்.''

''நான் மாணிக்கத்தின் சிநேகிதன்'' என்றான் சாரங்கன்.

''மாணிக்கம் தெரியுமா? அவன் ரொம்பப் புத்திசாலி. ஆனால் ரொம்பக் கோழை. எங்கேயோ கண்மறைவாக ஓடிட்டான்.''

சாரங்கன் தன் முகத்தைக் கேள்விக் குறியாக வைத்துக்கொண்டு நளினியைப் பார்த்தான். நளினி கபடமற்ற சிரிப்பு ஒன்றைச் சிரித்து மழுப்பினாள்.

''எங்கள் வீட்டுப் பிள்ளை மாதிரி அவன். உங்களைப் பார்த்தது மாணிக்கத்தைப் பார்த்த மாதிரி இருக்குது'' என்றாள் ஆசிரியரின் மனைவி.

சாரங்கன் சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டான்.

அப்பொழுது பத்மினி அங்கு வந்தாள். சாரங்கனைப் பார்த்து, ''ஹாய், சாரங்கன்!

எங்கே திடீர்னு?'' என்று கேட்டாள்.

''மிஸ் நளினியைப் பார்க்கணும்னு வந்தேன். கச்சேரி செய்யணும். மேடையிலே பாடமுடியாதாம்.''

''சும்மா. எங்கள் சங்கத்து மருத்துவமனைத் திறப்புவிழாவுக்கு அவள்தான் கச்சேரி. மந்திரிக்கு முன்னடி பாடப் போரு, பிகு பண்ணிக்கிருள், அவ்வளவுதான்'' என்ருள் பத்மினி.

''ஆமாம், நீ கண்டாய்!'' என்ருள் நளினி.

''நளினி, உன்னை எதுக்கு உங்க அம்மா அவசரமாக் கூப்பிட்டு அனுப்பினுங்க?'' என்று கேட்டாள் பத்மினி.

''ரிஜிஸ்டர் தபால் வந்தது, பத்மினி. அந்தக் கடுதாசியைப் படிச்சிட்டு இடிஞ்சு போயிட்டா'' என்று விவரித்தாள் தாய், இடைமறித்து.

நளினி பத்மினியைப் பார்க்க விரும்பாதவள் போலத் தலை கவிழ்ந்தாள்.

இருவரையும் மாறி மாறிப் பார்த்தான் சாரங்கன்.

30. திறப்பு விழா

திறப்பு விழாக் கொட்டகையில் ஜனத்திரள் நிரம்பி வழிந்தது. மருத்துவமனை என்பதற்கு அடையாளமாக முன் அறையில் மட்டும் ஒரு கட்டில், ஒரு மேஜை, ஒரு மறைப்பு எல்லாம் போடப்பட்டிருந்தன. வெள்ளை வெளேரென்ற விரிப்புகளுடன் அறை பளிச்சிட்டது. மற்ற அறைகளில் மீனாட்சியின் சங்கத்துப் பெண்களின் கைவேலைகளின் கண்காட்சி அமைத்திருந்தார்கள்.

மீனாட்சி நிறைய நண்பர்களை அழைத்திருந்தாள். சிலர் நளினிக்குத் தெரிந்தவர்களாகவும் இருந்தனர். பலர் நகரத்தின் கோடியிலிருந்து வந்து குழுமியிருந்தனர்.

''சரியான இடத்தில்தான் மீனா குடியிருக்கா!'' என்று மீனாட்சியின் தோழி ஓர் அம்மாள் கூறினாள்.

நளினி அந்தப் பேச்சைக் கேட்டதும் சிரித்துக்கொண்டாள். ''வியாபாரிகள் மத்தியில் குடியிருந்து நல்ல வியாபாரியாகத்தான் மாறிட்டா'' என்ருள்.

''மீனா என்னோடு படிச்சவ. அதனாலே சலுகையாகச் சொல்லிட்டேன்'' என்று அந்த அம்மாள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

''அவள் எம். ஏ. படிச்சபோது நானும் அந்தக் கல்லூரியிலே பி. யூ. சி. படிச்சேன்.'' என்ருள் நளினி.

''நானும் எம். ஏ. தான். அப்போதெல்லாம் அவள் ரொம்பவும் நாஸூக்காக இருப்பா. இப்ப என்னடான்னு, எங்கே எங்கேயோ இருக்கிற அழுக்குப் பிடிச்ச பேட்டைகளிலெல்லாம் நுழைஞ்சு புறப்படரு. என்னலே நம்பவே முடியவில்லே.''

''டாக்டருக்குச் சமூக சேவையிலே அபார ஈடுபாடு. ஆகவே, மீனவும் அதையே பிடிச்சிக்கிட்டா. இப்ப, இவளுக்காக அவர் வர மாதிரி தெரியறது'' என்று விளக்கினள் நளினி.

''அதெப்படி முடியும்? ஒருத்தருக்காக ஒருத்தர் சுபாவத்தையே மாற்றிக்கொள்ள முடியுமா என்ன?'' என்று கேட்டுவிட்டு அந்த அம்மாள் நளினியை ஒரு தினுசாய்ப் பார்த்தாள். 'விவரம் புரியாமல் மூளை கெட்டுப் பேசுகிருள்?' என்ற மாதிரி இருந்தது அந்த நோக்கு.

நளினி தனக்குள் சிரித்துக் கொண்டாள்: 'உண்மையான அன்பு ஓரிடத்தில் இருக்குமானல் அதற்காக அடிப்படைக் கொள்கைகளைக்கூட ஒருவன் மாற்றிக்கொள்ள முடியாதோ? தனபாக்கியத்தம்மாவை இவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள். ஏன், மாணிக்கத்துக்காக நானே எவ்வளவு மாறத் தயாராக இருக்கிறேன்? பத்மினி எவ்வளவு மாறிவிட்டாள்! சுந்தரத்துக்காக இப்ப நம்மை மாற்றிக் கொண்டுதானே ஆகவேண்டும்?'

சுந்தரத்தைப் பற்றி நினைவு வந்ததும் அவள் மனம் சஞ்சலப்பட்டது. 'இனி மாணிக்கத்தைப்பற்றி எந்த நேரமும் நினைக்கக்கூடாது. சுந்தரத்துடன் வாழும்போது இந்த ஏமாற்றத்தின் சாயைகூட வெளியே தெரியக்கூடாது. அதற்கு எப்படிச் செயல்படுவது? இந்திரா காலனிப் பக்கமே தலை வைத்துப் படுக்காமல் இருப்பது நலமா? அல்லது, அடிக்கடி வந்து, மனசைக் கழுவி எடுப்பது நலமா?' என்று எண்ணி அவள் குழம்பிக் குழம்பித் தவித்தாள். அவள் பிறந்து வளர்ந்த இந்தச் சூழலில் அவளுக்கு இப்போது திடீரென்று ஒன்றவேயில்லை. இந்த விழாக் கூட்டத்து மத்தியிலும் ஒட்டாமல் அவள் தனியாக மிதந்து நடந்தாள்.

அலமேலு பரபரப்புடன் வந்தாள். ''நளினி அக்கா, திறப்புவிழாக் கத்தரிக்கோல் உங்க கிட்டத்தான் இருக்குதாமே? நீங்க என்ன, சந்நியாசி மூதிரி மூஞ்சியை வச்சுக்கிட்டுச் சுத்தி வர்றீங்க? ஒண்ணு, வந்தவங்களை வரவேற்று உட்கார வைக்கணும். இல்லாட்டி, உள்ளே வந்து பாத்துக்கணும். பத்மினி வெளியே நுழைவாயிலிலே நிக்கருங்க. நீங்க இங்கே இருந்து எல்லாரையும் ஒழுங்கா உட்கார வையுங்க. எல்லாரும் சந்தைக் கடையிலே சுத்தற மாதிரி சுத்திவருங்க'' என்ருள்.

''அடேயப்பா! உன்னை ஒரு ராட்சசியாக உருவாக்கிட்டா மீனா!'' என்ருள் நளினி.

"இருக்கட்டும். எல்லாருமே பசுமாடு மாதிரி அடக்கமாகத் திரிஞ்சா என்ன வேலை நடக்கும்? போங்க! மந்திரி வரும் போது ஒரு மூச்சுக்கூட உரக்க வரக் கூடாதாம். மீனாக்கா உத்தரவு" என்று சொல்லிவிட்டு, கத்தரிக்கோலை வாங்கிக்கொண்டு விரைந்தாள் அலமேலு.

நளினியும் தன் பொறுப்பை நிறை வேற்ற ஆயத்தமானாள். அவள் மனம் மட்டும் சிந்தனையைத் தொடர்ந்தது.

'அலமேலுவுக்கு மட்டும் ஏமாற்ற மில்லையா? அவள் அதையே நினைத்துக் கொண்டு அழுதுகொண்டா இருக்கிறாள்? மதனகோபாலனை அவள் மணப்பதாக இருந்தபோதும் அவன் ஒரு கண்ணிய மான புருஷனாக இருந்துவிடவில்லை. அவன் அவளிடம் சரியாகக்கூட நடந்து கொள்ளவில்லை. அவளை நிர்த்தாட் சண்யமாக மறுத்தான். பிறகு இப் பொழுது என்னவோ அலமேலு சொல் வதைப் பார்த்தால், மதனகோபாலன் திருந்தி, அவளை மணக்க முன் வந்த தாகவும், இவள் மறுத்து விட்டதாகவும் தெரிகிறது. என்ன நெஞ்சழுத்தம் இவளுக்கு? எப்படியோ, தன் வாழ்க்கை யைத் தன் இஷ்டப்படி அமைத்துக் கொள்ளவும், அதன்படி நிர்ணயமாக நடத்திக் காட்டவும் உறுதி இருக்கிறது அலமேலுவுக்கு. இந்திரா காலனியில் இப்படிப் புரட்சி செய்கிறாள் இந்தப் பெண். அவள் அண்ணன் என்னவோ குழம்பித் தவித்து அழிந்து போகிறார். அவரைச் சொல்லுவானேன்? எனக்கே தான் என்ன மனவுறுதி இருக்கிறது? இந்த மாணிக்கத்தை மணந்து கொண் டால் இரண்டு பேருமே கோழைகளாக இருப்போம். நல்ல தாம்பத்தியம்! சுந்தரத்தோடு இணைந்து கொள்வதுதான் புத்திசாலித்தனம்!' என்று யோசித்து நளினி தெளிவு பெற்றாள்.

இந்தச் சிந்தனைக்குப் பிறகு அவளுக்கு மனம் தடுமாறவில்லை. வந்த விருந்தி னர்களை உற்சாகமாக வரவேற்று அவள் அமரவைத்தாள். அதன் பிறகு அவளுக்கு வேலை சரியாக இருந்தது.

மந்திரி வந்தபோது அவரை வர வேற்று, நடனம் செய்யும் பெண்களுக்கு ஆடைகளை ஒழுங்கு செய்து, அறிவுரை தந்து, சங்கத்து மற்ற முக்கியப் பெண் களை வரிசையாக நிறுத்தி.....நிமிரவோ யோசிக்கவோ நேரமேயில்லை அவளுக்கு.

கூட்டம் அமைதியாக அமர்ந்திருக்கை யில் மந்திரி வந்தார். வரவேற்பு முறைப்படி நடந்தது. மீனாட்சியும் டாக்டரும் முன்னணியில் நின்று வர வேற்க, அலமேலு பின்னணியில் நிழல் போல் இருந்துகொண்டு வெகு நேர்த்தி யாக இயக்கிவந்தாள். அவளைக் காணவே நளினிக்குப் பெருமையாக இருந்தது.

நளினி அலமேலுவைத் தேடிச் சென்றாள். "அலமேலு, இந்த இந்திரா காலனியின் முக்கியமான பிரமுகராக நீ வந்து அமரவேண்டியவ, இப்படித் தலைகூட வெளியே தெரியாமல் ஒதுங்கி நின்று வேலை செய்யறயே? உனக்குக் கொஞ்சங்கூட வருத்தமோ ஏமாத்தமோ தோணலையா?" என்று மெதுவாகக் கேட்டாள்.

"வருத்தம், ஏமாத்தம் எல்லாம் எப்ப அக்கா, தோணும்? வேறு யாரோ நம்மை என்னவோ செய்துவிட்டதாக நினைக் கச்சேதானே? நானாக ஏத்துக்கொண்ட பதவியிலே நான் நிம்மதியா இருக்கேன். உங்களுக்கேன் சந்தேகம்?" என்று திருப்பிக் கேட்டாள் அலமேலு.

அவள் பேச்சு நளினியைச் சிந்திக்க வைத்தது. 'அப்படிக்கூடச் சுலபமாக இருக்க முடியுமா?'

"நளினிக்கா, மீனாக்கா கூப்படறாங்க" என்று யாரோ அழைத்துக் கொண்டே வரவும், நளினி உள்ளே சென்றாள். போகும்போது முன் வரிசைகளில் மண வாளச் செட்டி, பங்காரு, கந்தசாமி செட்டி, தனபாக்கியம், டாக்டர் யாவரும் அமர்ந்திருப்பதைக் கவனித்துக் கொண்டே சென்றாள். 'அந்த டாக்டர் பக்கத்திலே ராஜா மாதிரி அமரவேண் டிய மாணிக்கமோ?.....மதனகோபால னையும் காணோம். அந்த மனுஷன் ஆடம்பரமாக, ஸென்ட்டும் ஸில்குமாக குறுக்கேயும் நெடுக்கேயும் நடமாடும் நாட்களே போய்விட்டனவே! கோயிலே கதியாகக் கிடக்கிறாராமே! ஆமாம், போலீஸ் ஸ்டேஷனையும் கச்சேரியையும் மிதித்துவிட்டு வந்தவன்னு உள்ளூற ஒரு தாழ்வு மனப்பான்மை வந்திருக்கும். வெளியே தலைகாட்டத் தைரியமில்லை போலும்! நம்மைச் சேர்ந்த இளைஞர்னு ஒருத்தர்கூட இல்லை. நரசிம்மன் வந்தா லும் பத்மினியை நடமாட விடமாட்டார். சுந்தரம் வரக்கூடாதா? இந்தக் கச்சேரிக்குப் பாட்டுப் பொறுக்கிக் கொடுத்தாரே! அவருக்காக அவரைப் பார்த்துக்கொண்டே ராக விஸ்தாரத் தோடு பாடுவேனே! திடீரென்று ஊருக்குப் போய் விட்டாரே!' நளினி சிந்தித்துக் கொண்டே மீனாட்சியிடம் சென்றாள். 'நம் சம்பந்தம் ஏற்பட்டாலே எந்த மனிதர்களும் சொல்லாமல் கொள் ளாமல் ஓடிவிடுவார்கள் போலும்!' என்று சிந்தனை ஓடியதும், அவளை மீறிக் 'களுக்' கென்று ஒரு சிரிப்புத் துண்டு வெடித் தது.

மீனாட்சி அவளையே பார்த்துக்கொண் டிருந்தாள் போலும்! நளினி அருகே வந்ததும், "இங்கே இந்திரா காலனிக்கு


வாரீர்
புதுமை
தவழ்ந்திட.
Liril
THE FRESHNESS SOAP
Liril

நான் வந்த பிறகு இங்குள்ள பெண்கள் நாகரிகம் கற்றுக்கொண்டு விட்டார்கள் என்று சொல்கிறார்கள். நீ அதற்கு எதிர் மாறு போலும்! அப்போதிலிருந்து நானும் கவனிக்கிறேன், நீ வருவதை. உன் முகத்தை எல்லாரும் எப்படி உன்னிப்பாகக் கவனித்தார்கள் தெரியுமா? பரத நாட்டியத்திலே நவரச அபிநயம் மாதிரி உன் முகத்திலே வெறுப்பு, வேதனை, அமைதி, சிரிப்பு என்று மாறிக் கொண்டே வருகிறது தெரியுமா? அப்படி என்ன யோசனை? அப்படி என்ன பரவச நிலை? சரி, சரி. நாழிகையாகிவிட்டது. மந்திரி அரை மணிதான் இருப்பாராம். பாட்டை ஒழுங்காகப் பாடு. குருட்டு யோசனை செய்ய வேண்டாம், தெரியறதா?'' என்று கடிந்தாள் மீனாட்சி.

''சரி கவனமாக இருக்கேன்'' என்று அழகாகச் சிரித்துவிட்டு நளினி மேடை ஏறினாள். மீனாட்சி உயர்ந்த பக்க வாத்தியங்கள் ஏற்பாடு செய்திருந்தாள். நளினி அவர்களை வணங்கிவிட்டு, சுருதி கூட்டிக்கொண்டு பாட ஆரம்பித்தாள். தன்னை மறந்தாள், தன் சூழ்நிலையை மறந்தாள். மீனாட்சியின் விழா நன்றாக அமையவேண்டும், அவள் மருத்துவ மனை நன்றாக நடக்கவேண்டும் என்ற ஒரே குறிக்கோள் இருந்தது, அவள் மனத்தில்.

ஹம்ஸத்வனியில் 'வாதாபி கணபதிம்' என்று தொடங்கினாள் நளினி. அதன் பிறகு கலைவாணி, குரு பேரில் இரண்டு கிருதிகள் பாடிவிட்டுத் தாயுமானவர், கோபாலகிருஷ்ண பாரதியார், முத்துத் தாண்டவர், சுப்பிரமணிய பாரதி, அருணாசல கவிப் பாடல்களைப் பாடினாள். சுந்தரம் குறித்திருந்த பாடல் வரிசையே மறந்து போய் விட்டது. விஸ்தாரமாக ராகம், நிரவல், ஸ்வரம் என்று பாடாமல் ராகங்களைக் கோடி காட்டிவிட்டு, நிறையச் சிட்டைகளாகப் பாடினாள்.

அரை மணி ஆனதும் சற்றுச் சலசலப்பு ஏற்பட்டது. மந்திரி எழுந்து செல்ல, அவரைச் சிலர் பின்பற்ற, சபையில் கொஞ்சம் பரபரப்பு ஏற்பட்டது. நளினி அதைப் பொருட்படுத்தாமல் பாடிக் கொண்டே போனாள். தன் கவனம் பிறழாமல் இருக்கக் கண்களை மூடிக் கொண்டாள். திருப்புகழ் ஒன்றை ஆரம்பித்ததும், பழனி சந்நிதியில் தான் பாடியது நினைவு வந்து, துக்கம் அவள் நெஞ்சை அடைத்தது. கண்ணீர்க் கசிவு கண் இமைகளைப் பிசுபிசுவென்று ஒட்டியது. மீனாட்சியின் அறிவுரையை நினைத்து அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். சபையோர் 'ஹா, ஹா' என்று பாராட்டிக் கை தட்டினார்கள்.

நளினி கண்ணைத் திறந்துவிட்டு, ஞானசம்பந்தர் தேவாரம் ஒன்றை விருத்தமாகப் பாடினாள். அப்போது அவள் கண்ட காட்சி அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. மகிழ்ச்சி பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்தது. சுந்தரம் அப்போதுதான் வந்தான் போலும்! நளினியின் தகப்பனாருக்கு அருகில் அவன் அமர இருந்தான். பத்மினி நளினியை உற்சாகமூட்டிச் சிரித்து, கண்களால் என்னவோ ஜாடை காட்டினாள். நளினிக்கு ஒன்றும் புரியவில்லை. சுந்தரம் வந்ததைச் சுட்டிக் காட்டுகிறாள் என்று அவள் எண்ணினாள். சிட்டை பாடி முடித்தபின், முறையில்லாவிட்டாலும், சுந்தரத்துக்கு மிகவும் பிடித்தமான 'அக்ஷய லிங்க விபோ'வை ஆரம்பித்தாள்.

சுந்தரம் அமர்ந்ததும், நன்றியோடு அவளைப் பார்த்து முறுவலித்துவிட்டு என்னவோ ஜாடை காட்டினான். ஆனால், அவளுக்குப் புரியாததால், கவனியாததுபோல் அவள் பாடிக்கொண்டே போனாள். 'தோடி' என்று வாயால் சைகை காட்டினான் சுந்தரம். அவள் 'எல்லா அருமைகளும்' என்று ஆரம்பித்தாள்.

அப்போது தன் பின்னாடி யாரோ அமருவதுபோல் பிரமை தட்டி, முதுகில் குறுகுறுத்தது அவளுக்கு. பத்மினியின் முகம் விதவிதமாக மாறுவது எதிரே தெரிந்தது. ஆயின் அவளால் பாட்டை நிறுத்த முடியவில்லை. அவள் சங்கதிகளை விஸ்தாரமாகப் பாடினாள். பிடில்காரருக்கு வழிவிட எண்ணி அவள் நிறுத்தினதும், பின்னாடி ஒரு குரல் எழும்பித் தொடர்ந்து பாடினதும் அவள் உடல் புல்லரித்தது. அதிர்ச்சியினால் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. அவள் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். தம்பூரா போடுபவரிடமிருந்து வாங்கிக்கொண்டு அமர்ந்து மீட்டியவாறு மாணிக்கம் சர்வசகஜமாகப் பாடுவதைக் கண்டாள். அவள் தொண்டையே அடைத்துகொண்டது. மேலே பாட முடியும் என்றே அவளுக்குத் தோன்றவில்லை. அவள் ஒரு கணம் திக்பிரமையாகப் பார்த்துக்கொண் டிருந்துவிட்டு, மெல்லச் சமாளித்துத் திரும்பினாள். சுந்தரம் அவளைப் பார்த்து நிறைவான சிரிப்பு ஒன்று சிரித்தான். 'பழைய காலத்தில் ஒரு குறிப்பிட்ட பெண்ணுக்காக வாலிபர்கள் ஜல்லிக்கட்டு ஆடுவார்களாமே! அப்படி ஏதோ சூட்சும ரூபத்தில் நடக்கிறதா? அல்லது, நளினி தனக்குத்தான் என்ற நம்பிக்கையில் சுந்தரம் நிறைவு காண்கிறாரா? மாணிக்கம் எதற்கு இப்போது வர வேண்டும்?'

நளினிக்குத் துக்கம் மேலோங்கியது. உடனே மாறி, சினம் சீறி எழுந்தது.

இதனிடையில் மாணிக்கம் அவளைப் பார்த்துச் சவால் விடுவதுபோல மோகனமான சிரிப்பு ஒன்றைச் சிரித்து விட்டு, தில்லானா ஒன்றைப் பாடினான். நளினியும் சவாலை ஏற்றாள் போலும். எங்கிருந்து பலம் வந்ததோ அவளுக்கு? மெய்ம்மறந்து அவள் ஒரு ஜாவளியைப் பாடினாள். பிறகு இருவருமே சேர்ந்து ஒரு மீரா பஜன் பாடினார்கள். அவை யோர் கட்டுண்டு விட்டார்கள்.

மீனாட்சி ஜாடை காட்டிவிட்டாள். பிறகு மீண்டும் இருவருமே சேர்ந்து திருவாசகத்திலிருந்து பொன்னூஞ்சல் பாடிவிட்டுக் கச்சேரியை முடித்து விட்டார்கள். கரகோஷம் பந்தலை நிரப்பியது.

நளினி மேடையிலிருந்து இறங்கி வேகமாக உள்ளே போய்விட்டாள். மாணிக்கத்தைப் பார்த்ததும் தன் இதயம் படபடப்பதும், உடலில் ஒரு மின்சாரம் பாய்வதும், நெஞ்சு வலிப் பதும் அவளுக்குப் பிடிக்கவில்லை. சுந்தரத் துக்கு வாக்குக் கொடுத்த பிறகு தன் மனம் சஞ்சலப்படுவது அவளுக்கு வெறுப் பாக இருந்தது. மாணிக்கத்தைக் காண விரும்பாமல் அவள் ஓடி மறைந்தாள்.

மாணிக்கமோ மெதுவாக இறங்கி, ஒவ்வொருவருடனும் பேசிவிட்டு, சுந்த ரத்தின் அருகில் போய் அமர்ந்து விட்டான். அதற்காகவே காத்திருந்த வள்போல், அது பொது இடம் என்ப தையும், அங்கே பல பேர்கள் இருக் கிறார்கள்என்பதையும் பாராமல் பத்மினி மாணிக்கத்தினிடம் சுவாரசியமாகச் சண்டை போட ஆரம்பித்து விட்டாள்.

ஆத்மநாதன் தம்பதிகள் நளினியைத் தேடிக்கொண்டு வந்தார்கள். மீனாட்சி யைப் பாராட்டிவிட்டு, அவளிடம் சொல்லிவிட்டு அவர்கள் தம் வீட்டுக்குக் கிளம்பினார்கள். போகுமுன், நளினி யைத் தழுவிக்கொண்டு அவள் தகப்பனார், கண்களில் நீர் மல்க, ''நளி னிம்மா, இன்னிக்கு நீ பாடலை. ஏதோ தெய்வ சக்தியே உன் மூலமாகக் கானத் தைப் பொழிந்தது. இந்த நிறுவனம் அமோகமாக ஓங்கி நடக்கும்'' என்றார்.

''என்ன, அப்பா, நீங்க? அந்நிய ஆளுங்க மாதிரி என்னைப் பாராட்ட றீங்க. யாராவது சிரிக்கப் போறாங்க'' என்றாள் நளினி.

''ஏன், நளினி, உன் அப்பா உன்னைப் பாராட்டக்கூடாது? உண்மையான திறமையை எங்கு வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் பாராட்டலாம்'' என்றாள் மீனாட்சி.

''வீட்டுக்கு வரயா?'' என்று மகளை அழைத்தார் தந்தை.

''இல்லை, அப்பா. மீனுவுக்கு உதவி புரிஞ்சிட்டு, அப்புறமா வரேன். நேரமா யிட்டா, இங்கேயே தங்கிட்டு, நானும் பத்மினியும் நாளைக்குக் காலையிலே பஸ்ஸிலே வரோம்'' என்றாள் நளினி.

''அம்மா, ஒரு நிமிஷம்'' என்று ஒரு புதியவர் மீனாட்சியை அழைத்தார்.

மீனாட்சி அவரைத் திரும்பிப் பார்த் தாள்.

''நாங்கள் முன்பே கேட்டோம், மிஸ் நளினியும், மிஸ்டர் மாணிக்கமும் சேர்ந்து ஒரு மணி நேரம் பாடிப் பதிவு செய்துகொள்ள அனுமதி தந்தால், உங்கள் கட்டடத்துக்கு ஐயாயிரம் ரூபாய் நன்கொடையாகத் தருகிறோம். யோசித்து, கேட்டு, விசாரித்துச் சொல் லுங்கள். இன்று மாணிக்கமும் அவங் களும் பாடினதைக் கேட்ட பிறகு, ஐயாயிரம் என்ன, பத்தாயிரம் தரலாம்'' என்று வந்தவர் உற்சாகமாகப் பேசினார்.

''நாளைக்கு மாலை வாங்க. மாணிக்கம் இப்பத்தான் ஊரிலேருந்து வந்தாரு: யோசித்துச் சொல்கிறோம்'' என்று சொல்லி அனுப்பினாள் மீனாட்சி.

''மீனம்மா, அது சரிப்படும்னு எனக்குத் தோணலை. நீங்க ஒத்துக்கா திங்க'' என்று ஆத்மநாதன் குறுக் கிட்டார்.

''இல்லை; நீங்க தவறாக நினைக்கிறீங்க. அவங்க ரெண்டு பேரையும் வச்சி நீங்க ஆராய்ச்சி செஞ்சவங்க. உங்களுக்குத் தெரியாதது இல்லை. அவங்க ரெண்டு பேரும் கச்சேரி செஞ்சு பார்த்தால்...'' மீனாட்சி உற்சாகமாகப் பேசினாள்.

''கேட்டிருக்கேன். சம்பந்தமில்லாத ரெண்டு பேர் ஒரே மேடையிலே பாடுவது நல்லா இல்லீங்க. சுந்தரம் அதற்கு ஆட்சேபிக்கலாம்'' என்று வெடுக்கென்று கூறிவிட்டு ஆத்மநாதன் மனைவியுடன் அங்கிருந்து கிளம்பி விட்டார்.

மீனாட்சி அவர் செல்லும் திக்கையே நோக்கிக் கொண்டு நின்றாள்.

''என்ன மீனாட்சியம்மா, ஏன் இப்படிப் பிரமை பிடிச்சு நின்னுட்டீங்க? எங்க அப்பா நன்கொடை தரமாட்டேன்னு சொல்லிட்டாரா?'' என்று நளினி தன் தோழியைக் கேலியாகக் கேட்டுக் கொண்டே வந்தாள். அவள் போய்ப் பத்மினியைத் தேடிவிட்டு அப்போது தான் அங்கே திரும்பினாள் போலும்! பாட்டைப் பதிவு செய்யக் கேட்டதும் மீனாட்சி பதிலும், ஆத்மநாதன் குறுக் கீடும் அவளுக்குத் தெரியா.

''அப்படித்தான் வச்சுக்க. எனக்கு ரொம்ப ஏமாத்தம்'' என்று கூறிவிட்டு, வழக்கம்போல மீனாட்சி உடனடி வேலைகளைக் கவனிக்கச் சென்று விட் டாள்.

நளினி அலமேலுவைத் தேடிக் கொண்டு உதவி செய்யப் போனாள். கூட்டம் கலைந்துவிட்டது. டாக்டர் தம்பதியும், அலமேலுவும், நளினியுமே எஞ்சி நின்றனர்.

"பத்மினி எங்கே, மீனு?" என்று கேட்டாள் நளினி.

"அவள் வீட்டுக்குப் போய்ட்டா. நீ என்னோடு இரு. உன் அப்பா கிட்டதான் சொல்லிட்டியே, பின்னே என்ன?" என்றாள் மீனாட்சி.

"என்னோடுதான் இருங்களேன், அக்கா" என்றாள் அலமேலு.

"'இங்க' ஒண்ணு, 'அக்கா' ஒண்ணு! நீ மாறவே மாட்டே, அலமேலு" என்று சிடுசிடுத்தாள் நளினி.

"சரி, சரி, என்னோடு இரேன், நளினி; சரிதானா?"

"வேண்டாம், அலமேலு. அவள் என் வீட்டிலேயே தங்கட்டும். உங்கள் வீட்டைவிட வசதியாக இருக்கும் இல்லையா?" என்றாள் மீனாட்சி.

"ஆமாங்க. எங்க வீட்டில் எலக்ட்ரி இல்லையே!"

"எலக்ட்ரிஸிடி என்று சொல்லு" என்று திருத்தினாள் மீனாட்சி.

"பெரிய வசதி! நான் என்ன ராஜா வீட்டுப் பெண்ணா? ஒரு நாள் மின்சார வசதி யில்லாமல் இருக்க மாட்டேனா?" என்றாள் நளினி, சிடுசிடுத்தபடி.

மீனாட்சி அவளை ஆச்சரியத்துடன் பார்த்தாள். ஆனால் ஒன்றும் கேட்கவில்லை. மெல்லச் சிரித்து, "மின் விசிறிக் காற்று, பழக்கமாச்சே?" என்று மழுப்பிப் பேசி விட்டாள்.

அலமேலு தன் வீட்டுக்குக் கிளம்பினாள். நளினி உடன் வருவதைப் பார்த்து, "இருக்கட்டும், நளினி. நானே எங்க அம்மாவைக் கூட்டிக்கிட்டு மீனாக்கா வீட்டுக்கே வரேன்" என்று சமாதானம் கூறிவிட்டுச் சென்றாள்.

டாக்டர் தம்பதிகளுடன் நளினி அவர்கள் இல்லத்துக்குச் சென்றாள்.

அவள் மீனாட்சியுடனும் டாக்டருடனும் சாப்பிட அமர்ந்தாள்.

"இதோ பாருங்க. நீங்க நளினிக்கு ஏதாவது ஊசி போடுங்க. அநாவசியமா சிடுசிடுக்கிறா" என்றாள் மீனாட்சி

"நீதான் வேலைப் பிசாசு. அயர்வு தெரியாது. அவள் கலையரசி. பூப் போன்ற உடலும் மனமும் படைத்தவள். இன்றைய அலைச்சல் தாங்கவில்லை போலும்!" என்றார் டாக்டர்.

"ஆமாம் டாக்டர்" என்றாள் நளினி நன்றியுடன்.

"அதெல்லாம் இல்லை. என்னவோ மனசிலே போட்டுக் குடைஞ்சிக்கிறா. அது கிடக்கட்டும். இன்னிக்குக் கச்சேரி எப்படி?"

"நளினி பாட்டு மிகவும் உயர்வாக இருந்தது. மாணிக்கம் வந்த பிறகு தேவலோகமே கொட்டகைக்குள் இறங்கி விட்ட மாதிரி இருந்தது" என்று மனமாறப் புகழ்ந்தார் டாக்டர்.

நளினி பெருமிதத்துடன் அடக்கமாகப் புன்னகை பூத்தாள்.

"இந்த மாணிக்கம் எங்கே இருந்து வந்தார்? நளினியின் அத்தான் சுந்தரம் வந்ததும் அதிசயமல்லவா?" என்றாள் மீனாட்சி.

"உன் தோழி சொன்னாளா, மீனா? மிஸ்டர் சுந்தரந்தான் அவளைக் கைப் பிடிக்க இருக்கும் பாக்கியசாலி" என்றார் டாக்டர்.

"எனக்குத் தெரியும். ஆனால் அவளே சொல்லட்டும் என்று இருந்தேன். நளினி, எனக்கு நீயாகச் சொல்ல வேண்டாமா?" என்று கேட்டாள் மீனாட்சி.

"விவரம் தெரியாவிட்டால் கோபிக்க வேண்டும். யார் மூலமாகத் தெரிந்தால் என்ன? சரி, யார் சொன்னார்கள் உனக்கு?" என்று கேட்டாள் நளினி.

"அப்படியா? யாரோ சொன்னார்கள், போயேன். உன் வாயால் சொல்லியிருந்தால் சந்தோஷம் அதிகந்தான்."

"அத்தை மகன். அப்பா அம்மா ஏற்பாடு. இதில் புதுமையோ அதிசயமோ என்ன இருக்கிறது? மேலும் சுந்தரத்தையும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்" என்றாள் நளினி. சீக்கிரம் சாப்பிட்டு விட்டு அவள் எழுந்து விட்டாள். ஸீஸர் அழ ஆரம்பிக்கவும், அவனை எடுத்து ஆசுவாசப்படுத்துவதில் முனைந்தாள். அவனை மடியில் கிடத்தித் தட்டிக்கொண்டே அவளும் கண்ணை மூடிக் கொண்டாள்.

"நல்லா இருக்கு! குழந்தையைத் தூங்கப் பண்ணுவாங்களா, தாங்களே தூங்குவாங்களா?" என்று அலமேலுவின் குரல் கேட்டு நளினி கண்களைத் திறந்தாள்.

"அலமேலு, நீ ஓர் எருமை மாடு மாதிரி! பாவம் நளினி கண்ணைப் பாரு. இமையெல்லாம் வீங்கி ஜோஜோன்னு இருக்குது. தூக்கம் அழுத்தறது. தூங்கு, நளினி காலையிலே பேசிக்குவம்" என்று சொல்லிக்கொண்டே தனபாக்கியம் நளினி மடியில் இருந்த குழந்தையை எடுத்துக் கொண்டாள்.

அலமேலு பாயை விரித்தாள்; தலையணையை வைத்தாள். நளினி படுத்து விட்டாள். மீனாட்சியுடன் வேலை செய்து கொண்டே அவர்கள் பேசுவதெல்லாம் நளினியின் செவியில் விழுந்தன. ஆனால் அந்தப் பேச்சில் கலந்து கொள்ளாமல் அவள் சும்மா படுத்திருந்தாள்.

"நளினியும் வெளியூர்க்காரி ஆகிவிடுவாளாக்கும்?" என்று யாரோ ஒருத்தர் சொல்வது கேட்டது.

நளினி, செவிகளை இறுக மூடிக்கொண்டு படுத்தவள் அப்படியே உறங்கிவிட்டாள்.

விடிந்ததும் விடியாததுமாகக் கார் வந்துவிட்டது. சுந்தரம் இறங்கி வந்தான். நளினி எழுந்து அவனை வரவேற்றாள்.

"நளீ, நீ காரிலே ஏறிண்டு வீட்டுக்குப் போ. நான் இங்கே மாணிக்கத்தோடு இருந்து விட்டு அப்புறம் வரேன்" என்றான் சுந்தரம்.

"நானும் பிறகு உங்களோடேயே திரும்புகிறேன்" என்று கெஞ்சுதலாகக் கேட்டாள் நளினி.

சுந்தரத்தின் முகத்தில் லேசாகக் கடுமை படர்ந்தது. "நீ போ, நளீ!" என்று அவன் சற்றுக் கண்டிப்பாகச் சொன்னதும், அவள் மறுபேச்சின்றிக் கிளம்பிவிட்டாள். கார் மறையும் வரை அவன் பார்த்துக் கொண்டே நின்றான்.

நளினி பின்புறக் கண்ணாடி வழியாகப் பார்த்தபோது மாணிக்கம் சுந்தரத்தின் அருகில் வந்து நிற்பது தெரிந்தது. அவள் வெடுக்கென்று முகத்தை முன்பக்கம் திருப்பிக் கொண்டாள்.

கார் தெருக்கோடியை நெருங்கிய போது அலமேலு கோவிலிலிருந்து சில பெண்களுடன் வருவது தெரிந்தது. காரை நிறுத்தச் செய்தாள் நளினி. "அலமேலு, இவ்வளவு சீக்கிரம் எங்கே போய்ட்டு வர்றே?" என்று கேட்டாள்.

"கோவிலுக்குப் போய் நெய் விளக்கு ஏற்றி விட்டு வறேன்."

"என்னைக் கூப்பிடக் கூடாது?"

"உங்களையா? நேற்று ராத்திரி பேசிண்டு படுக்கலாம்னு அம்மாவும் நானும் மீனாக்கா வீட்டுக்கு வந்தோம். நல்லாத் தூங்கிட்டீங்க. உங்களுக்கு விடியற்காலை நாலு மணிக்கு எழுந்து பழக்கமா? அதனால் தான் எழுப்பலை" என்றாள் அலமேலு, சிரித்த முகத்துடன்.

பிரசாத குங்குமத்தையும் விபூதியையும் வாங்கி நெற்றியில் இட்டுக் கொண்டு விடைபெற்றுக் கிளம்பி விட்டாள் நளினி.

அவள் வீட்டிலும் அவளை எதிர் பார்த்த படியே அவளுடைய தந்தை முன் ஹாலில் அமர்ந்திருந்தார். அவளைக் கண்டதும், "நளினி, இப்படி உட்கார். உன்னைச் சில விவரங்கள் கேட்கணும்" என்றார்.

"என்ன, அப்பா?"

"சுந்தரம் எங்கே போயிருந்தான், ஏன் போனான்னு உனக்குத் தெரியுமா?"

"எனக்கு எப்படித் தெரியும், அப்பா?"

"பழனிக்குப் போயிருந்தான்."

நளினியின் முகத்தில் தோன்றும் மாறுதல்களை உற்றுக் கவனித்தார் தகப்பனார். அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

"ஏன் போனான்னு தெரியும் உனக்கு, இல்லையா?"

"எனக்கு எப்படி அப்பா, தெரியும்? அம்மாவையே கேட்டுப் பாருங்க. அத்தான் இங்கிருந்து போனபோது நான் இங்கே இல்லை: வந்த போதும் இல்லை."

"ரெண்டு சமயமும் எங்கே இருந்தே?"

"காலனியிலே."

'எப்பப் பார்த்தாலும் அங்கே என்ன வேலை உனக்கு?"

"போங்க, அப்பா, அம்மா என்னமோ கோள் மூட்டிட்டாங்க போல" என்று கூறிக் கொண்டே நளினி எழுந்து விட்டாள்.

"உட்கார், நளினி. உன் அத்தானை உனக்குக் கல்யாணம் ஏற்பாடு செய்யக் கிளம்பி யிருக்கிறேன், தெரியுமா?"

நளினி அதிசயித்தபடி தன் தந்தையின் முகத்தைப் பார்த்தாள்.

"மோதிரம் வாங்கப் போனவன், அதை விட்டுட்டுப் பழனிக்கல்ல போயிருக்கான்?" என்றாள் நளினியின் தாய். "அவன் மனசு மாறக் காரணம் என்ன?" என்று கடுமையாகக் கேட்டார் ஆத்மநாதன்.

'எனக்கு எப்படித் தெரியும்? நான் ஒண்ணும் சொல்லலை, எங்கேயும் அனுப்பலை. நன்றாக விவரம் தெரிந்த ஆண் பிள்ளை. அவர் மனசுக்கு இந்தக் கல்யாணம் பிடிக்காமல் இருக்கலாம். உங்க முகத்துக்கு நேரே வேண்டாம்னு சொல்ல அஞ்சி யிருக்கலாம். அத்தைக்காக...."

'பிடிக்காமல் ஒண்ணுமில்லை. ஆவலாகத்தான் இருந்தான்" என்றாள் நளினியின் தாய், மகளைக் குரோதமாய்ப் பார்த்து.

'நளினி, அவன் இப்போ அங்கே இந்திரா காலனிக்குப் போயிருக்கான், மாணிக்கத்தினுடைய அப்பா, அம்மாவின் அபிப்பிராயத்தைக் கேட்க. மாணிக்கத்தைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாத்தான் நீ நன்றாக இருப்பாயாம். இப்படி அவன் வாதம் செய்ய என்ன காரணம், சொல்லு."

"அவரையே கேட்டீங்களா, எனக்குப் பரீட்சை வைப்பீங்களா?"

"அவனுக்குத் தெரிஞ்சு போச்சாம். உனக்குச் சுந்தரத்தை மணக்கிறதிலே மனம் இல்லையாம். மாணிக்கந்தான் உனக்குப் பிடிச்ச வரனும்! அந்த உதவாக்கரை, முதுகு எலும்பில்லாத கோழை, மரியாதை தெரியாத பய, இந்திரா காலனியிலே வளர்ந்த...."

நளினி தன் இரு செவிகளையும் மூடிக் கொண்டாள். "போதும், அப்பா! நீங்க இஷ்டப்பட்டா மாணிக்கத்துக்கு

என்னைக் கொடுங்க. இல்லையா, விட்டுடுங்க. சுந்தரம் சொல்கிறது எல்லாம் நூற்றுக்கு நூறு உண்மை. ஏதோ ஒரு வேகத்திலே, அறிவினாலே சமாளிக்கப் பார்த்து, அத்தானைக் கட்டிக்கச் சம்மதித்தேன். ஆனால் என் மனம் குழம்பித் தவிக்கத்தான் செய்தது. சுந்தரத்தின் மனசுக்குத் தெரிந்த உண்மை உங்களுக்குத் தெரியலை. அவர் எப்படிக் கண்டு பிடிச்சாரோ, எனக்குத் தெரியாது. ஆனால், அவர் இனி எனக்கு அண்ணனாகத்தான் இருக்க முடியும்.

"மாணிக்கத்தை எப்பவும் பழிக்கிறீங்க. அவரிடம் என்ன கோழைத்தனத்தைக் கண்டுட்டீங்க? படிப்பிலோ, ஆராய்ச்சியிலோ என்ன குறைஞ்சு போய்ட்டார்? சங்கோஜி, மரியாதையுடன் பணிவாக இருந்தார். உடனே முதுகு எலும்பு இல்லைன்னு சொல்லிடலாமா?

"அங்கே, அவங்க காலனியிலே அவங்க அப்பா பழிச்சிண்டே இருப்பார். படிச்ச பிள்ளை தன்னை மதிக்க மாட்டானேன்னு தாழ்வு மனப்பான்மையிலே கரிச்சுக் கொட்டியிருப்பார். நீங்க உயர்வு மனப்பான்மையிலே வேலையை வாங்கிக் கிட்டு, நடத்தும்போது மூட்டைப் பூச்சியா மதிக்கிறது! இந்தச் சூழ்நிலையிலே யார்தான் மலரமுடியும்? அவர் விலை மதிப்பற்ற முத்து, அப்பா. பெட்டியிலே வச்சுப் பாதுகாக்கணும். நீங்க குப்பையிலே போடறீங்க."

நளினிக்குத் துக்கம் அடைத்தது. அவள் எழுந்து மடமடவென்று மாடிக்குப் போய்விட்டாள்.

"என்ன பெண் இது, விவரம் புரியாமல்.." என்று வியந்தார் தந்தை.

"பேசாமல் இருங்க. அவளுக்கு மாணிக்கந்தான் பிடிக்கறது. இப்பத்தான் எனக்கு நிறைய விஷயம் புரியறது. கடவுள் அருள் இருந்தால், அவளை அவனுக்கே கொடுப்போம்" என்றாள் ஸ்ரீமதி ஆத்மநாதன்.

"பெண் சந்தோஷமாக இருக்கணும்னு உனக்கில்லையா? அந்த எலி வளையிலே இவ இருக்க முடியுமா?"

"சுந்தரத்துக்குக் கொடுத்தால் ரெண்டு பேர் சுகமும் போய்விடும். அவள் இஷ்டப்படியே செய்வோம்" என்றாள் தாய், தீர்மானமாக.

ஆத்மநாதன் அப்படியே அமர்ந்திருந்தார்.

ஒரு மணி நேரம் கழித்துச் சுந்தரமும் மாணிக்கமும் வந்தனர். ஆத்மநாதன் எழுந்து உள்ளே போக நினைத்தார் போலும்! மாணிக்கம் நெடுஞ்சாண் கிடையாக அவர் காலில் விழுந்து வணங்கினான்.

(தொடரும்)



31. நளினியின் சீற்றம்

"எழுந்திருடா; நடக்கவிடாமல் இதென்ன கூத்து!" என்று கடிந்தார் ஆத்மநாதன், எங்கோ மோட்டு வளையைப் பார்த்துக்கொண்டு;

மாடிப்படியில் நின்றவாறு நளினி அவர்களைப் பார்த்தாள். தன் தகப்பனார் மேலே மேலே என்ன வசைமாரி பொழிவாரோ என்று அச்சம் அவளை வாட்டியது. அப்படி ஏதேனும் அவர் கோபமாகப் பேசிவிட்டால், தான் படபடவென்று எதிர்த்துப் பேசிவிடுவோமோ என்ற நடுக்கமும் ஒரு பக்கம் இருந்தது. அவள் சுந்தரத்தைப் பார்த்தாள். அவள் ஒருத்தி இருப்பதாகவே அவனுக்கு நினைவு இருந்ததோ என்னவோ, அவன் அவள் திக்கையே பார்க்கவில்லை. தன் தாய் மாமனையே உற்று நோக்கியபடி நின்றான்.

மாணிக்கம் பல் தெரிய ஒரு மோகனச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு எதிரே நின்றான். நளினியின் இதயம் ஒரு விநாடி நின்றுவிட்டு இயங்கினமாதிரி இருந்தது. வாட்ட சாட்டமான அவன் உருவம், ஒட்ட வெட்டிக்கொண்ட தலைமுடி, மீசை கிருதா ஏதுமில்லாமல் மழமழ வென்ற முகம்-பார்க்க நன்றாக இருந்தன. நளினியை அவன் நேராகப் பார்த்து, மிகச் சொந்தமாக ஒரு புன்முறுவல் பூத்தான். எங்கிருந்தோ ஒரு வெட்கம் அவளை ஆட்கொண்டது. அந்த வெட்கம் தோன்றியதற்கு அவள் வெட்கினாள்.

ஆத்மநாதன் ஓர் இருக்கையில் அமர்ந்தார். "சுந்தரம், உட்காரடா" என்றார். மாணிக்கம் நின்றுகொண்டே இருந்தான்.

"வா, மாணிக்கம், என் பக்கத்திலே உட்கார். வா, நளினி" என்று அழைத்தான் சுந்தரம்.

நளினி படிக்கட்டை விட்டு இறங்கவேயில்லை. கோபமும் துக்கமும் அவள் முகத்தில் போட்டியிட்டன; அதைக் கண்டதும் மாணிக்கம் குறும்பாகச் சிரித்தான்.

"நளீ, நகைக் கடைக்குப் போக வேண்டுமே! நீ மாடிப்படியிலேயே நிற்கப் போகிறாயா, இன்றைக் கெல்லாம்?" என்று கேட்டான் சுந்தரம்.

"யாருக்கு வேணும் உங்கள் நகை? நல்ல பேச்சும் பண்பும் தவிர வேறு யாரும் எதையும் எதிர்பார்க்கிறதில்லை" என்றாள் நளினி, சுடச்சுட.

சுந்தரம் லேசாக முறுவலித்துவிட்டு, "உனக்கு வேண்டாம் நகை. ஆனால் வாங்க வேணும்னு ஆசை எனக்கு இருக்குதே! இறங்கி வா" என்றான்.

நளினி தன் தகப்பனாரைக் குரோதமாகப் பார்த்துவிட்டு மெதுவாக இறங்கி வந்தாள். ஒரு விநாடி மாணிக்கத்தை நோக்கினாள். அவன் அவளை மிகக் கடுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தான். நளினிக்குக் காரணம் புரியவில்லை. நெற்றியைச் சுருக்கிக்கொண்டே அவள் வந்து நின்றாள்.

"ஏன் அம்மா, உனக்கு என்ன கோவம் இப்ப? சுந்தரந்தான் உன் மனசு கோணக் கூடாதுன்னு படாதபாடு பட்டுக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்திட்டானே? இன்னும் என்ன குறை? அவனை ஏன் கோவிச்சிக்கிறே நீ!" என்று அவள் தந்தை விசாரித்தார்.

நளினி பதில் சொல்லவில்லை. சிரிக்காமல் நின்றாள்.

"ஓகோ கோ! நினைவு வந்தது; மாணிக்கம், உட்கார், அப்பா! எனக்கு இந்தப் புது உறவு பழக்கமாகக் கொஞ்சநாள் பிடிக்கும். மன்னிச்சுக்கோ, இப்படி உட்கார்" என்றார் ஆத்மநாதன்.

"பரவாயில்லை, சார். நம் உறவிலே ஒரு மாற்றமும் தேவையில்லை" என்றான் மாணிக்கம்.

அங்கே சூழ்நிலையே புழுங்க ஆரம்பித்ததோ என்ற சந்தேகம் சுந்த

ரத்துக்கு. அவன் எழுந்துவிட்டான். "முத்து, கிளம்பலாமா? காரை எடுக்கச் சொல்லட்டுமா? அப்புறம், மாமாவும் மாமியும் காலனிக்குப் போய்ப் பேசணும், முகூர்த்தம் வைக்கணும். நிறைய வேலை இருக்கிறது, பார்" என்று துரிதப்படுத்தினான்.

மாணிக்கம் அடக்கமாகப் புன்முறுவல் பூத்து, தன் ஆசிரியரைப் பார்த்து, "சார், நான் நளினிக்கு மோதிரம் வாங்கப் போகிறேன்" என்றான்.

"எதுக்கு, அப்பா? நாம் என்ன கிறிஸ்துவர்களா?" என்றாள் நளினியின் தாயார்.

"பேசாமல் இருங்கள், மாமி. எங்கள் ஆசையை நீங்கள் கெடுக்காதீங்க" என்றான் சுந்தரம்.

"சரி, உங்கள் இஷ்டம்!" என்றாள் அந்த அம்மாள், மகிழ்ச்சியுடன். அவள் உள்ளே செல்லவும் அவள் கணவரும் அவளைப் பின்தொடர்ந்தார்.

"நளினியே கார் ஓட்டட்டும்" என்றான் மாணிக்கம்.

அரைகுறையாய்ப் பாதிப் பேசி, பாதியை விழுங்கிய மாணிக்கம் இன்று கடுமையாக முறைப்பதும், கண்டிப்பாகக் கட்டளையிடுவதும் நளினிக்குப் புதுமையாக இருந்தன. செல்லமாக வளர்ந்துவிட்ட அவளுக்கு இது சற்று உறுத்தியது. ஆயினும் அதே சமயம் ஒரு திருப்தியும் உருவாயிற்று.

'புது மாணிக்கம் தான் கடைசல் பிடித்த மாணிக்கம்' என்று அவள் வாய் முணுமுணுத்தது.

"என்ன முணுமுணுக்கிறே நீ?" என்று கேட்டான் சுந்தரம்.

"என்னமோ பேசிக் கொண்டேன். உங்களுக்குச் சொல்லியாகணுமா?"

"சொல்லு."

"மாட்டேன். ரொம்பத்தான் நீங்க ரெண்டு பேரும் என்னை ஆட்டிவைக்கிறீங்க. நான் என்ன டிரைவரா? ரத்தினம் இருக்கும்போது நான் ஓட்டுவானேன்? நீங்க ரெண்டு பேரும் நகைக் கடைக்குள்ளே போய்டுவீங்க. நான் வண்டியை நிறுத்த இடமில்லாமல் தெருவிலே சுற்றிக்கிட்டுக் கிடக்கணும்" என்றாள் நளினி.

அதைக் கேட்டுச் சுந்தரமும் மாணிக்கமும் 'ஓ'வென்று சிரித்தார்கள்.

"சரி, மாணிக்கம், ரத்தினமே காரைச் செலுத்தட்டும். நாம் கொஞ்சம் தைரியமாகவாவது உட்காரலாம்", என்றான் சுந்தரம்.

"என்னைப் பழிச்சிங்கன்னு யார்தான் உங்களுக்கு ஏற்றபடி ஓட்டுவார்கள்? என் சிநேகிதிகள் என்ன சொல்றாங்க, தெரியுமா? சோழவரம் போட்டிக்கே நான் போகலாம்னு சொல்றாங்க."

"ஐயோ, வேண்டாம். நீ ரொம்ப உசத்தியா ஓட்டறேன்னு நாங்க ஒத்துக்கறோம். ரேஸ் எல்லாம் நமக்கு வேண்டாம்" என்றான் மாணிக்கம்.

"ரேஸிலே ஓடி ஜயிக்க வேண்டிய அவசியம் உனக்கு வரலை; தானாக வெற்றி உன்னைத் தேடி வரது. நீ பேசமாட்டயா?" என்றான் சுந்தரம்.

நளினி சட்டென்று அவர்கள் இருவரையும் நோக்கினாள். மாணிக்கம் என்னவோ அகமகிழ்ந்து, தன் நண்பனை நோக்கி முப்பத்திரண்டு பல்லும் தெரிய, கண்களிலே கனிவு சொட்டப் பார்த்தபடி சிரித்தான். சுந்தரம் ஊடுருவி நளினியை ஒரு பார்வை பார்த்துவிட்டு, "சரி, சாவியைக் கொடு. நான் காரை எடுத்துவரேன்" என்று கேட்டுக் கொண்டே, சாவிக்காக நளினியிடம் கையை நீட்டினான்.

நளினி சாவியைத் தன் அத்தானிடம் கொடுத்தாள்.

சுந்தரம் அப்பால் நகர்ந்ததும், மாணிக்கம் நளினியைப் பார்த்தான். "என்ன சேதி, நளினி? எப்படி ஓடிண்டிருக்கு வாழ்க்கை?" என்று சாவதானமாகக் கேட்டான்.

"எவ்விடத்து வாழ்க்கை? மாணிக்க ஒளி இல்லாமல் இந்திரா காலனி இருண்டு காண்கிறது."

"அது சும்மா! இந்திரா காலனியை எனக்கு அடையாளமே தெரியலை. அவ்வளவு பளிச்சினு ஆக்கீட்டிங்க" என்று கூறிச் சிரித்தான் மாணிக்கம்.

சுந்தரம் காரைக் கொண்டு வந்து நிறுத்தினான். இருவரும் அதில் ஏறப் போனார்கள்.

"இந்தா, நளீ! நீயே ஓட்டு" என்றான் சுந்தரம்.

"அப்பப்பா, பிடிச்சதே பிடி!" என்று போலிக் கோபத்துடன் மொழிந்துவிட்டு, முன்பக்கம் ஏறிக் காரைச் செலுத்தினாள் நளினி.

"இரண்டு பேர் கிட்டேயும் சொல்றேன். நான் உள் புகுந்து ஏற்பாடு செய்யறேன். நீங்க இரண்டுபேரும் சரியாக நடந்துக்கணும்; என்ன?" என்றான் சுந்தரம்.

"அப்படியே, சுவாமி! தங்கள் கட்டளை என் பாக்கியம்!" என்றான் மாணிக்கம்.

"உனக்கு விளையாட்டு வேறயா? என் ஆத்திரம் தீரக் கன்னத்திலே கொடுத்தேன்னு, மூளை சிதறி வெளியே வரும்!" என்றான் சுந்தரம். அவன் பேச்சின் காரத்துக்கு எதிராக அவன் முகத்திலே அன்பு பிரவகித்தது.

"நீங்க சிகிச்சை செய்யும் வரையிலே முருகக்கடவுள் காத்திருக்க வில்லை. மாணிக்கத்தைப் பட்டை தீட்டிவிட்டார்" என்றாள் நளினி.

"நளீ, உனக்கு என் கடுதாசு வந்ததா?" என்று ஆவலோடு கேட்டான் மாணிக்கம்.

'நளீ' என்று மாணிக்கம் அழைத்தவுடனே, நளினிக்குச் சற்றுத் தடுமாறிற்று. மறுகணமே அவள் தன்னைச் சுதாரித்துக்கொண்டாள். "என் பதில் உங்களுக்கு வரலையா?" என்று கேட்டாள், நிதானமாக. அவள் இதயம் படபடவென்று சிறகடித்துக் கொண்டது.

"ஓகோ! அவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டீர்களா? கடுதாசுப் போக்குவரத்து வேறே நடக்கிறதா? இது தெரிந்திருந்தால் நான் பழனிக்கு ஓடியே இருக்க மாட்டேனே!" என்று சுந்தரம் ஒன்றுமே அறியாதவன் போல் கேட்டான்.

"ஆமாம், பெரிய கடிதப் போக்குவரத்து! தண்ணீரிலே மூழ்கிறவன், மிதக்கிற தூசிக் குப்பையையெல்லாம் ஆதாரமாகப் பிடிப்பதுபோல, ஒரு நெருக்கடியிலே இவர் எழுதிட்டாரு. நீங்க இருந்திருந்தால் அந்தக் காகிதமும் எனக்கு வந்திருக்காது" என்றாள் நளினி.

"பதில் வரும்னு தெரிஞ்சிருந்தால் நான் பழனியிலேயே தவம் கிடந்திருப்பேனே!" என்றான் மாணிக்கம், பெரிதாகச் சிரித்துக் கொண்டு.

"அதுதான் சரி. இரண்டு பேரும் என்னையே திட்டறிங்க; நன்றி கெட்ட ஜன்மங்கள்!" என்றான் சுந்தரம்.

மூவரும் சேர்ந்து சிரித்தனர்.

"அத்தான், உங்களுக்கு அந்த விபத்தைப்பற்றித் தெரியுமோ?" என்று ஆவலுடன் கேட்டாள் நளினி.

சுந்தரம் கம்பீரமாகி விட்டான். ஒரு விநாடி விசனத்தின் சாயை அவன் முகத்தில் நிழலாடியது. "தெரியும் நளினி. இந்த முட்டாள் எவ்வளவு பெரிய தப்புப் பண்ணிவிட்டான்! அந்தப் பெரியவர் விவரமாகச் சொன்னார். கேட்கவே என் குடல் நடுங்கி விட்டது."

"மூட்டைச் சாமானை உலுக்கிச் சரியாகக் கட்டுகிற மாதிரி ஓர் உலுக்கு உலுக்கி விட்டார் ஆண்டவன்" என்றாள் நளினி.

வண்டி நகைக் கடைமுன் நின்றது. மூவரும் இறங்கி விரைவாக உள்ளே சென்றனர்.

மாணிக்கம் எட்ட நின்றான். நளினியும் சுந்தரமும் மோதிரங்கள் குவிந்த தட்டைப் பார்வையிட்டார்கள்.

"இந்தா, இந்த முத்து மோதிரத்தை எடுத்துக்கோ. கழுத்திலே உச்சுருக்கு மாதிரி முத்து மாலையைப் போட்டுக்கிட்டுத் தடவித் தடவிக் கொடுப்பியே? கையிலே மோதிரமா யிருந்தால், அந்த முத்துக் கிடைக்காதபோது இதைப் பார்த்துக்கலாம்" என்றான் சுந்தரம், வேடிக்கையாக.

பெரிய ஒற்றை முத்து வைத்த மோதிரம். நளினி விரலுக்கு அளவு பார்த்து வாங்கினார்கள். அதை வைக்க அலங்காரப் பெட்டி ஒன்று தேடினார்கள். கடல் சிப்பி போல உருக்கொண்ட ஒரு பெட்டியைத் தேர்ந்தெடுத்தான் மாணிக்கம்.

மாணிக்கம் கிளம்ப எத்தனிப்பதைக் கண்ட சுந்தரம், அவனைப் பிடித்து நிறுத்தி, "டேய், எங்கே ஓடறே? நீ மட்டும் வாங்கினாப் போதுமா? உன் விரல் அளவுக்கு ஒண்ணு வாங்கு. நளினி, இவனுக்கு ஒண்ணு பொறுக்கு" என்றான்.

"என்ன, அத்தான்? இப்ப யார் மோதிரம் வாங்குறீங்க? யாருக்காக? அப்பா தானே வாங்கச் சொன்னாரு? இல்லே, நீங்களே..."

"முத்து மோதிரம் முத்து வாங்கினது; அது உனக்கு அவன் போடுகிறது. நீ அவனுக்கு ஒண்ணு பதிலுக்குப் போட வேண்டாமா?"

"கடனே வாங்கக் கூடாதுன்னு ஓடினவன் நான். கடனிலே ஆரம்பிக்கிறது மண வாழ்க்கை" என்றான் மாணிக்கம்.

"பெரிய மேதாவி! எது கடன்? மனிதனுக்கு மனிதன் கடன்பட்டிருக்கும் வரைதான் வாழ்க்கை வளம் பெறுகிறது. வெறும் பணக் கடனைப் பற்றிப் பேசாதே" என்றான் சுந்தரம். பிறகு நளினியைப் பார்த்து, "சரி, அம்மா, நளி, இந்த இரண்டு மோதிரமுமே என்னுடைய பரிசாக இருக்கட்டும். அவ்வளவுதானே? நான் என்ன நினைச்சேன், நளினிக்கு மோதிரமும், மாணிக்கத்துக்குக் காஸ்ஸெட் ரெகார்டரும் தரலாம்னு."

"நீங்க எது தந்தாலும் தராவிட்டாலும், நாங்கள் எது அநுபவிச்சாலும், அவை எல்லாம் நீங்க தந்த பரிசுதான்" என்றாள் நளினி, நாத் தழுதழுக்க.

"சரி, வாங்க. எனக்கு நிறைய வேலை இருக்குது" என்று பேச்சை மாற்றி அவர்களைத் துரிதப்படுத்தினான் சுந்தரம்.

சாதாரணத் தங்க மோதிரம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு மூவரும் வீடு திரும்பினார்கள்.

நளினி இறங்கி வந்து, தன் தாய், தகப்பனாரிடம் மோதிரங்களைக் காட்டினாள். ஆனால் அவர்களை நிற்க விடாமல் அவசரப்படுத்தினான் சுந்தரம்.

நளினியைத் தனியே விட்டு விட்டு ஆத்மநாதன் தம்பதிகளும், சுந்தரமும் மாணிக்கமும் கிளம்பிவிட்டார்கள்.

நளினிக்கு ஒரு விதப் புதுமை தோன்றியது. வியப்பு மேலிட்டது. தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகள் கனவா நனவா என்று கூட அவளுக்குப் புரியவில்லை. மோதிரங்களை அழகு பார்த்துக் கொண்டு அவள் அமர்ந்திருந்தாள்.

இந்திரா காலனி போனவர்கள் அங்கே போய் என்ன செய்வார்கள், எப்படிப்

பேசுவார்கள், என்ன நடக்கும் என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டு அவள் முன் ஹாலில் நடை பயின்றாள்.

பத்மினி அப்பொழுது அங்கு வந்து சேர்ந்தாள். "என்ன நளினி, கடைக்கெல்லாம் போய் வந்த மாதிரி தெரியுதே?" என்று கேட்டுக்கொண்டே அவள் உள்ளே நுழைந்தாள்.

"ஆமாம், பத்மினி. எங்கள் அத்தான் சுந்தரம் சூத்திரதாரியாக என்னவோ ஆட்டி வைக்கிறார் எல்லாரையும்."

"எங்கள் அப்பா, அம்மாகூடக் காலனிக்குப் போயிருக்காங்க."

"அப்படியா?"

"ஆமாம்."

"எனக்கு ரொம்பப் பயமாக இருக்குது, பத்மினி."

"ஏன்?"

"இத்தனை பேரும் அங்கே போய்க் கூட்டம் கூடிப் பேசப் போக, முத்துவின் அப்பா ஏதேனும் பேசிட்டாங்கன்னா?"

"கேட்டுக்கிட வேண்டியதுதான், இப்படிப் புத்திகெட்ட பொண்ணு ஒண்ணு பெத்ததுக்கு"

"ஏன், பத்மினி, கோவிச்சுக்கிறே?"

"ஆமாம்! சுந்தரத்தின் தியாகமும் மேன்மையும் நினைச்சுப் பார்க்கிறபோது, மாணிக்கத்துக்காக அவரைத் துறப்பது முறையான்னு..."

"என்னைப் பயமுறுத்தாதே, பத்மினி. நானாக ஒன்றும் யாரையும் கேட்கவில்லை. இதெல்லாம் தானாக நடக்கிறது. என்ன செய்வேன், சொல்லு!" என்று பரிதாபமாகக் கேட்டாள் நளினி.

"நீ கேட்கவேண்டாம், அழவேண்டாம், உண்ணாவிரதம் இருக்கவேண்டாம். நுட்பமான புத்தி படைச்ச யாருக்கும் உன் மனநிலை தெரியாதுன்னு நினைக்கிறயா?"

"எனக்கு ஒண்ணுமே புரியவில்லை, பத்மினி. சுந்தரம் மட்டும் மனிதர் தாமே? அவருக்கு என்னை மணக்க விருப்பம் இல்லாமல் இருக்கலாம் அல்லவா? மாமா, மாமியிடம் சொல்வதற்கு அஞ்சி இப்படி என் கல்யாணத்தை ஏற்பாடு செய்யலாம் அல்லவா?" நளினிக்கே தன் பேச்சில் நம்பிக்கை இல்லை போலும். அவள் சூள் கொட்டினாள். பிறகு சிரித்தாள்.

"சரி, நீ மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. உனக்கே உன் வாதம் திடமாத் தோணலை. உன் மூஞ்சியைப் பார்க்கச் சகிக்கலை. மோதிரம் ரெண்டும் அருமையாக இருக்கின்றன. நீ ஏதாவது பாடு. மனம் அலையாமல் இருக்கும்" என்றாள் பத்மினி.

நளினி தம்பூராவை எடுத்து வந்து, சுருதி கூட்டி மீட்டிக்கொண்டே மீராபஜன் பாட ஆரம்பித்தாள். அந்த மீராவின் பக்தியிலேயே ஒன்றி, இழைந்து அவள் பாடினாள். நேரம் போனதே தெரியாமல் பத்மினியும் கேட்டுக்கொண்டிருந்தாள்.

தெருவில் கார் நிற்கும் சத்தம் கேட்டு இருவரும் விழிப்படைந்தனர். நளினி தம்பூராவைக் கீழே வைத்துவிட்டு வந்தவர்களைக் கவனித்தாள்.

பிரின்ஸிபால் நளினியிடம் வந்தார். "பாராட்டுக்கள், நளினி. நல்ல ஜோடி. இனிமேல் எங்கள் கல்லூரி விழாக்களிலே நீங்களேதான் கச்சேரி செய்ய வேண்டும். நீங்கள் ரெண்டு பேரும் வாழ்க்கைப் பூங்காவிலே ஜோடிப் பறவைகளாகச் சிந்து பாடிக்கொண்டே ஆனந்தமாக வாழணும்" என்று வாழ்த்தினார்.

"நன்றி, மாமா" என்றாள் நளினி, தலை குனிந்தபடி.

"எனக்கு மாப்பிள்ளை வந்தமாதிரி உங்க அம்மாவுக்கும் தெரிந்த பிள்ளையே மருமகனாக வந்தது எனக்குச் சந்தோஷம். பிள்ளை இல்லா வீட்டுக்கு ரெண்டு நல்ல பையன்கள் வந்தாங்க" என்றாள் பத்மினியின் தாயார்.

"மாணிக்கம் வரலையா?" என்று பத்மினி கேட்டாள்.

"இல்லை. அவன் ஊரிலிருந்து வந்தது முதல் என் பின்னாடியே சுத்தறான். அவங்க அப்பா, அம்மாவுடன் பேச வேண்டாமா?" என்றான் சுந்தரம்.

"அம்மா, நீங்க போனவுடனே என்ன செஞ்சாங்க? எப்படி நடந்துண்டாங்க? சொல்லு" என்று கேட்டாள் பத்மினி, ஆவலாக.

நளினி அமைதியாக அமர்ந்திருந்தாளே தவிர, அவள் ஆர்வமும் கவலையும் அவள் கண்கள் படபடத்ததிலிருந்து தெரிந்தன.

"மணவாளச் செட்டியாரும் பங்காரு அம்மாவும் வந்தாங்க. சுந்தரம் தான் பேசினாரு. கந்தசாமி செட்டி சந்தோஷத்திலே கையைக் குவிச்சு ஆமோதிச்சவர், நாங்க வரும் வரையிலே கையைப் பிரிக்கவேயில்லை. அவர் வாயைத் திறந்து பேசவேயில்லை. மணவாளச் செட்டிதான் இவங்களோடு பேச்சுக் குடுத்து, உபசரித்து எல்லாம் பண்ணினாரு."

"எல்லாம் நல்லாத்தான் இருந்தது. ஆனால் தனபாக்கியத்தம்மா செஞ்சதுதான் எனக்குக் கொஞ்சம் வருத்தமாக இருந்தது" என்றாள் நளினியின் தாய்.

"என்ன செஞ்சாங்க? அவங்க ஒரு வாயில்லாப் பூச்சியாச்சே!" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் பத்மினி.

நளினி கவலையுடன் தன் தாயின் முகத்தைப் பார்த்தாள்.

"அந்த அம்மாவா வாயில்லாப் பூச்சி! நல்லாச் சொன்னியே! எல்லாரும் பேசி

முடிச்சிட்டு, பாக்கு வெத்தலை மாத்திக்க லாம்னு சொல்லியாச்சு. சுந்தரம், வெத்தலை, பாக்கு, பழம் வாங்கிவரக் கிளம்பினன். அப்ப அந்த அம்மா குறுக்கே புகுந்தாங்களே பார்க்கணும்! 'இரு, தம்பி. நாம் முடிவு செய்திட முடியாது. எங்களுக்கு எந்தக் காரியமும் நிச்சயம் பண்றவ அந்த மாரியாயிதான். நரசையா வந்திருக்காரு. ஒரு நிமிஷம் பூப்போட்டுப் பார்த்திடுவம். அம்மன் உத்தரவு கெடச்ச பொறவு செய்வோம்' என்று தடுத்திட்டா'' என்று கூறும் போது நளினியின் தாயார் உணர்ச்சி வசப்பட்டுவிட்டாள்.

''குலதெய்வத்தைக் கொண்டாடிப் பழக்கப்பட்டவங்க அவங்க. அதை நாம் குத்தம் சொல்ல முடியாதுங்க. இப்பச் சும்மா இருந்திட்டு, பிறகு எதனுச்சும் தலையைக் காலை வலிச்சா அப்ப மனசைப் போட்டு உளைச்சுக்கிறதிலே என்னங்க நன்மை? முன்னடி யோசிச்சுச் செய்யறது தான் முறை'' என்று பிரின்ஸிபாலின் மனைவி ஆசுவாசப்படுத்தினள்.

''அம்மன் உத்தரவுதான் நல்லாக் கிடைச்சுதே? பின்னே ஏன் நீங்க கவலைப் படறீங்க?'' என்று சிரித்துக்கொண்டே பேசினர் பிரின்ஸிபால்.

''அதில்லை. அவ சொல்றது எனக்குப் புரியுது. இவ்வளவு நல்ல சம்பந்தம் நமக்குக் கிடைக்கிறதேன்னு சந்தோஷப் படாமல், என்னவோ ஆகாசத்திலேந்து பிகு பண்ணிண்டு... நம்ப அந்தஸ்துக்குக் கீழே சம்பந்தம் பண்ணப் போனல் இப்ப டித்தான் இருக்கும். அதைப்பத்திப் பேசி என்ன பயன்?'' என்ருர் ஆத்மநாதன்.

''அதைச் சொல்லாதீங்க, மாமா. மேம்பட்ட உங்க சம்பந்தம் விட்டுப் போகுமோன்னு பயந்து தங்கள் கொள் கையைக் கைவிடாமல் இருக்காங்களே, அதை நாம் மெச்சணும். நிர்ணயமாக இருக்காங்களே!'' என்ருள் பத்மினி, குறுக்கிட்டு.

நளினி எழுந்துவிட்டாள். கலகல வென்று விரக்தியாகச் சிரித்தாள். ''எது மதிப்பு, எது அந்தஸ்துன்னு எனக்குப் புரியவேயில்லை, மாமா. உங்கள் நூல் நிலையத்திலே வாங்கியிருக்கீங்களே. அந்த அகராதிகளிலே அர்த்தம் பார்த்துச் சொல்லுங்க. இப்படி அப்பாவும் அம்மா வும் கொஞ்சங்கூட இஷ்டப்படாமல், தகுதியைப் பற்றியும் தாரதம்மியத்தைப் பற்றியும் வேதனைப் பட்டு எனக்குக் கல்யாணம் பண்ணித் தரவே வேண்டாம். அத்தான், நீங்க ஏன் சும்மா இருக்காமல் தலையிட்டீங்க? இந்தாங்க, உங்க மோதி ரங்களைக் கடையிலே திருப்பிடுங்க. எனக்கு மதிப்பீடுகள் எல்லாம் தெரிஞ் சப்புறம் நான்....'' அவளால் மேலே பேச முடியவில்லை. அவள் குரல் உடைந்து விட்டது. சிரிப்பதும் அழுவது மாக அவள் மாடிப்படி ஏறி ஓடிவிட் டாள். பத்மினி அவள் பின்னல் ஓடினள்.

''புத்தி தெரிஞ்ச குழந்தைங்க. நீங்க அப்படிப் பேசியிருக்கக்கூடாது'' என்ருர் பிரின்ஸிபால்.

''ஒரே குழந்தை. அவள் வாழ்க்கை யைப் பணயம் வைத்து விளையாட முடி யுமா?'' என்று கேட்டார் ஆத்மநாதன்.

''நான் செய்யவில்லையா அந்தக் காரி யத்தை? பத்மினி சௌக்கியமாகத்தான் இருக்கா. நளினிக்குப் பொருளாதாரப் பிரச்னை ஒன்றுதான். நீங்க உதவி செய்து சரிக்கட்ட முடியும். பத்மினி முசுட்டுக் கணவனிடம் ஈடுகொடுக் கிருள். நாம் ஓரளவுதான் ஏற்பாடு செய்யலாம். அவரவர் விதிப்படிதான் வாழ்க்கை அமையும். ஒன்ருகப் பிறந்து ஒரே சாப்பாடு சாப்பிட்டு வளர்ந்த இரண்டு பேர்களின் ருசி ஒரேமாதிரி இருப்பதில்லை. வேறு வேறு குடும் பத்தைச் சேர்ந்த ரெண்டு பேர் ஒரே மாதிரி இருக்க முடியுமா? உங்களுக்குத் தெரியாதா? உலகத்திலே நாம் விட்டுக் கொடுத்து வாழ வேண்டியதுதான்'' என்ருர் பிரின்ஸிபால்.

ஆத்மநாதன் பதிலே பேசவில்லை. பிரின்ஸிபாலுக்கு மரியாதை வைத்து வாளாவிருந்தார்.

பிரின்ஸிபால் தம்பதிகள் கிளம்பி விட்டனர். போகுமுன், ''பத்மினி, நாங்கள் கிளம்பரோம்'' என்று உரக்கக் குரல் கொடுத்தார்கள்.

''அப்புறமா வரேன், அப்பா'' என்று பதில் குரல் தந்துவிட்டு, அவள் இறங்கி வரவேயில்லை.

பிரின்ஸிபால் தம்பதிகளைக் காரில் அவர்கள் வீட்டில் கொண்டு விட்டுவிட்டு, சுந்தரம் திரும்பிவந்தான். தன் மாமா அப்போதும் சிந்தனையில் மூழ்கி அமர்ந் திருப்பது தெரிந்தது. அவன் அவரி அருகில் வந்து அமர்ந்துகொண்டான். ''மாமா, இப்ப என்ன நடந்திடுச்சு? எதுக்கு இப்படி இடிஞ்சு போறீங்க?'' என்று வினவினன்.

''என்னடா, சுந்தரம், என்னடா கேட்கிறே? மாணிக்கத்தை இந்த வீட்டு மருமகளுக நினைச்சுப் பார்த்தியா? என்னலே பார்க்க முடியலை. நீதான் அந்த இடத்திலே இருக்கணும். அவன் கோழை.''

''இத பாருங்க, உங்க பெண்ணுக்கு வேறே இடம் பார்க்கலாம். உங்களுக்கு அவ்வளவு அதிருப்தின்ன முன்னடியே என்கிட்டே சொல்றதுதானே? நளினியும் என்னைக் கேட்கிரு பாருங்க? நான் ஏன் தலையிட்டு ரெண்டு பக்கமும் இடிபடப் போறேன்?'' சுந்தரம் அமைதியாகத் தெளிந்த முகத்துடன் பேசினன்.

''நளினிதான் ஒரே பிடியா இருந்தா. அவ அம்மாவும் ஒத்துக்கிட்டா.''

''சரி, அப்பப் பேசாமல் இருக்க வேண்டியதுதானே?''

''முடிவு செஞ்சிட்டு வந்தப்புறந் தானே பயங்கரம் தெரியுது?'' என்றார் ஆத்மநாதன்.

''நானே வேண்டுமானால் ஏதாவது சகுனம் அது இதுன்னு சொல்லி இந்தச் சம்பந்தத்தை நிறுத்திடறேன். ஆனால், உண்மையிலேயே உங்கப் பொண்ணு வேறு யாரையாவது கட்டிக்குவான்னு உங்களுக்குத் தோணுதா? அப்படீன்னு சொல்லுங்க, வேறு சம்பந்தம் தேடு வோம்'' என்று கூறினான் சுந்தரம்.

''தேடுவானேன், சுந்தரம்? நீ முன்பு ஒத்துக்கிட்டயே! வெண்ணெயைக் கையிலே வச்சுக்கிட்டு நெய்க்கு அழ எங்களுக்குப் பைத்தியமா? நீ மோதிரம் வாங்கப் போனவன் திடீர்னு நினைச்சுக் கிட்டே, ஊருக்குப் போனே! திரும்பி வந்தே! எல்லாம் புயலாட்டமா வேலை நடந்தது'' என்று குறுக்கிட்டாள் நளினி யின் தாயார்.

''நான் ஏன் அப்படிச் செஞ்சேன்னு நினைச்சுப் பார்த்திங்களா? நான் நளினியை என் தங்கச்சியாகத்தான் நினைக்க முடிகிறது.''

''சுத்த அபத்தம். நீயே எத்தனையோ தடவை....'' என்று குதித்தெழுந்தார் ஆத்மநாதன்.

''நானும் உங்கள் மருமகன்தானே? எல்லாம் முடிவு செஞ்ச பிறகுதான் சித்தம் தெளிகிறது'' என்றான் சுந்தரம்.



ஆத்மநாதன் சுந்தரத்தை முறைத்துப் பார்த்தார். அவன் தெளிவாகத் திரும்பிப் பார்த்ததைக் கவனித்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார். ''அப்படியானால் இனி நான் பேச மாட்டேன். உனக்குப் பிடிக்காமல் நீ மணக்கவேண்டாம். ஹூம், அவள் மாணிக்கத்தையே கல்யாணம் செய்துகிடட்டும். அவன் பேரிலே அவளுக்கு எப்பவுமே ஒரு மதிப்பு. திடீரென்று தோணின உணர்ச்சி இல்லே. நான் அவன்கிட்டே மரியாதையாக நடக்கணும்னு என்னைக் கண்டிப்பா. செல்லப் பெண், ஏதோ சலுகையாக விரட்டுகிறாள் என்று நினைச்சேன்; அவள் உள்ளத்தோடு நேசிச்சா சரிதான். அவள் சந்தோஷமாக இருந்தாப் போதும்'' என்றார்.

பத்மினி அவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டே இறங்கி வந்தாள். ''ஆமாம், மாமா. அவளுக்கு மாணிக்கத்தின் மீது மதிப்பும் பிரியமும் உண்டு. முதல் தடவை நரசிம்மனைப் பார்த்த போது அவர் மாணிக்கத்திடம் அலட்சியமாக இருந்துவிட்டுத் தன்னிடம் பேச வந்தார் என்று கோபித்துக் கொண்டு விட்டாள். பிறகுதான் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்த்தபோது எனக்கு விவரம் புரிந்தது. மாணிக்கம் தங்கமானவன். அவன் நன்றாக, திடமாக உருவாகிவிட்டான். நீங்கள் கவலையே படவேண்டாம்'' என்றாள்.

''எனக்குச் சுந்தரமும் ஒன்றுதான், மாணிக்கமும் ஒன்றுதான். தனபாக்கி



யத்தம்மா மேலே ஏதோ அசட்டுத்தனமா ஒரு வருத்தம் வந்தது. அதைப் பத்தி நான் பேசல எடுக்கலேன்னு இப்ப இங்கே இவ்வளவு பேச்சு, கோபம், தாபம், தவிப்பும் நேர்ந்திருக்காது'' என்றாள் நளினியின் தாய்.

நளினி முகம் கழுவி, தலைசீவி, அழகாக அலங்கரித்துக் கொண்டு மாடியிலிருந்து இறங்கி வந்தாள்.

சுந்தரம் அவளைப் பார்த்துச் சிரித்தான். ''அழுத பிள்ளை சிரிக்குமாம், கழுதைப் பாலைக் குடிக்குமாம்'' என்று கேலி செய்தான்.

பத்மினி சிரித்தாள்.

நளினி நாக்கை நீட்டித் தன் அத்தானுக்கு அழகு காட்டினாள்.

பத்மினி விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள். நளினி வாயில்வரை வந்து வழி அனுப்பினாள்.

''ஏன், நளீ, நீ போய் விட்டுவிட்டு வரக்கூடாதா? காரியம் ஆகிற வரையில் தான் சிநேகிதி!'' என்றான் சுந்தரம்.

''ஆமாம்! இவ என்ன காரியம் சாதிச்சுத் தந்தாளாம்?''

''சரி, சரி. நீ என்னைக் கொண்டுவிட வேண்டாம், போயேன்'' என்றாள் பத்மினி.

''நான் கார் எடுக்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே சுந்தரம் கார்ச் சாவியுடன் அவளுக்கு முன் படிகளில் இறங்கினான்.

''நானும் வருவேன்'' என்றாள் நளினி.

சுந்தரம் கார் ஓட்ட, பத்மினியும் நளினியும் பின்புறம் அமர்ந்தார்கள்.

கொஞ்ச தூரம் போனபிறகு சுந்தரம் நளினியைப் பார்த்து, ''நளீ, நான் வேண்டுமென்றுதான் இப்போது கிளம்பினேன். உன் சிநேகிதியை வைத்துக் கொண்டு ஒரு பேச்சுச் சொல்ல வேண்டும்'' என்றான்.

''சொல்லுங்க'' என்றாள் பத்மினி.

''அவ அப்படிச் சொல்றளா, பாருங்க!'' என்றான் சுந்தரம்.

''நீங்கதான் என்னை அழைச்சிட்டு வந்தீங்களோ? நானேதான் வந்தேன்?'' என்றாள் நளினி.

''நீ வருவேன்னு எங்களுக்குத் தெரியாதாக்கும்?'' என்றாள் பத்மினி.

''நல்லாச் சொல்லுங்க'' என்றான் சுந்தரம்.

''உன் உணர்ச்சிகளை அப்பட்டமாக எங்களாலே புரிஞ்சிக்க முடிகிறதனாலே தான்..''

''..சிக்கல் வருகிறது'' என்று சுந்தரம் பத்மினியின் வாக்கியத்தை முடித்தான்.

''இப்ப என்ன சிக்கல் வந்து விட்டதாம்?'' என்று வினவினாள் நளினி.

''சும்மா ஏதோ வேடிக்கைக்குப் பேசினால் அதைப் புரிஞ்சுக்காம...'' என்றாள் பத்மினி.

''வர வர மூளை குறைஞ்சுதான் போச்சு'' என்றான் சுந்தரம்.

''அதை அப்பப்பத் தீட்டிவிட நீங்க இல்லையே, அதனால் தானே?'' என்றாள் நளினி.

''கட்டாயமாக!'' என்றான் சுந்தரம்.

அதற்குள் பத்மினியின் வீடு வந்து விட்டது. பத்மினி இறங்கிக் கொண்டாள். ''நீங்க என்னவோ சொல்லனும்னு ஆரம்பிச்சீங்களே!'' என்று கேட்டாள், சுந்தரத்தைப் பார்த்து.

''ஒண்ணுமில்லை. நளினி, ரொம்ப உணர்ச்சி வசப்படறா. மாணிக்கமும் மிகவும் நுண்ணிய அறிவு கொண்டவன். நளினிதான் சமர்த்தாக நடந்து கொள்ளணும். மாணிக்கத்தை ஒரு மனிதனாக மதித்து நடத்தினாலே அவன் மலர்ந்து விடுவான். ஆனால் அதற்கென்று அவனைக் காப்பாற்றுவதாக எண்ணி, அதிகமாக ஒரு கவலையும் கரிசனமும் காட்டினால், அவன் இறுகி விடுவான். மிகவும் எச்சரிக்கையாக நடக்க வேண்டும்'' என்றான் சுந்தரம்.

''ரொம்ப அழகாகச் சொல்லிட்டீங்க; ஒரு விதப் புதுமையும் இல்லாமல் முதல் நாளிலிருந்து நான் அவனிடம் சண்டை போட்டு வந்தேன். என்னிடம் எவ்வளவு சகஜமாகப் பழகுகிறான்!'' என்றாள் பத்மினி, உற்சாகத்துடன்.

''ரொம்ப நன்றி. உங்கள் இரண்டு பேரையும்போல நான் புத்திசாலியாக இல்லாவிட்டாலும், ஆராய்ந்து சொல்லியிருக்கீங்களே, அப்படியே நடந்து கொள்றேன்; சரிதானே?'' என்றாள் நளினி, வேடிக்கையாக.

''உன் தலை! உன்னை ஒரு மனுஷி என்று பேச வந்தேனே!'' என்றாள் பத்மினி.

''இது கைவிட்ட கேஸ், விடுங்க; புத்தி மட்டும் ஒருத்தர் புகட்டி நிரம்பாது. நாங்கள் வர்றோம்'' என்று கூறி விடைபெற்றான் சுந்தரம்.

பத்மினி அவர்கள் கிளம்பும் வரை நின்று விட்டுப் பிறகு தன் வீட்டினுள் நுழைந்தாள்.

சுந்தரம் காரை மெதுவாகச் செலுத்தினான். நளினி கலகலவென்று சிரித்தாள்.

''என்ன சிரிக்கிறே நளீ?''

''இது என்ன, மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலமா? நீங்க ஏன் மெதுவாக ஓட்டறீங்க?'' என்று கேட்டாள் நளினி.

''மாப்பிள்ளை அழைப்புக்கும் மெதுவாக ஊர்வலம் வரலாந்தான். மாப்பிள்ளை இல்லை என்று திரும்புபவளையும் ஊர்வலம் வந்து வழியனுப்பலாம், இல்லையா?''

என்று கள்ளங் கபடமில்லாமல் கேட்டான் சுந்தரம்.

நளினிக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

"என்ன நளினி, மௌனமாயிட்டே?" என்று கேட்டான் சுந்தரம்.

"எனக்குப் பேசவே தெரியவில்லே, அத்தான். மனம் குழம்புறது. உங்களுக்குப் பெரும் தவறு செய்துவிட்ட மாதிரியும் இருக்குது. செய்யாமல் வேறு வழியும் புரியலே. உங்க செயல்கள் எல்லாம் மின்னல் வேகத்தில் நடக்கின்றன. என் சின்ன மூளைக்கு அவற்றைக் கண்டு கொள்ளக் கூடத் திராணியில்லே" என்ருள்.

"எல்லாம் சரியாத்தான் நடந்திருக்குது. வேறு விதமா நடந்தாலும் நீயோ நானே சந்தோஷமாக இருக்க முடியாது. ஆனல், இனிமேல் அந்த முட்டாளை எங்கும் ஓடிவிடாமல் பாத்துக்க."

"அப்படிச் சந்தேகப்பட்டுக் கொண்டு ஏன் கூட்டிக்கிட்டு வந்திங்களாம்?" என்று கேட்டாள் நளினி.

பதிலுக்குச் சுந்தரம் 'ஓ'வென்று சிரித்து விட்டு, வண்டியை விரைவாக ஓட்டிச் சென்ருன்.

32. தெளிவு

"நளினி, நான் ஊருக்குப் போய் விட்டு வருகிறேன். நல்ல பெண்ணைகப் பிழைக்கக்கோ!" என்ருன் சுந்தரம்.

தம்பூராவைத் துடைத்துக் கொண்டிருந்த நளினி நிமிர்ந்து நோக்கினுள். அறையின் வாசற்படியில் நின்ற சுந்தரத்தைக் கண்டாள். தம்பூராவை அப்படியே வைத்துவிட்டுத் துள்ளி எழுந்து வந்து தன் அத்தானின் முன் நின்ருள். "என்ன அத்தான், திடீரென்று கிளம்பி விட்டீர்கள்?" என்று வியப்புடன் கேட்டாள்.

சுந்தரம் சிரித்தான். சாந்தமான கண்களுடன் அவளை ஏற இறங்க ஒரு முறை பார்த்துவிட்டு, "நான் வந்த வேலே முடிந்து விட்டதல்லவா? போகிறேன்" என்ருன் சாவதானமாக.

நளினி அவனை ஊடுருவிப் பார்த்தாள். சுந்தரத்தின் மனசின் ஜன்னல்கள் திறக்கவில்லை போலும். அவனுடைய சிரித்த கண்களிலிருந்து அவளால் ஒன்றும் கண்டு கொள்ள முடியவில்லை.

"என்ன, நளினி அப்படிப் பார்க்கிறே?"

நளினி அவன் மீது வைத்த கண்ணை வாங்காமல் பேசினுள். "நீங்க எனக்குச் செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போறேன், அத்தான்? உங்களைப் போன்ற உத்தமர் என் தகப்பனுருக்குப் பிள்ளையாக வாய்ப்பது.."

தன் வேதனையை மறைக்கச் சுந்தரம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். "எனக்கு என்ன கைம்மாறு வேணும் நளினி? நீ சந்தோஷமாக இருக்கவேணும். அதுதான் எனக்கு வேண்டியது."

"உங்கள் நண்பரிடம் சொன்னீர்களா இதே போல" என்று எங்கோ பார்த்துக்கொண்டு கேட்டாள் நளினி.

"கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த பேச்சும் எவ்வளவு தூரம் வரும் நளினி? எனக்குத் தெரிந்தவரை சொன்னேன். அவன் புத்திக்கு எட்டியது எதுவோ? இன்று உன்னிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். உனக்கு எந்தச் சமயத்தில் என் உதவி வேண்டுமானுலும் நான் வருவேன். தயக்கமின்றிக் கூப்பிட்டு அனுப்பு" என்ருன் சுந்தரம்.

"நீங்கள் சொல்லவேண்டுமா அத்தான்? அதைத் தவிர நான் என்ன செய்வேனும்?" என்ருள் நளினி. அப்போது அவளுடைய மனத்திரையில் மாணிக்கமும் சுந்தரமும் அருகருகே நின்றனர். சுந்தரத்துடன் வாழ்வு ஒரு பக்கம் விரிந்தது. தான் அவனை மோசம் செய்து விட்டதுபோன்ற ஒரு குற்ற உணர்ச்சியும் ஏற்பட்டது அவளுக்கு.

சுந்தரம் மீண்டும் ஒரு முறை, "நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, "நீயும் ஸ்டேஷனுக்கு வருகிருயா?" என்று கேட்டான்.

"நேரம் இருக்கிறதா, அத்தான்? நான் புடைவை மாற்றிக்கொண்டு வருகிறேன். நீங்கள் இன்றைக்கே கிளம்புவது எனக்குத் தெரியாது. நாளைவரை இருப்பீர்கள் என்று இருந்து விட்டேன்."

"எனக்கே தெரியாது. சற்று முன்தான் தீர்மானித்துக் கொண்டேன்."

"ஏன் இந்த அவசரமோ?"

"திடீரென்று கிளம்பி வந்துவிட்டேன் அல்லவா? திரும்பவும் உன் கல்யாணத்துக்கு லீவு போட வேண்டாமா?"

"பழனிக்கு ஏன் திடீரென்று போனீர்கள் அத்தான்? எப்படித் தெரிஞ்சுது? எப்படி அழைத்து வந்தீங்க அவரை?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் நளினி.

"இதுவரை நீ கேட்கவில்லையே என்று நினைத்துக் கொண்டே இருந்தேன் நான் சொல்றேன், கேள். நாம் இப்படியே சடுகுடு ஆடிக்கொண்டு எத்தனை நாட்கள் காலம் தள்ள முடியும்? என் அம்மாவும் என்னை நெருக்கிக்கொண்டிருந்தாள். இங்கே மாமாவும் மாமியும் கவலைப் பட்டார்கள். உன் உண்மையான அபிப்பிராயம் தெரிவதற்காகக் காத்துப் பார்த்தேன். இந்த முறை வந்தது முதல் உன்னை நான் எப்படிக் கவனித்

தேன் என்பது உனக்குத் தெரியாது. மாணிக்கம் முட்டாளாக இருக்கலாம். உனக்கு அந்தச் சம்பந்தம் சரிவராமல் கூட இருக்கலாம். ஆனால் அந்தப் பயலைத் தவிர உன் மனசில் யாருக்கும் இடமில்லை என்பதைக் கண்டு கொண்டேன். இது எனக்குத் தெரியாத புதுமையல்ல. ஆனாலும், அவன் உன் எதிரே இல்லாத போது உன் மனம் மாறுமோ என்ற சபலம் எனக்கு. உன் உறுதியைக் கண்டேன். உடனே பழனிக்குக் கிளம்பி விட்டேன்.''

''பழனிக்குப் போகணும்னு எப்படித் தெரியும்?''

''மாமாவும் மாமியும் உங்கள் பழனிப் பிரயாணத்தைப்பத்திச் சொன்னார்கள். அவன் எழுதிய கட்டுரையை நானுந் தானே பார்த்தேன்! உன் நிலையைப் பார்த்தேன். உடனே கிளம்பினேன். அவ்வளவுதான்.''

''நம் தொடர்பு இன்றி, அவர் இந்திரா காலனிப் பிள்ளையாகப் போய் உட்கார்ந்தால், அவருக்கு அங்கும் வாழத் தெரியாது, இங்கும் வாழத் தெரியாது. அநியாயமாகப் பிசுபிசுத்துப் போய் விடும் ஓர் அருமையான வாழ்வு'' என்றாள் நளினி.

''சரி, சீக்கிரம் உடை மாற்றிக் கொண்டுவா'' என்று கூறிவிட்டுச் சுந்தரம் அப்பால் நகர்ந்தான்.

நளினி ஒரு பழைய பட்டுப் புடைவையை உடுத்துக்கொண்டு சுந்தரத்தின் எதிரே வந்து நின்றாள். பொன் வண்டு நிறப் பட்டுப் புடைவை அது. சாண் அகல அரக்குக் கரை, அதே பொன் வண்டு நிறத்தில் ரவிக்கை அணிந்து, கொட்டை கொட்டையாகப் பவழமாலை தரித்திருந்தாள்.

"காதிலே ஒரு வெள்ளைக் கல் மாட்டல், தலையிலே ஒரு நாகர், இடுப்பிலே சலங்கை ஒட்டியாணம் - அவ்வளவுதான் பாக்கி. சரியான செட்டிப் பள்ளத்து மருமகதான்'' என்றான் சுந்தரம்.

''இருக்கட்டும் போங்க. எனக்கு இந்தப் புடைவை ரொம்பப் பிடிக்கும்'' என்றாள் நளினி.

அவள் வேகமாகச் சென்று, ரத்தினத்தை இறக்கிவிட்டு, ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

சுந்தரம் தன் மாமன் மாமியிடம் விடை பெற்றுக் கொண்டு வண்டியில் ஏறிக் கொண்டான்.

கொஞ்சதூரம் மௌனமாகவே காரைச் செலுத்தினாள் நளினி; பிறகு ''அத்தான்'' என்று அழைத்தாள்.

''இனிமேல் 'அண்ணா' என்று கூப்பிடு. இல்லையோ சுந்தரம்'னு..''

''ஆமாம், 'சுந்தரம்'னே கூப்பிடறேன். உங்களுடன் மனம் விட்டுப் பேசலாமா?''

''கேட்கணுமா நீ?''

''உங்க நண்பரை நம்பி நான் என் வாழ்க்கையை ஒப்படைப்பது நீர்க்குமிழி மீது மாளிகை கட்டுவது போல் தான். ஆயினும் என் மனம் அங்கேயே நிலைத்து நிற்கிறது. என் சுகத்துக்காக நீங்கள்....''

சுந்தரம் எங்கோ பார்த்தான். அவன் கை, சட்டையைக் கெட்டியாகப் பிடித்து விறைத்து நின்றது.

நளினிக்குக் குரல் எழவில்லை. ஆயினும் சமாளித்துக் கொண்டு அவள் தொடர்ந்தாள். ''சுந்தரம், என்னால் நீங்கள் திருமண வாழ்வே இல்லாமல் இருந்து விடுவீர்களோ? என்னால் உங்கள் குடும்பமே கஷ்டப்படுமோ? அத்தையும் மாமாவும் என்னைச் சபிப்பார்களோ? எல்லாருடைய நல்வாழ்த்தும் இருந்தாலன்றி நான் எப்படிச் சுகமாக இருக்க முடியும்?'' அவள் குரல் கரகரத்தது.

''நான் ஊருக்குக் கிளம்பும் சமயம் கண்ணீர் விடாதே, நளினி! உன் மீது ஒரு குத்தம் வரும்படி நான் பார்ப்பேனா? இதை நான் சொல்ல வேண்டுமா? என் மனம் தெளிய நேரம் வேண்டாமா?''

சுந்தரத்தின் பதில் நளினிக்கு இதமளிக்கவில்லை. ஆயினும் செய்கை அறியாது அவள் பேசாமல் இருந்தாள்.

ரெயிலடியில் மாணிக்கம் காத்திருந்தான். மூவருமாக ஓடியாடிச் சுந்தரத்துக்கு இடம் கண்டுபிடித்தார்கள்.

முதல் வகுப்புப் பெட்டியில் அவன் ஏறி அமர்ந்ததும் நளினியின் மனத்தில் ஒரு விநாடி ஒரு கேள்வி எழும்பியது. 'இப்படிப்பட்ட வாழ்வை உதறிவிட்டேனா?'

வண்டி கிளம்பியது. சுந்தரத்தின் தலை மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு நளினியும் மாணிக்கமும் காருக்குத் திரும்பினார்கள்.

''பார்க்கில் சற்று நேரம் காரை நிறுத்து, நளினி'' என்றான் மாணிக்கம்.

நளினியின் இதயம் வானம்பாடி போலப் பறந்து ஆகாயத்தில் சஞ்சரித்தது. காரை ஒரு பெரிய மரத்தின் கீழ் நிறுத்தினாள் அவள்.

மாணிக்கம் அவள் பக்கம் திரும்பினான். அவள் உடல் புல்லரித்தது.

''உன்னிடம் பேச வேண்டுமென்றே வந்தேன்'' என்றான் அவன்.

''உம், சொல்லுங்க'' என்றாள் நளினி.

''கல்யாணத்தை நிச்சயம் செய்துவிட்டார்களே? உனக்குச் சம்மதந்தானா?''

''உங்களுக்கு?'' நளினி மாணிக்கத்தின் முகத்தை அளந்தாள். அவன் கேட்க நினைத்த கேள்வியை அவள் நயனங்களே நன்றாகக் கேட்டன.

மாணிக்கம் அந்தப் பார்வை முன் அஞ்சினான். எங்கோ பார்த்தான்.

மாணிக்கம் நளினியை ஓரக்கண்ணுல் பார்த்தான். அவளுடைய எழிலுருவம் அவன் நெஞ்சை அள்ளியது. 'இந்த வனப்பு மிகுந்த பாவை எனக்கே உரிய வள்' என்று அவன் மனம் ஆனந்தக் கூத் தாடியது. உடனே, அவன் புத்தி கடிவா ளம் போட்டது. ஆயினும், அவன் மனத்தின் வேகம் மிகுந்திருந்தபடியால், அதுதான் முந்திக்கொண்டு பேசியது. ''நளினி, இந்த உடை உனக்கு நன்ருக இருக்கிறது'' என்ருன் அவன்.

நளினியின் முகம் நாணமும் மகிழ்வும் போட்டியிடப் பொலிவுற்றது.

மாணிக்கம் அடுத்த கணமே தன் பேச்சுக்காக மிகவும் வருந்தினுன். தான் சொல்ல வேண்டுமென்று அவளை அழைத்து வந்த விஷயத்துக்கும், தன் மனம் அவசரப்பட்டுப் பேசிய தன்மைக் கும் வித்தியாசம் மிக இருந்தது. அவசரக் குடுக்கையாகக் காரியத்தைக் கெடுக்க வந்த நாக்கை அவன் நறுக்கென்று கடித்துக்கொண்டான்.

''என்ன சொல்ல வேண்டும் என்று ஆரம்பித்தீர்கள்?'' என்று நளினி பரிவுடன், ஒரு குழந்தையைக் கேட்பது போலக் கேட்டாள்.

''இந்தக் கல்யாணம் சரிப்படாது என்று எனக்குத் தோன்றுகிறது'' என்ருன் மாணிக்கம் இழுத்தாற்போல்.

நளினி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''ஆமாம் நளினி. உன் குடும்பத்துக்கும் என் குடும்பத்துக்குமுள்ள தாரதம்மியம் உனக்குத் தெரிந்தது தான். உன்னுல் இந்திரா காலனிச் சூழ்நிலையிலே சந்தோஷமாக இருக்க முடியாதே!'' என்ருன் மாணிக்கம், படபடப்பாக.

''என் மனசில் ஒருவிதக் குழப்பமுமில்லை. உங்களுக்குத் தைரியமில்லை என்ருல் அப்பாவிடம் சொல்வதுதானே?'' என்ருள் நளினி.

''ஏற்கனவே நன்றிக் கடன்பட்டிருக் கிறேன். அவரே எங்க வீடு தேடி வந்து கேட்கும்போது மறுக்க முடியுமா?''

''அதனுல்?''

''அதனுல்தான் உன்னைக் கேட்கிறேன். நீ என்னை இந்தப் பந்தத்திலிருந்து விடுவித்துவிடு, நளீ!''

''விடுவித்து விடு என்று கேட்பதற்கு 'நளீ' என்ற விளி அநாவசியம் அல்லவா?'' என்ருள் நளினி, வெடுக்கென்று.

மாணிக்கம் லேசாகச் சிரித்தான். ''பழைய நட்புரிமையை விடமாட்டேன்'' என்ருன்.

''ரொம்ப ரொம்ப நன்றி. இப்ப என்னை என்ன செய்யச் சொல்றீங்க?''

''உன் அப்பாவிடம் நீயே சொல்லி...''

''எனக்கு ஒண்ணும் ஆட்சேபம் இல்லையே? உங்களுக்குத்தானே சந்தேகம் வருகிறது? நீங்களே போய்ச் சொல்லிக் கொள்ளுங்கள்.'' 'கோழைகள் ஆயிரம் முறை சாவார்கள்' என்று என்ருே படித்தது இப்போது அவள் மனத்தில் மிதந்து வந்தது. எரிச்சல் மிகுந்தது.

இதுவரை அவள் நினைத்தது வேறுவிதமாக இருந்தது. 'மாணிக்கம் இதுவரை சங்கோசப்பட்டார். இப்போது பெரியவர்கள் அநுமதி கிடைத்துவிட்டது. உறவும் உறுதிப்பட்டுவிட்டது. ஆசை வார்த்தைகள் பேச முன் வருகிருர் போலும்' என்று எதிர்பார்த்து அவள் ஆவலுடன் இருந்தாள். உள்ளத்தைத் திறந்து காதலைப் பொழியப் போகிருர் என்று எதிர்பார்த்தாள். சுந்தரத்தை அனுப்பி விட்டு இருவரும் தனிமையில் வந்ததும், எடுத்த எடுப்பில் அவனுடைய நோக்கு தன்னுடைய அலங்காரத்தில் லயித்ததும் அவள் நெஞ்சம் விம்மிதமுற்றது. உடனே, கயிறு அறுந்து கிணற்றில் வீழ்த்திய மாதிரி அவன் பேச்சுத் திரும்பியதும், அவளுக்குக் கோபம், ஏமாற்றம், ஏக்கம், எல்லாம் தோன்ற ஆரம்பித்தன.

நளினி காரைக் கிளப்பினுள்.

''நில், நளீ'' என்ருன் மாணிக்கம்.

விசையைத் திருப்பி வண்டியை நிறுத்திவிட்டாள் நளினி. ஆனுல் அவள் மாணிக்கத்தின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவில்லை.

''நளினி, நீ என்னை நம்பு. உன் நலனுக்குத்தான் நான் சொல்வது.''

''உங்கள் மனசைத் திடப்படுத்திக் கொண்ட பிறகு மாரியம்மனை அழைத் திருக்கலாம். அம்மன் உத்தரவைக் கேட்டுவிட்டு அதைப் பொய்யாக்குவதே உங்கள் குடும்பத் தொழில் போலும்!'' என்ருள் நளினி. காரசாரமாகப் பேசிக் கோபத்தைக் கொண்டாடும் வரையில் தான் தனக்குச் சக்தி இருக்கும்போலத் தென்பட்டது அவளுக்கு. வராத ஆத்திரத்தையும் வரவழைத்து, துக்கத்தைச் சமனப்படுத்தினுள் அவள்.

காரைக் கிளப்பி ஓட்ட ஆரம்பித்தாள் நளினி. தெருவையே நோக்கிக் கொண்டு ஓட்டும் அவளை மாணிக்கம் பார்த்தான். அவளைத் தன் அரவணைப்பில் இருத்தி ஆசுவாசப்படுத்தவேண்டும் என்றே அவனுக்கு விருப்பம் மனத்திலே அலைமோதும் அன்புப் பெருவெள்ளத்தை வெளிப்படுத்தி. அவளைப் போற்றவேண்டும் என்ற ஆசை கிளம்பியது. ஆயின் அவன் புத்தி 'வேண்டாம்' என்று தடுத்தது.

''உங்களை ஓர் உயர்ந்த ரசிகர் என்று நினைத்தேன். ஞானஸ்தர் என்று எண்ணினேன். வீணைகள் செய்யவேண்டிய கை என்று மதிப்பிட்டேன். பனைவாரைகளை அறுக்கும் ரம்பம் என்று தெரிந்து கொள்ளவில்லை'' என்ருள் நளினி.

மாணிக்கத்தின் நுண்ணறிவு அந்த அடியைத் தாங்கமாட்டாமல் வாடிச் சுருங்கியது. அவன் மௌனமாகத் தவித்தான்.

''அன்பில்லாத கணவனுடன் வாழ வேண்டுமென்று என் தலையில் எழுதியிருந்தால் அதை யாரால்தான் மாத்த முடியப் போகிறது?'' என்று தொடர்ந்து முணுமுணுத்தாள் நளினி.

மாணிக்கம் ஓரக்கண்ணால் அவளை நோக்கினான். அவள் நேரே பார்த்துக் கொண்டு காரைச் செலுத்தினாள்.

காரை வேகமாக ஓட்டிச் சென்று, வழக்கம்போல் வீட்டின் முன் விடாமல், அதை விடவேண்டிய கொட்டகைக்கே ஓட்டிச் சென்றாள். அவள் இறங்கி வண்டியைப் பூட்டினாள். மாணிக்கமும் இறங்கி மற்றக் கதவுகளைப் பூட்டினான். நளினி வேகமாக நடந்து வீட்டை நோக்கிச் சென்றாள்.

மாணிக்கம் ஒரு தாவு தாவி, அவள் எதிரே நின்றான். 'என்ன செய்கிறோம், ஏன் செய்கிறோம்?' என்று அவனுக்கே புரியவில்லை போலும். அவன் தன் இரு கைகளையும் நீட்டி அவள் வழியை மறித்தான்.

நளினி தலைகுனிந்து சிலையாக நின்றாள். மாணிக்கத்தின் கை நளினியை ஸ்பரிசித்தது. உடனே இருவரும் மின் அதிர்ச்சியுண்டவர்போல விலகி, ஒருவரை ஒருவர் பார்த்தனர். நளினியின் கண்கள் மழைக் காலத்து ஏரிகளாக உடையக் காத்து நின்றன. மாணிக்கம் அசைவற்று நின்றான்.

''வழி விடுங்க!''

''மாட்டேன்'' என்றான் மாணிக்கம். அவன் குரல் உணர்ச்சியில் கனத்து ஒலித்தது.

காரைச் சுற்றிக்கொண்டு வேறு பக்கமாக வெளியேற முயன்ற நளினியைக் கண்ட மாணிக்கத்தின் புத்தியும் மனமும் தங்கள் சச்சரவை மறந்தன போலும். புத்தி பேசுவதற்குள் மனம் மிஞ்சியது. ஒரு கையை நீட்டி அவன் அவள் தோளைப் பிடித்து நிறுத்தினான். அவள் காற்றில் அகப்பட்ட இலைச் சருகைப் போல வெடவெடத்தாள். அவள் தோளை அணைத்தபடியே அவன் தன் கைக்குட்டையால் அவளுடைய கண்களைத் துடைத்தான். அவள் விக்கி விக்கி அழுதுவிட்டாள்.

புத்தி திடீரென்று விழித்துக் கொண்டது. மாணிக்கத்தைச் சாட்டையடி அடித்தது. அவன் சட்டென்று நகர்ந்து கொண்டான். ''என்னை மன்னித்து விடு, நளீ! என்ன செய்கிறோம் என்று எனக்கே புரியவில்லை'' என்றான், பணிவாக.

''வருத்தப்படுகிறீர்களாக்கும்!'' என்று ஏளனமாகக் கேட்டாள் நளினி.

''வருத்தமா? வருத்தம் எதற்கு?''

''எனக்கென்ன தெரியும்? நீங்கள் தாம் என்னவோ உங்கள் மனசுக்குள்ளேயே ஒரு நீதிமன்றம் நடத்துகிறீர்களே?''

''இதுவரை என்று சொல்.''

''இனி?''

''இனிமேல் பேசக்கூடாது.''

''முத்து, உங்களுக்கு ஒன்று சொல்லட்டுமா? இப்படியும் அப்படியும் நிலை மாறிக்கொண்டே இருந்தால், மத்தவர்களுக்கு அலுப்புத் தட்டிவிடலாம், இல்லையா?'' என்று கேட்டாள் நளினி.

''இப்ப என்ன சொல்றே, நளினி?'' என்று திடுக்கிட்டுக் கேட்டான் மாணிக்கம்.

''புதுசா ஒண்ணும் உண்மையைச் சொல்லிவிடவில்லை. பொதுவாக மத்தவர்களுக்கு எப்படியிருக்கும்னு சொன்னேன்.''

''உனக்கு என்மீது அலுப்பு வந்துவிட்டதா, நளீ? எனக்கு அது வேண்டியதுதான். உன்னோடு எப்படி எப்படியோ பேசிவிட்டு, உடனே நிலை தடுமாறிச் சலுகையோடு உன்னை அணுகியது தவறுதான். எனக்கு உரிமை கிடையாது தான்'' என்றான் மாணிக்கம்.

''என் மனசுவரை அந்த உரிமையை உங்களுக்கு என்றைக்கோ கொடுத்துவிட்டேனே? அதன் தொல்லைதான் இது.''

''நளீ!'' என்று அன்பு சொட்ட அவளைப் பார்த்து, அவள் இரு கைகளையும் பிடித்துக்கொண்டான் மாணிக்கம்.

''மாரியம்மன் சொல் இனி பொய்க்காதே?'' என்று குறும்பாகக் கேட்டாள் நளினி.

''எப்படி இனிப் பொய்யாகும்?'' என்றான் அவன், அவள் தலையைக் கோதியபடியே.

''இவ்வளவுகூட உங்களுக்கு உணர்ச்சி இருக்கும்னு....''

''எனக்கா உணர்ச்சியில்லை? அதனால் நான் படும்பாடு....''

''யார் கண்டார்கள்? ராகத்தில் இருக்கும் சூட்சும புத்தி மனித உள்ளத்தைச் சுலபமாக இனங் கண்டுகொள்ளும் என்று நினைத்தேன். அதன் மென்மையான உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளும் என்று எண்ணினேன்.''

''நான் என்ன தெரிந்துகொள்ளாமல் இருந்தேன் என்கிறாய்?''

மாணிக்கமும் நளினியும் ஒரே அளவில் காலை வைத்து நடந்துகொண்டே பேசினார்கள். நடக்கும்போது அகஸ்மாத்தாக ஒருவர் மீது ஒருவர் படும்போது இருவரும் புளகாங்கிதம் அடைந்தனர்.

''என்ன தெரிந்து கொண்டீர்களாம்? கேவலம் நன்றி உணர்ச்சிக்காக விதியே என்று மணக்க முன்வந்திருப்பதாகச்

சொன்னால் எந்தப் பெண்ணாவது கேட்டு ஆனந்தமடைவாளா?''

மாணிக்கம் சிரித்தான். "தப்புத்தான், நளீ! பேசத் தெரியவில்லை எனக்கு."

''உக்கும்! உங்கள் மனசுதான் உங்களுக்குப் பெரிசு. அதன் கஷ்டந்தான் முக்கியம்.''

''போதும், போதும். மேலே பேசாதே. நம் நட்பு வளர்ந்தால் நீ கஷ்டப்படுவாயோ என்று அஞ்சி, உன் நல்வாழ்வில் நான் குறுக்கிடக் கூடாதென்று எண்ணித்தான் விலகினேன். இல்லாவிட்டால் எதற்காக நான் ராமகிருஷ்ண மடத்தில் ஒளிந்துகொள்ள வேண்டுமாம்? எதற்காகப் பழனிக்கு ஓடினேன் என்று நினைக்கிறாய் நீ? பத்மினியைக் கேட்டுப் பார்.''

நளினி விரிந்த கண்களுடன் மாணிக்கத்தைப் பார்த்தாள். அவன் திடீரென்று பெரிய உருவம் எடுத்து அவள்முன் நிற்பதுபோல இருந்தது. அவன் இதய சாம்ராஜ்யம் அவள் முன்னே விரிந்தது போலக் காட்சி தோன்றியது. ஆனாலும் அவன் வாயாலேயே அறியவேண்டும் என்று சபலம் தட்டியது.

''ஆமாம்! பெரிய காதல்! ஒரு நாள் ஒரு பார்வையில்கூட நான் அறிந்தது கிடையாதே'' என்று சிணுங்கினாள் அவள்.

''என் அன்பை வெளியிட்டு என்ன பயன், நளினி? உனக்கேற்ற வாழ்க்கை அளிக்க முடியாத நான் ஆசைப்படலாமா? நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன்; ராமகிருஷ்ண மடத்தில் நான் இருந்தபோது திடீரென்று ஒரு நாள் நீயும் பத்மினியும் வந்தீர்கள்....'' என்று ஆரம்பித்து, மாணிக்கம் அன்றை அநுபவம் முழுவதும் கூறினான். ''அன்று தான் உனக்கு என்மீது அக்கறை இருக்கிறது என்று தெரிந்தது.''

''அப்புறம்? சக மாணவன் என்ற கரிசனம் என்று நினைத்து ஒதுங்கிவிட்டீர்களாக்கும்?'' என்று நிஷ்டுரமாய்ப் பேசினாள் நளினி.

''அப்படி நிர்ணயிக்க முடியாமல் அதிகப் பரிவுடன் உன் குரல் அன்று ஒலித்ததே?''

''ரொம்பத்தான்! என் குரலில் இழையும் ஏற்றத் தாழ்வெல்லாம் உங்களுக்குத் தெரியுமாக்கும்!''

''தெரிந்ததினால் வந்த வினைதான். உன் ஒவ்வொரு பார்வையும், முக ஜாடையும், அங்க அசைவும் என் இதயத்தில் ஆழப் பதியும் என்பது உனக்குத் தெரியக் காரணமில்லை. என்னைப்பத்தி நீ கவலைப்பட்டது வெறும் கரிசனமல்ல என்று புரிந்து, உன்னை முன்னை விடக் கூர்ந்து கவனித்தேன். என் அநுமானம் ஊர்ஜிதமாயிற்று. ஆனால் என்ன பயன்?''

''இப்ப மட்டும் திருமணத்துக்கு இணங்கும்படி என்ன நடந்துவிட்டது?''

''என்ன செய்வது? நான் என் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ளத்தான் பாடுபட்டேன். ஆனால் மனசைக் கட்டுப்படுத்த முடியவில்லையே? நீதான் ஒரு நிமிஷத்துக்கு முன் தெரிந்து கொண்டிருப்பாயே?''

''எது உண்மையோ?'' என்றாள் நளினி, மெதுவாக, நம்பாத ஒரு குரலில்.

''இது உண்மை'' என்று கூறி, அவள் கரத்தை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டான் மாணிக்கம். 'திறந்த வெளி. வீட்டின் முன் நிற்கிறோம். யார் கண்ணில் படுமோ?' என்றுகூட அவனுக்கு அப்பொழுது உணர்வில் உதிக்கவில்லை போலும்.

''இதெல்லாம்கூட எனக்கு நம்பிக்கையில்லை'' என்று கொஞ்சினாள் நளினி.

''நம் சுந்தரம் தான் நம் இரண்டு பேருக்குமாகச் சேர்த்து மோதிரம் வாங்கித் தந்துவிட்டானே? வா, மாத்திக் கொள்ளலாம். அப்போ உறுதிதானே?''

''ஊஹூம். அப்பக்கூட....''

''பின்னே என்னதான் செய்யணும்னு சொல்றே நீ?''

''பழனி மலையிலே, ஆண்டவன் சந்நிதியிலே மாத்திக்கணும். உங்கள் குரு நாதர் முன்னிலையிலே அது நடக்கணும்.''

''ரொம்ப நல்லாயிருக்குது! பழனிக்குப் போறதும் வரதும் உனக்கு அவ்வளவு சுலபமாக இருக்குதோ?'' என்று கேட்டான்.

''முத்து!'' என்றாள் நளினி, கலகலவென்று சிரித்துக்கொண்டே.

'' என்ன, சிப்பி!'' அவன் ஒரு கையால் அவள் இடுப்பைச் சுற்றித் தழுவினான்.

''உஷ்!'' என்று கூறி, நளினி சட்டென்று விலகி, முன்னாடி ஓடி, படிகளில் ஏறி, முன் அறையில், ஒரு சோபாவில் போய் அமர்ந்தாள்.

அவனும் அவளைப் பின்தொடர்ந்து வந்தான். ''என்ன, நான் சொன்னதில் என்ன தப்பு? முத்தான எனக்குச் சிப்பியாக இருந்து காப்பாத்தணும்னு நீ நினைச்சுக்கலையா?'' என்று கேட்டான்.

''வேண்டாம் முத்து, அந்த உவமை எனக்குப் பிடிக்கவில்லை. முத்து திரண்டதும் என்ன ஆகிறது? சிப்பியைவிட்டுப் பிரிந்து விடுகிறது! அல்லது பிரித்து எடுத்து விடுகிறார்கள். இனிமேல் நான் 'முத்து'ன்னு கூப்பிட்டா, நீங்க பெரிய ஜோக் மாதிரி நினைச்சு, 'சிப்பி'ன்னு அழைக்க வேண்டாம். என் குடலே நடுங்குகிறது'' என்று கூறி, பீதியுற்ற முகத்துடன் மாணிக்கத்தின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள் நளினி.

''அசடு! முதிர்ந்த முத்து, தாய்ச் சிப்பியைத்தான் விட்டுப் பிரியும். செயற்கை

யாக, அலங்காரமாக, பாதுகாப்புக் கென்றே ஓர் அழகுச் சிப்பி வருகிறதே, அதை விட்டு அகலாது. அதை உனக்கு எடுத்துக் காட்டுவதற்காகத்தான் அன்றைக்குச் சுந்தரமும் நானும் சிப்பி மாதிரி பேழை தேடி எடுத்தோம்.''

''நல்லாத்தான் பேசறீங்க. எங்க அப்பா காதுபட இப்படிப் பேசக் கூடாதா?''

''உங்க அப்பாவுக்கு ரசிக்காது'' என்றான் மாணிக்கம்.

நளினி திடீரென்று புரிந்துகொண்டு விட்ட மாதிரி குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள். மாணிக்கமும் சிரித்தான்.

''உனக்கு யோசனை இருக்குதா, நளீ? உங்க அப்பா எதிரே என் காதல் சம்பாஷணையெல்லாம் பேசமுடியுமா?'' என்று அவன் மீண்டும் விளக்கியவுடன் கண்ணில் நீர் வரும்வரை அவர்கள் இருவரும் சிரித்தனர்.

ஆத்மநாதன் அப்போது அகஸ்மாத்தாக அங்கு வந்தார். இருவரும் கம்பீரமாகி விட்டனர்.

''சுந்தரம் கிளம்பி விட்டானுக்கும்? எப்போ வரேன்னு சொன்னான் அவன்?'' என்று கேட்டார் அவர்.

''சீக்கிரமே வரேன்னு சொன்னான்'' என்றான் மாணிக்கம்.

''ஒரு மாசம் லீவு கேட்டு விட்டு வருவாராம், கல்யாண ஏற்பாடுகள் செய்ய'' என்றாள் நளினி.

''ஆமாம், அவன் தானே செய்யணும்? எனக்கு என்ன தெரியும்?''

மாணிக்கம் தன் வீட்டுக்குக் கிளம்பி விட்டான். வழியனுப்ப நளினி வாசற்படி வரை வந்தாள். ஆத்மநாதன் கண்ணில் படாமல் நளினியின் கன்னத்தைக் கிள்ளி விட்டு மாணிக்கம் திரும்பிப் பார்க்காமல் வேகமாக நடந்து சென்றான்.

அவன் தன் வீட்டினுள் நுழையும் போது அலமேலு கோவிலிலிருந்து வந்து கொண்டிருந்தாள்.

''என்ன தங்கச்சி, எப்பப் பார்த்தாலும் கோயிலுக்குப் போயிட்டு இருக்கே, இல்லே, அங்கிருந்து வந்துக்கிட்டு இருக்கே?''

''ஆமாம், அண்ணா. மனசிலே குழப்பம் இருந்தால் என்ன செய்யறது? அவங்கவங்க மனசை அவங்கவங்களே சரிக்கட்டிக்க வேண்டியதுதானே? அதுக்குத்தான் நாற்பது நாள் விடியக் கருக்கல்லே குளிச்சிட்டு முருகன் கோவில் சுத்தறேன். என்னோடு சில பெண்ணுங்களும் வராங்க. இன்னிக்கு நிறையப் பூக் கிடைச்சுது. பூக்காரையா ஒரு கூடையில் பூவை இனுமாக் கொடுத்தாரு. முருகனுக்கு தண்டு மாலை கட்டினேன். கொண்டு கொடுத்திட்டு வந்தேன்'' என்றாள் தங்கை.

''நல்லதுதான். தெரிஞ்சிருந்தால் நானும் வந்திருப்பேன்.''

''ஏன், அண்ணா?''

''என் மனசு குழப்பத்தை இன்னிக்குச் சுத்தமா தீர்த்து வச்சுட்டான். அந்த முருகப் பெருமானுக்கு நன்றி செலுத்த வேண்டாமா?''

''உனக்கென்ன அண்ணா? நினைச்சா பழனிக்கே போய்டுவே. நான் இங்கே இருக்கிற முருகனைத்தானே வேண்ட முடியும்?''

''நீ ரொம்ப வாயாடியாயிட்டே! நாங்க மறுபடியும் பழனிக்குப் போகணுமாம். அங்கே அந்தச் சந்நிதியிலேதான் மோதிரம் மாற்றணுமாம். நளினியம்மா உத்தரவு.''

''இந்த முறை நானும் வரணுமா, அண்ணா?'' என்று மெதுவாகக் கேட்டாள் அலமேலு.

''என்ன கேள்வி தங்கச்சி? நம்ப குடும்பம் இரண்டுந்தான் போகணும்'' என்றான் மாணிக்கம். பிறகு தன் தங்கையின் மோவாயைப் பிடித்து, ''தங்கச்சி, நீ ஏற்பாடு பண்றியா? அப்பாவிடம் கேட்க யோசனையா இருக்குது'' என்றான்.

''என்னிக்கும் யோசனைதானுக்கும்! சரி, நானே ஏற்பாடு செய்யறேன். நானும் வரணுமே?'' திடீரென்று அவள் முகம் மிகவும் நிதானமாகி விட்டது: ஆழ்ந்த சிந்தனையின் நிழல் அவள் முகத்தைக் கப்பியது.

''என்ன தங்கச்சி? என்ன திடீர்னு யோசனை?'' என்று கேட்டான் தமையன்.

''யோசனை முடிஞ்சு போச்சு அண்ணா, தெளிவுதான்'' என்றாள் தங்கை,

''என்ன புதிர் போடறே நீ?''

''புதிரெல்லாம் தானாகத் தெளியும், பொறுத்திரு'' என்று கூறிவிட்டு அலமேலு உள்ளே போய்விட்டாள்.

கொல்லைப் புறத்தில் தங்கள் தாயார் அம்பாரம் பாத்திரங்களைப் போட்டுக் கொண்டு தேய்ப்பதைப் பார்த்தே அவள் அங்கே விரைந்தாள் என்பது மாணிக்கத்துக்குப் புரிந்தது.

அவன் தன் அறைக்குப் போய் அமர்ந்து கொண்டான். இதுவரையில் கட்டெறும்புகளாக மொய்த்துக் கடித்து விடுவோம் என்று பயமுறுத்திக்கொண்டிருந்த யோசனைகளின் பளு நீங்கி, அவன் உள்ளம் வானம்பாடியாக ராக மாலிகை பாடியது. (தொடரும்)

Edited and Published by R. Narayanaswamy, for and on behalf of the Kalaimagal Office and Printed at M.L.J. Press Private Ltd., 55|56, Mundakanni Amman Koil Street, Madras-600 004.
Managing Editor: K. V. Jagannathan.



33. பொங்கும் மங்களம்

அலமேலு கோவிலிலிருந்து திரும்பி வரும்போது மீனாட்சி தன் வீட்டு வாசலிலேயே நின்றுகொண் டிருந்தாள். "அலமேலு, ஒரு நிமிஷம். இங்கே உள்ளே போய்ப் பார்த்துக்கொள்ளேன். ஸீஸர் தூங்கறான். டாக்டர் வீட்டிலேயே இல்லே. நான் பங்காரு அம்மா வீடு வரை போய்விட்டு வரேன்'' என்றாள்.

அலமேலுவுடன் வந்த மற்றப் பெண்கள் விடை பெற்றுக்கொண்டு சென்று விட்டனர். அலமேலு மீனாட்சியைத் தொட்டு நிறுத்தி, "ஏன் அக்கா, அவங்க வீட்டிலே என்ன?'' என்று தாழ்ந்த குரலில் கேட்டாள்.

"சமையல்காரப் பர்வதம் ஏதோ திடீர்ச் செய்தி வந்து ஊருக்குப் போய் விட்டாளாம். பங்காரும்மா தனியாக் கஷ்டப்படறாங்க.''

"வேறே யாராவது ஆள் போட்டுக் கிறதுதானே?''

"அதுவரை சொல்லு. இட்டிலி மாவு இருக்குது. நான் போய் அவங்களுக்குக் காபி, பலகாரம் பார்த்திட்டு வந்திடறேன்'' என்று சொல்லிவிட்டு அலமேலுவின் பதிலுக்குக் காத்திராமல் பங்காருவின் வீட்டைத் தேடி விரைந்தாள் மீனாட்சி.

அலமேலு மீனாட்சி வீட்டுக்குள் போய்ச் சகஜமாகக் காலையில் உள்ள வேலைகளைக் கவனித்தாள். மீனாட்சி திரும்பி வருவதற்குச் சற்று நேரம் பிடித்தது. யசோதா வந்தாள். அலமேலு அவளைத் திருப்பி அனுப்பினாள். "மீனாக்கா பங்காரும்மா வீட்டிலே இருக்காங்க. போய் ஒத்தாசை செய்'' என்று பணித்தாள்.

"இல்லே, அக்கா. நான்தான் நெதமும் ஸீஸருக்குப் பால் கலந்து கொடுத்து, உடம்புக்குத் தண்ணி ஊத்தி எல்லாம் செய்யறேன். குழந்தை எழுந்திருக்கிற நேரமாயிடுச்சே!'' என்றாள் சிறுமி.

"இது தான் உன்கிட்டே. பெரியவங்க சொன்ன உடனே ஓடணும். எனக்குத் தெரியாதாக்கும், நீ செய்கிற லட்சணங்கள் எல்லாம்?''

"இல்லே அக்கா, கோவிச்சுக்காதே, ஸீஸருக்குத் தண்ணி ஊத்தப் பிடிக்கும் எனக்கு.''

"சரி, அங்கே அக்கா தனியாக அலையட்டும். நீ இங்கே ராணி மாதிரி குந்திக்கிட்டு இரு.''

"இல்லே அக்கா, நான் போகிறேன். ஸீஸருக்கு நீ ஒண்ணும் செய்யக் கூடாது, அக்கா'' என்று கெஞ்சினாள் யசோதா. அரை மனத்துடன் மீனாட்சியைத் தேடிச் சென்றாள்.

அலமேலு குழந்தை ஸீஸரின் அருகில் அமர்ந்திருந்தாள். பங்காருவின் வீட்டுக்குச் சென்று பார்க்கவேண்டுமென்று அவள் மனம் விழைந்தது. ஆயினும் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு பேசாமல் இருந்தாள்.

மீனாட்சி சுறுசுறுப்போடு உள்ளே வந்தாள். அலமேலுவைப் பார்த்து, "டாக்டர் இன்னுமுமா வரலே?'' என்று பரபரப்புடன் கேட்டாள்.

"இல்லையே! ஏன் அக்கா?''

"மணவாளச் செட்டியின் கால் சுளுக்கிக்கொண்டதாம். வீங்கிக் கிடக்கிறது. பங்காரும்மா அவருக்கும் பணிவிடை செய்துகொண்டு வீட்டு வேலையையும் கவனிக்கச் சிரமப்படறாங்க. யசோதா பாட்டியைக் கூட்டி அனுப்பினேன். அந்த அம்மாள் சமையலையாவது செய்து வைக்கலாம். இல்லையா? செட்டியார் இந்த நிலையிலும் பூஜையை விட மாட்டாராம். மதனகோபாலன்தான் திண்டாடறான்'' என்றாள் மீனாட்சி.

அலமேலு மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டுத் தன் வீட்டுக்குத் திரும்பினாள். தனபாக்கியம் கொல்லைப் புறம் துணி துவைத்துக்கொண் டிருந்தாள். அலமேலு அங்கே போய், தன் தாயிடம் பங்காருவின் வீட்டு நிலைமையை விளக்கினாள்.

''சரி, இந்த மீதித் துணியை நீ கசக்கி அலசிப் போடு. நான் போய்ப் பார்த்துட்டு வரேன். யசோதாவின் பாட்டி வேலை செய்வாளே தவிர, சும்மா 'அதைக் கொடு, இதைக் கொடு'ன்னு பிடுங்கி எடுப்பா. கூடவே பேரப் பிள்ளைகளை வரவழைப்பா. சமைச்சதிலே பாதியை அப்புறப்படுத்துவா. அதெல்லாம் மீனாட்சிக்குத் தெரியாது. பாட்டியைத் தனியாக ஓரிடத்திலே பொறுப்பா விட முடியாது'' என்றாள் தனபாக்கியம்.

உடனே கிணற்றடியிலேயே இரண்டு குடம் தண்ணீர் விட்டுக் குளித்துவிட்டு அவள் தன் தோழியின் வீட்டைத் தேடி விரைந்தாள்.

அலமேலு துணிகளைத் துவைத்து விட்டு, வீட்டு வேலைகளைக் கவனிக்கலானாள். அவள் தண்ணீர் எடுக்கக் குழாயடிக்குச் சென்றபோது மதனகோபாலன் சைக்கிளில் அவளைத் தாண்டிச் சென்றான். அலமேலு அவன் தோற்றத்தைக் கண்டாள். 'தலையைக் கூட மொட்டை அடித்துக் கொண்டு விட்டாரா?' என்று அவள் மனம் கேட்டது.

தண்ணீரை எடுத்து வந்து வீட்டில் இறக்கிவிட்டு, வேலைகளைச் செய்து கொண்டே, தெருப்பக்கம் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

வெகு நேரம் சென்றுதான் தனபாக்கியம் திரும்பி வந்தாள். ''யசோதா பாட்டியை மெதுவாக வெளியே அனுப்பி விட்டு வந்தேன். பர்வதம் ஊருக்குப் போய் ரெண்டு நாளாகிறதாம். வீடு அலங்கோலமாகக் கிடக்கிறது. மீனாட்சிக்குத் தெரிஞ்ச சேதி நமக்குத் தெரியலே. சொல்லி அனுப்பக்கூடாதா? என்னவோ பேசி மழுப்பறா'' என்று சேதி சொன்னாள்.

''அவங்களுக்கு என்ன, அம்மா? பணம் இருக்கிறது; மாசம் நூறு ரூபாய் கொடுக்கிறேன்னா ஆள் கிடைக்கமாட்டாங்களா?'' என்றாள் அலமேலு.

''கிடைப்பாங்க. உள்ளே புகுந்து விவரம் தெரிஞ்சு, வயசான இவங்களை அநுசரிச்சு செய்யத் தெரியுமா, அலமேலு? அதுக்கும் பங்காருதானே அலையணும்? கோபாலு என்னவோ காபி போடறானாம். பூஜைப் பாத்திரம் தேய்ச்சுக் கொடுத்தானாம். சரஞ்சரமா ஒட்டடை தொங்குது; ஒருநாள்கூட ஊஞ்சல் சங்கிலி பளபளப்புக் கொறஞ்சு நான் பார்த்ததில்லே. பச்சைப் பசேல்னு கிடக்குது.''

''ஊஞ்சல் சங்கிலியைப் பர்வதம் மாவா தொடச்சிக்கிட்டிருந்தாம்? கடையிலேருந்து மாரிமுத்துன்னு ஒருத்தன் வருவானே?''

''எல்லாரையும் வேலை வாங்கணும்; அதுக்கு இப்ப அங்கே தெம்பில்லே. நான் சொன்னப்புறம் கோபாலு போயிருக்கான். 'யாரையாவது கூட்டிக்கிட்டு வாப்பா'ன்னேன்'' என்று அடுக்கிக் கொண்டே போனாள் தனபாக்கியம்.

அலமேலு மௌனமாகக் கேட்டுக் கொண்டாள். ''சரி, நீ அப்ப உடனே போய் அந்த வீட்டைக் கவனிக்கறயா, அம்மா? மாமாவுக்கு வேறே கால் சுளுக்காமே?'' என்று கேட்பவள்போல் யோசனை கூறினாள்.

''டாக்டர் வந்திட்டாரு; பாத்துப் பாரு.''

அலமேலுவும் தனபாக்கியமும் சுறுசுறுப்பாக எல்லா வேலைகளையும் கவனித்தார்கள். மாணிக்கம் தன் வேலைக்குக் கிளம்பினான். ''அலமேலு, பகல் அங்கேயே சாப்பாடு. அம்மாகிட்டே சொல்லிடு. சுந்தரம் ஸூட் துணி அனுப்பியிருக்கான். தையல்காரன் கடைக்குப் போகணும்'' என்றான்.

''முத்து, நாம் கூட நளினிக்கு நல்ல புடைவை வாங்கணும். என்ன நிறம் வாங்கறதுன்னு தெரியலே'' என்றாள் தாயார்.

''நளினியை அனுப்பறேன், அம்மா'' என்றான் மாணிக்கம்.

அலமேலு தெருவரை தன் அண்ணனுடன் வந்தாள். ''சாப்பிட நம் வீட்டுக்கு வந்து விடேன், அண்ணா'' என்றாள் மெதுவாக.

''ஏன், தங்கச்சி, இப்பவே அங்கேயே ஐக்கியமாயிடுவேன்னு நினைக்கிறயா? இந்திரா காலனி என்னை விட்டுவிடாது.''

அலமேலு சிரித்தாள். தன் மனசில் இருப்பதைத் தன் தமயன் வெளிப்படையாகச் சொன்னதும் அவளுக்கு வெட்கமாகிவிட்டது. முன்பு ஒரு நாள் நளினி, 'எங்க வீட்டில் இருந்தால் அவர் ராஜா வாட்டமா இருக்க முடியும்' என்று குறிப்பிட்டது இப்போது அவள் நினைவுக்கு வந்தது.

அலமேலு உள்ளே திரும்பியபோது மதனகோபாலன் இரண்டு ஆட்களுடன் பேசிக்கொண்டே தன் வீட்டை நோக்கிச் செல்வது கண்ணில் பட்டது. 'அங்கே போ அம்மா. ஆளுங்க வந்தாச்சு'' என்றாள் அவள், உள்ளே வந்துகொண்டே.

''எனக்கு மட்டும் சின்ன வயசா? விரட்டுறயே! பங்காருவுக்கு வேலை செய்யாமல் பழகிடுச்சு. இப்பக் கஷ்டப்படறா; சரி. அதுக்காக நான் மட்டும் ஓடியாட முடியுமா? நான் பிறவு போறேன். உங்க அப்பா பூஜை பண்ண வருவாரு; நான்

இங்கே இருக்கணும்'' என்றாள் தனபாக்கியம்.

அலமேலு வீட்டு வேலைகளைச் செய்தாள்.

கந்தசாமி செட்டி பூஜையில் வந்து அமர்ந்தார். தனபாக்கியம் அவருக்கு நிவேதனப் பொருள், சாம்பிராணி, கர்ப்பூரம் யாவும் இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டுப் போனாள்.

''பொண்ணு, நீ எதுக்கு ஒட்டடை அடிக்கிறே? சுண்ணாம்பு பெயின்டு அடிக்க ஆள் வரச் சொன்னேன். நல்ல தண்ணீர்க் குழாய் போடக்கூட ஆளுங்க வருவாங்க. எல்லாம் செய்யலாம், இரு'' என்று தம் பாணியில் மெதுவாக வெளியிட்டார் தந்தை.

''நிஜமாவா, அப்பா? சுண்ணாம்பு நம்பளேதானே அடிச்சுடுவோம்?'' என்று கேட்டாள் அலமேலு.

''கதவுக்கெல்லாம் வர்ணம் பூசிப் பத்து வருஷமாயிருக்கும். கையோடு சுண்ணாம்பும் அடிக்கட்டுமே! நீதான் பெரிய இடத்தில் பழக ஆரம்பிச்சிட்டியே. கலர் பூசவேண்டாம்!'' என்று கண் சிமிட்டி வேடிக்கை செய்தார் செட்டியார்.

அவர் பூஜை செய்யும் வரை அலமேலு தந்தையின் அருகிலேயே பேசாமல் அமர்ந்திருந்தாள். அவர் எழுந்து மாரியம்மன் கல்லுக்குப் பூஜை செய்யக் கிளம்பியதும் அவள் கூடவே சென்றாள். ''எதுக்கு என் பின்னாடியே நீ வறே?'' என்று அவர் கேட்டார்.

''உங்களை விவரம் கேட்கத்தான். நீங்க செய்யறது ஒண்ணும் எனக்கு நம்ப முடியலே, அப்பா.''

''பொண்ணு, உன்கிட்டே சொன்னால் என்ன? மணவாளன் நம்ப முத்துவுக்கு ஏதாவது கணிசமாச் செய்யணும்னு ஆசைப்படறான். நீங்கள்ளாம் அந்தப் பணத்தைத் தொடக்கூட மாட்டேன் என்பீங்க. எனக்கு எல்லாப் பணமும் ஒண்ணுதான். செல்லுபடி ஆனால் சரிதான். நீ, உன் அம்மா, உன் அண்ணன் எல்லாம் மதிப்பா இருங்க. அந்தப் பணத்தைக் கையாலேகூடத் தொடாதீங்க. நான் எனக்குத் தெரிஞ்சமாதிரி அதைப் பயன்படுத்திக்கறேன். நேத்து அவன் என்னைத் தேடி வந்து கெஞ்சிக் கேட்டுக்கிட்டான். ரெண்டாயிரம் மொய் எழுதப் போறானும். 'என்கிட்டே கொடுத்திடு'ன்னேன். வீட்டை ரிப்பேரும் செய்திட்டு, குடி தண்ணிக் குழாயும் உள்ளே கொண்டு வந்திடலாமல்ல? அந்த முட்டாள் பய மாணிக்கத்துக்கு என்ன கெடக்குது செலவு?''

''நீங்க இப்படியெல்லாம் அண்ணனைப் பேசக்கூடாது, அப்பா'' என்று கண்டித்தாள் அலமேலு.

''பேசுக்குச் சொன்னேன்னு அவனுக்குச் செலவு பண்ணக்கூடத் தெரியாதுன்னேன்.''

''எலெக்டிரிக் விளக்குப் போட்டுடுங்க, அப்பா'' என்றாள் அலமேலு, சந்தடி சாக்கில்.

''செய்வம், செய்வம்'' என்று சந்தோஷமாகப் பேசிக்கொண்டே மாரியம்மன் கல்லைத் தேடிச் சென்றார் செட்டியார்.

அலமேலு வியப்பு மேலிடச் சற்று நேரம் தன் தந்தையையே பார்த்தபடி நின்றாள். பிறகு கூடத்தில் சென்று அமர்ந்துவிட்டாள். மணவாளச் செட்டியிடமிருந்து பரிசு பெறுவது சரிதானா? அதை வீட்டுக்குப் பயன்படுத்துவது முறைதானா?' என்ற கேள்வி அவளை அரித்தது. 'விரும்பித் தருங்க. அண்ணன் கிட்டே அவங்களுக்குப் பிரியம். தரட்டும். நான் வாங்கிக் கொண்டால்தான் தப்பு.'

'பங்காரும்மா வீட்டில் இப்போது என்ன வேலை நடக்கிறது? வீடு என்ன கதியில் இருக்கிறதோ?' ஓடிச் சென்று பார்க்கலாம் என்றுதான் அவளுக்கு ஆசை உந்தியது. மதனகோபாலன் அங்கு இருப்பானே என்ற எண்ணம் அவளைக் கட்டிப் போட்டது. அவள் குருட்டு யோசனைகள் செய்துகொண்டு அமர்ந்திருக்கையில் மெதுவாகக் காலடி ஓசையும், யாரோ வாசற்படியில் நிற்பதும் தெரிந்து மாணிக்கமாகத்தான் இருக்கும் என்று நினைத்து, அவள் நிமிர்ந்தாள். மதனகோபாலன் நின்றுகொண்டிருந்தான். அலமேலு, எழுந்து நின்றவள், நேரே நிமிர்ந்து நோக்காமல் தரையைப் பார்த்தாள்.

''உங்க அம்மா இருக்காங்களா? அங்கே வரச் சொல்லணும்'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டுத் திரும்பித் தன் வீட்டுப் பக்கம் நடந்து சென்றான்.

''அம்மா, அம்மோவ்! உனக்குத் தாக்கீது!'' என்று கூறிக்கொண்டே அலமேலு உள்ளே விரைந்தாள். மதனகோபாலன் அங்கு வந்ததையும் தனபாக்கியத்தை அழைத்ததையும் தாயிடம் விவரித்தாள்.

தனபாக்கியம் உடனே கிளம்பிப் பங்காரு வீட்டுக்குச் சென்றாள்.

கந்தசாமி செட்டி மாரியம்மனிடமிருந்து திரும்பியதும் அலமேலு அவருக்கு ஆகாரம் அளித்தாள். அவர் கடைக்குச் சென்ற பிறகு கூடை பின்ன அமர்ந்தாள்.

'சின்னம்மான்னு கூப்பிடுவாரே! இப்ப, பழைய உறவு கூட போயிடுச்சாமோ? பின்னே வேலைக்கு மட்டும் எங்க அம்மாவைக் கூப்பிடலாமோ?' என்று முணுமுணுத்தது அவள் வாய். 'பணக்

கொழுப்பு?' என்று அவள் இறுதி முத்திரை யிட்டாள்.

ஆனால் அவள் மனச்சாட்சி அதை ஒப்ப வில்லை. இப்போதெல்லாம் மதன கோபாலன் மிகவும் சீலமாக வாழ்ந்து வந்தான். ''நீ ஏன் அம்மாவை அத்தை என்று கூப்பிடணும்?'' என்று அவர் கேட்டாரே! ஒருகால் 'சின்னம்மா' உறவை அவர் விரும்பவில்லையோ?

அலமேலுவுக்கு நிலை கொள்ளவில்லை. சண்முகம் வந்து ஆகாரம் உட்கொண்டு சென்றான். தாய்க்காகக் காத்திருந்தாள் அவள். யசோதா ஓடி வந்து, ''அக்கா, உங்க அம்மா பங்காரும்மா கூடவே சாப்பிட்டுட்டாங்களாம். உன்னைக் காக்க வேணும்னு சொன்னாங்க'' என்று சேதி சொன்னாள்.

அலமேலு எழுந்து போய்ச் சாப்பிட்டு



விட்டு, வீட்டைப் பூட்டிக் கொண்டு மீனாட்சி வீட்டுக்குச் சென்றாள். போகும் போது பங்காரு வீட்டுப் பக்கம் பார்வையைச் செலுத்தினாள்.

மதனகோபாலன் இடுப்பில் கை வைத்துக் கொண்டு வேலை வாங்கிக் கொண்டிருந்தான். வீட்டைக் கழுவி விட்டார்கள். மதனகோபாலன் நிமிர்ந்து நோக்கினான். அப்போது அலுமேலுவின் கண்கள் அவன் நயனங்களைச் சந்தித்தன. அவன் லேசாகப் புன்முறுவல் பூத்தானோ? அதை ஆராய விரும்பாமல் அவள் நேரே பார்த்துக் கொண்டு, டாக்டர் வீட்டுக்குள் நுழைந்துவிட்டாள்.

"என்ன, அலமேலு, எங்கே இந்த நேரத்திலே? வகுப்பு, சாயங்காலந் தானே?" என்று மீனாட்சி கேட்டதும் அலமேலுவுக்குச் சுருக்கென்றது.

"ஏன் அக்கா, நான் வரக்கூடாதா? ஸிஸரைக் கொஞ்ச நான் எப்ப வேணாலும் வரலாம்னு நினைச்சேன். நீங்க என்னை வகுப்பு நடத்தறவள்னு காட்டுவீங்கன்னு நினைக்கலே" என்று அலமேலு வருத்தத்துடன் பேசினதும் மீனாட்சி சிரித்தாள்.

"அலமேலு, நானும் சமூக சேவைன்னு ஆரம்பிச்சதிலே மனித இயல்பு சுமாராகப் புரிகிறது. மீனாக்காவைப் பார்க்கவா நீ வந்தே? பங்காரு வீட்டிலே என்ன நடக்கிறதுன்னு வேவு பார்க்கத் தானே கிளம்பினே?"

அலமேலு உடனே பதில் பேசவில்லை. பிறகு, "போங்க, அக்கா, அவங்க வீட்டைப் பார்க்கணும்னு எனக்கு என்ன வந்தது?" என்றாள்.

"சரி, சரி. வறயா? நான் அங்கே போகப் போகிறேன். என்னோடு வராப் போல வந்து பாரேன்."


"உம்."

அலமேலு, மீனாட்சியுடன் கிளம்பிச் சென்று பங்காரு வீட்டில் நுழைந்து அங்கு நடக்கும் வேலைகளைப் பார்த்தாள். மணவாளச் செட்டியை விசாரித்தாள். பங்காருவுடன் பேசினாள். மதனகோபாலன் இருக்கிறானா என்று ஓரக் கண்ணால் துழாவினாள். அவன் குரல் கூட எங்கும் கேட்கவில்லை,

"மீனா, நம்ப வீட்டு அவலத்தைப் பார்த்தியா? பணத்தினாலே மட்டும் சுகப்பட முடியாது என்கிறதுக்கு இந்த வீடு ஓர் எடுத்துக்காட்டு" என்றாள் பங்காரு.

"இருக்கட்டுங்க. இப்ப என்ன கஷ்டப் பட்டுட்டிங்களாம்? நாங்கள் எல்லாம் சொந்த மனுஷங்களாத் தோணலையா உங்களுக்கு?"

"நீங்கதான் சொந்த மனுஷங்க; ஆனாலும் .."



அலமேலு மீனாட்சியை லேசாகத் தொட்டாள். மீனாட்சி குறிப்பறிந்து கிளம்பிவிட்டாள். அலமேலு நேரே தன் வீட்டுக்குத் திரும்பி விட்டாள்.

தனபாக்கியம் வீட்டுத் திண்ணையில் காத்திருப்பது தெரிந்தது. அலமேலு வீட்டைத் திறந்து உள்ளே போகும் வரை தனபாக்கியம் பேசவே இல்லை. பிறகு தன் பெண்ணை அவள் ஏற இறங்க ஒரு முறை பார்த்தாள். ''இதா, அலமேலு. எதுக்காக நீ பங்காரு வீட்டுக் குள்ளே நுழையறே?'' என்று கேட்டாள், கடுமையாக.

''இதென்ன அம்மா, வேடிக்கை? கல்யாணம் இல்லேன்னு தீர்மான பிறவு நாம் அங்கே போகவே இல்லையா?''

''ஒரு நெருக்கடியிலே போனோம், உதவினோம். நான் போகிறேன், ஏதோ பழைய உறவுக்காக. நீ எதற்கு..?''

''இன்னிக்கும் நெருக்கடிதானே? அவங்க வீட்டு ஆளுங்களே வந்து உன்னைக் கூப்பிடறாங்க. நம்ப வீட்டு வாசப்படி மிதியாதவங்க உள்ளே வராங்க'' என்று பேசிவிட்டுச் சிரித்தபடியே தன் தாயை அணைத்துக் கொண்டாள் அலமேலு.

தனபாக்கியம் தன் பெண்ணைப் புதுமையுடன் நோக்கினாள். அவள் வாய் திறந்து ஏதும் பேசுவதற்குள் மாணிக்கம் வரவே, பேச்சுத் தடைப்பட்டு நின்றது.

''என்னடா, முத்து? இலை போடட்டுமா? சாப்பிடறயா?'' என்று கேட்டாள் தாய்.

''சாப்பிட்டாச்சு. தையல் கடைக்குப் போகக் கோபாலுவைக் கூப்பிட்டுக் கிட்டுப் போவோம்னு வந்தேன். புதிய மோஸ்தர்கள் தெரியும் அவனுக்கு.''

அலமேலு களுக்கென்று சிரித்தாள். மாணிக்கம் முகம் கேள்விக்குறியாக மாறியது. தனபாக்கியம் பெண்ணை நோக்கி முறைத்தாள்.

''அந்த ஆளுக்கு இப்ப இதெல்லாம் தெரியுமான்னு நினைச்சுப் பார்த்தேன். சிரிப்பு வெடிச்சுது'' என்றாள் அலமேலு.

மாணிக்கமும் சிரித்துவிட்டான்.

''அம்மா, பழனிக்கு எப்பப் போக ணும்னு அப்பாவைக் கேள். நிச்சயதாம் பூலத்துக்குன்னு நளினிக்குப் புடைவை வாங்கினதை அங்கேயே சந்நிதியிலேயே குடுத்திடுவோம். பத்மினியும் நம்கூட வராளாம்'' என்றான் மாணிக்கம்.

''அப்பா, அண்ணாவுக்குப் பத்மினி வந்தால்தான் திருப்தி. நான் வரணும்னு கூட இல்லை'' என்றாள் அலமேலு, நிஷ்டுரமாக.

''நீ வரேன்னு சொன்னப்புறந்தான் நான் பத்மினியை அழைச்சேன், தெரியுமா?''

''ஏன், நளினி கூடவே நான் ஒட்டிக் கிடப் போறேன்னு!''

''ஆமாம், சரிதானே?''

தனபாக்கியம் சந்தோஷமாகச் சிரித்தாள்.

மாணிக்கம் மதனகோபாலனைத் தேடிச் சென்றான். மறுபடியும் இருவரும் வந்து, புதுத் துணியைப் பிரித்துப் பார்த்து விட்டுக் கிளம்பினார்கள். தன பாக்கியம் வழியனுப்பி வைத்தாள்.

''அம்மா தூங்கறாங்க. ஆரையாவது துணைக்கு..'' என்றான் மதனகோபாலன்.

''நானே போறேன்'' என்று கூறிய தனபாக்கியம், அப்படியே இறங்கிப் போய், பங்காருவின் வீட்டுக்குள் நுழைந்து விட்டாள்.

அலமேலு தன் பின்னல் கூடையை வைத்துக் கொண்டு மீண்டும் அமர்ந்தாள். நேரம் போனதே தெரியவில்லை. பிறகு நினைவு வந்தவளாக அவள் எழுந்து, எவர்ஸில்வர் பில்ட்டரை எடுத்துக் கழுவி, காபி போட முனைந்தாள்.

கொஞ்ச நேரம் பொறுத்து, மாணிக்கமும் மதனகோபாலனும் வந்தார்கள். உள்ளே வந்து நாற்காலிகளில் அமர்ந் தார்கள். அலமேலு எழுந்து, ''அண்ணா, இருங்க. ரெண்டு பேருக்கும் காபி கொண்டு வரேன்'' என்றாள்.

ஒரு தட்டில் இரண்டு பீங்கான் கோப் பைகளும் ஸாஸர்களும் வைத்து, பீங்கான் ஜாடியில் காபியை ஊற்றி எடுத்து வந்தாள்.

''எப்படியப்பா ஸர்விஸ்?'' என்று மாணிக்கம் தன் நண்பனைக் கேட்டான்.

மதனகோபாலன் மௌனமாகச் சிரித்தான். அவன் ஏதாவது முகஜாடை காட்டியிருப்பானோ என்று அலமேலு வுக்குச் சந்தேகம். ஆயினும், நிமிர்ந்து பாராமல் அவள் உள்ளே போய் விட்டாள்.

மதனகோபாலனும் மாணிக்கமும் காபியைப் பருகி விட்டு, கூடத்துக் குறட்டில் அமர்ந்து பேசிக் கொண்டிருந் தார்கள். மதனகோபாலன் கூடத்தில் இருந்த மாலையைப் பார்த்தபடியே, ''முத்து, அன்னிக்குத் தண்டு மாலை ரொம்ப நல்லா இருந்திச்சு. வந்தவங்கல் லாம் பாராட்டினாங்க'' என்றான்.

''கட்டித் தந்தேன்னு அலமேலு சொல்லிச்சு'' என்றான் மாணிக்கம்.

''அதே போல ஒண்ணு நிலசம்பங்கியே வச்சுக் கட்டித் தரணும்.''

''என்ன அலுமேலு, காது கேட்டுதா? தண்டு மாலைக்கு ஆர்டர் வருது.''

''சாமிகிட்டே பார்த்துத் தானே கேட்கிறாப்போல? கொடுக்கும்னு சொல்லு, அண்ணா'' என்றாள் அலமேலு.

''சரி!'' என்று பதில் தந்த மதன கோபாலன், கிளம்பித் தன் வீடு நோக்கி விரைந்தான்.

மாணிக்கம் அங்கேயே அமர்ந்திருந்தான். அலமேலு தட்டையும் கோப்பைகளையும் எடுத்துச் செல்ல அங்கு வந்தாள்.

''தங்கச்சி மனசிலே மாறுதல் வந்திட்டமாதிரி தெரியுதே?'' என்று கேட்டான் தமயன்.

''என்ன வந்திருச்சாம்? எப்பவும் போலத்தான் இருக்கேன்'' என்றுள் தங்கை, மிடுக்காக.

''இல்லையே! முகத்திலே பிரகாசம் ஒரு மீட்டர் தூரத்துக்கு ஒளி வீசுதே!''

''ஆமாம் அண்ணு. மாறித்தான் போச்சு. உன் கிட்டே சொன்னுல் என்ன?'' என்றுள் அலமேலு, தாழ்வான குரலில்.

''என்ன? எப்படி நடந்தது? கோபாலு மறுபடியும் வந்தானு?''

''அவருக்கு என்ன, ரோசமில்லையா? வருவாராக்கும்!'' என்றுள் அலமேலு.

''பின்னே?''

''அவரு மனசு என் மேலே பிரியமாகவே இருக்குதுன்னு தினமும் கோவிலுக்குப் போகும்போது நான் தெரிஞ்சிக்கிட்டேன். நான் நிற்கிற இடத்திலே நிற்கமாட்டாரு. ஆனுலும், கவனிப்பு இருக்கும். நானும் அப்போ ரொம்பப் பிகுவாப் பேசிட்டேன். இப்போ நானுப் போகத் தெரியலே. தன்மானம் சிறுது. இன்னிக்குப் பங்காரு அத்தை வீட்டுக்குப் போனேன். என்ன அவலமாக இருக்குது தெரியுமா? ரெண்டு பேரும் உடல் நலிந்து, மனம் நொந்து, தளர்ந்து கிடக்காங்க. யோசித்தேன். யசோதாவுக்கு எண்ணெய் தேய்ச்சுவிட்டு, பட்டம்மாளுக்குப் பத்தியம் வடிச்சு, பாலைக் கரண்டிக் கணக்கா அளந்து ஊற்றி, இந்திரா காலனிச் சாக்கடையைக் கழுவினுல் தான் சமூகத் தொண்டா? மீனுக்காவுக்கு அதுக்கு நிறைய ஆள் கிடைப்பாங்க. அந்தக் குடும்பத்தை நடத்தி, அந்தப் பெரியவர்களைப் போஷித்து உதவினுலும் தொண்டு தானே? மேலும், அவரும் வேறு யாரையும் கல்யாணம் பண்ணிக்கிடமாட்டார்ன்னு தெரிஞ்சுபோச்சு. அவர் மணந்தால் தான் அந்த வீட்டுக்குக் கதிமோட்சம் பிறக்கும். ஆகையினுல் என் மனசைச் சரிதட்டிக்கிட்டேன். செயல்படத் தெரியலே.''

''நான் பாத்துக்கறேன். நீ பேசாமல் இரு.''

''நிஜமாவா, அண்ணு?''

''ஆமாம். தண்டு மாலை ரெண்டு கட்டி வை; முருகன் கோயிலுக்குப் போவோம்'' என்றுன் அண்ணன்.

அதன் பிறகு அலமேலு தரைமீதே நடக்கவில்லை. பூமிக்கு ஓர் அடி உயரத்திலே சஞ்சரித்தாள்.

மாணிக்கம் தன் தாயைத் தேடிச் சென்றுன். ''அம்மா, என்கூடக் கொஞ்சம் கோவிலுக்கு வரயா?'' என்று கேட்டான்.

''நான் வரலே. போன தடவை இப்படித்தான் அப்பா அழைச்சிட்டுப் போய், கடைசியிலே பழனிக்கு ஓடிப் போனே. இப்ப என்ன இருக்குது முக்கியம்?'' என்று கேட்டாள் தாய்.

''வா அம்மா, சொல்றேன் வா'' என்று மீண்டும் அழைத்தான் மகன்.

தனபாக்கியம் மகனைப் பின் தொடர்ந்து முருகன் கோவிலுக்குச் சென்றுள். வெளிப் பிராகார மண்டபத்தில் தாயை அமர்த்தி விஷயத்தை ஆரம்பித்தான் மாணிக்கம்.

''...அவனும் பண்ணிக்கத் தயாரா இருக்கிறுன். இவளும் இசைஞ்சு வந்திட்டா. கோபாலுவும் நல்ல மாதிரியாத் திருந்திட்டான். இனி என்ன தடை, சொல்லு. அப்பா கிட்டே சொல்லிப் பேச்சைத் துவக்குகிறயா?''

''நீதான் மூத்த பிள்ளை. எல்லாம் செய்யணும்.''

மாணிக்கம் சிரித்தான். ''நீ ஆரம்பிச்சுவை; நான் பாத்துக்கிறேன்'' என்றுன்.

அப்போது மதனகோபாலன் கோவிலைச் சுற்றிக் கொண்டு அவர்கள் இருக்குமிடம் வந்தான்.

''கோபாலு, கொஞ்சம் உட்கார். அலமேலுவைக் கட்டிக்கிறதைப் பற்றி உனக்கு என்ன அபிப்பிராயம்? மறைக்காமல் சொல்லு'' என்று கேட்டான் மாணிக்கம்.

''அலமேலுவைக் கேட்கிறதுதானே?'' என்றுன் மதனகோபாலன், மெதுவாக.

''கேட்டாச்சு என்றுல்?''

''முருகன் திருவுளப்படி நடக்கட்டும்.''

''திருவுளச் சீட்டுப் போடணுமா, தம்பி?'' என்று தனபாக்கியம் கவலையுடன் வினவினுள்.

''இல்லே, அத்தை. உங்களுக்குச் சம்மதமானுல் நான் தயார் தான்; ஆனுல் உங்கள் மகள்..''

''சரி, அப்பா. மாரியம்மன் வாக்கைப் பொய்யாக்காமல் இருந்தீங்கன்னு சரிதான். நானே எங்க வீட்டுச் செட்டியாரிடம் சொல்லி ஏற்பாடு செய்றேன்.''

மதனகோபாலன் தனபாக்கியத்தின் காலைத் தொட்டுத் தன் கண்ணில் ஒற்றிக் கொண்டான். பிறகு வேகமாக நடந்து சந்நிதிக்குப் போய் விட்டான்.

மாணிக்கமும் தனபாக்கியமும் முருகனை வணங்கிவிட்டு வீடு திரும்பினர்.

இரவு கந்தசாமி செட்டி கடையிலிருந்து வந்தவுடன் மாணிக்கத்தைப்

பக்கத்தில் வைத்துக் கொண்டு தனபாக்கியம் ஆரம்பித்தாள்.

''பொண்ணு சரின்னு சரிதான். ஆனால், தம்பனை ஆட்டி வச்சதுக்கு, அவன் மேலே முன்னே எழுதி வச்சதை அப்படியே இப்பக் கொடுத்திடணும். ஆமாம்!'' என்றார் தகப்பனார்.

''என்ன, அப்பா, நீங்க! கோபாலு பொறுப்பில்லாம இருந்தபோது அந்தக் கணக்கு; இப்ப மொத்தச் சொத்தும் அலமேலுவுக்குத் தானே?'' என்றான் மாணிக்கம்.

கந்தசாமி செட்டி முகம் மலர்ந்தது; கற்கண்டுப் பொட்டலத்துடன் அந்த நிலை நேரத்திலேயே மணவாளச் செட்டி வீட்டுக்குக் கிளம்பிவிட்டார்.

இரண்டு கல்யாணங்களையும் நிச்சயம் செய்து கொண்டு எல்லாரும் பழனிக்குக் கிளம்பினார்கள். சுந்தரத்தினால் வர இயலவில்லை.

அங்கிருந்த மூன்று கார்களில் எல்லாரும் பழனிக்குப் பிரயாணமானார்கள்.

அலமேலு இரண்டு தண்டு மாலைகள் கட்டிவந்தாள். தனக்காக அரளியாலும் மதனகோபாலனுக்காக நிலசம்பங்கியாலுமாக இரண்டு மாலைகள் வந்தன. அவரவர் மாலைகளை எடுத்து அவரவர் கையில் சந்நிதியில் தந்தனர். குருக்கள் முருகனுக்குச் சாத்திவிட்டு வந்தார்.

மலைமீது ஏறி மாணிக்கம் தன் குருவைப் பணிந்து விட்டு வந்தான். பெரியவர் சந்நிதிக்கு வந்து தம் கையாலேயே அவர்களிடம் மோதிரங்களைத் தந்தார். மாணிக்கமும் நளினியும் மாலைகளை மாற்றிக்கொண்டனர்.

''இரண்டு பேரும் சேர்ந்து கந்தரநுபூதி பாடுங்கள்'' என்று பணித்தார் பெரியவர்.

இருவரும் மெய்ம்மறந்து பாடினார்கள். அலமேலுவும் கூடச் சேர்ந்து பாடினாள். மதனகோபாலன் கண்ணை மூடி அநுபவித்தான்.

பாட்டு முடிந்ததும் பெரியவர் மாணிக்கத்தைத் தட்டிக் கொடுத்தார். ''உனக்குப் பி. ஹெச் டி சீக்கிரமே வந்து விடுமாமே? ஆத்மநாதன் சொன்னார். அப்ப இனி நம் நாட்டிலே நெல் சாகுபடியெல்லாம் ....?''

அவர் பேச்சை முடிப்பதற்குள் மாணிக்கம் குறுக்கிட்டான்.

''இந்த ஆராய்ச்சி நம்முடைய சிரத்தைக்கும் ஆசைக்கும் நல்ல பயிற்சி. இதிலிருந்து பல இதர விஷயங்கள் புரியலாம்; இங்கே நம் மூலிகைத் தோட்டம் போலச் சின்ன அளவில் ஏதேனும் செய்யலாம்; ஆனால் பாட்டுப் பாடியோ, நாட்டியம் ஆடியோ பெரிய அளவில் சாகுபடியைப் பெருக்கி விட முடியாது என்பதுதான் என் அபிப்பிராயம்'' என்றான்.

எல்லாரும் திகிலுடன் ஆத்மநாதனைப் பார்த்தார்கள். அவரை எதிர்ப்பதுபோலப் பேசிவிட்டானே என்று தவித்தனர்.

''எத்தனை வியவசாயிகள் ஒலிபெருக்கிகளைப் பொருத்தி இசையை இயக்க முடியும்? அதற்கெல்லாம் எவ்வளவு தேர்ந்த அறிவு வேண்டும்? அது நடைமுறையில் ஒத்துவரும் என்று எனக்குத் தோன்றவில்லை. நீங்கள் கேட்கவே சொன்னேன்'' என்றான் மாணிக்கம்.

நளினி பீதியுடன் தன் தந்தையைப் பார்த்தாள்.

ஆத்மநாதன் மெதுவாகச் சிரித்தார்: ''மாணிக்கம் அபிப்பிராயம் வேறு விதமாக இருப்பதனாலே என் ஆர்வமோ நம்பிக்கையோ குன்றும் என்று எண்ணினீர்கள். நான் தொடர்ந்து செய்து காட்டுவதாகத்தான் இருக்கிறேன்; ஆனால் ஒன்று .....''

''என்ன?'' என்று இடைமறித்தார் பிரின்ஸிபால்.

''நளினியை மாணிக்கத்துக்குக் கொடுப்பதற்குச் சற்றுத் தயங்கினேன். இப்போது அந்தத் தயக்கம் இல்லை. மனப்பூர்வமாக என் பெண்ணைத் தருகிறேன். தன் கொள்கையை ஆணித்தரமாகப் பேசுபவன்தான் மனிதன்.''

மாணிக்கம் நளினியைப் பார்த்துச் சிரித்தான். அவள் முருகனைப் பார்த்தாள்.

''தீபாராதனை நடக்கட்டும்'' என்றார் பெரியவர்.

தீப ஒளியில் முருகன் முறுவலிக்க, அங்குள்ள இதயங்கள் யாவும் ஒளி பெற்று நிறைந்தன.

''இனி ஒரு நிச்சயதார்த்தம் நடக்கணுமாமே! எங்கே மோதிரங்கள்?'' என்று கேட்டார் குரு.

''மோதிரம் வேண்டாம். எங்கள் இரண்டு பேர் மாலைகளையும் தன் மார்பிலே இசைவுடன் சேர்த்து வைத்து விட்டான் முருகன்'' என்று கலீரென்று பதில் சொன்னான் மதனகோபாலன்.

இரண்டு வருங்காலத் தம்பதிகளும் பெரியவரை வணங்கினார்கள்.

முற்றும்

Edited and Published by R. Narayanaswamy, for and on behalf of the Kalaimagal Office and Printed at M.L.J. Press Private Ltd., 55-56, Mundakanni Amman Koil Street, Madras-600 004.
Managing Editor: K. V. Jagannathan.

காட்டுமிராண்டியும் காட்டுவாசியும்

எஸ். கிருஷ்ணமூர்த்தி



முன்னால் ஏதோ ஒன்று பளபளவென்று ஓடி மறைந்தது. சட்டென்று பின் வாங்கினான் ரஞ்சித்.

முள் புதரில் காலை வைத்துவிட்டான் போலும். முள், பாண்டைக் கிழித்துக்கொண்டு வந்து காலைக் கீறிற்று. சுந்தரவனம் பயங்கர வனமாக இருக்கிறதே என்று நினைத்தான் அவன்.

அவனது கைக்கடிகாரத்தில் மணி ஆறுதான் ஆகியிருந்தது. ஆனால் வானமே கண்ணுக்குத் தெரியாதபடி அடர்ந்து வளர்ந்திருந்த மரங்களால் இருள் சூழ்ந்து விட்டது.

அவன் தன் அசட்டுத்தனத்தை நொந்து கொண்டான். தன்னந்தனியாக இந்தக் காட்டில் வேட்டையாடக் கிளம்பியது அசட்டுத்தனந்தான். இங்கிருந்து காட்டிலாக்காப் பங்களாவுக்குப் போய்ச் சேர்வது எப்படி?

அவன் குருட்டாம் போக்கில் நடந்து போய்க் கொண்டிருந்தான். நேரம் ஆக ஆக அவன் மனத்தில் பயம் அதிகரிக்கத் தொடங்கியது. காட்டு விலங்குகளின் இரவு வாழ்க்கை தொடங்கிவிட்டதைக் குறிக்கும் அரவங்கள் இந்தப் பயத்துக்குத் தூபம் போட்டன. ராயல் பெங்கால் புலியின் இருப்பிடம் சுந்தரவனந் தான் என்ற நினைவு அவனை நடுங்க வைத்தது.

அவன் கையில் ஒரு துப்பாக்கி, முதுகில் ஒரு பெரிய பையில் அவன் வேட்டையாடிய பறவைகளின் உடல்களின் சுமை - அவன் செய்த பாவங்களின் சுமையைப் போல.

தன்னந்தனியே திக்குத் தெரியாத காட்டில் இருட்டு நேரத்தில் நடந்து செல்லும் போது அவனுக்குத் தான் செய்த பெரிய பாவம் ஒன்று நினைவுக்கு வந்தது. காரணம், அது நிகழ்ந்த இடமும் இதே சுந்தரவனந்தான்.

நாலைந்து வருஷங்களுக்கு முன் அவன் சுந்தரவனத்தின் ஒரு பகுதியான கொஸாபா என்ற இடத்தில் தன் நண்பன் அசோக்குடன் சில நாட்கள் தங்கியிருந்தான். சுந்தரவனத்துப் புலிகளைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்டிருந்த திட்டத்தில் ஓர் அதிகாரியாக வேலை பார்த்து வந்தான் அசோக். அவனுக்கு ஒரு தனி வீடு கொடுத்திருந்தார்கள்.

அசோக் ஒரு தனிக்கட்டை. சமையலுக்கு ஒரு பெண்ணை அமர்த்தியிருந்தான். அவள் பெயர் லொக்கி; வயது இருபது இருக்கும். சுந்தரவனத்தின் பூர்விகக் குடியினத்தைச் சேர்ந்தவள். நிறம் கறுப்புத்தான். ஆனால் இளமையின் பூரிப்பும் சுந்தரவனத்தின் இயற்கைச் செழிப்பும் அவளிடம் கவர்ச்சியைப் பொழிந்திருந்தன.

ரஞ்சித் எப்போதும் பெண்கள் விஷயத்தில் சபலமுள்ளவன். இது அசோக்குக்கும் தெரியும். ஒரு தடவை ரஞ்சித் லொக்கியைக் குறிப்பிட்டு, "குட்டி ஜோரா யிருக்காளே!" என்று குறும்பாகச் சொன்னபோது அசோக் மிகவும் கண்டிப்பாக ரஞ்சித்தை எச்சரித்திருந்தான். "கீழ் ஜாதி தானேன்னு அவகிட்டே வாலாட்டாதே, ரஞ்சித்! அவளோட அப்பா ரொம்பக் கண்டிப்பான பேர்வழி. சரியான முரடன். நீ அவகிட்டே வாலாட்டினா உன் தலையைச் சீவிடுவான்!"

லொக்கியின் தந்தையை ஒரு தடவை பார்த்திருக்கிறான் ரஞ்சித். காடாக வளர்ந்து முகத்தை மறைக்கும் தாடி, அதனுள்ளேயிருந்து நெருப்புக் கங்குகளாக ஜொலிக்கும் கண்கள். முரட்டு வேலைகள் செய்து காய்த்துப் போன வலுவான கைகள். கம்பீரமான தோற்றம். அவனைப் பார்க்கும் யாரும் அவன் அறுபது வயதைக் கடந்தவன் என்று சொல்ல மாட்டார்கள்.

சிலேடைக் களஞ்சியம்

இனிமையான சொல்லைக் கனிக்கு உவமை யாக்குகிறார் வள்ளுவர். இனிமையான சொல்லுடன் சிலேடை நயமும் சேர்ந்தால் எப்படி இருக்கும்? தேன் மாரியில் கற்கண்டும் சேர்ந்து விழுந்தாற்போல் இருக்கும் அல்லவா? திரு கி. வா. ஜ. அவர்கள் பேச்சின் இனிமை தாயகம் மட்டும் அல்ல, கடல் கடந்த நாடுகளிலும் ரசிகர்களைக் கவர்ந்திருக்கிறது. சுவை மிகுந்த பேச்சுடன் தன்னிச்சையாகச் சிலேடையும் மிதந்து வந்து கேட்பவர்களை மெய்ம்மறக்கச் செய்யும். அவரது சிலேடை நயம் மிகுந்த துணுக்குகளைக் கேட்கும் அன்பர்கள் அவ்வப்போது பத்திரிகைகளுக்கும் எழுதிப் பிறரும் அநுபவிக்கச் செய்து வருகிறார்கள்.

படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பத்தைத் தரும் அவரது சிலேடைகளையும் பல சந்தர்ப்பங்களில் அவர் பேசியதையும் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறார் அவருடைய மருகர் திரு இராமசுப்பிரமணியன் அவர்கள். '**கி. வா. ஜ. வின் சிலேடைகள்**' என்ற இந்தப் புத்தகத்தில் நகைச்சுவைச் சிலேடைகளுடன் மனத்தில் தங்கிச் சிந்தனையைத் தூண்டும் சிலேடைகளும் உள்ளன. அகப்பொருள் துறையில் ஒன்றான வெறிவிலக்குத் துறையிலுள்ள பாடல்களில் அவருடைய கவிதா மேதையையும் சிலேடை நயம் தானாக வந்து அமையும் அற்புதத்தையும் காணமுடிகிறது. பாய் அசம், பாயசம், போன்ற சொல் நயங்களைப் படித்துப் படித்து அநுபவிக்க முடிகிறது. அம்மானைப் பாடல்களின் ஈற்றடிகளில் நயம் தேனைப்போல் சுரந்து மனத்தை மகிழ்விக்கிறது. அவ்வப்போது பத்திரிகைகளில் வரும்போது படித்துச் சுவைப்பதைவிட ஒரு புத்தக உருவில் படிக்கும்போது மேலும் சுவையும் பயனும் கூடுகின்றன. மாணவர்கள், மாணவிகள், முதியோர் என்று எல்லாப் பருவத்தினரும் இந்தத் தொகுப்பைப் படித்து அநுபவிக்கலாம்; சிரித்து மகிழலாம். ஐந்து ரூபாய் விலையில் அமுத நிலையம் லிமிடெட், 1/45, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை-14 என்ற முகவரியில் இந்தச் சிலேடைக் களஞ்சியம் கிடைக்கும்.

—ஹஸ்தம்

அசோக் அவனை ரஞ்சித்துக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்: "இவன்தான் லொக்கியோட அப்பா காளிசரண். பெண்ணைப் பார்த்துட்டுப் போக வந்திருக்கான்."

ஆனால் அசோக்கின் எச்சரிக்கை உரிய சமயத்தில் பயன்படவில்லை.

ஒரு தடவை அசோக் அலுவலக வேலையாகக் கல்கத்தா போயிருந்தான். ரஞ்சித் மட்டும் தனியாக இருந்தான். லொக்கி இரவில் சமையல் செய்து வைத்து விட்டு, "நான் போயிட்டு வரேன்" என்று விடைபெற்றுக் கொண்டு தன் குடிசைக்குக் கிளம்பியபோது அவன் பலவந்தமாக அவளைத் தடுத்து நிறுத்திவிட்டான். அவள் அவனுடைய வெறிக்குப் பலியானாள்.

மறுநாள் அவள் வேலைக்கு வரவில்லை. கல்கத்தாவிலிருந்து அப்போதுதான் திரும்பி வந்த அசோக் விவரம் அறிந்ததும், "அட பாவி! என்ன காரியம் செஞ்சே! லொக்கி நிச்சயம் அவ அப்பா கிட்டேதான் போயிருக்கா! அவ ஊர் இங்கேயிருந்து ஏழெட்டு மைல். இன்னும் கொஞ்ச நேரத்துலே காளிசரண் கத்தியை எடுத்துக்கிட்டு வந்துடுவான். நீ உயிர் பொழைக்கணும்னு உடனே இங்கேயிருந்து ஓடிப்போ, அவன் வந்து சேர்றதுக்குள்ளே! நான் எப்படியாவது நிலைமையைச் சமாளிச்சுக்கறேன்" என்று சொல்லி அவனை உடனே பஸ்ஸில் ஏற்றிக் கல்கத்தாவுக்கு அனுப்பிவிட்டான்.

அன்றைக்கு அசோக் காளிசரணை எப்படித்தான் சமாளித்தானோ!

நடந்து நடந்து ரஞ்சித்தின் கால்கள் ஓய்ந்து போய்விட்டன. எங்காவது உட்கார்ந்தால் போதுமென்றிருந்தது அவனுக்கு. அதிகப் பசி வேறு. மயங்கி விழும் நிலையில் இருந்தான் அவன்.

அவன் அதிருஷ்டம், தூரத்தில் ஒரு சிறு ஒளிப்புள்ளி தெரிந்தது. சோர்ந்திருந்த அவனது உள்ளத்தில் நம்பிக்கை சுடர் விட்டது. எப்படியோ சிரமப்பட்டு ஒளி தெரிந்த திசையில் நடந்தான்.

ஒரு சிறு குடிசையின் ஜன்னல் வழியே வந்த ஒளி அது. ரஞ்சித் குடிசைக் கதவைத் தட்டினான். கதவைத் திறந்த உருவத்தைப் பார்த்து அவன் அதிர்ச்சியில் மூர்ச்சை போட்டு விழாதது ஆச்சரியந்தான்.

கதவைத் திறந்தவன் காளிசரண்!

சில விநாடிகளில் தன்னைச் சுதாரித்துக் கொண்டான் ரஞ்சித். நல்ல வேளை, காளிசரண் அவனை அடையாளம் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

ரஞ்சித் சொன்னான். "நான் காட்டிலாக்காப் பங்களாவிலே தங்கியிருக்கேன். காட்டுக்குள்ளே வேட்டையாட வந்தேன். வழிதவறிப் போச்சு. தயவு செஞ்சு என்னை அங்கே கொண்டுபோய்...."

"காட்டிலாக்காப் பங்களாவா? அது ரொம்பத் தூரமாச்சுங்களே! தவிர, இந்த இடத்திலே காட்டுவழியிலே நடக்கறது ரொம்ப ஆபத்து. நீங்க ராத்திரிக்கு இங்கேயே தங்கிடுங்க. நாளைக்கு உங்களைப் பங்களாவிலே கொண்டு போய் விட்டுடறேன்."

வேறு வழியின்றி அங்கேயே தங்கினான் ரஞ்சித். காளிசரண் கொடுத்த தேன் கலந்த முட்டைப் பொரியும் சூடான டீயும் அவனுடைய பசிக்கு அமிர்தமாயிருந்தன.

மறுநாள் காலையும் சாப்பிடுவதற்குத் தேன்கலந்த பொரியும் டீயும் கிடைத்தன. பிறகு காளிசரண் பங்களாவுக்கு வழிகாட்ட ரஞ்சித் அவனைத் தொடர்ந்தான்.

பங்களா கண்ணுக்குத் தெரிந்த பிறகுதான் ரஞ்சித்துக்குப் போன உயிர் திரும்பிவந்தது. அவன் காளிசரணிடம், "நீங்க நேத்து ராத்திரி எனக்கு உதவலேன்னா நான் பிழைச்சிருக்க மாட்டேன். நீங்க செஞ்ச உதவிக்கு உங்களுக்கு என்ன கைம்மாறு செய்யறதுன்னு எனக்குத் தெரியலே. இருந்தாலும் நீங்க இதை வாங்கிக்கணும்" என்று சொல்லிய



வாறு ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டினான்.

காளிசரண் அதை வாங்கிக்கொள்ளவில்லை. ''பரவாயில்லை, நான் அப்படி என்ன பெரிசாச் செஞ்சிருக்கேன்? அதுக்காகப் பணத்தைக் கொடுத்து என்னை அவமானப்படுத்தாதீங்க? எனக்குக் காசு வேண்டாம். ஆனா உங்ககிட்டே ஒரு வேண்டுகோள்....''

''என்ன?''

''இனிமேலாவது பொம்பளைங்களைக் கௌரவமா நடத்துங்க! எந்தப் பொண்ணையும் அவளோட விருப்பத்துக்கு விரோதமா நெருங்காதீங்க!''

முகம் வெளுத்துவிட்டது ரஞ்சித்துக்கு: காளிசரண் அவனை அடையாளங் கண்டுகொண்டிருக்கிறான்!

நாக்குழற அவன் கேட்டான், ''நான் யாருன்னு உங்களுக்குத் தெரியுமா? அப்படி விருந்துமா நீங்கள் எனக்கு உபசாரம் பண்ணினீர்கள்....?''

''தெரியும்: நேத்து ராத்திரி கதவைத் திறந்துமே உங்களை அடையாளங் கண்டுகிட்டேன்.''

''அப்படின்னா....''

''நேத்து ராத்திரி நீங்க எங்ககிட்டே மாட்டிக்கிட்டபோதே ஏன் உங்களைப் பழி வாங்கல்லேன்னுதானே கேக்கறீங்க? உம், நாங்க காட்டுமிராண்டிகள்தான். ஆனா, காட்டுமிராண்டிகளாயிருந்தாலும் நாங்க பொம்பளைங்களை அவங்க இஷ்டத்துக்கு விரோதமாப் பலவந்தப்படுத்தமாட்டோம். அது போகட்டும். உங்க சந்தேகத்துக்குப் பதில் சொல்றேன். காட்டுமிராண்டிகளான எங்களுக்கும் சில கட்டுப்பாடுகள் உண்டு, சில சட்டங்கள் உண்டு. அதிலே ஒண்ணு, 'விருந்தாளி சாமிமாதிரி' என்கிற சட்டம். அந்த விருந்தாளி என் பொண்ணைக் கெடுத்துட்டாங்கறதுக்காக நான் அந்த விதியை மீறமுடியுமா? சரி, நான் வரேங்கே. நான் கேட்டுக்கிட்டது மட்டும் ஞாபகம் இருக்கட்டும்!''

ரஞ்சித்தின் குனிந்த தலை நிமிர்ந்தபோது அந்தக் காட்டுவாசியைக் காணவில்லை. ✱

பூ

சுகந்தி

குத்து விளக்கைப் 'பளிச்'சென்று தேய்த்த மங்களம், அதற்கு மஞ்சள் குங்குமம் இட்டாள். திரிபோட்டு எண்ணெய் விட்டாள். விளக்கின் முன்னே சின்ன மணையில் ஐசுவரியக் கோலம் போட்டுக் குத்துவிளக்கின் எதிரே வைத்தாள். 'பளபள'வென்று தேய்த்த பித்தளை ஆழாக்கில் முதல் நாளே கல், நெல் எல்லாம் பொறுக்கி வைத்திருந்த அரிசியைப்போட்டு அதன் மீது கதிர் போட்ட வெள்ளி ரூபாய் நாணயங்களை வைத்தாள். ஆழாக்குக்கும் மஞ்சள் குங்குமம் இட்டாள்.

பானகம் தயாரித்தாள். பால், தயிர் நைவேத்தியத்துக்கு எடுத்து வைத்தாள். வெற்றிலை, பாக்கு, பழத்தைத் தட்டில் எடுத்து வைத்தாள். ஊதுவத்தி கொளுத்திவைத்தாள்.

படி பூஜைக்குத் தயாரானாள் மங்களம்.

எழுந்து நின்று விளக்கின் எதிரே குனிந்து குத்துவிளக்கின் பஞ்ச முகங்களையும் ஏற்றினாள். பூஜை செய்யும் இடம் தெய்வச் சாந்நித்தியம் பெற்றது.

திரும்பி அலமாரியின் மேல் தட்டை நோக்கிச் சென்றாள் மங்களம்.

அதுவரை அமைதியாக, ஒரு நிதானத்துக்குக் கட்டுப்பட்டது போல இயங்கிக் கொண்டிருந்த மங்களத்தின் இதயம் 'படபட' வென அடித்துக்கொள்ளத் தொடங்கியது.

ஒருமுறை திரும்பித் தன் கணவர் வாசுதேவன் வருகிறாரா என்று பார்த்தாள் அவள். காணவில்லை.

சிறிது தைரியம் கொண்டவளாய் அலமாரியின் மேல் தட்டின் பின்பக்கமாக வைத்திருந்த பித்தளை அடுக்கைக் கையால் இப்படியும் அப்படியுமாக நகர்த்தி விளிம்புக்குக் கொண்டு வந்து எடுத்தாள். அதை மூடியிருந்த அலுமினியத் தட்டை எடுத்துச் சத்தம் கேட்காதபடி மெதுவாகக் கீழே வைத்தாள்.

பித்தளை அடுக்கினுள்ளிருந்து 'கமகம' வென்று மணத்தது ஜாதி மல்லிகைப்பூ. அதை எடுத்தாள் மங்களம். நான்கு முழப்பூ. எல்லாச் சுவாமி படங்களுக்கும் அதைக் கிள்ளிப் போடவேண்டும். பூச்சரத்தை நறுக்க அரிவாள்மணையை எடுத்து மங்களம் நறுக்கியபோது புயல்போல அங்கே வந்து விட்டார் வாசுதேவன்.

"உனக்கு எத்தனை தடவை இந்த வீட்டுக்குள்ளே பூவே வரக்கூடாதுன்னு சொல்லியிருக்கேன்? என்னை மதிக்காம, என் பேச்சைக் கேட்காமப் பூவா வாங்கறே பூ?" என்று கேட்டபடி ஆவேசம் வந்தவர் போல மங்களத்தின் கையிலிருந்த பூச்சரத்தை 'வெடுக்' கெனப் பறித்தார். அதை அசுர பலத்தோடு பிய்த்துப் பிய்த்து நாலாபக்கமும் வீசி எறிந்துவிட்டுச் சாய்வு நாற்காலியில் போய்த் 'தொப்'பென்று விழுந்தார் வாசுதேவன்.

மங்களம் அவருடைய செய்கையால் விதிர் விதிர்த்துப் போனாலும் இப்படி ஓர் அசம்பாவிதமான நிகழ்ச்சி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறுவது சகஜமாகிவிட்டதால் அவள் அப்படியே நின்றுவிட்டாள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், மங்களம் படிப் பூஜைக்கு, விளக்குப் பூஜைக்கு ஏற்பாடு செய்து, சுவாமி படங்களுக்கு அவள் மாலை அணிவிக்கிற வேளையில் வந்து அசுரத்தனமாக வாசுதேவன் பூவைப் பறித்து எறிந்ததற்குக் காரணம், அவர் மகள் ஜயாதான்!

வீட்டை விற்று, நிலத்தை விற்றுத் தம் பெண் ஜயாவின் கல்யாணத்தை 'ஜாம் ஜாம்' என்று வாசுதேவன் நடத்தியபோது அவள் கணவன் வீட்டிலேயேதான் வாழப் போகிறாள் என்று எண்ணிக்கொண்டிருந்தார்.

ஆனால் விதி வேறுவிதமாக அல்லவா எண்ணியிருந்தது?

கணவனுடன் ஒருமாத காலங்கூட வாழவில்லை ஜயா. பிறந்த வீட்டுக்கே அவள் திரும்பியபோது அவள் தலையில் பூ இல்லை.

சின்னஞ்சிறு அரும்பான அவளை மலரவே விடாத தெய்வத்திடம் வாசுதேவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஜயாவுக்குப் பூ என்றால் கொள்ளை ஆசை. எவ்வளவு பூ வைத்துக் கொண்டாலும் அவளுக்குப் போதவே போதாது. 'இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம்!' என்று கேட்டுக் கேட்டு வாங்கி வைத்துக் கொள்வாள், பாவம்! அப்படிப்பட்டவளைப் பூவே வைத்துக்கொள்ளாதபடி செய்துவிட்டது தெய்வம். மலரான அவளையே மணம் இழக்கச் செய்துவிட்டது. அழகில்லாமல், மலர்ச்சி இல்லாமல் ஆக்கிவிட்டது.

ஆனால் அது?

மங்களத்துக்குப் பூஜை, புரஸ்காரத்தில் நம்பிக்கை அதிகம். பட்டினி, பாராயணத்திலும் நம்பிக்கை மிகுதி. இவை எல்லாம் நம்மை நமக்குள்ளேயே ஒருமைப்படுத்தி மனத்தை, வாழ்க்கையை எல்லாம் வளம்படுத்தும் உயர்ந்த கோட்பாடுகள் என்ற நம்பிக்கை மங்களத்துக்கு.

குளித்துச் சுவாமி விளக்கேற்றாமல் பூஜை செய்யாமல், கற்கண்டு திராட்சை நைவேத்தியம் செய்யாமல் அவள் தண்ணீர்கூடப் பருகமாட்டாள்.

வெள்ளிக்கிழமை அன்று படிப்பூஜை விசேஷமாகச் செய்வாள். அன்று மடி, ஆசாரம் அதிகம் அவளுக்கு. வியாழக்கிழமை சாயங்காலமே மறுநாள் பூஜைக்கு வேண்டிய பூ, பழம், வெற்றிலை ஆகியவற்றை வாங்கி வைத்துக்கொண்டு விடுவாள்.

குத்துவிளக்கை ஏற்றிக் 'கமகம' என்று ஊதுவத்தி ஏற்றி, படங்களுக்கும் விளக்குகளுக்கும் பூ வைத்து, மாலை போட்டுக்

குத்துவிளக்குப் பூஜைக்கு லட்சுமி அஷ்டோத்தரத்தைக் கணீரென்ற குரலில் சொல்லும்போது ஒவ்வொரு பூவாக அவள் கரத்திலிருந்து குத்துவிளக்கினடியில் விழுந்து குவியும். அப்போது அங்கே ஒரு லக்ஷ்மீகரம் தவழும்.

ஓடியே வருவார் வாசுதேவன், மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க. மலர்மாலைகளை அணிந்து கொண்டிருக்கும் சுவாமி படங்களை இமைக்காமல் பார்ப்பார், ஆத்திரமும் கோபமும் பீறிட்டுக்கொண்டு வரும். மனைவியையும் சுவாமி படங்களுக்குச் சாத்தியிருக்கும் மலர் மாலைகளையும் அவர் மாறி மாறிப் பார்ப்பார். தம்முடைய விருப்பத்துக்கு மாருக அவள் மிகவும் தைரியத்துடன் நடந்துகொள்வதாக அவருக்குத் தோன்றும்.

''நம்ம குழந்தை ஜயா, எவ்வளவு சின்னவள்! அவளுக்குப் பூ மேலே எவ்வளவு ஆசை! அவளைப் பூ வைச்சுக்க முடியாம செஞ்சுட்ட சுவாமிக்குப் பூ எதுக்கு?'' என்று கேட்டபடி சுவாமிக்குப் போட்டிருக்கும் பூக்களைத் தம் பலங்கொண்ட மட்டும் பற்றி எடுத்து அதைப் பிய்த்துப் பிய்த்து எறிவார்: பூஜை புரஸ்காரத்திலும் சாஸ்திர சம்பிரதாயத்திலும் மிகவும் நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டுள்ள மங்களம் கதிகலங்கிப் போய் நிற்பாள். அப்படியே அலங்க மலங்க உட்கார்ந்திருப்பாள் அவள்.

இப்போதும் சுடர்விட்டு எரிந்துகொண்டிருக்கும் குத்துவிளக்கின் முன்னால் எவ்வளவு நேரம் அப்படி ஆடாமல் அசையாமல் மங்களம் உட்கார்ந்திருந்தாளோ தெரியாது, வாசுதேவன் தன்னைக் கூப்பிடுவது கேட்டுத் திரும்பினாள்.

''இந்தா, மங்களம்!'' கமகமவென மணம் வீசும் கதம்பத்தை, மல்லிகைப் பூவை, முல்லையை, ஜாதி மல்லிகையை, மருக்கொழுந்தை, தவனத்தை அவர் பெரிய பூப்பந்தாக அவளிடம் கொடுத்தார்.

அதை இரு கைகளையும் நீட்டிப் பெற்றுக்கொள்ளும்போது அவர் கைகளையும் பற்றிக்கொண்டு, ''எனக்கு உங்க மனசே புரியலியே! வெள்ளிக்கிழமைப் பூஜைக்காக நான் வாங்கி வைக்கிற பூவைப் பூஜையை ஆரம்பிச்சதும் வந்து பிடுங்கிப் பிய்ச்சு எறிஞ்சு நாசம் செய்கிறீர்கள்! அப்புறம் கொஞ்ச நேரத்திலே நாலஞ்சு ரூபாய்க்கு விதவிதமாப் பூவை நிறைய வாங்கிண்டு வந்து என்னிடம் பூஜை செய்யக் கொடுக்கிறீர்களே! இத்தனை வருஷம் பழகியும் எனக்கு உங்கள் மனசு புரியலியே?'' என்று கேட்டாள் மங்களம்.

'உனக்கு அது புரியவே வேண்டாம் மங்களம்! நம்ம பெண் ஜயாவுக்குப் பூ வைச்சுக்கிறதுன்னு கொள்ள ஆசை! ஆனல் தெய்வமோ அவளிடமிருந்து பூவைப் பறிச்சுண்டுடுத்து! அவள் சின்னவள் தானே? கணவன்கூட 'ஓஹோ'ன்னு ரொம்ப வருஷம் வாழ்ந்துடலியே! எண்ணி முப்பது நாள்கூட அவள் புருஷனோட வாழலே! ஆசைகள் வளர்ந்த வயசில்லேயா அவளுக்கு? கணவன் போனாலும் பாவம், அவளுக்குப் பூ வைச்சுக்கற ஆசை போகலே! வெள்ளிக்கிழமைப் பூஜைக்கு நீ வியாழக்கிழமை சாயங்காலமே வாங்கி வைக்கிற பூவை ராத்திரி வேளையிலே எடுத்துத் தலையிலே வைச்சுண்டு கொஞ்சநேரம் சந்தோஷப்படறா ஜயா! அப்புறம் அதைப் பழையபடி எடுத்து வைச்சுடறா! அதைத்தான் நீ வெள்ளிக்கிழமை சுவாமிக்குச் சாத்த எடுக்கறே! மங்களம்! மனுஷா உபயோகித்த பூவைச் சுவாமிக்கு வைக்கலாமா? உன்கிட்டே உண்மையைச் சொல்லத் துடிக்கிறேன்! சாஸ்திரம், சம்பிரதாயத்திலே ரொம்ப நம்பிக்கையுள்ள, நீ ஜயாவைக் கண்டபடி திட்டி அவள் மனசை நோகடிக்கிறது மட்டுமல்லாமல் அவளை ஒரு கைம்பெண்ணுவே எல்லாவிதத்திலேயும் நடத்தி, அந்தப் பிஞ்சு உள்ளத்தைச் சாகடிச்சுடுவியோன்னு எனக்குப் பயமாயிருக்கு மங்களம்! மகளுடைய ஆசை, மனைவியோட சாஸ்திர நம்பிக்கை ஆகிய ரெண்டுக்கும் இடையிலே அகப்பட்டுண்டிருக்கிற பாசமுள்ள தகப்பனை நான் மகள் ஆசையையும் சரி, மனைவியுடைய நம்பிக்கையையும் சரி கொஞ்சங்கூட நசுக்க விரும்பலே மங்களம்! அவள் வைச்சுண்ட பூவைச் சுவாமிக்குச் சாத்த விரும்பாத நான் கடவுள்மேலே கோபமுள்ளவன்போல அதை எல்லாம் பிச்சு எறியறேன். நீ பூஜை செய்ய உடனே புதுப் பூவா வாங்கிண்டுவந்து கொடுக்கிறேன். இது உனக்குப் புரியவே வேண்டாம் மங்களம்! ஏன்ன, நீ சாஸ்திரத்திலே, ரொம்ப நம்பிக்கையுள்ளவள், மங்களம்! உனக்கு என் மனசு புரியவே வேண்டாம் மங்களம், புரியவே வேண்டாம்!'' என்று கூறினர் வாசுதேவன். ✳

குறு நாவல்:



ஜன்னல்

மோ. கிருஷ்ணமணி

நான் அந்த வீட்டுக்குக் குடித்தனம் செய்யப் போய் இன்றோடு இரண்டு மாதங்கள் முடிந்துவிட்டன. திருவல்லிக்கேணி நெடுஞ் சாலையில் பழைய காலத்துப் பாணியில் இருந்த பழைய வீடு அது. மூன்று தலைமுறைக் காலத்தைக் கண்டுவிட்ட ஒரு வயோதிகனைப் போலக் கிடந்தது.

என் குடும்பம் சிறியது: நான், என் மனைவி, எங்கள் பெண் குழந்தை வித்தியா. எனக்கு வரும் சம்பளத்தில் இதைவிட உயர்ந்த இடமாகப் பிடிக்க முடியவில்லை. வாடகை எண்பது ரூபாய். வாயிற்புறத்துப் பக்கம் படுக்கையறை; வீட்டின் மூன்றாவது கட்டில் சமையலறை. இரண்டுக்கும் தொடர்பு இல்லாமல் இருந்தது என்னைப் பொறுத்தமட்டில் சௌகரியமானதாகவே இருந்தது. வாயிற்புறத்து அறையின் ஜன்னலின் உட்பக்கமாக அமைந்திருந்த மேடையின் மேல்தான் நான் உட்கார்ந்து தெருவை வேடிக்கை பார்ப்பது வழக்கம். சுவர்கள் எல்லாமே ஒன்றேகாலடி அகலந்தான். ஓர் அறையில் பேசுவது மற்ற அறையில் கேட்காது. ஆனால் எங்கள் சங்கதியே வேறு. தெருவில் இரவு பத்து மணி வரைக்கும் சந்தடி மிகுந்திருக்குமாதலால், உரக்கத்தான் பேசவேண்டும்.

கல்யாண ஊர்வலங்கள், பஸ்கள், கார்கள், லாரிகள் ஆகியவற்றின் பேரிரைச்சல், பெட்ரோல், டீஸல் புகை, இவற்றுடன் தினசரி குறைந்தது மூன்று அல்லது நான்கு இறுதி யாத்திரைகள் இவையெல்லாம் அன்றாடக் காட்சிகள். வாழ்வுக்கும், மரணத்துக்கும் இடையே இருந்த உறவை நான் பல முறை சிந்திக்க ஆரம்பித்து விட்டேன். எங்கள் அறையின் ஜன்னல்தான் எனக்கு ஞானம் பிறந்த இடம். எனக்கு இந்த இரண்டு மாத வாழ்க்கையையும் சேர்த்து வயது முப்பது தான். ஞானம் ஏற்பட இந்த வயதிலேயே நானும் பல மகான்களைப் போலத் தகுதி பெற்றுவிட்டது போல் உணர்ந்தேன்.

இன்று நான் காரியாலயத்துக்குப் போகவில்லை. விடுப்பு எடுத்துக்கொண்டு விட்டேன். சோம்பல்தான் காரணம். தினமும் ஒரே மாதிரியாக, சாவி கொடுத்தால் இயங்கும் இயந்திரம்போல அமைந்துவிட்ட எனது நடுத்தரவர்க்க வாழ்க்கையின் மீது அசாத்தியமான கோபம். கோபத்தை யார் மீதும் காட்ட முடியாது என்ற பேருண்மை விளங்கியபோது அது சலிப்பாக மாறியது. எனக்கு எல்லாமே சலித்துப் போய்விட்டது போல் தோன்றியது. பழக்கம் காரணமாக ஜன்னலின் உள் மேடையில் உட்கார்ந்தேன்.

எங்கள் வீட்டு ஜன்னலுக்கு ஒரு மகிமை இருக்க வேண்டும். சில நிமிஷங்கள் முன்பு சலித்துக் கொண்ட மனசு இப்போது மாறுபட்டு இயங்க ஆரம்பித்தது. எங்கள் வீட்டிலிருந்து பார்த்தால் சாலையின் மறுபுறம் இருக்கும் பஸ் ஸ்டாண்டு தெரியும். காலை நேரத்தில் காரியாலயம் செல்லும் ஆண்களும் பெண்களும் நிற்பது ஜன்னலிலிருந்தே நன்கு தெரியும்.

மஞ்சள்நிற ஜார்ஜெட் சேலை, மஞ்சள் நிறச் சோளி, மஞ்சள்நிற வளையல்கள், மஞ்சள்நிறக் கனகாம்பரம் சகிதமாகப் பொருத்தமாக அலங்காரம் செய்துகொண்டு அவள் நின்று கொண்டிருந்தாள். நான் தினமும் பஸ் ஸ்டாண்டில் சந்திக்கும் மகேசுவரிதான் அவள். அவளுக்கு வயது முப்பதுக்குக் குறைவாகவே இருக்கும். இன்னும் திருமணமாகவில்லை. எங்கள் வீட்டுக்குப் பத்து வீடுகள் தள்ளி அவள் வீடு. மத்திய சர்க்கார் காரியாலயம் ஒன்றில் அவளுக்கு வேலை. நான் அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

நல்ல உடற்கட்டு, அழகி; பட்டதாரி. நல்ல வேலையிலும் இருக்கிறாள். ஏனோ

என் மனைவி சியாமளியைத் திடீரென்று நான் நினைத்துக்கொண்டேன். இப்போது அவள் அடுப்படியில் இருக்கிறாள். அவளுக்கு இந்த மாதிரி பஸ்ஸுக்காக நிற்கவேண்டிய அவசியம் இல்லை. காலையில் ஆலாய்ப் பறக்கவேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. சீருடை அணிந்து செல்லத் தோன்றுவதில்லை. சியாமளி அழகிதான். ஆனால் மகேசுவரி அதிக அழகாக இருப்பது போல் தோன்றியது. நல்ல வேளை, சியாமளி பக்கத்தில் இல்லை.

மகேசுவரியின் கண்கள் அவள் ஏறிச்செல்ல வேண்டிய பஸ்ஸின் வரவை எதிர்பார்த்துச் சுழன்றன. கண்களில் மை தீட்டியிருந்தாள். எத்தனை அழகான கண்கள்!

எனக்கு அவளோடு சிறிது பரிசயமுண்டு. சிலமுறை பேசியிருக்கிறேன். என்னிடம் ஒரு கெட்ட பழக்கம். என்னிடம் பேசுபவர்கள் யாராயிருந்தாலும் சரி; அவர்களுடைய கண்களை உற்றுப் பார்த்தே பேசுவேன். அந்த இருமுறைகளும் மகேசுவரியிடமும் அப்படித்தான் பேசியதாக நினைவு. சில விநாடிகளில் அவள் தன் பார்வையைத் தாழ்த்திக்கொண்டுவிட்டாள். என் பார்வை யதார்த்தமானதுதான். ஆனால் அது அவளுக்குப் புரியவில்லை போலும்!

இப்போது எனக்கு அவளுடன் பேச வேண்டும் போல் இருந்தது. சட்டையை மாட்டிக்கொண்டு புறப்பட்டேன். கதவைத் தாழிட்டுவிட்டு வெளிநடந்தேன். நான் பஸ் ஸ்டாண்டை அடைந்ததும் மகேசுவரியுடன் ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவர் பேசிக்கொண்டிருந்தார். எனக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. சியாமளி என்னைத் தேடித் தெருவுக்கு வருவதற்குள், பஸ் வருவதற்குள், நான் அவளுடன் பேசவேண்டும். எனக்கு அந்தப் பெரியவர் மீது ஆத்திரமாக வந்தது.

பேச்சினூடே அவள் என்னைப் பார்த்தாள். நான் புன்னகை செய்தேன் அவள் கண்கள் மின்னின. எனக்குத் தைரியம் பிறந்தது.

"இன்னும் பஸ் வரல்லியோ?" என்றேன்.

"ஆமாம். பத்து நிமிஷமாக் காத்திண்டிருக்கேன்."

"நான் இன்னிக்கு லீவ் எடுத்திருக்கிறேன்" என்று வலியச் சொன்னேன். இப்போது அந்தப் பெரியவர் என்னைப் பார்த்தார்.

"இவர் எங்க அப்பா. விவசாய இலாக்காவிலே பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டார்" என்று அவள் சொன்னாள்.

"நமஸ்காரம் ஸார்!"

"நமஸ்காரம்."

"உங்க பேர் என்ன?"

"கிருஷ்ணன்."

"எங்கே உத்யோகம்?"

"தபால் இலாக்காவிலே கணக்குப் பிரிவில் இருக்கிறேன்"

'கல்யாணம்?"

"ஒரு பெண் குழந்தை இருக்கு ஸார்!"

அவர் முகம் மாறியது. சில விநாடிகள் தாம் சுதாரித்துக்கொண்டுவிட்டார். பிறகு பேசினார், "நம்ம மகேசுவரிக்கு நல்ல இடமாப் பார்த்துண்டிருக்கேன். இருபத்தேழு வயசாகிறது அவளுக்கு. (என்னைவிட மூன்று வயசு இளையவள்.) தெரிஞ்ச நல்ல இடமா இருந்தா சொல்லுங்கோ! நீங்கள் கிடைத்தால் தேவலை. ஆனால் அதிர்ஷ்டமில்லையே!"

எனக்குப் பெருமையாகவே இருந்தது. நான் மகேசுவரியைப் பார்த்தேன். அவள் பஸ்ஸின் வரவைப் பார்த்துக்கொண்டிருந்தாள். இப்போது மனத்தில் சிறிது ஏமாற்றம்.

"மகேசுவரிக்கு ஜாம் ஜாம்னு கல்யாணம் நடக்கும் ஸார்! கவலைப்படாதீங்கோ!" என்றேன்.

பாழாய்ப் போன பஸ் வந்துவிட்டது. அவள் கையசைத்துவிட்டுப் போய்விட்டாள். நான் வீடு திரும்ப நினைத்து மெல்ல நகர்ந்தேன். அவர் என்னைத் தொடர்ந்தார். தம் பணியைப் பற்றி, குடும்பத்தைப்பற்றி, மகேசுவரியைப்பற்றிக் கதை கதையாகச் சொன்னார். உபசாரத்துக்காக, "காபி சாப்பிடலாமா?" என்றேன். சரி என்று சொல்லிவிட்டார். நல்ல வேளையாகச் சட்டைப் பையில் ஒரு ரூபாய் நோட்டு ஒன்று இருந்தது. இருவரும் சற்றுத் தள்ளியிருந்த காபி ஓட்டலில் நுழைந்து காபி அருந்தினோம்.

மனிதர் கலகலப்பான பேர்வழி. பேசிக் கொண்டே இருந்தார். கடைசியில் என் வீட்டுக்கே அவரை அழைத்துப் போனேன்.

சியாமளி காத்திருந்தாள். அறிமுகம் செய்து வைத்தேன். அவள் சம்பிரதாயப் புன்னகையுடன் மீண்டும் சமையற்கட்டுக்குச் சென்றாள். அலாரக் கடிகாரம் மணி பத்தரை என்று காட்டியது. ஒரு மணி நேரப் பழக்கத்தில் சிவராமன் - அதுதான் அவர் பெயர்- என்னிடமிருந்து முப்பது ரூபாய் கடனாக வாங்கிக்கொண்டு புறப்பட்டார். என்னால் அதை நம்பவே முடியவில்லை. ஆனால் சியாமளிக்குத் தெரியாமல் நான் முப்பது ரூபாயைக் கொடுத்தேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஒன்பது மணிக்குக் குளிக்கப் புறப்பட்டேன். குளியலறைக் கதவு சாத்தியிருந்தது.

"ஏழு குடித்தனங்களுக்கு இரண்டே குளியலறை. பெண்கள் குளிக்கறதுன்னா கஷ்டப்பட வேண்டியிருக்கு. வாடகைக்கு மாத்திரம் டான்னு ரெண்டாம் தேதியே வரத் தெரியறது. ஒரு சௌகரியம் உண்டா? சே! என்ன மனுஷன்ஐயா இந்த வீட்டுக்காரர்!" என் பக்கத்துக் குடித்தனக்காரர் இரைந்துகொண்டிருந்தார். அவர் அப்படிச் சத்தம் போடுகிறாரென்றால் அவர் வீட்டில் யாரோ குளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தம். அவருடைய பெண், கல்லூரி மாணவி, சாவகாசமாகத்தான் குளிப்பாள். வேறு எவரேனும் ஏதாவது சொல்லிவிடப் போகிறார்களேயென்று, அவரே தினமும் வீட்டுக்காரரை வாழ்த்துவார்.

நான் துண்டும் சோப்பு டப்பாவுமாக நின்று கொண்டிருந்தேன். முற்றத்தில் பம்ப் செட் போட்டிருந்தது. அதனுடைய வாஷர் தேய்ந்து போயிருக்கவேண்டும். தண்ணீருக்காக அதை வேகமாக அடித்தபோது பல வீனப்பட்ட ஒரு நோயாளியைப் போல 'ங்ய்..ங்ய்..' என்று ஒலியெழுப்பியது. 'அதற்கு மட்டும் தன் அவஸ்தைகளைச் சொல்ல முடிந்தால்..?' என்று எண்ணினேன். பக்கத்துப் போர்ஷன்காரர் சொன்னார்:

"செக் வால்வு போயிட்டது போலிருக்கு, கிருஷ்ணன். மாத்தித் தொலைக்கணும். மாசம் மாசம் இதுக்கெல்லாம் தண்டம் வச்சாகணும்.

ஏதோ வீடுன்னு இருக்கே தவிர, என்ன சௌகரியம்? நமக்கும் இதிலேருந்து மீறிப் போக வேளை வரல்லே.''

அவர் இந்த வீட்டுக்குக் குடிவந்து பத்து வருஷங்களாகி விட்டன. என் குடியிருப்பை விடவே பெரிய இடம். ஆனால் வாடகை எழுபத்தைந்துதான் தருகிறார். வீட்டுக்காரரைக் கண்டால் கும்பிடு போட்டு, மிகப் பணிவாகத்தான் பேசுவார். சியாமளி சொல்வாள்: ''அவர்கள் போர்ஷனுக்கு வேறு வீட்டுக்காரராயிருந்தால் நூற்றிருபது கேட்பார்கள். பத்து வருஷமா இருக்காளேன்னு வீட்டுக்காரர் விட்டு வச்சிருக்கார்'' என்று.

நான் சொன்னேன்: ''ஸார்! சாமிப் பிள்ளை தெருவில் ஒரு போர்ஷன் காலியாகப் போறது. மூணு ரூம் ஒரு ஹால். மூணே குடித்தனங்கள். வாடகை நூத்திருபது தானும். உங்களுக்குச் சௌகரியமா இருக்கும் என்று தோணுகிறது. பார்க்கிறீர்களா! பாவம்! இங்கே உங்களுக்குச் சரிப்படலை போலிருக்கே'' என்றேன்.

அடுத்த விநாடி மதுரைச் சொக்கநாதர், நக்கீரரை எப்படிப் பார்த்திருக்கக்கூடும் என்ற கற்பனையான விஷயத்தைக் கண்கூடாகக் கண்டேன்.

விருட்டென்று தம் பகுதிக்குச் சென்று விட்டார் அவர். அப்போதுதான் நான் தவறாகப் பேசிவிட்டேனே என்று தோன்றியது.

அந்தச் சமயத்தில் சியாமளி வித்தியாவை அழைத்துக்கொண்டு வந்தாள். குழந்தை எதற்காகவோ அடம் பிடிக்கிறாள் என்று தெரிந்தது. பெண் குழந்தைகள் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். எங்கள் குடும்பத்தில் அனைவரும் பிள்ளைகள்தாம். வித்தியாவுக்கு என்னிடம் செல்லம் அதிகம்.

''தோ பாருங்கோ! உங்க செல்லப் பொண்ணு, இந்தக் கணமே லட்டு வேணும்னு அடம் பிடிக்கிறா. நான் என்ன பண்றது? வர்ற கோபத்திலே முதுகிலே ரெண்டு அறை வைக்கணும் போல இருக்கு'' என்றாள் சியாமளி.

''குழந்தையை அடிக்காதே. குளியலறை காலியாக இன்னும் கொஞ்சம் நேரமாகும் போலிருக்கு. லாலா கடைவரைக்கும் போய் மிட்டாய் வாங்கிண்டு வறேன்'' என்றேன்.

''இவளையும் அழைச்சிண்டு போங்கோ! செல்லம் குடுத்தே கெடுங்கோ!'' சியாமளி குழந்தையை என்னிடம் விட்டுவிட்டுப் போய் விட்டாள். நான் துண்டையும் சோப்பு டப்பாவையும் உள்ளே வைத்துவிட்டு. வித்தியாவுடன் கடைக்குச் செல்ல ஆயத்தமானேன்.


எதிர்பாராத நிகழ்ச்சிகள் ஏற்படும்போது நாம் காரணகாரியம் புரியாமல் திகைக்கிறோம். இன்னும் அரை மணி நேரத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதை அறியும் வகை இருந்தால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும்! லாலா கடையில் லட்டு வாங்கிக் கொண்டு திரும்பவும் சிவராமன் மீது மோதிக் கொள்ளவும் சரியாக இருந்தது.

''மன்னிக்கணும் ஸார்.''

''யாரு சாமிநாதனா?'' என்றார்.

எனக்குச் சற்று எரிச்சலாக வந்தது. சமாளித்துக்கொண்டேன். ''என் பெயர் கிருஷ்ணன். அன்னிக்கு எங்க வீட்டுக்குக் கூட நீங்க வந்திருந்தீங்க!'' (முப்பது ரூபாய் விஷயத்தைச் சொல்லக் கூச்சமாக இருந்தது. மனிதர் நம்மை அற்பன் என்று எண்ணி விடக்கூடாதல்லவா?)

''ஆமாம்! ஏதோ கவனம். மனசில் கவலை இருந்தால் இப்படித்தான். வரிசையா நாலு பெண்கள். என் போன்ற நிலையில் இருப்பவன்



எப்படிக் கல்யாணம் செய்து குடுக்க முடியும்? ராப்பகலா இதே சிந்தனை! சொல்லுங்கோ கிருஷ்ணன்!''

என் மனத்தில் சற்றுமுன் தோன்றிய எரிச்சல் மறைந்தது. இப்போது சிவராமன்மீது இரக்கம் தோன்ற ஆரம்பித்தது.

''உண்மைதான். மகேசுவரிக்கு வரன் பார்த்திண்டிருக்கிறதாச் சொன்னீங்களே? என்ன ஆச்சு?''

''நல்ல இடமா வந்தது. பையன், பையன்னு சொல்லலாமா? வயசு முப்பத்து நாலு ஆறது. ஒரு கம்பெனியிலே உதவி மானேஜர். சம்பளம் ஆயிரம் ரூவா வர்றதாம். இந்த இடம் குதிர்ந்திடும்னு நெனைச்சேன். ஆனா அவளுக்குப் பிடிக்கல்லே!''

''என்ன காரணம்?''

''சொல்லல்லியே! வேண்டாம்னு ஒரே வார்த்தையிலே சொல்லிட்டா. பெரிசாக் குத்தம் சொல்ற மாதிரி இல்லே. வலது காது கொஞ்சம் மந்தம். இதை ஒரு விஷயமா எடுத்துக்கலாமோ? அவளோட விசாரமே எனக்குப் பெரிசாப் போச்சு. பொண்கள் சம்பாத்தியத்திலே சாப்பிடறேன்னு எனக்குப் பேர் வரக்கூடாதேன்னு பாக்கிறேன். சம்பாதிக்கப் போயிட்டாலே பொண்களுக்குத் தைரியம் பொறந்திடறது. சுதந்தரமா இருக்கணுங்கறா. சுதந்திரமா இருக்கிறதுன்னா எதைச் சுதந்தரமா நெனைச்சுக்கிறான்னு தெரியலே. பெரியவா பேச்சைக் கேக்காம இருக்கிறதையா? வயசு ஏறிண்டு போறது. சொன்னாத் தெரியமாட்டேங்கிறது. ஒரு தடவைக்கு ரெண்டு தடவையாச் சொன்னாக் கோபம் வந்துடறது. என்ன பண்றது? என் தலையெழுத்து!''

அவருடைய அங்கலாய்ப்புக்கு அர்த்தம் புரிந்தது. சுதந்தரமான போக்கு என்ற பெயரால் எத்தனை பெண்கள் தம் இளமையின் சுகாநுபவங்களை இழக்கிறார்கள்! எல்லாமே ஓர் எல்லைக்குள் நின்றால்தான் நல்லது. 'தினமும் பஸ்ஸில் திருமணமாகாத பெண்கள் எத்தனை பேர் வருகிறார்கள்? இவர்கள் தங்கள் வாழ்க்கையை இப்படி ஏன் வீணடித்துக் கொள்கிறார்கள்?' என்ற கேள்வி மனத்தில் தோன்றியது.

''நீங்க எங்களோட வீட்டுக்கு வாருங்களேன்'' என்றார்.

''குழந்தையை வீட்டில் விட்டுவிட்டு வருகிறேன்'' என்றேன்.

''சரி! நான் காத்துக்கொண்டிருப்பேன்.''

''இதோ வந்துவிட்டேன் ஸார்.''

சொல்லிவிட்டு வேகமாக வீட்டை நோக்கி நடந்தேன். சியாமளியிடம் சொல்லிவிட்டுப் போகவேண்டும்.

நான் வீட்டுக்குள் நுழைந்ததும், வாசற்படியிலேயே சியாமளி என்னை வரவேற்றாள்.

''அப்பா வந்திருக்கார் ஊரிலேருந்து'' என்றாள்.

வித்தியா, தாயைக் கண்டதும் அவளிடத்தில் பாய்ந்து சென்றாள். தாய்சேய் விரோதம் இருந்த இடம் தெரியவில்லை. சியாமளியும் லட்டுப் பொட்டலத்தைக் கையில் வாங்கிக்கொண்டு உள்ளே போனாள்.

என் மாமனார் திருச்சிக்குப் பக்கத்தில் லால்குடியைச் சேர்ந்தவர். ஊரில் அவருக்கு நிலபுலன் உண்டு. அவருக்கு வயது அறுபதை நெருங்கிக்கொண்டிருந்தது. தோற்றத்தி... பத்து வயது குறைத்தே சொல்லும்படி இ... கும். வாட்டசாட்டமான உடம்பு. நெறியா... வாழ்க்கையின் பிரதிபலிப்பாக, முகம் எ... போதும் களையுடன் இருக்கும். அதிகமா... பேசமாட்டார்.

''வாருங்கோ மாப்பிள்ளே! சென்னைக்கு திடீர்னு வரும்படி ஆயிடுத்து. அதனாலதா... கடுதாசு எழுத முடியல்லே. நம்ம புவனாவுக்... ஓர் இடம் நிச்சயமாகும் போலிருக்கு. மா... பிள்ளைப் பையன் இன்ஷூரன்ஸ் கலை... இருக்காராம். பி. ஏ. படிச்சிருக்கார். வய... இருபத்தஞ்சுதானாம். ஷெனாய் நகர்லே வீ... இருக்காம். இன்னிக்குப் போய்ப் பாத்திட்... வரலாம்னு. கடுதாசு போட்டு உங்களை விசாரிக்கச் சொல்லி இருக்கலாம். அவகாச... இல்லே. சீக்கிரமா முடிக்கலாம்னுதான் நானே வந்துட்டேன். எங்க அம்மாவுக்கு உடம்பு படுத்தறது. கிழவி திடீர்னு மண்டையைப் போடறதுக்குள்ளே காரியத்தை முடிச்சிடலாம்னு!''

''சீக்கிரம் குளிச்சிட்டு, ஆகாரம் பண்ணுங்கோ'' என்றாள் சியாமளி.

எனக்குப் பேச நா எழவில்லை. மாமனாரின் சுபாவம் எனக்குத் தெரியும். நான் சிவராமனின் வீட்டுக்குப் போவதைத் தள்ளிப் போட வேண்டி வந்துவிட்டது.

ஆனால் நான் மறுபடியும் அவரைப் பார்ப்பதற்குள் பரபரப்பூட்டிய அந்த விஷயம் நடக்கக் கூடுமென்று சிறிதும் எதிர்பார்க்கவேயில்லை.

வாழ்க்கையில் சிலருக்கு எல்லாமே சொல்லிவைத்தாற்போல ஓர் ஒழுங்குடன் நடந்துவிடுகின்றன. தெளிவான சிந்தனை, திண்மையான நெஞ்சம், நல்லதையே எண்ணும் பாங்கு, எண்ணியதைச் செய்து முடிக்கும் காரியத்திறன் என்று அவர்களுக்கு வாய்க்கின்றன. என் மாமனார் அந்த ரகத்தைச் சேர்ந்தவர்தாம். என் மைத்துனியின் திருமணம் விமரிசையாக நடந்தது. அவளுக்கு வயது பத்தொன்பதுதான் ஆகிறது.

கல்யாணச் சாப்பாடு முடிந்து தாம்பூலம் தரித்துக்கொண்டிருந்தபோது விஷயம் பொதுவாகத் தற்கால வாலிபர்களின் மனநிலையைக் குறித்துச் சென்றது. ஒருவர் சொன்னார்:

''இன்னிக்கு அவனவன் படிப்பை முடிச்சு, உத்தியோகம்னு ஒண்ணு கெடைச்சவுடனே சுதந்தரமா இருக்கணும்னு நெனைக்கிறான். ஏதுடா நம்மைப் பெத்து வளர்த்து, படிக்க வச்சு ஆளாக்கின பெற்றோருக்கு நாம உதவி செய்யணுமேங்கிற எண்ணம் வரவே மாட்டேங்குது. ஏதோ தன்னுடைய வாழ்க்கைப் போக்கிலே தடை ஏற்படற மாதிரி ஒரு நெனைப்பு. தாய் தந்தையை ஒரு சுமையா நெனைக்கிறான். வேலை ஆகி ரெண்டு வருஷம் ஆனவுடனே கல்யாணம செஞ்சிக்கணுங்கிறான். அதுவும் ஆயிட்டால் கேட்கவே வேணும். பொண்டாட்டி ஆத்தா பெரியாத்தான்னு அவ சேலை முந்தானையைப் பிடிச்சுக்கறான்கள். தனிக்குடித்தனம் போடணும்கிறான். எதுக்கு? இஷ்டப்படி இருக்கிறதுக்கு. ஏரவர வியவஸ்தையே இல்லாமப் போச்சு. பொண்டாட்டின்னு ஒருத்தி வந்துட்டா, எந்த நேரமும் அவ பின்னாடியே

சுத்திச் சுத்தி வர்றதுதான் வாழ்க்கையிலே சாதிக்க வேண்டிய லட்சியமா ஆய்ட்டுது.''

''என்ன ஸார் காரணம் இதுக்கெல்லாம்? இந்தக் காலப் பொண்களும் பையன்களும் பாலுணர்ச்சிக்குத்தான் முக்கியத்துவம் தருகிருங்க. சொல்லவே சங்கடமா இருக்கு. சினிமா தான் இதுக்கெல்லாம் காரணம். இனிமே முத்தக் காட்சிகளும் இடம் பெறலாமாம். ஒருபக்கம் ஜனப்பெருக்கத்தைக் கட்டுப் படுத்தணும்கிறுன். இன்னெரு பக்கம் இந்த மாதிரி விஷயங்களை அநுமதிக்கிறுன். ரொம்பக் கெட்டுப் போச்சு நாடே!'' என்றுர் இன்னும் ஒருவர்.

''பொண்களும் ஆண்களைப் போலவே சமுதாயத்திலே பழகவேண்டிய நிர்ப்பந்தம் வந்தாச்சு. வேலைக்குப் போற பெண்களுக்கு ஆண்கள் மத்தியிலேயே நாளின் பெரும் பகுதியைக் கழிக்க வேண்டியிருக்கு. அதனுல அவாளுக்குக் கூச்ச உணர்வெல்லாம் இல் லாமப் போயிடறது. சகஜ பாவம் ஏற்பட்டுப் போறது. எத்தனையோ பொண்கள் கண வனையே பெயரிட்டுக் கூப்பிடறுங்க. பொருளா தாரச் சார்பு நிலை நீங்கிப் போனதிஞல, சமத்துவம்கிறது ஏற்பட்டுப் போச்சு. இயற்கை அவஸ்தைகளுக்காகவே, ஆணுக் குப் பொண்ணும், பொண்ணுக்கு ஆணும் தேவைங்கிறது மாதிரி ஒரு நிலை உண்டா யிட்டுது. சொல்லப் போனு குடும்பங்கிறதே கூட ஒப்பந்தம் மாதிரி ஆயிட்டுது'' என்றுர் இன்னெருவர்.

''பந்தம், பாசம் இதுக்கெல்லாம் அர்த்த மில்லாமப் போயிட்டுது ஸார். ஒரு பழக்க மாத்தான் இதெல்லாம் இப்போ இருக்கு. காலம் போற போக்கைப் பார்த்தால் திருமணமும் வியாபாரம் மாதிரி ஆயிட்டுது. எனக்குத் தெரிஞ்ச ஓரிடத்திலே ஒரு பொண் எம். ஏ. பாஸ் பண்ணிட்டு, அதுக்கு மேலே வேறெரு தேர்வும் எழுதி மத்திய சர்க்காரிலே ஆபீசரா ஆயிட்டா. அவங் களுக்கு விதவைத் தாயார் ஒருத்தர். தாயா ருக்கு மாத மாதம் தன் சம்பளத்திலே ஒரு பங்கைத் தந்துக்கிட்டு வந்தாங்க. அவ காதலிச்சுக் கட்டிக்கிட்ட புருஷன் கொஞ்ச நாளிலே இதை ஆட்சேபித்தார். அப்போ அவங்களுக்கு ஒரு குழந்தைகூடப் பொறந் தாச்சு. விஷயம் விபரீதமாப் போயிட்டது. அந்த அம்மா தன் போக்கை மாத்திக்க முடியாதுன்னுட்டா. அவர் பிடிவாதமா இருந் தார். கடைசியிலே பிரிவு ஏற்பட்டுப் போய்ப் போன மாசம் விவாகரத்து ஆயிட்டுது.''

''ரெண்டு பேர்லே யாராவது ஒருத்தர் விட்டுக் கொடுத்திருக்கலாம். ஆனு யார் விட்டுக் கொடுக்கிறதுங்கிறதுதான் பிரச்னை. இதிலே ரெண்டு பேருக்குமே 'தான்' என் கிறதே பெரிசா இருந்திருக்கு. வாழ்க்கையை விட, தங்கள் அறிவாற்றலைக் காட்டுவதாக இருக்கிறதே ஒழிய மனித உணர்ச்சிகளுக்கும், வாழ்க்கைக்கும் பொருள் இல்லாமப் போயிட றது'' என்றுர் முதலில் பேசியவர்.

''ஆத்மார்த்தமா ஒருத்தரை மத்தவர் நேசிக்கணும். கணவனுக்கும் மனைவிக்கும் இந்த உள்ளுணர்வால ஏற்படற பிணைப்பு உண்டாகணும். அதில்லாம வெறும் உடல் அவஸ்தைக்காக, அன்றுடத் தேவைகளைப் பூர்த்தி செய்யறதுக்காக ஒரு பொண்ணுக்கு ஓர் ஆண் துணை வேணுமேங்கிற அடிப்படை யிலே குடும்பங்கிறது இருந்தால், அங்கே சௌஜன்யம் எப்படி இருக்க முடியும்? வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கிற பொண்களைக் கட்டிக்கிறவன் என்ன நெனைக்கிறுன்? குடும்பத் தோட செலவைச் சரிக்கட்ட கஷ்டப்படாம வாழ, கடனில்லாம நடத்திச் செல்ல உதவி செய்யத் தகுதியுள்ள ஒரு துணையாகவே மனைவியை நெனைக்கிறுன். அவனுடைய ஆண்மை அங்கே பொலிவிழந்து போயிடுது. குழந்தை குட்டி பெறுவதனுல் மட்டும், உடல் தோற்றத்திலே மட்டும் ஆண்மகனு இருக்கான். அவன் பொண் டாட்டி கிட்டே வாழ்நாள் முழுமையும் அடிமைபோல்தான் வாழ முடியும். இந்த நிலை பொருளாதார நெருக்கடியினுல ஏற்பட்ற ஒன்றே தவிர மனத்தளவிலே அன்பினுல ஏற்படறதில்லே''' என்றுர் இரண்டாமவர்.

எனக்கு இந்தப் பேச்சு மனத்தில் பல எண்ணங்களை அலைமோதச் செய்தது. சென்ற தலைமுறையினரின் வாழ்க்கைக் கணிப்புகளுக் கும், இன்றைய காலகட்டத்தில் வாழும் நடுத்தர வர்க்கத்து மக்களின் வாழ்க்கையைப் பற்றியக் கணிப்புகளுக்குமிடையேதான் எவ் வளவு வேறுபாடு! துல்லியமான பார்வைக்கு, குடும்ப வாழ்க்கையின் அஸ்திவார பலமான இதயங்கலந்த பூரணமான காதலும், ஆழ்ந்த அன்பும் இல்லாத சூனிய நிலை பளிச்சென்று துலங்கியது.

மகேசுவரியைப் போன்ற பெண்கள் அதனுல்தான் கூடுமான வரை திரு மணத்தைப்பற்றின தீவிரமான ஆசையை அடக்கிக்கொள்ள முடிகிறது போலும்! சியாமளி வேலை பார்க்காததால் என்னுல் குடும்பத்தை மேலும் சிறப்பாக நடத்த முடியவில்லையே என்றிருந்த குறை இப்போது அர்த்தமற்றதாகப் பட்டது. எங்கள் இருவருக்குமிடையே இருந்த பரஸ்பர அன்பின தன்மையை நான் புரிந்துகொண் டேன். சிந்தனை வயப்பட்டவனுக மெல்ல எழுந்து வெளி நடந்தேன்.

திருச்சியிலிருந்து திரும்பிய மூன்றும் நாள் காலை. காரியாலயத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். மதியம் நான் சாப்பிடுவ தற்காக டிபன் பொட்டலம் கட்டி அதைக் கையில் பிடித்தபடி நின்றிருந்தாள் சியாமளி.

''சாயந்திரமா சீக்கிரம் வந்திடுங்கோ. நாளைக்கு வெள்ளிக்கிழமை. பூ வேணும். நாளையோட லட்சுமி படத்துக்குப் போட்டு வைக்கிறது முடிஞ்சுபோறது. பின்கட்டிலே குடியிருக்கிற வாத்தியாராத்து மாமியைச் சாப்பிடச் சொல்லியிருக்கேன். ஒரு ரவிக்கைத் துண்டு வச்சுக் கொடுக்கலாம்னு. கட்பீஸ் கடையிலே வாங்கிக்கலாம். தேங்காய், பழம் எல்லாம் வேணும்.''

''சியாமளி, நான் வரதுக்குத் தாமசமாக லாம். பணம் தந்திட்டுப் போறேன். நீயே வாங்கிக்கோ. எவ்வளவு ஆகும்?''

''எல்லாத்துக்குமா ஏழெட்டு ரூவா ஆகும்.''

''இந்தா!'' பணத்தைக் கொடுத்தேன்.

''சரி, நான் புறப்படட்டுமா?''

குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு வாயிற்படி வரைக்கும் அவள் வந்தாள். வித்தியா தன் பிஞ்சுக் கரங்களால் 'டாடா' என்று அசைத்தாள். நான் அவள் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளினேன். புறப்பட முற்பட்ட

போது சிவராமன் அவசர அவசரமாக வருவது தெரிந்தது.

''ஸார் கிருஷ்ணன்! நீங்க ஆபீஸுக்குப் புறப்பட்டுண்டிருக்காப்ல இருக்கு. தொந்தரவு செய்றதுக்கு மன்னிக்கணும். இன்னிக்கு மகேசுவரியைப் பொண் பார்க்க ஒரு பார்ட்டி வரா. அவசரமா இருபது ரூபாய் வேணும். சம்பிரதாயமா, சொஜ்ஜி, பஜ்ஜி பண்ணனுமோன்னோ? தயவுசெய்து உதவி பண்ணுங்கோ!''

மனிதரைப் பார்த்தாலே எனக்குப் பரிதாபமாக இருந்தது. ஏறகனவே வாங்கிக்கொண்டு போன முப்பது ரூபாயைப்பற்றி இதுவரை ஒரு குறிப்பு இல்லை. என்ன செய்வது?

''மிஸஸ் கிருஷ்ணன்! சொல்லுங்கோ! நல்ல காரியம். ஏதோ இந்த இடம் முடிஞ்சுட்டா நிச்சயம் பெரியதெருப் பிள்ளையாருக்கு நான் சதுர்த்தேங்காய் உடைக்கிறேன்னு வேண்டிண்டிருக்கேன். தயவு செய்யுங்கள் கிருஷ்ணன்.''

எனக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. நான் சியாமளியைப் பார்த்தேன். அவள் சொன்னாள் ''நீங்க புறப்படுங்கோ. நான் பீரோவிலேருந்து எடுத்துக் குடுத்தனுப்பறேன்.''

நான் புறப்படவில்லை.

மாறாக, உள்ளே போனேன். சியாமளி பீரோவிலிருந்து எடுத்துக் கொடுத்த பணத்தைச் சிவராமனிடம் கொடுத்தேன்.

''நீங்க நல்லா இருக்கணும். உங்க நல்ல மனசுக்கு ஏத்தாப்லே வேலை உயர்வு கிடைக்கணும்.'' என்னை அவர் வாழ்த்திவிட்டுப் புறப்பட்டார்.

சியாமளி கேட்டாள்: 'உங்களுக்கு இவரை ரொம்பநாள் பழக்கமோ? என்கிட்டே சொன்னதேயில்லையே! பாவமா இருந்தது. சமயம் போதுன்னு சொன்னா உதவி பண்ணாட்டா மனுஷத் தன்மைக்கே அர்த்தமில்லாமப் போயிடறது!''

நான் பதிலேதும் சொல்லவில்லை. புன்னகையுடன் விடை பெற்றேன். மனம் சிவராமனைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தது.

நான் பஸ் ஸ்டாண்டில் காத்திருந்தபோது மகேசுவரி வந்தாள். அவளிடம் பேச இன்று எனக்கு நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்துக் கொண்டேன். இன்று அவளைப் பெண் பார்க்க வருகிறார்கள் என்று தெரிந்தும் காரியாலயத்துக்குக் கிளம்பிவிட்டாளே என்று உள்மனம் சொல்லியது. என்னைப் பார்த்ததும் சம்பிரதாயமாகப் புன்னகை செய்தாள்.

''ஹலோ! குட்மார்னிங். உங்கப்பா கொஞ்ச நேரம் முன்னாலதான் எங்க வீட்டுக்கு வந்திருந்தார்.''

''பணம் ஏதாவது கேட்டாரா?''

அவள் பட்டென்று இப்படிக் கேட்டது என்னவோ போலிருந்தது.

''ஆமாம்! இருபது ரூபாய் கொடுத்தேன்.''

''என்ன காரணம் சொன்னார்?''

'இவள் ஒன்றுமே தெரியாதவள்போல் கேட்கிறாளே' என்று எண்ணினேன்.



''உங்களைப் பெண் பார்க்க வருவதாகச் சொன்னார்!''

அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் உற்சாகம் இல்லை. வெறும் சிரிப்பு, வறண்ட சிரிப்பு.

''ஏன் சிரிக்கிறீங்க? அன்னிக்குக்கூட முப்பது ரூபாய் கேட்டார். குடுத்தேன்.''

''மொத்தமா ஐம்பது ரூபாய் கொடுத்திருக்கீங்களோ?''

''ஆமாம்!''

''உங்களுக்குச் சிரமம் கொடுத்திருக்கார். முதல் தேதி திருப்பித் தந்திடறேன்!''

''அவசரம் இல்லே. இன்னிக்கு நீங்க ஆபீசுக்குப் போறீங்களே. மத்தியானமா லீவு போட்டுட்டு வந்திடுவீங்களோ?''

''எதுக்கு?''


''என்ன இது? உங்களைப் பொண் பார்க்க வர்றதாச் சொன்னாரே?''

''பைகிராப்ட்ஸ் சாலையிலே இருக்கிற ஜாலி பிரண்ட்ஸ் கிளப்லே போய்ப் பாருங்கோ. பாயிண்டுக்கு ஒரு பைசான்னு பந்தயம் கட்டி எங்கப்பா சீட்டு விளையாடிண்டிருப்பார். உங்களை அவருக்கு அறிமுகம் செய்து வைச்சிருக்கக் கூடாது. அவர் சுபாவம் அப்படி. யாராயிருந்தாலும் கை நீட்டிடுவார். வீட்லே நாலு பொண்கள் சம்பாதிக்கிறோம். மாசம் ஆயிரத்து எழுநூறுக்கு மேல வருது. ஆனா..''

அவள் தொண்டை கம்மியது. எனக்கு மனத்தைச் சங்கடப்படுத்தியது.

''மன்னிக்கணும், எங்க குடும்பப் பிரச்னைகளை நான் யார்கிட்டேயும் சொல்றதில்லே. உங்களிடத்திலே சொல்லணும்போலத் தோணித்து. சொல்லிட்டேன். எனக்குக் கல்யாணம் ஆகாம இருக்கிறதுகூட அவருக்கு இந்த மாதிரி சில்லறைக் கடன் வாங்க உதவியா இருக்கு. அவரைப் பார்க்கிறவா, அவர்கிட்டே பேசறவாளுக்கு அந்தப் பேச்சில சந்தேகமே ஏற்படாது. கேட்கும்போதே மனசு இளகிடும். எனக்கே எல்லா விஷயமும் தெரிஞ்சிருந்தும், சில சமயங்களிலே அவர் என்கிட்டேயே பணம் கேட்கும்போது கொடுக்காமல் இருக்க முடியல்லே. அவருக்கு அப்படியொரு முகராசி.''

எனக்குப் பெருத்த ஏமாற்றமாகப் போய் விட்டது. இப்படிப் பொறுப்பில்லாமல், தம் வக்கரித்துப் போன போக்குக்காக, பெற்றெடுத்த பெண்களின் திருமணத்தை ஒரு சாக்காகப் பயன்படுத்தும் அந்தப் பொல்லாத மனிதரின் மீது ஆத்திரமாக வந்தது. மகேசுவரியைப் பார்த்தேன். ஆளைக் கிறங்க அடிக்கும் புன்னகையுடன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.



''சாயந்தரமா வீட்டுப் பக்கம் வாங்களேன். பேசுவோம்'' என்றாள்.

நான் சம்மதம் என்ற வகையில் தலையசைத்தேன்.

ஒரு ஹால். எதிரெதிராக இரண்டு அறைகள். ஹாலுக்குப் பக்கத்தில் அதையொட்டின ஒரு தாழ்வாரம். ஹாலில் சோபா ஸெட் போட்டிருந்தது. பெரிய பழைய கடிகாரம் ஒன்று சுவரில் மாட்டி இருந்தது. அதன் பெண்டுலம் ஒரு தாளகதியுடன் நிதானமாக ஊசலாடிக் கொண்டிருந்தது. இடம் துப்புரவாக இருந்தது. தாழ்வாரத்துப் பக்கம் நாட்டு ஓடு வேயப்பட்டு, அதன் கீழ்ச் சதுர ஓடுகள் பொட்டிருந்தன. எட்டடி உயரத்தில் மூங்கில் கொடி கட்டியிருந்தது. அதில் புடைவை உலர்த்தியிருந்தது.

''இதுதான் ஸார் எங்க மாளிகை.'' மகேசுவரி சிரித்தவாறே சொன்னாள்.

''நல்லாத்தான் இருக்கு.''

சிறிது நேரத்தில் மகேசுவரியின் தாய் காபி கொண்டு வந்தாள்.

''வேண்டாம். இப்பத்தான் குடிச்சேன்!''

''பரவாயில்லே!'' மகேசுவரியின் குரலில் வேண்டுதல் இருந்தது.

பாதிக் காபியை அவளிடமே கொடுத்தேன்.

போது சிவராமன் அவசர அவசரமாக வருவது தெரிந்தது.

''ஸார் கிருஷ்ணன்! நீங்க ஆபீஸுக்குப் புறப்பட்டுண்டிருக்காப்ல இருக்கு. தொந்தரவு செய்றதுக்கு மன்னிக்கணும். இன்னிக்கு மகேசுவரியைப் பொண் பார்க்க ஒரு பார்ட்டி வரா. அவசரமா இருபது ரூபாய் வேணும். சம்பிரதாயமா, சொஜ்ஜி, பஜ்ஜி பண்ணனுமோன்னோ? தயவுசெய்து உதவி பண்ணுங்கோ!''

மனிதரைப் பார்த்தாலே எனக்குப் பரிதாபமாக இருந்தது. ஏற்கனவே வாங்கிக்கொண்டு போன முப்பது ரூபாயைப்பற்றி இதுவரை ஒரு குறிப்பு இல்லை. என்ன செய்வது?

''மிஸஸ் கிருஷ்ணன்! சொல்லுங்கோ! நல்ல காரியம். ஏதோ இந்த இடம் முடிஞ்சுட்டா நிச்சயம் பெரியதெருப் பிள்ளையாருக்கு நான் சதுர்த்தேங்காய் உடைக்கிறேன்னு வேண்டிண்டிருக்கேன். தயவு செய்யுங்கள் கிருஷ்ணன்.''

எனக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. நான் சியாமளியைப் பார்த்தேன். அவள் சொன்னாள் ''நீங்க புறப்படுங்கோ. நான் பீரோவிலேருந்து எடுத்துக் குடுத்தனுப்பறேன்.''

நான் புறப்படவில்லை.

மாறாக, உள்ளே போனேன். சியாமளி பீரோவிலிருந்து எடுத்துக் கொடுத்த பணத்தைச் சிவராமனிடம் கொடுத்தேன்.

''நீங்க நல்லா இருக்கணும். உங்க நல்ல மனசுக்கு ஏத்தாப்லே வேலை உயர்வு கிடைக்கணும்.'' என்னை அவர் வாழ்த்திவிட்டுப் புறப்பட்டார்.

சியாமளி கேட்டாள்: 'உங்களுக்கு இவரை ரொம்பநாள் பழக்கமா? என்கிட்டே சொன்னதேயில்லையே! பாவமா இருந்தது. சமயம் போதுன்னு சொன்னா உதவி பண்ணாட்டா மனுஷத் தன்மைக்கே அர்த்தமில்லாமப் போயிடறது!''

நான் பதிலேதும் சொல்லவில்லை. புன்னகையுடன் விடை பெற்றேன். மனம் சிவராமனைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தது.

நான் பஸ் ஸ்டாண்டில் காத்திருந்தபோது மகேசுவரி வந்தாள். அவளிடம் பேச இன்று எனக்கு நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்துக் கொண்டேன். இன்று அவளைப் பெண் பார்க்க வருகிறார்கள் என்று தெரிந்தும் காரியாலயத்துக்குக் கிளம்பிவிட்டாளே என்று உள்மனம் சொல்லியது. என்னைப் பார்த்ததும் சம்பிரதாயமாகப் புன்னகை செய்தாள்.

''ஹலோ! குட்மார்னிங். உங்கப்பா கொஞ்ச நேரம் முன்னாலதான் எங்க வீட்டுக்கு வந்திருந்தார்.''

''பணம் ஏதாவது கேட்டாரா?''

அவள் பட்டென்று இப்படிக் கேட்டது என்னவோ போலிருந்தது.

''ஆமாம்! இருபது ரூபாய் கொடுத்தேன்.''

''என்ன காரணம் சொன்னார்?''

'இவள் ஒன்றுமே தெரியாதவள்போல் கேட்கிறாளே' என்று எண்ணினேன்.



''உங்களைப் பெண் பார்க்க வருவதாகச் சொன்னார்!''

அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் உற்சாகம் இல்லை. வெறும் சிரிப்பு, வறண்ட சிரிப்பு.

''ஏன் சிரிக்கிறீங்க? அன்னிக்குக்கூட முப்பது ரூபாய் கேட்டார். குடுத்தேன்.''

''மொத்தமா ஐம்பது ரூபாய் கொடுத்திருக்கிங்களோ?''

''ஆமாம்!''

''உங்களுக்குச் சிரமம் கொடுத்திருக்கார். முதல் தேதி திருப்பித் தந்திடறேன்!''

''அவசரம் இல்லே. இன்னிக்கு நீங்க ஆபீசுக்குப் போறீங்களே. மத்தியானமா லீவு போட்டுட்டு வந்திடுவீங்களோ?''

''எதுக்கு?''

''என்ன இது? உங்களைப் பொண் பார்க்க வர்றதாச் சொன்னாரே?''

''பைகிராப்ட்ஸ் சாலையிலே இருக்கிற ஜாலி பிரண்ட்ஸ் கிளப்லே போய்ப் பாருங்கோ. பாயிண்டுக்கு ஒரு பைசான்னு பந்தயம் கட்டி எங்கப்பா சீட்டு விளையாடிண்டிருப்பார். உங்களை அவருக்கு அறிமுகம் செய்து வைச்சிருக்கக் கூடாது. அவர் சுபாவம் அப்படி. யாராயிருந்தாலும் கை நீட்டிடுவார். வீட்லே நாலு பொண்கள் சம்பாதிக்கிறோம். மாசம் ஆயிரத்து எழுநூறுக்கு மேல வருது. ஆனா..''

அவள் தொண்டை கம்மியது. எனக்கு மனத்தைச் சங்கடப்படுத்தியது.

''மன்னிக்கணும், எங்க குடும்பப் பிரச்னைகளை நான் யார்கிட்டேயும் சொல்றதில்லே. உங்களிடத்திலே சொல்லணும்போலத் தோணித்து. சொல்லிட்டேன். எனக்குக் கல்யாணம் ஆகாம இருக்கிறதுகூட அவருக்கு இந்த மாதிரி சில்லறைக் கடன் வாங்க உதவியா இருக்கு. அவரைப் பார்க்கிறவா, அவர்கிட்டே பேசறவாளுக்கு அந்தப் பேச்சில சந்தேகமே ஏற்படாது. கேட்கும்போதே மனசு இளகிடும். எனக்கே எல்லா விஷயமும் தெரிஞ்சிருந்தும், சில சமயங்களிலே அவர் என்கிட்டேயே பணம் கேட்கும்போது கொடுக்காமல் இருக்க முடியல்லே. அவருக்கு அப்படியொரு முகராசி.''

எனக்குப் பெருத்த ஏமாற்றமாகப் போய்விட்டது. இப்படிப் பொறுப்பில்லாமல், தம் வக்கரித்துப் போன போக்குக்காக, பெற்றெடுத்த பெண்களின் திருமணத்தை ஒரு சாக்காகப் பயன்படுத்தும் அந்தப் பொல்லாத மனிதரின் மீது ஆத்திரமாக வந்தது. மகேசுவரியைப் பார்த்தேன். ஆளைக் கிறங்க அடிக்கும் புன்னகையுடன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.



''சாயந்தரமா வீட்டுப் பக்கம் வாங்களேன். பேசுவோம்'' என்றாள்.

நான் சம்மதம் என்ற வகையில் தலையசைத்தேன்.

ஒரு ஹால். எதிரெதிராக இரண்டு அறைகள். ஹாலுக்குப் பக்கத்தில் அதையொட்டின ஒரு தாழ்வாரம். ஹாலில் சோபா ஸெட் போட்டிருந்தது. பெரிய பழைய கடிகாரம் ஒன்று சுவரில் மாட்டி இருந்தது. அதன் பெண்டுலம் ஒரு தாளகதியுடன் நிதானமாக ஊசலாடிக் கொண்டிருந்தது. இடம் துப்புரவாக இருந்தது. தாழ்வாரத்துப் பக்கம் நாட்டு ஓடு வேயப்பட்டு, அதன் கீழ்ச் சதுர ஓடுகள் பொட்டிருந்தன. எட்டடி உயரத்தில் மூங்கில் கொடி கட்டியிருந்தது. அதில் புடைவை உலர்த்தியிருந்தது.

''இதுதான் ஸார் எங்க மாளிகை.'' மகேசுவரி சிரித்தவாறே சொன்னாள்.

''நல்லாத்தான் இருக்கு.''

சிறிது நேரத்தில் மகேசுவரியின் தாய் காபி கொண்டு வந்தாள்.

''வேண்டாம். இப்பத்தான் குடிச்சேன்!''

''பரவாயில்லை!'' மகேசுவரியின் குரலில் வேண்டுதல் இருந்தது.

பாதிக் காபியை அவளிடமே கொடுத்தேன்.

''அம்மா, இவர் போஸ்டல் அக்கவுன்ட்ஸில் இருக்கிறார். இதே வரிசையில் பத்து வீடு தள்ளிக் குடியிருக்கார். நான் வந்தவுடனே சொன்னேனே, இவர்தாம்மா அது.''

அந்த அம்மாள் வாயே திறக்கவில்லை. சில விநாடிகள் பார்த்துவிட்டுப் போய்விட்டாள்.

''நீங்கள் உங்கம்மாகிட்டே என்ன சொன்னீங்க?''

''சொல்ல வேண்டியதைத்தான் சொன்னேன். அம்மாவுக்கு அதிகம் பேசத் தெரியாது. சிறு வயசிலிருந்தே அப்படியொரு பழக்கம். அதைத்தான் அப்பா தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். ஏதாவது கேட்டுவிட்டால் உரக்கக் கத்துவார். ஓடிப்போய் விடுவேன் என்று பயமுறுத்துவார். என்ன செய்வது? பயந்து நடுங்கியே அம்மாவும் முப்பது வருஷமாக் குடும்பம் நடத்திண்டு வரா.''

எனக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. மகேசுவரியை விடச் சற்று இளவயதினளாக ஒரு பெண் உள்ளே நுழைந்தாள். முகம், பக்கவாட்டில் பார்க்க, மகேசுவரியைப் போலவே இருந்தது. அவளுடைய தங்கையென்று ஊகித்துக் கொண்டேன்.

''உங்களுக்கு நீங்க இருக்கிற இடம் சௌகரியமா இருக்கா?''

சம்பிரதாயப் பேச்சாக அவள் இதைக் கேட்டிருக்க வேண்டும்.

''இருக்கு. ஆனால் தண்ணீர்தான் பிரச்னை. குடித்தனம் அதிகம்.''

''சென்னையிலே அதுதான் கஷ்டம். இந்த இடத்துக்கு நாங்க நூத்தைம்பது வாடகை தர்றோம். திருச்சியிலே தனி வீட்டிலே இருந்தோம். சென்னைக்கு வந்த புதுசில ரொம்பச் சிரமமா இருந்தது. இப்போ பழகிப் போயிட்டுது!'' என்றாள்.

''எல்லாமே அப்படித்தான். எத்தகைய துன்பமும் நாளாவட்டத்திலே பழகிப் போயிடறது. மனுஷ சுபாவம் அப்படி. அதேமாதிரி சில சௌகரியங்களை நாம் அநுபவிச்சுப் பழகிட்டால் பிறகு விடவே முடியாது. நான் கிராமத்திலே படிச்சவன். பள்ளிக்கூடத்துக்குத் தினமும் ரெண்டரை மைல் நடந்து போகணும். அப்போ அது சாதாரணமா இருந்தது. இப்போ அரை மைல் தூரத்திலிருக்கிற ரவுண்டானாவுக்குப் போகணும்னுக்கூடப் பஸ்லேதான் போகணும் போல இருக்கு'' என்றேன்.

''நான் கேட்கிறேனேன்னு தப்பா எடுத்துக்காதீங்கோ. ஆண்களுக்குன்னு ஏதாவது ஒரு கெட்ட பழக்கம் இருக்கும்பா. சில பேர் சிகரெட் பிடிப்பா, சிலர் புகையிலை போடுவா. சிலர் சீட்டு, ரேஸ் இன்னும் சில வழக்கங்களுக்கு அடிமையா இருப்பா. உங்களுக்கு அந்த மாதிரி ஏதானும் பழக்கமுண்டோ?'' கேட்டுவிட்டுச் சிரித்தாள்.

''என்ன, ஏதாவது புள்ளி விவரம் சேகரிக்கிறீங்களா? அப்படின்னா நீங்க புதுசா ஓர் அயிட்டத்தையும் சேர்க்கணும்!''

''ஐயோ! உங்களுக்கு அந்தப் பழக்கம் உண்டா?''

நான் சிரித்தேன். ''எனக்குக் குடிப் பழக்கம் கிடையாது. சொல்லப்போனா பழக்கம்னு எதுவுமே கிடையாது. கெட்ட பழக்கம் எதுவும் இல்லாத மனிதன் நான். அதுக்குக் காரணம் நான் கிராமத்திலே சர்வ சுதந்தரமா வளர்ந்ததா இருக்கலாம்.''

''நீங்க மனோதத்துவம் படிச்சிருக்கீங்களோ?'' என்று கேட்டாள் மகேசுவரி.

''ஆமாம்! பி. ஏ. சைகாலஜி.''

''எங்கப்பா கேரக்டரை அனலைஸ் பண்ணுங்களேன்.''

நான் சிரித்தேன்.

மகேசுவரியின் தங்கை கையில் ஓர் ஆங்கில வார ஏட்டை எடுத்துக்கொண்டு வந்து ஒரு புறமாக உட்கார்ந்தாள். மகேசுவரியைவிட அவளுக்கு மூன்று அல்லது நான்கு வயது குறைவாக இருக்கலாம்.

''இது என் தங்கை புவனேசுவரி. ஏஜி ஆபிஸிலே இருக்கா. இவளுக்கு அடுத்தவ ராஜேசுவரி, அவளுக்கு அடுத்தவ லோகேசுவரி. எல்லாம் ஈசுவரி மயம். அப்பாவுக்கு எல்லாமே தனி டேஸ்ட்தான்.''

புவனேசுவரி கடைக்கண்ணால் என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வை ஆளை அளவெடுப்பது போலிருந்தது.

''இவ அதிகம் பேசமாட்டாள். பேசினா கவர்ச்சியா இருக்கும். பி. ஏ. ஸோஷியாலஜி படிச்சிருக்கா.''

''நீங்கள் சொல்றது வேடிக்கையா இருக்கே.''

புவனாவும் எங்கள் சிரிப்பில் கலந்து கொண்டாள்.

இப்போது அவளே பேசினாள். ''மஹி, உனக்குத் தெரியுமோ? அந்தக் கனகவல்லி சகோதரிகள்....''

''ஆமாம்! கனகவல்லி, சௌந்தரவல்லி, வருமானவரி இலாக்காவிலே இருக்காளே?''

''அந்தச் சௌந்தரம் ஒரு கிறிஸ்டியனைக் கல்யாணம் பண்ணிண்டுட்டாளாம்.''

''அட பாவமே! ஏன்டி, இவளுக்கெல்லாம்..'' மகேசுவரி நிறுத்திவிட்டாள்.

''சௌந்தரத்துக்கு வயசு என்ன ஆச்சு, தெரியுமோ? இருபத்தெட்டு. அவா குடும்பம் இருக்கிற நிலைமையிலே அவளுக்கு இன்னும் எத்தனை வருஷமாகுமோ கல்யாணம் ஆக? இந்தச் சமூகத்தைக் கண்டாலே வெறுப்பா இருக்குன்னு ஒருதரம் சொன்னாள்.''

மகேசுவரி மௌனமாக இருந்தாள். புவனா தொடர்ந்தாள்.

''நம்ம சமூகத்திலே இன்னும் பழைய சம்பிரதாயங்களைப் பிடிச்சிண்டு தொங்கிட்டிருக்கோம். படிச்சு, உத்தியோகம் பார்க்கிற பொண்ணா இருந்தால்கூட வரதட்சணை கொடுக்கணும். சே! என்னிக்கு இந்த நிலைமை மாறப்போறதோ? பத்திரிகையிலே பாரு, காஞ்சி காமகோடிப் பெரியவர்களின் அநுக்ரகத்துடன்னு அச்சடிக்கத் தவறமாட்டா. ஆனா அவா சொல்ற எதையுமே கடைப்பிடிக்கிறதில்லே. வரதட்சணை முறையை அறவே ஒழிச்சுக்கட்டணும்னு பெரியவா எத்தனை தடவை சொல்லியிருக்கார். அதைச் செஞ்சாத்தான் இந்தச் சமூகம் உருப்படும். பட்டுப்புடைவை, வைரத்தோடு எதையும் விடறதில்லே! கல்யாணத்திலே காபி டிபன் செலவுக்கே ஆயிரம் ரூபாய்; அதுவும் சாதாரணக் கல்யாணத்துலே. இதெல்லாம் மாறணும்னு அவர் சொல்றார். இவா அவரோட படத்தை மட்டும் கண்ணாடி போட்டு மாட்டிப்பா. அவர் அநுக்ரஹத்தைப் பத்திரிகையிலே அச்சடிப்பா. அத்தோட பக்தி முடிஞ்சு போறது. வெறும் கபடதாரிகள்!

அவ, அதான் அந்தச் செளந்தரம், செஞ்சதிலே என்ன தவறு? ஜாதி விட்டு ஜாதி கல்யாணம் பண்ணிண்டுட்டா! எத்தனை நாள் காக்க முடியும்?''

எனக்கு மின்னல் அடித்தது போன்று இருந்தது. சில விநாடி நேரம் ஸ்தம்பித்துப் போய் நின்றேன். எத்தனை அழுத்தமாக, தெளிவாக, சிந்தனைப் பொட்டில் பட்டென்று அடிப்பது போல் பேசிவிட்டாள். பாரதியின் புதுமைப் பெண் கவிதை நெஞ்சில் நினைவாடியது.

மகேசுவரி என்னைப் பார்த்தாள்: ''அவ சீக்கிரம் உணர்ச்சி வசப்பட்டுவிடுவாள். ஆனால் நல்லவள்.''

''அவ சொன்னதிலே தவறு இருக்கிறதாத் தெரியல்லியே!'' என்றேன்.

புவனேசுவரி என்னைப் பார்த்து இலேசாகப் புன்னகை செய்தாள்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது. எங்கள் பேச்சுத் தொடர்வதற்குள் இருபத்தைந்து வயது மதிக்கத் தகுந்த ஒரு வாலிபன் உள்ளே நுழைந்தான்.



''சிவராமன் வீடு இதுதானே?'' என்றான். அவன் குரலில் பரபரப்பு மிகுந்திருந்தது.

''ஆமாம்!''

''அவருக்கு மயக்கம் போட்டுடுத்து ஸார். கிளப்லே இருக்கார். திருச்சியிலேருந்து விசுவநாதன்கிறவர் வந்திருந்தார். அவருக்கும் இவருக்கும் காரசாரமாப் பேச்சு நடந்தது. பேசிண்டே இருக்கும்போது இப்படி ஆயிட்டது'' என்றான்.

''புறப்படுங்கோ போகலாம்'' என்றேன்.

மகேசுவரி தொடர நான், அந்த வாலிபன் மூவரும் கிளப்பை நோக்கிப் புறப்பட்டோம். அப்போது தன் வாழ்க்கையில் திடீரென்று ஒரு திருப்பம் ஏற்படப் போகிறது என்பதை மகேசுவரி நிச்சயம் எதிர்பார்த்திருக்க மாட்டாள்.

விசுவநாதன் என்பவர் யார்? அவருக்கும் சிவராமனுக்கும் காரசாரமான விவாதம் ஏற்படக் காரணம் என்ன? மனிதர் மயக்கம் போட்டு விழும்படியாகப் பேச்சு முற்றிப் போகக் காரணம் என்ன? இவற்றையெல்லாம் அந்த வாலிபனிடம் தெரிந்துகொள்ள முடியாதுபோல் தோன்றியது. மகேசுவரியைக் கேட்கலாமென்றாலோ இங்கிதக் குறைவாகப் பட்டது. விசுவநாதன் திருச்சியைச் சேர்ந்தவர் என்ற ஒரு தகவல் மட்டும் கிடைத்துவிட்டது. எனவே சிவராமனுக்கும் அவருக்கும் திருச்சியிலிருந்தே பழக்கம் இருந்திருக்க வேண்டும். அப்படியென்றால் மகேசுவரிக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

அது அவர்கள் குடும்ப விஷயம். தவிர என்னுடைய பழக்கம் மிகச் சமீப காலத்தியது. நான் அவளுடன் செல்வது பக்க பலத்துக்காகத்தானே தவிர, வேறு எதற்கும் அல்ல. அவளாகவே சொன்னால் சொல்லட்டும்.

சோன்பப்டி விற்கும் லாலா ஒருவன் டிங் டாங் என்று மணியடித்துக்கொண்டு, நாலு சக்கர வண்டியைத் தள்ளிக்கொண்டுவந்தான். சாலையின் அகலம் குறைவு. பின்புறம் பஸ் ஒன்று வந்தது. பைகிராப்ட்ஸ் சாலையில் பழ வண்டிக்காரர்கள் எதையும் லட்சியம் செய்யாமல் கூவி விற்றுக் கொண்டிருந்தனர். எங்களுடைய வேகம் தடைப்பட்டது. ஜனநெரிசல் தாங்கவில்லை. சில சமயங்களில் மகேசுவரியின் தோள் என்மீது உராய்ந்தது. எனக்கு அவள் மீது இரக்கம் பிறந்தது. அவள் கண்களில் ஒரு விதப் பீதி தென்பட்டது. பேசாமல் விடுவிடென்று நடந்தாள்.

ஜாலிபிரண்ட்ஸ் கிளப்புக்குப் போகக் குறுகலான மாடிப்படி ஏற வேண்டியிருந்தது. முதல் மாடியில் வாடகைக்குப் படிக்க நாவல்களும் மற்றப் பத்திரிகைகளும் இரவல் தரும் நூல் நிலையம் இருந்தது. வீதிப் பக்கம் இருந்த நடைபாதையின் கைப்பிடிச் சுவர்மீது சாய்ந்துகொண்டு இரண்டு வாலிபர்கள் ஏதோ ஓர் ஆசிரியரின் புத்தகத்தைப்பற்றி அலசிக்கொண்டிருந்தார்கள். அவர்களைச் சற்று நகரச் சொன்னேன். ஏதோ ஓர் அற்ப ஜந்துவைப்

பார்ப்பதுபோல் அவர்களில் ஒருவன் என்னைப் பார்த்தான்.

"ரெண்டாம் மாடிக்குப் போகணும் ஸார்!" என்றான், எங்களை அழைத்து வந்த வாலிபன்.

மூவரும் சிரமத்துடன் அந்த உயரமான படிக்கட்டுகளை ஏறினோம்.

பெரிய ஹாலில் பக்கத்துக்கொன்றாக ஏழெட்டு மேஜைகள் போடப்பட்டிருந்தன. ஒவ்வொரு மேஜையைச் சுற்றிலும் ஆறு நாற்காலிகள். தவிர, ஒருபுறம் நான்கைந்து கூடை நாற்காலிகள் இருந்தன. சாய்வு நாற்காலி ஒன்றும் இருந்தது. சிவராமன் அதில்தான் படுத்திருந்தார். அங்கு வருபவர்களுக்கு எடுபிடி வேலை செய்யும் பணியாள் ஒருவன் அவர் பக்கம் நின்று கொண்டிருந்தான். மின்விசிறிகள் சுழலும் சத்தத்தையும், வாழைத் தண்டு விளக்கின் ஙொய் என்ற சத்தத்தையும் தவிர நிச்சப்தமே நிலவியது. மௌனமாக அனைவரும், வெகு கவனத்துடன் சீட்டாடிக் கொண்டிருந்தனர். ஒரு புறம் மேசையும் நாற்காலியும் போட்டுக் கொண்டு ஒருவர் உட்கார்ந்திருந்தார். சிலர் அவரிடம் பணம் கொடுத்துப் பிளாஸ்டிக்கினால் செய்த பல வண்ண டோக்கன்களைப் பெற்றுக்கொண்டனர். அந்தக் கிளப்பில் சூதாட்டம் முறையாக, ஓர் ஒழுங்கோடு நடந்துகொண்டிருந்தது. ஆடிக்கொண்டிருந்தவர்களும் மேல்தர வகுப்பினர் என்பது புரிந்தது.

மகேசுவரி தன் தந்தையின் அருகில் சென்று நின்றாள். மெல்லிய குரலில், "அப்பா, அப்பா!" என்று இருமுறை கூப்பிட்டாள். மற்றவர்கள் யாரும் நாங்கள் நுழைந்ததையோ, அவளுடைய குரலையோ சிறிதும் கவனிக்கவில்லை. எனக்கு இது ஆச்சரியமாக இருந்தது. பணம் வைத்துச் சீட்டாடுபவர்களுக்கு உலகமே மறந்துவிடும் போலிருக்கிறது. தங்களுடைய ஆட்டமே பெரிதென்று, எதுவுமே நடக்காததுபோல் அவர்கள் தீவிரமாக விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

சிவராமன் கண்களை மெல்லத் திறந்தார். அவர் கண்கள் கலங்கியிருந்தன. மகேசுவரியைப் பார்த்ததும் அவர் மெல்ல எழுந்திருக்க முயன்றார்.

அந்தப் பணியாள் இப்போது பேசினான்: "ஐயாவுக்கு ஸ்பென்ஸர் சோடா வாங்கிக் குடுத்தேனுங்க. அவரு, அதான் ஐயா கிட்டே சண்டை வலிச்சவரு, வெளியே போயிருக்கார். அரைமணிலே வர்றதாச் சொல்லிட்டுப் போயிருக்காரு. இப்ப அநேகமா வந்திடுவாரு" என்றான்.

எங்களுடன் வந்த வாலிபன் மெல்லச் சிரித்தான்.

அந்தப் பணியாள் சொன்னான்: "நானும், இவனும் இங்கே வேலை செய்யறோமுங்க."

அவன் பாஷை எனக்குப் புரிந்தது. நான் அவர்களைத் தனியாகக் கவனிப்பதாகச் சைகை காட்டினேன். அவனவன் தன் பிழைப்புக்கு ஆதாயம் தேடுகிறான். தன்னைச் சுற்றியிருக்கும் மற்றவர்களுக்கு நேரிடும் இன்ப துன்பங்களைப்பற்றி அவர்களுக்கு என்ன அக்கறை?

"வீட்டுக்குப் போகலாம் வாங்கோ" என்றாள் மகேசுவரி.

"அந்த முட்டாள் கண்டபடி பேசிட்டான். எனக்குத் தள்ளாமையா இருக்கு" என்றார் சிவராமன்.

முத்தமிழ் வித்தகன்

எந்த நல்ல காரியத்தையும் தொடங்குவதற்கு முன்பு, அந்தச் செயல் குறையின்றி நிறைவேறவேண்டும் என்று ஆனைமுகத்தானை வணங்கி வழிபடத் தொடங்குதல் நம் மரபு. பெரிய பெரிய கோவில்கள் முதல், சின்னஞ்சிறு குளக்கரைகள், அரசமரத்தடிகள், வீதி முனைகள் என்று எங்கும் பரந்து அடியார்களுக்கு அருளுகிறவர் விநாயகப் பெருமான். நர்த்தன கணபதி, தசபுஜ ஹேரம்பர், வல்லப கணபதி என்று மூர்த்தங்களும் பல உள்ளன.

பிள்ளையாரைப்பற்றிய கதைகளும் நிறைய உள்ளன. பாரத நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் விநாயக மூர்த்தங்களைப் பரவி வழிபடுகின்றனர். வேதமந்திரங்கள் தொடங்கி, கிராமத்து நாட்டுப் பாடல்கள் வரையில் பிள்ளையாரின் பெருமை பரவியுள்ளது. பாரத நாட்டில் வைதிக தர்மத்தை நிலைநாட்டிய பகவான் ஆதி சங்கரர், காணபத்தியம் என்று விநாயகரையே முழுமுதற் கடவுளாக வழிபடும் முறையை வகுத்தருளியிருக்கிறார். பல புராணங்களிலும் விநாயகரைப்பற்றிய வரலாறு காணப்படுகிறது.

தமிழ் நாட்டில் பிள்ளையார் சதுர்த்தியை விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். கணேச உபாசனை செய்யும் மகான்களும் உள்ளனர். இத்தனை பெருமை வாய்ந்த கணபதிக்குப் பல தோத்திரங்களும் வழிபாட்டு முறைகளும் சகசிர நாமமும் உள்ளன. ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளின் அருளாசியின்படி, இந்துமத காலசாரப் பிரசுரம் என்ற அமைப்பு, முக்கியமான சில தோத்திரங்களையும் சகசிரநாமத்தை, தமிழ் உச்சரிப்புடனும் பொருளுடனும் விரிவாக வெளியிட்டிருக்கிறது. '**ஸ்ரீ மகா கணேச பூஜாஸ்தவ மஞ்சரி**' என்ற இந்த நூலில் கணபதி உபநிஷத், கணபதி ஸூக்தம், கணேச புஜங்கம், கணேச கவசம், கணேச பஞ்சரத்னம் முதலிய 45 தோத்திரங்கள் உள்ளன. கடைசியில் 150 பக்கங்கள் சகசிரநாமம் இருக்கிறது. இந்த நூலின் விலை ரூபாய் பதினாறு. சகசிரநாமத்தை மட்டும் சிலர் விரும்பலாம் என்பதற்காக, அந்தப் பகுதியை மட்டும் தனியாக மூன்று ரூபாய் விலையில் வெளியிட்டிருக்கிறார்கள். மேலும் சில தோத்திரங்களும் வரலாறும் அடங்கிய இரண்டாவது பாகத்தையும் இந்த அமைப்பு வெளியிட இருக்கிறது. தமிழ் மக்களும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் இதை இந்தச் சங்கம் லாபநோக்கின்றி வெளியிட்டிருக்கிறது. இரண்டு புத்தகங்களும், காமகோடி கோசஸ்தானம், 4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை-1 என்ற முகவரியில் கிடைக்கும்.

--ஹஸ்தம்

நான் குறுக்கிட்டேன்: "அவரை வீட்டுக்கு வரச் சொல்லுங்களேன், ஸார்? பேசிக்குவோம்; பொது இடத்திலே தனிப்பட்ட விவகாரங்களைப் பேசறது நல்லா இருக்குமா?" என்றேன்.

"அவனுக்குத் தெரியல்லியே. 'சேமிடம் அறிந்து சேர்'னு சின்ன வயசில படிக்கிறோம். அதனோட பொருளைப் புரிஞ்சிண்டு நடக்க லேன்னு இப்படித்தான்." பேசிக்கொண்டே இருந்தவர் திடீரென்று நிறுத்திவிட்டார். அவர் கண்களில் ஏதோ ஒருவித அச்சம் குடிகொண்டாற் போலிருந்தது. பார்வை நிலைகுத்தி நின்றது. நான் திரும்பிப் பார்த்தேன். ஆறடி உயரம் இருக்கும். கருஞ்சாந்து நிறத்துடன் பெரிய கரடிபோல் பூதாகாரமாக ஒருவர் நின்றிருந்தார். அகலமான முகம். நாலு கிலோ எடையுள்ள சேனைக்கிழங்கைப் போன்ற பெரிய தலை. பிதுங்கி நிற்கும் விழிகள். பார்க்கவே சற்று அருவருப்பான தோற்றம்.

"அவன் வந்துட்டான் மஹி!" என்றார் சிவராமன்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'ஓஹோ! இவர்தாம் அந்த விசுவநாதனா!'

மெள்ள எங்கள் அருகில் அவர் வந்தார். அருகே வந்ததும் ஆளை உற்றுப் பார்த்தேன். வயது முப்பத்தாறு இருக்கலாம். தலை நிறையக் கேசம். கழுத்தில் சங்கிலி. கைவிரல்களில் வரிசையாக மோதிரங்கள். பட்டைக் காப்புப் போட்டுக் கொண்டாற்போலத் தங்கச் செயின் போட்ட கைக்கடிகாரம். நல்ல வசதியுள்ளவன் என்பது தோற்றத்திலேயே தெரிந்தது. ஆளுடன் சென்டின் நெடியும் வந்தது.

"மிஸ்டர் சிவராமன், வெளியே போய்ப் பேசலாமா? இவாள்ளாம் உமக்குச் சொந்தம் போலிருக்கு!" என்றார்.

சிவராமன் மறுமொழி பேசாமல் எழுந்தார்.

"பீச்சுக்குப் போகலாம்" என்றார்.

நான் மகேசுவரியைப் பார்த்தேன். அவள் என் காதருகே, "வீட்டுக்குத் தகவல் சொல்லி அனுப்புங்கள். நாம் போகலாம்" என்றாள்.

நான் அந்த வேலைக்காரர்களைக் கூப்பிட்டேன். தலா ஒரு ரூபாய் பணம் கொடுத்தேன். ஸ்பென்ஸர் சோடாவுக்கெனத் தனியாகப் பணம் கொடுத்தேன்.

"உங்க ரெண்டு பேர்லே யாரானா ஒருத்தர் சிவராமன் வீட்டுக்குப் போய், அவரைப் பீச்சுக்கு அழைச்சுக்கிட்டுப் போயிருக்கோம்னு சொல்லணும். பயப்பட ஒண்ணுமில்லே; எட்டரை மணிக்குள்ளே வீட்டுக்கு வந்திடுவோம்னு சொல்லணும்" என்றேன்.

வீட்டுக்கு ஏற்கெனவே வந்தவன் சரி யென்ற பாவனையில் தலையசைத்தான். நாங்கள் புறப்பட்டோம்.

மேசையின்மீது டோக்கன்களை வைத்துக் கொண் டிருந்தவன் சிவராமனைக் கூப்பிட்டான்.

"ஸார், நீங்க மீதி டோக்கன்களைக் கொடுத்துப் பணம் வாங்கிக்கலையா?" என்றான். சிவராமன் தன் ஜிப்பாப் பையிலிருந்து டோக்கன்களை அள்ளிப் போட்டார். அந்த ஆள் மௌனமாகக் கணக்குப் போட்டான். "நூத்தி எழுபத்தஞ்சரை ரூபாய்!" என்று சொல்லிக்கொண்டே ரூபாய்த் தாள்களை எண்ணிக் கொடுத்தான்.

சிவராமன் இரண்டு ரூபாயை அவனிடமே கொடுத்தார்.

"ஸாருக்கு இன்னிக்கு நல்ல லாபம். நாளைக்குப் பாத்துக்கலாம் ஸார். உங்களைக் கூட்டிப்போக ஆள் வந்திருக்காப்ல இருக்கு" என்றான்.

சிவராமன் பதிலேதும் பேசவில்லை. ரூபாய் நோட்டுக்களை எண்ணாமலேயே எடுத்து ஜிப்பாப் பைக்குள் போட்டுக் கொண்டார். விசுவநாதன் முன்னே செல்ல நானும் மகேசுவரியும் தொடர்ந்தோம்.

தெருவுக்கு வந்ததும் நான் கேட்டேன்: "மகேசுவரி வேண்டுமானால் வீட்டுக்குப் போகட்டுமே!"

ஒரு விநாடி யோசித்த சிவராமன் பட்டென்று சொன்னார்: "வேண்டாம்; அவளும் நம்மோடவே வரட்டும்!"

வழிநெடுக மக்கள் கூட்டத்தைக் கடந்து செல்லவேண்டியிருந்ததால் பேசவே முடியவில்லை. கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஏழு என்று காட்டியது. சியாமளி காத்திருப்பாள். 'பரவாயில்லை. சொல்லிக் கொள்ளலாம். மகேசுவரிக்காக இந்தச் சிறு உதவியைக் கூடவா செய்யக்கூடாது?' என்றவாறே அவர்களைத் தொடர்ந்தேன்.

அன்று பௌர்ணமி! பூரண நிலவு கடலினின்றும் எழும்பி, வெள்ளித் தட்டாய்க் காட்சி தந்தது. கடலலைகளின் மீது அதன் ஒளி பட்டுத் தகதகத்துக்கொண் டிருந்தது.

நாங்கள் நால்வரும் கரையை ஒட்டினாற் போல் மணலில் உட்கார்ந்தோம். காற்று இதமாக வீசிக்கொண் டிருந்தது. முதலில் யார் பேச்சை ஆரம்பிப்பது என்பதுபோல் மௌனம் நிலவியது. ஆங்காங்கே மக்கள் உட்கார்ந்திருந்தனர். கடற்கரை வியாபாரமான முறுக்கு, சுண்டல், பட்டாணி அமோகமாக விற்றுக் கொண்டிருந்தனர்.

விசுவநாதன் பேச்சைத் துவக்கினார்.

"சிவராமன், இன்னிக்கு நான் ரெண்டிலே ஒன்று தெரிஞ்சிண்டாகணும். உம்மால தர முடியுமா முடியாதாங்கிறதுதான் இப்போ கேள்வி. முடியும்னு சொன்னா எல்லாம் சுமுகமாகப் போயிடும். இல்லேன்னா நான் கோர்ட்டுக்குப் போகவேண்டி யிருக்கும்" என்றார்.

மகேசுவரியின் கண்களில் இப்போது அசாதாரணமான தீர்மானம் தெரிந்தது. அவள் தொண்டையைச் செருமிக் கொண்டு பேச ஆரம்பித்தாள்.

"ஸார், நான் இவரோட முதல் பெண்; இவர் மிஸ்டர் கிருஷ்ணன். எங்க குடும்ப நண்பர். நாம் பேசுவது இவருக்கும் தெரியலாம். பொதுவான ஒரு நபர் இருக்கிறது நல்லதுதானே?" ஆம் என்ற பாவனையில் தலையசைத்தார் விசுவநாதன். என்னை உற்றுப் பார்த்தார். அந்தப் பார்வையில் என்னை எடை போடுவதுபோல் இருந்தது. நான் சற்று நிமிர்ந்து உட்கார்ந்தேன். இப்போது மீண்டும் அவர் பார்வை மகேசுவரியின் மீது லயித்தது.

மகேசுவரி நிலவொளியில் தேவதைபோல் காட்சி தந்தாள். எனக்கு, நான் திருமணமானவன் என்ற நினைப்பிருந்தும் என் மனம் அந்தப் போதில் அவள் அழகில் கிறங்கிப் போய்ச் சதிராட்டம் போட்டதைத் தடுக்க

கவனமாய்ப் பார்த்துக்
கொள்ள அம்மா
நீங்கள் இருப்பதனுல்...





ஓடி விளையாடும்
பாப்பாவுக்கு
விழுவதும்
எழுவதும் விளையாட்டு!

முடியவில்லை. என் பார்வையை ஆகாயத்தின்மீது திருப்பினேன். சிவராமன் மௌனமாகக் கற்சிலை போல் உட்கார்ந்திருந்தார்.

மகேசுவரி மீண்டும் பேசினுள்: ''அதனுல நீங்க விஷயம் என்னங்கிறதைத் தெளிவாச் சொல்லிடுங்கோ. நாங்களும் இந்த விஷயத்திலே ஒரு நல்ல முடிவெடுக்க முடியும்னு நெனைக்கிறேன்'' என்ருள்.

''திருச்சிக்கு இவர் ரெண்டு வருஷம் முந்தி வந்திருந்தப்போ என்கிட்டே என்ன கேட்டார், என்ன சொல்லிக் கேட்டார்னு உங்க அப்பாவையே கேளுங்கோ!'' என்ருர் விசுவநாதன்.

சிவராமன் வாய் திறக்கவில்லை. மௌனமே நிலவியது.

எனக்குக் கூடச் சற்று எரிச்சலாகத்தான் இருந்தது. மகேசுவரி தன் தந்தையைப் பார்த்தாள். அவர் சலனமின்றி உட்கார்ந்திருந்தார்.

''நீங்களே சொல்லிடுங்கோ ஸார்! அவர் இப்போ எதுவும் பேசற நிலையிலே இல்லே'' என்ருள் அவள்.

''நீங்கள்ளாம் திருச்சியிலிருந்தபோதே உங்கப்பாவை எனக்குத் தெரியும். ரெண்டு பேரும் சீட்டாடற கிளப்லே நண்பர் ஆனேம். அப்பவெல்லாம் அவர் என் கிட்டே பணவிஷயமாக் கேட்டதே கிடையாது. நான் ஒண்டிக்கட்டை. கமிஷன் வியாபாரம் செய்றேன். எனக்கும் நாலஞ்சு லட்சத்துக்கு ஆஸ்தி இருக்கு. மாசம் ரெண்டிலேருந்து மூவாயிரம் வரைக்கும் சம்பாதிக்கிறேன். தில்லை நகர்லே எனக்குச் சொந்தமா வீடு இருக்கு. இதெல்லாம் இவருக்குத் தெரியும். இருந்தாலும் என்கிட்டே காலணுக் காசு கேட்டதில்லே. கிளப்லே சிவராமன்னு சொன்ன கரூர்ப் பேர்வழின்னு பேரு. ஜயிச்சாலும், தோத்தாலும் பாதி ஆட்டத்திலே எழுந்து போகமாட்டார். வர்றது வரட்டும்னு ஆட்டத்தை ஒரு கை பார்த்துட்டுத்தான் போவார். அப்பேர்ப்பட்ட மனுஷன்! எனக்கு இவர் மேல என்னிக்குமே மரியாதை உண்டு. என்னைவிட இருபத்து மூணு வயசு பெரியவர். இருக்கட்டும், விஷயத்துக்கு வறேன்.'' சொல்லிவிட்டு ஒருதடவை சிவராமனைப் பார்த்தார். அவர் முகம் எவ்விதச் சலனமுமின்றி இருந்தது.

''ரெண்டாம் வருஷம், தை பொறந்தவுடனேயே இவர் திருச்சி வந்தார். கிளப்லே என்னைச் சந்தித்தார். 'விசுவநாதன், நான் ஓய்வு பெற்று விட்டேன். கிராஜுடி, பிராவிடெண்ட் பண்ட் எல்லாம் வந்திருக்கு. அதோட ஒரு மூவாயிரம் ரூபாய் போட்டுச் சின்னதா ஒரு தொழில் செய்யலாம்னு இருக்கேன். உமக்குத் தொழில்முறை அத்துப்படியாச்சே. அதனுல உம்ம யோசனையைக் கேட்கலாம்னு வந்தேன்' என்ருர். 'என்ன தொழில் செய்யறதா உத்தேசம்?'னு நான் கேட்டேன். 'சிலோன். மலேயா தேசங்களுக்குப் பருப்புப் பொடி, மிளகாய்ப்பொடி, சாம்பார்ப் பொடி, ரஸப் பொடி ஏத்துமதி பண்ணலாம்னு இருக்கேன். நல்ல கிராக்கி இருக்கு. வியாபாரமும் நல்லா ஆகும்னு நம்பிக்கை இருக்கு'ன்னுர். 'தாராளமாச் செய்யலாம். நான் செய்யவேண்டியது என்ன?'ன்னு கேட்டேன்.

''ஏத்துமதி லைஸன்சுக்கு ஏற்பாடு பண்ணிட்டேன். கம்பெனியைப் பதிவு பண்ணியாச்சு. சரக்குக் கொள்முதல் விஷயத்திலே இன்னும் கொஞ்சம் பணம் தேவைப்படறது. நாலாயிரம் இருந்தால் போதும். நான் புரோநோட்டு எழுதித் தரேன். நூத்துக்கு ஒண்ணரை வட்டிக்குக் கிடைக்குமா'ன்னு கேட்டார். அப்போ என் கையிலே பணம் இல்லே. நான் என் நண்பர் ஒருத்தர்கிட்டே சொல்லி வாங்கிக் குடுத்தேன். ஆறு மாசத்திலே மொத்தத்தையும் திருப்பித் தர்றதாப் பேச்சு. எதுக்கும் இருக்கட்டும்னு புரோநோட்லே எழுதிக் கொடுக்கச் சொன்னேன். மூணுமாசம் சேர்ந்தாப்ல வட்டி கட்டலேன்ன, அதுக்கும் வட்டி தர்றதாப் பேச்சு. மனுஷன் நல்லவர், கரூர்ப் பேர்வழிங்கிற நினைப்பிலே வாங்கித் தந்தேன். வருஷம் ரெண்டாச்சு. வட்டி காலணு தரல்லே. அசல் கிணத்திலே போட்டமாதிரி ஆயிட்டது. பணம் தந்தவர் என்னைப் பிய்க்கிருர். நான் தெருவிலே தலைநிமிர்ந்து நடக்க முடியல்லே. இப்போ வட்டியும் அசலுமா ஏழாயிரத்துக்குக் கிட்டே வந்து நிக்கறது. இதுதான் விஷயம். இதைக் கேட்டதுக்குத்தான் மனுஷனுக்கு மயக்கம் போட்டுடுத்து. எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலே. வீட்டிலே இருக்கிற பொருள்களை ஜப்தி பண்ணலாம்னு பாத்தா மனசு கேட்கலே'' என்ருர். நீண்ட நேரம் பேசிய ஆயாசம் அவர்விட்ட மூச்சில் பிரதிபலித்தது.

செஸ் ஆட்டத்தில் சில நேரங்களில் ராஜாவைக் காப்பாற்ற முடியாத மந்திரியைப் போல நான் இருந்தேன். எந்தக் காயை எப்படி நகர்த்தினுல் எதிரி நம் ராஜாவைச் சீவித்தள்ள முடியாத நிலையை உருவாக்க முடியும் என்று மனக் கணக்குப் போடுவது போல, இந்த விஷயத்துக்கு எப்படி முடிவு கட்டலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். தற்செயலாக என் பார்வை விசுவநாதன் மீது சென்றது. அவர் மகேசுவரியையே பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பார்வை எனக்குப் பிடிக்கவில்லை. பசியுடன் இருப்பவன் பலகாரத் தட்டைப் பார்ப்பதுபோல் இருந்தது. மகேசுவரியும் விசுவநாதனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் மனத்தில் அந்த நேரத்தில் என்ன என்ன எண்ணங்கள் தோன்றிக்கொண்டிருந்தனவோ!

சிவராமன் இப்போது திடீரென்று தம் மௌனத்தைக் கலைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தார். ''விசுவநாதன், விஷயம் இவ்வளவு தூரத்துக்கு வந்தப்புறம் நான் எதையும் சமாளிக்கத் தயாராக இருக்கேன். ஆனு உமக்கு அவப்பெயர் வரக்கூடாதேன்னு தான் பாக்கறேன். என் பொண்கள்ளாம் நல்ல உத்யோகத்திலே இருக்கா. அவாளுக்கெல்லாம் கல்யாணம் ஆகணும். அதையும் நெனைச்சுப் பாத்துத்தான் உமக்குப் பதில் சொல்லத் தயங்கினேன். ஒரு குடும்பத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிறதிலே உமக்குச் சந்தோஷம்னு என்ன வேணுமானுலும் செஞ்சிக்கும்'' என்ருர்.

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. நியாயம் சிறிதுமின்றிச் சிவராமன் பேசியதுபோல் தோன்றியது. என் மனநிலையைக் காண்பித்துக்கொள்ளாமல் இருந்தேன்.

''பாத்தீங்களா? என்ன பதில் சொல்றா?'' என்றார் விசுவநாதன்.

மகேசுவரி குறுக்கிட்டாள்: ''ஸார், நான் இந்தக் கடனை அடைக்கப் பொறுப்பு ஏத்துக்கறேன். மாசம் இருநூறு ரூபாய்ன்னு தர்றேன்'' என்றாள்.

''அதிலே பாதி வட்டிக்கே போயிடுமேம்மா! நூறுரூபாய்தான் அசல் வரும். மாசம் நூறு ரூபாய் விழுக்காடு தந்தா எழுபது மாசமாகுமே.''

''அசல் குறையக் குறைய வட்டி குறையாதா?''

''என்ன குறைஞ்சிடப் போறது? வருஷத்துக்கு ஆயிரத்து இருநூறுன்னு வச்சால்கூட அஞ்சரை வருஷம் ஆகும். இதுக்கு அந்த ஆள் ஒப்புக்கொள்ளணுமே!''

''என்ன பண்றதுன்னே தெரியல்லே. சென்னையிலே வாடகை குடுத்துக் குடும்பம் நடத்தறது பெரிய சிரமமா இருக்கு. நாங்கள்ளாம் ஆபீஸ் போறவா. சுமாராவாவது டிரஸ் பண்ணிக்காமப் போக முடியாது. மாசம் இருநூத்தைம்பது தரமுடியும். உங்க நண்பரைப் பெரிய மனசு பண்ணச் சொல்லுங்கோ! வட்டி போக நூத்தைம்பது அசலுக்கு நிற்கும். வருஷத்துக்கு..'' அவள் முடிக்கவில்லை; சிவராமன் குறுக்கே பாய்ந்தார்:

''மாசம் இருநூத்தைம்பது எப்படிக் கொடுக்க முடியும்? தீபாவளிக்கு ஜவுளி வாங்கின கடன் ஆயிரத்துக்கு மேலே இருக்கு. நான் சில்லறையா கொஞ்சம் வாங்கியிருக்கேன். வாங்கக் கூடாதுதான். தப்புத்தான். இனிமே வாங்கல்லே. சத்தியமாச் சொல்றேன். இப்போ ஒரு தடவை அந்தக் கடனையும் தீர்த்துடு: வேளைக்கு ரசம் சாதம் போட்டாலும் போதும். இனிமே தொந்தரவு கொடுக்கமாட்டேன்'' என்றார்.

''சில்லறைக் கடன் எவ்வளவுப்பா இருக்கும்?'' மிகப் பொறுமையாக அவள் இப்படிக் கேட்டதும் எனக்கு வியப்பாக இருந்தது.

சிவராமன் மனத்தில் கணக்குப் போட்டார். ''வந்தும்மா, ஆயிரத்துக்கு அம்பது குறைச்சல். மன்னிச்சுக்கோ. உங்களையெல்லாம் நான் சேவலப்படுத்திட்டேன். எனக்கு உசிரை விட்டுடணும்போல இருக்கு. மன்னிச்சுக்கோ!'' என்றார். அவர் கண்களில் நீர் மல்கியது.

விசுவநாதன் சங்கடப்படுவது தெரிந்தது. ''ஸார், நீங்களா? நீங்களா இப்படியெல்லாம் செய்திருக்கீங்க?'' விசுவநாதன் சற்றுக் கோபமாகக் கேட்டார்.

''நானேதான். என் புத்தியைச் செருப்பால அடிக்கணும். ஆசைதான் காரணம். ரெண்டு மாசம் ரேஸுக்குப் போனேன். எவனெவனுக்கோ ஜாக்பாட் அடிக்கிறதே, நமக்கும் ஒண்ணு அடிக்காதான்னு. இந்தப் பொண்களை நல்ல இடத்திலே கல்யாணம் செஞ்சு கொடுக்கலாமேங்கிற ஆசையிலேதான் போனேன். எல்லாம் போச்சு. அதிக ஆசையால கஷ்டப்படறேன் ஸார்! தலையெழுத்து!'' சொல்லிவிட்டுத் தலையில் இரண்டு முறை பளார் பளார் என்று அடித்துக்கொண்டார்.

''அப்பா!'' மகேசுவரி வீரிட்டாள்.

நான்கூடச் சற்றுக் கலங்கிப் போனேன். சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்தவர்கள் எங்களையே பார்ப்பது போலிருந்தது.

மகேசுவரி என்னைப் பார்த்தாள். ''எங்கப்பா வச்சிருக்கிற கடனையும் சேர்த்தா எட்டாயிரம் ரூபாய். என்ன ஸார் பண்றது? பகவானேன்னு வாய்விட்டுப் புலம்பணும் போல இருக்கு'' என்றாள்.

எனக்கு நெஞ்சில் பாரமாய் அழுத்தியது.

விசுவநாதன் கேட்டார்: ''ஏம்மா! உனக்குக் கல்யாணம் செஞ்சிக்கணும்னு ஆசை இல்லையா?''

மகேசுவரி அவரைப் பார்த்தாள். ''நாலுங்கெட்ட நடுவிலே இது என்ன ஸார்? எனக்கெல்லாம் அந்தப் பாக்கியம் கிடைக்குமாங்கிறதே சந்தேகம். நான் கல்யாணம் செய்துண்டு போயிட்டா எங்கப்பா அம்மாவை யார் காப்பாத்தறது? பிள்ளைகள்தான் காப்பாத்தணுமா? பொண்களுக்கு அந்தப் பொறுப்பில்லையா? கல்யாணம் செஞ்சிண்டா வர்ற புருஷன் நான் என் பெற்றோருக்கு உதவி பண்றதை ஆட்சேபிக்கலாம். எல்லாமே இப்போ பணத்தை வச்சுத்தானே அமையறது, ஸார்?'' என்றாள்.

''எந்த ஒரு மனிதப் பிறவியும் மாத்தமில்லாம இருக்க முடியாது. நாம விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வாழ்க்கையில் மாறுதல் வர்றதை ஏத்துக்கிட்டுத்தான் ஆகணும். நாம வாழ்க்கையைப் பாக்கிற கோணத்தைப் பொறுத்துத்தான் இருக்கு. சொல்லப்போனா, இன்பம் துன்பங்கிறது ஒரு கயிற்றோட இரு முனைகள் போலத்தான். ஆரம்பம் முடிவுங்கிற ரெண்டு புள்ளிகளுக்கு நடுவே வரையப்பட்ட கோடுதான் வாழ்க்கை. இதிலே விருப்புடன் எதையுமே நமக்குன்னு கொள்ள முடியுமா? இல்லே, வேண்டாம்னு எதையும் வெறுத்து ஒதுக்க முடியுமா? எல்லாமே நடக்கிறபோது நடந்துண்டுதான் இருக்கு!

''என்னோட வாழ்க்கையை ரொம்பச் சாதாரணமா ஆரம்பிச்சேன். பதினாறு வயசில தாய் தந்தையை இழந்த அநாதையா, சகோதர சகோதரிகளோட தயவில வாழவேண்டியவனானேன். சுதந்தரமா இருக்கணுங்கிற எண்ணத்திலே எப்படியும் முன்னேறியே தீரணுங்கிற ஒரு முரட்டுப் பிடிவாதத்தோட இறங்கினேன். நான் இன்னிக்கு லட்சாதிபதி. என்னோடகூடப் பொறந்தவாளுக்கு நெறைய உதவி பண்றேன். எனக்குன்னு ஒரு வாழ்க்கை அமைச்சிக்கணும்னு தோணும்போதெல்லாம் குறைந்தபட்சம் அஞ்சு லட்சத்துக்கு மேலே சம்பாதிச்சபிறகுதான்னு சமாதானப்படுத்திப்பேன். பணந்தான் மனிதனுக்குச் சுதந்தரத்தையும் சமுதாயத்திலே அந்தஸ்தையும் கௌரவத்தையும் தர்றது: இதைப் புரிஞ்சுண்டேன்.

அறியாத வயசிலேயே! ஆனா இப்போ என்ன தோணறது தெரியுமா? வாழறதுதான் முக்கியம். அடுத்த பிறவியைப்பத்தி நமக்குத் தெரியாது. வாழ்ந்துக்கிட்டிருக்கிற இந்த வாழ்க்கையைச் சந்தோஷமாக் கழிக்கணும். சந்தோஷங்கிறது பிறத்தியாருக்குக் கொடுக்கிறதிலேதான் இருக்கு. ஆனால் தகுதியுள்ள வாளுக்காப் பாத்துக் கொடுக்கணும். உங்க குடும்பப் பொறுப்பை உங்க தோள்லே சுமக்கப் போறதாச் சொன்னீங்க. எல்லாருமேதான் அப்படி; இல்லையா? மகேசுவரி, உங்களை நான் நேசிக்கிறேன். கடந்த ஒரு மணி நேரத்திலே என்கிட்டே ஏற்பட்டிருக்கிற மாத்தம் இது. நீங்க தப்பா எடுத்துக்கல்லேன்னு உங்களை மணந்துகொள்ள விரும்பறேன்.'' விசுவநாதன் முடித்தார்.

நான் கல்லாய்ச் சமைந்தேன்.

மனிதன் எவ்வளவு தீர்க்கமான சிந்தனையுடன் பேசிவிட்டார்! பிசிர் இல்லாமல், தயக்கமில்லாமல், தெளிவாக, நிதானமாக, ஆனால் அழுத்தத்தோடு தாம் சொல்ல நினைத்ததைச் சொல்லிவிட்டார். அவருடைய வாழ்க்கையின் வெற்றிக்கே அடிப்படையான பண்பு இதுதான் போலும்!

மகேசுவரியின் கண்கள் படபடத்தன. அவளால் பேச முடியாது போலிருந்தது. சிவராமனின் கண்கள் மின்னின. அவருக்கு ஏதோ சாதிக்க முடியாத ஒரு பெருங் காரியத்தைச் சாதித்துவிட்டதைப் போன்று இருந்திருக்க வேண்டும்.

சில நிமிஷ மௌனத்துக்குப் பிறகு மகேசுவரி பேசினாள்: ''நீங்க சொல்றதை நான் ஏத்துக்கிட்டால் உலகம் என்ன சொல்லும்? பட்ட கடனைத் தீர்க்க முடியாமல் எங்க அப்பா என்னை உங்களுக்கு வித்திட்டதாச் சொல்லாதா? உங்களுடைய அருமையான குணம் எனக்குத் தெரியறது. உங்க நிறம் கறுப்புத்தான். ஆனால் மனசோட தூய்மை பளிச்சுனு தெரியறது. தன் உழைப்பாலே முன்னுக்கு வந்த தன்னம்பிக்கையும், தன்மானமுமுள்ள பெரிய மனுஷர் நீங்க. உங்களைப் போல ஒருத்தர் கணவனாக் கிடைக்க எந்தப் பொண்ணும் கொடுத்து வச்சிருக்கணும். பிறத்தியாருக்கு உதவி செய்யணுங்கிற எண்ணம் எல்லாருக்குமே ஏற்படறதில்லே. அது ஒரு பிறவிக் குணம்; பெருந்தன்மையான மனசுள்ளவாளுக்கே வாய்க்கிற அரிய பண்பு. உங்களை எனக்குப் பிடிச்சிருக்கு. ஆனால்..''

''ஆனால்..''

அவள் சற்று நிறுத்தினாள்.

''மஹி! என்னம்மா சொல்லப்போறே? சரின்னு சொன்னியானா எல்லாருக்குமே நல்லதும்மா!'' என்றார் சிவராமன்.

அவள் அவர் பேசியதைப் பொருட்படுத்தாதவள்போல் பேசினாள்: ''மிஸ்டர் விசுவநாதன், உங்களை என் நிலையிலே வச்சுப் பாருங்க. ஒரு குடும்பத்தோட மூத்த பெண் என்கிற நிலையிலே என்னாலே என் தங்கைகளோட வாழ்க்கையும் பாதிக்கும். நாம இந்தியாவிலேதான் இருக்கோம்; நம்முடைய கபட எண்ணங்கள், திருட்டுத்தனங்கள் இதெல்லாம் எங்கேயும் போயிடல்லே. திரும்பத் திரும்ப யோசித்துப் பார்க்கும்போது என் மனசில படறது இதுதான். இப்போ நான் இதுக்குச் சம்மதிச்சால் எட்டாயிர ரூபாய்க்கு எங்கப்பா என்னை, ஒரு பொருளை விற்கிறதுபோல வித்திட்டார்னுதான் ஆகும். இல்லையா?

''எங்க குடும்பக் கௌரவத்தைக் காப்பாத்த நீங்க தயாரா இருக்கீங்க. ஆனா அதுக்கு ஈடா என்னைக் கேட்கறீங்க. இதை நான் தப்பான அர்த்தத்திலே சொல்லல்லே. ஆனா எப்படிப் பாத்தாலும் உண்மை அதுதான், இல்லையா? உடனடியா நான் என்கிட்டே இருக்கிற ஆறு சவரன் நகைகளை வித்திடலாம்னு இருக்கேன். அதனாலே கொஞ்சம் கடன் அடையும். மிச்சத்தை மாசம் இவ்வளவுன்னு தந்திடறதா எழுதித் தரேன். ரெண்டு வருஷத்துக்குள்ளே எல்லாக் கடனையும் தீர்த்திடலாம்னு நெனைக்கிறேன். நீங்க இதுக்கு உதவி செய்யும்படியாக் கேட்டுக்கிறேன். ரெண்டு வருஷத்துக்குப் பிறகும் நீங்க பிரம்மசாரியாகவே இருந்தால் நான் சுதந்தரமா என் மனசுப்படி உங்களையே கல்யாணம் செஞ்சுக்கத் தயாரா இருக்கேன். உங்களோட மனசு எனக்குப் பிடிச்சிருக்கு. இந்த உதவியைச் செய்வீங்களா? ரெண்டு வருஷம் காத்திருப்பீங்களா? வீட்டுக்குப் போயிண்டே யோசிக்கலாம். வாங்கோ!''


நாங்கள், ஆண்கள் மூவரும் வாயடைத்துப் போனோம்.

அவள் எழுந்து நின்றாள். கம்பீரமாக ஒரு புதுப் பொலிவுடன் நிலவொளியில் காட்சி தந்தாள்.

இப்போதெல்லாம் நான் ஜன்னலினின்றும் மகேசுவரி பஸ் ஸ்டாண்டில் நிற்பதைப் பார்த்தாலும் சரி, அவளுடன் பேசும் வாய்ப்புக் கிடைத்தாலும் சரி ஒருவித மரியாதையுடன் தான் அவளிடம் பேசுகிறேன். மாதமாதம் முந்நூறு ரூபாய் திருச்சிக்குப் போகிறது என்பது எனக்குத் தெரியும்.

வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்ற ஒரு நீதியை எனக்கு உணர்த்தியவள் மகேசுவரி. பெண்களைப்பற்றி, குறிப்பாக வேலைக்குப் போகும் பெண்களைப் பற்றி ஒரேமாதிரியான கருத்து வைத்துக் கொண்டிருந்த எனக்கு, இப்போது அவர்களுக்கும் லட்சியங்களும் வாழ்க்கையைப் பற்றிய சத்திய தரிசனங்களும் உண்டு என்ற பேருண்மை விளங்கியது. நான் ஜன்னலின் உள் கட்டையின்மீது அமராமல் பெற்ற இந்த ஞானம் என் மனைவியையும், பெண் குழந்தையையுங்கூட மரியாதைக்குரியவர்களாக எண்ணும்படியான ஒரு பாதிப்பை என்னுள் ஏற்படுத்தி விட்டது.

அதோ, மகேசுவரி பஸ் ஸ்டாண்டில் நிற்கிறாள். சக்தியின் வடிவமாக, லட்சியப் பெண்ணாகக் கம்பீரமாக நின்றுகொண்டிருக்கிறாள். நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். ✳



யமுனாவின் மனக்குறை

கா.ப.ரா

"இப்படித் 'தாம்தூம்' என்று செலவு பண்ண இது அமிர்த விலாஸில்லை! போன வாரந்தானே அரைக்கிலோ காபித்தூள் வாங்கிவந்தேன்? அதற்குள்ளே ஆகிவிட்டதுன்னா என்ன அர்த்தம்?'' என்று ராமநாதம் பிள்ளை தம் மருமகளைக் கடிந்துகொண்டார்.

யமுனா விக்கித்து நின்றுவிட்டாள்.

''இதோ பாரும்மா! குடும்பப் பொறுப்பா, அளவறிஞ்சு செய்யணும். அமிர்தவிலாஸ்காரங்க சங்கதி எனக்குத் தெரியும். அங்கே பழகினமாதிரி இங்கே நடக்காது. நிலத்தை வித்து வித்துத் தின்னலாம்னு நினைக்காதே. நீயும் உங்க மாமியார் மாதிரியே டாம்பீகமாக இருக்கப் பாக்கறே. என் தலையெழுத்து. நான்தான் மாட்டிக்கிட்டேன். பழனியையும் விவகாரம் தெரிஞ்சே மாட்டிவிட்டேனே!'' என்று தொடர்ந்து அங்கலாய்த்தார் ராமநாதம் பிள்ளை.

'அமிர்த விலாஸ்', 'தாம்தூம்' என்று ராமநாதம்பிள்ளை கூறிய சொற்கள், பின்கட்டில் இருந்த பார்வதியின் செவியில் விழுந்ததும் மாமனாருக்கும் மருமகளுக்கும் தகராறு என்று ஊகித்தாள். 'ஆகட்டும் ஆகட்டும்! நல்லா ஆகட்டும்' என்று பார்வதி எண்ணியபடியே கணவருக்கு அருகில் வந்தாள். ராமநாதம் பிள்ளை மருமகளை மட்டுமன்றி அமிர்த விலாஸையும் திட்டுவதைக் கேட்டுச் சினங்கொண்டாள்.

''இந்தாங்க! சும்மா சும்மா எங்க வீட்டைப் பத்திப் பேசவேண்டாம். இப்ப என்ன ஆயிடுச்சுன்னு குதிக்கிறீங்க?'' என்று பார்வதி ராமநாதம்பிள்ளையிடம் கேட்டாள்.

''இப்ப என்ன ஆயிடுச்சா? உன் அண்ணன் மகள் தந்த லிஸ்டைப் பார்! ஜமீன்தார் வீட்டிலே ஆகிறமாதிரி சாமான் செலவாகுது. மாசத்துக்கு ரெண்டு கிலோ காபித்தூளாகுது! உங்க வம்சமே இப்படித்தான். தெரிஞ்சே தான் தப்புப் பண்ணினேன்!'' என்று ராமநாதம் பிள்ளை பதிலுக்கு இரைந்தார்.

''கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமா? அப்பவே சொன்னேன்; கேட்டீங்களா? சிங்கார அண்ணன் பொண்ணுன்னா இப்படி இருப்பாளா? என்ன, அப்படிப் பார்க்கறீங்க?'' என்று பார்வதி, தன் கனத்த உடல் குலுங்கப் பேசினாள்.

''பார்வதி, உனக்கு முன்புத்தி அதிகம். எனக்குத்தான் இல்லாமப் போச்சு'' என்று அவள் கணவர் தணிந்து போனார்.

யமுனா இந்தப் பேச்சைக் கேட்டு அதிர்ந்து விட்டாள்.

யமுனா, சிலநாட்களாக மூன்றாவது எதிர்ப்பு முனையைச் சந்தித்து வருகிறாள். முதல் எதிர்ப்பு, மாமியார் பார்வதி. இரண்டாவது எதிர்ப்பு மாமியாரின் தாயும், அந்தவீட்டில் நெடுநாட்களாக இருப்பவளுமான பாட்டி.

சில நாட்களாகப் புதிய எதிர்ப்பு முனை, மாமனார்! யமுனாவையே, மகன் பழனிக்கு மணம் முடிக்க வேண்டும் என்று பல எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாதவர் அவர். சில நாட்களாக அவருடைய வெடிப்பும் தெறிப்பும் பெருகி வருகின்றன. மாமியாரும் பாட்டியும் யமுனாவிடம் முதலிலிருந்தே கோபம் உள்ளவர்கள். இவர் ஏன் இப்படித் திடீரென்று மாறிவிட்டார்?

மாமியாரும் பாட்டியும் யமுனாவிடம் விரோதம் பாராட்ட ஒரு காரணம் உண்டு. அதற்குப் பின்னணி:

நல்லமங்கலம், திருவண்ணாமலை வேலூர்த் தடத்தில் உள்ள ஊர். அமிர்த விலாஸம், நான்கு வீடுகளைத் தன்னகத்தே கொண்ட பெரிய காம்பவுண்டில் உள்ள பங்களா. பாட்டி அந்த வீடுகளில் ஒன்றில் மருமகளாக அறுபது ஆண்டுகளுக்கு முன்னே நுழைந்தவள். அங்கே பிறந்தவள்தான், பார்வதி.

பார்வதியின் தந்தை சாமிக்கண்ணு இளமையில் இறந்து போனார். சிறுமி பார்வதி பெரியப்பா தண்டபாணியிடம் வளர்ந்தாள். அன்புக்கோ சீராட்டலுக்கோ குறைவில்லை. தண்டபாணிப் பிள்ளைக்கு மூன்று பிள்ளைகள்; பெண் இல்லை. பார்வதியே பெண்ணில்லாக் குறையைப் போக்கியவள்.

பார்வதியின் சகோதரர்களான பெரியப்பா பிள்ளைகளில் கோபால் மூத்தவர். அவர் பார்வதியை விடப் பதினைந்தாண்டுகள் மூத்தவர். அவரிடம் பார்வதி

இனிய இசை நூல்

சங்கீத மும்மூர்த்திகளின் சிஷ்ய பரம்பரையில் வந்த மகனீயர்களிடம் இசை பயின்றவர் இசைமணி ஸ்ரீ ஜி. சுவாமிநாத சாஸ்திரிகள் அவர்கள். குடந்தை ஸ்ரீ தியாகப்பிரம்ம சங்கீத வித்யாலயத்தின் முதல்வரான இவர் சம்பிரதாய பத்ததிகளைப் பயின்று பண்பட்டவர். நல்ல லட்சண லட்சியங்களோடு சுமார் இருநூறு சாகித்தியங்களை இவர் சுயமாகக் கவனம் செய்திருக்கிறார். தமிழ், தெலுங்கு, கன்னடம், சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் சொல் பொருள் நயம் மிகுந்த அவருடைய உருப்படிகளில் முப்பதைத் தற்போது, கான ஸுதா என்ற தொகுப்பில் பிரசுரித்திருக்கிறார். நூலில் ஸ்தல விஷயமான பல கீர்த்தனங்களும் வர்ணங்களும், துதிப் பாமாலைகளும் ஸ்வர, ராக, தாளக் குறிப்புகளுடன் இடம்பெற்றிருக்கின்றன.

பிரசித்தி பெற்ற ஸ்தல அம்பிகைகளின் பேரில் இயற்றியுள்ள துதிப்பாக்கள், இவருடைய இறைபக்தியைத் தெளிவுபடுத்துகின்றன. ஸ்ரீசுவாமிகளின் பேரில் இயற்றியுள்ள பஞ்சரத்னக் கிருதிகள் அற்புதமாக அமைந்துள்ளன. இந்த இசை மலரை, காஞ்சி பரமாசார்யர்களின் 85-ஆவது ஜயந்தி விழா சமயத்தில் மே மாதம் வெளியிட்டிருக்கிறார். இவருடைய ஆசாரிய பக்தியும் இறையுணர்வும் கிருதிகளில் மிளிர்கின்றன.

திருவாளர்கள் செம்மங்குடி ஸ்ரீனிவாசையர், சந்தியாவந்தனம் ஸ்ரீனிவாசராவ், டாக்டர் வே. ராகவன் போன்ற சங்கீத மேதைகளின் பாராட்டையும், ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசார்ய சுவாமிகளின் அருளாசியையும் பெற்றிருக்கிறது இந்தக் 'கான ஸுதா'.

இவருடைய சாகித்யங்களைச் சங்கீத அபிமானிகள் இசையரங்குகளில் அடிக்கடி கேட்டு ஆனந்திக்கிறார்கள். கான ஸுதாவின் முதல் பாகத்தைத் தொடர்ந்து இதர பாகங்களும் விரைவில் வெளிவருவது வரவேற்கத் தக்கது. ஸ்ரீ தியாகப்பிரம்ம சங்கீத வித்யாலயம், 90, மடத்துத் தெரு, கும்பகோணம் என்ற விலாசத்தில் மூன்று ரூபாய் விலைக்கு இந்த இன்னிசைத் தொகுப்பை அன்பர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

—எஸ். எல்.

ஒன்றவில்லை. வயது வேறுபாடு அதிகம் அல்லவா? அடுத்தவர் சிங்காரம்; பார்வதியை விட நான்காண்டுகள் மூத்தவர். சின்னத் தமையன், குட்டியண்ணன். பார்வதியும் இளைய சகோதரர்களும் மிக ஒன்றியவர்கள். நடு அண்ணன் செயலால் மட்டுமன்றிச் சொல்லாலும் பாசம் பொழிபவர். கோபால் செயல் புரிபவரே ஒழியப் பாசத்தைச் சொல்லால் விளக்குவதில் நம்பிக்கையற்றவர்.

பார்வதி, பக்கத்து ஊராகிய சான்றூர் புரத்தில் வாழ்க்கைப்பட்டாள். அவள் புகுந்த வீடு, அமிர்தவிலாஸின் செல்வாக்குக்கு ஒருபிடி மட்டம் என்று கருதப்பட்டாலும், ராமநாதம் பிள்ளை குடும்பத்துக்கு ஒரே மகன்; அமிர்தவிலாஸிலோ மூன்று பிள்ளைகள். ஆளுக்கு இருபது ஏக்கர் தேறும். ராமநாதம் பிள்ளையோ, குடும்பத்தின் முப்பது ஏக்கருக்கும் ஒரே வாரிசு.

திருமணமான பின்னும் சகோதரர்களின் அன்பு பார்வதியிடம் குறையவில்லை. பொங்கலுக்கு ஒருவர் என்றால் தீபாவளிக்கு மற்றவர் தங்கை பார்வதிக்குப் புடைவை ரவிக்கை முதலியன எடுத்துத் தருவார். ஆனால் அதைத் தரும் முறையில்தான் எவ்வளவு வேறுபாடு!

தங்கைக்குப் புடைவை, மைத்துனனுக்கு வேட்டிகள் வாங்கிக்கொண்டுவரும் கோபால் பிள்ளை ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம் வைத்துத் துணிமணிகளையும் வைத்துத் தங்கையிடம் கொடுப்பார்.

இளையவரான சிங்காரமோ பார்வதியிடம், "பாப்பா! உனக்கு என்ன புடைவை எடுக்கலாம் எடுக்கலாம்னு நானும் உன் அண்ணியும் ஒரு மாசமாப் பேசினோம். ஒரு புடைவையைப் பார்த்தா, இன்னொண்ணு பிடிக்கலேம்மா. அப்புறம் ஆரணிக்கு நானும் உன் அண்ணியும் போனோம். பட்டுமாளிகை ஒவ்வொண்ணு ஏறி இதை வாங்கினோம்" என்று சாங்கோபாங்கமாகச் சொல்வார். பார்வதி தன் நடு அண்ணனின் பேச்சில் மயங்கிவிடுவாள்.

பத்தாண்டுகளுக்கு முன்பு பார்வதியின் மூத்த அண்ணன் கோபாலப் பிள்ளை இறந்துவிட்டார்.

ஏழாண்டுகளுக்கு முன்பு பார்வதியின் நடு அண்ணன் சிங்காரம் பிள்ளையும் காலமானார்.

கோபாலப் பிள்ளைக்கு ஒரே மகன். இரண்டு பெண்கள். இளைய பெண் தவிர அனைவருக்கும் திருமணம் நடந்துவிட்டது. இளைய மகள் யமுனா.

சிங்காரம் பிள்ளைக்கு இரண்டு பிள்ளைகள். நான்கு பெண்கள். பெரிய பிள்ளைக்கும், மூத்த பெண்ணுக்கும் திருமணமாகிவிட்டன. மற்றவர்கள் அப்போது இளைய வயதினர்.

ஒண்டிக் கட்டையாக, அதிலும் பெண் பிள்ளையாகப் பிறந்த பார்வதிக்குத் தனக்குப் பிடித்தமான அண்ணன் சிங்காரம் பிள்ளையின் பெண்களில் ஒருத்தியைத் தன் மகன் பழனிக்கு மணமுடிக்க ஆசை. பாட்டிக்கும் அப்படியே.

ராமநாதம் பிள்ளைக்கோ, மைத்துனர் கோபாலிடம் பேரன்பு காரணமாக யமுனாவைத்தான் பழனிக்கு மணமுடிக்க எண்ணம். மனைவியின் எதிர்ப்பையும் மாமியாரின் மறுப்பையும் மீறி யமுனாவை முதல் மருமகளாக மண முடித்தார்.

பார்வதியும், பாட்டியும் யமுனாமீது வேண்டாத வகையில் குறை கண்டனர். அவர்களை யமுனா புரிந்து கொண்டாள்.

வேலைக்காரி வேண்டாம் என்று ஆயிற்று. யமுனாவே, வேலைக்காரி செய்த வேலைகளை மேற்கொண்டாள். இடுப்பொடிய வேலைகள். கணவன் பழனி காட்டிய அன்பினில் தோய்ந்த யமுனாவுக்கு மலையளவு வேலைகள், கடுகளவாகச் சிறுத்தன.

"இதென்னடி! சோத்தைப் பதமாக வடிக்கத் தெரியலையே!" என்பாள் பாட்டி.

"பெரியவீட்டுப் பெண்ணாச்சே! செல்லப் பெண் வேறே! உலகத்திலே இல்லாத செல்லம். குத்துக்கல்லாட்டமா வளந்தாப் போதுமா?" என்பாள் மாமியார்.

ஒரு நாளைக்கு ஐந்தாறு முறையாவது வசவுப் படலம் நிகழும்.

பொறுமை! பொறுமை! யமுனாவின் போக்கே அதுதான்.

மாமியாரின் கொடுஞ்சொற்களோ, பாட்டியின் கடிய கண்டனமோ யமுனாவைப் பாதிக்கவில்லை என்றே சொல்லலாம். இதெல்லாம் அவள் எதிர்பார்த்தே வந்தாள். அதனால் அவை முழு ஆற்றலுடன் அவளைப் பாதிக்கவில்லை. எதிர்பாராத இடத்திலிருந்து புறப்படும் கணைகள்தாம் அவளுடைய நெஞ்சை ஊறுத்தின.

எதிர்ப்பு, கண்டனம், கிண்டல்! மாமனாரிடமிருந்து யமுனா பெறவேண்டியவை இவைதாமா?

ஏன் இந்த மாற்றம்?

காரணம் ஏதோ இருக்கும். எது என்று தெரிந்தால் யமுனா பரிகாரம் தேடலாம். கணவன் பழனியிடமும் சொல்லத் தைரியம் வரவில்லை அவளுக்கு.

செலவு அதிகமாகிறது என்றால் அவளா பொறுப்பு? அவள் மட்டுமா பொறுப்பு?

ஒருகால் நல்லமங்கலத்தில் அவளுடைய அண்ணனுக்கும் மாமனாருக்கும் ஏதாவது தகராறா? சீர் வரிசைகள் செய்ததில் குற்றங்குறை ஒன்றும் இல்லையே! அந்த வீட்டு நிம்மதியும் அவளால் குலைகிறதா? இல்லையே!

ஒருகால்..! ஆம்! மகன் பழனியை யமுனா தன் கைக்குள் அகப்படுத்திக் கொண்டாள் என்று எண்ணுகிறாரோ?

மாலை மயங்கும் நேரம். யமுனா குளத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தாள்.

மேய்ச்சலுக்குப் போன மாடுகள் தெருவில் மண்புழுதியைக் கிளப்பியபடி, கன்றுகளைக் காண விரைந்தன. எதிர்வீட்டு அல்லி, பக்கத்துவீட்டுப் பத்மா, அபிதம், மேல்வீட்டு உண்ணாமுலை ஆகியோர் உடன்வர யமுனா சற்றே கனத்த நீர் நிறைந்த தவலையுடன் திரும்பிக் கொண்டிருந்தாள்.

மாமியார், இரண்டு நாத்தனார்கள் யாவரும் பாரதக் கதை கேட்க மாரியம்மன் கோவில் அமைந்த தோப்புக்குப் போயிருக்கிறார்கள். மைத்துனர்களும், கணவனும் வர நேரமாகும்.

ராமநாதம் பிள்ளை தெருத் திண்ணையில் கம்பீரமாக அமர்ந்திருந்தார். திண்ணையைத் தாண்டித் தலையாரியுடன் பேசிக் கொண்டிருந்தார்.

மாமனாரைக் கண்டதும், யமுனாவின் வேகம் குறைந்தது. தலையில் இருக்கும் தவலையைக் கவனத்துடன் இறக்கி இடுப்பில் வைத்துக் கொண்டாள்.

"யமுனா, தண்ணீரை இறக்கிட்டுச் சட்டுப் புட்டுனு ஒரு கப் காபி ஸ்ட்ராங்காக் கொண்டாம்மா" என்றார். யமுனா சமையலறையில் தவலையை இறக்கி வைத்தாள். ஸ்டவ்வை



ஏற்றிச் சில நிமிஷங்களில் ஆவி பறக்கும் காபியுடன் தெருத்திண்ணைக்கு வந்தாள். அவள் வந்ததை ராமநாதம் பிள்ளை பொருட்படுத்தாமல், தலையாரி முனிசாமியுடன் தொடர்ந்து பேசிக்கொண் டிருந்தார்.

''டேய் முனுசாமி, நீ மட்டின்னு சரியான மட்டிடா'' என்றார்.

''சொல்லுங்க! நீங்க என்ன வேண்டுமானாலும் சொல்லுங்க'' என்றான் முனிசாமி, அடக்கத்துடன்.

''தாசில்தாரிடம் சிபாரிசு பண்ணி நான் தான் உனக்கு இந்த வேலை வாங்கிக் கொடுத்தேன்கிறதை நீ மறந்துட்டே. நான் உன்னை இப்பல்லாம் அதிகமாத் திட்டறேன்னு என்மேலே வருத்தப்படறே. நம்ம மணியக்காரர் முதலிலே உன்னை விரும்பலலை; உன் மேலே கொஞ்சம் கோபதாபம் உண்டு; அதை மாத்தினாத்தான் உனக்கு நல்லது. என்ன செய்றது? அவர் எதிரே, அவர் காது குளிரும்படி உன்னைத் திட்டறேன். 'ஒழிச்சுக் கட்டறேன்', 'நீ தம்படிக்குப் பிரயோசன மில்லே'ன்னு கன்னாபின்னான்னு நான் உன்னைத் திட்ட, என்ன ஆச்சு? மணியக்காரருக்கு உன் மேலே கொஞ்சம் கொஞ்சமா அநுதாபம் ஏற்பட்டுப் போச்சு; ஏண்டா! நீ கட்டியிருக்கிற வேட்டி அவர் கொடுத்தது தானுமே?''

''ஆமாங்க!''

''அப்பப்ப அவரிடம் கடனு அஞ்சு பத்து வாங்கறியாமே!''

''ஆமாங்க.''

''எப்படிடா இந்த மாத்தம் ஏற்பட்டது? உன்னைத் தலையாரியாக ஆக்க வேண்டாம்னு நினைச்சவர் இப்ப உன்மேலே ரொம்ப அன்பா இருக்காரே! எப்படி? நினைச்சுப் பாருடா: நான் உன்னை வெறுக்கவும் இல்லே! மிரட்டவும் இல்லே. மணியக்காரரின் பூரண அன்பு உனக்கு வாய்க்கணும்னு நான் இப்படி உன்னை அடிக்கடி முறைக்கிறமாதிரி திட்டியாகணும்: கோழி மிதித்துக் குஞ்சு முடமாகுமாடா?''

''சாமி! நீங்க பெரிய ஆளுதாங்க. என் மரமண்டைக்குத்தான் இது புரியல்லே; இப்பப் புரிஞ்சிட்டுதுங்க.''

திண்ணையை ஒட்டிய கதவுக்கருகே கால் கடுக்க நின்ற யமுனாவைப் பார்த்தார் ராமநாதம் பிள்ளை.

''நல்லாப் புரிஞ்சதா?'' என்றார் ராமநாதம் பிள்ளை. கேட்ட கையுடன் மருமகளையும் பார்த்தார்.

'புரிந்ததா?' என்று முனிசாமியை மட்டுமா அவர் கேட்டார்?

''புரிந்தது மாமா!'' என்பது போல் யமுனாவும் தலையாட்டினாள்.

மாமனாரைப் புரிந்து கொண்ட யமுனாவின் இதய பாரம் ஒரே கணத்தில் ஆவியாகிக் காற்றில் கரைந்துவிட்டது. *



தென்னம்பிள்ளை

சு. சமுத்திரம்

'அண்ணன் பிள்ளையை வளர்ப்பதை விடத் தென்னம்பிள்ளையை வளர்க்கலாம்' என்பது கிராமத்துப் பழமொழி. இது சிற்றப்பா பிள்ளைக்கும் பொருந்துமா, பொருந்தாதா என்று ஒரு முடிவுக்கும் வரமுடியாமல், நான் யோசித்த போது, என் மனைவி பல சம்பவங்களைச் சுட்டிக் காட்டி, பொருத்திப் பார்த்துக்கொண்டிருந்தாள். ''எந்தச் சித்தப்பா பிள்ளைக்குப் பொருந்தாவிட்டாலும், ஒங்க சித்தப்பா பிள்ளைக்குப் பொருந்தும்'' என்று சொன்னாள்.

அவன் - அதுதான் என் சிற்றப்பா பையன் - யோக்கியனும் அல்ல; அயோக்கியனும் அல்ல. பிரச்னையே அதுதான். பி. யூ.சியைத் திருநெல்வேலியில் முடித்துவிட்டு, பி. ஏ. யை என் வீட்டில் இருந்து முடிக்கப் பார்க்கும் அவன் சிகரெட் பிடிக்கிற அளவுக்கு அயோக்கியன். ஆனால் சில போதை வஸ்துக்களைப் போடும் அளவுக்கு அயோக்கியன் அல்ல. சிகரெட் வாங்குவதற்காக இரண்டு மூன்று ரூபாய்களைத் திருடுகிற அயோக்கியன். அதே சமயம் நூறு, இருநூறு ரூபாய் நோட்டுகள் என் பைக்குள் இருந்து தலையை நீட்டிக்கொண்டு பார்த்தாலும், அவற்றை என் பைக்குள்ளேயே தலை தெரியாதபடி திணிக்கிற யோக்கியன். வகுப்புகளுக்குப் போகாமல் சினிமாக்களுக்குப் போகிற அயோக்கியப் பயல். ஆனால் பரீட்சையில் முதலாவதாக வரும் யோக்கியமான மாணவன்.

இதேபோல்தான் என் மனைவியும். சாதாரணப் பெண்தான்.

இவர்கள் பிரச்னைகளை உண்மையிலேயே என்னால் தாங்க முடியவில்லை. பல சிக்கலான பைல்களின் முடிச்சுக்களை அவிழ்க்கும் என்னால் இவர்கள் தரும் முடிச்சு, கழுத்துக்குள் வட்டக் கயிறாக வந்ததுண்டு.

அன்றும் வழக்கம்போல் மாலையில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் வீட்டின் பால்கனியில் 'உலா' வந்துகொண்டிருந்த என் மனைவி, என்னைப் பார்த்தபிறகும் அங்கேயே நின்றுகொண்டிருந்தாள். இது வழக்கத்துக்கு விரோதமான செயல். பொதுவாக என்னைப் பார்த்ததும் வீட்டுக்குள் சென்றுவிடுவாள். நான் வீட்டுக்குள் நுழையும்போது காபித் தம்ளருடன் வரவேற்க வேண்டும் என்பதற்காக.

ஆனால் அன்று என்னிடமே சண்டைக்கு வரப்போகிறவள் மாதிரி அவள் முறைத்துக்கொண்டு நின்றாள். வெளியே நான்கு நாட்களாகப் போய்விட்டு வந்த நான் சிவப்பு நிற நைலக்ஸ் புடைவையில் மாநிற மேனி குலுங்க, பால்கனிச் சுவரில் சாய்ந்திருந்த அவளை என்மீது சாய்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆவலில் வேகமாக நடந்தேன். ஆனால் வீட்டை நெருங்க நெருங்க, அவள் நின்ற கோலத்தைக் கண்டு நான் நிஜமாகவே பயந்துவிட்டேன். 'ஆளைவிட்டால் சரி' என்கிற மாதிரி ஆகிவிட்டது.

எனக்குப் புரிந்துவிட்டது. ஏதோ 'விபரீதம்' நடந்திருக்கிறது. அதைச் சமாளித்தாக வேண்டும். கையில் இருந்த சூட்கேஸை அவளிடம் கொடுத்துவிட்டு மௌனமாக வீட்டுக்குள் வந்தேன். ''அப்பாடா! உடம்பெல்லாம் வலி. நாலு நாளாத் தூக்கமில்லே. ஒண்ணும் ஓடலே''

என்று அவளுக்குக் கேட்கும்படியாக எனக்குள்ளே பேசிக்கொண்டேன். அப்படியாவது அவள் புகாரின் வேகத்தைக் குறைக்கலாம் என்கிற ஒரு நப்பாசை. ஆனால் அப்படிப் பேசியதே தப்பாகிவிட்டது. எப்படிப் பேச்சைத் துவக்குவது என்று யோசித்துக்கொண்டிருந்த அவளுக்கு, என் பேச்சே துவக்கவுரையாகி இருக்கவேண்டும். வெடித்தாள்.

''நீங்க நாயா அலைஞ்சு ராத்தூக்கமும் இல்லாம அலையுறிங்க. இங்க என்னடான்னா ஒங்க சித்தப்பா பிள்ளைக்கிக் கவர்னர் மவன்னு நினைப்பு.''

''முதல்ல காபி குடு. அப்புறம் பேசிக்கலாம்.''

''நான் சொல்றதக் கேளுங்க. அப்புறமாக் காபி தாரேன்.''

''சரி, காபியத் தந்துக்கிட்டே பேசு. நான் குடிச்சிக்கிட்டே கேக்கிறேன்.''

''இன்னைக்கு ரெண்டுல ஒண்ணு தெரிஞ்சாகணும்.''

''சரி, காபியைச் சீக்கிரமாக் கொண்டா யேன். அப்புறமா உன் புகார்க் காண்டத்தை..''

''இந்தப் புத்திக்குத்தான் ஒங்க சித்தப்பா மவன் ஒங்களைப் பைத்தியமாக்குறான்.''

''என்ன விஷயம்?''

''இந்தாங்க. இத பாருங்க.''

''காபி கேட்டாச் சினிமா டிக்கெட்ட நீட்டுறயே?''

''இன்னக்கி லீவுதானே? ஒங்க இவனை, 'மோகன், கொஞ்சம் பால் கார்டை மாத்திக்கிட்டு வாப்பா'ன்னேன். அதுக்கு அவன், 'பிரைவேட் கிளாஸ் இருக்குது'ன்னு சொல்லிட்டுப் போயிட்டான். நானும் நம்பி, அவனுக்குச் சோத்தைப் போட்டுட்டுக் கைப்பிள்ளைய எதிர் வீட்ல கொடுத்துட்டுப் பஸ்ஸுக்குக் காத்துக் கிடந்து பால்கார்டை மாத்திட்டு வந்தேன். இவரு ஹாய்யா விசிலடிச்சிக்கிட்டே வந்தாரு. என்னடா விஷயமுன்னு சட்டப்பையப் பாத்தா இந்த டிக்கெட் இருக்கு. பால்கார்டைவிட இவனுக்குச் சினிமா, பெரிசாயிட்டுது. அதுவும் ரெண்டு ரூபாய் தொண்ணூறு பைசா டிக்கெட். ஏது பணம் அவனுக்கு? எல்லாம் நீங்க குடுக்கிற இடந்தான். பிள்ளைக்கி அமுல் வாங்கக் காசில்லை, இவனுக்குச் சினிமாவுக்கு எப்படிக் காசு வந்தது? இன்னிக்கு ரெண்டுல ஒண்ணு தெரியணும்.''

நானும், அவள் சொன்னதை உன்னிப்பாகக் கேட்டேன். நான் கல்லூரியில் படிக்கும்போது, அவன் தந்தை-என் சிற்றப்பா-எனக்கு நிறைய உதவிகளைச் செய்திருக்கிறார். கொள்ளை கொள்ளையாகச் சம்பாதித்ததைக் கொள்ளை கொள்ளையாகச் செலவழித்த அவர், நடுத்தர வயதிலேயே மாரடைப்பால் இறந்தபோது, அவர் குடும்பம் கிட்டத்தட்ட நடுத்தெருவில் நின்றது. வயதுக்கு வந்த இரண்டு பெண்கள். மூன்று குழந்தைகள், இந்த மோகன் தடிமாடோடு மொத்தம் ஏழு பேர். அவர்கள் ஜீவ மரணப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தபோது, இவனைப் படிக்கவைத்து, சிற்றப்பா குடும்பத்தைக் கரையேற்றலாம் என்று நினைத்தேன். இதனால் மனைவி முணுமுணுப்பையும், மாமியார் திட்டுக்களையும், என் அம்மாவுடைய எதிர்ப்பையும், வலக் காதில் வாங்கி இடக் காது வழியாக விட்டிருக்கிறேன். இவன் என்னடாவென்றால் திருட்டுத்தனமாகச் சினிமாவுக்குப் போகிறானாம்; வரட்டும்!

என் மனைவி காபித் தம்ளரைக் கையில் வைத்துக்கொண்டு, 'பதில் சொன்னால் தான் தருவேன்' என்கிறமாதிரி பார்த்தாள்.

''கழுதைப் பய வரட்டும். ரெண்டுல ஒண்ணை முடிச்சிட வேண்டியதுதான்'' என்று சொன்ன என் வாய்க்கு, நல்ல காபி கிடைத்தது. என் மனைவி மேலும் விளாசினாள்.

''காபி மட்டும் குடிக்கத் தெரியுது. பால் கார்டை மாத்திக்கிட்டு வரத் தெரியாதா? காலையில பிள்ளைக்கிப் பிஸ்கட்டாவது வாங்கலாமுன்னு வீடு முழுதும் காசை தேடினேன். இவனுக்கும் தெரியும். ஒரு எட்டணா கிடைக்கலை. இவன் ரெண்டு தொண்ணூர்ல டிக்கெட் வாங்கறான். இவனோட சொந்த அண்ணன் பிள்ளை துடிச்சிருந்தா வச்சிருக்கிற காசக் கொடுக்காம இருப்பானா? தெரியாமத்தான் கேக்கறேன்.''

நான் பதில் சொல்லவில்லை. அவள் போக்கும் எனக்குப் பிடிக்கவில்லை. ''நீங்க சித்தப்பா குடும்பம் நல்லா இருக்கணுமுன்னு நினைச்சுப் படிக்க வைக்கிறீங்க. அவன் 'நம்ம அப்பா செஞ்ச உதவிக்கு இவரு உதவுறார்'னு நினைக்கிறான்'' என்று என் மனைவி அடிக்கடி சொல்வதில் உண்மை இருப்பதுபோல், எனக்குத் தெரிந்தது.

பல்லைக் கடித்துக்கொண்டு காத்திருந்தேன். படுக்கையறையிலிருந்து வந்தால், மனைவி சொல்லித் திட்டுகிறாள் என்று அவன் நினைப்பான். ஆகையால் வராந்தாவிலேயே சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன்.

அவன் வந்தான். என்னைப் பார்த்ததும், சட்டைப் பித்தானை மாட்டிக்கொண்டான். வாயைத் துடைத்துக்கொண்டான். தலைமுடியை ஒதுக்கிக்கொண்டான். நான் அமைதியாக விசாரணையைத் துவக்கினேன்.

''என்னடா மோகன், ஒங்க காலேஜில ஸ்டிரைக் முடிஞ்சு போச்சா?''

''எங்க காலேஜில ஸ்டிரைக்கே கிடையாதே!''

''நானும் பாக்கிறேன், ஒங்க காலேஜ்ல எந்த அமளியிலயும் ஸ்டிரைக் வராது போலிருக்கே!''

''பாடமும் நல்லாச் சொல்லித் தராங்களே!''

''பரவாயில்ல. பிரைவேட் கிளாஸ்கூட வைக்கறாங்கன்னா பெரிய விஷயந்தான். இன்னிக்குக்கூட இருந்தது போலிருக்கே.''

''ஆமாம்.''

''இன்னிக்கு என்ன கிளாஸ் நடந்தது?''

''கணக்கு.''

''பேராசிரியர் ஆனந்தம் நடத்தினாரா?''

''ஆமா.''

''அவரு என்கூடத் திண்டிவனத்துல இருந்து இப்பத்தான் பஸ்ல வந்தாரு. எப்பிடி நடத்தியிருக்க முடியும்?''

மோகன் திருதிருவென்று விழித்தான். ஏதோ சமாளிப்பதற்காக, ''அது வந்து..'' என்று இழுக்கப் போனான். 'அசடான' என்னைச் சமாளித்துத் தப்பிவிடுவானோ என்று பயந்தவள்போல், ''பொய்யி எப்பிடி வருது பாத்திங்களா? நாயக் குளிப்பாட்டி நடுவீட்ல வச்சாலும் அது காலு காலுன்னு கத்தாம இருக்குமா? ஒங்களை அசடுன்னு நல்லாப் புரிஞ்சுக்கிட்டான். நீங்களும் சரியான ஏமாளி. ஒங்களுக்கும் புத்தியே கிடயாது; இல்லன்னா

நீங்களும் எவன் எவனுக்கெல்லாமோ பணி விடை செய்யவேண்டியதிருக்குமா? என் தலை விதி. எங்கப்பா என்னைப் பாழுங் கிணத்துல தள்ளிட்டார்'' என்று அவள் பேசிக்கொண்டே போனாள்.

எனக்கு முதலில் அவள்மீதுதான் கோபம் ஏற்பட்டது. நான் பாழுங் கிணறுமே! அரைப் பைத்தியமாமே! இவளை விடக்கூடாது.

அவளை அடிப்பதற்காக எழுந்த நான், அப் படியே நின்றேன். வரவர உடம்பில் எனக்கு வலுக் குறைந்துகொண்டு வந்தாலும், அவளை அடிக்கிற அளவுக்கு உடம்பில் வலு இருந்தது. ஆனால் டில்லியில், சர்தார்ஜிகளோடு பழகிய சகவாசதோஷம், என் கைகளைக் கட்டிப் போட் டது. பெண்களை அடிப்பவனை இழிபிறவிகளா கக் கருதுபவர்கள் சர்தார்ஜிகள். நான் இழி பிறவி அல்ல; நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன்.

அவன் இடுப்பில் குத்தினேன். அவன் சுருண்டு விழுந்தான். சொந்தத் தம்பியாக நினைக்கும் என்னைச் சொந்த அண்ணனாக நினைக் காமல், அழுத என் பிள்ளைக்குப் பிஸ்கட் வாங் கிக் கொடுக்க மனம் இல்லாததை நினைத்து அவன் தோளில் உதைத்தேன். அண்ணிக்காரி யைக் காக்கா பிடிக்கத் தெரியாத முட்டாள் தனத்தை நினைத்து முதுகில் உதைத்தேன். மனைவியிடம் எனக்கேற்பட்ட கோபத்தில் அவளை அடிப்பதாக நினைத்து அவனை உதைத் தேன். என்னையே நான் அடித்துக் கொள்வ தாக நினைத்து அவனை மாறி மாறி அடித்தேன்.

'இனிமேல் இவனைப்பற்றிச் சொன்னால் இவர் கொன்றுவிடுவார். எல்லாவற்றையும் நமக்குள் ளேயே வைத்துக்கொள்ளவேணும்' என்று என் மனைவிக்கு, அவன்மீது அநுதாபம் வரவேண்டும் என்பதற்காக, பரிதாபமாகத் தரையில்



கிடந்த அவனைத் தூக்கி நிமிர்த்தி மீண்டும் குத்தினேன். அவன் மீண்டும் சுருண்டு விழுந்தான்.

அடியின் வேகத்தைப் பார்த்துப் பயந்து போன என் மனைவி, ''நீங்க மனுஷ ஜன்மமா? ஒங்க பிள்ளைன்னா இப்படி அடிப்பீங்களா? ஊரார் பிள்ளையக் கூட்டிக்கிட்டு வந்து, இப்படி அடிச்சா என்ன அர்த்தம்?'' என்று கத்தினாள்.

அவனை அடித்ததற்காகத் துக்கப்பட்ட நான் என் மனைவியின் பேச்சைக் கேட்டுக் கொஞ்சம் மகிழ்ச்சியும் அடைந்தேன். வலித்த கைகளை யும் கால்களையும் உதறிவிட்டுக் கொண்டே வெளியேறினேன்.

ஒரு மணி நேரம் கழித்து வீட்டுக்கு வந் தேன். எதுவும் நடக்காததுபோல் சாப்பிட்டுக் கொண்டிருந்த அவன் என்னைப் பார்த்ததும்

என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, என் முன்னால் தலை குனிந்தவாறு, பெருவிரலால் தரையில் கற் பனை வட்டத்தை வரைந்துகொண் டிருந்த மோகன், அங்கிருந்து வெளியே போகப் போனான். அவன் அச்சத்தால் அப்படிப் போயிருக்கலாம். ஆனால் எனக்கு அது அலட் சியமாகப் பட்டது. நான் பாழுங்கிணறு? அசடா? எல்லாம் இவனால்.

ஒரே பாய்ச்சலில் மோகனின் தலையைப் பிடித்துக்கொண்டு, முதுகில் குத்தினேன். அவன் வலி பொறுக்க முடியாமல் முதுகைப் பின்புறமாக வளைத்தபோது நன்றாகத் தெரிந்த கன்னத்தில் மாறி மாறிக் குத்தி னேன். அவன் முன்னால் வளைந்து கைகளைக் கேடயமாக வைத்து முகத்தை மறைத்தபோது

வாயில் வைத்திருந்த சோற்றை மெல்லாமல், பரிதாபமாகப் என்னைப் பார்த்தான். தோளுக்குமேல் வளர்ந்த அவனை அடித்ததற்கு வெட்கப்பட்டு, அதற்குப் பிராயச்சித்தம் செய்பவன்போல், சுற்றுமுற்றும் பார்த்தேன். அவள் படுக்கையில் குழந்தையைத் தூங்க வைத்துக் கொண்டிருந்தாள். சட்டைப் பையிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து அவனிடம் நீட்டி, ''செலவுக்கு வச்சுக்கோ'' என்றேன். ''அண்ணி ரெண்டு ரூபாய் இப்பத்தான் தந்தாங்க'' என்று சொல்லிவிட்டு, நான் கொடுத்த ரூபாயையும், அவன் கையை நீட்டி வாங்கிக்கொண்டான்.

ஒரு வாரம் நிம்மதியாக ஓடியது. மனைவி முணுமுணுக்கவில்லை, அவள் முணுமுணுக்கிற அளவுக்கு அவன் நடந்துகொள்ளவில்லை. எனக்கு அளவில்லா ஆனந்தம். அலுவலக வேலைகளைக் கவலையின்றிச் செய்தேன்.

என் மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

வேதாளம் பழையபடியும் எங்கள் வீட்டு மொட்டை மாடியில் ஏறியது. அவள் மீண்டும் முணுமுணுக்கத் துவங்கிவிட்டாள். இவன் மீண்டும் சினிமாவுக்குத் திருட்டுத்தனமாகப் போகவும், அதற்காகக் குறைந்தபட்சத் திருடுகை மாறவும் துவங்கிவிட்டான். போதாக் குறைக்கு என் மனைவிக்குப் பிடிக்காத அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள் இவனிடம், ''ஒம் மான்னு இப்படிப் பண்ணுவாளா? ஒன் தலைவிதி. எச்சிச் சோறு சாப்பிட வேண்டியிருக்கு'' என்று சொல்லுவார்களாம். இவனும், தான் ஒருவன்தான் அதிகமாகக் கஷ்டப்படுவதாய் நினைத்துக்கொள்வதுபோல் தோன்றியது. அழுதபிள்ளையை இவன் எடுப்பான். ஆனால் அதில் ஒரு பாசம் இருக்காது. கடமைதான் தெரியும். எங்களோடு பல இடங்களுக்கு வருவான். வாங்கிய பொருள்களை இவனைத் தூக்கிக்கொண்டு வரும்படி கொடுப்பேன். அவனும் வாங்கிக்கொள்வான். ஆனால் அதில் 'நம்ம பொருளைத் தூக்குறோம்' என்கிற உரிமை உணர்வுக்குப் பதிலாக, 'படிக்க வைக்கிறவனுக்குப் பணி செய்யவேண்டியது நம்ம கடமை' என்கிற கடன்காரப் புத்திதான் இவன் முகத்தில் தெரிந்தது.

இவன் விலகிக் கொண்டு போவதுபோல் எனக்குத் தோன்றியது. மனைவியும், அதற்கு ஏற்றாற்போல், ''பிள்ளை ரெண்டு நாளா ஜுரத்தில் துடிக்குது. எப்படி அண்ணி இருக்குன்னு ஒரு வார்த்தை கேட்கலே'' என்பாள். ''ரேஷன் கடையில இருந்து அரிசியும் இதர தட்டுமுட்டுச் சாமானையும் தூக்க முடியாமத் தூக்கிட்டு வாரேன். இவன் பாத்துக்கிட்டுப் பிள்ளையார் மாதிரி பேசாம இருந்தா என்ன அர்த்தம்?'' என்று என்னிடம் அர்த்தத்தோடு கேட்டாள். ''பக்கத்து வீட்டு மாமிகிட்டப் போயி பேச்சுப் போட்டில முதலா வந்ததாச் சொன்னானாம். அந்த மாமி சொல்லி எனக்குத் தெரியவேண்டியிருக்கு'' என்பாள். ஒரு நாள், ''ஒன்னு அவன் வீட்ல இருக்கணும். இல்லென்னா நான் இருக்கணும்'' என்று சொல்கிற அளவுக்குப் போய்விட்டாள்.

என்னால் தாங்க முடியவில்லை. இயல்பிலேயே நேர்மையைப் பெரிதாக நினைக்கும் எனக்கு அலுவலகத்தில் பல தொல்லைகள். அலுவலகத்தில் இருக்கும்போதெல்லாம் 'வீடே தேவலை' என்று நினைப்பேன். வீட்டில் இருக்கும்போதோ, "அலுவலகமே மேல்" என்று நினைப்பேன். இளமையை மனைவியுடன் இன்பமாகக் கழிக்க வேண்டிய நான், அவளுடைய புகாரையும், ஆற்றாமையையும் கேட்டு விவாதித்துத் திட்டித் தீர்த்து, அலுத்துக் களைத்துப் படுக்க வேண்டியிருந்தது.

'சாமி, இனிமேல் நம்மால தாங்க முடியாது. ஏதாவது ஒரு வழி பண்ணணும்' என்று முடிவு செய்தேன். சில நாட்கள் சென்றன.

இன்றைப் பொழுதை எப்படிச் சமாளிப்பது என்ற யோசனையுடன், வீட்டுக்குத் திரும்பிய போது, என் மனைவி சிரித்துக்கொண்டே, ஒரு மஞ்சள் காகிதத்தை நீட்டினாள். நான் அதைப் பிரித்துப் படிக்குமுன்னே விஷயத்தைச் சொன்னாள்.

''என் தங்கச்சி வயசுக்கு வந்துட்டாளாம்.''

''அடிடா சக்கை! அந்த லூஸ்கூடப் பூப்பாயிட்டாளா?''

''ஆமா, நீங்க புத்திசாலி. நாங்க லூஸுங்கதான். இந்தப் புத்திக்குத்தான் அவன் ஒங்களை ஏய்க்கிறான். இன்னைக்குப் பாருங்க: அவன்..''

''இந்தா பாரு, நல்ல சேதி வந்த நேரத்துல பழய குப்பய ஏன் கிளப்புறே? புதிய குப்பயப் பேசுவோம்.''

''இந்த மாதிரி அடாவடித்தனமாப் பேசினா நான் பொல்லாதவளாயிடுவேன். என் தங்கைக்கு ஐந்நூறு ரூபாய்ல காஞ்சிபுரம் பட்டுப் புடைவை வாங்கிக் குடுக்கணும். இப்பவே சொல்லிட்டேன். ஆமாம்.''

''கள்ள நோட்டு அடிக்கப் போறேன். ஆயிரம் ரூபாய்க்கே வாங்கலாம்.''

''சித்தப்பா மவனுக்கு டெரிலின் சட்டை வாங்கப் பணம் இருக்கும். சைக்கிள் வாங்கிக் குடுக்கப் பணம் இருக்கும். சொந்த மச்சினிக்கு ஒரே ஒரு தடவை புடைவை வாங்கப் பணம் இருக்காது!''

''ஒன் தங்கச்சி சரியான லூஸு. சாதாரணப் புடைவையே கட்டிக்கத் தெரியாது. பட்டுப் புடைவை குடுத்தா, குரங்கு கையில குடுத்த..''

''நீங்க என்னதான் நினைச்சிக்கிட்டுப் பேசறீங்க? பொறுமைக்கும் ஓர் அளவுண்டு. கேவலப்படுத்துறதைத் தாங்கிக்கறதுக்கும் அளவு உண்டு. என் தங்கச்சி அத்தான்னு உயிர விடுவா. நீங்க ஒரு தடவை வாங்கிக் குடுத்த செருப்பைக் கண்ணுல ஒத்திக்கிட்டாளாக்கும். மோகன் மாதிரி நன்றிகெட்ட மனுஷி இல்ல. நேத்துப் பாருங்க, ஒங்க சித்தப்பா பிள்ளை செய்த கூத்தை. நான் வீட்ல..''

ஆரம்பித்து விட்டாள். கொஞ்சநேரம் நிலவிய நிம்மதி குறைந்தது. இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும். என்ன செய்யலாம்? திடீரென்று தலையில் மத்தியப் பகுதியிலிருந்து நெற்றிக்கு ஒரு மின் ஒளி வருவதுபோல் தெரிந்தது. அருமையான யோசனை. பிரமாதமான உபாயம். இனிமேல் சண்டை வராது. சந்தோஷம் வராமல் போகாது.

நான் அவளிடம் அதிகமாகவே குழைந்தேன்.

''ஏண்டி, மோகன் என் சொந்தத் தம்பியில்ல. அப்படியிருந்தும் அவனோட மரக்கட்ட மனசைத் தெரிஞ்சிருந்தும் உதவி பண்றேன்னா அதுக்குக் காரணம் இல்லாமலா போகும்?''

''சும்மாக் கிடங்க; நீங்களும் ஒங்க காரண காரியமும்!''

''அடி பைத்தியக்காரி! நீயும் ஒன் தங்கச்சி மாதிரி சரியான பேக்குடி. ஒன் லூஸுத் தங்கச்சியைப் படிச்சவன் எவனும் கட்டிக்க மாட்டான். நம்ம மோகனுக்கு அவளை வளைச்சிப் போட்டுடலாமுன்னு திட்டம்போட்டுப் படிக்க வைச்சேன். இப்பவாவது ஐயாவோட எண்ணம் புரியுதாடி?''

அவள், வைத்த கண் வைத்தபடி பார்த்தாள். அவள் பார்வை ஆச்சரியத்தையும் காட்டியது; ஆராய்ச்சியையும் காட்டியது. ''நிஜமாவா? சத்தியமாவா?'' என்றாள். நான் என் பொய்ம்மைக்கு வெட்கப்பட்டு முகத்தை வேறுபுறமாகத் திருப்பிக்கொண்டு, ''ஒன் கிட்ட நான் பொய் சொல்ல வேண்டிய அவசியம் என்ன வந்திருக்கு?'' என்று திருப்பிக் கேட்டேன், அந்த அவசியத்தை நினைத்துக் கொண்டே. பொய்யோ மெய்யோ எனக்கு வேண்டியது நிம்மதி.

அன்றிரவு அவளிடம் எனக்கு நல்ல வரவேற்பு.

காலம் ஓடிக்கொண் டிருந்தது.

நான் எதிர்பார்த்ததுபோல், அவளிடம் இப்போது முணுமுணுப்பே இல்லை. அதற்கு எதிர்மாறான புகழஞ்சலி. சென்னை நகரில் பத்து நல்ல பையன்களைத் தேடினால், அதில் மோகன் முதலில் வருவானாம். இதுவரை, தன் துணிமணிகளை மோகனே துவைத்துக் கொண்டான். இப்போது அவனுக்குச் சலவை யோகம். அண்ணிக்காரியே துவைத்துப் போட்டாள். அவன் டைட் பாண்டையும், லுங்கியையும், 'வஸ்தாது' மாதிரி கட்டிக்கொண்டு திரியும் தோரணையையும் பார்த்து, நான் திட்டப்போனால், அவள் என்னைத் திட்டுவாள்; ''ஒங்க வயசுல எப்படி இருந்திருப்பீங்ன்னு நினைச்சுப் பாருங்க'' என்பாள். அவன் கேட்கிற எதையும், நான் கொடுக்காமலோ, கொடுப்பதில் தாமதமோ ஏற்பட்டால், அதைத் தன் தங்கைக்கு எதிரான செயலாகக் கருதத் துவங்கினாள்.

''மோகன், சிமிண்ட் தரையில படுக்காதே, வாதம் வரும்; இந்தக் கட்டிலத் தூக்கிட்டுப் போ.''

''மோகன், படிச்சது போதும்பா; தூங்கு, உடம்புக்கு ஆவாது.''

''மோகன் நீ காபி குடிக்கக்கூடாது; பாலு தான்.''

''ஏன் அவனைக் கரிச்சுக் கொட்டுறிங்க? ஒங்களவிட அவன் புத்திசாலிதான்.''

எனக்கே ஆச்சரியமாகிவிட்டது. நிம்மதி சலித்துப்போகிற அளவுக்கு ஏற்பட்டது. ஆனால் அவ்வப்போது, ''ஏங்க ஒங்க மச்சினியைக் கட்டிக்க மாட்டேன்னு சொல்ல மாட்டானே? எதுக்கும் அத்தைக்கிட்ட (இப்போ அவன் அம்மாக்காரி இல்லை) கேட்டு வச்சிடுங்க'' என்று என்னிடம் கேட்டுத் தன் நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்திக் கொள்வாள்.

மூன்றாண்டுகள் சொல்லாமல் ஓடின.

மோகன் முதல் வகுப்பில் தேறினான். தங்கப் பதக்கம் ஐந்து மார்க் வித்தியாசத்தில் போயிற்று. என் செல்வாக்கைப் பயன்படுத்தித் தனியார் கம்பெனியில் 'ஆபீசர்' வேலை வாங்கிக் கொடுத்தேன்; முதல் வகுப்பில் வந்தவன் ரெயிலில் முதல் வகுப்பில் போகும் அளவுக்கு அந்தஸ்துள்ள உத்தியோகம். அதற்கேற்ற தோரணைகள்.

அவன் சம்பளத்தை என்னிடமே கொடுத்தான். நான்தான், அதை அவன் அம்மாவுக்கு அனுப்பும்படி சொன்னேன். இதற்கிடையே, அவன் அம்மா எழுதிய கடிதங்களின் பாணி மாறத் தொடங்கியது. எனக்குக் கடிதம் எழுதி, அவனை விசாரித்ததாகச் சொல்லச் சொல்லும் சித்திக்காரி, இப்போது அவனுக்குக் கடிதம் எழுதி என்னை விசாரித்ததாகச் சொல்லும்படி எழுதத் துவங்கினாள். பழைய ஜமீன்தார் ஒருவர் தம் பெண்ணையும், அவன் சவாரி செய்ய ஒரு காரையும், உட்கார ஒரு வீட்டையும், செலவுக்குப் பத்தாயிரம் ரூபாயையும் கொடுப்பதாகவும் மகனுக்குச் சம்மதமா என்றும் அவனுக்கே கேட்டு எழுதியிருந்தாள். எனக்குச் சம்மதம் இருக்கும் என்று நினைத்தாளோ அல்லது என் சம்மதம் ஒரு பொருட்டல்ல என்று நினைத்தாளோ என்னவோ?

என் மனைவி என்னைப் பிய்க்கத் துவங்கிவிட்டாள்.

''கல்யாணத்தை எப்ப வச்சுக்கலாம்?''

''யாரோட கல்யாணத்த?''

''மோகனுக்கும் ஒங்க மச்சினிக்கும்.''

''பைத்தியக்காரி! அவன் அம்மா ஜமீன்தார் மகளைப் பார்க்கிறா. நம்ம பொண்ணைச் சொன்னா நம்மளப் பைத்தியம்பாங்க.''

''நீங்க சொல்றது ஒங்களுக்கே நல்லா இருக்கா? அவனுக்குக் கல்யாணம் செய்ய நமக்கு உரிமை இல்லியா?''

''உண்டு. ஆனா தகுதியில்லாதவள அவன் தலையில வைக்கறதுக்கு உரிமை இல்லை.''

''என் தங்கச்சிய அப்படிப் பேசினா எனக்குக் கோவம் வரும்.''

''அதனாலதான் பேசவேண்டாங்கிறேன்.''

''அநியாயம், அக்கிரமம்!''

''நீயே நினைச்சிப் பாரு. அவள் ஒரு பேக்கு. இவன் ஜமீன்தாருக்கு மருமகனாப் போனால், இவங்க குடும்பமும் தழைக்கும். நாம ரொம்பச் சுயநலமா இருக்கப்படாது.''

''அப்படின்னா நீங்க மூணு வருஷத்துக்கு முன்னாடி ஆடிமாசம் ரெண்டாந்தேதி வெளக்கு வைக்கிற நேரத்துல சொன்னது பொய்தானா? இப்படி வஞ்சகம் பண்ணலாமா? நான் வேற உங்கள அரிசந்திரன்னு நினைச்சு வீட்ல சொல்லிட்டேன். பாவம், என் தங்கச்சி எதுக்கெடுத்தாலும் மோகனப்பத்திதான் கேக்குறாள். ஆசைகாட்டி மோசம் பண்ணிட்டீங்க; இந்தப் பாவம் ஒங்களச் சும்மா விடாது.''

நான் அதிர்ந்து போனேன். உபாயமாகச் சொன்ன நாளையும், தேதியையும், நேரத்தையும் எவ்வளவு ஞாபகப்படுத்தி வைத்திருக்கிறாள்! ஆனால், நான் என்ன செய்ய முடியும்? நல்லதையே கெட்டதாக வர்ணிக்கும் ஊரார் 'கிடாயை வளர்த்தது கோவிலில் வெட்டத்தான்' என்று பேசவேண்டுமா! மோகனின் அம்மா சம்மதிப்பாளா?

என் மனைவி தொடங்கினாள். இறுதியில் கேவிக்கொண்டே, ''நான் மோகன் கிட்டேயே கேக்கிறேன்'' என்றாள். நான் பதில் சொல்லப் போகும் முன், மோகன் அங்கே வந்து நின்றான். எனக்கு ஒன்றும் ஓடவில்லை; அவன் குரலோ கம்பீரமாக ஒலித்தது;

"அண்ணி, நீங்க எதுக்கு என்னைக் கேக்கணும்? இவளைத்தாண்டா நீ கட்டணுமுன்னு. சொன்னா, கட்டிட்டுப் போறேன். நான் ஒங்களுக்குத்தான் பிள்ள, அண்ணி."

என்னால் என் காதுகளை நம்ப முடியவில்லை, அவன், இப்படிப்பட்டவன் என்று தெரிந்திருந்தால், நான் இப்படிப் பச்சையாகப் பேசி, மனைவியின் மதிப்பிலிருந்து இறங்கியிருக்க மாட்டேன்.

என் மனைவி, அவனையே பார்த்துக்கொண்டு சிறிது நேரம் நின்றாள். பிறகு அவனிடம் பாய்ந்து சென்றாள். அவன் தலையைச் செல்லமாகக் கோதிவிட்டாள். "என் ராஜா!" என்று சொல்லி, அவன் கன்னத்தைத் தன் விரலால் தொட்டு, அதை முத்தமிட்டுக் கொண்டாள். 'இவனுக்கு இருக்கிற புத்தில ஒங்களுக்குக் கால்வாசிகூட இல்லியே?' என்கிற மாதிரி என்னைப் பார்த்துக்கொண்டு, சமையலறைக்குள் போனாள்.

என் காதுகளை என்னால் நம்ப முடியவில்லை. அங்கே நிஜமாக என் முன்னால் மோகன் நிற்பதைக்கூட என்னால் நம்ப முடியவில்லை. மோகன் என் அருகே வந்தான். இப்போதுதான், முதல் முதலாக நேருக்கு நேராக என்னைப் பார்த்துப் பேசுகிறான்.

"என்னண்ணா நீங்க, நான் மங்கம்மாவக் கட்டமாட்டேன்னு நீங்க நினைச்சதே தப்பு. அண்ணியை ரொம்பவுந்தான் அவமானப்படுத்திட்டிங்க."

எனக்குப் பிரமை கலைந்து கொண்டிருந்தது. அதேசமயம் சித்திக்காரி என்னைப் பார்த்து "வளத்தகிடாவ வெட்டிட்டியே" என்று சொல்வது மாதிரி தெரிந்தது. ஆயிரத்துக்குமேல் சம்பாதிக்கும் என் தம்பிக்கு, அந்த ரூபாயை எண்ணக்கூடத் தெரியாத ஒருத்தியை ஜோடியாக நினைக்க முடியவில்லை. தட்டுத் தடுமாறி உளறினேன்,

"அதுக்கில்லேடா. விரலுக்குத் தக்க வீக்கம் வேணும். இப்பவும் சொல்றேன். நீ தியாகம் பண்றது தப்பு."

"இது தியாகம் அல்ல அண்ணா. அப்பட்டமான சுயநலம். நான் வேற இடத்துல கல்யாணம் பண்ணினால் நான் ஒதுங்க விரும்பவில்லை என்றாலும் அம்மாவும் எல்லாருமாச் சேர்ந்து என்னைப் பிரிச்சிடுவாங்க. நான் உங்க பக்கத்துலேயே இருக்கணும், ஒரே வீட்ல இருக்கணும். நீங்க எப்பவும் என்னைச் செல்லமாத் திட்டிக்கிட்டே இருக்கணும். அண்ணி அதைத் தடுத்துக்கிட்டே இருக்கணும். இதற்குக் கல்யாணம் ஒரு கருவி, அவ்வளவுதான்! அண்ணா, என் ஆச்சரியமா பாக்கிறீங்க? ஆரம்பத்துல அண்ணி திட்டினதை நினைக்கிறீங்களா? நான் பண்ணினதுக்கு அவங்க சோறுகூடப் போடக்கூடாது. ஆனால் நான் சாப்பிடுமுன் என்னிக்குமே அவங்க சாப்பிட்டது கிடையாது. போகட்டும். எங்கப்பா ஒங்களுக்கு இந்த அளவுக்கு உதவல. அப்படி இருந்தும், எங்கம்மா ஒங்கள ஒங்க காதுபடவே 'எச்சக்கல பய மவன்னு' எத்தன தடவை திட்டியிருக்கா! சொல்லப் போனால் நீங்க என்னைப் படிக்க வச்சது பெரிய விஷயமில்ல. அண்ணி அதை அனுமதிச்சதுதான் பெரிய விஷயம். எனக்கு ஒரே ஒருகுறை. அண்ணி பிள்ளங்களத் திட்டுற அளவுக்கு என்னைத் திட்டலியே என்கிறது தான்."

அதிகப் பிரசங்கித்தனமாய்ப் பேசிவிட்டோமோ என்பதுபோல், சிறிது அங்குமிங்குமாகக் கண்களை அலைய விட்டுவிட்டு, அவன் உள்ளே போய்விட்டான். நான் உணர்ச்சி பூர்வமாக ஆடிக் கொண்டிருந்தேன்.

என் மனைவி எல்லாவற்றையும் ஒட்டுக் கேட்டிருக்கிறாள். அவன் உள்ளே போனதும், வெளியே என்னிடம் வந்தாள்.

"ஏங்க, நீங்க சொல்றதும் ஒரு வகையில சரிதான். அவள் சரிப்படமாட்டாள். மோகனுக்கு வேற நல்ல இடமா, படிச்ச பொண்ணைப் பார்ப்போம். ஏன் குத்துக்கல்லு மாதிரி இருக்கிங்க?"


நான் அவளையே பிரமிப்போடு பார்த்தேன். மீண்டும் பழைய பிரமை. அவள் அங்கே நிற்கிறாள், பேசுகிறாள் என்பதைக்கூட என்னால் நம்ப முடியவில்லை. அவள், என் தோளில் செல்லமாக, ஆனால் வலிக்குமளவுக்கு அடித்துவிட்டு, மோகனிடம் ஏதோ பேசுவதற்காகப் போகிறவள்போல் அவன் இருந்த அறைக்குள் போனாள்.

எனக்குப் பிரமை கலைந்தபோது, சில விவரங்கள் வெளிப்பட்டன.

திட்டிக்கொண்டு செய்யப்படும் உதவி கடனாகிறது; திட்டாமல் யந்திரமாகச் செய்யப்படும் உதவி கடமையாகிறது. ஆனால் அன்போடு செய்யும் உதவி சேவையாகிறது.

சேவைக்கு இவ்வளவு பெரிய சக்தியா? என் 'சக்தி' இவ்வளவு பெரிய மனுஷியா? பிறப்பித்த நத்தையையே கிழித்துக்கொண்டு வரும் முத்தைப்போல் அன்பும் தன்னைப் பிறப்பித்த சுயநலத்தைக் கிழித்துத் தனியாக நிற்குமோ?

உள்ளே எட்டிப் பார்க்கிறேன். என் சிற்றப்பா பிள்ளை என்ற தென்னம்பிள்ளையின் உச்சியில் உள்ள 'ஒற்றைக் கீற்றுகளை' அவள் செல்லமாகக் கோதிவிட்டுக் கொண்டிருக்கிறாள். *



டில்லி மாநகரில் மிகவும் உயர்ந்த வேலைப் பாடமைந்த அரண்மனைக் கொலு மண்டபத்தின் நடுவில் ஓர் ஆசனத்தில் அக்பர் வீற்றிருந்தார். அவரைச் சுற்றி இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்த கட்டிடக் கலை நிபுணர்கள் அமர்ந்திருந்தனர். அக்பர் பதேபுர் சிக்ரியை நிர்மாணிக்கும் வேலையில் மிகவும் காரசாரமான விவாதத்தில் ஈடுபட்டிருந்தார். கட்டிடக்கலை நிபுணர்கள் கூறிய கருத்துக்களை மிகவும் உன்னிப்பாகக் கேட்டார்; தாமும் சில கருத்துக்களைக் கூறினார். அறிவு நுட்பம் மிகுந்த அவருடைய கருத்துக்களைக்கேட்டு நிபுணர்கள் வியந்தனர்.

மொகலாய மன்னர்கள் இயல்பாகவே, அழகான கட்டிடங்களைக் கட்டுவதிலும், தேவலோகத்துக்கு நிகரான நகர்களை நிர்மாணிப்பதிலும் மிகவும் விருப்பம் கொண்டிருந்தார்கள்; ஏன், அந்தக்கலையில் அவர்கள் கைதேர்ந்தவர்கள் என்றே சொல்லலாம்.

இந்தியாவிலேயே மிகவும் உயர்ந்த, நாகரிகமான, கலையழகு மிளிரும் கட்டிடங்களைக் கொண்ட நகரமாக பதேபுர் சிக்ரியை நிர்மாணிக்க விரும்பினார். மற்ற வேலைகளை எல்லாம் தள்ளிவைத்து விட்டு முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தார் அக்பர்.

நகர நிர்மாண வேலையும் கிட்டத்தட்டப் பாதிக்குமேல் முடிந்துவிட்டது. அழகான அரண்மனை, கோட்டைகள், கொத்தளங்கள், பூங்காக்கள், எல்லாம் முக்கால்வாசிக்குமேல் முடிந்துவிட்டன. அக்பர் தலைநகரை டில்லியிலிருந்து பதேபுர் சிக்ரிக்கு மாற்றப்போகிறார் என்ற வதந்திகூடப் பரவி இருந்தது. இது அக்பர் செவிக்கும் எட்டியது. யாராவது நண்பர்கள் அக்பரிடம், "தலைநகரை டில்லியிலிருந்து பதேபுர் சிக்ரிக்கு மாற்றப் போகிறீர்களா? மக்கள் எல்லாரும் பேசிக்கொள்கிறார்களே!" என்று கேட்டால், அக்பர் புன்முறுவலுடன், "அப்படியா மக்கள் பேசிக்கொள்கிறார்கள்! இறைவன் சித்தம் அதுவாக இருந்தால் நாம் என்ன செய்ய முடியும்?" என்று பதில் கூறிவிடுவார்.

அன்று அப்படி ஆலோசனை நடந்தபோதுதான் அக்பரின் உயிர் நண்பரும் தளகர்த்தர்களில் ஒருவரும், சிறந்த கவிஞருமான பீர்பல் கொலு மண்டபத்துக்குள் நுழைந்தார். பீர்பலைக் கண்டதும் அக்பரின் முகம் மலர்ந்தது.

ஆனால் பீர்பலின் முகமோ ஒரே சோகம் கப்பியதாக இருந்தது.

அங்கிருந்த வேறு யாருடனும் பீர்பல் பேசவில்லை. நேராக அக்பர் அருகே போனார். அக்பரிடம் இரகசியமாக ஏதோ கூறினார். அவ்வளவுதான். அக்பர் முகம் உடனே மாறிவிட்டது.

"ஐயோ! சாயிரா பேகம், என்னை விட்டுப் போய் விட்டாயா?" என்று அலறினார்.

அப்படியே மயக்கம் போட்டுக் கீழே விழப் போனார். உடனே பீர்பல் அவரைத் தம் தோள்மீது தாங்கிக் கொண்டார்.

கொலுமண்டபத்தில் இருந்தவர்கள் எல்லாம் பதறிப் போய் விட்டனர். பீர்பல் அவர்களை எல்லாம் பார்த்து, "நீங்கள் இப்போது உங்கள் இருப்பிடம் செல்லுங்கள். பாதுஷா சொல்லி அனுப்பிய பிறகு வந்து சந்தியுங்கள்" என்று கூறி, அவர்களை எல்லாம் அனுப்பி வைத்தார்.

அக்பர் கண் விழித்துப் பீர்பலைப் பார்த்து, "பீர்பல், நான் உடனே பதேபுர் சிக்ரிக்குச் செல்ல வேண்டும்; என் சாயிராவைப் பார்க்க வேண்டும், பீர்பல், என்னால் தாங்கவே முடியவில்லையே" என்று அழுதுவிட்டார்!

"பாதுஷா, மனத்தைத் தளரவிடாதீர்கள், நடந்தது நடந்துவிட்டது. எல்லாம் ஆண்டவன் சித்தம். இனி நம்மால் ஆகவேண்டியது ஒன்றும் இல்லை. வாருங்கள், சிக்ரிக்குப் போவோம். மனத்தைத் தைரியமாக வைத்

துக்கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு, இருவரும் குதிரைகள் பூட்டிய சாரட்டில் பதேபுர் சிக்ரியை நோக்கிப் பயணம் ஆனார்கள்.

இரண்டு நாட்கள் கழித்து அக்பர் பச்சிளம் சிசு ஒன்றைத் தம் கைகளில் ஏந்தியபடி வந்து, தம் தாய் அமீதா பேகத்தின் முன்வந்து நின்றார்.

குழந்தையைக் கண்டதும் அமீதா பேகம் முகமலர்ச்சியுடன் வாங்கி அதை உச்சி மோந்து முத்தமிட்டுத் தன் மடிமீது வைத்துக் கொண்டாள். பிறகு அக்பரைப் பார்த்து, ''அக்பர், குழந்தை மிகவும் லட்சணமாக இருக்கிறதே. இது யார் குழந்தை?'' என்று கேட்டாள்.

அக்பர் தம் கண்களில் நீர் வழிய, அப்படியே அமீதாவின் பாதங்களில் விழுந்தார். அமீதா மனம் பதறிவிட்டாள்.

அக்பர், உன் கண்கள் ஏன் கலங்கியிருக்கின்றன? மிகப் பெரிய சக்ரவர்த்தி நீ. உன் தந்தையைவிட, உன் பாட்டனைவிடப் புகழ் பெற்று விளங்குகிறாய். அப்படி இருந்தும் உனக்கு என்ன குறை வந்துவிட்டது? நீ ஏன் கண் கலங்குகிறாய்?'' என்று கேட்டாள் அமீதா பேகம்.

''அக்பர் தம் தாயின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, ''அம்மா, எனக்கு எந்தக் குறையும் இல்லை. ஆனால், ஆனால்..'' என்று இழுத்தார்.

''ஆனால் என்ன? சொல் மகனே, தைரியமாகச் சொல்'' என்று மகன் கண்ணீரைத் துடைத்தபடியே கேட்டாள் அமீதா பேகம்.

''தங்கள் மடியில் கிடந்து, இந்த உலகையே மறந்து எந்தக் கவலையும் தெரியாமல் உறங்கும் இந்தச் சிசுவுக்குப் பெற்ற தாய் இல்லை, அம்மா'' என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினார் அக்பர்.

அமீதா முகமும் இதைக் கேட்டவுடன் வாடிவிட்டது. அக்பரைப் பார்த்து, ''அக்பர், எல்லாம் இறைவன் செயல். உம், இந்தக் குழந்தை செய்த பாவம், பெற்றவளைப் பார்த்துத் தெரிந்து கொள்ளக்கூட முடியவில்லை. இந்தக் குழந்தை உனக்கு எப்படியப்பா கிடைத்தது? இந்தக் குழந்தையின் தகப்பன் யார்?'' என்று கேட்டாள் அமீதா பேகம்.

அக்பர் பதில் ஏதும் கூறவில்லை.

மீண்டும் அமீதா, ''மகனே, நான் கேட்ட கேள்விக்கு ஏன் பதிலே இல்லை? தகப்பன் இல்லாத குழந்தையா இது? விலைமகள் பெற்றெடுத்ததா இந்தக் குழந்தை?'' என்று கேட்டாள்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அக்பர் நெருப்பை மிதித்தவர்போல் பதறிவிட்டார்.

''அம்மா, என்ன வார்த்தை கூறினீர்கள்? விலைமகள் பெற்றது அல்ல அம்மா. குலமகள் பெற்ற குலக் கொடிதான் அம்மா இது'' என்று அழுதுகொண்டே கூறினார் அக்பர்.

''அப்படியானால் இந்தக் குழந்தையின் தகப்பன் யார் அப்பா?''

''நான்தான் அம்மா இந்தக் குழந்தையைப் பெற்றெடுத்த பாவி'' என்றார் அக்பர்.

அமீதா திடுக்கிட்டாள். அவள் செவிகளை அவளாலேயே நம்ப முடியவில்லை. அக்பரைப் பார்த்து, ''அக்பர், நீ என்ன சொல்கிறாய்? நீயா இந்தக் குழந்தையின் தகப்பன்? உன் மனைவியா இறந்துவிட்டாள்! உன் மனைவி இறந்த செய்தி இதே அரண்மனையில் இருக்கும் எனக்குக்கூடத் தெரியாமல் போய்விட்டதே. மகனே, இது என்ன ராஜ்ய பரிபாலனம்?'' என்று கோபம் கொப்புளிக்க அமீதா பொரிந்து தள்ளினாள்.

''அம்மா, ஊரறிய உலகறிய இந்தக் குழந்தையின் தாயை நான் என் மனைவியாக்கிக் கொள்ளவில்லை, அம்மா. ஆனால் என் மனம் முழுவதும் அவள் நிறைந்திருந்தாள், அம்மா. அவள் உயிர் பிரியும்போதுகூட அவள் அருகில் இல்லாத பாவியாகிவிட்டேனம்மா நான்'' என்று சொல்லி, எதற்குமே கலங்காத மாவீரர் அக்பர் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

இதைக் கேட்டதும் அமீதாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அதைக்கூடத் துடைக்காமல் தன் அன்பு மகன் அக்பரின் கண்களிலிருந்து வழியும் கண்ணீரைத் துடைத்தாள்.

பிறகு அக்பரைப் பார்த்து, ''மகனே, நீ சொல்வது ஒன்றுமே விளங்கவில்லையே!'' என்றாள்.

''அம்மா, அது ஒரு பெரிய கதை, சொல்கிறேன் கேளுங்கள்'' என்று சொல்லி அக்பர் நடந்தவற்றைக் கூறத் தொடங்கினார்.

அக்பர் எத்தனையோ போர்களில் வெற்றிக் கொடி நாட்டி இருந்தாலும், எவ்வளவோ பேரரசுகளைத் தம் காலடியின்கீழ்க் கொண்டு வந்திருந்தபோதும், பெரும் புகழ் பெற்றிருந்தாலும் அவர் மனம் அவற்றால் நிறைவுறவில்லை. அவர் மனத்துக்குள் ஏதோ ஒரு பெருங்குறை உறுத்திக்கொண்டே இருந்தது. அந்தக் குறைதான் என்ன?

தமக்குப் பின் தாம் உண்டாக்கி வைத்திருக்கும் பெரிய சாம்ராஜ்யத்தை ஆள ஒரு வாரிசு இல்லையே என்ற குறைதான் அவரை அமைதி இல்லாமல் வாடச் செய்தது.

தமக்கொரு புத்திரன் வேண்டும் என்பதற்காக அக்பர் பல புண்ணிய தேசங்களுக்கும் யாத்திரை செய்தார். பல தெய்வங்களுக்கும் பிரார்த்தனை செய்துகொண்டார். பல பெரிய மகான்களைச் சந்தித்து அருளாசி பெற்றார். அப்படி அவர் சந்தித்த மகான்களில் ஒருவர் தாம் சிக்ரியின் அருகே இருந்த காட்டில் வாழ்ந்த ஷேக் ஸலீம் என்ற மகான்.

ஒரு நாள் தம் ஆருயிர் நண்பர் பீர்பலுடன் அவரைக் காணச் சென்றார் அக்பர். பல பொருள்களுடன் அவர் இருக்கும் இடம் தேடிப் பீர்பலை மட்டும் அழைத்துக்கொண்டு யாருக்கும் தெரியாமல், எந்த ஆடம்பரமும் இல்லாமல் சென்றார்.

மாலை சுமார் நான்கு மணி அளவில் அவர்கள் ஷேக் ஸலீம் இருக்கும் ஆசிரமத்தை அடைந்தார்கள். சுற்றிலும் அடர்ந்த காடுகள். சிக்ரியிலிருந்து மூன்று கல் தொலைவில் அந்தக் காடு அமைந்திருந்தது. சிக்ரி அப்போது மிகவும் சாரதாரணமான கிராமமாக இருந்தது. மனிதர்கள் நடமாட்டமும் அவ்வளவாக இல்லை. பெரிய கட்டிடங்களும் இல்லை. எனவே யாரும் அக்பரையோ, பீர்பலையோ அடையாளம் கண்டுகொள்ளவில்லை.

அப்போது ஷேக் ஸலீம் தொழுகையில் ஈடுபட்டிருந்தார். மழைக்காலம் ஆகையால் சூரிய வெளிச்சம் அவ்வளவாக இல்லை. அடர்ந்த காடு வேறு. அக்பரும், பீர்பலும் வெளியே

நின்றுகொண்டு இயற்கைக் காட்சிகளை ரசித்துக்கொண் டிருந்தார்கள்.

இருவருக்கும் தூக்கி வாரிப் போட்டாற்போல் ஒரு நிகழ்ச்சி அப்போது அங்கு நடந்தது. அவர்களின் வியப்புக்கும் திகைப்புக்கும் காரணம், தேவலோகத்து அப்ஸரஸ் போன்ற அழகி ஒருத்தி நடந்து வந்துகொண் டிருந்தது தான். அளவெடுத்து வடித்தாற் போன்ற அங்கங்கள்; வானத்தில் உள்ள முழு நிலவையே வதனமாக்கி, கயல்களையே இரு விழிகளாக்கி, கொவ்வைக் கனியையே அதரங்களாக்கி, மிகப் பெரிய ஓவியன் ஒருவன் பல நாட்கள் கஷ்டப்பட்டு மிகவும் அழகாக வரைந்த ஓவியம்போல் அவள் வந்துகொண் டிருந்தாள். அவளுடைய தளிர்க் கரங்களில் ஒரு செப்புப் பாத்திரம் இருந்தது. அன்னமும் தோற்கும் அழகு நடை பயின்று வந்த அவள் இரு அந்நிய ஆடவர்களைக் கண்டு மான்போல் மருண்டாள். சிங்கத்தைக் கண்ட பெண் மான் மருண்டு, குதித்து ஓடுவதுபோல் ஒரே பாய்ச்சலில் முனிவர் இருந்த குடிசைக்குள் போய்விட்டாள்.

அக்பரும் பீர்பலும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பின்பு அக்பர் பீர்பலைப் பார்த்து, "பீர்பல், இந்த அடர்ந்த வனத்தில் கூட இத்தனை அழகியா? மிகவும் வியப்பாக இருக்கிறதே!" என்றார்.

"ஆம், நண்பரே! எனக்கும் மிகவும் வியப்பாக இருக்கிறது. இவள் நிச்சயம் மானிடப் பெண் அல்ல. உறுதியாகச் சொல்கிறேன், இவள் தேவலோகத்துப் பெண்தான்" என்றார் பீர்பல்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண் டிருந்த போதே ஷேக் ஸலீம் குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்தார். அவரைக் கண்டவுடன் அக்பரும் பீர்பலும் எழுந்து நின்று வணங்கினர். முனிவர் அவர்களை ஆசீர்வதித்தார். தாம் கொண்டுவந்த கையுறைப் பொருள்களை முனிவர் முன் வைத்து வணங்கினார் அக்பர்.

முனிவர் புன்முறுவலுடன், "பாதுஷாவின் வரவு நல்வரவாகுக! தங்களின் வருகையைப் பற்றி நேற்று இரவே ஆண்டவன் என் கனவில் வந்து சொன்னார். அக்பர், உங்கள் குறையை நான் அறிவேன்" என்றார். அக்பர் கண் கலங்கினார். "பெருமானே, எல்லாச் செல்வங்களையும் கொடுத்த ஆண்டவன் எனக்குப் புத்திரச் செல்வத்தை மட்டும் கொடுக்கவில்லை. தாங்கள் தாம் அருள் பாலிக்க வேண்டும். இந்த உலக வாழ்க்கையையே வெறுத்து விடலாமா என்று தோன்றுகிறது?" என்றார் அக்பர்.

முனிவர் கையை அசைத்தபடியே, "அக்பர் அப்படி எல்லாம் செய்துவிடாதீர்கள். நாட்டு மக்களுக்கு நீங்கள் செய்ய வேண்டிய நன்மைகள் பல இருக்கின்றன. எதற்கும் காலம் வரவேண்டாமா? நாம் நினைப்பது போல் எல்லாம் நடந்துவிட்டால் நாம் இறைவனையே மறந்து விடுவோம் அல்லவா? அதனால்தான் ஆண்டவன் எல்லாருக்கும் ஏதாவது ஒரு குறையை வைத்து, அவன் 'தன்னைப் பற்றி நினைக்கிறானா?' என்று சோதிக்கிறான். ஆகவே அச்சப்படாதீர்கள். உம் அவா நிறைவேறும் காலம் கனிய ஆரம்பித்துவிட்டது. ஆனால் ஒன்று.." என்று சொல்லி நிறுத்தினார்.

அப்போது சற்றுமுன் உள்ளே சென்ற அந்தப் பேரழகி மூன்று குவளையில் பாலை நிரப்பிக்கொண்டு வந்து வைத்துவிட்டுச் சென்றாள். முனிவர் தம் கைகளில் வைத்திருந்த சில பச்சிலைகளை ஒரு குவளையில் இருந்த பாலில் பிழிந்தார். பின்பு அக்பரைப் பார்த்து, "அக்பர், நீங்கள் இந்தக் குவளையில் இருக்கும் பாலைப் பருகுங்கள்" என்றார். பிறகு பீர்பலுக்கும் ஒரு குவளையை எடுத்துக் கொடுத்தார். இருவரும் மிகவும் பயபக்தியுடன் குவளையில் இருந்த பாலைப் பருகினார்கள்.

முனிவரும் ஒரு குவளையில் இருந்த பாலைப் பருகினார். அக்பர் மிகவும் பயபக்தியுடன் முனிவரைப் பார்த்து, "ஐயா, தாங்கள், ஆனால் ஒன்று என்று கூறினீர்களே, அதை ஏன் பாதியிலேயே நிறுத்திவிட்டீர்கள்?" என்றார்.

ஷேக் ஸலீம் புன்முறுவல் பூத்தபடியே, "பாதுஷா, நீங்கள் இப்படிக் கேட்கக் கூடாது. கேட்டுவிட்டீர்கள், அதனால் கூறுகிறேன். தங்களுக்குப் புத்திர பாக்கியம் உண்டு; ஏற்படும். ஆனால் அந்தப் புத்திரர்களால் உங்களுக்கு எவ்விதப் பயனும் ஏற்படாது; சொல்லப் போனால் அவர்களாலேயே உங்களுக்கு மனக் கஷ்டந்தான் ஏற்படும். இன்னும் ஒருபடி மேலே போய்க் கூறுகிறேன், உங்களின் இறுதிக் காலமே அவர்களால்தான் ஏற்படும்" என்றார்.

பீர்பல் திடுக்கிட்டார்.

ஆனால் அக்பர் எப்போதும்போலவே மிகவும் அமைதியுடனே இருந்தார். பீர்பல் சற்றுக் கோபத்துடன், "சுவாமி, என்ன வார்த்தை சொல்கிறீர்கள்? இந்தக் கொடிய வார்த்தைகளைக் கேட்கவா நாங்கள் தங்களை நாடி வந்தோம்? தங்கள் வாயால் இப்படிச் சொல்லலாமா?" என்றார்.

அக்பர் மிகவும் சாந்தமாகப் பீர்பலைப் பார்த்தபடியே, "முனிவர் நம்மைவிட உயர்ந்தவர்; நாம் கேவலம் பூலோகத்தின் ஒரு சிறு பகுதியைத்தான் ஆண்டு வருகிறோம். ஆனால் அவரோ ஞான உலகத்துக்கே சக்கரவர்த்தி. துறவிக்கு வேந்தன் துரும்பு. அவர் ஞானதிருஷ்டியில் தெரிவதைச் சொன்னார். இதனால் நாம் வருத்தமோ கோபமோ படக் கூடாது. எல்லாம் ஆண்டவன் சித்தம்" என்று பீர்பலைச் சமாதானப் படுத்தினார்.

இதை எல்லாம் முனிவரின் ஆசிரமத்திலிருந்து கேட்டுக்கொண் டிருந்தாள், அந்த அழகு மங்கை. தன்னுடைய அழகிய பளிங்கு விழிகளால் அக்பரை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அக்பர், முனிவர் ஷேக் ஸலீமுடன் பேசிக்கொண்டிருந்தபோதே அவரது மனமும் கண்களும் அந்த அழகியைத் தேடி ஓடின. முனிவரும் அதைக் கவனித்தும் கவனிக்காத மாதிரி இருந்துவிட்டார்.

மூவரும் இப்படிப் பேசிக் கொண்டிருந்த போது உள்ளேயிருந்து வெளியே வந்த அவள் முனிவரை வணங்கி, "சுவாமி, நான் போய் வரட்டுமா? எனக்கு உத்தரவு கொடுங்கள்" என்றாள்.

முனிவரும் புன்னகையுடன், "சாயிரா, நல்லது, நீ போய் மீண்டும் நாளைக் காலை வா"

என்று உத்தரவு கொடுத்தனுப்பினார். காட்டில் ஓடும் மானைப் போல அவள் ஓடினாள்.


அவள் ஓடும் அழகில் மனத்தைப் பறிகொடுத்த அக்பர் மிகவும் கஷ்டப்பட்டு, விழிகளை அவளிடமிருந்து நகர்த்தி முனிவரைப் பார்த்து, "சுவாமி, இந்தக் கொடிய வனத்தில் இப்படி ஒரு பெண்ணா? மிகவும் வியப்பாக இருக்கிறதே, சுவாமி. இந்தப் பெண் யார் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்றார்.

முனிவர் இலேசான புன்னகையுடன், 'அக்பர், உங்கள் பரந்த சாம்ராஜ்யத்தில் இவளும் ஒரு குடிமகளே. ஆகையால் நீர் அவசியம் இவளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். சொல்கிறேன் கேளுங்கள்:

"இவள் பெயர் சாயிரா பேகம். இவளின் பாட்டன் பெயர் மூராத். உம் பாட்டனாரான பாபரின் நம்பிக்கைக்குரிய ஜனாதிபதியாக இருந்து, பிறகு உம் தந்தை ஹூமாயூன் காலத்தில் அவருக்கும் துணையாக இருந்து, தன் மகன், அதாவது, இந்தப் பெண்ணின் தந்தை அப்துல் சலாமுடன் அன்புடன் அவரைக் காத்து வரும் நாளில், காபூலில் உம் சிறிய தந்தையரான கம்ரான் அவனைக் கொன்று விட்டான். பின்பு உன் தந்தையும் இறந்து போனவுடன் தன் மருமகளையும் பேத்தியையும் அழைத்துக்கொண்டு காபூலை விட்டு இந்தச் சிக்கிரிக்கு வந்து சேர்ந்தான் மூராத். பின்பு இந்தப் பெண்ணின் தாயாரும் காலமானாள். மூராத்தே இந்தப் பெண்ணைத் தன் கண்ணைவிடக் கருத்தாகக் காத்து வளர்த்து வந்தான். சில மாதங்களுக்கு முன்பு மூராத்தும் இறைவனடி சேர்ந்து விட்டான். மூராத் என் பக்தன். இவள் என்னைக் குழந்தையைக் கவனிப்பது போலக் கவனித்து வருகிறாள். பாவம், கள்ளம் கபடம் இல்லாத குழந்தை. சில ஆடுகளை வளர்த்து அதன் மூலம் வாழ்க்கையை நடத்துகிறாள் எல்லாம் அவன் அருள்" என்று கூறி மேலே பார்த்து ஒரு பெருமூச்சு விட்டார் ஷேக் ஸலீம்.

"சுவாமி, தங்களிடம் ஒரு விண்ணப்பம்" என்றார் அக்பர். "அக்பர், மிகப் பெரிய சாம்ராஜ்யத்தின் பாதுஷா நீங்கள். பிறர் விருப்பத்தை அறிந்து நிறைவேற்றுபவர் நீர். ஒன்றுமே இல்லாத சாதாரணப் பக்கிரி நான். என்னிடம் விண்ணப்பமா?" என்றார் முனிவர்.

"சுவாமி, தாங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. தாங்கள் தெய்வத்துக்குச் சமானம்.



தெய்வச் சந்நிதானத்தில் நின்று மனதாற நினைத்துவிட்டால் அதை மாற்றுவதும் மறைப்பதும் நல்லோர் செயல் அல்ல. மேலும் நான் ஓர் உண்மையான முஸ்லிம்" என்ற பீடிகையோடு ஆரம்பித்தார் அக்பர்.

அக்பர் என்ன கூறப் போகிறார் என்பதைப் பீர்பலாலேயே அறிய முடியவில்லை.

முனிவர் புன்முறுவல் பூத்தார். பிறகு அக்பரைப் பார்த்துக் கனிவோடு, "பாதுஷா, புரிந்துவிட்டது எனக்கு. உள்ளங்கள் ஒன்றுபட்டு விட்டன. உலகம் என்ன சொல்லுமோ என்று உள்ளத்தின் ஒரு மூலையில் ஓர் உறுத்தல் இருக்கின்றது. அது தானே அக்பர்?"

அக்பர் மௌனமாக நின்றார்.

'ஊம். சரி, நீங்கள் இன்று இரவை இங்கேயே கழித்து விடுங்கள். நாளைக் காலை எல்லாம் நன்மையாக முடியும்" என்றார் ஷேக் ஸலீம்.

நண்பர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை பூத்துக்கொண்டனர்.

சூரியனும் மேற்குத் திசையை நோக்கி ஓடி மறைந்தான். அக்பரும் பீர்பலும் முனிவரின் ஆசிரமத்திலேயே தங்கிவிட்டனர். அக்பர் இரவு முழுவதும் உறங்கவே இல்லை. சாயிரா பேகத்தை நினைத்துக்கொண்டு கற்பனைப் பூங்காவிலேயே திரிந்துகொண்டிருந்தார்.

பொழுது புலர்ந்தது. வழக்கம்போல் காலை உணவுடன் சாயிரா ஆசிரமத்துக்கு வந்தாள். என்றும் இல்லாத மகிழ்ச்சியுடன் இருந்தாள் அவள்.

முனிவர் அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்து, "சாயிரா, இனிமேல் நாளையிலிருந்து நீ இங்கு வரவேண்டிய அவசியம் இருக்காது" என்றார்.




சாயிரா திடுக்குற்றாள்.

"சுவாமி, என்ன சொல்கிறீர்கள்? அடியேன் செய்த தவறு என்ன?" என்று கண்களில் நீர் மல்க அச்சத்துடன் கேட்டாள்.

ஷேக் ஸலீம் முனிவர் புன்னகையைத் தம் இதழ்களில் இழைய விட்டார். கனிவோடு அவளைப் பார்த்து, "சாயிரா, என் அன்புப் பேத்தியே, ஆண்டவன் உனக்கு ஒரு நல்ல துணைவரை அனுப்பியிருக்கிறான். அவனை மணந்து கொண்டு இல்லறத்தை நல்லறமாக நடத்து. உம், உனக்குக் கணவராகக் கிடைத்திருப்பவர் யார் தெரியுமா?" என்று முனிவர் சொல்லிக்கொண்டிருந்த போதே அக்பரும், பீர்பலும் உள்ளே நுழைந்தார்கள்.

"சாயிரா, உன்னைத் திருமணம் செய்துகொள்ள ஆண்டவனால் அனுப்பப்பெற்ற ஆடவர் இதோ நிற்கிறாரே பாதுஷா, அக்பர். இவர்தாம் அம்மா" என்றார்.

சாயிராவுக்கு உடலெல்லாம் என்னவோ செய்தது போல் இருந்தது. தூக்கிவாரிப் போட்டது. 'சாதாரண ஏழைப் பெண்ணாகிய என்னை யா பாதுஷா மனைவி


நாவுக்கினிய
நரசுஸ்
'ஸ்பெஷல்'
காபி
இது நரசுவின் புதிய உயர்ரகத் தயாரிப்பு.
கேட்டு வாங்குங்கள்.
அருந்தி மகிழுங்கள்.
பொன்விழா கண்ட
நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007
கிளைகள் தமிழ்நாடெங்கும்
ஜீவனுள்ள
ஒரே காபி-
நரசுஸ்
ஸ்பெஷல்
"தெர்மலோ"
காபி
ADWAVE/NCC/854

யாக்கிக்கொள்ளப் போகிருர்! நம்பவே முடிய வில்லையே! நான் என்ன, கனவு காண்கிறேனு? ஆ, அப்படியே திருமணம் செய்துகொண்டு அவர் அரண்மனைக்குச் சென்ருல் அங்குள்ளவர்கள் என்னிடம் அன்பாக நடந்துகொள்வார்களா? இவள் ஓர் அநாதைப் பெண்தானே என்று அலட்சியமாக நடந்து கொள்ளமாட்டார்களா? நான் என் தாத்தாவைப் போன்று இருக்கும் முனிவர் பெருமானை எப்படி விட்டுவிட்டுச் செல்வேன்? என் அருமை அன்னை, என்னைத் தம் உயிரினும் மேலாகக் கருதிக் கண்போல் வளர்த்த என் அன்புத் தாத்தா மூராத், அவர்கள் வசித்துப் புதையுண்ட கிராமமான இந்தச் சிக்ரியைத்தான் நான் எப்படி விட்டு விட்டுப் போவேன்?'

இப்படியாகப் பலவாருகச் சிந்தித்து விழி களில் வழியும் நீருடன் முனிவரின் பாதங்களில் விழுந்துவிட்டாள் அந்த நங்கை.

முனிவர் பாசத்துடன் அவள் தலையைத் தடவினுர்.

"பெண்ணே, ஏன் இப்படிக் கலங்குகின் ருய்" என்ருர்.

"சுவாமி, அடியாள் தங்களையும், இந்த அழ கிய சிக்ரியையும் விட்டு எப்படிப் பிரிந்து வாழ்வேன்?" என்ருள்.

"சாயிரா, நானே இன்னும் சில தினங் களிலே இந்த மண்ணுலகத்தை விட்டு ஆண்ட வன் இருப்பிடம் செல்லப் போகிறேன். எப் படி உன்னைத் தனியே விட்டுச் செல்வது என்று தான் எண்ணிக்கொண்டிருந்தேன். ஆண்ட வனே நல்ல துணையாகத் தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கிருன். மண வாழ்க்கையை மங்களகரமாக நடத்து; எல்லா நலன்களும் உனக்குக் கிடைக்க இறைவன் அருள் புரிவா னுக' என்று ஆசீர்வதித்தார்.

பிறகு அக்பரைப் பார்த்து, "அக்பர், சாயிரா சிறு பெண். அவள் தாத்தா மூராத் அவளை மிகவும் செல்லமாக வளர்த்துவிட் டான். அவளைக் கடைசிவரைக்கும் கண்கலங் காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது உங்கள் கடமை" என்ருர்.

அப்போது முனிவர் ஷேக் ஸலீமின் கண்களி லிருந்தும் கண்ணீர் வழிந்தது. அக்பர் அப் போதுதான் உணர்ந்தார், என்னதான் முற்றும் துறந்த முனிவராக இருந்தாலும் பாசம் என்பது அனைவரையும் விடாது என்று. இந் தக் காட்சியைக் கண்டபோது அவரும் கண் கலங்கினுர்.

பிறகு சாயிரா ஒருவாருக மனத்தைத் தேற்றிக்கொண்டு முனிவரைப் பார்த்து, "சுவாமி, அடியாளின் விண்ணப்பத்தைத் தங்கள் சந்நிதியிலேயே தெரிவித்துக் கொள்ள லாமா?" என்ருள்.

"ஓ, தாராளமாகச் சொல், பாராளும் பாதுஷாவுக்கு மனைவியாகப் போகிற உனக்கு இல்லாத உரிமையா? அச்சம் இல்லா மல் சொல்" என்ருர்.

"சுவாமி, தாங்கள் அறியாததா? என் மூன் னேர்கள் எல்லாரும் இதே சிக்ரியிலேயே வாழ்ந்து மறைந்து போனுர்கள். அவர்கள் எல்லாரும் இங்கேயே வாழ்ந்து வருவதாக நான் இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறேன். எனவே, நான் இந்தச் சிக்ரியை விட்டு வேறு எங்கும் செல்லமாட்டேன். மேலும் அரண் மனையில் உள்ள மற்றப் பெண்களைப்பற்றி எனக்குப் பயமாக இருக்கிறது. இரண்டாவ தாக, எனக்குத் தாயாகவும், தந்தையாகவும் இருந்து உயிரினும் மேலாகக் கருதி என்னை வளர்த்த என் பாட்டனுரின் பெயரான 'மூராத்' என்பதையே என் வயிற்றில் பிறக் கும் மகனுக்கும் சூட்டவேண்டும். இந்த இரண்டு கோரிக்கைகளுக்கும் பாதுஷா சம்ம தித்தால் நான் அவரை நிக்காஹ் செய்து கொள்ளச் சம்மதிக்கிறேன்" என்ருள் சாயிரா.

இதைக் கேட்டவுடன் அக்பர் கலகலவென்று நகைத்தார்.

"பூ, இவ்வளவுதானு? நான் என்னவோ ஏதோ என்று நினைத்துவிட்டேன். உன் விருப் பப்படியே எல்லாம் நடக்கும். முனிவர் முன் நின்று சொல்கிறேன், இதே, சிக்ரியிலேயே பெரிய பெரிய கோட்டைகளையும் கொத்தளங் களையும் எழுப்பி மிகப் பிரம்மாண்டமான நகராக்கி மொகலாய சாம்ராஜ்யத்தின் தலை நகராகவே இந்நகரை மாற்றி அமைத்து விடு கிறேன். உன் வயிற்றில் பிறக்கும் ஆண்குழந் தைக்கு உன் பாட்டனுர் பெயரையே சூட்டு கிறேன், போதுமா?" என்று ஆவல் பொங்கக் கேட்டார் அக்பர்.

பிறகு, தம் கையிலிருந்து கணையாழி ஒன் றைக் கழற்றிச் சாயிரா பேகத்தின் காந்தள் விரலில் அணிவித்தார். முனிவர் ஷேக் ஸலீம் வாழ்த்தினுர்.

பீர்பல் மனம் மகிழ்ந்து நின்ருர்.

பிறகு அக்பர் சிலகாலம் சாயிரா பேகத் துடனேயே சிக்ரியிலேயே வாழ்ந்தார். பீர்பல் மட்டும் டில்லிக்குச் சென்று அரசாங்க விஷயங் களைப் பார்த்துக் கொண்டிருந்தார்,

முனிவர் ஷேக் ஸலீம் சில வாரங்களுக்குள் ளாகவே இறைவனடி சேர்ந்துவிட்டார்.

சாயிரா பேகம் கருவுற்ருள். அவள் குழந்தை பெறுவதற்குள் சிக்ரியை எப்படியும் தலைநகரமாக நிர்மாணித்துவிட வேண்டும் என்று விரும்பினுர் அக்பர்.

இப்படி அக்பர் சாயிராவுடன் இன்பமாகப் பொழுதைப் போக்குவதிலும், சிக்ரி நகர் நிர் மாண வேலைகளை நேரடியாகக் கவனிப்ப திலும் பொழுதை இன்பமாகக் கழித்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் காலை அக்பர் தங்கியிருந்த இடத்துக்கு டில்லியிலிருந்து ஒரு தூதுவன் ஓர் ஓலையைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத் தான். அக்பர் அதைப் பார்த்துத் திடுக் குற்ருர்.

சாயிரா அவர் அருகில் வந்தாள்.

"பாதுஷா, என்ன ஓலை இது?" என்று கேட்டாள்.

"சாயிரா, பீர்பல் கொடுத்து அனுப்பி யிருக்கிருர். குஜராத் மாநிலத்தில் ஒரே குழப்பமாம்; உள்நாட்டுப் போராம். நிலைமை நமக்கு மிகவும் சாதகமாக இருக்கிறதாம்; உடனே படை எடுத்துச் சென்ருல் மிக எளிதில் அந்தப் பிரதேசத்தை வென்றுவிடலாமாம்" என்ருர்.

இதைக் கேட்டதும் சாயிராவின் முகம் மாறிவிட்டது. அக்பர் அதைக் கவனித்தார்.

அப்படியே அவள் முகத்தைத் தம் பரந்த மார்பில் அணைத்துக் கொண்டு, அவள் கூந்தலைக் கோதிவிட்டார்.

"சாயிரா, என் அன்பே, போர் என்றதும் உன் முகம் ஏன் வாடிவிட்டது?'' என்றார் அக்பர்.

"பாதுஷா, நான் ஒரு வீர புருஷரின் மனைவியாயிற்றே? களம் என்றதும் கலங்குவேனா?''

"பின் ஏன் உன் முகம் மிகவும் சோர்ந்து விட்டது?''

"பாதுஷா, தாங்கள் போர் என்று கிளம்பி விட்டால் நாடு திரும்ப நெடுநாட்களாகுமே, அதுவரை தங்களைப் பிரிந்து நான் எப்படி இருப்பேன்? மேலும், தங்களுக்கு மகன் பிறக்கப் போகும் நாளும் நெருங்கி வருகிறது. அதை நினைத்துத்தான் நான் கவலைப்படுகிறேன்'' என்றாள் சாயிரா, கண்களில் நீர்மல்க.

"அழாதே, சாயிரா! உன் கலக்கத்தைப் புரிந்துகொண்டேன். குஜராத் படை எடுப்புக்குத் தோடர்மால் தலைமை தாங்கப் போகிறார். மேலும் அம்மாநில அரசன் கோழை. ஆகவே நான் போகப் போவதில்லை. பதேபுர் சிக்ரியை உன் விருப்பப்படியே பெரியதொரு நகரமாக்க வெளி மாநிலங்களிலிருந்து நிறையக் கட்டிடக் கலைஞர்கள் வந்துள்ளனர். அவர்களைக் கண்டு சிக்ரி நகர நிர்மாணம்பற்றிப் பேசவே செல்கிறேன். எனவே உன் பயத்தை விடு. கூடிய சீக்கிரம் நான் உன்னிடம் வந்து விடுவேன். நான் வரும் வரைக்கும் உன் அரண்மனைக்குக் காவலாகவும், சிக்ரி நகர நிர்மாண வேலைகளுக்குத் தலைமை அதிகாரியாகவும் பீர்பலை நியமித்திருக்கிறேன். பீர்பலுக்கும் செய்தி அனுப்பிவிட்டேன். நாளை அவர் வந்து விடுவார். நான் சென்றுவிட்டுக் கூடிய சீக்கிரம் உன்னிடம் வந்து விடுகிறேன்'' என்றார் அக்பர்.

சாயிராவிடம் விடை பெற்றுக்கொண்டு டில்லி வந்து குஜராத் படையெடுப்புச் சம்பந்தமான வேலைகளைக் கவனித்துவிட்டுச் சிக்ரியை நிர்மாணிக்கும் வேலைகளில் தீவிரம் காட்டலானார்.

நாட்கள் ஓடின. சாயிராவுக்கு உடல்நலம் இல்லை என்று செய்தி வரவே, அக்பர் சிக்ரியை நோக்கிப் பயணம் செய்யத் திட்டமிட்டார். அக்பரின் மனம் எல்லாம் சிக்ரியிலேயே இருந்தது. நகர் நிர்மாண வேலையும் பெரும் பாலும் முடிந்துவிட்டது.

அன்று காலைதான் சாயிரா ஓர் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் என்ற செய்தி வந்ததும், அக்பர் எல்லாருக்கும் பரிசுகள் பல வழங்கி, ஆண்டவனுக்குச் சிறப்புத் தொழுகையும் நடத்தினார். தொழுகை நடத்திவிட்டு வந்து கட்டிடக் கலை நிபுணர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது தான் பீர்பல் வந்து சாயிராவின் இறப்பைக் கூறினார். அக்பர் நம்பமாட்டார் என்பதற்காகவே தாமே வந்து சொன்னார் அவர்.

குழந்தை பிறந்த சில மணி நேரத்துக்கெல்லாம் அக்பரின் அன்புக்குரிய சாயிரா பேகம் தன் குழந்தையைத் தாயில்லாக் குழந்தையாக்கிவிட்டுப் பாதுஷாவும் பார்க்க முடியாத இடத்துக்குப் போய்விட்டாள்.

செய்தி தெரிந்தவுடனேயே அக்பர் பீர்பலுடன் சிக்ரிக்கு விரைந்தார். சாயிராவின் சடலத்தின்மீது விழுந்து அழுது புரண்டார். பிறகு சாயிராவை அங்கேயே புதைத்துவிட்டு அக்பர் பச்சிளங் குழந்தையைத் தூக்கிக் கொண்டு டில்லிக்குத் திரும்பினார்.

இப்படியாக அக்பர் தம் தாயாரிடத்தில் கதையைக் கூறிவிட்டு, "கேட்டீர்களா அம்மா, இந்தக் குழந்தையின் கதையை?'' என்று கூறி நிறுத்தினார் அக்பர்.

அமீதா ஓவென்று கதறிவிட்டாள். குழந்தையைத் தன் நெஞ்சோடு அப்படியே அணைத்துக் கொண்டாள். பிறகு அக்பரைப் பார்த்து, "மகனே, இதை எல்லாம் நீ ஏன் என்னிடம் கூடச் சொல்லவில்லை?'' என்றாள்.

அக்பர் விழிகளிலிருந்து வழியும் நீரைத் துடைத்துக் கொண்டே, "அம்மா, இந்தக் கதை இந்த நாட்டில் என்னையும், பீர்பலையும் தவிர வேறு யாருக்குமே தெரியாது'' என்றார்.

அக்பரின் முகம் உடனே மாறியது. வெறி பிடித்தவர்போல் கத்தினார். "அம்மா, நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். இனி நான் சிக்ரிபக்கமே போகமாட்டேன். யாருக்காக ஒரு புதிய நகரையே நிர்மாணித்தேனோ, அவளே போய்விட்ட பிறகு அந்த நகர்தான் ஏன்? நான்தான் ஏன் அங்கே போக வேண்டும்?'' என்று கூறிவிட்டு, "யார் அங்கே?'' என்றார்.

ஒரு சேவகன் வந்து நின்றான்.

"பீர்பலை நான் உடனே வரச் சொன்னதாகச் சொல்'' என்றார்.

சற்று நேரத்துக்கெல்லாம் பீர்பல் வந்து நின்றார்.

"பாதுஷா, அழைத்தீர்களா?'' என்றார்.

"பீர்பல், உடனே நீங்கள் சிக்ரிக்குப் போய் எல்லா வேலைகளையும் நிறுத்தச் சொல்லுங்கள். கட்டிடக்கலை நிபுணர்களுக்கு எல்லாம் அவர்களுக்கு உரிய பணத்தைக் கணக்குத் தீர்த்துக் கொடுத்துவிட்டு, அவரவர்கள் ஊர்களுக்குத் திரும்பச் சொல்லுங்கள், வேண்டும்போது நான் பிறகு அழைப்பதாகச் சொல்லுங்கள்'' என்றார் அக்பர்.

பீர்பலுக்கு ஒன்றுமே விளங்கவில்லை; அப்படியே அசந்துபோய் நின்று விட்டார்.

"பாதுஷா, தாங்கள்தாம் பேசுகிறீர்களா? நகர் நிர்மாண வேலை முக்கால்வாசிக்குமேல் முடிந்துவிட்டது. எவ்வளவோ பணம் செலவழித்து விட்டோம். இப்போது போய் நிறுத்தச் சொல்கிறீர்களே?'' என்றார் பீர்பல், அடக்கத்துடன்.

"ஆம், பீர்பல்! தெரிந்துதான் சொல்கிறேன். என் சாயிராவுக்காக நான் உண்டாக்க எண்ணிய நகரம் அது; அவளே போய்விட்ட பிறகு அந்நகரம் எதற்கு? நானும் இனிமேல் சிக்ரிக்குப் போகமாட்டேன். போங்கள் பீர்பல், போங்கள்! மேலே என்னிடம் ஒன்றும் கேட்காதீர்கள்'' என்று சொல்லிவிட்டு அக்பர் அடியற்ற மரம் விழுவதுபோல் தம் தாயின் மடியில் விழுந்தார்.

அமீதா தன் பேரக் குழந்தையைப் பார்த்தபடியே தன் மகன் அக்பரின் தலையை அன்புடனும், இரக்கத்துடனும் கோதி விட்டாள்.

*



ரஃபியாவின் சேவல்

சேஷநாராயணா

பொழுது விடிந்ததோ இல்லையோ இதே பல்லவி:

"என்ன சார்? நீங்க எழுத்தாளராக இருந்து இப்படிச் செய்யலாமா?"

விஷயம் இதுதான்: நான் குடியிருப்பது ஓர் ஒண்டுக்குடி. ஒரு பகுதியில் வீட்டுச் சொந்தக்காரர்; மற்றொரு பகுதியில் நான். கிட்டத்தட்ட அந்த வீட்டுக்கு நான் குடிபோய்ப் பத்து வருஷங்கள் ஆகிவிட்டன.

இப்பொழுது அவருக்கே இந்தப் பகுதியும் வேண்டுமாம்: காரணம், அவர் மாப்பிள்ளை டில்லியிலிருந்தவன், மாற்றலாகி, இங்கேயே வந்திருக்கிறான்.

"வந்தால் என்ன? நாம் என்ன செய்றது? முடியாது என்று சொல்லுங்களேன்!" என்றாள் என் மனைவி, கண்டிப்பாய்.

அப்படிப் பேச முடியுமா? நியாயமா? அதிக வாடகை வேண்டும் என்ற ஆசையால் வீட்டுக்காரன் இப்படித் தில்லுமுல்லு செய்தால், நானும் அடம் பிடிக்கலாம். எப்படியும் சட்டம் நம் பக்கந்தான் இருக்கிறது, உழுபவனுக்கு நிலம், இருப்பவனுக்கு வீடு என்று.

ஆனால் வீட்டுக்காரர் தம் மகளுக்காகக் காலி செய்யுங்கள் என்கிறார். அவர் கெஞ்சலோ! "என்ன சார்? நீங்கள் எழுத்தாளராக இருந்து இப்படிச் செய்யலாமா!"

எழுத்தாளன் ஒழுங்கான முறையில் நடப்பவன் என்பது அவர் கருத்து. அதை நான் பாழடிக்கலாமா!

ஆனால் நான் என்ன செய்வது? லண்டன், நியூயார்க் நகரங்களிலாவது சீக்கிரமாக ஒரு வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து விடலாம். ஆனால் இந்தப் பெங்களூர் நகரில் முடியாதே! தேடித் தேடி அலைந்து அலைந்து, நானும் சோர்வடைந்திருக்கிறேன். கடைசியாக எனக்கு ஒரு வீடு கிடைத்துவிட்டது.

வீடு பெங்களூரிலேயேதான் இருந்தது. ஆனால் அது இருக்கிற நிலையைப் பார்த்தால் எங்கேயோ நாகாலாந்தில் இருக்கிற மாதிரி இருந்தது. ஆம். நகரத்தின் தெற்கு எல்லையில், கார்ப்பரேஷனின் கடைசி எல்லையாக, ஒன்பதாம் பிளாக்குக்கும் மேலே, ராகிக் குன்றையும் தாண்டி இருந்தது இந்த வீடு.

இந்தப் பகுதியில் வேறு குடியிருப்பு வீடுகளே இல்லை; அங்கொன்றும் இங்கொன்று மாகத் தலைதூக்கிக் கொண்டிருக்கின்றன சில வீடுகள். வீட்டுக்கு வலப்புறம் காலி மனை; இடப்புறம் ஒரு முஸ்லீம் வீடு.

வீட்டுக்கு எதிர் வரிசையில் சாலைக்குச் சற்றுப் பின்னால் தள்ளி, வரிசையாக இரண்டு மூன்று கடைகள்: சலூன், லாண்டரி, ஒரு சின்ன மளிகைக்கடை. ஒரு சின்ன ஹோட்டலும் இருந்தது, உடுப்பி சதானந்த் கபே என்ற பெயர்ப் பலகையுடன்.

என் மனைவி இந்த வீட்டைப் பார்த்து அழுதுவிட்டாள்: "எப்படி இதில் குடியிருப்பது?"

ஆம். அவள் கேள்வி நியாயமானதுதான். பக்கத்தில் வீடுகளே இல்லை. இப்போதுதான் குன்றை வெட்டி, வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். பக்கத்தில் இருக்கிற ஒரு வீடும் முஸ்லீமுடையது. அவர்கள் நம் கூடச் சரியாகப் பழகமாட்டார்களே! முகத்திரை அணிந்து தலையை வெளியே நீட்ட மாட்டார்களே!

ஆண்கள் என்னவோ, வேலை, அது இது என்று கிளம்பிவிடுகிறார்கள். இரவு வந்து சாப்பிட்டுப் படுத்தால் தீர்ந்தது. ஆனால் எப்போதும் வீட்டுக்குள்ளேயே இருக்கும் பெண்ணுக்குப் பேசப் பழகத் துணை வேண்டாமா?

நான் என் மனைவியைத் தேற்றினேன்:

"விடு, ஹேமா: நாம் என்ன இந்த வீட்டில் ஆணி அடிச்சுக்கிட்டு இருக்கப் போறோமா? வேறு வீடு பார்த்துக்கொண்டு காலி செய்தால் போச்சு."

அந்த வீட்டிலிருந்து இந்த வீட்டுக்குச் சாமான்களைக் கொண்டுவந்தோம்.

நாங்கள் இந்தப் புது வீட்டுக்குக் குடிவந்து இன்னும் சரியாக எட்டு நாட்கள்கூட ஆகவில்லை. அதற்குள்ளே என் மனைவி பக்கத்து வீட்டாரைப் பரிசயம் செய்துகொண்டு, அவர்களின் குறை நிறை எல்லாம் தெரிந்து கொண்டுவிட்டாள்.

பெண்களே இப்படித்தான். அடுத்த வீட்டாருடன் வம்பளந்து அவர்களின் குற்றங் குறைகளைச் சீக்கிரத்தில் கண்டுபிடித்து விடுகிறார்கள்.

பக்கத்து வீட்டு யசமானியின் பெயர் பாதிமா. கணவன் அகமத்கான். காட்டு

இலாக்காவில் ரேஞ்சராக இருந்தபோது இந்த வீட்டைக் கட்டினார்களாம். அப்பொழுது இங்கே ஒரு வீடுகூட இருக்கவில்லையாம்.

இது மயான பூமி. பாதிமா வீடுதான் இந்தப் பிளாக்குக்கு முதல் வீடு. அகமத்கான் ஆறு வருஷங்களுக்கு முன்பு இறந்துவிட்டான்.

பாதிமாவுக்கு ஆறு பிள்ளைகள். ஐந்து பேர்களுக்குக் கல்யாணமாகிவிட்டது. பெரியவன் கோலாரில் இருக்கிறான். நான்கு பேர் இங்கேயே இருக்கிறார்கள். எல்லாரும் தனிக் குடித்தனம். தாய், ஆறாவது மகனுடன் வசிக்கிறாள். அவனுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை.

இந்தப் பெரிய வீட்டை இத்தனை கூறுகளாகப் பிரித்திருக்கிறார்களே! ஐந்து பேர்களுக்குப் பங்கு போட்டது அல்லாமல், மேலும் இரண்டு சிறு அறைகளைக் கட்டி வாடகைக்கும் கொடுத்திருக்கிறார்கள். எல்லாம் பறவைக் கூண்டுகளே. இந்த வாடகையெல்லாம் பாதிமாவைச் சேர்ந்தது.

மருமக்கள் ஐந்து பேரில், மூன்று பேர் மாமியாருடன் பேசுவதில்லை. ஒருத்தி தாமரை இலைத் தண்ணீராக மாமியாருடன் பழகுகிறாள். மற்றொருத்தி ஆறு மாதம் இங்கிருந்தால், ஆறு மாதம் பிறந்தகத்துக்குச் சென்றுவிடுகிறாள்.

ஐந்து பேர்களில் மூன்று கோஷா; எப்போதும் முகத்திரை அணிந்துகொண்டே இருப்பார்கள். பிறந்தகத்தில் ஆறு மாதம் இருப்பவள் முகத்திரை அணிவதில்லை. ஆனால் அவளுக்குத் தமிழ் தெரியாது. உர்து மட்டும் பேசுவாள். மற்றொருத்திக்குத் தமிழ் பேசத் தெரியும். ஆனால் அவள் மகா இறுமாப்புக்காரி. மாமியாரையே, "சும்மா கெடந்து தொலை" என்று அதட்டுவாள்.

பாதிமாவுக்கு வயசாகியிருந்தாலும் அழகாகத் தோன்றுகிறாள். இளம்பிராயத்தில் அவள் எப்படி இருந்திருப்பாளோ!

பாதிமாவை என் மனைவி, "பாட்டி" என்றே கூப்பிடுகிறாள். பாட்டி மிகவும் நல்லவள் என்கிறாள். பிள்ளைகள் யாரும் சரியாகத் தன்னைக் கவனித்துக் கொள்வதில்லை என்று குறைப்பட்டுக்கொள்ளும் பாட்டியைச் சில சமயம் தேற்றுகிறாள்.

"விடுங்கள், பாட்டி. கடைசி மகனாவது உங்களைக் கண்டால் பிராணனை விடுகிறானே! அவனுக்குச் சீக்கிரம் கல்யாணம் செய்துவிடுங்கள். கடைசி மருமகள் உங்களை நன்றாகக் கவனித்துக் கொள்வாள்."

"ஐயோ! வரும் பெண் ஆற்றுத் தண்ணீரா சைதிகி அம்மா? இனி வர வந்து என்ன செய்யுமோ? மூன்றும் மருமகள் ஷாயரப்பா வரும்போது எப்படி இருந்தாள் தெரியுமா! போதாதற்கு அவள் என் அண்ணன் மகளே. ஹூம்! இனி எனக்கு என்னம்மா ஆகவேண்டும்! அல்லா எப்படிச் செய்கிறாரோ அப்படியே நடக்கட்டும்."

தமிழ் பேசுபவள், 'சும்மா கெடந்து தொலை' என்று மாமியாரைத் திட்டுபவள் தான் ஷாயரப்பா. அவள் மூன்றாவது மகன் ஹசனின் மனைவி.

பாதிமாப் பாட்டி இப்போது எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருகிறாள். என் மனைவிக்குக் கூடமாட உதவியும் செய்கிறாள். வேலை செய்துகொண்டே மருமகள்மாரைக் கண்டபடி திட்டுகிறாள்.

என் மனைவியும் குழந்தைகளும் ஏதோ கல்யாணம் என்று கிராமத்துக்குச் சென்றிருந்



தார்கள். வீட்டில் நான் மட்டுமே இருந்தேன்.

ஒரு ஞாயிறு மாலை புத்தகத்தைப் பிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

அப்போது பாதிமாப் பாட்டி ஒரு தக்குள்

மீது துண்டை மூடிக்கொண்டு என் வீட்டுப் பக்கம் வந்தாள். வந்து ஜன்னல் அருகில் நின்றாள்.

நான் நாற்காலியை விட்டு எழுந்து, "என்ன பாட்டி?" என்றேன்.

"ஜப்பாருக்கு இன்று நிக்கா. எடுத்துக் குங்கோ சாமீ" என்று கூறித் தட்டை முன்னால் நீட்டினாள்.

ஓ! அதுதான் மூன்று நாட்களாகத் தடபுடலோ? பாட்டியின் கடைசி மகன் ஜப்பாருக்குக் கல்யாணம்.

"ரொம்பச் சந்தோஷம்" என்றபடி தட்டை வாங்கிக்கொண்டேன்.

நிறையப் பாதாம் கேக்கும் கற்கண்டும் இருந்தன. எல்லாவற்றையும் உள்ளே எடுத்து வைத்துவிட்டு, "கடவுள் அருளில் எல்லாம் நன்றாக நடக்கட்டும்" என்று கூறியபடி காலித் தட்டைப் பாட்டியிடம் கொடுத்தேன்.

இந்தச் சம்பவம் நடந்து மூன்று நாட்கள் சென்றுவிட்டன.

அன்று காலை, என் மனைவி நட்டிருந்த ரோஜா மல்லிகைச் செடிகள் வாடிப் போகின்றனவே என்று அவற்றுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்தேன். அப்பொழுது பாட்டி வீட்டிலிருந்து இறங்கி ஒரு பெண் என் வீட்டுப் பக்கம் வந்தாள்.

நான் அந்தப் பெண்ணையே பார்த்தேன். மிக்க அழகி. ஒருவேளை இவள்தான் ஜப்பாரின் மனைவியோ? மஞ்சுளா முகம். கல்பனா குலுக்கல். சரோஜாதேவி நடை. குலுங்கிக் குலுங்கி வந்த அந்தப் பெண் என்னைப் பார்த்ததும் சரக்கென்று உள்ளே சென்று விட்டாள்.



நல்ல வேளை! கோஷா அல்ல. 'இவளுக்குத் தமிழ் தெரியுமோ தெரியாதோ? என் மனைவியுடன் அரட்டையடிக்க வந்தாளோ என்னவோ' என்று எண்ணியபடி செடிகளுக்கு நீர் பாய்ச்சி முடித்தேன்.

மேலும் நான்கு நாட்கள் சென்றன.

குழந்தைகளுடன் மனைவி வந்துவிட்டாள். வந்தாளோ இல்லையோ, பாட்டியின் இந்தக் கடைசி மருமகளைப் பற்றிச் சுவையான செய்திகளைக் கூறினாள்.

சினிமா நடிகையைப் போல் குலுக்கும் இந்த அழகியின் பெயர் ரஃபியா. இவளுக்குத் தமிழ் தெரியும். பத்தாவது வரையில் படித்திருக்கிறாள். நம் வீட்டிலிருந்து தமிழ் மாத, வார இதழ்களைப் படிக்க எடுத்துச் சென்றிருக்கிறாள். நம் பெண்களைப் போலவே பேசுகிறாள்.

ஆனால், அப்பப்பா, மிகவும் நாகரிகம்! ஒரு நாளைக்கு மூன்று தடவை சேலையை மாற்றுகிறாள். நான்கு தடவை பவுடர் பூசுகிறாள். கையில்லா ரவிக்கை போடுகிறாள். புடைவைக்கு ரவிக்கை பொருத்தமாக இருக்கும் முறையில் தான் அலங்காரம்.

என்ன கிரகசாரமோ பாதிமாப் பாட்டிக்கு? அவள் ஒரு நாள் ரஃபியாவுடனும் சண்டை போட்டுக்கொண்டு விட்டாள். ஆனால் இது வேறுவிதமான சண்டை. மற்ற மருமகள்களிடம் போடும் சண்டை மாதிரி அல்ல.

ரஃபியா வழக்கம்போல் வீட்டுக்கு விலக்கு ஆகவில்லை. நான்கு நாட்கள் பார்த்தாள். எட்டு நாட்களும் முடிந்துவிட்டன.

பிறகு?

கணவனை அழைத்துக்கொண்டு போனாள். ஊசி போட்டுக்கொண்டோ மாத்திரையை விழுங்கியோ இன்று மாத லீவு எடுத்திருக்கிறாள்.

பாதிமாப் பாட்டிக்கு இந்தச் செய்கையெல்லாம் பிடிக்காது. "அல்லாவின் கட்டளை. இப்படி ஏன் செய்துகொள்ள வேண்டும்?" என்பது அவள் வருத்தம்.

என் மனைவி பாட்டியைச் சமாதானப்படுத்தினாள். "விடுங்கள் பாட்டி! இதென்ன விஷயம் என்று பெரிசு பண்ணுகிறீர்கள்! சின்ன வயசு. இப்போதே குழந்தை குட்டி வேணும் என்று நினைத்திருக்கலாம்."

"இந்த வயசிலேயே எல்லாம் முடிந்து போகணும் அம்மா. இப்படியெல்லாம் செய்துகொண்டால் உடம்பு என்ன ஆவுறது? புத்தி கெட்ட கழுதை!"

"என்னமோ ஒரு தடவை இப்படி ஆச்சு. எப்போதும் இப்படியே இருக்குமா? சும்மா இருங்கள். கடைசி மகனின் பேரனையோ பேத்தியையோ சீக்கிரமாகவே எடுத்துக் கொஞ்சி...."

"ஐயோ! இது ஒரு சாதி மாடு அம்மா. குழந்தைகளைக் கண்டாலே பிடிக்காது. பூனை, நாய்க் குட்டிகளை எடுத்துக் கொஞ்சுது."

நாங்கள் இந்த விஷயமாகச் சர்ச்சை செய்தோம்.

"அவளுக்குக் குழந்தைகளைக் கண்டாலேயே பிடிக்கிறதில்லையாம். யார் குழந்தையையாவது அவள் எடுத்துத் தூக்கிக்கொள்வதைப் பார்த்திருக்கிறீர்களா? என்னவோ இது ஒரு விசித்திரம். பாட்டி சொல்வதே சரியோ என்னமோ?"

உண்மை. பாதிமாப் பாட்டி வீட்டில் சுமார் இரண்டு மூன்று டஜன் குழந்தைகள் உள்ளன. அந்த மருமகள் குழந்தை நான்கு. இந்த மருமகளுடையவை மூன்று என்று கோழிக் குஞ்சுகளைப்போல அவை எப்போதும் சத்தம் செய்துகொண்டே இருக்கின்றன.

நான் பார்த்த அளவில், இந்த அழகி ரஃபியா எந்தக் குழந்தையையும் எடுத்துக் கொஞ்சினதாகத் தெரியவில்லை. இதென்ன விசித்திரம்? பாதிமாப் பாட்டி சொல்லுவது போல இவள் குழந்தைத் துவேஷியா என்ன?

இருக்காது. எந்தப் பெண்ணும் குழந்தைகளை விரும்பவே செய்வாள். எந்தப் பெண்ணுக்கும் அந்தரங்கத்தில் இந்த ஆசை இருக்கும்.

ஏதோ கல்யாணமான புதிதில், இந்தக் காலத்துப் நாகரிகப் பெண்களில் சிலர், சில நாட்களாவது உல்லாசமாக இருக்கலாமே என்று குழந்தை பெறுவதை விரும்புவதில்லை. பாதிமா இந்த அற்பவிஷயத்தைப் பெரிதாக எடுத்துக் காட்டுகிறாள்.

ரஃபியா பிறந்தகத்திலிருந்து வரும்போதே இரண்டு நாய்க் குட்டிகளைக் கொண்டுவந்திருந்தாள். அவை அழகானவை.

அந்தக் குட்டிகளுடன் ரஃபியா எப்போதும் விளையாடிக்கொண்டே இருப்பாள். "ஆவ்... ஆவ்... ஆவ்" என்பாள். நாய்க்குட்டிகளுடன் கொஞ்சும் அவள், தனக்குக் குழந்தை வேண்டாம் என்று சொல்லுவாளா?

இந்தப் பாட்டி பழைய காலத்தவள். நெடுக மக்களைப் பெற்றுக்கொண்டே வந்தவளுக்கு இந்தக் காலத்துப் பெண்களின் மனசு எப்படித் தெரியும்?

ரஃபியா தன் உறவினர் குழந்தைகளைத் தூக்கிக் கொஞ்சாமல் இருப்பதற்கு வேறு காரணங்களும் இருக்கலாம். அவை அழுக்காக, மூக்கில் நீர்வழிய நிற்கின்றன. அவளோ மகா அழகி; அலங்கார ஆசை கொண்டவள்! கணவனுடன்கூட அளவோடுதான் நெருங்குவாள். இந்தக் காரணத்தினால் அந்தக் குழந்தைகள் அவளுக்குப் பிடிக்காமல் இருக்கலாம்.

இப்படி நாங்கள் ரஃபியாவைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோதே, மறுபடியும் அந்த வீட்டில் உரத்த பேச்சுக் குரல் கேட்டது.

இந்தத் தடவை ரஃபியா அஜாக்கிரதையாக இருந்துவிட்டாளாம். வீட்டுக்கு விலக்காகி ஐம்பது நாட்களுக்குமேல் ஆகிவிட்டது. டாக்டரிடம் போய்க் கேட்டதில், "மிகவும் சிரமம் அம்மா. இருநூறு ரூபாய்க்குமேல் செலவாகும்" என்றாராம். அழுது அடம் பிடித்து, ரஃபியா கணவனைத் தன் பக்கம் இழுத்திருக்கிறாள்.

பாதிமாப் பாட்டி இவற்றையெல்லாம் பார்த்து எப்படிச் சகித்துக்கொள்வாள்!

"நம்ப ஜப்பாருக்கு அறிவு எங்கே போயிடுச்சு? மனைவி சொல்படி தாளம் போடுகிறானே!"

உண்மை. இந்த ஜப்பார் அறிவு கெட்டவன் தான். மனைவி தகாத காரியத்தைச் செய்யச் சொன்னாலும் இவன் தலையை ஆட்டுவதா! முடியாது என்று சொல்ல வேண்டாமா! ஐயோ, இந்தக் காலத்துப் பையன்கள்தாம் எத்தனை மோசம்! அழகான மனைவி கிடைத்து விட்டால் குரங்கு ஆட்டம் ஆடுகிறார்களே!

ரஃபியா இயல்யான நிலைக்கு வந்த பிறகு, என் வீட்டுக்கு ஒரு நாள் வந்ததும், என் மனைவி கேட்டாள்:

"ஏன் ரஃபியா, இப்படிச் செய்து கொள்கிறாய்? குழந்தைதான் ஒன்று பிறக்கட்டுமே!"

ரஃபியா கோபத்துடன் கூச்சல் போட்டாள்:

"அந்தக் கிழவிக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. வாய்க்கு வந்தபடி உளர்றது. எனக்குக் காய்ச்சல்; அதற்காக டாக்டரிடம் சென்று ஊசி போட்டுக் கொண்டேன்" என்று கூறி, மாமியாரை ஒரு பாட்டம் திட்டித் தீர்த்தாள்.

மேலும் சில மாதங்கள் சென்றன. அன்று நான் அலுவலகத்துக்குப் போகவில்லை. என்னவோ வேலை என்று லீவு எழுதிப் போட்டுவிட்டு வீட்டிலேயே இருந்தேன். மனைவி கொல்லையில் துணிகளைத் துவைத்துக்கொண்டிருந்தாள். பொழுது போகாமல் எழுந்து வாசலில் வந்து நின்றேன்.

அப்போது ரஃபியா வேகமாகத் தன் வீட்டிலிருந்து வெளியே வந்தாள். வயிற்றைப் பிடித்துக்கொண்டு வாந்தி எடுத்தாள். உடனே உள்ளே சென்றுவிட்டாள்.

இரண்டு மூன்று நாட்களாக ரஃபியாவை நான் பார்க்கவில்லை. பாவம், உடம்பு சரியில்லை போலிருக்கிறது என்று எண்ணினேன். திடீரென்று எனக்கு அந்தச் சேவலின் நினைவு வந்தது.

இந்த வீட்டுக்கு நாங்கள் குடிவந்தபோது, என் மனைவி, 'எப்படி இந்த வீட்டில் இருப்பது?' என்று பயப்பட்டாள் அல்லவா?

இப்போது அந்தப் பயமெல்லாம் போய் விட்டது.

பாட்டி மிகவும் சகஜமாக என் மனைவியுடன் பழகினாள். எப்போதும் அவள் இங்கேயே இருப்பாள். ரஃபியாவும் அடிக்கடி வருவாள். அவள் செய்யாத சினிமா விமரிசனமே இல்லை. பெரிய மருமக்கள் மூன்று பேரும் எங்கள் வீட்டுக்கு வருவதில்லை. ஆனால் கோஷா அணிந்தே காம்பவுண்டுச் சுவர் அருகில் நின்று மணிக்கணக்கில் என் மனைவியுடன் பேசுவார்கள். "கழுதை, நாய்" என்று மாமியாரைத் திட்டுவார்கள். மொத்தத்தில் பக்கத்து வீட்டினருடன் நாங்கள் நன்றாகப் பழகிவிட்டோம்.

ஆனால் ஒரு தொல்லை. அது இந்தக் கோழிகளால் ஏற்பட்டது. கோழிகளும் குஞ்சுகளும் கூட்டமாக வந்து எங்கள் வீட்டினுள்ளும் திரிகின்றன; வீட்டை அசுத்தம் செய்கின்றன.

அவற்றில் ஒரு சேவல் இருக்கிறது. அது மிகவும் பொல்லாதது. 'யாருக்கும் நான் பயப்படமாட்டேன்' என்பதுபோல், கழுத்தைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறது, துள்ளுகிறது. விர்ரென்று பறந்து எங்கள் வீட்டு வாசலுக்கு வந்துவிடுகிறது. காம்பவுண்டுச் சுவரின் மீது நின்று கொண்டையை ஆட்டிக் கொண்டு கொக்கரக்கோ என்று வெகு தீர்க்கமாக ராகத்தை இழுக்கிறது.

இன்று அந்தச் சேவல் என் பார்வையில் படவில்லை. ஒரு வேளை ரஃபியா இரவு அதை அடித்திருக்கலாம். பிரியாணியோ கறியோ செய்திருக்கலாம். அஜீர்ணம் ஆகும்படியாகச் சாப்பிட்டிருப்பாள். அதனால்தான் அவள் வாந்தியெடுத்துவிட்டு இப்போது உள்ளே சென்றிருக்கிறாளோ!

இந்த எண்ணம் உதிக்கவே எனக்கு ஏனோ சிரிப்பு வந்துவிட்டது. களுக் என்று சிரித்து விட்டேன்.

அப்போது துணிகளைக் காயப் போட வெளியில் வந்த என் மனைவி என்னைப் பார்த்துக் கேட்டாள்.

"என்ன இது, நீங்களே சிரித்துக்கொண்டிருக்கிறீர்களே?"

"அந்த ரஃபியா ருசியாயிருக்கிறது என்று கழுத்து வரைக்கும் பிரியாணி சாப்பிட்டாள் போல இருக்கிறது. அதனால் தான் இப்போது வாந்தியெடுத்துவிட்டு உள்ளே சென்றிருக்கிறாள்."

குருவும் சிஷ்யரும்

கலைமகள் ஜூலை இதழில் வெளியான "செங்கண்மால்தான் கொண்டு போனான்" என்ற கதையினைப் படித்து ரசித்தேன். மற்றத் தமிழ்ப் பத்திரிகைகள் எதுவும் ஸ்ரீவைஷ்ணவ சமயத்தைப்பற்றி வெளியிடாத நிலையில் அத்தி பூத்தாற்போல் இம்மாதிரி கதையினைத் தெரிந்தெடுத்து வெளியிட்டமைக்கு நன்றி.

அந்தக் கதையில் உள்ள ஒரு பிழையை எடுத்துக் காட்டுவது இவ்விடம் மிக அவசியமாகிறது. வேதாந்த தேசிகருடைய குருவான அப்புள்ளார் என்ற ராமாநுஜர் (விசிஷ்டாத்வைத ஸ்தாபகர்) பற்றி வடகலையார்கள் ஸ்மரிக்கிறார்கள் என்பது மிகவும் சரியானதே. ஆனால் அடுத்தபடியாக மணவாள மாமுனிகள் எனும் ஸ்ரீசைலேசர் பற்றித் தென்கலையார்கள் தியானிக்கின்றனர் என்பது தவறு. ஸ்ரீசைலேசர் என்பவர் ஆசாரியர். மணவாள மாமுனிகள் அவரது சிஷ்யர். ஆதலாலேயே தென்கலையாராகிய நாங்கள், அந்தப் பரமாசாரியாரான ஸ்ரீசைலேசர் எனும் திருவாய்மொழிப்பிள்ளையின் (திருமலை ஆழ்வார் என்பவரும் இவரே) தயைக்குப் பாத்திரரான மாமுனிகளைத் தியானித்தே கைங்கர்யங்களை ஆரம்பிக்கின்றோம்; முடிக்கின்றோம்.

நல்ல கதையாக எழுதினமைக்கு ஆசிரியைக்கும் வெளியிட்டமைக்குத் தங்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

தி. அ. பாஷ்யம், சென்னை-1

(பலர் இந்தப் பிழையைச் சுட்டிக் காட்டி எழுதியிருக்கிறார்கள். மணவாள மாமுனிகள் குழு என்பது அவசரத்தில் விட்டுப் போனதாகக் கதையை எழுதியவர் எழுதியிருக்கிறார்.—ஆர்.)

"ஐயோ அது! கோழிக்குருமா சாப்பிட்டதால் அல்ல.." என்று கூறியவள், அருகில் வந்து, "அவளுக்கு ரெண்டு மாசம் ஆகியிருக்கிறது. குளிக்கவில்லை, மசக்கை. அதனால்தான் வாந்தி எடுத்திருக்கிறாள்" என்றாள்.

"ஏன்? இந்தத் தடவை டாக்டர் வீட்டுக்குப் போகவில்லையோ?"

"ஆமாம். நீங்கள் ஒருத்தர்! எப்போதும் அவள் டாக்டர் வீட்டுக்கே போவாளா? என்னவோ சின்ன வயசு. சில தடவை அப்படி ஆச்சு. அவ்வளவுதான்."

அந்தச் சமயத்தில் கொக்கரக்கோ என்ற சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். அதே சேவல்தான். காலையிலிருந்து இது எங்கே போயிருந்தது? கழுத்தை அப்படியும் இப்படியும் ஆட்டிக்கொண்டு மீண்டும் தீர்க்கமாகக் கூவியது.


"கொக்கரக்கோ. . கொக்கரக்கோ."

அந்தச் சேவலைப் பார்த்து எனக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. சிரித்துக் கொண்டே நான் சொன்னேன்.

"கடைசியாக ரஃபியாவின் சேவலுக்கே வெற்றி."

"எப்போதும் சேவல்களே வெற்றி பெறுகின்றன" என்று என் மனைவி சொல்லிச் சிரித்துக்கொண்டே உள்ளே சென்றுவிட்டாள். *

மூப்பால் அழியாது



என்றோ ஒருநாள் சிறுபோதில்
எதிரே எதிரே நின்றிருந்தோம்;
ஒன்றா இரண்டா? பலநாட்கள்
உயிருள் உருகிக் கலந்திருந்தோம்;
நின்றாய் நினைவுப் பெட்டகத்துள்
நிலைத்தாய்; நினைவால் வருடுகிறேன்.
நன்றாய் உருவம் தோன்றுதடி!
நினைவில் சுடரும் நன்முத்தாய்.

இன்றோ நானோர் படுகிழவன்;
இருமிச் சுருங்கும் கண்வளையம்;
என்றால் என்ன? மனப்புலனில்
எழுந்தே நிற்பாய், பேரழகாய்;
அன்றே பதிந்த உன்னிளமை;
அழகு முகமோ மூப்பின்றி
நின்றே மனத்துள் நிலைத்திருக்கும்;
நீளும் வாழ்வாய் மலைத்திருக்கும்.

என்றன் மனத்துள் இளமையுரு
என்றும் மூப்பை அடையாதே!
உன்றன் நிலையோ உன்னழகை
உரித்துப் பிரிந்த பேத்திகளாய்
நின்றே சிமிட்டும் உன்னிளமை
நிமிர்ந்த முகமாய் என்நெஞ்சுள்
என்றும் நிலைக்கும்! அவ்வுருவோ
எய்தும் மூப்பால் அழியாது!

"மஹி"



களிலும் ஒரு பெரிய கோவில் இருக்கும். மற்றவை எல்லாம் சின்னக் கோயில்களாகத்தான் இருக்கும். ஆனால் காஞ்சி என்று எடுத்துக்கொண்டால் ஒரு கோயிலைப் பார்த்தாற் போல எல்லாக் கோயில்களும் பெரிய பெரிய கோயிலாக அமைந்திருக்கின்றன. அந்த இடத்திற்கே புண்ணியகோடி என்று பெயர்.



அதுமாதிரி குருக்ஷேத்திரத்தில் எந்தக் காரியம் செய்தாலும், யுத்தம் பண்ணினாலும் கூடத் தர்மமாக விளையும். அதனால் அதைத் தர்மக்ஷேத்திரம் என்று சொல்வார்கள். அதனால் ஏதாவது பண்ண வேண்டுமென்றாலும் அந்த இடத்திலே, குருக்ஷேத்திரத்திலே போய்ச் செய்யவேண்டும் என்று சொல்லுவார்கள், இப்போதுகூட நம் வீட்டிலே வயசானவர்கள் யாராவது இருந்தால் சொல்லுவார்கள். "அவன் என்னடா, அங்கே போய் உட்கார்ந்திருக்கிறான்? அது என்ன குருக்ஷேத்திரமோ?" என்று. குருக்ஷேத்திரத்தில் ஒரு காரியம் செய்தால் அது என்ன காரியமாக இருந்தாலும் ஒன்றுக்கு நூறாகப் புண்ணியம் விளையும் என்று சொல்வார்கள். 'அப்படிப்பட்ட தர்ம க்ஷேத்திரமான குருக்ஷேத்திரத்தில் யுத்தம் பண்ணுவதற்காக என்னைச் சேர்ந்தவர்களும், என் தம்பி பாண்டுவைச் சேர்ந்தவர்களும், (ஸமவேதா:)சேர்ந்து இருக்கிறார்களே, அவர்கள் என்ன பண்ணினார்கள்?' என்று திருதராஷ்டிரர் ஸஞ்ஜயனைப் பார்த்துக் கேட்கிறார்.

தர்ம க்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ:
மாமகா: பாண்டவாச்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய

என்ற இந்தச் சுலோகத்திற்குச் சகஜமாக அர்த்தம் சொல்வது உண்டு. உடனே ஸஞ்ஜயன் சொல்கிறான்:

புஸ்தகத்தினுடைய முதல் சுலோகத்தில், பின்னாலே அந்தப் புஸ்தகத்தில் என்ன என்ன விசேஷம் இருக்கிறது, என்ன என்ன விஷயங்கள் வரப்போகின்றன என்ற குறிப்பு இருக்கும்.

வஸ்து நிர்தேசம்

என்று சொல்வார்கள்.

ஆசீர் நமஸ்க்ரியா வஸ்து நிர்தேசோ வாபி மங்களம்

என்று வரப்போவது இன்னது என்பதாகவோ, ஈசுவரனைப் பிரார்த்தனை பண்ணுவதற்காகவோ, சிஷ்யர்களுக்கு ஆசீர்வாதம் பண்ணுவதாகவோ இப்படி முதல் சுலோகம் இருக்க வேண்டாமா?

பகவத் கீதையில் முதல் சுலோகமாகத் "தர்ம க்ஷேத்ரே" என்ற சுலோகம் இருக்கிறது.

இது மங்கள சுலோகம் ஆகவேண்டும். வஸ்து நிர்தேச ரூபத்திலுள்ள மங்கள சுலோகமாக ஆகவேண்டுமானால் எப்படி அர்த்தம் சொல்வது என்று யோசனை பண்ணி, சகஜமாக இருக்கிற அர்த்தத்தோடுகூட இன்னும் ஓர் அர்த்தத்தையும் சொல்கிறார்கள்.

'தர்ம க்ஷேத்ரே குருக்ஷேத்ரே'

என்பதில் குரு என்பதைப் பெயர்ச்சொல்லாக வைத்துக் குருக்ஷேத்திரம் என்றால் ஓர் இடமாகப் பொருள் சொல்வது வழக்கம். குரு என்பதை வினைச் சொல்லாக மாற்றிப் பொருள் சொன்னால் குரு என்பதற்குச் செய் என்று அர்த்தம்.

க்ஷேத்ரே தர்மக்ஷேத்ரே ஸதி குரு

என்று இப்படிப் பண்ணிப் பொருள் சொன்னால், "காற்று உள்ளபோதே தூற்றிக் கொள்" என்று சொல்கிற பழமொழியின் அர்த்தமாகிவிடுகிறது.

க்ஷேத்திரம், க்ஷேத்திரம் என்பதற்குப் பகவத் கீதையில் லட்சணம் இப்படிச் சொல்லியிருக்கிறது:

இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித் யபிதீயதே

இந்தச் சரீரமானது தர்ம க்ஷேத்திரம். தர்மத்தை வளர்ப்பதற்காக ஏற்பட்டிருக்கிற வயலாக இருக்கின்ற காலத்திலேயே, தர்மம் என்னும் பயிர் தழைப்பதற்கு யோக்கியமான வயலாக இருக்கும் காலத்திலேயே, அதாவது புத்தி பிரசன்னமாக இருந்து, இந்திரியங்களும் சுத்தமாக இருந்து, கர்மேந்திரியங்களுக்கு, கை, கால், வாய், மூக்கு இவற்றுக்கு ஒரு குறைவு இல்லாமல் இருக்கும்படியான காலத்தில் நிறையத் தர்மங்களை நீ அபிவிருத்தி பண்ணிக் கொள்ளவேண்டும். இந்தப் பூமியில் நல்ல எரு, மழை, இவற்றோடு கூடி இருக்கும்படியான வளம் இருக்கும் போதே நீ பயிர் செய்து வேண்டிய பலனை அடையவேண்டியது. இந்தக் காலம் தப்பி விட்டால் பிரயோஜனம் இல்லை.

*



ஓர் இரவில் இரண்டு உள்ளங்கள்

பாசி. இராமசந்திரன்

பைகிராப்ட்ஸ் சாலையில் ஞாயிற்றுக் கிழமை மாலை நேரத்து நெரிசலில் பிளாட்பாரத்துப் புத்தகக் கடையில் அலெக்ஸாண்டர் டூமாவைத் தேடிப் பிடித்த போது என் முதுகில் ஒரு 'ஷொட்டு' விழுந்தது. திரும்பினேன். என் கண்கள் வியப்பால் விரிந்தன.

''ஹாய் முரளி, நீயா?'' வாயும் விரிந்தது. கையிலிருந்த டூமா மறுபடியும் புத்தகக் குவியலில் விழுந்து விட்டார்.

''ஏய் ஸ்ரீராம், சௌக்கியமாயிருக்கியாடா?'' முரளி கேட்டான்.

இருவரும் ஒருவரை ஒருவர் நலம் விசாரித்துக் கொண்டே கூட்டத்தை விட்டு வெளிவந்தோம்.

ஓரத்தில் நிறுத்தி வைத்திருந்த பென்ஸ் காரைத் திறந்து என்னை வரவேற்றான் முரளி. இருவரும் உள்ளே அமர்ந்தோம். மெரினாவின் பக்கமாகச் சென்று கும்பலை விட்டு விலகி ஓரிடத்தில் உட்கார்ந்தோம். அப்பப்பா! ஒரு வருஷமா, இரண்டு வருஷமா? பல ஆண்டுச் சிநேகம். சாரதா பெண்கள் பள்ளியில் (இரு பாலாரும் படிக்கும் பள்ளி) நர்ஸரி வகுப்பிலிருந்து எங்கள் சிநேகம் ஆரம்பித்தது. உயர் நிலைப்பள்ளியில் தொடர்ந்து, புதுக் கல்லூரியின் பி. யூ. சி.யோடு முடிந்த உறவு அது. அதற்குப் பின்னால், வெவ்வேறு படிப்புக்களில் நாட்டம் செல்ல நாங்கள் பிரிந்தோம். சென்னை வாசம் முடிந்து முரளியின் பெற்றோர் பம்பாய் செல்ல, என் படிப்பும் பாதியோடு நின்று தில்லி சென்றேன். இடையே எப்பொழுதோ ஓரிருமுறை சில கடிதப் போக்குவரத்து மட்டும் இருந்தது. பிறகு மெதுவாக முரளியை நான் மறக்க அவன் என்னை மறக்க எங்கள் சிநேகம் தொய்ந்தது.

ஒல்லியாக, சிவப்பாக இருந்த முரளி இப்பொழுது மொழுமொழுவென்று பளபளப்புடன் விளங்கினான். கூர்மையான அவன் கண்கள் இப்போது பணத்தின் காரணத்தினாலோ, ஸ்காட்ச் விஸ்கியின் மிதமிஞ்சிய உறவினாலோ சற்று இடுங்கிப் போயிருந்தன.

அவனே அமைதியைக் கலைத்தான்.

''என்னடா ராம், இப்படி மௌனமாக உட்கார்ந்துவிட்டாய்? ஏதாவது பேசேன். உன் பேச்சைக் கேட்டு ரொம்ப நாட்களாகி விட்டதே.''

நான் சிரித்தேன். ''இல்லை, முரளி, பழைய ஞாபகங்கள் வந்தன. ஆமாம், நீ எப்போது சென்னை வந்தாய்?''

முரளி, தான் பம்பாய் சென்றதாகவும் அங்கே அவன் படிப்புத் தடைப்பட்டதால் இங்கே வந்ததாகவும் சொன்னான். இஞ்சினீயரிங் முடித்து விட்டு, அமெரிக்காவில் எம்.பி.எ. தொடர்ந்ததாகவும் அதன் பயனால் தற்போது புகழ் வாய்ந்த ஒரு கம்பெனியில் உயர் அதிகாரியாகப் பணி புரிவதாகவும் தெரிவித்தான்.

நானும் டெல்லியில் படிப்பை முடித்து விட்டு, சென்னையில் ஒரு வங்கியில் வேலை பார்ப்பதாகச் சொன்னேன்.

''டேய் ராம், உனக்குத் திருமணமாகி விட்டதா?'' என்று பேச்சை மாற்றினான் முரளி.

''என் பெண் யு. கே. ஜி.; பையன் இரண்டாம் வகுப்பு.''

''அப்படியா? எனக்கும் ஒரு பெண், ஒரு பையன்தான்.'' எங்கள் பேச்சு வேறு எங்கோ சென்று முடிய மணி எட்டாயிற்று. மணலைத் தட்டிக் கொண்டு எழுந்தோம்.

''முரளி, திருவல்லிக்கேணி பெரிய தெருவில் என் வீடு. ராத்திரி சாப்பாட்டை என் வீட்டில் முடித்துக் கொள்ளலாமே'' என்றேன்.

''மன்னிக்கணும். என் மனைவி ஜயந்தி காத்திருப்பாள். நாம் இருவரும் என் வீட்டில் சாப்பிடப் போகிறோம்'' என்று சொல்லி விட்டு, வற்புறுத்தி என்னை அவன் வீட்டுக்கு அழைத்துப் போனான்.

அழகிய சிறு பங்களா, தோட்டத்துடன். காரின் ஓசை கேட்டதும் அவன் மனைவியும் குழந்தைகளும் வாசலுக்கு வந்து விட்டனர்.

''இவள்தான் ஜயந்தி; என் மனைவி!'' என்று கூறியதும் அதிர்ச்சியடைந்தேன் நான். தெரியாமல் தொட்டுவிட்ட மின்சாரக் கம்பியின் 'ஷாக்' என் உடம்பெல்லாம் பலமாக அடித்தது. சுதாரித்துக் கொண்டு நான் கை குவித்தபோது அவள் மௌனமாக இருந்தாள்.

நண்பன், ''அடிக்கடி சொல்வேனே ஸ்ரீராம் என்று, அவன்தான் இது'' என்றான்.

''என்ன? என்ன சொன்னீர்கள்?''

அவளும் என்னைப் போல் அதிர்ந்திருப்பது தெரிந்தது. ஆனாலும் ஒருவருக்கொருவர் தெரிந்தவர்போல் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் என் ஆருயிர் நண்பனுக்கு இவள் எத்தனை பெரிய துரோகம் செய்திருக்கிறாள் என்பதை நினைத்தபோது என் நெஞ்சு அதிர்ந்தது.

போட்டதைத் தின்றுவிட்டு அவசரமாக வீட்டுக்குப் புறப்பட்டேன். ''என்னடா அதற்குள் அவசரம்?'' என்ற முரளியை ஒரு முறை பரிதாபத்தோடு பார்த்துவிட்டு நகர்ந்தேன்.

''என்ன இன்னும் தூங்கலையா? மணி பதினொன்று ஆகப் போகிறதே?'' என் மனைவி புரண்டு படுத்தபோது என்னைக் கேட்டாள்.

''இல்லை, சுமி. என்னமோ தூக்கம் வரலே.''

''உங்க சிநேகிதர் வீட்டுச் சாப்பாடு பலமா?''

''சுமார்தான். நீ பேசாமத் தூங்கு சுமி.''

அவள் பதில் ஏதும் சொல்லவில்லை.

என் மனக் கண்ணில் ஜயந்தி வந்து நின்றாள். எப்படிப்பட்ட அழகான பெண் அவள்? ஆனால் அத்தனையும் நஞ்சாகப் பட்டது எனக்கு.

சில ஆண்டுகளுக்கு முன் எனக்கொரு ஜாதகம் வந்தது. கல்யாண மார்க்கெட்டில் எனக்கு நிறைய மதிப்பு இருந்தது. என் படிப்பு, கம்பீரம், சம்பளம், பாங்க் உத்தியோகம் இப்படி ஒவ்வொன்றாக என்னை உயர்த்திவிட்டிருந்த நேரம். சிதம்பரத்தில் பிரபல வக்கீல் சிவராமன் தம் மகள் ஜயந்தியின் ஜாதகத்தை எனக்கு அனுப்பியிருந்தார். பெண்ணின் புகைப்படத்தைப் பார்த்ததும் எனக்குப் பெண்ணை நேராகப் பார்க்க வேண்டும் என்று ஆவல் எழுந்தது.

சோழன் எக்ஸ்பிரஸ் சற்றுத் தாமதமாக நாலே முக்கால் மணி சுமாருக்குச் சிதம்பரத்தை வந்தடைந்தபோது வக்கீலும், அவர் மனைவி சிவகாமுவும் என்னை வரவேற்க ஸ்டேஷனுக்கே வந்திருந்தார்கள். பழைய காலத்துக் கார் ஒன்று மிக மெதுவாக என்னைச் சுமந்து சென்றபோது, வக்கீல், 'ஜானவாஸத்துக்கு இப்போதே என்னைத் தயார் செய்து விட்டாரோ?' என்ற எண்ணம் தோன்றியது.

வடக்கு வீதியில் தம் வீட்டருகே காரை நிறுத்திவிட்டு என்னை அவர் வீட்டினுள் அழைத்தார். நல்ல அருமையான வீடு. பெரிய பெரிய வழவழப்பான திண்ணையும் கம்பி போட்ட வாசல்களும் ரேழியும், பெரிய கூடமும் என்னைத் திகைக்க வைத்தன. கூடத்துக் கண்ணாடி பீரோக்களில் வக்கீல் படித்த சட்டப் புத்தகங்கள் தலையணை போல் காட்சி தந்தன. சோபாவில் என்னை உட்கார வைத்தார். சுவரில் மாட்டியிருந்த பழங்காலப் போட்டோக்களில் தம்முடைய தாத்தா முதல் எல்லாரையும் அறிமுகப்படுத்தி வைத்தார். சில சமயங்களில் சுவையாகவும் பல சமயங்களில் அவரது நடவடிக்கைகள் அலுப்பாகவும் இருந்தன எனக்கு.

கேசரியும், மிக்சரும், காபியும் உள்ளே சென்ற பிறகுதான் எனக்குச் சுறுசுறுப்பு வந்தது.

பிறகு தேவதை போலிருந்த ஒரு பெண்ணைச் சிவகாமு கைத்தாங்கலாக அழைத்து வந்த போது நான் கண்ணிமைக்க மறந்து அவளைப் பார்த்தேன்.

''ஜயந்தி நமஸ்காரம் பண்ணம்மா!'' என்று வக்கீல் சொன்னதும், அந்தப் பெண் என்னையும் தன் பெற்றோரையும் வணங்கினாள். எதிரில் விரித்திருந்த ரத்தினக் கம்பளத்தில் அமர்ந்தாள்.

''பி. எஸ்ஸி. கடைசி வருடம் படிக்கிறாள். நன்றாக வீட்டு வேலையிலும் சமையல் செய்வதிலும் கெட்டிக்காரி.'' மகளின் பெருமைகளை அடுக்கிக் கொண்டே போனார் வக்கீல்.

''கர்நாடக சங்கீதம் மிக அருமையாகப் பாடுவாள்'' என்றபோது, மிக மெல்லிய அற்புதப் புன்னகை ஒன்றை நாணத்தோடு என் மேல் வீசினாள். நான் அயர்ந்து போனேன்.

பெண் பார்க்க வரும்போதே, இப்படி ஒரு பெண் அந்நிய ஆடவனைக் கண்டு சிரிக்கலாமோ? ஆனால் அவள் அழகில் எல்லாமே மறைந்து விட்டன.

கல்யாணி ராக ஆலாபனையோடு புரந்தர தாஸரின் 'தயமாடோ ரங்கா' என்ற பதத்தைப் பாடி முடித்தபோது அந்தக் கூடமே ஒரு தெய்விக ஒளி பெற்று வீசியது.

மணி ஏழாகி விட்டிருந்தது. வக்கீல் என்னை நடராஜர் கோவிலுக்கும், காளி கோவிலுக்கும் அழைத்துச் சென்றார்.

''ராத்திரி இங்கேயே சாப்பிட்டுத் தங்கிடலாமே'' என்றார். நான் மறுத்துவிட்டு, அன்றிரவே ஒரு பாஸஞ்சர் வண்டியைப் பிடித்து மறுநாள் காலை சென்னை வந்து சேர்ந்தேன். என் மனம் முழுவதும் ஜயந்தியே நிறைந்திருந்தாள்;

சென்னைக்கு வந்ததும் அன்றே அவருக்குக் கடிதம் எழுதவில்லை. உடனே பெண்ணைப் பிடித்து விட்டது என்று எழுதினால் மட்டமாக நினைத்துக் கொள்வாரோ என எண்ணி, இரண்டு தினங்களில் எழுத இருந்தேன்.

"சார், இந்தக் கடுதாசி உங்களுக்குத் தானே?" என்று பியூன் மேஜைமேல் ஒரு கடிதத்தை வைத்தான். வியப்புடன் பிரித்தேன். ஜயந்தி எழுதியிருந்தாள். எனக்கு அவள் துணிச்சல் பிடித்திருந்தாலும் அவள் செய்கை சற்று வருத்தமாக இருந்தது.

"மதிப்புக்குரிய ஸ்ரீராம் அவர்களுக்கு நமஸ்காரம். தாங்கள் நலந்தானே? நான் இந்தக் கடிதத்தை எழுதியது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். உங்களிடம் அதற்காக மன்னிப்புக் கேட்கிறேன். என் தகப்பனார் எனக்கு உடனடியாகத் திருமணம் செய்து வைக்கப் பிரியப்படுகிறார். ஏனென்றால், நான் எங்கள் கல்லூரியில் படிக்கும் ஒருவரைக் காதலிப்பதனால்தான். அவரும் நானும் ஒருவரை ஒருவர் மிகவும் விரும்புகிறோம். நாங்கள் காதலிப்பது தெரிந்தவுடன் என்னை உடனே கல்லூரியிலிருந்தும் நிறுத்தி விட்டார். இருந்தும் நான் என் அன்புக்குரியவரிடம் சேர்ந்துவிடுவேன் என்று நம்புகிறேன். இதனால் தயவுசெய்து என்னைப் பிடிக்கவில்லை என்று என் தகப்பனாருக்கு எழுதி விடுங்கள். நீங்கள் செய்யும் இந்த உதவியை நான் என் வாழ்நாள் முழுவதும் நிச்சயம் மறக்க மாட்டேன்.

அன்புடன்,
ஜயந்தி"

எனக்கு உடம்பு முழுவதும் வேர்த்துக் கொட்டியது. எனக்கு ஜயந்தியைப் பிடித்திருந்தும், இப்படி ஒரு கடிதம் வந்தபிறகு அவள் வாழ்க்கையில் புகுவதற்கு நான் விரும்பவில்லை.

"என்ன, இன்னுமா நீங்க தூங்கலே?"

என் சிந்தனைச் சிறகு அறுந்தது. இரவு மணி ஒன்று பத்து.

"ஆமாம் சுமி, மனசே சரியில்லை" என்றேன்.

"என்ன சமாசாரம்னு சொல்லுங்களேன். முடிஞ்சா நான் உதவி பண்றேன்."

"ரொம்ப வருஷத்துக்கு முன்னாலே, அதாவது, உன்னைக் கல்யாணம் செஞ்சுக்கறத்துக்கு முந்திச் சிதம்பரத்துல ஒரு வக்கீல் வீட்டுப் பொண்ணைப் பார்த்தேன்னு சொன்னேனே, ஞாபகம் இருக்கா, சுமி, உனக்கு?"

சுமி படுக்கையிலிருந்து எழுந்து, கதை கேட்கும் சுவாரசியத்தில் அமர்ந்தாள்.

"ஆமா. என்னவோ பேர்கூட அவளுக்கு; உங்களுக்குத் துணிச்சலா கடுதாசி எழுதினாளே, அவதானே?"

"அவளேதான்; ஜயந்தி என்று பேர்."

"அவ எழுதின கடுதாசியைக்கூட இன்னும் நீங்க பத்திரமா எடுத்து வச்சிருக்கேளே. ஆமா, திடீர்னு அவ ஞாபகம் எதுக்கு வந்தது உங்களுக்கு?"

"சுமி! அவதான் என் சிநேகிதன் முரளியோட மனைவி."

"என்னது நிஜம்மாவா?"

"ஆமாம். பாவம், முரளி ஏமாந்துட்டான்!"

"ஒருவேளை ஜயந்தி காதலிச்சது முரளியாவே இருந்தா?"

"சே, சே உளறாதே. அவன் பம்பாய்ல படிச்சான். அப்புறம் சென்னையில் படிச்சான். சிதம்பரத்துல பி. எஸ்ஸி. படிச்ச பொண்ணு, தன்கூடப் படிச்சவனைக் காதலிக்கிறேன்னு சொல்றப்போ, அது எப்படி முரளியா இருக்க முடியும்?"

"ஆமாம், ஆமாம்! நீங்க சொல்றதும் சரிதான்."

"ஆமா சுமி. இவள், அந்தப் பையனோட கன்னா பின்னான்னு சுத்திருயிருக்கா. இன்னும் என்ன என்ன நடந்திருக்குமோ? ஆனா, அந்த வக்கீல் காதல், கீதல் சமாசாரமெல்லாம் பிடிக்காத ஆசார சீலர்; கண்டிப்பு மிகுந்தவர்; குடும்பக் கௌரவம் என்று உயிரை விடுகிறவர். அப்படிப்பட்டவர், அவளுடைய காதலை அழித்துவிட்டுப் பிடிவாதமாகத் தம் இஷ்டப்படியே கல்யாணம் செய்து வைத்திருப்பார். நல்ல காலம், நான் ஏமாற இருந்தேன். இப்போது என்னடாவென்றால் என் அருமைச் சிநேகிதன் ஏமாந்திருக்கிறான்."

"சரி, சரி! நீங்க பேசாம தூங்குங்கோ. நாழியாறது. கார்த்தால ஆபீசுக்குப் போக வேண்டாமா?"

"உனக்கு என்ன? கதை கேட்ட சுவாரசியம் தூங்கிடுவே. நான் என்ன செய்யறது? மனம் வலிக்கிறது."

"அப்படின்னா ஒண்ணு செய்யுங்கோ; இப்பவே போய் உங்க நண்பர்கிட்டே, 'டேய், முரளி, உன் சம்சாரத்தை நம்பாதடா. கல்யாணத்துக்கு முன்னாலேயே அவ கெட்டுப் போயிருக்கா'ன்னு சொல்லிவிட்டு வாங்கோ;



அப்பத்தான் உங்களுக்குத் தூக்கம் வரும் போல இருக்கு.''

''பைத்தியம். இதை முரளிகிட்டே சொன்னால் தற்கொலை செஞ்சுக்குவான், பாவம். ஆனா அவனைப் பார்க்கற போதெல்லாம் மனசு சங்கடப்படும். துரோகம் செய்தவள் சந்தோஷமா இருக்கா. இந்தச் சிக்கலைத் தீர்க்காம எனக்குத் தூக்கம் வராது'' என்று சொல்லிவிட்டுப் படுத்தவன் எப்போது தூங்கினேனோ எனக்கே தெரியாது.

* * *

"என்ன ஜயந்தி, ராத்திரியெல்லாம் தூங்கவேயில்லையே நீ? புரண்டு புரண்டு படுக்கறியே? வேணுமானா ஏ. ஸி.யை நிறுத்திட்டு மின் விசிறியை போடட்டா?'' - முரளியின் வலுவான கரம் ஜயந்தியை அணைத்துக் கொண்டது.

''விடுங்கோ என்னை. உடம்பே சரியாயில்லே.''

''உடம்பே சரியில்லேன்னா ராத்திரியே டாக்டர்கிட்டே போயிருக்கலாமே?''

வேண்டாம். வேண்டாம். எல்லாம் சரியாயிடும்.''

''நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்க மாட்டியே ஜயந்தி?''

''சொல்லுங்கோ.''

''நேத்து ராத்திரி நம் வீட்டுக்கு ஸ்ரீராம் வந்ததுலேருந்து நீ ஒரு நிலையாவே இல்லை. பதற்றம் உங்கிட்டே ஜாஸ்தியா இருக்கு. என்ன சமாசாரம்? அவனை உனக்கு முன்னாடியே தெரியுமா?''

''ஐயோ! ஐயோ! பேசாமல் தூங்குங்களேன். மணி மூணேகால். கொஞ்சநேரம் என்னைத் தூங்கவிடுங்கோ.''

''அட! இவ்வளவு நேரம் தூங்கலே. இனிமேதான் தூங்கப் போறயாக்கும். உண்மையைச் சொல்லு. ஸ்ரீராமைத் தெரியுமா உனக்கு? அவனை உனக்கு அறிமுகம் செஞ்சு வெச்ச உடனே ரெண்டு பேருமே அதிர்ந்து போய் நின்னுட்டேளே?''

மௌனம். ஆனால் முரளி விடவில்லை. அவளை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டே இருந்தான். ஜயந்திக்கு அந்தக் 'குளிர்ப்பதன

வண்ணச் சிதறல்

பல துறைப் பணிகளில் ஈடுபட்டுள்ள பன்னிருவர், தம் கவிதைத் தாகத்தைத் தீர்த்துக்கொண் டிருக்கும் கூட்டு முயற்சியே 'வண்ணங்கள்' என்ற நூலாக மலர்ந்திருக் கிறது. இந்தத் தொகுப்புக் கவிதை நூலில், பன்னிரு கவிஞர்களும் பல பல தலைப்புக்களில் அரிய கவிதைகளைப் படைத்துள்ளனர். திரு வண்ணைமூர்த்தி, திரு செ. கிருஷ்ணமூர்த்தி, திரு மதிவண்ணன், திரு பகத்சிங், திரு வேதம், முதலிய பன்னிரண்டு கவிஞர்களின் படைப்புக்கள் இதில் இடம் பெற்றுள்ளன. மேலோட்டமாகப் பார்த்தாலும் சில கவிதை கள் உள்ளத்தை ஈர்க்கும் வகையில் அமைந் துள்ளன. ரசிகர்கள் இருந்தால்தான் கலைகள் வளரும். அதனால் 'வண்ணங்களாக'ப் பளி ரிடும் இந்தக் கவிதைத் தொகுப்பையும் நிறைய ரசிகர்கள் வாங்கிப் படித்து ரசித்து ஊக்கமளிக்க வேண்டும். ஏழு ரூபாய் விலையில் சுதா பதிப்பகம், 4, முத்து முதலித் தெரு, சென்னை-7 என்ற முகவரியில் 'வண்ணங்கள்' கிடைக்கும்.

நிலை'யிலும் முத்து முத்தாக வேர்வை நெற்றி யில் அரும்பியது.

''ஆமா, ஸ்ரீராமை எனக்குத் தெரியும். என்னைப் பெண் பார்க்க எங்க ஊருக்கு அவர் வந்திருந்தார். அவ்வளவுதான்.''

''இல்லே, இது சுத்தப் பொய். சாதாரண மான சமாசாரம். இதுக்காக நீ ராத்திரி யெல்லாம் தூங்காமே வருத்தப்பட வேண்டிய தில்லே. வேறு ஏதோ நடந்திருக்கு. நாளைக்கே அவன் வேலை செய்யற பாங்குக்குப் போய், 'ஏன்டா ஸ்ரீராம், ஜயந்தியை உனக்கு முதலிலேயே தெரியுமா?'ன்னு கேட்டா அவன் சொல்லிடறான். நீ சொல்லாட்டா வேண்டாமே.''

ஜயந்தி சட்டென்று எழுந்து உட்கார்ந் தாள்.

''அவரும் என்னைப் போல் மௌனமா இருந்துட்டா?'' பெரிதாகக் கலகலவென நகைத்தாள் அவள். முரளிக்கு ஒன்றும் புரிய வில்லை.

''இதோ பாருங்கோ. நான் உண்மையைச் சொல்லிடறேன். நீங்க அதுக்காக என்னைத் தப்பா எடுத்துக்கப்படாது. உங்க சிநேகிதர் ஸ்ரீராம் என்னைப் பெண் பார்த்துட்டுப் போன உடனே நான் அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன்.''

''அட பாவி! நெஜம்மாவா? என்ன மாதிரி கடிதம் எழுதினே?''

''ஆமா. அவசரப் படாமக் கேளுங்கோ. நான் எங்க கல்லூரியிலே படிக்கற ஒருத்தரைக் காதலிக்கிறதாகவும் அதனாலே என்னைக் கலியாணம் பண்ணிக்க வேண்டாம்னு அவருக்கு எழுதினேன். பாவம், அப்புறம் அவரும் கடுதாசி போடலே.''

''என்னது? நீ நம்ம கல்யாணத்துக்கு முந்தி இப்படி ஒரு தகராறு வேறே செஞ்சிருக் கியா? யாரைக் காதலிச்சே?''

''சே. இந்த ஆண்களே மோசம். நான் எழுதினதை எப்படி அப்போ நிஜம்னு ஸ்ரீராம் நம்பினாரோ, அதே மாதிரி இப்போ ரெண்டு குழந்தைகளுக்கு அப்பாவாயிருந்தும் நீங்க நம்பறேளே?''

''எனக்கு ஒண்ணுமே புரியலையே ஜயந்தி.''

''புரியாது. பெண்களோட மனசு யாருக்குமே புரியாது. ஓர் ஆண், ஒரு பெண்ணைப் பிடிக்கல்லேன்னு சொல்லிடலாம். ஆனா ஒரு பொண் தன்னைப் பார்க்க வந்த ஆணைப் பிடிக்கல்லை என்று சொன்னா இந்தச் சமூகம் சும்மா விடுமா? உங்க நண்பர் ஸ்ரீராமை எனக்குப் பிடிக்கவில்லை. ஆனா அவருக்குப் பிடிச்சிருந்தது. அவர்கிட்டே யிருந்து கடுதாசி வந்திருந்தா, அப்பா என்னை அவருக்கே கொடுத்திருப்பார். தன் பெண்டாட்டி அழகாயிருக்கணும்னு ஒருத்தர் நினைக்கிற மாதிரி, ஒரு பெண்ணும் தனக்கு இப்படிப்பட்டவர்தான் புருஷனா வரணும்னு நெனச்சா அது தப்பா? அதனால்தான் நானே ஸ்ரீராமுக்கு முந்திக் கொண்டு அப்படி ஒரு பொய்க் கடுதாசி எழுதினேன். போதுமா?'' ஜயந்தி முடித்தாள்.

''அட பாவமே! அதுதான் நேத்திக்கு ராத்திரி ரெண்டு பேருமே அப்படி ஆடு திருடன கள்ளன் மாதிரி முழிச்சேளா? பாவம், ஸ்ரீராம். அவனும் உன்னைப் பார்த்துப் பிரமித்துப் போய் ராத்திரி முழுவதும் தூங்கியிருக்கமாட்டான். அவன் அப்படி ஏதாவது கேட்டுட்டா நான் என்ன சொல்லிச் சமாளிக்கிறது? 'டேய் ஸ்ரீராம், ஜயந்திக்கு உன்னைப் பிடிக்கலையாம். அதுதான் இப்படி ஒரு பொய்க் கடுதாசி எழுதியிருந்தாளாம்' என்று சொல்லி விடட்டுமா?''

''ஏதாவது இப்படிப் பேத்தி அவர் மனசைக் சங்கடப்பட வச்சிடாதிங்கோ. அப்படி அவர் கேட்கமாட்டார்னு நினைக்கிறேன். கேட்கா விட்டாலும் பரவாயில்லே. நீங்களாகவே நான் ஜயந்தியைப் படிக்கறப்பவே காதலிச்சேன்னு சொல்லிடுங்கோ. விஷயம் முடிந்திடும்.''


முரளி அவளையே உற்றுப் பார்த்தான்.

''என்ன அப்படிப் பாக்கறேள்? எனக்குக் கூச்சமா இருக்கு.''


''இல்லே ஜயந்தி. நீ என்னைக் காதலிச்சியா?'' அவளுடைய கைகளை ஆவலுடன் அவன் பற்றினான்.

அவன் விளக்கை அணைத்தபோது, ரேடியம் பதித்த சுவர்க் கடிகாரம் மூணேகாலைக் காட்டியது.

*



பிரதி பிம்பம்



ஆர். சூடாமணி

"இப்ப எப்படி இருக்குது அவருக்கு?''

கிழவர் காதுகளைத் தீட்டிக்கொண்டார்.

''அதே மாதிரிதான். படுத்துட்டே இருக்காரில்ல. சுவாசப் பைலே அடைப்பு. இப்ப டாக்டர் அதுக்கு மருந்து கொடுத்துக்கிட்டிருக்காரு.''

''அப்படின்னு சரி. டாக்டருக்குத் தெரியாதா என்ன? ஆமாம், உனக்கு வடக்கே மாற்றல் ஆனாலும் ஆகும்னு சொல்லிட்டிருந்தியே: ஏதேனும் தெரிஞ்சுதா?''

''அநேகமாய் இன்னும் ஒரு மாசத்தில் தெரிஞ்சுடும். டெல்லி, பம்பாய்ன்னு மாத்தினாங்கன்னா நல்லா இருக்கும்.''

அவ்வளவுதானா? பேச்சு திசைமாறிவிட்டதா? 'டாக்டர் கவலைக்கிடமாய் ஏதும் சொல்லவில்லையே?' என்று இவனும் கேட்கவில்லை. அவனும் சொல்லவில்லை. காதுகள் நிறைய ஏமாற்றத்துடன் கிழவர் தளர்ந்து உட்கார்ந்தார். அந்த முருகேசனுக்குக் கொஞ்சமாவது ஒரு மகனின் உணர்ச்சிகள் இருக்காதா? தகப்பனார் உடல் நலமின்றிப் படுத்திருக்கும்போது வேலை மாற்றத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறான் சோதாப் பயல். பெரிய நகரத்துக்கு மாற்றலானால் என்ன? அவன் பெண்டாட்டிக்கு நவநாகரிகந்தான் ஒத்துக் கொள்ளுமோ?

சிறிது நேரத்துக்குப் பின் பொறுக்க முடியாமல் அவர் அறையிலிருந்து வெளியே வந்து, ''என்ன, தம்பி முருகேசா, உங்க அப்பாவுக்குக் கொஞ்சம் தேவலாமா? என்றார்.

இப்போது நண்பனுடன் ஷா கமிஷனைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த முருகேசன் எழுந்து நின்றான். ''தேவலைன்னு நிச்சயமா சொல்ல முடியலே ஸார். புதுசா ஒரு சிக்கல். ரெண்டு வாரமா படுத்த படுக்கையாகவே இருக்கார்? லங்ஸ்ல கஞ்செஷன் ஆயிருக்குதாம்.''

''அது ஒண்ணும் ஆபத்து இல்லையே: சரியாய் ஆயிடுமில்ல?''

''டாக்டர் மருந்து கொடுக்கிறார். என்ன சார் சொல்லமுடியும்? சின்னவங்களுக்குக் கபம் கட்டுச்சுன்னா எதிர்ப்பு இருக்கும். இது வயசான சரீரம்'' என்று சொல்லி வந்த முருகேசன் சட்டென்று நிறுத்திக் கொண்டு, ''நான் வரேன் ஸார். நேரமாகுது. வரட்டுமா ராமு? அப்புறம் பார்க்கலாம்'' என்று நண்பனுடன் விடை பெற்றுக்கொண்டு வெளியேறினான்.

எத்தனை அசுவாரசியமாய்ச் சொல்லிவிட்டான் தந்தையைப் பற்றி! ''மனுஷங்க போறபோக்கைப் பாத்தியா ராமு?'' என்றார் கிழவர்.

''ஆமாம்ப்பா. கோர்ட்டுக்கு வந்த இந்திரா காந்தி ஸ்டேட்மென்ட் கொடுக்கமாட்டேன்னுட்டாங்களே! இப்படியும் உண்டா?''

கிழவர் திடுக்கிட்டு அவனைப் பார்த்தார். பிறகு எதுவும் சொல்லாமல் தம் அறைக்குத் திரும்பி விட்டார்.

இவனுக்கும் நோயாளியைப் பற்றி நினைவு இல்லை. அந்த மறதியில் தாமும் நிராகரிக்கப்பட்டுவிட்டாற் போல் அவருக்கு உணர்வாகியது.

தம்மையறியாமல் அவர் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். பிறகு எழுந்து நிலைக் கண்ணாடியின் முன் நின்று தம்மைப் பார்த்துக் கொண்டார்.

அவர் வயதில் பெரும்பாலோர் எப்படித் தொய்ந்து போய் விடுகிறார்கள்? அவர் உடல் கச்சிதமாக, முதுகு இன்னும் நேராக இருந்தது. தொந்தி தொப்பை ஏதும் இல்லை. முகத்தில் சுருக்கங்கள் கொஞ்சம் தெரிந்தன. அதனால் என்ன? அதற்கு ஈடு செய்வது போல் வாயில் இன்னும் ஒரு பல்கூட விழவில்லையே! தலை வழுக்கை சற்று உறுத்தியது. ஆனால் முப்பது வயதிலேயே கூட வழுக்கை விழுந்துவிடும் ஆண்கள் எத்தனையோ பேர் இல்லையா என்ன? (தொழில் பயிற்சிக்காகச் சீமைக்குப் போயிருக்கிறானே ஏகாம்பரம், அவனுக்கும் அப்படித்தான்) காலையில் எழுந்ததும் தாடைகளிலும் மோவாயிலும் சிலும்பும் முட்கள் மட்டும் வெள்ளையாக இல்லாவிட்டால் வயதைப் பற்றிய நினைவுகூட வரவேண்டியதில்லை.

லங்ஸில் கஞ்செஷன் என்றால் நல்லதில்லைதான். குறைந்தபட்சம் ஒரு சிக்கல். எப்படி இருக்கிறதோ இப்போது? டாக்டர் கெட்டிக்காரரா? இல்லாது போனால்?

எதிரே கண்ணாடி காட்டிய கிழவனை வெறித்துக்கொண்டு அப்படியே வெகுநேரம் நின்றிருந்தார்.

ஒவ்வொரு நாளும் அவர் மகனிடம், ''உன் நண்பனின் அப்பாவுக்கு இப்ப எப்படி இருக்காம்டா?'' என்று கேட்டு வந்தபோது ராமு வியப்படைந்தான். ''என்னப்பா இத்தனை அக்கறை? அவரை உங்களுக்குத் தெரியக்கூடத் தெரியாதே! இதுக்கு முன்னாடி அவர்கிட்ட நீங்க இவ்வளவு அக்கறை காட்டினதில்லையே?''

''ஒருத்தர் படுத்துட்டிருக்கார்னு கேள்விப் பட்டால் எப்படி இருக்குதுன்னு விசாரிக்கிறது என்னடா அதிசயம்? எல்லாரும் மனுஷங்க தானே?''

அவன் பேசவில்லை.

''அதே மாதிரிதான்.''

''ஒண்ணும் அபிவிருத்தி இல்லையாமா?''

''நிமோனியாவாய் இருக்குமோன்னு சந்தே கப்படறாங்களாம்.''

பெரியவருக்குத் திக்கென்றது. ''அப்படி யிருந்தா டாக்டர்களுக்கு முதல்லேயே தெரிஞ்சிருக்காதா?''

''நாளுக்கு நாள் குறிகள் மாறிட்டே வருதேப்பா! அவர் முதல்ல படுத்தப்ப ஃப்ளூன்னு நெனச்சாங்க. அப்புறம் பத்துநாள் விடாம ஜுரமும் தலைவலியுமாக இருக்கவே டைஃபாய்டாய் இருக்கலாம்னு டாக்டர் சோதனை பண்ணினார். டைபாய்டு இல்லை. ஆனா காய்ச்சல் இறங்கவே இல்லை. இப்போ கபம் கட்டியிருக்கு. அவங்களுக்கே ஒண்ணும் புடிபடலே.''

''நிமோனியான்னு சொன்னியே?''

''அப்படி இருக்குமோன்னு இப்ப ஒரு சந்தேகம். எதுக்கும் ஆஸ்பத்திரியில் இருக் கிறது நல்லதுன்னு டாக்டர் சொல்லவே ஜி. எச். சுக்குக் கொண்டு போயிட்டாங் களாம்.''

''ஆஸ்பத்திரியா?''

கிழவர் அன்றைக்கெல்லாம் தம் அறையை விட்டு வெளிவரவில்லை. ஏதும் சாப்பிடற தில்லை. பிற்பகலில் மருமகள், ''டிபன் காபி சாப்பிட வரீங்களா?'' என்ற போது, ''வேணும், பசிக்கலே. ராத்திரி கூட ஒரு டம்ளர் பால் மட்டும் கொடு, போதும்'' என்றார்.

''ஏன் திடீர்னு பசி போயிடிச்சு? உடம்பு நல்லாயில்லையா?''

அவர் அலண்டு போய், ''அதெல்லாம் ஒண்ணுமில்லே. எனக்கென்ன உடம்புக்கு?'' என்றார்.

நிமோனியா என்றால் கவலைதான், இந்த வயதில். முருகேசன் தன் தந்தையின் வயதை முன்பொரு சமயம் குறிப்பிட்டிருக்கிறான். அவர் வயதேதான்.

மறுநாள் மாலை முருகேசன் எதற்கோ வந்தபோது, ''இப்ப எப்படி தம்பி இருக்குது உங்கப்பாவுக்கு? நிமோனியான்னு சந்தேகப் படறாங்கன்னு ராமு சொன்னானே? அப்படி ஒண்ணும் இல்லையே?'' என்று கேட்டார்.

''இன்னும் தெரியலே ஸார்.''

''டெம்ப்ரேசர் கொஞ்சமாவது இறங்கி யிருக்குதா?''

''அது இறங்கிட்டாத்தான் கவலையே இல்லையே! அப்படியே இருக்குது. இவர் பாட்டுக்கு உடம்புக்கு வந்து ஆஸ்பத்திரியில் கிடக்கிறார். என் சம்சாரத்துக்கானா வீட்டை யும் பிள்ளை பெண்களையும் கவனிக்கவே நேரம் பத்தலே. வேற மனுஷ நாதி கிடை யாது. நான் ஒருத்தன்தான் ஆபீஸுக்கும் ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாய் நாயா அலைஞ்சுக்கிட்டிருக்கேன். எல்லாருக்குந்தான் காய்ச்சல் வரும். இப்படியா! சே.''

''அதெல்லாம் சரி தம்பி, டாக்டருங்க ஒண்ணும் கவலையாய்ச் சொல்லலையே? குண மாயிடுமில்லே?''

''அவங்களுக்கு என்னன்னு பிடிபட்டால்ல எதுவும் சொல்றதுக்கு! பேசாம அப் பாவைத் திருப்பியும் வீட்டுக்கே அழைச்சிட்டு வந்துடலாமான்னு பாக்கறேன் ஸார். ஒரு மூலையிலே கிடந்தா என் சம்சாரங்கூடக் கவ னிச்சுக்கலாம் பாருங்க. என்னால் அலைய முடியலே. இருக்கிறதோ சாகிறதோ வீட்டி லேயே செய்துட்டா எல்லாருக்கும் நிம்மதி.''

கிழவர் பரபரவென்று அங்கிருந்து நடந்து விட்டார். உடல் முழுதும் பாய்ந்த நடுக்கம் நிலைப்படச் சிறிதுநேரம் ஆகியது.

அன்று அவருக்கு முன்பு பசித்த அளவு கூடப் பசிக்கவில்லை. இரவு வெகுநேரம் மொட்டை மாடியில் தரையில் ஒரு தலை யணையைப் போட்டு மல்லாந்து படுத்து ஆகாயத்தைப் பார்த்துக்கொண் டிருந்தார். பௌர்ணமிக்கு அடுத்த நாளைய நிலவின் பிரகாசத்தில் வானம் நரைத்திருந்தது. பூமிக்கு இரவானாலும் வானத்தில் மட்டும் ஒரு பகல். அங்கங்கே நட்சத்திரங்கள் ஒளி மழுங் கித் தெரிந்தன.

பதினொரு மணிக்குப் படிக்கட்டில் காலடி யோசை அவரை நோக்கி உரத்துக்கொண்டு வந்தது.

''என்னப்பா இது? இத்தனை நேரமாயி டிச்சே, உங்களை இன்னும் படுக்கையில் காணுமேன்னு தேடிட்டு வந்தால் இங்கே பனியில் படுத்துக்கிட் டிருக்கீங்களே!''

அவர் ஏதும் சொல்லவில்லை.

''இறங்கி வாங்கப்பா. என்ன விளையாட்டு இது, பச்சைப் பிள்ளையாட்டம்?''

''எனக்குத் தூக்கம் வரலலே. ராமு, வரப்ப கீழே வந்து படுத்துக்கறேன். நீ போ.''

''நல்லாயிருக்கு, வாங்க சொல்றேன்.''

''என்னைத் தொந்தரவு செய்யாம போயேன்.''

''தொந்தரவா? உங்க நல்லதுக்குத் தாம்ப்பா சொல்றேன். இந்தப் பனி உடம் புக்கு ஆகுமா? அப்புறம் எதுனாச்சும் கோளாறு வந்தால் நீங்கதானே கஷ்டப்படணும்?''

''ஒண்ணும் வராது. நீ போ இங்கேருந்து.''

''அடியில் ஒரு ஜமக்காளமானும் போட்டுக் கக் கூடாதா? வெறும் தரையில் படுத் தால்..''

''என்ன ஆயிடும்? லங்ஸ்ல கபம் கட்டிக் குமோ? எங்கே அப்பா, படுக்கைல விழுந்து நம்ம கழுத்தை அறுக்கப் போறாரேன்னு உனக்குப் பயம். இல்லாட்டி பெரிய கரிசன மாக்கும். எல்லாம் தெரியும் போடா.''

ராமு முணுமுணுத்துக்கொண்டே கீழே போனான்.

ஆஸ்பத்திரியில் அவருக்கு எப்படி இருக் கிறது?

கிழவரின் கண்கள் வானத்தை வெறித் தன. தூக்கம் வரவில்லை. வானவெளியில் நரையல்ல, சவவெளுப்பு. கரையற்ற இந்த விண்பரப்பின் ஒவ்வோர் அணுவிலும் மர ணந்தான் நிறைந்திருக்கிறதா? அங்கு மட்டும் அல்ல. இங்கு மண்ணிலும், அருகிலும், கை உரசும் நெருக்கத்திலும் இந்த நட்சத்திரங் கள் அவரைப்போல் எத்தனை எத்தனை ஜீவன் களைப் பார்த்திருக்கும்! அவை நித்தியம், அவர் அநித்தியம். உலகத்தில் ஒவ்வோர் உயிர் பிறக்கும்போதும் ஒரு மரணந்தான் உண்டாகிறது என்ற பேருண்மையை அறிந்த

ஞானத்தினால்தான் அவை பூமியைவிட இத்தனை உயர்ந்து மேலே உயரத்தில் நிற்கின்றனவா?

அவர் எழுந்து நின்றார். தூக்கமே வரவில்லை. அதற்காக எத்தனை நேரம் இங்கே படுத்திருக்க முடியும்? தலையணையை ஆத்திரத்துடன் எட்டி உதைத்தார். அது கைப்பிடிச் சுவர் ஓரத்தில் ஒரு பூனைக்குட்டி போல் போய் விழுந்தது. நாலடி இட்டு அதைப்பற்றி எடுத்துக்கொண்டு படிக்கட்டில் இறங்கினார். தம் அறைக்கு வந்து விளக்கை ஏற்றியதும் முதலில் காணப்பட்டது நிலைக்கண்ணாடியில் தெரிந்த கிழவர்தான். பட்டென்று விளக்கை அணைத்து விட்டுச் சிறிது நேரம் நின்று, இருள் கண்களுக்குப் பழகியவுடன் மெல்லப் படுக்கைக்குச் சென்றார்.

அடுத்த நாலைந்து நாட்களுக்கு முருகேசன் வரவில்லை. என்னவாக இருக்கும்? அவன் தகப்பனாருக்கு எப்படி இருக்கிறது?

ஒவ்வோர் இரவும் ராமுவிடம், "இன்னிக்கு உன் சிநேகிதன் வரல்லேபோல் இருக்குதே?" என்று சொல்லிவிட்டு அவன் முகத்தைப் பார்த்தார்.

"அன்றாடம் இங்கே வந்துகிட்டிருக்க அவனுக்கு வேற வேலை இல்லையா?"

"நிஜந்தான். பாவம், ஆஸ்பத்திரிக்கு அலைஞ்சிட்டிருக்கவே சரியாயிருக்கும், அவனுக்கு." ஒரு சிறு மௌனம். "அவன் அப்பா இன்னும் ஆஸ்பத்திரியில்தானே இருக்கிறார்?"

"அப்படித்தான் நினைக்கறேன்."

"என்னடா அப்படிச் சொல்றே? உனக்குத் தெரியாதா?"

"முருகேசனை அப்புறம் நான் பார்க்கவே இல்லையேப்பா."

"என்ன சிநேகிதன்டா நீ? அவனால் வர முடியாட்டிப் போனால் நீதான் அவன் வீட்டுக்குப் போய் விசாரிக்கக்கூடாதா? இல்லே, ஆஸ்பத்திரிக்கே போய் அவன் அப்பாவைப் பார்த்துட்டு வரக்கூடாதா?"

"போனவாரம் ஒரு நாள் அவரை ஆஸ்பத்திரியில் பார்த்துட்டுத்தாம்ப்பா வந்தேன். அதுக்கப்புறம் எங்கேயும் போக எனக்கு நேரம் இல்லே."

இருக்காது இருக்காது. வயதானவர்களைப் பார்க்க நேரம் இருக்குமா என்ன?

முருகேசன் ஏன் பிறகு வரவேயில்லை? ஆனால் வேறு விதமாய் இருந்தால் ராமுவுக்குத் தகவல் அனுப்பாமலா இருப்பான்?

காலையில் செய்தித்தாளைப் பிரித்தால் இப்போதெல்லாம் "இறப்பு"ப் பகுதிகள்தான் முதலில் கண்ணில் பட்டன. முக்கால்வாசிப் பேர் திடீர் திடீரென்று மாரடைப்பில் போனவர்கள். சிலருக்குப் புற்று நோயாய் இருக்கலாம். கலிபுருஷன் என்பது கான்ஸர்தான். அல்லது ஒருவேளை மார்பில் கபம் கட்டி வெகு நாள் இழுத்துக்கொண்டு கிடந்தவர்களோ?

ஆறாவது நாளும் முருகேசன் வரவில்லை. அவருக்குப் பசியும் தூக்கமும் அறவே போய் விட்டன.

"உன் நண்பனை நீ அப்புறம் பார்க்கலையா ராமு?"

"நேத்து பஸ் ஸ்டாண்ட்லே பார்த்தேன்."

அவர் கவனமாய் வேறு பக்கம் பார்த்துக் கொண்டு கேட்டார்; "எப்படியிருக்காம் அவங்கப்பாவுக்கு?"

"நிமோனியா இல்லையாம்."



"அப்பப் பிழைச்சிடுவாரில்லே?"

"ஆமா டெம்ப்ரேசர் இன்னும் அப்படியே தான் இருக்காம்."

"ஓ."

மறுநாள் பேப்பரில் முதல் பக்கத்தில் ஒரு விமான விபத்தின் செய்தி அச்சாகியிருந்தது. வடக்கே, லக்னோவுக்கு அருகிலாம். யந்திரப் பழுதாம்; இருபத்தாறு பயணிகள் உயிரிழந்தனர். விவரங்கள் வெளியாகி யிருந்தன. அவர் பத்திரிகையைத் தூக்கி எறிந்தார்.

இன்றாவது முருகேசன் வருவானா? வரவில்லை. தாமே ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்த்தால் என்ன? ஆனால் அந்த மனிதரோடு பரிசயமே கிடையாதே!

மாலையில் சற்று வெளியே உலவிவிட்டு வரலாம் என்று கிளம்பினார். தொண்டையில் ஒரு கரகரப்பு உணர்வாகி இருமல் வந்தது.

இது என்ன இருமல் புதிதாக? மறுபடியும் இருமினார்.

அடக் கடவுளே! ஏன் திடீரென்று இருமு கிறார்? சுவாசப் பையில் ஏதும் கெடுதல் இல்லையே?

நடக்க ஆரம்பித்தார். பிறகு இருமவில்லை. எச்சில் விழுங்கும்போது ஏதோ புரை ஏறி யிருக்கிறது. அவ்வளவுதான்.

வழியில் எதிர்ப்பட்ட ஒரு நண்பரோடு சற்று நின்று பேசிவிட்டு அருகிலிருந்த நேரு பூங்காவில் போய் உட்கார்ந்தார். சிறிது நேரம் அண்ணாந்து வானத்தை வெறித்துக் கொண்டிருந்தார். பின்னால் இருந்த பெஞ்சில் சிலர் அன்று காலைச் செய்தித் தாளில் வந்திருந்த விமான விபத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு குரல் பளிச்சென்று கேட்டது.

"அந்த ரெண்டு பேரை விடுங்க, கிட்டத் திட்ட எழுபது வயசாச்சு. அல்பாயுசா என்ன? கிழங்க போகிற வயசுதான். நல்ல வாலிபத்தில் எத்தனை பேர் போயிருக்காங்க பாவம்? அநியாயச் சாவு."

அவர் எழுந்து வீட்டுக்கு நடந்தார். தன்னை யாரோ மூலையில் தூக்கி எறிந்து தன் உடம்பே ஓர் அநாவசியச் சுமையாகி விட்டதுபோல் தோன்றியது

வீட்டுக்குள் நுழைந்தபோது மறுபடியும் இருமல் வந்தது. ராமு கோபித்துக்கொண் டான்.

"பனியில் மொட்டை மாடியில் படுக்க வேணாம்னு சொன்னா கேட்டீங்களா? இப்போ இருமறீங்க! பெரியவங்களெல்லாம் குழந்தை யாட்டம் படுத்தினா என்ன செய்யறது?"

அவர் தம் அறைக்குச் சென்றார். முன்பு எப்போதோ வாங்கி, இன்னும் பாதிப் புட்டி இருமல் மருந்து அலமாரியில் இருந்தது. எடுத்து ஒரு ஸ்பூனளவு உட்கொண்டார். தொண்டைக்கு அந்தக் காட்டமான இனிப்பு இதமாய் இருந்தது.

குளிர்கிறாப் போல் இருக்கிறதே? ஜுரம் கிரம் வருகிறதா? ஐயையோ..அதெல்லாம் இல்லை. பனிக்காலக் குளிர்தான். சிவராத்திரிக் குச் சிவசிவா என்று போகும் வரையில் குளிர் தானே! எதற்கும் ஸ்கார்ஃபை எடுத்துச் சுற்றிக்கொள்ளலாம். இருமல் வேறு இருக் கிறது. லேசாய்த்தான்.

பீரோவில் கம்பளி உடைகள் வைத்திருந்த இழுப்பறையைத் திறந்தபோது குப்பென்று பாச்சையுருண்டை நெடிமுகத்தில் அடித்தது. பல ஆண்டுகளுக்குமுன் கோடைதோறும் ஊட்டிக்குப் போய்க்கொண்டிருந்த காலத்தில் உபயோகித்த துணிகள், அந்தப் பழக்கம் நின்று போனபின் அவற்றைப் பாச்சையுருண் டைகள் போட்டு உள்ளே வைத்துப் பூட்டி யாயிற்று. சென்னைக் குளிருக்கு அந்த உடைகள் அதிகப்படி. ஆனால் ஸ்கார்ஃபை மட்டும் இனி வெளியிலேயே வைத்துவிடலாம். சில சமயம் அதை உபயோகிக்க நேரலாம். (வயதாகி விட்டதால். போகிற வயது)

சில்லென்று குளிர் எடுத்தது.

ஸ்கார்ஃபை எடுத்து உதறிக் கழுத்தைச் சுற்றிப் போர்த்துக் கொண்டார். தொண்டை கரகரத்து மீண்டும் இருமல் உள்ளே திமிறியது. அடக்கிக் கொண்டார். கொஞ்சம் விக்ஸ் எடுத்துக் கழுத்தில் தேய்த்துக் கொண்டார். பிறகு குனிந்தபோது உடுத்திருந்த சட்டை பார்வையில் விழுந்தது. என்ன இது, மஞ்சள் மஞ்சளாய்க் கறைகள். சரிதான். சாம்பார்க்கறை. இப்போதெல்லாம் சாப்பிடும்போது சில சமயம கை நடுக்கத் தினால் உணவு ஆடையின்மேல் தெறித்து விடுகிறது. அந்தக் கறையையே உற்றுப் பார்த் தார்; அதிலிருந்து உலர்ந்த உணவின் லேசான நாற்றம் எழுந்தது. கழுத்தில் விக்ஸின் தீவிர மணம்; ஸ்கார்ஃபில் நாஃப்தா நெடி.

தம்மிடமிருந்து முதுமையின் வாடை வீசிக் கொண்டிருந்ததாய் அவர் உணர்ந்தார்.

கணநேரம் உள்ளே மின்னலாய் ஓர் இணக்கம்.

ஏதோ கறுப்பான, உருவற்ற, எங்கும் வியாபித்த, கம்பீர வடிவம் ஒன்று எதிரே தோற்றமாய் எழுந்து நிற்பதுபோல் இருந்தது. அதற்கு முகமன் கூறி வணங்க வேண்டும்போல் இருந்தது. கட்டி அணைத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. பயமே தோன்ற வில்லை. ஓர் இயல்பான எதிர்பார்ப்பு; அதன் நியாயமான நிறைவு.

ஒரு தரம் கண்களை மூடித் திறந்தார். அவருக்கு எப்படி இருக்கிறதோ?

அடுத்த வாரம் முருகேசன் வந்தான்.


"இப்ப உங்கப்பாவுக்கு எப்படியிருக்கிறது தம்பி?" என்று கேட்டுப் பெரியவர் அவன் முகத்தைப் பார்த்தார்.

"நல்லாத் தேவலை சார். ஜுரம் இறங்கி மூணு நாளாய் நார்மலிலேயே இருக்கு. இனிமே ஒண்ணும் கவலை இல்லைன்னு டாக்டர் சொல்லிட்டார். இப்படியே இருந்திடிச்சுன்னா இந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கு அழைச் சிட்டு வந்துடலாமாம்" என்று திருப்தியும் நிம்மதியுமாய் முருகேசன் பதிலளித்தான்.

அன்று கிழவருக்கு நல்ல பசி எடுத்தது. இரவு வயிறார உண்டபிறகு, தம் அறைக்குச் சென்றார். நிலைக்கண்ணாடியில் தெரிந்த உருவத்தைக் கடந்து படுக்கையிலிருந்து ஒரு தலையணையை எடுத்துக் கொண்டார். மொட்டை மாடிக்குப் போய் நட்சத்திரங் களைப் பார்த்தவாறே மல்லாந்து படுத்துக் கொண்டார். சிறிது நேரத்துக்குப் பிறகு ராமு தந்தையைத் தேடி வந்தபோது அவர் நன்றாய்த் தூங்கிக்கொண்டிருந்தார். ✻

அமரர் ராமரத்னம் நினைவு மூன்றும் பரிசுக் குறுநாவல்

அரவிந்தன்



"ஊருக்குப் போய்ட்டு வரோம்."

"சாய்வு நாற்காலியில் சாய்ந்து செய்திப் பத்திரிகை படித்தபடியே லேசாகக் கண் அயர்ந்திருந்த வரதராஜன் சட்டென்று கண் விழித்துப் பார்த்தார். சம்பந்தி சீனிவாசனும், அவர் மனைவி அலமேலுவும் எதிரில் நின்றிருந்தார்கள். நாட்டுப் பெண் இந்து சுவரோரம் நின்றிருந்தாள். அவளும், அவர்களோடு வெளியே கிளம்ப இருப்பவள் போல உடைமாற்றிக்கொண்டு தயாராக இருந்தாள்.

இடுப்பிலிருந்து நழுவிய வேஷ்டியை இறுக்கமாகச் செருகிக்கொண்டு எழுந்து நின்றார் வரதராஜன்.

"நமஸ்காரம் பண்றேன்."

சீனிவாசன், வரதராஜனின் கால்கள் பக்கம் குனிந்து இரண்டு கைகளாலும் விரல்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு, கைகளால் தன் இரு காதுகளையும் பொத்தியபடி, "அபிவாதயே" சொன்னார்.

"அடடே! இதெல்லாம் என்ன?" என்று அவரைத் தடுத்தார்: அதற்குள் அவர் முந்திவிடவே அமைதியாக நின்று அவர் நமஸ்காரத்தையும், பிரவரத்தையும் கேட்டுக்கொண்ட வரதராஜன் அவர் தோள்களைப் பற்றித் தூக்கி நிறுத்தி "இந்தக் காலத்திலே நிறையப் பேர் சம்பந்தின்னா ஏதோ சண்டைக்காரன்னு நினைச்சுண்டு அப்படியே ஆக்கியும் விடறா! நீங்களானா...." என்றார்.

அவரை இடைமறித்த சீனிவாசன், "நீங்க என் சம்பந்தி என்கிறதைவிட எங்களைவிட வயசிலும் அநுபவத்திலும் மூத்தவர் என்பதே முக்கியம். பெரியவாளுக்கு எத்தனைக்கு எத்தனை நமஸ்காரம் பண்றோமோ அவ்வளவும் நமக்குச் சிரேயஸ்னு எங்க தகப்பனார் அடிக்கடி சொல்லுவார்" என்றார்.

சீனிவாசனே தொடர்ந்து பேசினார்.

"ஊருக்குப் போய்ட்டு வரோம். இந்துவைப் பார்த்துக்கோங்கோ." 'ஊருக்குப் போய்ட்டு வரோம்' என்று ஆரம்பித்தபோது கணீரென்று துவங்கிய குரல் இரண்டாவது வரியில் கண்ணீரோடு துவண்டது.

"நீங்க சொல்லணுமாக்கும்! இந்து உங்க பெண் மட்டுமல்ல; எங்களுக்கும் கூடத்தான்! ஜாக்கிரதையாகப் போய்ட்டு வாங்கோ. ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் போடுங்கோ!"

"இந்துவும் ரெயிலடிக்கு வரணும்னு ஆசைப்படறா!"

"பேஷாக் கூட்டிண்டு போங்கோளேன்!"

சீனிவாசன் வாசல் பக்கம் டாக்ஸி ஒன்றை அழைத்து வருவதற்காகச் சென்றார்.

அலமேலுவும், இந்துவும், வரதராஜனும் ஆளுக்கு ஒரு திசையில் பார்வையை ஓட்டியவர்களாய் மௌனமாக நின்றிருந்தார்கள்.

"ரங்கன் மாடியிலேதானே இருக்கான்?" வரதராஜனின் குரல் மெல்லிய முணுமுணுப்பாய் இறங்கியது. அவனைக் கூப்பிடவோ, தந்தை என்ற பெயரில் அவனுக்கு ஒரு வேலையை இட்டுச் செய்யச் சொல்லவோ அவருக்குத் தைரியம் கிடையாது என்பதை இந்து அறிவாள்.

ரங்கனாவது இந்துவின் மைத்துனன்; அவள் கணவன் மூர்த்தியே இல்லையே!

சட்டென்று இந்துவின் உள்ளத்தில் கசப்பாய் விழுந்து வேகமாகப் பரவத் துவங்கிய நினைவுகளை அவள் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வருஷத்துக்கு ஒரு முறை வந்துபோகும் தன் பெற்றோர்களுக்கு அங்கே உள்ளவர்கள் தரும் வரவேற்பும், காட்டும் மரியாதை

களும், அவர்களை உபசரிக்கும் முறையும், அவர்கள் ஊருக்குக் கிளம்புகிற நேரத்தில் தான் ஒருத்தி மட்டுமே அவர்களோடு ஒட்டிக் கொண்டு அவர்களை வழி அனுப்பி வைக்கிற வேதனையும் எல்லாமே இந்துவின் கசப்பான நினைவுடன் மனத்தில் வலம் வந்தன.

அவள் இதை, இவர்களை லட்சியம் செய்யாமல் இருக்கப் பழகிவிட்டாள்.

அவளைப் போல அவள் பெற்றோரும்; இவர்கள் தங்களை ஓடி வந்து வரவேற்க வேண்டும் என்றோ, கூட்டமாகக் கூடி நின்று வழி அனுப்பி வைக்கவேண்டும் என்றோ எதிர்பார்ப்பதில்லை; அல்லது அப்படி எல்லாம் எதிர்பார்க்கத் தெரியாமல் எல்லாவற்றையுமே இயல்பான ஒன்றாகவே எடுத்துக் கொள்கிறார்கள்.

இந்துவின் தந்தை சீனிவாசன் இயல்பாகவே மிகவும் சாது; பெருந்தன்மையானவர். டெல்லி செகரட்டேரியட்டில் உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவர்; யாரோடும் பகைத்துக்கொள்ளத் தெரியாதவர்.

இந்துவின் தாய் அலமேலு அவருக்குத் தூரத்து உறவு. தாய் தந்தையற்றவள். தன் தாய் மாமா வீட்டில் உறவுக்கு உறவாய் வேலைக்காரிக்கு வேலைக்காரியாய் ஒண்டிக் கொண்டிருந்தவள்.

ஒரு முறை சொந்த ஊர்ப்பக்கம் வந்த சீனிவாசன் அலுமேலுவைப் பார்க்க நேரிட்டது. அடுத்த விடுமுறைக்கு வருவதற்குள் தேவையானவர்களுக்கு எல்லாம் கடிதம் எழுதிச் சம்பந்தப்பட்டவர்களின் சம்மதத்தை எல்லாம் கேட்டு அலமேலுவைக் கல்யாணம் செய்து கொள்வதற்குத் தயாராகத்தான் வந்து இறங்கினார்.

அலமேலுவின் மாமாவும், 'ஏதோ ஒரு கடன் தங்களை விட்டுக் கழிந்தால் போதும்' என்கிறாற் போலவே அவர்கள் கல்யாணத்தை எளிமையாகக் கோவிலில் நடத்திவிட்டார். அதன் பிறகு அங்கே மாப்பிள்ளை என்ற ஹோதாவில் எந்த விதச் சிறப்பான மரியாதையையும் சீனிவாசன் பெறவில்லை. அவர் அதுபற்றிக் கவலையும் பட்டதில்லை.

அலமேலு ஆரம்ப நாட்களில் இது குறித்து நிறையக் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அப்போது எல்லாம் கூடச் சீனிவாசனே அவளைத் தேற்றுவார். அவரது பெருந்தன்மை குறித்து அலமேலுவுக்குக் கர்வங்கூட உண்டு. நாளடைவில் அவரது அந்தக் குணமும் அவளுடையதாகவும் ஆகிப் போயிற்று. மரியாதையும், உபசரிப்பும் மனிதர்களுக்குள் ஓர் அந்நியத்தன்மையே நிரந்தரமாக்கி விடுகிற மாதிரியும், யதார்த்தமாக இருப்பதும் அநாவசியமான மரியாதையும் உபசரிப்பும் அற்று வழக்கம் போல இருப்பதில் ஒருவிதமான நிறைவு இருப்பதாகவும் கூட அவளால் எண்ண முடிந்தது.

அந்த அளவுக்கு அவளும் மாறிப்போனாள்.

அவர்களுக்கும் நாலைந்து குழந்தைகள் இருந்திருந்தால் இந்த வித்தியாசங்கள் அவர்களுக்கு உறைத்திருக்கக் கூடும்.

இந்து அவர்களுக்கு ஒரே பெண்.

ஆகவே அவர்கள் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வேறு சந்தர்ப்பங்கள் எதுவும் இல்லாமல் போயிற்று. அவர்களுக்கு இந்துவின் மகிழ்ச்சியான தாம்பத்தியம் ஒன்றே பெரிய வரவேற்பாகவும், உபசரிப்பாகவும், பெரிய மரியாதை கிடைத்த மாதிரியும் தோன்றிற்று. அவர்கள் நிலையில் அவர்களுக்கு வேறு எதுவுமே வேண்டாந்தான்.

ஆனால் இந்து?

அவளுக்குப் புகுந்த இடத்தில் ஆயிரமாயிரம் தாபங்கள் உண்டு. வேறு யாரிடமும் சொல்லமுடியாத மென்மையும் அந்தரங்கமும் நிறைந்த சோகங்கள் அவளுக்கு உண்டு. அவற்றை அவள் ஒரு கடிதம் போல எழுதித் தபாலில் சேர்க்காமல் தானே வைத்திருக்கிறாள். ஒரு கடிதம் போல மட்டும் இல்லாமல் ஒரு கட்டுரை போலவும் அது இருக்கிறது. யாருக்கும் அனுப்புவதற்காக அவள் அதை எழுதவில்லை; அவளுக்காகவே!

அவளுக்கு டைரி எழுதும் பழக்கம் உண்டு. படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பது போர் அடிக்கிறது என்று அவள் தன் பெற்றோரிடம் பிடிவாதமாக அடம்பிடித்துச் சம்மதம் பெற்று, பல இடங்களுக்கு மனுக்கள் அனுப்ப ஆரம்பித்தபோது நினைவுக்காக டைரியில் குறித்து வைக்க ஆரம்பித்தாள்.

நேர்முகத் தேர்வு நடக்கும் தேதிகள், அதில் கேட்கப்பட்ட கேள்விகள், இதுபோன்ற தேர்வுகளுக்குப் போகும்போது அவளுடைய மன நிலைகள், அநுபவங்கள் ஆகியவை குறித்தும் அவள் எழுதினாள்.

அந்த டைரியின் சில பக்கங்களை வெகு நாட்களுக்குப் பிறகு யதேச்சையாகப் படித்துப் பார்த்தபோது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது அந்த அநுபவம். அப்படித் தான் அவளுக்கு டைரி எழுதுகிற பழக்கம் ஆரம்பித்தது. கல்யாணத்துக்கு முன்னால் தான் வேலை செய்த பாங்கியில் தன்னோடு வேலை செய்த திருமணமான தோழி ஒருத்தியின் டைரியை அவளுடைய சம்மதத்தின் பேரில் இந்து படித்திருக்கிறாள்.

"ஐயையோ இதையெல்லாமா டைரியில் எழுதுவது?" என்ற வெட்கம், அவமானம், ஓர் இனம் புரியாத தவிப்பு இவற்றோடு அந்த டைரியை நெருப்பு சுட்டது போல அந்தத் தோழியின் மடியில் வீசிவிட்டும் ஓடியிருக்கிறாள்.

அப்போதே, தனக்குத் திருமணமான பிறகும் தன்னுடைய டைரியில் இப்படியெல்லாம் எதுவும் எழுதக்கூடாது என்று அவள் தீர்மானித்துக் கொண்டிருந்தாள்.

டைரி என்பது ஒரு செக்ஸ் புத்தகம் போல மூன்றாம் நபருக்குத் தெரியாமல் ஒளித்து வைக்கப்படுவது என்பதில் அவளுக்குச் சம்மதம் இருக்கவில்லை. தன் டைரியைப் பிறருக்குத் தந்து அவளே படிக்கச் செய்திருக்கிறாள். தன்னைப்பற்றித் தானே வெகு நேரம் பேசவேண்டிய அவசியத்தை அது குறைத்து அவளுக்கு உதவியிருக்கிறது பல விஷயங்களின் மீது அவளுடைய அந்தரங்கமான எண்ணங்கள் என்ன என்பதை அரசியல் முதல் அடுப்பங்கரைவரை என்று எதையும் விட்டுவிடாமல் அவள் எழுதியிருக்கிறாள்.

ஆனால் தான், தன் கணவன், தன் குடும்பம் என்பவற்றைப் பற்றி எல்லாம் எந்த டைரியிலும் எழுதாமல் அவள் நினைவிலேயே வெகு நாட்களுக்கு வைத்திருந்தாள். தவிர்க்க முடியாத மன உளைச்சலில் அந்த

நினைவுகள் எப்படியேனும் வெளியேறியே தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் ஒரு கட்டுரை போன்ற உருவத்தில் எழுதி அவள் தன் பெட்டியிலேயே பத்திரமாக வைத்திருந்தாள்.

அதுவும் அண்மைக் காலங்களில் இந்துவுக்குச் சில புதிய ஏமாற்றங்களும், அவமதிப்புகளும், உதாசீனங்களும் ஏற்பட ஆரம்பித்திருந்தன.

மைத்துனன் ரங்கன், அந்தக் குடும்பத்தில் கடைக்குட்டி, செல்லப்பிள்ளை. அவன் ஒரு காரணம்.

இந்துவின் நினைவுகள் 'சட்'டென்று நின்றன.

வாசலில் டாக்ஸி சப்தம் கேட்டது. கதவைச் சாத்திவிட்டுச் சீனிவாசன் இறங்கி வந்தார். பெரிய லெதர் சூட்கேஸை அவரும் அந்த டாக்ஸி டிரைவருமே எடுத்துக் கொண்டுபோய் டிக்கியில் ஏற்றினார்கள்.

"நான் வேண்டுமானால் ஒரு கை பிடிக்கட்டுமா?" என்று வரதராஜன் சம்பிரதாயமாகக் குனிந்தார்.

"பரவாயில்லை, பரவாயில்லை" என்று அவரைத் தடுத்து விட்டார் சீனிவாசன்.

அலமேலுவும், இந்துவும் ஆளுக்கு ஒன்றாகச் சிறிய பைகளை, ஹோல்டாலை, வடாம் வற்றல், சாம்பார் பொடி நிறைந்த டப்பாக்களை எடுத்துக் கொடுக்க, சீனிவாசன் அவற்றை வாங்கி வண்டிக்குள் அடுக்கினார்.

தன் அம்மாவையும் அப்பாவையும் பார்த்தே பொறுமையாக இருந்தது இந்துவுக்கு. கிட்டத்தட்ட இருபத்தைந்து வருஷத் தாம்பத்தியம். ஒரு நாளாவது ஒரு சந்தர்ப்பத்திலாவது அவர்கள் குரல் அதிர்ந்து பேசி இந்து பார்த்ததில்லை. அவர்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டதே இல்லையோ என்றுகூட அவள் ஆச்சரியப்பட்டிருக்கிறாள்.

அவளுடைய அநுபவத்தில் அவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசாமல் மௌனமாக இருந்த நாட்களை மட்டும் அவள் அறிவாள். ஏன் இந்த மௌனம் என்பதும் அவளுக்குத் தெரியாது. எப்படி அவர்கள் சமாதானம் ஆனார்கள் என்பதும் அவளுக்குத் தெரியாது. வெயில் காலத்தில் அபூர்வமாக வீசும் தென்றலை நிரந்தரமாக்கிக் கொண்டாற் போன்ற அபூர்வமான தாம்பத்தியம் அவர்களுடையது.

தன்னைப்பற்றியும் கணவன் மூர்த்தியைப் பற்றியும் ஒரு கணம் தோன்றிய நினைவைச் 'சட்'டென்று அழித்துக் கொண்டு, டாக்ஸியில் சாமான்களை ஏற்றிவிட்டு, "மொத்தம் ஏழு" என்று அம்மாவிடம் சொல்லிக்கொண்டிருந்த தந்தையைப் பார்த்தாள் இந்து.

ஹாலில் ரேடியோப் பெட்டியுடன் ஐக்கியமாகிவிட்டவள் போல உட்கார்ந்து அவர்களைப் பார்த்ததும் பாராததுமாகச் சினிமாப் பாடலுக்கு விரலைச் சொடுக்கி ரசித்தபடி உட்கார்ந்திருந்த நிர்மலா வேண்டாவெறுப்பாக வாசல் பக்கம் வந்தாள்.

"போய்ட்டு வரோம் நிர்மலா. மன்னியை பார்த்துக்கோ!" சீனிவாசன் சொன்னார்.

நிர்மலா மௌனமாகத் தலையை ஆட்டினாள். மாடியில் ரங்கன் ஜன்னல் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான்.



குறுநாவலின் ஆசிரியர் திரு அரவிந்தன்

"போய்ட்டு வரோம்."

சீனிவாசன் கைகளை உயர்த்தி அசைத்தார். ஜன்னலுக்கு வெளியே ரங்கனின் கை இரண்டு முறை அப்படியும் இப்படியும் ஆடிவிட்டு மறைந்தது.

"திமிர் பிடித்தவர்கள்!" இந்து மனசுக்குள் கறுவிக் கொண்டாள். ஒரு மரியாதைக்காகவாவது வாசல் வரை வந்து வழியனுப்ப முடியாமல் பெரிய படிப்புப் படிக்கிறானே?

சீனிவாசன் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை. "ம், புறப்படலாமா?" என்றார். வண்டிக்குள் ஏறி அமர்ந்து கொண்டார்.

"எங்களை அனுப்பிவிட்டு நீ தனியா வரணுமே! வேணும்னா நீயும் இங்கேயே இருந்துடேன் இந்து. நாங்கள் மட்டும் போய்க்கிறோம்."

பேசிக்கொண்டே இந்துவைப் பார்த்த அலமேலு மௌனமாகக் கதவைத் திறந்துவிட்டு, இந்து ஏறிக்கொள்ள இடமளித்து நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

டாக்ஸி கிளம்பிவிட்டது. "வரோம் மாமா!" சீனிவாசனும் அலமேலுவும் வரதராஜனைப் பார்த்துக் கைகூப்பி விடை பெற்றுக் கொண்டார்கள்.

நடுவழியில் அலமேலு கேட்டாள்: "ரிசர்வேஷன் டிக்கெட் எல்லாம் பர்ஸுக்குள் எடுத்து வைச்சிண்டேளா?"

சீனிவாசன் பர்ஸை எடுத்து டிக்கெட்டுகள் இருக்கின்றனவா என்று சரிபார்த்துக் கொண்டார்.

'நாம் எதற்காக இவர்களோடு வருகிறோம்?' என்று இந்துவுக்குக் கோபமும் ஏமாற்றமும் தோன்றின.

எவ்வளவோ விஷயங்களைத் தன் பெற்றோரிடம் கொட்டித் தீர்த்துவிட வேண்டும் போல ஒரு தவிப்பு அவளுக்கு இருந்தது. தன்னைப்பற்றி, தன் கணவனைப்பற்றி, தன் மைத்துனன் ரங்கனைப்பற்றி, சின்ன மைத்துனி நிர்மலாவைப்பற்றி, பெரிய மைத்துனி கல்யாணமாகிப் புக்ககம் போயிருக்கும் பானுவைப்பற்றி, அவள் கல்யாணத்துக்காக அவளும் மூர்த்தியும் சேர்ந்து பட்டிருக்கிற

கடமைப்பற்றி, அந்தக் குடும்பத்தில் தான் ஒரு சம்பாதிக்கிற யந்திரமாகிப் போயிருக்கிற அவலம்பற்றி, தன் மாமியார் பத்மாவதி (தற்சமயம் அவள், மகள் பானுவோடு இருக்கிறாள்)யின் அதிகாரம்பற்றி எவ்வளவோ பேசவேண்டும் போல அவளுக்கு இருந்தது.

வேறு யாரிடமும் சொல்ல முடியாத அவள் அந்தரங்கங்களைக் குறைந்தபட்சம் தன் தாயிடமாவது பகிர்ந்துகொள்ளமுடியும் என்று அவள் நம்பினாள்; பகிர்ந்துகொள்ள ஆசைப்பட்டாள்.

சீனிவாசனும், அலமேலுவும், டில்லியில் தங்கள் வீடு எப்படி இருக்கப்போகிறதோ என்ற கவலையில் மூழ்கியிருந்தார்கள்.

இந்துவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'இப்படியே நடுவழியில் டாக்ஸியை நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டு விடலாமா?' என்றுகூட நினைத்தாள். தன் தாயும் தந்தையும் கல்யாணம் என்ற மீளமுடியாத ஒரு சிறையில் தன்னை அடைத்துவிட்டு அவர்கள் மட்டும் நிம்மதியாக ஒதுங்கி விட்டாற்போல அவளுக்குக் கோபம் வந்தது. 'அவர்களுமே இந்தக் கல்யாணம் என்ற பந்தத்தில் தான் கட்டுண்டிருக்கிறார்கள்' என்று எண்ணிப் பார்க்கிற நிதானம் அவளிடம் இருக்கவில்லை. அவளுடைய இந்தத் தவிப்புகளுக்கு நியாயமான சில காரணங்களும் உண்டு.

சின்ன வயதில் இருந்தே ஒரே பெண் என்பதால் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டவள் இந்து. படிப்பில், விளையாட்டில், பாட்டில் என்று எதிலுமே அவளுக்கென்று கவர்ச்சியான ஆர்வமும் திறமையும் இருந்தன. முத்துமுத்தாக எழுதுவாள். பள்ளியில் அவள் ஆசிரியை அவளுடைய அழகான கையெழுத்துக்காகவே தன்னுடைய நோட்ஸை அவளிடம் தந்து எழுதித்தரச் சொல்வாள். நன்றாகவும் படிப்பாள். எல்லா ஆசிரியைகளுக்குமே அவளைப் பிடிக்கும். மற்றப் பெண்களைக் கண்டிக்கும்போது தன்னை உதாரணம் காட்டி, 'அவளும் உன்னைப்போல ஒருத்திதானே? அவள் எப்படி இருக்கிறாள் பார்!' என்றோ, 'அவளும் உன்னைப் போலத் தானே? அவள் எவ்வளவு அருமையாகப் படிக்கிறாள் பார்?' என்றோ ஆசிரியைகள் சொல்லும்போது இந்துவுக்குப் பெருமையாக இருக்கும். அவர்கள் அவளுடைய அழகுக்காக, அறிவுக்காக, படிப்பில் முதல் மார்க் வாங்கும் திறமைக்காக, அழகான கையெழுத்துக்காக, அவள் கணீரென்ற குரலில் பாடும் பாட்டின் இனிமைக்காக, புதிது புதிதாகக் கற்றுக் கொண்டே இருக்கவேண்டும் என்று அவளிடம் இயல்பாகவே உள்ள ஆர்வத்துக்காக, அவளைப் பாராட்டிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தன் மனத்தின் ஆழமான பகுதியில் தூண்டப்பட்ட ஒரு சந்தோஷத்தை அவள் உணர்ந்திருக்கிறாள்.

பள்ளி வாழ்க்கையில் மட்டும் அல்லாமல் கல்லூரியில் படிக்கும்போதும், பிறகு வேலைக்குச் சேர்ந்த பிறகுங்கூடத் தன் திறமைக்காகத் தன்னைப் பிறர் பாராட்டும்போது அவள் இதே வகையான சந்தோஷத்தைத் திரும்பத் திரும்ப உணர்ந்திருக்கிறாள். அதற்கு அவள் தகுதியானவளாகவும் இருந்திருக்கிறாள்.

பள்ளியில் படிக்கும்போதே வீணை பயின்றாள். பிறகு கொஞ்ச நாட்கள் நாட்டியம் பயின்றாள். ஜர்மன் எம்பஸியில் ஜர்மானிய மொழி பயின்றாள். வேலை கிடைத்த பிறகும் சும்மா இருக்கவில்லை. அதன் பிறகு சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் படித்தாள். சும்மா இருப்பது என்பதே அவளால் முடியாத ஒன்று; எதையாவது புதிது புதிதாகக் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

அவள் சிநேகிதிகள் மனம்விட்டுப் பேசும் போது அவளுக்கு அமையப் போகும் மண வாழ்க்கை குறித்து அவளைவிட அதிகமான கற்பனைகளும் எதிர்பார்ப்புகளும் நிரம்பியவர்களாய்ப் பேசினார்கள். இந்து, அந்த எதிர்பார்ப்புகளுக்கு எல்லாம் அருகதையானவள் தான் என்றும் அவர்களே ஊர்ஜிதம் செய்தார்கள். இவற்றையெல்லாம் கேட்கும்போது இந்துவின் மனசுக்குள் வர்ண ஜாலம் நிறைந்ததொரு கற்பனை மலரும்.

தன் மணவாழ்க்கையில் தனக்குக் கணவனாக வரப்போகிறவனைக் குறித்தும், அவன் அங்க லட்சணங்கள் குறித்தும் அவளுக்குப் பிரமாதமான எதிர்பார்ப்போ கற்பனையோ இருந்ததில்லை.

ஆனால் அவனுடைய குணம், யோக்கியத் தன்மை, தன்னைப் புரிந்து கொள்ளும் திறமை இவற்றின் மீது உண்மையாகவே அவளுக்கு நிறைய எதிர்பார்ப்பும் கற்பனையும் இருந்தன.

மூர்த்தி; தென்னிந்திய ரெயில்வேயின் தலைமைக் காரியாலயத்தில் அவனும் ஒரு ஸ்டெனோவாக இருக்கிறான். அவன் குணம், யோக்கியத்தன்மை இவை குறித்து இந்துவுக்கு எவ்வளவு பெருமையும் கர்வமும் உண்டோ அவற்றைவிட அதிகமாகவே அவன் தன்னைப் புரிந்துகொள்ளாததில் அவளுக்கு நிறைய மனக்குறை உண்டு.

சின்னதும் பெரிதுமாக எவ்வளவோ விஷயங்கள் இதற்கு ஆதாரமாக இந்துவின் மனத்தில் இருந்தன. 'கல்யாணமாகி வந்த நாளிலிருந்து' என்று ஆரம்பித்தால் நிறையச் சொல்ல முடியும் அவளால்.


திருமண வாழ்வின் மீது ஓர் இளம் பெண்ணுக்கு உள்ள நியாயமான சில எதிர்பார்ப்புகளில் இந்து விலக்கானவள் அல்ல.

அந்தக் குடும்பத்தினிடம் மருமகள் என்ற முறையில் அவளுக்கு உண்டான பொறுப்புகளைத் தன் சக்திக்கு மீறியே நிறைவேற்றி வருவதாக அவளுக்கு நிம்மதி உண்டு. இதிலே கர்வங்கூட அவள் பட்டது உண்டு.

மூர்த்தியின் சகோதரி பானுவின் திருமணத்துக்கு வரதட்சிணைக்கான முழுத் தொகை ஐயாயிரத்தையும் அவள்தான் தந்தாள். அவள் பாங்கியில் கடன் வாங்கியும், திருமணத்துக்கு முன்பே இருந்த தன் சொந்தச் சேமிப்பில் பெற்றும் அந்தப் பணத்தை அவள் தந்தாள்.

குறைந்தபட்சம் பானுவிடமாவது "நன்றி" என்ற வார்த்தையை அவள் எதிர்பார்த்தாள். மூர்த்தி உட்பட அனைவருமே இது அவளுடைய கடமை என்கிறமாதிரி விட்டுவிட்டபோது தான் முதல் முதலாக அவள் மனத்தில் சோகம் ஆரம்பித்தது.

மூர்த்தியின் தம்பி ரவிகன், மற்றும் நிர்மலா இருவருமே கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார்கள். வரதராஜனின் சொற்பப் பென்ஷன் தொகை அவர்கள் வீட்டு வாடகைக்குக்கூடப் போதாது. தன் கணவனின் சம்பளமும் தன் சம்பளமுமே அந்தக் குடும்பத்



தையே நடத்திக் கொண்டு போகின்றன என்பதை இந்து அறிவாள்.

வரதராஜனின் சொந்த ஊரிலிருந்து சாப்பாட்டுக்கு நெல் மட்டும் வரும். இதையே இந்துவின் மாமியார் பத்மாவதி பெரிதாகப் பேசுவாள். அந்த நெல் மட்டும் வராவிட்டால் அந்தக் குடும்பமே வீதியில் நிற்கும் என்று சொல்வாள். அப்போது எல்லாம் சூடாக ஏதேனும் சொல்லவேண்டும் போல இந்துவின் மனம் துடிக்கும். "சென்னையிலே இருபத்தைந்து லட்சம் பேர் இருக்கிறோம். உங்க ஊர் நெல் வராம மத்தவா எல்லாம் பிழைக்கலையா? அதுபோல நாமும் பிழைத்துவிட்டுப் போகிறோம்" என்று சொல்லிவிடவேண்டும் என்று அவளுக்கு ஆசையாக இருக்கும். ஆனால் பேசமாட்டாள்.

அபூர்வமாகச் சில சமயம் மூர்த்தியிடம் சொல்லுவாள். மூர்த்தி இதையெல்லாம் காதிலேயே போட்டுக்கொள்ள மாட்டான்.

அவன் இதைத் தன் காதில் போட்டுக் கொள்ளாதது அவளுக்குப் பெரிய வருத்தம் இல்லை. அவளுக்கே இது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் அல்ல.

ஆனால் நிச்சயம் கேட்கப்படவேண்டிய சில விஷயங்களில் அவன் காட்டிய அசிரத்தையும் அலட்சியமுமே அவளால் தாங்க முடியவில்லை.

மூர்த்திக்கு யூனியன் நடவடிக்கைகளில் அளவுக்கு மீறிய ஆர்வமும் உற்சாகமும் நிறைந்த ஈடுபாடு இருந்தது. அவனே அந்தப் பகுதி யூனியன் காரியதரிசியாகவும் இருந்தான். தங்கள் யூனியனைச் சேர்ந்த நபர் எங்கே எப்படி எந்த விதமாகப் பாதிக்கப்பட்டாலும் ஓடிச் சென்று உதவுவது அவன் வேலையாகப் போயிற்று. அதுமட்டும் அல்லாமல் நிர்வாகம் சில ஊழியர்கள்மீது நடவடிக்கையோ, விசாரணையோ செய்யும்போது அவர்கள் சார்பில் தானே வழக்காடி அவர்களைக் காப்பாற்றவும் வேண்டி இருந்தது. எல்லா விதிகளும் அவனுக்கு அற்றுப்படி. எந்த எந்தத் துறைகளில் எப்படியெல்லாம் தவறுகள் நடக்கும், எது தவறு, எது தெரிந்தே செய்த குற்றம் என்பவை எல்லாமே அவனுக்குத் தெரியும். அவனுடைய பொறுமையும் நிதானமும் சில சமயம் மற்றவர்களின் பொறுமையை அளவுக்குமீறிச் சோதித்தது உண்டு. ஆனால் இறுதியில் அவன் பெரும்பாலும் ஜயித்திருக்கிறான்.

இந்துவின் விஷயத்திலும் அவன் காட்டிய அளவுக்கு மீறிய பொறுமைதான் அவளை இத்தனை தூரம் பாதித்துவிட்டது.

சாதாரணப் பெண்களைப் போல வாரம் ஒரு சினிமா, டிராமா, பீச் என்றெல்லாம் கணவனோடு சுற்றவேண்டும் என்ற இந்துவின் ஆரம்பகால ஆசைகள் தளிரிலேயே கருகி உதிர்ந்து போயின. இந்து இதற்காக வருந்தவில்லை.

தாம்பத்தியம் என்பது இரண்டு இதயங்களின் தவிப்பாக, ஆசையாக, உணர்வுகளின் வேகத்துக்கு ஒரு வடிகாலாக இருக்கும்; அப்படியெல்லாம் எதுவும் இருக்கவில்லை.

இந்துவால் கிடைத்ததைக் கொண்டு திருப்திப்பட முடிந்தது. அவளும் ஓர் அறிவுஜீவியாகவே இருந்துவிட்டதால் இந்த விஷயத்தில் அவளுக்கும் அவள் கணவன் மூர்த்திக்கும் லேசான ஒற்றுமைகூட இருப்பதாக அவளால் நினைக்க முடிந்தது.

அந்தக் குடும்பத்தின் மூத்தபிள்ளையாக இருந்து மௌனமாகவே குடும்பச் சுமைகளைச் சுமக்கிற தன் கணவனுக்கும் சில ஏக்கங்கள் இருக்கும் என்று அவள் எதிர்பார்த்தாள்.

அந்தக் குடும்பத்தில் அவனுடைய சகிப்புத்தன்மை மிகுந்த தலைமையை, பொறுப்பு மிகுந்தபோதும் சலித்துக்கொள்ளாத நிதானத்தை அவள் வாய்விட்டே பாராட்டினாள்.

மூர்த்தி அதையும் லட்சியம் செய்யவில்லை. தன்னுடைய வேலை, தன் குடும்பம், தன் மனைவி, தம் பொறுப்புகள் ஆகிய விஷயங்களில் மீது யந்திரகதியான இயக்கத்தை மட்டுமே இந்து அவனிடம் பார்க்க முடிந்தது.

அவள் எதிர்பார்த்த கணவன், ஆசைப்பட்ட கணவன் ஓர் யந்திரமல்ல. இதுதான் இரண்டாவதாக அவள் மனத்தில் தோல்வி உணர்வை ஏற்படுத்தியது.

இவை அனைத்தையும் விட முக்கியமாய் இந்துவின் தாபங்களுக்கு வேறு குடும்ப ரீதியான காரணங்களும் உண்டு.

காலேஜ்விட்டுத் திரும்பும்போது ரங்கன் நாலைந்து பேருடன் சிகரெட் பிடித்துக் கொண்டு வந்ததை டவுன் பஸ்ஸில் இருந்து இந்து பார்த்தாள். அதை அவள் தன்

கணவனிடம் கூறி அவனைக் கண்டிக்கும்படி சொன்னாள்.

பின் ஒரு சமயம் சாந்தி தியேட்டர் வாசலில் புதிதாக வெளியான ஒரு சினிமாவுக்கு ரிஸர்வேஷன் செய்த டிக்கெட்டைப் பிளாக்கில் விற்றுக்கொண்டிருந்தவனிடம் இரண்டு மூன்று பெண்கள் புடைசூழ நின்று பேரம் பேசி, அவன் அவர்களை அழைத்துக்கொண்டு தியேட்டருக்குள் செல்வதைப் பி. எம். ஜி. வாசலில் நின்று அவள் பார்த்தாள். இதையும் தன் கணவனிடம் சொன்னாள்.

நிர்மலாவின் கல்லூரிப் புத்தகத்தில் தான் பார்த்த புகைப்பட இளைஞன் யார் என்பதை விசாரித்து, ஏதேனும் தவறாக இருந்தால் அதை ஆரம்பத்திலேயே தடுத்துவிடவேண்டும் என்றும் சொன்னாள்.

மூர்த்தி எதையுமே காதில் போட்டுக் கொள்ளவில்லை. இதற்காக யாரையும் கண்டிப்பதில் அவனுக்கு விருப்பம் இல்லை.

தானும் தன் கணவனும் வேர்வை சிந்திச் சம்பாதித்துப் போடும் பணம், கொஞ்சமும் நன்றி உணர்வு இல்லாமல் வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது என்று நினைத்தபோதே, அவளுக்குக் கல்யாணம், தாம்பத்தியம், குடும்பம் எல்லாமே, ஏதோ ஒரு கட்டத்தில் வியாபாரம்போலத் தோன்றிச் சலிப்பூட்டின.

எந்த விஷயத்திலும் பற்று இல்லாமல் ஜடமாய் மாறிவிட்ட தன் கணவனிடம் அவள் இனி எதைப்பற்றியும் முறையிடுவதில்லை என்று நிச்சயித்துக் கொண்டாள்.

ஆனாலும் மனம் கேட்காமல் தன் மாமனாரிடம் சொன்னாள். அவர் சொன்ன பதில் அவளுக்கு இன்னும் அதிர்ச்சியாக இருந்தது.

''இது ஒரு வயசு, இது ஒரு காலம். இந்த வயசில் இந்தக் காலத்தில் இவர்கள் இப்படித்தான் இருப்பார்கள். இவர்கள் இப்படியெல்லாம் இருப்பது ஆச்சரியம் அல்ல. இப்படி இல்லாமல் இருந்தால்தான் ஆச்சரியம். இது இரண்டுங்கெட்டான் வயசுங்கூட! தாங்கள் இன்னும் குழந்தைகள் அல்ல என்று நிரூபிக்கத் துடிக்கிற வேகம். ஏதாவது அசட்டுத்தனமாகச் செய்வார்கள். இதற்காகப் பெரியவர்கள் அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தைப் பிரயோகித்தால் இதையே திருட்டுத்தனமாகச் செய்யத்தான் தூண்டுமே தவிர அவர்களைத் திருத்த உதவாது. நேரம் வரும்போது அவர்களே மாறிப்போவார்கள்.''

இந்தப் பதிலைக் கேட்டு இந்து பிரமித்துப் போனாள். அதைவிட ஆச்சரியம், தங்களைப்பற்றித் தங்கள் தகப்பனாரிடம் பேசிய விஷயம் ரங்கனுக்கும் நிர்மலாவுக்குமே தெரிந்து போனதுதான். இதை இந்து கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ரங்கனுக்கும் நிர்மலாவுக்கும் அவள் எதிரியைப் போல ஆனாள்.

அவர்கள் அவளோடு, அவள் சம்பந்தப்பட்ட விஷயங்களோடு தங்களுக்கு உண்டான அனைத்தையுமே கத்தரித்துக் கொண்டார்கள். வீட்டில் தனியாக இருக்க நேரிட்டாலும் அவர்கள் அவளோடு பேசுவதில்லை.

இதோடு நின்றிருந்தாலும் பரவாயில்லை. ரங்கன் அவள்மீது வஞ்சம் கொண்டவன் போல யாரும் அறியாமல் அவள் மட்டும் உணரும்படி சில விஷமங்களையும் செய்யலானான்.

அன்று ஒரு நாள் அலுவலகத்தில் இடைவேளை நேரம். பசியோடு சாப்பிட ஆரம்பித்த இந்துவுக்குத் தான் கொண்டுவந்த சாம்பாரில் இவ்வளவு உப்பு எப்படி வந்திருக்கும் என்று ஆரம்பத்தில் புரியவில்லை.

வாங்கி ஒரு வாரங்கூட ஆகாத புத்தம்புதுச் செருப்பில் பெருவிரல் வார் எப்படி அறுந்து போயிற்று என்பதும் அவளுக்குப் புதிராகவே இருந்தது. பஸ் ஸ்டாப் ஓரம் கடை போட்டிருக்கும் கிழவன் செருப்பைப் பார்த்துவிட்டு, ''வார் அறுந்து போகலையம்மா-யாரோ அறுத்திட்டாங்க'' என்றபோது லேசான சந்தேகம் பொறி தட்டிற்று.

அதற்குத் தகுந்தாற்போல் காலையில் தான் அலுவலகத்துக்குக் கிளம்பும்போது குரூரம் நிறைந்த முகத்தோடும் விஷமத்தனமான சிரிப்போடும் ரங்கன் மாடிப்படிகளில் நின்றிருந்ததும் அவள் நினைவுக்கு வந்தன.

அவளுக்கு இப்போதுதான் ஒவ்வொன்றாகப் புரிய ஆரம்பித்தது.

அந்த வீட்டில் ஒரு மனைவி என்ற விதத்தில், ஒரு மருமகள் என்ற முறையில், ஓர் அண்ணி என்ற நிலையில் எதிலுமே அவளுக்கு நிம்மதி இருக்கவில்லை.

அவள் கணவனை உள்ளிட்டு யாராலும் அவளைப் புரிந்துகொள்ள முடியவில்லை; யாரோடும் அவளுக்குப் பாசமும் இல்லை.

இந்த யந்திரகதியான வாழ்க்கையில் சலிப்பு நிறைந்த ஏமாற்றமே அவளுள் நிறைந்திருந்தது. இதுதான் வாழ்க்கை என்று முன்பே தெரிந்திருந்தால் பேசாமல் டில்லியிலேயே அப்பா அம்மாவுடன் நிம்மதியாக இருந்திருக்கலாமே என்றுகூட அவள் நினைத்தாள்.

''இந்து, ஏய் இந்து!''

எது எதையோ நினைத்துக் கொண்டு தன்னை மறந்து உட்கார்ந்திருந்த இந்து சட்டென்று சுயநினைவு வந்தவளாய்த் திரும்பிப் பார்த்தாள்.

டாக்ஸி சென்ட்ரலில் நின்றிருந்தது. போர்ட்டர்கள் நான் நீ என்று சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். கடைசியாகச் சீனிவாசனும், அந்த டிரைவருமே சாமான்களை இறக்கிச் சென்றார்கள்.

அந்தப் போர்ட்டர்களுக்குள் அடிதடி சண்டை ஆகிவிடுமோ என்று இந்துவுக்குப் பயமாக இருந்தது.

நல்ல வேளையாக அவர்களே சமாதானம் ஆனார்கள். சீனிவாசன் இந்துவுக்கு ஒரு ப்ளாட்ஃபாரம் டிக்கெட் வாங்கச் சற்று முன்னால் போனார்.

இன்னும் அதிகமாய்ப் போனால் அரைமணி நேரத்தில் அப்பா அம்மா இருவரையும் பிரிந்து மீண்டும் தனக்குக் கொஞ்சமும் பிடிக்காத அந்த வீட்டில் அந்த மனிதர்கள் நடுவில்..! நினைக்கும்போதே இந்துவின் கண்கள் கலங்கின.

எல்லாவற்றையும் அம்மாவிடம் கொட்டிவிட வேண்டும்போல ஆசையாக இருந்தது.

''அம்மா, எனக்கு இங்கே எதுவுமே பிடிக்கலே. பேசாம டெல்லிக்கே வந்துடலாமான்னு யோசிச்சுண்டு இருக்கேன்!'' இது சரியான ஆரம்பமாக இருக்கும் என்று இந்துவுக்குத் தோன்றியது. சொன்னாள்.

அதற்கு அவள் தாய் சொன்ன பதில் அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

"அசடு! டெல்லிக்கு வந்து அங்கே என்ன செய்யப்போறே?"

"இங்கே என்ன செய்யறேனும்?"

"உளறாதே இந்து!" அலமேலுவின் குரலில் கொஞ்சம் உஷ்ணம், கொஞ்சம் கண்டிப்பு, கொஞ்சம் கொஞ்சல் எல்லாமே இருந்தன.

"நிஜமாவே எனக்கு எதுவுமே பிடிக்கலேம்மா!"

"எல்லாம் அப்படித்தான் இருக்கும். போகப் போகச் சரியாயிடும். அசடு மாதிரி எல்லாம் பேசக்கூடாது. சமர்த்தா இருக்கணும்!"

"உனக்கு என்ன, பேசுவாய்!"

"ஏன், உனக்கு மட்டும் என்ன? மாப்பிள்ளைக்கு என்ன குறைச்சல்? மாமா, மாமி, மச்சினன், நாத்தனார், என்று குடும்பத்தோட இருக்கக் குடுத்து வைச்சிருக்கணும். என் மூஞ்சியை நீ பார், உன் மூஞ்சியை நான் பார்க்கிறேன் என்று இருக்கக்கூடாது. இதெல்லாம் இப்போ உனக்குப் புரியாது. நாளைக்கு உனக்கே நாலஞ்சு குழந்தைகள் ஆயிட்டா அப்போதான் இவாளோட அவசியமும் உதவியும் உனக்குப் புரியும். பேசாம பெரியவா பேச்சைக் கேட்டுண்டு சமர்த்தா இரு."

இந்துவுக்கு அங்கிருந்து பேசாமல் திரும்பி விடலாமா என்று தோன்றியது. 'அது டெல்லியாக இருந்தாலும், உலகத்தின் எந்த மூலையாக இருந்தாலும் எல்லாத் தாயின் இதயமும் ஒரே போலத்தான் இருக்கிறது. அவர்கள் சொல்லும் புத்திமதிகளும் ஒரே மாதிரி.'

"அங்கே உங்களுக்குப் பாரமா வந்துடுவேனோன்னு பயமா இருக்கா, அம்மா?"

"இந்து, என்ன சொல்றே?"

சீனிவாசன், இந்துவுக்கும் மனைவிக்கும் இடையில் நின்று இருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

ஒரு நிமிஷ மௌனத்துக்குப் பிறகு, "இந்துவும் டெல்லிக்கு வராளாம்" என்றாள் அலமேலு.

"வரட்டுமே! மாப்பிள்ளையும் வர்றாராமா?" சீனிவாசன் விகற்பமில்லாமல் கேட்டார்.

அவர் கேள்வி இந்துவுக்கு இன்னும் கோப மூட்டுவதாகவும் ஏமாற்றமாகவும் இருந்தது.

தன்னைத் தனக்காகவே விரும்பி வரவேற்க இவர்களால் ஏன் முடியவில்லை என்பது அவளுக்குப் பெரும் புதிராகவே இருந்தது.

"அதோ மாப்பிள்ளை!" உற்சாகமாய்க் கூவினார் சீனிவாசன். மூர்த்தி வந்துகொண்டிருந்தான். தன் கணவனைப் பார்த்தபோது தங்களோடு நெருங்கிப் பழகிய ஒரு குடும்ப நண்பரைச் சந்திப்பதைப் போல இருந்தது இந்துவுக்கு. அவருடைய ஆசை, நோக்கம், வாழ்க்கை எல்லாமே ஒரு கோணத்திலும், தன்னுடைய எண்ணங்கள் எதிர்க்கோணத்திலும் இருப்பதை அவள் உணர்ந்தாள். "எவ்வளவுதான் பிரிந்திருந்தாலும் ஒற்றுமையான அபிப்பிராயங்கள் மனிதர்களை இணைக்கவே செய்கின்றன. எவ்வளவுதான் அருகில் நெருங்கி இருந்தாலும், அபிப்பிராய பேதங்கள் மனிதர்களை அவர்கள் எவ்வளவுதான் பிரிக்க முடியாத உறவினர்களாக இருந்தாலும் அவர்களிடையே ஓர் இடைவெளியைத் தவிர்க்க இயலாமல் ஏற்படுத்தியே தீருகிறது" என்று இந்துவின் மனம் அவளுக்குள்ளாகவே கூறிக்கொண்டது.

அவள் பார்வை அருகில் விளம்பரத்துக்காக வைக்கப்பட்டிருந்த ஷோ கேஸ்களின் மீது லயித்தது.

மூர்த்தி, சீனிவாசன், அலமேலு மூவரும் பேசிய பேச்சுக்கள் எதுவுமே அவள் காதில் விழவில்லை. அப்படிக் கூர்ந்து கேட்கிற அளவுக்கு முக்கியமான எதையும் அவர்கள் பேசிவிட மாட்டார்கள் என்றும் இந்து அறிவாள்.

அவள் பார்வையில் அந்த ஷோ கேஸில் இருந்த பொருள்கள் வரிசையாக வலம் வந்தன.

பவுடர்கள், ஹேர் ஆயில்கள், ஸ்நோ, ஷாம்ப்பூ, லிப்ஸ்டிக், நெற்றிப் பொட்டுகள், நகப்பாலிஷ்கள், அழகான நகைப் பெட்டிகள், அழகுச் சாதனங்களை எடுத்துச் செல்லப் பெட்டிகள், கண்ணாடிகள், விதவிதமான காதணிகள்.

மற்றொரு பக்கம் பிஸ்கட்டுகள், சாக்லெட்டுகள். சிறிதும் பெரிதுமான பாக்கெட்டுகள்! வாயில் நீர்வழிய மில்க் சாக்லெட்டைக் கடித்துத் தின்னும் சின்னக் குழந்தை ஒன்றின் 'கட் அவுட்' ஒன்று.

இரவு விளக்குகள், மின் விசிறிகள், இஸ்திரிப் பெட்டி, கிறிஸ்துமஸ் மரத்தில் பூத்த வண்ண விளக்குகள், சிறிதும் பெரிதுமான டிரான்ஸிஸ்டர் ரேடியோக்கள், கைக்கு அடக்கமாக ஒரு சிகரெட் பாக்கெட்டை விடக் கொஞ்சம் பெரிதாக — அதுவும் ரேடியோவா...? இந்து கொஞ்சம் அருகில் போய்ப் பார்த்தாள்.

"சிங்கிள் பாண்ட் டிரான்ஸிஸ்டர் அது. நீ பார்த்ததில்லையா இந்து?" சீனிவாசன் அவள் அருகில் வந்தார்.

அவர்களுக்குப் பேசுவதற்கு விஷயம் அவ்வளவு சீக்கிரமாகவா தீர்ந்துவிட்டது என்பதைப் போல இந்து அவர்களை நிமிர்ந்து பார்த்தாள்.

மூர்த்தியைப் பார்த்தபோது ஏனோ அவளுக்கு அந்தச் சிங்கிள் பேண்ட் டிரான்ஸிஸ்டரின் நினைவு வந்தது.

மனைவி, குடும்பம், தான் என்ற எந்த நினைவும் இல்லாமல் தனக்கு என்று நிர்ணயித்துக் கொண்ட ஒரே வழியிலேயே இயங்கிக் கொண்டிருக்கும் தன் கணவனும் இது போல ஒற்றை அலைவரிசை தானோ என்று நினைத்தாள். ரேடியோக்களைப் போலவே மனிதர்களுக்கும் அலைவரிசைகள் உண்டோ என்று அவள் மனம் வேடிக்கையாக எண்ணமிட்டது.

நீல நிறத்தில் உடையணிந்த ஒருவன் மூர்த்தியை நோக்கிக் கரங்கூப்பிக் கும்பிட்டபடி அருகில் வந்து நின்றான். மூர்த்தி அவனோடு பேசினான்.

அலமேலு இந்துவின் தோள்களை ஆறுதலாகப் பற்றித் திருப்பினாள். "கண்டதை எல்லாம் நினைத்து மனத்தைக் குழப்பிக் கொள்ளாதே. இந்தக் காலத்துப் பெண்கள் எல்லாமே உன்னைப் போலத்தான் இருக்கிறார்கள். வெளியே போய் நாலு எழுத்துப் படிக்கத் தெரிந்து கொண்டதும் அவர்களுக்கென்று ஆசை, ஒன்று எதிர்பார்த்துக் கிடைக்காவிட்டால் கோபம் எல்லாமே வந்து விடுகின்றன. எங்களுக்கு எல்லாம் படிப்பு இல்லை. வாழ்க்கை எப்படிக் கிடைக்கிறதோ

அதுதான் நாம் கொடுத்து வைத்தது என்று மனசைத் தேற்றிக் கொள்ள எங்களால் முடிந்தது. உங்கள் காலம் அப்படி இல்லை. ஆனால் எந்தக் காலத்திலும் பெண் ஆணாகி விட முடியாது. உன்னைப்போல உடம்பிலும் உடுப்பிலும் பெண்ணாகவும் மனத்தில் ஆணாகவும் இருக்கிற எல்லாருமே ஒரு சந்தர்ப்பத்தில் மனம் வெறுத்துப் போகிறார்கள். அந்த நிலையில்தான் நீயும் இருக்கிறாய். நீ குழந்தையல்ல. உனக்கு நான் அதிகம் சொல்ல வேண்டாம். உன் குடும்பத்தில் உள்ளவர்களை நேசிக்கக் கற்றுக் கொள். அவர்களோடு உனக்கு விரோதமா என்ன? உன் கணவரின் அன்பு உன் மீது திரும்பவதற்கு ஒரே வழி என்ன தெரியுமா? அவர் எதையெல்லாம், யாரை எல்லாம் விரும்புகிறாரோ அதை, அவர்களை எல்லாம் நீயும் விரும்பி நேசி.''

அலமேலு இன்னும் பேசி இருப்பாள்; ரெயில் கிளம்பிவிட்டது. சீனிவாசன் அவசர அவசரமாக அலமேலுவை ஏற்றி விட்டுத் தாமும் ஏறிக் கொண்டார்.

''நான் சொன்னது நினைவிருக்கட்டும். போய்ட்டு வரோம். உடம்பைப் பார்த்துக் கொள். சமர்த்தா இரு.''

ரெயிலின் வேகம் போலவே அலமேலுவின் குரலும் ஒடித் தேய்ந்தது. கைகளை ஆட்டி விடை கொடுத்தபடி நின்று கொண்டிருந்தாள் இந்து. அவள் பின்னால் மூர்த்தி நின்று கையசைத்தான்.

அம்மாவும், அப்பாவும் தன்னைவிட்டுப் பிரிந்துவிட்டார்கள் என்ற நினைவே அவளை என்னவோ செய்கிற மாதிரி இருந்தது.

''இந்து, நீ விட்டுக்குப் போய்க்கொள். எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு.'' மூர்த்தி அவள் பதிலுக்குக்கூடக் காத்திருக்காமல் அந்த நீலச் சட்டைக்காரனுடன் போனான்.

தனியாக நின்றிருந்த இந்துவுக்கு வாய் விட்டு அழுதால் பரவாயில்லை போல இருந்தது. தன் தாய் சொன்ன அறிவுரைகள் அவளுக்கு ஆத்திரமூட்டின. 'அவர் எதையெல்லாம் விரும்புகிறாரோ அதை யெல்லாம் நானும் விரும்புவதென்றால் நான் அவர் டிபார்ட்மெண்ட் லேபர் லா புத்தகத்தையும், யூனியன் ஃபைலையும், இந்த நீலச் சட்டைக்காரர்களையுந்தான் நேசிக்க வேண்டும்! இது என்ன பைத்தியக்காரத் தனம்?'

'அவருக்கென்று ஆசை இருந்தால் எனக்கென்று ஒன்று இல்லாமலா போகும்? அவர் ஒரு வழியைத் தேடிக் கொண்டால் நானும் ஒரு வழியைத் தேடிக் கொள்ள முடியாதா என்ன?'

இந்துவின் இதயம் முழுவதும் விரக்தியும் அலுப்பும் நிரம்பி நின்றன.

அப்பா, அம்மா என்பதுகூட ஒரு பெண்ணுக்குத் தாற்காலிக உறவுகளே என்று அவளுக்குத் தோன்றியது.

பஸ் பிடித்து வீடு வந்து சேர்ந்தாள். அவள் வந்தே கழுவவேண்டும் என்கிறாற்போல் காபிப் பாத்திரங்கள் முதல் எல்லாமே காத்திருந்தன.

நிர்மலா படுக்கைச் சுருளில் சாய்ந்தபடி ஏதோ படித்துக் கொண்டிருந்தாள். கூடமாடச் சின்ன உதவிகளைக்கூடச் செய்யாமல் அடம் பிடிக்கும் அவள் மீது இந்துவுக்குக் கோபம் கோபமாக வந்தது.

யாரிடமும் சொல்வதில் எந்த லாபமும் இல்லை என்ற நினைவும் கூடவே வந்தது.

ரெயில்வே ஸ்டேஷனில் அம்மா சொன்னது அவள் நினைவுக்கு வந்தது. ''வாழ்க்கை எப்படிக் கிடைத்ததோ அதுதான் நாம் கொடுத்து வைத்தது.'' இந்துவால் இந்தத் தத்துவத்தை ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஓரளவு திருப்திகரமாக வாழ்க்கை அமைந்து விட்டவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு மற்றவர்களையும் ஏமாற்ற உபயோகிக்கும் தத்துவம் இது என்று இந்து நினைத்தாள். 'நாம் விரும்பியபடி அமைத்துக் கொள்வதற்கு எது அல்லது யார் தடையாகி விட முடியும்?' என்று ஒரு கேள்வியும் அவளுள் எழுந்தது.

வாழ்க்கை என்பது ஒரு கேள்விக்கும் பதில் சொல்லத் தெரியாத ஒரு வினாவிடை நிகழ்ச்சி போலவும், எல்லா ஆட்டத்திலும் தோற்றுக் கொண்டே இருக்கிற ஒரு விளையாட்டுப் போலவும், சலிப்பூட்டுகிற சில சம்பவங்களும் எரிச்சலூட்டுகிற சில மனிதர்களும் சேர்ந்த கலவை போலவும் அவளுக்குத் தோன்றியது.

இரவு அவளால் சரியானபடி சாப்பிடக்கூட முடியவில்லை. அம்மாவும் அப்பாவும் அங்கே இல்லாதது அதீதமான வெறுமையை அவளுக்கு உணர்த்திக் கொண்டே இருந்தது.

இரவு மூர்த்தி வந்தபோது அவளுக்கு நல்ல தூக்கம். அவனே எடுத்து வைத்துக்கொண்டு சாப்பிட்டான்.

மறுநாள் இந்துவுக்கு நல்ல பொழுதாக விடிந்தது. விடிந்தும் விடியாமலும் இருந்த அதிகாலையிலேயே பானுவின் வீட்டிலிருந்து பத்மாவதி திரும்பி வந்துவிட்டாள். வாசலில் ஆட்டோ சத்தத்தைக் கேட்டு வாசல் கதவைத் திறந்துவிட்ட சீனிவாசன் குழந்தையின் உற்சாகத்துடன் அவள் பெட்டியைத் தூக்கிக்கொண்டு, வாயெல்லாம் பல்லாக, ''பானு எப்படி இருக்கா? மாப்பிள்ளைக்கு இப்போ உடம்பு பரவாயில்லையா?'' என்று உரத்த குரலில் விசாரித்துக்கொண்டே முன் ஹாலுக்கு வந்தார். அரைகுறைத் தூக்கத்தில் இருந்தவர்களும் விழித்துக் கொண்டார்கள். ரங்கனும், நிர்மலாவும் ஓடிவந்து பத்மாவதியின் இரண்டு பக்கங்களிலும் நின்று கொண்டு தங்கள் அக்காவையும் அத்திம்பேரையும்பற்றி ஆவலுடன் விசாரித்தார்கள்.

''அம்மா வந்திருக்கார்'' என்று கூறி அருகில் உறங்கிக்கொண்டிருந்த மூர்த்தியை எழுப்பினாள் இந்து.

''வரட்டுமே!'' அவன் புரண்டு படுத்துக் கொண்டு தொடர்ந்து தூங்கினான். இந்து மட்டும் எழுந்துபோய்ப் பானுவைப்பற்றி விசாரித்தாள்.

ரங்கனும் நிர்மலாவும் தன்னைக் கண்டவுடன் வேண்டும் என்றே அதிக ஆர்வத்துடன் தன் அக்காவைப்பற்றியும், அவள் கணவனைப் பற்றியும் ஏற்கனவே தெரிந்த விவரங்களைக் கூடத் தெரியாதவர்போல விசாரித்தது அவர்கள் இருவர் மீதும் தங்களுக்கு உள்ள அன்பின் அளவை மிகைப்படுத்திக் காட்டுவதாக அவளுக்குத் தோன்றியது. அவர்கள் அவளைப் பேசவே விடவில்லை. அவள் மௌனமாக

நின்றிருந்துவிட்டுச் சமையலறைப்பக்கம் போனாள்.

தங்களுடைய சகோதரியைப்பற்றியும் அவள் குடும்பத்தைப்பற்றியும் அவர்கள் காட்டிய ஆர்வம்; அதுவும் தன் எதிரில் அதைக் காட்டியது எதற்காக என்பதை இந்து அறிவாள்.

அவள் பெற்றோர் இருந்தபோது பராமுகமாகவும், பேசினால் வலிக்கும் என்பது போலவும் பேசியவர்கள், இப்போது வேண்டும் என்றே தன் முன்னால் இப்படிச் செய்கிறார்கள். இதன் மூலம் அவள் மீதும் அவள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மீதும் தங்கள் வெறுப்பையும் கோபத்தையும் சொல்லாமல் சொல்கிறார்கள்.

தன் பெற்றோர்களிடம் இவர்களுக்கு என்ன கோபம்? அதுதான் அவளுக்குப் புரியவில்லை. அதற்காகக் கவலைப்படவும் அவள் தயாராக இல்லை.

தன் மாமியார், பானுவின் வீட்டுக்குப் போகிறார் என்று ஒரு வாரம் லீவு போட்டிருந்தாள் இந்து. இடையிலேயே அவள் பெற்றோரும் வந்து இரண்டு நாட்கள் தங்கி விட்டுக் கிளம்பியும் ஆயிற்று. லீவு முடிந்து வேலைக்குப் போகவேண்டுமே என்றும், வீட்டு வேலைகளைச் செய்துவிட்டு வேலைக்கும் ஓடவேண்டுமே என்றும் கவலைப் பட்டுக்கொண்டே முதல் நாள் இரவைக் கழித்தாள் அவள். விடிந்ததும் விடியாததுமாக மாமியார் வந்துவிட்டது அவளுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

மனத்தில் கட்டை போட்டதுபோல அடைத்துக்கொண்டிருந்த இனம் புரியாத சோர்வும், கவலையும் கொஞ்சம் ஒதுங்கி வழிவிட்டாற்போலவும் அந்த இடத்தில் லேசான நிம்மதியின் நிழல் படிந்தாற் போலவும் இருந்தது.

சுறுசுறுப்புடன் வீட்டு வேலைகளைச் செய்தாள்.

முதலில், பத்மாவதிக்குக் காபி போட்டுத் தந்தாள். பயணம் செய்த களைப்புக்கு அந்தக் காபி எவ்வளவு இதமாய் இருக்கும் என்று அவள் அறிவாள். இதன் பிரதிபலிப்பு எப்படி இருக்கும் என்பதும் அவள் அறிந்தது தான். அவள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. சமையலறைப் பொறுப்பைப் பத்மாவதி ஏற்றுக் கொண்டுவிட்டாள். "இன்னிக்கு உனக்கும் ஆபீஸ் போகணும் இல்லையா?" என்றாள். இந்து, "ஆமாம்" என்றாள். "சரி, போய் உன் வேலையைக் கவனி. இதையெல்லாம் நான் கவனிச்சுக்கறேன்" என்று அவளுக்கு விடுதலை அளித்தாள் பத்மாவதி.

அவளுக்கு இருந்த ஆர்வத்தில் அப்படியே மீண்டும் படுக்கையில் விழுந்து மூர்த்தியைக் கட்டிப் பிடித்து வெறியோடு உருளவேண்டும் போல இருந்தது. மூர்த்தி நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்தான். அவன்மீது சாய்ந்தாற் போல உட்கார்ந்து கொண்டாள் இந்து.

'சட்'டென்று தூக்கம் கலைந்து விழித்தான் மூர்த்தி. இந்துவின் பார்வை ஆவலுடன் அவனைப் பார்த்திருந்தது. கண்களைக் கசக்கி, சோம்பல் முறித்துக்கொண்டே கடிகாரத்தைப் பார்த்த மூர்த்தி தேள் கொட்டியதுபோல 'விசுக்'கென்று எழுந்தான். "மணி ஆறரையா? எனக்கு அவசரமா என்கொயரி ஒன்று அட்டண்ட் பண்ணணும்" என்று சம்பந்தமில்லாமல் கூறிக்கொண்டே எழுந்து ஓடினான்.

ஏமாற்றத்தின் சூடு திரும்பத் திரும்பத் தன்னைத் துரத்துவதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் துவண்டாள் இந்து.

ஒரே ஒரு நிமிஷம், தன்னிடம் இதமாகப் பேசிவிட்டு ஓடி இருந்தால்கூட அவள் அதிகம் பொருட்படுத்தமாட்டாள். தான் ஒருத்தி இங்கே அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பது தெரியாமல் அல்லது தெரிந்தும் வேண்டாமல் அந்த ஒரு நிமிஷத்தைக் கூடத் தனக்காக ஒதுக்க முடியாமல் ஓடுகிற கணவன்மீது அவளுக்கு வெறுப்பே ஏற்பட்டது.

இதற்கு முன்னால் உள்ள அத்தனையையும் மறந்துவிட்டு, அந்த நிமிஷம், தான் புதிதாய்ப் பிறந்தவள்போல அவள் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள முயன்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், முந்திய கணக்கில் ஒன்று கூடும்படியாகத்தான் அவன் நடந்துகொண்டிருக்கிறானே தவிர, ஒரே ஒரு முறையாகிலும் அவளும் பெண், அவளுக்கும் சில ஆசைகள் உண்டு என்ற பரிவுடன் நடந்து கொண்டதில்லை.

இவற்றை அவன் வேண்டுமென்றே செய்வதாக அவளும் நினைக்கவில்லை. தன்மீது மட்டும் அல்லாமல் அந்தக் குடும்பத்தில் உள்ள அனைவரிடமும்கூட அவன் அப்படித் தானே நடந்துகொள்கிறான்? இது அவன் இயற்கையான சுபாவம் என்பது உண்மைதான். இந்துவும் அதை அறிவாள். ஆனால் அந்த இயற்கையும் சுபாவமும் தனக்காகவும், தன் பொருட்டும் மாறாவா என்று ஏங்கினாள்; மாறிவிடவேண்டும் என்றும் விரும்பினாள்; தன்னால் மாற்றிவிடமுடியும் என்று நம்பினாள். முடியாத ஒவ்வொரு முறையும் ஒரு தோல்வி உணர்வையும் சேர்த்தே அநுபவித்தாள்.

ஆரம்ப நாட்களில் இந்தத் தோல்விகளின் வலியை அதிகம் உணர்ந்தாள் இந்து. இப்போது எல்லாம் ஓரளவு சமாளித்துக் கொள்கிறாள். அதே வகையான சமாளிப்புடன் எழுந்தாள் இந்து. சமையலறைக்குச் சென்றாள். தன் மாமியாருக்குச் சின்னச் சின்ன உதவியைச் செய்தாள். மூர்த்தி அவசரம் அவசரமாகக் குளித்தான். அதே அவசரத்துடன் உடுத்துக்கொண்டான். டிபன் கூடச் சாப்பிடவில்லை. கிளம்பிவிட்டான். "ஒரே நிமிஷம், இதைச் சாப்பிட்டுவிட்டு போடா" என்று தட்டில் இட்லி சட்டினி மிளகாய்ப்பொடி என்று ஆசையோடு எடுத்துக் கொண்டு போன பத்மாவதியும் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தாள்.

இந்துவால் அவள் முகத்தையும் பார்க்க முடியவில்லை. ஒரு மனைவியின் ஏமாற்றங்களை விட ஒரு தாயின் ஏமாற்றங்கள் ஆழமானவை என்பதை இந்து பத்மாவதியின் முகத்தில் நிதர்சனமாகக் கண்டாள்.

இந்து ஒரு வார விடுமுறைக்குப் பிறகு வேலைக்குத் திரும்பி இருந்தாள். அதே வழக்கமான மவுண்ட் ரோடு. அதே வழக்கமான பஸ்கள், கார்கள், டாக்ஸிகள், ஆட்டோக்கள், சைக்கிள்கள். நீளநீளமாகச் சினிமாப் பேனர்கள். கூட்டங் கூட்டமாக மனிதர்கள். தினசரி பார்த்துப் பார்த்து அலுத்த காட்சிகள். கை நிறையப் புத்தகங்களை அடுக்கிக் கொண்டு காலேஜ் போன இளம்

கவனமாய்ப் பார்த்துக் கொள்ள அம்மா நீங்கள் இருப்பதனால்...





சும்மா இருக்கமாட்டான் அவன்... அதையும் இதையும் இழுத்துத் தள்ளுகிறான்!

அதனால் கவலை வேண்டாம். அவன் தன்னைக் காயப்படுத்திக் கொள்ளாமல் மட்டும் கவனித்துக் கொள்ளுங்கள். சோதித்து அறியும் அவனது முயற்சியைத் தடுக்காதீர்கள். அவனுக்கு ஆர்வம் அதிகம். தன்னைச் சுற்றி உணர்ந்து அறியும் துடிப்பு அது. தனது வலிமையையும், திறமையையும் பற்றிக் கற்றுணரும் முயற்சி அது.

மேலும் ஒரு பாடத்தைக் கற்க அவனுக்கு உதவுங்கள் இப்போது. திடமான உணவினைக் கடித்துத் தின்னும் வகையிலான பாடமே அது!

தின்பதற்குக் கொடுங்கள் ஒன்று—முழு நலமானதும், சுவைமிக்கதும், ஊட்டமளிப்பதும் ஆன ஒன்று...

உங்கள் கவனத்தை ஒத்த அன்பான கவனத்தோடு செய்தது ஒன்று.

அவனுக்குக் கொடுங்கள் ஒரு பார்லே க்ளூகோ பிஸ்கட்.

எங்கள் ஆலைக்கு வாருங்கள், பாருங்கள், பார்லே க்ளூகோ பிறப்பதை! 'முழு நலமானது' என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளுங்கள். எங்கள் ஆலை நவீனமானதொரு மருத்துவமனை போன்றது; அங்கு, எல்லாம் தாமே இயங்குவன; மிகவும் சுத்தமானவை; கைபடா தூய்மையோடு பிஸ்கட்டுகள் உங்களுக்குக் கிடைக்கின்றன.

பால், சர்க்கரை, க்ளூகோஸ் மற்றும் சன்னமாக அரைத்த கோதுமை முதலிய குழந்தைக்கு உகந்த ஊட்டங்கள் செறிந்த பார்லே க்ளூகோ பிஸ்கட் உங்கள் குழந்தைக்கு ஆதர்சமானது.

தவிரவும், சுவைமிக்கது இது; கரகரப்பானது; செரிப்பதற்கு எளியது—மென்று தின்று ரசித்து மகிழ்வான் உங்கள் குழந்தை.

உங்களின் அன்புக் கவனம் உங்கள் குழந்தையிடம்— எங்களுக்கும் அதே கவனம் பார்லே க்ளூகோ தயாரிப்பதில்.



பார்லே க்ளூகோ பிஸ்கட்டுகள்.

உலகத் தேர்வில் 5 முறை வெற்றி. உங்கள் வியாபாரியிடம் வண்ணமய 'பாப்பா' படமுள்ள உறையைப் பார்த்து வாங்குங்கள்.

everest/660/PP/tml

பெண்களைப் பார்த்தபோது டில்லியில் தன் கல்லூரி நாட்களின் நினைவு வந்தது.

தன் கல்லூரி ஆசிரியர்கள், சகமாணவிகள், தன் பெற்றோர் அவ்வளவு பேரின் பரவசத்துக்கும், பாராட்டுக்கும் உரிய ஒருத்தியாய் நின்று மனம் நிறையப் பாராட்டையும், புகழுரைகளையும் கேட்டுக் கேட்டு ஆனந்தித்த பழைய இந்து அவளுள் நின்ருள். மீண்டும் ஒரு முறை அது போல மனம் நிறைந்த பாராட்டைக் கேட்டுச் சிலிர்க்கமாட்டோமா என்று அவளுக்கு ஏக்கமாக இருந்தது.

தன் கணவனைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். மாமா மாமி இருவரும் கணவனுக்கும் ஒரு படி மேலே இருப்பார்கள். ரங்கன் நிர்மலா இருவரும் தன்னைப் பாராட்டப் போவதாக நினைப்பதே ஒரு கனவு. வேறு யார்? அம்மா நேற்றுத்தான் அசட்டுப் பட்டம் கட்டிவிட்டுப் போயிருக்கிருள்! 'எங்கள் இந்து', 'எங்கள் இந்து' என்று வாய் ஓயாமல் பெருமைப்பட்டவள் இன்று, 'அசடு' என்கிருள். எதை நம்புவது?

யோசித்துக் கொண்டே அனிச்சையாகப் பாதையைக் கடந்து சந்தில் நுழைந்து தன் பாங்கியின் வாசலை அடைத்து மாடிப் படிகளில் ஏறிய இந்துவைச் சட்டென்று கவ்விப் பிடித்தாற் போல நிறுத்தியது ஒரு குரல்.

படிகளின் வளைவில் அவள் பாங்கி ஊழியர்கள் இருவர் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு குரல் கேட்டது:

''ஆக்ஷன் சீட் யாருப்பா? கணக்குப் புத்தகங்கள் எல்லாம் கண்ணில் ஒற்றிக்கொள்ளலாம் போல இருக்கு. பர்ஃபெக்ட் மெயின்ட்டினன்ஸ்.''

''டேய், மெதுவாய்ப் பேசு.'' இரண்டாவது குரல் முதல் குரலை அடக்கியது. இந்து அவர்களை நெருங்கி விட்டாள். தாங்கள் பேசிக் கொண்டது அவளுக்கும் கேட்டிருக்கக் கூடும் என்று யோசித்தோ என்னவோ அந்த இருவரில் ஒருவர், ''இதோ அந்த அம்மாவே வந்திட்டாங்களே! டேய் பிரகாஷ், நீ கேட்ட ஆக்ஷன் சீட் இந்த அம்மாதான்'' என்று அவளுக்கும் கேட்கிறமாதிரி சொன்னர். 'உங்களைப் பற்றி நாங்கள் ஒன்றும் தவருகப் பேசி விடவில்லை' என்று மறைமுகமாகச் சொல்கிற மாதிரி இருந்தது அந்தக் குரல்.

இந்து மௌனமாக நிமிர்ந்து அவர்கள் இருவரையும் பார்த்தாள்.

இருவரில் ஒருவரை அவள் பாங்கியில் பார்த்திருக்கிருள். முகம் பழக்கமாகத் தெரிந்தது. மற்ருெரு முகம் புதுமுகமாகத் தெரிந்தது. அவர்களைக் கடந்த போது நாசியைத் துளைத்த தாழம்பூ மணம் அவள் பார்வையைக்கூட யதார்த்தமாக்கியது.

''இவங்க மிஸஸ் இந்து. நம்ம பேங்க் ஆக்ஷன் டிபார்மென்ட்டிலே இருக்காங்க. இவர் மிஸ்டர் பிரகாஷ். நாலைந்து வருஷம் முன்பு மதுரைக்கு மாற்றல் ஆகிப் போனர். இப்போ திரும்பவும் நம்ப இங்கே வந்திருக்கிருர்.''

இந்து பார்வையைத் திருப்பித் தங்களுக்கு அறிமுகம் செய்த நபரைப் பார்த்தாள். 'உங்களையே எனக்குத் தெரியவில்லையே?' என்று கேட்க நினைத்தாள். அப்படிக் கேட்பது நாகரிகம் அல்ல என்பதால் பொதுவாக ''நன்றி'' என்று கூறிவிட்டுப் படிகளில் ஏறினுள்.

அவள் மனம் பிரகாஷ் தன்னைப் பற்றிச் சொன்ன பாராட்டில் பதிந்து திரும்பத் திரும்ப அதையே அசை போட்டது.

இவனும் பிடரிவரை தலைமயிரை வளர விட்டிருந்தான். ரங்கன் வைத்திருந்த இதே முடி அருவருப்பாகத் தோன்றிய இந்துவுக்குப் பிரகாஷின் உருவத்துக்கு அது அழகாகப் பொருந்தி இருப்பதாகத் தோன்றியது. மைனர் செயின் போட்டிருந்தான். வெள்ளைப் பாலிஸ்டர் சட்டைக்குள் அது மினுமினுத்தது. ஏழைமை தெரியாமல் செழிப்பாக வளர்ந்திருந்தான். சிரித்தால் கன்னத்தில்



குழி விழுந்தது. பற்பசை விளம்பரம் போல் சிரித்தால் வரிசையான வெண்மையான பற்கள் அழகாகத் தெரிந்தன. நடையிலும், பேச்சிலும் சில அசைவுகளில் நாகரிகம் தெரிந்தது.

இந்து தன் இருக்கையில் உட்கார்ந்து கொண்ட பிறகும் அந்த நினைவுகளிலிருந்து மீளவில்லை.

''நீ என்னப்பா, இந்தப் பிராஞ்சுக்குப் புது ஆளா? உனக்கே எல்லாம் தெரியுமே! இதோ உன் ஸீட். இந்த அம்மா, பாவம், ஒண்டியாவே ஆக்ஷன் ஸீட் வேலை அவ்வளவையும் பார்க்கிறாங்க. உங்களுக்குள் அதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.''

பாங்கி உதவி மேனேஜர், பிரகாஷின் தோள்களில் கை வைத்துப் பேசிய விதம் அவன்மீது அவருக்குள்ள நம்பிக்கையையும் அன்பையும் இந்துவுக்கு உணர்த்தின.

''நம்முடைய பாங்கியில் இப்போது ஆயிரம், இரண்டாயிரம், ஐயாயிரம் மாதச் சீட்டுகள் மட்டுந் தானே நடத்துகிறோம்? அதை விரிவுபடுத்திப் பத்தாயிரம், இருபத்தையாயிரம், ஐம்பதாயிரம் என்றும் மூன்று புதிய சீட்டுகள் ஆரம்பிக்க இருக்கிறோம். பழையவற்றிலும் போதுமான உறுப்பினர்கள் சேர்ந்தால் இன்னும் ஒவ்வொரு குரூப் ஆரம்பிக்கப் போகிறோம். பிரகாஷ், உம் மீது நம் பிராஞ்ச் மானேஜர் நிறைய நம்பிக்கை வைத்திருக்கிறார். இந்த அம்மாவும் நல்ல உழைப்பாளி. சீக்கிரம் ப்ரமோஷன் கிடைக்கிற லிஸ்ட்டிலே இவங்க பேரும் இருக்கு. இவங்க இந்தச் சீட்டை விட்டுப் போறதுக்குள்ளே புதுக் குரூப்புகளையும் ஆரம்பிச்சிடணும்னு இருக்கோம். நிறைய அங்கத்தினர்களைச் சேர்க்கத்தான் உனக்கு இந்தச் சீட்டை தந்திருக்கிறோம். பாராட்டுக்கள்.'' அஸிஸ்டென்ட் மானேஜர் போய் விட்டார். இந்துவின் எதிரில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருந்த பிரகாஷ் இந்துவையும், அவள் எதிரில் பிரிந்து கிடந்த லெட்ஜரில் இருந்த முத்து முத்தான அவள் எழுத்துக்களையும் மாறி மாறிப் பார்த்தான்.



''எனக்கு இந்த ஸீட்தான் கிடைக்கும் என்று கிருஷ்ணமூர்த்தி சொன்னான். காலையிலேயே நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டேன்.''

பிரகாஷ் அநாவசியமான சம்பிரதாயம் எதுவும் இல்லாமல் சேஷ்டைகள் எதுவும் இல்லாமல் அவளை முகத்துக்கு நேரே பார்த்துப் பேசிய விதத்தை இந்து ரசித்தாள்.

பேசும்போது மென்மையான இதழ் பிரிந்து இதமாகச் சிரித்தபடி அவன் பேசினான். அவன் குரல் கீச்சிடாமல் கேட்பதற்கு நன்றாக இருந்தது.

புதிய குரூப்புகளுக்கு ஆள் சேர்க்கச் சரியான நபரைத்தான் போட்டிருக்கிறார்கள் என்று தோன்றியது இந்துவுக்கு.

''மதுரையிலும் எனக்கு ஏலச் சீட்டுக்கு ஆள் பிடிக்கிற வேலைதான். அங்கே எனக்கு உதவியாக இருந்த நபரின் கையெழுத்தை ஆண்டவனே கூடக் கண்ணாடி போட்டுக் கொண்டுதான் படிக்க வேண்டும்.''

அவன் சிரிக்காமல் பேசினான். இந்துவுக்கு வாய்விட்டுப் சிரிப்பு வந்தது. அவள் அடக்கிக் கொண்டாள்.

ஒரு வாரம் விடுமுறையில் இருந்ததால் இந்துவுக்கு வேலை அதிகம் இருந்தது.

வந்ததும் வராததுமாக அவனிடம் எப்படி வேலை சொல்வது என்று தயங்கினாள் இந்து.

அவனே வலுவில் வாங்கிச் செய்தான். வழக்கமான ரசீது பதிவுகளும் பணம் கட்ட வேண்டியவர்களுக்கு நினைவூட்டுதலும் இப்படிச் சுலபமான, வழக்கமான, வேலையை அவனிடம் விட்டுவிட்டு, ஏலச் சீட்டுச் சம்பந்தமாக நீண்ட நாட்களாகப் பணம் கட்டாமல் நின்று போனவர்களுக்குக் கடைசி நினைவூட்டலும், அதற்கும் பணம் வசூலாகாதவர்கள்மீது கோர்ட் நடவடிக்கைக்குச் சிபாரிசு செய்வதும், மற்றும் ஏலம் எடுப்பது சம்பந்தமாகச் சில சந்தேகங்கள் கேட்டிருந்த நபர்களுக்குப் பதில் எழுதுவதும் போன்ற வேலைகளை இந்து எடுத்துக் கொண்டாள்.

பிற்பகல் இடைவேளைவரை இருவருக்குமே வேலை சரியாக இருந்தது. அவனும் தனக்கு இணையாக வேலையில் முழுக் கவனத்தோடு ஈடுபட்டிருந்தது இந்துவுக்கு மிகவும் பிடித்திருந்தது.

பிற்பகல் உணவு இடைவேளையின்போது அவள் கேள்விப்பட்ட விஷயங்கள் அவளுக்கு மேலும் ஆச்சரியத்தை அளித்தன.

பிரகாஷ் ஒரு பெரிய பணக்கார இடத்துப் பிள்ளை. வேலை செய்து சம்பாதிக்க வேண்டிய அவசியம் இல்லாதவன். ஆனால் வேலையில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருப்பான். அவன் சம்பாதிக்கிற பணம் அவன் கைச் செலவுகளுக்குத்தான் சரியாக இருக்கும். சரியான செலவாளி. மாதம் மாதம் ஊரிலிருந்து அவனுக்குப் பணம் வரும். சிகரெட் பிடிப்பான். மிகவும் அலுப்பாக இருந்தால் ரேஸுக்குப் போவான். எதையும் மறைக்க மாட்டான். பெண்கள் விஷயத்தில் அவன் எப்படி என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். மொத்தத்தில் பழகுவதற்கு நல்லவன். உண்மையானவன்; பிறருக்கு உதவுவதில் ஆர்வம் உள்ளவன்.

தான் அதில் நேரடியாகக் கலந்துகொள்ளாமல் மற்றவர்கள் பேசிக் கொள்வதைக் கேட்டுப் பிரகாஷைப்பற்றி இந்து அறிந்து கொண்டவை இவை.

அவர்களில் ஒருத்தி மற்றவளுக்குப் பிரகாஷை நேசித்து மணந்து கொள்ளும்படி யோசனை சொன்னாள். அவனை 'மடக்கமுடியும்' என்றும், 'முடியாது' என்றும் சவால் விட்டுக் கொண்டார்கள். பந்தயம் போட்டுக் கொண்டார்கள் சில பெண்கள்.

இதுபோன்ற விஷயங்களில் பெண்கள் ஆண்களுக்குக் கொஞ்சமும் சளைத்தவர்கள் அல்ல என்று இந்து நினைத்துக்கொண்டாள்.

பிற்பகல் இடைவேளைக்குப் பிறகு இந்து தன் இடத்துக்குத் திரும்பும் முன்பே பிரகாஷ் தன் இடத்தில் அமர்ந்து வேலையைத் துவங்கி இருந்தான். வாய் லேசாக எதையோ மென்றுகொண்டிருந்தது. அவள் வந்தது தெரிந்ததும் அவளை நிமிர்ந்து பார்த்துச் சிரித்துவிட்டுத் தன் வேலையில் ஈடுபட்ட அவனை இந்துவுக்கு மிகவும் பிடித்தது.

மாலை ஆபீஸ் முடிவதற்குப் பத்து நிமிஷங்களுக்கு முன்பே எழுந்து விட்டான் பிரகாஷ். தன் வேலை முடிந்து கிளம்பிய இந்து, மாடிப்படிகளைச் சமீபித்த போது அவன், கிருஷ்ணமூர்த்தியுடன் பேசிக்கொண்டிருந்தது அவளுக்குக் கேட்டது. சிகரெட் பிடித்துக்கொண்டு இருந்தான். புகைக்கு நடுவே வார்த்தைகள் உதிர்ந்தன.

''ஒரு டிராஃப்ட் போட்டிருக்காங்க பார், அந்த அம்மா! என்ன இங்கிலீஷ், பிரமாதம். வக்கீல் அதைப் பார்த்து அப்படியே காப்பி அடித்தால் போதும்; என் ஸர்வீஸிலே ஒரு டிராஃப்டை நான் இந்தமாதிரி பார்த்ததில்லே. அந்த அம்மாகிட்டே நாம கத்துக்கணும்பா!''

இந்து இதைக் கேட்டுக்கொண்டே அவர்களைச் சமீபித்துவிட்டாள்.

அவள் மனம் முழுவதும் உற்சாகம் சிறகடித்துப் பறக்கிறமாதிரி இருந்தது. எவ்வளவோ நாட்களாக ஏங்கிய மனசுக்குச் சற்றும் எதிர்பாராமல் கிடைத்த இந்தப் பாராட்டுகள், நீண்ட நாட்களாய் மழையற்று வானம் பார்த்துக் கிடந்த பூமியில் மழைத்துளி விழுந்தாற்போன்ற பரவசத்தை உண்டாக்கின.

அவள் நன்றியோடு பிரகாஷைப் பார்த்தாள்.

தான் பேசியது அவளுக்குக் கேட்டுவிட்டதே என்ற வெட்கத்துடன் பிரகாஷ் அவளைப் பார்த்தான்; அந்தப் பார்வையில் கள்ளமில்லாத குழந்தையின் வெகுளித்தனம் தெரிவதாக இந்துவுக்குத் தோன்றியது.

அவர்களைக் கடக்குமுன் பிரகாஷ் எதிரில் ஒருகணம் நின்று, நன்றி சொல்லிவிட்டுப் படி இறங்கிப் போனாள் அவள்.

வெளியே பஸ்ஸுக்குக் காத்திருந்தபோது அவர்கள் கீழே வரக்கூடும் என்று இந்து எதிர்பார்த்தாள். வெகுநேரம்வரை அவர்கள் வரவே இல்லை. சரியான அரட்டையாய் இருக்கும் போலிருக்கிறது இரண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

அன்றைக்கு ஆபீஸில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பியபொழுது வழக்கமாக உணரும் அலுப்பையோ களைப்பையோ அவள் உணரவில்லை.

அதே மவுண்ட்ரோடு, மனிதர்கள், பஸ்கள், கார்கள், ஸ்கூட்டர்கள், சினிமா பேனர்கள்—எதுவுமே அவளுக்கு அலுப்பைத் தரவில்லை.

வீட்டிலும் அவளுக்காகக் காத்திருந்த வேலைகள் அவளுக்கு அலுப்பைத் தருவதற்குப் பதிலாக உற்சாகம் அளித்தன. மீண்டும் பிரகாஷ் தன்னைப்பற்றிக் கூறிய பாராட்டுகளை மனம் அசைபோட்டு அந்தரங்கமாகச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தது.

இதேபோல ஒரு பாராட்டைத் தன் கணவனோ, தன் மாமா, மாமியோ, அந்த வீட்டில் இருக்கிற மற்றவர்களோ ஒரே ஒரு முறைகூடச் சொன்னதில்லையே என்று நினைத்துப் பார்த்தாள். இவர்கள் இருக்கட்டும். பானுவின் கல்யாணத்துக்காக அவள் தனிப்பட்ட முறையில் ஆர்வத்தோடு எவ்வளவோ செய்தாள். அவர்கள் கல்யாணப் பேச்சு நடந்தபோது மாப்பிள்ளை வீட்டார், திடீரென்று வரதட்சிணைப் பணத்தை மூவாயிரத்திலிருந்து ஐயாயிரமாக உயர்த்திய போது அங்கே இருந்த எல்லாருமே ஆளை ஆளைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

பெரியவர்கள் பேச்சில் தலையிட வேண்டாம் என்று இந்து மௌனமாக நின்று கொண்டிருந்தாள். தன்னிடம் யோசனை கேட்கிற ஒரு நேரம் வந்தால் அப்போது பேசுவது என்று இருந்த அவளைப் பானு தனியாகச் சந்தித்து, எப்படியும் இந்தக் கல்யாணம் நடந்தே ஆகவேண்டும் என்றும், அந்த மாப்பிள்ளையே தனக்குக் கணவனாகவேண்டும் என்றும் கூறி அழுதாள். "எப்படியும் உன் தயவில்தான் என் கல்யாணம் நல்ல படியாக நடக்கணும் மன்னி" என்று கெஞ்சினாள். இந்து கடைசியில் பேசினாள். தானே அந்தப் பணத்தை ஏற்பாடு செய்து தருவதாக அவள் ஏற்றுக்கொண்டபோதுதான் அங்கே இருந்தவர்களுக்கு மூச்சு வந்தது.

அப்போதும் அவர்கள் அவளைப் பாராட்டவில்லை. பத்மாவதி, தன் பெண்ணின் ஜாதகத்தில் வந்த கல்யாண வேளையைத்தான் சிலாகித்துப் பேசிக்கொண்டிருந்தாள். பானு முதற்கொண்டு யாருமே இந்துவால்தான் இந்தக் கல்யாணம் நடக்கிறது என்று மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை.

மூர்த்தியிடம் விளையாட்டாக அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறாள் இந்து. "இது உன் கடமை! இதில் போய்ப் பாராட்டுவதற்கு என்ன இருக்கிறது?" என்றான் அவன். ஒரு வாய்ச் சொல்லுக்காகவேனும், 'உண்மையில் இந்தக் கல்யாணம் நல்லபடியாக நடந்ததில் உன் பங்கு பெரியதுதான்' என்று அவன் சொல்லியிருந்தால் இந்த உலகத்தையே தூக்கித் தன் கையில் கொடுத்தாற் போல அவள் மகிழ்ச்சியில் திளைத்திருப்பாளே! அதன் பிறகும் அவள் அந்தக் குடும்பத்துக்காக ஓடி ஓடிச் சம்பாதிக்கிறாள். அவள் வருமானத்தில் குழந்தைகள் படிக்கிறார்கள். அதை எதிர்பார்த்து அவள் உழைக்கிறாள். யாருக்கும் புரியவில்லை அது.

வந்த முதல் நாளிலேயே பிரகாஷுக்கு மட்டும் புரிந்ததே, அது மட்டும் எப்படி?

இந்துவால் பிரகாஷின் பாராட்டை அவ்வளவு லேசாக ஒதுக்கிவிட முடியவில்லை. அந்த நினைவுகளையும் அவ்வளவு சுலபமாக இழந்துவிட அவள் தயாராக இல்லை.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு மூர்த்தி அன்றைக்கு மிகவும் உற்சாகமாக இருந்தான்.

இந்துவுக்கு அதன் காரணம் தெரியும். இதற்கு முன்பும் பல முறை இந்த அநுபவம் அவளுக்கு உண்டு. அவன் ஆசையோடு தன்னைத் தழுவுவதற்குக்கூட அவன் யூனியன் விஷயமான ஏதோ ஒரு வெற்றி, அதன் பின்னணியில் அவன் சந்தோஷமாக இருப்பது இவையே காரணமாக இருக்கும் என்பது அவள் உணர்ந்த அநுபவம்.

அன்றைக்கும் மூர்த்தியின் அணைப்புக்கு அவள் எந்தக் காரணத்தையும் தேடிக்கொண்டிருக்கவில்லை. எந்தக் காரணமுமே அவளுக்குத் தேவையாகவும் இல்லை. அவளுக்கும் அந்த அணைப்புத் தேவையாய் இருந்தது.

பிரகாஷின் பாராட்டுகள் அவள் மனத்தில் கிளப்பிவிட்டிருந்த சந்தோஷத்தைச் சுமந்து கொண்டே அவள் அவனுக்கு உடன்பட்ட போது, அவளுக்கு அந்த மகிழ்ச்சி பலமடங்காகப் பெருகி அவளை மகிழ்வித்தது.

தன்னுடைய மனைவியை இவ்வளவு உற்சாகமாய் இதுவரை பார்த்தறியாத மூர்த்திக்கு இது ஓர் ஆச்சரியமாகவே இருந்தது. அவன் இதற்கான காரணங்களைத் தேடிக் கொண்டிருக்கவில்லை. அதில் அவனுக்குச் சம்மதமும் இல்லை.

அன்றைக்கு அந்த உறவு வழக்கம்போல ஓர் இயந்திர கதியான கொடுக்கல் வாங்கலாக இல்லை.

இந்து தன் மணவாழ்விலேயே முதல் முதலாக மனம் நிறைய நிறைய அந்த மகிழ்ச்சியைச் சுமந்தாள். இரவில் மூடிவைத்த மல்லிகை மொக்குகள் பகலில் எடுக்கையில் குப்பென்று மலர்ந்து மணக்கும்போது ஏற்படுகிற ஒரு விதச் சுகாநுபவம் போல, இவ்வளவு நாளும் மூடி மூடி வைத்த ஆசை மலர்கள் வெடித்து இன்பமாய் எழுப்பிய மணத்தில் அவள் இதயம் ஒவ்வோர் அணுவிலுமாய்ப் பூரித்துச் சிரித்தது.

இம்முறையும் தன்னிடம் இரகசியமாக அம்மா சொன்னதை நினைத்துப் பார்த்துக் கொண்டாள். "எவ்வளவு நாள்டி பெண்ணே, இப்படியே இருப்பீர்கள்? காலாகாலத்திலே எங்களுக்கு ஒரு பேரனையோ, பேத்தியையோ பெற்றுக் கொடுக்கக் கூடாதாடீ பெண்ணே?" என்றாள் அலமேலு. தங்கள் பெண் ஏதாவது மாத்திரை மருந்து சாப்பிடுகிறாளோ என்று அவளுக்குச் சந்தேகம். இரகசியமாக அவள் பெட்டி டப்பாக்கள் என்று எல்லாவற்றையும் யதார்த்தமாகப் பார்க்கிறமாதிரி பார்த்தாள்.

இந்து அலுப்புடன் நினைத்துக் கொண்டாள். இந்த வாழ்க்கையில் அது ஒன்றுதான் குறைச்சல்! அப்படியே தவறி ஏதேனும் பிறந்தாலும் அதற்கும் 'ஸ்ட்ரைக்' என்றோ 'வேஜ் ரிவிஷன்' என்றோதான் பெயர் வைப்பார் என்று தனக்குள்ளாக நினைத்துக் கொண்டாள்.

அம்மாவுக்கு வெறும் சிரிப்புத்தான் பதிலாயிற்று.

அப்போது தன்னுடைய நினைவுகளுக்காக இப்போது இந்து வெட்கப்பட்டாள். அவளுடைய இப்போதைய மனநிலையில் தங்களுக்கும் ஒரு குழந்தை வேண்டும் என்று அவளும் ஆசைப்பட்டாள்.

மூர்த்தியின் அணைப்பிலிருந்து விடுபட்டு வெகுநேரம் வரையிலும் அவள் மனத்திலும், உடலிலும் அந்தச் சிலிர்ப்புத் தொடர்ந்து கொண்டே இருந்தது. இவ்வளவுக்கும் காரணமாயிருந்த பிரகாஷுக்கும் அவன் பாராட்டுகளுக்கும் மானசிகமாக நன்றி சொன்னாள் இந்து.

மறு நாள் உற்சாகமாகக் காரியாலயம் கிளம்பியவள் அன்றைத் தேதியைப் பார்த்து மேலும் சந்தோஷப்பட்டாள்.

அப்போதே ஓடிப் போய் மூர்த்தியிடம் காலண்டரைக் காட்டி, 'அடுத்த இரண்டு நாட்களில் வரப்போகிற சந்தோஷம் என்ன?" என்று அவனிடம் புதிர்போட்டு விளையாட வேண்டும்போல அவளுக்கு ஆசையாக இருந்தது!

அதை இன்னும் சிறப்பாகக் கொண்டாட அவள் எண்ணி இருந்தாள். அந்தச் சந்தோஷத்தை இவ்வளவு மலிவாக இழந்துவிட அவள் விரும்பவில்லை. அன்றைக்கு ஆபீஸுக்குக் கிளம்பும்போது நினைவாகப் பாங்கி பாஸ் புத்தகத்தை எடுத்துக் கொண்டாள். பானுவின் திருமணத்தின்போது தனக்கு அந்த மயில் வண்ணப் புடைவை மிகவும் பிடித்திருப்

வதாக மூர்த்தி சொன்னதை நினைவூட்டிக் கொண்டாள். இம்முறை நிச்சயம் அதே வண்ணப் புடைவையும், அவருக்கு ஏறத்தாழ அதே வர்ணத்தில் ஒரு பேண்டும் வாங்கி விடுவது என்று தீர்மானித்துக்கொண்டாள். யாரிடமும் இதுபற்றிப் பேசாமல் கடைசி நேரத்தில் அந்த இரகசியத்தை உடைப்பது என்று தனக்குள்ளாகவே நினைத்துக்கொண்டிருந்தாள்.

அன்றைக்கு ஆபீஸில் அவளுக்கு மிகவும் குறைவாகவே வேலை இருந்தது. சொல்லப் போனால் வேலையே இல்லை என்று சொல்லி விடலாம். பிரகாஷ் எல்லாவற்றையும் செய்து முடித்திருந்தான்.

இதுபற்றி இந்து அவனிடம் ஹாஸ்யமாகச் சொன்னபோது, ''இப்படி என் வேலை எல்லாவற்றையும் நீங்களே முடித்தால் எனக்கு வேலை இல்லேன்னு சொல்லிடப் போறாங்க ஸார்!'' என்றாள்.

''உங்களுக்காவது பரவாயில்லை மேடம். நான் ரொம்பச் சிரமப்பட்டு இப்போதான் மதுரையிலேயிருந்து சென்னைக்கு மாற்றல் வாங்கிக்கிட்டு வந்திருக்கேன். வேலையிலே முன்னேற்றம் காட்டலேன்னா என்னைப் பழையபடியே தூக்கி மதுரைக்கே அனுப்பிச்சிடுவாங்களேம்மா'' என்றான்.

''என்னவோ வேலை செஞ்சுதான் சாப்பிடணும்ங்கற மாதிரி இல்லே, பேசறீங்க..'' என்று கூறிய இந்து, தனக்கும் அவனைப்பற்றிக் கொஞ்சம் தெரியும் என்கிற மாதிரி ஆழமாக அவனைப் பார்த்தாள்.

பிரகாஷ் சிரித்துக்கொண்டே, ''சம்பாதிச்சுத் தான் சாப்பிடணுங்கிறது என் கொள்கை. சம்பாதிக்கிறது குறைவா இருந்தா வீட்டிலே விருந்து வாங்கிக்கிறது தப்பு இல்லேங்கிறது என் அபிப்பிராயம்'' என்றான்.

அவர்களுக்குள் இதமான நட்பு வளர்வதற்கான ஆரம்பமாக இந்த உரையாடல் அமைந்து விட்டது. அவளுக்கு அவன் பேசிய விதம் மிகவும் பிடித்தது.

வேலையின் இடையில் ஓர் இதமான மாற்றமாக அவர்கள் பொது விஷயம் குறித்துப் பேசினார்கள். நகரத்தில் நடக்கும் ஒரு திரைப்படம் பற்றியோ அண்மையில் நடந்த அரசியல் ஆர்ப்பாட்டம் பற்றியோ, ஹாஸ்ய நாடகம் பற்றியோ ஏதேனும் ஒன்றைத் தொட்டால் இருவருமே ஆர்வத்தோடு பேசினார்கள்.

இந்துவுக்குப் பிரகாஷ் நல்ல நண்பனாக இருக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அவனிடம் பேசும்போது அவளுக்கு இனம் புரியாத நிம்மதி இருந்தது.

அன்றைக்குச் சாப்பாட்டுக்கான இடைவேளையின்போது தன் சக ஊழியர்கள் பிரகாஷைப் பற்றிச் சொன்னதைவிட அதிகமாகவே அவனைப்பற்றி அவள் இப்போது தெரிந்து கொண்டாள்.

தன் பலங்களை வெளியிட்ட அதே துணிச்சலுடன் தன் பலவீனங்களையும் அவன் ஒப்புக் கொண்ட விதம் இந்துவுக்கு மிகவும் பிடித்திருந்தது. எல்லாவற்றையும்விட வேலை செய்து சம்பாதிக்க வேண்டிய அவசியம் இல்லாத அவன் தன் வேலையில் காட்டிய ஆர்வமும் கவனமும் அவளுக்கு மிகவும் பிடித்தன.

அடையாற்றில் கடற்கரையை ஒட்டிய பங்களாவில் அவன் தங்கி இருந்தான். அந்தப் பங்களாவே அவன் மூதாதையருக்குச் சொந்தமானதுதான். அங்கே அவனுக்குச் சமைத்துப் போட அவர்கள் வீட்டில் இருந்தே ஒரு சமையல்காரனையும் அனுப்பியிருந்தார்கள். அவன் சீக்கிரம் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று பெற்றோர் அவனை நச்சரிக்கிறார்கள். அவனுக்குத்தான் யாரையுமே பிடிக்கமாட்டேன் என்கிறது.

''யாரையுமே பிடிக்கலேன்னா என்ன அர்த்தம்?''

இந்து இப்போதெல்லாம் அவனைப் பற்றி உரிமையோடு பேச ஆரம்பித்திருந்தாள். அவன் ருசிகளையும் ஆசைகளையும் பற்றியெல்லாம் விமரிசித்தாள்.

''இது என்ன பெரிய தர்க்கசாஸ்திரமா, அர்த்தம் புரியாததற்கு?''

பிரகாஷும் அவளோடு தர்க்கம் செய்யவும் அவள் விமரிசனத்துக்குப் பதில் சொல்லவும் தயாராக இருந்தான்.

''யாரையும் பிடிக்கலேன்னு மொட்டையாச் சொன்னா எப்படி? இப்போ நான் இருக்கேன். என்னைப் பிடிக்கலையா? கிருஷ்ணமூர்த்தி ஸார், ரங்கசாமி ஸார், அஸிஸ்டென்ட் மானேஜர் மாத்யூ - எல்லோரையுமே உங்களுக்குப் பிடிக்கலேன்னு அர்த்தமா என்ன?''

''மன்னிக்கணும். எல்லாரையும் பிடிக்கிறது. கல்யாணம் பண்ணிக்கொண்டு வாழ்க்கை முழுதும் அவ முகத்தையே பார்க்கிறமாதிரி யாரையும் எனக்குப் பிடிக்கல்லே. இப்போ சரியா?''

''ஏன் பிடிக்கலே?''

''என்னவோ பிடிக்கலே.''

''கல்யாணம் பண்ணிக்காமலேயே இருந்திடறதா முடிவா?''

''அப்படியும் சொல்லமாட்டேன்.''

''பண்ணிக்கிறது என்று முடிவு பண்ணினா, சீக்கிரம் பண்ணிக்கணும்.''

''உங்களை மாதிரி ஒரு நல்ல பெண் கிடைச்சாப் பண்ணிக்குவேன்.''

இந்து சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் பார்வையில் எந்தக் குறும்பும் தெரியவில்லை. விளையாட்டாகப் பேசி இருப்பான் என்று தோன்றியது. அன்றியும் அவன் வேறு எந்த விதமான உள்நோக்குடனும் பேசி இருக்க முடியாது என்று அவளுக்குத் தெரிந்தது. ஆனாலும் இது அவன் தன்னிடம் எடுத்துக் கொள்ளும் உரிமைகளில் ஒன்று என்பதை அவளால் மறுக்க முடியாது.

அதன் பிறகும் அவன் வழக்கம்போலவே அவளிடம் பேசினான்.

அன்று பிற்பகல் உணவு இடைவேளையின் போது அவள் வாங்கி வந்த சேலையையும் பாண்ட்டையும் பார்த்து அவள் செலக்ஷனைப் பாராட்டினான்.

''ஒரு பண்டிகையும் இல்லையே இப்போ?''

''பண்டிகைக்குத் தான் புதுத் துணி எடுக்கணுமா என்ன?''

''பின்னே விசேஷம் இல்லாமே புதுசு எடுப்பாங்களா?''

''அது என்ன அப்படி விசேஷம்? எனக்குத் தெரியக்கூடாத விசேஷம்?''

''எல்லாமே உங்களுக்குத் தெரியணும்னு கட்டாயமா என்ன?''

"நிச்சயமாக ஒரு நண்பனுக்கு மறைக்கப் படவேண்டியது எதுவும் இல்லை மேடம்!"

"தெரியக்கூடிய நேரம் வரும்போது தெரியும் மிஸ்டர்!"

இந்து கடைசிவரை அவனிடம் அந்தக் காரணத்தைச் சொல்லவில்லை.

முதலில் தன் கணவனிடம் சொல்லிவிட்ட பிறகே அந்த நாளைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லி மகிழவேண்டும் என்று நினைத்து, 'அதை எப்படி ஆரம்பிப்பது? எப்படிச் சொல்வது? அவர் பிரதிபலிப்புகள் எப்படி இருக்கும்?' என்றெல்லாம் படிப்படியாகக் கற்பனைகளுடன் வீட்டுக்குப் போனாள்.

கடைசிவரை பிரகாஷுக்குச் சொல்லாமல் வந்துவிட்டது குறித்து அவளுக்குக் கொஞ்சம் வருத்தமாகக்கூட இருந்தது. அவனிடம் தன் அந்தரங்கங்களைக்கூடப் பகிர்ந்து கொள்ளக்கூடிய அளவுக்கு, அவன் நம்பிக்கையான நண்பனாயிருப்பான் என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது.

தன் இளமை நாட்கள், கல்லூரிப் படிப்பு, கல்யாண வாழ்வு, தங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவரும் தன்னிடம் பழகும் விதம் ஆகியவை குறித்து அவள் அவனோடு ஓரளவுக்குப் பேசியிருக்கிறாள். புத்திசாலியாக இருந்தால் இவற்றைமட்டுமே வைத்துக்கொண்டு அந்தக் குடும்பத்தில் அவள் நிலை குறித்து மிகவும் சுலபமாக எடைபோட்டு விடலாம்.

ஆனாலும் பிரகாஷ், அவளிடம் அவள் குடும்பத்தைப்பற்றியும், அவள் கணவனைப் பற்றியும் எதுவும் பேசியதில்லை.

அவள் இளமை நாட்களில் நாட்டியமும், பாட்டும், ஜெர்மனும், டைப், ஷார்ட்ஹேண்ட்டும் கற்றுக்கொண்ட ஆர்வத்தையும் வேகத்தையும் கேட்டுப் பாராட்டினான். அவளுடைய திறமைக்கும் அறிவுக்கும் அவள் இந்தப் பாங்கில் லெட்ஜர் போஸ்ட்டிங்கில் இருக்கவேண்டிய ஆளே இல்லை என்றும், எங்கோ ஒரு வெளிநாட்டுத் தூதரகத்தில் பிரதான ஆபீஸருக்கு உதவியாளராய் மூவாயிரம் ரூபாய் சம்பளத்துடன், கார் பங்களா சகிதம் இருக்கவேண்டியவள் என்றும் அவன் பாராட்டியபோது, அதில் மனம் நிறைந்த உண்மை இருப்பதை அவன் கண்கள் மூலம் இந்து கண்டாள்.

அவளுக்கு 'ஐஸ்' வைக்கிறமாதிரி அவன் பேசியதில்லை. நிஜமாகவே அவளைப் பார்த்துப் பிரமிக்கிற பாவம் இருக்கும்.

முதல் நாள் மாடிப்படிகளில் நின்றபடி கிருஷ்ணமூர்த்தியிடம், "அவளிடமிருந்து நிறையக் கற்றுக் கொள்ளவேண்டும்" என்று சொன்னதைப் போலவே அவளிடமே, கற்றுக்கொள்ள நிறைய இருப்பதாக அவன் சொல்வான். அதிலும் பொய்யோ வீணான புகழ்ச்சியோ தோன்றா.

அவன் உண்மையாகவே பேசுகிறான் என்று மற்றவர்கள் உறுதியாக நம்பும்படி அவனுக்கு அப்படி ஒரு பார்வை; அப்படி ஒரு குரல்.

அந்த இரவு முழுவதும் அந்த இரகசியத்தை யாரிடமும் சொல்லாமல் தனக்குள்ளேயே அடைத்துக்கொண்டு பாதுகாப்பது மிகவும் சிரமமாய் இருந்தது அவளுக்கு.

இரவிலேயே அருகில் படுத்திருக்கும் மூர்த்தியை எழுப்பி, அதை அவனிடம் சொல்லிவிடலாமா என்று இரண்டு மூன்று முறை நினைத்தாள். சிரமப்பட்டு மனத்தை அடக்கிக்கொண்டு உறங்கினாள்.

மறுநாள் எப்போது விடியும் என்று காத்திருந்த அவளுக்கு மூர்த்தியே இதுபற்றி ஏதேனும் பேசுகிறானா என்று பார்க்க ஆவலாயிருந்தது. வழக்கம்போல் குளித்துவிட்டு வந்து உடைமாற்றிக் கொள்ளும்வரை பொறுத்திருந்தாள். அதற்கு மேலும் அவளுக்குப் பொறுமை இல்லை.

இன்னும் எழுந்து பல்கூடத் தேய்க்காமல் படுக்கையில் தன்னைச் சுற்றி ஏதேதோ புத்தகங்களை விரித்து வைத்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருந்த மூர்த்தியைப் பார்த்த அவளுக்கு ஏமாற்றமும் கோபமுமாய் வந்தன.

பீரோவில் இருந்து அந்தப் புடைவையையும் அவனுக்காக ஆசையுடன் அவள் வாங்கி இருந்த அந்த பேண்ட்டையும் எடுத்துக் கொண்டுபோய் அவனிடம் காட்டினாள் இந்து.

எழுதிக்கொண்டிருந்த தாளிலிருந்து கண்களை எடுக்காமலே, "நன்றாக இருக்கு" என்றான் மூர்த்தி.

இந்துவுக்கு மேலும் ஏமாற்றமாக இருந்தது.

"இங்கே ஒரு நிமிஷம் பாருங்களேன்!"

அவள் வலுவில் அவன் முகத்தைப்பற்றித் திருப்பினாள். சுவரில் இருந்த காலண்டரை அவனுக்குக் காட்டினாள். "இந்தத் தேதியில் என்ன விசேஷம்? உங்களுக்கு நினைவிருக்கா?" என்றாள்.

ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தவனை நடுவில் எழுப்பியதுபோல மிரள மிரள விழித்தான் மூர்த்தி. அவன் ஆழமான சிந்தனையுடன் செய்துகொண்டிருந்த வேலை பாதியில் தடைப்பட்டுவிட்டதே என்ற ஆத்திரம் வேறு அவனுள் புகைய ஆரம்பித்திருந்தது.

அவன் மனம் கொஞ்சம் கொஞ்சமாகக் கோபச் சூடேறிச் சிவப்பதை அறியாத இந்து, அந்தப் பேண்ட்டை அவன் மடியில் போட்டாள்.

அவன் எழுதிக்கொண்டிருந்த காகிதங்கள் சிதறின. கோபத்துடன் அந்தப் பேண்ட்டைச் சுருட்டிச் சுவரில் எறிந்துவிட்டு, பழையபடி எழுத ஆரம்பித்தான் மூர்த்தி.

இந்துவின் இதயம் சுருண்டுவிட்டது. நல்ல நாளும் அதுவுமாய் அவனோடு சண்டையிடக் கூடாது என்று பொறுமையோடு அந்தத் துணியை எடுத்து வைத்தாள்.

புதுப் புடைவையை அவன் கையில் தந்து அதை அவன் கையால் தனக்குத் தரும்படி வேண்டினாள். அவன் வேண்டா வெறுப்பாக அவளிடம் நீட்டினான்.

"இன்னிக்கு நம்ப திருமண நாள்!" புடைவையை உடுத்துக் கொண்டே சொன்னாள் இந்து.

"ம்..ம்.." என்றபடியே எழுதிக்கொண்டிருந்தான் மூர்த்தி.

"இந்தக் கலர் உங்களுக்கு மிகவும் பிடிக்கும் என்று வாங்கி வந்தேன். பானுவின் கல்யாணத்தின்போது நீங்கள் சொன்னது நினைவிருக்கா?"

"ம்....ம்."

"புடைவை எனக்கு நன்றாயிருக்கா?"

"ம்....ம்."

இப்போது உண்மையாகவே இந்துவுக்கு அடக்க முடியாத கோபம் வந்தது.

வெளியே யாருக்கும் சொல்லாமல் எவ்வளவோ ஆசையாக, எவ்வளவோ திட்ட

மிட்டு, எவ்வளவோ எதிர்பார்த்து அவள் கொண்டாட நினைத்த அந்த நாளின் நினைவுகள் அலட்சியமான ஓர் அங்கீகரிப்பால் கழிவதில் அவளுக்குச் சம்மதம் இல்லை.

"என்னைத்தான் கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்களேன்!" தன் கோபத்தை அடக்கிக் கொண்டு அவன் அருகில் அமர்ந்து வலுவில் அவன் முகத்தைத் திருப்பினாள்.

"சட்" என்று எழுதிக் கொண்டிருந்த பேனாவைத் தூக்கி எறிந்தான், மூர்த்தி. தன் முகத்தைத் தொட்டிருந்த இந்துவின் கையைக் கோபத்தோடு தட்டி விட்டு எழுந்து போனான்.

"இன்னிக்கு ஒரு முக்கியமான கேஸ். நான் டிபன்ஸ் கௌன்சிலில் ஆஜராகிறேன். என்னை வேலை செய்யவிடாமல் தொந்தரவு செய்தால் எப்படி?"

சுவரைப் பார்த்துக் கொண்டு அவன் பேசியது இந்துவுக்கு எரிச்சலாக இருந்தது.

தன் முகத்தைக் கூடப் பார்த்துப் பேசக் கூடாத அளவு தனக்கும் அவனுக்கும் இடையில் விரோதமா என்ன என்று அவளும் ரோஷத்தோடு நினைத்தாள்.

"அப்படியா? இனிமேல் தொந்தரவு செய்ய மாட்டேன்."

இதைச் சொல்லும்போது இந்துவின் மனம் முகம் இரண்டுமே இறுகி இருந்தன.

அதன் பிறகு அவர்கள் வீட்டில் எல்லாருமே அந்தப் புதுப் புடைவையைப் பற்றிக் கேட்டார்கள். அது அவளுக்கு மிகவும் நன்றாக இருப்பதாகச் சொன்னார்கள். எதுவுமே அவள் மனத்தில் பதியவில்லை. அதிகம் பேசாத நிர்மலா கூடப் புடைவை மிகவும் நன்றாக இருப்பதாகப் பாராட்டினாள். அன்று அவர்கள் திருமண நாள் என்பதற்காகத் தான் ஏற்கனவே வடை, அக்காரவடிசலுக்கு ஏற்பாடு செய்து விட்டதாகச் சொன்னாள் பத்மாவதி.

அன்று மாலை கோவிலில் ஓர் அர்ச்சனைக்குக் கொடுக்கும்படி தன் கணவனிடம் உத்தரவிட்ட பத்மாவதியை அர்த்தம் இல்லாமல் பார்த்து அலட்சியமாய்ச் சிரித்தாள் இந்து.

அந்த நாளில் ஒரு பெண், மற்றவர்களைவிட எந்த ஒருவனிடமிருந்து பாராட்டையும், ஆசியையும் வேண்டுவாளோ, அந்த ஒருவனே அவளைப் பாராட்டவும், ஆசீர்வதிக்கவும் நேரமற்றுப் போனவுடன் அவளுக்கு வேறு எந்தப் பாராட்டும், பிரார்த்தனையுமே அர்த்தமற்ற வேடிக்கைகளாகத் தோன்றின.

மூர்த்தியே அவளோடு பேசவந்த போதும் அவள் அவனோடு பேசாமல் மௌனமாகத் தன் பாங்குக்குக் கிளம்பி விட்டாள்.

பஸ்ஸில் செல்லும்போது வழி முழுவதும் அவள் மனம் அந்த ஏமாற்றத்தையே எண்ணி எண்ணிக் குமைந்தது. கொஞ்சம் ஆழமாக யோசித்தால் அழுது விடுவோமோ என்றுகூட அவளுக்குப் பயமாக இருந்தது.

முதலில் அந்தப் புடைவையை இனி என்றுமே கட்டிக் கொள்வதில்லை என்று அவிழ்த்து வைத்தாள். தன் கணவனின் குணத்துக்குப் புடைவை என்ன செய்யும் என்றும் தனக்குள்ளே விவாதித்துக் கொண்டாள். அந்தப் புடைவையை அன்று அவள் கட்டிக் கொள்ளாவிட்டால் அது, தன் கணவனிடம் வீறுப்புப் பேசிவிட்டு அந்தரங்கமாக உணரும் ஒரு தோல்வியின் அடையாளம் ஆகிவிடும் என்பதால், மீண்டும் அதை எடுத்து அவசர அவசரமாக உடுத்துக் கொண்டாள்.

பாங்கியில் நுழைந்ததும் நுழையாததுமாய்ச் சின்னஞ் சிறிய ரோஜா மலரை நீட்டித் தலை குனிந்து அவளை வரவேற்றான் பிரகாஷ்.

"உங்கள் பிறந்த நாள் அல்லது திருமண நாள் அல்லது வேறு ஏதோ ஒரு விசேஷமான நாள். அந்த இனிய நினைவுக்கு!"

இந்துவின் ஏமாற்றம் எல்லாம் ஒரே நொடியில் போன இடம் தெரியவில்லை. அவள் மனத்தின் பகுதிகளில் உற்சாகம் ஊற்றெடுத்துப் பொங்கிப் பிரவகித்தாற் போல அவள் சிரிப்பும் களிப்புமாய் மாறிப் போனாள். பிரகாஷின் அன்பான பரிசு அவள் கொண்டையில் இடம் பெற்றது.

அந்த ஒரு கணத்தில் மூர்த்தியையும் பிரகாஷையும் அவள் மனம் எடை போட்டது. எப்படியெல்லாமோ இருந்திருக்க வேண்டிய வாழ்க்கை எப்படியெல்லாம் மாறிப்போயிற்று என்று நினைத்தபோது அவளுக்குள் இருந்த ஊமைத்தனமான சோகம் அவளையும் மீறிக் கண்ணீராய் வெளிவரத்தான் செய்தது.

பிரகாஷ் பதறிப்போனான். "நான் ஏதாவது தவறாய்ச் சொல்லி விட்டேனோ, மிஸஸ் இந்து?" என்றான்.

"இல்லை" என்ற இந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அன்று பிற்பகல் இடைவேளைக்குள் பிரகாஷிடம் தன் குடும்பத்தைப் பற்றியும் தன் கணவனைப்பற்றியும் எல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லி, கடைசியாக அந்த நாளின் மீது தன் மனம் நிறைந்த எதிர்பார்ப்பையும், தன் ஆசை நிறைந்த கற்பனைகளையும் சொன்னாள். அது எப்படி அவலமாக முடிந்தது என்றும் சொன்னாள். அதைப்பற்றிச் சொன்ன போதே அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது.

பிரகாஷ் அவள் கூறியவற்றை அநுதாபத்துடன் கேட்டான்.

பிற்பகல் எல்லாரும் டீ குடிக்கப் போகும் போது அவன் அவளை அழைத்துக் கொண்டு போனான். இருவரும் டீ குடித்துக் கொண்டே பேசினார்கள்.

"நீங்கள் அன்போடு இருக்கிறீர்கள். உங்கள் கணவர் உங்க அளவுக்கு உங்களை நேசிக்கவில்லை என்று ஏங்குகிறீர்கள். மொத்தத்தில் கணவரும் நீங்களும் சேர்ந்திருக்கிறீர்கள். என் பெற்றோர் பிரிந்தே இருக்கிறார்கள். அவர்கள் வீம்புக்கு நானும் எங்கள் சொத்தும் எல்லாமே பலியாகிக் கொண்டிருக்கிறோம். இதை என்ன சொல்கிறீர்கள்?" என்று துவங்கித் தன் குடும்பத்தின் கதையை விவரமாகச் சொன்னான் பிரகாஷ்.

அவன் தந்தைக்கும் வேறொருத்திக்கும் தொடர்பு என்று அவன் அம்மா அவரோடு இருக்காமல் பிரிந்து வந்துவிட்டதையும், அவன் மட்டும் அவன் தந்தையோடும் தாயோடும் மாறி மாறி வளர்ந்ததையும் சொன்னான்.

"மொத்தத்தில் நான் பெற்றோரின் பாசத்தை இழந்தேன். அவர்களுக்கு அவர்கள் விவகாரமே பெரிதாக இருந்தது. நான் கடமைக்கு வளர்ந்தேன். என் தாய்வழி உறவினர்கள் வேறு இந்த விஷயத்தில் புகுந்து எங்கள் நிம்மதியைக் குலைத்தார்கள்; தினமும் சண்டையும் ஏச்சும் பேச்சுமாக இருக்கும்,

பொழுது விடிந்து பொழுது போனால் என் பெற்றோர் இருவரும் உயிரோடு இருக்க வேண்டுமே என்று இரவில் பயந்துகொண்டே விழித்திருப்பேன். அவர்கள் சண்டையிடும்போது ஒருவரை ஒருவர் தீர்த்துக்கட்டிவிடுவதாகத்தான் பேசிக் கொள்வார்கள். எனக்கு நண்பர்கள் இருந்தார்கள். எவ்வளவு பேர் உண்மையானவர்கள் என்று எனக்குத் தெரியாது. சொந்த ஊரையும், சொந்த மனிதர்களையும் பிடிக்காமல்தான் மதுரையிலிருந்து சென்னைக்கே திரும்பத் திரும்ப ஓடிவருகிறேன். எனக்கு யாரையுமே பிடிக்கவில்லை. ஏன், என்னையேகூட எனக்குப் பிடிக்காமல் போயிருக்கிறது. இதற்கு என்ன சொல்கிறீர்கள்?''



இந்து, பிரகாஷையே கூர்மையாகப் பார்த்தாள்.

''உங்களைப் பார்த்த பிறகு, உங்களோடு பழகிய பிறகு, எனக்குள் ஒரு புத்துணர்ச்சியும், நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கின்றன.''

பிரகாஷின் இந்த மனம் திறந்த பேச்சு இந்துவுக்குப் பெருமையாகவும், அதே சமயம் வெட்கமூட்டுவதாகவும் இருந்தது.

பிரகாஷின் நட்பால் தன் இதயத்திலும் வெகுநாளைய ஏக்கமும் தாபமுமாய் இருந்த இடம் சுவாரசியம் நிறைந்ததாய்ப் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதைத் தனக்குள்ளாகவே நினைத்துப் பார்த்தாள் அவள்.

அதைத் தானும் அறிந்திருப்பதுபோல் பிரகாஷ் சொன்னான்! ''என்னாலும் உங்களுக்கு அந்தரங்கமாக ஒரு மகிழ்ச்சி, அல்லது ஒரு நிறைவைத் தர முடிந்திருக்கிறது என்று நினைக்கிறேன். சரிதானே?''

இந்து ஆமாம் என்கிறமாதிரி தலையாட்டினாள்.

அவர்கள் மீண்டும் அலுவலகம் திரும்பியபோது மனத்தளவில் மிகவும் நெருங்கியவர்களாய்த் திரும்பினார்கள்.

அன்று இரவு முழுவதும் இந்து அவனைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தாள்.

தானும் அவளைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்ததாகப் பிரகாஷ் மறுநாள் அவளிடம் சொன்னபோது, தன்னைத் தன் கணவனல்லாத மூன்றாவது மனிதனை அவன் இரவு முழுவதும் நினைத்திருந்ததாகத் தன்னிடமே வந்து சொன்னபோதுகூட ரோஷமோ கோபமோ ஏற்படவில்லை அவளுக்கு. மாறாக, அதுவும் அவளுக்குச் சந்தோஷமாகவே இருந்தது.

ஒரு நல்ல, நம்பிக்கைக்கு உரிய நண்பன் என்ற முறையில் தன் இயல்புக்கு உகந்த முறையில் அவனுக்குச் சில உரிமைகளை அளிப்பது தவறு இல்லை என்றே அவள் நினைத்தாள். தன் கணவன் நல்ல நண்பனாக இல்லாவிட்டால் நல்ல நண்பனாக இருக்கக்கூடியவர்களின் நட்பும், அவர்களோடு தான் நட்பாக இருப்பதும் பெரிய தவறாகிவிடா என்று அவள் தனக்குத் தானே ஒரு சமாதானத்தையும் சொல்லிக் கொண்டாள்.

அதன்பிறகு இந்து மிகவும் மாறிப்போனாள். பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாத மாற்றம் அது. அவளைப் பொறுத்தவரை தனக்கு மிகவும் அவசியம் என்று அவள் நினைத்த மாற்றங்கள்.

பிரகாஷ் விரும்பிய சேலைகளையே உடுத்தினாள். அவன் விரும்பிய விதத்தில் அவள் தலையலங்காரம் அமைந்தது. அவனுக்குப் பிடிக்காதவர்களோடு அவள் பேசுவதை நிறுத்திக் கொண்டாள். அவனோடு ஷாப்பிங் போனாள். ஒரு முறை சிற்றுண்டி சாப்பிட ஹோட்டலுக்குப் போனாள். ஒரு பந்தயம் போட்டுத் தோற்றதற்காக அவன் வேண்டிக் கொண்டதற்கிணங்க ஓர் அரை நேரம் லீவு போட்டுவிட்டு அவனோடு சினிமாவுக்குப் போனாள். பெரும்பாலான நாட்களில் பிற்பகல் இடைவேளையில் சாப்பிடுவதற்காக அவள் கொண்டுவரும் உணவை அவனே சாப்பிட்டான். பிறகு அவனுக்குப் பிடித்தமானவற்றைக் கேட்டு அதைக் கொண்டு வந்து தரவும் அவள் பழகினாள். அவனைக் கண்டித்

தாள். அவனும் அவள் பொருட்டுச் சில விஷயங்களில் மாறினான். அந்த மாறுதல்கள் அவனுக்குப் பெருமை அளித்தன. அதைவிட, 'உங்களால்தான் நான் திருந்தினேன்' என்று சிகரெட் பழக்கத்தையும் ரேசுக்குப் போவதையும் அடியோடு விட்டுவிட்டதாக அவன் சொன்னபோது, அவளுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. அந்தப் பாராட்டும் அவளுக்குள் அடங்கிக் கிடந்த வேட்கைக்குத் தீனிபோட்டது. அதற்குப் பிரதியாக அவன் அவளைப்பற்றி, அவள் அங்கங்களைப் பற்றி வர்ணிப்பதை அவள் பொறுத்துகொண்டாள்.

அந்த நட்பில் சில வரம்பு மீறல்கள் ஏற்பட்டபோது இந்துவுக்கு ஒரு தர்ம சங்கடம் ஏற்பட்டது உண்மை. முதல் முதலில் விளையாட்டாக ஒரு பந்தயம் போட்டார்கள். அதில் அவன் ஜயித்தான். அவன் விருப்பப்படி அவள் தன்னோடு ஒரு சினிமாவுக்கு வந்தாக வேண்டும் என்று அவன் அடம்பிடித்தபோது முதல்முறையாக அந்த உறுத்தல் ஏற்பட்டது. ஆனால் பிரகாஷ் அவளுக்கு ஓர் அத்தியாவசிய நண்பனானான். அவனைப் பார்க்காமல், அவனோடு பேசாமல், ஏதோ விளையாட்டாய்ச் சண்டையிட்டு அவன் அவளோடு பேசுவதைத் தவிர்த்தபோது, அதைத் தாங்கிக் கொள்ளக்கூட முடியாமல் வருந்தினாள்.

தனக்குள் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றங்கள் அவளுக்கும் பிடித்தே இருக்கிற மாதிரி அவள் உணர்ந்தாள். பிரகாஷ் தன்னிடம் எடுத்துக் கொள்ளும் சில அதிகப்பட்ச உரிமைகளுக்காக அவனை வெறுப்பதோ அவன் நட்பை இழப்பதோ நினைத்தே பார்க்க முடியாததாயிற்று.

இன்னமும் அதை நட்பு என்றே இந்து எண்ணினாள். இதில் தவறு எதுவும் இல்லை என்று அவள் மனப்பூர்வமாக நம்பினாள்.

ஆனால் பாங்கியில் மற்றவர்கள் இதை நம்புவதற்குத் தயாராக இல்லை. அவர்கள் பிரகாஷையும் இந்துவையும் இணைத்து ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். தங்கள் நட்பு வேறு யாருக்குமே தெரியாது என்று இந்துவும் பிரகாஷும் நம்பிக்கொண் டிருப்பதை அவர்களும் கெடுக்க விரும்பவில்லை.

ஆனால் ஒரு பார்வையில் பின்னும் மாற்றங்களைச் சுலபமாகக் கணித்துவிடக்கூடிய பல பார்வைகள் அவர்களைச் சுற்றி வேடிக்கை பார்த்துக் கொண்டே இருந்தன.

இதன் சிகரம் பிரகாஷின் பிறந்த நாளின் போது நேர்ந்தது.

ஒரு வாரமாகவே அவன் பிறந்த நாளுக்கு ஏதாவது நல்ல பரிசாகக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்து, அவனிடமே என்ன வேண்டும் என்று கேட்டுக்கொண் டிருந்தாள் இந்து.

வீட்டில் பானு பிரசவத்துக்காக வந்திருந்தாள். ஆகவே அவர்கள் ஆளுக்கு ஒரு பக்கம், ஆளுக்கு ஒரு வேலையாய் ஓடிக் கொண்டிருந்தார்கள். பாங்க் விட்டால் உடனே இந்து வீடு திரும்ப வேண்டி யிருந்தது. வீட்டில் அவளுக்கு நிறைய வேலைகள் இருந்தன.

மூர்த்தி, விரைவில் நடக்க இருந்த வேலை நிறுத்தத்தில் பெரும்பாலானவர்களைக் கலந்து கொள்ளச் செய்வதில் மும்முரமாக இருந்தான்.

ரங்கன் கல்லூரி ஆராய்ச்சிச் சாலையில் ஏற்பட்ட சின்ன விபத்தில் கல்லூரிக்குப் போகாமல் விடுமுறையில் இருந்தான். "காலேஜுக்கு லீவு! வெளியே சுற்று!" என்று வரதராஜன் அவனைத் திட்டியபோது, பத்மாவதி பிள்ளைக்குப் பரிந்துகொண்டு வந்து இந்துவை ஆத்திரமூட்டினாள்.

ஓடி ஓடி உழைக்கும் தங்கள் பணம் இப்படிப் பாழாகிறதே என்று அங்கே இருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் இந்துவின் மனம் தவித்தது. இத்தனைக்கும் காரணமான தன் கணவனைப்பற்றி நினைப்பதையே அவள் விட்டு விட்டாள். அவளுக்குப் பிடித்தமானவை பாங்க்கும், வேலையும், பிரகாஷின் நட்புமே!

பிரகாஷின் பிறந்த நாள்! இந்து அவனுக்குப் பிடித்த புடைவை, அவனுக்குப் பிடித்த கொண்டை, அவன் விரும்புகிற மாதிரி பூ என்று அணிந்துகொண்டு பாங்குக்குச் சென்றாள்.

பிரகாஷ் அவளுக்காகவே காத்திருந்தான்.

"எனக்காகப் பரிசு ஏதும் இல்லையா?"

"என்ன வேணும்?"

"நீங்கள் பார்த்து எது தந்தாலும்..!"

கன்னம் குழிவிழ அவன் சிரித்தான். பற்பசை விளம்பரம் இந்துவின் நினைவுக்கு வந்தது. அதே கள்ளமில்லாத சிரிப்பு!

அவன் அவளிடம் நெருங்கி வந்தான். "என் வீட்டுக்கு இன்று நீங்கள் வருகிறீர்கள். அதுதான் என் பிறந்த நாளுக்கு நீங்கள் தரும் பரிசு!"

"உங்கள் வீட்டுக்கா?" இந்து தயங்கினாள்.

"ஆமாம்! எவ்வளவு நாளாய் அழைக்கிறேன். ஒரு முறையாவது வருகிறீர்களா? இந்த முறை நான் உங்களை விடப்போவதில்லை."

இந்து தன்னுடைய நிலையை அவனுக்கு எப்படிச் சொல்லி விளங்க வைப்பது என்று புரியாமல் தவித்தாள். வீட்டில் பானுவின் வருகையால் தான் எங்குமே போக முடியாமல் இருப்பதை நினைத்து வருந்தினாள்.

அவள் சமாதானங்களைப் பிரகாஷ் ஏற்கத் தயாராக இல்லை.

கடைசியில் அவன் பிடிவாதமே வென்றது. இந்து கடைசி ஒரு மணி நேரம் அநுமதி பெற்று அவனோடு அவன் வீட்டுக்கு வருவதாக ஒப்புக் கொண்டாள்.

"அங்கே வந்து நான் என்ன செய்யட்டும்?"

"சும்மா வந்துவிட்டு உடனே கிளம்பி விடுங்கள், போதும்."

"இது என்ன விபரீதமான ஆசை!"

"ஆமாம், அப்படித்தான்!"

இதே கேள்வியை அதே நாளில் திரும்பவும் ஒருமுறை இந்து கேட்க நேர்ந்தது.

மாலை நேரம், பிரகாஷின் வீட்டின் மாடியில் நின்று கடல் அலைகளைப் பார்த்தபடி, கடற்காற்றின் இதமான சுகத்தை உணர்ந்து கொண்டிருந்தபோது, அவள் கண்கள் தூரத்தில் தெரிந்த கடல் பறவைகளை வேடிக்கை பார்த்தன.

பிரகாஷின் கேள்விக்கு அவனைப் பார்க்காமலேயே பதில் சொன்னாள்.

"இந்த வீடு உங்களுக்குப் பிடிச்சிருக்கா?"

"ம்!"

"இந்தக் கடலை..!"

"ம்!"

"என்னே?"

"ம்?" திடுக்கென்று அவனைப் பார்த்தாள் இந்து. பிரகாஷின் கைகள் அவள் தோள்களைப் பற்றி இருந்தன.

"பிரகாஷ் என்ன இது?" இந்து நகர்ந்து கொண்டாள்.

"இந்து, என் நட்பு உங்களுக்குப் பிடித்திருக்கிறதா இல்லையா?"

"ஆமாம்."

"உங்களுக்குத் தேவையாக இருக்கிறதா, இல்லையா?"

"ஆமாம்."

"அதுபோல நீங்கள் எனக்குத் தேவையாக இருக்கிறீர்கள். நான் உங்களைக் காதலிக்கிறேன்."

"முட்டாள். இது என்ன விபரீத ஆசை?"

"இதில் விபரீதம் என்ன மிஸஸ் இந்து? உங்களுக்கு என்னிடம் ஒன்று தேவையாய் இருந்தது. நான் தந்தேன். என்னுல் அது உங்களுக்குக் கிடைத்தது. அதே போல உங்களால் எனக்கு ஒன்று தேவைப்படுகிறது. உங்களால் அதைத் தரமுடியும். தர வேண்டியதுதானே முறை?"

"இப்படியெல்லாம் திட்டமிட்டா பழகினீர்கள்?"

"இல்லை. சத்தியமாய் இல்லை, மிஸஸ் இந்து."

"மன்னிக்கணும் பிரகாஷ்! என் கணவரிடம் என் மனம் பாராட்டை, நட்பு முறையில் ஒரு நெருக்கத்தை தேடியது உண்மை. அது அவரிடம் எனக்குக் கிடைக்கவில்லை என்பதும் உண்மை. உங்களிடம் நான் அதை மட்டுமே விரும்பினேன். இப்போதும் அதையே விரும்புகிறேன். இனியும் அதையே விரும்புவேன்."

"இது உண்மை தான். என் கணவனின் அன்பில் எனக்குக் கிடைக்காத அந்த நட்பை நான் உங்களிடம் பெற்றதைத் தவருக நினைக்கவில்லை. ஆனுல் என் கணவரிடம் எனக்கு மனப்பூர்வமான உடலுறவு திருப்தி இருக்கிறது. அவரிடம் நான் திருப்தியுறும் ஒரு விஷயத்தை நான் வெளியிலும் நாடினுல், அது நான் அவருக்குச் செய்யும் துரோகம்."

"இல்லை. மிஸஸ் இந்து. உங்கள் பேச்சு எதையும் கேட்கிற நிலையில் நான் இல்லை."

பிரகாஷ் தன்னை மறந்து இந்துவின் பக்கம் கை நீட்டினுன்.

நடக்க இருந்த விபரீதம் இந்துவின் மனத்தை, உடலை ஒரு விநாடியில் தகிக்க இந்து வெளியே ஓடினுள்.

பிரகாஷின் கை அவள் ஜாக்கெட் விளிம்பில் பட்ட வேகத்தில் அதன் முனை மட்டும் கிழிந்து தொங்கியது. இனி ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது என்று இந்துவுக்குத் தெரிந்து விட்டது.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினுள்.

படிகளில் 'பிரகாஷ் துரத்தி வரும் சப்தம் கேட்டது. 'வாசல் கேட்வரை எப்படி ஓடினேம், கதவை எப்படித் திறந்தோம், வீதியில் எப்படி ஓடினேம்?' எதுவும் அவளுக்குத் தெரியாது.

அவள் மூச்சு இரைக்க அந்தப் பஸ்ஸ்டாப்பில் ஓடிவந்து நின்றதும் பின்னுல் வந்த பிரகாஷ் தயங்கி ஒருகணம் நின்றுவிட்டுப் பிறகு மெதுவாகத் திரும்பி நடந்தான். அவள் அவன் போகிற பக்கமாய்க் காறி உமிழ்ந்தாள். கிழிந்த ஜாக்கெட் முனைகளை யாருமறியாமல் மூடிக்கொண்டாள்.

அந்தப் பஸ்ஸ்டாப்பின் எதிரே தன் நண்பனுடன் பேசியபடி சைக்கிளில் சாய்ந்து கொண்டிருந்த ரங்கனின் கண்கள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண் டிருப்பதை இந்துவும் பார்த்தாள்.

அடிவயிற்றில் சுரீர் என்று யாரோ சூடு வைத்தாற்போல இருந்தது.

அவளுக்கு ஒருகணம் எதுவுமே புரியவில்லை. ரங்கன் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பியபோது அவள் இதயத்தில் விதியின் அழுத்தம் துவங்கியது.

இதன் பின் விளைவுகளை ஒரு கணம் யோசித்த போது இப்படியே ஓடிக் கடலில் விழுந்து விடலாமா என்று அவளுக்குத் தோன்றியது.

அன்றைக்கு ஸ்டேஷனில் தன் தாய் சொன்ன அறிவுரை அப்போது நினைவுக்கு வந்தது. 'எப்போதும் எந்தக் காலத்திலும் பெண் ஆணுகிவிட முடியாது.' உண்மைதான். இந்துவுக்கு வாய்விட்டு அழவேண்டும் போல இருந்தது.

மிகவும் நம்பிக்கையோடு தான் போற்றிப் பாதுகாத்த நட்பு என்ற உயர்ந்த விஷயத்தை இவ்வளவு கேவலமாகப் பிரகாஷ் பயன்படுத்திக் கொண்ட ஏமாற்றமே அவளை மிகவும் பாதித்தது. அவனை அவள் நம்பினுள். அவனுக்காக அவள் எவ்வளவோ விட்டுக் கொடுத்தாள். அவனை மிகவும் நேசித்தாள். அவன் கண்ணியமானவன் என்று நம்பினுள். தன் கணவனுக்குத் தந்ததைவிட உயர்வானதும் பெருமைக்குரியதுமான ஒரு ஸ்தானத்தை அவனுக்குத் தந்தாள்.

எல்லாமே..?

பிரகாஷ் தன்னிடம் அப்படி நடந்து கொண்டதை இன்னமும் அவளால் நம்ப முடியவில்லை.

அவன் கண்ணியத்தை அவளால் அப்போதும் சந்தேகிக்க முடியவில்லை. 'பின் ஏன் அப்படி நடந்து கொண்டான்?'

அவள் மனம் மிகவும் சிரமப்பட்டே நடந்ததை அங்கீகரித்து ஒப்புக் கொண்டது.

நல்லபடியாகத் தப்பித்து வந்ததே போதும். இனி இந்த ஜன்மத்தில் அவள் இதுபோல நடக்க மாட்டாள். இந்துவுக்கு எல்லாமே கனவு போலத் தோன்றியது.

பஸ் பிடித்து வீடு வந்து சேர்ந்தபோது கனவல்ல நனவுதான் என்று புரிந்தது.

வீடு வெறிச்சோடி இருந்தது.

உள்ளே அவள் நுழைந்ததுமே ரங்கனின் விஷமச் சிரிப்பும், கோப வெறியும் நிறைந்த பார்வை அவளைச் சுட்டது.

மாமா வரதராஜன் குறுக்கும் நெடுக்குமாய் நடந்துகொண் டிருந்தார். மாமியும்

பானுவும் சுவரோரம் சாய்ந்து உட்கார்ந்திருந்தார்கள். நிர்மலா ரேடியோவைப் போட்டாள். வரதராஜன் கோபத்துடன் அதை நிறுத்தினுர்.

தன்னோடு யாருமே பேசாதது இந்துவுக்குப் பயமாக இருந்தது. அங்கே நிலவிய மௌனம், அவர்களின் பார்வை எல்லாமே அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன. மூர்த்தி இன்னும் வந்திருக்கவில்லை,

அவன் வந்த பிறகு என்ன நடக்குமோ?

மேலே நினைக்கவே முடியவில்லை. இந்து மிடறு விழுங்கிக் கொண்டாள்.

உள்ளே தங்கள் அறையில் விளக்குக்கூடப் போட்டுக்கொள்ளாமல் இருளில் முகம் தாழ்த்தி உட்கார்ந்திருந்தாள். அவர்கள் எதிரில் வரவே அவளுக்குப் பயமாகவும் வெட்கமாகவும் இருந்தது. தான் ஒன்றும் தவறு செய்யவில்லை என்று வாய்விட்டுக் கதற வேண்டும் போலவும் இருந்தது.

ஒரு துரோகியை நண்பன் என்று நம்பி ஏமாந்ததைத் தவிர வேறு எந்தத் தவறும் செய்யவில்லை என்ற நம்பிக்கையும் அவளை அவ்வப்போது தைரியப்படுத்தியது.

அங்கே இருக்கிற ஒவ்வொரு விநாடியும் அவள் நெஞ்சை உடைக்கிறமாதிரி இருந்தது.

வாசலில் காலடி ஓசை கேட்டது.

நடையில் செருப்பு விடும் சத்தம்.

மூர்த்தி—

இந்துவின் தொண்டை உலர்ந்து போயிற்று.

''மூர்த்தி கொஞ்சம் நில்லு. ரங்கன் சொல்வதைக் கேட்டுட்டுப் போ!'' வரதராஜன் சொன்னுர்.

மூர்த்தி நின்றுன்.

ரங்கன் அந்தப் பஸ் ,ஸ்டாப்பில் தான் பார்த்ததைச் சொன்னுன். இந்து ஓடி வந்ததையும், அவளை ஒருவன் துரத்தி வந்ததையும், அவன் வேர்வை வழியப் பயத்துடன் நின்றதையும், கிழிந்த ஜாக்கெட்டை அவள் அடிக்கொருமுறை இழுத்துப் போர்த்துக் கொண்டதையும் சொன்னுன்.

மூர்த்தி எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டான். வரதராஜன் இந்துவை உடனே டில்லிக்குப் அனுப்பி வைக்கும்படி உத்தர விட்டார். பத்மாவதி, இந்துவைக் கூப்பிட்டு விசாரித்துவிட்டுப் பிறகு என்ன வேண்டுமானுலும் செய்யலாம் என்றுள். பானு அதை ஆமோதித்தாள். நிர்மலா, ''எங்களை எல்லாம் சொன்னுள். அவள் யோக்கியதை இன்று சிரிக்கிறது'' என்றுள். ரங்கன் அவளோடு சேர்ந்துகொண்டான்.

இந்துவுக்கு உயிரோடு எரிகிறமாதிரி இருந்தது. மூர்த்தி அப்படியே ஓடிவந்து தன்னைப் 'பளார் பளார்' என்று அறைந்தால்கூடப் பரவாயில்லை போல இருந்தது.

அவர் என்ன செய்வாரோ என்று பயமாகவும் இருந்தது. மூர்த்தி யாரோடும் பேசவில்லை.

சட்டையைக் கழற்றி மாட்டினுன். பின் பக்கம் போய்க் கை கால் அலம்பிக்கொண்டு வந்தான்.

''என்னடா, நாங்க சொல்றது உன் காதிலே விழலேயா?'' வரதராஜன் கர்ஜித்தார்.

''என் மனைவியைப்பத்தி எனக்குத் தெரியும்!''

அவர்கள் எல்லாரும் 'கப்' பென்று அடங்கி விட்டார்கள்.

இந்துவின் கண்களில் நீர் வழிந்துகொண்டிருந்தது.

அறைக்குள் வந்த அவன் கால்களில் சரிந்து, ''என்னை மன்னிச்சுடுங்கோ'' என்று புலம்பினுள்.

மூர்த்தி ஒரு நிமிஷம் அப்படியே நின்றுன்.

விளக்கைப் போட்டுவிட்டுக் கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டான்.

இந்து சுவரோரம் ஒதுங்கி நின்றுள்.

''காபி கொண்டு வாயேன்.'' மூர்த்தி கட்டிலில் சாய்ந்து கைகளைப் பின்னுல் கட்டிக் கொண்டான்.

இந்து அவனுக்குக் காபி கொண்டுவந்த போது, அவன் புத்தக ஷெல்பில் இருந்து ஏதோ ஒரு கனத்த புத்தகத்தை எடுத்துப் புரட்டிக்கொண்டிருந்தான்.

இந்துவுக்குத் தன் அம்மாவை ஊருக்கு அனுப்பியபோது அந்த ஷோகேஸில் பார்த்த சிங்கிள் பேண்ட் டிரான்ஸிஸ்டரின் நினைவு வந்தது.

அதையும் தன் கணவனையும் ஒப்பிட்டுப் பார்த்ததும் நினைவுக்கு வந்தது.

''அவருக்குத்தான் என் மீது எவ்வளவு நம்பிக்கை!'' என்று நினைத்தபோது அவள் உள்ளம் உடல் இரண்டுமே சிலிர்த்தன. அன்று தன் அம்மா சொன்னதுபோல நாலு எழுத்து படித்து வெளி உலகம் தெரிந்தாலும் ஆண்களைப் போலவே பெண்களும் ஆகிவிட முடிவதில்லை. என்றைக்கும் பெண் ஆணுகிவிட முடியாது. இவற்றை அவள் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டாள். இவை எல்லாவற்றையும்விட, 'நமக்கு எப்படி வாய்த்ததோ அதுவே நாம் கொடுத்து வைத்தது' என்று ஏற்றுக் கொள்ளும்படி அவள் அம்மா சொன்னதை அவள் இப்போது முழுமனத்துடன் ஏற்றுக் கொண்டாள்.

எல்லாருக்குமே தனக்குக் கிடைத்ததைப் போலக் கணவன் கிடைக்க முடியுமா என்று அவள் கண்ணீருக்கிடையே நினைத்தாள்.

அவள் மனத்தின் ஏக்கமும் தாபமும் அந்தக் கண்ணீரில் கரைந்தன. சபலமும், அதன் காரணமான அவள் மீது படிந்த கறையுங்கூடக் கண்ணீரில் கரைந்தன.

அவள் கரங்கள் மூர்த்தியின் பாதங்களைத் தொட்டு வணங்கின. அந்தக் கண்ணீர் அவன் பாதங்களை நனைத்துக்கொண்டிருந்தது.

நிமிர்ந்து அவளைப் பார்த்தான் மூர்த்தி.

''அசடு அழக்கூடாது. உன்னை எனக்குத் தெரியாதா?'' என்றுன்.

அன்று அம்மா தன்னை அசடு என்றபோது இந்துவுக்குக் கோபம் வந்தது.

ஆனல் இன்றோ....?

இதே வார்த்தையை தன் கணவன் வாயி வழியாகத் திரும்பத் திரும்பக் கேட்க வேண்டும் போல அவளுக்கு ஆசையாக இருந்தது.

✱



ராஜகிரீடம்

கோ.வி.மணிசேகரன்

தேமதுரத் தமிழ்வளர்த்த மதுரைமா நகரத் தெருவெல்லாம் கோலாகலம்.

இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கன் அரியணை ஏறுகிறான்.

கலை வளர்த்த மாமேதை திருமலை நாயக்கனுடைய அருமந்த புதல்வனாயிற்றே! இவன் ஓர் ஆசைநாயகிக்குப் பிறந்தவனென்று பொய்யான பிரசாரங்கள் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரவிய காலம் ஒன்றுண்டு. அதற்கான கதையே வேறு; காரணமே வேறு. அது குறித்து யாருக்கும் கவலையில்லை; கவலைப்பட்டதாகவும் காணோம்!

1659, பிப்ரவரி, பதினேழாம் நாள்!

சூரியன் உதயமாகிறபோது, எல்லாப் பிரசாரங்களும் எப்படிப் போயின? எங்கே சென்று மறைந்தன? யார் கவலைப்பட்டார்கள்?

அன்றைத் தினம் முத்துவீரப்ப நாயக்கன் தலையில் நவமணி பொறித்த ராஜ கிரீடம் அமர்ந்து ஒளிவீசப் போகிறது.

அந்த ராஜப் பிரகடனத்தின் முன்னே பிரசாரங்கள் அனைத்தும் பிசுபிசுத்துப் போயின. அவன் இப்போது சாம்ராஜ்யாதிபதியாகப் போகிறான்! எதிரிகளை எதிர்த்தும், மிதித்தும், புதைத்தும் நாசம் பண்ண எத்தனை நேரம் பிடிக்கும்?

கொடிகட்டி ஆட்சி செய்யும் கோலாகலத் திருவிழாவின் கம்பீரம் மிகுந்த பெருமிதத்துடன், முத்துவீரப்ப நாயக்கனுக்கு முடிகட்டி, முரசு கொட்டி, மூவுலகும் போற்றும்வண்ணம் மகுடாபிஷேகம், பார்ப்போர் வியந்தும், அயர்ந்தும், பாராட்டியும், சீராட்டியும் பெருமைப்படுகிற அளவுக்கு இனிது நிறைவேறுகிறது.

மதுரை நாயக்கர் வம்சாவளிகளில், மதுரமான நிலையடைந்த கலைகள் அனைத்தும், கையசைத்தும், வாயசைத்தும், முகப்பாவமசைத்தும் வெகுமதிகளை வேண்டி நின்றன; வேண்டியமட்டும் பெற்று மகிழ்ந்தன. அரண்மனையின் 'தர்மசாலா'வான கொலுமண்டபம், திருவோலக்கம் நிறைந்து வழிந்து, விரைந்து சேகரிக்கப்பட்ட விருதுகளையும் பறந்து வருவிக்கப்பட்ட பட்டயங்களையும் பொய்யாகவும் மெய்யாகவும் கோஷமிட்டு வாழ்த்திக் கொண்டிருக்கிறது.

பிரதான மொழியாக விளங்கும் தெலுங்கு மொழியின் மாப்புலவர்கள் தங்கள் காவியங்களுக்கு முத்துவீரப்ப நாயக்கனைப் பாட்டுடைத் தலைவனாக்கி, பாடியும், படித்தும் பட்டுப் பீதாம்பரத்துடன் பரிசுகளைப் பெற்றுச் செல்கின்றனர். சம்ஸ்கிருத வித்துவான்கள் சன்மானங்களுடன் கௌரவிக்கப் படுகிறார்கள். ஆனால், அந்த மண்ணுக்குரிய மாதவத் தமிழ்மொழி, அந்த மண்ணிலிருந்து இந்த மாநிலம் முழுவதுமாக அறிவையும் நாகரிகத்தையும், பண்பாட்டையும் பரப்பிய தமிழ்மொழி....

ஆ! ஏதோ திருமலை நாயக்க மன்னன் காலத்தில் அது பெயர் சொன்னது. புலவர்களை ஆதரிக்கவேண்டுமே என்று பக்தி மார்க்கத்தின் காரணமாகச் சற்றே நாடோடிக் கவிதைப் பதவி கண்டு சிரிக்காமல் சிரித்து வந்தது.

இப்போது முத்துவீரப்ப நாயக்கன் முற்றுமாகத் தமிழ்ப் புலவர்களைப் புறக்கணித்துத் தனது 'சொர்க்க விலா' சத்திலிருந்து (கிரீடம் பாதுகாக்கிற இடம்) கொண்டுவரப்பட்ட ராஜ கிரீடத்தைப் புனைந்து அமர்க்களமாகக் கைகொட்டிச் சிரிக்கிறான்!



ஒரு புரட்சிமிகு தமிழ்ப் புலவன் எழுந்து நின்று மிகவும் பதவிசாகக் கேட்கிறான்:

"மதுரைப் பிரானே! இந்த மண்ணுக்குரிய மொழிக்கான மாதவங்கள் பலவிருக்க அதனைத் தங்கள் மகுடாபிஷேகத்தின்போது கௌரவிக்காமல் போன காரணம் என்ன?"

ஒரு கணம் விழி பிதுங்கி, மொழி புரண்டு வழி காண வாதாடும் வன்மைமிகு புலவனை நோக்குகிறான் முத்துவீரப்ப நாயக்க மன்னன்.

"இந்த மண்ணுக்குரிய மொழியென்றால்? அது தெலுங்கு மொழிதானே?"

புலவனும் சற்றும் பயப்படாமல், "நான் இந்த மண்ணில் விளைந்த மொழியைச் சொல்லுகிறேன். விளையாடிக் கொண்டிருக்கிற மொழியை அல்ல! ஓ இன்னும் புரியவில்லையா? தமிழ் மொழியைப் பற்றி.." என்று புரட்சிக் குரலெழுப்பிச் சங்கமெடுத்த தமிழ் குறித்துச் சிங்கநாதமாக முழங்குகிறான்.

"ஓ! தமிழ் பாஷையைப் பற்றிச் சொல்லுகிறாயா?"

"மன்னனுக்கு மரியாதையுண்டோ இல்லையோ? மாப்புலவனுக்கு அது உண்டு. ஒருமை போட்டுப் பேசுவது, திருமலை பூபதியாண்ட அரியணைக்கு மரியாதை குறைந்து போகிறது."

"நீர் மாப்புலவரோ?"

"மா, மா, மா, மாப்புலவன்!"

"ஆ, மாமாபுலவரோ?"

அவையே கொல்லென்று சிரிக்கிறது.

"தமிழ்ப் புலவன் நாவில் சக்தி படைத்தவன் மட்டும் அல்ல; அறம் படைத்தவன்; அண்டினால் அறம் படைப்பவன்! மரியாதை, மீண்டும் சொல்கிறேன், மரியாதையை மறவாதீர்!"

முத்து வீரப்ப நாயக்கன் ஒருகணம் அரண்டு போனாலும் மறுகணம் ஆத்திரங்களை எல்லாம் திரட்டி, "இருக்கிற தமிழ்ப் புலவன்களை வந்து பாடவேண்டாம் என்று நானா சொன்

னேன்? வந்து பாடட்டும்; கொடுக்கிற மரியாதையை வாங்கிச் செல்லட்டுமே!''

''குழைந்து யாசகம் கேட்கும் உனது அவையிலிருக்கும் நாய்கள் அல்ல தமிழ்ப் புலவர்கள். அவர்கள் பேய்களையும் கவிஞர்களாக்குகிற பெருவரப் பிரசாதிகள். அவர்கள் தங்கள் மொழி வளர்ச்சிக்குச் சன்மானம் பெறுகிறவர்கள்; மொழியை வைத்து வ்யாபாரம் செய்து வயிற்றையும் வாழ்வையும் வளர்ப்பவர்கள் அல்ல. உனது அவையில் பாடி அவர்கள் கௌரவம் கெட்டுவிடுமோ என்று தயங்குகிறார்கள்!''

மகுடாபிஷேகத்தின்போது இப்படி ஒரு மாசு கண்டது குறித்துப் பலருக்கும் கோபம் கொழுந்துவிட்டது. முத்துவீரப்ப நாயக்க மன்னன் கோபாக்கினி மூண்டு நோக்கினான். அவனது கண்கள் அக்கினித் துண்டங்களாகின. அவற்றில் ஜுவாலைகள் வீசின.

''இப்போது என்னைப் புகழ்ந்து பாடவந்திருக்கிறாயா? அல்லது தமிழுக்குப் போர்க் கொடி பிடிக்க வந்திருக்கிறாயா?''

''போர்க்கொடி பிடிக்க வந்திருக்கிறேன்; அத்துடன் உனது போக்கையும் கண்டிக்க வந்திருக்கிறேன்.''

''எந்தப் போக்கை?''

''உனது தந்தையார் காலத்தில், அவர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தபோது நீ தடுத்துக் கேலி செய்திருக்கிறாய். குமரகுருபரப் புலவனையே ஒரு சோமாறிப் பக்தன் என்று நீ கூறியதாகக் கேள்வி. நான் உனது தந்தையைப் பாடினேன்.''

''என்னையும் பாடு.''

''என் குடும்பத்துக்காக அளிக்கப்பட்ட மான்யங்களைப் பிடுங்கிக் கொண்டிருக்கிறாயே!''

''நீ பாடு; திருப்பித் தருகிறேன்.''

''நான் என்ன யாசகனா?''

''அப்படித்தானே தெரிகிறது!''


புரட்சிப் புலவனுடைய கண்களில் நெருப்புப் பொறிகள் தெறிக்கின்றன. இதயம் எரிமலையாகக் குமுறுகிறது. நாவில் அறம் வந்து அமருகிறது.

''முத்துவீரப்பா! எனது இதயம், பேசத் தொடங்கினால், நீ இருக்குமிடம் தெரியாது போய்விடுவாய். தமிழை அவமதித்த எந்தப் பாவியும் ஆட்சியின் சாவியாக இருந்ததில்லை! இந்த வரகவி வீரராகவன் வார்த்தைகள் பொய்த்ததும் இல்லை! இல்லாமலா உனது தந்தை எனக்கு மாதம் நூற்றிருபது பொற்காசுகளை மான்யமாகத் தந்தார்?'' என்று கூறிய வரகவி வீரராகவப் புலவன், அக்கினிப் பிழம்பாக மாறியது, உண்மையிலும் அந்த அவையை நடுக்குறச் செய்தது.

''உன் இதயம் பேசட்டும்!'' கம்பீரமாகவும் துணிவாகவும் முத்துவீரப்ப நாயக்கனிடமிருந்து ஆணை பிறக்கிறது.

சந்நதம் கண்டவனைப் போலச் சிலிர்த்தெழுந்த வரகவி வீரராகவப் புலவன் பாடத் தொடங்குகிறான். அவனது இதயம் எரிமலையாய்க் குமுறி வெடித்து, கவிதை நெருப்பைப் பொழிகிறது.

அந்த நெருப்பின் சாரம்-



நமது பண்பாடு!

சமீபத்தில் ஸ்ரீமத் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் நெல்லைக்கு வந்தபோது ஒரு சொற்பொழிவாற்றினர். அப்போது கூறியது:

நான் சில இடங்களுக்குச் சென்றபோது மக்களுக்கு ஆசி வழங்கிக்கொண்டு சென்றேன். அப்பொழுது சிலர் பதிலுக்கு டாட்டா என்பது போல் கை அசைத்தார்கள். அப்படிச் செய்தால் என் ஆசீர்வாதம் அவர்களுக்குக் கிடைக்காது. நான் ஆசி வழங்கும்போது நீங்கள் கும்பிடலாம் அல்லது சும்மா இருந்தாலே போதும். இப்படிக் கையசைக்க வேண்டாம். சிலர் ஊருக்கு வழி அனுப்பும்போது இப்படி 'டாட்டா' என்பது போல் கையசைக்கிறார்கள். அப்படிக் கையசைத்தால் 'திரும்பி வர வேண்டாம்' என்பது பொருள். 'போய் வாருங்கள்' என்று வாயால் சொன்னால் போதுமே. நாம் எப்பொழுதும் நம் கலாசாரம் பழக்க வழக்கங்களையே கடைப்பிடித்து அதன்படி நடக்க வேண்டும். வெளி நாட்டுப் பழக்க வழக்கங்களை நாம் கடைப்பிடித்தல் கூடாது. நம் குழந்தைகளுக்கும் நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுத்தல் வேண்டும்!

நேரில் கேட்டவர்: நெல்லை ஆர். லலிதா

''வைப்பாட்டிக்குப் பிறந்த மகனே! வாரிசுக்குரிய குமாரமுத்து திருமலை பூபதியின் சகோதரன்-மைசூரில் யுத்தம் செய்துகொண்டிருக்கிற வேளையில் அவசர அவசரமாக மணிமுடி தரித்த மதோன்மத்தனே! தமிழர்களை வாட்டி வதைத்துத் தங்கங்களைக் கொள்ளையடித்துப் பொக்கிஷத்தை நிரப்பிக் கொண்டவனே! தமிழ் மொழிக்கு ஊறு செய்து உனது தாய்மொழியை நிலை நாட்ட வந்த நீசனே! நீ வாழ்வாயா? உனது மகுடம் நிலைக்குமா? எனது நூற்றிருபது பொற்காசுகளைப் பறித்ததுபோல, உனது மகுடம் - இன்று முதல் நூற்றிருபது நாட்களுக்குள் உனது ராஜகிரீடம் மண்ணில் சாயும்! நீயும் சாய்வாய் அல்லது சாவாய்!''

பலகணங்கள் வரை அந்தத் தர்மசாலா ஊசி விழுந்தால் ஓசை கேட்குமளவுக்கு அமைதி சாதித்தது. அரண்டு மருண்டு போன நாயக்க மன்னன் முத்துவீரப்பன், அடுத்த கணம் சுயஉணர்வு அடைந்து பேய் மாதிரி கெக்கலிக் கொட்டிச் சிரிக்கிறான்.

''ஆ! பெரிய புலவனடா நீ! இவனைச் சிறையில் தள்ளுங்கள். பொதுவாக மகுடாபிஷேகத்தின்போது சிறைக் கைதிகளை விடுதலை செய்வது வழக்கம். எனது இந்த மகுடாபிஷேக நாளில் ஒரு புரட்சிப் புலவனைச் சிறையில் தள்ளியதாக இருக்கட்டும். புரட்சிப் புலவனாம், புரட்சிப் புலவன். வறட்சிப் புலவன்!''

காவலர் இருவர், வரகவி வீரராகவப் புலவனைக் கைது செய்ய இருபுறமும் வந்து நிற்கிறார்கள்.

கண்களில் தீப்பொறிகள் இன்னமும் தெறித்துக் கொண்டிருக்கின்றன.

''முத்து வீரப்பா! எனது குடும்பம் தவிக்க என்னைச் சிறையிலடைக்கிறாய்! உனது குடும்பத்திலும் ஒரு சொக்கநாதன் என்கிற வாரிசு இருக்கிறான் மறவாதே!'' என்று கம்பீரமாக அந்த அவையே கிடுகிடுக்கிற மாதிரி எழுப்பிய குரல் கேட்டு, அதுவரையில் தந்தையின் பக்கத்தில் அமர்ந்திருந்த சொக்கநாத நாயக்கன், வருங்கால மதுரையின் அரியணை வாரிசு என்ன நினைத்தானோ?

எழுந்து நின்றான். மிகவும் மரியாதையுடன் கரம் கூப்பினான். ''புலவர் பெருமானே! தயவுசெய்து எனது தந்தையை மன்னித்து வாழ்த்துங்கள்! என் பாட்டனார் காலத்தில் நீங்கள் செய்த தமிழ்த் தொண்டை நான் அறிவேன். உங்கள் மாணவன் என்கிற முறையில் கேட்கிறேன். தயவுசெய்து வாழ்த்துங்கள்.''

சில கணங்கள் வரை, வரகவி வீரராகவப் புலவன் சொக்கநாத நாயக்கனைக் கூர்ந்து கவனித்து, ''சொக்கநாத! உன் தந்தையை அந்த மதுரை மீனாட்சியாலேயே மன்னிக்க முடியாது. உன் ஆட்சியில் நான் விடுதலையாவேன்; அல்லது சிறையில் மாண்டாலும் வியப்பதற்கில்லை. நான் உனக்குச் சொல்லித் தந்த தமிழ் எனது குடும்பத்தைக் காக்கும் என்று நம்பிச் சிறை செல்கிறேன்'' என்று முழங்கினார்.

இப்போது சற்றுக் கூடுதலாகவே முத்து வீரப்ப நாயக்கன் கர்ஜனைச் சிரிப்பு எழுப்புகிறான்: ''என் மகனுக்கு அரியணையாசையை எழுப்புகிறாயோ புலவனே! அவன் என்ன காப்பது? நானே உன் குடும்பத்துக்கு நீ குறிப்பிட்டது மாதிரி ஒரு நாளைக்கு ஒரு பொற்காசு விதம் கொடுக்க உத்தரவு இடுகிறேன். நீ குறிப்பிட்ட நூற்று இருபது நாளுக்குள் எனது ராஜ கிரீடம் மண்ணில் சாயவில்லை என்றால். நிச்சயம் உனக்குத் தூக்குத் தண்டனை! உனக்கு மட்டுமல்ல, உனது தமிழுக்கும் தூக்குத் தண்டனைதான்!'' மேலும் மேலும் கர்ஜனைச் சிரிப்பை எழுப்பி அவையைக் கிடுகிடுக்கச் செய்கிறான், நாயக்க மன்னன் முத்துவீரப்பன். வரகவி வீரராகவப் புலவனைச் சிறையிலடைத்துவிட்டார்கள் என்ற செய்தி, மதுரை முழுதும் தீப்போல் பரவிக்கொண்டிருந்தது.

உபாசனை மிக்கப் புலவன் வாக்குப் பொய்க்காது என்பது போல, மைசூர் யுத்தத்தை முடித்துத் திரும்பிய சிற்றப்பன் குமாரமுத்து நாய்க்கன், செய்தியறிந்து நாட்டை இருகூறாக்கிப் போர் முரசம் கொட்டத் தொடங்கினான். பயந்து ஒடுங்கிப் போன முத்து வீரப்ப நாயக்கன் நேரில் சென்று சிற்றப்பன் காலில் விழுந்து மன்னிப்புக் கோரி, சிவகாசிச் சீமையையும், திருநெல்வேலிப் பகுதியையும் முழு உரிமை தந்து ஆட்சி நடத்துமாறு சாசனம் எழுதிக் கொடுத்துச் சந்து செய்து கொண்டான். ஆயினும் அடுத்தடுத்து தொல்லைகள் ஏற்பட்டன.

தந்தை திருமலை நாயக்கர் இருநூறு மனைவிமார்களைக் கட்டியநுபவித்த தன்மை தனக்கும் வாழ்நாளில் கிடைக்க முடியாமல் போகுமோ என்று வருந்தி, தினமும் கண்களில் பட்ட அழகுப் புஷ்பங்களை அந்தப்புரத்துக்குக் கொண்டுவந்து கசக்கி எறிவதில் களிப்பு கண்டான். இந்த நிலையில் வடக்கிலிருந்து ஆடில்ஷா என்கிற முகமதிய சுல்தான் அனுப்பி

வைத்த படைகளால் போர் முழக்கங்கள் உண்டாயின.

மகுடாபிஷேகத்தன்று கண்ட நிம்மதி, மறுநாள் முதற்கொண்டு எங்கோ ஓடி மறைந்துகொண்டிருந்தது.

முகமதியப் படையெடுப்பால் மதுரைமாநகரமே பெரும் பஞ்சத்துக்குள்ளாகியது. வரகவி வீரராகவப் புலவர் வீட்டுக்குத் தினமும் ஒரு பொற்காசு என்று நாயக்க மன்னன் ஆணையிட்டானேயொழிய, அது சரிவர நிறைவேற்றப்படாமை கண்டு நாயக்க இளவரசன் சொக்கநாதன் தானே முன்னின்று நிறைவேற்றி வந்தான்.

நாட்டில் பஞ்சம் அதிகமாகவே தலை விரித்தாடத் தொடங்கியது.

பொக்கிஷங்களை முகலாயன் கொள்ளையடித்துக் கொண்டு சமாதான உடன்படிக்கையுடன் சென்று விட்டான். மீதியிருந்த பொக்கிஷத்தை நாட்டு மக்களுடைய பஞ்சத்தைத் தீர்க்க இளவரசன் சொக்கநாதன் முனைகிறபோது தந்தைக்கும் மகனுக்கும் போராட்டம் தலை தூக்கியது. ஆயினும் தந்தையை மீறி அவனால் எதுவும் செய்ய முடியவில்லை.

மறுநாள் பொழுது நிஜமான புலவனின் அறிவுப் பிரகாசம் போல விடிந்தது.

அந்தப்புரத்தில் மன்னன் முத்து வீரப்ப நாயக்கன் கொலையுண்டு போனான் என்ற செய்தி அரண்மனையைத் தாக்கி மதுரைமாநகரை வியப்பில் ஆழ்த்தியது.

அன்று காலை—

மகுடாபிஷேகம் நடந்த மறுநாள் முதற்கொண்டு, நாளொன்றுக்கு ஓர் அழகி வீதமாக (அவள் கன்னியோ; கல்யாணமானவளோ; அழகாக இருந்தால் போதும்) நேற்றிரவு வரைகடத்தப்பட்டு வந்த நூற்றுப்பதினெட்டுக் குமரிகளும் ஒன்று சேர்ந்து, ஒரு முடிவின் கீழ் நாயக்க மன்னனைக் குத்திக் கொன்று விட்டனர். அவ்விதம் கொலைபட்டு அவனது உயிர்பிரிகிற போதுங்கூட, இந்த மதுரை பற்றிக் கவலையில்லாமல், தம் தந்தை திருமலை நாயக்கர் இருநூறு பெண்களை அந்தப்புரத்தில் அடைத்தது மாதிரி தன்னால் நூற்றுப் பதினெட்டைத் தாண்ட முடியவில்லையே என்ற ஏக்கமே நிறைந்து தவித்தானாம்.

அன்றைக்குச் சரியாக நூற்றிருபதாவது நாள் ராஜகிரீடம் கவிழ்ந்தது.

புலவன் வாக்குப் பொய்க்கவில்லை என்று நாடே பேசியது.

சொக்கநாதன் அந்தப்புரத்துக்குச் சென்று தன் தந்தையைக்கூடப் பார்க்கத் தோன்றாமல் தனது ஆசான் வரகவி வீரராகவப் புலவரை விடுதலை செய்யச் சிறைக்கூடம் நோக்கி ஓடுகிறான்.

அங்கே தமிழ் உறங்கிக் கொண்டிருந்தது. சிறைப்படாத தமிழ் சிறைப்பட்ட காரணத்தால், குறைபட்டு மீளாத நித்திரையில் உறங்கிக்கொண்டிருந்தது. ✳

ஸ்ரீ சங்கர விஜய மகரந்தம்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் இந்த ஆண்டு ஸ்ரீசங்கர ஜயந்தி மஹோற்சவத்தை ஸ்ரீ ஆதிசங்கரரின் ஜன்மபூமியான ஸ்ரீகாலடி க்ஷேத்திரத்தில் கொண்டாடினார்கள். அந்தச் சமயம் ஸ்ரீ சங்கரரின் கீர்த்தி ஸ்தம்பம் ஒன்றையும் பிரதிஷ்டை செய்து ஸ்ரீசங்கரரின் வரலாற்றைக் கூறும் '**ஸ்ரீ சங்கர விஜய மகரந்தம்**' என்ற நூலையும் வெளியிட்டார்கள். சங்கரரின் வரலாற்றைக் கூறும் பழமையான சங்கர விஜய நூல்கள் முக்கியமாகப் பத்து இருக்கின்றன. இவை தவிர, சிவபுராணம், வாயுபுராணம், கூர்மபுராணம் போன்ற நூல்களும் அவருடைய வரலாற்றைக் கூறுகின்றன. மேலும் சங்கரரும் அவருடைய சிஷ்யர்களும் இயற்றிய நூல்களிலிருந்தும் அவரைப்பற்றிய விவரங்களைக் கண்டறியலாம். இவையெல்லாவற்றையும் நோக்கும்போது பலவகைக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனவே அவருடைய வரலாற்று உண்மைகளைத் தெளிவான முறையில் எடுத்துரைக்கும் ஒரு நூல் தேவை என்ற எண்ணம் வெகுகாலமாக அன்பர்களுக்கு இருந்துவந்தது. அந்தக் குறையை இந்த 'ஸ்ரீசங்கர விஜய மகரந்தம்' என்ற நூல் தீர்த்துவைக்கும் எனலாம்.

இந்த நூலின் தேவையை உணர்ந்த இதன் தொகுப்பாசிரியர் ஸ்ரீ எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்கள் சம்ஸ்கிருதத்தில் சிறந்த புலமை வாய்ந்தவர். அவர் இதைப்பற்றி முதல் முதலில், காஞ்சியில் சிவாஸ்தானத்தில் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியாக அமர்ந்திருக்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம் பரமாசார்யர்களிடம் தெரிவித்தவுடன் அவர்கள் உடனே இந்தப் பணியைத் தொடங்கும்படி ஆஜ்ஞாபித்தார்கள். பின்னர், வட இந்திய யாத்திரையை முடித்துக்கொண்டு காஞ்சி வந்தடைந்திருந்த ஸ்ரீ காமகோடி பீடத்து ஆசார்யர்களிடம் (புதுப் பெரியவர்களிடம்) தெரிவித்தவுடன் அவர்களும் தாமே ஸ்ரீமடத்தின் நூல்நிலையத்திலிருந்து இது சம்பந்தமான பழமையான நூல்களையும் சமீபகாலத்து நூல்களையும், தவிர அச்சாகாமலிருந்த சுவடிகளையும் அன்போடு அளித்து அருள்புரிந்தார்கள்.

எல்லா நூல்களையும் பரிசீலனை செய்து பணியைத் தொடங்குமுன் எந்த நூலை முக்கிய ஆதாரமாகக் கொண்டு ஆரம்பிப்பது என்ற குழப்பம் ஏற்பட்ட சமயம், தொகுப்பாசிரியர் ஸ்ரீ பரமாசார்யர்களைத் தரிசித்துக் கேட்டிருக்கிறார். அப்போது அவர்கள், ''திரும்பத் திரும்பப் படி. தானாகவே தெளிவு பிறக்கும்'' என்று அநுக்கிரகித்தார்களாம்.

அவர்கள் அருளியபடியே தெளிவு பிறந்து பணியைத் தொடங்கியதாகக் கூறுகிறார் ஸ்ரீசாஸ்திரிகள். எல்லா மலர்களிலிருந்தும் தேனைச் சேகரிக்கும் தேனீயைப்போலப் பல மூல நூல்களிலிருந்தும் சிறப்பானவை என்று தோன்றிய சுலோகங்களைக் கொண்டு தொகுத்திருக்கிறேன் என்கிறார் அவர். 'அந்த மலரில் இன்னும் நிறையத் தேன் இருக்கிறதே! அதை ஏன் எடுக்கவில்லை?' என்று தேனீயைக் கேட்கிறோமா? அந்தச் சுதந்தரத்தைத் தாமும் எடுத்துக்கொண்டு இதைத் தொகுத்திருப்பதாகச் சொல்கிறார். சேகரித்த தேனைப்போல இந்தத் தொகுப்பு எந்தப் பாகுபாடுமின்றி எல்லோரையும் திருப்திப்படுத்தும் என்ற நம்பிக்கை ஆசிரியருக்கு இருப்பதை நம்மால் உணர முடிகிறது.

இந்த நூலிலுள்ள மொத்தச் சுலோகங்கள் 2,87. இவற்றுள் பகவத்பாதர்கள் இயற்றிய நூல்களிலிருந்து தொகுத்தவை 1234. தவிர, பிராசீனமான சங்கர விஜய நூல்களிலிருந்து எடுத்தவை 1362. மேலும் வரலாறு கோவையாக அமையும்பொருட்டு அந்தச் சுலோகங்களை இணைப்பதற்காக மூலநூல்களின் விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு தொகுப்பாசிரியர் இயற்றிய சுலோகங்கள் 191.

ஆதிசங்கரர் வாழ்ந்த ஆண்டு 32. அதை நினைவுறுத்தும் வகையிலோ என்னவோ, இந்த நூலில் அமைந்துள்ள ஆஸ்வாதங்களும் (ஸர்க்கங்களும்) 32 ஆக இருக்கின்றன. ஒவ்வோர் ஆஸ்வாதத்தின் ஆரம்பத்திலும் கீழே கண்டுள்ள குறிப்பிலிருந்து எந்த எந்தச் சுலோகங்கள் எந்த எந்த நூலிலிருந்து எடுத்தவை என்பதைக் காணலாம்.

தொகுப்பாசிரியருக்கு உகந்த முறையில் வரலாறு தொடர்ந்து செல்கிறது. அங்கங்கே மாறுபட்ட கருத்துக்களையும் கீழே குறிப்பில் தெளிவாகக் கொடுத்திருக்கிறார். கருத்துக்கள் மாறுபடும் முக்கிய இடங்கள்: (1) ஆசார்யருக்கு உபநயனம் ஆனபிறகு தகப்பனார் சிவகுரு சொர்க்கத்தை அடைந்தாரா அல்லது அதற்கு முன்னரா? (2) தாயார் காலமான பிறகு குமாரிலபட்டரைப் பிரயாகையில் சந்தித்தாரா அல்லது அதற்கு முன்னரா? (3) ஸ்ரீ ஆசார்யர் ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் செய்து முக்தியடைந்தது காஞ்சி க்ஷேத்திரத்திலா அல்லது காச்மீரத்திலா? மூன்று இடங்களிலும் முதலில் கூறப்பட்டுள்ளதே பொருத்தமாகப்பட்டதால் தொகுப்பாசிரியர் அதையே ஏற்றுக்கொண்டிருக்கிறார். அதற்கான காரணங்களையும் குறிப்பில் விளக்குகிறார்.

தொகுப்பாசிரியருக்கு எதை ஏற்றுக்கொள்வது என்ற சந்தேகம் வந்தபோதெல்லாம் பரமாசார்யர்களை நாடியபோது, ''திரும்பத் திரும்பப் படி. உன் மனசுக்குச் 'சரி'யென்று தோன்றியதை எடுத்துக்கொள். எல்லாம் நல்லபடியாக அமையும்'' என்று அவர்கள் அநுக்கிரகித்தபடியே நூல் சிறப்பாக அமைந்துள்ளது.

இந்த நூலைச் சம்ஸ்கிருதம் அறிந்தவர் அனைவரும் படித்து ஆசார்யர்களின் அருளுக்குப் பாத்திரமாக வேண்டியது மிகவும் அவசியம். இந்த நூலுக்குத் தகுந்த தமிழாக்கம் வெளிவருமானால் தமிழுலகம் அதை வரவேற்கும். சுமார் 380 பக்கங்கள் கொண்ட இந்த நூலின் விலை ரூ 15/- வெளியிட்டவர்: வைத்யர் எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, 25, தஞ்சாவூர்க் குளத்தெரு, திருச்சி-620002. —ஆர். நடராஜன், சென்னை-4.



செங்கண் மால்தான் கொண்டு போனான்!

பிரேமா நந்தகுமார்

பாட்ராசாரியார் ஆடாமல் அசையாமல் ஈஸிசேரில் உட்கார்ந்திருந்தார். அவருக்கே உரிய கொள்ளுத் தாத்தா காலத்து ஈஸிசேர். மழமழ என்று தேக்கு. கைகளை வைத்துக்கொள்ள இரண்டு இறக்கைகள் முன்புறம் நீண்டிருக்கும். முன்பக்கம் மடக்கக் கூடிய முறையில் இரண்டு இறக்கைகள் இணைந்திருக்கும். மடக்கினால் காலை அவற்றின் மேல் நீட்டிக்கொண்டு நித்திரை செய்யலாம். இணைக்கும் பித்தளை முடுக்குகள் தங்கம் போல் மினுமினுக்கும். ஈஸிசேரின் வயது நூற்றைம்பது என்றால் யார் நம்புவார்கள்?

வாசலுக்கு நேர்க்கூடத்தில் வலப்புறம் ஜன்னலண்டை இந்த ஆசனம் இருக்கும். பாட்ராசாரியாருக்கு நினைவு தெரிந்து அங்கே தான் இருக்கிறது அது. தாத்தா தம் கடைசி நாட்கள் வரை அதில்தான் வீற்றிருந்தார். அவருக்குப் பின் அது பாட்ராசாரியாரின் சிம்மாசனம் ஆகிவிட்டது.

பாட்ராசாரி வைதிகமும் லௌகிகமும் சமமாகக் (லௌகிகம் சற்று அதிக அளவிலேயே) கலந்த பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது கொள்ளுத் தாத்தா சோழியூர் ஜமீன்தார். ராவ்பகாதுர் பட்டமும் உண்டு. மெடலுடன், கவர்னருடனும், கவர்னரின் சீமாட்டியுடனும் அவர் எடுத்துக்கொண்ட ஆளுயரப் போட்டோ நடுக்கூடத்தில் தொங்குகிறது.

வைஷ்ணவப் பதிகளுக்கு, முக்கியமாக, கோவில், திருமலை, பெருமாள்கோவில் மூன்றுக்கும் இவர்கள் குடும்பம் நிறையச் செய்திருக்கிறது. அவர்களுக்கே சொந்தமாகச் சோழியூர்ப் பக்கத்தில் உடியாக்குடியில் பிரபல நவநீதகிருஷ்ணன் கோவில் உண்டு. அதைப் பாட்ராசாரியார் தாம் கவனித்து வருகிறார். பூஜை ஒழுங்காகவும் நடக்கின்றது. உடியாக்குடி கர்ப்பக்கிருகத்தில், கிருஷ்ணன் உறியிலிருந்து வெண்ணெ எடுப்பதுபோல் மூலமூர்த்தி அழகாக இருக்கும். சோழியூர் ஜமீன்தார்களான பாட்ராசாரியார்களே இந்தக் கோவிலைப் பன்னிரண்டு தலைமுறையாகக் கவனித்து வருகிறார்கள்.

பாட்ராசாரி சாப்பிட்ட பிறகு வழக்கம் போல் ஈஸிசேருக்கு வந்து உட்கார்ந்தார். சோழியூரிலேயே பெரிய பங்களா அவருடையதுதான். தோட்டத்துக் காற்று குளுமையாக வீச, சாதாரணமாக அவர் கண்ணயர்ந்து விடுவார். பகல்நேரம் எப்போதும் பங்களா திறந்துதான் இருக்கும். வீடு நிறைய வேலையாட்கள் உண்டு என்பதல்ல காரணம். எப்போதும் விழிப்புடன் கூடத்தைச் சேர்ந்த பின்னறையில் உட்கார்ந்திருக்கும் பாட்ராசாரியின் தாயார் இருக்கும்போது என்ன பயம்?

பாட்ராசாரியாருக்கு மனைவி கிடையாது. அவள் பத்து ஆண்டுகள் முன் புற்றுநோயில் போய்விட்டாள். அவர் மறுமணம் செய்து கொள்ளவில்லை. முதலாவதாக, அவளுக்குப் பன்னிரண்டு வயதில் பெண் இருந்தாள். இரண்டாவதாக, பாட்ராசாரியாரின் தாயார் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ள இருந்தாள்.

வேதவல்லி தன் அறையில் இருக்கும் ஜன்னல் வழியே கூடத்தைப் பார்த்தாள். பாட்ராசாரி தூங்கவில்லை. 'கொஞ்சநாளாகவே ராமு இப்படித்தான் இருக்கிறான். பின்னே இருக்கமாட்டானா? இந்தக் குட்டி இப்படி நிம்மதியைக் கெடுத்துவிட்டதே?' என்று வருத்தம்.

வேதவல்லிக்கு வயது எழுபது. தூய வெள்ளைப் புடைவை; தலையையும் மூடியிருக்கும். அவளிடம் கேட்காமல் காரியஸ்தர் முதல் விறகு வெட்டி வரை ஒரு காரியம் செய்ய மாட்டார்கள். இப்பவும் காரியம் செய்யும் ஜம்பகத்திடம் மென் குரலில் ஏதோ சொல்லுகிறாள். பக்கத்திலிருந்த பெருங்காய டப்பாவிலிருந்து ஒரு சாவியை எடுத்து அவளிடம் கொடுத்து, ''சரியா ஐம்பது படி உளுந்து எடுத்துக்கொடு, உருட்ட. சாக்குச் சொல்லாம நாளைக்கு வந்து உடைச்சிப்பிடச் சொல்லு. தாம்பித் தவலையில இருக்கிறதிலேருந்து ஒரு படியெ வெளியே எடுத்து வச்சுடு, உருட்டினப்புறம் கூவிக்கு'' என்கிறாள். திரும்பும் ஜம்பக

திடம், ''ஐம்பா, மறக்காம கால்படி நல்லெண்ணெயை அளந்து இன்னிக்கே வச்சிடு. நாளைக்குக் காத்தால வந்தவுடன் உளுந்துக்குத் தடவக் கொடுக்கலாம். உருட்டினப் புறம் கல்லு, மண்ணுருண்டை ஒண்ணு இருந்தாலும் திருப்பி உருட்டச் சொல்லுவா பெரியம்மானு சொல்லு'' என்கிறாள். சிறு விஷயங்கூட வேதவல்லியம்மா கவனத்தை விட்டு விலகாது. அவர்களுடைய நிலம், தோட்டம், கோவில், சொத்து எல்லாம் அவளுக்கு மனப்பாடம். நாற்பது வருஷமாக அவளே சொத்துக்களைக் கவனித்துவருகிறாள்.

வாய் உழுந்து உருட்டக் கொடுப்பதைச் சொல்கிறது, 'நாற்பத்து ஒன்பது படி தேறுமோ, இல்லை, நாற்பத்தோரு படிதானோ? இந்தப் பெரியாச்சி வந்தாலே கொழிச்சுக் கொழிச்சு நல்ல உளுந்தையும் குப்பையோடக் கொட்டுவா' என்று மனம் கணக்குப் போடுகிறது. உள் மனம், ''பகவானே, ராமுவைப் பார்த்தா தாங்கலையே'' என்கிறது.

ராமசாமி பாட்ராசாரியார் நிம்மதியற்று ஈஸிசேரில் படுத்திருக்கும் காரணம் இதுதான். அவரது பெண் பூமாவை உயர்வாகப் படிக்க வைக்க வேண்டுமென ஆசைப்பட்டார். பூமாவும் படு சுட்டி. வேதவல்லியின் பேத்தி என்பதே போதும். பூமாவின் அம்மா அழகும் பணிவும் ஒருங்கே நிறைந்த பெண். அவள் போனபின் பாட்ராசாரியின் மாமனார் தம் கடைசிப் பெண்ணைப் பாட்ராசாரிக்குக் கொடுக்க முன் வந்தார். பாட்டாசாரி மறுமணம் செய்துகொள்ள விரும்பவில்லை.

பூமா படித்தாள். சம்ஸ்கிருதத்தில் பி. ஏ. தேறினாள். வேதவல்லி ஜாதகங்களை வரவழைக்க ஆரம்பித்தாள். பிள்ளைகளைப் பெற்றவர்கள் க்யூ நின்றார்கள். ஆனால் பாட்ராசாரி பூமாவை இங்கிலாந்துக்கு அனுப்பிவிட்டார்.

அவருக்குப் பெருமையாக இருக்காதா, என்ன? சிறு வயதில் தாத்தா எவ்வளவு முயன்றும் பாட்ராசாரிக்குச் சம்ஸ்கிருத ஞானம் வரவில்லை. ஆனால் வீட்டில் லட்சுமி தாண்டவமாடினாள். இப்பொழுதுகூடக் காலை வேளையில் ஸ்நானம் ஆனபின் சில சுலோகப் புத்தகங்களை வைத்துக்கொண்டு முணுமுணுப்பார். வீட்டில் ஆராதனக்காரர் வந்து ஆராதனம் செய்ததும் பெருமாளைச் சேவிப்பார். நெற்றியில் பளீரென்று நாமம் துலங்கும். கோவிலில் சேவை நடக்கும்போது முதல் மரியாதையைப் பெற்றுக்கொள்வார். உட்காரும்போதும், எழுந்திருக்கும்போதும், ''எம்பெருமானே, ஸர்வேசா'' என்று முனகுவார். அவருடைய வைஷ்ணவ சமய ஞானம் இவ்வளவே.

இப்படிப்பட்டவருடைய பெண் வெகு புத்திசாலியாக மாகாணத்திலேயே முதலாவதாகப் பி. ஏ. தேறினாள். சம்ஸ்கிருதம் முக்கியப் பாடம். அப்பாவுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. ''பாங்க்ல இருக்கானாம்'', ''இஞ்சினீரிங் காலேஜிலேயே முதலாமே'', ''பேசாம இந்த அஸிஸ்டண்டு கலெக்டர் வரனையே பாரேன்'' என்றெல்லாம் வேதவல்லி சொல்வது அவர் காதில் ஏறவில்லை. ''லண்டன் ஸ்கூல் ஆஃப் ஓரியண்டல் ஸ்டடீஸ்லே மேல் படிப்புக்கு ஸ்காலர்ஷிப் வந்திருக்கு. எனக்கு அவள்தான் பிள்ளை. போய்ப் படிச்சுட்டு வரட்டும்'' என்றார். வேதவல்லியை அவர் எதிர்த்துப் பேசினதே இல்லை. வேதவல்லிக்கும் கொஞ்சம் பெருமை கலந்த சபலம். பாட்ராசாரி பூமாவைப் பம்பாய்வரை சென்று அனுப்பிவிட்டு வந்தார்.

பூமாவும் நல்ல பெண். தன் பாடம் உண்டு, தான் உண்டு என்று இரண்டே ஆண்டுகளில் பி. ஏ. ஹானர்ஸ் பட்டமும் பெற்றாள். டாக்டர் பட்டத்துக்கு ஆராய்ச்சியும் செய்ய ஆரம்பித்தாள். வாரம் இரண்டு கடிதம் எழுதத் தவறினதில்லை. வரவு, செலவு, படிப்பு, சகமாணவர்கள் பற்றி எல்லாம் விவரமாக எழுதுவாள். பாட்ராசாரி படித்தபின், உள் அறையில் உட்கார்ந்து வேதவல்லி பலமுறை அவற்றைப் படிப்பாள். வேதவல்லி லௌகிகத்தில் புலி; வைஷ்ணவக் கிரந்தங்களிலும் நல்ல ஞானம் பெற்றிருந்தாள். வைஷ்ணவ வேதாந்தம் பற்றிப் பூமா எழுதுவது பாட்ராசாரியைவிட வேதவல்லிக்குத்தான் நன்றாகப் புரியும். பூமா, 'வைஷ்ணவத்தில் ஸ்ரீவத்ஸாங்க மிச்ரரது சாதனை' என்பது பற்றி ஆராய்ச்சி நூல் எழுத ஆரம்பித்திருந்தாள். அவளுடன் பலர், இந்தியர், ஜப்பானியர், ஆங்கிலேயர்கள் எல்லாரும் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். வேதவல்லிக்கு வெள்ளைக்காரர்கள் நமது கலாசாரத்தில் இவ்வளவு பற்றுதல் கொண்டிருப்பது ஆச்சரியத்தையும் பெருமையையும் அளித்தது.

''எங்க டைரக்டர் டாக்டர் ஜான் மார் இன்று 'வாதாபி கணபதிம்' கீர்த்தனை முழுக்கப் பாடினார்'' என்று பூமா எழுதியிருந்தாள். இப்படிப் பல ஆங்கிலேய ஆராய்ச்சியாளர்கள் பற்றி எழுதுவாள் பூமா. பேராசிரியர் ஹாகோன் ஸ்வின்ஹில்ட் எனும் நார்வே தேசத்து ஆராய்ச்சி வல்லுநர் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதுவாள். அவர் தலைமையில் பூமா ஆராய்ச்சி செய்தாள். 'நாற்பது வயதுக்குள்ளேயே பல்வேறு சமயங்களைப் பற்றிக் கசடற அறிந்த இந்தப் பேராசிரியருக்குத் தென்னிந்திய வைஷ்ணவத்தில் பிரத்தியேகமான ஈடுபாடு' என்றெல்லாம் பூமா எழுதுவது சகஜம். அவளது ஆராய்ச்சியின் முதல் அத்தியாயத்தை நகல் எடுத்து அனுப்பி இருந்ததைப் பாட்ராசாரியார் ஆங்கிலத்தில் படித்துத் தமிழில் அம்மாவுக்காக மொழிபெயர்த்தபோது வேதவல்லி பூரித்துப் போனாள். ''இத்தனூண்டு, இது எவ்வளவு படித்துவிட்டது! எப்படியும் குல வித்தை இல்லையோ?'' என்று எண்ணிப் பெருமை கொண்டாள்.

அவளுக்குப் பாட்ராசாரியார் வைஷ்ணவக் கிரந்தங்களில் ஈடுபட்டுப் படிக்கவில்லை என்று வருத்தம்.

''என்னதான் பணம் காசு இருந்தாலும், நம்ம குலத்துக்கேற்ற படிப்பு வேண்டாமா?'' என்று கூறுவாள். பூமா டாக்டர் ஸ்வின்ஹில்ட் பற்றி எழுதும்போது அவளுக்குப் பொறாமையாகக்கூட இருக்கும். 'வெள்ளைக்காரன் என்னமா சம்ஸ்கிருதம் படிச்சிருக்கான்! எப்படி எல்லாம் பூமாவுக்கு அவன் சொல்லிக் கொடுக்கிறான்! கூரத்தாழ்வானோட ஒரு சுலோகத்தை இந்த ராமு உருப்படியாகச் சொல்லமாட்டானே. இந்த வெள்ளைக்காரன் என்னமாத்தான் அதெல்லாம் படிச்சு புரிஞ்சுண்டு நமக்கே சொல்லிக் கொடுக்கிறான்!' என்று நினைப்பாள். இப்படி நினைத்துப் பெருமைப்படுவதற்கெல்லாம்

திடுக்கிடும்படியாகப் போனவாரம் பூமாவின் கடிதம் வந்து சேர்ந்தது.

வியாழன் அன்று தபாலில் பூமா கடிதம் கட்டாயமாக வருவதுண்டு. பெருமாளுக்குத் திருவாராதனம் நடந்தபோது கடிதம் வந்தது. ஆராதனம் முடிந்தபின் பாட்ராசாரியார், ''பூமா அடுத்த மாசம் வராளாம்'' என்றார். வேதவல்லி உடனே அகமும் முகமும் மலர்ந்து, ''குழந்தை கடிதம் போட்டிருக்கிறாளோ? பகவத் சங்கல்பம்'' என்றாள். ''படிச்சுப் பாரு'' என்று அங்கு வைத்து விட்டுப் பாட்ராசாரியார் போய்விட்டார்.

பூமாவின் கடிதம் வழக்கப்படி ஆரம்பித்திருந்தது. தான் இந்தியா போய் ஆராய்ச்சி நூலை முடிக்கவும் இந்தியாவில் நடத்த வேண்டிய ஆராய்ச்சிக்காகவும் ஆறு மாதம் தங்குவதற்கும் லண்டன் சர்வகலாசாலை பணம் தருவதாக எழுதியிருந்தாள். வேதவல்லி சந்தோஷப்பட்டாள். தன் புரொபஸர் ஸ்வின்ஹில்டும் வருவதாக எழுதியிருந்தாள். அவர் தங்க ஏற்பாடு செய்யுமாறும், ஒரு முக்கிய விஷயமாக அவர் கூட வருவதாகவும் எழுதிய பூமா, தான் பேராசிரியரிடம் மிகவும் பக்தியும் பிரேமையும் கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தாள். ''எங்கள் மனசு ஒத்துப் போயிடுத்து. நேரில் உங்களது இசைவைக் கேட்டுக்கொள்ள வருகிறோம். பாட்டிக்குக் கொஞ்சம் வருத்தமாக இருக்கும். ஆனால் அவளும் நேரில் பார்த்தால் புரிந்துகொள்வாள்'' என்று பூமா கடிதத்தை முடித்திருந்தாள்.

வேதவல்லிக்கு ஒரே ஆயாசம். திடீரென உலகமே இருட்டி விட்டாற்போல் பிரமை. இதென்ன சோதனை? சற்று நேரத்துக்குப் பின் படபடப்பு அடங்கி எழுந்து நிலைப்படிக்கு வந்தாள். அதை ஒட்டிய சாப்பாட்டுக் கூடத்தின் மூலையில் இருந்த பிரம்புக் கட்டிலில் தலையைக் கையில் தாங்கியவாறு பாட்ராசாரியார் உட்கார்ந்திருந்தார். ''சாப்பிட வாடாப்பா. அப்புறம் பேசிக்கலாம்'' என்றாள். அவரும் பதில் பேசாமல் எழுந்து வந்து ஏதோ கொஞ்சம் கொறித்துவிட்டு வாசலில் ஈஸிசேருக்குப் போய்விட்டார்.

கடிதத்தைக் கண்டதும் அம்மாவும் பிள்ளையும் ஏன் இவ்வளவு தூரம் அமைதியாக இருந்தார்கள் என்பதற்குக் காரணம் உண்டு. வேதவல்லி வாழ்க்கையில் பல அதிர்ச்சிகளைக் கண்டவள். அவள் உயிரெல்லாம் பூமா விடந்தான். மேலும் பூமா அசட்டுத்தனமாக நடக்கமாட்டாள் என்ற நம்பிக்கை. ஆழ்ந்து ஆலோசனை செய்தபின்தான் பூமா இந்த முடிவுக்கு வந்திருக்க வேண்டும். பாட்ராசாரியாரோ சாந்தமூர்த்தி. வீட்டுச் சொத்து, நில விவகாரங்களில்கூட அதிருப்தியையோ கோபத்தையோ காட்டக்கூடக் குரலை உயர்த்தமாட்டார். தவிர, இப்போது காலம் மாறிவிட்டது. அவர்களது உறவில் வெள்ளைக்காரப் பெண்களைக் கலியாணம் செய்துகொண்ட பிள்ளைகள் சிலர். பெண்களிலும் மாத்துவப் பிள்ளைகள், வடக்கத்தி மிச்ரா, குஜராத்திப் பிள்ளைகள் என்று மணந்துகொண்டவர்கள் உண்டு. ஆக, பூமா எழுதியது பெரிய அதிர்ச்சி என்று கூற முடியாது. ''நம்ம பூமா கூடவா?'' என்பதும், ''நமக்கா வெள்ளைக்கார மாப்பிள்ளை?'' என்பதுந்தான் இதுவே ஏற்பட்ட மனக் கொந்தளிப்பின் காரணம்.

அம்மாவும் பிள்ளையும் பேசினார்கள்: ''சரி, ஒண்ணும் எழுதவேண்டாம். முதலில் வரட்டும். பிறகு பேசிச் சரிப்படுத்தலாம்'' என்று முடிவு செய்தார்கள். அதன்படியே ஸ்வின்ஹில்டுக்கு உடியாக்குடித் தோட்டத்தில் உள்ள வீட்டைச் சித்தப்படுத்துவதாகவும், இருவரையும் எதிர்பார்ப்பதாகவும் பாட்ராசாரியார் எழுதிவிட்டார். கல்யாணம் பற்றி ஒன்றும் எழுதவில்லை.

பூமாவும் ஸ்வின்ஹில்டும் சென்னை விமானத்தில் வந்து அங்கிருந்து சோழியூருக்கு ரெயிலில் வந்தார்கள். பாட்ராசாரியார் ஸ்டேஷனுக்கு வந்தார். சாதாரணமாக வெளியில் லௌகிகக் காரியமாகப் போகும்போது தழையத் தழையச் சுற்று வேஷ்டிதான் கட்டிக்கொள்வார். இன்று பஞ்சகச்சம், பன்னிரண்டு திருமண், திறந்த மார்பில் உத்தரீயம் சகிதம் காட்சி அளித்தார். தம் வீட்டையும், உடியாக்குடியையும், எங்கும் பரந்த கோவில்களையும் ஆசாரங்களையும் பார்த்துப் பயந்துவிடுவான் வெள்ளைக்காரன் என்று எண்ணினார்.

ஸ்வின்ஹில்ட் இருபத்தைந்து வயது இளைஞனாகவே காட்சி அளித்தான். மேற்பூச்சாகச் சில வெள்ளைக்காரர்கள் வேஷ்டி உடுத்துக்கொண்டு தொள தொளன்னு 'குரு' ஜிப்பா போட்டுக் கொள்வதைப் பார்த்திருக்கிறார், பாட்ராசாரியார். ஸ்வின்ஹில்டோ சாதாரணமாகப் பாண்டும் ஷர்ட்டும் அணிந்து கொண்டிருந்தான். இந்திய மோகம் கொண்ட வெள்ளைக்காரர்கள் போல் இல்லாமல், பாட்ராசாரியாரின் கையைக் குலுக்கினான். பூமா தயக்கத்துடன் அப்பாவை நெருங்கியவள், அவர் கோபமில்லாததுபோல் நடந்தது கண்டு ஆறுதலடைந்தாள். எல்லாரும் முதலில் பங்களாவுக்குப் போனார்கள். மாடியில் இரண்டு அறைகள் இருந்தன. ஒன்றுதான் இப்போது உபயோகத்தில் இருந்தது. அது பாட்ராசாரியார் இரவு தூங்கும் அறை. பூமாவின் வருகைக்காக அவளது அறையும் துப்புரவாக்கி வைக்கப்பட்டிருந்தது. ஸ்வின்ஹில்ட் கீழேயே கைகால் அலம்பிக்கொண்டு வாசலறையில் நாற்காலியில் உட்கார்ந்து சாப்பிட்டான். சர்க்கரைப் பொங்கலும், ததியோதனமும் அவனுக்குப் பிடித்திருந்தன. பாட்ராசாரியார் தம் ஈஸிசேரில் உட்கார்ந்து பேச்சுக் கொடுத்துக்கொண்டிருந்தார். சாப்பாடானபின் அவனை அழைத்துக்கொண்டு மாடியில் தம் அறையில் சிரம பரிகாரம் செய்துகொள்ளும்படி கூறிவிட்டுப் பாட்ராசாரியார் கீழே வந்தார்.

அப்பாவும் பெண்ணும் கூடத்தில் இலை முன்பு உட்கார்ந்து சாப்பிட்டார்கள். பிறகு அங்கேயே நார்க்கட்டில் மீது உட்கார்ந்தபடி பேச ஆரம்பித்தார்கள்.

லண்டன் வாழ்வு, தன் ஆராய்ச்சிபற்றி எல்லாம் விவரமாகக் கூறின பூமா, ''என் கடிதம் பூராவும் படிச்சியா?'' என்று அப்பாவைக் கேட்டாள்.

''இம்'' என்றார்.

''உனக்குக் கோபமா?'' என்றாள் பூமா.

''எதுக்கு?''

பூமாவுக்கு மேலே பேசத் தெரியவில்லை. வேதவல்லி தன் அறையின் வாசற்படியில்

நின்றுகொண்டே, "இப்படி எல்லாம் நீ செய்வது சரியா?" என்றாள்.

"இதில் என்ன தப்பு? எனக்கு வயசாகலையா?"

"நான் இங்க வர ஆராதனக்காரர் கிட்ட ஜாதகம் ஜாதகமா அலசிண்டிருக்கேனே?"

"அந்தப் பிரச்னையே இல்லை பாட்டி. அவருக்கு ஜாதகமே இல்லை!" பூமா சிரித்தாள்.

வேதவல்லி முகம் இறுகியது. "நம்ம குடும்பம் சாதாரணக் குடும்பமா? இந்தச் சொத்தும் புராதனப் பெருமையும்..."

"என்ன பாட்டி! எனக்குன்னு வரச்சே சர்க்கார் எல்லாத்தையும் எடுத்துக்கும். இப்பவே அந்த ஸீலிங், இந்த ஸீலிங்னு வந்துண்டிருக்கு. அப்பா நிறைய இடங்களைக் கூறு போட்டு வித்திண்டிருக்கார். காலம் மாறிப் போச்சு. நீ என்னமோ போன நூற்றாண்டில இருக்கே."

"அது போகட்டும். பணத்துக்காகவா சொன்னேன்? நீ அழகா நம்ம பையன் ஒருத்தனைக் கல்யாணம் செஞ்சுண்டு குடித்தனம் பண்ணினா எங்களுக்குப் பாந்தமா இருக்கும். நாங்க வந்துண்டு போயிண்டு இருக்க முடியும். இந்தப் பங்களாவும் தோப்பும் துரவும் உன்னுடையதாச்சே!"

"என்ன பாட்டி, நீ கூட இப்படிச் சொல்றே? நீ படிச்சவ. ஜயம்மா, கல்யாணிச் சித்தி மாதிரியா? பாந்தம், பாந்தங்கிறயே அது என்ன?"

"நாம ஐயங்கார். நீ ஒரு வைஷ்ணவப் பையனைக் கல்யாணம் செஞ்சுண்டா அது பாந்தம். வெள்ளைக்காரனைச் செஞ்சுண்டா பாந்தமில்லே, அவ்வளவுதான்!"

"புரொபஸர் அவ்வளவு மட்டமா எனக்குத் தோணலியே" என்று கூறிப் பூமா செல்லமாகச் சிரித்தாள்.

"சரி, அப்படி எனக்குப் பாந்தமா ஒரு பையனைச் சொல்லு பார்ப்போம்."

பாட்ராசாரியார் ரசிக்க ஆரம்பித்து விட்டார், இந்த விவாதத்தை. வேதவல்லிக்கு ஆத்திரம் தொனித்தது குரலில்.

"நம்ம கோதையம்மா பிள்ளைய ரொம்ப நாளா நினைச்சுண்டிருக்கேன். லட்சணமா இருக்கான். இஞ்சினீரிங் பாஸ் செஞ்சுட்டு அதுக்குள்ளே ப்ரைவேட் கம்பெனீல இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கறான்."

"தஞ்சாவூர்ப் பொம்மையா? அம்மா சொல்றதுக்கு மண்டையாட்டறதுபோலே எனக்கும் மண்டை ஆட்றவனாக இருக்கும். கோதையம்மாவுக்குச் சரியான பிள்ளை. அவளுக்கு இரும்புப் பெட்டில நகையை அடுக்கத் தெரியும். அவனுக்குத் தன்னோட மீசையைத் தடவத் தெரியும். போ பாட்டி, என்னம்மா விஸ்கியை வாங்கிக் குடிக்கிறான்! நீதானே சொல்லுவே! தண்ணித் தொந்தி வேற."

"வாஸ்தவந்தான். இப்பவும் நிறையக் குடிக்கிறான்னு கோதையம்மா வருத்தப் பட்டாளாம். ஒரு நாள் குடிச்சுட்டுச் சாக்கடையில கடந்தானாமே! நம்ம ஜயி அகத்துக்காரர் காரில போட்டுண்டு வந்தாராம். கர்மம்."

பாட்ராசாரியார் கடகடவெனச் சிரித்தார். "பாவம், அம்மாவுக்கு ஆயிரம் ஆசை. நம்ம கலெக்டர் குஞ்சுமணி பிள்ளையைப் பண்ணிக்கோ. நல்ல பிள்ளை. வம்பு தும்பு இல்லை. டில்லில ஆபீஸர். ரெண்டு வருஷத்தில துணைக் காரியதரிசி ஆயிடுவான். அப்பா சிபாரிசிலே தூதரகம், உலக பாங்கு அப்படி இப்படீனு இழுத்துவிட்டா அயல்நாட்டுப் பிரயாணம் கிடைச்சுண்டே இருக்கும்."

"பாட்டி இத்தனை நாள் அவா குடும்பத்தை அநாசாரக் குடுக்கைகள் என்று சொல்லிக் கொண்டிருந்தாளே அப்பா? தவிர, அந்த ஆளைப் பண்ணிண்டா சும்மா பட்டுப் புடைவையை உடுத்துண்டு வம்படிக்கணும்.



இல்லாட்டா இங்கிலீஷ் சினிமா போகணும். ஏம்பா, ஐ. ஏ. எஸ். ஒத்துக்கறேன். ஆனா முழுக்க முழுக்க மேற்கத்திய நாகரிகமாச்சே, அப்பா?"

"சரியாப் போச்சு. ஏதோ படிக்க வச்சுட்டோம். உன்னைப் போல முதலியாண்டான், கூரத்தாழ்வான், மணவாள மாமுனிகள் என்று உன் அகமுடையானும் உனக்குச் சரியா பேசனும்னு நடக்கிற காரியமா? சம அந்தஸ்துள்ள ஐயங்கார் பையன்களில் யார் நம்ம திருவாய் மொழியும் தேசிக பிரபந்தமும் படிச்சிருக்கான்? அதுக்கெல்லாம் ஆசைப் படாதே."

"முரணாகவே பேசறயே பாட்டி. ஒரு பக்கம் நம்ம குலம், கோத்திரம், பெருமாள்



என்கிறே: பாட்ராசாரிக்குச் சரியாக வேறேர் ஆசாரி வேணும்னு பாக்கறே. ஆனு அப்படிப் படிக்காத வெறும் ஆளேப் பதவிக்காகவும் பணத்துக்காகவும் பண்ணிக் கோங்கறயே? கல்யாணத்தன்னிக்குக் கூடத் திருமண் இட்டுக்கத் தெரியாத ஜன்மங்கள்."

பூமா அலுத்துக் கொண்டாள். அன்று அத்துடன் பேச்சு முடிந்தது.

மாலையில் சோழியூர்க் கோவிலுக்குப் போனுர்கள். பிரசித்தி பெற்ற ராமர் கோவிலில் சோழர் காலத்துச் சிற்பங்களே உன்னிப்பாகக் கண்டு மகிழ்ந்தான் ஸ்வின் ஹில்ட். நார்வே தேசத்துப் பழங்கதைகளான ஸாகஸிக்கும் (Sagas) இந்தியக் காவியங்களுக்கும் உள்ள சில ஒற்றுமைகளேப் பாட்ராசாரிக்குக் கூறினுன். கர்ப்பக்கிருகத்துக்குள் அவன் போகவில்லே. பாட்ராசாரியாரை மிக மரியாதையாக அர்ச்சகர் வரவேற்ருர். ஸ்வின்ஹில்ட் உள்ளே வந்தால் தடுத்திருக்க மாட்டார்கள். ஆனுல் அவனே புரிந்து கொண்டு தர்மசங்கடம் ஏற்படாமல் நடந்துகொண்டான். "நீங்கள் பூஜை செய்து வாருங்கள். நான் இந்தச் சிற்பங்களேப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று கூறினுன்.

அவர்கள் திரும்பி வந்தபோது ஸ்வின் ஹில்ட் ஒரு சிற்பத்தை உற்று நோக்கிக்கொண்டிருந்தான். அது ஒரு மரத்தினடியில் கை கூப்பியவாறு நிற்கும் அநுமார் தோற்றம். குரங்கு என்று குறிப்பிடுகிருேமே அதே ஜந்துவை அநுமானுக நிலே நிறுத்தி, அதன் முகத்தில் பக்தி அநுபவத்தின் குளிர்ந்த தேஜஸை ஏற்படுத்திவிட்ட அந்தச் சிற்பி சாமானியன் அல்லன். ராமகதையில் ஈடுபட்டவர்களுக்கு ராமாயணமே கண்முன் நடந்துவிடுவது போல் கல்லில் உணர்ச்சியைக் காட்டிவிட்டான்.

அந்தச் சிற்பத்தில் ஈடுபட்டிருந்த ஸ்வின் ஹில்ட், இவர்கள் அருகில் வந்ததும் புன்னகை செய்தான். "பூமா, உன் ஆராய்ச்சியிலே இரண்டாவது அத்தியாயத்தில் பஞ்சஸ்தவத்தைச் சுருக்கமாகச் சொல்வது என்று நிச்சயித்திருக்கிருேம், இல்லேயா?" என்ருன். பாட்ராசாரியாருக்கு ஒன்றுமே புரியவில்லே. "உனக்கு இந்தச் சிற்பம் ஸ்ரீவத்ஸாங்க மிச்ரரில் எதை நினேவூட்டுகிறது?" என்று கேட்டான். பூமா சற்று யோசித்துவிட்டு, மென்மையாக, "அதிமானுஷ ஸ்தவத்தைச் சொல்கிறீர்களா?" என்ருள். "மிகவும் சரி. எந்தச் சுலோகம் சொல்லு" என்ருள் ஸ்வின் ஹில்ட்.

இந்தச் சமயத்தில் எண்பத்து மூன்று வயதானவரும், கோவில் கைங்கர்யத்துக்குத் தம்மை அர்ப்பித்துக் கொண்டவருமான சோழியூர்க் கிருஷ்ண ஐயங்கார் மெள்ள நடந்து வந்தார். பாட்ராசாரிக்கு ஐயங்காரிடம் மிக மரியாதை. லட்சுமி அநுக்கிரகிக்காவிட்டாலும், ஒட்டுத் தையல் போட்ட பழுத்த நிற வேஷ்டியை அணிந்து கொண்டிருந்தாலும், சரஸ்வதி கடாட்சம் ஐயங்காருக்கு நிறைய இருந்தது: நிரம்பப் படித்தவர். தமிழ், சம்ஸ்கிருதம் இரண்டிலும் அவர் படிக்காத கிரந்தம் இல்லை. தெலுங்கும் பரிசயம் உண்டு. நல்ல வைதிகர். பரம ஞானி. பாட்ராசாரி ஸ்வின்ஹில்டை ஐயங்காருக்கு அறிமுகம் செய்தார். "எதைப் பற்றிப் பேச்சு?" என்றார் ஐயங்கார். "அதான் நம்ம பவழமல்லி அநுமாரைப் பற்றி" என்றார் அவர்.

கிளி மண்டபத் தூண்களில் இந்தத் தூண் மட்டும் பிரசித்தி பெற்றது அநுமாரால்தான்: குழந்தைகளுக்கு 'வால் மணி' அநுமார். இந்தச் சிற்பத்தில் அநுமார் வாலில் சிறிய மணி கட்டியிருக்கும். அதைத் தட்டி விட்டுச் சிறுவர்கள் ஓடுவார்கள்; பெரியவர்கள் அந்தத் தூணுக்கு வந்ததும் அநுமத் துதியை முணுமுணுத்துவிட்டுப் பவழமல்லி மரம் போன்ற சிற்பத்தில் அர்ச்சகர் கொடுத்த துளஸியை வைத்துவிட்டுப் போவார்கள். பாட்ராசாரியாருக்கும் ஞானம் அவ்வளவுதான். பூமா சற்று யோசித்து நினைவுக்குக் கொண்டுவந்து, முதலடியைச் சொல்லி நிறுத்தினாள். ஸ்வின்ஹில்ட் உடனே அந்த அழகிய சுலோகத்தை முழுதும், திருத்தமாக உச்சரித்தபடி சொன்னான்.

ஐயங்காரின் குழிவிழுந்த கண்கள் பிரகாசமாக ஜொலித்தன. "என்ன பாட்ராசாரி, எங்கேப்பா இப்படி ஒரு ரத்தினத்தைக் கண்டுபிடித்தாய்? அபூர்வமான இந்தச் சுலோகத்தை எத்தனை அழகாகச் சொல்கிறார்! அர்த்தம் புரிஞ்சுதா?"

பாட்ராசாரிக்கு உள்ளூறச் சற்று வெட்கம். அதை வெளிக் காட்டாமல் அவருக்கே உரிய மரியாதையான சிரிப்புடன், "தெரிஞ்சாத்தான் என்ன? நீர் சொல்வதை எவ்வளவு தரம் கேட்டாலும் சுகந்தான்" என்றார்.

"நம்ம ஆழ்வார் கேட்கிறார் பாரும். ஹே, ராமசந்திர பிரபு! உன்னுடைய அதிமானுஷத்வம் எப்படிப் பட்டதப்பா! என்னால் அளக்கமுடியலையே! இந்த அநுமான், கிடைக்கும் மோக்ஷத்தை வேண்டாம் என்று கூறிவிட்டு, இங்க உலகத்திலே சிரஞ்சீவியாக இருந்து கொண்டு எப்பவும் உன் கதையைக் கேட்டுக் கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட கதாநாயகனாச்சே நீ! உன் பெருமையை எப்படிச் சொல்றதுன்னு தெரியலையேங்கறார் கூரத்தாழ்வான். என்ன வாக்கு! என்ன வாக்கு!" ஆத்மாநுபவத்தில் சற்று உணர்ச்சி வசப்பட்டிருந்தார் ஐயங்கார்.

பிறகு ஸ்வின்ஹில்டின் சமய ஆராய்ச்சி பற்றியும், பூமாவின் ஆராய்ச்சிபற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஐயங்கார், "இன்னிக்குக் கூரத்தாழ்வான் திருநக்ஷத்திரம். தை மாசமோன்னோ? பொருத்தமாக உங்க புரொபசர் சொன்னார் பாரு. நீ உசத்தியா டாக்டர் பட்டம் எடுக்கணும் அம்மா" என்று பூமாவை ஆசீர்வதித்தார். ஸ்வின்ஹில்டிடம், "உங்களுக்கு ஏது இவ்வளவு பக்தி கூரத்தாழ்வானிடம்!" என்று கேட்டார்.

ஸ்வின்ஹில்ட் சிறிது கண்மூடி யோசித்தான். பிறகு சுருக்கமாக, "இவர் தம் கண்களை இழப்பதைப் பொருட்படுத்தாமல் குருவைக் காப்பாற்றி, அதனால் ஒரு மதத்தையே காப்பாற்றிவிட்டார். அதை நினைக்க நினைக்க எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. பொதுவாக மதத்துக்காகத் தியாகம் செய்பவர்கள் மேல் எனக்குப் பக்தி உண்டு: அவர்களை நான் வெறும் 'பழமை நோக்கி'களாக எண்ணியதில்லை; அதிலும் இவர் எங்கள் ஏசுநாதர் போல எனக்குத் தோன்றுகிறார். இத்தகைய குருபக்தி போற்ற வேண்டியதொன்று. இவரைப்பற்றிப் பெரிய புத்தகம் எழுத எனக்கு ஆசை. எனக்கு முடியவில்லை; பூமா சரியான சமயத்தில் என்னிடம் படிக்க வந்தாள். என்னிடம் படித்துக்கொண்டே எனக்கும் பல விஷயங்களை விளக்குகிறாள். எங்களில் யார் குரு, யார் மாணவன் என்று தெரியவில்லை" என்றான்.

அன்றிரவே ஸ்வின்ஹில்ட் உடியாக்குடி தோட்டத்துக்குப் போய்விட்டான். தினம் காலை பத்து மணிக்குப் பாட்ராசாரியாரும் பூமாவும் காரில் உடியாக்குடி போவார்கள்; பெரியவர் தோட்ட மேற்பார்வை செய்யும் போது இவர்கள் பேசிக்கொண்டிருப்பார்கள்; இவர்கள் சோழியூர் திரும்பியபின் ஸ்வின்ஹில்ட் ஒரு மோட்டார் சைக்கிளில் சுற்றுப் புறக் கிராமங்கள், கோவில்களைப் பார்த்து வருவான்.

ஒவ்வொரு நாளும் பாட்ராசாரி ஸ்வின்ஹில்டைப்பற்றிச் சொல்லச் சொல்ல வேதவல்லிக்கு அவன்மேல் பற்றுதல் ஏற்படலாயிற்று. ஆனாலும் பூமாவுக்கு வெள்ளைக்காரக் கணவனா? நம்ம அந்தஸ்து என்ன, ஆசாரம் என்ன?

இந்தச் சமயத்தில் மாசிமாதம் தெப்பத் திருநாள் வந்தது. அதற்கு இரண்டு நாட்கள் முன்பு சோழியூர் ராமர் கோவிலில் விசேஷமாக நடக்கும் ஆஞ்சனேய வாகனத்தைச் சேவிக்க, பாட்ராசாரியின் நண்பரும் தூரத்து உறவினருமான குஞ்சுமணி வந்து சேர்ந்தார். அவருடன் மனைவி, பிள்ளையும் வந்தார்கள்.

டில்லியில் லிப்ஸ்டிக்கும், ஷாம்பின் தைலக் லாம், கோ-கோ கூலிங்கிளாஸும், குதிகால் உயர்ந்த மிதியடிகளுமாகக் காட்சி அளிக்கும் அந்த நாற்பத்தைந்து வயது மிஸஸ் குஞ்சுமணி, இப்போது அடக்க ஒடுக்கமாக ஆறு கஜப் பட்டுப் புடைவையையே சிரமப் பட்டு மடிசார்க் கட்டாக உடுத்துக்கொண்டு காட்சி அளித்தாள். வேதவல்லியிடம் நல்ல பெயர் எடுக்கவேண்டாமா? லண்டனில் படிக்கும் அழகான பூமா சொத்தோட வரும் ஒரே பெண் ஆச்சே!

வேதவல்லி வீட்டில் உபசாரத்துக்குக் கேட்பானேன்? பெரிய கை. எல்லாம் சந்தோஷமாக இருந்தது. ராமர் கோவிலுக்கு அடிக்கடி போய் வந்தார்கள். உடியாக்குடி கிருஷ்ணனுக்கு திருமஞ்சனம் செய்வித்தார்கள்.

ஒரு நாள் பங்களாவில் சாப்பாட்டுக்கு ஸ்வின்ஹில்டையும் பாட்ராசாரியார் அழைத்திருந்தார். பூமாவும் ஸ்வின்ஹில்டும் ஆழ்ந்த காதல் கொண்டிருந்ததால் அசட்டுப்

பீட்டுச் சேஷ்டைகளும் ஒரக்கண் பார்வைகளும் அவர்களுக்கு அவசியமாக இருக்கவில்லை.

குஞ்சுமணி பிள்ளைக்கோ பூமாமேல் விருப்பம் ஏற்பட்டதில் ஆச்சரியம் என்ன? அவன் அப்பா சொன்னதற்கெல்லாம் ஆமாம் சாமி போடுபவன். குணத்திலும் உருவத்திலும் குஞ்சுமணியைக் கொண்டிருந்தான். பரீட்சைகள் பாஸ் செய்வதில் கெட்டிக்காரன்; ஆங்கிலச் சினிமா ஒன்று விடாமல் பார்த்து விடுவான். ஸ்வின்ஹில்டிடம் மேலை நாட்டுச் சினிமா நடிகைகளையும் தயாரிப்பாளர்களையும் பற்றி மிகப் புரிந்து கொண்டதுபோல் பேசினான். சாப்பாடு ஆன பின் எல்லாரும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

குஞ்சுமணி, ஸ்வின்ஹில்டிடம் தாம் மிக நாகரிகப் போக்குள்ளவர் என்பதைக் காட்டிக்கொள்ள முயன்றார். "எனக்கு இந்து மதம், இஸ்லாமிய மதம் எல்லாம் ஒண்ணுதான். கிறிஸ்துவ மதம் தேவலைபோன்னு கூடத் தோன்றும். அதைப் பின்பற்றுவதில் சிரமமே இல்லை" என்றார்.

"எல்லா மதங்களும் உயர்ந்தவை, மாமா. அடிப்படைத் தத்துவங்களைப் புரிந்துகொண்டால் எந்த மதத்தையும் சுலபமாகப் பின்பற்றலாமே" என்றாள் பூமா.

"அதெப்படிச் சொல்லமுடியும்? அதிலும் இந்தியாவின் மதங்கள் எல்லாம் கரையான் புற்றுமாதிரி பொலபொலன்னு பெரிசாக இருக்கு. அவ்வளவுதான். பாருங்கோ, மிஸ்டர் ஸ்வின்ஹில்ட், நீங்களுந்தான் எங்க மதத்தைப் பற்றிப் படிக்கிறேள். உள்ளூற உங்களுக்குக் கேலியாகவும் சிரிப்பாகவும் இருக்கும்கறது நிச்சயம். உதாரணமாக, இந்தத் தென்கலை, வடகலைச் சண்டையை எடுத்துக்குங்கோளேன். ஏதேனும் அர்த்தம் இருக்கோ? என்னமோ வசவசன்னு எழுதியிருக்கிற புஸ்தகங்களை வச்சிண்டு லொட்டலொடன்னு பேசறது. நம் நாடு பின் தங்கிப் போனதற்கே இதுதான் காரணம்" என்றெல்லாம் சொன்னார் குஞ்சுமணி. அவர் அந்தக் காலத்திலேயே ஐ. ஸி. எஸ். பாஸ் செய்து, வெளிநாடு சென்று வந்தவர். அவர் பேசியதில் ஆச்சரியம் இல்லைதான்.

பூமா சொன்னாள்: "என்ன மாமா, ஒரே யடியாகத் தாக்கி எறிந்துவிட்டேளே? நம்ம வைஷ்ணவத்திலே எத்தனை வித இலக்கியம் இருக்கு!" என்று ஆரம்பித்தாள்.

குஞ்சுமணி செல்லமாகச் சிரித்தார். "பூமா, அதெல்லாம் சரி. உன் ஆராய்ச்சிக்கு உபயோகம். இந்தப் பழங்காலச் சரக்கு நிறைய இருந்தாத்தானே நீங்க இண்டியா ரப்பர் மாதிரி இழுத்து, பிஎச்.டி., டி. லிட், பட்டமெல்லாம் வாங்கமுடியும்? ஆனா அதற்கும் நம்ம நித்தியப்படி நடத்தற வாழ்க்கைக்கும் சம்பந்தமே இல்லை."

"அப்படியில்லை. வைணவம் என்பது ஒரு வாழ்க்கை நெறி" என்றாள் ஸ்வின்ஹில்ட்.

"எப்படி? சும்மா ஒத்தன் ராமானுஜ தயாபாத்திரம் என்பான். அதில்லை, ஸ்ரீசைல தயாபாத்திரம்னு பூஜையை ஆரம்பிக்கணும்னு இன்னொருத்தன் கட்சி கட்டுவான். கோவில் யானைக்கு நாமம் மாத்தற சண்டைமாதிரி" என்றார்.

மிலன் குஞ்சுமணிக்கு அவர் சொன்னது பிடிக்கவில்லை. அவளுக்கும் இதே அலட்சியந்

தான்; அவன் டில்லியில் மாதர் சங்கத்தில் பேசும்போது கேட்கணும்! கோழிமுட்டை இல்லாமல் அவர்கள் வீட்டில் காலை உணவு நடைபெறுமே! ஆனால், இங்கு ஒரு முக்கியக் காரியமாக வந்திருக்கிறார்கள். இங்கே வந்து அசட்டுப் பிசட்டுனு சர்ச்சை செய்யலாமோ? வேதவல்லியையும் பாட்ராசாரியாரையும் ஈர்க்கும் வகையில் அவன் பேசினான்.

''ஆமாம், என்னைப்போல இருக்கறவாளுக்கு ஒண்ணுமே தெரியறதில்லை. தெரிஞ்சுக்கணும்னு ஆசை. ஆனால் யாரு சொல்லித் தரா? ஆமாம், இந்த ராமாநுஜ தயாபாத்ரம் என்றால் என்ன?'' என்றான்.

இந்தச் சமயம் பார்த்துக் குஞ்சுமணி பிள்ளைக்குத் தன் அறிவைத் தெரியப்படுத்த ஆசை வந்துவிட்டது; ஏற்கனவே பூமாவின் அசாத்திய ஞானம் அவனுக்குத் தாழ்வு மனப்பான்மையை உண்டுபண்ணி இருந்தது. ஸ்வின் ஹில்டின் அமைதியும் அறிவும் கலந்த பேச்சும் அவனுக்கு எரிச்சலை உண்டாக்கியது. 'வெள்ளைக்காரனுக்கு என்னைவிடத் தெரியுமோ என் மதத்தைப்பற்றி?'

வைணவத்தில் வடகலை, தென்கலை என்று இரு பிரிவுகள் உண்டு என்பது அவன் அறிவான்; அவற்றிற்குரிய நாமம்பற்றியும் அவனுக்குத் தெரியும். சில ஆங்கிலக் கட்டுரைகளைப் படித்ததன் மூலம் ராமாநுஜர் என்றொருவர் இருந்தார், அவர் மதஸ்தாபகர் என்று தெரிந்து வைத்துக்கொண்டிருந்தான். ஆனால் தேசிகர், மற்ற ஆசார்யர்கள் பற்றியாவது, திவ்யபிரபந்தம் முதலிய வைஷ்ணவ நூல்களைக் குறித்தோ அவனுக்குத் தெரியாது. அவனைச் சொல்லிக் குற்றம் இல்லை. அடிக்கடி ஊர் மாற்றுவதால் தங்கள் ஒரே புதல்வனின் படிப்புக் கெட்டுவிடும் என்று மலைப்பிரதேசம் ஒன்றில் உள்ள போர்டிங் ஸ்கூலில் விடப்பட்டவன்; இப்படிப்பட்டவன் தனக்குத் தெரியாத விஷயத்தைப்பற்றிப் பேசாமல் இருந்திருக்கலாம்; ஆனால் ஸ்வின் ஹில்ட் தனக்கு ஒன்றும் தெரியாது என்று நினைத்தால்?

''அதாம்மா, ராமாநுஜர்னு ஒரு பிஷப். அவர் சில வைசவர்களை மாற்றிவிட்டார். அவர் பேரைச் சொல்லிண்டு பாத்ரத்துலேந்து தண்ணி கொடுத்துப் பாப்டைஸ் (ஞானஸ்நானம்) செய்யற கோவில்களை ராமாநுஜத் தய்யா பாத்ரம்னு சொல்றது. அது மாதிரி ராமாநுஜருக்கு எதிரா ஸ்ரீசைலர்னு ஒத்தர் நிறைய ராமாநுஜ சிஷ்யர்களை மாற்றினார். அவர் பேரைச் சொல்லிப் பாத்ரத்திலேந்து ஜலம் விட்டா தெளிச்சா, அது ஸ்ரீ சைலத் தய்யா பாத்ரமா இருக்கும்'' என்றான்.

வேதாந்த தேசிகருடைய குருவான அப்புள்ளார் எனும் ராமாநுஜர் பற்றி வடகலை வைஷ்ணவர்கள் ஸ்மரிக்கிறார்கள் என்றோ மணவாள மாமுனிகள் எனும் ஸ்ரீ சைலேசர் பற்றித் தென்கலையார் தியானித்துத் தம் வைதிகச் சடங்குகளை ஆரம்பிக்கிறார்கள் என்றோ அவன் கண்டானா? அவனுடைய அப்பாவுக்கே ஞானம் போதாதே! லௌகிகத்தில் கெட்டிக்காரரான குஞ்சுமணிக்குப் பிள்ளையின் விளக்கம் சந்தேகத்துக்குரியதாயிருந்தும், அவருக்கே தெளிவாகத் தெரியாததால் மேம்போக்காக, ''ஓஹோ, சரிதான்'' என்றார். மிஸஸ் குஞ்சுமணி பெருமையாகப் புன்னகை செய்தாள்.

பூமா ஸ்வின் ஹில்டின் முகத்தைப் பார்த்து நாணத்துடன் தலை கவிழ்ந்தாள். உள்ளே வேதவல்லி அதிர்ச்சியுடன் கண்ணை மூடிக் கொண்டாள்.

''ஈசுவரா! பணத்தையும் வெளிநாட்டுப் படிப்பையும் கொடுத்துக் கெடுத்து விட்டாயே; இப்படி ஓர் அஞ்ஞானமா! இவ்வளவு அறியாமையா?'' என்று எண்ணிக் கொண்டாள். படாடோபமாக இதே பிள்ளைக்குச் சென்னையில் பெரிய கல்யாண மண்டபத்தில் பூணூல் போட்டது நினைவுக்கு வந்தது. ராமு கூடப் போய்வந்து வர்ணித்தானே! வேதவல்லி, தானே நாட்டுப் பெண்ணிடம் பூணூல் போட்ட பிள்ளையாண்டானுக்குப் பெரிய வெள்ளிக்கிண்ணி கொடுத்து அனுப்பினாள். நாட்டுப் பெண், ''அம்மா, பிட்சை அரிசி வாங்கற கூடைகூட வெள்ளியிலேயே பண்ணி இருந்தாம்மா!'' என்றாளே!

இந்தப் பூணூல் போடுவது எவ்வளவு வியர்த்தம்! நாளைக்கு இவனுக்குப் பிறக்கும் குழந்தையும் இப்படித்தான் வளரும். நம்ம குலம், நம்ம காரியம், நம்ம ஆசாரம் என்பதெல்லாம் பொய்! நம்முடைய சாஸ்திரங்களைப் புரிந்து கொள்ளாதவர்களும் நம் ஆசாரியர்களை மதிக்காதவர்களுமே வெள்ளைக்கார நீசர்கள்.

இரவு முழுக்க வேதவல்லி சரியாகத் தூங்காமல் கஷ்டப்பட்டாள். விடியற்காலையில்தான் சற்று நிம்மதியாகக் கண் அயர்ந்தாள். குஞ்சுமணி குடும்பம் மறுநாள் ஊருக்குப் போய் விட்டது.

பாட்ராசாரியாரிடம் வக்கீலைக் கூப்பிடச் சொன்னாள் வேதவல்லி.

''எதுக்கும்மா?'' என்றார் பாட்ராசாரியார்.

''ஏன் ராமு, திருப்பிக் கல்யாணம் பண்ணிப்பயோ?''

''உனக்கு மூளை கலங்கிப் போச்சாம்மா? ஏன் இப்படித் திடீர்னு கேட்கிறே?''

''சரி, வக்கீலைக் கூப்பிட்டு நம்ம உடையாக்குடி கோவில் நிர்வாகத்தை ஒரு டிரஸ்டாகச் செஞ்சுப்புடு. பெருமாள் காரியம், அதில் லௌகிகத்தைக் கலக்க வேண்டாம்.''

''புரியும்படி சொல்லேன்'' என்றார் பாட்ராசாரி.

''இன்னும் என்னடா? தை பிறந்தாச்சு; பேசாம சுவாமிகளைக் கூப்பிட்டு ஒரு நல்ல நாளைப் பார்க்கச் சொல்லு. நம்ம பூமா கழுத்தில் அந்த வெள்ளைக்காரப் பிள்ளையாண்டான் மூணு முடிச்சுப் போடட்டும்; மாப்பிள்ளையா அழகா பங்களாவில் நாலைந்து மாசம் இருக்கட்டும். என் ஆசை தீரக் குழந்தைகளைப் பார்க்கிறேன். அப்புறம் லீவு முடிஞ்சு அவா லண்டனுக்குப் போகட்டும்.''

பாட்ராசாரியார் சற்று மௌனமாக இருந்தார். பிறகு மெதுவாக, ''ஊர் ஏதேனும் சொல்லுமே'' என்றார்.

''ராமு! ஊர் சொல்றத்துக்காகக் கவலைப்பட வேண்டாம். இரண்டு நாள் பேசும், பிறகு மறந்துவிடும். ஆனா பூமாவும் அவ சந்ததியும் நம்ம வைஷ்ணவத்துக்கு வேண்டியவா; இப்படிப் பட்டவர்களாலதான் நம்ம ஜனங்களுக்கு விழிப்பு வரும்'' என்றாள்.

பாட்ராசாரியாருக்கு மன நிறைவு தந்த வேதவல்லியின் சொல்லை ஆமோதிப்பதுபோல் ராமர் கோவில் மணி முழங்க ஆரம்பித்தது.

அமரர் ராமரத்னம் நினைவு இரண்டாம் பரிசுக் குறுநாவல்



வேரைத் தொடாத விழுதுகள்!

துருவி

1

தெளிந்த நிலவு மோகனமான பாலொளியைப் பூமியின்மேல் கொட்டிக்கொண்டிருக்கிறது. 'மலம்புழா' அணைக்கட்டில் புதிதாக வெள்ளம் வந்து நிறைந்திருக்கவேண்டும்; குளிர்ந்த காற்று தென்னங்கீற்றுக்களிடையே சலசலத்து வந்து மேனியில் சில்லிடுகிறது.

அந்த அமைதியான பின்னிரவில் தூக்கம் பிடிக்காமல், திண்ணையில் லாந்தரை ஏற்றி வைத்துக்கொண்டு, ஸ்ரீமத் பகவத்கீதையைப் பாராயணம் செய்துகொண்டிருந்த மகாதேவ ஐயர், சுலோகங்களிலிருந்து புதுப்புது அர்த்தம் பொங்கப் பொங்க உடல் சிலிர்த்தார். ''கிருஷ்ணா கிருஷ்ணா..'' என்று அவர் மனசு இடைவிடாமல் துதித்துக்கொண்டிருந்தது. எரிமலையாய் மனம் கொதித்தாலும், அந்த நேரத்தில் சொரியப்படும் ஈசுவர கிருபை ஆழமான சாந்தியாய் அவர் அடி நெஞ்சில் உறைகிறது.

மகள் பானு எழுந்துகொண்டிருக்க வேண்டும்; உள்ளே அரவம் கேட்கிறது. பாராயணத்திலிருந்த கவனம் குலைந்தவராய்த் திரும்பிப் பார்த்தார் மகாதேவ ஐயர். பானையிலிருந்த ஜலத்தில் இரண்டு மூன்று தம்ளர் எடுத்துப் பானு குடிக்கும் சத்தம் கேட்டதும், உள்ளத்தில் ரத்தம் கசிகிறது. ''ஈஸ்வரா, பகவானே கிருஷ்ணா!'' கன்றிச் சிவந்த ஊமைக்காயத்தின் 'விண் விண்' என்று தெறித்த வலியைத் தாங்கமாட்டாமல் புலம்புகிறார் மகாதேவ ஐயர்.

அகாலத்தில் கண்விழித்த பறவைகள் மரப்பொந்திலிருந்து 'கீச் கீச்'சென்று கத்தி இறக்கையைப் 'படபட'வென அடித்துக்கொள்கின்றன, மகாதேவ ஐயரின் மனத்தைப் போல.

இன்னும் இரு நாழியானால் விடிந்துவிடும். குளத்துக்குச் சென்று உடல் குளிர முங்கல் போட்டுக் குளித்துவிட்டுக் குழலேந்தி, நீலமயமாய் அலங்காரப் புருஷனாக நிற்கும் பகவானை ஆராதித்துவிட்டு, 'ஹரே ஹரே' என்று துதிப்பாடல்களை முழங்கும்போது மனத்தின் துயரம் வடிந்துபோகும்.

லாந்தரிலிருந்த எண்ணெய் தீர்ந்துபோய் இருக்கவேண்டும். திரி கருக்கிட்டு மங்குகிறது. லாந்தரை எடுத்துக் குலுக்கிப் பார்த்த மகாதேவ ஐயர் சிமினியை உயர்த்தி, 'பூ' வென்று ஊதி அணைத்தார். நிலாவொளியில் இரவின் தேங்கிய நிச்சப்தம் கதறுதல்களின் உள்ளடங்கிய தேம்புதலாய் வியாபித்தது.

எதிர் வீட்டிலிருந்து கைக்குழந்தை வீரிட்டுக் கத்துகிறது. உத்திரத்தில் தொட்டிலின் கயிறு 'கிர்க் கிர்க்'கென்று ஆடும் சத்தமும், தூக்கக் கலக்கத்தில் சுருதி பிசக 'ஆராரோ..ர்ரரீ..' என்று அவரோகத் தொனியில் தாயின் தாலாட்டும் துல்லியமாய்க் காதில் விழுகின்றன.

'ம்' என்று நீளப் பெருமூச்சை உதிர்த்த மகாதேவ ஐயர், விரித்திருந்த கீதையைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டு, மூடி வைத்துவிட்டு எழுந்தவர், கைகளைப் பின்புறமாகக் கோத்து விரலை ஆட்டிக்கொண்டு ஹாலாய் நீண்டு கிடந்த அந்த வழுவழுப்பான திண்ணையில் முன்னும் பின்னுமாக நடக்கத் தொடங்கினார். அவர் கண்கள் அந்த அக்கிரகாரத்தின் கோடி வரையிலும் நீண்டு சென்று மீள்கிறது.

'தக தக'வென்று ரத்தச் சிவப்பாய்ப் பதித்த செவ்வோடுகளும், முற்றத்தில் துளசியும், முன்புறவாசலில் போட்டி போட்டுக்கொண்டு தேரும், மயிலும், வேலுமாகப் பெண்கள் தீட்டிவைத்து நாளெல்லாம் மங்காமல் கிடக்கும் கோலங்களும்..!

அந்தச் சோலைகளெல்லாம் எங்கே வடிந்து போய்விட்டன? 'இப்போதோ பிறகோ' என்று பயமுறுத்திக்கொண்டிருந்த உத்திரங்கள், காரை பெயர்ந்து நீட்டிக்கொண்டிருந்த செங்கற்கள், கறையான் அரித்துத் தின்றுவிட்ட வீட்டின் கதவுகள், ஓடுகளெல்லாம் பாசி பிடித்து அதன்மீது பார்க்கவே அசிங்கமாக வளர்ந்து நிற்கும் குற்றிச் செடிகள்.

ராமநாம ஜபமும், 'ஹரே ஹரே' என்று நாளெல்லாம் உச்சரித்ததும், வேதோச்சாடனமும் .. 'எல்லாம் எங்கே போய்விட்டன? உருக்குலைந்து கிடக்கும் அந்த அக்கிரகாரத்தைக் கண்டு பொறுக்கமாட்டாதவராய் வாய்விட்டுப் பிரலாபித்தார் அவர்.

தெருக்கோடியில் 'டொக் டொக்'கென்று அதிர்ந்தபடி வரும் குதிரை வண்டியின் சத்தம் கேட்கிறது. தலையை உயர்த்திப் பார்த்தார் ஐயர். ஒலவக்கோடு போகும் கடைசி ரெயிலில் வந்தவர்களாக இருக்க வேண்டும். ஒரு மலையாளிக் குடும்பம், நடராஜ ஐயர் வீட்டின் முன் வந்து இறங்கியது. உத்தியோகத்திலிருக்கும் தம் பையனிடம், பம்பாய்க்குச் சென்றபோது இந்த அக்கிரகாரத்து வீட்டைக் கிடைத்த விலைக்கு விற்றுவிட்டுப் போனார் நடராஜ ஐயர். போகுமுன் மகாதேவ ஐயரைப் பார்த்து ஒரு பாட்டம் புலம்பினார்.

''இப்படி ஆயிட்டதே? பகவான் நம்மை இப்படியுமா சோதிக்கணும்? இப்படியும் ஆயிட்டதே?'' என்று தேற்றிக்கொள்ள முடியாதவராய்க் கேவினார். 'இனி இந்த அக்கிரகாரத்துக்குத் திரும்பவே மாட்டேன்' என்ற விசிப்புடன் மனைவியை அழைத்துக்கொண்டு வடக்கே போக நேற்றுத்தான் ரெயில் ஏறினார்.

'நடராஜ ஐயர் சொன்ன புதுக் குடித்தனக்காரர்கள் இவர்களாய்த்தான் இருக்கவேண்டும்' என்று எண்ணிய மகாதேவ ஐயர், சில நிமிஷங்கள் நின்று அவர்களை நிதானமாய்ப் பார்த்தார்.

அறுபது வயதைத் தாண்டிய ஒரு பெரியவரும், முண்டும் நேரியலும் உடுத்திருந்த பெண்மணியும், இருபது வயதான ஓர் இளம் பெண்ணும் வண்டியிலிருந்து இறங்கினார்கள். பெரியவர், தூசி படிந்து கிடந்த வீட்டு முற்றத்தைக் கடந்து பூட்டைத் திறந்தார். வண்டிக்காரன் படுக்கையையும் பெட்டியையும் எடுத்து வந்து வாசலில் இறக்கிக்கொண்டிருந்தான்.

வரிசை வரிசையாக அந்த அக்கிரகாரத்திலிருந்த இருபத்தைந்து வீடுகளில், ஏழெட்டுப் பிராமணர்கள் வீட்டை விற்றுவிட்டுப் பிழைப்புக்கென்று சிதறிவிட யார் யாரெல்லாமோ இங்கே வந்து குடிபுகத் தொடங்கிவிட்டார்கள். இந்த நடராஜ ஐயரின் வீட்டுக்கு இப்போது வந்திருப்பவர்கள் ஒன்பதாவது குடித்தனம்.

இப்போதெல்லாம் அக்கிரகாரம், முன்போல ஆழமான அமைதியில் தோய்ந்து கிடப்பதில்லை. புதிதாக வந்த குடித்தனங்களில் ஏகக் கலகலப்பு. பெரும்பாலும் பக்கத்து நகரத்தில் உத்தியோகம் பார்ப்பவர்கள். சாயங்காலம் மகாதேவ ஐயர், ஸ்நானத்துக்கும் சந்தியாவந்தனம் செய்வதற்கும் குளத்துக்குப் போனபோது பார்க்கிறார். 'டுமு டுமு'வென்று ஆட்டோரிக்ஷா சப்திக்கப் பலரும் வந்து இறங்குகிறார்கள்;

தியான அறையில் வெடிகுண்டு போட்டதுபோல் தகரத்தில் ஆணிகொண்டு 'கர கர'வென்று கீறல் எழும் மயிர்க் கால்களின் கூச்சம் அந்த வேளைகளில் ஏற்படுகிறது.

'நிலைமை இப்படியே முத்திண்டிருந்தா நாமும் அதிகக் காலம் இங்கே வாழமுடியாதோ?' என்று கனத்தோடு உணர்கிறார் அவர். உள்ளொளி பெருகிப் பிரகாசமான அவர் விழிகளில் நீர் அரும்பு கட்டுகிறது.

பல தலைமுறையாக அவர்கள் வாழ்ந்து வந்த அக்கிரகாரம் அது. எத்தனை பரம்பரை விழுதுகள் தொங்க, அந்தப் பூர்வாசிரம ஆலமரம் வேரோடிப் போய் நிற்கிறது! சாத்துவிகம், தர்மம், நெறி-இவையெல்லாம் அந்த மண்ணில் அல்லவா முன்னோர்கள் விட்டுச் சென்ற சாராம்சமாக, உயிர்த்துளியாக விரவிக் கிடக்கின்றன.

'இதையெல்லாம் அரக்கப் பரக்க விட்டுட்டு இப்படி ஓடுகிறார்களே? எங்கே போய் இந்தப் பூர்வாசிரமப் புனிதத்தைத் தொட்டு நமஸ்கரிக்க முடியும்?'

விடிகாலைக்காகச் சேவல் ஒன்று நீளமாய்க் கொக்கரித்துக் கூவுகிறது. கீழ்வானில் வைகறைச் சிவப்பு துளித்துளியாய்ப் படர்ந்து பரவுகிறது. இரவெல்லாம் ஒளிபாய்ச்சிக் கிடந்த வளர்பிறை நிலா மங்கலடிக்கிறது.

புதுக் குடித்தனக்காரர்கள் கதவை அடைத்துக் கொண்டதும், சாலை அமைதியைத் தூளடித்துக்கொண்டு வண்டிச் சக்கரங்கள் 'கட கட'வென்று சப்திக்கக் குளம்பு ஒலியோடு குதிரைகள் ஓடுகின்றன.

யந்திரம்போல் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த மகாதேவ ஐயர், ''குருவாயூர் அப்பா!'' என்று மனங்குழைந்து கூப்பிட்டார். விடியும் வரையிலும் இமை மூடாத அவர் கண்கள் செவ்வரிபட்டுத் தெரிகின்றன. இப்போதெல்லாம் அவருக்குச் சரியாகவே தூக்கம் பிடிப்பதில்லை.

எப்படி அவரால் தூங்க முடியும்?

'உழுகிறவர்களுக்கே நிலம் சொந்தம்' என்ற சட்டம் நிலச்சுவான்தார்களாயிருந்த அந்த அந்தணர்களை லௌகிகத்தில் பூஜ்யமாக்கிவிட்ட பிறகு, இந்த அக்கிரகாரத்தில் எத்தனை மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன? சொந்த ஜீவியத்தில் சவுக்கைச் சுண்டியதாய் நாள்தோறும் ரத்தம் சொட்டச் சொட்ட விழும் அடிகள். எப்படித் தூங்க முடியும்? அவர் எப்படி இமைமூட முடியும்?

கதவைத் திறந்துகொண்டு பானு வெளியே வருகிறாள். வெயில்கொண்டு உலர்ந்த பூவாய் அவளைக் காணும்போது மகாதேவ ஐயரின் மனம் தியானங்களுக்கு ஆட்படாமல் ஒரு நொடி கொந்தளித்துப் போகிறது.

தகப்பனாரை எதிரே கண்ட பானு, ''அப்பா ராமுழுக்க நீங்க தூங்கவே இல்லை போலிருக்கே?'' என்றவள், சாணக் கட்டியை எடுத்து நீரில் கரைத்து, 'தொப் தொப்' என்று முற்றம் தெளிக்கிறாள்.

'இந்தக் குழந்தையின் வயிற்றில் ஒரு பிடி அன்னம் விழுந்து இரண்டு நாட்களாகிவிட்டன' என்ற நினைவு உக்கிரமாய்த் தகித்து முடியுமுன் மகாதேவ ஐயரின் கண்களில் துளியாய் நீர் கசிகிறது.

''அம்மா, பானு!'' என்று கூப்பிடும் தந்தையை முகம் உயர்த்திப் பார்க்கிறாள்;

"திரேகம் சோர்வாயிருந்தா இதையெல்லாம் ஏன் செய்துண்டிருக்கே? பேசாமே படுத்திண்டிருக்கப்படாதோ?''

''இல்லேப்பா. கோழி கூவறச்சே, எழுந்து முற்றம் தெளித்துக் கோலம் போடலேன்னு மனசே சூனியப்பட்டுப் போயிடறாப் போலே இருக்கு. நான் குழந்தையாயிருக்கறப்பவே, அம்மா இந்த நேரம் உசுப்பிவிடுவாளே!''

பானுவுக்கு இந்தப் பலம் எங்கிருந்து கிடைத்தது? எல்லாவற்றையும் இவளால் எப்படிச் சகித்துக்கொள்ள முடிகிறது?' மேலான சிரிப்புக்குள், தன் சோகத்தையெல்லாம் அழுத்திப் போட்டுவிட இவள் எங்கிருந்து சக்தி பெற்றாள்?

பானுவின் அம்மா கோமதி, ஒரு நொடி - பிடித்துவைத்த விக்கிரகமாய் மனத்தில் வந்து நிற்கிறாள். 'புண்ணியவதி! இந்தக் கஷ்ட நஷ்டம் ஒண்ணையுமே பார்க்காமே கண்ணை மூடிட்டாள்' என்று மனைவியை எண்ணிக்கொள்கிறார் அவர்.

பொட்டுப் பொட்டாய்ப் புள்ளிகளை வைத்து, கோடுகளை விரலிடுக்கில் தீட்டி இணைத்துக்கொண்டிருக்கிறாள் பானு.

''நிலம் விளைஞ்சு அறுவடை ஆயிட்டிருக்கறதா கேள்விப்பட்டேன். நாளைக் காலையிலே களத்துவரையிலும் போயி நம்ம குடியாள் - அங்காளனைப் பார்த்துட்டு வரலாம்னு இருக்கேம்மா'' என்ற தகப்பனாரின் வார்த்தையைக் கேட்டு, தீட்டிய கோலத்தில் விரல்களை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தாள் பானு.

'தடங்கல்' சொல்வது அபசகுனம் போலாகிவிடக்கூடாதே என்பதுபோல் நாவைக் கடித்துக்கொண்டு, சீனிக்கற்பொடியால் கோலத்தைத் தீட்டி முடித்து எழுந்தாள் பானு.

தோகையை விரித்தபடி, வெண்மை மயிலொன்று முற்றத்தை அளப்பதுபோல் உருக்கொண்டு நிற்கிறது.

''போயிட்டு வாங்கோப்பா. கேளுங்கோ. அங்காளன் வழக்கு வியாஜம்னு நின்னா..?'' என்ற பானு சொல்லவந்ததை முடிக்காமலே வீட்டுக்குள் போனாள். அவள் கால்கள் குழைந்து தள்ளாடுவதை மகாதேவ ஐயரின் கண்கள் காண்கின்றன.

''மகாதேவ ஐயரே, எழுந்துண்டுட்டீரா?'' ஸ்நானமும், காயத்திரி ஜபமும் செய்வதற்காகப் பளபளவென்று தேய்த்த செம்பும் கையுமாகப் புறப்பட்ட ராமாநுஜ ஐயர், மகாதேவ ஐயரைக் கண்டதும் திண்ணைக்கு ஏறிவந்தார்.

''யாரு ராமாநுஜமா? வாரும். ஸ்நானம் பண்ணப் புறப்பட்டுட்டீரா? நானும் புறப்பட்டுண்டுதான் இருக்கேன்.''

"ராம், ராம்!'' என்று முணுமுணுத்தவராய்த் திண்ணையின் திட்டில் உட்கார்ந்த ராமாநுஜம், ''இன்னிக்கு ராத்திரி பஜனை உண்டோல்லியோ?'' என்று கேட்டார்.

''நிச்சயமா உண்டு. எல்லாரையும் அழைச்சிட்டு வந்திடுங்க'' என்று மகாதேவ ஐயர் சொன்னதும் சிந்தனை வயப்பட்டவராய் அவர் சொன்னார். ''மகாதேவ், தேரோட்டம் வரப்போகிறதே? எத்தனையோ காலமா நடத்தற பொறுப்பெல்லாம் எங்கிட்டே தந்திருந்தேன்; பகவான் காரியமும் ஜாம் ஜாம்னு நடந்தேறிண்டிருந்தது. இந்த வருஷம் என்ன செய்யப்போறோம்? நேக்கு அதே கவலையான்னா இருக்கு.''

கறுப்புத் திட்டாய்ப் பறவைக்கூட்டம் பற்பல தொனிகளில் அலறிக்கொண்டு கூட்டிலிருந்து இரைதேடப் பறந்து செல்கிறது. வைகறையில் ஒளிக்கீற்று முற்றத்து நிழலிடையே ரசவாதம்போல் ஒளி வீசுகிறது.

''யுகயுகமாப் பெரியவா நடத்திண்டு வந்த பகவான் கைங்கரியமாச்சே! எப்படியும் நடந்துதானே ஆகணும்? தேர் தெருவிலே போனால்தானே வீட்டிலே சுபிட்சம் உலாவும். சரி, நீர் கோவில் நிலத்திலே பாட்டம் கேட்டீரா? பணமா ஏதாவது கிடைக்குமா?'' என்று கேட்டார் மகாதேவ ஐயர்.

''இல்லே ஐயர்வாள். போய்க் கேட்டேன்; கோவில் நிலம் முழுவதும் கவர்ன்மெண்ட் ரிக்கார்டிலே ஆயிடுத்தாம். வருஷம் வருஷம் இந்த 'ஃபங்ஷன்' நடத்தறதானா ஏதோ கொஞ்சம் பணம் தருவாளாம். அதுவும் முன்னாடியே 'பெட்டிஷன்' போட்டிருக்கணுமாம். 'டிரிபுனல்' ஆபீஸிலே விபரம் சொன்னா. இந்த வருஷம் தேரோட்டம், இன்னிக்கோ நாளைக்கோன்னு இருக்கச்சே அது உடனே நடக்கிற காரியமில்லே. அக்கிரகாரத்திலே நாமெல்லாம் ஒருமிக்கச் சேந்து நடத்திடலாம்னா அதுவும் நடக்கும்னு தோணல்லே. பாக்கிறீரே, ஒவ்வொத்தரா அக்கிரகாரத்தைவிட்டு ஓடிண்டிருக்கா. மீதியிருக்கறவாளும் 'தேமே'ன்னு நாள் பாத்துண்டிருக்கா.''

கோலாகலமாகத் தேரோடிக்கொண்டிருந்த அந்த நாட்கள் சம்பாஷணைக்கிடையே மகாதேவ ஐயரின் நெஞ்சில் விரிகிறது. 'ஹா ஹா' என்ற முழக்கத்தோடு தேர்ச் சக்கரம் உருளும் 'கடகட' ஒலி!

நீளப் பெருமூச்சை உதிர்க்கிறார் மகாதேவ ஐயர். அவர் நெஞ்சம் ஏறித் தாழ்கிறது.

''இந்த டிஸ்டிரிக்ட்டேன்னா தேரோட்டம் பாக்கவரும். அடடா, தேஜோமயமா நடந்துண்டிருந்ததே! விசேஷமும், வேடிக்கையும், விற்பனையுமுன்னு ஒரு வாரம் - பட்டணத்தையே பிடிச்சிழுத்து அக்கிரகாரத்திலே கொண்டுவந்து வெச்சிட்டாப் போலன்னா இருக்கும்? ம். இப்போ இப்படி ஆயிட்டதே!'' என்று ஆதங்கத்தோடு சொல்லிக்கொண்டு வந்த ராமாநுஜ ஐயர், மகாதேவ ஐயரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்து அங்கே தேங்கியிருந்த வியாகூலத்தைக் கண்டவராய், 'சட்'டென்று பேச்சை நிறுத்தினவர், ''பகவான் காரியம். அல்ப மனுஷன் என்ன செய்திட முடியும்? நாம் முயற்சி பண்ணுவோம். மீதியை அவன் பாத்துப்பான்'' என்று சொல்லி நழுவிய துண்டைத் தோளில் சரித்துப் போட்டவாறே எழுந்தார்.

அமானுஷ்யமான உணர்வைத் தோற்றுவிப்பதாய் முருங்கை மரத்தின் படிந்த நிழல் - சூரியன் ஏற ஏற, கேள்விக் குறிபோல் மண்ணில் நீண்டு போகிறது. போகிற பாதையில் இலக்கைத் தவற விட்டுவிட்டதுபோல் காக்கையொன்றின் நொந்த கரைச்சல் மனத்தைப் பிசைந்துவிட்டு அடங்குகிறது.

''சரி, ராத்திரி பஜனைக்கு வரேன்'' என்றவராய்ப் பளீரிடும் செம்பும் கையுமாக

வாசலில் இறங்கிய ராமாநுஜ ஐயர், திடீரென்று கவனத்துக்கு வந்தவராய், ''அது சரி, ஐயர்வாள்! இந்த வருஷம் உமக்குப் பாட்ட நெல் குடியானவன் கொண்டு வந்து கொடுத்தானோ?'' என்று கேட்டார்.

''இன்னும் இல்லை. முன்னே மாதிரி கண்டிச்சுக் கேக்கறதுக்கு உரிமை இல்லாமே போயிடுத்தே. பூர்வமாப் படியளந்த வாளேச்சுன்னு நெனைச்சு ஏதாவது கொடுத்தால்தானே? என் நிலமெல்லாம் அறுவடை முடிஞ்சுதா அறிஞ்சேன். நாளைக்குக் காலையிலே போயி அங்காளனைப் பாத்துக் கேட்கணும். பத்துத் தந்திண்டிருந்த இடத்திலே ஒண்ணோ பாதியோவாவது தாயேன்னு கேட்டுப் பாக்கணும். என்ன செய்யறது?'' என்று மகாதேவ ஐயர் சொல்வதைத் தாள முடியாத ராமாநுஜ ஐயர், ''கலிகாலம், கலிகாலம்! எல்லாம் தலைகீழாக நடந்துண்டிருக்கு'' என்று மனம் பொறுக்காமல் சொல்லிக்கொண்டே போனார்.

எங்கிருந்து என்று விளங்காதபடி காலைச் சந்தடிகளுக்கிடையே தீனமான ஒலம் எழுந்து வியாபித்து அடங்குகிறது.

2

''என்னம்மா பானு, இது?'' மகள் கொண்டுவந்து கையில் கொடுத்த தங்கக் கம்மலைப் பார்த்ததும் திடுக்கிட்டவராய்க் கேட்டார் மகாதேவ ஐயர். விற்றது போகப் பானுவுக்கிருந்த கடைசி நகை அது. பானுவின் வெறுமையான முகம், அலங்கரிப்பதற்கு முன் காட்சி தரும் அம்பாளைப் போல் இருக்கிறது.

''பரவாயில்லேப்பா. இதை வெச்சிண்டு என்ன பண்ணப் போறோம்? நல்ல நேரம் வரச்சே பண்ணிக்கப் போறோம். ஆபத்துக்கு உதவாமே இது ஏன் இருக்கு? நீங்களும் நாளைக்கு அங்காளனைப் பார்க்கப் போகணுமே. பஸ் சத்தம் வேணுமே. இதை வித்திடுங்க. கிடைக்கறதிலே, நாழி அரிசியும் சாமான்களும் வாங்கிண்டு வந்தேள்னா நொடியிலே ரசஞ்சாதம் பண்ணிடறேன். சூடா ஒருவாய் சாப்பிட்டுட்டே நீங்க போகலாம்'' என்று பானு சொன்னதும்; இதைத் தவிர வேறு வழியும் புலப்படாதவராக - உள்ளங்கையில் மினுக்கிய கம்மல்களை உருட்டி உருட்டிப் பார்த்த மகாதேவ ஐயர், ''குருவாயூரப்பா!'' என்று நீளப் பெருமூச்செறிந்தார்.

'ம்' என்று தலையாட்டியவராய்ச் சம்மதமளித்ததும் பானுவின் முகம் மலர்ந்தது. கம்மலை எடுத்துப் பத்திரமாக மடியில் கட்டி வைத்துக்கொண்ட மகாதேவ ஐயர், குடுமியை



உதறிப் பிரித்து முடிந்து கொண்டு, மூலையிலிருந்த பழுப்பேறிய பழைய குடையைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியே வந்தார்?

ஸ்நானம் செய்து, ஜப தபங்களை முடித்துவிட்ட இவ்வளவு நேரத்துக்குள் வெயில் பழுத்து எரியத் தொடங்கியிருந்தது. குடையை விரித்து, தையல் விட்டிருந்த கம்பிகளைப் பொருத்திக் கொண்டு தெருவில் இறங்கினார் மகாதேவ ஐயர். மகள் பானு, தாய் போவதையே பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பதைத் திரும்பிப் பார்க்காமலே உணர முடிகிறது. சாப்பிடாததும், தூக்கம் விழித்ததுமான அயர்வு: ஸ்நானம் பண்ணிவிட்டு வந்த சுகத்தில் நடை தள்ளாடுகிறது?

நடராஜ ஐயரின் வீட்டு வாசலைக் கடந்த போது, அங்கே நிகழ்ந்துகொண்டிருந்த காட்சியை நம்ப முடியாதவராக, கண்ணைப் படபடத்துக்கொண்டு பார்த்தார் அவர்.

நேற்றிரவு புதிதாகக் குடித்தனம் வந்த மலையாளிக் குடும்பத்தினர் சைக்கிளில் வரும் மீன்காரனை நிறுத்திப் பேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்! கும்பாரமாய்க் கூடையில் துடிப்படங்கிக் கிடந்த மீன்களிடையே அவன் கையை விட்டுக் கிளறியபோது, தாங்காத துர்க்கந்தம் எழும்பியது. மேல்துண்டால் நாசியை இறுகப் பிடித்துக்கொண்டு, நடுத் தெருவிலிருந்து விலகி, ஓரமாய்த் துரிதமாய் நடந்தார் அவர். கண்ட அதிர்ச்சியில் அவர் தேகம் குலுக்கிப் போட்டது. 'ம். இந்த அநாசாரங்களும் இந்தப் பவித்திரமான



அக்கிரகாரத்து எல்லைக்குள்ளே தொடங்கிடுத்தே! நியதி குலைஞ்சிண்டிருக்கும் இந்த இடத்திலே இனி பிராமணன் எப்படி வசிக்க முடியும்? குருவாயூரப்பா' என்று உள்ளம் கலங்கி வெதும்பினார் அவர்.

வெண்ணெய்க் கண்ணனின் நீலநிற வண்ணம் மாயச் சிறகாய் விரிந்து அசைவது போன்ற ஒரு பிரமை.

'கிருஷ்ணா! இதென்னப்பா சோதனை? தர்மம், நெறி, பரிசுத்தம் எல்லாம் இப்படிக் கண் முன்னே குலையறதே? இதையெல்லாம் பாத்துண்டு கையாலாகாமே நிக்கறதைத் தவிர்த்து வேறு ஒண்ணுமே செய்ய முடியாதா? எனக்கு மட்டுமென்று இல்லை. இந்த அக்கிர காரத்திலே இருக்கிற மத்தவர்களாலும் முடியல்லேயே!'

வியாகூலப்பட்ட அவர் எண்ண ஓட்டத்தைப் பின்னாலிருந்து வந்த 'கலகல'வென்ற சிரிப்பொலி கலைக்கிறது.

"ஓ, ஆயாளுக்கு மீனு கண்டதும் எந்த தேஷ்யமாணு? மரிச்சுக்கிடக்குன்ன பிரேதம் கண்ட தோணலா! பேடிச்சு விதச்சு. ஆயாள் ஓடுந்ந ஓட்டம் கண்டோ?" மீன் விற்பவனின் இந்தக் கேலிப் பேச்சைக் கேட்டதும் அந்த மலையாளக் குடும்பமே ஓசை யெடுத்துச் சிரிக்கிறது.

டவுனில் சென்று ஒரு நகைக்கடையில் கம்மலை விற்றுவிட்டுத் திரும்பும்போது உச்சி வெயில் மண்டையைப் பிளப்பதுபோல் அடிக்கிறது. கம்மலை விற்றுக் கிடைத்த முந்நூற்றைம்பது ரூபாய், மகாதேவ ஐயரின் மடியில் கனக்கிறது.

'இதுவும் தீர்ந்ததும்....'

ஒரு நம்பிக்கையாக, ஊன்றுகோலாகப் பார்த்திபன் மனத்தில் வருகிறான். சுந்தரையரின் ஒரே பையன். பானுவுக்கு அவன்தான் என்று சிறு வயதிலே இரண்டு குடும்பத்திலும் தீர்மானித்திருக்கிறார்கள். பார்த்திக்குப் பானு வென்றாலே உயிர். பையன் தங்கமான குணம். நல்லவேளையாய், இந்த 'லேண்ட் டிரிபூனல்' சட்டம் அமலாகுமுன் ஓரளவில் படிப்பை முடித்திருந்தான். பி. காம். முடித்த ஒரு வருஷத்தில் கல்கத்தாவில் ஒரு வங்கியில் வேலை கிடைத்தும் போய்விட்டான்.

சுந்தரையர்கூடப் பாவம், நொடித்துத்தான் போய்விட்டார் இப்போது. ஆனாலும் இந்த விவாகத்தைத் தாமதியாமல் செய்துவிடவேண்டும் என்றுதான் வாய்க்கு வாய் பேசிக்கொள்கிறார்.

குடையையும் மீறிச் சூடு உள்ளே வந்து தகிக்கிறது. செருப்பிடாத கால் தார்ச் சாலையில் பதியும்போது கொப்புளமாவது போல் பாதம் எரிகிறது. துண்டால் முகத்தில் துளித்த வேர்வையை ஒற்றித் துடைத்துக் கொள்கிறார் மகாதேவ ஐயர். எதிரெதிராகப் பாய்ந்துவரும் கார்களின் சத்தம், சாலையை இரண்டடித்துக் கொண்டிருக்கிறது.

'நாலாம் நம்பர் டவுன் பஸ் வரட்டுமே' என்று அருகிலிருந்த மரநிழலில் ஒதுங்கினார் மகாதேவ ஐயர்.

மீண்டும் சிறகடிகள்!

'பானுவைப் பார்த்திபன் கையிலே பிடிச்சுக் கொடுத்திட்டேன்னா என் வியாகூலம்விட்டது. அப்பறம் நான் ஏன் இந்த அக்கிரகாரத்திலே பூர்வதர்மம் அழியறதைப் பார்த்துண்டு இருக்கப்போறேன்? இந்த வீட்டையும், மிச்ச சொச்சம் இருக்கிற எல்லாத்தையும் பார்த்திபன் கையிலே கொடுத்துட்டு, என் பானுவைக் கண்கலங்காமப் பார்த்துக்கோடான்னு கேட்டுக்கணும். பெறகு என்ன குறை எனக்கு? வானப்பிரஸ்தத்துக்குக் காலமாச்சே! பகவான் பாதத்தைப் பார்த்துச் சுபிட்சம் தேடிப் போயிடணும்.'

நாலாம் நம்பர் டவுன்பஸ் ஹாரனை முழக்கிக் கொண்டு பஸ் ஸ்டாப்பில் வந்து நிற்கிறது. பஸ்ஸில் கூட்டமே இல்லை; இங்கொன்றும் அங்கொன்றுமாக மூலைக்குமூலை ஆட்கள் இருப்பது தெரிகிறது.

முன்ஸீட்டில் உட்கார்ந்துகொண்ட மகாதேவ ஐயர் பஸ்ஸுக்கு வெளியே பார்வையை ஓடவிட்டபோது, டவுன் கோட்டை மைதானத்தில் ஆரவாரமான கூட்டம் திரண்டிருப்பது தெரிகிறது. வெயிலின் எதிரே படபடக்கிற நூற்றுக்கணக்கான 'சிவப்பு'க் கொடிகள் மனிதத் தலைகளுக்குமேல் ஆடுகின்றன. ஓடுகிற பஸ்ஸிலிருந்து பார்த்தபோது ஏதோ ஒரு பிரளயத்தில், ரத்தவெள்ளத்தில், இந்த ஜனப்பிரவாகம் முண்டங்களாய் இழுத்துச் செல்லப்படுவதுபோல் இருக்கிறது.

'இன்குலாப் சிந்தாபாத்,
ஐக்கியம், ஐக்கியம் சிந்தாபாத்'

கண்டங்கள் வெடித்துக்கொண்டு சிதறுவது போல் கூட்டம் கோஷமிட்டு முழங்குகிறது.

"நீங்கே எங்கே போகணும்?"

டிக்கெட்டும் கையுமாக எதிரே வந்து நின்ற கண்டக்டருடன் சத்தத்தில் நழுவிய கவனம் மீண்டு வருகிறது.

"அறுபதிலே ஒரு டிக்கட் குடப்பா!"

டிக்கெட் கட்டில் அடையாளப்படுத்தி, ஒரு சீட்டை நீட்டிய கண்டக்டரின் கையிலிருந்து வாங்கி, பைசாவை எண்ணிக் கொடுத்தபோது, "என்ன இப்படி ஆரவாரிச்சிண்டு போறாளே; என்ன விசேஷம்?" என்று கேட்டார் மகாதேவ ஐயர்.

"இன்னிக்கு மினிஸ்டர் வராருங்களே! இவர்தானே நிலஉடைமைச் சட்டத்தைப் பாஸாக்கினவர்? அதைக் கிருஷித் தொழிலாளர்கள் ஆகோஷிக்கிறார்கள்."

"இவாள்ளாம்?"

"கட்சிக்காரங்க!"

கூட்டம் ஒதுங்கி, ஜனங்கள் வழி விலகியதும், சாலையின் மத்தியில் பாதை தெளிந்து பஸ் ஓடத் தொடங்கியது. முஷ்டியை உயர்த்திக்கொண்டு மக்கள் போடுகிற கோஷம் பஸ்ஸிலிருந்து வெளியே தலையை நீட்டின மகாதேவ ஐயரின் காதைத் துளைக்கிறது.

'ஐக்கியம் ஐக்கியம் சிந்தாபாத்
விவசாயி ஐக்கியம் சிந்தாபாத்!'

"என்னன்னு சொன்னே? இவாள்ளாம்?"

வாலிபனான கண்டக்டர் சிரித்துக்கொண்டு சொன்னான்: "பொதுவுடைமைக்காரங்க."

"ஓகோ! பூர்வமா படி அளந்திண்டிருந்தவாளின் நிலவுடமைகளை, ஒரு சட்டம் கொண்டாந்து மண்ணடிச்சிட்டு, கிருஷிக்காரா முதலாளியாயிட்டாளே, பணக்காரா ஆயிட்டாளே! இதுதான் பொதுவுடைமையோ?"

கேலியாய்ச் சிரித்த மகாதேவ ஐயர் முகத்தின் தீர்க்கத்தைத் தரிசிக்க முடியாத ஒரு விதக் கூச்சம் படர, பின்ஸீட்டிற்குச் சென்ற கண்டக்டர், 'ரைட் ரைட்' என்று கூட்டம் கடந்ததும் சத்தமிட்டு விஸில் கொடுத்தான்.

பஸ் வேகமாக ஓடத் தொடங்கியது.

சிவப்புக் கொடிகளும், கூட்டமான மனிதத் தலைகளும் தூரத்துப் புள்ளியாய்ச் சிறுத்துக் கண்ணுக்கு மறைகின்றன.

கட்டுக்குள் அடங்காமல் மனமும் வேகம் கொள்கிறது. தாறுமாறுய்ப் பெருகிச் சேதம் விளைவிக்கும் காட்டாற்று வெள்ளம், புராதன அடித்தரைகளைச் சிந்தனையற்று உடைப்பது போல்தான், பரசுராமரின் கோடரி வீச்சை எல்லையாகக் கொண்டு அமைந்த இந்தப் புனித பூமியில் இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்து விட்டது. நிலவுடைமைக்காரர்கள் எல்லாம், தங்கள் நிலங்களை பூர்வபலனை, தங்கள் ஜீவன் உலவும் ஜன்மபூமியைப் பலவந்தமாய்ப் பிடுங்கிக் கொள்ளப்பட்டவர்களாய் இழந்து போனுர்கள்.

புதிய வெள்ளந்தான் அது. சத்திய ஸ்தாபி தங்களையும் பெயர்த்துக்கொண்டு விடும்படி யாகவா அதன் ஊற்றுக்கண்கள் இப்படித் திறக்கவேண்டும்? சூதுப்பலகையில் உருண்ட காய் ஒரே சார்பிற்குச் சாதகமாகப் புரட்டப் பட்டுவிட்டது.

பின்னணியில் சகுனியின் கைகளா?

எப்படியோ அந்த 'லேண்ட் டிரிபுனல் ஆக்ட்' இந்த ராஜ்யத்தில் நிறைவேறிவிட்டது. மேடுகள் தாழ்ந்தன; பள்ளம் உயர்ந்தது.

இரண்டும் சமமாகிறதல்லவா சமத்துவம்?

ஸ்டாப்பிங்கில் வந்துநின்ற பஸ் குலுங் கியது. ஜன்னல் விளிம்பில் மாட்டியிருந்த குடையை எடுத்துக்கொண்டு கீழே இறங்கின மகாதேவ ஐயரின் கண்ணில் தரிசனமாய்ப்பட்ட கோவில் கோபுரம், ஐந்தாறு ஆண்டுகளுக்கும் மேலாகப் பழுதுபார்க்காமல் பூசாணம் பற்றிக் கிடக்கிறது. "மனுஷனுக்குத்தான் கிரகணம் பிடிக்கறதன்னு, தெய்வமே உனக்குமா?' என்று ஆதங்கத்தோடு ஒரு நொடி வெறித்துப் பார்த்தார்.

சுள்ளென்று தகிக்கும் வெயிலிடையே நீர்க் கானலாய் வெப்ப அலை கோவில் கோபுரத்தின் பின்புறம் தொடங்கி எங்கோ முடிவற்றுப் பயணப்படுகிறது.

''ஐயா, பசிக்கிறது; பிச்சை போடுங்கோ; தர்மம் செய்யுங்கோ.'' பஸ்-ஸ்டாப்பை விட்டுக் கடந்து நடக்கத் தொடங்கியிருந்த மகாதேவ ஐயர், யாசிக்கும் அந்தப் பாலகனின் குரல் எங்கோ கேட்ட சத்தமாகத் தோன்றவே திரும்பிப் பார்த்தார்.

உடல் சிலிர்த்துப் போகிறது. நீர் வறண்டு பசைத்த கண்களிடையே, 'தவருன கணிப்போ?' என்ற ஐயம்.

திரும்பி நின்று, ''குழந்தே'' என்று கூப் பிட்டார் மகாதேவ ஐயர். சந்தேகமே இல்லை, இது வெங்கு ஐயரின் மகள் வயிற்றுப் பேரனே தான். அடடா, வெங்கு ஐயருக்கு என்ன குபேர சம்பத்து இருந்தது! செல்வத்துப் பயன் ஈதலே என்று வாழ்ந்தவராயிற்றே! கொடுத் துக் கொடுத்துப் புண்ணியம் சேர்த்த குடும்பம். ராத்திரி படுக்கறதுக்குமுன், அம்மா தாயேன்னு யாரும் வந்துவிடக் கூடாதே என்பதற்காக மாளிகை போன்ற பெரிய வீட்டின்முன் கதவை இழுத்து அடைக் கும்முன், 'யாராவது அதிதியிருக்கேளா? பிக்ஷாம்தேகி யிருக்கேளா'ன்னு வாசல்படியில் நின்று கையடித்துச் சப்தித்து வெங்கு ஐயர் கூப்பிட்டுக் கேட்பார்!'

'தான், சின்னவயதில் வெங்குஐயரின் அந் தச் செய்கையை வேடிக்கைபோல் பார்த்தி ருக்கிறேன்' என்று நினைவு கூர்ந்தார் மகாதேவ ஐயர்.

அந்த மரத்தின் கிளை பற்றித் தொங்கும் வாரிசின் விழுதா இதுவும்? காசு தருவ தற்காக யாரோ தன்னைக் கூப்பிடுகிருர்கள் என்று ஓடிவந்த சிறுவன், எதிரே மகாதேவ ஐயரைக் கண்டதும் பரக்கப் பரக்க விழித்தவ ஞக நின்றுன். கண்களில் நீர்முட்டச் சிறுவ னின் தோளைப் பற்றிக்கொண்ட மகாதேவ ஐயர், ''நீ சீதாவின் மகன்தானே? வெங்கு ஐயரின் பேரனுச்சே! நீ இப்படிச் செய்ய லாமோ?'' என்று கேட்டார்.

'வீட்டில் போய்ச் சொல்லிக்கொடுத்து விடுவாரோ?' என்று மிரண்ட சிறுவன் 'இம் ஊம்' என்று கேவியவாறே, ''எங்க அம்மா கிட்டே சொல்லிடாதீங்கோ. என்னைக் கொன் னுடுவா; அப்பா சுகவீனமாப் படுத்த நாள்லே இருந்து நாங்க பட்டினிதான் கெடக்கிறோம். அதான் பஸ்ஸ்டாண்டிலே வந்து காசு கேட் டேன். எனக்குப் பர்பின்னு ரொம்ப ஆசை'' என்றுன்.

அவன் செய்கையைக் குற்றப்படுத்தும் பலம் தங்களில் யாருக்காவது இருக்கிறதா என்று எண்ணிப்பார்த்த மகாதேவ ஐயர், இந்த அள வில் தாங்கள் பலவீனப்பட்டு நலிந்து சிதைந்து விட்ட நிலையை எண்ணி வெதும்பியவராய், அந்தச் சிறுவனைத் தம்மோடு இறுக அணைத்து உச்சி மோந்து, ''சொல்லலேடா, சொல்லலே. அதுக்கு எனக்கு எங்கேடா பெலம்?'' என்று தேம்பினுர்.

'இன்னும் யாராவது இருக்கேளா?' என்ற வெங்கு ஐயரின் கையடிச் சத்தம், இப்போது தெளிவாய்த் தொனித்துச் செவியில் வந்து விழுகிறது!

3

மிளகு ரசம் கொதிக்கிற மணம், சமையல் கூடத்திலிருந்து பரவிக் கமகமக்கிறது. கொதித்து இறக்கிய ரசத்தில் உப்பிட்டுக் கலக்கிவைத்த பானு, பூவாய் மலர்ந்து கிடந்த சாதத்தைத் தட்டில் கொட்டி வைத்து விட்டுத் தகப்பனுருக்குக் கைகால் கழுவச் செம்பில் நீர் எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

''இந்தாம்மா பானு, சாமான்கள் வாங்கி யது போகச் சொச்சம் முந்நூறு ரூபாய்க்கு மேலிருக்கு. பத்திரமாக எடுத்துவை'' என்று மடியில் கட்டி வைத்திருந்த கசங்கிய ரூபாய் நோட்டுகளைப் பானுவின் கையில் கொடுத்து விட்டுத் தண்ணீர்ச் செம்பை வாங்கிக் கொண்டு, ''வழியிலே சுந்தரையரைப் பார்த் தேன். தேரோட்டத்துக்குப் பார்த்திபன் வரதாச் சொன்னுர். லட்டர் போட்டிருக்கா னும்'' என்று சொன்னுர்.

தகப்பனுரின் அந்த வார்த்தைகள், பனிக் கட்டி உடைந்த சிதறலாய் விழுந்து ஜில்லிடு வதாய்ப் பானுவின் நெஞ்சில் குளிர் பரவச் செய்கிறது. அவள் கண்களில் பெருகுகிற பிரகாசம்!

'குகு..குகு' வென்று ஓட்டின் மேலிருந்து ரகசியம் பேசிக்கொண் டிருந்த புருக்கள், ஊடல் கொண்டு பறந்து போகின்றன; பானுவின் சோர்வு எல்லாம் பார்த்திபன்

என்ற மந்திரத்தைக் கேட்ட கணத்திலே மறைந்து விட்டது போலிருக்கிறது. சிலிர்த்துக் கொண்டு வரும் ஒரு மலர்ச்சியான மனநிலை அவளுக்குள்.

முகம் அலம்பி வந்து தடுக்கைப் போட்டுக் கொண்டு சப்பணமிட்டிருந்த தகப்பனர் முன் ஆவி பறக்கும் சுடு சாதத்தைப் பரிமாறும் போதும், அவருக்கு வேண்டியதைக் கவனித்துச் செய்துகொண் டிருந்தபோதும் பானுவின் மனம் நழுவி நழுவிப் போகிறது.

ரசஞ் சாதத்தில் பிசைந்த கவளங்களை உருட்டி வாயில் போட்டுக்கொண்ட மகாதேவ ஐயர், புதினத் துவையலைத் தொட்டு நாவில் வைத்துக்கொண்டு, 'அமிர்தமா இருக்கு. எல்லாம் இவள் அம்மாவின் கைப்பாகம்' என்று நினைத்தவராய், "பானு" என்று கூப்பிட்டார்.

"என்னப்பா?"

"நம்ம வெங்கு ஐயரின் பேரன் சீதா மகனில்லே; அவனைப் பஸ் ஸ்டாண்டிலே பாத்தேன். வீட்டுக்கு அழைச்சிண்டு வந்தேன். தன் வீட்டுக்குப் போறேன்னு அடம் பிடிச்சிட்டு ஓடிவிட்டான். நீ அவனைக் கூப்பிட்டு, சாதம் போட்டு அனுப்பறயா?"

"சரி அப்பா, பாவம், சீதா ரொம்பவும் கஷ்டப்படறா? கணவரும் நிரந்தரச் சீக்காளியாய்ப் படுத்திண்டிருக்கார். நாதியில்லாமே ஒரு பையனையும் வச்சிண்டு என்ன பண்ணுவா? முந்தாநாள் பாத்தேன். ஈர்க்குச்சி போல எனக்கு அடையாளமே தெரியல்லே. பாவம் எப்படி இருந்தவா? பிரபு வயித்திலே பிறந்தவா இப்பிடி ஆயிட்டா!"

இலை காலியாகுமுன் வட்டிலில் மிகுந்திருந்த சாதத்தைத் தட்டினள் பானு, "போதும் பானு, போதும்" என்று மறுத்தும் கேளாமல் சாதத்தில் ரசத்தை ஊற்றியவள், "சாப்பிடுங்கோப்பா! ரெண்டு நாளாயிடுத்தே" என்றபோது அவள் குரல் தழுதழுக்கிறது.

'பார்த்திபன் வந்துவிட்டால்?' தனக்கு ஏற்படும் வாழ்க்கையோடு தகப்பனர் யாருமற்ற அநாதைபோல் பிடிமானமற்றுப் போய்விடுவாரோ என்ற பயமும் தோன்றுகிறது. 'இப்போதே அப்பா முக்கால் சாமியார்; என்னையும் அனுப்பிச்சிட்டா அப்பாவைக் கவனிக்கறதுக்கு யார் இருக்கா?'

எரிந்த விறகுகள் கனலாகி அடுப்பு நிறைய ரத்தக் கொப்புளங்களாய் ஒளிவிடுகின்றன. மெல்லிய சாம்பல் படலம் கங்குகளைப் பொதிந்து மூடுகிறது. கூஜாவிலிருந்து 'சீரக வெள்ளம்' எடுத்துத் தகப்பனர் முன்னால் கொண்டுவந்து வைத்து விட்டு, நீர் தெளித்துக் கங்கை அணைத்தாள் பானு. ஆசுவாசம் அந்தக் கூடம் முழுதும் பரவுகிறது. சட்டையிடாத மேனி முழுதும் வேர்வை ஆறாய் ஒழுகச் சாப்பிட்டு முடித்து எழுந்த மகாதேவ ஐயர் சீரகவெள்ளம் குடித்து 'ஏவ்' என்று ஏப்பமிட்டுக் கையைக் கழுவினார்.

காக்கை ஒன்று தன் தலையைச் சாய்த்து, கண்களை உருட்டிக்கொண்டு கூரையிலிருந்து 'கா' 'கா' என்று சப்திக்கிறது.

கையைத் துண்டில் துடைத்தவாறே திண்ணைக்குப் போகும்போது, 'சூ' என்று கையை அசைத்து விரட்டிய மகாதேவ ஐயர், "அதிதி வராளோ? காக்கை கூப்பிடறதே?" என்று கூறிச் சிரித்தார். "ஒரு சமயம் பார்த்திபன் தான் தேரோட்டத்துக்கு முன்னடியே லீவு போட்டுட்டு வந்துடறானே, என்னவோ?"

'பொல பொல'வென்று தூவானம் முகம் நனைத்துப் பெய்கிறது போன்ற உணர்வை அந்த வார்த்தைகள் பானுவுக்குள் ஏற்படுத்துகின்றன. பலமும் சோர்வும் மனத்தில்தான் இருக்கின்றனவோ? ஒரே நிமிஷத்தில் உடம்பில் சக்தி எங்கிருந்து வந்து நிறைகிறது!

அடுத்த அறையில் பாயை உதறி விரித்துக்கொண்டு, தலையணையைப் 'பொத்'தென்று சப்தமெழப் போட்டுத் தகப்பனர் படுக்கிற ஓசை கேட்கிறது.

பானுவுக்குப் பசியே அடங்கிவிட்டாற் போன்ற மனநிலை. 'விருந்துக் காக்கை திரும்பவும் வந்து கூப்பிடாதா?' என்ற ஏக்கம் விரிகிற நினைவுகள் ஒரு வசந்த சொப்பனத்தையே உருவாக்க முயல்வதாய் எழுகின்றன.

பேருக்குச் சாப்பிட்டுவிட்டு எழுந்த பானு தூங்குகிற அப்பாவுக்கு ஓசை இடையூறு இடாமல் நடு அறையிலிருந்த டிரங்கைத் திறந்து, பாடல் திரட்டுப் புத்தகத்தின் உள்ளிருந்த பார்த்திபனின் போட்டோவை எடுத்துக் கொண்டு ஆசையோடு பார்த்தாள். சுருள் சுருளான கேசமும், ஒரு கந்தர்வனுடைய முகமும், புலர்ந்து நிற்கும் தேஜஸுமாக ஓர் ஆணழகனைப் பார்த்திபன் போட்டோவில் தெரிகிறன். அந்தப் புகைப்படம் அவன் கல்லூரியில் படித்தபோது எடுத்தது. அப்பொழுதே அவ்வளவு கம்பீரம்.

அது பானுவின் இருதயத்தில் சித்திரமாகிவிட்ட படந்தான். ஆனாலும் திரும்பத் திரும்பப் பார்க்கிறபோது ஒவ்வொரு முறையும் புதிய புதிய காட்சியே அவளுக்கு அநுபவப்படுகிறது.

'அவர் வந்தவுடன்?'

மணமாலையும் கழுத்துமாக அந்தப் புகைப்படத்தில் தன்னையும் சேர்த்து வைத்துக் கொண்டு கற்பனை செய்து பார்க்கிறள் பானு. முகம் நாணத்தால் 'குப்'பென்று சிவந்து செம்மை பூண்டு விடுகிறது. சிறுபிள்ளையிலிருந்தே பார்த்தியோடு ஒன்றாக விளையாடி வளர்ந்த நாட்கள் புகைப்படத்தைக் கடந்து பின்னால் காட்சியாக விரிகின்றன. "ஏ, எலிவால் பானு!" என்று தன் பின்னலை இழுத்துக் கேலி பேசியதெல்லாம் இன்றைக்கு நடந்ததுபோல் நினைவில் வருகிறது.

"குருவாயூரப்பா!" என்ற முனகலோடு தகப்பனர் புரண்டு படுக்கிறார். பாவம்! நேற்று முழுவதும் அவர் கண் மூடவே இல்லை. இப்போது அயர்ந்து உறங்கினலும், மனத்தின் வேதனை தாளாமல் வெளிப்படுகிறதுபோலும்! "ம். பகவான் ஒரு நல்ல நாளைக் காட்டாமல் விட்டுடவா போறன்? அவனையே நம்பிண்டிருக்கிற பிள்ளைகளைக் கைவிட்டுடவா செய்வான்?"

புகைப்படத்தைத் திரும்பவும் புத்தகத்தில் செருகி மூடிவைத்துவிட்டு எழுந்த பானு பெருமூச்சை உதிர்த்தாள்.

'அவர் வந்துவிட்டால் இங்கிருக்கும் நிலையே மாறிவிடும். அவருக்குத்தான் என்மேல் எத்தனை பிரியம்! சிறுவயதாயிருக்கும்போது, பெரியவர்கள் கேலி செய்வதை எல்லாம் பொருட்படுத்தாமல் பானு பானு என்று வளைய வந்துகொண்டிருப்பாரே!'

"பானு, பானு, என்ன செய்யறே?" என்ற குரல் கேட்டு, கனவுலகில் சிறகுபூட்டிப்

பறந்துகொண் டிருந்த பானு திடுக்கிட்டவளாய்த் திரும்பிப் பார்த்தாள்.

பரபரப்பும், அழுது வீங்கிய முகமுமாக ராதுமாமி எதிரே நின்றுகொண் டிருந்தாள். முண்டிதமான தலையைச் சுற்றிக் காவிப் பழுப்பேறிய சீலை முன்றானையை இழுத்துப் போர்த்தியிருந்தவள், பானுவின் அருகில் வந்ததும் 'ஓ' வென்று குரலெடுத்து அழுதாள்:

''உன் தோப்பனார் எங்கேடி பானு?''

''வாங்கோ மாமி. ஏன் அழறேள்? என்ன விஷயம்?'' என்று கேட்ட பானுவின் மனம் ராதுமாமியின் நிலையைக் கண்டு குமுறியது.

''பானு, நான் என்னடி பண்ணுவேன்? வயசுக்கு வந்த பொண்ணுங்கள் ரெண்டு பேரை வெச்சிண்டு நான் எப்படி ஜீவிக்கப்போறேன்?'' என்ற ராதுமாமி, நிர்க்கதியான நிலையில் தேம்பினாள்.

''யாரு அங்கே?'' என்று பக்கத்து அறையிலிருந்து குரல் கொடுத்த மகாதேவ ஐயர் தூக்கம் கலைந்தவராய் எழுந்து வந்தார். வைதவ்யம் ஏற்றபிறகு சாதாரணமாக வீட்டிலிருந்து வெளியெங்கும் வராத ராதுவைக் கண்டதும் வியப்படைந்தவராய், ''என்ன ராது? என்ன விஷயம்? ஏன் அழறாய்?'' என்று பதறியவராய்க் கேட்டார்.

மகாதேவ ஐயரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்த ராது, ''அண்ணா, நான் என்ன செய்வேன்? அவர் ஜீவித்திருந்த நாள்லே வாங்கியிருந்த கடனுக்கும் 'பலிசை'க்(வட்டி)குமாக இப்போ வீட்டை ஜப்தி பண்ணப்போறாளாம். கடன்காரனும் அமீனாவும் வந்து வீட்டு வாசல்லே நிக்கறானே, நீங்க பாக்கல்லே?'' என்றவள், ''பாழாய்ப் போன கண்ணவிஞ்ச தெய்வமே, ஒன்னையே கதியென்று கிடந்த எங்களை இப்படிப் பாழ்படுத்திட்டயே!'' என்று கதறினாள்.

அக்கினித் திராவகத்தை வீசி அறைந்துவிட்டாற்போல் மனம் எரிகிறது. ஒரு பிரளய வீச்சிற்குமுன் சிக்குண்டதுபோல் மனம் போராடுகிறது.

''அடடா! அப்படியா விஷயம்? அயர்ந்து தூங்கிட்டேன். எனக்குத் தெரியல்லே. வா, பார்ப்போம்!'' என்ற மகாதேவ ஐயர் மேல் துண்டைக்கூட எடுத்துக் கொள்ளாமல் தெருவில் இறங்கி ஓடினார். ராதுவும் அவருக்குப் பின்னால் 'பகவானே!' என்று பிரலாபித்துக் கொண்டு தொடர்ந்தாள்.

அக்கிரகாரத்திலுள்ள எல்லா வீட்டினர்களுமே அங்கு வந்து கூடியிருந்தார்கள். ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை. கோர்ட் உத்தரவோடு வந்து நின்ற அமீனாவின் ஆள் வீட்டைப் பூட்டி 'ஸீல்' வைத்துக் கொண்டிருந்தான். கடன் கொடுத்த சேட் கம்பீரமாக அருகே நின்றுகொண் டிருந்தான்.

வயதுவந்த ராதுவின் இரண்டு பெண்கள் சீதாவும், வேணியும் தங்கள் அநாதரவான கதியை எண்ணிப் பிரமித்து அழுதார்கள். மகாதேவ ஐயரின் மனத்தை இறுக்கிப் பிழிவது போல் வலித்தது. நிலைமையைப் புரிந்து கொண்ட அவர் சேட்டிடம் போய்க் கெஞ்சுகிற குரலில் கூறினார்: ''என்ன சேட்ஜி! கொஞ்சம் கருணை காட்டக்கூடாதா? ஆண் துணையில்லாத பெண்களை இப்படி நடுத்தெருவிலே விட்டா அவர்கள் கதி என்னறது?''

தலைப்பாகையும் வெள்ளை சில்க் ஜிப்பாவும், தார் பாய்ச்சிக் கட்டிய வேட்டியுமாகக் கம்பீரமாக நின்ற சேட், மகாதேவ ஐயரைக் கோபத்தோடு பார்த்தான். அவன் விழிகளை உருட்டிக்கொண்டு பேசுகிற விதமே உக்கிரமாய்த் தெரிகிறது.

''க்யா? அதுக்கு நான் என்ன பண்ணும்! இந்த வீட்டாள் நம்பள்கிட்டே அஞ்சு ஆயிரம் கடன் வாங்கியிருந்தது. வியாபாரம் செய்யறதா வீட்டுமேலே வாங்கியிருந்தது. செத்துப் போச்சு. முதலும் வட்டியுமா இப்போ எட்டு ஆயிரம் நம்பள்க்கி தரணும். பொம்பளேன்னு பார்த்தா நம்பள் ஜோகயா! அரே! பணம் கட்டச் சொல்லூ. வீடு விட்டுடலாம்.''

'இந்தக் கருங்கல்லில் ஈரக்கசிவை எப்படிக் காணமுடியும்?' என்று விக்கித்து வாயடைத்து நின்றுபோனார் மகாதேவ ஐயர்.

''இனி ஒண்ணும் பண்ணறதுக்கில்லீங்க; சேட்டு, கோர்ட்டிலே கேஸ் பைல் பண்ணி ஜப்தி ஆர்டரே வாங்கியாச்சு'' என்று யந்திரமாய்ப் பேசின அமீனா, ''பூட்டி மேலே அரக்கு முத்திரை வச்சு 'ஸீல்' பண்ணுப்பா'' என்று தன்னோடு வந்த உதவியாளுக்குக் கட்டளை போட்டான்.

அந்த வீட்டின் கதவை இழுத்து 'டப்' பென்று மூடும்போது, வாசலில் அலங்காரமாய்க் கோத்துக் கட்டியிருந்த சிறுமணிகள் வெம்பிக் குலுங்கின. அமீனாவின் உதவி ஆள் பெரிய பூட்டைப் பூட்டி, அதைச் சுற்றிலும் அரக்கினால் 'ஸீல்' வைத்தான்.

கூடியிருந்த பிராமணர்கள் எல்லாரும் என்ன செய்வது என்று தோன்றாமல், கையைப் பிசைந்தவர்களாய், கதவின்மீது விழுந்த பெரிய பூட்டையே வைத்த கண் வாங்காமல் பார்த்தார்கள்.

முன்னால் வந்து பூட்டை இழுத்துச் சரி பார்த்துக்கொண்ட சேட், ''ஹூம் அச்சா!'' என்ற சிம்ம உறுமலோடு, அமீனாவையும், உதவி ஆளையும் கூட்டிக்கொண்டு நடந்தான்.

ராது இரண்டு கைகளாலும் 'பொத் பொத்' தென்று தலையிலறைந்துகொண்டு அழுதபோது, அங்கிருந்தவர்களின் மனம் வெடித்தது. பெண்கள் இருவரும், ஏதோ ஓர் அந்தகாரத்தின் கோர ரூபத்தைத் தரிசித்து விட்டதுபோல் நடுங்கித் தம்பித்து நின்றார்கள்.

அங்கே கூடியிருந்தவர்கள் இயலாமையோடு ஒருவர் முகத்தை ஒருவர் கூசிப் போய்ப் பார்த்தபோது மகாதேவ ஐயர், ''ராது, குழந்தைங்களா, எல்லாரும் என் வீட்டுக்குப் போங்கோ. மத்ததெல்லாம் அப்பறம் பாத்துக்கலாம்'' என்று சமாதானப்படுத்தி அழைத்துக்கொண்டு போனார்.

வெயில் விழுந்துவிட்டது. அந்திப்போதின் மங்கல், நிழலைப் பிணைந்து பரவி நீள்கிறது. கூடியிருந்த அத்தனை பேரும் குமுறிய நெஞ்சோடு, மௌனம் பாவித்தவர்களாய், மகாதேவ ஐயரின் வீட்டை நோக்கிப் பின் தொடர்ந்து போகிறார்கள்.

4

சந்தியாவந்தனம் கழித்து, அந்த அக்கிரகாரத்திலுள்ள பெரும்பான்மையானவர்களும், மகாதேவ ஐயரின் வீட்டு உட்கூடத்தில் வந்து குழுமியிருக்கிறார்கள். ஆண்களும் வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள்.

இன்று பஜனை நாள்.

'ஜல் ஜலீர்' என்று ஜாலரின் ஓசையும், கைத்தாளங்களும் பெருகி நிறைந்தபோது பஜனைப் பாடல்கள் மங்களமாய்ப் பிரவகிக்கின்றன.

'ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா,
ராம ராம ஹரே ஹரே'

மகாதேவ ஐயரைத் தொடர்ந்து, ஒருமித்த குரலில் கூட்டமாய் அவர்கள் பாடும்போது தேனுக இனிமை நிறைகிறது. மகிமையின் தண்ணொளியில், இசையில் லயித்துக் கரைந்து விடவேண்டும் என்பது போன்ற துடிப்பு அனைவருக்குள்ளும்.

மகாதேவ ஐயரின் 'கணீர்' என்ற குரலில் தந்தையிடம் தம் குறைகளை முறையிடும் பிள்ளையின் ஆற்றாமை ஒலிக்கிறது.

'ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா
கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே.'

தங்கள் துக்கங்களையும் வியாகூலங்களையும் மனம்விட்டுச் சொல்லிப் பரிகாரம் தேட அவர்களுக்கென்றிருக்கும் ஒரே சந்நிதி அல்லவா அது?

'ஹரே, ஹரே' என்ற குரலுக்கிடையே, தங்கள் வீழ்ச்சி திடீரென்று வந்து நினைவில் முட்ட மகாதேவ ஐயரின் பக்தி நெஞ்சம் தழுதழுத்தது. பாவனையில், ஆபத்பாந்தவனை கிருஷ்ணனை விண்ணின் நிறமாய், நீல வண்ணமாய், அந்தப் பரம்பொருளுக்கே உரித்தான இதழ்க்கடையில் மின்னும் அலட்சியப் புன்னகையுமாய்த் தரிசித்தார்.

பிரகாசித்த மனக்கண்களுக்கு முன்னுல், மாலையும் கழுத்துமாய், வாடாத பொன்னிற மேனியனாய், கண்ணனைக் கற்பனையில் தரிசித்தபோது, கையிலிருந்த ஜாலர் நழுவி, 'ஸல்' என்று தரையில் விழுந்து சப்திக்க அருள் நிலைக்கு ஆட்பட்டு மெய்ம்மறந்த மகாதேவ ஐயர், வாய்விட்டுச் சத்தமாய் அழுதார்.

ஜாலரின் சுருதியும், மகாதேவ ஐயரின் விம்மலும் கேட்டு நிமிர்ந்த கூட்டத்தினர் மனப்புயலின் எதிரொலியை ஏற்றவர்களாய், அவரைக் கண்டு தாங்க முடியாதவர்களாய், தங்கள் உள்ளத்தில் வெட்டுண்டு குருதி பாய்ச்சும் வேதனைகளைத் திரட்டிக்கொண்டு ஒவ்வொருவராய்க் கண்ணீருகுத்து, பஜனைப் பாடலை மறந்து நின்றபோது, அந்த மௌனக் கண்ணீர் மணிகள் விம்மலாய்த் தேம்பலாய்ப் பரிணமித்தன. அவற்றை ஏற்று வாங்கிய பெண்கள் இதயத்தைப் பிழிவதுபோன்ற மகாசோகத்தில் 'ஓ'வென்று குரலெடுத்துக் கதறத் தொடங்கினர்கள்.

வீட்டின் உட்கூடத்தில் 'ஹரே, ஹரே' என்று ஆரவாரித்த முழக்கம் பெருங்கதறலாய் மாறி, தங்களைச் சுற்றிச் சிறையாய் எழுப்பி நிற்கும் அரணையே இடித்துத் தூளாக்கிவிட எத்தனிப்பதுபோல் உயர்ந்தது. கண்ணீர் வழியக் கோணிய முகங்களை ஒருவருக்கொருவர் பார்த்தபோது அழுகை உச்சமுற்றது.

மனப்பாரம் கண்ணின் வழியே வழிந்து ஓரளவு சாந்தி சூழ்ந்தபோது மகாதேவ ஐயர் கையை அமர்த்திக் கூட்டத்தை அடங்கச் சொன்னுர். பிறகு, தமக்கு முன்னுல் இருந்த 'பகவத்கீதை'யை எடுத்துச் சம்ஸ்கிருத சுலோகங்களைக் கூறிப் பொருளை விளக்கிச் சொன்னுர்.

"சோதனை வரும். நல்லவர்களுக்கு அவசியம் வரும். எல்லாக் காலத்திலேயும் இப்படி இருந்துண்டுதான் வந்திருக்கு. பாருங்கோ, பஞ்சபாண்டவர் அஞ்சு பேரும் சத்தியத்தின் பிரதிநிதியாக, பகவானைச் சார்ந்து நிக்கறு. என்ன நடந்தது? அவா அலங்கோலப்படறு. கேடு அவாளை வந்து பிடிச்சுடறதோல்லியோ? தர்மனே சூதாடக் காயை உருட்டறுன்! கவிதையிலே புலவன் நன்னு அழகுபடச் சொல்வான், 'தர்மத்தைச் சூதுகவ்வும்'னு! ஆமா, தர்மத்தைச் சூது கவ்வுந்தான். ஆனு அது நிலையில்லே. வெறுமே சித்த நாழி. சூரியனையே கிரகணம் மறைக்கறதே சித்த நாழி, அதுமாதிரி. வாயை 'ஆ'ன்னு பிளக்கிற மகா அரவம் சூரியனை விழுங்கிட முடியறதோ?"

விளக்கம் சொல்வதற்கிடையே, சிரித்தவாறே, தம்மை உற்சாகப்படுத்திக்கொண்ட மகாதேவ ஐயர், அருகிருந்த ராமாநுஜ ஐயரைப் பார்த்து, "அப்படித்தானே ஐயர்வாள்?" என்று சபையை ஊக்கப்படுத்திக்கொண்டு மேலும் கூறினர்:

"பத்தினித் திரௌபதியே, புருஷாள் அஞ்சு பேர் கண்முன்னுலே, ராஜசபை நடுவே துகில் உரியப்படருள்! நாடும் வீடும் இழந்து ஊசிமுனை இடம் இல்லாமே! அவா யாரு? அந்தச் சத்தியப் பிரதிநிதிகள் பட்ட அல்லல் கொஞ்சமா? ஆனு முடிவைப் பார்க்கணும். அதுன்னு முக்கியம்? குருக்ஷேத்திரத்திலே யார் ஜெயிச்சா? ஜயம் யாருக்கு?" என்று மகாதேவ ஐயர் அதட்டலாய்க் கேட்டபோது, "பஞ்பாண்டவருக்கு" என்று கூட்டமாகவே பதில் கிடைத்தது.

எல்லார் முகத்திலும் ஒரு நம்பிக்கையின் தெளிவு. கலக்கம் கொந்தளித்து அடங்கிய அமைதி.


"அதே போல்தான் இப்பவும் பகவான் தன் அடியார்களாகிய நம்மையும் சோதிச்சுண்டிருக்கார்! பூர்வ பூர்வமா நமக்கிருந்த கிருஷி நிலம், புதிதா வந்த ஒரு சட்டத்தாலே, கண்ணை இமைக்கறதுக்குள்ளே நம்ம கையை விட்டுப் போயிடுத்து. பிராமணன் பகவத் சேவை பண்ணிண்டிருந்தான். விவசாயி கிருஷி செய்தான். தனக்கு வேண்டியதை எடுத்துண்டு மீதிப் பாட்டமும் அளந்திண்டிருந்தான். ரெண்டுபக்கமும் சுபிட்சமாக இருந்தோம். இப்போ நமக்குப் பூர்விக நிலமெல்லாம் கிருஷிக்காரனுக்கு விலையில்லாமே பட்டயமாயிடுத்து" என்று கையை மலர்த்திக் காட்டி அலட்சியமாகச் சிரித்த மகாதேவ ஐயர், "இதனுலே ஊசி குத்த இடமில்லாமே ஆயிட்டோம்னு கலங்கினு ஆகுமோ?" என்றவராய் நிறுத்தி நிதானமாய்ச் சொற்களில் அழுத்தம் கொடுத்து மணிக்குரலில் கூறினர்.

"தர்மத்தைச் சூது கவ்வும்."

ஆழமான மௌனத்தோடு மகாதேவ ஐயரின் வாயைப் பார்த்துக்கொண்டிருந்தது கூட்டம்.

அவர் ஜாலரை எடுத்துக்கொண்டு 'ஜல் ஜலீர்' என்று திரும்பவும் தட்டத் தொடங்கியதும் கூட்டம் 'ஹரே ஹரே' என்று ஆரவாரித்து முழங்குகிறது. இப்போது அதில் சோகம் கரைந்த உற்சாகம் பெருக்கெடுத்தோடுகிறது.

அன்று நள்ளிரவு வரையிலும் பஜனை நீண்டு போகிறது.



5

கதவைத் தாழிட்டுக் கொண்டு வந்து பாயில் விழுந்த பானுவுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. இன்றைய பஜனையும் தகப்பனாரின் வார்த்தைகளும் நினைவுக்கு வந்து புல்லரிப்பை ஏற்படுத்தின. ஜாலராச் சத்தம் இன்னும் கூடத்திலிருந்து ஒலிப்பதுபோல் பிரமை.

ராது மாமியும், கீதாவும், வேணியும் அருகருகாகப் படுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் படும் வேதனைகளுக்கு விடுதலை போல் இமை ரப்பைகளில் தூக்கம் வந்து அழுத்தியிருக்க வேண்டும். அழுது அழுது முகம் வீங்கிக் கன்றிப் படுத்திருக்கும் ராது மாமி தூக்கத்திலும் பெருமூச்செறிவது அவள் அருகில் அணைத்துப் படுத்துக்கொண்ட பானுவுக்குக் கேட்கிறது.

தூக்கம் வராமல் இருட்டிடையே பார்வையைத் துழாவி முகட்டை வெறித்த பானு, தேரோட்டத்துக்கு இன்னும் எத்தனை நாட்கள் இருக்கின்றன என்று கூட்டிக் கூட்டிக் கணக்கிட்டுப் பார்த்தாள்.

'இடையிலிருப்பது நாட்களா? இல்லை, யுகங்களா?'

கீதா பாயில் புரண்டு படுத்தாள். பானுவுக்குப் பாவமாய் இருந்தது. 'வாழவேண்டிய இந்த வயதிலே கீதாவுக்கும் வேணிக்கும் இத்தனை பெரிய சோதனைகளா?'

பசியோ பட்டினியோ பிறர் அறியாமல் முடங்கிக் கொள்ள இருந்த வீட்டையும் சூது கவ்வுமானால் நிர்க்கதியான பேதைப் பெண்கள் என்ன செய்ய முடியும்!

கண்ணை இறுக மூடிக்கொண்டு தூங்க முயற்சி செய்தாள் பானு. 'கிரீச் கிரீச்' என்று கிரீச்சிடும் இரவுப் பூச்சிகளின் ரீங்காரம் கொல்லைப் புறத்திலிருந்து இடைவிடாமல் கேட்கிறது.

புரண்டுப் புரண்டு படுத்தாலும் தூக்கம் வர மறுக்கிறது. அழுந்த மூடிய கண்களைச் சட்டென்று திறந்து பார்க்கும்போது அறையைச் சூழ்ந்திருக்கும் இருள் பயத்தை ஏற்படுத்துகிறது. ஓட்டின் இடைவெளி வழியாக ஒரு துளிப் பிரகாசம் தரையின் மூலையில் பொட்டாய் விழுந்திருப்பது தெரிகிறது. மனம் ஒருமைப்படுவதற்காகத் தகப்பனார் சொல்லிக் கொடுத்திருக்கும் மந்திரத்தை உள்ளுக்குள் முனகிக் கொள்கிறாள் பானு.

'அவர் இந்த அக்கிரகாரத்தை விட்டுப் போய் இரண்டு வருஷத்துக்கும் மேலாயிடுத்தே? இப்போது எப்படியிருப்பார்? இன்னும் சற்றுத் தூக்கலாய், செவப்பாய்.. வந்தால் என்ன கேட்பார்? ம்.. இருந்தபடி இருந்திருந்தால் நல்ல உத்தியோகத்தை உள்ளூரிலே வாங்கிண்டு சௌகரியமா இருக்கலாம். நிலைமை இப்படித் தலைகீழாக மாறிவிட்டதைப் பார்க்கச் சகிக்காமல் பிரயாணச் செலவுக்குக்கூடப் பணம் இல்லாமே ஓடிப் போனாரே!'

தன்னையே மறந்தவளாக அந்த நினைவுகளில் மூழ்கிப் போகிறாள் பானு.

அப்போது வீட்டிலே, "பானு, பானு!" என்று கூப்பிட்டுக்கொண்டு வழக்கமில்லாத வழக்கமாய்ச் சமையற்கட்டிற்கே வந்து

விட்ட தகப்பனரின் முகத்தைப் பார்க்கவே பயமாக இருக்கிறது.

'பானு! இனியும் இதெல்லாம் பாத்துண்டு சகிச்சிண்டு இங்கே பிடிச்சு வெச்ச பொம்மை யாட்டம் இருக்க முடியாது. இத்தனை தூரம் வளர்த்துப் படிக்கவெச்சவா, கதியில்லாம நிக்கறதைப் பாத்துட்டு நான் கையைக் கட்டிண்டு இருக்க முடியுமோ? முடியாது.'

பார்த்தியை ஆதரவோடு பார்த்த பானு அவனைச் சமாதானப்படுத்தினுள்.

'என்ன இப்படிக் குழந்தையாட்டம் கலங்கறேள்? நீங்க படிச்சிருக்கற படிப்புக்கு இங்கே உத்தியோகம் கிடைக்காமலா போயிடும்?'

'இல்லை பானு. இப்படி நெனைச்சிண்டு படிப்பு முடிஞ்ச பிறகும் ஒரு வருஷத்தை வெறுமனே கழிச்சிட்டேன். இனியும் பொறுக்கறதுக்கில்லே; நான் புறப்பட்டே வந்துட்டேன் பானு. உன்கிட்டே சொல்லிக்கத்தான் வந்தேன். வடக்கே போயிடலாம்னு இருக்கேன்.'

'அவ்வளவு தூரமா? நாளைக்கு ஒருதரமாவது ஜன்னல் வழியாத் தெருவிலே போகும் இவர் முகத்தைப் பார்க்க முடிஞ்சுது. இந்த நரக வேதனையிலே ஓர் ஆறுதல். இப்படி இவர் போயிடறேன்னு போயிட்டா நான் எப்படி உயிரை வெச்சிண்டு ஜீவிக்கிறது?'

பானு வெதும்பினுள்.

பானுவை நெருங்கி வந்து அவள் தோளைப் பற்றினுன் பார்த்தி. பானுவின் உடல் அவன் ஸ்பரிசத்தால் நெகிழ்ந்து கூசியது. அவள் கண்களிலிருந்து துளித்துளியாய் உதிர்ந்த கண்ணீர்ச் சொட்டுக்கள் அவன் கையில் விழுந்தன.

'பானு அழாதேடி!' என்று உரிமையோடு அவள் கண்ணீரைத் துடைத்த பார்த்தி, "வடக்கே கல்கத்தாவிலே என்னேடே கல்லூரியிலே படிச்ச நண்பன் ஒருத்தன் நல்ல நிலையிலே இருக்கான். எனக்குக் கட்டாயம் உத்தியோகம் கெடைக்கும். கெடச்சவுட்னே வந்து உன்னை என் சொந்தமாக்கிண்டு, எப்போதும் என்கிட்டே இருக்கும்படி உன்னையும் அழைச்சிண்டு போயிடுவேன்' என்று தேற்றியபோது பானு அவன் விரிந்த மார்பில் புதைந்து ஒடுங்கிக் குலுங்கி அழுதாள்.

'அப்புறம் அவர் போனபிறகு ஆறுமாதம் அவரிடமிருந்து எந்த விவரமும் இல்லை. ஒரு கடிதங்கூட இல்லாமல் மாமாவும் அத்தையும், நானும் துடித்திருக்கிற துடிப்பு.

'ஒரு நாள் அவர் கடிதமும் மணியார்டரில் பணமும் மாமா பேருக்கு வந்திருந்தன! கல்கத்தாவிலே ஒரு பாங்கிலே உத்தியோகம் கிடைத்திருக்கும் செய்தியை அத்தை ஓடி வந்து என்னிடந்தானே சொன்னுள்!'

அந்த அக்கிரகாரமே அந்தச் செய்தி கேட்டு மகிழ்ந்தது. முகட்டைப் பார்த்து, தூங்காமலே கனவில் ஆழ்ந்திருந்த பானு, பின்புறக் கதவின் தாழை விலக்கும் சத்தம் கேட்டு, இருளிடையே உற்றுப் பார்த்தாள்.

வேணி!

'இந்த நிசியில் ஏன் கிணற்றடிக்குப் போகிறுள்?' என்று எண்ணிய பானு ஓசையில்லாமல் எழுந்து அவள் பின்னே போக யத்தனித்தாள். 'பாவம்! ராது மாமி!' கிழித்துப் போட்ட நாராய்ப் பாயில் சுருண்டு கிடக்கிறுள்; அந்தத் தூக்கங் கூட நிம்மதியாயிருக்குமா? என்ன என்ன பொல்லாத காட்சிகள் கனவாய் எழுந்து பயப்படுத்துகின்றனவோ!'

கதவை ஒருக்களித்துத் திறந்துகொண்டு வேணியின் பின்னே வெளியே வந்தாள் பானு. பின்னிரவு நிலா மேலெழுந்து விட்டிருக்கிறது. தன் பின்னுல் பானு வருவதை அறியாத வேணி, கிணற்றின் திட்டில் உட்கார்ந்து ஓங்கரித்து வாந்தி பண்ணினுள். வயிற்றை எக்கி, ஓங்கரித்துக் குமுறலெடுத்து அவள் கஷ்டப்படுகிறதைக் கண்டு ஓடிய பானு, வேணியின் தலையை ஏந்திப் பிடித்துக் கொண்டு முதுகை ஆசுவாசமாய்த் தடவி விட்டாள்.

"என்ன வேணி, மனம் அருக்களிஞ்சுதா? ஓங்கரிச்சுக் கக்கறயே?"

'ஓ' என்ற ஏங்கலோடு கவளமாய் வாந்தி பண்ணிய வேணி, ஆறுதலாய்த் தன்மீது விழுந்த பானுவின் கரத்தை இறுகப் பற்றிய போது அவள் சொல்லத் துடிப்பதின் சங்கேதமாகப் பானுவின் விரல்கள் நெறிந்தன.

பக்கட்டைக் கயிற்றில் பிணைத்த பானு, கிணற்றின் ஆழத்துக்கு நழுவவிட்டபோது எண்ணெயிடாத சகடை 'கரகர'வென்று நொறுங்கச் சப்தமிட்டது. பக்கட் தண்ணீரைத் தொட்டுக்கொண்டு கவிழ்ந்ததும், தெளிந்த நீரில் பிம்பமாய் விழுந்துகிடந்த முழுநிலவு, துண்டுகளாய்ச் சிதறியதுபோல் தண்ணீரில் அலைந்து ஆடியது.

பக்கட்டில் நிறைந்த நீரை இழுத்தெடுத்து, வேணியின் முன்வைத்த பானு, "வேணி. வாய் முகம் அலம்பிண்டு வா. ராத்திரி சாப்பிட்ட ரசஞ்சாதம் உடம்புக்குப் பிடிக்கல்லியோ?" என்று கேட்டாள்.

வேணி நிமிர்ந்து பானுவைப் பார்த்தாள். அவள் அழகான கண்களில் இனம் புரியாத பீதி. தன்னை நிர்மூலமாக்க வாயக்கினி உமிழ்ந்து கொண்டுவரும் கோர பூதத்தைத் தரிசித்துவிட்டதுபோன்ற நடுக்கம். மஞ்சள் நிலவொளியில் அவள் வாடிய முகம் மினுமினுத்துத் தெரிகிறது.

"பானு மன்னி!"

"என்ன வேணி? தலை இறங்கறுப்போலே இருக்கா?"

"உனக்குத் தூக்கம் வரதா மன்னி?"

"இல்லியே. ஏன் வேணி?"

"கதவைச் சாத்திண்டுதானே வந்தே?"

"ஆமாம்."

"இப்படி இந்தக் கல்லிலே சித்தே இரேன். எனக்கு ஒரு காரியம் உங்கிட்டே பேசணும்."

மரத்தின் நிழலுக்கு மேலே ஏறி வந்து விட்ட நிலா, இப்போது பக்கட்டின் நீரில் பிடிபட்டு மங்கலாய்க் காட்சி அளித்தது. கிணற்றில் 'டொபுக்' என்று கவிழ்ந்து நீரைச் சேந்திய பக்கட்டின் ஓசை திரும்பவும் மனத்துக்குள் ரீங்கரிக்கிறது.

துவைக்கிற கல்லில் வேணிக்கு எதிராக உட்கார்ந்துகொண்ட பானு கண்களினுலேயே 'என்ன வேணி?' என்று கேள்வி தொடுப்பது போல் பார்த்தாள்.

முகத்தில் தண்ணீரை விசிறிச் 'சப் சப்' என்று அறைந்து அடித்துக்கொண்ட வேணி புத்துணர்ச்சி வந்தவளாய், முன்றுனையால் ஈரத்தை ஒற்றித் துடைத்துக்கொண்டாள்.

''இன்னிக்கு நான் வாந்தியெடுக்கிறேன். நாளைக்கு இந்த ஊரே கூடி என்னை வாந்தி பண்ணிடப் போறது.''

மூடிய பனிமூட்டத்துக்கிடையே கிழித்துக் கொண்டு வரும் ஒளிக்கதிர்கள் மங்கலாய்த் தெரிவதுபோல் ஏதோ புரிந்தும் புரியாததுமாய்ப் பானு நெட்டினள்.

''நீ என்னடி சொல்றே வேணி?''

''வீடு ஜப்தியாயி, உங்க வீட்டுக்கு வந்ததும் முதல்லே உங்கிட்டே என்ன கேட்டேன் பானு, மன்னி, ஞாபகம் வரதா?''

'என்ன, இந்த அர்த்த ராத்திரியில் புதிர் போட்டுக் கொண்டிருக்கிறளே' என்பது போல் பார்த்த பானு, ''பசிக்கறது. ஏதாவது சாப்பிட இருந்தா கொடுன்னு கேட்டே'' என்றாள்.

''ஆமா. பசிதான். ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு பசி. அதைத் தீக்கறதுக்கு ஏதேதோ படைக்கிரு. நான் என் பசிக்கு இரையா என்ஜீவியத்தையே வெச்சுட்டுேனன்னு தோணறது'' என்று விரக்தியோடு பிதற்றிய வேணி, பானுவின் வலக்கையை வெடுக்கென்று பற்றியிழுத்துத் தன் வயிற்றில் வைத்து அழுத்தினாள்.

சிரசிலிருந்து பாதம் வரையிலும் மின்னற் பொறிகள் கோடு கிழிப்பதுபோலிருக்கிறது பானுவுக்கு. 'இது நிஜமென்றால் இந்த நிஜத்தை இவ்வளவு சின்ன விஷயமாக எப்படி எடுத்துக்க முடியறதுடி உன்னால்? அடீ, பாவிப் பொண்ணே' என்று பானுவின் மனம் அரற்றுகிறது.

''மன்னி, இந்த விபரம் இப்ப இருக்கிற நிலையிலே அம்மா அறிஞ்சாளோ அவ்வளவுதான்! உசிரையே விட்டிடுவா. என் இந்தக் கதை ஊரறிஞ்சா நேக்கு வாழ்க்கை போறதோட என் அக்காவுக்கும் வாழ்வு போயிடும். நான் செத்துத் தொலைஞ்சா இந்தப் பிரச்னைக்குச் சேர முடிவு வரும். ஆனா அது என்னாலே முடியற மாதிரி இல்லே பானு. வாழணுங்கற துடிப்பிலேதானே இந்த நிர்க்கதிக்கே ஆளானேன். இழக்கக்கூடாதெல்லாம் அந்தத் துடிப்புக்குக் காவு வெச்சிட்ட பிறகு இனிமே ஏன் சாகணும்னு இப்போ தோணறது.''

பேதைமையான அவள் பேச்சைக் கேட்டுத் தாங்காமல், ''அடீ பாவி, என்ன காரியம் செய்துட்டேடி?'' என்று நடுங்கிய குரலில் கேட்டாள் பானு. ''யாருடி? எந்த நீசன்? பச்சைக் குழந்தையான உன்னை நிர்க்கதியாக்கி இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டவன் யாரு?''

விச்ராந்தியாய்த் தோளைக் குலுக்கினாள் வேணி. ''ம். அவர் யார்னு தெரிஞ்சிண்டா மட்டும் இப்போ என்ன ஆயிடப் போறது? அவர் என்னை நேசிக்கறதாத்தான் சொன்னார். என்னை ஏத்துக்கறேன்னு வாக்களிச்சார். ஆனா இப்போ நிலமை இப்படி முத்தினது தெரிஞ்சா என்னை ஏத்துப்பாரான்னு நேக்கே சந்தேகமாயிருக்கு.''

அவள் பேசுவதைக் கேட்கக் கேட்க அவள் பேதைமையை நினைத்துப் பரிதாபமும் கோபமும் ஏற்பட்டன பானுவுக்கு. 'நிறுத்துடி, என்ன பேத்தறே? உன்னைச் சீரழிச்சு இந்த நிலைக்குக் கொண்டுவந்த அயோக்கியன் யாரு சொல்லு?'' என்ற பானு ஆங்காரம் மூண்டவளாய், வேணியின் தலைமுடியைப் பற்றி இழுத்து ஆட்டியபோது, இதுவரையிலும் பேசிக்கொண்டிருந்த போலிப் பலம் உதிர்ந்து, தன் முகத்துக்கு நேரே நீளமாய் நின்று கொண்டிருந்த பானுவின் முழங்கால்களை இரு கைகளாலும் சுற்றிப் பிடித்துக் கொண்டு 'ஹோ'வென்று நெடுங்குரலில் அழுதாள் வேணி.

இருட்டையே பிளப்பதுபோல் அந்தக் கதறல் எழுந்து அஸ்தமித்தது. நிலாவின் வெளிச்சத்தில் தலைவிரிகோலமாக இருந்து கதறும் வேணியைப் பார்க்கப் பார்க்க வயிறு பற்றிக் கொண்டு எரிகிறது. ராதுமாமி எழுந்துகொண்டு விடுவாளோ என்று பயம். 'உஷ், உஷ்' என்று அடக்கிய குரலில் அமர்ந்திருந்தாள் பானு.

'இம் இம்' என்று கேவியவாறே, இடைவெளியிட்டு நிறுத்தி அந்த அவலத்தைச் சிந்தித்துக் குறுகிக் கூசிப்போய் வேணி சொன்னாள்.

''பானு மன்னி, நாங்க மூணுபேரும் இந்த லேண்ட் டிரிபுனல் வந்ததிலேந்து பாதி நாள் பட்டினிதான் கிடந்திருக்கோம். ஒரு சமயம் சேந்தாப்போலே அஞ்சுநா ஒரு கவளம் சோறில்லாமே கிடந்தோம். கொணத்துத் தண்ணீரை எறச்சு எறச்சு குடிச்சு எத்தனை நாள் ஜீவிக்க முடியும்? நேக்கு அந்தப் பாழாய்ப் போன சாவும் வந்து தொலைக்கல்லியே? என்ன செய்வேன்? எதிர்த்தாத்திலே வாடகைக்கு வந்திருக்கிறரே, ஸிவில் ஸ்டேஷனில் வேலை பாக்கற சேது.. சைக்கிளில் போறச்சே வரச்சே பார்த்திருக்கேன். அவ்வளவுதான். அவர் நம்மடவர்னு தெரிஞ்சதிலே எல்லாருக்கும் ஒரு பிரீதி. அவ்வளவுதான்.'' வேணிக்கு மூச்சிறைக்கிறது. பக்கட்டிலிருந்து தண்ணீரைக் குழிந்த கையில் ஊற்றி இரண்டு மிடறு குடித்தாள்.

''ஆறும் நாள், பசி என்னையே அறியாமல் அவர் வாசல்லே என்னைக் கொண்டுபோய் நிறுத்திடுச்சு. பசிக்கு வெக்கமில்லே. நான் பெண்ணுச்சேங்கற ஞாபகங்கூட இல்லாமே ஒரு பிச்சைக்காரியா அவர் வாசல்லே போயி நின்னேன். தயங்கியபடி, 'அஞ்சு ரூபா இருந்தா தாங்கோ கைமாத்தா, சீக்கிரம் திருப்பிட'றேன்னு கேட்டிடவும் செய்தேன்.

''அவர் நல்லவர். ரொம்பவும் தயாளமா நடந்துண்டார். அப்பறம் வீட்டுக்கும் அடிக்கடி வந்தார். எத்தனையோ உதவி செய்தார். நம்ம பிள்ளாண்டன் தானேன்னு, அம்மாவும் சேதுவை ஒரு மகனைப் போல நம்பிண்டிருந்தா. 'அப்படிப் பாக்காதே பானு! எங்களிடையே வளர்ந்த சிநேகம் எல்லை கடந்துடுச்சு. பல நேரங்களில் நாங்க தனியாச் சந்திச்சிண்டோம். அதுதான் தப்பாய்ப் போயிடுச்சு. அவர் என் கையைப் பிடிச்சுச் சத்தியம் பண்ணினார். ஒரு பலவீனமான சந்தர்ப்பத்திலே அவர் என்னை எடுத்துண்டுட்டார்.''

தெளிந்த வானத்தில் மெல்லிய கறுப்பு மேகவலைகளை, எந்த உருத்தெரியாத சிலந்தி மர்மமாயிருந்து பின்னியதோ? நொடிக்குள் நிலா சிறைக்குள் விழுந்துவிட, திடீரென்று ஆழ்ந்த அந்தகாரம் விழியைக் குருடாய் அடித்து விட்டது போலிருக்கிறது. வீசுகிற காற்றில் பலாமரத்தின் பழுத்த இலைகள் சில கொழிந்து வீழ்கின்றன.

''அவன், என்ன பேரு சொன்னே? மாதுவோ சேதுவோ? அவன்கிட்டே விஷயத்தைச் சொன்னியோ?'' பதைப்புடன் பானு கேட்டாள்.

தாடையில் கைகொடுத்து முகத்தைத் தாங்கி ஏந்திக்கொண்டிருந்த வேணி, 'இல்லே' என்று தலையை ஆட்டினாள். ''முறைப்படி நடந்துட்ட காரியமா, இதைக் கேட்டு அவர் சந்தோஷப்படுவார்னு நம்பறதுக்கு? பாத்தியா பானு மன்னி! பசிதானே அவர் வாசல்லே கொண்டு போய் என்னை நிறுத்திச்சு. இப்படி நிர்க்கதியாக்கிடுச்சு'' என்ற வேணி தன் பயத்தைப் பானுவிடம் சொன்னாள்.

''திருவனந்தபுரத்திலே அவர் வீட்டிலேந்து வந்த கடிதாசியைக் காண்பிச்சிருக்கார். பெரும் ஸ்ரீதனத்தோடே பொண்ணு தராளாம் அவருக்கு. வீட்டுக்கு இவர் ஒரே பிள்ளை. இதை அவர் காட்டினதிலேந்து நேக்கு ஒரே பயம். அவர் என்னையேதான் பண்ணிப்பேன்னு வாக்குத் தந்தாலும், ஏனோ என்னை ஏத்துப்பாரோன்னு அவர்பேரிலே நம்பிக்கையே வரதில்லே, பானு. அப்படியே வாழ்க்கை கெடைச்சாலும் 'கேவலம், உதவிகளுக்காக எனக்கு வலை விரிச்சிட்டா'ன்னு தப்பா அவர் நெனைச்சிட்டா வாழ்வே [illegible]ன மாயிடாதா பானு மன்னி?''

ஒன்றும் புலப்படாமல் என்ன செய்வதென்று அறியாமல் கலங்கியிருந்த அவர்களிடையே வெளிப்படையான மௌனம் சூழ்கிறது; உள்ளத்தில் ஒரு பாலையின் தகிப்பு! குமுறல்.

மேகத்தின் பின்னணியில் விடுபடுவதற்கான நிலாவின் துடிப்பான போராட்டம் இன்னும் நிகழ்ந்தவாறே இருக்கிறது. 'கூர்மையான ஆயுதத்தால் அந்தத் திரையை அறுத்துத் துண்டித்து விடலாமா?' என்றிருக்கிறது பானுவுக்கு. அதை யார் செய்யக்கூடும்?

வெகுதூரத்தில் நம்பிக்கையின் ஒரு நட்சத்திரத் துளியின் ஒளிவீச்சு. கடகட வென்று பாலத்தைக் கடந்து செல்லும் ரெயிலின், சோகம் கலந்த விடை பெறும் சத்தம் துரிதத்தோடு வந்து கேட்கிறது.

6

புதிதாக அடித்து உதிர்த்துப் போட்ட நெல் மணிகள் களத்தில் அம்பாரமாய்க் குவிந்து கிடந்தன. பத்துப் பதினைந்து பேர், ஆண்களும் பெண்களும் களத்தின் மூலைக்கு மூலை நின்று கதிரைத் தரையில் மோதி அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பஸ்ஸிலிருந்து இறங்கி வயல்வழியே இரண்டு மைல்கள் நடந்துவந்து அயர்ந்த மகாதேவ ஐயர், ''உஷ், அப்பாடா! குருவாயூர்ப்பா'' என்றவாறே குடையை மடக்கிக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு களத்தில் நுழைந்தார்.

தம் சொந்தம் அந்நிதமாகிவிட்ட வேதனை தேள் விஷமாய்க் கடுக்கிறது.

ஆட்களை ஏவி உற்சாகமாய் வேலை வாங்கிக் கொண்டிருந்த அங்காளன் முகம், மகாதேவ ஐயரைக் கண்டதும் ஒரு நிமிஷம் கறுத்துச் சிறுத்தது. ஒரு செயற்கைப் புன்னகையில் அதை மறைத்துக்கொண்டு மகாதேவ ஐயரின் எதிரே வந்து கும்பிடு போட்ட அங்காளன், ''சாமி, வரணும். என்ன இந்த உச்சி வெயில்லே? சொல்லிவிட்டிருந்தா நானே வந்து பாத்திருப்பேனே.'' உபசார வார்த்தைகள் தாம்.

முன்பானால் ஒரு கம்பீரத்தோடு, ''என்னடா அங்காளா நன்னாயிருக்கியா?'' என்று விசாரணையிலேயே ஆசீர்வாதம் தருவார் மகாதேவ ஐயர். இப்போது அப்படியெல்லாம் அவனிடம் பேசிவிட முடியுமோ? தம்முடைய நிலத்தைக் கிருஷி செய்து கொண்டிருந்த குடியானவன் தானா இவன்? ஒவ்வோர் அறுவடையின் போதும், ஓணம், விஷுக்கணி, தேரோட்டம் என்ற விசேஷ நாட்களின் போதும், வயலில் விளைந்த காய்கறிகளும், புளியும், நெல்லும், வெல்லமும் நேந்திரம்பழக்குலையும், பப்படக் கட்டுமாக இரண்டு மூன்று வண்டிகளில் கொண்டு வந்து இறக்கி, திருமுன் காணிக்கையாக வைத்துப் பயபக்தியாய் நிற்பானே! அந்த அங்காளன் தானா இவன்?

கழுத்தைச் சுற்றிக் கிடந்த துண்டில் முகத்தில் வழிந்த வேர்வையை ஒற்றித் துடைத்த மகாதேவ ஐயர், ''தேரோட்டம் வரதோன்னோ! ஊரிலே விசேஷம். அறுவடை ஆயிட்டிருக்கிறதா கேள்விப்பட்டேன். அதான் உன்னைப் பாத்துட்டு வரலாமேன்னு ஒரு நடை புறப்பட்டு வந்தேன்.''

கதிரை அடித்துக் கொண்டிருந்தவர்களை ஏச்சுக் காட்டி விட்டுக் கொத்தாய் நெல்லைக் கவ்விய காக்கையை, 'ச்..சூ' என்று துரத்தி அடித்த அங்காளன், ''வாங்க சாமி, வீட்டிலே போய்ப் பேசலாம். இங்கே வெயில் அனலாக் கொளுத்துது'' என்றான்.

''ஓ! போகலாம் அங்காளா!'' என்ற மகாதேவ ஐயர் தம் குடையைச் சரிபடுத்தி விரித்துக் கொண்டார்.

''ஏ.. இங்கென்ன வேடிக்கை பார்க்கிறே? நான் வூட்டுக்குப் போயிட்டுத் திரும்பறதுக்கு முன்னே, இங்கே கிடக்கிற பொதியெல்லாம் அடிச்சு முடிச்சிருக்கணும். தெரிஞ்சுதா?'' என்று கதிரடித்துக் கொண்டிருந்த வேலையாட்களை ஏவி விட்ட அங்காளன், ''ஆள் இல்லேன்னா துரும்பளவுக்கும் வேலை நடக்காது சாமி. நீங்க வாங்க'' என்றவனாய் வயல் வரப்பின் ஒற்றையடிப் பாதையின் வழியாக முன்னால் நடந்தான். விரலளவுப் பருமனில் அவன் கழுத்தில் ஊசலாடும் தங்கச் செயின் வெயில் பட்டு மினுக்குவது மகாதேவ ஐயரின் கண்ணில் படுகிறது.

உழைத்து, உழைத்துக் கருத்துத் திரண்ட அங்காளனின் உடலில், இப்போது நிழலிருப்பின் வெளுமை கட்டியிருக்கிறது. போகிற போக்கில் ஒரு நோக்குத் திரும்பிப் பார்த்த அவன், ''என்ன சாமி? ஆளே அடையாளம் தெரியல்லே? கறுத்துப் போனீங்களே!'' என்று கேட்டான்.

விழி ஓடும் தொலைவுக்குப் பார்வை படும் இடம் முழுவதும் மகாதேவ ஐயரின் சொந்த நிலமாயிருந்த இடம் தெரிகிறது. குலை முற்றிய பளு தாளாமல் தலையை வளைத்துக் கொண்டு சாய்ந்து கிடக்கிற நெற்குலையைக் காணும்போது சூலுற்ற தாயின் மனக் களிப்பு; 'சுரீர்' என்று வேதனை.

'அம்மா மார்புச் சுனையை - நெற்பாலையை அமிர்தமா வர்ஷித்திருக்கிறாளே! ஓரோ நெல் மணியும் புளிக் கொட்டை மாதிரி'

''கீளே பாத்து வாங்க சாமி வழுக்கிடப் போறது'' என்ற அங்காளின் வார்த்தையைச்

சட்டை பண்ணாத மகாதேவ ஐயர் பிரிந்து போன மதலையைக் கண்ட தாயின் ஆவேசத்தோடு அந்த வயலை உற்றுப் பார்த்தார்.

'தாயே, பூமித்தாயே!' என்று அலறிக் கொண்டு, மணிமணியாய்க் காய்த்துக் கிடந்த நெல்லிடையே மேனிமுழுதும் புழுதிப்படக் கைகூப்பி விழுந்து, தெய்வ சந்நிதானத்தின் முன் விழுந்து புரளுவதுபோல் உருளவேண்டும் என்று ஆவேசமாய் வருகிறது அவருக்கு.

'ஒண்ணா இரண்டா? அதோ, அந்த ரோட்டிலிருந்து இதயத்தைப் பிடுங்கிப் போட்டாற்போல் கண்டங்கண்டமாய்த் துண்டுபட்டுக் கிடக்கிற இந்த நிலமெல்லாம், பூர்வ பிதாக்களிடமிருந்து ஆசீர்வாதமா நேக்கு வந்திருந்தது. எத்தனையோ தலைமுறையாக் காத்து, கண்மணிபோல் வெச்சிண்டு வந்தா பெரியவா! அவா பெலத்து, சுரங்க ஆழத்துக்கு வேர்களை நீட்டிண்டு, இமயமா முகத்தை நிமிர்த்தி ஆல மரமா நின்னா. அதிலே துளிர்த்த வாரிசான எங்களுக்கு அந்தப் பெலம் உண்டோ? தரைக்கு மேலே முற்றித் தெறிக்கிற வேர்லெ கெடக்கிற மண்ணைக்கூடத் தொட முடியாமே, திரிசங்கு சொர்க்கமா காத்திலே ஊசலாடுற விழுதுகளாகத்தான் ஆயிட்டோம்...'

பச்சைப் பசேல் என்று தென்ன மரங்கள் தோப்பாய்த் தெரிகின்றன. 'ஸ்தன்ய பானம் செய்யறயா மகனே?' என்று கேட்பதுபோல் குடம் குடமாய்த் தென்னங் குலைகள். மாம்பிஞ்சு இலையே தெரியாத அளவுக்குக் காய்த்துக் கிடக்கிறது. அதோ புளியும் பலாவும்.

'இதெல்லாம் நேக்குன்னு சொந்தமாயிருந்தது...'

''குருவாயூரப்பா!'' பிதுங்கிய கண்ணீரை அடக்க முடியாமல் மகாதேவ ஐயரின் உடல் குலுங்குகிறது. விழியை இருட்டடித்ததுபோல் வரப்பை விட்டு விலகிய கால் பதறித் தடுமாறுகிறது.

'போயிடுச்சு. எல்லாம் போயே போயிடுச்சு.'

வயல் குளத்தில், இலக்கு வைத்துக் கவ்விய மீனைத் தன் கூரிய அலகில் பிடித்துக் கொண்டு வானத்தைச் சுற்றி வட்டம் கிழித்து விட்டுப் பறந்து போகிறது ஒரு நாரை.

வீட்டின், கம்பீரமாய் அலங்கரித்த முன் அறையில் 'ஸ்டீல் நாற்காலி'யை இழுத்துப் போட்டு, ''உட்காருங்கோ சாமி!'' என்ற அங்காளன், ''டேய், யாரு வீட்டிலே? நல்ல பதமான இளநியாப் பாத்துச் சாமிக்கு வெட்டிண்டு வா. பாவம், வேகாத வெயில்லே நடந்து வந்திருக்காரு'' என்று உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தான்.

புதிதாகக் கட்டிய மாடிவீடு. ஏக அமர்க்களமாய் இருக்கிறது. அந்த வரவேற்பு அறையிலே இத்தனை ஜோடனையானா வீட்டுக்குள் மொத்தமாய் எப்படியிருக்கும்? புதிதான ஸ்டீல் நாற்காலிகள், 'சோபா கம் பெட்' என்று கிடக்கின்றன. தலையைத் திருப்பி, 'நீயார்? நீயார்?' என்று கேட்பது போல் முடுக்கிவிட்ட மேஜை விசிறி சுழன்று கொண்டு இருக்கிறது. தரையில் பதிந்த கால் பட்டாய் வழுக்குகிறது. 'மொஸைக் ஃபுளோரிங்!' எதிரே இருந்த புத்தக அலமாரியில் சிவப்பாய்த் தடித்த புத்தகங்கள் ஏராளமாய் அடுக்கி வைக்கப் பட்டிருப்பதைப் பார்த்த மகாதேவ ஐயர், ''என்ன அங்காளா? நெறயப் புஸ்தகங்கள் வச்சிருக்கியே. இதெல்லாம் யார் படிக்கறா?'' என்று கேட்டார்.

இளநீரை 'டொப் டொப்' என்று உடைத்துக் கீறுகிற சப்தம் உள்ளிருந்து கேட்கிறது. 'கொட கொட'வென்று நீரைத் தம்ளரில் கவிழ்க்கும் ஒலி.

''அட முட்டாப் பயலே! தண்ணியைக் கிளாஸிலே கவுத்திட்டியே. சாமி நம்ம கிளாஸிலே குடிப்பாகளோ? வேறொரு காயை நல்லதாப் பாத்துக் கண்ணைமட்டும் கொத்தி எடுத்துட்டுவா சீக்கிரம்'' என்று ஆர்ப்பாட்டமாய்ச் சத்தம் போட்டான் அங்காளன்.

அவன் குரலில் தொனித்தது பரிவா, இளக்காரமா?

''என்ன கேட்டீங்க சாமி. இதெல்லாம் எனக்கு எங்கேங்க படிக்கத் தெரியும்? கை நாட்டு. இந்தப் பகுதியிலே ஒரு நேதாவு, அதாங்க கட்சித் தலைவரு உண்டு. என் மகன், காலேஜிலே வேலையாயிருக்கிற முத்துவுக்கு ரொம்பப் பழக்கம். அவர் கொண்டாந்து வச்சிருக்கார். இங்கேதான் தங்கறார். இப்போ அவர் வர்ற நேரந்தான்'' என்ற அங்காளன் கண் செத்திய இளநீரை வாங்கிக்கொண்டு வந்து மகாதேவ ஐயரின் கையில் கொடுத்தான்: ''சாப்பிடுங்க சாமி, நாவறட்சி குறையும்.''

மறுக்க முடியாதவராக அதை வாங்கிக் கவிழ்த்தார் மகாதேவ ஐயர். தேனாய் இனித்து ஜில்லிட்ட நீர் நாவில் ருசித்துத் தொண்டையை நனைத்ததும், ''நம்ம மரத்தின் தேங்காய்க்கே தனி ருசி. அப்படியே தேவாமிர்தம் மாதிரி. இல்லியா அங்காளா?'' என்றார். அங்காளன் பொருளோடு அவரைப் பார்த்துச் சிரித்தான்.

''தென்னந்தோப்பையே அழிச்சிடலாம்னு பாக்கறேன் சாமி. அந்த இடத்திலே பெரிசா ஒரு 'ரைஸ் மில்' ஆரம்பிக்கலாம்னு நேதாவு ஆலோசனை சொன்னாரு. தேங்காயிலே என்னங்க காசு? ரைஸ்மில்லிலே ஏகப்பட்ட பணம் வருமே.''

மகாதேவ ஐயரின் மனம் 'பொட்'டென்று விழுந்துபோய்விட்டது. அவர் குழந்தையாயிருந்தபோதிருந்தே, கனிவோடு பார்த்துப் பார்த்துத் தம் ஜீவியத்தோடு ஐக்கியப்பட்டதாய் உணர்ந்த தோப்பின் தென்னைகள், சிரசறுந்து முண்டமாய் வீழ்ந்து கிடப்பதைக் கற்பனை செய்து பார்க்கக்கூடத் திராணி இல்லை.

'செய்யுங்கறதுக்கும் கூடாதுங்கறதுக்கும் நான் யாரு? நேக்கு என்ன உரிமை இருக்கு? நான் சொல்லிட்டா மட்டும் பவ்யமா கேட்டிடப் போறானா என்ன?' என்று நினைத்த மகாதேவ ஐயர் இளநீரில் முக்கால் பகுதி தண்ணீர் குலுங்க அப்படியே கீழே வைத்துவிட்டார்.

''என்னங்க சாமி?''

''பரவாயில்லை அங்காளா. போதும். வெயில்லே நடந்து வந்ததோ என்னவோ தெரியல்லே, மனசைக் குமட்டறது'' என்றார்.

அப்போது வாசலில் நிழலாடியது. ஏறிட்டுப் பார்த்த மகாதேவ ஐயருக்கு எதிரே வந்து நின்றவர் அங்காளன் சொன்ன 'நேதாவு' தான் என்று சொல்லாமலே விளங்கியது.

நாற்பது நாற்பத்தைந்து வயதிருக்கலாம். பருத்த புத்தகம் ஒன்றைக் கையிலும் வைத்துக் கொண்டிருந்தார். ''என்னங்க, முத்து இன்னும் வரல்லியா?'' என்றவராய்

குபீரென்று தாக்கப்பட்டவளாய்க் குலுங்கிப் போகிறாள் பானு. எதிர்த்த வீட்டிலே நோய் கொண்டு முடங்கிக் கிடக்கும் கோபாலையர் ஈனசுரத்தில், ''முடியல்லே, முடியல்லே. நேக்குத் தாங்க முடியறதில்லே. பகவானே, பகவானே'' என்று கோரமாய்ச் சத்தமிட்டுக்கொண்டிருக்கிறார். உதரரோகம் முற்றிவிட்டிருக்கிறது. நாலைந்து நாட்களாகத் தூக்கமே இல்லாமல் அவர் போடும் சத்தம் வீடுகளைக் கலக்குவது போல் இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருக்கிறது. இதைக் கேட்டுக் கேட்டு அலுத்துக் கண்ணை மூடும்போதும் கோபாலையர் 'ஹும் ஹும்' என்று முனகித் தவிப்பது போல் மயக்கம்.

''அக்கா, பானு அக்கா'' என்று கூப்பிட்டுக்கொண்டு வெங்கு ஐயரின் பேரன் மணி படியேறி வருகிறான்.

''என்னடா மணி?''

அண்டி வந்து நின்ற குழந்தையின் தலையைக் கோதிவிட்ட பானு பரிவோடு அவனைப் பார்த்தாள்.

''சாப்பிட்டாயா?''

''ஊஹும்'' என்ற முனகலோடு உதட்டைப் பிதுக்கினான் மணி.

''அம்மா, நேக்கு இப்போல்லாம் சரியா சோறு போடறதே இல்லேக்கா.''

''சரிடா மணி. முகத்தைக் கோணாதே. சமத்தோல்லியோ, அக்கா சோறு போடறேன். சாப்படறயா?''

''சரி'' என்று மணி தலையசைத்ததும் பானு அவனை அடுக்களைக்குக் கூட்டிப் போனாள். கிணற்றங்கறையில் 'ஓ ஓ'வென்று வேணி வாந்தி பண்ணுகிறாள். நல்ல வேளை! யாரும் கவனிக்கவில்லை. அந்தச் சத்தம் கேட்கும்போதெல்லாம் அந்த ரகசியம் எப்பொழுது வெடித்துச் சிதறுமோ என்று தடுமாற்றமாயிருக்கிறது.

''மணி சாப்பிட்டுட்டு அக்காவுக்காக உபகாரம் பண்ணறயா?''

'ஓ' என்று தாராளமாய்த் தலையாட்டுகிறான் மணி. ''என்னக்கா?''

''மாமா ஆத்திலே போய் அத்திம்பேர் கல்கத்தாவிலேந்து வந்துட்டாளோன்னு பாத்துட்டு வரயா?''

சாப்பிட்டு முடித்தவுடன், வாயைக்கூடச் சரியாகத் துடைக்காமல் டிரவுசரை இழுத்துவிட்டுக்கொண்டு, ''இதோ ஒரு நொடியிலே வந்துடறேன் பானு அக்கா'' என்றவாறே மணி ஓடுகிறான்.

''டேய் மணி, மாமாவோ அத்திம்பேரோ கேட்டா, பானு அக்கா சொல்லிவிட்டான்னு சொல்லாதே''

''இல்லே'' என்ற மணி, ''பானு அக்கா சொல்லிவிடலேன்னே சொல்லிடறேன்'' என்றவாறே ஓடினான். பானு அவன் பேச்சைக் கேட்டு அடக்கமாட்டாதவளாய்க் 'கலீர்' என்று சிரித்தாள்.

'மணி பத்துக்கும் மேலாயிருக்குமே. சரியான நேரத்துக்கு ரெயில் வந்திருந்தால் அவர் இதற்குமுன் வீட்டுக்கு வந்திருக்க வேண்டுமே'

பானுவின் வதனம் பூவாய் மலர்கிறது.

'ஒவ்வோர் ஆண்டும் தேரோட்டம் நடந்தபோது, எத்தனையோ பெண்களுக்கு இந்த அக்கிரகாரத்திலே வாழ்க்கை ரதம் புறப்பட்டிருக்கு. இந்தத் தேரோட்டத்திலே..'

பானுவுக்கு முகூர்த்தம்.

'அவரை ஒரு நோக்கு இந்த நேரத்திலே பாக்க முடிஞ்சதுன்னா..?' நெடுமூச்செறிந்தாள் பானு. தனிமையில் அமர்ந்து, நினைவின் சுகலயிப்பில் மென்மையாய்த் தோய வேண்டுமென்று ஆசை பரபரக்கிறது. பின்புறக் கிணற்றங்கரையில் சதுரமாய்க் கிடந்த கல்லில் வந்து உட்கார்ந்தாள் பானு. மெல்ல வீசுகிற காற்றும், மிதந்து வந்த நிலாவும் மனத்தை அள்ளுகின்றன. தரையைச் சுற்றி விரித்திருந்த மணலில் விரவிப் பருமனான கற்களை எடுத்துக் கிணற்றுக்குள் வீசுகிறாள். 'டொப், டொப்' என்று கிணற்றில் கேட்கிற சத்தம், கேட்க ஒருவிதச் சுகம்.

மதிலின் பின்புறம் ரோட்டின் கரையில் ஏதோ சலனம். பானுவின் நினைவைக் கலைக்கிறது. தலையை உயர்த்தி அச்சத்தோடு பார்த்தாள் பானு. மதிலில் ஏறி யாரோ 'பொத்'தென்று உள்ளே குதிப்பது தெரிந்ததும், பானுவின் உடல் 'சிலீர்' என்று பயத்தால் வேர்த்துவிடுகிறது. விருட்டென்று எழுந்து பலாமரத்தின் பின்னிழலில் மறைந்துகொண்ட பானு இலையிடுக்கின் வழியாகப் பார்த்தாள்..

வருகிறவன் சேது! நிலாவெளிச்சத்தில் அவனை நன்றாக அடையாளம் தெரிகிறது. பானுவுக்கு ஆங்காரமாய் வருகிறது. 'இவனுக்கு என்ன துணிச்சல் இருந்தா இப்படிச் சுவரேறிக் குதிப்பான்?'

பானு உட்கார்ந்திருந்த கல்லின் அருகில் வந்த சேது அங்கே யாரையும் காணாமல் திடுக்கிட்டுச் சுற்றும்முற்றும் பார்த்தான்.

''யாரங்கே?'' என்ற சத்தம் கேட்டு நிமிர்ந்த சேது, பலாமரத்தின் பின்னிலிருந்து வெளியே வந்த பானுவைக் கண்டதும் வாயடைத்து நின்றான். அவள் 'வேணி' என்று தவறாகக் கருதி அவசரப்பட்டுவிட்டோமே என்று தவித்தவனாய்க் கையைப் பிசைந்தவன், ''மன்னிக்கணும். நான் தவறுதலாய்..'' என்று குழறியவாறே, திரும்பவும் மதிலை நோக்கி நடந்தபோது, ''சேது, கொஞ்சம் நிக்கறயா?'' என்ற பானுவின் கண்டிப்பான குரல் வந்து தடுத்தது. அசைவற்றவனாய் நின்றான்.

''நீ ஏன் இங்கே வந்தே? ஏன் இப்போ ஓடறேன்னு நேக்கு நன்னாத் தெரியும். உன்னைப் பாத்துப் பேசணும்னு நானும் நெனைச்சிண்டேதான் இருந்தேன். இப்போ ரொம்ப அவசரம் ஒண்ணுமில்லியே, ஓடிப்போறதுக்கு?'' என்று பானு சூடாகக் கேட்டபோது, சேது குற்ற உணர்வு நிரம்பியவனாய்ப் பானுவின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியாதவனாய்த் தலையைக் குனிந்தான்.

''சத்தியமா நான் எந்தத் தப்பான நோக்கத்தோடேயும் வரல்லே பானு, என்னை நம்பு. வேணியை அவசரமாப் பாத்துக் கொஞ்சம் பேசவேண்டியிருந்தது. வீடு ஜப்தியாகி அவள் உங்க வீட்டுக்கு வந்துட்டபிறகு என்னால் அவளைப் பார்க்கக்கூட முடியல்லே. தயவு செய்து நான் சொல்றதை நம்பு.''

''ஓ! நான் நம்பறதும் நம்பாததும்தான் உனக்குப் பெரிய காரியமாயிடுத்து இல்லியா?'' என்ற பானு சேதுவின் அருகில் வந்து நின்ற

வளாய், ''நீ விளையாட்டாவோ, வினையாவோ எறிஞ்ச நெருப்பு இப்போ வீட்டையே எரிச்சிண்டிருக்குன்னு உனக்குத் தெரியுமோ?'' என்று கேட்டாள்.

'ஆங்' என்று ஆச்சரியத்தோடு பார்த்தான் சேது. ''என்ன பானு, நீ என்ன சொல்லறே?''

பானுவுக்குக் கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது. ''ஒண்ணும் தெரியாது இல்லே. வேணி கல்யாணம் ஆகாமே ஒரு குழந்தைக்குத் தாயாகிண்டிருக்கான்னு உனக்குத் தெரியுமா? இதுக்குக் காரணம் யாரு? நீ அவளுக்கு என்ன பதில் சொல்லப்போறே?''

இதைக் கேட்ட சேது திக்பிரமை பிடித்தவனாய் நின்றான். ''என்னை நம்பு பானு: வேணியிடம் சொல்லு. அவள் ஜீவியத்தைக் கறைப்படுத்தி அழிச்சுடற நோக்கம் எனக்குக் கொஞ்சமும் இல்லே. ஏதோ அறியாமையிலே தவறுதலா நடந்திண்டேன். நிச்சயமா அவளை ஏத்துண்டு நான் வாழ்வு கொடுப்பேன். மனச்சாட்சியின் நோவு நேக்குச் சகிக்கலே'' என்று கூறிய சேதுவின் கண் கலங்கிக் குரல் தழுதழுத்தது.

பானுவின் மனம் பாரம் இறங்கி விட்டாற்போல் லேசாகிவிட்டிருக்கிறது.

''சேது, நீ நல்லவனாட்டம் தெரியறது. ஓர் அபலையின் வாழ்க்கையைச் சிதைச்சிட்டு எவனும் நல்லா வாழ்ந்திட முடியாது. நின்று கொல்லுகிற தெய்வம் கூலி கொடுக்காம விடாது. நீ முறைப்படி வேணியை ஏத்திண்டு ஒரு ஜீவியத்தைக் காப்பாத்து'' என்று பானு உருக்கத்தோடு பேசியது, சேதுவின் நெஞ்சில் முள்ளாய் உறுத்துகிறது.

'இந்தப் பானு இந்த வயசிலே எவ்வளவு உன்னதமா நிக்கறா!'

''சத்தியமா வேணியை நான் கைவிடமாட்டேன் பானு: அதனாலே எனக்கு என்ன துன்பம் வந்தாலும் சரிதான். வேணி ஏனோ என் பேரிலே அவநம்பிக்கை கொண்டிருக்கா. அவகிட்டே சொல்லு, பானு'' என்ற சேது மதிலை ஒட்டி நின்று அதில் ஏறமுயன்றபோது பானு தடுத்தாள்.


''சேது, நீ வரும்போது முறை தவறி வந்திட்டே. இனிமே அது வேண்டாம். வாசவழியாலே போ'' என்றவள், பாசி பிடித்துக் கிடந்த கொல்லைப்புறத்துக் கதவை இழுத்துத் திறந்தாள்.

''போ, இப்படிப் போ! இனி வரும்போது நேரே வாசல் வழியா முறைப்படியாவே வா.''

கதவைத் தாண்டிச் சாலையில் இறங்கிய சேது மனக்குமுறலோடு ஒரு நிமிஷம் பானுவைத் திரும்பிப் பார்த்துவிட்டு நடந்தான்.

தெருமுனையில் அவன் நிழலாகித் திரும்புகிற வரையிலும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள் பானு. நிலவின் தண்ணொளி இரவைப் பகலாக்கிவிட்டிருந்தது.

கதவைத் தாழிடத் திரும்பிய பானு தன் தோள்மேல் இரும்பாய்க் கனத்த கரம் பொத்தென்று விழுவதை அறிந்து திடுக்கிட்டவளாய்த் திரும்பிப் பார்த்தாள். சூட்கேஸும் கையுமாகப் பார்த்திபன் அருகே நிற்பதைக் கண்டதும் பரவசமடைந்தவளாய், முகம் நாணக் குதூகலத்தில் பேச வார்த்தைகள் வராமல், அவன் முகத்தை ஏக்கமாய்ப்



பார்க்கிறாள். அவனில் கண்ட முக வேறுபாட்டையும் கடுமையையும் கண்டு ஸ்தம்பிக்கிறாள்.

''என்ன பானு, இப்படிக் கையும் களவுமாப் பிடிச்சுட்டானேன்னு பயந்துக்கறயா?'' என்று வெடிகுண்டைப் போல ஒரு கல்லைப் பார்த்திபன் தூக்கி எறிந்ததும், பானுவின் மனம் வெடித்துத் தூளாய்ச் சிதறுகிறது.

''நீங்க நீங்க...என்ன சொல்லறேள்?''

''கைப்புண்ணுக்குக் கண்ணாடியா வேணும் பானு? உங்க சரஸ சல்லாபத்தை ரொம்ப நாழியாப் பாத்து ரசிச்சிண்டுதான் நிக்கறேன். காதலனைப் பின் வாசல் வழியா அனுப்பிச்சிட்டுக் கலங்கிப் போய் நிக்கற சோகம் நேக்கே தாங்கல்லே போ! ரெயில்லேந்து எறங்கினதும் இந்த வழியா வரணும்னு தோணிச்சோ, பிழைச்சேன். ஆமா, எத்தனை காலமா இந்த நாடகம் ஆடிண்டிருக்கே?''

ஜுவாலைகளை அள்ளிப் போட்டாற்போல், பார்த்திபன் வார்த்தைகளைத் தாங்க மாட்டாமல் துடித்த பானு, ''நீங்க என்ன சொல்றேள்?'' என்றவளாய் வேரற்ற மரம்போல் அவன் காலடியில் துவண்டு விழுந்து விட்டாள்.

பார்த்திபன் மூர்க்கங் கொண்டு நின்றான். ''போதுண்டி, உன் நடிப்பெல்லாம். உன்னையே நெனைச்சு நம்பி இத்தனை காலம் வாழ்ந்திண்டிருந்தேனே நான்; நேக்கு நல்ல சன்மானம் தந்துட்டே. துரோகி, இனி ஜீவிச்சிருக்கிற காலத்திலே உன் முகத்திலே முழிக்கறதில்லே'' என்றவன், ''நிதானிங்கோ கொஞ்சம். உங்க பானுவை நம்புங்கோ! கேட்டுட்டு நீங்க என்ன அக்கினிப் பரீட்சை நடத்தறேளோ அதுக்கு நான் தயாரா இருக்கேன்'' என்று தன் காலைப் பற்றிய பானு

சோர்ந்து தள்ளாடி, கால்கள் நடுங்கிக் கீழே விழுந்துவிடுவதுபோல் நின்ற மகாதேவ ஐயரைப் பரிவோடு தாங்கிய சுந்தரையர், ''பிராப்தம் அவ்வளவுதான். மனசைத் தேற்றிக் கொள்ளவேணும். நீர் பெரிய பண்டிதர். இந்தச் சங்கல்ப லோகத்தைப் பத்தி உமக்குத் தெரியாததில்லே'' என்று தேற்றுகிறவராய்க் கூறினர்.

நெருப்புக்கு மேலாக மூட்டமிட்டுக் கொண்டு எழும்புகிற புகைத்திரள் மண்ணின் நிலையை வானவர்களிடம் முறையிடுவது போல் விண்வெளியில் சென்று படர்கிறது. அதில் நிறைவுறாத ஒரு சோகக் கதை, உயிர் மூச்சை முட்டும் தாகமெல்லாம், ஒரு கன்னிப் பெண்ணின் வாழாத துடிப்புக்கள் எல்லாம், அவள் இதயத்தின் பொற்கனவுகள் கூடுடைந்த சிதறல்களை எல்லாம், இப்போது ஒரு மேகவடிவில் சாபமாய்ப் பறந்து, கண்ணெட்டும் தொலைவிலுள்ள வயல்வெளியிலெல்லாம் சுற்றித் தழுவி நிற்பதுபோலிருக்கிறது.

'இனி அந்த மேகம் சூல்கொண்டு வயலில் உதிர்க்கும் மழை என்னவாயிருக்கும்? இனி அந்தப் பூமியில் விளைகிற விளைச்சல் என்னவாயிருக்கும்?'

காக்கைகள் கூட்டம் கூட்டமாய்க் கரைந்து கொண்டு கூடடையச் செல்கின்றன. தேரோட்டம் காண்பதற்கோ என்னவோ? பொழுதுக்கு முன்னமே வானில் உயர்ந்துவிட்ட பௌர்ணமி நிலா.

பானு என்ற பெயருக்குரிய அவள், ஒரு சேதனம், அசேதனமாகி, இருப்பு இல்லாத நிலைக்கு உருகி அழிந்ததும் - நெருப்பு தன் ஆவேசம் தணிந்து படுத்ததும் வேதனை நிறைந்தவர்களாய் நின்றுகொண்டிருந்த அந்த அந்தணர்கள் வீடு திரும்பப் புறப்பட்டார்கள்.

அப்பொழுது 'தட தட'வென்று பாதையே அதிரும்படி ஓடி வருகிறுர்கள் பார்த்தியும் சேதுவும்! பானுவின் சிதையிலிருந்து தெறிக்கிற சாம்பற்துளி நெருங்கிவரும் பார்த்திபனின் மேனியில் ஆசீர்வதிக்க விழும் திருநீறுய்ப் பொட்டிடுகிறது.

'என்னை நிருபிச்சிட்டேன் பார்த்தேளா? இனியாவது என்னை ஏத்துக்கறேளா?'

''பானூ!'' கண்டம் நொறுங்க அலறினன் பார்த்தி. ரகசியம் தூங்கிக் கிடக்கிற மலை முகட்டில் அந்தக் குரல் மோதி எதிரொலிக்கிறது.

மகாதேவ ஐயரின் கரத்தைப் பற்றி யிழுத்துத் தன் முகத்தில் 'பளீர் பளீர்' என்று அறைந்துகொண்டு அழுத பார்த்தி, ''மாமா, பானுவை நான்தான் கொன்னுட்டேன்; நான்தான் அழிச்சுட்டேன். பானு என்னை மன்னிப்பயோ? மன்னிப்பயோ?'' என்று கதறியபோது, ஒரு ரகசியம் விடுதலையாகிப் பறப்பதைக் கண்டதும், கூடியிருந்தவர்கள் எல்லாம் பார்த்திபனின் முகத்தைப் பார்த்தார்கள்.

இந்த விளைவுகளுக்கெல்லாம் தானே காரணம் என்ற குற்ற உறுத்தலில் கையைப் பிசைந்துகொண்டு நின்றுன் சேது.

அந்தச் சூழலை மாற்றி விடும்படியாக ராமாநுஜ ஐயர் முன்வந்து, ''சரி, நாழியாறது. ஒவ்வொத்தரா வியாகூலப்பட்டுண்டே இருந்தா இது தீரக்கூடியதா? ரணங்களைத் தாங்கிண்டுதானே ஜீவிச்சிருக்க வேண்டியிருக்கிறது! வீட்டுக்குப் போகலாம்'' என்றுர்.

சோகநாசினியின் கிளையாற்றில் குளித்து முழுக்குப் போட்டு, ஈரத்துணிகளைப் பிழிந்து கொண்டு அவர்கள் கரை ஏறும்போது நிலா வீச்சில் உலகமே கண்ணாடியாய்த் தெரிகிறது.

கனத்த நெஞ்சோடு நிச்சப்தமாகி, தமக்குத் தாமே பேசிக்கொண்டவர்களாய் வழி நடந்த அவர்கள், அக்கிரகாரத்துக்கும் காட்டு வழியாய் அடுத்த கிராமத்துக்கும் பிரிகிற இரட்டைப் பாதையின் முச்சந்திக்கு வந்ததும், மிகவும் தெளிந்த குரலில், ''ராமாநுஜர் ஒரு காரியம்'' என்று மகாதேவ ஐயர் சொன்னதும், எல்லாருமே மகாதேவ ஐயரின் முகத்தைப் பார்த்தார்கள்.

''என்ன மகாதேவ ஐயர்? சொல்லும்?''

''நான் சொல்றது நோக்குப் புரியறதோ என்னவோ? யுகாந்திரமா என்னை அழைச்சிண்டிருக்கற குரல் இப்போ அமுதமா கேக்கறது; 'வாடா மகனே'ன்னு கூப்பிடறது. இனி நான் ஆத்துக்கு வந்துதான் என்ன பண்ணப்போறேன்? ஒண்ணு செய்யுங்கோ: அந்த ராதுவையும், அவள் பொண்ணுங்களையும் என் ஆத்திலேயே சாசுவதமா இருக்கச் சொல்லுங்கோ'' என்ற மகாதேவ ஐயர், தம் பேச்சைக்கேட்டு முகம் வேறுபட்டவர்களாய்; அவர்கள் தம்மைத் திருப்ப முயற்சி செய்வது கண்டு வைராக்கியமாய், ''நான் போறேன்'' என்றவர், அக்கிரகாரத்துக்கு எதிராகப் போகிற பாதையில் திரும்பியும் பார்க்காமல் விடுவிடென்று நடக்கத் தொடங்கினர்.

அந்த எதிர்பாரா நிகழ்ச்சியால் வாயடைத்து ஊமையாய் நின்றுபோன கூட்டத்தினர் விழிப்புக்கு வந்து உணர்வு பெற்றவர்களாய், ''நில்லும். நாங்க சொல்றதைக் கொஞ்சம் கேளும்'' என்று தடுக்க முனையு முன் மகாதேவ ஐயர் அந்தக் காட்டுப் பாதையில் வெகு தூரத்தைத் தாண்டி விட்டிருக்கிறுர்.

வெண்மையான மேகத்திரை ஊர்ந்து செல்வதைப் பார்த்தபோது, மிதக்கிற நிலா ஈசன் முடியைப் பார்த்து யாத்திரைப் படுவதுபோல் பிரமை தருகிறது. மனத்தைக் கரைப்பதுபோல் அக்கூக் குருவியொன்று சோகமயமாய்க் குரல் கொடுத்துச் செடிகளுக்கிடையே சிறகடிக்கிறது.

கிளைபிரியும் பாதையின் நடுவில் நிற்கும் கூட்டம், செயலோய்ந்து போனதுவாய், - மகாதேவ ஐயர் நெடுந்தூரம் கடந்து நிச்சப்தத்தில் மறைவதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே நிற்கிறது. ✳



சத்தியாக்கிரகச் சாமியார்

ஆ. ராஜேந்திரன்

பூஜையில் மனம் லயிக்க முடியாதபடி சாமியாரின் செவிகளில் அந்த ஓசை விழுந்தது: 'டொக்! டொக்! டொக்!'

சந்தேகம் இல்லை; மரம் வெட்டப்படும் ஒலிதான். கூரிய கோடரி கொண்டு பச்சை மரத்தை யாரரா கருணை இன்றித் தாக்குகிறார்கள். சாமியாருக்கு அந்தச் சத்தம் நாராசமாய் இருந்தது. அமைதி நிரம்பிய அந்தச் சிற்றூரில் எப்போதாவது கல்யாணம் அல்லது உற்சவம் என்றால் சினிமாப் பாட்டு ஒலிபெருக்கியில் அலறும். 'குவாரி'யில் கல்லுடைப்பதற்காக வெடி மருந்து வைத்துப் பாறையைத் தகர்ப்பார்கள். மற்றப்படி கடல் மட்டத்திலிருந்து ஆறாயிரம் அடி உயரத்தில் மலைமீது அமைந்த அந்த ஊரில் பூரண அமைதிதான். சாமியார் யாரிடமாவது பேசும் போதுகூட ஊரில் அமைதியைக் கெடுக்க விரும்பாதவர் போல மெதுவாகத்தான் பேசுவார்.

இதற்கெல்லாம் விலக்காகச் சில சமயம் இந்த 'டொக், டொக்' ஒலி கிளம்பும். தொடர்ந்து நற நற வென்ற பேரோசையுடன் மரம் முறிந்து சாய்கிற சத்தம். சாமியாருக்குத் தம் நெஞ்சை யாரோ முறுக்கிப் பிழிவது போலிருக்கும்.

அவர் எப்படியோ பூஜையைச் சிரமப்பட்டு முடித்துக் கொண்டு வெளியே வந்து பார்த்தார். தொலை தூரத்தில் ஓர் உருவம் பசுமையான ஒரு யூகலிப்டஸ் மரத்தின் அடிவாரத்தில் கோடரியால் ஈவிரக்கமின்றித் தாக்கிக் கொண்டே இருந்தது. அது அந்தோணியாகத்தான் இருக்கும். அவனுக்கு நல்ல வலுவான தோள்கள், உறுதியான கரங்கள். பத்துப் பதினைந்து அடி சுற்றளவுள்ள பெரிய மரமானாலும் சளைக்க மாட்டான். ரம்பத்தைக்கூட நாடாமல் கோடரி கொண்டே தாக்குவான். மரத்தின் கிளைகள் பலவற்றில் கயிறுகளைக் கட்டி அது எந்தப் பக்கம் சாய வேண்டுமோ அந்தப் பக்கமாக இழுத்துப் பிடித்துக்கொண்டு ஐம்பது பேர் எட்ட நின்றார்கள். சாமியார் மரம் வெட்டும் இடத்தை நோக்கிப் போனார்.

''அந்தோணி!''

அவன் திரும்பிப் பார்த்தான். கோடரியைக் கீழே போட்டுவிட்டு, வணக்கம் கூறிக் கைகூப்பியபடி நின்றான்.

''அந்தோணி, உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்! மரங்களை வெட்டுவது மகாபாவம். அவற்றுக்கும் மனிதர்களைப் போலவே உயிர் உண்டு.''

''எனக்குத் தெரியாதுங்களா? அதனால் தானே சர்க்காரிலேகூட மரம் வெட்டத் தடை விதிச்சிருக்காங்க?''

குபீரென்று தாக்கப்பட்டவளாய்க் குலுங்கிப் போகிறாள் பானு. எதிர்த்த வீட்டிலே நோய் கொண்டு முடங்கிக் கிடக்கும் கோபாலையர் ஜுரத்தில், ''முடியல்லே, முடியல்லே. நேக்குத் தாங்க முடியறதில்லே. பகவானே, பகவானே'' என்று கோரமாய்ச் சத்தமிட்டுக்கொண்டிருக்கிறார். உதரரோகம் முற்றிவிட்டிருக்கிறது. நாலைந்து நாட்களாகத் தூக்கமே இல்லாமல் அவர் போடும் சத்தம் வீடுகளைக் கலக்குவது போல் இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருக்கிறது. இதைக் கேட்டுக் கேட்டு அலுத்துக் கண்ணை மூடும்போதும் கோபாலையர் 'ஹூம் ஹூம்' என்று முனகித் தவிப்பது போல் மயக்கம்.

''அக்கா, பானு அக்கா'' என்று கூப்பிட்டுக் கொண்டு வெங்கு ஐயரின் பேரன் மணி படியேறி வருகிறான்.

''என்னடா மணி?''

அண்டி வந்து நின்ற குழந்தையின் தலையைக் கோதிவிட்ட பானு பரிவோடு அவனைப் பார்த்தாள்.

''சாப்பிட்டாயா?''

''ஊஹூம்'' என்ற முனகலோடு உதட்டைப் பிதுக்கினான் மணி.

''அம்மா, நேக்கு இப்போல்லாம் சரியா சோறு போடறதே இல்லேக்கா.''

''சரிடா மணி. முகத்தைக் கோணாதே. சமத்தோல்லியோ, அக்கா சோறு போடறேன். சாப்படறயா?''

''சரி'' என்று மணி தலையசைத்ததும் பானு அவனை அடுக்களைக்குக் கூட்டிப் போனாள். கிணற்றங்கறையில் 'ஓ ஓ'வென்று வேணி வாந்தி பண்ணுகிறாள். நல்ல வேளை! யாரும் கவனிக்கவில்லை. அந்தச் சத்தம் கேட்கும்போதெல்லாம் அந்த ரகசியம் எப்பொழுது வெடித்துச் சிதறுமோ என்று தடுமாற்றமாயிருக்கிறது.

''மணி சாப்பிட்டுட்டு அக்காவுக்காக உபகாரம் பண்ணறயா?''

'ஓ' என்று தாராளமாய்த் தலையாட்டுகிறான் மணி. ''என்னக்கா?''

''மாமா ஆத்திலே போய் அத்திம்பேர் கல்கத்தாவிலேந்து வந்துட்டாளோன்னு பாத்துட்டு வரயா?''

சாப்பிட்டு முடித்தவுடன், வாயைக்கூடச் சரியாகத் துடைக்காமல் டிரவுசரை இழுத்து விட்டுக்கொண்டு, ''இதோ ஒரு நொடியிலே வந்துடறேன் பானு அக்கா'' என்றவாறே மணி ஓடுகிறான்.

''டேய் மணி, மாமாவோ அத்திம்பேரோ கேட்டா, பானு அக்கா சொல்லிவிட்டான்னு சொல்லாதே.''

''இல்லே'' என்ற மணி, ''பானு அக்கா சொல்லிவிடலேன்னே சொல்லிடறேன்'' என்றவாறே ஓடினான். பானு அவன் பேச்சைக் கேட்டு அடக்கமாட்டாதவளாய்க் 'கலீர்' என்று சிரித்தாள்.

'மணி பத்துக்கும் மேலாயிருக்குமே. சரியான நேரத்துக்கு ரெயில் வந்திருந்தால் அவர் இதற்குமுன் வீட்டுக்கு வந்திருக்க வேண்டுமே'

பானுவின் வதனம் பூவாய் மலர்கிறது.

'ஒவ்வோர் ஆண்டும் தேரோட்டம் நடந்தபோது, எத்தனையோ பெண்களுக்கு இந்த அக்கிரகாரத்திலே வாழ்க்கை ரதம் புறப்பட்டிருக்கு. இந்தத் தேரோட்டத்திலே..'

பானுவுக்கு முகூர்த்தம்.

'அவரை ஒரு நோக்கு இந்த நேரத்திலே பாக்க முடிஞ்சதுன்னா..?' நெடுமூச்செறிந்தாள் பானு. தனிமையில் அமர்ந்து, நினைவின் சுகலயிப்பில் மென்மையாய்த் தோய வேண்டுமென்று ஆசை பரபரக்கிறது. பின்புறக் கிணற்றங்கரையில் சதுரமாய்க் கிடந்த கல்லில் வந்து உட்கார்ந்தாள் பானு. மெல்ல வீசுகிற காற்றும், மிதந்து வந்த நிலாவும் மனத்தை அள்ளுகின்றன. தரையைச் சுற்றி விரித்திருந்த மணலில் விரவிப் பருமனான கற்களை எடுத்துக் கிணற்றுக்குள் வீசுகிறாள். 'டொப், டொப்' என்று கிணற்றில் கேட்கிற சத்தம், கேட்க ஒருவிதச் சுகம்.

மதிலின் பின்புறம் ரோட்டின் கரையில் ஏதோ சலனம். பானுவின் நினைவைக் கலைக்கிறது. தலையை உயர்த்தி அச்சத்தோடு பார்த்தாள் பானு. மதிலில் ஏறி யாரோ 'பொத்'தென்று உள்ளே குதிப்பது தெரிந்ததும், பானுவின் உடல் 'சிலீர்' என்று பயத்தால் வேர்த்துவிடுகிறது. விருட்டென்று எழுந்து பலாமரத்தின் பின்னிழலில் மறைந்துகொண்ட பானு இலையிடுக்கின் வழியாகப் பார்த்தாள்..

வருகிறவன் சேது! நிலாவெளிச்சத்தில் அவனை நன்றாக அடையாளம் தெரிகிறது. பானுவுக்கு ஆங்காரமாய் வருகிறது. 'இவனுக்கு என்ன துணிச்சல் இருந்தா இப்படிச் சுவரேறிக் குதிப்பான்?'

பானு உட்கார்ந்திருந்த கல்லின் அருகில் வந்த சேது அங்கே யாரையும் காணாமல் திடுக்கிட்டுச் சுற்றும்முற்றும் பார்த்தான்.

''யாரங்கே?'' என்ற சத்தம் கேட்டு நிமிர்ந்த சேது, பலாமரத்தின் பின்னிலிருந்து வெளியே வந்த பானுவைக் கண்டதும் வாயடைத்து நின்றான். அவள் 'வேணி' என்று தவறாகக் கருதி அவசரப்பட்டு விட்டோமே என்று தவித்தவனாய்க் கையைப் பிசைந்தவன், ''மன்னிக்கணும். நான் தவறுதலாய்..'' என்று குழறியவாறே, திரும்பவும் மதிலை நோக்கி நடந்தபோது, ''சேது, கொஞ்சம் நிக்கறயா?'' என்ற பானுவின் கண்டிப்பான குரல் வந்து தடுத்தது. அசைவற்றவனாய் நின்றான்.

''நீ ஏன் இங்கே வந்தே? ஏன் இப்போ ஓடறேன்னு நேக்கு நன்னாத் தெரியும். உன்னைப் பாத்துப் பேசணும்னு நானும் நெனைச்சிண்டேதான் இருந்தேன். இப்போ ரொம்ப அவசரம் ஒண்ணுமில்லியே, ஓடிப் போறதுக்கு?'' என்று பானு சூடாகக் கேட்டபோது, சேது குற்ற உணர்வு நிரம்பியவனாய்ப் பானுவின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியாதவனாய்த் தலையைக் குனிந்தான்.

''சத்தியமா நான் எந்தத் தப்பான நோக்கத்தோடேயும் வரல்லே பானு, என்னை நம்பு. வேணியை அவசரமாப் பாத்துக் கொஞ்சம் பேசவேண்டியிருந்தது. வீடு ஜப்தியாகி அவள் உங்க வீட்டுக்கு வந்துட்டபிறகு என்னால் அவளைப் பார்க்கக்கூட முடியல்லே. தயவு செய்து நான் சொல்றதை நம்பு.''

''ஓ! நான் நம்பறதும் நம்பாததும்தான் உனக்குப் பெரிய காரியமாயிடுத்து இல்லியா?'' என்ற பானு சேதுவின் அருகில் வந்து நின்ற

வளாய், ''நீ விளையாட்டாவோ, வினையாவோ எறிஞ்ச நெருப்பு இப்போ வீட்டையே எரிச்சிண்டிருக்குன்னு உனக்குத் தெரியுமோ?'' என்று கேட்டாள்.

'ஆங்' என்று ஆச்சரியத்தோடு பார்த்தான் சேது. ''என்ன பானு, நீ என்ன சொல்லறே?''

பானுவுக்குக் கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது. ''ஒண்ணும் தெரியாது இல்லே. வேணி கல்யாணம் ஆகாமே ஒரு குழந்தைக்குத் தாயாகிண்டிருக்கான்னு உனக்குத் தெரியுமா? இதுக்குக் காரணம் யாரு? நீ அவளுக்கு என்ன பதில் சொல்லப்போறே?''

இதைக் கேட்ட சேது திக்பிரமை பிடித்தவனாய் நின்றான். ''என்னை நம்பு பானு! வேணியிடம் சொல்லு. அவள் ஜீவியத்தைக் கறைப்படுத்தி அழிச்சுடற நோக்கம் எனக்குக் கொஞ்சமும் இல்லே. ஏதோ அறியாமையிலே தவறுதலா நடந்திண்டேன். நிச்சயமா அவளை ஏத்துண்டு நான் வாழ்வு கொடுப்பேன். மனச்சாட்சியின் நோவு நேக்குச் சகிக்கலே'' என்று கூறிய சேதுவின் கண் கலங்கிக் குரல் தழுதழுத்தது.

பானுவின் மனம் பாரம் இறங்கி விட்டாற்போல் லேசாகிவிட் டிருக்கிறது.

''சேது, நீ நல்லவனுட்டம் தெரியறது. ஓர் அபலையின் வாழ்க்கையைச் சிதைச்சிட்டு எவனும் நல்லா வாழ்ந்திட முடியாது. நின்று கொல்லுகிற தெய்வம் கூலி கொடுக்காம விடாது. நீ முறைப்படி வேணியை ஏத்திண்டு ஒரு ஜீவியத்தைக் காப்பாத்து'' என்று பானு உருக்கத்தோடு பேசியது, சேதுவின் நெஞ்சில் முள்ளாய் உறுத்துகிறது.

'இந்தப் பானு இந்த வயசிலே எவ்வளவு உன்னதமா நிக்கறு!'

''சத்தியமா வேணியை நான் கைவிடமாட்டேன் பானு! அதனாலே எனக்கு என்ன துன்பம் வந்தாலும் சரிதான். வேணி ஏனோ என் பேரிலே அவநம்பிக்கை கொண்டிருக்கா. அவகிட்டே சொல்லு, பானு'' என்ற சேது மதிலை ஒட்டி நின்று அதில் ஏறமுயன்றபோது பானு தடுத்தாள்.

''சேது, நீ வரும்போது முறை தவறி வந்திட்டே. இனிமே அது வேண்டாம். வாசவழியாலே போ'' என்றவள், பாசி பிடித்துக் கிடந்த கொல்லைப்புறத்துக் கதவை இழுத்துத் திறந்தாள்.

''போ, இப்படிப் போ! இனி வரும்போது நேரே வாசல் வழியா முறைப்படியாவே வா.''

கதவைத் தாண்டிச் சாலையில் இறங்கிய சேது மனக்குமுறலோடு ஒரு நிமிஷம் பானுவைத் திரும்பிப் பார்த்துவிட்டு நடந்தான்.

தெருமுனையில் அவன் நிழலாகித் திரும்புகிற வரையிலும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண் டிருந்தாள் பானு. நிலவின் தண்ணொளி இரவைப் பகலாக்கிவிட் டிருந்தது.

கதவைத் தாழிடத் திரும்பிய பானு தன் தோள்மேல் இரும்பாய்க் கனத்த கரம் பொத்தென்று விழுவதை அறிந்து திடுக்கிட்டவளாய்த் திரும்பிப் பார்த்தாள். சூட்கேஸும் கையுமாகப் பார்த்திபன் அருகே நிற்பதைக் கண்டதும் பரவசமடைந்தவளாய், முகம் நாணக் குதூகலத்தில் பேச வார்த்தைகள் வராமல், அவன் முகத்தை ஏக்கமாய்ப் பார்க்கிறாள். அவனில் கண்ட முக வேறுபாட்டையும் கடுமையையும் கண்டு ஸ்தம்பிக்கிறாள்.



''என்ன பானு, இப்படிக் கையும் களவுமாப் பிடிச்சுட்டானேன்னு பயந்துக்கறயா?'' என்று வெடிகுண்டைப் போல ஒரு கல்லைப் பார்த்திபன் தூக்கி எறிந்ததும், பானுவின் மனம் வெடித்துத் தூளாய்ச் சிதறுகிறது.

''நீங்க நீங்க...என்ன சொல்லறேள்?''

''கைப்புண்ணுக்குக் கண்ணாடியா வேணும் பானு? உங்க சரஸ சல்லாபத்தை ரொம்ப நாழியாப் பாத்து ரசிச்சிண்டுதான் நிக்கறேன். காதலனைப் பின் வாசல் வழியா அனுப்பிச்சிட்டுக் கலங்கிப் போய் நிக்கற சோகம் நேக்கே தாங்கல்லே போ! ரெயில்லேந்து எறங்கினதும் இந்த வழியா வரணும்னு தோணிச்சோ, பிழைச்சேன். ஆமா, எத்தனை காலமா இந்த நாடகம் ஆடிண்டிருக்கே?''

ஜுவாலைகளை அள்ளிப் போட்டாற்போல், பார்த்திபன் வார்த்தைகளைத் தாங்க மாட்டாமல் துடித்த பானு, ''நீங்க என்ன சொல்றேள்?'' என்றவளாய் வேரற்ற மரம்போல் அவன் காலடியில் துவண்டு விழுந்து விட்டாள்.

பார்த்திபன் மூர்க்கங் கொண்டு நின்றான். ''போதுண்டி, உன் நடிப்பெல்லாம். உன்னையே நெனச்சு நம்பி இத்தனை காலம் வாழ்ந்திண்டிருந்தேனே நான்; நேக்கு நல்ல சன்மானம் தந்துட்டே. துரோகி, இனி ஜீவிச்சிருக்கிற காலத்திலே உன் முகத்திலே முழிக்கறதில்லே'' என்றவன், ''நிதானிங்கோ கொஞ்சம். உங்க பானுவை நம்புங்கோ! கேட்டுட்டு நீங்க என்ன அக்கினிப் பரீட்சை நடத்தறேளோ அதுக்கு நான் தயாரா இருக்கேன்'' என்று தன் காலைப் பற்றிய பானு

வின் கரங்களைப் பலவந்தமாய் விடுவித்துக் கொண்டான்.

"ஓ" என்ற ஒரே சப்தத்தோடு அவளை உதறி விட்டுச் சூட்கேஸும் கையுமாக விடுவிடென்று நடந்து தெருமுனையில் சென்று திரும்பி மறைந்தான்.

பானுவுக்கென்று அவன் ஆசையாக வாங்கி வந்த மலர்ப்பொதி சாலைப் புழுதியில் சிதறிக் கிடந்தது.

பானுவின் சர்வநாடியும் ஒடுங்கிவிட்டது. தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. 'மயக்கமா இல்லை, விடுதலையா?' என்கிற அளவில் சூழ்கிற சோர்வு பெருகிக் கவிகிறது. 'பொத்' தென்று உணர்வற்றவளாகத் தரையில் விழுந்தாள் பானு.

8

கிருஷ்ணன் கோவில் வளாகத்திலே அந்த அக்கிரகாரத்திலுள்ள பிராமணர்கள் எல்லாரும் வந்து கூடியிருக்கிறார்கள். சுற்றுமதிலுக்கு வெளியே வெறிச்சோடிக் கிடக்கிறது. தேர் கனகம்பீரமாக நிற்கிறது. ஆனால் வருஷந்தோறும் உள்ள ஜோடனை இல்லை. முன்புறம் தேர் இழுப்பதற்காகப் பிணையப்படும் வடக்கயிறும் இன்னும் கட்டப்படவில்லை. அலங்காரம் ஏதுமின்றித் தேர் நிற்கிறது. அதைக் காண்கையில் பெருமூச்சுவிட்டவர்களாக, அவர்கள் நின்றுகொண் டிருந்தார்கள்.

பூஜை நடக்கையிலே தேர் அசைந்து சந்நிதிக்கு முன்வந்து விடவேண்டும். மாலையில் ஓட்டத்துக்குப் போவது வரையிலும் தேர் அங்கேதான் நிற்கும்.

காலைப் பூசை முடிந்து 'கண கண' என்று கைமணியைக் குலுக்கிக்கொண்டு கர்ப்பூரம் சுடர்விட்டு எரியும் தட்டை ஏந்திப் பகவானை ஒளியில் முழுக்காட்டிவிட்டுச் கர்ப்பக்கிரகத்திலிருந்து வெளியே வந்த குருக்கள், தரிசிப்பதற்காக முன்னணியில் நின்ற மகாதேவ ஐயரின் அருகில் வந்ததும், "ஒவ்வொத்தரா கண்ணிலே தொட்டு ஒத்திக்குங்க. இன்னிக்கு விசேஷமான நாளாச்சே? பகவானின் விசேஷ கிருபா கடாட்சம் இருக்கு" என்றார்.

கர்ப்பூர தீபத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டபோது மகாதேவ ஐயரின் உள்ளத்தில் ரத்தம் வழிகிறது. 'பகவானே, கையாலாகாத ஏழை மனுஷாளே நீ சோதிக்கணும்னு புறப்பட்டயானு நாங்க என்ன செய்யறது? எங்களாலான பிரம்ம பிரயத்தனம் எல்லாம் செய்துட்டோம். உன் விசேஷ நாள் கொண்டாடப்படாமே, உன் தேர் ஓட வழியில்லாம நிக்கறது. நீ அதிசயம் காட்டு' என்று பிரார்த்தித்தார்.

"ஹரே ஹரே!" என்ற முழக்கத்தோடு தீப ஒளியைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு சந்நிதானத்துக்கு முன்னுக வந்து குழுமியவர்கள், "கிருஷ்ணு கிருஷ்ணு" என்று ஒரே குரலில் தங்கள் நொம்பலத்தை ஆரவாரித்துக் காட்டினார்கள்.

பகவான் திருமுகத்தில் மட்டும் மர்மமான கேலி நிறைந்த அதே புன்னகை! அவன் கைக் குழலின் துளைகள் வழியே பரமனின் ஆத்துமாவிலிருந்து ஜனித்து, இதழின் வழியாகப் பிரபஞ்சத்தையே சுற்றிக் கிறக்கி ஆட்டுவிக்க வழியும் தேவகானம் நாதித்துப் பெருகுவது போல் மனத்தைச் சுண்டி யிழுக்கிறது.

ஒரு நாதமயம்!

'அப்படியே அந்தக் கிருஷ்ண பரமாத்மா கருவறையிலிருந்து தேரில் ஏறியமர்ந்து வாயுவேகத்திலே தேரைப் பறக்கவிட்டுக் கீதையை உபதேசிச்சிண்டு கலியுகத்தின் மோட்சத்துக்காக யாத்திரை புறப்படமாட்டாரா?' என்று ஏக்கமாய் வருகிறது மகாதேவ ஐயருக்கு.

கோவில் சுற்றுப்பிராகாரத்துக்கு வெளியே மைதானத்தில் இன்றைக்குத் தேரோட்ட விசேஷம் என்று தெரிந்துகொண்டு வந்த வளையல், ரிப்பன், கடலை வியாபாரிகள் கோவில் ஆரவாரமற்றுக் காட்சியளிப்பதை எட்டிப் பார்த்துவிட்டு, "அடடா, இன்னிக்கு விசேஷம் இல்லை போலிருக்கே! தேரே அலங்கரிக்கல்லே. எப்படிச் சாயங்காலம் தேரோடும்? யானையும் காணும். பஞ்சவாத்தியச் சத்தத்தையே காணுமே?" என்றவர்களாய் விரித்த கடைகளை மடக்கிக் கட்டிக்கொண்டு வந்த வழியிலே போகிறார்கள்.

இந்த விசேஷகால பூஜை எவ்வளவு சிறப்பாக இருக்கும்! புனிதமாயிருக்கும்! இதற்குள் பஞ்சவாத்தியங்களின் இன்பமான நாதம் திருவிழாவின் பரபரப்பை ஊருக்குள் ஏற்படுத்தியிருக்குமே. குருவாயூர்ப் பக்கமிருந்து மிகப் பெரிய யானையைக் கொண்டுவந்து கட்டியிருப்பார்கள். தேர்வடம் இழுக்கவே வேண்டாம்; பேருக்குக் கையில் பிடித்துக்கொண்டாலே போதும். யானையின் துணையால் தேர் 'கட கட' வென்று ஓடிவிடும்.

'ஹரே ஹரே' என்ற பஜனைக் குரலோடு ஜாலரைத் தட்டிக்கொண்டு பக்தர்கள் தேருக்குப் பின்னுல் செல்வார்கள். கூட்டம் சொல்லி முடியாது. எள் விழுந்தால் எண்ணெயாகி விடும் என்ற அளவில் இருக்குமே!

பூஜை மணியைக் கல கலவென்று ஆட்டுகிறார் குருக்கள். பூஜை நைவேத்தியங்கள் முடிந்தாயிற்று. இப்போது தேர் இருப்பிடத்திலிருந்து அசைந்து சந்திக்கு முன்வந்து நிற்கவேண்டும்!

நிலைமை தெரிந்திருந்தாலும் சம்பிரதாயத்துக்காக, "தேர் புறப்படறது. பகவான் தேர் புறப்படறது" என்று சொல்லிக்கொண்டே பூஜைமணியை உச்சஸ்தாயியில் முழக்கினார் குருக்கள்!

சுற்றிலும் ஓர் இரகசியப் பின்னல் அவிழ்ந்து கோவில் விழாக்கோலம் கொண்டுவிட்ட தோற்றம் மகாதேவ ஐயருக்கு. தம்மை மறந்து அருள்நிலைக்கு ஆட்பட்ட அவர் ஒரு யானைப் பலத்தைத் தமக்குள் கற்பனை செய்துகொண்டவராய், "பகவான் தேர் புறப்படறது, புறப்படறது. ஹரே ஹரே!" என்று முழக்கமிட்டவராய்த் தேரை நோக்கிச் சன்னதம் கொண்டு ஓடினார்.

கிலி பிடித்தாற்போல் கூட்டம் மகாதேவ ஐயரை ஏறிட்டுப் பார்த்தது. குடுமி அவிழ ஓடிச்சென்ற அவர் புஜத்தை உயர்த்திக்கொண்டு, "கிருஷ்ணு! அடே மாயக் கிருஷ்ணு! உன் தேர்ச் சக்கரம் உருளல்லேன்னு தர்மம் இத்தக் காலத்திலே நின்னுட்டதா அர்த்தம். லோகம் அழியறதுக்காயிடுச்சுன்னு அர்த்தம். நிக்க வேண்டாம். உன் தேர் ஓடட்டும்! உன் தேர் ஓடட்டும்!" என்று முழங்கியவர், பருமனுக இரண்டாள் உயரத்துக்கும் மேல் நின்ற தேரின் பின்சக்கரத்தில் தோளைக் கொடுத்து, "ஹரே ஹரே!" என்று உந்தித் தள்ளினார்.

அந்தச் சக்கரம் இலேசாக அசைந்து நின்றது. மார்பிலும் நெற்றியிலும் வேர்வை ஆறாய்ப் பெருகி ஒழுக, ''உன் தேர் ஓடட்டும். நிற்கவேண்டாம் கிருஷ்ணா! உன் சம்ரட்சணை லோகத்துக்கு இருக்கட்டும். சம்பவாமி யுகே யுகேன்னயே கிருஷ்ணா! இதோ தர்மம் அழியறது. நீ இப்போ வா; கலி முத்திலோகத்திலே அதர்மம் தாண்டவமாடறது. நீ இப்போ வா. தர்மச் சக்கரத்தைச் சுழற்றிண்டு வா! இன்ப கானத்தைக் குழலிலே ஊதிண்டு வா!'' என்ற மகாதேவ ஐயர் புஜத்தின் நரம்புகள் புடைத்துத் தெறிக்கச் சக்கரத்தைப் பலமாய்த் தள்ளினார்.

அவர் செய்கைகளை வெறித்துப் பார்த்த கூட்டத்தினர் ரௌத்திரம் கொண்ட நரசிம்ஹ வடிவைத் தரிசித்துவிட்டதுபோல் அந்த ஆவேசத்துக்கு ஆட்பட்டவர்களாய் மெய்ம்மறந்து, ''கண்ணா கண்ணா!'' என்று உச்சத்தில் முழங்கினார்கள்.

அப்பொழுது கைபலம் நழுவ வழுக்கி 'டொப்'பென்று சக்கரத்தின் மீது தலைமோத விழுந்தார் மகாதேவ ஐயர். நெற்றி உடைந்து அவரது ரத்தம் தேர்ச்சக்கரத்தில் அபிஷேகிப்பதுபோல் பீரிட்டு அடித்தது. தரையிலே உருண்டு விழுந்த மகாதேவ ஐயர் தரைமண்ணைக் கையில் பிசைந்தவராய், தாயிடம் அடம் பிடிக்கும் குழந்தையைப் போல் உருண்டு, ''நீ வரவேண்டும்; இப்போ நீ வரவேண்டும்'' என்று கூப்பிட்டார்.

ராமாநுஜ ஐயர் மெதுவாக நெருங்கி மகாதேவ ஐயரைப் புழுதியிலிருந்து தூக்கி எடுத்துத் தம் தோளில் சேர்த்துச் சாய்த்துக் கொண்டு, ''ஆறும் ஆறும்'' என்று அமர்த்தினார்.

அப்போது, ''ஐய்யோ ஐய்யய்யோ'' என்ற அமங்கலக் குரல் எழுப்பிக்கொண்டு கோவில் வளாகத்தில் ஓடிவந்த மணியின்மீது எல்லார் கவனமும் பதிந்தது. நழுவிய தன் டிரவுசரை இழுத்துவிட்டுக்கொண்ட மணி, மகாதேவ ஐயரைப் பிடித்து உலுக்கி, ''ஓடி வாங்க! சீக்கிரம் ஓடிவாங்கோ'' என்று அலறினான்.

சுயஉணர்வுக்கு மீண்டு திரும்பிப் பார்த்த மகாதேவ ஐயர், ''என்னடா விஷயம்?'' என்று திகிலடைந்தவராய்க் கேட்டார்.

மணி திக்கித் திணறியவாறே நடந்த விஷயத்தைச் சொன்னான்.

''நீங்க எல்லாரும் இங்கே வந்துட்டேள். அங்கே பானு அக்கா ரத்தம் ரத்தமா வாந்தி பண்ணினாள்; விஷம் குடிச்சிட்டாளாம்! வேணி, இதோ எல்லாரும் துடிச்சிட்டா. ராதுமாமி அக்காவை மடியிலே எடுத்து வெச்சுண்டு, 'என்னடி என்னடியம்மா?'ன்னு கேட்டா. அவ்வளவுதான். பானு அக்கா செத்துட்டா!''

கோடைகால இடி தடாலென்று தலையில் விழுந்துவிட்டதுபோல் வெலவெலத்துப்போன மகாதேவ ஐயர், முகத்தில் வழிந்த ரத்தத்தைத் துடைத்துக்கொண்டு மிரள மிரள விழித்தார்.

திடீரென்று இந்தச் செய்தியைக் கேட்டதும் கூட்டமே பிரக்ஞையற்று விட்டதுபோல் நிலைத்தது. அப்போது விஷயம் அறிந்து ஓடி வந்த குருக்கள் சொன்னார். ''துர்ச்சம்பவம் நடந்துட்டா அன்னிக்குப் பகவான் தேர் ஓடப் படாது.''



9

அந்திப்போது நிறைவுறாத தன் ஏக்கங்களோடு அஸ்தமனத்துக்குத் தன்னைக் கையளித்து விடுகிறது. அந்தத் துயரம் கண்டு தாங்காத இரவு தன் கரும் போர்வையைப் பிரபஞ்சத்தின் சிரசில் வீசிப் போர்த்துகிறது.

தலையைச் சுற்றி முக்காடிட்டுக்கொண்டு சிதையில் நெருப்பை மூட்டுவித்த மகாதேவ ஐயர் அந்தக் காட்சியைக் காணச் சக்தியற்றவராய்க் கண்ணை இறுக மூடிக்கொண்டார்.

எண்ணெயை நக்கிப் படர்ந்துவிட்ட நெருப்பின் நாவுகள் அந்தச் சிதையில் பற்றிக்கொண்டு கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது.

''தேரோட்டம் கழிஞ்சா உனக்கு நாள் வரும்னு நம்பிண்டிருந்தயே பேதை. பகவான் தேரும் ஓடல்லே; உன் வாழ்க்கையுந்தான்! இதோ, உன்னைப் பலியாக வார்த்துட்டேன். அக்கினியில் ஐக்கியப்பட்டு எரியறயே பானு.''

தகிக்கிற விறகுகள் அனலுக்கு வசமாகி, செந்நிறத்தில் கட்டி தட்டி விழுகிறது.

'தூய்மையான வெண்மைப் புறா தகதகவென்று ஒளிர்விடும் வெள்ளை இறக்கைகளைச் சிலுப்பிக்கொண்டு அந்த நெருப்பின் நடுவிலிருந்து எழும்பி, அனல் மேனியாகிப் பறந்து விண்ணின் ஆழத்தில் புதைந்து மறைவதுபோல்' மகாதேவ ஐயரின் மூடிய கண்களுக்குள் ஒரு மங்கலான தரிசனம் தெரிகிறது.

சோர்ந்து தள்ளாடி, கால்கள் நடுங்கிக் கீழே விழுந்துவிடுவதுபோல் நின்ற மகாதேவ ஐயரைப் பரிவோடு தாங்கிய சுந்தரையர், ''பிராப்தம் அவ்வளவுதான். மனசைத் தேற்றிக் கொள்ளவேணும். நீர் பெரிய பண்டிதர். இந்தச் சங்கல்ப லோகத்தைப் பத்தி உமக்குத் தெரியாததில்லே'' என்று தேற்றுகிறவராய்க் கூறினர்.

நெருப்புக்கு மேலாக மூட்டமிட்டுக் கொண்டு எழும்புகிற புகைத்திரள் மண்ணின் நிலையை வானவர்களிடம் முறையிடுவது போல் விண்வெளியில் சென்று படர்கிறது. அதில் நிறைவுறாத ஒரு சோகக் கதை, உயிர் மூச்சை முட்டும் தாகமெல்லாம், ஒரு கன்னிப் பெண்ணின் வாழாத துடிப்புக்கள் எல்லாம், அவள் இதயத்தின் பொற்கனவுகள் கூடுடைந்த சிதறல்களை எல்லாம், இப்போது ஒரு மேகவடிவில் சாபமாய்ப் பறந்து, கண்ணெட்டும் தொலைவிலுள்ள வயல்வெளியிலெல்லாம் சுற்றித் தழுவி நிற்பதுபோலிருக்கிறது.

'இனி அந்த மேகம் சூல்கொண்டு வயலில் உதிர்க்கும் மழை என்னவாயிருக்கும்? இனி அந்தப் பூமியில் விளைகிற விளைச்சல் என்னவாயிருக்கும்?'

காக்கைகள் கூட்டம் கூட்டமாய்க் கரைந்து கொண்டு கூடடையச் செல்கின்றன. தேரோட்டம் காண்பதற்கோ என்னவோ? பொழுதுக்கு முன்னமே வானில் உயர்ந்துவிட்ட பௌர்ணமி நிலா.

பானு என்ற பெயருக்குறிய அவள், ஒரு சேதனம், அசேதனமாகி, இருப்பு இல்லாத நிலைக்கு உருகி அழிந்ததும் - நெருப்பு தன் ஆவேசம் தணிந்து படுத்ததும் வேதனை நிறைந்தவர்களாய் நின்றுகொண்டிருந்த அந்த அந்தணர்கள் வீடு திரும்பப் புறப்பட்டார்கள்.

அப்பொழுது 'தட தட'வென்று பாதையே அதிரும்படி ஓடி வருகிறார்கள் பார்த்தியும் சேதுவும்! பானுவின் சிதையிலிருந்து தெறிக்கிற சாம்பற்துளி நெருங்கிவரும் பார்த்திபனின் மேனியில் ஆசீர்வதிக்க விழும் திருநீறாய்ப் பொட்டிடுகிறது.

'என்னை நிரூபிச்சிட்டேன் பார்த்தேளா? இனியாவது என்னை ஏத்துக்கறேளா?'

''பானூ!'' கண்டம் நொறுங்க அலறினன் பார்த்தி. ரகசியம் தூங்கிக் கிடக்கிற மலை முகட்டில் அந்தக் குரல் மோதி எதிரொலிக்கிறது.

மகாதேவ ஐயரின் கரத்தைப் பற்றியிழுத்துத் தன் முகத்தில் 'பளீர் பளீர்' என்று அறைந்துகொண்டு அழுத பார்த்தி, ''மாமா, பானுவை நான்தான் கொன்னுட்டேன்; நான்தான் அழிச்சுட்டேன். பானு என்னை மன்னிப்பயோ? மன்னிப்பயோ?'' என்று கதறியபோது, ஒரு ரகசியம் விடுதலையாகிப் பறப்பதைக் கண்டதும், கூடியிருந்தவர்கள் எல்லாம் பார்த்திபனின் முகத்தைப் பார்த்தார்கள்.

இந்த விளைவுகளுக்கெல்லாம் தானே காரணம் என்ற குற்ற உறுத்தலில் கையைப் பிசைந்துகொண்டு நின்றான் சேது.

அந்தச் சூழலை மாற்றி விடும்படியாக ராமாநுஜ ஐயர் முன்வந்து, ''சரி, நாழியாறது. ஒவ்வொத்தரா வியாகூலப்பட்டுண்டே இருந்தா இது தீரக்கூடியதா? ரணங்களைத் தாங்கிண்டுதானே ஜீவிச்சிருக்க வேண்டியிருக்கிறது! வீட்டுக்குப் போகலாம்'' என்றார்.

சோகநாசினியின் கிளையாற்றில் குளித்து முழுக்குப் போட்டு, ஈரத்துணிகளைப் பிழிந்து கொண்டு அவர்கள் கரை ஏறும்போது நிலா வீச்சில் உலகமே கண்ணாடியாய்த் தெரிகிறது.

கனத்த நெஞ்சோடு நிச்சப்தமாகி, தமக்குத் தாமே பேசிக்கொண்டவர்களாய் வழி நடந்த அவர்கள், அக்கிரகாரத்துக்கும் காட்டு வழியாய் அடுத்த கிராமத்துக்கும் பிரிகிற இரட்டைப் பாதையின் முச்சந்திக்கு வந்ததும், மிகவும் தெளிந்த குரலில், ''ராமாநுஜர் ஒரு காரியம்'' என்று மகாதேவ ஐயர் சொன்னதும், எல்லாருமே மகாதேவ ஐயரின் முகத்தைப் பார்த்தார்கள்.

''என்ன மகாதேவ ஐயர்? சொல்லும்?''

''நான் சொல்றது நோக்குப் புரியறதோ என்னவோ? யுகாந்திரமா என்னை அழைச்சிண்டிருக்கற குரல் இப்போ அமுதமா கேக்கறது; 'வாடா மகனே'ன்னு கூப்பிடறது. இனி நான் ஆத்துக்கு வந்துதான் என்ன பண்ணப்போறேன்? ஒண்ணு செய்யுங்கோ. அந்த ராதுவையும், அவள் பொண்ணுங்களையும் என் ஆத்திலேயே சாசுவதமா இருக்கச் சொல்லுங்கோ'' என்ற மகாதேவ ஐயர், தம் பேச்சைக் கேட்டு முகம் வேறுபட்டவர்களாய், அவர்கள் தம்மைத் திருப்ப முயற்சி செய்வது கண்டு வைராக்கியமாய், ''நான் போறேன்'' என்றவர், அக்கிரகாரத்துக்கு எதிராகப் போகிற பாதையில் திரும்பியும் பார்க்காமல் விடுவிடென்று நடக்கத் தொடங்கினார்.

அந்த எதிர்பாரா நிகழ்ச்சியால் வாயடைத்து ஊமையாய் நின்றுபோன கூட்டத்தினர் விழிப்புக்கு வந்து உணர்வு பெற்றவர்களாய், ''நில்லும். நாங்க சொல்றதைக் கொஞ்சம் கேளும்'' என்று தடுக்க முனையு முன் மகாதேவ ஐயர் அந்தக் காட்டுப் பாதையில் வெகு தூரத்தைத் தாண்டி விட்டிருக்கிறார்.

வெண்மையான மேகத்திரை ஊர்ந்து செல்வதைப் பார்த்தபோது, மிதக்கிற நிலா ஈசன் முடியைப் பார்த்து யாத்திரைப் படுவதுபோல் பிரமை தருகிறது. மனத்தைக் கரைப்பதுபோல் அக்கூக் குருவியொன்று சோகமயமாய்க் குரல் கொடுத்துச் செடிகளுக்கிடையே சிறகடிக்கிறது.

கிளைபிரியும் பாதையின் நடுவில் நிற்கும் கூட்டம், செயலோய்ந்து போனதுவாய், — மகாதேவ ஐயர் நெடுந்தூரம் கடந்து நிச்சப்தத்தில் மறைவதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே நிற்கிறது. *



பூஜையில் மனம் லயிக்க முடியாதபடி சாமியாரின் செவிகளில் அந்த ஓசை விழுந்தது: 'டொக்! டொக்! டொக்!'

சந்தேகம் இல்லை; மரம் வெட்டப்படும் ஒலிதான். கூரிய கோடரி கொண்டு பச்சை மரத்தை யாரோ கருணை இன்றித் தாக்குகிறார்கள். சாமியாருக்கு அந்தச் சத்தம் நாராசமாய் இருந்தது. அமைதி நிரம்பிய அந்தச் சிற்றூரில் எப்போதாவது கல்யாணம் அல்லது உற்சவம் என்றால் சினிமாப் பாட்டு ஒலிபெருக்கியில் அலறும். 'குவாரி'யில் கல்லுடைப்பதற்காக வெடி மருந்து வைத்துப் பாறையைத் தகர்ப்பார்கள். மற்றப்படி கடல் மட்டத்திலிருந்து ஆறாயிரம் அடி உயரத்தில் மலைமீது அமைந்த அந்த ஊரில் பூரண அமைதிதான். சாமியார் யாரிடமாவது பேசும் போதுகூட ஊரில் அமைதியைக் கெடுக்க விரும்பாதவர் போல மெதுவாகத்தான் பேசுவார்.

இதற்கெல்லாம் விலக்காகச் சில சமயம் இந்த 'டொக், டொக்' ஒலி கிளம்பும். தொடர்ந்து நற நற வென்ற பேரோசையுடன் மரம் முறிந்து சாய்கிற சத்தம். சாமியாருக்குத் தம் நெஞ்சை யாரோ முறுக்கிப் பிழிவது போலிருக்கும்.

அவர் எப்படியோ பூஜையைச் சிரமப்பட்டு முடித்துக் கொண்டு வெளியே வந்து பார்த்தார். தொலை தூரத்தில் ஓர் உருவம் பசுமையான ஒரு யூகலிப்டஸ் மரத்தின் அடிவாரத்தில் கோடரியால் ஈவிரக்கமின்றித் தாக்கிக் கொண்டே இருந்தது. அது அந்தோணியாகத்தான் இருக்கும். அவனுக்கு நல்ல வலுவான தோள்கள், உறுதியான கரங்கள். பத்துப் பதினைந்து அடி சுற்றளவுள்ள பெரிய மரமானாலும் சளைக்க மாட்டான். ரம்பத்தைக்கூட நாடாமல் கோடரி கொண்டே தாக்குவான். மரத்தின் கிளைகள் பலவற்றில் கயிறுகளைக் கட்டி அது எந்தப் பக்கம் சாய வேண்டுமோ அந்தப் பக்கமாக இழுத்துப் பிடித்துக்கொண்டு ஐம்பது பேர் எட்ட நின்றார்கள். சாமியார் மரம் வெட்டும் இடத்தை நோக்கிப் போனார்.

''அந்தோணி!''

அவன் திரும்பிப் பார்த்தான். கோடரியைக் கீழே போட்டுவிட்டு, வணக்கம் கூறிக் கைகூப்பியபடி நின்றான்.

''அந்தோணி, உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்! மரங்களை வெட்டுவது மகாபாவம். அவற்றுக்கும் மனிதர்களைப் போலவே உயிர் உண்டு.''

''எனக்குத் தெரியாதுங்களா? அதனால் தானே சர்க்காரிலேகூட மரம் வெட்டத் தடை விதிச்சிருக்காங்க?''

"அவர்கள் ஜீவகாருண்யத்தினால் தடை விதிக்கவில்லை. மரங்கள் எல்லாம் வெட்டுப் பட்டால் பருவமழைகூடப் பொய்க்கும். அந்த ஆபத்தைத் தவிர்க்க விரும்புகிறார்கள். வனவளம் பெருக்க அப்படிச் சட்டம் போட்டிருக்கிறார்கள்."

"அந்தச் சர்க்காரே எனக்கு இந்த மரத்தை வெட்ட அநுமதி கொடுத்துட்டாங்களே, அதனால்தான் வெட்டுகிறேன்."

"ஓ! அது எனக்குத் தெரியாது" என்றார் சாமியார். "அப்படியானால் நீ செய்வது குற்றம் இல்லை. என்ன காரணம் கூறி நீ அநுமதி பெற்றாய்?"

"இந்த எலெக்ட்ரிக் ஒயர் போகுதுங்களே, தலைக்குமேலே, அதிலே மரக் கிளைகள் இடிக்குது. 'ஷார்ட்' ஆவுது, 'பியூஸ்' போவுது. அந்தாண்டை உள்ள வீடுகளில் அடிக்கடி கரண்ட் சப்ளை இல்லாமல் தவிப்பா இருக்குது. அதனால் இதை வெட்டும்படி கேட்டுக்கிட்டாங்க. நான் உத்தரவு வாங்கி வந்து வேலையை முடிக்கிறேன்."

"அந்தோணி! மின்சாரக் கம்பிகளில் மரக் கிளைகள் படுகின்றன என்றால் அந்தக் கிளைகளை மட்டும் கழித்தால் போதுமே! மரம் முழுவதையுமா வெட்ட வேண்டும்? உனக்குக் காந்தித் தாத்தா பற்றிய கதை ஒன்று சொல்லியிருக்கேனா? உண்மைக் கதை!"

"இல்லீங்க."

"அவருடன் சாபர்மதி ஆசிரமத்தில் இருந்த நண்பர் தினம் காலையில் வேப்பிலைக் குச்சியால் பல் துலக்குவார். ஒரு கிளையைக் கழித்துப் பிறகு அதிலிருந்து ஒரு குச்சியை ஒடித்து எடுத்துப் பல் துலக்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். காந்தித் தாத்தா அவரிடம், 'நண்பரே! இத்தனை நாள் என்னுடன் பழகியும் உமக்கு அஹிம்சைத் தத்துவமே புரியவில்லையே! பல் துலக்க ஒரு குச்சியை மட்டும் மரத்திலிருந்து ஒடித்துக் கொண்டால் போதாதா? ஒரு கிளையையே கழித்து அதிலிருந்து ஒரு குச்சியை ஒடிக்க வேண்டுமா?' என்று கேட்டார்; புரிகிறதா?"

"புரியுது சாமி" என்றான் அந்தோணி, பணிவாக. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை என்பது சாமியாருக்குப் புரிந்தது. அவனுக்குப் புரிவது அவனுடைய வயிற்றுப் பசிதான். இந்த மரத்தை வெட்டினால் கூலி எட்டு ரூபாய் கிடைக்கும். நாலுநாள் வயிறு நிரம்பும். மரத்தின் சொந்தக்காரர் விறகுத் தொட்டிக்கோ தச்சுப்பட்டறைக்கோ மரத்தை விற்றாரானால் நாற்பதோ ஐம்பதோ அவருக்குக் கிடைக்கும். சாமியார் பெருமூச்சு விட்டபடி திரும்பித் தம் சிறு குடிலை நோக்கி நடந்தார். ஆஸ்திரேலியாவிலிருந்து ஆயிரக்கணக்கான யூகலிப்டஸ் மர நாற்றுக்களைப் பாதிரிமார் தருவித்தார்கள். அதைவிடக் குறைந்த எண்ணிக்கையில் வேறு பலவித மரங்களின் நாற்றுக்களையும் வரவழைத்தார்கள். எல்லாவற்றையும் நட்டு, நீர் ஊற்றி வளர்த்தார்கள். நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது இது. இன்று அந்தச் சுற்றுவட்டாரமெல்லாம் நிழல் பரப்பும் நெடிதுயர்ந்த மரங்கள் காட்சி தருகின்றன.

ஆனால் சமீபகாலமாக இந்தச் சொர்க்க லோகத்தை அசிங்கப்படுத்தும் முயற்சிகள் நடக்கின்றன. பத்து மரம் நட்டால் ஒரு மரம் பிழைக்கலாம். அந்த ஒரு மரமும் நன்கு செழித்துத் தன் முழு ஆகிருதி வளரக் குறைந்தது ஐம்பது வருஷங்களாகும். ஆனால் அதை வெட்டுவது எவ்வளவு சுலபமாக ஒரு சில நிமிஷங்களில் முடிந்துவிடுகிறது!

'நறநற'வென்று மரம் முறியும் ஓசை, 'சரசர'வென்று கிளைகள் உராய்ந்து தாழ்ந்துவரும் சத்தம். கடைசியாக 'மடே'லென்று மரம் பூமியைத் தாக்கும் ஒலி. சாமியார் திரும்பிப் பார்த்தார். அவர் கண்களில் நீர் துளித்தது.

தியானத்திலிருந்த சாமியார் மெல்லக் கண் விழித்தார். ஏற்கெனவே வெளேரென்றிருந்த நெற்றியில் இன்னும் கொஞ்சம் விபூதி பூசிக்கொண்டார். தம்முன் தலை குனிந்து உட்கார்ந்திருந்த அந்தோணியைப் பார்த்துப் புன்னகை புரிந்தார். அவன் முகம் மெல்ல உயர்ந்தது. "சாமி! பாவ மன்னிப்புக் கேட்கிறேங்க" என்றான்.

"நான் பாதிரியார் இல்லேப்பா, சாமியார்."

"மாதா கோயிலுக்குப் போயிட்டுத்தான் வரேங்க. உங்களிடமும் பேசினாத்தான் மனசுக்கு நிம்மதியா இருக்குங்க" என்று கூறியவன், தான் மரம் வெட்டியபோது அது பாவம் என்று தெரிந்திருந்தும் காசுக்கு ஆசைப்பட்டு வெட்டியதாகச் சொன்னான். "மரம் வெட்டுவதுதான் என் பரம்பரைத் தொழில், சாமி. அதுதான் எனக்கு நல்லாத் தெரியும். அரசாங்கம் மரம் வெட்டத் தடை விதிச்சப்புறம் என் தொழிலே சரியா நடக்கிறதில்லே. நான் என்ன பண்ணட்டும்?"

"ஏசு உனக்கு வழி காட்டுவார்; நானும் என் முருகனை உனக்காகப் பிரார்த்திக்கிறேன்" என்றார் சாமியார்.

"பச்சை மரத்தை வெட்டிச் சாய்க்கிற இந்தப் பாவத் தொழிலை விட்டுத் தொலைச்சுத் தலை முழுகணும்" என்றான் அந்தோணி.

பத்து நாட்களுக்குப் பிறகு பரக்கப் பரக்க ஓடிவந்த அந்தோணியைச் சாமியார் வியப்புடன் பார்த்தார்.

"சாமி! சாமி! மோசம் போயிடப் போறோமுங்க; அக்கிரமம் நடக்கப் போகுதுங்க" என்றான்.

"அந்தோணி! என்ன விஷயம்? பதற்றப் படாமல் சொல்லு?"

"சாமி! ஒரு மரத்தை வெட்டறதையே பாவம்னு சொல்லுவீங்களே; இப்போ நூத்துக் கணக்கான மரங்களை வெட்டப் போறாங்களே!"

"என்னது? யார் வெட்டப் போறாங்க?"

"அதுதானுங்களே ரொம்ப அநியாயம்! எந்தச் சர்க்காரிலே மரத்தை வெட்டக் கூடாதுன்னு உத்தரவு போட்டாங்களோ, அந்தச் சர்க்காரே வெட்டப்போறாங்க!"

"எங்கே, எதற்கு?"

"ஏதோ போட்டோக் கம்பெனியாம்; தொழிற்சாலை ஆரம்பிக்கிறாங்களாம்; தோட்டம் போடப் போறாங்களாம் எனக்கு விவரமாத் தெரியலீங்க."

"சரி, நான் விசாரிக்கிறேன்" என்று கூறி அவனை அனுப்பினார் சாமியார். "முருகா! இந்தச் சோதனையைச் சமாளிக்க அறிவாற்றலையும் நெஞ்சுறுதியையும் எனக்குக் கொடு" என்று வேண்டிக் கொண்டு புறப்பட்டார். அந்தோணி குறிப்பிட்ட இடத்துக்குப் போய் அரசாங்க உத்தரவுகளுடன் வந்திருந்த உதவி இஞ்ஜினியரைச் சந்தித்துப் பேசினார்.

எக்ஸ்ரே போட்டோ ஃபிலிம் உற்பத்திச் சாலை தொடங்கப் போகிறார்களாம். அவ்வூரின் சீதோஷ்ண நிலை அதற்கு உகந்ததாம். இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் சுமார் இருபது ஏக்கர் நிலப்பரப்பில் மரங்களை வெட்டப் போகிறார்களாம்!

"இதென்ன அநியாயம்?" என்றார் சாமியார்.

"எது அநியாயம்? தேசத்தின் தொழில் வளம் பெருக்குவதா அநியாயம்?"

"தொழிலகம் அமையுங்கள், வரவேற்கிறேன். அதற்குத் தேவையான கட்டிடத்தை எழுப்ப வேண்டிய இடத்தில் மட்டும் சில மரங்களை வெட்டிக் கொள்ளுங்கள். சுற்று வட்டாரத்தில் எல்லாம் மலைகளை மொட்டையடிப்பானேன்?"

"தொழிலகம் அமைத்தால் போதுமா? அதில் வேலை செய்யும் அதிகாரிகளுக்குப் பங்களாக்கள், தொழிலாளர்களுக்குக் குடியிருப்புக்கள், ஒவ்வொரு வீட்டின் முன்புமம் பூந்தோட்டம், தொழிலகத்துக்கு முன்னால் பெரிய பூங்கா, சாலைகள், பாதைகள், பள்ளி, பொழுதுபோக்குக் கூடங்கள், காய்கறித் தோட்டங்கள்...."

"இதோ பாருங்கள்! உங்கள் நோக்கம் ஃபிலிம் உற்பத்திதானே தவிர, காய்கறித் தோட்டம் போடுவது அல்ல; பூங்கா அமைப்பதும் அல்ல. குடியிருப்புக்களைப் பரவலாக அன்றிப் பல அடுக்கு மாடிக் கட்டிடமாக அமையுங்கள். குறைந்தபட்ச அளவில் மரங்களை வெட்டுங்கள்" என்றார் சாமியார்.

"பெரியவரே, இந்தத் திட்டத்தைப் பத்து இன்ஜினியர்கள் தலா இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு பத்து மாதம் வேலை செய்து தயாரித்திருக்கிறார்கள். நீங்கள் பத்து நிமிஷத்தில் முட்டுக்கட்டை போட்டுவிடப் பார்க்கிறீர்கள்" என்று கூறிச் சிரித்தார் உதவி இன்ஜினியர்.

"என்று முதல் மரம் வெட்டப்போகிறீர்கள்?"

"புல்டோசர்களும் மின்சாரத்தில் இயங்கும் ராட்சத ரம்பங்களும் இன்னும் இரண்டு நாட்களில் வந்து சேர்ந்துவிடும். உடனே வேலை தொடங்க வேண்டியதுதான்."

குறிப்பிட்ட தினத்தன்று அதிகாலையிலேயே சாமியார் வந்து நின்று கொண்டார். அவர் அருகே ஊர் மக்கள் சுமார் ஐம்பது அறுபது பேர்கள் இருந்தனர். புல்டோசர்கள் கடகடவென்று சங்கிலிச் சக்கரம் சுழல நகர்ந்தன. ராட்சத ரம்பங்கள் மின் இணைப்புக் கிடைத்ததும் 'விர்ர்ர்' என்று பேரொலி எழுப்பி இயங்கின. உதவி இன்ஜினியர் வந்து பார்த்தார். கூட்டத்தைக் கண்டார்; எச்சரித்தார்: "இங்கே என்ன வேடிக்கை பார்க்க இருக்கிறது? மரங்கள் விழும்போது அடிபட்டால் நாங்கள் பொறுப்பல்ல. எல்லாரும் ஒதுங்கிப் போங்கள்!"

"மரங்கள் விழுந்தால்தானே?" என்றார் சாமியார்.

"அப்படியென்றால்?"

சாமியார் தலையசைத்துச் சமிக்ஞை செய்தார். அவ்வளவுதான். திரண்டிருந்த ஊர் மக்கள் அனைவரும் ஆளுக்கு ஒரு மரத்தைப் போய் அணைத்துப் பிடித்துக்கொண்டு நின்றனர். மின்சார ரம்பங்கள், மரத்தை அறுப்பதற்கு முன் அவர்கள் உடலை அறுத்தாக வேண்டும்!

"என்ன இது?" என்றார் இன்ஜினியர் பதறிப் போய்.

"சத்தியாக்கிரகம்! மரங்கள் வாயில்லா ஜீவன்கள். அவற்றைக் காக்க நாங்கள் போராடத் தீர்மானித்திருக்கிறோம். இந்த ஊரின் எழில் வளமோ வனவளமோ குறைவதை நாங்கள் விரும்பவில்லை. இந்த ஊரில் நடக்க வேண்டியவை பற்றி முடிவெடுக்கும் முதலுரிமை இந்த ஊர்வாசிகளுக்கே உண்டு."



உதவி இஞ்ஜினியர் வெலவெலத்துப் போனார். வேலைகளை நிறுத்திவிட்டு உயர் அதிகாரிக்குத் தந்தி அனுப்பினார். பிரதம இஞ்ஜினியர், கலெக்டர் முதலானோர் வந்து பார்த்தார்கள். சாமியாரோ அவர் தலைமையில் திரண்டிருந்த மக்களோ இம்மியளவும் விட்டுக் கொடுக்கவில்லை. இரவு பகல் முறை வைத்துக்கொண்டு விழிப்புடன் இருந்தார்கள். மந்திரிக்கு விஷயம் எட்டியது. சட்டசபையில் கேள்விகள் எழுந்தன. சாமியாரையும் அவ்வூர் மக்களையும் வாழ்த்திப் பல அங்கத்தினர்கள் பேசினார்கள். கடைசியில் குறைந்த பட்ச அளவில் மரங்களை வெட்டித் தொழிலகம் அமைக்க மாற்றுத்திட்டம் தீட்டுமாறு உத்தரவு பிறந்தது.

சாமியார் முருகனுக்கு நன்றி செலுத்தினார். ஊர்மக்கள் மகிழ்ந்து வெற்றி விழா எடுத்துக் கொண்டாடினர்: எல்லாரையும்விட அந்தோணிக்கு அதிக ஆனந்தம். "புல்டோசருக்கும் மின்சார ரம்பத்துக்கும் என் கோடரி ஈடுகொடுக்க முடியுமா? ஒருமணி நேரத்திலே ஒரு மரத்தை வெட்டுவது பாவம்னா, ஒரு மணி நேரத்தில் ஒன்பது மரங்களை வெட்டுவது ஒன்பது மடங்கு பாவமில்லையா? நல்ல வேளை! ரொம்பப் பாபம் பண்ணாம தப்பிச்சாங்க. அவங்களைக் காப்பாத்திய புண்ணியத்தைக் கட்டிக்கிட்டீங்க!"

சாமியார் சிரித்தார்: "தர்க்கரீதியா உன் வாதம் சரிதான். ஆனால், 'நான் குறைந்த பாவந்தானே செய்கிறேன்?' என்று ஒருவன் மகிழக்கூடாது. பாவமே செய்யாமல் இருக்க முயலவேண்டும்."

"சரிங்க" என்றான் அந்தோணி.

ஒரு வாரம் கழித்துச் சாமியார் ஒரு நாள் கண்விழித்தபோது மறுபடி அந்த நாராசமான ஒலி கேட்டது. "டொக்! டொக்! டொக்! டொக்!"

'ஆகா! அந்தோணி மறுபடி தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துவிட்டான்' என்று எண்ணினார் சாமியார். 'முருகா!' என்று தாம் வணங்கும் தெய்வத்தை அழைத்து அவர் கேட்டார்: "உன்னைப் பூஜிப்பதையும் ஊருக்கு நல்லுபதேசம் செய்வதையுமே தொழிலாகக் கொண்ட எனக்குக்கூடக் கூழோ கஞ்சியோ கிடைக்குமாறு செய்துவிடுகிறாயே! அந்த அந்தோணிக்கு ஒருவழி காட்டக்கூடாதா நீ? பச்சைமரங்களை இப்படி வெட்டிச் சாய்க்கிறானே! இந்த முறை என்ன காரணம் சொல்லி அரசாங்க அநுமதி பெற்றானோ?"

அந்தப் பக்கமாகப் போன சவரிமுத்து, "கும்பிட்றேனுங்க" என்றான்.

"எங்கேப்பா மரம் வெட்டறாங்க?"

"கோகினூர்ப்பங்களா தோட்டத்திலேங்க. குரங்குங்களோடே அட்டகாசம் சகிக்க முடியாமப் போயிடுச்சாம்."

"அதுக்காக?"

"நெருக்கமா வளந்த மரங்களைக் கழிச்சுட்டாக் குரங்குக் கூட்டம் காட்டுக்காப் போயிடுமில்லே?"

"அப்படிச் சொல்லித்தான் அநுமதி வாங்கியிருக்கான அந்தோணி?"

"ஆமாங்க."

ஏதோ ஒரு காரணம், அரசிடம் அநுமதி பெற, அவ்வளவுதான். உண்மைக் காரணம் அந்தோணிக்குக் கூலி தேவை, மரங்களின் சொந்தக்காரருக்குக் கணிசமாகப் பணம் கிடைக்கிறதென்ற திருப்தி.

சாமியாருக்குச் சீற்றம் மிகுந்தது. விடுவிடுவென்று நடந்தார். கோஹினூர்ப் பங்களாத் தோட்ட எல்லையை அடைந்தார்.

அந்தோணி ஒரு யூகலிப்டஸ் மரத்தில் உயரே ஏறியிருந்தான். அடிமரத்தை வெட்டுமுன் கிளைகளைக் கழித்துவிடுவதில் முனைந்திருந்தான். மரமெல்லாம் விறகு மண்டிக்கோ தச்சுப்பட்டறைக்கோ போனாலும் இலைகள் அவனுக்குக் கிடைக்கும். எண்ணெய் எடுக்கலாம்; விற்றுக் காசாக்கலாம். இந்த உற்சாகத்துடன் கிளைகளை வெட்டிச் சரித்துக் கொண்டிருந்தான்.

கோபத்துடன் வந்த சாமியார் அந்தச் சீற்றம் தணியாமலேயே இரைந்தார்: "அந்தோணி!"

திடுக்கிட்டான் அந்தோணி. அந்தக் கணத்தில் அவன் பிடி நழுவியது. "ஓ!" என்று பீதியுடன் குரல் எழுப்பிய அவன் கீழே ஐம்பதடி உயரத்திலிருந்து விழுந்தான். மதிலோர மரம் அது. கருங்கல்லால் கட்டிய மதிலைக் கபாலம் தாக்கியது.

"அந்தோணி!" என்று சோகத்துடன் அலறித் துடித்தபடி சாமியார் ஓடினார். அவன் தலையைத் தம் மடியில் எடுத்து வைத்துக் கொண்டார். காவி உடை செங்குருதியில் தோய்ந்தது.

"சாமி! நீங்க எவ்வள்வோ எடுத்துச் சொல்லியும் நான் கேட்கலே. பாவம் செஞ்சேன். பலனை அடைஞ்சுட்டேன். ஆயிரம் மரங்களை வெட்டியவனை ஒரு மரம் பழிவாங்கிடுச்சு."

"இல்லை அந்தோணி! நீ பாவம் பண்ணவே இல்லை. உன் தொழிலை நீ யோக்கியமாச் செய்தாய். அது பாவம் இல்லை. அது இப்பத்தான் எனக்குப் புரியுது. மரம் உன்னைப் பழி வாங்கவும் இல்லை. தப்பெல்லாம் என்பேரில் தான். காவி உடுத்திய சந்நியாசியாக இருந்தும் கோபத்துக்கு இடம் கொடுத்தேன் பார்! என் வசம் இழந்து உன்னை அதட்டப்போய் உன் மரணத்துக்குக் காரணமானேன். பாவம் செய்தவன் நான்தான், அந்தோணி!"

சாமியார் எவ்வளவு புலம்பியும் பலனில்லை. அந்தோணியிடமிருந்து பதிலேதும் கிடைக்கவில்லை. சுற்றுப்புறத்தில் அநுதாபக் குரல்கள் எழுந்தன. ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போக உதவப் பலர் முன்வந்தார்கள். ஆனால் அதற்குத் தேவையில்லாமலேயே போய்விட்டது.

மறுநாள் முதல் அந்த ஊரின் நிசப்த அமைதியைக் கெடுக்க 'டொக் டொக், டொக் டொக்' என்ற நாராச ஒலி கேட்கவில்லை. அதனால் மனம் நிம்மதி அடைவதற்குப் பதில் சாமியாரின் வேதனை தான் அதிகரித்தது.

அரை ஆண்டுக்குப் பிறகு அந்தச் சிற்றூரில் போட்டோ பிலிம் உற்பத்தித் தொழிலகத்துக்கு அடிக்கல் நாட்ட அமைச்சர் வந்தார். குறைந்தபட்ச மரங்கள் மட்டுமே வெட்டித் தொழிலகம் அமைக்க இப்போது திட்டம் தீட்டப்பட்டிருந்தது. இந்தச் சிறந்த முடிவுக்கு அரசும் அமைச்சும் அதிகாரிகளும் வரக் காரணமாயிருந்த சாமியாரை விழாவுக்குப் பிரதம விருந்தினராய் வரவேற்க அமைச்சர் ஆசைப்பட்டார். ஆனால் எவ்வளவு தேடியும் அந்தச் சத்தியாக்கிரகச் சாமியாரைக் காணவே இல்லை.

*

தற்கொலை

அனுராதா ரமணன்



என் முகத்தில் தெரிந்த பூரிப்பை எத்தனை முயன்றும் என்னால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. அலுவலகத்துக்குப் போவதற்காக, அவசரமாக உடையணிந்து கொண்டிருந்த என் கணவர், அடிக்கொரு முறை என்னைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தார். அத்தனையும் கேலி என்பது எனக்கு நன்ருகவே புரிந்தன. நான் பொருட்படுத்தவேயில்லை. பின்னே இருக்காதா? ஒன்றில்லை, இரண்டில்லை, முழுவதாகப் பத்து வருஷங்கள் கழித்து என் ஜயாவை இன்று பார்க்கப் போகிறேன். லஸ் கார்னரில் ஒரு கடையருகே திடீரென்று நேற்று அவளைச் சந்தித்தபோது பிரமித்துத்தான் போய்விட்டேன். அவளும் அப்படியே ஸ்தம்பமாய் நின்ருள். என் கையைப் பிடித்துக் கொண்டு, ''சாரு'' என்ருள். அவள் குரலைக் கேட்ட மாத்திரத்திலேயே எனக்குத் தொண்டையெல்லாம் அடைத்துக்கொண்டு விட்டது. எப்படி, இத்தனை நாட்கள் ஒருவரையொருவர் பார்க்காமலே இருந்தோம்! திடுமெனச் சுய நினைவுக்கு வந்தவள்போல, என் கையை அழுத்தினுள் ஜயா. ''சென்னையில் தான் இருக்கிருயா சாரு?'' என்று கேட்டாள்.

அவள் குரலே மிகவும் மெலிந்து விட்டது போலத் தோன்றியது எனக்கு, பேச நினைத்த அத்தனை வார்த்தைளும் ஒரே சமயத்தில் வெளிவரத் துடித்து, கடைசியில் ஒரு வார்த்தைகூட வெளியே வரவில்லை. 'ஆமாம்' என்று தலையை மட்டும் ஆட்டினேன். ''நாளைக்கு என் வீட்டுக்கு வாயேன்!'' என்பதுபோல் கூறினுள் அவள். தன் விலாசத்தைக் கூறினுள். நான் மனப்பாடம் செய்து கொண்டேன். பக்கத்தில் நின்ற என் மகளைக் கட்டியணைத்து ஒரு முத்தம் கொடுத்தாள். ''கட்டாயம் வந்து விடு சாரு. நான் வாசலிலேயே நின்று காத்திருப்பேன்'' என்று கூறிவிட்டுப் போய் விட்டாள். நான் அந்தப் பிரமையிலேயே நடந்து வீடு வந்து சேர்ந்தேன்.

பழைய நாள் நினைவுகள் ஓர் அரிய பொக்கிஷம். ''இரண்டு பேரும் ஏன் இடித்துக் கொண்டே நடக்கிறீர்கள்? ஏதாவது கோந்து போட்டு ஒட்டிக் கொண்டு விட்டீர்களா?'' என்று ஜயாவின் அம்மா கேலி செய்வார். அந்த நாளில் ஜயா இப்படி ஒல்லியாக இருக்க மாட்டாள். கைகள் உருண்டையாக மெத்தென்று இருக்கும். நிறம் அது என்ன நிறம் என்று எனக்குச் சொல்லவே தெரியவில்லை. பாரிஜாத மலரின் நிறம். உயரமும் பருமனும், நிறுவையில் வைத்து நிறுத்தாற் போல அத்தனை அழகாக இருப்பாள் ஜயா. தூரத்தில் என்னைப் பார்த்து விட்டால் போதும், ''சாரு'' என்று மலர்ந்து போவாள். அவளைவிட அவள் கண்கள் வெகு அழகு. அவளுக்கு முன்னுல் என்னைப் பார்த்து அவள் கண்கள் சிரிக்கும். ஜயாவுக்கு நடக்கத் தெரியாது. கன்றுக்குட்டிபோல் துள்ளிக் கொண்டுதான் வருவாள். கலீர் கலீர் என்று அவள் சிரிக்கும்போது, அப்பப்பா! நிஜமாகவே சொல்கிறேன், நான்மட்டும் ஆணுக இருந்திருந்தால் அவளைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டு, ஓட்டமாய் ஓடிப் போயிருப்பேன்.

தலையிலே பட்டென்று தட்டினுர் என் கணவர். ஆபீஸ் புறப்படத் தயாராகிவிட்டார். ''இரவு வீடு திரும்பி வருவாயா? அல்லது இரண்டு மூன்று தினங்கள் ஆகுமா?'' என்று சிரிப்புடன் இழுத்தார். ''இரவு வரை எப்படித் தாங்கும்? உங்கள் படைகள் இருக்கிருர்களே! பள்ளியிலிருந்து வந்ததும் அவர்களுக்குப் படைப்பதற்கு நான் வந்து சேர்ந்துதானே ஆக வேண்டும்?'' கொஞ்சம் எரிச்சலோடு தான் கூறினேன் நான். பெண்ணுய்ப் பிறந்தவளுக்கு இந்தச் சமயலறையை விட்டால் வேறு கதி? நிம்மதியாக எங்காவது வெளியே போனேம், விருப்பப்பட்டபோது வீடு திரும்பினேம் என்று கிடையாது. ராமேசுவரம் போனுலும் சனீசுவரன் விடாது என்ற கதையாக வீடு, குழந்தைகள் என்று நினைத்துக் கொண்டு திண்டாட வேண்டியிருக்கிறது.

"சரி, வேண்டுமானால் ஒன்று செய்கிறேன். இன்றைக்கு மாலை ஒரு மணி நேரம் பர்மிஷன் வாங்கிக் கொண்டு, மூன்று மணிக்கு நான் வீட்டிற்கு வந்து விடுகிறேன். வரும் போது ஆபீஸ் காண்டீனிலிருந்து கொஞ்சம் டிபனும் வாங்கிவருகிறேன். குழந்தைகளுக்கு டிபன் கொடுத்து நான் பார்த்துக்கொள்கிறேன். நீ அவசரப்படாமல், நிதானமாக வா. எத்தனையோ வருஷங்கள் கழித்து, உன் சிநேகிதியைப் பார்க்கப் போகிறாய்!"

அப்படியே அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு என் நன்றியைத் தெரிவிக்க வேண்டும் போல இருந்தது எனக்கு. என் எண்ண ஓட்டத்தைப் புரிந்துகொண்டவராய், "இது வாசல்! உன் நன்றியைப் பிறகு கேட்டு வாங்கிக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டுக் கிளம்பிப் போனார் அவர். என் கணவரைப் போல ஒரு நல்லவரைப் பார்ப்பது மிகவும் அரிது. தற்பெருமை அடித்துக் கொள்கிறாளோ என்று தோன்றும். இருந்தாலும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஒரு சமயம் சந்தர்ப்பம் என்றால், சட்டென்று சமய சஞ்சீவியாய் நிற்பார்.

நானும் ஒருபிடி சாப்பிட்டுவிட்டு மடமட வென்று வேலைகளை முடித்தேன். பால் பாட்டில்களை வெளியே கொண்டு வைத்தேன். பதினொரு மணிக்குச் குழந்தைகளுக்குச் சாப்பாடு எடுத்துப் போக, வேலைக்காரி வருவாள். அந்தக் கட்டுக் சாதக் கூடையும் கட்டிப் பக்கத்து வீட்டில் கொடுத்துவிட்டு வந்தேன். ஆச்சு; கதவைப் பூட்டிச் சாவியைக் கைப்பையிலேயே போட்டுக் கொண்டு நடையைக் கட்டினேன். வெயில் கடுமையாக இருந்தது. இருந்தும் எனக்கு உறைக்கவேயில்லை. அனற் காற்று விர் விர் என்று சீறியது. எனக்குத் தென்றலாய்க் குளிர்ந்தது. எத்தனை நாட்களாகி விட்டன, இப்படித் தனியே கிளம்பி! பக்கத்தில் அம்மா, அம்மா என்று நச்சரித்துக்கொண்டு, சாமான்கள் நிறைந்த பையைத் தூக்கிக் கொண்டு, கூட்டத்தில் இடித்துப் புடைத்துக் கொண்டு பஸ் ஏற, குழந்தை கதற, புடைவை நழுவ, கணவர் முறைக்க....அப்பாடி! இப்படியெல்லாம் ஒன்றும் இல்லாமல், குறிப்பிட்ட வேலையும் இல்லாமல், காலிப் பஸ்ஸில் ஏறி, ஜன்னல் ஓரத்தில் அமர்ந்து, சிலுசிலுவென்ற காற்றின் உபத்திரவத்தை ரசித்தவாறு, உயிர்ச் சிநேகிதியைக் கண்டு பேசும் இன்பத்தை நினைத்துக் கொண்டு....இப்படிச் சில சமயங்களில், வீடு, வாசல், குழந்தை, கணவன் எல்லாவற்றையும் துறந்து விட்டுக் கிளம்பி விடவேண்டும்!

சிநேகிதிகள் எல்லாருக்கும் இதுபோல அமைந்துவிடுவதில்லை. எங்கள் இருவருடைய பெயர்களையும் தனித்தனியே யாரும் குறிப்பிட்டதாகவே எனக்கு நினைவில்லை. ஜயா சாரு!

இரண்டு பேரும் பேசுவோம், பேசுவோம்; மணிக்கணக்கில், நாட்கணக்கில் பேசுவோம். இத்தனைக்கும் எனக்கும் அவளுக்கும் விருப்பு வெறுப்புகள் முற்றும் முரண்பாடானவை; எனக்குச் சினிமாவில், முதுகு வலிக்க, உட்கார்ந்து பார்க்கப் பிடிக்கும். ஜயாவுக்கு, இழையக் குழைய, விரல் வீங்கும் வரை வீணை வாசிப்பது பிடிக்கும். மூச்சு விடாமல் தமிழ் நாவல்கள் வாசிப்பேன். பொறுமையாக அருமையாகக் கண்ணில் தெரியும் காட்சிகளையெல்லாம் வெள்ளைத்தாளில் உயிர்ப்பித்து விடுவாள் ஜயா. நான் பி. ஏ. முடித்தவுடனேயே, திருமணமாகிவிடவே இவர் என்னை அழைத்துக் கொண்டு வந்து விட்டார். சில வருஷங்கள் இருவரும் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொண்டோம். அவள் எம். ஏ. ஆங்கிலம் சேர்ந்தது தெரியும். எம். ஏ. முடித்துத் தங்கமெடல் வாங்கியதும் தெரியும். பின்பு அவளுக்குத் திருமணமானதும் தெரியும். என் கணவருக்கு ரெயில்வேயில் வேலை. ஓர் இடத்தில் வந்து, சாமான்களைப் பிரித்துக் கொஞ்சம் நிலைபெற்று, எல்லோருக்கும் என் புது விலாசத்தை எழுதுவதற்குள்ளாகவே, எங்களை அடுத்த இடத்துக்கு மாற்றி விடுவார்கள். இதனாலேயே எனக்குக் கடிதம் எழுதும் வழக்கம் விட்டுப் போய்விட்டது.

அடையாறு பஸ் ஸ்டாப் வந்துவிட்டது! இறங்கினேன். நிறையக் கனகாம்பரமும், மலைப்பழமும் வாங்கிக்கொண்டேன். அவளுக்கு வண்ண வண்ணமாகக் கனகாம்பரம் வைத்துக்கொள்வதில் அலாதி ஆசை. "காகிதப்பூ! இதிலே என்ன ஆசை?" என்று அவள் அம்மா திட்டுவாள். ஜயா கவலையே படமாட்டாள். கற்பகாம்பாள் நகருக்குள் நுழைந்து விட்டேன். வரிசையாக வீட்டு எண்களைப் பார்த்துக்கொண்டே வந்தேன். இதோ நாற்பத்து மூன்று! வாசலிலேயே நின்றுகொண்டிருந்த ஜயா ஓட்டமாய் ஓடி வந்து என் கையைப் பிடித்துக்கொண்டாள்.

"வீட்டைக் கண்டுபிடிக்க ரொம்பச் சிரமப் பட்டாயா சாரு?" என்று கேட்டாள் அவள்.

"ஊஹூம்! இல்லவே இல்லை! ஜயா, ஜயா என்று ஜபம் பண்ணிக்கொண்டே வந்தேன்; திடீரென்று நீ பிரத்தியட்சமாகி விட்டாய்!"

"அதே பழைய சாருதான். துளிக்கூட மாறவில்லை நீ!" என்று சிரித்துக் கொண்டே, என்னை உள்ளே அழைத்துப் போனாள் ஜயா.

"உண்மையாகவா? கொஞ்சம்கூட மாறுதல் தெரியவில்லையா? லேசாக இளைத்தாற்போல இல்லை?"

அடக்கமாட்டாமல் குபீரென்று சிரித்தாள் ஜயா. உண்மையில் நான் இந்தப் பத்து வருஷங்களில் எக்கச்சக்கமாகச் சதை போட்டிருந்தேன். பூவை அவளிடம் கொடுத்தேன். அதை வாங்கிக் கொண்டவள் இப்படியும் அப்படியும் அதைத் திருப்பிப் பார்த்தாள். நான் நினைத்தபடி, அத்தனையும் அள்ளித் தன் தலையிலே அவள் திணித்துக் கொள்ளவில்லை. பேசாமல் கொண்டுபோய்ச் சாப்பிடும் மேசையின் மீது வைத்து விட்டு வந்தாள். "சாரு, கனகாம்பரம் என் மாமியாருக்குப் பிடிக்கவே பிடிக்காது. நான் அதை வைத்துக் கொள்வதை அறவே விட்டு விட்டேன்" என்றாள். எனக்கு என்னவோ மாதிரித்தான் இருந்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு பேசினேன். அவள் கணவரைப் பற்றிக் கேட்டேன். குழந்தையைப் பற்றி விசாரித்தேன். பின்பு, "ஏன் ஜயா, உன் உடம்புக்கு என்ன? ஏன் இப்படி இளைத்து விட்டாய்? கண்களெல்லாம் எங்கேயோ உள்ளுக்குப் போய், கழுத்து எலும்பு எல்லாம் இப்படித் துருத்திக் கொண்டு வந்து..ஏண்டி இப்படி? ஏதாவது பெரிதாக உடம்புக்கு வந்ததா என்ன?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லையே சாரு! நான் நன்றாகத்தான் இருக்கிறேன். உடல் உன்னைப்

போல் பெருக்கவில்லை. அவ்வளவுதான். நீ எப்படியடி இப்படிப் பீப்பாயாக உருண்டு விட்டாய்?''

''அது பரம ரகசியம். தினம் என் கணவரிடம் குஸ்திச் சண்டை போடுவேன். அதனால் உடம்பு பயில்வான் மாதிரி ஆகிவிட்டது!'' ஜயா விழுந்து விழுந்து சிரித்தாள்.

சட்டென்று எனக்கு நினைவு வந்தது. நான் கேட்டேன்; ''ஏன் ஜயா, தவறாமல் பெமினா வாங்கிப் பார்க்கிறேன். இத்தனை வருடங்களில் ஒரு முறைகூட உன் கவிதையைப் பார்த்ததாகவே நினைவில்லையே! ஏன்? வேறு ஏதாவது பத்திரிகையிலே எழுத ஆரம்பித்து விட்டாயா என்ன?''

ஜயா சிரித்தாள். ''பத்திரிகைக்காரர்களே எழுதி என் பெயரைப் போட்டுப் பிரசுரிப்பார்களா சாரு? நான் எழுதினால்தானே பத்திரிகையில் வரும்? எழுதுவதற்கெல்லாம் எனக்கு எங்கேயடி நேரம்?''

''எழுதாமலேயே விட்டு விட்டாயா? என்னடி, மத்தியான்ன நேரங்களில் கூடவா உன்னால் எழுத முடிவதில்லை? ஒரேயடியாகக் கதை அளக்கிறாயே! இன்றைக்குச் சரி, இந்த நேரத்தில் நான் இங்கு இருக்கிறேன். தினமும் இந்த வேளையில் என்னதான் செய்வாய்?''

''சொல்லட்டுமா சாரு? இரண்டு மணி வரையில் தெருவை வேடிக்கை பார்ப்பேன். கோலமாவுக்காரன், வெங்காயம் விற்பவன், இன்னும் கார், பஸ் ஒன்றையும் விடாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பேன். இரண்டு மணிக்குக் காபி போடுவேன். மூன்று மணிக்கு டிபன் செய்வேன். நான்கு மணிக்குத் தலை பின்னி, முகம் கழுவி, தினமும் பூக்காரி கொண்டு வைக்கும் கதம்பத்தை வைத்துக் கொள்வேன். ஐந்து மணிக்கு என் கணவர் வருவார். அவர் சிரிப்போடு வந்தால், நான் ஒதுங்கி மறைந்து கொள்வேன். அவர் விட்டெறியும் ஷூ, ஸாக்ஸ் எல்லாவற்றையும் எடுத்து வைப்பேன். அவர் கத்துவதைப் புன்னகையுடன் கேட்டுக்கொள்வேன். பிறகு ஆறு மணிக்கு....''

நான் இரண்டு காதுகளையும் மூடிக்கொண்டேன். ஜயா சிரித்தாள். ''அதற்குள் மூடிக்கொண்டால் எப்படி? இன்னும் மூன்று நான்கு மணிநேர வேலை பாக்கி இருக்கிறதே!''

''ஏன் ஜயா? என்ன விஷயம்? உன் கணவருக்கு நீ கவிதைகள் எழுதுவது பிடிக்கவில்லையா?''

''சேசே!'' முகத்தை ஸீரியஸாக வைத்துக் கொண்டு பேசினாள் ஜயா. ''உனக்குத் தெரியாதா சாரு? குடும்பப் பெண்கள் கவிதை எழுதக்கூடாது.''

''இதென்னடி புதுக்கதை?'' ஆச்சரியத்தோடு கேட்டேன் நான்.

''ஆமாம் சாரு. தப்பித் தவறி நான் முன்பு எழுதியிருந்த கவிதை, எனக்குத் திருமணமான பிறகு பத்திரிகையில் வந்து விட்டது. நான் மகிழ்ச்சியில் குதித்தேன். அவர்களும் குதித்தார்கள்; ஆனால் மகிழ்ச்சியில் அல்ல கோபத்தில்! 'குடும்பப் பெண்கள் அடுப்பங்கரையில் வேலை பார்ப்பார்கள். இதென்ன விபரீதம்? தெரியாமல் சம்பந்தம் செய்து கொண்டு விட்டோமே!' என்று அம்மாவும் பிள்ளையும் தவித்துப் போனார்கள். சரி, குடும்பப் பெண்ணின் இலக்கணத்தை நாம் மீறுவானேன் என்று அன்றைத் தினத்திலிருந்து எழுதுவதை விட்டுவிட்டேன்.''

திடீரென்று அலாரம் அலறியது. ''ஒரு நிமிஷம் இரு'' என்று கூறிவிட்டு ஜயா பரபரப்பாக எழுந்து போனாள். எனக்கு வருத்தமாக இருந்தது. ஜயாவுக்கு ஆங்கிலத்தில் ஒரு மோகம் உண்டு. திறமையும் கூட உண்டு. எளிமையான சொற்களைப்போட்டு, அமைதியான நடையில் அழகாக எழுதுவாள். திருமணமாவதற்கு முன்பு, அவள் கவிதைகள் அடிக்கடி ஃபெமினாவில் வெளிவந்துகொண்டிருந்தன. நான் பெருமூச்சு விட்டேன். இன்னமும் சில குடும்பங்களில், பழைய சம்பிரதாய வழக்கங்கள் என்று கூறிக் கொண்டு பெண்களை அடிமையாக நினைக்கும் மனப்பான்மை போகவில்லை.

ஜயா திரும்பி வந்தாள். சுடச்சுடக் காபியைக் கொண்டு வந்து என்முன் வைத்தாள். ''என் மாமியாருக்குக் கரெக்டாக இரண்டு மணிக்குக் காபி வாயில் வந்து விழவேண்டும். அதனால் நான் எப்போதும் அலாரம் வைத்துக் கொண்டு விடுவேன்'' என்று சிரித்தவாறு மெதுவான குரலில் கூறினாள் அவள். என் மனத்தில் இத்தனை நேரமாக உறுத்திக் கொண்டிருந்த விஷயத்தைக் கேட்டேன் நான். ''ஏன் ஜயா, நான் அப்போதிருந்து தேடுகிறேன், ஓர் ஓவியம்கூடக் கண்ணில் படவில்லையே! எல்லாவற்றையும் அந்தரங்கமாக வரைந்து படுக்கை அறைக்குள்ளேயே மாட்டிக்கொண்டு விட்டாயா?'' என்று சிரித்தேன் நான்.

''காபி சாப்பிடு சாரு. சர்க்கரை போதுமா பார்'' என்றாள் அவள்.

நான் காபி ஆற்றிக் கொண்டே மீண்டும் கேட்டேன். ''என்னடி, நான் கேட்பது காதில் விழவில்லை? எங்கே உன் ஓவியமெல்லாம்? கண்ணாடி போட்டு மாட்டுவதற்குத் தடை உத்தரவா? வெறும் ஆல்பமாகவே வைத்திருக்கிறாயா?

அவள் சூள் கொட்டினாள். ''நான் அதையெல்லாம் விட்டு எத்தனையோ வருடமாகிறது.''

''அடி பாவி!'' கையில் எடுத்த தம்ளரை அப்படியே நிலத்திலே வைத்துவிட்டு அதிர்ந்து போய்க் கூவினேன், நான்.

''ஏண்டி, பத்திரிகையிலே உன் பெயருடன் வருவதைத்தான் கூடாது என்றார்கள். வீட்டுக்குள்ளே உட்கார்ந்து ஓவியம் வரைவதும் கூடாது என்று சொல்லி விட்டார்களா?''

''சே சே! அப்படியெல்லாம் கூடக் கூறுவார்களா என்ன?'' என்றாள் ஜயா புன்னகையுடன்.

''பின்னே என்ன? எல்லாருக்கும் கிடைக்கும் இருபத்துநாலுமணி நேரம் போதவில்லையா? உனக்கு மாத்திரம் நாற்பத்தெட்டு மணி நேரமாக வளருமா? ஒரே குழந்தை. கணவரோ ஆபீஸ் போய்விடுகிறார். பிள்ளையும் பள்ளிக்குப் போய்விடுகிறான். அப்படி என்னதான் வேலை செய்து வெட்டி முறிக்கிறாய் நீ? நேரத்திற்கு நீதான் வளைந்து கொடுக்க வேண்டுமே தவிர, அது உனக்குச் சரியாக வளர்ந்து வருமா?'' படபடவென்று பொரிந்து கொட்டினேன் நான்.


ஜயா என் அருகில் வந்து கெஞ்சினாள், ''கொஞ்சம் மெதுவாகப் பேசேன் சாரு. மாமியார் அரைத் தூக்கத்தில் இருக்கிறாள்!

தூக்கம் கலைந்துவிட்டால் அவருக்குக் கோபம் வரும்.''

''ஏண்டி, பத்து வருஷங்கள் கழித்து வந்திருக்கிறேன். வாயைத் திறந்து பேசக்கூட எனக்கு உன் வீட்டிலே உரிமை கிடையாதா?''

''ஐயோ! ஐயோ!'' தவித்தாள் அவள். ''உனக்குச் சொன்னால் புரியாது.'' என்னைத் தரதரவென்று இழுத்துக்கொண்டு சமையலறையில போய் உட்கார்த்தி வைத்தாள். அறைக் கதவையும் இழுத்துத் தாழிட்டாள். ''ம்! இப்போது கத்து! நன்றாகக் கத்து! இந்தக் காபியைச் சாப்பிட்டுவிட்டு அப்புறம் கத்து!'' என்றாள் ஜயா.

''ம்..எத்தனை அலட்சியமாகக் கூறிவிட்டாய் ஜயா! கல்லூரி நாளிலே நீ விளையாட்டுக்காக என் புத்தகத்தில் வரைந்துள்ள படங்களைக்கூட நான் எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். ஜயா, எனக்குத் திருமணம் நிச்சயம் ஆனதும், உன் நினைவாக எனக்கு ஓர் ஓவியம் வரைந்து கொடுத்தாயே, நினைவிருக்கிறதா? அதைக் கண்ணாடி போட்டு அழகாக என் வரவேற்பறையில் மாட்டி வைத்திருக்கிறேன். எத்தனை மாற்றல்! எத்தனை ஊர் சுற்றல்! அப்படியும் அதைப் பத்திரமாகப் பாதுகாத்து வந்திருக்கிறேன் ஜயா! என் குழந்தைகள் உன்னைப் பார்த்ததில்லை. ஆனால் அது மாத்திரம் யோசித்து வரைந்த ஓவியம் என்று தெரியும். அப்படிப் பொக்கிஷமாக நான் நினைத்த கலையை, நீ தூக்கி எறிந்து விட்டாய்; போடி! எனக்குப் பிடிக்கவேயில்லை. வீணையாவது வாசிக்கிறாயா அல்லது அதையும் விற்று விட்டாயா?''



ஜயா தலைகுனிந்து கொண்டு மௌனமாக இருந்தாள்.

''சொல்லேன் ஜயா! வீணையையும் தொலைத்துவிட்டாயா?''

பரிதாபமாக என்னை நிமிர்ந்து பார்த்தாள் ஜயா. ''ஏன் சாரு, என்னை இப்படி வதைக்கிறாய்? வீணை எங்கும் போகவில்லை; பத்திரமாகத்தான் இருக்கிறது.''

''அப்படியானால் அதை எடுத்து வா. இரண்டு பாட்டுப் பாடு. எனக்குக் கேட்க வேண்டும்.'' எழுந்தேன் நான். பரபரப்பாக என கையைப் பிடித்து இழுத்தாள் ஜயா. ''இல்லை சாரு. அது வாசிக்கும்படியான நிலையில் இல்லை. மேலே பரணில் இருக்கிறது.'' குழறிக் குழறிப் பேசினாள் அவள்.

அப்படியே விக்கித்து நின்றேன் நான். வேண்டாத சாமான்கள் போட்டு வைக்கும் பரணில் பச்சைக் குழந்தையைப் போல அவள் சீராட்டி வந்த வீணையைத் தூக்கிப் போட்டு விட்டாளா? கல்லூரி நாட்களிலே, அத்தனை படிப்புக்கும் இடையிலே நான்கு மணிக்கே எழுந்து சாதகம் செய்வாள். ''இன்றைக்குக் கல்யாணியிலே கை வைத்து விட்டேன் சாரு! திருப்பிக் கை எடுக்கவே மனம் வரவில்லை. மனசைப் போட்டுக் கலக்கி அடிக்கிறது சாரு'' என்பாள். கடைசியிலே எல்லாம் பாடி முடித்து விட்டு வீணையை அப்படியே கட்டிக்கொண்டு விடுவாள். அவள் வீணையை யாரும் தொடக்கூடாது, அது அவளுடைய சுவீகாரக் குழந்தை. அவளுடைய பெற்றோர் அவளுக்கு இருக்கும் ஆர்வத்தைப் பார்த்து, தங்களுடைய சக்திக்கும் மீறி, வீணைச் சேஷையரையே ட்யூஷனுக்கு ஏற்பாடு செய்தார்கள். எத்தனை வருஷங்கள் அந்த வீணையோடு இணைந்து வளர்ந்திருக்கிறாள்! ''ஜயா, இன்றைக்கு அதைப் பரணில் போட எப்படி மனம் வந்தது? நீ பட்ட பாடு, உன் பெற்றோர் உனக்காகச் செலவழித்த பொருள், எல்லாவற்றுக்கும் ஓர் அர்த்தமே இல்லாமல் செய்துவிட்டாய் ஜயா! கடவுள் எல்லோருக்குமே எல்லாக் கலைகளையும் கொடுப்பதில்லை. பொறுக்கி எடுத்து அளிக்கிறார். நம்பிக்கையோடு உன்னைத் தேர்ந்தெடுத்த கடவுளையே நீ அவமதித்து விட்டாய். அவர் உன்னை மன்னிக்கவே மாட்டார்.'' மனம் கசந்து போய்க் கூறினேன் நான்.

முழங்கால்களைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்த ஜயா என்னைப் பார்த்தாள்.

"போகட்டும்! கடவுள் என்னை மன்னிக்காவிட்டால் போகட்டும் சாரு. உனக்கு ஒரு மகள் இருக்கிறாள் அல்லவா? அவளுக்கு எப்போதாவது திருமணம் செய்வதாக இருந்தால், சீக்கிரமே, வெகு சீக்கிரமே, பத்து வயதிலேயே திருமணத்தைப் பண்ணிவிடு. ஒரு வழியாகக் கணவன் விருப்பப்படி, மாமியார் ஆசைப்படி எப்படி வேண்டுமோ அப்படி வளைந்து வளர்ந்து கொள்ளச் சௌகரியமாக இருக்கும்."

அவளை உற்றுப் பார்த்தேன் நான். ஏதோ ஒன்று எனக்குப் புரிகிறமாதிரி இருந்தது. ஜயா மீண்டும் பேசினாள். "வேடிக்கைக்காக நான் சொல்லவில்லை சாரு. இருபது இருபத்தைந்து வயதுவரை, நமக்குச் சொந்தமாக ஆசைகள் விருப்பங்கள் எல்லாவற்றையும் தேர்ந்தெடுத்துக்கொண்டு அவற்றிலேயே ஊறித் திளைத்தபிறகு அத்தனையும் ஒரு கணத்தில் தூக்கி எறிவது, சாதாரண விஷயம் அல்ல." அவள் கால்களின் மீது முகத்தைப் புதைத்துக்கொண்டாள். முதுகு குலுங்கியது. எனக்கு இப்போது நன்றாகவே புரிந்தது.

அவள் அருகில் சென்று மண்டியிட்டு அமர்ந்தேன். மெதுவாகத் தோளின் மீது கைவைத்தேன். வெடுக்கென்று முகத்தை உயர்த்தினாள் அவள். "சாரு, சொல்கிறேன்; எல்லாவற்றையும் சொல்கிறேன் கேள். திருமணமான புதிதில் சில நாட்களுக்கு நான் ஓவியம், வீணை இவையெல்லாம் பற்றி நினைக்கவேயில்லை. என் மாமியார், கணவர் எல்லோர் முகமும் எப்போது பார்த்தாலும் கடுகடுவென்றிருக்கும். 1 மாதம் கழிந்தபிறகு எனக்கு இவர்கள் சுபாவமே இப்படித்தான் என்று பழகிவிட்டது. சாரு, எங்கள் வீட்டில் தென்ன மரம் உண்டு. ஒற்றையாகத் தனியாக நிற்கும். எழிலான பருவமங்கை நாணத்துடன் கூடிய முறுவலோடு ஒயிலாகச் சாய்ந்து நிற்பது போல, அந்தத் தென்ன மரம், அத்தனை அழகாக வளைந்து காட்சியளிக்கும். இரவில் படுக்கையில் படுத்துக்கொண்டவுடன், என் அறையின் ஜன்னல் வழியாக, நிலவின் ஒளியில் அந்தத் தென்னமரம் தினமும் என்னைப் பார்த்துக் கண் சிமிட்டும்; வாவா என்று அழைக்கும். அசைவே இல்லாத போது தன் காதலனுடன் ரகசியம் பேசுகிறாளோ என்று நினைப்பேன். சின்னஞ்சிறு மட்டைகள் சலசலக்கும்போது தென்னமங்கை, கிணுகிணு வென்று சிரிப்பதுபோல இருக்கும். நான் கண்ட அத்தனை அழகையும், காகிதத்திலே வடித்துவிட, என் மனமும் கரங்களும் துடித்தன, சாரு. என்னை என்னால் அடக்கிக் கொள்ளவே முடியவில்லை. மறுநாள் மத்தியானம், சாப்பாடு முடிந்தவுடன் பெட்டியைத் திறந்து எல்லாவற்றையும் எடுத்தேன். ஸ்டாண்டை வைத்து ஷீட்டைப் பொருத்தி, வர்ணங்களையும் எடுத்து வைத்துத் தயாரானேன். ஜன்னலுக்குப் பக்கத்திலேயே எல்லாவற்றையும் அமைத்துக்கொண்டேன், முகத்தைத் திருப்பினால் தென்னமரம் அழகாகத் தெரியும். திடுமென என் மாமியாரின் பேச்சுக் குரல் கேட்டது. எழுந்து போய்ப் பார்த்தேன்.



படுத்துக்கொண்டிருந்தவர், எழுந்து வந்து வாசலில் மிகவும் மும்முரமாகக் கூடைக்காரனுடன் பேரம் பண்ணி, இலையும் குலையுமாகப் பச்சை மணத்தக்காளி வாங்கிக்கொண்டிருந்தார். அவனை அனுப்பி விட்டு, அப்படியே கீழே கொட்டி, முக்கி முனகிக்கொண்டு, ஆயத் தொடங்கினார். நானும் போய்க்கூட உட்கார்ந்துகொண்டேன். பாதியில் மாமியார் எழுந்து போய்ப் படுத்துக்கொண்டார். நான் அத்தனையும் ஆய்ந்து முடித்தேன். அன்றைப் பொழுது போய்விட்டது. மறுநாள் புதுப் புளியில் கொட்டை எடுத்தோம். அதற்கும் அடுத்த நாள் தோசைக்கு அரைத்தேன். இப்படி நான்கு நாட்கள் ஓடிய பின்னர், ஐந்தாம் நாள் என் சமயலறை வேலைகளை முடித்துக்கொண்டு வந்து பார்த்தேன். என் மாமியார் படுத்துக்கொண்டு சுகமாகப் புத்தகம் படித்துக்கொண்டிருந்தார். சந்தோஷம் தாங்கவில்லை எனக்கு. சத்தம் போடாமல் என் அறைக்கு ஓடிவந்து மீண்டும் எல்லாவற்றையும் பொருத்தி வேலையைத் தொடங்கி விட்டேன். என் கரங்களுக்கு எப்படி அத்தனை வேகம் வந்தது என்று தெரியவில்லையடி, சாரு. என் கற்பனைகள் குதித்துக்கொண்டு ஓடிவந்தன. நேரம் போனதே தெரியவில்லை. நடுநடுவில் காபிக்கடை, டிபன் வேலைகள் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டே இதை முடித்துவிட்டேன். பிரஷ்ஷை அலம்பி வைத்துவிட்டு, சற்றுத் தள்ளி நின்றுகொண்டு பார்த்தேன். என் கற்பனையில் சிறகடித்த அந்தத் தென்னமரக் கன்னி, அப்படியே பிரமிப்பூட்டும் வகையில் அங்கே சிரித்துக் கொண்டிருந்தாள். வெறுமனே பார்த்தால் தென்னமரம். சற்றே புறக்கண்ணை மூடிக்கொண்டு, அகக்கண்ணைக் கொண்டு பார்த்தால், அவள் ஓர் எழிலரசி. மெய்ம்மறந்து ரசித்தேன் நான். என் கணவர் வரும் சத்தம் கேட்டது. துள்ளிக்கொண்டு சமையல் அறைக்கு ஓடிவிட்டேன்.'' ஜயா பேச்சை நிறுத்தினாள்.

நான் அவசரமாகக் கேட்டேன்! ''ம்.. அப்புறம் என்ன ஜயா? உன் கணவர் வந்து ஓவியத்தைப் பார்த்தாரா? என்னடி சொன்னார்?''

லேசாகச் சிரித்தாள் ஜயா. ''மாலை இவர் வந்ததும் எங்கள் அறையினுள்ளே போய்த்தானே உடை மாற்றிக்கொண்டு வந்தார்? கட்டாயம் பார்த்திருப்பார்!''

''ஒன்றுமே சொல்லவில்லையா? ஒரு சின்னப் பாராட்டு?''

''பாராட்டா? டிபன் காபியைக் கொண்டு வந்து மேசையில் வைத்தேன். ஓவியத்தைப் பார்த்தீர்களா என்று கேட்கத் துடித்த என் நாவை அடக்கிக்கொண்டேன். அந்தச் சமயம் தள்ளாடித் தள்ளாடி என் மாமியார் அங்கு வந்தார். தலையிலே ஒரு வெள்ளைத் துண்டைப் பாண்டேஜ் மாதிரி இறுகக் கட்டி இருந்தார். 'என்னம்மா என்ன?' என்று பதறிப்போய்ப் புதல்வர் தாயைப் பிடித்துக்கொண்டார். 'தலைவலி மண்டையைப் பிளக்கிறது' என்று தம்ளாமையாகக் கூறினார் என் மாமியார். 'தலைவலி என்றால் பேசாமல் படுத்து ஓய்வு எடுத்துக்கொள்ளக் கூடாதா அம்மா' என்று புதல்வர் உருக, 'எப்படிடாப்பா முடியும்? மத்தியான்னம் முழுக்க அரிசி பொறுக்கினேன். வயதான தேகம் தாங்குகிறதா?' என்று கூறிக்கொண்டே என் மாமியார் போய்விட்டார். காபி சாப்பிடவில்லை, டிபனைத் தொடவில்லை! சமையலறை வாசற்படியில் வந்து நின்று, 'இங்கே வா கொஞ்சம்' என்று என் கணவர் உறுமினார். நான் அவர் பின்னாலேயே போனேன். எங்கள் அறைக்கு வந்ததும், 'மத்தியான்னம் முழுவதும் அம்மா அரிசியில் கல் பொறுக்கி இருக்கிறாள். தலைவலியால் துடிக்கிறாள். நீ என்ன பண்ணிக்கொண்டிருந்தாய்?' என்று கர்ஜித்தார் அவர். அடுத்த கணம் அவர் பார்வை அந்த ஓவியத்தின்மேல் படர்ந்தது. 'இதைத்தான் நாள் முழுக்கக் கிறுக்கிக் கொண்டிருந்தாயா?' என்று ஆத்திரத்துடன் அதன் அருகே சென்று பேப்பரைச் சர்ரென்று கிழித்து எடுத்தார். உருண்டையாகக் கசக்கி என் முகத்தில் விட்டெறிந்தார். அந்த அறையை விட்டு வெளியேறினார்....'' ஜயா நிறுத்தி என் முகத்தைப் பார்த்தாள்.

என் உடம்பே ஆத்திரத்தில் கிடுகிடுவென்று ஆடிக்கொண்டிருந்தது. மனுஷனா அவன்? மனைவியை விறகால் அடித்து, சோறு போடாமல் இம்சிப்பவன் மட்டுந்தான் மிருகம் என்பதல்ல; மனைவியின் உணர்ச்சிகளைக் காலில் போட்டு மிதித்து நசுக்குபவன், முதல்வனைவிடக் கொடிய மிருகந்தான். சே! என்ன மனிதர்கள்! நான் ஜயாவின் கைகளைப் பற்றினேன். அந்த விரல்கள் துடித்துக்கொண்டிருந்தன.

''சாரு, அதோடு எல்லாவற்றையும் தூக்கிப் போட்டுவிட்டேன். அதன் பிறகும் இரவிலே அந்தத் தென்னமரம் கண்ணில் படும். அப்போது அந்த மங்கை சாய்ந்துகொண்டு விம்மி விம்மி அழுவதுபோல இருக்கும். இப்போதெல்லாம் வெறும் தேங்காயும் மட்டையுந்தான் கண்ணில் படுகின்றன!'' எங்கேயோ வெறித்துப் பார்த்துக்கொண்டு பேசினாள்.

''ஜயா, யோசிக்காமல் ஏதேதோ பேசி, உன்னைக் கிளப்பி விட்டுவிட்டேன். நான் இப்படி எதிர்பார்க்கவில்லை ஜயா.''

''கிளப்பி விட்டுவிட்டாய் அல்லவா? முழுவதையும் கேள். வீணைக்கு நான் சமாதி கட்டியதையும் கேள். இந்தச் சூடு வாங்கிக்கொண்ட பிறகு நான் வெகுநாட்களுக்கு ஒழுங்காக இருந்தேன். என் மகன் வயிற்றில் வளர ஆரம்பித்ததும், வந்தது வினை. மசக்கை என்றால் என்னென்னவோ சாப்பிட வேண்டும் என்று எல்லோருக்கும் தோன்றுமாமே! என் துரதிருஷ்டம் எனக்கு என் வீணையைப் பார்க்கும்போதெல்லாம், கைகள் பரபரத்தன. அப்போது எட்டு மாதம். ஒருநாள் துணிந்து, மாலையில் விளக்கேற்றி வைத்துவிட்டு வீணையை வைத்துக்கொண்டு வாசித்தேன். தொடர்ந்து ஒருவாரம் அது போலச் செய்தேன். சலசலப்பு ஆரம்பித்தது. அந்த நேரத்தில்தான் ரேடியோவில் நல்ல பாட்டு வருகிறது என்று என் மாமியார் ரேடியோவின்மேல் ஆசை கொண்டார்.''

அவள் பேச்சைப் பாதியில் நிறுத்தினேன் நான். வயிற்றைக் கலக்கியது எனக்கு, ''ஜயா, போதும்! மேலே சொல்லாதே!'' கெஞ்சினேன் நான்.

அவள் காதிலேயே வாங்கவில்லை, ''நான் வீணை வாசிக்கும் நேரத்தை மாற்றிக்கொண்டேன். காலைச் சாப்பாடு ஆனதும் என் மாமியார் உண்ட களைப்புத் தீர, கதவைச் சாத்திக்கொண்டு படுத்துவிடுவார். அந்த நேரத்தைத் தேர்ந்தெடுத்தேன் நான். என் வயிறே வீணையின் குடம்போல் இருக்கும்; இதிலே வீணை

...யையும் தூக்கி மடியில் வைத்துக்கொள்ளும் போது எனக்கே சிரிப்பு வந்துவிடும். ஆனால் அந்த நேரம் மட்டுமே, எனக்கே எனக்குச் சொந்தமாக அந்தரங்க ஓர் மகிழ்ச்சியை அடைவேன் சாரு! ஒரு சனிக்கிழமை, இரண்டு மணிக்கு வருபவர், ஒரு மணிக்கே வந்துவிட்டார் போலிருக்கிறது. நான் வழக்கம்போல் தொடியில் சுழன்று கொண்டிருந்தேன். திடுமென வாசல் மணி அடித்தது. நான் அவசரமாகத்தான் எழுந்தேன். மடியிலிருந்து வீணையை இறக்கி வைத்துவிட்டு, கையைக் காலை ஊன்றி நான் எழுந்துவந்து வாசற்கதவைத் திறப்பதற்குச் சற்று நேரமாகிவிட்டது. நரசிம்மாவதாரமாய் நின்றார் இவர். 'எத்தனை நேரம் கதவைத் திறக்க?' என்று சீறினார். எனக்குச் சர்வாங்கமும் நடுங்கியது. விடுவிடுவென்று உள்ளே போனார். வீணையின் அருகே நின்று என்னைத் திரும்பிப் பார்த்தார். சாரு! அந்த ஒரு கணம் நான் எப்படித் துடித்துப் போனேன் தெரியுமா?'' ஜயாவின் குரலே நடுங்கியது.

மூச்சு விடவும் பயந்து அவள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தேன் நான். அவள் தொடர்ந்தாள்.

''வேலையில்லை, பொழுதில்லை என்று இதைக் கட்டிக்கொண்டு என்ன அழுகை? அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள், இதைக் குடுப்பப்பெண் வாழும் வீடாக நினைக்கமாட்டார்கள்' என்று உச்சஸ்தாயியில் கத்தினார். நான் பேசாமல் நின்றேன். என் மௌனமான பீதி அவருக்கு இன்னும் வெறியூட்டியிருக்க வேண்டும்! இரண்டு கைகளாலும், அலாக்காக வீணையைத் தூக்கினார். அவர் தலைக்கு நேராகத்தான் கூடத்தின் பரண் நீண்டு முடிந்திருந்தது. அப்படியே தூக்கி 'தொலை' என்று கூறிக்கொண்டே மேலே விட்டெறிந்தார். அது பரணில் பொத்தென்று விழுந்தது. விழுந்த வேகத்திலேயே அதன் குடம் நசுங்கிச் சின்னபின்னமாகியிருக்கும். 'தடக், தடக்' என்று ஆடி அது கடைசிக் குரலைக் காட்டி என்னை அழைத்தது. என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. நான் பெறுமல் வளர்த்த குழந்தை என் கண் எதிரிலேயே செத்துப் போவதைப் பார்த்துக்கொண்டே ஸ்தம்பமாக நின்றேன்!''

ஜயா முடித்துவிட்டாள். எங்கோ சூன்யத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். எனக்குத் தான் மனம் குமுறியது. அம்மா, அப்பா, அண்ணா, தங்கை, உற்றார், உறவினர் எல்லோரையும் கிட்டத்தட்டத் துறந்துவிட்டு, நம்பிக் கையோடு கணவன் கைத்தலம் பற்றி வரும் மங்கையரை நடத்தும் பண்பா இது?

கண்களைத் துடைத்துக்கொண்டு மெதுவாகப் பேசினேன் நான். ''பைத்தியம் பிடிக்காமல் நீ இருப்பது ஆச்சரியம் ஜயா! இத்தனை உணர்ச்சிகளையும் மறைத்துக்கொண்டு எப்படிச் சிரித்துப் பேசுகிறாய்?'' பொருமினேன்.

சிரித்தாள் ஜயா. ''சாரு, என் மனம் ஒரு புறமும், என் கணவர் ஒரு புறமுமாக என்னால் சமாளிக்கவே முடியவில்லை. போராடிப் போராடிக் களைத்துப் போய்விட்டேன். ஒரு நாள் எரிச்சல் தாங்காமல் என்ன பண்ணினேன் தெரியுமோ? ஸ்வாமி படத்தின் முன் நின்றுகொண்டு, மானசிகமாக என் மனத்தைக் கொலை செய்துவிட்டேன் சாரு! என் உடலைக் கொன்றால்தான் தற்கொலை என்பார்கள்; மனத்தைக் கொலை செய்தால் யாருக்கும் தெரியாதல்லவா?''

பொங்கி வந்த கண்ணீரை அடக்கி முகத்தைத் திருப்பிக்கொண்டேன் நான். ஒரு பொட்டுக் கண்ணீர் விடாமல் இத்தனை திடமாக எப்படிப் பேசுகிறாள் இவள்! அடைத்த குரலில் கேட்டேன் நான். ''இப்படி ஒரு தற்கொலை செய்துகொண்டாவது இவர்களுடன் வாழவேண்டியது அவசியந்தானா ஜயா?''

''வேறு என்ன செய்ய முடியும் சாரு? அப்பா, அம்மா, எனக்காகச் செலவழித்த அரை லட்ச ரூபாய்க்கு அர்த்தமில்லாமல் செய்யச் சொல்கிறாயா? இன்றைய பொழுதிற்கு என் மகன் வந்து 'அம்மா பசிக்கிறது' என்றால் அவனுக்கு வயிறு நிறைய உணவளிக்க முடிகிறது. நான் அவனையும் இழுத்துக்கொண்டு வெளியே வந்து விட்டால் என் பெற்றோர்களுக்குப் பாரமில்லாமல் என்னால் இருக்க முடியுமா, சாரு? எம். ஏயில் கோல்ட் மெடல் வாங்கியிருக்கிறேன், வீணை நன்றாக வாசிப்பேன். ஓவியம் கூடத் தீட்டுவேன். நான் சிரித்தால் என் கண்களும் கூடச் சேர்ந்து சிரிக்கும் என்று என் சிநேகிதி அடிக்கடி கூறுவாள். இத்தனை யோக்கியதாம்சம் இருக்கின்றன எனக்கு. ஆயிரம் ரூபாய் சம்பளத்தோடு ஒரு வேலை தர முடியுமா என்றால் வேலை கிடைக்குமா?'' சிரித்தாள் ஜயா.

மணி நான்கடித்தது. அவள் பரபரப்பாக எழுந்தாள், ''சாரு, நீ கிளம்பு! எனக்கு டிபன் வேலை இருக்கிறது!'' என்று கூறிக்கொண்டே குங்குமம் கொடுத்தாள். பின்பு என் முகத்தை பார்த்தவள், தன் கரங்களை மாலையாக்கி என் கழுத்தில் போட்டுக் கொண்டே பேசினாள். ''சாரு, நீ ஏன் கலங்கிப் போயிருக்கிறாய்? எனக்கு என்ன குறை? நான் சந்தோஷமாகத்தானே இருக்கிறேன்? வேளைக்குச் சாப்பிடுகிறேன். விதவிதமான துணிகள் உடுத்துகிறேன். போன தீபாவளிக்குக்கூட என் மாமியார் எனக்குப் பட்டுப் புடைவைதான் வாங்கிக் கொடுத்தார்! அப்புறம் என்ன? மனத்தைக் கொன்றுவிட்டால் வாழ்வது சுலபம்!''

அவள் கரங்களிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டேன். போய்விட்டு வருகிறேன் என்று கூடச் சொல்லத் தோன்றாமல் பேசாமல் நடந்தேன் நான். ஒரேடியாக உயிரற்ற சடலமாக ஜயாவைப் பார்த்திருந்தால், இத்தனை வேதனை குமுறுமோ என்னவோ? இது மாதிரி அரைகுறைப் பிரேதத்தைப் பார்த்ததுதான் வயிற்றைச் சங்கடம் செய்கிறது.

ஆண்டவனே! மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா! என்றெல்லாம் கூறி, எங்கள் தரத்தை உயர்த்த எத்தனையோ பாடுபடுகிறாய். இன்னும் ஒரே ஓர் உதவி செய்யக் கூடாதா? பெண்களைப் படைக்கும் போதே 'மனம்' என்று ஒன்றில்லாமல் படைக்கக் கூடாதா? எத்தனையோ பெண்கள் இது மாதிரி தற்கொலை செய்துகொள்ளும் பாவத்திலிருந்து பிழைப்பார்களே!

கற்பகாம்பாள் நகரின் மூலை திரும்பு முன்னர், என்னையும் அறியாமல் நான் திரும்பிப் பார்த்தேன். வாசலில் நின்றுகொண்டிருந்த அந்தப் பிரேதம் கையசைத்தது. நானும் கைகளை ஆட்டி விட்டு மேலே நடந்தேன். *


ஒளிரும் வெண் சலவைக்கே
Supreme
det
detergent washing cake
சுப்ரீம் டெட் டிடர்ஜெண்ட் சலவைக் கட்டி
தரத்தில் முன்னேற்றம் பெற்ற புதிய டெட் கட்டியே
மார்க்கெட்டில் விற்பனையாகும் சுப்ரீம் டிடர்ஜெண்ட் கட்டி.
தூய்மையாக்கும் ஆற்றலுக்கு. நுரை வளத்திற்கு. நறுமணத்திற்கு. வேறு எந்த சலவைக் கட்டியும் இதற்கு ஈடாகாது!
உபயோகித்துப் பாருங்கள். அதன் வேறுபாட்டை கண்கூடாகக் காணுங்கள். ஆம் அதுதான் சுப்ரீம் டெட் கட்டி—'ஒளிரும்' வெண்மைக்கே!
பளிச்சிடும் வெண்மை,
டெட் தரும் வெண்மை
Shilpi-DM 7/78 Tam

கல்யாணம்



ராஜம் கிருஷ்ணன்

சின்னி ஆகாயத்தில் பறந்துகொண்டிருக்கிறாள். அவளுக்குக் கல்யாணம்.

எருக்கஞ்சேரியிலிருந்து மாப்பிள்ளை வீட்டார் ஏழு தடவை வந்து போகும் பேச்சுவார்த்தைப் பயணம் முடிந்து, பெண் வீட்டின் சார்பாக அவளுடைய அம்மாவும், மாமனும், பெரியப்பனும் போய் மாப்பிள்ளை வீட்டாரைப் பார்த்து வந்துவிட்டார்கள். இதற்கிடையில் எத்தனை கோபதாபங்கள், சண்டை சச்சரவுகள், போங்கள்!

தேரை நிலையை விட்டுக் கிளப்பி, வடமும் பிடித்துவிட்டார்கள். எப்படியும் கல்யாணத்தை முடித்துத்தானாக வேண்டும். ஏனெனில் இதுவரையிலுமே அவர்களுக்குச் செலவு அறுநூற்றைம்பது ரூபாய் முழுசாகக் கரைந்துவிட்டது.

இன்னும் கல்யாணத்துக்கென்று அவளுக்கு ஒரு புடைவை வாங்கவில்லை; காது மூக்குத் துளைகளைச் சீர்செய்யவில்லை.

அவள் வேலை செய்யும் வீட்டுச் சுகுணா கொடுத்திருக்கும் கட் ஜாக்கெட், நைலக்ஸ் புடைவை, கலர் பாவாடை உள்படச் செட்டாக உடையணிந்து கொண்டாலும், மாப்பிள்ளை வீட்டுக்காரர் திடும்திடுமென்று அவளைப் பார்க்க வருகையில் அம்மா ஆச்சி வீட்டுக்குத்தான் ஓடவேண்டியிருக்கிறது. கம்மல் மாட்டல் ஜிமிக்கியும் கழுத்துச் செயினும் அந்த அம்மாதான் அவ்வப்போது தேவைக்குக் கொடுத்திருக்கிறாள். கொலுசு அவளுடைய அம்மாவுடையதுதான். அது சாவுகாரிடம் கிடந்தது. இருபதம்சத் திட்டம் வந்து சாவுகார் கடனைத் தீர்க்காவிட்டால் பொருள் வராதென்று சொல்லவே, ஆச்சியிடமே மேலும் கடன் வாங்கி அதை மீட்டார்கள். ஆச்சியிடம் இப்போது ஆறு நூறு கடன் இருக்கிறது. வேலை செய்யும் சுகுணா வீட்டில் நூற்றைம்பது. மாட்டுக்கு வாங்கிய கடன் வேறு இருநூறு போல் துண்டு நிற்கிறது. தம்பிப் பயல் நெடு நெடுவென்று வளர்ந்து அப்பனைக் காட்டிலும் உயரமாக இருக்கிறான். மூன்று வருஷங்களாக ஒன்பதில் 'டேரா' போட்டிருக்கிறான். ஆனால் 'வாட்ச்' வேண்டும் என்று பிடிவாதம் பிடித்துக் கைக்கு வாட்ச் வாங்கிக் கட்டிக்கொண்டுவிட்டான். சுகுணா வீட்டில் வாங்கின கடன் அதுதான். மாட்டுக் கடனைப் பால் ஊற்றி அடைக்க முடியாமல் ஏதேதோ செலவு வந்துவிடுகிறது. இப்போது சின்னிக்குக் கல்யாணம் என்றால், தம்பி சைக்கிள் வாங்கிக் கொடுக்கச் சொல்லிக் கேட்கிறான். அவனுக்கும் பிரின்ட் சட்டை, நிஜார், பனியன் எல்லாம் வாங்கிக் கொடுக்கவேண்டும்.

சின்னி, கல்யாணமாகிய தன் இலக்கை எட்டிப் பிடிக்குமுன், எத்தனையோ தடங்கல்களை இன்னமும் தாண்டியாக வேண்டும். என்றாலும் தேரைக் கிளப்பிவிட்டார்கள். இழுத்துவந்து தானாகவேண்டும். அது ஒரே ஓர் ஆறுதல்.

"சின்னி, நிச்சயதார்த்தம் ஆயிட்டுதா?"

"எங்கே சுகுணா, இன்னும் பீரோ, கட்டில் வாங்கணும். நாப்பது சாமான் லிஸ்டு குடுத்திருக்காங்க. அண்டா, குண்டான், செம்பு, தவலை அல்லாம் வாங்கணும். நேத்துக் கோச்சிட்டுப் போயிட்டாங்க."

அவள் செய்தியாய்க் கூறினாலும் மனக் கவலையின் வாடை வீசுகிறது. சின்னி தான் வேலை செய்யும் வீட்டில் பேசும்போது சரேலென்று அவர்களுடைய நிலைக்கு ஏறித் தன்னையே அந்தப் பொழுதுக்கு அந்நியமாக்கிக்கொண்டு விடுவாள்.

"என்னது? பீரோ கட்டிலா? ஏகப்பட்ட ரூபா ஆகுமேடீ? உங்கம்மா என்ன செய்வா? அப்பன் வேறு வகையில்லாதவன். சம்பாதிக்கிறதைக் கொண்டாந்து கொடுக்கிறானா, இல்லையா?"

"அதெங்கே ஒழுங்காக் குடுக்குது? அதான் ஆபரேசன் பண்ணிட்டதிலேந்து ஒழுங்காவே வேலைக்குப் போறதில்லையே! ஆடில ஒருநா அமாவாசைக்கு ஒருநா வேலைக்குப் போகும். எதானுங் கேட்டா ஒடம்பில வலுவில்லேங்குது. எங்கம்மா இந்தக் கண்ணாலம் ஆறமட்டும் ஒழுங்கா இருக்கணுமேன்னு பேசாம, சோறு போடுது. நேத்துப் பிள்ள வீட்டுக்காரங்க வந்து கோச்சிட்டுப் போயிட்டாங்க. தம்பிதான் போயி சமாதானம் செஞ்சிக் கூட்டி வந்தான்."

"எதுக்குக் கோவிச்சிட்டாங்க?"

"பின்னே, இப்ப கட்டில் பீரோ குடுக்கணுங் கறாங்க. அவங்க மூணு சவரன் செயின் போடணும்னு பேச்சு. ஆனா இப்பப் போட மாட்டாங்களாம். அவங்க இப்பச் செயின் போடாத பட்சத்துக்குக் கட்டிலு பீரோவும் அப்புறம் கொடுக்கலாம்னு எங்க மாமன் சொல்லிச்சி. புள்ளையோட அப்பா இப்பவே

கொடுக்கணுமின்னுரு. அப்ப எங்கப்பா வந்து அம்மாகிட்ட, எனக்கு உங்காத்தா கட்லு குடுத்தாளா, பீரோ குடுத்தாளா? இப்ப இவங்களுக்கு அதெல்லாம் குடுக்கக் கூடாதுன்னுரு. அவங்க கோச்சிட்டுப் போயிட்டாங்க.''

சின்னிக்கு அவளுடைய வீட்டுச் சூழலில் தன்னுடைய மன மோதல்களை வெளியிட வாய்ப்பே கிடையாது. இங்கேதான் அவளுடைய உணர்ச்சிகளுக்கு வடிகால் பிறக்கிறது.

''சோறெல்லாம் சமச்சி வச்சாச்சி. ஓட்டல்லேந்து லட்டு பழம் வாங்கி வச்சிருக்கு. இவுங்க சாப்பிடாம எந்திரிச்சிப் போயிட்டாங்க. அப்புறம் தம்பி போயி அவங்களைக் கெஞ்சிக் கூத்தாடிக் கூட்டியாந்தான்!''

''தம்பியா?''

அவள் முகத்தில் பெருமை மென்மையாகச் செம்மை கூட்டுகிறது.

''ஆமா. அவன்தான் எல்லாம் செய்யிருன். கட்லு பீரோ வாங்கிக் குடுக்கிருேம்னு சொல்லிக் கூட்டியாந்தான். எங்க பெரியப்பா ஊரில இருக்கிற பூமிய வச்சிட்டு ஆயிரத்தைந்நூறு தர்றதா முன்னே சொல்லியிருக்காரு; அத்த வச்சித்தான் கலியாணம் நடக்கணும்.''

பரபரவென்று பாத்திரங்களைத் தேய்த்துப் போட்டுக் கழுவுகிருள். நான்கு வீடுகளுக்கு அவள் வேலை செய்கிருள். முப்பது ரூபாய் தான் தேறும். இரண்டு வீடுகளில் காபி கிடைக்கும். சோறு நன்ருக இருந்தால்தான் சின்னி சாப்பிடுவாள். இல்லையேல் குப்பை மேட்டில் கொட்டிவிடுவாள். அவளுக்குச் சுயகௌரவம் உண்டு. யார் வீட்டில் என்ன பேசிக்கொண்டாலும் உள் விவகாரங்களைக் காதில் வாங்கிக் கொள்ளமாட்டாள். தின்பதற்கு யார் வீட்டிலேனும் தினி கொடுத்தால் அது அவர்கள் உண்ணும் தரத்திலிருந்தால்தான் மூலையில் வைத்துக்கொண்டு தின்பாள். தானும் அவர்களுக்குச் சமமானவள்தான் என்று அறிவுறுத்தும் தோரணையிலேயே நடந்து கொள்வாள்.

அன்றெல்லாம் அவள் கல்யாணச் செலவுகளைப்பற்றிக் கணக்கிடுவதிலேயே இருக்கிருள். மொத்தம் ஆயிரத்தைந்நூறு பெரியப்பன் தந்தால், கட்டில் பீரோ என்ன ஆகுமோ?

பால் ஊற்றும் வீட்டில், டிப்போக்காரரிடம், சுகுணவிடம் பாதிவிலைக்கு அவை கிடைக்குமா என்று விசாரிக்கிருள்.

''கட்டிலாவது பீரோவாவது? சாப்பாட்டுக்கே மாசம் மாசம் கஷ்டப்படும் குடும்பம்!'' என்று சுகுணவின் தாய் கருத்துரைக்கிருள்.

''அப்படீன்னு முடியுமா? இவுங்கதான் நல்ல இடமின்னு மாமன், சித்தப்பன் எல்லாம் சொல்ருங்க. கம்பனில வேலை. நூத்தம்பது சம்பளம். மச்சுவூடு இருக்குதாம். முதல்ல கன்னியாதானமாக் குடுக்கணுமின்னுதான் கேட்டாங்க. எங்கத்த புருசனே அவ புள்ளைக்கு ஏழாயிரம் செலவு பண்ணணுமின்னு கணக்குக் குடுத்தாரே! இத்தினிக்கும் அது படிக்கவுமில்ல, ஒண்ணில்ல. ஏழாவது பெயிலு. தையக்கடையில வேலை பழகுது'' என்று நியாயம் கூறுகிருள். பிறகு தாளுகவே, ''இத்தையும் விட்டு, மறுக்க யாரும் பொண்ணு கேக்க வரலேன்னு, எங்க சின்னுயா பொண்ணுமாதிரி முப்பது வருசம் உக்காந்திருந்திட்டுக் கலியாணங் கட்டாம எப்படியோ போக வேண்டியதுதான்!'' என்று முடிக்கிருள்.

'எப்பிடியோ போவது' என்னவென்று சின்னிக்குத் தெரியும். சின்னி மனுசியாகி நான்கு வருஷங்களுக்குள் எத்தனை பேர் சம்பந்தம் கேட்டு வந்துவிட்டார்கள்! இந்நாள் வரையிலும் அவளுடைய அம்மா பணமில்லை என்ற காரணமும், வயதாகவில்லை என்ற காரணமும் காட்டிப் பிடிகொடுக்காமலே இருந்தாள். டவுனில் வளர்ந்து மேல்தட்டு வீடுகளில் பழகிய பெண் அவள். சூது, திருட்டுச் சாராயம் எல்லாம் இல்லாத சூழலாக அவர்களுடைய யாதவகுலத்திலேயே நல்ல இடமாக அமைய வேண்டுமே! நாட்டுப்புறத்தில் சாணி, சகதி, வயல் என்று வேலை செய்ய அவளுக்குத் தெரியாது. அஞ்சாவது படித்திருக்கிருள். சேலைமடிப்பைச் சுகுணவைப்போல் பாங்காக அணி செய்துகொண்டு செருப்புப் போட்டுக் கொண்டு அவளுடைய கல்லூரிக் கோலம் போன்றே அலங்கரித்துக் கொள்கிருள். சின்னியின் வெகுநாளைய ஆசை, ஒரு கைக் கடிகாரம். வேலை செய்யும் வீட்டிலிருந்து கதைப் புத்தகம் அல்லது பத்திரிகையைக் கையில் எடுத்துக்கொண்டு, செருப்பொலிக்கத் தெருவில் நடக்கையிலே அவளுக்குச் சாயுஜ்யத்தை எட்டிப் பிடித்து விட்டாற்போன்ற பெருமை முகத்தில் துலங்குகிறது.

''சின்னி, புல் செதுக்கி வச்சிருக்கு. கோணில போட்டுக் கிட்டுப் போ, மாட்டுக்கு'' என்று வேலை செய்யும் வீட்டில் சொன்னுல் அப்பனையோ, அம்மாவையோதான் வரச் சொல்வாள். அவளுடைய குடிசைக் கப்பால் அவள் சாணி, வறட்டி முதலியவைகளைத் தொடுவதாகக்கூடக் காட்டிக்கொள்ள மாட்டாள்.

நைலக்ஸ் சேலை உடுத்துக்கொண்டு, கழுத்தில் சன்னச் செயினுடன் கையில் ரிஸ்ட் வாட்சும் பத்திரிகையுமாக..

அவள் கனவு அதுதான்.

சுகுண சேலை நிறத்துக்கு ஏற்ப வாட்சுக்குப் பட்டை வைத்திருக்கிருள். சிறு முகத்தில் பளிச்சென்று மணி எண்களும், துக்கிணி முட்களுமாக உயர் கௌரவத்தின் சின்னமாக விளங்கும் வாட்ச். அதை எப்பாடுபட்டேனும் அணியவேண்டும் என்பது சின்னியின் லட்சியம். இந்த லட்சியம் அவளுள் எப்போது முளைவிட்டது என்பதை வரையறுத்துச் சொல்ல இயலாது.

அவளுடைய ஆதரிச உருவம் சுகுணதான். ஏறக்குறையச் சுகுணவும் இவளுடைய வயதினள்தான். அவள் கான்வெண்டில் சீருடை அணிந்து படிக்கையில் இவள் தருமப் பள்ளிக்கூடத்தில் படித்தாள். ஐந்தாவதில் முளை அடித்துக்கொண்டு இரண்டு வருஷங்கள் தங்கியதும் அம்மா இவளைப் பள்ளிக்கூடத்துக்கு முழுக்குப் போடச் சொல்லி, வீட்டு வேலைக்குச் சேர்த்துவிட்டாள்.

சுகுணவின் ஏறிப்போன பழைய பாவாடைகள் எல்லாம் சின்னிக்குத்தான். சுகு அலட்சியமான இரண்டுங்கெட்டான் பருவத்தை விட்டு மாறி அழகிய கல்லூரி நங்கையாக மென்மையும் நாகரிகமுமாக உருப்பெற்று வந்ததைக் கண்கொட்டாமல் கவனித்து வந்தவள் சின்னிதான். சின்னியும் வளர்ச்சி பெற்றிருக்கிருள்; என்ருலும் நேரத்துக்கொரு

வண்ணமும் மெருகுமாக அலங்காரம் செய்து கொள்ள முடியுமா? வீட்டில் எருமைகள் மூன்ருகிவிட்டன. தெருக்குழாயிலிருந்து தண்ணீர் பிடித்து வரவேண்டும். சாணி தட்ட வேண்டும். கடையில் பொட்டு, தவிடு என்று நிற்க வேண்டும். அவளுடைய இப்போதைய வாழ்வின் உயர்ந்த கட்டமான பொழுதுகள் காலையிலும் மாலையிலும் அவள் வீட்டு வேலைக்கு வரும் நேரந்தான். முகம் கழுவிப் பவுடர் பூசிக்கொண்டு, தலையை வாரிக்கொண்டு, இரவு கசங்கிவிடாமல் அவிழ்த்து மடித்து வைத்த சேலையை உடுத்துக் கொள்வாள்.

"இன்னுடி இப்ப அலங்காரம் காலங்காத்தல? இந்த நேரத்தில பால் பாத்திரத்தையேனும் துலக்கி வைக்கக்கூடாது?" என்று தாய் கூறுவதைக் காதில் போட்டுக்கொள்ள

"இது இருநூறு ரூபா: ஆனு நூத்து முப்பது நாப்பதுக்குக்கூட வாட்ச் இருக்கு" என்று அவள் தகவல் தெரிவித்தாள்.

அவளுக்குக் கல்யாண யோசனையை முன்னிட்டுத்தான் பால் பணத்தில் அம்மா சீட்டுப் போட்டாள். கல்யாணம் என்ற ஒரே சந்தர்ப்பந்தான் அவர்களுடைய வாழ்க்கையில் தாராளமாகச் செலவு செய்யக்கூடிய தருணம். கடனே உடனே, எல்லாம் வாங்கித் தானுகவேண்டும். இந்த நேரத்தைத்தான் சின்னி தன் வெகுநாளைய ஆசையை நிறைவேற்றிக்கொள்ளும் தருணமாக எதிர்பார்த்திருந்தாள்.

"ஏன் சின்னி, மாப்பிள்ளையைப் பார்த்தாயாடி?" என்று சுகுணா கிண்டினுள் அன்று.

"நான் ஏன் பாக்கறேன்?"



மாட்டாள் சுகுணா. இப்போது அவளுக்குக் கொடுத்திருப்பது குதி உயர்ந்த சற்றே நாகரிகமான செருப்பு. அதைப் போட்டுக்கொண்டு அவள் கிளம்புகையில், "பெரிய டீச்சரம்மா மாதிரிதான்!" என்று தாய் நொடித்தாலும் உள்ளூறப் பெருமைதான் அவளுக்கு.

சுகுணா பத்தாவது முடித்துப் பள்ளியை விட்டதும் அவளுக்கு வாட்ச் வாங்கிக் கொடுத்தார்கள். சுகுணா அணியும் துணிமணிகளும் வளையல்களும் போலிக் கல் மாலைகளும் கூடச் சின்னிக்குக் கிடைத்திருந்ததால், அவளுக்குத்தான் கடிகாரம் கட்டிக்கொள்ள ஆசைப்படுவது நியாயமற்றதாகவே தோன்றவில்லை.

"இந்த வாட்சு என்ன வெலயாவும், சுகு?" என்று கேட்டாள் ஒரு நாள்.

"அட அசடு! உனக்குப் புடிச்சவனு இருக்க வேண்டாமா?"

ஒரு நாணப் புன்னகை எட்டிப் பார்த்தது சின்னியின் இதழ்களில். குனிந்து காபித் தம்ளரைத் தேய்த்தவாறு, "எங்கம்மா, மாமன், தம்பி அல்லாருக்கும் புட்சாச்சின்னு எனக்குந்தான் அது" என்று பதில் கூறினுள்.

"நீன்னுடி வாழப்போறே?"

"அதுக்கு? இவன் வாணுன்னு நான் ஏஞ் சொல்லணும்?"

"அத்தைக் கொண்டா, இத்தைக் கொண்டான்னு கேக்கருங்களே? உங்கம்மா என்ன பண்ணுவ?"

"அவுங்கதான் கன்யாதானம் வேணுன்னு ஒத்திட்டாங்களே? அதுக்கு இன்னும்

செலவாகுமே! இப்பக் கலியாணச் செலவு அவுங்களது. தீபாவளிக்குக் கம்பனில போனஸ் வரப்ப மூணு சவரன் செயின் போடுறதாகச் சொல்லி இருக்காங்க.''

''ஐயோ! இப்பவே அவங்க வீட்டுக்குப் பரிஞ்சு பேசுறும்மா இந்தச் சின்னி!'' என்று சுகுணா கூறினாள்.

''பின்ன எப்படீம்மா? கலியாணம் நடக்க வேண்டாமா?''

பெரியப்பன் ஊருக்குப் போய் வருகையில் மடியில் நோட்டாகக் கட்டி வந்து அவிழ்த்து எண்ணிக் கொடுக்கிறார்; ஆயிரத்தைந்நூறு ரூபாய்.

''தா, சின்னி, போய்ச் சுள்ளி ஒடிச்சி அடுப்பில் வச்சு ஊதிவிடு. அம்மியில இருக்கற மசாலச் சாமானை அரை'' என்று அம்மா அவளை விரட்டுகிறாள்.

''சவுந்தலம்மா, அவங்க கணக்கில கடயில துணி எடுத்துக்க, மாசம் நூறு ரூவாயா அடச்சிக்கலான்னுங்க. சின்ன மாட்டையும் செனை எருமையையும் வித்துப் போடுங்கறுங்க. இந்தப் பயல் சைக்கிள் சைக்கிள்னு அடிச்சிக்கினுருக்கான். கலியாணப் புடைவை, ஜாக்கெட்டு, மருமவப் புள்ளைக்குச் சட்டை, பட்டு, மோதரம், இதுவே ஆயிரத்துக்குமேல ஓடிப் போயிடும். வாச்சி அவனுக்கு இருக்குதாம். வாணுண்ணிட்டாங்க.''

சின்னிக்கு அம்மியில் இழுப்பு ஓடவில்லை; கை நிற்கிறது.

''நூறு நூத்தம்பதில எதுனாலும் பழய விலைக்கிச் சைக்கிள் வந்தா..'' சின்னி அம்மியை விட்டுவிட்டு விரைந்து வருகிறாள்.

''எனக்கு வாட்ச் வோணும்!''

பெரியப்பா புகையிலையைத் துப்பிவிட்டு வந்து அவளைச் சாவகாசமாக உறுத்துப் பார்க்கிறார். அம்மாவோ காதில் விழாதது போல் குந்தி உட்கார்ந்துகொண்டு எதையோ யோசனை செய்பவளாக, வைக்கோல் துரும்பால் கீழே கோலமிடுகிறாள்.

''எனக்கு வாட்ச் வோணும். இத்தினி நாள் சம்பாரிச்சிட்டு வந்து நான் குடுத்தேன். அவங் குடுத்தானா?''

அம்மா விலுக்கென்று தலை நிமிருகிறாள்.

''இன்னாத்துக்குடி உனக்கு வாட்சு? அவன் ஆம்பிளை; நாலிடம் போகக் கொள்ளச் சைக்கிள் வேணும்?''

''எனக்கு வாட்ச் வோணும். ஆமாம்.''

''அறஞ்சிருவேன், கழுதை, போயி அடுப்பைப் பாரு!''

சின்னி விட்டுக் கொடுப்பதாக இல்லை.

''எனக்கு வாட்ச் நிச்சயம் வாங்கித் தரணும். வுலி வுலி சாரி, ஜெர்சி சோளி, டெயிலர்ட்ட ரெண்டரை ரூவா குடுத்துத் தச்சிப்பேன், எனக்குத்தானே பெரியப்பா கல்யாணத்துக்குப் பணம் குடுத்திருக்காரு?''

''அறஞ்சேன்னா பல்லுப் போயிடும்? இன்னாடி நெனச்சிட்டிருக்கே?'' அம்மா கையை ஓங்குகிறாள் மூர்க்கத்தனமாக. சின்னியின் ஆசைக்கொடியின் வேர்கள் கல்லி எறியப்படுகின்றன. முகம் இருண்டு போகிறது.

''நான் ஒரு வாட்ச் கேட்டா வாங்கிக் குடுக்கமாட்டீங்க!'' பிழியப் பிழிய அழுகை வருகிறது.

''உனக்கு இன்னாத்துக்கடி வாட்ச்? பெரிய உத்தியோகம் பாழாப் போவுது! மின்னியே அவங்க, அந்தப் பொண்ணு ரொம்ப 'ரப்பா' இருக்கும்போல இருக்குன்னுங்களாம்!''

''எனக்கு நீ இப்ப வாட்ச் வாங்கிக் குடுக்கலேன்னா எப்ப வாங்கிக் குடுக்கப்போறே?'' கைக்குச்சியால் அம்மா அவளைத் தட்டுகிறாள்.

''போடி, உள்ளாறப் பருப்புத் தீயுது. லிட்டர் நாலு ரூவான்னு உழக்குப் பருப்புத் வாங்கியாந்து போட்டிருக்கேன், இன்னிக்கு நாத்தனாக்காரி வர்றாளாம்!''

அவள் தேம்பித் தேம்பி அழுகிறாள். அவளுடைய லட்சியம் நிறைவேற வாய்ப்பாக இருக்கும் ஒரே தருணமும் கைநழுவிப் போகிறது. இப்போது விட்டால் எப்போது நூறு நூறாகச் செலவு செய்யப் பணம் சேரப் போகிறது? செலவோடு செலவாக ஒரு வாட்ச் வாங்கக் கூடாதாக்கும்!

அது வருவதற்கான பல்வேறு வழிகளையும் சின்னி ஆராயத் தலைப்படுகிறாள். முறைகேடான வழிகளை அவள் எண்ணமாட்டாள்.

சுகுணா பல்வேறு சமயங்களில் முகம் கழுவிக் கொள்கையில் கைக் கடியாரத்தைக் கண்ணாடியின் முன் கழற்றி வைத்திருக்கிறாள். அவர்கள் வீட்டில் கண்ட இடங்களில் காசு கிடந்திருக்கிறது. அவள் அப்பழுக்குச் சொல்ல இடமின்றி நடந்திருக்கிறாள். சின்னி கல்யாணமாகிப் புருசன் வீட்டுக்குப் போய்விட்டால் யார் இவ்வளவு நம்பிக்கையாக வேலைக்குக் கிடைக்கப் போகிறார்களென்று தினமும் இப்போதே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இதெல்லாம் இப்போது நினைத்து என்ன பயன்?

அடுப்படியில் உட்கார்ந்து விசும்பி விசும்பி அழுகிறாள்,

''ஏய் சின்னி, இன்னாடி இப்படி உக்காந்து அழுவுறே? ஏண்டி, கசுமாலம்! உனக்கு அறிவு இருக்குதாடி? ஊர்முச்சூடும் கடன் தொல்லையை வச்சிட்டு உன்னைக் கட்டிக் குடுக்கிறேன்னு நினைக்கவேணும்? நாளைக்கு அப்பன் சரியில்லாத குடும்பம்னு யாருன்னாலும் சொல்லிக் கலச்சிடுவாங்களோன்னு அஞ்சிக்கினு நான் அல்லாடுறேன், நீ இன்னாடி வெள்ளாடுறே?''

''பின்ன எனக்கு வாட்ச் வோணும்!''

''ஏண்டி அறிவு கெட்டவளே, நீ வேலைக்காடி போறே? வீட்டுக்கு மூத்த மருமவ, மாமியாசீக்குகாரிபோல. அங்கியும் மாடு கன்னுன்னு வேல இருக்கும். வீட்டோட இருக்கிறவ. அதுல கொண்டு நூறு நூத்தம்பது எதக்குடி போடணும்?'' காரணம் காட்டிப் பயன் இல்லை. அழுகை ஓயவில்லை.

''அவுங்க வர்ர சமயத்துக்கு அழுதுக்கினு குந்திருப்பியா? எந்திரடி, தாயே!''

''எனக்கு வாட்ச் இல்லாட்டிக் கல்லாணம் வாணாம்.''

''சீ! மூஞ்சைப் பாரு! வெள்ளாடுறியா?''

''வெள்ளாடல. எனக்குக் கல்லாணம் வாணாம். நான் சுகுணம்மா ஊட்டில வேல செஞ்சிட்டிருக்கேன்.''

''இருப்பே, இருப்பே! ஒதிச்சித் தெருத்து வாங்க, எந்திரிடி! மூஞ்சைக் கழுவிப் பொட்டு வச்சிட்டிரு. அவங்க வந்திடுவாங்க!''

ஒவ்வொரு முறையும் புதிது புதிதாக உறவுக்காரர்களையும் சிநேகிதர்களையும் கூட்டி வருகிறார்கள்.

சின்னிக்கு இரவல் நகைகளைப் போட்டுக் கொண்டு, வந்தவர்களை எல்லாம் விழுந்து

கும்பிடப் பிடிக்கவில்லை; இதற்கெல்லாம் 'ரிஸ்ட் வாட்ச்' ஆசைக்காக அல்லவோ உடன்பட்டாள்?

"ஏன் சின்னி, மூஞ்சியெல்லாம் ஊதினாப் பல இருக்கு? அழுதியா என்ன?"

சுகுணாவின் அநுதாபக் குரல் கேட்டதுமே துயரம் பீறி வருகிறது.

''ஐயோ! எதுக்குடி விக்கி விக்கி அழறே?''

வாட்சைப்பற்றி எப்படிக் கூறுவாள்? அவள் அம்மா இப்படி மறுப்பாளா? ஆனால் எவ்வளவு அடக்கியும் அழுகை அடங்கவில்லை.

''அம்மா? இந்தச் சின்னி எப்படி அழுரு பாரு? ஏன் சின்னி, மாப்பிள்ளை வூட்டுக்காரங்க நேத்துக் கோச்சிட்டுப் போயிட்டாங்களா?''

இல்லை என்று தலையை ஆட்டிக்கொண்டு கண்களைத் துடைத்துக் கொள்கிருள்.

''பின்ன எதுக்கு? உங்கப்பன் கோச்சிட்டுப் போயி ரகளை செய்திட்டானு?''

''இல்ல.''

''பின்ன எதுக்கு அழுறே?''

''இந்த மாப்பிள்ளை பிடிக்கலியோ என்னமோ? அன்னிக்கு மாப்பிள்ளையைப் பார்த்தியாடின்னு, அவனை ஏன் பார்க்கணும்னுளே, வீருப்பா? நேத்துத்தான் நல்லாப் பார்த்தாளோ என்னமோ? ஏண்டி? அப்படித்தானு?''

முழங்கை மட்டுமே அவர்களுக்குத் தெரிய அவள் பிழியப் பிழிய அழுகிருள்.

''அசடு, இவனைப் பிடிக்கலேன்னு சொல்லுறத விட்டுட்டு, ஏண்டி அழுறே? உனக்கென்ன, வயசு பதினெட்டுக்கூட இருக்காது?''

''இல்லீங்க, வாச்சி.''

அவர்களுக்குப் புரியவில்லை. ''என்ன சொல்றுடி சுகு?''

''வாச்சி கேட்டேன். எங்கம்மா வாங்கிக் குடுக்கமாட்டேங்குது; பின்ன எதுக்குக் கல்லாணம்? ஆசைப்பட்ட பொருளை இப்பக்கூட வாங்கிக்கலேன்னு?''

விசும்பிக்கொண்டு அவள் கூறியதை இப்போதும் அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

''என்னது? வாச்சின்னு?''

''கைக்குக் கட்டிக்கிறது'' என்று அவள் முகத்தைத் துடைத்துக்கொண்டு புரிய வைக்கிருள்.

அவர்கள் கண்கள் அகலுகின்றன. ''ரிஸ்ட் வாட்சா? ரிஸ்ட் வாட்சா கேட்கறே? அடி சக்கை? ஏண்டி பைத்தியம்? உனக்கெதுக்கடி ரிஸ்ட் வாட்ச்?''

தேன்கூட்டில் தேனிருக்கும் என்று நினைத்தாளே! அவர்களுடைய சிரிப்பு, குளவிகள் கொட்டுவதுபோல் இருக்கிறது. அவள் வாட்ச் கேட்பது இவ்வளவு சிரிப்புக்குரியதா? அவர்களெல்லாரும் மணி தெரியத்தான் வாட்ச் போட்டுக் கொள்கிருர்களா? அவளுக்குமட்டுந்தான் அது அவசியம் இல்லையா?

அவர்கள் இன்னும் ஏதோ பெரிய நகைக்குரிய செய்தி கேள்விப்பட்டாற்போலச் சிரிக்கின்றனர்.


சின்னியை அவமானம் குறுக்குகிறது.

குபீரென்று மீண்டும் பொங்கி வருகிறது அழுகை. ✻

அதிருஷ்டத்தின் இன்குரல் கேட்டிட

இன்றே வாங்கிடுவீர் தமிழ்நாடு பரிசுச் சீட்டை.

2 முதல் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 50,000



மாமல்லபுரம்


3 இரண்டாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. 10,000
5 மூன்றாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. 5,000
மற்றும், மூன்று வரிசைகளில்
(BO,BP,BQ), ஆறுதல் பரிசுகள்
உட்பட ஏராளமான பரிசுகள்.

மொத்தம் ரூ. 3,90,000
மதிப்பு கொண்ட 2,655 பரிசுகள்.

தமிழ்நாடு பரிசுச் சீட்டு

இக்குலுக்கலிலிருந்து கிடைக்கும் வருவாய் 4,000 கிராமங்களுக்குக் குடிநீர் வசதியளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும்.

குலுக்கல் தேதி: 20-6-1978
பரிசுச் சீட்டின் விலை: ரூ. 1.



வெளியிட்டோர்:
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டம்,
சென்னை 600 002

DIPR/26041/78A TAM